72% 9:01 am

https://telegram.me/aedahamlibra



# வானவல்லி

பாகம் 3

சி.வெற்றிவேல்

வானதி பதிப்பகம்

https://telegram.me/aedahamlibra

# வானவல்லி

## பாகம் – 3: கரிகாலனின் எழுச்சி

சி.வெற்றிவேல்
சாளையக்குறிச்சி

https://telegram.me/aedahamlibra

# வான வல்லி

## பாகம் – 3 : கரிகாலனின் எழுச்சி

சி.வெற்றிவேல்

சாளையக்குறிச்சி

https://telegram.me/aedahamlibra

# என்னுரை

தமிழக வரலாற்றில் பொற்காலம் என்றால் அது காதலையும், வீரத்தையும் போற்றி வாழ்ந்த சங்க காலத்தின் ஆரம்ப காலம் தான். அச் சங்க கால மன்னர்களுள் தலைச் சிறந்தவன் கரிகாலன். சோழர்கள் தங்களது வல்லமையை இழந்து குறுநில மன்னர்களாகி புகழை இழந்து தஞ்சைக்கு அருகில் ஒடுங்கிய வேளையில் இக் கரிகாலனைத்தான் முன்னுதாரணமாகக் கொண்டு இழந்த புகழை மீட்டெடுத்து தெற்கே குமரி, வடக்கே கங்கை, கிழக்கே கடாரம் வரை வென்றனர். பிற்காலச் சோழர்கள் அன்றி முற்கால சேரர்களான இமயவரம்பன், நெடுஞ்சேரலாதன் மற்றும் செங்குட்டுவனுக்கும் முன்னுதாரணமாக விளங்கியவன் கரிகாற் பெருவளத்தான்.

தமிழக மன்னர்களுள் முதன் முதலில் இலங்கையை வெற்றி பெற்ற

பிறகு இமயம் வரைப் படையெடுத்து வென்று தனது புலிச் சின்னத்தை இமயத்தில் பொறித்து போரில் தோற்ற பிற நாட்டு வீரர்களைக் கொண்டு காவிரிக்குக் குறுக்கே அணையைக் கட்டி, இரு புறங்களி லும் கரை எடுத்த மாபெரும் மன்னன் கரிகாற் பெருவளத்தான். தமிழக வர லாற்றில் யாராலும் நெருங்க இயலாத புகழின் உச்சியை அடைந்த கரிகா லன் அவனுக்குரிய அரியாசனத்தை அடைவதற்குள் அவன் அடைந்த இன்னல்களும், துயரங்களும் பல.

தாய் வயிற்றில் இருக்கும் போதே தந்தையை இழந்தவன் பிறகு வளர்ந்ததும் எதிரிகளால் கைது செய்யப்பட்டு மாளிகைக்குள் அடைத்துவைக்கப்பட்டு மாளிகை யோடு எரிக்க முயன்ற கொடுமையும் அவனது வாழ்வில்தான் அரங்கேறி யது. அதிலிருந்து அவன் எப்படித் தப்பி எங்கெங்கு ஓடியிருப்பான் என அறியும்பொருட்டு காவிரியில் மரக்க லம் சென்றதாய் கூறும் சங்கப் பாடல் களை முனகிக்கொண்டே துளி நீர்

கூட இல்லாமல் வறண்ட காவிரிக் கரையோரமாகவே முக்கொம்பு முதல் கல்லணை வரை நடந்து சென்ற அனுபவங்களை எளிதில் மறக்க இயலாது!

கரிகாலன் அமர்ந்து ஆட்சி செலுத்திய புகார்ப் பட்டினம் நான்கு காத தூரம் பரந்து விரிந்திருந்தது என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. நான்கு காத தூரம் என்பது சோழர்களின் முற்காலத் தலைநகர் உறைந்தைக்கும் சேரர்களின் தலைநகர் கருவூர் வஞ்சிமா நகரத்திற்கும் இடைப்பட்ட தொலைவு என்பதை அறிந்த போது வியப்பின் உச்சிக்கே சென்றுவிட்டேன். தற்போதைய திருச்சிக்கும் கரூருக்கும் இடைப்பட்ட தொலைவு தான் நான்கு காத தூரம். அவ்வளவு தூரம் பரந்து விரிந்திருந்த பிரமாண்டப் பட்டினமான பூம்புகார் இன்று குணக்கடல் கொண்டது போக எஞ்சியிருக்கும் அதன் எச்சங்களைக் காணுகையில் பட்டினப்பாலையில் புகார்ப் பட்டினத்தின் சிறப்பினைக் கூறும்

கடியலூர் உருத்திரங்கண்ணனாரின் பாடல் வரிகள் மனதிற்குள் தோன்ற கண்களின் கண்ணீர்ப் பெருக்கை என்னால் கட்டுப்படுத்த இயல வில்லை. வழிந்த இருதுளிக் கண் ணீர் புகாரைக் கொண்ட குணக்கட லின் இரக்கமற்ற அலைகளில் சிந்தி கலக்கத்தான் செய்தது.

வானவல்லி எனது முதல் புதி னம். வானவல்லி எழுதத் தொடங் கிய பிறகுதான் சங்க இலக்கியங்க ளையும், ஆய்வுக் கட்டுரைகளையும் வாசிக்க ஆரம்பித்தேன் என்ற உண் மையையும் இங்கு கூறிவிடுவது சரி என்றே நினைக்கிறேன். சங்க இலக் கியங்களை வாசிக்கும்போது நம் முன்னோர்கள் வாழ்ந்த சிறப்பையும், தற்போதைய நாம் வாழும் நிலை யையும் எண்ணுகையில் மட்டும் ஏனோ மனம் வலிக்கத்தான் செய்கி றது. எனக்குக் கிடைத்த குறிப்புகள், நான் அறிந்துகொண்ட உண்மைகள் அனைவருக்கும் பயன்பட வேண்டும் என்ற நோக்கில் அனைத்து உசாத் துணை நூல்களையும் குறிப்பிட்டுள்

ளேன். ஆதாரக் குறிப்புகள் அனைத்தையும் எங்கிருந்து எடுக்கப்பட்டவை, எந்தெந்த பக்கங்கள் என்பதனையும் ஆராய்ச்சியை விரும்புபவர்களுக்காக கொடுத்திருக்கிறேன்.

இக்கதையில் வரும் வளவன், இளந்திரையன், இரும்பிடர்த்தலையர், இருங்கோவேள், சேரன் பெருஞ்சேரலாதன், பாண்டியன் தென்னவன், ஹிப்பாலாஸ் ஆகியவர்களே வரலாற்று பாத்திரங்கள். மற்றவர்களான வானவல்லி, விறல்வேல், வளவனார், திவ்யன், யவன வீரன் டாள்தொபியாஸ், அடிமை வீரன் இம்ஹோடெப் ஆகியவர்கள் அனைவரும் என்னால் உருவாக்கப்பட்ட கற்பனைப் பாத்திரங்கள். யவன வீரன் எதற்கு என்ற கேள்வியும் சிலருக்கு எழலாம்? பன்னெடுங்காலமாக சிறந்து விளங்கிய கிரேக்கம் சங்ககாலத்தின் தொடக்கத்தில் அதன் புகழினை இழந்து உரோமிற்கு அடிமைப்பட நேர்ந்தது. அப்போது உலகப் புகழ் பெற்றிருந்த பட்டினமான புகாருக்கு வாணிபம் செய்ய வந்த யவனர்கள் பலர் புகாரி

லேயே தங்கிவிட்டனர் என்பதை பட்டினப்பாலை மூலம் அறியலாம். ஆதலால் யவனர்களை விடுத்தும் சங்க கால சோழர்களின் வரலாற்றை எழுத இயலாது.

**நான் எழுதத் துவங்கிய போது நான் என்ன எழுதுகிறேன் என்றே தெரியாமல் எனக்கு உற்சாகத்தையும், ஆதரவையும் அளித்த அம்மா, தம்பி வெற்றிச்செல்வம், மாமா ஆகியோருக்கும் எழுதுவதற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் துணையிருந்த என் நண்பர்கள் அனைவருக்கும் இந்நூலைச் சமர்ப்பணம் செய்வதில் மகிழ்கிறேன்.**

நான் எழுதுவதற்குப் பலர் ஊக்கத்தை அளித்தாலும் வானவல்லி புத்தக வடிவம் பெறுகிறதென்றால் அதற்கு முழு முதற்காரணம் அண்ணன் திரு.சுந்தர் அவர்களே! வானவல்லியை எழுதிக்கொண்டிருந்த போதே என்னைத் தொடர்பு கொண்டு தகுந்த ஆலோசனையை

வழங்கி வழி நடத்தியவர். அவரது பெயரை இங்கு நன்றியோடு கூறிக் கொள்கிறேன்.

சிறந்த பல சரித்திர நாவலாசிரியர்களின் படைப்புகளை வெளியிட்டு, படிப்பவர்களின் மனதினில் ‘இதய ராணி’யாகத் திகழும் வானதி பதிப்பகத்தில் இந்நாவலைப் பதிப்பித்து வெளியிட்ட திரு.ராமு அவர்களுக்கு எனது நன்றியையும் இங்கு கூறிக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன்..

**கௌசல்யா சி.வெற்றிவேல்**

**சாளையக்குறிச்சி.**

tamilvetrivel@gmail.com

writervetrivel.com

https://telegram.me/aedahamlibra

# உசாத் துணை நூல்கள்

1. பட்டினப் பாலை - கடியலூர் உருத்திரங் கண்ணனார்.
2. கலிங்கத்துப் பரணி - கவிச் சக்கரவர்த்தி செயங்கொண்டார் (பதிப்பும் உரையும் முனைவர் ப.சரவணன்).
3. அகநானூறு பாடல்கள்: 31, 125, 246, 376.
4. புறநானூறு பாடல்கள்: 7, 46, 224, 367.

https://telegram.me/aedahamlibra

5. தமிழக வரலாறு: கரிகாற் பெருவளத்தான் – புலவர் கா. கோவிந்தனார்.

6. பொருநராற்றுப் படை – முடத்தாமக் கண்ணியார்.

7. சிலப்பதிகாரம் (புகார்க் காண்டம்) – இளங்கோவடிகள்.

8. கரிகால் சோழன் – முனைவர். ரா. நிரஞ்சனா தேவி

9. சங்க காலத் தமிழக வரலாறு பகுதி 1 மற்றும் 2 – மயிலை சீனி. வேங்கடசாமி.

10. தென்னாட்டுப் போர்க்களங்கள் -பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார்.

11. சோழர்கள் – கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியார் (தமிழ் மொழிபெயர்ப்பு திரு.ராமன்).

https://telegram.me/aedahamlibra

12. பட்டினப் பாலைத் தலைவன் கரிகாலனே – மா. இராசமாணிக்கனார்.

13. சமணமும் தமிழும் – மயிலை சீனி. வேங்கடசாமி.

14. பௌத்தமும் தமிழும் – மயிலை சீனி. வேங்கடசாமி.

15. கிரீஸ் வாழ்ந்த வரலாறு – வெ. சாமிநாத சர்மா.

16. **The Periplus of the Erithrean Sea:** Travel and Trade in the Indian Ocean by a Merchant of the First Century (London, Bombay & Calcutta 1912) – W.H Schoff (tr. & ed)

17. The Hathigumpha Inscription Of Kharavela Of Kalinga. Lines: 4 & 11.

18. முனைவர் இராம.கி'யின் வலைத்தள இடுகை:

https://telegram.me/aedahamlibrary

வளவு: சிலம்பின் காலம்-6 http://valavu.blogspot.in/2010/05/6_14/.html

19. **Slavery in Ancient Greece** by **Yvon Garlon (Revised 1988)**

20. வஞ்சிமா நகரம் – இராக வையங்கார்

21. **Histry of India by ROMESH CHUNDAR DUTT, C.I.E Edited by A.V WILLIAMS JACKSON, Ph.D., LL.D. Professor of Indo-iranian language in columbia University.**

22. **A Comprehensive Histry of Ancient India (3rd Volume) P.N Chopra, B.N Puri, M.N Das, A.C Pradhan.**

23. **புராணக் கதைகள் - Harshacharita of Bana and Yugapurana of the Gargisamhita.**

https://telegram.me/aedahamlibrary



https://telegram.me/aedahamlibra

# பொருள டக்கம்

என்னுரை

உசாத்துணை நூல்கள்

கரிகாலனின் எழுச்சி

1. லியானிடசும் நன்னனும்

2. வானவல்லியின் புதுக்கோலம்

3. காளனின் தந்திரம்

4. ராச துரோகம்

5. பெருவழியில் மோகினி

6. பயனற்ற ஓலை

7. ஒழிந்தது சோழ மரபு

8. காவலன்

https://telegram.me/aedahamlibra

9. வலிய கரம்
10. புதிர் ஓலை
11. ஓதவஞ்சியின் ஆற்றாமை
12. பிரகடனப்படுத்தப்பட்ட போர்
13. இந்தக் கயவனைக் கைது செய்யுங்கள்!
14. அகப்பட்ட கயவன்
15. வஞ்சியில் வஞ்சிக்கொடி
16. மின்னல்
17. காளனின் திகைப்பு
18 சேந்தனின் தங்கை
19. வானவல்லியும் மின்னலும்
20. கொலைவாள்
21. இளவல்
22. மகிழ்ச்சியும் துக்கமும்
23. இருப்பது ஓர் இரவு மட்டுமே!
24. கரிகாலன் எங்கே?

https://telegram.me/aedahamlibra

25. இந்திரனின் கணை

26. வீர மரணம்

27. வில்வீரன்

28. கரி-காலன்

29. புறப்பட்ட படைகள்

30. கல்லெறிதல்

31. எரிபரந்தெடுத்தல்

32. நள்ளிரவுத் தாக்குதல்

33. கரிகாலா காப்பாற்று

34. அகப்பட்ட கள்வர்கள்

35. ஆலோசனை

36. வேந்தனின் தந்திரம்

37. வெளிப்படுத்திக் கொண்ட கள்வன்

38. வெண்ணி இரகசியம்?

39. தணியாத வேட்கை

40. இனியும் தாமதிக்க வேண்டாம்

41. போர் வியூகம்

https://telegram.me/aedahamlibra


42. விழுந்த அகப்பா

43. எதிர் தாக்குதல்

44. அரிபுதைத் தாக்குதல்

45. சொழாந்தியம்

46. குமரனின் கடற்போர்

47. வேற்படை

48. கடற்புலித் தாக்குதல்

49. குமரனின் ஏமாற்றம்

50. பணிந்த பரதவன் குமரன்

51. மோதிக் கொண்ட பெரும்படைகள்

52. வெண்ணிப் போர்

53. பிரிந்தவர் கூடினர்

54. வீர மரணமும் புறப்புண்ணும்

55. கரிகாலரின் கட்டளை

56. ஊடலுக்குப் பின்

https://telegram.me/aedahamlibra

# வான வல்லி

பாகம் - 03 கரிகாலனின் எழுச்சி

https://telegram.me/aedahamlibrary

# 1.

# லியானிடசும் நன்னனும்

காலம் விரைவாகக் கடந்து கொண்டிருந்தது. புகாரின் குச்சரகுடிகை சம்பாபதி அம்மன் கோட்டத்தில் மணிமேகலை தெய்வத்திடம் மனமுருகி வேண்டிக் கொண்டிருந்த வானவல்லியிடம், “கொற்கைக் குமரிக் கடலில் அமிழ்ந்து போன செங்குவீரர் மீண்டும் உயிர்பெற்று வர மாட்டார்” என்று கரிகாற் வளவன் கூறியவுடன் வானவல்லி, “இன்னொருமுறை அத்தான் இறந்துவிட்டார் என்று யாரும் கூறாதீர்கள். அவர் நிச்சயம் திரும்பி வருவார்” என்று கூறியவளது கண்களில் கண்ணீர் பெருக அங்கிருந்து எழுந்த

வள் வேகமாகச் செல்லலானாள். கரி காலருடன் வந்திருந்த மரகதவல்லியும், “அக்கா... அக்கா...” என அழைத்தபடியே வானவல்லிக்குத் துணையாகச் சென்று விட்டாள்.

அனைவரும் சென்றுவிட்டதால் தனித்துவிடப்பட்ட கரிகாலரின் மனதில் பலவித சிந்தனைச் சுழல்கள் சுழலத் தொடங்கின. தனது சகோதரி வானவல் லியின் நிலை, மௌரியர்கள் தென்ன கத்தைத் தாக்கியபோது தனது தந்தை இளஞ்சேட் சென்னியின் கீழ் திரண்ட அனைத்து குறுநில மற்றும் பெருநில மன் னர்களும் இப்போது தன்னை எதிர்க்க ஒன்று கூடியிருப்பதையும், பெரும் போரின் விளைவுகளையும் எண்ணிய கரிகாலர் சற்று வருத்தத்துடன் அமர்ந் திருந்தார். போரில் உயிரிழக்கப் போகும் வீரர்கள், படைத்தலைவர்கள், குறு நில மன்னர்கள், பேரரசர்கள் ஆகியோர் களை எண்ணி கரிகாலர் வருந்தினாலும் ‘தான் ஒரு பேரரசின் இளவரசன் என் பதையும் மதிக்காமல் தன்னைக் கடத்தி

உயிரோடு எரிக்க முயன்ற எதிரிகளின் இழிந்த செயலையும், அவர்களுக்குத் துணை நிற்பவர்களையும் நிச்சயம் தண்டிக்க வேண்டும். அதற்குப் போர் ஒன்றே தீர்வு' என எண்ணிய கரிகாலரின் கண்கள் இரண்டும் சிவக்கத் தொடங்கின. கரிகால் வளவனை உறைந்தை மாளிகையில் உயிரோடு எரிக்க எதிரிகள் முற்பட்டதையும், கொற்கையில் மரக்கலத்தோடு நீரில் மூழ்கடிக்க நடந்த முயற்சிகளையும் முறியடித்த செங்குவீரனின் வீரத்தையும், சோழ நாட்டின் மேன்மைக்காகத் தனது உயிரையும் இழந்துவிட்ட அவனது தியாகத்தையும் எண்ணிய கரிகாலர், "படைத் தலைவரின் வீரத்திற்கும், தியாகத்திற்கும் அஞ்சலி செலுத்த தகுதியுடையது 'போர் வெற்றி' ஒன்றே! எத்தனை மன்னர்கள் எதிர்த்து வந்தாலும் அவர்கள் அனைவரையும் முறியடித்துப் படைத் தலைவருக்கு வெற்றி ஒன்றையே சமர்ப்பணமாக அளிக்க வேண்டும்" எனக் கரிகாலர் தனக்குத்தானே கூறிக் கொண்

டார். புகாரில் தமது படைபலம் எவ்வளவு? அதனை எப்படி வழிநடத்த வேண்டும் என மனத்திரையில் போர் ஒத்திகையைக் கரிகாலர் நடத்திக் கொண்டிருந்த போது அவரது காதுகளில், “அரசே!” எனும் வார்த்தை பணிவுடனும், அதே நேரம் பொறுமையாகவும் ஒலிக்க வியப்புடன் அண்ணாந்துப் பார்த்தார். கரிகாலரின் வியப்பிற்குக் காரணம் யாதெனில் அவரது மாறுவேடம் தான். கரிகாலர் மாறுவேடத்தில் அமர்ந்திருந்ததால் அவரை யாருக்கும் அடையாளம் தெரிந்திருக்கவில்லை. ஆதலால், தனிமையாக அமர்ந்திருந்த கரிகாலரை சட்டை செய்யாமலே புகார் மக்கள் கோட்டத்திற்குள் வந்து கொண்டும், சென்று கொண்டும் இருந்தனர். ஆதலால் தான் ‘தன்னை அடையாளம் கண்டு கொண்டது யாராக இருக்கும்?’ என எண்ணிய கரிகாலர் வியப்புடன் பார்வையை உயர்த்தினார்.

எதிரில் டாள்தொபியாஸ் பணிவுடன் நின்று கொண்டிருந்தான். அதே

நேரம் அவனது பணிவு கோட்டத்தில் காணப்பட்ட பொது மக்கள் அடையாளம் காண இயலாத வண்ணமாகவும் இருந் தது. அவரைக் கண்ட கரிகாலர் முகத் தில் எந்த உணர்ச்சிகளையும் காட்டிக் கொள்ளாமல் தனக்கு அருகில் அமரும் படி கைகாட்டினார்.

ஆனால், அவரது உத்தரவை ஏற்க மறுத்த டாள்தொபியாஸ், “அரசே, அமர்ந்து பேசுவதற்கு நேரமில்லை. என் னுடன் வாருங்கள்” எனக் கூறியபடியே அங்கிருந்து நகர அமர்ந்திருந்த கரிகால ரும் எழுந்து அவன் பின்னே செல்லலா னார். அங்கே இரு புரவிகள் இருவருக் கும் காத்திருக்க அதன் மீது தாவிய இரு வரும் அங்கிருந்து புறப்பட்டனர். டாள் தொபியாசே முதலில் பேச்சைத் தொடங் கட்டும் என எண்ணிய கரிகாலர் அமை தியுடன் புரவியில் பயணிக்கலானார். அவர்கள் இருவரும் புரவியை விரட்டா ததனால் புரவியும் மெதுவாகவே செங்கு வீரனின் படை வீரர்கள் ஓய்வெடுக்கும்

குன்றுத் துறையை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தன.

டாள்தொபியாஸ் தான் முதலில், "அரசே" என அழைத்தான்.

"கூறு டாள்தொபியாஸ்" அதிகாரத் துடனும், சற்று வருத்தத்துடன் குரல் வெளிவந்தாலும் கம்பீரத்துடனே காணப் பட்டது கரிகாலரின் குரல்.

"சோழ அரசின் நிலையை எண்ணி னால் எனக்கு அச்சமாக இருக்கிறது."

"அச்சமாகவா?"

"ஆம்."

"எப்போதிலிருந்து உங்களுக்கு இந்த அவநம்பிக்கை டாள்தொபியாஸ்?"

"செங்குவீரர் இறந்ததிலிருந்து!"

"டாள்தொபியாஸ்?"

"ஆம் கரிகாலரே. செங்குவீரர் உயி ருடன் இருந்தவரை சோழ தேசத்தின்

நிலை வேறு. நம் எதிரிகளை ஒப்பிடு கையில் நமது படை வீரர்களின் எண் ணிக்கை குறைவானதாக இருந்தாலும் நம் வீரர்கள் பெரும் நம்பிக்கையுட னும், உற்சாகத்துடனும் காணப்பட்டார் கள். எதிரிகளின் சூழ்ச்சிகள் அனைத் தையும் முளையிலேயே கிள்ளி எறிந்து கொண்டிருந்தார் நம் படைத்தலைவர். ஆனால், இப்போது வீரர்களின் நிலை முற்றிலும் மாறிவிட்டது. அவர்கள் அவ நம்பிக்கையுடன் காணப்படுகிறார்கள். அவர்கள் யாருக்கும் முன் போன்ற உற் சாகம் இல்லை. எனக்குக் கீழ் பணி யாற்றும் யவனக் காவல் வீரர்களை யும் சேர்த்துத்தான் குறிப்பிடுகிறேன். நம் படை வீரர்களை வழிநடத்த, உற்சாகப்ப டுத்த தகுந்த தலைமை இல்லை. நான், திருக்கண்ணன், பரதவன் குமரன் என அனைவரும் முயன்றுவிட்டோம். செங்கு வீரரின் இடத்தை யாராலும் நிரப்ப இயல வில்லை."

"இதற்குத் தீர்வு?"

https://telegram.me/aedahamlibra

"செங்குவீரரின் இடத்தில் தகுதியான படைத் தலைவர் ஒருவரைத் தாங்கள் நியமிக்க வேண்டும்! அதுமட்டுமல்ல அரசே..."

"தொடர்ந்து கூறுங்கள் டாள்தொபியாஸ். தயக்கம் வேண்டாம்."

"இதே நிலையில் போர் சூழ்ந்தால் நாம்... நாம்...." எனத் டாள்தொபியாஸ் கூறத் தயங்க, "இதே நிலையில் போர் தொடங்கினால் நாம் தோற்று விடுவோம் என்றுதானே குறிப்பிட விரும்புகிறீர்கள்?" எனக் கூறி முடித்தார் கரிகாலர்.

"ஆம் அரசே. ஒற்றர்களின் மூலம் தொடர்ந்து தகவல் வந்து கொண்டிருக்கிறது. அழுந்தூர் மட்டுமே நமக்குத் துணை நிற்கப்போகிறது. மற்ற வேளிர்கள், இரு பெரும் வேந்தர்களான சேரர் மற்றும் பாண்டியர் என ஒட்டுமொத்த தமிழகமும் தங்களை எதிர்க்க ஒன்றிணைந்துள்ளனர்."

https://telegram.me/aedahamlibra

“ஆம் டாள்தொபியாஸ். எதிர்பார்த்தது தானே இது!”

“இதற்கு முன் தமிழகப் பெரும் மற்றும் குறுநில மன்னர்கள் அனைவரும் வடக்கிலிருந்து தமிழகத்தைக் கைப்பற்ற வந்த மௌரியர்களை எதிர்க்கும்போது தங்கள் தந்தையின் தலைமையில் தான் ஒன்றிணைந்தார்கள். ஆனால், அவர்கள் அனைவரும் இப்போது தங்களை எதிர்க்கத் துணிந்திருக்கிறார்கள்!”

“துரதிஷ்டவசமான சூழல்.”

“இப்போதிருக்கும் நிலையில் போர் தேவையா?”

“டாள்தொபியாஸ், போரை முன்னெடுத்திருப்பது நாம் அல்ல; நமது எதிரிகள். எனக்குரிய உறைந்தை சிம்மாசனத்தை என் எதிரிகள் கைப்பற்றிக் கொண்டார்கள். என்னை மாளிகையில் அடைத்து உயிரோடு எரிக்க முயன்றிருக்கிறார்கள்? எனக்குப் பயிற்சிகளை

அளித்த என் குரு படைத்தலைவர் திவ்யனை குணக் கடலில் மூழ்கடித்துக் கொன்றார்கள். நம் படைத் தலைவர் செங்குவீரரை வஞ்சகமாகக் குமரிக் கடலில் கொன்றிருக்கிறார்கள்? அது மட்டுமல்லாமல் என்னைக் காப்பாற்றிய என் சகோதரியை வஞ்சிமா நகரில் கவர முயற்சித்திருக்கிறார்கள்? அதர்மத்தின் துணையுடன் தவறுகளைச் செய்து கொண்டே இருப்பவர்களிடம் சமாதானம் செய்துகொள்ள விரும்புகிறீர்களா டாள் தொயாஸ்?”

“இல்லை அரசே, நான் சமாதானத்தை விரும்பவில்லை. இந்த நிலையில் போர் தொடங்கினால் நமக்கு வீழ்ச்சி நிச்சயம். செங்குவீரரின் வஞ்சினத்தை நாம் நிறைவேற்ற வேண்டும். ஆனால்?”

“என்ன ஆனால்?”

“அவர்களிடம் படை பலம் அதிகம்.”

"இருந்துவிட்டுப் போகட்டும். படை பலத்தினால் போரின் முடிவைத் தீர்மா னிக்க இயலும் என ஒருவன் நினைத் தால் அவன் வீரனும் அல்ல, தலைவனும் அல்ல. நமது படை வீரர்களின் எண் ணிக்கை குறைவுதான் டாள்தொபியாஸ். ஆனால், நமது படையிடம் வேகம் அதி கம். விவேகமும் அதிகம். அவர்களை வழிநடத்த திறமையான படைத் தளபதி கள் இருக்கிறீர்கள். எனக்கு நம்பிக்கை இருக்கிறது. நாம் நிச்சயம் வெற்றி பெறு வோம்."

"இல்லை அரசே. சில தருணங்க ளில் அதீத நம்பிக்கையும் நமது தோல் விக்கு வழிவகுத்துவிடும்."

"டாள்தொபியாஸ்...." எனக் கோபத் துடன் அழைத்தார் கரிகாலர்.

"நான் கூறுவதனால் தங்களுக்கு என் மீது கோபம் வரலாம். ஆனால், உண்மை நிலையை அரசர்க்கு மறைக் காமல் தெரிவிக்க வேண்டியது ஒரு

படைத் தலைவனின் கடமை. அதைத் தான் நான் இப்போது செய்து கொண்டி ருக்கிறேன்."

"ம்ம்ம்... சரி, மேலே கூறுங்கள் டாள் தொபியாஸ்."

"அரசே, தங்களை எதிர்க்கும் அனைத்து அரசர்களையும் நாம் தோற்க டிக்க வேண்டும். அதற்குச் சில மார்க்கங் கள் இருக்கிறது" என்றான் டாள்தொபி யாஸ்.

"என்னென்ன?"

"செங்குவீரர் மேற் கொண்ட பணி யைத் தாங்கள் இனி மேற்கொள்ள வேண்டும்."

"அதைத்தானே நான் செய்து கொண்டு இருக்கிறேன்." எனக் கூறிக் கொண்டிருந்த போதே இடைமறித்த டாள்தொபியாஸ், "இது போதாது" எனக் கூறி முடித்தான்.

https://telegram.me/aedahamlibrary

கரிகாலர் அவனை ஆச்சர்யத்துடன் பார்க்க, தொடர்ந்த டாள்தொபியாஸ், "ஆமாம் அரசே. இது போதாது. நமக்கிருக்கும் ஒரே நிலை போரைத் தள்ளிப் போடுவதுதான். நம்மிடம் திறமையான வீரர்கள் இருக்கிறார்கள். அவர்களை வழிநடத்த படைத் தலைவர்கள் இருக்கிறார்கள். ஆனால், இப்போது அவர்கள் அனைவருமே உற்சாகமின்றி இருக்கிறார்கள். அதாவது படை வீரர்கள் முதல் படைத் தலைவர்கள் வரை! நம் வீரர்களின் உத்வேகத்தை அதிகரிக்க வேண்டும். அதே சமயம் எதிரிகளின் செயல்பாடுகளையும் முளையிலேயே கண்டறிந்து அதற்குத் தகுந்த செயல்களில் ஈடுபட வேண்டும். முதலில் வளவனார் மகன் திவ்யன் அனைவரையும் ஒருங்கிணைத்துக் கொண்டிருந்தார்;அதாவது உயர் மட்டத்தில் இருக்கும் அதிகார வர்க்கத்தையும் கீழ் மட்டத்தில் இருக்கும் படை வீரர்களையும். அவர் மடிந்ததும் என் தலைவர் செங்கு

வீரர் அந்தப் பணியை மேற் கொண்டார். இப்போது அந்த இடம் வெற்றிடமாகவே இருக்கிறது. தாங்கள் அந்த இடத்தை நிரப்ப முயற்சிக்கும் பணிகள் வெற்றிய டையவில்லை என்பதே என் கருத்து. நீங்கள் அதிகாரத்தின் உயர்ந்த மட்டத் தில் இருக்கிறீர்கள். ஆதலால் படைத் தலைவர்கள் திவ்யன் மற்றும் செங்குவீர ரைப் போன்று உங்களால் வீரர்களுடன் இரண்டறக் கலக்க இயலவில்லை."

கரிகாலர் எதையோ கூற வாயெ டுத்தார். ஆனால் அவரைப் பேச விடாமல் தொடர்ந்த டாள்தொபி யாஸ், "அரசே, தாங்களே சேனாதிபதி பொறுப்பை ஏற்று நம் வீரர்களுக்கு உற் சாக மூட்டி வருகிறீர்கள். ஆனால், அதே நேரம் தாங்கள் நம் எதிரிகளின் நடவடிக் கைகளைக் கவனிக்க மறந்து கொண்டி ருக்கிறீர்கள். இருங்கோவேள் மற்றவர்க ளின் ஆதரவுடன் எப்போது வேண்டுமா னாலும் நம் மீது போர் தொடுக்க ஆயத்த மாக இருக்கிறான். வளவனார் மகள் மற்

https://telegram.me/aedahamlibrary

றும் இருங்கோவேளின் புதல்வன் இருவருக்கும் மணமுடித்துப் போரைத் தள்ளி வைக்கலாம் எனத் தங்கள் மாமா இரும்பிடர்த்தலையர் திட்டம் வகுத்தார். அதைத் தாங்கள் முற்றிலும் நிராகரித்து விட்டீர்கள். இது நம் வீரர்களுக்கு ஓரளவு உத்வேகத்தை அளித்திருக்கிறது. சற்று முன்னர்தான் வானவல்லி சகோதரியின் நிலையைப் பார்த்தோமே?" எனக் கூறி அமைதியானான். பிறகு, "உறைந்தையில் அவர்கள் இந்நேரம் புகாரிலிருந்து பதிலை எதிர்நோக்கிக் கொண்டிருப்பார்கள். நாம் எந்தப் பதிலையும் அனுப்பாமல் இருப்பதால் அவர்கள் நம் மீது விரைவில் போர் தொடுக்கலாம்."

"தொடுத்துப்பார்க்கட்டும் டாள் தொபியாஸ். அதன் பிறகு அவர்கள் அதன் விளைவை அனுபவிப்பார்கள்."

"அரசே, தாங்கள் நம்பிக்கையுடன் இருப்பது எனக்குப் பெரும் மகிழ்ச்சியை

அளிக்கிறது. ஆனால், அந்த நம்பிக் கைக்கு எந்த முகாந்திரமும் இல்லை."

"டாள்தொபியாஸ், தாங்கள் என்னை மற்றும் சோழ வீரர்களைச் சரி யாகப் புரிந்துகொள்ளவில்லை என்று கருதுகிறேன். புகாரின் நமது வீரர்கள் அனைவரும் தயாராக இருக்கிறார்கள். வளவனார் மற்றும் பிடர்த்தலையர் இரு வரும் சோழ தேசத்தின் மீது பற்றுக் கொண்ட மக்களைத் திரட்டிப் பெரும்ப டையைத் சேர்த்துக் கொண்டு இருக்கி றார்கள். திட்டமிட்டபடி அனைத்து திட் டங்களும் தொய்வின்றி நடந்து கொண்டு தான் இருக்கிறது உபபடைத்தலைவரே."

"அரசே, இத்திட்டங்கள் அனைத் தும் சில கிழமைகளுக்கு முன் நமது படைத் தலைவர் செங்குவீரர் வகுத்து விட்டுச் சென்ற திட்டங்கள். காலம் இப் போது மாறிவிட்டது. நம் அண்டை தேசத் தவர்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு கொண்டு இருக்கிறார்கள். அவர்களி

டம் ஏற்கெனெவே பயிற்சி அளிக்கப்பட்ப் பெரும் சேனைகள் இருக்கிறது. இந்நிலையில் நாம் நமது போர் வியூகத்தை மாற்றியே தீர வேண்டும்."

"உமது யோசனை என்ன டாள் தொபியாஸ்?"

"அரசே, எனது யோசனையைத் தெரிவிப்பதற்கு முன் சிலவற்றை நான் தங்களிடமிருந்து அறிந்துகொள்ள விரும்புகிறேன்."

"என்ன?"

"அரசே, ஒரு போரின் வெற்றியை தீர்மானிப்பது எது?"

"போருக்குத் தலைமை வகிப்பவனின் வீரம், படைகளின் பலம், போர் வியூகம் இவையே ஒரு போரின் வெற்றியை தீர்மானிக்கும்."

"சரியாகச் சொல்லியிருக்கிறீர் அரசே, நல்லது. ஒரு லட்சம் படை வீரர்

களைத் திரட்டிக் கொண்டு வரும் வெறி பிடித்த பேரரசனை வெறும் முன்னூறு வீரர்களால் தடுத்து நிறுத்த இயலுமா?" எனக் கூறியபடியே கரிகாலரின் பதில் என்னவாக இருக்கும் என அறியும் ஆவ லில் அவரது முகத்தையே பார்த்தான் டாள்தொபியாஸ்.

"டாள்தொபியாஸ் மேலோட்டமா கப் பார்த்தால் முன்னூறு வீரர்களால் எது வும் செய்ய இயலாது என்றே தோன்றும். ஆனால், ஒரு போரின் முடிவைத் தீர் மானிப்பது போர் செய்யும் இடம், போர் வியூகம், காலம், வீரர்களின் மன வலிமை ஆகியவையே. மேற்கூறிய அனைத்து காரணிகளும் ஒன்றாகப் பொருந்தி அதே நேரம் அந்த முன்னூறு வீரர்களைச் சரி யான முறையில் வழிநடத்தும் திறமை யான தலைமை இருந்தால் அந்த ஒரு லட்சம் வீரர்களைத் தடுத்து நிறுத்துவது சுலபமான காரியம் உப தலைவரே."

https://telegram.me/aedahamlibra

டாள்தொபியாஸ் அவரது முகத்தையே பார்த்துக் கொண்டு வியப்புடன் புரவி மீது பயணித்துக் கொண்டிருந்தான்.

"டாள்தொபியாஸ் அந்தப் போரின் முடிவு என்ன ஆனது?"

"தாங்கள் கூறியதைப் போன்று தான் ஆனது கரிகாலரே!"

"அந்தப் போரைப் பற்றி விரிவாகக் கூறுங்கள்?" கட்டளையிட்டார் கரிகாலர்.

"அரசே கிட்டத்தட்ட முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஒட்டுமொத்த யவன தேசங்களைக் கைப்பற்ற வேண்டும் எனும் முடிவுடன் பாரசீக மன்னன் செர்செக்ஸ் கிட்டத்தட்ட ஒரு லட்சம் படை வீரர்களுக்கு மேல் திரட்டிக் கொண்டு போர் தொடுத்தான். எங்கள் நகர இராச்சியங்களுள் புகழ் பெற்றதான ஏதன்சை அழித்துத் தீக்கிரையாக்கிக் கொண்டு முன்னேறினான் செர்செக்ஸ். பாரசீக மன்னனின் அடுத்த இலக்கு

https://telegram.me/aedahamlibra

ஸ்பார்டா என்பதை உணர்ந்த அதன் அரசர் லியானிடஸ் ஒட்டுமொத்த படையையும் தன்னுடன் அனுப்ப நகர இராச்சிய சபையிடம் வேண்டினார். அரசரின் வேண்டுகோளை நிராகரித்த இராச்சிய சபை வெறும் முன்னூறு வீரர்களை மட்டுமே அவருடன் அனுப்பியது."

"ஒரு இராச்சியத்தையே அழித்து விட்டு ஒரு லட்சம் படையினருடன் முன்னேறும் பாரசீகர்களை எதிர்க்க வெறும் முன்னூறு வீரர்களை மட்டும்தான் அனுமதித்தார்களா?"

"ஆம் அரசே. அங்கு நடந்தது நகர இராச்சியம் என்பதால் அரசருக்கு அதிகாரங்கள் குறைவு. போர் சம்பந்தமான முடிவுகளை மதக் குருமார்களும், நகரச் சபையுமே தீர்மானிக்கும்."

"போர் பற்றிக் கூறுங்கள் டாள்தொபியாஸ்."

"முன்னூறு படை வீரர்களுடன் புறப்பட்ட லியானிடஸ் பாரசீகர்களை வெற்றிகொள்ள இயலாது என்பதை உணர்ந்திருந்தார். ஆனால் ஒருங்கி ணைந்த யவன தேசத்தின் படைகளும் ஒன்றுதிரண்டு செர்செக்சை எதிர்க்கும் வரை அவனைத் தடுத்து நிறுத்த வேண் டும் என முடிவெடுத்தார். போரின் முடிவு என்பது படை பலத்தைக் கொண்டு தீர் மானிக்கப்படுவது அல்ல. அது காலம், சூழல், இடம், போர் வியூகம் ஆகிய வற்றைச் சார்ந்தது என்பதைப் புரிந்து வைத்திருந்த ஸ்பார்டா மன்னன் லியா னிடஸ் வெறும் முன்னூறு வீரர்களைக் கொண்டு தெர்மோபைலி கணவாயில் பாரசீகப் படையை எதிர் கொண்டான். தெர்மோபைலி கணவாயானது ஒரு பக் கம் கடலையும் மறு பக்கம் உயர்ந்த மலைத் தொடரையும் கொண்ட குறுகிய வாயிலை உடைய சிறு பாதை. அந் தக் குறுகிய பாதை வழியாக முன்னேற முயன்ற பாரசீகப் படையைத் தடுத்து

நிறுத்திய லியானிடஸ் கிட்டத்தட்ட 20,000 பாரசீகப் படை வீரர்களைக் கொன்று குவித்தான். கடைசியில் ஆடு மேய்க்கும் ஒருவன், ஆடுகள் மலையைக் கடக்கும் பாதையைப் பாரசீக வீரர்களுக்குக் காட்டிக் கொடுத்துவிட லியானிடஸ் சுற்றி வளைக்கப்பட்டு அவனது முன்னூறு வீரர்களோடு கொல்லப்பட்டான். லியானிடஸ் மற்றும் அவனது முன்னூறு வீரர்களின் தியாகத்தைக் கண்டு ஒன்றுபட்ட யவன தேசமும் கிளர்ந்தெழுந்தது. பிறகு வந்த ஸ்பார்டாவின் படை மற்றும் ஒருங்கிணைந்த யவனத்தின் கப்பற்படையாலும் பாரசீகப் படைக்குப் பெரும் சேதம் ஏழ இறுதியில் பின்வாங்கிவிட்டான் செர்செக்ஸ்."

"அந்த முன்னூறு வீரர்களின் தியாகம் என்னைப் பிரமிப்படையச் செய்கிறது டாள்தொபியாஸ்."

https://telegram.me/aedahamlibra

"அரசே, அதே போன்ற ஒரு பெரும் யுத்தத்தை உங்கள் தமிழமும் சந்தித்திருக்கிறது" என்றான் டாள்தொபியாஸ்.

"எங்கள் நாட்டிலா?"

"ஆம் அரசே. உங்கள் நாட்டில் தான்!"

கரிகாலர் ஆச்சர்யத்துடன் பார்த்துக் கொண்டிருக்க டாள்தொபியாஸ், "உங்கள் தமிழகத்தைக் கைப்பற்ற வந்த மௌரியர்களின் படையெடுப்பை எதிர்த்த துளுவ நாட்டு அரசர் நன்னனின் தியாகமும் எங்கள் கிரேக்க ஸ்பார்டா மன்னர் லியானிடசின் தியாகத்தைப் போன்றதே! ஒட்டுமொத்த கிரேக்க இராச்சியங்களும் ஒன்றினையும் வரை செர்செக்சைத் தடுத்து நிறுத்தினார் லியானிடஸ். அதே போன்றே மௌரியரை எதிர்க்க ஒட்டு மொத்தத் தமிழகமும் தயாராகும் வரை அவர்களைப் பாழிக் கோட்டைக்கு அப்பாலே தடுத்து நிறுத்தினார் பெருமைமிகு மன்னர் நன்

னன். அவர் மட்டும் அந்தக் குறுகிய காலம் மௌரியரைத் தடுத்து நிறுத்தி யிராவிட்டால் அழுந்தூர் வேள் திதியன் மற்றும் தங்கள் தந்தை சென்னி இரு வரும் பெரும் படையைத் திரட்டுவதற் குக் காலம் இருந்திருக்காது. லியானிடஸ் மற்றும் நன்னன் ஆகியோரது பங்களிப்பு அந்த இரு போர்களிலும் துளியளவே. அவர்கள் தடுத்து நிறுத்திய அந்தக் குறு கிய காலமே வெற்றித் திருமகளின் பார் வையைத் தென்னகத்தின் பக்கம் திருப் பியது. நமக்கும் இப்போது தேவை அந்தக் குறுகிய காலமே!" எனக் கூறி முடித்தான் டாள்தொபியாஸ்.

"ஆம் டாள்தொபியாஸ். நமக்கும் இப்போது தேவை உடனடி போர் அல்ல, வெற்றிக்கு நாமும் தயாராகச் சிறிது கால இடைவெளி தேவை!"

"போரை இன்னும் குறைந்தது ஆறு திங்கள்களாவது நாம் தள்ளிப்போட வேண்டும் அரசே. நமது வெற்றி அதில்

தான் அடங்கியிருக்கிறது." எனக் கூறிய டாள்தொபியாஸ் ஆவேசத்துடன், "உங்களுக்கு உரிய ஆசனத்தை நீங்கள் நிச்சயம் கைப்பற்ற வேண்டும். அதற்கு நாங்கள் அனைவரும் துணையிருப்போம். போரில் தோற்று ஆட்சியை இழந்து, அரசை இழந்து நாடோடி ஏதிலியாக வாழும் எனது வாழ்க்கை தங்களுக்கு நிச்சயம் ஏற்படக்கூடாது" என்றான் உணர்ச்சிவசப்பட்டு.

அதுவரை அமைதியாக அமர்ந்திருந்த கரிகாலர் தனது சிந்தனையிலிருந்து விடுபட்டவர், "என்ன கூறினீர்கள்? என்ன கூறினீர்கள்?" என ஆச்சர்யத்துடன் வினவலானார்.

அப்போதுதான் தான் உணர்ச்சிவசப்பட்டதில் உளறிவிட்டதை உணர்ந்த டாள்தொபியாஸ் தனது நாக்கைக் கடித்துக் கொண்டான். அதையும் கரிகாலர் கவனித்துவிட்டார்."இல்லை அரசே, போரில் நாம் எச்சூழலிலும் தோல்விய

டைந்து விடக்கூடாது என்பதில் கவன மாக இருக்க வேண்டும் என்றேன்" என மாற்றிப் பேசினான்.

"இல்லை டாள்தொபியாஸ். தாங் கள் வேறு எதையோ வாய் தவறி கூறி னார்கள். இப்போது மறைக்கிறீர்கள்."

"இல்லை அரசே, நான் எதை யும் மறைக்கவில்லை" எனத் தரை யைப் பார்த்துக் கொண்டே பதிலளித் தான் டாள்தொபியாஸ்.

புரவியைத் தட்டி டாள்தொபியாசின் புரவிக்கு முன் சென்று அவனது புரவியை மறித்தவர், அவனுக்கு நேருக்கு நேர் நின்று அவனது விழிகளில் தனது பார் வையை நிலைக்கவிட்ட படியே, "உண் மையைக் கூறுங்கள். என்னைப் போன்ற ஏதிலி என்று ஏதோ தெரிவித்தீர்களே? என்ன அது? மறைக்காமல் தெரிவியுங் கள்" எனக் கோபத்துடனும் அதே நேரம் அதிகாரத்துடனும் வினவினார் கரிகாலர்.

அவரது கட்டளைக்குச் செவி சாய்த்த டாள்தொபியாஸ், “நாட்டினை இழந்து நாடோடியாகப் பயணிக்கும் ஏதிலி வாழ்க்கையின் துன்பத்தைத் தாங்கள் ஒருநாளும் என்னைப் போன்று அனுபவிக்கக் கூடாது என்றேன்” எனத் தயக்கத்துடனே தெரிவித்தான்.

“அப்படியெனில் தாங்கள்?”

“நான் யவன தேசத்தில் ஒரு சிறு நகர இராச்சியத்தின் இளவரசன்” என் றான் அடக்கத்துடன்.

அவன் கூறியதைக் கேட்ட கரிகா லர் அதிர்ச்சியடைந்துவிட்டார். அதிர்ச்சி யடைந்தவர், “தாங்கள் கூறுவது?” என வினவியதும்”மெய் தான் இளவரசே” எனக் கூறி முடித்தான் டாள்தொபியாஸ்.

டாள்தொபியாசை ஒரு வீரனாக, படைத் தளபதியாகக் கரிகாலர் முன்பே அவன் மீது பெரும் மரியாதையை வைத் திருந்தார். ஆனால் அவன் ஒரு நாட்

டின் இளவரசனாக இருப்பான் என்று அவர் கனவிலும் எதிர்பார்த்திருக்க வில்லை. வியப்புடனே அமைதியாக அவனது முகத்தைப் பார்த்தபடியே புரவி யில் அமர்ந்திருந்தார்.

"என்னை மன்னியுங்கள் அரசே. இதை நான் யாரிடமும் இந்த நாள் வரை தெரிவித்ததில்லை. என் தலைவர் செங் குவீரருக்குக் கூட நான் இளவரசன் என் பதை அறிந்திருக்கமாட்டார். ஒரு இளவ ரசனாக நான் பெறும் மரியாதையை விட ஒரு வீரனாகக் கிடைக்கும் மரியாதை யையே விரும்புகிறேன். அதுவே எனக் குப் பெரும் மன நிறைவை அளிக்கிறது. வீரர்களை மதித்து வாழும் தங்களுக்கும், தங்கள் நாட்டு மக்களுக்கும் எந்தத் துய ரமும் வந்துவிடக்கூடாது எனும் நினைப் பில் இத்தனை நாட்களாகக் காப்பாற்றி வந்த ரகசியத்தை உளறிவிட்டேன்" என் றான் டாள்தொபியாஸ்.

"சரி, தங்கள் விருப்பத்திற்கு மாறாக ஒரு நாளும் இதனை நான் யாரிடமும் தெரிவிக்கமாட்டேன். ஆனால், உங்களுக்கு அதற்குரிய அனைத்து மரியாதையும் நிச்சயம் கிடைக்கும் என்பதை உறுதிபடக் கூறிக்கொள்கிறேன் நான்."

"நன்றி அரசே!"

"யவன இளவரசரே, மௌரியரை எதிர்த்து விரட்டியடித்த என் தந்தையின் புகழில் நன்னனின் தியாகம் மறைந்தே போய்விட்டது. எங்கள் தமிழகப் படைவீரர்களே நன்னனின் தியாகத்தைப் பற்றி அதிகம் அறிந்திருக்கமாட்டார்கள். அப்படியிருக்க, தாங்கள் எப்படி அதனைச் சரியாக அறிந்து வைத்திருக்கிறீர்கள்?"

"அரசே, என்னைத் தாங்கள் டாள்தொபியாஸ் என்று உரிமையுடன் அழைப்பதையே நான் பெருமையாகக் கருதுகிறேன். யவன இளவரசர் என்று இனியொருமுறை தாங்கள் அழைக்க வேண்டாம்."

https://telegram.me/aedahamlibra

“சரி டாள்தொபியாஸ். இனி அழைக்கமாட்டேன். தமிழகப் போர்க்கலங்களைப் பற்றித் தாங்கள் எப்படி அறிவீர்கள்?”

“அதற்குக் காரணம் செங்குவீரர் தான் அரசே!”

“செங்குவீரரா?”

“ஆம் அரசே! செங்குவீரர் தான் அதனைத் தெரிவித்தார். கதிரவன் காலையில் எழுந்ததும் வானத்தில் மின்னிக் கொண்டிருந்த விண்மீன்கள் மற்றும் நிலவு மறைந்துவிடுவதைப் போன்று இளஞ்சேட்சென்னியின் புகழுக்கு முன் நன்னனின் தியாகம் மறைந்துவிட்டது என்றும் தெரிவித்தார்.”

“செங்குவீரர் மிகச் சிறந்த படைத்தலைவர். அவரை நாம் இழந்துவிட்டோம் டாள்தொபியாஸ்.”

“ஆம் அரசே, செங்குவீரரின் இழப்பு ஈடு செய்ய இயலாதது. செங்குவீரர் தமி

https://telegram.me/aedahamlibra

ழகத்தில் நடைபெற்ற அனைத்துப் போர்களைப் பற்றியும் எங்களுடன் விவாதித்திருக்கிறார். அதில் எந்தெந்த அரசர்கள் என்னென்ன தவறினை இழைத்துப் போர்களில் தோற்றார்கள் என்று அனைத்தைப் பற்றியும் தெளிவாகக் கூறியிருக்கிறார். இந்தப் படையை இப்படி நடத்தியிருந்தால் போரின் முடிவு மாறியிருக்கும் என்று ஒவ்வொரு போர்களையும் பாடமாக எடுத்துக் கொண்டு எங்களுக்குக் கற்பிப்பார்."

"நம் படைத் தலைவரின் இழப்பு ஈடு செய்ய இயலாதது."

"ஆம் அரசே!"

"அவரது இறப்பிற்கு நானே காரணமாகிவிட்டேன். அன்று நான் மட்டும் மாறுவேடத்தில் சென்றிருக்காவிட்டால், படைத்தலைவர் தனது உயிரைத் தியாகம் செய்யும் நிலை வந்திருக்காது. படைத் தலைவர் திவ்யனின் இறப்பிற்குத் தான்தான் காரணம் என்று

நம் படைத்தலைவர் செங்குவீரர் எப்படிக் குற்ற உணர்ச்சியில் தவித்தாரோ, அவரைப் போன்றே செங்குவீரரின் இறப்பிற்கு நான்தான் காரணம் என்று என் மனம் குற்ற உணர்வில் தவிக்கிறது டாள்தொபியாஸ்."

"அரசே, அந்த இடத்தில் யார் இருந்திருந்தாலும் அதைத்தான் செய்திருப்போம். அவர் மட்டும் அன்று தனது உயிரைத் தியாகம் செய்து கதிரவன் குல பிறப்பான சோழ இளவலைக் காப்பாற்றியிருக்காவிட்டால் இன்று சோழ குலமே நிர்மூலமாகியிருக்கும். அவரது இழப்பு தவிர்க்க இயலாது அரசே!"

"அவரது இழப்பிற்கான நாம் செலுத்தும் மரியாதை 'வெற்றி' மட்டுமே."

"ஆம் அரசே. இப்போரில் நாம் பெரும் வெற்றியை நம் படைத் தலைவருக்குச் சமர்ப்பணம் செய்வோம்."

https://telegram.me/aedahamlibra

“நம் வெற்றியை நம் தலைவரின் தியாகத்திற்கு அர்ப்பணிப்போம்” எனக் கூறியபடியே இடையுறையில் தஞ்சம டைந்திருந்த தனது வாளினை எடுத்து உயர்த்தினார் கரிகாலர். அப்போது சிவந்து போயிருந்த அவரது கண்களில் போர் வெறியைக் கண்டான் டாள்தொபி யாஸ்.

அதே நேரம் குளம்படி சத்தம் வேகமாக எழ இருவரும் அச்சத்தம் எழுந்த திசையை நோக்கினார்கள். அங் குப் புழுதி பறக்க வேகமாக வந்த புரவி வீரன் ஒருவன், “தலைவரே செங்குவீர ரின் வெண்ணிறப் புரவி முரண்டுபிடித்துக் கொண்டு இருக்கிறது. அதை அடக்கி சவாரி செய்ய முயன்ற நம் தலைவர் திருக்கண்ணனை அப்புரவி கீழே தள்ளி விட்டது. அவர் மூர்ச்சையிழந்துவிட்டார். உப தலைவர் பரதவன் குமரன் தங்களை உடனடியாக அழைத்துவரச் சொன்னார்” எனக் கூறிக் கொண்டே கண நேரப் பொழுதும் அங்குத் தாமதிக்காமல் தக

வலைத் தெரிவித்துவிட்டு வேகமாகத் திரும்பிச் சென்றான் அவன்.

அவனைப் பின்தொடர்ந்து இருவரும் வேகமாகச் செல்லலானார்கள்.

https://telegram.me/aedahamlibra

# 2.

# வானவல்லி யின் புதுக்கோலம்

புரவி வீரன்கூறிய தகவலைக் கேட்டு விரைவாகச் சென்று பார்த்தனர் இருவரும். அங்கே திருக்கண் ணன் படுக்கையில் கிடக்க மருத்துவர் ஒருவர் அவனுக்கு வைத்தியம் பார்த் துக் கொண்டிருந்தார். செங்குவீரனின் வெண்ணிறப் புரவி அருகில் ஒரு மரத் தில் கட்டப்பட்டிருந்தது. கரிகாலர் திருக் கண்ணனிடம் செல்ல, புரவிக்கு அருகில் சென்றான் டாள்தொபியாஸ். அவனை அடையாளம் கண்டு கொண்ட அப்பு

ரவி தன் தலையை வேகமாக ஆட்டியது. அதன் தலையைத் தடவிக்கொடுத்த டாள்தொபியாஸ் அருகிலிருந்தவர்களிடம், "புரவி அமைதியாகத்தானே நிற்கிறது. யாருக்கும் பணியவில்லை என்றல்லவா தகவல் கிடைத்தது?" என வினவினான்.

"புரவி அமைதியாகத்தான் நிற்கிறது. ஆனால்..." என்று இழுத்தான் வீரன் ஒருவன்.

"என்ன ஆனால்?"

"அப்புரவி அனைவரையும் அடையாளம் கண்டு கொள்கிறது. ஆனால், அது யாரையும் தன் மீது ஏற்ற மறுக்கிறது."

"யாரையும் ஏற்ற மறுக்கிறதா?"

"ஆம் உபதலைவரே!"

"திருக்கண்ணன் இப்புரவியிலேறி பயணித்ததை நானே பார்த்திருக்கிறேனே?"

"ஆம், ஆனால் சமீப காலங்களாக இப்புரவி முரண்டு பிடிக்கிறது உபதலை

வரே! யாரையும் தன்மீது ஏற்றிக்கொள்ள மறுக்கிறது. அப்படியே ஏறினாலும் கீழே தள்ளிவிட்டு விடுகிறது. ஏற்கெனவே இரு வீரர்களின் மார்பினில் உதைத்து மார்பெலும்பை உடைத்துவிட்டது இப்பு ரவி. நம் உபதலைவரை கீழே தள்ளிவிட் டதோடு விட்டுவிட்டது அவர் செய்த நற்ப யனே!"

"சமீப காலம் என்றால்?"

"உறைந்தையிலிருந்து கரிகால ரைக் காப்பாற்றிக் கொண்டு செங்குவீ ரர் மறைந்துவிட்ட பிறகு உப தளபதி திருக்கண்ணன்தான் இப்புரவியை இங்கு அழைத்துவந்தார். அப்போதெல்லாம் அவருக்குப் பணிந்து நடந்த புரவி செங் குவீரர் மரணித்துவிட்ட பிறகு முரண்டு பிடிக்கிறது. யாருக்கும் பணிய மறுக்கி றது. அப்படியே அதைப் பணியச் செய்ய முயன்றால்...." எனக் கூறிக் கொண்டே திருக்கண்ணனைப் பார்த்தான் அவன்.

ஆச்சர்யத்துடன் திருக்கண்ணனையும் அந்த வெண்ணிறப் புரவியையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தான் டாள்தொபியாஸ். அவனிடம் வந்த பரதவன் குமரன், "யார் வந்தாலும் அவர்களின் முகத்தையே உற்று உற்றுப் பார்க்கிறது. நம் படைத் தலைவரை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. அவர் இறந்துவிட்டார் என்பதை இதற்கு எப்படிப் புரியவைப்பது என்று எனக்குத் தெரியவில்லை டாள்தொபியாஸ்" எனக் கூறியபோது அவனது கண்கள் இரண்டும் கலங்கியிருந்தன.

தூணில் கட்டியிருந்த அப்புரவியை அவிழ்த்த டாள்தொபியாஸ் அதன் மீது ஏற முயல அவனைத் தடுத்துவிட்டான் பரதவன் குமரன்."டாள்தொபியாஸ் திருக்கண்ணனின் நிலை உனக்கு வேண்டாம். என்னுடன் வா" எனக் கூறியவன் அவனை அழைத்துக் கொண்டு திருக்கண்ணனிடம் சென்றான்.

“புரவியிலிருந்து திருக்கண்ணன் விழுந்து மூர்ச்சையிழந்து காணப்பட்ட போது நாங்கள் அஞ்சி விட்டோம். ஆனால், இப்போது இவனது நிலை பர வாயில்லை. ஓரிரு நாட்கள் ஓய்வே டுத்தாலே முற்றிலும் குணமடைந்துவிடு வான்” என அவனது தலையை ஆதரவு டன் கோதியபடி கூறினான்.

மருத்துவர் மற்றும் பரதவன் குமரன் கூறியதைக் கேட்டுத் தெரிந்து கொண்ட கரிகாலர் நேராக முரண்டுபிடிக்கும் அந் தப் புரவியிடம் சென்றார். ஆதரவுடன் அதன் பிடரி முடி மற்றும் முதுகைத் தட விக்கொடுத்தார். அதுவரை அமைதியா கவே நின்றது அப்புரவி. பிறகு அதன் மீது ஏற முயன்ற போது, “வேண்டாம்” என்ற குரல் எழ தனது முயற்சியைக் கை விட் டுத் திரும்பினார். அவருக்கு முன் கம் பீரத்துடன் மார்பை நிமிர்த்திக் கொண்டு நின்று கொண்டிருந்தார் வீரர் ஒருவர். அவரது முகத்தில் ஓரிரு நரை முடி கள் தோன்றியிருந்தாலும் அவரது உடல்

https://telegram.me/aedahamlibra

திடத்துடனும், கம்பீரத்துடனும் வைரம் பாய்ந்த வச்சிரத்தைப் போன்று நிற்பதை கரிகாலர் கவனித்தார்.

அவரது முகத்தையே கரிகாலர் ஆச்சர்யத்துடன் பார்க்க அவர் மீண்டும், "உபபடைத் தலைவரின் நிலையைக் கவனித்த பிறகு மா நீ இந்தப் புரவியை அடக்க முயல்கிறாய். வீண் விபரீத முயற்சி வேண்டாம்" என்றார் அதிகாரத்துடன்.

மாறுவேடத்தில் நிற்பது இளவரசர் கரிகாலர்தான் என்பதை அறியாமல் தடுத்து நிறுத்தியிருக்கும் வீரரின் மீது கோபம் கொண்ட டாள்தொபியாஸ் கோபத்துடன் அவரை நோக்க பார்வையாலே நான் யாரென்று தெரியப்படுத்த வேண்டாம் எனக் கரிகாலர் கூற அமைதியானான் டாள்தொபியாஸ்.

"அய்யா என்னை எதற்குத் தடுக்கிறீர்கள்?" எனப் பணிவுடன் வினவினார் கரிகாலர்.

https://telegram.me/pedahamlibrary

“உன்னைவிட அனுபவம் மிக்க வீரர்கள் அனைவரும் முயன்றுப் பார்த்து மண்ணைக் கவ்விவிட்டார்கள். உன் முதுகெலும்பை நீ உடைத்துக்கொள்ள வேண்டாம். இப்புரவி தன் தலைவனைக் காணாத ஏக்கத்தில், துயரத்தில் இருக் கிறது. இது செங்குவீரர் மறைந்த நாட் களிலிருந்தே சரியாக உண்பதில்லை! இது யவனத்திலிருந்து தருவிக்கப்பட்ட உயர்ந்த சாதிக் குதிரை. அனைவருக் கும் இப்புரவி பணியாது. அறிவு மிக்கது. முதலில் படைத்தலைவர் திவ்யன் தான் இப்புரவியைப் பயன்படுத்தினார். அவர் இறந்த பிறகு சில காலம் இப்படித் தான் முரண்டுபிடித்தது. பிறகு கடும் சிர மப்பட்டுச் செங்குவீரர் இதனைப் பணி யச் செய்தார். அவர் இருந்தவரை அவர் சுட்டிக்காட்டிய அனைத்து உபதளபதிக ளுக்கும் இப்புரவி பணிந்தது. ஆனால், அவர் இறந்த பிறகு யாருக்கும் பணிய மறுக்கிறது. இதன் மீது நீ ஏறி பய ணித்தால் மகிழ்ச்சி. எதிர்பாராத விதமாக

ஏதேனும் அசம்பாவிதம் நடைபெற்றால் அது உன் எதிர்காலத்தையே சீர்குலைத் துவிடும். பிறகு உன் விருப்பம்" எனக் கூறி முடித்தார் அவர்.

அவரது எச்சரிக்கையைச் சட்டை செய்யாத கரிகாலர் செங்குவீரனின் வெண்ணிறப் புரவியின் அருகில் சென்று அதன் கடிவாளத்தைப் பிடித்தபடியே அதன் தலை, பிடரி முடி ஆகியவற்றைத் தடவிக்கொடுத்து அதன் காதில் பேசத் தொடங்கி அப்புரவியை அடக்கும் முயற் சியை மேற்கொள்ளத் தொடங்கினார். கரிகாலரின் செயலை அறிந்து கொண்ட அப்புரவியும் மிரளத் தொடங்கியது.

ஆனால், புரவி மற்றும் யானை ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் வித்தை களைக் குறைவின்றிக் கற்றுக் கொண்ட கரிகாலர்தான் அப்புரவியை அடக்க எத் தனித்துக் கொண்டிருக்கிறார் என்பதை அறியாத அந்த வீரர், "கீழே விழுந்தால்

தான் உனக்குப் புத்தி வரும்!” என்றபடியே அங்கிருந்து நகர்ந்தார்.

திருக்கண்ணன் கீழே விழுந்து விட்ட செய்தி காட்டுத்தீ போலப் பரவ அங்குக் காளனின் நண்பன் வில்லவனும் வந்து சேர்ந்திருந்தான். அதே வேளை குச்சரகுடிகை சம்பாபதி அம்மனின் கோட்டத்திலிருந்து நடந்து வந்து கொண்டிருந்த வானவல்லி மற்றும் மரகதவல்லி இருவரும் அவ்வழியாக வந்து கொண்டிருக்கக் கரிகாலர் மற்றும் உபதலைவர்கள் அனைவரும் ஓரிடத்தில் ஒன்றுகூடி நிற்பதைக்கண்ட வானவல்லியும் ‘என்ன நடந்தது?’ என்பதை அறியாதவளாய் பதற்றத்துடன் அங்கு வந்தாள்.

தன் சகோதரி வானவல்லி அங்கு வருகைத் தந்திருப்பதைக் கவனித்து விட்ட கரிகாலர் புரவியை விட்டுவிட்டு வானவல்லியை வரவேற்றார். திருக்கண்ணன் புரவியிலிருந்து கீழே விழுந்து கிடந்ததைப் பார்த்தவள் அவனது

https://telegram.me/aedahamlibra

உடலை பரிசோதித்தாள். பிறகு, “கவலை வேண்டாம் வீரர்களே! புரவி இவரை மிதிக்காமல் கீழே மட்டும் தள்ளியதனால் எந்த அச்சமும் கொள்ளத் தேவையில்லை. இன்று மாலையே எழுந்து நடமாடத் தொடங்கிவிடுவார்” எனக் கூறிக் கொண்டே அமைதியாக நின்று கொண்டிருந்த புரவியை நோக்கி சென்றாள் வானவல்லி.

வானவல்லியை அடையாளம் கண்டுவிட்ட அப்புரவி அடுத்தக் கணம் முன்னங்கால்கள் இரண்டையும் தூக்கிக் கொண்டு எழுந்துத் துள்ளியபடி கனைத்தது. அதன் செயலைக் கண்டதும் அங்கிருந்தவர்கள் பதறினார்கள். வானவல்லி அருகில் சென்றதும் தனது தலையை உயர்த்தி அவளது தோளில் ஆதரவாகக் கிடத்திவிட்டது. நீண்ட பெருமூச்சு ஒன்றையும் விட்டது அப்புரவி. தனது தலையை அப்புரவியின் தலையோடு ஆதரவாகச் சாய்த்துக் கொண்டாள் வானவல்லி. அதன் முகம் முழு

வதையும் தடவிக்கொடுத்த வானவல்லி, அதன் காதுகளில், "அப்புது... .ஆது... .ஐ... ஐ..." என பொருள் புரியாத சொற்களை உதிர்க்கலானாள்.

அச்சொற்களைக் கேட்டதுமே அப் புரவியின் உடல் சிலிர்க்க அது மீண்டும் தன் முன்னங்கால்களை உயர்த்தி ஆவே சத்துடன் கனைத்தது. நகர்ந்துவிட்டாள் வானவல்லி.

மீண்டும் அதன் அருகில் சென்று அதன் முதுகு மற்றும் பிடரியைத் தடவிக் கொடுத்தவள் அப்புரவியிடம் ஏதேதோ பேச்சுக் கொடுத்தாள். வானவல்லி அப் புரவியின் பிடரியைத் தடவியதுமே அவளது நோக்கத்தைப் புரிந்து கொண்ட அங்கிருந்த பெரியவர்கள், "வேண்டாம்... வேண்டாம்...ஆபத்து!...ஆபத்து!" எனப் பலரும் அபாயத்துடன் குரலெழுப்ப அதனைத் தனது செவியில் வாங்கிக்கொள்ளாத வானவல்லி புரவியின் பிடரி முடியைப் பிடித்துக் கொண்டு அடுத்தக்

கணம் கடிவாளம், முதுகுத் தோல், சேணம் அணிவிக்கப்படாத வெற்றுப் புர வி மீது ஒரே தாவலாகத் தாவிவிட்டாள். திடீரென்று தன் மீது அவள் அமர்ந் துவிட்டதை உணர்ந்த அப்புரவி மீண் டும் முரண்டுபிடிக்கத் தொடங்கியது. தனது முன்னங்கால்கள் இரண்டையும் தூக்கியும், பின்னங்கால்களை வேகமாக உதைத்தும், முன்னும் பின்னும் குதித்தும் தன் மீது அமர்ந்திருப்பவளைக் கீழே தள் ளிவிடப் பேயாட்டம் ஆடியது அப்புரவி. அப்புரவி குதித்த குதியில் வானவல்லி யும் தனது பிடியைத் தளரவிட்டுவிட்டாள். அதைப் பார்த்தவர்கள் பதற அடுத்தக் கணத்தில் இழந்த பிடியை மீண்டும் பத் திரமாக பற்றிக் கொண்ட வானவல்லி புர வியிடம், “ஆது... ஐ... அப்புது... அப்புது... ஐ... ஆது...” எனத் தொடர்ந்து கூறலா னாள். அவள் கூறியதைக் கேட்ட அப்பு ரவி அடங்காமல் முரண்டு பிடித்தபடியே வேகமாக ஓடத் தொடங்கியது. அங்கிருந்

தவர்கள் அச்சத்துடன் அவள் பின்னாலேயே ஓடலானார்கள்.

முரண்டு பிடித்து ஓடத்தொடங்கிய புரவியைச் சிறிது சிறிதாகத் தனது முழுக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த வானவல்லி அங்குக் கூடியிருந்த மறவர் கூட்டத்தை இரு சுற்று சுற்றியவள் மீண்டும் அத்தெருவில் தனது மாளிகையை நோக்கி புரவியைச் செலுத்த நான்கு கால் பாய்ச்சலில் வானவல்லியின் மந்திரத்திற்குப் பணிந்ததைப் போன்று பறந்து சென்ற அப்புரவி அடுத்தச் சில கணங்களில் அவர்களின் பார்வையிலிருந்து மறைந்தது.

அங்கு நடந்த அந்தக் கம்பீரமான வீர நிகழ்வினைக் கண்டவர்கள் திகைத்துப் போய் வாயடைத்துக் காணப்பட்டார்கள். உபதலைவர்களும் என்ன கூறுவதென்று தெரியாமல் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். புரவியில் சென்ற வானவல்லி ஒரு ஓரைப் பொழு

தாகத் திரும்பவில்லை. அவள் திரும்பா ததைக் கண்டு அங்கு நின்ற கரிகால னின் காதலி மரகதவல்லிதான் முதலில் கவலைப்படத் தொடங்கினாள். ஆனால், அடுத்தக் கணம் அங்கு ஒரு சிறு சல சலப்புத் தோன்றியது. அந்தச் சிறு சலச லப்பே அடுத்தடுத்த கணங்களில் வலுக் கத் தொடங்கியது. கரிகாலர் மற்றும் படைத் தலைவர்கள் அனைவரும் கார ணம் அறியாமல் திகைக்கையில் அங்குத் தொலைவில் வானவல்லி அந்த வெண் ணிறப் புரவியில் கம்பீரமாகப் புழுதி பறக்க வந்து கொண்டிருந்தாள். செல் லும்போது வெற்றுப் புரவியில் சென்ற வள் வரும்போது கடிவாளம், வெண்பஞ் சுடன் அமரும் இருக்கையுடன் கூடிய தோல், சேணம் அனைத்தையும் அணி வித்திருந்தாள். அங்குக் கூடியிருந்த மக் களின் சலசலப்புக்குக் காரணம் அந்த வெண்ணிறப் புரவி மட்டும் அல்ல. வான வல்லியின் மாறிவிட்ட தோற்றமும்தான் காரணம். சற்று முன் அங்கு வருகை தந்

https://telegram.me/aedahamlibra

தபோது எண்ணெய் மற்றும் நறுமணத் தைலங்கள் தடவப்படாத அவளது கூந் தல் காற்றில் பறக்க சோகமே உருவாகக் காணப்பட்டவள் அப்புரவியில் சென்று திரும்பியபோது பட்டாடை உடுத்தி யௌவனத்தின் உருவமாகக் கம்பீரத்து டன் காட்சியளித்தாள்.

நீண்ட வாளுறையைத் தனது இடையில் கட்டியிருந்தவள் படைத்த லைவர்கள் அணியும் கவச உடை ஒன்றையும் அவள் அணிந்திருந்தாள். அவளது தோற்றமே முற்றிலும் மாறியி ருந்தது. ஒரு ஓரைப் பொழுதிற்கு முன் பொலிவின்றிக் காணப்பட்ட வானவல் லிக்கும் இப்போது வந்திருக்கும் கம் பீரத் தோற்றமுள்ள வானவல்லிக்கும் நிறையவே வேறுபாடு காணப்பட்டது. அவளது பார்வை முற்றிலும் மாறியிருந் தது. அவளது முகத்தைக்கண்ட கரி காலர் 'சற்று முன்னர்க் குச்சரகுடிகைக் கோட்டத்திலிருந்து அழுதபடி ஓடி வந்த

https://telegram.me/aedahamlibra

தன் தமக்கையா இவள்?' எனத் தனக் குத்தானே கேள்வி கேட்டுக் கொண்டார்.

வீரர்களின் சலசலப்புச் சத்தத்தி னூடே புரவியிலிருந்து இறங்கியவள், "இப்புரவி மிகவும் தந்திரமாகச் செயல் படுகிறது கரிகாலா. எண்ண ஓட்டங்க ளைப் புரிந்து கொண்டு அதன்படி சாதுர் யமாக நடக்கிறது. போர் செய்வதற்கு மிக வும் ஏற்ற புரவி" எனச் சிரித்த முகத்து டன் அங்கிருந்த கரிகாலர் மற்றும் படைத் தலைவர்களைப் பார்த்தபடியே கூறலா னாள். கட்டிலில் கிடந்த திருக்கண்ண னும்,'தனது கண்களை நம்பலாமா? அல் லது வேண்டாமா?' என எண்ணியபடியே வியப்பில் எழுந்து அமர்ந்திருந்தான்.

அதுவரை மாறுவேடத்தில் நின்ற கரிகாலரைக் கண்டு சட்டை செய்யாத வீரர்கள் அப்போது வானவல்லி 'கரி காலா' எனக் கூறியதும் அதிர்ச்சியடைந்து கரிகாலருக்குப் பணிந்து மரியாதை செலுத்தினார்கள். கரிகாலரிடம் வந்த

https://telegram.me/aedahamlibra

அந்த வயதான வீரர், “அரசே, அடியேன் செய்த பிழையை மன்னித்தருள வேண்டும். மாறுவேடத்தில் நிற்பது தாங்கள் தான் என்பதை அறியாமல் பிழை செய்து விட்டேன். மன்னித்துவிடுங்கள்” என்றார் அவர்.

அப்போது கரிகாலர், “அய்யா, தாங்கள் பெரியவர். என்னிடம் மன்னிப்பு கேட்க வேண்டிய அவசியமில்லை. உங்கள் பணியைத் தாங்கள் செய்திருக்கிறீர்கள். இதில் எந்தத் தவறும் இல்லை” என்றார் அடக்கத்துடன்.

“தங்கள் பராக்கிரமத்தை அறியாமல் நான்...” என அவ்வீரர் கூறிக் கொண்டிருந்த போதே அங்கு மீண்டும் சிறு சலசலப்பு எழ அவர்கள் இருவரின் உரையாடல்கள் தடைபட்டது.

அங்குப் புகாரின் முதன்மை அமைச்சர் வளவனார் அந்தத் திரளுக்குள் நுழைந்து கொண்டிருந்தார். அங்கு வந்தவர் வானவல்லியைக் கண்டு, “இது

என்ன வானவல்லி புதுக்கோலம்?” என அதிர்ச்சியுடன் வினவலானார்.

“ஆம் அப்பா, இது புதுக்கோலம் தான்!” எனத் திடமாகப் பதில் வந்தது வானவல்லியிடமிருந்து.

“உன் இடையில் காணப்படும் வாள்...” என வளவனார் கூறிக் கொண்டிருந்த போதே அவரது பேச்சை இடைமறித்த வானவல்லி, “ஆம் அப்பா... இது என் தலைவருடையதுதான்” எனக் கூறி முடித்தாள்.

“அதனை இப்போது எதற்கிங்கு கொண்டு வந்திருக்கிறாய்?”

“அவசியம் வந்துவிட்டது”

“அவசியம் வந்துவிட்டதா?”

“ஆம்!”

“நீ கையில் வாளை உயர்த்தும் அளவிற்கு அப்படி என்ன அவசியம் இப்போது நேர்ந்துவிட்டது?”

https://telegram.me/aedahamlibra

“நானும் யுத்தத்தில் பங்குகொள்ளப் போகிறேன்.”

“நீயுமா?”

“ஆம்!”

“பைத்தியக்காரத்தனமாகப் பேசாதே வானவல்லி.”

“இது பைத்தியக்காரத்தனம் அல்ல.”

“அதற்கு நான் உடன்படாவிட் டால்?”

“எனக்குத் தங்களது உடன்பாடு அவசியமில்லை தந்தையே!”

“அவசியமில்லையா?” அதிர்ச்சியு டன் பதில் வந்தது வளவனாரிடமிருந்து.

“ஆம்!”

“எப்போதிலிருந்து உன் தந்தை யின் சொல்லை நீ மீறுவதற்குத் துணிந்தி ருக்கிறாய்?”

"என் தலைவரின் வாளினை நான் என் இடையில் கட்டியதிலிருந்து!"

"வானவல்லி, நீ சுய சிந்தனையுடன் தான் பேசுகிறாயா?" கோபத்துடன் சொற்கள் வெளிவந்தது வளவனாரிடமிருந்து.

"ஆம் தந்தையே. தீர்க்க சிந்தித்து விட்டே இந்த முடிவினை நான் மேற்கொண்டுள்ளேன்."

"இதற்கு ஒருநாளும் நான் அனுமதிக்கமாட்டேன்."

"நான்தான் ஏற்கெனவே தங்களிடம் தெரிவித்தேனே, தங்களது உடன்பாடு எனக்குத் தேவையில்லை என்று!"

"ஒரு தந்தையாக உன்னால் என்னைத் தடுக்க இயலாது. ஆனால்..." என்றவர் அவரது வாக்கியத்தை நிறுத்தி அவளது முகத்தைக் கோபமாகப் பார்க்கலானார்.

https://telegram.me/aedahamlibra

"ஆனால் என்ன தந்தையே? தொடர்ந்து கூறுங்கள்."

"சோழ நாட்டின் முதன்மை அமைச்சனாகக் கட்டளையிடுகிறேன். உனது முடிவினை மாற்றிக்கொள். உன் எண்ணத்தை அடியோடு உதறித் தள்ளி விடு."

"என்னைத் தடுக்கும் அதிகாரம் தங்களுக்கு இல்லை."

"எனக்கு அதிகாரம் இல்லையா?"

"ஆம் முதன்மை அமைச்சரே!" இதுவரை தன்னை 'தந்தை' என அழைத்தவள் திடீரென்று 'முதன்மை அமைச்சரே' என அழைத்ததைக் கேட்ட வளவனார் திகைக்கவே செய்தார்.

"உன்னைப் போரில் கலந்துகொள்ளக் கூடாது எனத் தடுக்கும் அதிகாரம் எனக்கு இல்லையென்றால் நம் அரசர் கரிகாலருக்கு இருக்கிறது என்கிறாயா?"

https://telegram.me/aedahamlibra

“அவருக்கும் அந்த அதிகாரம் இல்லை.” திடமாகவும் அதே நேரம் அழுத்தமாகவும் பதில் வந்தது வானவல்லியிடமிருந்து.

வளவனாரைக் கண்டாலே நடுநடுங்கும் படைத் தலைவர்கள் மற்றும் அமைச்சர்களுக்கு மத்தியில் வானவல்லி இவ்வளவு நேரம் எதிர்த்துப் பேசுவது மட்டுமல்லாமல் அவரது கட்டளைக்குக் கீழ் படியாமல் காணப்பட்டதை அங்கிருந்தவர்கள் அனைவரும் அதிர்ச்சி கலந்த திகைப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

“போரில் கலந்துகொள்ள வேண்டும் என விரும்பும் குடியைக் கலந்து கொள்ளக் கூடாது எனக் கட்டளையிடும் அதிகாரம் யாருக்கும் கிடையாது. என்னைக் கரிகாலனாலும் தடுக்க இயலாது” என ஒருமையாகவே கரிகாலரையும் அழைக்கலானாள். வானவல்லியின் பிடிவாதத்தை அறிந்த வளவனார் ‘இதற்கு

மேல் இவளைத் தடுக்க இயலாது' என்பதைப் புரிந்து கொண்டவர் அருகில் நின்ற கரிகாலரைப் பார்க்கலானார்.

கரிகாலர், "அக்கா, தங்கள் தந்தை கூறுவதைத் தாங்கள் எதிர்க்கக் கூடாது" எனக் கூறிக் கொண்டிருந்த போதே இடைமறித்தவள், "நான் எதிர்க்கவில்லையே வளவா!" எனக் கூறி முடித்தாள்.

அப்போது குறுக்கிட்ட வளவனார், "வானவல்லி, இளவலுக்கு உரிய மரியாதையை நீ அளித்தே ஆக வேண்டும். உன் பேச்சு வரம்பு மீறுகிறது. எச்சரிக்கையாகப் பேசு" எனக் கோபமாக அவரது மீசை துடித்தபடி முழங்கலானார்.

"என் சகோதரனை நான் ஒருமையில் அழைக்க உரிமை இருக்கிறதே!" எனச் சட்டெனப் பதிலளித்தாள் வானவல்லி.

"சகோதரனா?"

"ஆம். இவர் எனக்குத் தம்பிதான். தன் தம்பியை ஒருமையில் அழைப்பதும் உரிமையுடைய செயல்தானே வளவனாரே, அது நம் நாட்டு நடைமுறை வழக்கம் தானே?"

"உனக்கு எப்போது கரிகாலர் தம்பியானார்?"

"அதை நான் கூறுவதை விடக் கரிகாலர் கூறினால் தான் பொருத்தமாகயிருக்கும்" எனக் கூறியபடியே தனக்கு அருகில் நின்ற கரிகாலரின் விழிகளில் தனது பார்வையை நிலைக்கவிட்டாள்.

"ஆம் வளவனாரே! உறைந்தையிலேயே வானவல்லியை என் சகோதரியாக நான் சுவீகரித்துக் கொண்டுவிட்டேன். என்னை ஒருமையில் அழைக்கும் உரிமை என் தமக்கைக்கு எப்போதுமே உண்டு" எனக் கூற அமைதியாகிவிட்டார் வளவனார்.

https://telegram.me/aedahamlibra

கரிகாலர் வானவல்லியிடம், "அக்கா, தங்களது பேச்சு, உடை, நடை அனைத்தும் கடந்த ஒரு ஓரைப் பொழு தில் முற்றிலும் மாறிவிட்டதே, ஆச்சர்ய மாக இருக்கிறது. காலையில் குச்சரகுடி கையில் நான் கண்ட என் தமக்கைக்கும், இப்போது நான் காணும் என் தமக்கைக் கும் நிரம்ப வேறுபாடு காணப்படுகிறதே?" என ஆச்சர்யத்துடன் வினவலானார்.

"ஆம். எனக்கும் ஆச்சர்யமாகத் தான் இருக்கிறது. அந்தப் புரவி மீது எப் போது தாவினேனோ? அப்போதிலிருந்து என் மனநிலை முற்றிலும் மாறிவிட்டது."

"தாங்கள் போரில் கலந்துகொள்ள வேண்டாம் எனக் கூறும் அதிகாரம் எனக் கில்லை. ஆனால், தாங்கள் மீண்டும் அந்த முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும்."

"கரிகாலா, நான் ஏற்கெனவே முடி வெடுத்துவிட்டேன். இனி என் முடிவில் எந்த மாற்றமும் இருக்கப்போவதில்லை."

https://telegram.me/aedahamlibra

"ஏன் இந்த முடிவு?" எனக் கரிகாலர் வினவ அதற்கு வானவல்லி கூறிய பதில் அங்கிருந்தவர்கள் அனைவரையும் தூக்கிவாரிப்போட்டது.

"என் தமையன் விட்டுச் சென்ற பணியை என் தலைவர் மேற் கொண்டார். இப்போது என் தலைவர் விட்டுச் சென்ற பணியை நான்தான் முடித்து வைக்க வேண்டும்."

"அக்கா???"

"ஆம் கரிகாலா, இந்தப் போர் எனக்கானது. படைத்தலைவர் உரைத்துவிட்டுச் சென்ற வஞ்சினத்தை நான் நிறைவேற்றப் போகிறேன்." அவளது விழிகள் சிவந்தது. முகம் இறுக்கமானது.

"போரில் இருங்கோவேள் மற்றும் அவரது புதல்வனைக் கொள்வேன் என்று செங்குவீரர் உரைத்த வஞ்சினமா?"

"ஆம்!"

https://telegram.me/aedahamlibra

"இது சாத்தியம் தானா வானவல்லி? அவசரத்தில் எந்த முடிவையும் எடுக்க வேண்டாம்" எனக் குறுக்கிட்டார் வளவனார்.

"அப்பா, இந்த முடிவை நான் தாமதமாக எடுத்துள்ளேன். ஆனால், என் முடிவில் எந்த மாற்றமும் இருக்கப்போவதில்லை" எனப் பதிலளித்தாள்.

"அம்மா, போர்க்களத்திற்குப் பெண்கள் செல்லும் அளவிற்குச் சோழ நாட்டில் வீரர்களின் நிலை தாழவில்லையே!"

"அப்பா, போர்க்களத்திற்குள் வீராங்கனைகள் நுழைந்தால் வீரர்களின் நிலை தாழ்ந்துவிட்டது எனப் பொருள் கொள்ள வேண்டாம். போர்க்களத்திற்குள் பெண்கள் நுழையக்கூடாது என விதி ஏதாவது இருக்கிறதா? போர்க்களத்தில் பெண்கள் நுழையக்கூடாது என்பது ஆரியர்களின் மனுநீதி. அதை எதற்காக நாம் பின்பற்ற வேண்டும். இது சோழ

நாடு தந்தையே, தமிழகம். நமக்கென்று தனிப் பாரம்பரியம் இருக்கிறது. புற முது கிட்டுத் தன் மகன் மடிந்தான் எனக் கேட்ட தாய் ‘என் மகன் போரில் புறமு துகிட்டிருந்தால் அவனுக்குப் பாலூட்டிய என் மாரினை அறுத்துக்கொள்கிறேன்’ எனக் கூறிக் கொண்டு குறுவாளுடன் போர்க்களம் சென்ற பெண்களும் இருக் கிறார்கள். தனது குழந்தைகள் அனைவ ரும் போர்க்களத்தில் மடிந்துவிட்ட செய் தியைக் கண்டு வருந்தாமல் ‘செருக்க ளத்திற்கு அனுப்பத் தனக்கு இன்னும் குழந்தைகள் இல்லையே!’ என வருந்தி யபடி தனது மகன்களின் போர் வாளினை எடுத்துக் கொண்டு அவர்களின் சார்பா கப் படைக் களத்திற்குள் நுழைந்தவள் தான் வீரத் தமிழச்சி. அந்த வரிசையில் நானும் இருந்துவிட்டுப் போகிறேன்.”

“அம்மா, நீ பேசுவது வாதத்திற்கு வேண்டுமானாலும் சரியானதாக இருக் கும். ஆனால் நடைமுறைக்கு ஒத்துவ ராது?”

https://telegram.me/aedahamlibra

"நடைமுறைக்கு ஒத்துவராதா?"

"ஆம்!"

"ஏன்?"

"வீரர்கள் பெண்களுடன் சரிசமமாகப் போர் புரிய தயங்குவார்கள்!"

"இது தங்களின் கருத்தா அல்லது வீரர்களின் கருத்தா?"

"எதுவாக இருந்தால் என்ன? நீ போர்க்களம் நுழையக்கூடாது"

அவரது விழிகளில் தனது பார்வையை நிலைக்க வைத்தவள், தனது புருவம் இரண்டையும் உயர்த்திக் கம்பீரமாக, "பாண்டிய நாட்டை தடாதகைப் பிராட்டி எனும் இளவரசி ஆளவில்லையா? அவளுக்கு அனைவரும் கீழ்படிந்ததால் தானே அவரால் நல்லாட்சியை வழங்க முடிந்தது" எனக் கூற பதிலுக்கு என்ன மறுமொழியைக் கூறவது எனத் தெரியாமல் வளவனார் திணறினார்.

உடனே அருகில் நின்ற உபதலைவர்கள் மற்றும் உபதளபதிகளிடம் வானவல்லி, “வீரர்களே, என்னுடன் சேர்ந்து பணியாற்ற உங்களுள் யாருக்காவது தயக்கம் இருக்கிறதா?” என வினவினாள்.

அவர்கள் அனைவரும் அதிர்ச்சியில் தயக்கத்துடன் ஒருவரை பார்த்துக் கொண்டு நிற்க அப்போது டாள் தொபியாஸ், “தங்களுடன் சேர்ந்து பணியாற்ற எங்களுக்குள் எந்தத் தயக்கமும் இல்லை. எங்களுக்கு நீங்கள் தலைமை தாங்கினாலும் நாங்கள் யாரும் மறுத்துப்பேச மாட்டோம்” எனப் பணிந்தான். உடனே அங்கிருந்த திருக்கண்ணன், பரதவன் குமரன் மற்றும் வில்லவன் அனைவரும் டாள்தொபியாஸ் கூறியதை ஆதரித்துப் பேசினார்கள்.

அருகில் அமைதியாக நின்ற கரிகாலரைப் பார்த்தாள் வானவல்லி. அவளது பார்வையில் திரண்டிருந்த உறுதியைக்

கவனித்த கரிகாலர் எதுவும் எதிர்த்துப் பேசாமல், "நம் உபபடைத் தலைவர்களே கூறிவிட்டார்கள். எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை" எனக் கூறியவர் அவளிடம் படைத்தலைவர்களுக்குரிய இலைச்சினையை வழங்கினார்.

அதைக்கண்ட வளவனார், "வேண்டாம் கரிகாலா. இது சரியான யோசனை அல்ல" எனக் கூறிக் கொண்டிருந்தபோதே தனது கையை உயர்த்தினார் கரிகாலர். உடனே வளவனார் வாயை மூடி அமைதியாகிவிட்டார். அவரிடம், "அய்யா, இதில் தாங்கள் தலையிட வேண்டாம். யாரையும் எந்தப் பொறுப்பிலும் நியமிக்கும் அதிகாரம் எனக்கு இருக்கிறது" என அதிகாரத்துடன் கூறிவிட்டார் கரிகாலர்.

"படைத் தலைவர் பொறுப்பிற்குத் தகுதியும், அனுபவமும் வாய்ந்த வீரர்களை நியமிப்பதே நமது வழக்கம். பல உப படைத்தலைவர்கள் அந்தத் தகுதியு

https://telegram.me/aedahamlibra

டன் காணப்படுகிறார்கள். ஆனால், தாங்கள் போர் அனுபவமே இல்லாமல் நியமிக்கும் பெண் என் மகளே என்றாலும் தாங்கள் நியமிப்பதை என்னால் ஏற்றுக் கொள்ள இயலாது!"

"நான் முடிவெடுத்துவிட்டேன். இதைப்பற்றி இனி யாரும் விவாதிக்க வேண்டியதில்லை."

வளவனார் அமைதியாகிவிட்டார்.

பரதவன் குமரன் மற்றும் திருக்கண்ணனிடம் சென்ற வானவல்லி, "நீங்கள் இருவரும் படைத்தலைவர் செங்குவீரர் தங்களுக்கு அளித்த பணியைத் தொய்வின்றித் தொடருங்கள். அது மட்டுமல்லாமல் டாள்தொபியாசின் பணியையும் கூடுதலாகக் கவனியுங்கள்" எனக் கூறியவள் டாள்தொபியாஸ் மற்றும் வில்லவனிடம், "இருவரும் என்னுடன் வாருங்கள்" என அழைத்துக் கொண்டு புறப்பட்டாள்.

அவளிடம் கரிகாலர், "இருவரையும் எங்கே அழைத்துச் செல்கிறீர்கள்?" என வினவினார்.

சட்டென்று பதிலை உதிர்த்தாள் வானவல்லி, "போரினை ஒத்திப் போடுவதற்கு!" என்று.

"போரினை ஒத்திப்போடப்போகிறாயா?" அதிர்ச்சியுடன் மீண்டும் அவர்களின் உரையாடலில் குறுக்கிட்டார் வளவனார்.

"ஆம் அப்பா, அன்று பிடர்த்தலையர் என்னிடம் தெரிவித்தார். 'இந்த நிலையில் போர் தொடங்கினால் சோழ நாடு வீழ்வது நிச்சயம் என்று. போரைத் தள்ளிப் போடுவதும் என் கையில் தான் இருக்கிறது' என்றும் தெரிவித்தார் அவர்."

"அவர் கூறியதன் அர்த்தம் வேறு. நீ இருங்கோவின் மகனை மனம் செய்து

கொள்ள வேண்டும் எனும் அர்த்தத்தில் தெரிவித்தார் அவர்."

"அதற்கு அவசியம் நேராது. இன்னும் குறைந்தது ஆறு திங்கள் காலத்திற்குச் சோழ நாட்டை எதிரிகளின் படைகள் சூழாது. அதற்கு நான் பொறுப்பு. இந்த இடைப்பட்ட காலத்தில் நீங்கள் மக்களைத் திரட்டி அவர்களுக்குத் தக்க பயிற்சியளித்து நம் படை பலத்தைப் பெருக்குங்கள். நீண்ட முற்றுகை நீடிக்கவும் வாய்ப்பிருக்கிறது. புகார் கோட்டையில் உணவுப் பொருள்களையும் சேகரிக்கத் தொடங்குங்கள். சோழ தேசத்திலிருக்கும் அனைத்து வாள் பட்டறைகளும் தொய்வின்றி இயங்கட்டும். போருக்குத் தேவையான ஆயுதத் தடவாளங்கள் உற்பத்தியாகட்டும்" என அவரிடம் தெரிவித்தவள் கரிகாலரிடம், "நான் செய்தி அனுப்புகிறேன்" எனக் கூறிவிட்டு இருவரையும் அழைத்துக் கொண்டு குன்றுத் துறையை நோக்கிப் புறப்பட்டாள்.

https://telegram.me/aedahamlibra

புரவியில் சென்ற மூவரையும் ஆச்சர்யத்துடனே பார்த்துக் கொண்டிருந்தார்கள் அங்கிருந்தவர்கள் அனைவரும்.

**அடிக்குறிப்புகள் :**

1. அங்கையந் தலத்தினால் அப்புது, ஆது, ஐ எனக்

கொங்கலர் கண்ணிமான் கொம்மைதான் கொட்டலும்....

-சீவக சிந்தாமணி - 1824.

யானை மற்றும் புரவிகளைப் பழக்குவதற்கும், அதனைக் கட்டுப்படுத்துவதற்கும் அப்புது, ஆது, ஐ எனும் சொற்களைச் சங்க காலத்தில் பயன்படுத்தினர்.

ஆதாரம்: சீவக சிந்தாமணி - திருத்தக்க தேவர்

2. தடாதகைப் பிராட்டி: கி. மு முன்னூறு வாக்கில் பாண்டிய நாட்டை ஆண்ட இளவரசியின் பெயர்.

https://telegram.me/aedahamlibra

ஆதாரம்: சந்திர குப்த மௌரியனுடைய ஆட்சிக்காலத்தில் கி. மு 304 - ல் செலியூகஸ் நிகேட்டருடைய தூதனாகப் பாடலிபுத்திரத்திற்கு வருகை தந்த மெகஸ்தனீஸ் எழுதிய இண்டிகா எனும் நூலில் பாண்டிய நாட்டை ஒரு பெண் ஆட்சி செய்தாள் என்று கூறியுள்ளான். நம் தமிழ் புராணங்கள் அப்பெண்ணைத் தடாதகைப் பிராட்டி என்று கூறினாலும் சரியான இயற்பெயர் தெரியவில்லை.

https://telegram.me/aedahamlibra

# 3. காளனின் தந்திரம்

கதிரவன் மேற்கில் மறைந்துவிட்ட முதல் சாமப் பொழுது அது. முழு நிலவு தோன்ற இன்னும் மூன்று நாட்கள் எஞ்சியிருக்கும் நிலையில் அந்த முதல் சாமப் பொழுதின் இறுதியில் ஒரு பக்கம் ஒடுக்கு விழுந்தார் போன்று மேகங்களுக்கிடையில் தோன்றிய நிலவு தனது வெள்ளிக் கதிர்களை உறைந்தைப் பட்டினத்தின் மீது விழச் செய்து அந்நகரத்தின் எழிலைப் பன்மடங்கு பெருக்கடித்துக் கொண்டிருந்தது. எதிரிகளின் கைகளில் விழுந்துவிட்ட பட்டினத்திற்கு எதற்கு நிலவின் வெள்ளி முலாம் பூச்சு எனக் கருதியதோ என்னமோ முகிலானது அந்த வெள்ளி நிலவின் கதிர்களை அவ்வப்போது மறைத்துவிட்டுச் சென்றது. ஆனால், மாற்ற

ரசனின் கைகளில் விழுந்தாலும் இந்தப் பட்டினமானது இன்னும் தன் கம்பீரத்தையும், புராதனப் பெருமைகளையும் இழக்கவில்லை என நிலவு கருதியதால் தன்னை மறைத்த முகிலிலிருந்து விடுபட்டு மீண்டும் அப்பட்டினத்தின் மீது தன் வெள்ளிக் கதிர்களைப் பரப்பவே செய்தது. இப்படி முகிலுக்கும், நிலவுக்கும் நடந்த அந்தப் போராட்டத்தில் இரண்டும் மாறி மாறி வென்று கொண்டிருந்ததால் புதுப்பெண்ணின் முகத்தில் நாணமும், ஆசையும் மாறி மாறித் தோன்றுவதைப் போன்று வெளிச்சமும், இருளும் அடுத்தடுத்து தோன்றி அப்பட்டினத்திற்குப் புதுப் பொலிவை உண்டாக்கிக் கொண்டிருந்தன.

மாட மாளிகைகளைக் கொண்ட அப்பட்டினமானது அந்த முதல் சாமப் பொழுதில் மோகன அழகுடன் விளங்கிக் கொண்டிருந்தது.

மாற்றரசன் ஒருவனின் கையில் முழுவதும் விழுந்துவிட்ட சோழர்களின் புராதன தலைநகரான உறைந்தை அரண்மனையின் மைய மண்டபத்தின் உச்சியில் புலிக்கொடி கம்பீரமாகப்

பறந்து கொண்டிருந்தது. புலி கூண்டுக்குள் அடைபட்டாலும் அது தன் கம்பீரத்தை ஒருநாளும் இழக்காது என்பதைப் போல இருங்கோவேளின் முழுக் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்ட அந்த உறைந்தைப் பட்டினத்தின் புலிக்கொடியும் அப்படிதான் தனது கம்பீரத்தைத் துளியளவும் இழக்காமல் இரவு கடந்த அந்த முதல் சாமப் பொழுதில் முழு நிலவின் வெள்ளைக் கதிர்களின் பளபளப்புடன் புதுப் பொலிவுடனும், கம்பீரத்துடனும் காற்றில் பறந்து கொண்டிருந்தது.

கம்பீரத்துடன் பறந்து கொண்டிருந்த அந்தப் புலிக்கொடியைக் கண்டகாளன், 'சேரர்கள் கைக்கொள்ள நினைக்கும் இந்த உறைந்தைப் பட்டினத்தில் இன்னும் எத்தனை நாட்கள் சோழர்களின் புலிக்கொடி பறக்கப் போகிறதோ?' என வருத்தத்துடனே அரண்மனைக்குள் நடந்து கொண்டிருந்தான். அந்த அரண்மனையின் விமானங்களைத் தாங்கிக் கொண்டிருந்த ஒவ்

வொரு தூண்களும் சோழர்களின் முற் கால மன்னர்களை அவனுக்கு நினைவு படுத்த அவனது முகம் அந்தச் சோகத்தி லும் கம்பீரத்தை அடைந்திருந்தது. அந் தக் கம்பீரத்திற்கு இடையில் சோழ தேசம் அடையப்போகும் பேராபத்தை எண்ணி யவனது முகம் கோபத்திலும், ஆத்திரத் தாலும் சிவக்கவே செய்தது. யானைக ளின் கால்களைப் போன்று தடித்து ஊன் றியிருந்த அந்தத் தூண்களில் செதுக்கப் பட்டிருந்த சிற்பங்கள் இரவு நேர எண் ணெய் விளக்குகளின் செந்நிற ஒளிக ளில் பேரழகுடன் உயிர் பெற்று நின் றாலும் குழப்பத்துடனும், கோபத்துடனும் நடந்து சென்ற காளனின் மதியை அவை களால் சிறிதும் கவர இயலவில்லை.

ஆங்காங்கு சிறு சிறு விளக்குகள் மட்டும் எரிந்து கொண்டிருக்க முற்றிலும் இருள் சூழ்ந்த பகுதியில் காளன் நடந்து கொண்டிருந்த போது அங்கு வந்த இருங் கோவேளின் உபதளபதி ஒருவன் காள னைக் கண்டு பணிந்து வணங்கி தனது

வணக்கத்தைத் தெரிவித்துக் கொண் டான். அவனது வணக்கத்தை ஏற்றுக் கொண்ட காளன், "முதல் சாமம் முடி யப்போகிறது. ஓய்வெடுக்கச் செல்லவில் லையா? இன்னும் உனக்கு இங்கு என்ன வேலை?" என அதட்டலுடன் வினவி னான்.

"தலைவரே, வேந்தனை அழைத்து வரச்சொல்லி அரசர் கட்டளையிட்டிருக் கிறார்."

"இந்த நேரத்திலா?"

"ஆம் தலைவரே!"

"எதற்கு?"

அவனது கேள்விக்குப் பதில் கூறத் தயங்கினான் அவன். அவனது தயக்கத் தைக் கண்ட காளன் சந்தேகத்துடன், "எதற்கு என்று கூறப்போகிறாயா? இல் லையா?" என்று கோபத்துடன் அதட்டி னான்.

"அரசர் யாரிடமும் எந்தத் தகவலையும் கூற வேண்டாம் என்று உத்தரவிட்டிருக்கிறார்."

"யார் இருங்கோவேளா?"

"ஆம்!"

"எனக்குத் தெரியாத ரகசியமா?"

"ரகசியம் எல்லாம் எதுவும் இல்லை தலைவரே!"

"பிறகு?"

"அது... அது..." தயங்கினான் அவன்.

"தயக்கம் வேண்டாம். நீ அச்சமின்றி எதையும் என்னிடம் தெரிவிக்கலாம்?"

"வைதீகர் வந்திருக்கிறார்."

"இந்த நேரத்தில் அவர் இங்கு எதற்காக வந்திருக்கிறார்?"

"தெரியாது!"

https://telegram.me/aedahamlibra

“நான் அரண்மனைக் காவலன் என்பதை நினைவில் கொள் வீரனே. எனக்குத் தெரியாமல் அரண்மனைக்குள் யாரும் நுழையவும் கூடாது, வெளியேற வும் கூடாது!”

“தங்கள் உத்தரவு!”

“அதுவே சரியான பாதுகாப்பிற்கு வழிவகுக்கும். இல்லையேல், ஒருமுறை புகார் உபபடைத்தலைவன் ஒருவன் அரண்மனைக்குள் நுழைந்து நம் அரசர் இருங்கோவேளை மிரட்டியது மட்டுமல் லாமல் நம் காவல் வீரர்கள் பலரைக் கொன்று குவித்துவிட்டுச் சென்றானே, அதைப்போன்ற அசம்பாவிதங்கள் நேரா மல் தடுப்பது நமது கடமை. அதற்கு, அரண்மனையில் நடக்கும் அனைத்து நிகழ்வுகளும் எனக்குத் தெரியப்படுத்த வேண்டும்.”

“யார் செங்குவீரனைப் பற்றிக் குறிப் பிடுகிறீர்களா?”

https://telegram.me/aedahamlibra

“ஆம் அவனைப் பற்றித்தான் குறிப்பிடுகிறேன்!”

“அவர்தான் இறந்துவிட்டாரே! செங்குவீரரைத் தவிர உறைந்தை அரண்மனைக்குள் நுழையும் துணிச்சல் வேறு யாருக்கும் கிடையாது தலைவரே. அதுமட்டுமல்லாமல் தாங்கள் உறைந்தை அரண்மனைக் காவலராகப் பொறுப்பேற்றதும் காவல் பலமடங்கு உயர்த்தப்பட்டுவிட்டது. புகாரில் முடிசூடிக் கொண்ட வளவனே உறைந்தை பட்டினத்தைத் தாக்கினாலும் தங்களது முன் ஏற்பாடுகளைக் கடந்து அவரால் ஊடுருவிட இயலுமா? ஒருநாளும் நடவாது தலைவரே!”

“வீரனே எனக்கு முகத்தின் முன் புகழ்பவர்களைக் கண்டால் அறவே பிடிக்காது!”

“தலைவரே, சில வேளைகளில் உண்மையைக் கூறினாலும் கெட்டப் பெயரே ஏற்பட்டுவிடுகிறது எனக்கு?”

“சரி... சரி... உன்னை நான் நம்பு கிறேன் வீரனே. நீ கிளம்பலாம்!” எனக் கூறிக் கொண்டு அங்கிருந்து நகர்ந்தான் காளன்.

உடனே, “தலைவரே” என அழைத்தான் அவ்வீரன்.

“என்ன?” அதிகாரத்துடன் சொற் கள் வெளிவந்தது காளனிடமிருந்து.

“அரசரின் அந்தரங்க ஊழி யன் வேந்தனுக்குத் தாங்கள் ஏதாவது பணியை வழங்கியிருக்கிறீர்களா?”

“இல்லை.”

“தாங்கள் அவரைக் கண்டீர்களா?”

“ம்ம்ம். அவன் கிழக்கு வாசல் அரண்மனைக் காவலர்களுடன் உரை யாடிக் கொண்டிருந்ததை ஒரு நாழிகைப் பொழுதிற்கு முன் கண்டேன். அங்குச் சென்று பார்.”

“நன்றி தலைவரே!”

https://telegram.me/aedahamlibra

“உன்னிடம் ஒரு பணியை நான் ஒப் படைக்கலாம் என நினைக்கிறேன் நான். உன்னை நம்பலாமா?”

“தாராளமாகத் தாங்கள் என்னை நம்பி எந்தப் பணியையும் வழங்கலாம் தலைவரே!”

“சரி, நம்பி ஒப்படைக்கிறேன். ஆனால் அரசருக்குக் கூடத் தெரியக்கூ டாது. எச்சரிக்கை.”

“சரி தலைவரே. அப்படியே ஆகட் டும்”

“நீ கிளம்பு.”

“தலைவரே, என்ன பணி என்று குறிப்பிடவே இல்லையே.”

“குறிப்பிட மறந்துவிட்டேன்.” எனக் கூறி சிந்தித்தவன் பிறகு, “நீ வேந்தனைப் பின்தொடரவேண்டும்?” என்றான்.

காளன் கூறியதைக் கேட்டு அதிர்ச் சியடைந்த அவ்வீரன், “நம் அரசரின்

https://telegram.me/aedahamlibra

நம்பத்தகுந்த அந்தரங்க ஊழியனையா தாங்கள் சந்தேகம் கொள்கிறீர்கள்?" என வினவினான்.

"இது சந்தேகம் அல்ல வீரனே!"

"பிறகு?"

"அவனுக்கு மறைமுகமாக நீ காவல் புரிய வேண்டும். அவனது உயிருக்கு ஆபத்து என்று என் ஒற்றர்களிடமிருந்து தகவல் கிடைத்திருக்கிறது. அவனைக் காக்க வேண்டியது நமது கடமை."

"ஆம் தலைவரே, அவரைக் காக்க வேண்டியது நமது கடமைதான்."

"சரி, நீ கிளம்பு. அவன் எங்கெங்கு செல்கிறான் என்பதை அறிந்து கொண்டு எனக்குத் தகவல்களைத் தெரிவித்துக் கொண்டே இரு!"

"தங்கள் உத்தரவு!" எனக் கூறிய அவ்வீரன் பெரும் மகிழ்ச்சியுடன் அங்கிருந்து வேந்தனைத் தேடிச் சென்றான்.

‘இருங்கோவேளும் வைதீகரும் சந்தித்துப் பேசி வேந்தனை அழைக்கிறார்கள் என்றால் அதிமுக்கியமான காரியம் ஏதோ நடக்கப்போகிறது என்று அர்த்தம். அவர்கள் உள்ளே பேசிக்கொள்வது என்ன என்று நிச்சயம் அறிந்தே தீர வேண்டும். அங்கு நடக்கும் சதியாலோசனைக் கூட்டத்திற்குள் எப்படியாவது நுழைந்தே தீர வேண்டும். என்ன வழி? என்ன வழி?’ என்று சிந்தித்துக் கொண்டே சென்றான் காளன். புள்ளூறு புன்கண் தீர்த்த செம்பியனது ஓவியம் சுவரில் வரைந்திருப்பதைக் கண்ட காளனின் கண்களில், ‘உள்ளே அந்தரங்க ஆலோசனை மண்டபத்திற்குள் செல்ல வழி கிடைத்துவிட்டது’ என்பதைப் போன்று அவனது முகத்தில் பிரகாசம் தோன்ற செம்பியனுக்கு நன்றி தெரிவித்துவிட்டு அங்கிருந்து வேகமாக நகர்ந்தான் காளன்.

***

https://telegram.me/aedahamlibra

அரசரின் அந்தரங்க ஆலோசனை மண்டபத்திற்குள் இருங்கோவும், வைதீகர் பாகவதரும் ஆலோசிக்கத் தொடங்கியிருந்தார்கள். இருங்கோவின் முகத்தில் காணப்பட்ட கவலைக் குறியைக் கண்ட வைதீகர், "அரசே, அனைத்தும் நமது திட்டப்படிதானே நடக்கிறது. பிறகு எதற்குத் தங்கள் முகத்தில் கவலையின் சாயல் தென்படுகிறது?" என வினவினார்.

"பிரம்மாயரே, கவலை எதுவும் இல்லை. சிறு வருத்தம் தான் எனக்கு. பெரும் போர் நிகழவிருக்கிறது. அந்தப் போரில் எத்தனை ஆயிரம் பேர் மடியப் போகிறார்களோ? அந்தத் துயரங்களை எண்ணித்தான் மனம் வேதனைப்படுகிறது. வளவனாரின் மகளை என் மகனுக்கு மணமுடித்துப் போரைத் தவிர்க்கலாம் எனத் திட்டம் வகுத்தோம். அதையும் செங்குவீரன் பாழ்படுத்திவிட்டான்."

"அரசே அந்தச் செங்குவீரனைத் தான் தங்களது தவப்புதல்வன் கொற்

கையிலேயே அழித்துவிட்டாரே! அவ னைப் பற்றிய கவலையை விடுங்கள். நம் போரை எதிர்கொள்ளச் செங்குவீ ரனும் இப்போது உயிருடன் இல்லை. சோழ குலம் அழியப்போவது காலத்தின் நியதி. அது தங்களால் நடக்கப்போகிறது. காலச்சக்கரத்தில் அகப்பட்டவர்கள் நாம், அதற்கு ஏற்றது போல நாம் சுழன்றே ஆகவேண்டும் அரசே! இதுதான் சரியான தருணம்."

"ம்ம்ம்ம்!"

"நமக்கு ஆதரவாக ஈரேழு வேளிர் கள் மற்றும் இரண்டு பெருநில வேந்தர்க ளான சேரர் மற்றும் பாண்டியர் தங்களது படையை மட்டும் அனுப்ப சம்மதிக்காமல் அவர்களே நேரடியாகப் போரில் ஈடுபட்டு சோழ வம்சத்தை இந்த முறை ஒழித்தே . தீர வேண்டும் எனும் முனைப்பில் இருக் கிறார்கள். கவலையை விடுங்கள்."

"ஆம் பிரம்மாயரே! இந்த முறை நாம் அவர்களை ஒழித்தே தீர வேண்

டும். போரில் அவர்களைத் தோற்கடிப்ப தோடு எனது கடமை முடிந்துவிடப்போ வதில்லை. போரில் சென்னியின் மக னைக் கொன்று எந்தப் புகாரில் செங் குவீரன் என்னையும் என் மகனையும் கொள்வேன் என்று எங்களிடம் வெஞ்சி னம் உரைத்தானோ, அதே புகாரில் வள வனாரின் மகளுக்கும் என் மகனுக்கும் மணமுடித்து வைப்பேன். அப்போதுதான் என் மனதில் இருக்கும் ரணம் ஆறும்.”

“தங்களது மன ரணத்தை ஆற் றிக்கொள்ளும் காலம் நெருங்கிவிட்டது அரசே! கவலையை விடுங்கள்.”

“என்ன கூறுகிறீர் பிரம்மாயரே?”

“ஆம். நாம் புகாரின் மீது நேரடியா கப் போர் தொடுக்கும் காலம் வந்துவிட் டது.”

“ஆறேழு திங்கள் கடந்தும் புகா ருக்கு நாம் அனுப்பிய தூதுக்கு இன்னும் எந்தப் பதிலும் வரவில்லையே!”

https://telegram.me/aedahamlibra

“பதில் மட்டும் தான் வரவில்லையா? அல்லது தூது சென்றவனும் திரும்பி வரவில்லையா?”

“இரண்டுமே தான்!”

“அப்படியெனில் அவர்களின் நிலைப்பாடு தங்களுக்குத் தெரியவில்லையா?”

“போருக்கு அவர்கள் தயார் என்று மறைமுகமாகத் தெரிவிக்கிறார்கள் என்று கூறுகிறீர்களா நீங்கள்?”

“ஆம் அரசே! அதேதான்.”

“சரி, வேந்தனை எதற்குத் தாங்கள் அழைத்துவரச் சொல்லியிருக்கிறீர்கள் பிரம்மாயரே?”

“புகார் போருக்குத் தயார் என்று மறைமுகமாக அறிவித்திருக்கிறார்கள் அல்லவா? நாமே போரை முதலில் முன்னெடுப்போம். அந்தப் பணிக்குத்தான்

https://telegram.me/aedahamlibra

வேந்தனை அழைத்துவரச் சொல்லி ஆள் அனுப்பியிருக்கிறேன்."

"சரி பிரம்மாயரே! ஆனால், எனக்கு ஒரு சந்தேகம்?"

"என்ன சந்தேகம் அரசே?"

"புகாரின் மன்னனாக முடிசூடிக் கொண்ட அந்தச் சிறுவன் எந்த நம் பிக்கையில் போருக்குத் தயாராகி வரு கிறான்? நமது படை பலத்தை எதிர்த்து அவனது படை ஒரு நாழிகைப் பொழுது தாக்குப்பிடிக்குமா பிரம்மாயரே? எந்த நம் பிக்கையில் அவன் இருக்கிறான் என்றே தெரியவில்லையே!"

"முதலில் செங்குவீரன் அவனுக்குப் பக்க பலமாக இருந்தான்!"

"அவன்தான் குமரிக்கடலில் மடிந்து போனானே, அவனைப் பற்றி எதற்குப் பிரம்மாயரே திரும்பத் திரும்பப் பேசிக் கொண்டு இருக்கிறீர்கள்?"

https://telegram.me/aedahamlibra

“மன்னியுங்கள் அரசே! அவனைப் பற்றி இனி நான் பேச மாட்டேன்.”

“நல்லது!”

“அரசே, சென்னியின் மகன் வளவன் எந்த நம்பிக்கையில் இருக்கி றான் என்று எனக்கும் தெரியவில்லை. தோற்கப்போகிறவன் இப்படித்தான் துள் ளுவான். அவனைப் பற்றித் தாங்கள் கவலை கொள்ள வேண்டிய அவசிய மில்லை.”

“இருந்தும் அவர்களை நாம் சாதார ணமாக நினைத்துவிடக் கூடாது!”

“நிச்சயமாக அரசே!”

“சரி, வேந்தன் வந்த பிறகு என்ன பணியை அவனுக்கு நீங்கள் ஒப்படைக் கப் போகிறீர்கள்?”

“வஞ்சிமா நகர் வரை சென்று சேரமான் பெருஞ்சேரலாதனை சந்தித்து வரச்சொல்லி அனுப்பப்போகிறேன். அது

https://telegram.me/aedahamlibra

மட்டுமல்லாமல் அவனுடன் ஒரு ஓலை யையும் கொடுத்து அனுப்பப்போகி றேன்."

"ஓலையா?"

"ஆம்!"

"என்ன ஓலை?"

"போர் சம்பந்தமான ஓலைதான் அரசே!"

"நம் செய்தியைத் தாங்கிக் கொண்டு வேந்தன் செல்ல மாட்டானா?"

"இது முக்கியமான செய்தி. ஆத லால்தான் அரசே ஓலை!"

"வேந்தன் மீது உங்களுக்கு அவ்வ ளவு அவநம்பிக்கையா?"

"அவநம்பிக்கை எதுவும் இல்லை! முன்னெச்சரிக்கை தான். நாம் அனுப் பப்போகும் தகவல் மிகவும் இரகசியமாக இருக்க வேண்டும். வேந்தனுக்கு மதுவ ருந்தும் பழக்கம் உண்டு. இடையில் உள

றினாலும் உளரிவிடுவான். அது பெரும் ஆபத்து.”

“ஓலையில் அனுப்பினால் மட்டும் நம் எதிரிகளின் ஒற்றர்கள் ஓலையை அபகரிக்கமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?”

“ஓலை நம் எதிரிகளின் கைகளில் சிக்கினால் கூட நம் இரகசியம் வெளிப்படாது!”

“என்ன, ஓலை சிக்கினாலும் அதில் அடங்கியிருக்கும் செய்தி எதிரிகளுக்குத் தெரியவராதா?”

“ஆம் அரசே!”

“எப்படி?”

“நான் பழமையான வடமொழியில் அந்த ஓலையை எழுதப்போகிறேன். தமிழகத்தில் இருக்கும் வெகு சிலரே அம்மொழியைப் படிக்கத் தெரிந்தவர்கள். அவர்களில் ஒருவர் சேரனின் அரண்

மனையில் வசிக்கிறார். அவர் படித்துக் காட்டாத வரை நம் ஓலையின் இரகசியம் யாருக்கும் இடைப்பகுதியில் கசிய வாய்ப்பே இல்லை.”

“அருமையான யோசனை பிரம்மாயரே” என அரசர் கூறவும் அந்த அந்தரங்க அறைக்குள் காளன் அவசரமாகப் பிரவேசிக்கவும் நேரம் கச்சிதமாகப் பொருந்தியது.

அவனைக் கண்ட இருங்கோவேள், “காளா, வெளியே காவலர்களுக்கு யாரையும் உள்ளே அனுமதிக்க வேண்டாம் என்றல்லவா கட்டளையிட்டிருந்தேன்.”

“ஆம் அரசே! தங்கள் உத்தரவு கிடைத்தது. தங்களை இடையூறு செய்திருந்தால் என்னை மன்னித்துவிடுங்கள்.”

“சரி, அவசரமாக உள்ளே நுழைந்திருக்கிறாயே, அப்படி என்ன தலை போகிற காரியம் நடந்துவிட்டது?”

https://telegram.me/aedahamlibra

“தலை போகிற காரியம் அல்ல அரசே! ஆனால், தலையை இழக்கப் பார்த்த தருணம் அது!”

“தலையை இழக்கப்பார்த்த தரு ணமா?”

“ஆம் அரசே!”

“யாருடைய தலை?”

“தங்களுடைய தலைதான்!”

“என்னுடையதா?”

“ஆம் அரசே!”

“யாரிடம்?”

“செங்குவீரனிடம்!” அழுத்தமாகப் பதில் வந்தது காளனிடமிருந்து.

அவன் கூறியதைக் கேட்டதும் இருங்கோவேள் கடும் கோபம் கொண்டு, “காளா, அளவுக்கு மீறிய திமிர் பேச்சு வெளிப்படுகிறது உன்னிடமிருந்து. அனு மதியின்றி எதற்காக உள்ளே நுழைந்

https://telegram.me/aedahamlibra

தாய்? காரணத்தைக் கூறப்போகிறாயா? அல்லது தண்டனையை அனுபவிக்கப் போகிறாயா?" எனக் கோபத்துடன் வின வினார்.

"அரசே, தாங்கள்தான் கேள்வி மேல் கேள்வியைக் கேட்டுக் காலத்தைக் கடத்தினீர்கள். வந்தவுடனே என்ன என்று மட்டும் கேள்வி கேட்டிருந்தால் அப்போதே அனைத்தையும் கூறியிருப் பேன் நான்!"

"சரி, எதற்காக வந்திருக்கிறாய்?"

"அரசே, நமது எதிரிகள் பயன்படுத் திய இரகசிய சுரங்கப் பாதையைக் கண் டறிந்துவிட்டேன் நான்."

"என்ன? உண்மையாகவா?" எனத் தனது ஆசனத்திலிருந்து துள்ளி எழுந்த இருங்கோவேள் ஆச்சர்யத்துடன் வினவ லானார்.

"ஆம் அரசே! பல திங்கள்களுக்கு முன் செங்குவீரன் உள்ளே நுழைந்து

இதே அறையில் தங்கள் கழுத்தின் மீது வாளினை வைத்தான் அல்லவா? அப்போது அவன் பயன்படுத்திய சுரங்கப் பாதையைக் கண்டறிந்துவிட்டேன். அதைக் கூறத்தான் ஆவலுடன் ஓடோடி வந்தேன்" என ஆர்வத்துடன் கூறினான் காளன்.

"அந்த மர்மச் சுரங்கம் எங்கு இருக்கிறது?"

"செம்பியன் கோட்டத்தில்!"

"செம்பியன் கோட்டத்திலா?"

"ஆம் அரசே!"

"அதன் பாதை இங்கு எங்கு முடிவடைகிறது?"

"தெரியாது."

"செம்பியன் கோட்டத்தில் நீ அந்தச் சுரங்கத்தை உன் கண்களால் கண்டாயா?"

"இல்லை அரசே!"

https://telegram.me/aedahamlibra

"அப்புறம் எப்படி அந்தச் சுரங்கம் செம்பியன் கோட்டத்தில்தான் தொடங் குகிறது என்று கூறுவாய்?"

"அரசே, இன்று மாலை வழக் கம் போலச் செம்பியன் கோட்டத்திற் குச் சென்றிருந்தேன். நான் சந்தே கம் கொள்ளும்படி ஒருவன் செம்பியன் கோட்டத்திற்குள் நுழைவதைப் பார்த்து அவனை இரகசியமாகப் பின்தொடர்ந் தேன். அவன் அங்குச் சில கற்களை நகர்த்தினான். ஆனால், நோட்டமிடும் என்னை அவன் கவனித்துவிடக் காவிரி யில் குதித்துத் தப்பிவிட்டான். நான் எவ் வளவோ முயன்றும் அந்தச் சுரங்கத்தின் வாயிலைக் கண்டறிய இயலவில்லை."

"சிறப்பான பணி காளா! ஆனால், சுரங்க வாயிலைத்தான் கண்டறிவதற் குள் கோட்டைவிட்டு வந்துவிட்டாய்!"

"மன்னியுங்கள் அரசே."

"விடு. சுரங்கம் எங்கு இருக்கிறது என்பதை அறிந்துவிட்டோம். இனி அதைப்பற்றிய கவலை நமக்குத் தேவையில்லை. செம்பியன் கோட்டத்திற்கு இரவு பகல் பாராமல் நம் காவலர்களைக் காவல் இருக்கச் சொல். சந்தேகம் கொள்ளும்படி யாராவது வந்தால் அவர்களைக் கைது செய்து என் முன் இழுத்து வா!"

"தங்கள் கட்டளை அரசே!"

"சரி, நீ வெளியே செல். வேந்தன் வந்ததும் உடனே அனுப்பு."

"அப்படியே ஆகட்டும் அரசே!" எனப் பதிலளித்த காளன் திரும்பி வருகையில் அவர்களின் இரகசிய பேச்சுக்கள் அனைத்தையும் கேட்டு அறிந்து கொண்டேன் என்பதற்கு அறிகுறியாகப் புன்சிரிப்புடன் அங்கிருந்து வெளிவந்தான். தாமதமாக உள்ளே சென்றிருந்தாலும் சரியான நேரத்திற்கு உள்ளே நுழைந்தவன் அவர்களின் திட்டங்கள்



https://telegram.me/aedahamlibra

அனைத்தையும் ஒட்டு கேட்டு அறிந்து விட்டான். 'விடிந்ததும் முதல் வேலையாகச் செம்பியன் கோட்டத்திற்குக் காவலர்களை மாறுவேடத்தில் நியமிக்க வேண்டும். அதே நேரம் செம்பியன் கோட்டத்தின் மர்மப்பாதை இருங்கோவிற்குத் தெரிவிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவிக்க ஏதுவாகத் தினமும் இரவு மற்றும் பகல் வேளைகளில் செம்பியன் கோட்டத்தின் மேல் இருக்கும் சிற்பத்திற்கு விளக்கேற்றச் சொல்ல வேண்டும்' எனவும் நினைத்துக் கொண்டான்.

காளன் அங்கிருந்து வெளியேறிய சிறிது நேரத்திற்கெல்லாம் வேந்தன் அங்குச் சென்றான். அவனிடம் வைதீகர், "வேந்தா, இன்னும் மூன்று நாள் கழித்து அதாவது முழு நிலவுக்கு அடுத்த நாள் மாலை கதிரவன் மேற்கில் சாய்ந்த அடுத்த நாழிகைக்கு என் மாளிகைக்கு வா. ஒரு முக்கியமான பணிக்கு உன்னை நான் அனுப்பப்போகிறேன். அடுத்த மூன்று நாட்களும் ஓய்வெடுத்துக்கொள்.

எந்தத் தவறும் நேர்ந்துவிடக் கூடாது! சரியான நேரத்திற்கு வந்து சேர். அப்போது அனைத்தையும் கூறுகிறேன் உன்னிடம்!" எனக் கூறிய வைதீகர் அங்கிருந்துக் கிளம்பினார்.

உற்சாகத்துடன் வந்த வேந்தன் அவர் கூறியதைக் கேட்டு, 'என்ன செய்தியாக இருக்கும்? அவர் எதற்கு என்னை மூன்று நாட்கள் ஓய்வெடுக்கச் சொல்லியிருக்கிறார்?' என்று முழுமையாக அறியாமல் குழப்பத்துடனே அங்கிருந்து செல்லலானான்.

அவன் குழப்பத்துடன் திரும்பி வந்ததைக் கண்ட காளன், "என்ன குழப்பம்?" என்று வினவ பதிலுக்கு அவன், "ஒன்றுமில்லை" என மட்டும் பதிலை உதிர்த்துவிட்டுச் சென்றான்.

ஆனால், அடுத்த நாள் வேந்தனை வேவு பார்க்க காளனால் நியமிக்கப்பட்ட அந்த வீரனான உபதளபதி ஓடிவந்து, "தலைவரே, வேந்தனை முழு நிலவுக்கு

அடுத்த நாள் வைதீகர் அவரது மாளிகைக்கு வரச் சொல்லியிருக்கிறார். எப்போது என்று தெரியவில்லை, எதற்கு என்றும் தெரியவில்லை” எனத் தகவல் தெரிவித்தான் அவன்.

அவர்களின் பேச்சினை இரகசியமாக ஒட்டுக்கேட்டதில் அறிந்து கொண்ட செய்தி, இப்போது வேந்தனை வைதீகர் முழு நிலவுக்கு அடுத்த நாள் அவரது மாளிகைக்கு வரவழைத்திருப்பது என அனைத்தையும் நினைத்துப் பார்த்த காளனுக்கு அனைத்து திட்டங்களும் ஓரளவு புரிந்துவிட, “உனக்களித்த பணியை நீ சிறப்பாகச் செய்திருக்கிறாய். அதற்குரிய சன்மானம் விரைவில் கிடைக்கும். இனி நீ வேந்தனைப் பின் தொடர வேண்டாம். மீதியை நான் பார்த்துக்கொள்கிறேன்” எனக் கூறிவிட்டான்.

“தங்கள் உத்தரவு!”



https://telegram.me/aedahamlibra

https://telegram.me/aedahamlibrary

“வேந்தனிடமிருந்து இந்தத் தகவல்களை எப்படி நீ அறிந்து கொண்டாய்?”

“அவர் தனது காதலியிடம் இரவில் இரகசியமாகக் கூறிக் கொண்டிருந்தார்.”

“அதை நீ ஒட்டு கேட்டாயா?”

“இல்லை தலைவரே!”

“பிறகு?”

“பொற்காசுகளுக்கு ஆசைப்பட்டு அவனது காதலியே என்னிடம் அனைத்தையும் கூறி விட்டாள்! அவள் கணிகை தலைவரே, பிறகு தான் அறிந்து கொண்டேன் நான்” என அவன் கூற காளனின் முகத்தில் வெற்றுப் புன்னகை ஒன்று வந்துவிட்டுச் சென்றது.

“நீ கிளம்பலாம்!” என்று காளன் கூற அவ்வீரன் அங்கிருந்து சென்றுவிட்டான்.

கரிகாலனின் தாய் மாமனான இளந்திரையன் எனும் காளன் வெகு

நேரம் அதே இடத்திலேயே அமர்ந்து கொண்டு தீர சிந்தித்துக் கொண்டிருந் தான். ஏதோ முடிவெடுத்துவிட்ட காளன் தனது முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டு எங்கேயோ புரவியிலேறி அதி வேகமாகப் பறந்து கொண்டிருந்தான். அவன் சென்ற பாதையில் புழுதி அடங்க வெகு நேரம் ஆனது!

https://telegram.me/aedahamlibra

# 4. துரோகம்

ஓய்வெடுத்துக் கொண்ட வேந்தன் வைதீகரின் கட்டளைப்படி முழு நிலவுக்கு அடுத்த நாள் மாலை நேரத்தில் அவரது மாளிகைக்குச் சென்றான். அவரது மாளிகைக்குள் நுழையும் போதே வாயில் வரை வந்து வரவேற்ற வைதீகர், "வா வேந்தா. உன்னைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். நான் குறிப்பிட்டதைப் போன்று சரியான நேரத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறாய். உள்ளே வா" எனப் பாராட்டி அவரது மாளிகைக்குள் அழைத்துச் சென்றார்.

அவரது கட்டளையை எதிர்பார்த்துக் கொண்டு அமைதியாக நின்று கொண்டிருந்தான் வேந்தன். "வேந்தா, உன்னை எதற்காக மூன்று தினங்கள் ஓய்வெடுக்கச் சொன்னேன் என்று தெரியுமா?" என வினவினார் வைதீகர்.

"தெரியாது வைதீகரே, தாங்களே அதையும் கூறிவிடுங்கள்."

"சரி கூறுகிறேன்" என்றவர் அவனது முகத்தையே சில கண நேரங்கள் தொடர்ந்து உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு, "வேந்தா, உன் வாழ்வில் நீ இதுவரை செய்த காரி யங்களை விட இப்போது செய்யப்போ கும் பணி மகத்தானது. மிகவும் முக்கி யமானதும் கூட! அடுத்தச் சில திங்கள் காலங்கள் உறக்கம், இன்பம், மகிழ்ச்சி, பசி என அனைத்து உணர்ச்சிகளையும் மழுங்கடித்துவிட்டு நான் குறிப்பிடப்போ கும் பணியைச் சாதுர்யமாக நிறைவேற்ற வேண்டும். ஆதலால் தான் உன்னை நான் கடந்த சில நாட்களாக எந்தப் பணி யையும் மேற்கொள்ளாமல் முற்றிலும் ஓய் வெடுக்கச் சொன்னேன்."

"தங்கள் உத்தரவு எதுவானாலும் அதனைச் சிரமேற் கொண்டு திறம்பட

நிறைவேற்ற காத்திருக்கிறேன். உத்தரவி டுங்கள்!”

“எனக்குத் தெரியும் வேந்தா, நீ திற மையாக நிறைவேற்றுவாய் என்று. இருப் பினும் நீ செய்யப்போகும் பணியின் முக் கியத்துவத்தைக் கருதி உன்னை எச்ச ரிக்க வேண்டியது எனது கடமை.”

“அப்படி என்ன முக்கியமான பணி யைத் தாங்கள் எனக்கு வழங்கப்போகி றீர்கள்?”

“போரினைத் தொடங்கவிருக்கி றாய் நீ?” என வைதீகர் கூறியதுதான் தாமதம் அடுத்தக் கணம் அதிர்ச்சியில் வியர்த்துவிட்டான் வேந்தன்.

“வைதீகரே, என்ன கூறுகிறீர்கள் நான் போரினைத் தொடங்கப்போகி றேனா? யார் மீது? எதற்காக?” என வியந் தபடியே பதற்றத்துடன் வினவினான் வேந்தன்.

வைதீகர் சிரித்தபடியே, “நீ பதறும் அளவிற்கு உனக்கு நான் எந்த அபா யகரமான பணியையும் வழங்கப்போவ தில்லை. போர் செய்தியை நீ கொண்டு செல்லவிருக்கிறாய் என்பதைத்தான் நீ போரினைத் தொடங்கவிருக்கிறாய் என் றேன் நான்.”

“ஓ... இதுதானா செய்தி. நீ போரி னைத் தொடங்கவிருக்கிறாய் என்றதும் பதறிவிட்டேன் நான்” என்றவன், “போர் செய்தியை நான் எங்குக் கொண்டு செல்ல வேண்டும். புகாருக்கா?” என வினவவும் செய்தான்.

“புகாருக்கு இல்லை வேந்தா. சேரத் தலைநகர் வஞ்சிமா நகரத்திற்கு.”

“வஞ்சிமா நகரத்திற்கா?”

“ஆம்!”

“அங்கு நாம் எதற்காகப் போர் செய் தியை கொண்டு செல்ல வேண்டும்?”

"சோழ இளவல் வளவன் மீது முறைப்படி போரை தொடுக்கலாம் எனும் மனநிலைக்கு நம் மன்னர் வந்துவிட்டார். ஆதலால், அது சம்பந்தமான ஓலை ஒன்றை நீ சேரமான் பெருஞ்சேரலாதனிடம் கொடுத்துவிட்டு அவர் அளிக்கும் பதில் ஓலையையும் பெற்று வர வேண்டும்."

"தங்கள் உத்தரவு வைதீகரே! எப்போது நான் கிளம்ப வேண்டும்?"

"இப்பொழுதே!"

"இப்பொழுதேவா?"

"ஆம்!"

"ஓலை?"

"சற்றுப் பொறு" என்றவர் தங்கப் பெட்டியில் ஓலைச் சுவடிகளுக்கு இடையில் எழுதப்படாமல் வைத்திருந்த ஒரு பனை ஓலை மற்றும் தங்க எழுத்தாணி ஒன்றையும் எடுத்தவர் அதில் எழுதத்

தொடங்கினார். பிறகு அந்த ஓலைக்கு முன்னும் பின்னும் ஒவ்வொரு வெற்று ஓலையை இணைத்தவர், “இந்த ஓலை யைத்தான் நீ பத்திரமாகச் சேர மன்ன னிடம் அளிக்க வேண்டும். உன் பணி சேர மன்னரை சந்திப்பதோடு நின்றுவி டப்போவதில்லை.”

“அதன் பிறகு நான்...” என வேந் தன் கூறிக் கொண்டிருந்த போதே இடைமறித்த வைதீகர் பாகவதர், “இந்த ஓலையை நீ சேர மன்னரிடம் அளித்த பிறகு அவர் இரு ஓலைகளை அளிப்பார். அதில் ஒரு ஓலை நமக்கு. இன்னொன்று பாண்டிய மன்னருக்கு. அந்த ஓலையை யும் நீ பாண்டியர் தலைநகர் கூடல் மாந கருக்கு எடுத்துச் சென்று பாண்டியரிடம் சேர்ப்பிக்க வேண்டும். அவரும் பதில் ஓலையை உன்னிடம் அளிப்பார். அந்த ஓலைகளையும் நீ பத்திரமாக இங்கு எடுத்துவர வேண்டும். குறுகிய காலத் திற்குள் நீ மிக நீண்ட தூரப் பயணம் மேற்கொள்ள வேண்டும். தேவையேற்ப

டும்போது உன்னிடம் இருக்கும் இலைச் சினைப் பதக்கத்தைப் பயன்படுத்திக் கொள். அது மட்டுமல்லாமல் இந்தப் பொற் கழஞ்சுகளையும் உன் வழி செல வுக்கு எடுத்துக்கொள்" என்றவர் ஒரு சுருக்குப் பையையும், தன் கையிலி ருந்த ஓலையையும் அவனிடம் கொடுத் தார். அவற்றை வாங்கித் தன் இடை யின் அரைச்சுருளில் முடிந்து கொண் டான் வேந்தன்.

"இன்று இரவே நீ உறைந்தையிலி ருந்து புறப்பட்டுவிட வேண்டும். நீ மட்டும் புறப்படு. உனக்குத் துணையாக யாரும் வேண்டாம். அதிகக் காவலோடு சென் றால் நம் எதிரிகளின் ஒற்றர் பார்வை உன் மீது விழுந்தாலும் விழக்கூடும். மாறு வேடத்தில் செல். நாளை காலை கதி ரவன் உதித்து இரண்டாவது சாமத்தின் முதல் நாழிகையில் நீ இதனைப் பெருஞ் சேரலாதனிடம் சேர்ப்பிக்க வேண்டும். புரிகிறதா?"

https://telegram.me/aedahamlibrary

"இப்போது நான் இங்கிருந்து கிளம்பினால் அடுத்த மூன்று சாம நேரத்திற்கெல்லாம் வஞ்சிமா நகரத்தை அடைந்துவிடுவேனே? அப்புறம் எதற்கு நான் நாளை காலை வரை காத்திருக்க வேண்டும்."

"மடையா சொல்வதை மட்டும் செய். வீண் கேள்வி கேட்காதே! புரிகிறதா?"

"புரிகிறது வைதீகரே!"

சிறிது நேரம் அமைதியாக இருந்தவர், "ஏன் என்றுதானே வினவினாய்?"

"ஆம்!"

"நான் குறிப்பிட்டுள்ள நேரம்தான் நல்ல நேரம். ஆதலால்தான் உன்னை அந்த நேரத்தில் ஓலையை ஒப்படைக்கச் சொல்கிறேன். அப்போது முன்னெடுக்கும் பணி எந்தச் சூழலிலும் தோல்வியடையாது. கடந்த சில திங்கள்களாக

https://telegram.me/aedahamlibra

இந்த நேரத்திற்காகத்தான் காத்திருந் தேன் நான்."

"நல்லது வைதீகரே, நான் புறப்ப டவா?"

"சரி புறப்படு. காரியம் முக்கியம்."

"சரி!"

"வேறு ஏதேனும்?"

"ம்ம்ம். ஒரு கேள்வி பிரம்மாயரே."

"என்ன?"

"தாங்கள் ஓலையில் என்ன எழுதி யிருக்கிறீர்கள் என நான் அறிந்துகொள் ளலாமா?"

"எதற்கு அதனைக் கேட்கிறாய்?"

"நான் எடுத்துக் கொண்டு செல் லும் ஓலையில் என்ன எழுதியிருக்கிறது என்பதை நான் அறிந்து வைத்திருப்பது நல்லது தானே!"

“நீ அதை அறிய வேண்டிய அவசியம் இல்லை வேந்தா?”

“ஒருவேளை நான் நம் எதிரிகளிடம் அகப்பட்டுக் கொண்டால் ஓலையில் இருக்கும் இரகசியத்தைக் காப்பாற்ற இந்த ஓலையை அழிக்க நேர்ந்தாலும் நேரலாம். அப்படிப்பட்ட சூழலில் ஓலையில் என்ன எழுதியிருக்கிறது என்பதை நான் அறிந்திருந்தால் ஓலை இல்லாவிட்டாலும் செய்தியை உரியவரிடம் சேர்ப்பித்துவிட இயலும் அல்லவா?”

“அதைப்பற்றி நீ கவலைப்பட வேண்டாம் வேந்தா, இந்த ஓலை எதிரிகளிடம் சிக்கினாலும் அவர்களால் அதனை வாசிக்க இயலாது. பழமையான மொழியில் எழுதியிருக்கிறேன் நான். ஒற்றர்களைப் பற்றிய எந்தவித அச்சமும் கொள்ளாமல் நீ பயணிக்கலாம். ஆனால் வழியில் கூத்து, மது, மாது என்று உன் கவனத்தைத் திசைதிருப்பி நம் திட்டத்தைப் பாழ்படுத்தி விடாதே! இந்த ஓலை

பெருஞ்சேரலாதனின் கையில் கிடைத்த பிறகு ஒட்டுமொத்த தமிழகத்தின் அரசியல் நிலையே மாறப்போகிறது. அரண்மனைக்குச் சென்று இந்த ஓலையில் அரசரின் முத்திரையைப் பதித்துக் கொண்டு நீ புறப்படு!" எனக் கட்டளையிட்டார்.

ஓலையைப் பெற்றுக் கொண்ட வேந்தனும் அங்கிருந்து அரண்மனையை நோக்கிப் புறப்பட்டான். வைதீகரும் அவரது வழிபாட்டுப் பணிகளை மேற்கொள்ளக் காவிரிக்கரையை நோக்கி விரைந்தார்.

அப்போது அவர்கள் இருவரின் உரையாடல்களையும் பக்கத்து அறையில் பணிபுரிந்து கொண்டிருந்தபடி ஒட்டுக்கேட்ட வைதீகரின் பணிப்பெண் இழிந்தகிழத்தி அங்கிருந்து கிளம்பி காளனைச் சந்தித்துத் தகவலைத் தெரிவித்தாள்.

அவள் கூறிய செய்திகள் அனைத்தையும் ஒன்றுவிடாமல் கேட்டுக் கொண்

https://telegram.me/aedahamlibra

டான். அமைதியாக நின்ற காளனிடம் அவள், “தலைவரே, நான் நிற்கவா அல் லது கிளம்பவா?” என வினவினாள்.

“புரவி செலுத்த தெரியுமா உனக்கு?”

“செலுத்துவேன். ஆனால், புரவி முரண்டுபிடிக்காமல் சமத்தாக இருக்கும் பட்சத்தில்...” எனப் பாதியிலேயே கூறி முடித்தாள் அந்த இழிந்த கிழத்தி.

“நல்லது” என்றவன் அவனது மாளிகையில் இருந்த ஒரு அறையைச் சுட்டிக்காட்டி”எனக்காக நீ ஒரு பணி யைச் செய்ய வேண்டும். அந்த அறைக் குச் சென்று நீராடிவிட்டு வா, மற்றதை உனக்கு நான் அதன் பிறகு சொல்கி றேன்” எனக் கூற அவள் அவசரமாக அந்த அறைக்குள் சென்று கிளம்பத் தயாரானாள்.

அன்றிரவு வைதீகர் மற்றும் இருங் கோவேள் பேசியதை ஒட்டுக்கேட்டுக்

https://telegram.me/aedahamlibra

கொண்டதிலிருந்தும் இன்று வைதீகர் வேந்தனுக்கு அளித்த கட்டளையை யும் தொகுத்துப் பார்த்தவன், 'எப்படியும் வேந்தன் தனது பயணத்தை விரைந்து மேற்கொள்ள மாட்டான். நாளை காலை முதல் சாமத்தில் வஞ்சிமா நகரத்தை அடையுமாறும் அதே நேரம் ஒற்றர்க ளுக்கு எந்தவித சந்தேகமும் ஏற்ப டாத அளவிற்கும் பொறுமையாகத்தான் பயணம் செய்வான். இங்கிருந்து விரை வாகச் சென்றால் எப்படியும் அவனை வழிமறித்து அவனது ஓலையைக் கைப் பற்றிவிடலாம். ஓலையைக் கைப்பற்றி னாலோ அல்லது ஓலையைக் கைப்பற்றி அவனைக் கொன்றாலோ வைதீகர் மற் றும் இருங்கோ தமது திட்டத்தை எதிரி கள் அறிந்துகொண்டு விட்டார்கள் என்று எச்சரிக்கை அடைந்து திட்டத்தை மாற் றிவிடுவார்கள்.

ஓலையைக் கைப்பற்றினாலும் அதில் எழுதியிருக்கும் செய்தியை அறிந் துகொள்ள இயலாது. ஓலையையும்

https://telegram.me/aedahamlibra

கைப்பற்றக் கூடாது, அதே நேரம் அதில் அடங்கியிருக்கும் ரகசியத் தகவலையும் நாம் அறிந்துகொள்ள வேண்டும். என்ன செய்வது?' எனப் பலமாகச் சிந்தித்த போதுதான் 'இந்தப் பணிப்பெண்ணைப் பயன்படுத்திக்கொள்வதுதான் சரியானதாக இருக்கும்' எனும் முடிவுக்கு வந்தவன்தான் அவளை உடனே கிளம்பு என்று கட்டளையிட்டிருந்தான். அவளும் காலம் தாழ்த்தாமல் உடனே கிளம்பியிருந்தாள்.

அவள் திரும்பி வந்தபோது கையில் ஒரு ஓலையுடன் நின்று கொண்டிருந்தான் காளன். அந்த ஓலையை அவளிடம் கொடுத்தவன், "உறைந்தைக்கு மேற்கே சேரத் தலைநகர் வஞ்சிமா நகரம் கருவூரை நோக்கிச் செல்லும் ராசபாட்டையில் ஒரு காவத தூரம் பயணம் மேற்கொண்டால் ஒரு சிறு நீரோடை காவிரி நதியுடன் சங்கமிக்கும். அந்தச் சங்கமத்தைத் தாண்டினால் ஒரு குடிசை வீடு தனியாகக் காணப்படும். அந்த வீட்டில்..."

எனக் காளன் கூறிக் கொண்டிருந்த போதே இடைமறித்தவள், "வஞ்சிக்கும் உறைந்தைக்கும் இடையில் காவிரியில் பல நீரோடைகள் கலக்கின்றனவே. நீங்கள் கூறும் ஓடையை நான் எப்படி அடையாளம் காண்பது?" என வினவினாள்.

"காவிரியில் கலக்கும் ஓடைகள் அனைத்திலும் நீர் செறிந்து காணப்படும். ஆனால், நான் கூறும் ஓடை வறண்டே மணல் திட்டு திட்டாகக் காணப்படும். பெருமழை பெய்தால் மட்டுமே அவ்வோடையில் நீர் செறிந்து வரும். இல்லையேல் அது மணல் ஓடையாகவே காணப்படும்." என்றவன்"கூற வந்ததை முழுவதுமாகக் கேள். பிறகு உன் சந்தேகங்களை நீ கேட்கலாம்" என்றான் கோபத்துடன்.

"சரி, தலைவரே! மன்னியுங்கள்" பணிந்தாள் அவள்.

"அந்த ஓலைக் குடிசைக்கு முன் பிடாரியின் சிலை ஒன்றும் காணப்படும்,

https://telegram.me/aedahamlibra

அச்சிலை முன்பு ஒரு விளக்கும் ஏற்றப் பட்டிருக்கும்!"

"பிடாரி சிலை ஊருக்கு வெளியில் ஒதுக்குப்புறமாகத் தானே அமைந்திருக் கும்? பிடாரிக் கோயிலுக்கு அருகினில் யாரும் வசிக்கமாட்டார்களே?"

"ஆதலால் தான் நான் ஊர் பேரைக் குறிப்பிடாமல் இந்த அடையாளத்தை உனக்குக் கூறுகிறேன்."

"அந்தக் குடிசையை அடைந்த பிறகு நான் என்ன செய்ய வேண்டும்?"

"உன் கையிலிருக்கும் ஓலையை அந்த வீட்டில் வசிக்கும் பெண்ணிடம் நீ சேர்ப்பிக்க வேண்டும்!"

"அப்படியே ஆகட்டும்!"

"சரி, நான் புறப்படுகிறேன்" எனக் கூறிக் கொண்டு அங்கிருந்து கிளம்பியவ ளைத் தடுத்து நிறுத்திய காளன், "இதைப்

பெற்றுக்கொள்" என அவளிடம் தனது முத்திரை மோதிரத்தை நீட்டினான்.

அதை வாங்கித் தன் இடையில் பத்திரமாகச் சொருகிக் கொண்டவள், "எதற்கு உங்கள் முத்திரை மோதிரத்தை அளிக்கிறீர்கள்? ஓலையுடன் சேர்த்துக் காட்டுவதற்கா?"

"இல்லை. வழியில் இருங்கோவின் வீரர்கள் அல்லது ஒற்றர்கள் யாராவது உன்னைத் தடுத்து நிறுத்தினால் இந்த முத்திரை மோதிரத்தை நீ பயன்படுத் திக் கொள்ளலாம். பிறகு உனக்கு எந்த இடைஞ்சலும் இருக்காது" என்றவன் அவளிடம், "உனக்கு வாசிக்கத் தெரி யுமா?" என வினவினான்.

"தெரியும்?"

"அப்படியெனில் நீ இந்த ஓலையை என் கண் முன்னாலேயே வாசித்துவிடு."

"இது இரகசிய ஓலை அல்லவா?"

https://telegram.me/aedahamlibra

"ஆம்!"

"பிறகு எதற்குத் தாங்கள் என்னை வாசிக்கச் சொல்கிறீர்கள்?"

"ஒரு வேளை யாராவது வழியில் உன்னைப் பரிசோதித்தாலோ அல்லது இந்த ஓலையைப் பார்க்க நேர்ந்தாலோ அதை நீ சிதைத்துவிட வேண்டும். இந்த ஓலையை விட இதில் எழுதப்பட்டிருக்கும் செய்திதான் முக்கியம். அது நிச்சயம் அடுத்த ஒரு ஓரைப் பொழுதிற்குள் அப் பெண்ணை அடைந்தே தீர வேண்டும்."

"உங்கள் முத்திரை மோதிரம்தான் என்னிடம் இருக்கிறதே! அரண்மனைக் காவல் தலைவர் எனக் கிட்ட பணி எனக் கூறினால் யார் என்னைத் தடுக்கப் போகிறார்கள்?"

"ஒரு வேளை இந்த முத்திரை மோதிரத்திற்கு அவர்கள் பணிய மறுத்துவிட்டாலும், உன்னை வலிய சோதனையிட முயன்றாலும் செய்தி குறிப்

பிட்ட நேரத்திற்குள் சென்று சேர்ந்துவிட வேண்டும் அல்லவா? அதற்குத்தான்!”

“தங்கள் உத்தரவு!” என்றவள் அந்த ஓலையை அவன் கண் முன்னே வாசிக்கவும் செய்தாள். பிறகு அவளை அவனது மாளிகைக்குப் பின்புறமாக அழைத்துச் சென்றவன் அவனது புரவி மீது ஏற்றினான். அந்தப் புரவியின் காது களில் ஏதோ சில சொற்களைக் கூறிய வன் பிறகு, “இது என் புரவி. மிகவும் புத் திசாலித்தனமானதும் கூட! எப்பேர்பட்ட ஆபத்து நேர்ந்தாலும் மிரளாது. தைரிய மானது. ஆதலால் இதன்மீது நீ அச்சமின் றித் தைரியமாகப் பயணிக்கலாம். நீ பய ணிக்க வேண்டிய இலக்கின் பாதை இப் புரவிக்கும் தெரியும். ஆதலால், உனக்கு வேலையும் குறைவே! இதன் கடிவா ளத்தையும், பிடரியையும் மட்டும் பிடித் துக் கொண்டு பத்திரமாக அமர்ந் துகொள். வேந்தன் அரண்மனைக்குச் சென்று உறைந்தையை விட்டு விலகு வதற்குள் நான் குறிப்பிட்டப் பெண்ணி

டம் நீ இந்த ஓலையைச் சேர்ப்பித்திருக்க வேண்டும்" என அவளிடம் கூறியவன் அந்தக் கருமை நிறப் புரவியின் முதுகில் தட்ட சீரான வேகத்துடன் அப்புரவி பய ணிக்கத் தொடங்கியது. காளனும் அரண் மனையை நோக்கி இரவு காவலர்களைக் கண்காணிக்கப் புறப்பட்டான்.

முழு நிலவுக்கு அடுத்த நாள் ஆகையால் அந்த முதல் சாம இரவு பொழுதில் நிலவும் கீழை வானத் திலே சிறைபட்டுக் கிடந்தது. நிலவொளி யும் காணப்படாத இருள் மண்டிக்கிடந்த சாலையில் காளனின் கருமை நிறப் புர வியில் அவன் அளித்த ஓலை மற்றும் முத்திரை மோதிரம் இரண்டையும் பெற் றுக் கொண்ட அப்பணிப்பெண் உறைந் தைக் கோட்டை வாசலைக் கடந்து நேர் மேற்கே வஞ்சி மாநகர் செல் லும் சாலையில் பயணித்துக் கொண் டிருந்தாள். புரவிக்குப் பாதை தெரி யும் என்று காளன் குறிப்பிட்டிருந்ததால் அவள் அதன்மீது அமர்ந்திருக்கப் புர

https://telegram.me/aedahamlibra

வியே சீரான வேகத்தில் காவிரிக் கரையோரமாக அமைந்திருந்த ராசபாட்டையில் அழைத்துச் சென்று கொண்டிருந்தது. சற்றுத் தொலைவில் காவல் வீரர்கள் அவ்வழியாகச் செல்லும் அனைத்துப் பயணிகளையும் தீப்பந்த ஒளியில் சோதனை செய்து கொண்டிருப்பதைக் கண்டு புரவியை இழுத்துப் பிடித்துத் தயங்கி நின்றாள் அவள். புரவியைச் சிறிது நேரம் நிறுத்தி சிந்தித்தவள் பிறகு துணிச்சலுடன் அதே வழியில் செல்லலானாள்.

அவள் எதிர்பார்த்ததைப் போன்றே அவ்வீரர்கள் அவளை மறித்தார்கள். அவர்களிடம் தன்னிடமிருந்த முத்திரை மோதிரத்தைக் காட்ட, “என்ன பனியின் நிமித்தமாக இந்த இரவில் சென்று கொண்டிருக்கிறாய்?” என வினவினான் காவல் தலைவன்.

பதிலுக்கு அவள், “அதை உங்களிடம் தெரிவிக்க எனக்கு உத்தரவு இல்லை” என்றாள் அவள்.

"நான் அனுமதித்தால்தான் உன்னால் இங்கிருந்து செல்லவே இயலும்? தெரியுமா உனக்கு?" என மிரட்டினான் அவன்.

"அரண்மனைக் காவல் தலைவரின் முத்திரை மோதிரத்தைக் காட்டியும் நீ பணியாமல் இருப்பதை நான் திரும்பிச் சென்று மன்னரிடம் தெரிவித்தால் உனது நிலை என்ன ஆகும் தெரியுமா?" எனத் திருப்பிக் கேட்டாள் அவள்.

"என்ன ஆகும்?"

"முத்திரை மோதிரத்தை மதிக்காத உனக்கு ராச துரோக குற்றத்தில் மரணத் தண்டனை வழங்கப்படும். நினைவில் கொள்வது நல்லது" எனப் பிடிகொடுக்காமல் அதே நேரம் தந்திரத்துடனும் கூறினாள் அவள்.

இதற்கு மேல் அவளைத் தடுத்து நிறுத்தினால் ஆபத்து என்பதை உணர்ந்த காவலர் தலைவன் அவளுக்

குப் பணிந்து வழி விட்டான். அவர்களி டமிருந்து தப்பித்ததும் உடனே அவள், 'வழியெங்கும் காவல் வீரர்கள் சூழ்ந்திருப் பார்கள். ஒவ்வொருவர்களிடமும் முத் திரை மோதிரத்தைக் காட்டி விளக்க மளித்துக் கொண்டு இருக்க இயலாது. அதிலும் பெண்ணாகிய நான் தனியா கச் செல்வதனால் துணைக்கு வீரர்களை அனுப்பி வைத்தால் செல்லும் காரி யமே வீணாகிவிடும்' என நினைத்தவள் ராசபாட்டையிலிருந்து விலகி காவிரிக் கரையோரமாகவே சென்ற ஒற்றையடிப் பாதையில் புரவியைத் திருப்பினாள்.

நிலைமையைப் புரிந்து கொண்ட புரவியும் அவளது கட்டளைக்குப் பணிந்து ஒற்றையடிப் பாதையில் பய ணிக்கத் தொடங்கியது. காளன் திட்ட மிட்டு அனுப்பியதைப் போன்றே புரவி அவளைச் சரியான நேரத்திற்கெல்லாம் அழைத்துச் சென்று சேர்த்தது. காளன் குறிப்பிட்ட அடையாளங்களுடன் கூடிய வீட்டிற்கு முன் சென்று நின்ற அப்பு

ரவி சத்தமெழுப்பிக் கனைத்தது. உடனே அவள் புரவியிலிருந்து கீழே குதித்தாள். அதே நேரம் அப்புரவியைப் பார்த்து அவ் வீட்டிற்கு முன்புறம் கொட்டகையில் கட்டப்பட்டிருந்த மற்றொரு வெண்ணிறப் புரவியும் சேர்ந்து கனைத்தது. புரவிகளின் கனைப்புச் சத்தத்தைக் கேட்டு அவ்வீட்டிலிருந்து வெளியே வந்த பெண், அந்தக் கருப்பு நிறப் புரவியைத் தடவிக் கொடுத்தாள். அப்போது ஒரு வாலிபக் காளை ஒருவன் அந்த வீட்டிலிருந்து வெளியே வர, அவனிடம் அப்புரவியைக் கொடுத்துவிட்டு அவள் புரவியில் வந்த பணிப்பெண்ணை அழைத்துக் கொண்டு தனது வீட்டிற்குள் சென்றாள். அந்தக் காளையன் அப்புரவியைக் கொட்டகையில் கட்டி அதற்குத் தீனி போட்டான்.

இரு பெண்களும் உள்ளே சென்றதும் அங்கு ஒரு வயதான பெரியவர் இருவரையும் வரவேற்று அமரவைத்தார். அவரது முகத்தில் காணப்பட்ட சுருக்கம், நரை முடி, சவரம் செய்யாத அவரது

தாடை மயிர் ஆகியவற்றைக் கண்டவள் இவர் அவளது தந்தையாக இருக்கவேண்டும்; வெளியே புரவியை வாங்கிச் சென்றவன் இவளது தமையனாக இருக்க வேண்டும் என நினைத்துக் கொண்டாள்.

காளன் அனுப்பிய பணிப் பெண்ணிடம், "என்ன செய்தி? அவர் வரவில்லையா?" என வினவினாள் அப்பெண்.

"அவர் வரவில்லை. தங்களிடம் இந்த ஓலையை மட்டும் அளிக்கச் சொல்லிக் கட்டளையிட்டிருக்கிறார்" எனக் கூறிக் கொண்டு தனது இடையில் மறைத்து வைத்திருந்த ஓலையை எடுத்து அவளிடம் கொடுத்தாள். அதனை வாங்கிப் படித்தவள் அருகில் எரிந்து கொண்டிருந்த விளக்கினில் காட்ட அந்த ஓலை சுடர் விட்டு எரிந்தது.

"என்ன செய்தி?" என வினவினார் அப்பெரியவர்.

“நம் மூவருக்கும் வேலை தொடங்கிவிட்டது” எனத் தெரிவித்தாள் புன் சிரிப்புடன்.

அந்தப் பணிப்பெண்ணிடம் அவள், “இன்றிரவு நீ இங்கேயே தங்கிக்கொள். அண்ணனிடம் நேரில் அவரைச் சந்திப்பதாகத் தெரிவித்துவிடு!” எனக் கூறவும் அப்பெண்ணின் தமையன் காளையன் உள்ளே வரவும் நேரம் சரியாக இருந்தது.

அவனிடம், “தங்கள் இருவரும் இங்கிருந்துக் கிளம்பி நான் ஏற்கெனவே கூறியிருக்கும் கட்டளைகளை நிறைவேற்றுங்கள். நான் கூறியிருக்கும் இடத்தில் உங்கள் இருவரையும் நடுச் சாமத்தில் சந்திக்கிறேன். புறப்படலாம்!” எனக் கூற அந்தப் பெரியவர், “தாங்கள் மட்டும் தனியாகவா செல்லப் போகிறீர்கள்?” என அச்சத்துடன் வினவினார்.

அப்பெரியவர் அவளை மரியாதையுடன் அழைத்ததைக் கண்டு அப்பணிப் பெண் ஆச்சர்யத்துடனே, ‘இவர்கள் மூவ

ரும் யாராக இருப்பார்கள்?' என எண்ணிக் கொண்டு அவர்களை மாறி மாறி கவனிக்கலானாள்.

அங்குக் காணப்பட்ட சில குறுவாள்களை எடுத்துத் தனது இடையில் மறைத்து வைத்தவள், "என்னைப் பற்றிய கவலை உங்கள் இருவருக்கும் வேண்டாம். என்னைக் காப்பாற்றிக் கொள்ள எனக்குத் தெரியும்" எனக் கூறிக் கொண்டு வெளியே செல்லலானாள்.

அங்குக் கட்டியிருந்த வெண்ணிறப் புரவியில் ஏறி வேகமாக உறைந்தையை நோக்கிக் கிழக்குப் பக்கமாகப் பயணிக்கலானாள். வெளியே வந்த மற்ற மூவரும் அவள் சென்ற திசையையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

**அடிக்குறிப்பு :**

1. இழிந்த கிழத்தி : முனிவர்களுக்குப் பணிவிடை செய்யக் கொடுக்கப்பட்ட அரச, வணிக, வேளாண் குலப்

பெண்களுக்கு இழிந்த கிழத்தி என்று பெயர்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibra

# 5.

# பெருவழியில் மோகினி

பொழுது மேற்கில் சாய்ந்த முதல் சாமத்தின் கடைப் பகுதி அது. கீழை வானிலிருந்து எழுந்த நிலவு தன் வெள்ளிக் கிரணங்களைப் புவி மீது செலுத்த இரவும் பகல் போலப் பளிச்சிட்டது. நிலவின் மோகனக் கதிர்கள் விழுந்ததாலோ என்னவோ வழக்கமாகச் சாலையின் ஓரத்தில் காணப்படும் மரங்கள், செடிகள், கொடிகள், அனைத்தும் புத்துயிர் பெற்று மோகன அழகுடன் விளங்க, அதனையே பார்த்து மனதைப் பறிகொடுத்தபடி புரவியை விரட்டாமல்

அதன் போக்கிற்கு விட்டுக் கொண்டிருந் தான் வேந்தன்.

வைதீகர் கொடுத்த ஓலையில் இருங்கோவேளின் அரச முத்திரையைப் பதித்து எடுத்துக் கொண்டு வஞ்சியை நோக்கிச் சென்று கொண்டிருந்த வேந் தன் தனது இடையில் கையை வைத்து ‘ஓலை பத்திரமாகத்தான் இருக்கிறதா?’ என அவ்வப்போது தொட்டுப்பார்த்து உறுதி செய்து கொண்டான். வழக்கம் போல அவனிடம் ஓலையைக் கொடுத்து ‘வஞ்சியில் சேர்ப்பித்துவிடு’ என வைதீ கர் கட்டளையிட்டிருந்தால் அவன் பாட் டிற்கு எந்த அச்சமும் கொள்ளாமல் செயலை சரியாகச் செய்து முடித்திருப் பான். ஆனால், அந்த ஓலையை அவ னிடம் கொடுப்பதற்கு முன்பு வைதீ கர் கொடுத்த முன்பீடிகைகள் அனைத் தும் வேந்தனின் எச்சரிக்கை உணர்வு களைப் பலவாறு கிளப்பிவிட்டிருந்தது. மனதினில் குடி கொண்டிருந்த எச்ச ரிக்கை உணர்வுகளை அகற்ற தனது

மனதை அக்கம்பக்கத்தில் காணப்பட்ட இரவு நேர வனப்பு மிகுந்த எழில் காட்சிகளைக் கவனித்துக் கொண்டிருந்த வேளையில், திடீரென்று அவனது நாசிகள் இரண்டும் தாழை மலரின் வாசனையை நுகர, 'சுற்றி இருக்கும் நாடுகள் எதிலிலும் மேகம் கருத்து மின்னல் கீற்றுகள் தோன்றாமலிருக்கத் தாழை எப்படி மலர்ந்திருக்கும்?' என மனதினில் எண்ணியபடியே சுற்றிலும் பார்த்துக் கொண்டு சென்றபோது சண்பகம் மலரின் வாசனையும் சேர்ந்து எழுந்து அவனது மனதைக் கிறங்கடிக்கத் தொடங்கியது. அதனோடு ஞாழல் மலரின் வாசனையும் சேர்ந்து வீசுவதை அவனால் உணர முடிந்தது.

நிலவின் குளிர்ந்த ஒளி, தாழை மற்றும் சண்பகம் மலரின் சுகந்த நறுமணங்கள் அனைத்தும் சேர்ந்து அவனது பயணத்தை உற்சாகப்படுத்தவே, கிளர்ச்சியடைந்த மனதுடன் சென்று கொண்டிருந்தான் வேந்தன். அப்போது அவ

னுக்கு முன்னால் ஒரு பெண் சற்றுத் தொலைவில் நடந்து செல்வதைப் பார்த் தவன் அக்கணம் தனது புரவியின் கடி வாளத்தைப் பிடித்து இழுத்து நிறுத்தி விட்டான். அந்தச் சாலையில் எழுந்தி ருக்கும் வாசனை அப்பெண்ணின் கூந் தலில் சூடியிருக்கும் மலர்களில் இருந் துதான் வெளிப்படுகிறது என்பதைப் புரிந்து கொண்டவன், 'இந்த இரண்டாம் சாமத்தின் தொடக்கத்தில் ஆள் அரவம் இல்லாத இந்த ராசபாட்டையில் தனி யாக நடந்து செல்கிறாள் என்றால் அவ ளுக்கு எவ்வளவு துணிச்சல் இருக்கும்?' என எண்ணியவன் அவளது துணிச் சலைக் கண்டு வியக்கவே செய்தான். அவள் அணிந்திருந்த சேலை முனைப்பு, அவளது நீண்ட கூந்தல் ஆகியவை காற் றில் பறந்தபடி இருப்பதைக் கண்டவன், "அவள் பெண் தானா அல்லது இரவில் உலாவும் மாய மோகினியா?" என்று தன் னைத்தானே கேட்டுக் கொள்ளவும் செய் தான்.

https://telegram.me/aedahamlibra

நெடுநேரம் அவளுக்கும் அவனுக்கும் சீரான இடைவெளி இருக்கும்படி பயணித்தான். பிறகு, ‘அவள் யாராக இருந்தால் என்ன? இந்த மோகன இரவில் தான் மட்டும் தனிமையில் பயணிக்கிறேனே என வருத்தப்பட்டேன். பேச்சுத்துணைக்காவது ஆள் கிடைத்திருக்கிறதே?’ என எண்ணியவன் தனது புரவியின் கடிவாளத்தின் பிடியை தளர்த்தியவுடன் அவனது புரவி அப்பெண்ணை நோக்கி வேகமாக முன்னோக்கிச் சென்றது. அவளுக்கு அருகில் சென்றதும் புரவியின் வேகத்தைக் குறைத்தவன் புரவியிலிருந்து குதித்தான். திடீரென்று தனக்குப் பின்னால் யாரோ புரவியிலிருந்து குதிக்கும் சத்தத்தைக் கேட்ட அப்பெண்ணும் அச்சத்துடன் அக்கணம் திரும்பிப் பார்த்தாள்.

அவளது முகத்தில் ஓரிரு வியர்வைத் துளிகள் நிலவொளியினால் முத்துத் துளிகளாய் மின்னியதைக் கண்ட வேந்தன், ‘அவளும் அச்சத்துடன் தான்

பயணித்துக் கொண்டிருக்கிறாள்' என்பதைக் கண நேரப் பொழுதில் அறிந்து கொண்டான். உடனே, "அச்சம் வேண்டாம் பெண்ணே!" எனக் கூறவும் செய்தான்.

பதிலுக்கு, "யார் இப்போது அச்சப்பட்டது?" என வினவினாள் அப்பெண்.

"நீ தான்?"

"நானா?"

"ஆம்! அச்சத்தில் உன் முகம் வியர்த்திருக்கிறதே?"

"தனக்கு முன்னால் செல்வது பெண்ணா அல்லது மோகினிப் பிசாசா என எண்ணிக் கொண்டே அச்சத்துடன் வந்தது நீங்களா அல்லது நானா?" என அப்பெண் பதிலுக்கு வினவ ஆச்சர்யப் பட்டுப் போனான் வேந்தன்.

'மோகினியாக இருப்பாளோ என எண்ணி அமைதியாகப் பின்தொடர்ந்து

வந்ததை இவள் நெடு நேரத்திற்கு முன்பே தன்னைக் கவனித்திருக்கிறாள்’ என்பதைப் புரிந்து கொண்டான். இவ ளிடம் சற்று எச்சரிக்கையாகவே இருக்க வேண்டும் என எண்ணிய வேளையில் அப்போது அவள் திரும்பி அவனிடம் பேசவும் நிலவின் வெண்கதிர்கள் நேர டியாக அவளது முகத்தில் விழ அவளது பரிபூரண அழகினைக் கண்டு பேச்சு வராமல் அப்படியே திகைத்து நின்றான் வேந்தன்.

அவனது திகைப்பினைக் கண்ட வள், “என்ன எனக்குப் பின்னால் மோகி னிப் பிசாசு ஏதாவது உங்கள் பார்வைக் குப் புலப்படுகிறதா? அதிர்ச்சியடைந்து நிற்கிறீர்கள்?” எனச் சிரித்தபடியே வின வினாள் அப்பெண்.

அவளது ஆடை மற்றும் அவளது நெற்றியிலும், கன்னத்திலும் வைக்கப்பட் டிருந்த கருமை நிறப் பொட்டு, அவள் அணிந்திருந்த மாலைகள் ஆகியவை

அவள் மலை கிராமத்தவள் என்பதை அவனுக்கு உணர்த்தியது. அதுமட்டுமல்லாமல் அவள் தனது கூந்தலில் வாசம் மிகுந்த சண்பகம் மலரைச் சூடியதும் அல்லாமல், தாழை மடலைத் தனது கூந்தலுடன் சேர்த்துப் பின்னியிருந்ததையும் கவனிக்கவே செய்தான். அவளது புற எழில்களைக் கண்டு கொண்டிருந்தால் அப்போதும் அவளது கேள்விக்குப் பதிலலிக்காமலே நின்று கொண்டிருந்தான். தன்னைக் கண்டதில் அவனது சித்தம் கலங்கிவிட்டதைக் கண்டவள், 'சரி, அவனே விருப்பப்படும்போது சுய நினைவுக்கு வரட்டும்' என எண்ணிய அந்த மலை நாட்டு வஞ்சிக்கொடி அவனது விழிகளைப் பார்த்தபடியே அமைதியுடன் நின்று கொண்டிருந்தாள்.

சிறிது நேரம் கண் இமைக்காமல் அவளையே பார்த்துக் கொண்டு நின்றவன் பிறகு, "என்ன வினவினாய்? சரியாகக் கேட்கவில்லை" என்றான் புன்னகைத்தபடி.

"என்னைப் பார்த்ததிலிருந்து திகைப்படைந்து நிற்கிறீர்களே? எனக்குப் பின்னால் மோகினிப் பிசாசு ஏதாவது தெரிகிறதா? என்று வினவினேன்."

"இல்லை... இல்லை... உனக்குப் பின்னால் எந்த மோகினியும் இல்லை. ஆனால், அழகே உருவான மோகினி ஒருத்தி எனக்கு முன் நிற்பதைப் பார்த்துத்தான் வாயடைத்து நின்றுவிட்டேன்."

"மோகினியா?"

"ஆம்."

"எந்த மோகினியைக் குறிப்பிடுகிறீர்கள்?" எனச் சிரித்தபடியே வினவினாள் அப்பெண்.

"எனக்கு முன்னால் நிற்கும் உன்னைப் பார்த்துத்தான்!"

"ஓ! ஆதலால் தான் நெடு நேரமாக என்னைப் பார்த்து அச்சப்பட்டப

https://telegram.me/aedahamlibra

டியே என்னைப் பின்தொடர்ந்து வந்து கொண்டு இருக்கிறீர்களா?”

“யார் அச்சப்பட்டது?”

“தாங்கள்தான்!”

“நானா?”

“ஆம்! நெடுந்தூரமாகத் தாங்கள் என்னைப் பின்தொடர்ந்தபடி சற்று இடைவெளியுடன் பயணித்ததைக் கவனித்துக் கொண்டுதான் நடந்து கொண்டிருந்தேன்.”

புரவியின் கடிவாளத்தைப் பிடித்து இழுத்துக் கொண்டு நடந்தபடியே, “இந்த இரவில் நீ மட்டும் தனியாக எங்குச் சென்று கொண்டு இருக்கிறாய்?” என வினவினான் வேந்தன்.

அவளும் அவனுடன் நடந்தபடியே”வஞ்சிக்கு!” எனப் பதிலளித்தாள்.

“வஞ்சிக்கா?”

“ஆம்!”

“இந்த இரவில் செல்ல வேண்டிய அவசியம் என்ன? அதுவும் தனியாக!”

“என் தந்தையும், தமையனும் சத்திரத்தில் தங்கியிருக்கிறார்கள். நான் அவர்களுடன் சேர்ந்து இரவில் தங்கி நாளை வஞ்சியை நோக்கிப் பயணிக்கத் தொடங்கலாம் என்று இருக்கிறேன். இன்னும் ஒரு ஓரைப் பொழுது நடக்க வேண்டும்.”

“அச்சமாக இல்லையா?”

“எதற்கு அச்சம்?”

“பெண் நீ, அதுவும் தனியாகச் செல்கிறாய்!”

“சேர நாட்டுக் காவல் வீரர்களும், சோழ நாட்டுக் காவல் வீரர்களும் இந்தச் சாலையில் காவலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது எனக்கு என்ன பயம். உறைந்தை மன்னர் இருங்கோ வேளும், சேர மன்னர் பெருஞ்சேரலாதனும் மாறு வேடத்தில் காவல் இருக்க

ஆரம்பித்ததில் இருந்து கள்வர்கள் அச்சமே மறைந்து விட்டது! புகாரில் தான் கள்வர்களின் எண்ணிக்கை அதிகமாகி விட்டதாம்! நான்கூட ஒருமுறை சம்பாதி வனத்தில் கள்வர்களால் தடுக்கபட்டிருக்கிறேன். ஆனால், அந்த அச்சம் இங்குக் கிடையாது! என்னைக் கேட்டது இருக்கட்டும், தாங்கள் இந்த இரவில் தனியாக எங்குச் சென்று கொண்டு இருக்கிறீர்கள்?” எனப் பதிலுக்கு வினவினாள் அப்பெண்.

“நான் நாடோடி வணிகன். இப்படித்தான் தனியாகப் பயணித்துக் கொண்டிருப்பேன்” என்றான் வேந்தன். வைதீகரின் கட்டளைப்படி வீரன் என்பதற்கு எந்தவொரு அடையாளமும் இல்லாமல் மாறு வேடத்தில் நாடோடியாகச் சென்று கொண்டிருந்தான். அவள் அமைதியாக நடக்க, “புகார் கள்வர்களிடமிருந்து எப்படித் தப்பித்தாய்?” என ஆவலுடன் வினவினான்.

"நிச்சயம் தெரிந்துதான் ஆக வேண்டுமா?"

"ம்ம்ம்!"

"பதில் கிடைத்ததும் அச்சத்தில் உங்கள் புரவியை விரட்டிக் கொண்டு ஓடிவிட மாட்டீர்களே?"

அவள் கூறியதைக் கேட்ட வேந் தன் சிரித்தபடி, "அச்சமா? இதுவரை அந்த உணர்வை நான் அனுபவித்ததே இல்லை. நீ தயக்கமின்றிக் கூறலாம்!" என்றான்.

அவள் இடையில் மறைத்துவைத் திருந்த குறுவாள் ஒன்றை வெளியே எடுத்தவள், "இதே போன்றதொரு குறு வாளால் என்னை இடைமறித்த கள் வனைக் கொன்று அங்கிருந்து தப்பித் தேன்!" என்றாள். அந்தக் குறுவாளின் கூர்மையான முனைகள் அந்த நிலவொ ளியிலும் பளபளக்கவே செய்தது. ஆச்சர் யத்துடன் அவளது கண்களையும், அந்

தக் குறுவாளையும் மாறி மாறி பார்த் தான் வேந்தன். அவளது கண்களையும், அவள் அந்தக் குறுவாளைப் பிடித்திருந்த முறையிலும் அவள் உண்மையைத்தான் கூறுகிறான் என அறிந்து கொண்டான்.

எந்தப் பதிலையும் கூறாமல் அமை தியாக நடந்து கொண்டிருந்த வேந்தனி டம், "தாங்களும் வஞ்சிக்குத்தான் செல் கிறீர்களா?" எனத் தனது குறுவாளை மடி யினில் மறைத்தபடியே வினவினாள்.

"ஆம்!"

"தனிமையில் கவலையுடன் சென்று கொண்டிருந்தேன். இப்போது எனக்குப் பேச்சுத் துணைக்கு நீங்கள் கிடைத்தது பெரும் மகிழ்ச்சி!"

"உன் பெயர் என்ன?" ஆவலுடன் வினவினான் வேந்தன்.

"என் பெயரா?"

"ஆம்!"

https://telegram.me/aedahamlibra

“எதற்குக் கேட்கிறீர்கள்? முன்பின் தெரியாத பெண்ணிடம் பெயரைக் கேட்பது அநாகரிகம் என்பதைத் தாங்கள் அறிய மாட்டீர்களா?”

“இன்னும் ஒரு ஓரைப் பொழுதிற்கு மேல் நாம் இருவரும் ஒன்றாகப் பயணிக்கப் போகிறோம். பெயரை அறிந்து கொண்டால் அழைப்பதற்கு வசதியாக இருக்குமே!”

“என் பெயர் எதற்கு? தாங்கள் என்னைத் தங்கை என்றே அழைக்கலாம். நான் வருத்தப்பட மாட்டேன்!”

“ஆனால் நான் வருத்தப்படுவேனே! இப்படி அழகே உருவான ஒருத்தியை யார்தான் தங்கையாக நினைப்பார்கள்? எனக்குப் பொய் சொல்லத் தெரியாது!”

வேந்தன் கூறிய பதிலைக் கேட்டு சிரித்தவள், “சரி, நீங்களே ஒரு பெயரை எனக்குச் சூட்டுங்களேன்!” என அவனது

விழிகளில் தனது பார்வையை நிலைக்க விட்டுக் கொண்டு கூறினாள்.

அவளது மோகன விழிகளைப் பார்த்த வேந்தன் அவற்றிலிருந்து தனது பார்வையை விலக்க விரும்பாதவனாய், “உனக்கு இந்த நாளில் தாழம்பூ எங்கிருந்து கிடைத்தது என்று கூறு? உனக்கு நான் பெயர் சூட்டுகிறேன்!” என்றான்.

“தாழை, வனத்தில்தான் கிடைக்கும்! எதற்கு வினவுகிறீர்கள்?”

“எனக்குத் தெரிந்தவரை கடந்த ஒரு திங்களுக்கு மேலாக வானில் கார் முகில்கள் சூழவே இல்லை. அப்படியிருக்க உனக்குத் தாழை மலர் எப்படிக் கிடைத்திருக்கும் என்றுதான் வியக்கிறேன் நான்.”

“இதில் வியப்பதற்கு என்ன இருக்கிறது?”

https://telegram.me/aedahamlibra

"வானில் மின்னல் தோன்றாத போது உனக்கு மட்டும் தாழை எப்படி மலர்ந்திருக்கும்?"

"வானில் மின்னல் தோன்றுவதற்கும் தாழை மலர்வதற்கும் என்ன தொடர்பு?"

"மின்னல் தோன்றினால் தானே தாழை மலரும்!"

"அப்படியா?"

"ஆம்!"

"இந்தச் செய்தி எனக்கு இத்தனை ஆண்டுகளாகத் தெரியாதே!"

"உண்மையாலுமா?"

"ஆம்."

"முகில்கள் சூழ்ந்து மின்னல் கீற்றுகள் தோன்றாத போது தாழை எப்படி மலர்ந்திருக்கும்?" பதிலுக்கு ஆச்சர்யத்துடன் வினவினாள் அப்பெண்.

https://telegram.me/aedahamlibra

"நான் கூறவா?"

"கூறுங்கள்!"

"உன் விழிகளைப் பார்த்துத்தான் உன் கூந்தலில் சூடியிருக்கும் தாழை மலர்ந்திருக்கும் என்று கருதுகிறேன் நான்!"

"என் விழிகளைப் பார்த்தா?" ஆச் சர்யத்துடன் வினவினாள் அவள்.

"ஆம்!"

"சற்று முன் மின்னலைப் பார்த்துத் தானே தாழை மலரும் என்றீர்கள்?"

"ஆம், அப்படித்தான் கூறினேன்."

"இப்போது எனது விழிகளைப் பார்த்து மலர்ந்திருக்கும் என்கிறீர்கள்?"

"ஆம். மின்னல் தோன்றாதபோது உன் விழிகளைக் கண்டுதான் இந்தத் தாழை மலர்ந்திருக்க வேண்டும். வேறு வாய்ப்பிருக்க வழியில்லை."

https://telegram.me/aedahamlibra

"குழப்பாதீர்கள் என்னை?"

"பெண்ணே, உன் முகத்தில் விட்டு விட்டு சிமிட்டும் உன் விழிகள் இரண்டும் கார் முகில்களுக்கிடையில் தோன்றும் மின்னலைப் போன்று எதிரில் நிற்பவர்களின் மனதினை வெட்டிப் பளிச்சிடுகிறது. ஆதலால் தான் அப்படிக் கூறினேன்."

அவன் கூறியதைக் கேட்டதும் அவள் அக்கணம் நாணம் கொண்டு தரையைப் பார்த்துக் கொண்டாள். பிறகு மெல்ல தலையை உயர்த்தியவள் அவனது விழிகளைப் பார்த்தபடியே தனது கண்களைச் சிமிட்டினாள். அதைக்கண்ட வேந்தன், "உன் விழிப் பார்வைகள் இரண்டும் பட்டுத்தான் நிச்சயம் இந்தத் தாழை மலர்ந்திருக்கும். உன் பார்வையைத் தான் மின்னல் கீற்று என்கிறேன்!" என அவன் கூறியதும் அவள் மேலும் நாணம் கொண்டு சிரிக்கச் செய்தாள்.

அவளது சிரிப்பினைக் கண்ட வேந்தன் மேலும் உற்சாகங்கொண்டு, "வாதாஜ்ஜாதொ அந்தரிக்ஸாத் வித் யுதொ ஜ்யொதிஸஸ்பரி ஸ நொ ஹிரண் யயா கங்ஹஹ் கிர்ஷனாஹ் பாத்வம்ஹ ஸஹ்" எனத் தெரிவித்தான்.

அவன் கூறியதைக் கேட்டதும் அப் பெண் அவனை மிரட்சியோடு கவனித் தாள். அவளது முகத்தில் திடீரென்று கவ லைக் குறி தோன்றிவிட்டதைக் கவனித்த வேந்தன், "பெண்ணே, நான் மந்திரம் உச்சரிக்கிறேன் என்று பயந்துவிடாதே. இது மந்திரம் அல்ல!" எனக் கூறி அவளது அச்சத்தை முளையிலேயே கிள்ளி எறிய முயன்றான்.

"அப்படியெனில், எதற்காக என் னைப் பார்த்து அந்த மந்திரச் சுலோ கத்தை உதிர்த்தீர்கள்? வசியம் ஏதேனும் செய்ய உத்தேசமா?" என அச்சத்துடனே வினவினாள்.

"இது மந்திரச் சுலோகம் அல்ல!"

https://telegram.me/aedahamlibra

"மந்திரம் இல்லையா?"

"பிறகு வசிய மந்திரமா?"

"அதுவும் இல்லை."

"பிறகு எதற்கு என்னைப் பார்த்து எதையோ கூறினீர்கள்?"

"உன் விழிகள் இரண்டும் மின் வெட்டுகளாய் ஒளிர்கிறது என்று நான் கூறியதும் நீ நாணம் கொண்டு சிரித் தாய். உன் சிரிப்பைக் கண்டதும் எனக்கு முத்தின் ஞாபகம் வந்துவிட்டது. முத்துக் களோடு மேற்கூறிய அந்தச் சுலோகங்க ளும் நினைவில் தோன்றிவிட்டது."

"என்ன சுலோகம் அது?"

"அது வைதீகர்களின் வேதத்தில் வரும் ஒரு பகுதி."

"உங்களுக்கு வடமொழி தெரி யுமா?"

"அய்யய்யோ! எனக்கு அதெல் லாம் தெரியாது. எனக்கு வைதீகர் ஒரு

வரை நன்கு தெரியும். அவர் வீட்டிற் குச் செல்லும்போது வேதங்களை ஓதிக் கொண்டே இருப்பார். சில சுலோகங்கள் என் மனதினில் பதிந்துவிட்டன. அப்படிப் பதிந்த அந்த வேத வரிகளுக்கு மட்டும் அர்த்தம் என்ன என்று கேட்டு வைத்துக் கொண்டுள்ளேன்.”

“சரி, மேற்கூறிய அந்தச் சுலோகத் திற்கு என்ன அர்த்தம்?”

“‘காற்று மண்டலத்தில் முகில் கூட் டத்திலிருந்து உருவாகும் மின்னல் கீற்றி னால் கடலில் முத்துக்கள் பிறக்கின்றன’ என்பதுதான் அதன் அர்த்தம்.”

“அதற்கும் என் சிரிப்பிற்கும் என்ன தொடர்பு?”

“நீ சிரிக்கும்போது உன் பற்கள் அனைத்தும் கடலில் தோன்றும் முத்துக் களைப் போன்று இந்த இரவிலும் ஒளிர் கிறது. ஆதலால் தான் அந்த வரியைக் கூறினேன்.”

“ஒரு பெயர் வையுங்கள் என்று தானே சொன்னேன். அதற்கு எதற்கு இத்தனை உருவகங்கள்? இத்தனை பாடல்கள்?”

“பெயர் வைக்கத்தான் இத்தனை பாடு!”

“ஆனால், பெயர் வைத்த பாடில் லையே?”

“பெயர் சூட்டிவிட்டேன்.”

“என்ன பெயர்?” ஆவலுடன் வின வினாள் அவள்.

“உன் கூந்தலில் சூடியிருக்கும் தாழை, விட்டு விட்டு வெட்டும் இரண்டு விழிகள், மந்தகாசப் புன்னகையை உதிர்க்கும் உன் முத்துப் பற்கள் அனைத் தும் எதை எனக்கு நினைவுபடுத்தியிருக் கிறதோ, அதுதான் நான் உனக்கு வைத் திருக்கும் காரணப் பெயர்!”

https://telegram.me/aedahamlibra

ஆச்சர்யத்துடன் அவனையே பார்த்தபடி, எந்தப் பதிலையும் கூறாமல் நடந்து கொண்டிருந்தாள் அப்பெண்.

“மின்னல்.”

அவன் கூறியதைக் கேட்டதும் அப் பெண், சிரித்தபடியே, “சில காலத்திற்கு முன்பு படைத்தலைவர் ஒருவர் எனது விழிகளைப் பார்த்து காந்தள் விழியாள் என்றார். தாங்கள் மின்னல் கீற்றுடன் ஒப் பிடுகிறீர்கள். இனி புலவர்களின் கதி அதோகதிதான்?” என்றாள்.

திடீரென்று அவள் சம்பந்தமில்லா மல் கூறியதும் சிறிது சலிப்புடனே வேந் தன், “இப்போது எதற்காக நீ புலவர் களை இங்கு அழைக்கிறாய்?” என வின வினான்.

“பாவம் அவர்கள். அவர்களே தங் களின் வறுமையைப் போக்குவதற்கு அர சர்களையும், வேளிர்களையும் புகழ்ந்து பாடி காலத்தைக் கழித்துக் கொண்டி

https://telegram.me/aedahamlibra

ருக்கிறார்கள். அவர்களுக்குப் போட்டியாக ஒற்றறியும் வீரர்களும் கற்பனைத் திறனை அவிழ்த்துக் கவி பாடத் தொடங்கிவிட்டால் அவர்களின் நிலை என்னாவது? என எண்ணினேன். ஆதலால்தான், அவர்களின் பாடு இனி அதோகதி என்றேன்" எனப் பதிலளித்தாள் அவள்.

அவள் கூறியதைக் கேட்டதும் வேந்தன் பதறிவிட்டான்."நான் உன்னைக் கண்டு கற்பனையில் வர்ணித்தது இருக்கட்டும். ஒற்றறியும் வீரர்களும் கவி பாடத் தொடங்கிவிட்டால் புலவர்களின் நிலை அதோகதி என்கிறாயே? எந்த வீரரை நீ குறிப்பிடுகிறாய்?" எனச் சற்று சத்தத்துடன் கேட்டான் அவன்.

"தங்களைத்தான்!" சட்டெனப் பதில் வந்தது அவளிடமிருந்து.

"நான் வீரனா?"

"ஆம்!"

"பிதற்றாதே பெண்ணே?"

https://telegram.me/aedahamlibra

“நான் பிதற்றவில்லை வீரரே, தாங்கள்தான் பொய் கூறுகிறீர்கள்?”

“நான் எந்தப் பொய்யையும் கூறவில்லை. உன்னிடம் பொய் கூற வேண்டிய அவசியமும் எனக்கு இல்லை.”

“வீரரே, என்னிடம் கோபம் வேண்டாம். தனிமையில் பயணிக்கும் கன்னியாகிய நான் இவ்வளவு நேரம் தங்களைத் துணையாகக் கொண்டு நடந்து வந்து கொண்டிருக்கிறேன் என்றால் உங்களின் மாறுவேடத்திற்குள் ஒளிந்திருக்கும் வீரனது துணையைக் கொண்டுதான். எனக்குத் தெரியும், தென்னக வீரர்கள் ஒரு நாளும் முறை கேடாக நடக்க முயல மாட்டார்கள் என்று. நீங்கள் மாறுவேடத்தில் இந்த ராச பாட்டையைக் காவல் காப்பவர் என்பதை இனியும் என்னிடம் மறைக்க வேண்டாம்” துணிச்சலுடன் கூறினாள் அப்பெண்.

அவள் படபடவென்று கூறியதைக் கேட்டதும் வேந்தன் அக்கணத்தில் தடு

https://telegram.me/aedahamlibra

மாறவே செய்தான். அதையும் அப்பெண் கவனிக்கத் தவறவில்லை. ‘உறைந் தைக்கு அருகில் காவல் இருந்த மலை நாட்டுக் காவலர்களால் கூட அடையா ளம் காண இயலாத என்னை இப் பெண் எப்படிக் கண்டுபிடித்தாள்?’ என்று எண்ணியவன் அப்பெண்ணை எச்சரிக் கையுடன் பார்க்கலானான்.”நீ என்னைத் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறாய். நான் வீரன் என்று நீ எண்ணினால் ஏமா றப்போவது நீதான்!” அப்பொழுதும் பிடி வாதத்துடன் மறுத்தான் வேந்தன்.

அப்பெண் எந்தப் பதிலையும் கூறா மல் நடையில் சற்று வேகத்தைக் கூட்டி னாள்.

அவளது திடீர் வேகத்தைக் கண்ட வேந்தனும் சற்று வேகமாக நடந்து அவ ளுக்கு இணையாகச் சென்றவன், “நான் வீரன் என்று உனக்கு எப்படித் தெரியும்? நீ யார்? இப்போது உண்மையைக் கூறப்

போகிறாயா? இல்லையா?" என்று அதிகாரத்துடன் கேட்டான்.

"வீரரே, உங்கள் அதிகாரம் என்னிடம் செல்லுபடியாகாது" என்றவள் அவனை ஒரு பொருட்டாக நினைக்காமல் நடந்து கொண்டே இருந்தாள்.

சிறிது நேரம் அவள் பின்னாலே மௌனமாகச் சென்றவன், "சரி. நான் ஒத்துக்கொள்கிறேன். நான் வீரன் என்று உனக்கு எப்படித் தெரியும்?" ஆச்சர்யத்துடன் வினவினான் அவன்.

உண்மையை வேந்தன் ஒப்புக் கொண்டதும் அவளும் அவனிடம் முரண்டு பிடிக்காமல், "உங்கள் உருவத்தை மாற்றினீர்கள். உங்கள் புரவியை உங்களால் மறைக்க இயலவில்லையே வீரரே?" சிரித்தபடி வினவினாள் அவள்.

"புரவியை வைத்தா என்னைக் கண்டறிந்தாய்?"

"ஆம்!"

https://telegram.me/aedahamlibra

"பயணிகள் அனைவரும் பெரும்பாலும் புரவியைத் தானே பயன்படுத்துவார்கள்? அப்படியிருக்க நீ எப்படி என்னை அடையாளம் கண்டு கொண்டாய்?"

"உங்கள் கைவசம் இருக்கும் புரவி உயர் சாதிப் புரவி. பெரும் வீரர்கள், அரசர்கள், படைத்தலைவர்கள் மட்டுமே இதனைப் பயன்படுத்துவார்கள். உங்கள் புரவியின் கடிவாளத்தில் உங்களின் இரண்டு குறுவாள்கள் நிலவொளியில் மின்னுகின்றன. அது தான் முதலில் என் கண்களில் பட்டது. அதன்பிறகே எனக்குச் சந்தேகமும் வலுத்தது" எனக் கூறிக் கொண்டே அந்த இரண்டு குறுவாள்களையும் சுட்டிக் காட்டினாள். பிறகு, "உங்கள் தோற்றம், புரவியிலிருந்து லாவகமாகக் குதித்த முறை, உங்கள் கைகளின் பலம், அதோ உங்கள் உடைமைப் பொருள்களோடு நீங்கள் மறைத்து வைத்திருக்கும் உங்களது போர் வாள் இவைகளே உங்களை எனக்கு அடை

யாளம் காட்டிவிட்டது" எனச் சிரித்தப டியே கூறினாள் அவள்.

அவளது நுண்ணறிவைக் கண்ட வேந்தன் பெரிதும் வியக்கவே செய் தான்."நீ கூறுவது அனைத்தும் உண் மையே! உன் விழிகள் அழகு என்றுதான் நினைத்தேன். ஆனால், உன் பார்வையும் கூர்மையாகத்தான் இருக்கிறது!" எனப் பாராட்டவும் செய்தான்.

"நீங்கள் யார்?"

"நான் உறைந்தையின் காவல் வீரன்!"

"வீரரே, மீண்டும் பொய் சொல்ல வேண்டாமே. நீங்கள் கூறும் ஒவ்வொரு சொல்லைப் பற்றியும் உங்களது விழிகள் எனக்குத் தெரிவித்துவிடும். உங்களைப் பொய் சொல்ல வைத்த பாவம் எனக்கு வேண்டாம். நீங்கள் யார் என்று அறிந்து கொண்டும் நான் எதையும் சாதித்துவி டப் போவதில்லை. இன்னும் அரை நாழி

கைப் பொழுதுப் பயணம் தான். சத்திரம் வந்துவிடும். அதுவரை தாங்கள் எனக்குத் துணையாக வந்தாலே போதும்" எனக் கூறி நடப்பதிலேயே கண்ணும் கருத்துமாக வேக வேகமாக நடந்தாள் அவள்.

அவளிடம், சிறிது நேரம் மௌனம் சாதித்த வேந்தன், "நான் உறைந்தை மன்னர் இருங்கோவின் ஊழியன். ஒற்றர் படையைக் கண்காணிப்பது என் பொறுப்பு!" பெருமையாகக் கூறினான்.

"ஓ! ஒற்றர் படைத் தலைவரா?"

பெருமிதத்துடன், "ஆம்!" என்றான் வேந்தன்.

"சோழ நாட்டை முழுவதும் கைப்பற்றப் போகும் மன்னர் இருங்கோவேளின் அந்தரங்க ஊழியரா தாங்கள்?"

"ஆம்!"

https://telegram.me/aedahamlibra

“தங்களைச் சந்தித்தது என்றோ நான் செய்த புண்ணியம்!” மகிழ்ச்சியுடன் தெரிவித்தாள் அவள்.

“இப்போது கூட அரசரின் கட்டளையின்படியே வஞ்சியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறேன்” தற்பெருமையடைந்தான் வேந்தன்.

“இருக்கட்டும் வீரரே, ராசாங்க நிகழ்வுகள் எனக்கு எதற்கு? நான் இரவில் ஓய்வெடுக்க வேண்டிய சத்திரம் வந்துவிட்டது. எனக்குத் துணையாக வந்த தங்களுக்கு மிக்க நன்றி. சமயம் கிடைக்கும்போது, நன்றி கடனை நிச்சயம் திருப்பிச் செய்வேன்” என்று அவனது விழிகளை ஊடுருவிப் பார்த்தபடி கூறியவள், அந்தச் சத்திரத்தை நோக்கி நடந்தாள். வேந்தன் அவள் செல்வதையே ‘அவள் திரும்பிப் பார்ப்பாளா?’ என்று ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

சிறிது தூரம் சென்றவள் திரும்பி வேந்தனைப் பார்த்து, “நீங்கள் வஞ்சிக்கு

இன்றிரவே செல்ல வேண்டுமா?" என வினவினாள்.

அவளது பார்வைக்குக் காத்திருந் தவன் அவள் திரும்பிப் பேசியதும், அவள் முன் ஓடிச் சென்று, "இல்லை. நாளை காலை சென்றால் போதும்" எனப் பதில ளித்தான்.

"அப்படியெனில், தாங்களும் இன் றிரவு இங்கேயே தங்கி ஓய்வெடுத்து அதி காலை புறப்படலாமே!"எனப் புன்சிரிப்பு டன் அவனை அழைக்கலானாள்.

அவளது சிரிப்பினில் சிக்குண்ட வேந்தன் தனது சிந்திக்கும் சக்தியை முற் றிலும் இழந்து, "சரி... உன் விருப்பம் அது வென்றால் நான் இன்றிரவு இங்கேயே தங்கிச் செல்கிறேன்" எனக் கூறி அவளு டன் சத்திரத்திற்குள் செல்லனானான்.

**அடிக்குறிப்பு :**

1. அதர்வண வேதம் 10: 1

https://telegram.me/aedahamlibra

# 6. பயனற்ற ஓலை

வழிப்போக்கர்களும், பயணிகளும் இரவில் தங்கி ஓய்வெடுக்கும் அறஞ்சாவடிக்குள் இருவரும் நுழைந்ததுமே பணியாளன் ஒருவன் ஓடிவந்து வேந்தனது புரவியை வாங்கிக் கொண்டு கொட்டகையை நோக்கிச் சென்றான். இன்னொருவன் புரவியின் மீது கிடத்தப்பட்டிருந்த வேந்தனது உடைமைகளைத் தூக்கிக் கொண்டு சென்றான். கௌபீனம் ஒன்றையே ஆடையாக உடுத்தியிருந்த திகம்பர அடிகளார் இருவரையும் வரவேற்று வேந்தனிடம் ஒரு அறையைச் சுட்டிக் காட்டி செல்லப் பணித்தார். வேந்தனும் அவர் காட்டிய அறையை நோக்கி நடந்தான்.

அவன் சற்றுத் தொலைவு நடந்ததுமே அறஞ்சாவடித் தலைவர் திகம்

https://telegram.me/aedahamlibra

பர அடிகளாரிடம், “அடிகளாரே, அவன் இருங்கோவேளின் தலைமை ஒற்றன். நன்கு கவனிக்கப்பட வேண்டியவன்!” என்றாள் அவள்.

“நீ...?” என்றபடியே ஆச்சர்யத்தில் வாயைத் திறந்தார் திகம்பர அடிகளார் ஈழவாவிரையர்.

“அடிகளாரே நான்தான். அடையாளம் தெரியவில்லையா?” சிரித்தபடியே வினவினாள்.

“அம்மா, என்ன இது புதுக்கோலம்?”

“ஆமாம் அடிகளாரே! இது எனது புதுக்கோலம் தான். காலத்தின் கட்டாயம்!”

ஈழவாவிரையர் அவளையே ஆச்சர்யத்துடன் பார்க்கலானார்.

https://telegram.me/aedahamlibra

“வேந்தனது அறைக்கு எந்தப் பணிப் பெண்ணையும் அனுப்ப வேண் டாம். நானே செல்கிறேன்.”

“மகளே...?” ஆச்சர்யத்துடன் அப் பெண்ணைப் பார்த்தார் ஈழவாவிரையர்.

“உணர்வுகளை முற்றிலும் ஒதுக்கி விட்ட திகம்பர அடிகளாருக்கு என்னைப் பற்றிய கவலை வேண்டாம்.”

“செங்குவீரன் இறந்துவிட்ட பிறகு புகாரை விட்டு வெளியேறி முழு ஆரு கதத் திகம்பர முனிவனாகிவிட்டேன். இருந்தாலும், உன்னைப் பற்றிய கவலை களை என்னால் எளிதில் புறந்தள்ள இய லவில்லை தாயே!”

“அதைப் பற்றிப் பேசுவதற்கு இது தகுந்த சமயம் அல்ல. அவன் திரும்பி நம் மையே பார்த்துக் கொண்டிருக்கிறான். நான் செல்கிறேன். ஏற்பாடுகள் தயாராக இருக்கட்டும்!” எனச் சிரித்தபடியே கூறிக்

கொண்டு வேந்தனை நோக்கிச் சென்றாள்.

அடிகளார் வேந்தனுக்குரிய அறையைச் சுட்டிக் காட்டியதும் சற்றுத் தூரம் சென்றவன் திரும்பிப்பார்த்தான். அங்கு அவள் ஈழவாவிரையரிடம் சிரித்துப் பேசிக் கொண்டதைப் பார்த்தவன், 'இந்தச் சத்திரத்தின் தலைவரை அவள் நிச்சயம் நன்கு அறிந்து வைத்திருப்பாள்' என எண்ணிக் கொண்டிருந்த போதே அவனிடம் வந்தவள், "தாங்கள் திகம்பரர் குறிப்பிட்ட அறையில் தங்க வேண்டாம். வேறு அறையைத் தங்களுக்கு ஒதுக்கும்படி அவரிடம் பணிந்து பேசியுள்ளேன்" என்றாள்.

"எனக்காக எதற்கு நீ அவரிடம் பரிந்து பேசினாய்?"

"இந்த அறையில் வசதிகள் குறைவு."

"நான் உறைந்ததை வீரன் என்று அவரிடம் கூறிவிட்டாயா?" சற்றுக் கோபத்துடன் வினவினான்.

"சத்தமாகப் பேச வேண்டாம். நீங்கள் வீரர் என்று நான் இதுவரை அவரிடம் கூறவில்லை. நீங்கள் மாறுவேடம் தரித்திருக்கிறீர்கள் என்றால், நிச்சயம் முக்கியமான பணியை முன்னிட்டதாகத்தான் இருக்கும். அதற்குத் தகுந்த காரணம் இருக்கும். அதை நான் எப்படிக் கெடுப்பேன்? அவர் எனக்குப் பழக்கமானவர். நீங்கள் எனக்கு மிகவும் வேண்டப்பட்டவர் என்று கூறி இந்தச் சலுகையை அவரிடம் பெற்றுள்ளேன். வீண் சந்தேகம் வேண்டாம்" என வேந்தன் மட்டும் கேட்கும்படி பொறுமையாகப் பேசினாள்.

அவள் கூறியதைக் கேட்டு திருப்தியடைந்த வேந்தன், "சரி, உன்னை நான் நம்புகிறேன்" என்றான்.

"ம்ம்ம். வீரரே, உங்களுக்கு ஏதாவது காரியம் ஆக வேண்டும் என்றால் என்னி

டம் தெரிவியுங்கள். அவசரப்பட்டு நீங்கள் மறைத்து வைத்திருக்கும் இலைச்சினை மோதிரத்தை யாரிடமும் காட்ட வேண் டாம்.”

“எதற்கு?”

“இங்குச் சோழ ஒற்றர்கள் அதி கம். உங்கள் இலைச்சினை மோதிரத்தை பயன்படுத்தினால் தாங்கள் தலைமை ஒற்றர் என்று மற்றவர்கள் கண்டறிந்துவிட மாட்டார்களா?”

“நானும் இப்போது சோழ நாட்டு வீரன் தானே!”

“நான் குறிப்பிடுவது புகார் ஒற்றர்க ளைப் பற்றி. உறைந்தையைச் சேர்ந்தவர் களை அல்ல.”

“சரி!” என்று கூறிக் கொண்டி ருந்த போதே அங்கு வந்த பணியாளன் ஒருவன் துணியில் எதையோ மறைத் துக் கொண்டுவந்து அப்பெண்மணியிடம் கொடுத்துவிட்டுச் சென்றான்.

https://telegram.me/aedahamlibra

அதை வாங்கியவள் வேந்தனிடம், “உங்கள் உடைமை!” என நீட்டினாள்.

“என்ன இது?”

“உங்களது இரு குறுவாள்கள்!” எனக் கூறியவளாய் அவனது கைகளில் திணிக்க, அதனை வாங்கி அவன் தனது இடைத்துணியில் ஒளித்து வைத்தான்.

“அவன் எனக்கு நன்கு பழக்கமா னவனாக இருப்பதால், உங்களது குறு வாள்கள் இரண்டும் என்னிடம் கொண்டு வரப்பட்டன. இல்லையேல், இந்தக் குறு வாள்கள் இரண்டும் சாவடித் தலை வரிடம் சேர்ப்பிக்கப்பட்டு, உங்களைப் புகார் ஒற்றர்கள் இந்நேரம் சூழ்ந்தி ருப்பார்கள். இப்படியா எச்சரிக்கையின்றி இருப்பீர்கள்? உங்களை நம்பி எப்படித் தான் இப்படிப்பட்ட பெரும் பொறுப்பை மாவீரர் இருங்கோ வேள் அளித்தாரோ? ஆச்சர்யமாக இருக்கிறது!” எனக் கூறி யவள், “நீங்கள் உண்மையாலுமே வீரர் தானா அல்லது நான்தான் உங்களது

திறமையை அளவுக்கதிகமாக மதிப்பிட்டுவிட்டேனா?" எனச் சிரித்துக் கொண்டு அவளது மோகனப் பார்வையை அவனது கண்களில் ஊடுருவி கொண்டு கூறினாள்.

"யாரிடம் என்ன கூறுகிறாய் என்பதைச் சுய சிந்தனையுடன்தான் கூறுகிறாயா?" கோபத்துடன் வினவினான் வேந்தன்.

"வீண் கோபம் வேண்டாம் வீரரே. நாடோடிப் பெண்ணான நான் உங்களது குறுவாட்களைக் கண்டறியும் அளவிற்கு எச்சரிக்கையின்றி மறைத்து வைத்திருந்தீர்கள்! பிறகு, அவற்றை நான் கண்டறிந்து நீங்கள் ஒற்றர் தானே என்று ஒரு முறை வற்புறுத்திக் கேட்டதுமே ஒப்புக் கொண்டீர்கள்! நான் அழைத்ததும் இங்கும் வருகை தந்திருக்கிறீர்கள். இப்போது பணியாளன் ஒருவன் உங்கள் ஆயுதங்களைக் கண்டறியும்படி எச்சரிக்கையின்றி இருக்கிறீர்கள்? இப்படிப்பட்ட ஒருவன்

தான் இருங்கோவின் தலைமை ஒற்றன் என்றும் மன்னரின் அந்தரங்க ஊழியன் என்றும் கூறினால் யாரால் தான் ஏற்றுக் கொள்ள முடியும்?"

"உன்னைப் பார்த்ததும் நான் என் சிந்திக்கும் திறனை இழந்துவிட்டேன் பெண்ணே! ஆதலால்தான்..." என வேந் தன் கூறிக் கொண்டிருந்த போதே இடைமறித்தவள், "ஆமாம். உலகிலிருக் கும் ஆடவர்கள் அனைவரும் தாங்கள் செய்யும் குற்றங்கள் அனைத்திற்கும் எங் களைப் போன்ற கன்னிகள்தான் கார ணம் என்று மட்டும் கூறிவிடுங்கள்!" எனச் சலித்துக் கொண்டே கூறினாள்.

வேந்தன் சிரித்தபடி ஓரடி முன் வைத்து, "அது உண்மைதானே!" எனவும் கூறலானான்.

"நாளை நீங்கள் செல்வதற்கு முன் நாங்கள் இங்கிருந்து வஞ்சி மாநகரத்திற் குக் கிளம்பி விடுவோம். அதற்கு முன் என் தந்தையை நீங்கள் சந்தித்துவிட்டுச்

சென்றால் எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும்" எனக் கூறியவள் வேந்தனை அழைத்துக் கொண்டு அங்கிருந்த ஒரு அறையின் கதவினைத் தட்டினாள். அந் தக் கதவு திறந்ததும் அந்த அறையி லிருந்து முதலில் வெளிவந்த பெரியவ ரைத் தன் தந்தை என்றும் அடுத்து வந்த காளையனை தன் தமையன் என்றும் வேந்தனுக்கு அறிமுகப்படுத்தினாள்.

"நாளை நாம் வஞ்சி மாநகரில் சந்திக்க நேர்ந்தாலும் நேரலாம். ஆத லால் தான் என் தந்தை மற்றும் தமை யனை உங்களுக்கு அறிமுகப் படுத்துகி றேன். அவர்களின் உதவி உங்களுக்குத் தேவை என்றால் தயங்காமல் கேளுங் கள்"என வேந்தனிடம் கூறியவள் தன் தந்தையிடம், "அப்பா, இந்த நடுச் சாம இரவில் என்னை இங்குப் பாதுகாப்பாக அழைத்து வந்தவர் இவர்தான்!" என வேந்தனையும் அவர்கள் இருவருக்கும் அறிமுகப்படுத்தினாள்.

அவர்கள் இருவரும் வேந்தனுக்கு நன்றியைக் கூறிக் கொண்டார்கள்.

அங்கு நின்ற அப்பெண்ணின் தமையனைக் கண்ட வேந்தன் அவனிடம், "உனது முகத்தில் அடர்ந்து வளர்ந்திருக்கும் உனது தாடை முடிகள் சிங்கத்தின் பிடரியைப் போன்று கம்பீரமாக இருக்கிறது!" என்றான்.

"என் தங்கை மற்றும் என் தந்தை இருவரும் நான் எப்போது வாளினை சுழற்றி பயிற்சி மேற் கொண்டாலும் தங்களைப் போன்றே 'என் தாடை முடிகளைச் சிங்கத்தின் பிடரியைப் போன்று இருக்கிறது' எனக் கூறுவார்கள்!" எனச் சிரித்தபடியே கூறினான் அந்தக் காளையன்.

"உங்களுக்கு வாள் வீசவும் தெரியுமா?" ஆச்சர்யத்துடன் வினவினான் வேந்தன்.

"வாள் வீசுவதில் திறமைசாலி என்று கூற இயலாது. ஆனால், தற்காப்

பிற்காகச் சிறிதளவு பயின்று வைத்திருக் கிறேன். வயதான தந்தை மற்றும் வயது பெண் இருவரையும் ஆபத்துக் காலத் தில் காக்க வேண்டியது என் கடமையல் லவா?"

"ஆமாம்... ஆமாம்... அது உங்கள் கடமை. நாட்டில் கள்வர்கள் அதிகரித் துவிட்டார்கள். நான் உறங்கச் செல்கி றேன். முடிந்தால் நாளை வஞ்சியில் சந் திப்போம்" எனக் கூறிக் கொண்டு அங் கிருந்து வேந்தன் நகர, "அப்பா, இவரது அறை வரை இவரை விட்டுவிட்டு வந் துவிடுகிறேன்" எனக் கூறிக் கொண்டு வேந்தனுடன் புறப்பட்டாள் அப்பெண்.

விசாலமான அறை ஒன்றினுள் நுழைந்தவள் விளக்கேற்றி, அந்த அறை யைச் சுத்தப்படுத்திப் படுக்கையையும் தயார் செய்து, "நீங்கள் உறங்குங்கள்" என்று கூறிவிட்டு அவனிடம் விடைபெற் றாள்.

https://telegram.me/aedahamlibra

"பெண்ணே!" அழைத்தான் வேந்தன்.

திரும்பியவள் கண்களை மட்டும் உயர்த்தி 'என்ன?' என்று வினவினாள்.

"உன் விழி வேல்களை ஒப்பிடு கையில் உன் தமையன் கையிலிருக்கும் வாள் பயனற்றது!" என வேந்தன் கூற சிரித்தபடியே வெளியேறினாள் அவள்.

வேந்தன் அறையை நன்கு பரிசோதனை செய்துவிட்டு உறங்கத் தயாரானான்.

அப்போது அறைக் கதவு தட்டப்பட்டது. தாழ்ப்பாளை நீக்கி கதவைத் திறந்து வெளியே பார்த்தான். அப்பெண் நின்று கொண்டிருந்தாள்.

"என்ன?" வினவினான் வேந்தன்.

"உள்ளே நுளம்பு அதிகமாக இருக்கும்!"

"ஆதலால்?"

“அகில் புகை போட்டுவிட்டுச் செல்லலாம் என்று வந்தேன்” சிரித்தபடியே கூறினாள் அவள்.

“சரி... உள்ளே வா!”

“விரைவில் சென்றுவிடுகிறேன். நீங்கள் படுத்துக் கொள்ளுங்கள்.”

“அவசரம் ஏதும் இல்லை. பொறுமையாகவே உன் பணியைச் செய்!” என வேந்தன் கூறிய போது அங்குக் கிடந்த சில சுள்ளிகளைச் சேர்த்து நெருப்பு மூட்டி அதில் சில பொடிகளைத் தூவ அந்த நெருப்பிலிருந்து புகை எழுந்து அந்த அறையையே நறுமணத்தால் நிரப்பியது.

“வீரரே, இனி உங்களை எந்த நுளம்பும் தீண்டாது. உறக்கமும் நன்றாக வரும். மூலிகைப் பொடிகளையும் சேர்த்திருக்கிறேன். உங்கள் உடல் அசதி அனைத்தும் நீங்கி, காலையில் தான் கண் விழிப்பீர்கள். நிம்மதியாக உறங்குங்

கள்!” என அப்பெண் கூறிக் கொண்டிருந்த போதே அவளது பேச்சினை இடைமறித்த வேந்தன், “நான் அதிகாலையில் எழுந்து வஞ்சிக்குப் புறப்பட வேண்டுமே!” எனப் பதறினான்.

“உங்கள் புரவியில் ஏறிச் சென்றால், இங்கிருந்து ஒரு ஓரைப் பொழுதைவிடக் குறைவான நேரத்தில் வஞ்சியை அடைந்துவிடலாம். அப்படியிருக்க ஏன் பதறுகிறீர்கள். உங்கள் அறைக்கு இருவரை காவலுக்கு நியமித்திருக்கிறேன். கதிரவன் உதித்ததும் உங்களை அவர்கள் எழுப்பி விடுவார்கள். கவலை வேண்டாம்!” எனக் கூறியவள், கதவுக்கருகில் சென்ற பிறகு, “வீரரே, வஞ்சியில் உங்களை எதிர்பார்த்து எந்த வஞ்சியும் காத்திருக்கவில்லை. எதையும் மனதினில் நினைக்காமல் உறங்குங்கள்” என்றவள் வேந்தனது மறுமொழியை எதிர்பார்க்காமல் அந்த அறையை விட்டு நகர்ந்து சென்றாள்.

அவள் சென்ற பிறகு பஞ்சு மெத்தையில் உறக்கம் வராமல் சிறிது நேரம் புரண்டுப் புரண்டு படுத்தான் வேந்தன். அந்த அகில் புகையிலிருந்து எழுந்த வாசனையை நுகர்ந்து கொண்டு படுத்திருந்தவன் சிறிது நேரத்திற்கெல்லாம் ஆழ்ந்து உறங்கிப் போனான். குறட்டை சத்தமும் பலமாக வெளிப்படத் தொடங்கியது.

அப்போது அந்தப் பெண் வேந்தன் உறங்கிக் கொண்டிருக்கும் அறைக் கதவைத் தள்ளினாள். கதவு உட்புறமாகத் தாழிடப்பட்டிருந்தது."அண்ணா, இந்தத் தாழினைத் திறவுங்கள்!" என அருகில் நின்ற வில்லவனிடம் கூறினாள். கள்வனாகப் பல வருடங்களாகப் பல கதவுகளின் தாழினைத் திறமையாகத் திறந்தவனுக்கு அந்தச் சத்திரத்தின் தாழ்ப்பாள் அப்படியொன்றும் பிரமானதாக இல்லை. எளிதில் திறந்துவிட்டான். வானவல்லி, டாள்தொபியாஸ், வில்லவன் மூவரும்

அந்த அறைக்குள் சத்தமெழுப்பாமல் நுழையலானார்கள்.

"டாள்தொபியாஸ் பந்தத்தைக் கொளுத்து!" என வானவல்லி ஆணை யிட, "பந்தம் கொளுத்தினால் இவன் கண்விழித்துவிட மாட்டானா சகோதரி?" எனப் பதிலுக்கு வினவினான்.

"அதிகாலை வரை இவனால் கண் விழிக்க இயலாது. அகில் புகையோடு மயக்கும் ஊமத்தைப் பொடிகளையும் தூவியிருக்கிறேன்" எனக் கூற அருகில் நின்ற வில்லவன், "நாமும் மயங்கிவிட மாட்டோமா?" என வினவினான்.

"இல்லை. இந்நேரம் அது செய லாற்றுப் போயிருக்கும். அதைப்பற்றிய கவலை வேண்டாம். டாள்தொபியாஸ் விளக்கை ஏற்றிப் பிடிக்கட்டும். நீங்கள் அவனது இடையில் மறைத்து வைத்தி ருக்கும் ஓலையை எடுங்கள்"என வில்ல வனிடம் ஆணையிட்டாள் வானவல்லி.

உடனே, டாள்தொபியாஸ் பந்தத்தைக் கொளுத்திப் பிடித்தான். வில்லவனும் வேந்தனின் இடைச் சுருளை ஆராய்ந்தான். சிறிது நேரம் அவனது இடையில் தேடியவன், "வானவல்லி, இவனது இடைச் சுருளில் எந்த ஓலையும் காணப்படவில்லை. இந்தப் பொன் முடிப்பு மட்டுமே இருக்கிறது!" எனக் கூறியவன் ஒரு சுருக்குப் பையைக் கொண்டு வந்து அவளிடம் நீட்டினான்.

அதை வாங்கி ஆராய்ந்தவள், "இவனிடம் நிச்சயம் ஓலை இருக்க வேண்டும். இவனது இடை, படுக்கை, தலைமாட்டு என எங்கும் தேடிப்பாருங்கள்" என ஆணையிட்டாள் வானவல்லி.

மீண்டும் தேடிப்பார்த்த வில்லவன், "இவனிடம் ஓலை எதுவும் இல்லை!" என்றான்.

"உறைந்தையிலிருந்து நமக்குத் தகவல் வந்திருக்கிறது. இவனிடம் நிச்சயம் ஓலை இருக்க வேண்டும். அந்த

ஓலை மட்டும் சேரனிடம் சேர்ந்தால் நிலைமை படு மோசமாகிவிடும். இருவரும் நன்றாகத் தேடிப்பாருங்கள்” எனக் கூறியவள் டாள்தொபியாசின் கையிலிருந்த தீப்பந்தத்தையும் வாங்கிக் கொண்டாள்.

டாள்தொபியாசும், வில்லவனும் வேந்தனது உடலை அங்குலம் அங்குலமாகத் தேடினார்கள். வேந்தன் இறந்த பிணத்தைப் போலச் செயலற்றுக் கிடந்தான். அந்த அறை முழுவதையும் தேடித் பார்த்தவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. அவர்கள் கைகளுக்கு ஓலை கிடைக்கவில்லை. மூவரும் செயலற்று திகைத்து நின்றார்கள். வானவல்லியிடம் தீப்பந்தத்தை வாங்கிய டாள்தொபியாஸ், அந்த அறையின் சுவரிலிருந்த வைப்புழியை ஆராய்ந்தான். அதுவும் வெறுமையாகவே காணப்பட்டது. டாள்தொபியாஸ் தேடிக் கொண்டே இருந்தான்.

https://telegram.me/aedahamlibra

வில்லவன் வானவல்லியிடம், “ஓலை இல்லாமல் வாய் மொழியாகச் செய்தி அனுப்பப்பட்டிருந்தால் நாம் என்ன செய்வது?” என்றான்.

“இல்லை அண்ணா. உங்கள் நண்பரிடமிருந்து ‘இவன் ஓலையைக் கொண்டுவருகிறான்’ என்று தகவல் கிடைத்திருக்கிறதே!”

“குழப்பமாக இருக்கிறது...” என்றபடியே வில்லவன் மீண்டும் தேடத் தொடங்கினான்.

“இவனது கை மற்றும் பாதத்தைச் சோதியுங்கள். சித்திரமாகத் தகவலை அனுப்பியிருந்தாலும் அனுப்பியிருப்பார்கள்!” என்றாள் வானவல்லி. உடனே வில்லவன் வேந்தனது உள்ளங்கை மற்றும், உள்ளங்கால் இரண்டையும் சோதனையிட்டான். அங்கும் அவனுக்கு ஏமாற்றமே!

https://telegram.me/aedahamlibra

“ஒருவேளை நம்மை வேந்தனை வைத்துத் திசை திருப்பிவிட்டு சேரனுக்கு வேறு மார்க்கமாக அவர்கள் தகவல் அனுப்பியிருந்தால்?” என்றான் டாள் தொபியாஸ்.

“அதற்கு வாய்ப்பில்லை.”

மூவரும் நம்பிக்கையிழந்து ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு நின்றார்கள். மூவரின் முகத்திலும் அவநம்பிக்கை குடிகொள்ளத் தொடங்கின. வேந்தனிடமிருக்கும் ஓலையை வாசிக்காவிட்டால் நடக்கப்போகும் விபரீதங்களை மூவரும் அறிந்திருந்ததால் திகைத்து நின்று கொண்டிருந்தார்கள். அப்போது வில்லவனின் முகத்திற்கருகில் குளவி ஒன்று ரீங்காரமிட்டபடியே சுற்றி சுற்றி வந்தது. அதை வேந்தன் விரட்டிவிட மீண்டும் மீண்டும் அக்குளவி அவனது முகத்தையே சுற்றி வந்தது. ஒரு கட்டத்தில் விரக்தியடைந்த வேந்தன், “காலம் அறியாமல் இந்தக் குளவி

என் பொறுமையைச் சோதிக்கிறது!” என உரக்க கூறியவனாய் டாள்தொபியாசின் கையிலிருந்த பந்தத்தை வாங்கி அந் தக் குளவியின் இறக்கையை எரித்துக் கொன்றான்.

சில கண நேரங்கள் கழிய மீண்டும் இரண்டு குளவிகள் அவர்களைச் சுற்றத் தொடங்கின. அவற்றின் ரீங்கார சத்தம் மூவரையும் எரிச்சலைடைய வைத்தது. வில்லவன் கையிலிருந்த தீப்பந்தத்தை வாங்கிய டாள்தொபியாசைக் கவனித்த வானவல்லி, “வேண்டாம் டாள்தொபி யாஸ்!” என அவனைத் தடுத்து நிறுத்தி னாள்.

வில்லவன், “இந்தக் குளவிகள் நம் மைக் கடிக்காமல் விடாது போலிருக்கி றது? இவற்றைக் கொல்வதைத் தவிர வேறு வழியில்லை” என்றான்.

“அதற்கு அவசியமில்லை. குளவி கள் இருளில் யாரையும் கடிக்காது. கவலை வேண்டாம்.”

https://telegram.me/aedahamlibrary

“குளவிகள் இரவு நேரத்தில் பறந்து இதுவரை நான் கண்டதே இல்லை. இந்தக் குளவிகளின் செயல் விசித்திரமாக இருக்கிறது” எனக் குறுக்கிட்டான் டாள் தொபியாஸ்.

“இரவு நேரத்தில் இடையூறு செய்யாதவரை இவை தன் கூட்டிலிருந்து வெளியேறாது!” என்றாள் வானவல்லி.

“நாங்கள் இருவருமே குளவிக் கூடுகளை இங்குக் காண கூட இல்லையே! அப்படியிருக்க இவற்றை எங்களால் எப்படித் தொந்தரவு செய்ய இயலும்!” என்றான் வில்லவன்.

“நீங்கள் தொந்தரவு செய்யவில்லை என்றால்...?”

வேந்தனை கால்களால் உதைத்து எத்தியபடியே”இங்கே மயங்கிக் கிடக்கும் இருங்கோவேளின் ஒற்றன்தான் அவற்றைக் கலைத்திருப்பான் என்கிறீர்களா?”

எனக் கோபத்துடன் கூறினான் டாள் தொபியாஸ்.

"ஆம்! இவன்தான் அவற்றைக் கலைத்திருப்பான்!"

"அப்படியெனில்...?" என டாள்தொ பியாஸ் ஆச்சர்யத்துடன் வினவ அவனது கையிலிருந்த தீப்பந்தத்தை வாங்கி அந்த அறையில் உயர்த்திப் பிடித்து ஆராய்ந்தாள். உயரத்தில் விட்டத்திற்கு அருகில் காணப்பட்ட பனை ஓலை தட்டியில் குளவிக்கூடு காணப்பட்டது. அதைக்கண்ட வானவல்லி, "நான் எதிர் பார்த்ததை விட இவன் மிகவும் திறமை சாலியாக இருக்கிறான். இந்நேரம் நம்மை ஏமாற்றியிருப்பான்" எனக் கூறிய வான வல்லி சிரிக்கவும் செய்தாள்.

வானவல்லி எதற்கு இப்போது சிரிக்கிறாள் என்பதற்கான காரணத்தை அறியாமல் டாள்தொபியாசும், வில்லவ னும் ஒருவரையொருவர் ஆச்சர்யத்து டன் பார்க்க, "குளவி கூட்டிற்கு அரு

https://telegram.me/aedahamlibra

கில் உற்றுப் பாருங்கள்!” என வானவல்லி கூறியதுதான் தாமதம் உடனே இருவரும் அண்ணாந்துப் பார்த்தார்கள்.

அண்ணாந்துப் பார்த்த இருவரும், “இவன் மிகவும் திறமைசாலிதான்” எனக் கூறிக் கொண்டனர்.

உடனே டாள்தொபியாஸ் தனது கைகளை உயர்த்தி அந்தக் கூட்டிற்கு அருகில் வெளியே தெரிந்த நூல் கயிறு ஒன்றைப் பிடித்து இழுத்தான்.”அவசரம் வேண்டாம் டாள்தொபியாஸ். எப்படி அந்த ஓலை அங்கு வைக்கப்பட்டிருக்கிறதோ, அதைப்போன்றே மீண்டும் அங்கே வைத்துவிட வேண்டும். கவனமாக!” என எச்சரிக்கவும் செய்தாள்.

பனை ஓலைத் தட்டியில் பாதுகாப்பாக மறைத்து வைத்திருந்த ஓலையை டாள்தொபியாஸ் வெளியே எடுத்ததும், அதனை அவனிடமிருந்து வாங்கிய வில்லவன் நூல் அதில் எப்படிச் சுற்றியிருக்கிறது, முத்திரை எங்குப் பொறித்தி

ருக்கிறது எனக் கவனமுடன் தீப்பந்த வெளிச்சத்தில் பார்த்தான். பிறகு, அந்த ஓலையைச் சுற்றிக் கட்டியிருந்த நூல் கையிற்றைக் கவனமாக அறுந்துவிடாமல் அவிழ்த்தவன் ஓலையைப் பிரித்துப் பார்த்தான். ஓலையில் காணப்பட்ட எழுத்துகளைப் பார்த்த வில்லவனது முகத்தில் ஈயாடவில்லை. அதிர்ச்சியில் உறைந்துபோனான். வில்லவனின் முக மாற்றத்தைப் பார்த்த டாள்தொபியாஸ், "என்ன வில்லவா, தகவல் சித்திரமாக வரையப்பட்டிருக்கிறதா?" என வினவ அவனிடம் ஓலையை நீட்டினான்.

ஓலையைப் பார்த்த டாள்தொபியாசும் அதிர்ச்சியாகி அந்த ஓலையை வானவல்லியிடம் நீட்டினான். தீப்பந்த ஒளியில் அந்த ஓலையைப் பார்த்த வானவல்லி, "நாம் எதிர்பார்ப்பதை விட நம் எதிரிகள் மிகவும் எச்சரிக்கையாகத்தான் செயல்படுகிறார்கள்" என்றாள் அதிர்ச்சியுடன்.

**அடிக்குறிப்பு :**

1. வைப்புழி: பொருள்களைப் பாது காப்பாக வைக்கும் பாதுகாப்புப் பெட்ட கம் (Safety Locker).

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொ ருவன், பெற்றான் பொருள்வைப் புழி. குரல் - 226.

விளக்கம்: வறியவரின் கடும் பசி யைத் தீர்க்க வேண்டும் அதுவே பொருள் பெற்ற ஒருவன் அப்பொருளைத் தனக் குப் பிற்காலத்தில் உதவுமாறு சேர்த்து வைக்கும் இடமாகும்.

https://telegram.me/aedahamlibra

# 7. ஒழிந்தது சோழ மரபு

தீப்பந்த ஒளியில் அதிர்சியுடனே ஓலையைப் பார்த்துக் கொண்டிருந்த வானவல்லியிடம், “வானவல்லி, ஓலையில் என்ன எழுதியிருக்கிறது?” பதற்றத்துடன் வினவினான் வில்லவன்.

“அதைத்தான் வாசிக்க முயன்று கொண்டிருக்கிறேன் அண்ணா!”

“இந்த ஓலையில் இருப்பது என்ன மொழி?” என இடைமறித்து வினவினான் டாள்தொபியாஸ்.

“என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள்!” என்றவள் அந்த ஓலையையே

உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தாள். பிறகு தனது மடியில் இருந்த ஓலை மற்றும் எழுத்தாணியைக் கொண்டு அதைக் கிறுக்கவும் செய்தாள். சிறிது, நேரம் கழித்து, "வைதீகர்களின் பழமையான வேத மொழி. இந்த மொழி அழிந்து இதன் உருவமே திரிந்துவிட்டது. ஓலைச் சுவடிகளில் மட்டுமே இதன் எழுத்துக் காணப்படுகிறது. தென்னகத்தில் சிலருக்கே இந்த எழுத்தை வாசிக்கத் தெரியும்!"

"இப்போது என்ன செய்வது? ஓலை கையில் கிடைத்தும் நம்மால் செய்தியை அறிய இயலவில்லையே?" வருத்தத்துடன் தெரிவித்தான் டாள்தொபியாஸ்.

"கவலை வேண்டாம் டாள்தொபியாஸ். என்னால் இதை வாசிக்க இயலும் என்று நம்புகிறேன். ஆனால் சிறிது நாழிகைகள் பிடிக்கும்!" என நம்பிக்கையுடன் தெரிவித்தாள் வானவல்லி.

டாள்தொபியாசும், வில்லவனும் வானவல்லியின் முகத்தையே ஆச்

சர்யத்துடன் பார்க்கலானார்கள்."இந்த எழுத்தே புரியாது. ஆனால், அந்த சுரோத்திரிய வைதீகன் வேறு இதனை எளிதில் வாசிக்க இயலா வண்ணம் சேர்த்து சேர்த்துக் கிறுக்கியிருக்கிறான்" எனச் சலிப்புடன் கூறியவள் பந்தத்தை இன்னும் சற்று நெருங்கப் பிடித்து அந்த ஓலையின் ஒவ்வொரு எழுத்தையும் அடையாளம் காண முயன்றாள். அப்ப டியே அந்த ஓலையை அவளால் வாசிக்க முடிந்தாலும், சொற்களின் அர்த்தத்தை அவளால் எளிதில் புரிந்துகொள்ள இய லவில்லை. இன்ன அர்த்தமாகத்தான் இருக்கும் என்று அவளால் யூகிக்கவே முடிந்தது.

ஒரு நாழிகைப் பொழுதிற்கு மேல் அந்த ஓலையையே பார்த்துக் கொண்டி ருந்தாள். பொழுது கடக்கக் கடக்க வான வல்லியின் முகம் அதிர்ச்சியில் சிவக்கத் தொடங்கியது. அதைக் கண்ட உபதலை வன் டாள்தொபியாகசும், உபதளபதி வில் லவனும் 'ஓலையில் என்ன செய்தி இருக்

கிறதோ?' என்று நினைத்துப் பதறினார்கள்.

ஓலையை வாசித்து முடித்ததும் வானவல்லி அதிர்ச்சியில், "ஒழிந்தது சோழ மரபு" என்றவள் ஓலையைக் கீழே போட்டுவிட்டு அருகில் இருந்த தூணில் சக்தியிழந்தவளாய் சாய்ந்து கொண்டாள்.

அருகில் நின்ற டாள்தொபியாசும், வில்லவனும் பதறியபடியே வானவல்லியை நெருங்க, "எனக்கு ஒன்றும் இல்லை. நாம் எதிர்பார்த்ததைவிட வைதீகனும், இருங்கோவேளும் பெரும் அபாயகரமானவர்களாக இருக்கிறார்கள். இந்த ஓலை மட்டும் சேரன் பெருஞ்சேரலாதனின் கைகளில் கிடைத்தால் நாம் போரில் தோற்பது மட்டுமல்லாமல் சோழ தேசமே நிர்மூலமாகிவிடும்!" என்றாள் கவலையுடன்.

"ஓலையைச் சிதைத்துவிட்டால் என்ன?" என்றான் டாள்தொபியாஸ்.

"நான் அச்சப்படுவது இந்த ஓலையைப் பார்த்து இல்லை டாள்தொபியாஸ். இந்த ஓலையில் எழுதப்பட்டிருக்கும் திட்டத்தைக் கண்டுதான்!"

"என்ன செய்வது?" குறுக்கிட்டான் வேந்தன்.

"சகோதரி கூறுவதைக் கேட்டால் இந்த ஓலையின் செய்தியை அறிந்து கொண்டதில் எந்தப் பயனும் இல்லை போலிருக்கிறதே!" என வருத்தத்துடன் கூறினான் டாள்தொபியாஸ்.

"ஆமாம் டாள்தொபியாஸ். இந்த ஓலையின் செய்தியை அறிந்து கொண்டதில் எந்தப் பயனும் இல்லை" என்றாள் வானவல்லி.

"பிறகு?" மீண்டும் குறுக்கிட்டான் வில்லவன்.

"இந்த ஓலை மட்டும் வஞ்சிக்கு சென்றுவிட்டால் நம்மால் எதையும்

https://telegram.me/aedahamlibra

செய்ய இயலாது! நாம் தோற்பது உறுதி" என்றாள் வானவல்லி.

"ஓலையை நாம் அழித்துவிட்டாலும் காலையில் இவன் கண் விழித்ததும் அனைத்து உண்மைகளையும் அறிந்து கொண்டு உறைந்தைக்குத் திரும்பி வைதீகனிடம் கூறிவிட்டால் அவர்கள் சுதாரித்து, மீண்டும் வேறு மார்க்கம் வழியாகச் செய்தியை அனுப்பிவிடுவார்கள்? ஒவ்வொரு முறையும் வேந்தனை நம்மால் ஏமாற்றிக் கொண்டிருக்க இயலாது. இப்போது என்ன செய்வது?" என்றான் வில்லவன்.

"இப்போதுதான் நாம் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும்" எச்சரித்தான் டாள்தொபியாஸ்.

"ஓலையை அழித்தால் அவர்களின் திட்டம் நமக்குத் தெரிந்துவிட்டது என்று நம் எதிரிகள் எச்சரிக்கை அடைந்துவிடுவார்கள்!"

"ஓலையை இப்படியே அனுப்பினாலும் பெரும் ஆபத்து?"

"அவர்களின் திட்டத்தை அறிந்தும் எந்தப் பயனும் இல்லாமல் போய்விட்டதே!"

"ஆமாம்! என்ன செய்வது?"

டாள்தொபியாகும், வில்லவனும் மாறி மாறி வினா தொடுத்துக் கொண்டிருந்தார்கள். வானவல்லி அமைதியுடன் இருவர் கூறுவதையும் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"நீங்கள் இருவரும் கூறுவதைப் போன்று இருங்கோவின் ஒற்றர்களை இடை மறித்ததாலோ அல்லது அவர்களின் திட்டத்தை நாம் அறிந்து கொண்டதாலோ நமக்கு எந்தப் பயனும் இல்லை. அவர்களின் திட்டத்தை நாம் நிர்மூலமாக்க வேண்டும்!"

“நிர்மூலமாக்க வேண்டுமா?” இரு வரும் ஒரே நேரத்தில் சேர்ந்து வினவி னார்கள்.

“ஆம்!”

“எப்படி?” என்றான் டாள்தொபி யாஸ்.

“சற்றுப் பொறுங்கள்” எனக் கூறிய வானவல்லி இரண்டு வெற்று ஓலைக ளுக்கு இடையில் காணப்பட்ட வைதீகர் எழுதி அனுப்பிய ஓலையை மட்டும் தனி யாக எடுத்துத் தீப்பந்தத்தில் காட்டினாள். ஓலை சுடர்விட்டு எரிந்தது.

அவளது செயலைக் கண்ட இருவ ரும் திகைத்து, “ஓலை... ஓலை” எனப் பதறினார்கள்.

“இந்த ஓலை எதிரிகளின் கைக ளில் கிடைத்தால் சோழ தேசமே குருதிக் களமாகிவிடும். அதை ஒருநாளும் நாம் அனுமதிக்கக் கூடாது!”

"ஓலையை எரித்துவிட்டதால் எதிரிகள் சுதாரித்துவிட மாட்டார்களா?"

"மாட்டார்கள்!"

"எப்படி?"

"சற்றுப் பொறுங்கள்!" என மீண்டும் கூறிய வானவல்லி அவளது மடியில் முடித்து வைத்திருந்த வெற்று ஓலை ஒன்றை எடுத்து அதில் எழுத்தாணியைக் கொண்டு அழுத்தி எழுதினாள். பிறகு அதில் முத்திரை ஒன்றைப் பதித்து மீண்டும் அதை இணைத்து வில்லவனிடம் கொடுத்தாள். எப்படி நூல் கயிற்றினால் அந்த ஓலை சுற்றப்பட்டிருந்ததோ அப்படியே சுற்றிக் கட்டினான் வில்லவன். அதை வாங்கிப் பார்த்த டாள்தொபியாஸ் அசந்து போய்விட்டான். ஏனெனில், அது சற்றுமுன் பிரித்துப் படித்து மாற்றப்பட்டது என்பதற்கான அடையாளம் அதில் சிறிது கூட இல்லை. எடுத்த இடத்திலேயே மீண்டும் பத்திரமாக வைத்தான் டாள் தொபியாஸ்.

எரிந்து கிடந்த ஓலையின் சாம்பலைத் தரையிலிருந்து அள்ளி எரியும் நெருப்பில் போட்டாள். மடியில் வைத்திருந்த மயக்கத்தைத் தெளிவிக்கும் மூலிகைப் பொடியை எடுத்து மீண்டும் அகில் பொடியுடன் சேர்த்து நெருப்பில் தூவ மீண்டும் புகை கிளம்பியது. வேந்தனது பொன் கழஞ்சுகள் நிறைந்த சுருக்குப் பையை மீண்டும் எடுத்த இடத்திலேயே வைத்துவிட்டார்கள். அந்த அறைக்குள் அவர்கள் நுழைந்த அனைத்து தடயங்களையும் அகற்றிய பிறகு மூவரும் வெளியேறினர். வெளியில் நின்றவாறே அறைக்கதவை உட்புறமாகத் தாழிட்டான் வில்லவன். அவனது திறத்தைக் கண்டு மூவரும் வியக்கவே செய்தார்கள்.

மூவரும் அங்கிருந்து வெளியேறி அவர்களின் அறைக்குச் சென்று கொண்டிருந்த போது திகம்பர அடிகளார் ஈழவா விரையர், "அம்மா, சென்ற காரியம் வெற்றிதானே?" என வினவினார்.

"இப்போதைக்கு வெற்றி!" என மட்டும் கூறியவள் அவரிடமிருந்து விடை பெற்று அறைக்குள் சென்றாள். அவளைப் பின்தொடர்ந்து டாள்தொபியாசும், வில்லவனும் உள்ளே செல்லலானார்கள்.

உள்ளே சென்றதுமே ஓலை ஒன்றை எடுத்து அதில் வேக வேகமாக எதையோ எழுதிய வானவல்லி அதனை டாள்தொபியாசிடம் கொடுத்து, "நீங்கள் இருவரும் உடனே புகாருக்குச் சென்று கரிகாலனிடம் இந்த ஓலையைச் சேர்ப்பியுங்கள். பொழுது விடிவதற்குள் இந்த ஓலை கரிகாலனை அடைந்திருக்க வேண்டும். மிகவும் அவசியம்!" என அவசரப்படுத்தினாள்.

வேந்தன், "நீ என்ன வானவல்லி செய்யப் போகிறாய்?" என வினவினான்.

"நான் வஞ்சிக்குச் செல்லவிருக்கிறேன்!"

https://telegram.me/aedahamlibra

“தனியாகவா?”

“ஆம் அண்ணா?”

“உப தலைவர் டாள்தொபியாஸ் புகார் விரையட்டும். நான் உனக்குத் துணையாக வருகிறேன்!”

“வேண்டாம் அண்ணா. உங்கள் இருவருக்கும் கட்டளைகள் கரிகாலரிடம் காத்திருக்கின்றன. மிகவும் முக்கியமான பணி. இருவருமே நிச்சயம் செல்ல வேண்டும்! அது மட்டுமல்லாமல் இரவு நேரமாகையால் உங்களை வேந்தனால் அடையாளம் காண இயலவில்லை. ஆனால், பகல்பொழுதில் தங்களது மாறுவேடம் அவனிடம் பலிக்காமல் கூடப் போகலாம். வேந்தனும் திறமைசாலி! நாம் ஒருநாளும் நம் எதிரிகளைக் குறைத்து மதிப்பிடக்கூடாது. எனக்கு இன்னும் முடிக்க வேண்டிய சில பணிகள் மீதமிருக்கின்றன. வேந்தனுக்குச் சிறு சந்தேகம் நேர்ந்தாலும் அனைத்தும் பாழாகிவிடும். நமது சாணக்கிய தனத்தை

வெளிப்படுத்த வேண்டிய நேரம் இது. சிறு பிழை கூட நேரக்கூடாது!”

“அந்த ஓலையில் அப்படி என்னதான் இருந்தது? அதைப் படித்ததிலிருந்து ஏன் உங்கள் முகம் வெளிறிப்போய்விட்டது? ஏன் பதறுகிறீர்கள்?” அவர்களின் உரையாடலைக் குறுக்கிட்டு வினவினான் டாள்தொபியாஸ்.

“இப்போது அது கூறுவதற்கில்லை டாள்தொபியாஸ்.”

“அவனது ஓலையில் நீ என்ன எழுதி வைத்தாய்?” வினவினான் வேந்தன்

“நேரம் வரும்போது அதைக் கூறுகிறேன்.”

“எனக்கு வேந்தனைப் பற்றி நன்கு தெரியும். அவன் மிகவும் திறமைசாலி வானவல்லி. ஓலையைக் கொடுத்து வாய்மொழியாக எதையாவது அவன் முரணாக உளறினால் சேரன் பெருஞ்சேர

லாதனுக்குச் சந்தேகம் வந்துவிடும். சேர னும் பெரும் திறமைசாலி. எளிதில் நமது இந்தத் திருட்டுத்தனத்தை அவன் யூகித் துவிடுவான்!"

"அதற்கு வாய்ப்பே இல்லை!"

"வாய்ப்பே இல்லையா?"

"ஆம்!"

"எப்படி? அவ்வளவு அறுதியிட்டுக் கூறுகிறாய்?"

"இருங்கோவை இயக்கிக் கொண் டிருக்கும் வைதீகன் நாம் நினைப்பதை விடப் பெரும் கெட்டிக்காரரர். அரசு, போர், ஒற்றர்களைப் பற்றி நன்கு அறிந்தும் வைத்திருக்கிறார். அவரது திறமையை ஓலையில் கண்டபோது மிரண்டு விட் டேன் நான்!"

"அவன் சாணக்கியனாகவே இருக் கட்டும் வானவல்லி. அது எனக்கும் தெரிந்த ஒன்றுதான். எனது சந்தேகம்

எதுவென்றால் ஓலையில் இருக்கும் இரகசியத் தகவல் வேந்தன் வாய் மொழியாகச் சேரனிடம் சொல்லிவிட்டால் என்னென்ன விபரீதங்கள் நேரும் என்பதைப் பற்றிதான்!"

"அண்ணா, ஓலையில் எழுதியிருக்கும் தகவலை வைதீகன் நிச்சயம் வேந்தனிடம் கூறியிருக்கமாட்டார்."

"சொல்லியிருக்க மாட்டாரா?" வியப்புடன் வினவினான் டாள்தொபியாஸ்.

"ஆமாம் டாள்தொபியாஸ். ஓலையில் இருக்கும் தகவல் இடையில் யாரும் அறிந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் அவர் பழமையான அவர்களது வேத மொழியில் எழுதி அனுப்பியிருக்கிறார். வேந்தன் திறமைசாலிதான். ஆனால், அவன் பெண்களைக் கண்டால் பலவீனமானவனாகி விடுகிறான். அதை வைதீகர் நிச்சயம் தெரிந்து வைத்திருப்பார். ஆனால், இவன் மிகவும் நம்ப

கமானவன். அவர்களிடத்தில் பற்றுள்ள வன். ஆதலால்தான் ஓலையை எழுதி இவன் மூலமாக அனுப்பியிருக்கிறார். இவனுக்கு வடமொழி தெரியாது. அந்த மொழி ஈழவாவிரையருக்குக் கூடத் தெரி யாது. புகாரில் வைதீகர் ஒருவரிடம் சில காலங்கள் கற்றுக் கொண்டேன். வைதீக வேதங்கள், உபநிடத்துகளின் மூலப் பாடல்களை வாசிப்பவர்கள்தான் இந்த எழுத்துகளைக் கற்றிருப்பார்கள். ஏதோ, ஆர்வத்தில் ஒரு காலத்தில் கற்றேன். இப்போது பயன்பட்டுவிட்டது. நிச்சயம் கூறுகிறேன். ஓலையில் இருக்கும் இரக சியம் இருங்கோவேள் மற்றும் வைதீக ரைத் தவிர வேறு யாருக்கும் தெரிந்தி ருக்க முடியாது. வேந்தனுக்கும் தெரிந்தி ருக்க வாய்ப்பேயில்லை. அப்படி அறிந் திருந்தால் அவன் நிம்மதியாக அப்படி உறங்கியிருக்க மாட்டான்."

"ஓலையின் இரகசியம் தெரிந்தால் நிம்மதியாக உறங்க மாட்டானா?" இடை மறித்தான் வில்லவன்.

"ஆம்! பொன்னி நதியை குருதி ஆறாக மாற வைக்கும் திட்டம் இது! சோழ நாட்டின் பெரும் அழிவை சுமந்து செல் லும் ஓலை இது!"

"தங்களைத் தனியாக விட்டுச் செல்ல வேண்டும் என்ற கட்டளைதான் என்னை நெருடச்செய்கிறது!" வருந்தி னான் டாள்தொபியாஸ்.

"வேறு வழியில்லை டாள்தொபி யாஸ். ஓலையை மாற்றியதில் மட்டும் நமது பணி முடிந்துவிடவில்லை. இனி தான் ஆரம்பிக்கவிருக்கிறது. முதலில் தாக்குபவர்கள் நாமாக இருக்க வேண் டும்! அவர்களிடம் பெரும் படை திரண்டி ருக்கிறது. நமது விருப்பத்தின்படியே எதி ரிகள் செயல்பட வேண்டும். நமது வியூ கத்தின் படிதான் போர் நடைபெற வேண் டும். எதிரிகளுக்குச் சிறு வாய்ப்பினைக் கூட அளித்துவிடக் கூடாது! நீங்கள் இரு வரும் உடனே கிளம்புங்கள்" அதிகாரத் துடன் கூறினாள் வானவல்லி.

https://telegram.me/aedahamlibra

"சரி. தகவல் அனுப்புங்கள்!" என இருவரும் அவளிடம் விடைபெற்று அந்தச் சத்திரத்திலிருந்து கிளம்பிப் புகாரை நோக்கிப் பயணத்தைத் தொடங்கினார்கள்.

திகம்பர அடிகளார் ஈழவாவிரையரிடம் சென்ற வானவல்லி, "முக்கிய ஓலை ஏதாவது நம் ஒற்றர்களிடமிருந்து வந்திருக்கிறதா?" என வினவினாள்.

அவர் சில ஓலைகளை எடுத்து அவளிடம் நீட்டினார். அனைத்தையும் வாசித்தவள், "அய்யா, இந்தச் சத்திரத்தில் இனி யார் தங்கிச் சென்றாலும் அவர்கள் கையில் ஓலை ஏதாவது இருக்கிறதா என்று சோதித்து வாசித்துவிடுங்கள்! முக்கியத் தகவல்கள் ஏதாவது இருந்தால் கரிகாலருக்கு தெரியப்படுத்துங்கள்!" என்றாள்.

"நிச்சயமாகத் தெரியப்படுத்துகிறேன்!"

"இரும்பிடர்த்தலையர் எங்கே இருக்கிறார்? தகவல் ஏதாவது கிடைத்ததா?"

"இல்லை வானவல்லி!"

"அவரைப் பற்றித் தகவல் ஏதாவது கிடைத்தால் எனக்கு நிச்சயம் தெரியப் படுத்துங்கள். நான் ஓய்வெடுக்கிறேன். அதிகாலையில் வஞ்சிக்குப் புறப்பட வேண்டும். நான் கிளம்புகிறேன் அய்யா!" எனக் கூறியவள் அவளது அறைக்குச் சென்று தாழிட்டுக் கொண்டாள்.

முற்றிலும் மாறிவிட்ட வானவல்லியின் சுபாவங்களைக் கண்ட ஈழவாவிரையர் திகைத்தபடியே நெடுநேரம் ஆச்சர்யத்தில் நின்றார். பிறகு அவரும் தனது அறைக்குச் சென்றுவிட்டார்.

கதிரவன் கிழக்கில் உதிப்பதற்கு ஒரு நாழிகைப் பொழுதிற்கு முன் கண் விழித்தான் வேந்தன். எழுந்த உடனே விளக்கை ஏற்றித் திரியை உயர்த்தி

https://telegram.me/aedahamlibra

னான். வெளிச்சம் அதிகம் பரவியது. மறைத்து வைத்த ஓலையைத் தேடித் தான் அவனது கண்கள் இரண்டும் முத லில் பயணித்தன. ஓலையை எப்படி மறைத்து வைத்தானோ அதே அடையா ளங்களுடன் இருந்ததைக் கண்ட பிறகே நிம்மதியடைந்தான் அவன். அவனுக்கு எந்தச் சந்தேகமும் தோன்றவில்லை.

நீராடிவிட்டு அந்த அறைக்குள் மீண்டும் வந்து அவனது உடைமைகளை எடுத்துக் கொண்டு புறப்பட்ட போது தான் அதனைக் கண்டான். அவனது படுக்கைக்கு அருகில் சில குளவிக ளின் இறகுகள் எரிந்துபோய்க் கரு கிக் கிடந்தன. அதைக் கண்டவன் சில கண நேரங்கள் அதிர்ச்சியுடன் சிந்தித் தபடி நின்று கொண்டிருந்தான். இடைச் சுருளிலிருந்து ஓலையை எடுத்து சந் தேகத்துடன் பார்க்கலானான். அதைத் திருப்பித் திருப்பிப் பார்த்தான். அந்த அறையின் ஓரத்தில் கிடந்த சுள்ளிக ளில் இருந்து புகை அப்போதும் கசிந்து

https://telegram.me/aedahamlibrary

கொண்டிருந்தது. அருகில் சென்று அந்
தப் புகையை முகர்ந்து பார்த்தான். 'இதில்
மயக்கப்பொடி சேர்ந்திருக்க வாய்ப்
பில்லை. சேர்க்கப்பட்டிருந்தால் சரியான
நேரத்திற்கு என்னால் எழுந்திருக்க இய
லாது. காலையில் நான்தான் தாழ்ப்
பாளைத் திறந்தேன். தீப்பந்தத்துடன்
யாரும் உள்ளே பிரவேசித்திருக்க வாய்ப்
பில்லை. நேற்றிரவு ஓலையை மறைத்து
வைத்தபோது குளவிகள் வெளிப்பட்
டன. அந்தக் குளவிகள் எப்படிக் கரு
கியது? அப்படியெனில்...'எனச் சிந்தித்த
வன், "அப்படியெனில், நேற்றிரவு யாரோ
இங்கு வருகை தந்திருக்கிறார்கள்.
ஓலை? ஓலை?" எனப் பதறியபடியே
மீண்டும் அவன் கையிலிருந்த ஓலை
யைப் பிரிக்கலானான். அந்த ஓலையில்
எழுதியிருந்த மொழி அவனுக்குப் புரி
யவில்லை."ஓலையை இடையில் வைக்
காமல் தனித்து மறைத்திருந்ததால் தப்
பித்தது ஓலை. அப்படியே அவர்கள்
இதனைப் பார்த்திருந்தாலும் இதனை

https://telegram.me/aedahamlibra

அவர்களால் வாசித்திருக்க இயலுமா?" எனத் தனக்குத்தானே கூறிக் கொண் டவன் சிரித்துக்கொள்ளவும் செய்தான்." வைதீகர் புத்திசாலிதான்" எனக் கூறிய படி அவனது உடைமைகளை எடுத்துக் கொண்டு வெளியே சென்றவன் வஞ் சியை நோக்கிப் புறப்பட ஆயத்தமானான்.

அங்குப் பணிபுரிந்த பணியாளனி டம் நேற்றிரவு அவனுடன் துணையாக மாறுவேடத்தில் வந்த வானவல்லியைப் பற்றி வினவினான். அதற்கு, "அவள் அதிகாலையிலேயே வஞ்சியை நோக்கிச் சென்றுவிட்டாள்" எனப் பதிலளித்தார் கள்.

'நிச்சயம் அந்த வஞ்சியை வஞ் சியில் சந்தித்து நட்பினை வளர்த்துக் கொள்ள வேண்டும்' எனத் தனக்குத் தானே உற்சாகத்துடன் கூறிக் கொண்ட வேந்தன் வானவல்லி மாற்றிவைத்த ஓலையுடன் வஞ்சியை நோக்கி வேகமா கப் பயணிக்கலானான்.

https://telegram.me/aedahamlibra

அடிக்குறிப்பு :

1. சுரோத்திரிய வைதீகன்:
சுரோத்திரிய வைதீகன் என்றால் மிகவும் புத்திசாலி வைதீகன் என்று பெயர். வேதம், உபநிடதங்கள் ஆகியவற்றை அதிகம் பயின்றவர்கள். இவர்களின் எழுத்துகளை எளிதில் வாசிக்க இயலாத அளவிற்குச் சேர்த்தே எழுதுவார்கள்.

https://telegram.me/aedahamlibra

# 8. காவலன்

நள்ளிரவு கடந்த அதிகாலைக் கருக்கள் பொழுது. மூன்றாவது சாமத்தின் கடைசி நாழிகை மிக வும் வேகமாகக் கடந்து கொண்டிருந் தது. முழு நிலவும் மேற்கு வானில் தஞ்சமடைந்திருந்ததால் நிலவொளியா னது மங்கி பாதையில் படிந்து எதிர்படும் உருவங்களுக்கு நீண்ட நிழல்களை உரு வாக்கி பூதம்போலப் பயங்கரத்தை வழங் கிக் கொண்டிருந்தது. 'பின் தூங்கி முன் எழும்' தமிழகக் கற்புடைய பெண்டிர் கூட அந்தக் கருக்கள் பொழுதில் கண் விழித் திருக்கவில்லை. புகாரிலிருந்து ஒரு நாழிகைப் பொழுதுப் புரவிப் பயணத் தொலைவிலிருந்த கிராமம் அது. மக்கள் கண் விழித்திருக்காமையால் தெருக்கள் அனைத்தும் வெறிச்சோடி, ஆள் அரவ மற்றுக் காணப்பட்டது. வீடுகளின் முன் சாத்தப்பட்டிருந்த ஈட்டி, வேல், வாள் மற்

றும் கேடயங்களின் நிழல்கள் நீண்டு சுவர்களில் விழுந்து கொண்டிருந்தன.

அந்த வழியாக அதிவேகமாகப் புரவியில் பயணித்துப் புகாரை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள் டாள்தொபியாசும், வில்லவனும். கிராமத்தின் எல்லையில் காணப்பட்ட யானை மீது அமர்ந்திருந்த காவல் தெய்வமான சாத்தனின் நிழலானது மண் சாலையில் விழுந்து கருத்த பூதம் ஒன்று வாயைத் திறந்து கொண்டு சாலையில் பயணிப்பவர்களை விழுங்குவதைப் போன்று காணப்பட்டது. அதைப் பார்த்து அச்சங் கொள்ளாத இருவரும் புரவியை முன்னோக்கிச் செலுத்த”நில்லுங்கள்” என்ற குரலைக் கேட்டதும் இருவரும் அக்கணம் திகைப்படைந்து புரவியின் கடிவாளத்தைப் பற்றியிழுத்து புரவியை நிறுத்தினார்கள்.

புரவியில் அமர்ந்திருந்தபடியே டாள்தொபியாசும், வில்லவனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்

கள். ஏனெனில் ஆளரவமற்ற நேரத்தில் எழுந்த குரல் அசரிரீயாக இருக்குமோ? அல்லது காவல் தெய்வம் சாத்தனின் குரலாக இருக்குமோ? என எண்ணி அக்கணம் திகைப்படைந்து நின்று கொண்டிருந்தார்கள்.

இருவரும் பார்வையைச் சுற்றிலும் செலுத்தினார்கள். அங்கு அருகில் காணப்பட்ட சாத்தனின் சிலை மற்றும் இருவரின் தலைக்கு மேல் கிளைகளைப் பரப்பி நின்று கொண்டிருந்த போதி மரம், அந்தப் போதி மரத்திற்கு அடியில் காணப்பட்ட புத்தரது திருவுருவச் சிலையைத் தவிர வேறு எதுவும் அவர்களின் பார்வைக்கு அகப்படவில்லை. அந்தப் போதி மரத்திற்கு அப்பால் காணப்பட்ட சிறு குளத்திலிருந்து ஈரக்காற்றைப் பெற்றுக் கொண்ட தென்றல் குளிர்ச்சியாக வீசிக் கொண்டிருந்தது.

சில கண நேரங்கள் இருவரும் அங்கு நின்று பார்வையைச் செலுத்த

யாரும் இல்லாததைக் கண்டு மீண்டும் புரவியின் கடிவாளத்தைத் தளர்த்திப் புரவியைத் தட்டி விட்டார்கள். இரண்டு புரவிகளும் சில அடிகள் முன்னோக்கிச் செல்ல மீண்டும், “உங்கள் இருவரையும் நில்லுங்கள் எனக் கட்டளையிட்டேன் நான்!” எனக் குரல் வெகு சமீபத்திலிருந்து ஒலிக்க மீண்டும் புரவியின் கடிவாளத்தைப் பற்றி அந்த இரண்டு வீரர்களும் நிற்கலானார்கள்.

இருவரும் மீண்டும் பார்வையைச் சுற்றிலும் படரவிட்டார்கள். அவர்களின் கண்களுக்கு மீண்டும் எவரும் அகப்படவில்லை. உடனே வில்லவன், “யார் அது?” எனக் குரல்கொடுத்தான்.

எந்தப் பதிலும் வரவில்லை.

வில்லவன் இடையிலிருந்த குறுவாள் ஒன்றைக் கையில் எடுத்தபடியே”டாள்தொபியாஸ், எங்காவது அசைவு தெரிகிறதா என்று நோக்குங்கள்! அவர்களைக் கண நேரத்தில் எமலோகத்திற்கு

அனுப்பிவிடுகிறேன்” என்றான் சற்றுக் கோபத்துடன்.

டாள்தொபியாசும் குறுவாள் ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டான். இருவரும் கவனமாகப் பார்வையைச் செலுத்தலானார்கள். எந்தப் பயனும் இல்லை.”புறப்படுவோம்! நேரம் காலம் அறியாமல் எந்த மூடனோ நம்முடன் விளையாடுகிறான்!” என்றான் சற்றுச் சலிப்புடன்.

“அவனுக்கு நல்ல நேரம் நாம் விரைவாகப் புகார் செல்ல வேண்டியிருக்கிறது. இல்லையேல்....” என்றபடியே அவனது வாக்கியத்தைப் பாதியில் முடித்தான் வில்லவன். எஞ்சிய வாக்கியத்தை டாள்தொபியாஸ் ஊகித்துக் கொண்டான். அப்போது அவர்களின் தலைக்கு மேல் நீண்டிருந்த போதி மரத்தின் கிளை ஒன்றில் சிறு சலசலப்புத் தோன்ற வில்லவன் குறுவாளை ஓங்கினான்.”அவசரம் வேண்டாம் வில்லவா!” அதிகாரத்துடன்

சொற்கள் வெளிப்பட்டது டாள்தொபியா சிடமிருந்து.

இருவரும் அண்ணாந்து உற்றுப் பார்த்தார்கள். நிலவொளியின் பிரகாசமும் குறைந்திருந்ததால், நிழல்கள் அனைத்தும் நீண்டு, பெரியதாகக் காணப்பட்டதால் அந்த மரத்தில் காணப்பட்ட நிழல்களில் யாரோ அமர்ந்திருப்பதைப் போன்று தோன்றிக் கொண்டிருந்தது.

“புறப்படுவோம். நமது நேரத்தை வீணாக்க வேண்டாம்!” என டாள்தொபியாஸ் கட்டளையிட அடுத்தக் கணம் இருவரும் புரவியைத் தட்டிவிட்டார்கள். புரவி பயணத்தைத் தொடங்கியது. இரு புரவிகளும் சில அடிகள் முன்நோக்கி நகர அவர்களுக்கு முன் ஒருவன் அந்தப் போதி மரத்திலிருந்து குதித்து அவர்களின் பாதையை இடை மறிக்கலானான். மரத்திலிருந்து திடீரென்று தனக்கு முன் ஒருவன் குதித்துவிட்டதைக் கண்ட

இரு புரவிகளும் மிரண்டு முன்கால்களை உயர்த்திக் கொண்டு கனைத்தன. அப்புரவிகளின் மீது அமர்ந்திருந்த டாள்தொபியாசும், வில்லவனும் அந்த இரண்டு புரவிகளின் வயிற்றிலும் தங்கள் கால்களை அழுத்தமாகப் பதித்து அதைத் தைரியப்படுத்தி அமைதி பெறச் செய்தனர்.

மரத்திலிருந்து குதித்தவனை இருவரும் கவனித்தனர். மங்கிய நிலவொளியில் அவனது முகம் தெளிவாகத் தெரியவில்லை. தலையில் பெரிய கருப்பு நிறத் தலைப்பாகை, தடித்துத் தாடை வரை வளர்ந்திருந்த கம்பீரமான மீசை, சற்றுக் கருத்த உடல், நீண்ட கருப்புத் துணி ஒன்றை இடையிலும், இரு தொடையிலும் சுற்றியிருந்தான். கையில் ஆயுதத்தையும் தரித்திருந்தான்.

சாலையின் நடுவில் முன்னே செல்ல விடாமல் பாதையைத் தடுத்தபடி நின்று கொண்டிருந்தவனைக் கண்ட டாள்தொபியாஸ், “இப்போது வழியை

விடப்போகிறாயா? இல்லையா?" எனக் கடும்கோபத்துடன் புரவியில் சில அடி முன்னோக்கி நகர்ந்தபடியே கேட்கலானான்.

வலது கையின் ஆட்காட்டி விரலை மடக்கி தாடை வரை நீண்டு வளர்ந்திருந்த தனது மீசையைப் பெருமையுடன் கம்பீரமாக வருடியபடியே, "உடல் வயோதிகத்தை அடைந்தாலும், உங்களது குரலும் இந்தப் புரவியில் வேகமாக வந்த தோரணையும் முரணாக அல்லவா இருக்கிறது?" ஏளனத்துடன் வினவினான் டாள்தொபியாசைப் பார்த்து.

சூடிக் கொண்ட மாறு வேடத்தைக் கலைக்காமல் இயல்பான குரலில் பேசிவிட்டதை உணர்ந்த டாள்தொபியாஸ் தனது தவறை எண்ணி அப்போது வருந்தவே செய்தான்.

"அது உனக்குத் தேவையில்லாத ஒன்று! உன்னோடு பேசிக் கொண்டிருக்கவும் எங்களுக்கு நேரமில்லை, வழியை

https://telegram.me/aedahamlibra

விடப் போகிறாயா? இல்லையா?” அந்த இடமே அதிரும்படி கடும் கோபத்துடன் வினவினான் வில்லவன்.

“உங்கள் இருவருக்கும் வழிவிடும் உத்தேசம் எனக் கில்லை. முடிந்தால் என்னைக் கடந்து செல்லுங்கள்!” என் றவன் தன் கையிலிருந்த செண்டாயு தத்தை அவனுக்கு முன் தரையில் பதித் தான்.

அருகில் காணப்பட்ட சாத்த னின் சிலையைக் கவனித்தான் வில் லவன். அங்குச் சாத்தனின் செண்டாயு தம் காணப்படவில்லை. நிலைமையைப் புரிந்து கொண்டான்.

“வழியை விடப் போகிறாயா அல் லது புரவியினால் உதைபட்டு மார்பெ லும்பை உடைத்துக் கொள்ளப் போகி றாயா?” எனக் கூறியபடியே புரவியின் கடி வாளக் கயிறைத் தளர்த்தினான். இரண் டடி முன்னால் வந்து அவனுக்கு முன் நின்றது புரவி.

https://telegram.me/aedahamlibra

"நீங்கள் யார் என்று கூறாதவரை நீங்கள் இங்கிருந்து விலக இயலாது! முடிந்ததைப் பார்த்துக்கொள்ளுங்கள்!"

"மூடனே, சாத்தனின் செண்டு உன் கையில் இருக்கிறது என்பதற்காக நீ சாத்தனாக மாறிவிட முடியாது. உன் கையிலிருப்பது மிகவும் ஆபத்தான ஆயுதம். அது உன்னையே காயப்படுத்திவிடும்! வீண் வம்பு வேண்டாம்!" எச்சரித்தான் டாள் தொபியாஸ்.

"உரையை நீட்ட வேண்டாம். யார் என்று கூறிவிட்டுக் கிளம்புங்கள். இல்லையேல்..." அவனும் கடுமையாக எச்சரிக்கை செய்யலானான்.

"இவனுக்குத் தகுந்த பாடத்தைக் கற்பிப்போம்" எனக் கூறிய டாள்தொபியாஸ் வில்லவனை நோக்கி சைகை காட்டினான். வில்லவன் புரவியின் கடிவாளத்தை இறுக்கி புரவியின் அடி வயிற்றில் தட்ட புரவியானது கனைத்தபடி முன்னங்கால்கள் இரண்டையும் தூக்கிக்

கொண்டு அவனை உதைக்கப் பாய்ந் தது.

அந்தப் புரவியைக் கண்டு அச்சப் படாமல் செண்டாயுதத்துடன் கம்பீரமாக நின்று கொண்டிருந்தான் அவன். முன் னங்கால்கள் இரண்டையும் உயர்த்தியபடி பாய்ந்த அப்புரவியின் இடது குளம்பில் செண்டினால் சிறு தட்டுத் தட்டினான். அடுத்தக் கணம் அப்புரவி ஆவேசம டைந்து குதித்து, அதன் மீது அமர்ந்த வில்லவனைக் கீழே தள்ளி விட்டது. சாதுர்யத்துடன் செயல்பட்ட வில்லவன் கீழே விழாமல் குதித்துத் தன்னைக் காத் துக் கொண்டான். கண நேரத்தில் நடந்த வற்றை நம்பாமல் அதிர்ச்சியுடன் தனக்கு முன்னால் நின்றவனைக் கண்ட வேந் தன், “நீ யார்?” என வினவினான்.

“காவலன்!” ஒற்றைச் சொல்லில் பதிலளித்தான் அவன்.

“காவலனா?”

https://telegram.me/aedahamlibra

“ஆம்!”

“எதற்கு?”

“இந்த ஊரிற்கு!”

“ஓ! ஊர்க் காவலனா நீ?” புரவியிலிருந்து குதித்தபடி இடைமறித்தான் டாள் தொபியாஸ்.

டாள்தொபியாசின் முகத்தைப் பார்த்தபடி ‘ஆமாம்’ என்பதற்கு அறிகுறியாகத் தலையை மட்டும் ஆட்டினான் ஊர்க்காவலன்.

“இருவரை எதிர்க்கும் உன் வீரம் எங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறது வீரனே! நாங்கள் அவசியமாகப் புகார் செல்ல விழைகிறோம். எங்களைத் தடுக்காதே!”

“நான்தான் அப்போதே கூறினேனே!”

“எதை?”

“நான் பார்த்துக் கொண்டிருக்கும் உங்கள் இருவரின் தோற்றமும் பொய் யானது. நீங்கள் யார் என்பதை முதலில் கூறுங்கள்! அதன் பிறகு நீங்கள் என் கிராமத்தைக் கடந்து செல்ல வேண்டிய வர்களா? அல்லது தடுக்கப்பட வேண்டி யவர்களா? என்பதை நான் முடிவு செய்கி றேன்!”

“எல்லை மீறிப் பேசுகிறாய்?”

“யார்?”

“நீ தான்!”

“நானா?”

“ஆம்!”

“நான் எனது கடமையைத்தான் செய்கிறேன்” என்றவன் தனது உதட்டி னைக் குவித்துச் சீழ்க்கை ஒலி எழுப் பினான். அருகில் குளக்கரை மற்றும் போதி மரத்தின் கிளைகளில் மறைந் திருந்த நான்கைந்து காவல் வீரர்கள்

நீண்ட வாள் மற்றும் ஈட்டிகளுடன் அவர்கள் இருவரையும் சூழ்ந்தார்கள். அவர்கள் அனைவரும் அந்தக் காவலனைப் போன்றே கருப்பு நிற உடையணிந்து காணப்பட்டனர். அவர்கள் அனைவரும் தங்கள் முகத்தினைக் கருப்புத் துணியினால் மூடியிருந்தனர். அவ்வீரர்கள் மட்டுமல்லாமல் காவல் நாய்கள் மூன்று சற்றுத் தொலைவில் தனது நீண்ட நாக்கினைத் தொங்க போட்டுக் கொண்டு மூச்சு இறைத்தபடி இருவரை நோக்கியும் நின்று கொண்டிருந்தன.

சற்று முன் மரத்தில் காணப்பட்ட உருவம் போன்ற நிழல்கள் இவர்கள்தான் என்பதைப் புரிந்து கொண்டனர் இருவரும்.

கள்வனாக உலா வந்த காலகட்டத்தில் காவலர்கள், நாய்கள் பலவற்றைத் திறத்துடன் சமாளித்து அவற்றைப் பலமுறை முறியடித்திருந்த வில்லவன் அவற்றைக் கண்டு அச்சப்பட்ட

தாகத் தெரியவில்லை. ஆனால், டாள் தொபியாஸ், சூழ்ந்துவிட்ட வீரர்களையும் அந்த நாய்களையும் கண்டவன், 'இந்தக் காவலர்களை விரட்டுவது சிரமம் அல்ல. ஆனால், இவர்களின் நாய்களைச் சமாளிப்பது சற்றுச் சிரமம்தான்' என எண்ணிக் கொண்டான்.

"எதற்கும் உதவாத நாய்கள், வாளினைக் கூடச் சரியாகப் பிடிக்கத் தெரியாத இந்த வீரர்கள் இவர்களைக் கொண்டு எங்கள் இருவரையும் தோற்கடிக்க இயலும் என நீ நம்புகிறாயா?" எனக் காவலனைப் பார்த்து அலட்சியத்துடன் வினவினான் வில்லவன்.

வில்லவன் கூறியதைக் கேட்டுப் பலமாகச் சிரித்த ஊர்க்காவலன், "உங்கள் இருவரையும் தோற்கடிக்க நான் ஒருவன் போதாதா? இவர்கள் உங்களது இரு புரவிகளையும் பிடித்துக் கட்டவே நிற்கிறார்கள்!" என்றான் அலட்சியத்துடன்.

https://telegram.me/aedahamlibra

காவலன் கூறியதைக் கேட்டதும் கடும் கோபமடைந்த டாள்தொபியாஸ், "காவலனே, வரம்பு மீறுகிறாய் நீ! நாங் கள் இருவரும் யார் என்று தெரியாமல் நீ விளையாடுகிறாய். வினை வேண்டாம்! கருக்கள் பொழுதிலேயே இந்த மண் ணில் குருதியைப் படியவைக்க வேண் டாம் என நினைக்கிறேன் நான்!" என முழங்கினான்.

"கள்வனைத் துணைக்கு அழைத்து வந்திருக்கும் உன்னிடமும் நான் அதையேதான் கூற விரும்புகிறேன். இந்தக் கருக்கள் பொழுதில் என் கையி லிருக்கும் இந்தச் சாத்தனின் செண்டா யுதமும் குருதியை ருசிப்பதில் எனக்கும் விருப்பம் இல்லைதான்!" எனச் செண் டினை உயர்த்தியபடி டாள்தொபியாசிடம் கூறலானான்.

"கள்வனைத் துணைக்கு அழைத்து வந்திருக்கிறேனா?" வியப்பு டன் வினவினான் டாள்தொபியாஸ்.

https://telegram.me/aedahamlibra

“ஆமாம்! உனக்கு அருகில் நிற்பவன் வில்லவன் தானே! பொன்பற்றிக் கிராமத்தையே தனியொருவனாகச் சூறையாடிய மாகள்வன் தானே இவன்! தனது முகத்தைப் பிடரி முடிக்குள் மறைத்துக் கொண்டால் இந்த நிலவொளியில் அவனை அடையாளம் காண இயலாது என நினைத்துக் கொண்டானா?” எனக் கோபத்துடன் தெரிவித்தான் காவலன்.

இந்த இரவில் தன்னை அடையாளம் கண்டு கொண்ட இந்தக் காவலன் யாராக இருப்பான் எனச் சிந்தித்த வில்லவன் இதற்கு மேல் மாறுவேடத்தில் எந்தப் பயனும் இல்லை என்பதை அறிந்து கொண்ட வில்லவன் அவனது முகத்தில் அணிந்திருந்த பிடரி முடியைப் பற்றி இழுத்துத் தூர எறிந்தான்.

“வில்லவா, இத்தனை காலம் கழித்து நீ என்னிடமா அகப்பட வேண்டும்! களவு மேற்கொள்ளும்போது உன்

னைக் கையும் களவுமாகப் பிடிக்க வேண்டும் என நினைத்துக் கொண்டி ருந்தேன் நான். அதுவே என் வாழ் நாள் நோக்கமாகவும் இருந்தது. பல காவலர்களை ஏமாற்றித் தந்திரமாகவும், வீரமாகவும் தப்பியிருக்கும் கள்வனான உன்னை என்று பிடிக்கிறேனோ அன்றே என் வாழ்வின் உன்னதமான நாள் என்று எண்ணிக் கொண்டு உன்னைத் தேடிக் கொண்டிருக்கிறேன்" எனக் கூறிய காவ லன் பிறகு, "அந்த நோக்கம் இன்று நிறை வேறப்போகிறது" எனக் குதூகலிக்கவும் செய்தான்.

ஊர்க் காவலன் கூறியதைக் கேட்டு அருகில் நின்ற ஊர்க் காவல் வீரர்கள் ஆரவாரமிடலாயினர்.

அவன் கூறியதைக் கேட்டதுமே வில்லவன் தனது இடையுறையிலிருந்து வாளினை உருவினான்.

டாள்தொபியாஸ், "காவலரே, இவர் முன்னர்க் கள்வர்தான். ஆனால், இப்

போது சோழ தேசத்தின் மதிப்புமிகு உப தளபதி!” என்றான்.

“அப்படியெனில் தாங்கள்?”

தனது வயோதிகன் வேடத்தைக் களைத்தபடியே டாள்தொபியாஸ், “நான் புகாரின் உபதலைவன் டாள்தொபி யாஸ்” என்றான் கம்பீரமான குரலில்.

“உங்கள் புரவியின் சாதியைக் கண்டபோதே எதிர்பார்த்தேன் உபத லைவரே. நான் மறித்த உடனே தாங் கள் உங்கள் இலச்சினைப் பதக்கத்தைக் காட்டியிருந்தால் உங்களை அப்போதே அனுப்பியிருப்பேனே!” என்றான் காவ லன்.

“தாங்கள் தங்கள் காவல் பணி யைச் சிரத்தையுடன் மேற்கொள்கிறீர்கள். அதில் என்ன தவறு இருக்கிறது. நாங்கள் கிளம்புகிறோம்!” என்றான் டாள்தொபி யாஸ்.

https://telegram.me/aedahamlibra

"அதில் சிறு திருத்தம். தாங்கள் மட்டுமே இங்கிருந்து செல்லலாம்!"

"நான் மட்டுமா?"

"ஆமாம். இந்தக் கள்வனை உங்களுடன் அனுப்ப இயலாது!"

"என்ன?" கோபமடையத் தொடங்கினான் டாள்தொபியாஸ்.

"ஆமாம். கள்வன் எனத் தெரிந்தும் என் கிராமத்தைக் கடக்க என்னால் அனுமதிக்க இயலாது! தாங்கள் இலச்சினைப் பதக்கத்தை உயர்த்தினாலும் என் கடமையிலிருந்து என்னால் நழுவ இயலாது!"

இந்தக் காவலனிடம் பேசிப் பயனில்லை என நினைத்த டாள்தொபியசும் வாளினை உருவினான். காவல் வீரர்கள் அவர்கள் இருவரையும் சூழ்ந்து கொண்டார்கள். ஒருகணம் அவர்களையும் வில்லவனையும் பார்த்த டாள்தொபியாஸ் தனது வாளினை உறைக்குள் போட்டுக்

கொண்டவன், “விரைவில் தோற்கடித்து விட்டு வாருங்கள்! காத்துக் கொண்டிருக் கிறேன்” எனக் கூறிவிட்டு நகர்ந்தான்.

அந்தக் காவலர்களை வில்லவன் தனியாக எதிர் கொண்டான்.

அதிகாலைக் கருக்கள் பொழு தில் காவல் தெய்வமான சாத்தனின் சிலைக்கு முன் உக்கிரமான யுத்தம் தொடங்கியது. தன்னைத் தாக்க வந்த காவல் வீரர்களின் வாள்களை ஒரே நேரத்தில் தடுத்த வில்லவன் எதிர் தாக் குதலைத் தொடுக்கலானான். வாள் வீச் சில் பெரும் சூரனான வில்லவன் அவர் களைக் கொன்று முன்னேற வேண் டும் என நினைத்திருந்தால் அவனை எதிர்க்க நினைத்த அடுத்தக் கணத்தி லேயே அவர்களின் பிணங்களின் மீது பயணித்துச் சென்றிருப்பான். வாள் வீச் சில் எதிர்ப்பவர்களைக் கொன்று முன் னேறுவது எளிது. ஆனால், எந்தவி தக் காயமும் ஏற்படுத்தாமல் அவர்க

ளைத் தோற்கடிப்பது என்பது மிகவும் கடினம். தங்களது கடமையினைச் செய்து கொண்டிருக்கும் காவல் வீரர்களை உப படைத் தளபதியான தான் கொல்வது முறையற்ற செயல் என நினைத்த வில் லவன் அவர்களின் ஆயுதத்தை மட்டும் இழக்க வைக்க வேண்டும் எனும் நோக் கோடு சமர் செய்து கொண்டிருந்தான். இருப்பினும், அடுத்தச் சில கண நேரத் திற்கெல்லாம் அவர்களின் வாட்கள் மற் றும் ஈட்டிகளை இருளில் பறக்க விட்டு விட்டான். ஆயுதத்தை இழந்த நிராயுதபா ணிகளாக நின்ற காவல் வீரர்கள் மீண்டும் தங்கள் ஆயுதங்களைத்தேடி எடுத்துக் கொண்டனர். ஆனால், அவர்கள் மீண் டும் வில்லவனிடம் நெருங்கவில்லை.

"உன் வாள் வீச்சின் வேகத்தைப் பற்றியும், அதன் சாதுர்யத்தைப் பற்றி யும் கேள்விப்பட்டிருக்கிறேன் கள்வனே! ஆனால், இபோதுதான் முதன் முறையாக நேரில் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்திருக் கிறது. சிறு காயங்களைக் கூட ஏற்படுத்

https://telegram.me/aedahamlibra

தாமல் அவர்களின் வாட்களைப் பறித்த உனது திறத்தைக் கண்டு வியக்கிறேன் நான்!” எனக் கூறியபடியே வில்லவனிடம் நெருங்கினான்.

தேர்ந்த காவலனுக்கும், திறமையான கள்வனுக்கும் இடையில் அங்கு மீண்டும் ஒரு யுத்தம் தொடங்கியது. காவல் வீரர்களை எளிதில் தோற்கடித்ததைப் போன்று அவர்களின் தலைவனான இந்தக் காவல் தலைவனையும் எளிதில் தோற்கடித்து விடலாம் என எண்ணியபடியே வாளினை சுழற்றினான் வில்லவன். ஆனால், அவனது தாக்குதல்கள் அனைத்தையும் திறமையுடனும், எளிதாகவும் செண்டாயுதத்தினால் தடுத்துக் கொண்டிருந்தான் அந்தக் காவலன்.

அதிகப் பாரம் மிகுந்த அந்தச் செண்டாயுதத்தைச் சுழற்றி வேகமாக இயக்கிய காவலனின் பலத்தைக் கண்டு வில்லவன் ஆச்சர்யப்பட்டான்.

அதிலும், வில்லவனின் தாக்குதல்கள் அனைத்தையும் திறம்படச் சமாளித்த அவனது திறத்தைக் கண்டு வில்லவன் பிரமிக்கவே செய்தான். பதில் தாக்கு தல் தொடுக்காமல் சில கண நேரத் திற்கு வில்லவனின் தாக்குதல்களைச் சமாளித்த காவலன் திடீரென்று எதிர் தாக்குதல் தொடுக்கத் தொடங்கினான். அதுவரை வில்லவன் செண்டினை எதிர் கொண்டதில்லை. முதன் முறையாக இந்த ஊர்க் காவலிடம் தான் செண் டினை எதிர்கொள்கிறான். வில்லவனும் தொடக்கத்தில் சமாளித்தான். ஆனால், செண்டின் அடுத்தடுத்த தாக்குதலை வில்லவனின் வாளினால் எதிர்கொள்ள இயலவில்லை. தடுமாறினான்.

செண்டினை ஓங்கி வில்லவனின் கழுத்தினை நோக்கி வெட்டினான் காவ லன். அதைத் தனது வாளினால் தடுத்‌ தான் வில்லவன். அக்கணம் வில்ல வன் தனது கைகளில் ஏதோ ஒருவித அதிர்ச்சி தோன்ற அக்கணம் வாளின்

பிடியைத் தளர்த்திவிட்டான். அடுத்தக் கணம் அவனது வாள் காற்றில் விர்ரென்று பறந்து சென்று இருளில் மறைந்துவிட்டது. ஆயுதத்தை இழந்த வில்லவனைச் சுற்றி நின்ற காவல் வீரர்கள் ஈட்டி மற்றும் வாள்களைக் கொண்டு சூழ்ந்து கொண்டார்கள்.

செண்டினை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு டாள்தொபியாஸ் முன் சென்று நின்றான் காவலன். வில்லவன் தோற்றுவிட்டதை நம்ப இயலாமல் வில்லவனையே பார்த்துக் கொண்டு நின்றான் டாள்தொபியாஸ். அதிலும் அக்காவலன் செண்டினை வேகமாகச் சுழற்றிய விதம் அவனை வியப்பில் மூழ்கடித்திருந்தது. அவனை ஒரு கை பார்த்துவிட வேண்டும் என எண்ணிய டாள்தொபியாஸ் வாளினை உயர்த்திக் கொண்டு அவனை எதிர்க்க சித்தமானான்.

காவலனுக்கும், டாள்தொபியாசிற்கும் இடையில் மீண்டும் சமர் தொடங்

கியது. டாள்தொபியாஸ் முழுக்க முழுக்க யவன முறையில் வாளினை சுழற்றிக் கொண்டிருந்தான். சமரின் தொடக்கம் முதல் டாள்தொபியாசின் கையே ஓங்கி யிருந்தது. இருவரும் மாறி மாறி தாக் கிக் கொண்டார்கள். இருவரின் ஆயுதங் களும் மோதிக் கொண்ட 'கனாங்' என்ற ஒலி மட்டும் வெகு நேரம் அவ்விடத் தில் எழுந்து கொண்டிருந்தது. டாள்தொ பியாஸ் எப்படியெல்லாமோ தாக்கியும் செண்டினை மட்டும் காவலனின் கையி லிருந்து பிரிக்க இயலவில்லை. காவல னின் கை ஒரு கணத்தில் சோர்ந்துவிட் டதைப் போன்று உணர்ந்த டாள்தொபி யாஸ் வேகமாகச் செங்குவீரன் கற்றுக் கொடுத்த யுக்தியின்படி சற்று அதிர்ச்சியு டன் காவலனின் செண்டினைத் தாக்க லானான். அந்தத் தாக்குதலையும் வாங் கிக் கொண்டான் காவலன்.

வாளினை திரும்ப இழுத்தான். வாள் வரவில்லை. திரும்பவும் இழுத் தான் டாள்தொபியாஸ். அப்போதும்

வாள் வரவில்லை. வாளானது செண்டின் முனையில் காணப்படும் ஈட்டி போன்ற கூர்மையான பகுதிக்கும், சிறு சிறு வேல் முனைக்கும் இடையில் சிக்கியிருந்தது.

டாள்தொபியாசைக் கண்டு ஒரு கணம் நகைத்தான் அந்தக் காவலன். நகைத்தபடியே செண்டினை வேகமாகச் சுழற்றினான். செண்டோடு டாள்தொபி யாசின் வாள் சுழன்றது. கை மணிக்கட் டும் வாளோடு சேர்ந்து சுழல டாள்தொபி யாஸ் வாளின் பிடியை இழந்தான். அடுத் தக் கணம் வாள் அவனது கையிலிருந்து விடுபட்டு கீழே விழுந்தது. ஆயுதத்தை இழந்த டாள்தொபியாசை இரண்டு காவ லர்கள் சூழ்ந்து கொண்டார்கள்.

தோல்வியைக் கண்டு ஆத்திர மடைந்த டாள்தொபியாஸ் இடையில் வைத்திருந்த குறுவாளை எடுத்து தனது கழுத்தை நோக்கி வேகமாக இறக்கலா னான்.

https://telegram.me/aedahamlibra

# 9. வலிய கரம்

டாள்தொபியாசின் அத்தகைய முடிவை யாருமே எதிர்பார்த்திருக்கவில்லை. புகார் மண்ணில் முதன் முறையாகச் செங்குவீரனிடம் டாள்தொபியாஸ் தோல்வியடைந்தபோது தோல்விக்குப் பதிலாக மரணத்தையே யாசித்தான். ஆனால், அவனோ டாள்தொபியாசை உபதளபதியாக்கி டாள்தொபியாசின் வீரத்தைக் கௌரவித்தான். அடுத்ததாக மாடு மேய்க்கும் இடையன் வேடத்தில் காணப்பட்ட கரிகாலனிடம் தோற்றபோதும் தோல்விக்குப் பரிசாக மரணத்தையே யாசித்தான். ஆனால், கரிகாலரோ டாள்தொபியாசின் தோல்வியைப் பொருட்படுத்தாது அவனிடமே வாளினை ஒப்படைத்துவிட்டார். பிறகு அவனது வீரத்திற்குப் பரிசாக உபபடைத் தலைவனாக மாற்றினார். அந்தத் தோல்விகள் அனைத்தும் டாள்தொபியாசி

னால் ஏற்றுக்கொள்ள முடிந்தது. காரணம், செங்குவீரன், கரிகாலர் இருவருமே இவனை விடத் தகுதியில் உயர்ந்தவர்கள். ஆதலால் அந்தத் தோல்வி அவனை விரக்தியடையச் செய்யவில்லை. மாறாக அவனது திறத்தை அதிகரிக்கவே செய்தன. ஆனால், சோழ தேசத்தின் உபதலைவனானவன் சிறு கிராமத்தைக் காவல் காக்கும் காவலனிடம் தோற்றுவிட்டதை எளிதில் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. தன்னை வென்றவனிடம் உயிரைப் பறித்துவிடு எனக் கேட்பதற்குப் பதில் அவனே தனது உயிரைப் போக்கிக்கொள்ள வேண்டி இடையிலிருந்த குறுவாளை எடுத்து கழுத்தை நோக்கி வேகமாக இறக்கினான்.

அவனது செயலுக்குக் காரணம் அவனுள் ஓடும் அரச மரபின் குருதியா? அல்லது யவன தேசத்தின் பழக்கமா? என அறிவது சற்றே சிரமம் தான். ஒரு நாட்டின் இளவரசனான அவனால் அந்தத் தோல்வியை அவ்வளவு எளிதில் தாங்கிக்கொள்ள இயலவில்லை. ஆதலால்தான் செண்டாயுதத்தைத் தாங்கிப் போரிட்ட ஊர்க் காவலனி

மேற்கொள்ள முடிவெடுத்தான். செண் டாயுதத்தை எதிர்த்து டாள்தொபியாஸ் போரிட்டது அதுவே முதல் முறை. அதற் குமுன் அவன் செண்டாயுதத்தை எதிர்த் தது கிடையாது. ஆதலால்தான் செண் டிடம் வாளினை எளிதில் பறிகொடுத்து விட்டான்.

தோல்வியினால் ஏற்பட்ட அவமா னத்தினைத் துடைப்பதற்காக உயிரைப் போக்கிக் கொள்வதே சரியான முடிவு என நினைத்தவன் அந்த முடிவைப் பற் றிச் சிந்திக்காமல் உடனே செயல்படுத் தவும் முனைந்தான். யாரும் எதிர்பார்க் காத அந்நேரத்தில் இடையில் மறைத்தி ருந்த குறுவாளை எடுத்துக் கழுத்தினை நோக்கி செலுத்தலானான். ஆனால், அப் போது டாள்தொபியாசும் எதிர்பார்க்காத வலிய கரம் ஒன்று அவனது கையைப் பற்றியது. கழுத்தினை நோக்கி இறக் கிய குறுவாளின் முனையானது கழுத்தில் பதிந்து துளிக் குருதியும் கசிந்தது. கண நேரம் அந்த வலிய கரம் டாள்தொபியா

சின் கையைத் தடுக்கத் தாமதித்திருந் தால் டாள்தொபியாசின் கழுத்தில் குறு வாள் இறங்கியிருக்கும்!

அந்த வலிய கரத்தின் பிடியிலிருந்து கையை விடுவிக்கப் போராடினான் டாள் தொபியாஸ். டாள்தொபியாஸ் போராடத் தொடங்கியதும் அந்த வலிய கரத்தின் பிடி இறுகத் தொடங்கியது. தனது கை இரும் பினால் நசுங்குவதைப் போல உணர்ந்த டாள்தொபியாஸ் குறுவாளினைக் கையி லிருந்து நழுவ விட்டான். குறுவாள் கையிலிருந்து நழுவியதும் டாள்தொபி யாசின் கையை விட்ட அந்த வலிய கரம் அவனைக் காவலர்கள் அருகில் தள்ளி விடவும் செய்தது.

டாள்தொபியாசைக் காவல் வீரர் கள் வாள் மற்றும் வேலினால் சூழ்ந்து கொண்டனர்.

வலி 'விண்'ணென்று கையிலிருந்து தலைக்கு ஏற தனது கையைப் பார்த்தான் டாள்தொபியாஸ். அவனது கை சிவந்து

போயிருந்ததை அந்த மங்கிய நிலவொளியிலும் கண்டான். அந்த வலிய கரத்திற்கு உரியவரைப் பார்த்தான். அவரது முகத்தில் நிலவின் மங்கிய ஒலி படிந்திருந்தது. முகத்தில் வெண்தாடியும், நெற்றி முழுவதும் திருநீற்றுடன் நின்று கொண்டிருந்தார் அந்தப் பெரியவர். அவரது கையின் வலிமையையும், அவரது தோற்றத்தையும் கண்ட டாள்தொபியாஸ் அக்கணம், 'இந்த வயதிலும் இவர் மட்டும் கையில் வாள் ஏந்தினால் எதிர்த்து நிற்பவர்களின் கதி அதோகதிதான்' என்று நினைத்துக் கொண்டான்.

செண்டாயுதத்துடன் அந்தப் பெரியவருக்கு அருகில் வந்து நின்ற ஊர்க் காவலன், "உபதலைவரே, களத்தில் தோல்வி என்பது இயல்பானதே! முதுகில் புறப்புண் வாங்குபவர்களே வாள் வடக்கிருந்து உயிரை விடுவர். தாங்கள் பெரும் வீரர். தங்கள் முடிவு ஒருகணம் எங்கள் அனைவரையும் கலங்கவைத்துவிட்டது" என்றான் வருத்தத்துடன்.

டாள்தொபியாஸ் எந்தப் பதிலும் பேசாமல் அமைதியாக நின்று கொண்டிருந்தான்.

"நீங்கள் இருவரும் இங்கிருந்துக் கிளம்பலாம். ஆனால் ஒரு நிபந்தனை?" என்றான் ஊர்க் காவலன்.

"நிபந்தனையா?"

"ஆம்!"

"சிறு கிராமத்தின் காவலனான நீ இந்நாட்டின் உபபடைத் தலைவனிடம் நிபந்தனை விதிக்கிறாயா?"

"புகாரில் ஆயுதம் தரித்திருக்கும் யவனக் காவலர்களுக்குத்தான் தாங்கள் தளபதி. எனக்கு அல்ல. தங்கள் அதிகாரமும் என்னிடம் செல்லுபடியாகாது!"

"தோல்வியைத் தழுவியிருப்பதால் உன் நிபந்தனையைக் கேட்க சம்மதிக்கிறேன். என் உபதளபதியை உன்னிடம் விட்டுச் செல்வேன் எனக் கனவிலும் கரு

தவேண்டாம். நான் உயிருடன் இருக்கும் வரை உபதளபதியை ஒப்படைக்க மாட்டேன்.”

“இனி எனக்கு அந்தக் கள்ளன் தேவையில்லை.”

“வேறு என்ன நீ என்னிடமிருந்து எதிர்பார்க்கிறாய்?”

டாள்தொபியாசையும், வில்லவனையும் கவனித்தபடியே அவர்களை ஒரு சுற்று சுற்றிய ஊர்க்காவலன், “உன் உபதளபதி இங்கிருந்து உயிருடன் வெளியேற வேண்டுமெனில் உன் இடையில் மறைத்து வைத்திருக்கும் ஓலையை அளித்துவிட்டுச் செல்!” என்றான்.

‘ஊர்க் காவலனுக்கு ஓலை எதற்கு?’ என இருவருமே அதிர்ச்சியடைந்தார்கள். ஆனால், அடுத்தக் கணம் பெரும் சந்தேகமடைந்தார்கள். வில்லவனும், டாள்தொபியாசும் அவர்களுக்கு

https://telegram.me/aedahamlibra
முன் நின்ற இருவரையும் கூர்ந்து கவனித்தார்கள்.

டாள்தொபியாசின் முகத்தில் கணத்திற்குக் கணம் அதிர்ச்சி கூடிக் கொண்டிருந்தது. ‘சேர மன்னன் பெருஞ் சேரலாதனும். இருங்கோவேளின் மைந்தன் யுவராஜனும் சோழ நாட்டில் மாறு வேடத்தில் திரிகிறார்கள்’ என்ற ஒற்றுச் செய்தி பல இடங்களிலிருந்து அவனுக்கு எட்டியிருந்தது. வீரர்களை எச்சரிக்கைப் படுத்தியிருந்தான். நெற்றியில் திருநீறு, வெண்தாடி ஆகியவற்றையும், கம்பீரமான தோற்றத்தையும் கண்ட டாள் தொபியாஸ், “இவர் சேரமான் பெருஞ் சேரலாதனாகத்தான் இருக்க வேண்டும்” என முணுமுணுத்தான். அவருக்கு அருகில் நின்ற ஊர்க் காவலனைக் கண்ட போது டாள்தொபியாசிற்கு, கோட்டைத் தலைவனாக அறிவித்துக் கொண்டு செங்குவீரரைக் கைது செய்யப் புகார் கோட்டைக்கு வந்த உறைந்தை வீரனை நினைவுபடுத்தியது. புகார் கோட்டைக்கு

உறைந்தை வீரர்களுடன் வந்திருப்ப வன் இருங்கோவின் மகன்தான் என்ற உண்மையை அப்போது யாரும் அறிந் திருக்கவில்லை. ஆனால், பின்னாளில் அறிந்து கொண்டார்கள். புகார் கோட் டைக்கு வந்திருந்தபோது காணப்பட்ட இருங்கோவின் மகனுக்கும், இப்போது செண்டினை சுழற்றும் இருங்கோவின் மகனுக்கும் உள்ள வேறுபாடு மலைக் கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடு என நினைத்தான். ஆனால், அன்று கோழை யாகச் செங்குவீரனிடம் அடிபட்டு ஓடிய வன் இன்று இருவரையும் வீழ்த்தும் அள விற்குச் செண்டினைச் சுழற்ற எங்கிருந் துக் கற்றுக் கொண்டான் என நினைத்து வியக்கவே செய்தான்.

"புகாரின் உபதலைவர் என்ன முடி வெடுத்திருக்கிறார்?" என அந்தப் பெரி யவரின் குரல் கேட்டதும் அதிர்ச்சியிலி ருந்து விடுபட்ட டாள்தொபியாஸ், "நீங் கள் இருவரும் யார்?" என்று வினவி னான்.

https://telegram.me/aedahamlibra

பதிலுக்கு, "ஊர்க்காவலன்" என்றான் காவல் தலைவன்.

"ஊர்க்காவலன் உடைக்குள் மறைந்திருப்பவனைப் பற்றி வினவுகிறேன் நான்!" என்றான் டாள்தொபியாஸ்.

"அது உனக்குத் தேவையில்லாத ஒன்று!" என்றான் ஊர்க்காவலன்.

டாள்தொபியாசும், வில்லவனும் உதவி கிடைக்கா நேரத்தில் எதிரிகளிடம் சிக்கிக் கொண்டதை நினைத்து வருந்திக் கொண்டிருந்தனர். இவர்களிடமிருந்து எப்படித் தப்பிக்கலாம் என நினைத்து பார்வையைச் சுற்றிலும் செலுத்தினர்.

'எவ்வளவு துணிச்சல் இருந்தால் எதிரிகள் இருவரும் சோழ தேசத்திற்குள் மாறுவேடத்தில் புகுந்திருப்பார்கள்' என எண்ணி அதிர்ச்சியடைந்தார்கள்.

அந்தப் பெரியவர் கையை உயர்த்த காவலர்கள் இருவரையும் சூழ்ந்தார்கள்.

https://telegram.me/aedahamlibrary

குரலை உயர்த்திய காவல் தலைவன், “ஓலையை எங்களிடம் ஒப்படைத்து விட்டு உயிரைக் காப்பாற்றிக்கொள்ளுங் கள்!” என்றான் திமிருடன்.

அவன் கூறியதைக் கேட்டுக் கொதித்த வில்லவன், “ஓலையுடன் ஒப் பிடுகையில் உயிர் எங்களுக்கு ஒரு பெரிய பொருட்டே அல்ல என்பதை நீ நிச்சயம் அறிவாய் என நினைக்கிறேன்” என வில்லவன் கூறிக் கொண்டிருந் தபோது இடைமறித்த டாள்தொபியாஸ், “உயிரைப் பெரிதாக நினைத்து கடமை யிலிருந்து நழுவும் பேடி என்று எங்களை நீ நினைத்ததுதான் உன் பெரும் பிழை. எங்கள் உடலில் உயிர் உள்ளவரை உனக்கு எதுவும் சிக்காது” எனக் கூறிக் கொண்டிருந்த போதே காவலன் கையி லிருந்த வேல் ஒன்றைப் பிடுங்கிய டாள் தொபியாஸ் திடீரென்று காவலர்களைத் தாக்கினான். அதே நேரத்தில் வில்லவ னும் தரையில் உருண்டு கீழே கிடந்த டாள்தொபியாசின் வாளினை எடுத்துக்

கொண்டு காவலர்களை எதிர் கொண் டான்.

காவல் வீரர்களில் இருவர் தோளில் வேலும், வாளும் பாய்ந்து கீழே சாய்ந் தார்கள். அப்போது டாள்தொபியாசின் வேலையும், வில்லவனின் வாளையும் அந்தப் பெரியவரது கையில் இருந்த நீண்ட வேல் ஒரே நேரத்தில் தடுத்து நிறுத்தியது.

அடுத்தடுத்துத் தாக்கிய வில்லவ னின் வாளினை எளிதில் தடுத்து நிறுத் தின அந்தப் பெரியவரின் நீண்ட வேல். வில்லவன் மட்டும் தனியாகப் போரிடுவ தைக் கண்ட டாள்தொபியாசும் அவனு டன் இணைந்து கொண்டான். இருவரும் சேர்ந்து சுழன்று சுழன்று அந்தப் பெரி யவரைத் தாக்கினர். ஆனால், இருவரின் முயற்சியும் சிறிதும் பலனளிக்கவில்லை. இருவரின் அதிவேக முரட்டுத் தாக்கு தல் அனைத்தையும் எளிதாகத் தடுத்து நிறுத்திக் கொண்டிருந்தார் அந்தப் பெரி

https://telegram.me/aedahamlibra

யவர். ஆனாலும் அந்தப் பெரியவரின் மார்பிலும் சில கீறல்கள் விழவே செய்தன. அதைக்கண்ட அந்தப் பெரியவர் ஆவேசம் கொள்ளாமல் நிதானமாகவே போரிடலானார்.

காவல் தலைவனும், காவல் வீரர்களும் சற்றுத் தொலைவில் நின்று அம்மூவரின் சமரை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஒற்றுமையாகப் போரிடும் வரை இருவரையும் தோற்கடிக்க இயலாது என நினைத்த அந்தப் பெரியவர் இருவருக்கும் இடையில் புகுந்து அவர்களைப் பிரிக்கலானார். இடப்புறம் டாள் தொபியாசும், வலப்புறம் வில்லவனும் நின்று கொண்டு அவரைத் தாக்கிக் கொண்டிருந்தனர். இரவினில் ஆயுதங்கள் உராய்ந்ததால் எழுந்த தீப்பொறியும், அவ்வாயுதங்கள் மோதியதால் உண்டான சத்தமும் அவ்விடத்தைக் கதிகலங்க அடித்துக் கொண்டிருந்தது.

சோழ தேசத்தின் படைப் பிரிவுக்குத் தலைமை வகிக்கும் பெரும் வீரர்கள் இருவரின் வாள்வீச்சுகளைத் தனியாளாகத் தடுத்துக் கொண்டிருந்த அந்தப் பெரியவரை நினைத்து வியந்தபடியே தாக்கிக் கொண்டிருந்தனர் இருவரும்.

டாள்தொபியாசையும், வில்லவனையும் தனித்தனியாகப் பிரித்தவர் இருவரும் சிந்திக்கக்கூட இயலாவண்ணம் தாக்கிக் கொண்டிருந்தார். டாள்தொபியாசை சற்றுத் தொலைவிற்கு நகர்த்தியவர் வில்லவனைத் தாக்கலானார். வில்லவன் வாளினை உயர்த்தியபோது அவனது மார்பில் எட்டி உதைத்தார். நான்கைந்தடி பின்னால் ஓடியவன் கீழே விழலானான். உடனே மற்ற காவல் வீரர்கள் வில்லவன் திமிராத வண்ணம் அவனைப் பிடித்துக் கொண்டார்கள். அந்தப் பெரியவரின் உதையை மார்பில் வாங்கிய வில்லவன் மூச்சுவிடச் சிரமப்பட்டுக் கொண்டு கீழே கிடந்தான்.

வேலினைத் தோளில் போட்டுக் கொண்டு டாள்தொபியாசிடம் வந்தார். ஆவேசத்துடன் போரிட்ட டாள்தொபியாசின் வேல் வீச்சினை சிறிது நேரம் தடுத்துக் கொண்டிருந்தவர் சமயம் கிடைத்ததும் அவனது மார்பிலும் எட்டி உதைத்தார். அடுத்தகணம் ஊர்க் காவலனுக்கு அருகில் போய்க் கீழே விழுந்தான் டாள்தொபியாஸ். அவனுக்குச் சற்றுத் தொலைவில் வேல் கீழே விழுந்தது. வேலினை எடுக்கக் கையை நகர்த்தினான். அடுத்தகணம் டாள்தொபியாசின் மார்பின் மேல் வேலினை வைத்த அந்தப் பெரியவர், “யவனனே, வீண் முயற்சி செய்து உயிரைப் போக்கிக் கொள்ளாதே!” என அவனை மிரட்டியவர், அருகில் நின்ற ஊர்க் காவலனிடம், “தாமதிக்க வேண்டாம். இவனது இடையுறையிளிருந்து ஓலையை எடு!” எனக் கட்டளையிட்டார்.

அக்கட்டளையைக் கேட்டதுமே வில்லவனும், டாள்தொபியாசும் துடிக்

கலானார்கள். காவலர்களின் பிடியில் இருந்த வில்லவன் உரக்கக் கத்தினான், “டாள்தொபியாஸ் எந்தச் சூழலிலும் ஓலை இவர்களின் கைகளில் சிக்கக்கூடாது!” எனச் சத்தமிட அடுத்தக் கணம் அவனது குரல் நின்றுவிட்டது.

மார்பின் மேல் இறங்கத் தயாராகக் காணப்பட்ட அந்தப் பெரியவரின் வேலினைப் பார்த்தபடியே, ‘இவர்களின் கைகளில் ஓலை சிக்கினால் சேரத் தலைநகர் வஞ்சிக்குச் சென்றிருக்கும் வானவல்லியின் உயிருக்கு ஆபத்தாகிவிடும். இருங்கோவின் ஓலையை இடைமறித்து வாசித்த ரகசியம் வெளிப்பட்டுவிடும். உயிரே போனாலும் சரி ஓலையில் இருக்கும் ஒரு வரியைக் கூட இவர்கள் அறிந்துகொள்ளக் கூடாது’ என எண்ணியவன் கையை இடையை நோக்கி நகர்த்தினான்.

அவனது கை இடையை நோக்கி நகர்ந்ததைக் கண்ட அந்தப் பெரிய

வர், "நீயே ஓலையை எடுத்து என்னி டம் கொடுக்கப் போகிறாயா? நல்லது! பிழைக்கத் தெரிந்த யவனன்தான் நீ!" எனக் கூறினார் மகிழ்ச்சியுடன்.

இடையின் அறைச்சுருளில் பத்தி ரமாக வைத்திருந்த ஓலையை எடுத்த டாள்தொபியாஸ் அடுத்தக் கணம் அதை நொறுக்கினான். டாள்தொபியா சின் செயலைக் கண்ட அந்தப் பெரியவர் அக்கணத்திலே அவனது கையை ஒரு காலால் மிதிக்கலானார். அவரது மிதி யின் பாரத்தில் அவனது கை நொறுங் குவதைப் போல உணர்ந்தவனது கை தானாகவே ஓலையைத் தரையில் நழுவ விட்டது. சில கண நேரம் முன்பு எந்தக் கையை நசுக்கினாரோ, அதே கையைத் தான் அவர் மிதித்துக் கொண்டிருந்தார்.

இரண்டு துண்டுகளாகக் கீழே விழுந்த ஓலையை எடுத்த ஊர்க் காவ லன் அருகில் காணப்பட்ட சாத்தனின் சிலைக்கு முன் ஏற்றப்பட்டிருந்த விளக்

கினை நோக்கி நகர்ந்தான். டாள்தொபி யாசை விடுவித்த அந்தப் பெரியவர் அரு கில் நின்ற காவலனிடம் வேலினை ஒப்ப டைத்துவிட்டு நகர்ந்தார்.

'ஓலை ரகசியத்தைச் சம்பந்தப்பட் டவர்கள் தவிர வேறு எவரும் அறிந்து கொள்ளக் கூடாது. அப்படி அறிந்தவர் கள் இப்புவியில் வாழும் தகுதியை இழந் தவர்களாக வேண்டும். முதுகில் குறுவா ளைப் பாய்ச்சியவன் என்ற அவப்பெயர் தோன்றினாலும் பரவாயில்லை. கடமை இழந்த வீரனாக மட்டும் இருக்கக்கூடாது' என நினைத்த டாள்தொபியாஸ் அருகில் கிடந்த குறுவாளை எடுத்து வேகமாகச் செயல்பட முனைந்தான்.

அப்போதும் அவனது செயலைத் தடுத்த ஒரு கரம், "டாள்தொபியாஸ், பத றாதே! ஓலையை யாரிடம் கொடுப்பதற் காக நீ கொண்டு வந்தாயோ, அவரேதான் ஓலையை உன்னிடமிருந்து பறித்திருக் கிறார்!" என அவன் மட்டும் கேட்கும்படி

யாகக் கூறவும் செய்தான் காவலன் ஒருவன்.

அடிக்குறிப்பு :

1. வாள் வடக்கிருத்தல் - போரின் போது தோற்றாலோ, புறமுதுகிட நேர்ந்தாலோ அல்லது எதிரியின் ஆயுதத்தினால் முதுகில் புண் ஏற்பட்டாலோ அதனை அவமானமாகக் கருதி வடக்கினை நோக்கி அமர்ந்து கொண்டு வாளினால் கழுத்தை அறுத்துக்கொள்ளும் பழந்தமிழரின் வழக்கம். பழந்தமிழரின் வீர செயல்களுள் வாள் வடக்கிருத்தலும் ஒன்று.

நம் தமிழ் மரபின் வீரசெயலான இந்த 'வாள் வடக்கிருத்தல்'தான் வடக்கிருத்தல் என்றும் சல்லேகனை என்றும் சமண மதத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

https://telegram.me/aedahamlibra

# 10. புதிர் ஓலை

காதோரம் ஒலித்த குரலைக் கேட்டு அதிர்ச்சியடைந்த டாள்தொபியாஸ், சில கண நேரப் பொழுதுகள் உறைந்துபோய்க் கல்லெனத் தரையிலேயே அமர்ந்துகிடந்தான். அதன் பிறகே 'இந்தக் குரல் மிகவும் பழக்கப்பட்டதாக இருக்கிறதே' என எண்ணியவன், குழப்பத்துடன் அந்தக் காவலனைப் பார்க்கலானான்.

"என்னைத் தெரியவில்லையா டாள்தொபியாஸ்?" வினவினான் அந்தக் காவலன்.

குழப்பத்துடனே அக்காவலனையே பார்த்துக் கொண்டிருந்தான் டாள்தொபியாஸ்.

டாள்தொபியாசின் குழப்பத்தை உணர்ந்த காவலன் முகத்தை மறைத்திருந்த கருப்புத் துணியை விலக்கினான்.

அதைக் கண்டவன், “செங்கோடரே! தாங்களா?” என ஆச்சர்யமடைந்தான்.

“ஆமாம் டாள்தொபியாஸ் நானேதான்!” எனச் சிரித்தபடியே தெரிவித்தார் செங்கோடன்.

சேர மன்னன் பெருஞ்சேரலாதனிடம் தோற்று இருங்கோவின் புதல்வன் யுவராஜனிடம் வானவல்லி கொடுத்தனுப்பிய ஓலையை இழந்துவிட்டோமே என எண்ணிக் கொண்டு வேதனையுடன் அமர்ந்திருந்தபோது செங்கோடர் கூறிய சொற்களைக் கேட்ட பிறகுதான் டாள்தொபியாசிற்குப் போன உயிர் திரும்பி வந்தது. உற்சாகம் திரள எழ முயன்றான் டாள்தொபியாஸ். அவனால் அப்போது அவனால் எழ இயலவில்லை. அந்த முதியவரின் தாக்குதலினால் ஏற்

பட்டிருந்த அதிர்ச்சி டாள்தொபியாசை நிலைகுலையச் செய்திருந்தது. அப்போது தான் அவனுக்கு உபதளபதி வில்லவனின் நின்றுவிட்ட குரல் நினைவில் வந்தது.

'அவருக்கு என்ன நேர்ந்தது' என எண்ணிக் கொண்டு பதறியபடி அவனை நோக்கினான் டாள்தொபியாஸ். பேச இயலாதபடி வில்லவனின் வாய் பிளந்தபடி துணியினால் கட்டப்பட்டிருந்தது. வில்லவனிடம் சென்ற செங்கோடன், அவனது கட்டுகளை அவிழ்த்து அவனை விடுவித்தார். செங்கோடன் வில்லவனின் கையைப் பிடித்துத் தூக்க, மார்பினைப் பிடித்துக் கொண்டே எழுந்து நின்றான். பெரும் சிரமப்பட்டு டாள்தொபியாசும் அருகில் கிடந்த வேலினைப் பற்றிக் கொண்டு எழுந்து நின்றான்.

இருவரின் பார்வையும் அருகில் நின்ற அந்தப் பெரியவரை நோக்கி ஒரே நேரத்தில் திரும்பின. இருவரிட

மும் வந்த பெரியவர், "சோழ நாட்டின் படைத் தலைவர்களையும், தளபதிகளையும் தேர்ந்தெடுத்துதான் பொறுக்கி எடுத்திருக்கிறான் விறல்வேல்" என்றார் அவர்.

அந்தக் கம்பீரமான குரலைக் கேட்ட பிறகு அவர் யார் என்று அடையாளம் கண்டுவிட்ட இருவரும் ஓடிச்சென்று, "எங்களை மன்னித்துவிடுங்கள்!" என்றபடியே பணிந்தனர்.

அவர்கள் இருவரும் பாதத்தில் பணியுமுன்பு தடுத்து நிறுத்தி வாழ்த்திய பெரியவர், தொலைவினில் ஓலையைப் படித்துக் கொண்டிருந்த ஊர்க் காவலனை நோக்கி, "கரிகாலா, நம் தளபதிகளின் திறமையைப் பற்றி என்ன நினைக்கிறாய்?" எனப் பெருமையுடன் வினவலானார்.

வாசித்து முடித்த அந்த முறிந்த பனை ஓலையை எடுத்துக் கொண்டு வந்த கரிகாலர், "இவர்களைத் தேர்ந்தெ

டுத்தது நம் படைத்தலைவர் செங்குவீரர் ஆயிற்றே! செங்குவீரரின் படைத் தளப திகளா சோடை போவார்கள்? ஆயுதத் தையே இனி தொட மாட்டேன் என்று பிடிவாதத்துடன் இருந்த வளவனாரை வேலினை ஏந்த வைத்ததோடு மட்டுமல் லாமல் அவரது மார்பின் குருதியையும் வாளினால் சுவைத்துவிட்ட நம் வீரர்க ளைப் பற்றி நான் கூற என்ன இருக்கி றது?" எனப் பதிலுக்கு வினவினார் புன்சி ரிப்புடன்.

"ஆம் வளவா! நீ கூறுவதும் உண் மைதான். சற்று ஏமாந்திருந்தாலும் இவர் கள் இருவரின் ஆயுதங்களும் என் மார் பில் இறங்கியிருக்கும்! எத்தனை வருடங் கள் ஆகிறது இப்படி வீரச் சமர் புரிந்து? உன் தந்தை இளம்பெருஞ்சென்னியும், தாத்தா அழுந்தூர் வேள் திதியனும் இப்ப டித்தான் பெரும் வம்புக்காரர்கள். அவர்க ளின் உள்ளங்கைகள் எப்போதெல்லாம் அரிக்கிறதோ அப்போதெல்லாம் மாறு வேடமிட்டு வம்பிழுக்கச் சென்றுவிடுவார்

கள். சாதாரணப் படை வீரனாகப் பணி யாற்றிய காலத்தில் நானும் அவர்களிடம் சிக்கித் தோற்றிருக்கிறேன்” என்று சிரித் தபடியே கூறினார் வளவனார். அப்போது அவரது முகத்தில் பெருமையின் சாயல் தோன்றியிருந்தது.

“தாங்கள்தானே வைகறைக் கோழி கூவும்வரை உறக்கம் வருவதில்லை என்று வருந்தினீர்கள். எப்படியும் என் தமக்கை வானவல்லி புகாரை நோக்கி வருவார் என்று எதிர்பார்த்தே தங்களை இங்கு அழைத்து வந்தேன். சிறிது விளை யாடலாம் என்றே நினைத்தேன். ஆனால், இருவரும் சேர்ந்து உங்களை வேலேந்த வைப்பார்கள் என்று கனவிலும் நான் எதிர் பார்த்திருக்கவில்லை” என்றார் கரி காலர்.

“சரி வானவல்லி எங்கே? நீங்கள் மட்டும் அவசர அவசரமாகப் புகாரை நோக்கி வந்து கொண்டிருக்கிறீர்கள்?” என வினவினார் வளவனார்.

https://telegram.me/aedahamlibra

அப்போது கரிகாலர், “நானும் கேட்க வேண்டும் என நினைத்தேன். வானவல்லி எங்கே தங்கியிருக்கிறார்? என் அக்காவை பாதுகாப்புடன் தானே தங்க வைத்துவிட்டுதானே வந்திருக்கி றீர்கள்?” எனக் கேட்டார்.

இருவருக்கும் என்ன பதிலை அளிப்பது எனக் குழம்பியபடி டாள்தொ பியாசும் வில்லவனும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி சற்று குழப்பத்துடன் நின்று கொண்டிருந்தனர்.

தொண்டையைக் கனைத்த வள வனார் அவர்கள் இருவரின் விழிகளி லும் தனது பார்வையை நிலைநிறுத்திக் கொண்டு “கேட்ட கேள்விக்கு விரைந்து பதில் கூறுங்கள்?” எனக் குரலை உயர்த் தினார்.

அவரது அந்த மிரட்டல் எதற்கும் அஞ்சாத டாள்தொபியாஸ் மற்றும் வில்ல வனைக் கூடக் கண நேரத்திற்குள் மிரள வைத்துவிட்டுச் சென்றது.

'அன்று இருங்கோவேளை புகார் கோட்டைக்குள் அனுமதிக்க வேண்டாம் எனக் கூறிய போது செங்குவீரரின் கட்டளையை மீறி தங்களுக்கு அடிபணிய மாட்டேன் என்று இவரைப் பார்த்து தானே கூறினேன். அன்று எனக்குத் துணையாக இருந்த துணிச்சல் இப்போது எங்கே சென்றது? மனதின் அடி ஆழத்தில் ஒரு வித எச்சரிக்கை உணர்வு தோன்றி அச்சமாக வளர்ந்து கொண்டிருப்பதேன்?' என எண்ணி குழப்பம் கலந்த ஒருவித பய உணர்வுடன் நின்று கொண்டிருந்தான் டாள்தொபியாஸ். அப்போது சுதாரித்த வில்லவன், "ஓலையில் வானவல்லி எதையும் குறிப்பிடவில்லையா?" எனக் குறுக்கிட்டான்.

"ஓலையில் வானவல்லி சகோதரியைப் பற்றி எதுவுமே குறிப்பிடவில்லை!" என வருத்தத்துடன் தெரிவித்தார் கரிகாலர்.

அந்த ஓலையை வாசித்ததிலிருந்து கரிகாலரின் முகப் பாவனை மாறிவிட்டிருந்ததைக் கவனித்த வளவனார், “கரிகாலா, ஓலையை வாசித்ததிலிருந்து உன் முகத்தில் ஏன் குழப்பத்தின் குறி அதிகம் தென்படுகிறது? வானவல்லி ஓலையில் என்ன எழுதியிருக்கிறாள்!” எனப் பதற்றத்துடனே வினவலானார்.

உடனே ஓலையை வளவனாரிடம் நீட்டினார் கரிகாலர்.

அதைப் பெற்றுக் கொண்ட வளவனார் அருகில் சாத்தனின் முன்பு எரிந்து கொண்டிருந்த விளக்கிற்கு அருகில் சென்று அதன் பஞ்சுத் திரியை தூண்டிவிட்டார். வெளிச்சம் சற்று அதிகமாகப் பரவியது. வயதாகிவிட்டிருந்ததால் அந்தக் குறைவான வெளிச்சத்தில் அந்த ஓலை எழுத்துகளை வாசிக்கச் சிரமப்பட்டார். உடனே, “செங்கோடா பந்தத்தை எடுத்து வா!” எனக் கட்டளையிட அடுத்தக் கணமே செங்கோடன் பந்தத்

தைக் கொண்டுவந்து அந்த விளக்கொளியில் ஏற்றி அந்த ஓலையைப் படிப்பதற்கு வசதியாகப் பிடிக்கலானார்.

தீப்பந்த ஒளியின் எதிர்த் திசையில் முறிந்த ஓலையைத் தூக்கிப்பிடித்து ஒன்றாகப் பொருத்தி வாசிக்கத் தொடங்கினார் வளவனார்.

கரிகாலா, அழுந்தூரைத் தவிர மற்ற அனைத்து தேசங்களின் படைகளும் நம்மைத் தாக்கத் தயார் நிலையில் சேரமான் பெருஞ்சேரலாதனின் உத்தரவை எதிர்நோக்கிக் காத்துக் கொண்டிருக்கின்றன. பாண்டிய மன்னர் தென்னவருடன் வழக்கம் போலவே சிங்கள மன்னனும் துணைக்குச் சேர்ந்திருக்கிறான். சேர நாட்டு வடக்கு எல்லையில் நிலைகொண்டிருக்கும் சேர நாட்டு நிலைப் படைகள் மீது துளுவக் கள்வர்கள் தொடர்ந்து தாக்குதல் தொடுக்கட்டும். வில்லவர் மீண்டும் கள்வராக வளம் வரட்டும். எரிபரந்தெடுத்தலைத் தொடங்கு.

வஞ்சியையும், உறைந்தையும் நாமே முதலில் தாக்குவோம்! நாம் தயாராகப் போதிய காலம் இருக்கிறது!

என்பதை வாசித்தவர் அந்த ஓலையில் அடியில் மின்னல் கீற்று வளைந்து நெளிந்து மேகங்களுக்கிடையில் பரவுவதைப் போன்று இரு கோடுகள் தீட்டப்பட்டிருப்பதைக் கவனித்த போது அவரது முகத்தில் சிறு புன்னகை ஒன்று மறைந்து விட்டுச் சென்றது.

அந்த ஓலையை வாசித்ததும் வளவனாரின் முகத்திலும் குழப்பம் குடி கொண்டுவிட்டன. கரிகாலருக்கு அருகில் வந்து நின்றவர் எதுவும் பேசாமல் குழப்பத்துடனே நின்று கொண்டிருந்தார்.

வளவனாரே பேசட்டும் என எண்ணிய மற்றவர்களும் அமைதி காத்தனர்.

அருகில் நின்ற டாள்தொபியாசிடம், "என்ன நடந்தது? விவரமாகக் கூறு!" எனக் கட்டளையிட்டார்.

புகாரிலிருந்து கிளம்பிச் சென்றது முதல் நடைபெற்ற நிகழ்வுகளைக் கூறத் தொடங்கினான் டாள்தொபியாஸ். உறைந்தைக்கும், வஞ்சிக்கும் இடையில் ஒரு குடிசையில் மூவரும் தங்கியது. அவ்வப்போது வானவல்லி இருவரையும் தனித்திருக்கவைத்துவிட்டு அவள் மட்டும் புரவியில் தனியாகச் சென்றது. பிறகு சில கிழமை கழித்து இரவில் பணிப்பெண் ஓலையுடன் வந்து அவர்களைச் சந்தித்தது, அதன் பிறகு சாவடிச் சத்திரத்தில் வில்லவனின் ஓலையைத் திருடியது என மேலோட்டமாகத் தெரிவித்தான் டாள்தொபியாஸ். அவனருகில் வில்லவன் எதுவும் பேசாமல் அமைதியாகவே நின்று கொண்டிருந்தான்.

அவன் கூறிய அனைத்தையும் கேட்ட வளவனார், “அவ்வப்போது புரவியில் சென்றிருக்கிறாள் என்கிறாயே. எங்கே சென்றாள்?” என வினவினார் வளவனார்.

https://telegram.me/aedahamlibrary

“எங்களுக்குத் தெரியாது அய்யா!”

“யாரைச் சந்திக்க என்றாவது தெரியுமா?”

“..........”

“பணிப்பெண் ஒருத்தி இரவில் வந்ததாகவும், அதன் பிறகே இருங்கோவின் ஒற்றன் வேந்தன் வானவல்லியுடன் சாவடிக்கு வந்ததாகவும் தெரிவித்தாயே! அந்தப் பணிப்பெண்ணை உறைந்தையிலிருந்து அனுப்பி வைத்தது யார்?”

“..........”

“டாள்தொபியாஸ், உனக்கு என்ன தான் தெரியும்? அதையாவது கூறித் தொலை” எரிச்சலுடன் தெரிவித்தார் வளவனார்.

“அந்தப் பணிப்பெண்ணிடம் ஒரு முறை வானவல்லி ‘அண்ணனை நேரில் சந்திப்பதாகத் தெரிவித்துவிடு’ என்று மட்டும் கூறக் கேட்டேன். மற்றபடி எது

வும் எனக்குத் தெரியாது!" என்றான் டாள் தொபியாஸ்.

வானவல்லியும், வில்லவனும் வேளக்காரப் படைத் தலைவர் காள னைப் பற்றிய தகவலை மிகவும் ரக சியமாகவே வைத்திருந்தார்கள். டாள் தொபியாசிற்குக் கூட அவள் தெரிவித் திருக்கவில்லை. வானவல்லி சில முறை உறைந்தை வரை சென்று காளனை சந்தித்துவிட்டு வந்திருந்தாள். ஒருமுறை காளனும் முத்துக்களை விற்கும் வணிக னைப் போன்று வானவல்லியின் இருப் பிடத்திற்கு வந்து தகவலைப் பரிமாறிக் கொண்டிருந்தான். வானவல்லி யாரைச் சந்திக்கச் செல்கிறாள் என அறிய முயன்றும் டாள்தொபியாசினால் எதை யும் சாதிக்க இயலவில்லை. வில்ல வன் அனைத்தையும் அறிந்துவைத்தி ருந்தான். ஆனால், டாள்தொபியாசிடம் எதையும் கூறிக்கொள்ளவில்லை.

வானவல்லி யாரையோ அண்ணன் என்று அழைத்தாள் என டாள்தொபி யாஸ் கூறியதும் வளவனாருக்கு தன் மகன் திவ்யனின் நினைவு வந்துவிட் டது. அவரது மனதில் பாசம் மேலோங்கி கவலை சூழத்தொடங்கியது. அவரது மாறிய முகபாவனை அவரது துயரத்தை அனைவருக்கும் எடுத்துக்காட்டியது.

சற்று நேரம் அவ்விடத்தை மீண்டும் மௌனம் கவ்வி கொண்டது.

கையிலிருந்த ஓலையைக் காட்டிக் கொண்டே வளவனார், “இந்த ஓலையில் எந்தத் தகவலும் முறையாக இல்லை. மாறாக அனைவருக்கும் கட்டளைகள் மட்டுமே நிறைந்திருக்கிறது டாள்தொபி யாஸ். வில்லவன் கொண்டு வந்த ஓலை யிலிருந்து என்ன அறிந்து கொண்டீர் கள்? அந்த ஓலை எங்கே?” என்றார் கோபத்துடன்.

“அந்த ஓலையை வானவல்லி தீக் கிரையாக்கிவிட்டார்!”

https://telegram.me/aedahamlibra

“என்ன, ஓலையை எரித்துவிட்டாளா?” அவரது கோபம் நேரத்திற்கு நேரம் அதிகமாகிக் கொண்டிருந்தது.

“..........”

“சரி, அந்த ஓலையைத்தான் கொண்டுவரவில்லை. அந்த ஓலையில் என்ன செய்தி இருந்தது என்றாவது கூறு?”

“அந்த வாய்ப்பு எங்களுக்குக் கிடைக்கவில்லை!”

“வாய்ப்பு கிடைக்கவில்லையா?”

“ஆம்!”

“ஓலையை நீ பார்த்தாய் தானே!”

“ஆம்!”

“பிறகு ஏன் வாசிக்கவில்லை!”

“தங்கள் திருக்கரங்களில் அந்த ஓலை தவழ்ந்தாலும் உங்களால் அதை

வாசித்திருக்க இயலுமா என்பது சந்தே கமே!”

“டாள்தொபியாஸ் என்ன பிதற்றுகி றாய் நீ?”

“ஆம்! அந்த ஓலை அனைவராலும் வாசிக்க இயலாத அளவிற்குப் பழங்கால வைதீகர்களின் மறை மொழியில் எழுதப் பட்டிருந்தது. வானவல்லி சகோதரி கடும் சிரமப்பட்டே அதை வாசித்தார். என்ன செய்தி எனக் கேட்டபோது ‘சோழ நாட் டின் அழிவைச் சுமந்து செல்லும் ஓலை என்றும் காவிரியைக் குருதி ஆறாக மாற வைக்கும் திட்டம்’ என்று மட்டுமே எங்க ளுக்குப் பதில் கிடைத்தது. மற்றபடி அவர் எதையுமே தெரிவிக்கவில்லை.”

“அவள் மனதில் என்ன நினைத் துக் கொண்டிருக்கிறாள்? தன் போக்கிற் குச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறாள். கைப்பற்றிய ஓலையையும், செய்தியை யும் தந்திரமாக மறைத்து வைத்திருக் கவேண்டிய அவசியம் என்ன? அரசி

https://telegram.me/aedahamlibra

யலிலும், போரிலும் அனுபவம் பெற்ற அமைச்சர்கள், படைத் தளபதிகள் எனப் பலர் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் நேற்று வந்தவளுக்குப் பணிய வேண்டுமா? ஓலையில் கட்டளையை மட்டும் எழுதி அனுப்பியிருக்கிறாள் என்றால் அவளது மனதில் எவ்வளவு ஆணவம் இருக்க வேண்டும்?" எனடாள்தொபியாசிடம் சீறினார் வளவனார். வளவனாருக்கு ஆரம்பம் முதலே படைத் தலைவர் பொறுப்பை வானவல்லி ஏற்றது மனதை நெருடிக் கொண்டிருந்தது. அதிலும் அறிந்து கொண்ட ரகசியத்தை அவள் மறைத்துவிட்டது அவரது கோபத்தைப் பல மடங்கு கிளப்பியிருந்தது.

அதுவரை அமைதியாக நின்ற கரிகாலர், "அய்யா, கோபம் வேண்டாம். என் தமக்கை பொறுப்பேற்ற நாள் முதலாகத் தாங்கள் அவர் மீது கடும் கோபத்திலே இருக்கிறீர்கள்? அதற்குக் காரணம் அவர் மீதான அக்கறைதானே தவிர வேறொன்றுமில்லை. அவருக்கு எதுவும் நேராது!

நான் செங்கோடரின் வீட்டில் அடிபட்டுக் கிடந்தபோது எங்களைத் தாக்க வந்த உறைந்தை வீரர்களை நோக்கி அவர் எறிந்த குறுவாளை நீங்கள் பார்த்திருந்தால் உங்களுக்கு இந்தக் கவலை தோன்றியிருக்காது. கவலை வேண்டாம் வளவனாரே! என் தமைக்கையால் நிச்சயம் அவரைக் காப்பாற்றிக்கொள்ள இயலும்!" என்றார் நம்பிக்கையுடன்.

"வளவா, நான் எதைப்பற்றிக் கூறிக் கொண்டிருக்கிறேன்? நீ எதைப்பற்றிக் கூறிக் கொண்டிருக்கிறாய்? எனக்குத் தெரியும் அவள் ஒருநாளும் எதிரிகளிடம் சிக்கிக்கொள்ள மாட்டாள் என்று! தற்காப்பு யுக்திகள் அனைத்தையும் கசடறப் பயின்றிருக்கிறாள். குறுவாளையும், வளரியையும் அவளைப் போன்று எறிந்தவர்களை நான் கண்டதில்லை. எனது கவலை அவளைப் பற்றியது அல்ல. தவறான தலைமை அனைத்தையும் நாசப்படுத்திவிடும் வளவா! எனக்கு என் மகளை விட இந்த நாட்டைப் பற்றி

யும், இதைத் தாங்கி நிற்கும் பல்லாயி ரக்கணக்கான வீரர்களைப் பற்றியும்தான் கவலை! தவறான குறுக்கீடு போரில் அனைவரையும் நிர்க்கதியாக்கிவிடும். அவளது ஓலையை நீயும் வாசித்தாய் தானே! அவளது முதிர்ச்சியற்ற அனு பவம் பைத்தியக்காரத்தனமான கட்ட ளைகளாக வெளிப்பட்டிருக்கிறது இந்த ஓலையில்!" அவரது முகத்தில் கோபமும், சீற்றமும் பல மடங்குப் பெருகிக் கொண் டிருந்தது.

"அய்யா....?"

"ஆம் கரிகாலா! ஓலையை இன் னொருமுறை வாசித்துப்பார்" கட்டளை யிட்டார் வளவனார்.

செங்கோடர் மீண்டும் தீப்பந்தத்தை உயர்த்த கரிகாலர் மீண்டும் அதை வாசிக்கலானார். வாசித்தவர் வளவனா ரின் முகத்தையே பார்த்த்தபடி நின்றிருந் தார்.

https://telegram.me/aedahamlibra

"கரிகாலா, அழுந்தூரைத் தவிர மற்ற அனைத்து மன்னர்களும் நம்மை எதிர்க்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். பழைய செய்தியை அறிந்து கொள்ளத்தானா அங்கு அவள் சென்றாள்?" என வளவனாரின் குரல் இகழ்ச்சியுடன் ஒலித்தன.

சிறிது சிந்தித்த கரிகாலர், ஓலையை அவரிடமே கொடுத்து, "நீங்கள் இன்னொருமுறை வாசித்துப் பாருங்கள்!" என்றார்.

"அதைத்தான் முன்பே வாசித்து விட்டேனே?"

"பரவாயில்லை. இன்னொருமுறை வாசிப்பதால் நம் குடி ஒன்றும் மூழ்கிவிடாதே!"

கரிகாலரின் கட்டளையை மீற இயலாத வளவனார் அந்த ஓலையை மற்றொருமுறை வாசித்தார்.

https://telegram.me/aedahamlibra

"ஏதாவது உங்களுக்குப் புலப்படுகிறதா?" என வினவினார் வளவனார்.

"அதுதான் முன்பே தெரிவித்தேனே? மட்டமான கட்டளைகளைத் தாங்கி வந்திருக்கும் ஓலை என்று!"

"அய்யா... கோபப்படாமல் ஓலையைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்! இரு வேந்தர்கள் மற்ற குறுநில மன்னர்கள் அனைவரும் நம்மை எதிர்க்கிறார்கள் என்பதை நாம் முன்பே அறிவோம். ஆனால் அவர்கள் அனைவரும் போருக்குத் தயாராகிவிட்டார்கள் என்பதை நாம் அறிவோமா?"

"..........."

"பாண்டியனுக்குத் துணையாகச் சிங்கள தேசமும் நம்மை எதிர்க்கத் துணிந்திருக்கிறது. கீழைக் கடலில் நமது ஆதிக்கத்தை அவர்கள் விரும்பவில்லை என்பதை இந்த ஓலை நமக்கு வெளிச்சத்திற்குக் கொண்டுவந்திருக்கி

https://telegram.me/aedahamlibra

றது. ஓலையோடு வந்திருக்கும் செய்தி இது மட்டும் அல்ல?”

“வேறு என்ன?”

“நாம் நிலப்போர்க்கு மட்டும் அல்லாமல் கடற்போருக்கும் சேர்த்துத் தயாராக வேண்டிய நிர்பந்தத்தில் இருக்கிறோம்!”

“என்ன?”

“ஆம் அய்யா... சிங்கள மன்னன் வங்க நசுய திச்யன் நம்மை எதிர்க்கத் துணிந்திருக்கிறான் என்றால் என்ன அர்த்தம்? சேனை உதவியையா இருங்கோவிற்கு அளிக்கப் போகிறான். இல்லை. அவனது கடற்படையை அளிக்கப் போகிறான். சேரரிடமும், பாண்டியரிடமும் தான் பெரும் எண்ணிக்கையிலான கலங்கள் இருக்கின்றன. சிங்களக் கலங்களும் சேர்ந்து கொண்டால் நம்மை எளிதில் தோற்கடித்துவிடலாம் என்பது அவர்களின் கணிப்பு! அதைத்தான் என்

தமக்கை குறிப்பினால் சுட்டியிருக்கி றார்!"

"கரிகாலா, கடற்போரும் ஒரே நேரத்தில் மூண்டால் நம்மால் தாக்குப்பி டிக்க இயலுமா?"

"அய்யா... கவலை வேண்டாம். தங் கள் மகள்தான் முதலில் தாக்கு வது நாமாகத்தான் இருப்போம். போதிய காலம் இருக்கிறது என்றிருக்கிறாரே! அப்புறம் எதற்கு உங்களுக்குக் கவலை?"

"இந்த ஓலையை நீ நம்புகிறாயா?"

"ஆம் வளவனாரே!"

"துளுவக் கள்வர்கள் சேர நாட் டின் வடக்கு எல்லையைத் தாக்கட் டும் எனக் கட்டளையிடுகிறாள். துளு வர்கள் இவளது ஏவலாளிகள் என்று எண்ணியிருக்கிறாளா? எரிபரந்தெடுத் தலைத் தொடங்கச் சொல்லியிருக்கி றாள். எரிபரந்தெடுத்தல் என்பதன் அர்த் தத்தை அவள் அறிவாளா?" என்ற போது

https://telegram.me/aedahamlibra

கோபம் அதிகமாகி கண்கள் சிவக்க நின்று கொண்டிருந்தார். அந்த மங்கிய நிலவொளியும், தீப்பந்தமும் அவரது கோபத்தைப் பல மடங்கு அதிகப்படுத்திக் காட்டிக் கொண்டிருந்தது. வளவனாரின் கோபம் நியாயமானது என்றே அங்கிருந்த வீரர்கள், தளபதிகள் என அனைவரும் நினைத்தனர்.

அமைதியாகப் புன்னகையுடன் அவரது விழிகளில் தனது பார்வையை நிலைக்கவைத்து அவரது கோபத்தைக் கட்டுப்படுத்திய கரிகாலர், “எரிபரந்தெடுத்தல் என்பதன் அர்த்தத்தைத் தாங்களேதான் கூறுங்களேன்!” என்றார் பணிவுடன்.

“வளவா, அண்டை நாட்டினைக் கைப்பற்ற நினைக்கும் அரசன்தான் எரிபரந்தெடுத்தலைத் தொடங்குவான். தன் படையைப் பெருக்கிய பிறகே எதிரி அரசனை கோட்டையிலிருந்து வெளியேற்ற எரிபரந்தெடுத்தலை முன்னெடுப்

https://telegram.me/aedahamlibra

பானே ஒழிய நம்மைப் போன்று நாட்டைத் தற்காத்துக்கொள்ள வேண்டும் எனும் நெருக்கடியில் இருப்பவர்கள் ஒரு நாளும் எரிபரந்தெடுத்தலைத் தொடங்க மாட்டார்கள்! நாம் இன்னும் போருக்குச் சரியாகத் தயாராகவில்லை. இந்த நிலையில் நாம் எரிபரந்தெடுத்தலைத் தொடங்கினால் என்ன ஆகும் என்று தெரியுமா?"

"என்ன ஆகும்?" அலட்சியத்துடன் வினவினார் கரிகாலர்.

"என்ன ஆகும் என்றா வினவுகிறாய்?"

"ஆம்!"

அருகில் இவர்களின் உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த செங்கோடரிடம், "செங்கோடா, நாம் இந்தச் சூழ்நிலையில் எரிபரந்தெடுத்தலைத் தொடங்கினால் அதன் விளைவு எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதை நீயே கூறு!" எனக் கட்டளையிட்டார்.

“இந்த நிலையில் நாம் எரிபரந்தெடுத்தலை மேற் கொண்டால் போருக்குத் தயாராக இருக்கும் எதிரிகளின் நிலைகள் நம்மை ஒரே மூச்சில் அழித்து ஒழித்துவிடும்! இப்போது நாம் அமைதியாக இருப்பதே சாலச் சிறந்தது!”

“கேட்டாயா கரிகாலா! வாழ்நாள் முழுவதும் போரைப் பற்றியும் நாட்டைப் பற்றியும் மட்டுமே சிந்தித்த செங்குவீரனைப் போன்று வானவல்லியால் ஒரு நாளும் ஆகிவிட முடியாது! உணர்ச்சி வேகத்தில் அவள் அன்று முடிவெடுத்தாள். நீயும் தலையாட்டியதனால் வந்திருக்கும் நிலைதான் இது!” என்று கூறி முடித்தபோது அங்கு மீண்டும் மௌனம் குடி கொண்டது.

அதனுள் வேறு அர்த்தம் ஏதாவது பொதிந்திருக்கிறதா என்று கரிகாலர் அந்த ஓலையையே உற்று பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது வளவனார், “துளுவக் கள்வர்கள் எப்போது சேர

https://telegram.me/aedahamlibra

நாட்டின் நிலைப் படையைத் தாக்கட்டும் எனக் கூறினாளோ அப்போதே அவளது அரசியல் ஞானம் சூன்யம் என்று வெளிப் பட்டுவிட்டது வளவா. இந்த ஓலையி னால் எந்தப் பயனும் இல்லை. அதைத் தூக்கி எறி!" ஆவேசத்துடன் கூறினார் வளவனார்.

அவர் கூறியதைக் கேட்டபோது கரி காலரின் முகத்தில் எதையோ அறிந்து விட்ட மகிழ்ச்சி தோன்ற, மீண்டும் தீப் பந்த ஒளியில் அந்த ஓலையை மீண்டும் வாசிக்கலானார்."வளவனாரே, சற்று முன் என்ன கூறினீர்கள்?" என ஆர்வத்துடன் வியக்கலானார்.

"நமக்கு எப்படித் துளுவர்கள் கீழ்ப டிவார்கள் என்றேன்."

ஓலையை வளவனாரிடம் கொடுத்த கரிகாலர், "நீங்கள் கூறியதற்கு அடுத்து இருக்கும் வரியைப் படித்துப்பா ருங்கள்!" என்றார்.

ஓலையை வாங்கி அடுத்த வரியை வாசிக்கலானார்."வில்லவர் மீண்டும் கள்வராக மாறட்டும்!" என்றார்.

"இப்போது புரிகிறதா வளவனாரே?"

எதையோ அறிந்து கொண்டது போலவும், அறியாதவரைப் போலவும் இடை நிலையில் சிந்தித்தபடியே நின்றார் வளவனார். அப்போது கரிகாலர், "அய்யா... சேர நாட்டின் வடக்கு எல்லையைத் தாக்கப் போவது துளுவக் கள்வர்கள் அல்ல. நம் உபபடைத் தளபதி வில்லவன் தான்!" என்றபோது அனைவரும் ஆச்சர்யமடைந்தார்கள்.

"அப்படியெனில்...?"

"ஆம் வளவனாரே... சேர எல்லையைத் தாக்கப் போவது கள்வன் வில்லவன் தான். சேரன் பெருஞ்சேரலாதனுக்கு வடக்கிலிருந்தே கள்வர்கள் கூட்டம் தாக்குகிறார்கள் என்ற செய்தி பரப்

பப்படும்! நம்மைத் தாக்கத் தயாராகிக் கொண்டிருக்கும் படைக்கும் தலைமை வகிக்கப்போவதும் சேரன் பெருஞ்சேர லாதன்தான்! தங்கள் புதல்வியின் திட்டம் உங்களுக்கு இப்போது புரிகிறதா?”

“அண்டை நாட்டைத் தாக்குவதை விடத் தன் நாட்டைக் காப்பதையே எந்த அரசனும் முதன்மையானதாக நினைப் பான். ஆக, பெருஞ்சேரலாதனைத் தாம தப்படுத்தினால் நாமும் போருக்குத் தயா ராகக் காலம் கிடைக்கும். அப்படித்தானே கூறுகிறாய்.”

“ஆம் வளவனாரே, வில்லவனே முதலில் எரிபரந்தெடுத்தலைத் தொடங் குவார். எதிரிகளைக் குழப்புவோம். அவர்களின் குழப்பத்திற்கு இடையில் நாம் வலிமையுடன் தயாராவோம். அதன் பிறகு நானே எரிபரந்தெடுத்தலை முன் னிட்டு நடத்தி எதிரிகளின் கோட்டை யைத் தாக்கும் உழிஞைப் போரை நடத்தி அவர்களைப் போருக்கு அழைக்கிறேன்.

அவர்களை நேருக்குநேர் எதிர்கொள் வோம்!” என்றார் ஆவேசத்துடன்.

“சரி, நமது திட்டப்படிதான் அனைத்தும் நடைபெறும் என்பதற்கு என்ன உத்தரவாதம். சேரன் பெருஞ் சேரலாதன் பெரும் புத்திசாலி! அவனை ஏமாற்றுவது என்பது சாதாரணக் காரி யம் அல்ல வளவா!”என வளவனார் கூறிக் கொண்டிருந்த போதே இடைம றித்த டாள்தொபியாஸ், “அய்யா... அந்தப் பணிக்காகத் தான் தங்கள் புதல்வியார் வஞ்சிக்குச் சென்றிருக்கிறார்!” என்றான் அமைதியாக.

“எங்கே? எங்கே?” பதற்றத்துடனே வினவினார் வளவனார்.

“வஞ்சிக்குச் சென்றிருக்கிறார். சேரமானை சந்தித்துவிட்டுத் திரும்பும் வேந்தனை இடைமறிப்பதற்காக!”

“அவளது அபாயகரமான திட் டத்தை அறிந்தும் நீங்கள் எப்படி அவ

https://telegram.me/aedahamlibra

ளைத் தனியாக அனுப்பலாம்!" வெகுண்டெழுந்தார் வளவனார்.

"மன்னிக்கவும் அய்யா! நாங்கள் மன்றாடினோம். பலன் இல்லை!" என்றான் டாள்தொபியாஸ். அப்போது வில்லவன், "எனது ஊகம் மட்டும் சரியாக இருந்தால் வானவல்லி வஞ்சிக்கு மட்டும் சென்று திரும்ப மாட்டாள்!" என்றாள்.

"என்ன?" என ஒருசேர அனைவரிடமிருந்தும் வெளிப்பட்டது.

"ஆம்! வஞ்சியில் வேந்தனை சந்தித்துவிட்டதும் வானவல்லி நேராக உறைந்தைக்குச் செல்வாள் என்பதே என் கணிப்பு!"

"உறைந்தைக்கா?" பதற்றத்துடன் வினவினார் கரிகாலர்.

"ஆம்!"

"அங்கு எதற்கு?" ஆவேசத்துடன் வினவினார் வளவனார்.

"அங்கு எதற்குச் செல்வாள்? இருங்கோவேளை சந்திப்பதற்காகத் தான்!"

வில்லவன் கூறியதைக் கேட்டதும் அனைவரும் அக்கணம் உறைந்துபோனார்கள்.

"கரிகாலா, நேரமில்லை! எந்தப் பணியைச் செய்தாலும் நாம் விரைந்து மேற்கொள்ள வேண்டும்!" கட்டளையிட்டார் வளவனார்.

அப்போது கரிகாலர், "டாள்தொபியாஸ். இன்றிலிருந்து புகார் காவல் உன் பொறுப்பு! அதை இன்னும் பலப்படுத்து! உணவுப் பொருள்களையும் சேகரிக்கத் தொடங்கிவிடு!" என்றவர் அருகிலிருந்த வில்லவனிடம், "உன் கள்ள நாட்டில் தேர்ந்த கள்வர்களைப் பொறுக்கிக்கொள். டாள்தொபியாசிடம் நூறு புரவிகளையும், வேண்டிய பொன்னையும் பெற்றுக்கொள்! ஓலையில் குறிப்பிடப்பட்டிருக்கும் பணியைத் தொடங்கு!" என்றவர்"குமரா இங்கே வா!" என அழைத்தார்.

https://telegram.me/aedahamlibra

குமரா என்ற சொல்லைக் கேட்ட தும் ஆர்வத்துடன் திரும்பினான் டாள் தொபியாஸ். தோளில் குருதிக் கட்டு டன் கரிகாலரின் முன் வந்து நின்றான் பரதவன் குமரன். அவனைப் பார்த்த தும், “நண்பா, உன்னையா நான் தாக் கினேன். மன்னித்துவிடு!” என வேண்டி னான் வருத்தத்துடன்.

“டாள்தொபியாஸ், வாள் வீச்சில் விழுப் புண்படுதல் பெருமை மிகுந்தது தானே!” என்றான் புன்னகையுடன்.

அப்போது வளவனார், “வாள் வீசும் போது தன் நண்பன் என்பதற்காகத் தாம தித்துப் பரிவு காட்டினால் இந்தக் கதி தான் ஏற்படும்!” என வசைபாடினார்.

“வேறு யார் யார் இங்கு வந்திருப் பது?” ஆர்வத்துடன் வினவினான் டாள் தொபியாஸ்.

பரதவன் குமரன் எதையோ கூற வாயைத் திறந்தான். அதற்குள் கரிகாலர்,

"டாள்தொபியாஸ் உன் விசாரிப்புகளை அப்புறம் வைத்துக்கொள்கிறாயா?" மிரட்டல் கலந்த பணிவுடன் கேட்கலானார்.

"மன்னித்துவிடுங்கள் அரசே!"

சிறிது நேரம் அமைதியாக நின்ற கரிகாலர், "குமரா, மூன்று நாடுகளின் வலிமை வாய்ந்த கடற்படையை நாம் எதிர்க்க வேண்டியிருக்கிறது. கால அவகாசம் நமக்கு மிகவும் குறைவு. எப்படியும் அதிகபட்சம் இன்னும் ஆறு மாத காலம் நமக்குக் கிடைக்கலாம்! அதன் பிறகு எதிரிகளின் கலங்கள் புகார் கடலை முற்றுகையிடுவதை நம்மால் தடுக்க இயலாது! அவர்களை எதிர்த்தே ஆகவேண்டும்! கடலோடும் பரதவர்களுக்குப் போர் பயிற்சியை இன்று முதல் தொடங்கு! போர் கலங்களின் எண்ணிக்கையும் பெருகட்டும். மீன் படி படகுகள் அனைத்தும் சமயத்தில் போர்க்கலங்கலாக மாற்றப்படட்டும்!" கட்டளையிட்டார் கரிகாலர்.

“அரசே! குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். தாங்கள் எனக்கும் டாள்தொபியாசிற்கும் இட்ட பணிகள் அனைத்தும் ஏற்கெனெவே செங்குவீரரின் உத்தரவின் பேரில் செய்து முடித்துவிட்டோம். புகாரை ஒட்டுமொத்த தென்னகமும் சேர்ந்து தாக்கினாலும் குறைந்தது மூன்று வருடங்களுக்காவது நம்மால் அவர்களைத் தாக்குப்பிடிக்க முடியும். உணவுத் தானியங்களையும் ஏற்கெனவே சேர்த்து வைத்துவிட்டோம். இந்தப் போர் இப்படித்தான் நடைபெறும் என்பதை முன்பே ஊகித்துத் தகுந்த கட்டளைகளை நம் படைத்தலைவர் வழங்கிய பிறகே நம்மை விட்டுப் பிரிந்துவிட்டார். அவர் ஒரு தீர்க்கதரிசி” என்றான் பரதவன் குமரன். அப்போது அவனது விழிகள் இரண்டும் ஈரமாகியத்தை அனைவரும் உணரவே செய்தனர்.

“ஆமாம் குமரா. நம் படைத் தலைவர் ஒரு தீர்க்கதரிசி தான். இந்த இக்கட்டான நிலையில் அவரை நாம் பிரிந்

துவிட்டோம். அவர் இருந்திருந்தால் இந் நேரம் போரின் முடிவு எழுதப்பட்டிருக் கும். நான் செய்த தவறினால் அவரை இழந்துவிட்டேன். போரில் கிடைக்கும் வெற்றித் திருமகளை நாம் நம் படைத் தலைவருக்கு அற்பணிப்போம்!" என்றார் ஆவேசத்துடன்.

"நிச்சயமாக!" என்றனர் அனைவ ரும்.

"நல்லது" என்றபடியே வளவ னாரை நோக்கிய கரிகாலர், "என் மாமா வுடன் சேர்ந்து நம் நாட்டில் இருக் கும் குடிகளைத் திரட்டுங்கள்! திரட்டுவது மட்டுமல்லாமல் தகுந்த பயிற்சிகளையும் விரைந்து வழங்குங்கள் அய்யா!" என்ற வர் கையைத் தட்டினார். அருகில் மரத் தின் பின்னால் மறைந்து நின்ற அவரது வெண்ணிறப் புரவி அவருக்கு முன் ஓடி வந்து நின்றது.

ஒரே தாவலாக அதன் மீது தாவி, "அடுத்தச் சில கிழமைகளுக்கு என்னை

https://telegram.me/aedahamlibra

யாரும் தேடவேண்டாம்!" எனக் கூறியவர் அடுத்தகணம் அங்கிருந்து மறைந்தார். அவர் சென்ற பாதையில் புழுதி மட்டும் கிளம்பியிருந்தது.

கரிகாலர் அங்கிருந்து மறைந்த அடுத்தக் கணம், ஊருக்குள் சேவல் ஒன்று கூவும் சத்தம் இவர்களுக்குக் கேட்டது."இங்கிருந்தால் இனி நாம் மக் கள் பார்வையில் அகப்பட்டு விடுவோம்! புகாருக்கு விரைவோம்" என வளவனார் கூற அனைவரும் அவரவர் புரவியில் ஏறி பயணத்தைத் தொடங்கினார்கள்.

அப்போது வில்லவனிடம், "அன்று இரும்பிடர்த்தலைவரும் பொன்பற்றிக் களவைப் பற்றியே உன்னைச் சுட்டிக் காட்டிப் புகழ்ந்தார். இன்றும் அதே பொன்பற்றிக் களவையே கரிகாலர் முதன்மைப்படுத்தி, உங்களை இடைம றித்தார். . அப்படிப் பொன்பற்றியில் என் னதான் செய்தீர்கள்?" என ஆர்வத்து டன் வினவினான் டாள்தொபியாஸ். வில்

லவன் கூறப்போவதைக் கேட்க பரத வன் குமரனும் ஆவலோடு அவர்களுடன் இணைந்து கொண்டான். மூவரின் புரவி யும் மெதுவாகவே சென்று கொண்டிருந் தன.

டாள்தொபியாஸ் கூறியதைக் கேட் டதும் சிரித்த வில்லவன், "டாள்தொபி யாஸ் கரிகாலர் மட்டுமல்ல காவல் காக் கும் காவலர்களின் உயர்ந்த நோக்கம் எது என்று கேட்டால் என்னைக் கையும் களவுமாகப் பிடிப்பதே என்று கூறுவார் கள். இன்று கள்வனே காவல் பொறுப்பை ஏற்றுக் கொண்டுவிட்ட நிலை!" என வருந்தினான்.

"டாள்தொபியாஸ் கேட்டக் கேள் விக்குரிய பதில் இல்லையே இது" இடை மறித்தான் குமரன்.

"மன்னிக்கவும் குமரா. களவு என் பது இரவில் பறக்கும் வெளவாலின் தடத் தினைப் போன்றது. அதன் தடத்தினை யாராலும் அறியவே இயலாது. அதைப்

போன்றதும்தான் களவும் இருக்கவேண்டும். எங்களுக்கும் சில நெறிமுறைகள், கட்டுப்பாடுகள் இருக்கிறது. ஒருநாளும் நாங்கள் களவு கொண்ட முறையை மற்றவர்களுக்கு விவரிப்பதில்லை. நீங்கள் என்னிடம் கேட்பதைவிட, மற்றவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்வதே சிறந்தது!” எனக் கூறியவன் புரவியின் அடிவயிற்றில் வலது காலால் ஒரு தட்டுத் தட்டினான். அடுத்தகணம் வில்லிலிருந்து புறப்படும் அம்பினைப் போன்று அவனது புரவி மட்டும் இருவரையும் முந்திவிட்டு புழுதிபறக்க அங்கிருந்து விரைந்து சென்றது.

டாள்தொபியாசும், பரதவன் குமரனும் முன்னால் சென்ற வில்லவனையே அதிர்ச்சி கலந்த புன்சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

**அடிக்குறிப்பு :**

1. எரிபரந்தெடுத்தல்: இயங்குபடை யரவ மெரிபரந்தெடுத்தல் - தொல்காப்பியம் பொருளதிகாரம் 65. 1

Setting fire to enemy land. A military situation in ancient sangam period and Pre pallava period. Tamil Index Dr.N Subramaniyam MA ph.D Page 161.

https://telegram.me/aedahamlibra

# 11.

# ஒதவஞ்சி யின் ஆற்றாமை

பவளக் கல்லினால் வடிக்கப்பட்டிருந்தது சேயோனின் திருவுருவம். வள்ளியும் சிரித்த முகத்துடன் தெய்வீகக் கலையுடன் அவனுக்கு அருகில் நின்று அருள் புரிந்து கொண்டிருந்தாள். சிரித்துக் கொண்டிருந்த அவளது முகத்தின் தெய்வீகக் கலையைக் காண்கையில் அது மரகதக் கல்லினால் செதுக்கப்பட்ட சிற்பமா அல்லது மரகதச் சிலையென நிற்கும் தெய்வலோகக் கன்னிகையா என வியக்கும் வண்

ணம் அன்றலர்ந்த ஒற்றைப்படை இதழ்களைக் கொண்ட செந்தாமரை, மல்லிகை, சாமந்தி போன்ற மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. சுவர் முழுவதும் நிறைந்திருந்த சேயோனின் புராதனக் கதைகள், மன்னனும் சேயோனுக்குப் பணிவிடை செய்பவன்தான் என்பதை உலகிற்குத் தெரிவிப்பதைப் போன்று சேர மன்னர்கள் பலரது திருவுருவங்கள் பலவும் சேயோனை வணங்குவதைப் போன்ற ஓவியங்கள் அழகுடன் தீட்டப்பட்டிருந்தது. கோயில் முழுவதும் எரிந்து கொண்டிருந்த சிறு சிறு அகல் விளக்குகளின் தீச்சுடர் வெளிப்பட்டு அது சேயோனின் கோயிலா அல்லது சேயோன் உறையும் பள்ளிவீடா என வியக்கும் வண்ணம் பிரகாசத்துடனும், பெரும் பிரமாண்டத்துடன் அமைக்கப்பட்டிருந்தது. அந்தக் கோயிலின் தூண்கள் முழுவதும் புராதானச் சிற்பங்களால் நிறைந்திருந்தது. தரையில் விரிக்கப்பட்டிருந்த ரத்தினக் கம்பளத்தின் மீது நின்றபடி அலங்கரிக்கப்பட்டிருந்த சேயோன் மற்றும் வள்ளியின் பாதங்களில் மலர்களைத் தூவியபடி பக்தியில் மனம் உருகி சேயோன் வாழ்த்துப் பாடலைப் பாடத்தொடங்கினார் சேர மாமன்னன் பெருஞ்சேரலாதனின் முதன்மை அமைச்சரான அந்தணர் ஓதவஞ்சி.

https://telegram.me/aedahamlibra

தாமரை புரையும் காமர் சேவடிப்

பவளத் தன்ன மேனித் திகழொளிக்

குன்றி ஏய்க்கும் உடுக்கைக் குன் றின்

நெஞ்சுபக வெறிந்த வஞ்சுடர் நெடுவேல்

சேவலங் கொடியோன் காப்ப

ஏமம் வைக லெய்தின்ற லுலகே...

வைகறைப் பொழுதாகையால் அரசன் என்பதற்குரிய அடையாளமாகத் திகழும் அவனது வெண் கொற்றக் குடை, நீதி வழுவாத செங்கோல் ஆகியவற்றை அரண்மனையிலேயே விட்டுவிட்டு வந் திருந்தான் சேரமான் பெருஞ்சேரலா தன். ஆனால், வீரத்திற்கு அடையாளமா கத் திகழும் அவனது நீண்ட வாளினை மட்டும் தினமும் சேயோன் சந்நிதிக் குக் கொண்டுவந்து வந்து முருகனின்

வேலோடு வாளினை வணங்கிய பிறகே அன்றைய தினத்தைத் தொடங்குவான்.

அந்தணர் என்றால் குளிர்ந்த அருள் உடையவர் என்று பொருள். அதற்கேற்பவே எந்தச் சூழ்நிலையிலும் கோபப்பட்டுத் தனது பொறுமையை இழந்துவிடாத நிதானத்தைக் கடைப்பி டித்து அற நெறி தவறாதவர் அமைச் சர் ஓதவஞ்சி. எப்போதுமே நிதானத் தைக் கடைபிடிக்கும் ஓதவஞ்சி சேயோ னைப் பற்றிப் பண் படிக்கத் தொடங் கியதுமே இடையில் கட்டியிருந்த தனது நீண்ட போர் வாளினை உருவி தரையில் கிடத்திவிட்டு அதற்கு முன் மண்டியிட்டு அமர்ந்து கொண்டான் சேரமான் பெருஞ் சேரலாதன்.

ஓதவஞ்சி பாடியதைக் கேட்கக் கேட்க சேரமான் பெருஞ்சேரலாதனின் கண்களில் இருந்து கண்ணீர் ஆறாகப் பெருக்கெடுக்கத் தொடங்கியது. சேயோ னுக்கு முன் மண்டியிட்டு அமர்ந்த

https://telegram.me/aedahamlibra

படி கண்ணீர் சிந்திக் கொண்டிருக்கும் அவனது அந்த நிலையை ஓத வஞ்சி அன்றி வேறு யாராவது கண்டிருந்தால் ஆச்சர்யத்தில் மூழ்கியிருப்பார்கள். இடையில் வெண்ணிறத் துகில் ஒன்றை மட்டும் அணிந்து கொண்டு மண்டியிட்டு அமர்ந்தபடி கண்களை மூடி மனம் உருகிக் கொண்டிருந்தான் சேரமான். மண்டியிட்டு நிமிர்ந்து அமர்ந்திருந்ததால் அவனது உடற் பரிமாணங்கள் நன்கு வெளிப்பட்டது. காலம் முழுவதையும், போரிலேயும், போர்ப் பயிற்சிகளிலேயுமே கழித்திருந்ததால் அவனது உடலானது வச்சிரத்தைப் போன்று கெட்டிப்பட்டு வலிமையுடன் திகழ்ந்தது. மற்ற அரசர்களைப் போன்று போரில் வீரர்களுக்குப் பின்னால் நின்று கொண்டு கட்டளையை மட்டும் விடாமல் முன் வரிசையில் நின்று எதிரி நாட்டு அரசனை நேருக்கு நேர் எதிர்கொள்வதே சேரமானின் வழக்கமாக இருந்தது. வச்சிரம் போன்ற அவனது மார்பினைத் தாக்கிய

https://telegram.me/aedahamlibrary

சில ஆயுதங்கள் சுவட்டினை மட்டும் விட்டுச் சென்று சில விழுப்புண்களை ஏற்படுத்தியிருந்தன. அந்த விழுப்புண்களைச் சேரமான் காணும்போதெல்லாம் அவனுக்குள் பெரும் கம்பீரமும், பெருமையும் வந்து சேர்ந்துவிடும். அந்த எண்ணமே அவனுக்குப் பெரும் கம்பீரத்தை அளித்துவிட்டுச் செல்லும். மார்பினில் முளைத்திருந்த முடிகளில் ஒன்றிரண்டு நரைக்கத் தொடங்கி அவனது அகவையை வெளிப்படுத்த தொடங்கியிருந்தன. சேர நாட்டவர்க்கே உரிய அடர்ந்த கருங்குழல்கள் சுருண்டு தோளோடு கிடந்தது. மீசையை மட்டும் கம்பீரமாக ஒதுக்கி சவரம் செய்யப்பட்டிருந்த அவனது முகமானது பேரமைதியுடன் திகழ்ந்து கொண்டிருந்தது.

ஓதவஞ்சி பாடலைப் பாடி முடித்த பிறகு சிறிது நேரம் கழித்தே கண்களைத் திறந்தான் சேர மாமன்னன். அவன் காதுகளில் அணிந்திருந்த மரகதக் குண்டலங்களுக்கு இணையாக ஒளியை வீசின

https://telegram.me/aedahamlibrary

அவனது விழிகள் இரண்டும். தரையில்
கிடத்தியிருந்த வாளினை எடுத்துக் கண்
களில் ஒத்திக் கொண்டவன், “காவலன்
சேயோன் விறல் வேலவனின் அருளும்,
என் போர் வாளின் துணையும் எந்நாளும்
இருக்கட்டும்” எனக் கூறியபடியே எழுந்த
வன், வாளினை இடையுறையில் சொரு
கிக் கொண்டான். சிறிது நேரம் சேயோ
னது திருமுகத்தையே பார்த்துக் கொண்
டிருந்தவன், பிறகு அந்தச் சந்நிதியிலி
ருந்து வெளியேறி தனது அரண்மனை
மாளிகையை நோக்கி நடக்கலானான்.
அவனுக்குப் பின்னால் அமைச்சர் ஓத
வஞ்சி பணிவுடன் நடந்து வந்து கொண்
டிருந்தார். சேயோன் கோட்டத்தில் நடந்
துவந்த சேர மன்னனின் நடை இப்
போது முற்றிலும் மாறியிருந்தது. பணிவு
மறைந்து அதிகாரம் மிகுந்திருந்தது.

“அமைச்சரே, ஏதேனும் செய்தி?”
என வினவலானான்.

https://telegram.me/aedahamlibra

பதிலுக்கு ஓதவஞ்சி, “இதுவரை எந்தச் செய்தியும் இல்லை மன்னா. சில இடங்களிலிருந்து எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். செய்தி கிடைத்ததும் தெரியப்படுத்துகிறேன். இன்று மந்திராலோசனை சபை கூடுகிறது. தங்களுக்குத் திரை செலுத்தி ஆட்சி செலுத்தும் அனைத்துக் குறுநில மன்னர்கள், படைத் தளபதிகள், சேனாதிபதிகள், ஒற்றர் தள பதிகள், மண்டலாதிபதிகள் என அனைவரும் கூடுகிறார்கள்” என்றார்.

“எதைப்பற்றி முக்கியமாக விவாதிக்க வேண்டியுள்ளது?”

“சோழ நாட்டுப் படையெடுப்பைப் பற்றித்தான் நாம் விவாதிக்கப் போகிறோம் என்பதை மன்னர் ஏற்கெனவே அறிந்தது தானே! அனைவரையும் வரவழைத்ததும் தாங்கள்தானே!” எனப் பதிலளித்தார் ஓதவஞ்சி.

“ஆமாம் ஆமாம். நான்தான் அழைத்தேன். தங்களது இனிய பாட

லைக் கேட்டதிலிருந்து அனைத்தையும் மறந்துவிட்டேன்” என்றான் பெருஞ்சேர லாதன்.

அமைச்சர் ஓதவஞ்சி முகத்தில் மார்பு வரை நீண்டு வளர்ந்திருந்த தனது தாடை முடியைத் தடவியபடியே எதுவும் பேசாமல் நடந்து கொண்டிருந்தார்.

“சோழ நாட்டுப் படையெடுப்பைப் பற்றித் தாங்கள் என்ன கருதுகிறீர்கள்? வெற்றி நிச்சயம் தானே!”

“போரின் முடிவுதான் ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டு விட்டதே! சேர நாடு மட்டும் படை எடுத்தாலே சோழ நாடு தாங்குமா என்பது ஐயமே! ஆனால், நீங்கள் தென்னகத்தின் அனைத்து மன்னர்களையும் துணைக்கு அழைத்துச் சென்று சோழ நாட்டையே நிர்மூலமாக்கப் போகிறீர்கள். சோழ நாட்டுப் படையெடுப்பைப் பற்றி இனி தாங்கள் என்னிடம் விவாதிக்க வேண்டாம்.”

"விவாதிக்க வேண்டாமா?"

"ஆம்!"

"நீங்கள் எனது ஆலோசகர். உங்களிடம் எனது எண்ணத்தைக் கலக்காமல் வேறு யாரிடம் கலப்பது?"

"அதற்குத்தான் அரண்மனையில் வைதீகர்கள் பலர் துணைக்கு இருக்கிறார்களே! இந்த ஏழை அந்தணனிடம் விவாதிக்க வேண்டிய அவசியம் என்பது இல்லையே!"

ஓதவஞ்சி கூறிய பதிலைக் கேட்டு சிரித்த பெருஞ்சேரலாதன், "நண்பா, நீ எனது நண்பன். சிறு வயதிலிருந்தே எனது நன்மைக்காகவே உழைத்துக் கொண்டிருப்பவன் நீ! உன்னை ஒருபோதும் நான் அலட்சியம் செய்ய மாட்டேன். சேர மன்னன் எடுக்கும் அனைத்து முடிவுகளிலும் ஓதவஞ்சியின் ஆலோசனை நிச்சயம் கலந்திருக்கும்" என்றான்.

"இல்லை சேரலாதா! உற்ற நண்பன் என்பதற்காக நீ உன்னுடனே வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை. இந்த அமைச்சுப் பணி பெரும் சிரமமாக இருக்கிறது. வயதாக வயதாகச் சுமக்க இயலவில்லை. என்னை விடுவித்துவிட்டால் சேயோனின் திருப்புகழைப் பாடிக் கொண்டே எஞ்சிய காலத்தைக் கழித்து விடுவேன். உடலில் நரை தோன்ற தோன்ற சிந்திக்கும் சக்தியையும் இழந்து கொண்டு வருகிறேன்!"

"நீ விடுபட்டு என்னை மட்டும் தனியாக இந்த அரசியல் பாரத்தைச் சுமக்க வைக்கப் பார்க்கிறாய்?"

"இல்லை மன்னா. முன்பெல்லாம் நமது இருவரது கருத்தும் எப்போதுமே ஒன்றுபட்டு இருக்கும். ஆனால், சமீப காலங்களாக அனைத்து காரியத்திலும் இருவருமே முரண்பட்டு நின்று கொண்டிருக்கிறோம். நம்முள் கருத்து முரண்பாடு அதிகரிக்க அதிகரிக்க அரசியல் பெரும்

சுமையாக மாறிக் கொண்டிருக்கிறது. இந்தக் கருத்து வேறுபாடு நம்முள் பிள விணை உருவாக்கி விடுமோ என அஞ்சு கிறேன்."

"நண்பா, நம்முள் இந்தச் சோழ நாட்டுப் போர் ஒன்றில் தானே கருத்து வேறுபாடு அதிகரித்திருக்கிறது? வீண் கவலை எதற்கு?"

"பெரும் பழிக்கு ஆளாகப் போகி றாய் சேரா! குடம் நிறைய நிறைந்திருக் கும் பசும் பாலை துளி நஞ்சு வீணாக்கி விடும் அல்லவா, அதைப் போன்றே இது காலம் வரை நீ சேர்த்திருக்கும் அறம், புண்ணியம், புகழ், வீரம், பெருமை என அனைத்தையும் இந்த ஒரு போர் வீண டிக்கப் போகிறது?"

"நண்பா...?"

"ஆமாம். உனக்குக் கப்பம் கட்டிக் கொண்டிருந்த மலை நாட்டு மன்னன் இருங்கோவேளை எப்போது உறையூர்

https://telegram.me/aedahamlibra

ஆசனத்தில் அமரவைத்தாயோ, அன்றி லிருந்தே உன் செங்கோல் நெறி தவற ஆரம்பித்துவிட்டது!”

“இது அரசியல் முடிவு! காலத்திற் குத் தகுந்தவாறு தகுந்த முடிவுகளை எடுக்க வேண்டும். அதுவே அரசனுக்கு ரிய தலையாயப் பண்பு!”

“அரசனுக்குரிய தலையாயப் பண்பா? அரசன் என்ற சொல்லுக்கு என்ன அர்த்தம் என்று தெரியுமா உனக்கு? அரசன் என்றால் அறத்தின் தலைவன். அதாவது அறம் தவறாமல் காப்பவன்!”

“நான் அறத்திலிருந்து எப்போது நழுவினேன். ஏன் நீ இப்போது கோபப்ப டுகிறாய்?”

“சேரா, உன் இடத்தில் சோழ மன் னன் இளஞ்சேட்சென்னி இருந்திருந் தால் என்ன செய்திருப்பார் என்று தெரி யுமா?”

https://telegram.me/aedahamlibra

"என்ன செய்திருப்பார் அமைச்சரே!"

"உனக்கும் சென்னிக்கும் உள்ள வேறுபாடு என்ன என்றாவது உனக்குத் தெரியுமா?"

"கேள்வியை மட்டுமே கேட்டுக் கொண்டிருக்கிறாய்? பதிலையும் கூறினால் தெரிந்துகொள்வேன் நண்பா!"

"கூறுகிறேன் கேள். நான் கூறிய பிறகாவது நீ சிந்தித்துப் பார்த்து அறவழியில் நடந்தால் எனக்கு மகிழ்ச்சியே" எனக் கூறிய அமைச்சர் ஓதவஞ்சி அமைதியாகி சேரனையே பார்த்துக் கொண்டிருந்தார். ஓதவஞ்சி இப்படிக் கூறியதைக் கேட்டதுமே நடந்து கொண்டிருந்த பெருஞ்சேரலாதனும் நின்று திரும்பி ஓதவஞ்சியின் முகத்தைக் கவனிக்கலானார்.

அந்தச் சூழ்நிலையிலும் தனது நிதானத்தை இழக்காத ஓதவஞ்சி சேரனது விழிகளில் தனது பார்வையை

https://telegram.me/aedahamlibrary

நிலைக்கவைத்துக் கொண்டு, “உன்
இடத்தில் சோழ மாமன்னன் மௌரி
யரை விரட்டிய உருவப்பஃதேர் இளஞ்
சேட்சென்னி இருந்திருந்தால் மூவேந்த
ருள் ஒருவன் அமர்ந்திருந்த ஆசனத்தை
வேளிர் ஒருவன் அடைய உதவியிருக்க
மாட்டான். உன்னைப் போன்று சிறு பால
கன் மீது படை எடுக்கவும் துணிந்திருக்க
மாட்டான். மாறாக, அந்தப் பாலகனுக்குத்
துணையாக இருந்திருப்பான். ஆனால்
நீ?” என வினவலானார்.

“சென்னி போர் தொடுத்திருக்க
மாட்டார் என்று எப்படி அவ்வளவு அறுதி
யிட்டுக் கூறுகிறீர்கள்?”

“கருணையே அற்ற மௌரிய
ரையே தோற்கடித்து விரட்டிய சென்னி
யின் படை பலத்திற்கு முன்பு நம் தென்
னாட்டு மன்னர்களின் படைகள் எம்மாத்
திரம்? சென்னி அன்று நினைத்திருந்
தால் ஒட்டு மொத்தத் தென்னாட்டையும்
அவனது வெண்கொற்றக் குடைக்குக்

கீழ் கொண்டுவந்திருக்கலாம்? ஆனால், அவன் என்ன செய்தான்? மௌரியரிட மிருந்து மீட்ட நாடுகளை உரியவருக்கே திரும்ப ஒப்படைத்தான். தென்னகத்தில் அரசியல் நிலைத்தன்மையை ஏற்படுத்தி யவன். சோழ இளவல் வளவனுக்கு ஏற் பட்டிருக்கும் நிலையைப் போன்று வேறு யாருக்கேனும் ஏற்பட்டிருந்தால் சென்னி முதல் ஆளாகச் சென்று உதவியிருப் பான். தென்னகத்தையே காத்த மாபெ ரும் மன்னன் அவன். ஆனால், அவனது மகனுக்கு வந்திருக்கும் ஆபத்தைத் துடைக்க இன்று அவன் இல்லையே! அவனுக்கு இருந்த பெருந்தன்மையில் துளியளவு உனக்கு இருந்திருந்தால் நீ இன்று மற்ற வேளிர்கள் மற்றும் பாண்டிய னோடு சிறு பாலகனான சோழ இளவல் வளவனை எதிர்க்கத் துணிந்திருக்க மாட்டாய்?" என அவர் கூறி முடித்த போது அவரது நாசிகளிலிருந்து காற்று அன லாய் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

“சரி நண்பா... ஏதோ எனக்கும் சென்னிக்கும் வேற்றுமை ஒன்று இருப்பதாகக் கூறினாயே, அது என்னவாம்? அதையும் கூறிவிடேன்” அமைதியாகத் தெரிவித்தான் மாமன்னர் பெருஞ்சேரலாதன்.

“அன்று சென்னி தென்னகத்தைக் காக்க தமிழக மன்னர்களை ஒன்று திரட்டினார். ஆனால் நீ அவனது மகனை அழிக்கத் தமிழகக் குறுநில மன்னர்களை ஒன்றுதிரட்டுகிறாய்? இங்கிருக்கும் மன்னர்கள் போதாது என்று சிங்களர்களின் உதவியினையும் நீங்கள் நாடியிருக்கிறீர்கள்? இது வெட்கப்படவேண்டிய செயல்!”

“நண்பா அரசியலில் ஒரு அமைச்சனின் பார்வைக்கும், மன்னனின் பார்வைக்கும், மக்களின் பார்வைக்கும் சிந்திக்கும் திறனுக்கும் பல வேறுபாடுகள் உண்டு. அரசனுக்குரிய கடமைகள் என்பது முற்றிலும் வேறு. அதைத்தான் நான் செய்கிறேன். அன்று சென்னி மௌரி

யரை எதிர்த்து விரட்டினான் என்றீர்களே, அதிலிருந்துதான் சோழர் குலத்தை வேரறுக்க வேண்டும் என அனைவருமே நினைக்கத் தொடங்கினார்கள். சோழர்களின் படை பலத்தை ஒருமுறை கண்டுவிட்டோம். சென்னி வேண்டுமானால் பெருந்தன்மையாக மௌரியரிடம் விடுவித்த பகுதிகளைத் திருப்பிக் கொடுத்திருக்கலாம். ஆனால், அவரது மகனும் அவரைப் போன்றே இருப்பான் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது என்று என் தந்தை தெரிவித்திருக்கிறார். சென்னியின் புதல்வன் எழுச்சி பெற்று மற்ற மன்னர்களை அடிமைப் படுத்துவதற்குள் நாம் அவர்களை அழித்து விடவேண்டும். இல்லையேல்...”

“இல்லையேல்....”

“இல்லையேல், சோழர்கள் நம்மை நிர்மூலமாக்கிவிடுவார்கள்.”

“சோழ நாடு இப்போது குறுநில நாட்டினைப் போன்று பலமிழந்து காணப்

https://telegram.me/aedahamlibra

படுகிறது. இந்த நிலையில் நீங்கள் போர் தொடுப்பது சரிதானா?”

“நண்பா, நம் நாடு சிறு சிறு பிரிவுகளாகப் பிரிந்து நமக்குள்ளே போர் தொடுத்து நம் வளத்தை அழித்துக் கொண்டிருக்கிறோம். வெட்ட வெட்ட முளைக்கும் முள் செடியினைப் போன்று ஒவ்வொரு பகுதிக்கும் யாராவது ஒருவன் அரசன் என்று முளைத்துக் கொண்டே இருக்கிறார்கள். சென்னியோடு சோழ வம்சம் நிர்மூலமானது என்று நினைத்தோம். ஆனால், அவன் இறப்பதற்குள் அவனது வாரிசை விதைத்துவிட்டுச் சென்றுவிட்டான். இத்தனை வருடங்களாகப் போர் தள்ளிப்போய்க் கொண்டு இருந்துவிட்டது. போருக்கான காரணமும் இப்போதுதான் வாய்த்திருக்கிறது. புகார் மக்கள் திரள் முன்னே சோழ நாட்டுப் படைத்தலைவன் வெஞ்சினம் உரைத்திருக்கிறான். அவனே பாண்டிய நாட்டிற்கும் சென்று கொற்கையில் பாண்டியன் தென்னவனிடம், ‘திறனிருந்

தால் படைக்கலத்திற்கு வா மோதுவோம்' எனச் சவால் விட்டிருக்கிறான். இதில் வேடிக்கை என்னவென்றால் 'படைக ளைத் திரட்ட போதிய காலத்தை எடுத் துக்கொள், அதுவரை நாங்கள் பொறுத் திருக்கிறோம்' என்றும் இருங்கோவிடம் கூறியிருக்கிறான் அவன். எவ்வளவு திமிர் இருந்தால் அப்படிக் கூறியிருப்பான் அந் தப் படைத் தலைவன்? மூவேந்தர்க ளாகச் சிதறியிருக்கும் நம் நாட்டை இரு வேந்தர்களாக மாற்றப் போகிறோம். சோழ தேசத்தின் அழிவானது காலத் தால் நிர்மாணிக்கப்பட்டது. உறைந்தை யில் சேரரின் வில் கொடியும், புகாரில் பாண்டியரின் கயல் கொடியும் பறக்கப் போவது உண்மை. எதிர்காலத்தில் இரு வேந்தர்கள் ஒரு வேந்தர்களாக மாறு வார்கள். அதில் சேர குலமே அழிந்தா லும் நன்றே! ஒரே குடையின் கீழ் தமி ழகம் என்று ஆளப்படுகிறதோ அன்று தான் தமிழகத்தின் பொற்காலம்! அந்த நிலைக்குத் தான் இந்தப் போரே! மற்ற

படி வேறு எந்த உள் நோக்கமும் இந்தப் போரில் இல்லை!"

"அரசர் அனுமதித்தால் சில கேள் விகளைக் கேட்க விரும்புகிறேன்."

"கேள் நண்பா..."

"மௌரியரை வென்று அழுந்தூர் வேளிரின் மகளைச் சென்னி மணந்து வந்த பிறகு திடீரென்று ஒருநாள் சென்னி படுக்கையில் விழுந்தாரே, அதைப்பற்றிக் காலஞ்சென்ற உன் தந்தை உன்னிடம் ஏதாவது தெரிவித்திருக்கிறாரா?"

"நண்பா...?" அதிர்ச்சியில் வினவி னார் சேரன் பெருஞ்சேரலாதன்.

"ஆச்சர்யம் வேண்டாம். நான் என் அரசரிடம் தான் கேட்கிறேன். ரகசி யம் என நினைத்தால் கூறத் தேவை யில்லை."

"அதைப்பற்றி எதுவும் எனக்குத் தெரியாது?"

“நல்லது. இளமையில் சென்னிக்கு குழந்தைப் பேறு இல்லாமல் போனதற்கான மர்மத்தை உன் தந்தை உன்னிடம் தெரியப்படுத்தினாரா?”

“..........”

“சரி சென்னியை மறந்துவிடுவோம்! இரண்டு தலைமுறைக்கு முன்னாள் உன் தந்தையின் காலத்திலும், உன் பாட்டனின் காலத்தில் நடந்த நிகழ்ச்சிகள் அவை. உன் காலத்தில் நடந்தவற்றைப் பற்றி வினவுகிறேன். பதில் சொல்!”

“கேள்!”

“அரசன் இல்லாத நாடான சோழ தேசத்தின் தலைநகரான உறைந்தையை இருங்கோவேள் கைப்பற்றியதில் பெரும்பங்கு வகித்தவன் நீ தானே!”

“ஆமாம்.”

“இப்போது போருக்குத் தலைமையேற்கப் போகிறவனும் நீதானே?”

https://telegram.me/aedahamlibra

"ஆமாம்."

"ஒரு நாட்டின் அரசனை போர்க் களத்தில் எதிர்ப்பதே வீரனுக்கு அழகு. ஆனால், சோழ இளவலை உறைந்தை மாளிகையில் சிறை வைத்து உயிரோடு எரிக்க முயற்சித்திருக்கிறார்கள். அது உனது கட்டளையின்படிதானா நடந் தது?"

"எனக்கும் அதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. வளவனைச் சமர் களத்தில் எதிர்ப்பதையே கௌரவமாக நினைக்கிறேன் நான்."

"சரி, சில வருடங்களுக்கு முன் னாள் பெருமறவர் மகேந்திர வளவனா ரின் மகன் திவ்யன் குணக் கடலில் உயிரோடு கொளுத்தப்பட்டு எரிக்கப்பட் டானே அதற்கும் உனக்கும்...?"

"நண்பா, இது என்ன அபத்தம். பிறப்பிலிருந்து நீ என்னைக் கண்டு வரு கிறாய். இந்தக் கேள்விகளை நீ என்னி

டம் வினவலாமா? நான் அற நெறியை ஒருநாளும் தவறுவதில்லை என்பதை நீ அறிவாய்!”

“ஆவேசம் வேண்டாம் அரசே! நான் கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருப்பது சேர மாமன்னன் பெருஞ்சேரலாதனிடம். சிறு வயதிலிருந்தே என் தோள் மீது கைப்போட்டுக் கொண்டு நடந்த என் நண்பனிடம் அல்ல! ஏனெனில் அரசர்களின் சிந்தனைகள், நோக்கங்கள் அனைத்தும் வேறு அல்லவா?”

“.........”

“வளவனாரின் மகன் திவ்யன் இறப்பிற்கும் உனக்கும் எந்தவொரு தொடர்பும் இல்லை. அப்படித்தானே?”

“ம்ம்ம்ம்”

“சரி, சில திங்கள்களுக்கு முன்னால் கொற்கையில் சோழ இளவலுக்குத் துணையாக இருந்த படைத்தலைவன் விறல்வேல் குமரிக் கடலில் மூழ்

https://telegram.me/aedahamlibra

கடிக்கப்பட்டானே, அதற்கும் உனக்கும் கூட எந்தச் சம்பந்தமும் இல்லை. அப்படித்தானே!”

சேரன் பெருஞ்சேரலாதன் அமைச்சர் ஓதவஞ்சியை அதிர்ச்சியுடன் பார்த்துக் கொண்டு பேச இயலாமல் நிற்கலானார்.

“துணையாக இருந்த படைத்தலைவர்கள் இருவரை இழந்து கிழவன்களாகிப் போன வளவனார், இரும்பிடர்த்தலையர் ஆகியவர்களின் துணையுடன் முகத்தில் அரும்பு மீசையுடன் பாலகனாக இருக்கும் சோழ இளவலை எதிர்க்க இரு பெரும் வேந்தர்கள், மற்ற பதினோரு வேளிர்கள் இவர்கள் போதாதென்று சிங்கள கடற்படையையும் துணைக்கு அழைத்திருக்கிறீர்கள். இது தான் அறச் செயலா?”

“போர் என்று வந்துவிட்டால் அதையெல்லாம் பார்க்க இயலாது அமைச்சரே! சூழ்ச்சிகளின் முடிச்சு

தானே அரசியல்! அந்த முடிச்சுக ளில் எவன் எதிரிகளைச் சிக்கவைக் கிறானோ, அவனே அரசியலில் கரை தேர்ந்தவன் ஆகிறான்! சோழ மரபின் வீழ்ச்சியில் தங்கள் பங்கும் இருக்க வேண்டும் என எண்ணி அனைத்து வேளிர்களும் துணைக்கு வருகிறார்கள். துணைக்கு வருகிறேன் என்று படையு டன் வருபவர்களை வேண்டாம் என்று அவமானப்படுத்த இயலுமா?"

"வச்சிரம் மற்றும் அவந்தி நாட்டு ஒற்றர்கள் சிலர் உறைந்தைக்குச் சென்று மீள்வதாக ரகசியத் தகவல்கள் கிடைத் ததே! என்ன என்று விசாரித்தாயா?"

"இருங்கோவேள் எதுவும் தெரி யாது என்கிறான்."

"ஆரம்பம் முதலே இருங்கோவை இயக்கிக் கொண்டிருக்கும் அந்த வைதீ கன் பாகவதனின் மேல் எனக்குப் பெருத்த சந்தேகம் இருக்கிறது. அவனை நாம் ஒருநாளும் நம்பக் கூடாது! நாளுக்கு

https://telegram.me/aedahamlibra

நாள் வைதீகர்கள் சமய சலசலப்பை ஏற்படுத்திக் குளிர்காயத் தொடங்கிவிட்டார்கள். எச்சரிக்கையாக இருக்க வேண்டிய தருணம் இது! !”

“சமீப காலங்களாகவே வைதீகர்களைக் கண்டாலே நீ வெறுக்கிறாய். காரணம் தான் எனக்குத் தெரியவில்லை.”

“அந்த மடையர்களின் பேச்சு இப்போது எதற்கு? அவர்களை விடு! நீயாயிற்று? அவர்களாயிற்று? மேலே நான் கூறிய அநீதிகளைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?”

“அவை அநீதிகள் அல்ல நண்பா!”

“பிறகு?”

“அரசியல் சூழ்ச்ச்சிகள்!”

“சேராலாதா?”

“ஆமாம் நண்பா... அரசியல் சதுரங்கத்தில் நாமெல்லாம் பகடைக்காய் தானே!”

"நாம் என்று உன்னையும் சேர்த்துக்கொள்ளாதே சேரலாதா! நீங்கள் பகடையை உருட்டுபவர்கள். நாங்கள் உருளுபவர்கள். அந்த அநீதிகளுக்கும் உனக்கும் ஒரு வகையில் தொடர்பு இருக்கிறது. அப்படித்தானே?"

"எனக்கும் அவற்றிற்கும் எந்தத் தொடர்பும் இல்லை நண்பா. ஆனால், அவற்றை என்னால் கண்டிக்க இயலாது!"

"அப்படியெனில் போர்?"

"அது உறுதியானது. திட்டமிட்டபடி தாக்குதல் தொடுக்கப்படும்! இதுவே சரியான தருணம். நம் வடக்கு எல்லையும் அமைதியாக இருக்கிறது. இதை விடுத்தால் சரியான தருணம் வாய்க்காது!"

"சோழ நாட்டுப் போர் என்பது உறுதியானது அப்படித்தானே!"

"ஆமாம் அமைச்சரே! போர் மட்டுமல்ல அதற்குத் தலைமை ஏற்கப்

போகிறவனும் நானேதான்!" எனச் சேர மான் பெருஞ்சேரலாதன் கூறுகையில் அரசனுக்குரிய கம்பீரம், தோரணை என அனைத்தும் வெளிப்பட்டு மறைந்தது.

"வேலவனின் சித்தம் இதுவானால் யாரால் மாற்ற இயலும். ஒரு அமைச்ச னின் கடமை அரசன் அறப் பாதையைத் தவறுகையில் சுட்டிக் காட்டுவதே. அநீ தியை இழைக்கும் மன்னனுக்கு இனி யும் நான் அமைச்சனாக இருக்க என் மனம் ஒப்பவில்லை அரசே! உன் அரண்மனைக்கு நான் வருவது இன்றே கடைசி. இன்றோடு என்னை அனைத் துப் பொறுப்புகளிலிருந்தும் விடுவித்து விடுங்கள். என் நண்பனுக்கு வாழ்த்துக் கள்!" எனக் கூறியவர் சேரமான் பெருஞ் சேரலாதனின் பதிலை எதிர்பார்க்காமல் அங்கிருந்து விடுவிடுவென்று நடக்கலா னார்.

ஓதவஞ்சி செல்வதையே வருத்தத் துடன் பார்த்துக் கொண்டிருந்தார் சேர

மான் பெருஞ்சேரலாதன். ஓதவஞ்சியின் செயல் அவரது விழிகளில் துளிக் கண் ணீரை வரவழைத்திருந்தது.

https://telegram.me/aedahamlibra

https://telegram.me/aedahamlibrary

# 12.
# பிரகடனப்படுத்தப்பட்ட போர்

தலைநகர் கருவூர் வஞ்சிமா நகர் அரசவையில் சேர நாட்டு அமைச்சர்கள், தனாதிகாரி, முக்கியக் கணக்காளர்கள், சேனாதிபதிகள், படைத் தளபதிகள், ஒற்றர் தளபதிகள், சேரனுக்கு நெருங்கிய வேளிர்கள் எனப் பலர் கூடியிருந்தனர். சேரன் பெருஞ் சேரலாதனிடமிருந்து ஓலை கிடைக் கப்பெற்று வஞ்சிக்கு வந்த பிறகு தான் ரகசிய அழைப்பு தனக்கு மட் டும் அனுப்பப்படவில்லை அனைவருக்

கும் அனுப்பப் பட்டிருக்கிறது என் பதை அறிந்தவர்கள் அதிர்ச்சியடைந் தார்கள். அவையில் எதிர்பாராமல் சந் தித்துக் கொண்ட நண்பர்கள் அனை வரும் வியப்பில் நலம் விசாரித்தபடியே அலாவிக் கொண்டிருந்தனர். அவைக்கு ரகசியமாக அழைக்கப்பட்டவர்கள் எவ ருக்கும் எதற்காக அழைக்கப்பட்டிருக்கி றார்கள் என்ற தகவல் தெரிவிக்கப்பட வில்லை. ஆனால், அனைவருமே சோழ நாட்டுப் போரைப்பற்றி விவாதிக்கத்தான் சேரன் பெருஞ்சேரலாதன் அழைத்தி ருக்கிறார் என்பதை ஒருவாறு ஊகித்த னர். ஆனால், யாரும் யாரிடமும் அதைப் பற்றி வாயைத் திறக்கவில்லை. சேர மானே முறைப்படி அறிவிக்கட்டும் என எண்ணி அமைதி காத்துக் கொண்டிருந் தனர்.

அவை நிரம்பிய பிறகு இரண்டாவது சாமத்தின் தொடக்கப் பொழுதில் "சேர மாமன்னன் மலை நாட்டு வேந்தன் அக் கினி வழி தோன்றல் சேரர் குலத் திலகம் மாமன்னர் ராஜாதி ராஜர் ராஜ கம்பீரர் சேரமான் பெருந்தோளாதன் பெருஞ்சே ரலாதன் அவைக்கு வருகிறார் வருகிறார் வருகிறார்" எனக் கட்டியங்காரன் சேர

https://telegram.me/aedahamlibra

மன்னனின் வருகையை அனைவருக்கும் உரத்த குரலில் தெரியப்படுத்த அக்கணமே சேனாதிபதிகள், படைத் தலைவர்கள், அமைச்சர்கள், வேளிர்கள் என அனைவரும் எழுந்து நின்று மன்னருக்கு மரியாதை செலுத்தலானார்கள். நீதி தவறாது ஆட்சி செலுத்தும் செங்கோலைக் வலது கையில் பிடித்தபடி அவைக்குள் கம்பீரமாக நுழைந்த சேர மன்னன் பெருஞ்சேரலாதன் அவையோரின் மரியாதையை ஏற்றுக் கொண்டு தனது சிம்மாசனத்தில் அமர்ந்தார்.

இரத்தினக் கற்கள், பவளம், வைடுரியம், வைரம், முத்து ஆகியவை பதிக்கப் பெற்ற அந்தச் சிம்மாசனத்தில் அமர்ந்திருந்த போது சிம்மத்தைப் போன்றே கம்பீரமாகக் காட்சியளித்தார் சேரன் பெருஞ்சேரலாதன். இடையில் தொங்கிய வாள், கையில் இருந்த செங்கோல், தலையில் சூடியிருந்த மாணிக்கக் கற்கள் பதிக்கப்பெற்ற மணி மகுடம் ஆகியவற்றோடு அமர்ந்திருந்த சேரனைக் கண்ட அனை

https://telegram.me/aedahamlibra

வருக்கும் பயம் கலந்த மரியாதை தோன்றியிருந்தது. அடக்கத்துடன் அனைவரும் பார்வையை மன்னர் மீது செலுத்த பதிலுக்கு அனைவரையும் பார்வையால் ஊடுருவிய சேரன், “அழைத்தவர்கள் அனைவருமே வந்துவிட்டார்கள் தானே?” எனக் கம்பீரத்துடன் வினவலானார். அவரது அந்தச் சிம்ம முழக்கம் அந்த அவைக்குள் எதிரொலித்து அடங்க கண நேரங்கள் ஆனது.

“அரசே, அனைவரும் வந்துவிட்டார்கள். ஆனால்....” எனக் கூற பயந்து பதிலை பாதியிலேயே நிறுத்தினான் சேரனுக்கு அருகில் நின்று கொண்டிருந்த சேரனின் மெய்க்காவல் படைத் தலைவன்.

“என்ன ஆனால்? தொடர்ந்து கூறு!” கட்டளையிட்டார் மன்னர்.

“அரசே, இளவரசரைத் தவிர்த்து மற்ற அனைவரும் வந்து சேர்ந்திருக்கிறார்கள்.”

"எங்கே அவன்?" அதட்டலுடன் வினவினார் மன்னர்.

"இளவரசர் படை வீரர்கள் தங்கியிருக்கும் பாசறைக்குச் சென்றுவிட்டார்."

"நேற்றிரவு அரண்மனையில் தானே தங்கியிருந்தான்?"

"ஆம் அரசே!"

"எப்போது அரண்மனையிலிருந்து புறப்பட்டான்?"

"காலை முதல் சாமத்தின் இரண்டாவது பொழுதில்!"

"காலையிலா?" என வினவியபடியே வெறுமனே இருந்த இளவரசனுக்குரிய அரியாசனைத்தையும், அருகில் அமர்ந்திருந்த அமைச்சர் ஓதவஞ்சியையும் மாறி மாறி பார்த்தான் சேரமான் பெருஞ்சேரலாதன்.

அமைச்சர் ஓதவஞ்சியைப் போன்றே இளவரசனும் சேரமான்

பெருஞ்சேரலாதனின் கட்டளைக்குக் கீழ்படிய மறுக்கிறார் என்பதை அந்தப் பார்வையிலிருந்து சிலர் புரிந்து கொண் டார்கள்.

“சரி. வராதவர்களைப் பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை” எனக் கூறியவன் அந்த அறையையும், அவ னுக்கு முன் ஆசனத்தில் அமர்ந்திருந்த வர்களின் விழிகளில் ஊடுருவி அனை வரையும் நோக்கினான் மன்னன். பிறகு அவனுக்கு மயிலிறகால் சாமரம் வீசிக் கொண்டிருந்த இரண்டு பணிப்பெண் களிடம், “அரண்மனை நந்தவனத்தின் காற்று நன்கு வருகிறது. நீங்கள் சென்று மகாராணிக்கு வேண்டிய பணிவிடைக ளைச் செய்யுங்கள்!” எனக் கட்டளையிட் டான்.

“அப்படியே ஆகட்டும்!” எனக் கூறிய இரு பெண்களும் அங்கிருந்து வெளியே றினர்.

தனது சிம்மக் குரலை உயர்த்தித் தொண்டையைக் கனைத்துக் கொண்டார் சேரமான் பெருஞ்சேரலாதன். பிறகு, "உங்களை அழைத்ததற்கான நோக்கத்தை அனைவருமே ஓரளவு ஊகித்திருப்பீர்கள் என நம்புகிறேன். உங்கள் ஊகத்தின்படியே சோழ நாட்டுப் படையெடுப்பைப் பற்றித்தான் இன்று நாம் விவாதிக்கப் போகிறோம். அதற்கு முன் உங்கள் அனைவருக்கும் இரண்டு முக்கியமான செய்திகளை அறிவிக்கப் போகிறேன்" எனக் கூறி பேச்சை நிறுத்தினார்.

அரண்மனைக்குள் சிறு சலசலப்பு மீண்டும் தோன்றியது. அனைவருமே மன்னரின் அறிவிப்பு என்னவாக இருக்கும் எனும் எதிர்பார்ப்பில் மன்னரில் முகத்தையே நோக்கலானார்கள். ஆனால், அமைச்சர் ஓதவஞ்சி மட்டும் எந்த எதிர்பார்ப்பும் அடையாமல் அமைதியாக அமர்ந்திருந்தார்.

"இத்தனை நாட்களாக நமக்கு ஆலோசனைகளை வழங்கிக் கொண்டிருக்கும் பேரமைச்சர் ஓதவஞ்சி ஓய்வெடுக்க விரும்புகிறார். ஆதலால், அவரை அனைத்துப் பொறுப்புகளிலிருந்தும் விடுவிக்கிறேன்" எனக் கூறியதுதான் தாமதம் அடுத்தகணம் அனைவருமே பெரும் அதிர்ச்சியில் உறைந்தார்கள். ஏனெனில் அமைச்சர் ஓதவஞ்சியின் நேர்மை, எளிமை, அறநெறி தவறாத அவரது பண்பை சேர நாட்டின் கடைகோடி மக்கள் கூட அறிந்திருந்தார்கள். மன்னரின் அறிவிப்பைக் கேட்டதும் எழுந்த பொறை நாட்டு வேளிர் சிம்மக் கடுக்கோ, "அரசர் தங்களது முடிவினை மறுபரிசீலனை செய்ய வேண்டுமாய்ப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் ஓதவஞ்சியைப் பணியிலிருந்து விடுவித்தால் இழப்பு நமக்குத்தான் எனக் கருதுகிறேன் நான். அவரது அனுபவம் நமக்கு எப்போதும் துணையிருக்க வேண்டும் என்பது எனது தனிப்

பட்ட கருத்து! அவரது இடத்தை யாரா லும் பூர்த்திச் செய்ய இயலாது!” எனக் கூறிவிட்டு அமர்ந்து கொண்டார்.

மற்ற சில வேளிர்கள் மற்றும் படை சேனாதிபதிகளும் எழுந்து பொறை நாட்டு வேளிரின் கருத்தை ஆதரித்துப் பேசினார்கள்.

அவர்கள் கூறிய அனைத்தை யும் கேட்டுக் கொண்ட பிறகு மன் னர், “அமைச்சர் ஓதவஞ்சியைப் பணி யிலிருந்து விடுவித்திருப்பதால் ஏற்பட் டிருக்கும் இழப்பை நானும் அறிவேன். ஆனால், இது அவரது தனிப்பட்ட விருப் பம். அதில் தலையிடும் உரிமை நமக்கு இல்லை என்றே கருதுகிறேன். அவ ருக்கு ஆனைமலைக்கு அருகில் இருக் கும் கிராமங்களை அவரது சீரிய பணிக் குப் பரிசாகப் பட்டயம் எழுதிக் கொடுக்க உத்தரவிடுகிறேன்!” என்றார்.

உடனே எழுந்த அமைச்சர் ஓத வஞ்சி, “மன்னரின் பெருந்தன்மைக்கு

மிக்க நன்றி. மன்னர் என்னை விடுவித்ததற்கே நன்றி கடன்பட்டவன் ஆகின்றேன். எந்தப் பரிசுகளும் எனக்குத் தேவையில்லை!" எனக் கூறிவிட்டு அமர்ந்து கொண்டார்.

ஓதவஞ்சியின் பதிலைக் கேட்டு அனைவருமே அக்கணம் அதிர்ச்சியடைந்தார்கள். ஓதவஞ்சியின் அந்தப் பதிலின் மூலம் இருவருக்குமிடையில் ஏற்பட்டிருக்கும் கருத்து வேறுபாட்டினை அனைவருமே அறிந்து கொள்ளலானார்கள்.

"ஓதவஞ்சி வகித்த அமைச்சர் பொறுப்பை இனி என் தலைமை குரு ஆசான் ஆச்சார்யார் கவனிப்பார்" என இரண்டாவது கட்டளையையும் உதிர்த்தான் பெருஞ்சேரலாதன். அந்தக் கட்டளையை ஓதவஞ்சி எதிர்பார்த்திருந்ததால் அவர் எந்த ஆச்சர்யத்தையும் அடையவில்லை. ஆனால், மற்ற அனைவருமே அக்கணம் அதிர்ச்சியடைந்தார்

கள். மன்னரின் இந்த இரண்டு அறிவிப்புகளும் அனைவரையும் விரக்தியடையச் செய்திருந்தன. மன்னரின் அறிவிப்பில் யாருக்கும் உடன்பாடு இல்லாவிட்டாலும் மன்னரை எதிர்த்துப் பேசாமல் அனைவருமே அமைதி காத்தனர். சேரனை எதிர்த்துப் பேசுபவர்கள் இருவர். ஒருவர் அவரது மகன் சேர இளவரசன். மற்றொருவர் அமைச்சர் ஓதவஞ்சி. சேர இளவரசன் அவையில் இல்லை. ஓதவஞ்சி பதவியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு ஊமையாகிப்போனார்.

அவையில் சலசலப்புத் தோன்றிக் கொண்டிருந்த போதே சேரமான் பெருஞ்சேரலாதன், “சோழ நாட்டின் மீது சேர நாடு படையெடுப்பதற்கான தக்க சமயம் வந்துவிட்டதாகக் கருதுகிறோம் நாம்! முழு நிலவு அன்று நாம் புகாரை முற்றுகையிட புறப்படலாம் எனத் திட்டமிட்டிருக்கிறேன். சேனாதிபதிகள் மற்றும் படைத்தலைவர்களின் கருத்தினை அறிய விழைகிறோம்” என்றார்.

அவையில் சிறிது நேரம் பெருத்த அமைதி நிலவியது. சேரமான் பெருஞ்சேரலாதனும் அவையினர் ஒவ்வொருவரின் கருத்தும் என்ன என்று முகமாற்றத்தைக் கொண்டே அனுமானித்துக் கொண்டிருந்தார். அமைதி எவ்வளவு நேரம் நீடிக்கிறதோ அவ்வளவு நேரம் நீடிக்கட்டும் எனக் கருதிய பெருஞ்சேரலாதனும் அமைதி காக்கவே செய்தார்.

ஆசனத்திலிருந்து எழுந்த சேர நாட்டின் சேனாதிபதி, “அரசே! தங்கள் கட்டளை எதுவானாலும் அதனைச் செயல்படுத்தச் சித்தமாக இருக்கிறோம். இன்றே நமது படைகள் புகாரை முற்றுகையிடட்டும் எனத் தாங்கள் கட்டளையிட்டால் அடுத்தக் கணமே நமது சேனைகள் நகரத் தொடங்கிவிடும். நம் வீரர்களும் சோழ நாட்டுப் படையெடுப்பை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். ஆணையிடுங்கள் அரசே!” என வேண்டினார்.

https://telegram.me/aedahamlibrary

சேனாதிபதியின் பதிலைக் கேட்டதும் சேர மன்னரின் முகத்தில் பெருமை தவழவே செய்தது.

சேரனின் படைத்தலைவரும் உம்பர்காட்டின் வேளிருமான உம்பர்காடன் எழுந்து தனது கரகரத்தக் குரலால், “அரசே, சோழ நாட்டைத் தோற்கடிக்க வேண்டும் என்று தங்கள் முன்னோர்கள் பலர் முயன்றிருக்கிறார்கள். ஆனால், அவற்றையெல்லாம் பெருநற்கிள்ளி, செம்பியன், இளம்பெருஞ்சென்னி எனப் பலரும் முறியடித்துவிட்டார்கள். அரசன் இல்லாத நாட்டைத் தாக்குவது தர்மம் அல்ல என்று இத்தனை நாட்களாக நாம் அமைதி காத்தோம். சென்னியின் மகன் வளவன் புகாரில் முடிசூடிக் கொண்டான். ஆணையிடுங்கள் அரசே!” என்றார் ஆவேசத்துடன்.

“சோழ நாட்டின் மீது போர்தொடுக்க வேண்டும் என்றால் சரியான அரசியல் காரணம் வேண்டுமே? எதைப்

போருக்கான காரணத்தைக் கூறப் போகி றோம்?" என வினவினார் தனாதிகாரி.

அதுவரை அமைதியாகக் காணப் பட்ட ஆசான் ஆச்சார்யார் ஆசனத்திலி ருந்து எழுந்து, "புகாரில் சோழ நாட் டுப் படைத்தலைவன் நமது உறையூர் பிரதிநிதியான இருங்கோவேளை அவம தித்து உனக்குத் துணையாகப் பெரும் படையைத் திரட்டிக் கொண்டு வா, நாம் சமர் களத்தில் சந்திப்போம் என வெஞ் சினம் உரைத்திருக்கிறான். 'உனக்குத் துணையாக' என அவன் கூறிய சொற் கள் நம்மை, பாண்டியரை, மற்ற வேளிர் களைத் தான். போருக்கான காரணமாக இதையே ஏன் நாம் எடுத்துக்கொள்ளக் கூடாது?" எனத் தெரிவிக்கலானார்.

"அந்தப் படைத்தலைவன் தான் குமரிக் கடலில் மரணித்துவிட்டானே! பிறகு எப்படிப் போருக்கானக் காரண மாக அவனது வார்த்தைகளை எடுத்துக் கொள்ள இயலும்?"

https://telegram.me/aedahamlibrary

“அவன் மரணித்திருக்கலாம். ஆனால், அவன் ஏற்படுத்திய தாக்கம் இன்னும் மறையவில்லையே! அவன் மறைந்ததும் சோழ இளவல் வளவன் நமது பிரதிநிதி இருங்கோ வேளிடமும், நம் மன்னர் சேரமான் பெருஞ்சேரலாதனிடமும் மன்னிப்புக் கோரியிருக்க வேண்டும். மன்னிப்புக் கேட்டிருக்காவிட்டாலும் நம் மன்னரிடம் அடைக்கலம் கேட்டிருக்க வேண்டும். அப்படி அவன் எதையுமே செய்யவில்லை. கிழவர்களான வளவனார் மற்றும் இரும்பிடர்த்தலையன் ஆகியவர்களைக் கொண்டு போருக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறான் எனச் சோழ நாட்டிலிருந்து கிடைக்கும் ஒற்றுத் தகவல்கள் தெரிவிக்கின்றன” என ஆசான் ஆச்சார்யர் கூறிக் கொண்டிருந்த போதே இடைமறித்த ஓதவஞ்சி, “ஆசான் இளமையுடன் காணப்படுவதைப் போன்றல்லவா வளவனாரையும், பிடர்த்தலையனையும் கிழவன் என்கிறார்?” எனக் கூறியதுதான்

https://telegram.me/aedahamlibra

தாமதம் அடுத்தகணம் அந்த அவையில் பெரும் சிரிப்பொலி எழுந்தது. ஆசான் அனைவரையும் முறைக்க அடுத்தக் கணமே அனைவரும் சிரிப்பினை அடக்கிக் கொண்டனர்.

"கிழவன் ஆனாலும் இப்போதும் மகேந்திர வளவனாரை எதிர்த்து வாள் சமரிடும் துணிவு இங்கிருக்கும் நம் சேனாதிபதிகளுள் ஒருவனுக்கும் கிடையாது. எதிரி நாட்டவன் என்பதற்காக நாம் அவர்களை மரியாதையின்றி அழைக்கக்கூடாது ஆசானே. அவர்களின் வீரத்திற்கு நாம் தலைவணங்கியே ஆக வேண்டும்." எனக் கூறிக் கொண்டிருந்த போதே இடைமறித்த ஆசான், "இந்த ஆசானுக்கு யாரும் மரியாதையைப் பற்றி வகுப்பெடுக்கத் தேவையில்லை. யாருக்கு என்ன மரியாதையை எப்படி அளிக்க வேண்டும் என்பதை நான் அறிவேன்" என அவர் தனது பூணூலை வருடியபடியே ஆவேசத்துடன் கூறலானார்.

"போரினைப் பற்றி நாம் விவாதிக் கலாமே!" எனக் குறுக்கிட்ட சேரமானின் கண்டிப்பான குரலைக் கேட்டு இருவரும் அமைதியாகினர்.

"அரசே, இருங்கோவேளிடமிருந்து தகவல் ஏதாவது கிடைத்ததா? போரை முன்னின்று நடத்த வேண்டியவன் அவன்தானே? போருக்குத் தலைமை வகிக்கப் போவது யார்? அதைத் தாங்கள் இன்னும் தெரிவிக்கவில்லையே?" என வினவினார் உம்பர்காடன்.

"இல்லை உம்பர்காடா? உறைந் தையிலிருந்து ஓலையைக் கடந்த ஒரு கிழமைக் காலமாகவே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். இன்று அல்லது நாளை வந்து சேர்ந்துவிடும்! ஓலை கிடைத்ததும் நாம் நமது போர்ப் பிரகட னத்தை வெளியிடுவோம். இந்த முறை நானே போரினை முன்னின்று நடத் தப் போகிறேன். போருக்குத் தலைமை வகிக்கப்போகிறவனும் நானே!"

https://telegram.me/aedahamlibra

"இன்னொரு தகவல்?"

"கேள்?"

"அரசே! போருக்கு அழுந்தூர் தவிர மற்ற சோழ நாட்டு மற்றும் பாண்டிய நாட்டு வேளிர்கள், பாண்டியர்கள் என அனைவரும் சோழ நாட்டை நிர்மூலமாக்க துடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிவோம். இந்தப் போரில் சேர நாட்டுப் படைகள் மட்டும்தான் புகாரைத் தாக்கப் போகிறதா அல்லது அனைவரும் சேர்ந்த கூட்டுப் படைகள் தாக்கப் போகிறதா?"

"சிறு பாலகனை எதிர்க்க அத்தனை பெரும்படைகள் செல்வது அநீதி என்று நம் ஓதவஞ்சி கருதுகிறார். ஆதலால் சோழ நாட்டைச் சேர நாட்டுப் படைகளே தாக்கப்போகிறது!"

"அரசே ஒரு வேண்டுகோள்!"

"என்ன உம்பர்காடா?"

https://telegram.me/aedahamlibra

"தாங்கள் தலைமையேற்றால் சோழ நாடு அழிவது உறுதி! அதில் உம் பர்க்காடனின் பங்கும் இருக்க வேண்டும் எனக் கருதுகிறேன்" என்றார் பணிவுடன்.

உடனே ஆசனத்திலிருந்த எழுந்த துளு, கொண்கானா, நேரி மலை, குட நாட்டு வேளிர்கள், "அரசே நாங்களும் தங்களுடன் சேர்ந்து போரில் ஈடுபட விரும்புகிறோம். அனுமதியளிக்க வேண் டும்!" என வேண்டுகோள் விடுக்கலாயி னர்.

"இது என்ன அசட்டுத்தனமான கேள்வி? சேரன் தன் துணைவர்களின் துணையின்றி எந்தக் காரியத்தையாவது செய்திருக்கிறானா? சேர நாட்டின் தூண் கள் நீங்கள். உங்களையின்றி நான் புறப் படுவதா? உங்கள் சேனைகளைத் துரி தப்படுத்துங்கள். சேர நாட்டின் சேனைக் குப் பக்கச் சேனையாக வரட்டும்! வரும் முழு நிலவன்று பயணத்தைத் தொடங்கு

கிறோம். சபை கலையட்டும்” என முழங்கினான் சேரன்.

அப்போது அவைக்குள் அவசர அவசரமாக ஓடி வந்த கட்டியங்காரன் காவலனின் காதுகளில் எதையோ கிசுகிசுத்தான். உடனே ஓடிவந்தவன் சேரமானின் மெய்க்காவல் தலைவனின் காதுகளில் செய்தியைத் தெரிவித்தான். அவன் சேரனிடம், “அரசே, சேர நாட்டு இளவரசரின் மெய்க் காவல் தலைவன் அவைக்கு வருகை தர அனுமதி கோருகிறான். அவையில் எதையோ தெரிவிக்கச் சொல்லி இளவரசர் செய்தி அனுப்பியிருக்கிறார். இன்னொரு செய்தி!”

“என்ன?”

“உறைந்தையிலிருந்து வேந்தன் வந்திருக்கிறான். அதுவும் ஓலையுடன் !”

“முதலில் இளவரசனின் மெய்க் காவல் படைத் தலைவனை அனுப்பச் சொல். பிறகு வேந்தன் வரட்டும்.”

"தங்கள் கட்டளை அரசே!" எனத் தெரிவித்த மெய்க்காவல் படைத்தலைவன் கட்டியங்காரனிடம் தகவலைத் தெரிவித்தான். கட்டியங்காரன் அவையைவிட்டு வெளியேறினான்.

சிறிது நேரம் கழித்து அவைக்கு வந்த சேர இளவலின் மெய்க் காவல் படைத் தலைவன் சேரமான் பெருஞ் சேரலாதனிடம் பணிந்து வணக்கத்தைத் தெரிவித்துவிட்டு மன்னரின் கட்டளையை எதிர்பார்த்தபடியே அவரது முகத்தைப் பார்த்தபடியே நின்று கொண்டிருந்தான்.

"என்ன செய்தி?" அதிகாரத்துடன் வினவினார் மன்னர்.

"அரசே, இளவரசர் சோழ நாட்டுப் படையெடுப்பிற்கு ஆயத்தமாக இருப்பதாகத் தங்களிடம் தெரிவிக்கச் சொல்லி அனுப்பியிருக்கிறார்." எனக் கூறியதும் அவையே மகிழ்ச்சியில் நிரம்பியது.

அப்போது மீண்டும் குறுக்கிட்ட இளவலின் மெய்க்காவல் படைத் தலைவன், "அரசே, தாங்கள் அனுமதியளிக்கும் பட்சத்தில் இன்னொரு தகவலையும் தெரிவிக்கச் சித்தமாக இருக்கிறேன்." என்றான்.

"தயக்கம் வேண்டாம்!"

"தங்கள் உத்தரவு. அரசே, இந்தப் போரில் இளவரசருக்குத் திணையளவும் ஈடுபாடில்லை. 'சோழ இளவல் வளவனுக்கு உரிய ஆசனத்தைப் பெற்றுக் கொடுப்பதே நமது நியதி; போரில் விருப்பம் இல்லை என்றாலும் மன்னரின் உத்தரவை ஏற்று நடப்பது இளவரசனின் கடமை; அதிலிருந்து ஒருநாளும் வழுவ மாட்டேன் என்று நான் கூறியதாகச் சொல்' எனத் தெரிவித்தார்."

"சரி. நீ புறப்படலாம். இன்று மாலை இளவரசனுக்கு வேண்டிய கட்டளைகள் பிறப்பிக்கப்படும். நீ இப்போது கிளம்பலாம்!"

https://telegram.me/aedahamlibra

“தங்கள் உத்தரவு அரசே!” எனக் கூறிய இளவலின் மெய்க்காவலன் இரண்டு அடி மன்னரைப் பார்த்தபடியே பின்னால் நடந்தவன் பிறகு திரும்பிச் செல்லலானான்.

சிறிது நேரம் கழித்து வேந்தன் அரசவைக்குள் நுழையலானான். உள்ளே நுழைந்த வேந்தனைக் கண்ட பெருஞ்சேரலாதன் உட்பட அவனை அறிந்த அனைவரும் வியக்கவே செய்தார்கள். உள்ளே அவன் நுழைந்ததுமே அவனிடம், “வேந்தா... இது என்ன புதுக்கோலம்?” என வினவலானார்.

அரசர் மற்றும் அவையினருக்குத் தனது வணக்கத்தைத் தெரிவித்துவிட்டு, “அரசே புகார் ஒற்றர்கள் தொல்லை மிகுந்துவிட்டது. ஆதலால் தான் இந்த மாறுவேடம்!” எனப் பதிலளிக்கலானான்.

அவனது பதிலையும், அவனது உருவத்தையும் கண்டு சிரித்த மன்னர்,

https://telegram.me/aedahamlibra

“வேந்தா வந்த செய்தி?” என ஆர்வத்து டன் வினவினார் மன்னர்.

“அரசே உறைந்தையிலிருந்து ஓலை கொண்டு வந்துள்ளேன்” எனக் கூறியபடியே வேந்தன் இடைச் சுரு ளில் பாதுகாப்பாக வைத்திருந்த வைதீ கர் கொடுத்தனுப்பிய ஓலையைச் சேர மானிடம் நீட்டினான்.

அரசருக்கு அருகில் நின்று கொண் டிருந்த சேர மன்னரின் மெய்க்காவல் தலைவன் ஓலையை வாங்கப் படிக ளில் இறங்கலானான். அதற்குள் முந்தி கொண்ட ஓதவஞ்சி அந்த ஓலையை வேந்தனிடமிருந்து வாங்கிக் கொண்டார்.

ஓலையைப் பிரிக்காமலேயே அதைச் சுற்றியிருந்த நூல் கயிறு, அதில் இடப்பட்டிருந்த ராஜ முத்திரை ஆகி யவற்றைப் பார்த்து அது இன்னும் பிரிக்கப்படவில்லை என்பதை அறிந்து கொண்டார். பிறகு கண்களில் அந்த ஓலையை ஒற்றிக் கொண்டவர் முத்தி

ரையை உடைத்து நூலினை அவிழ்த்து ஓலையைப் பிரித்துப் பார்க்கலானார். கண நேரம் அந்த ஓலையையே வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார். பொறுமையை இழந்த மன்னர் மன்னர் பெருஞ்சேரலாதன், "அந்தணரே, ஓலையில் என்ன எழுதியிருக்கிறது? விரைந்து கூறுங்கள்!" எனக் கட்டளையிடலானார்.

அவருக்கு எந்தப் பதிலையும் அளிக்காத ஓதவஞ்சி ஓலையை மன்னனிடம் நீட்டினார். மன்னரும் அந்த ஓலையை வாங்கிப் பார்த்துவிட்டு வாயடைத்துப் போனார். சிறிது நேரம் அந்த ஓலையையே பார்த்துக் கொண்டிருந்தவர், "ஓலையில் என்ன எழுதியிருக்கிறது? எதுவும் புரியவில்லையே?" என்றார்.

"மன்னா... இது வைதீகர்களின் பழைமையான மறை மொழி. இதனை நம் ஆசான் ஆச்சார்யாரால் வாசிக்க இயலும் என நம்புகிறேன் நான்" எனப் பதிலளித்தார் ஓதவஞ்சி.

மன்னர் ஓலையை நீட்ட ஆசனத்திலிருந்து எழுந்த ஆசான் ஆச்சார்யார் அதைப் பெற்றுக் கொண்டு பார்வையை ஓலையில் செலுத்தலானார்.

அதைப் படிக்கப்படிக்க அவருக்குள் கோபமும், ஆவேசமும் பலமாகப் பெருகத் தொடங்கியது. சபையினில் அதை வெளிப்படுத்துவது தவறு என்பதால் அவரது உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டார்.

ஓலையை வாசித்து முடித்ததும், 'வைதீகன் பாகவதன் பெரும் மடையனாக இருக்கிறானே! சேரனே போருக்குத் தயாராகிவிட்டான். இந்தச் சூழலில் இப்படியொரு ஓலையையா அந்த மூடன் அனுப்ப வேண்டும்? வெண்ணெய் திரண்டு வரும் நேரத்தில் தாழியை உடைத்துவிடுவான் போலிருக்கிறதே! நல்ல வேலை இதை அழிந்துவிட்ட மொழியில் எழுதியிருக்கிறான். எப்

படியாவது சமாளித்துவிட வேண்டும்’ என முணுமுணுத்துக் கொண்டார்.

அவரது வாய் முணுமுணுத்ததையும், ஓலையைப் பார்த்த பிறகு சிவந்துவிட்ட அவரது விழிகளையும் ஓதவஞ்சி கவனிக்கத்தான் செய்திருந்தார். அப்போது அவரது முகத்தில் இளநகை கண நேரத்தில் தோன்றி மறைந்துவிட்டுச் சென்றது.

https://telegram.me/aedahamlibra

# 13. இந்தக் கயவனைக் கைது செய்யுங்கள்!

மனதிற்குள் ஆத்திரம் நிறைந்திருந்தாலும் அதனை வெளிப்படுத்தாமல் உதட்டில் புன்சிரிப்பினை வரவழைத்துக் கொண்ட ஆசான் ஆச்சார்யார், "அரசே, தாங்கள் எதிர்பார்த்த செய்தியைத்தான் இருங்கோவேளும் உறைந்தையிலிருந்து அனுப்பியிருக்கிறார். நமது திட்டப்படி நமது படைகள் புறப்படட்டும்!" எனக் கூறலானார்.

"ஓலையில் அப்படியா எழுதியிருக் கிறது. மிக்க மகிழ்ச்சி ஆசானே. வயிற்றில் பாலை வார்த்துவிட்டீர்கள். ஓலையைப் பார்த்ததும் சிவந்துவிட்ட உங்கள் விழி களைக் கண்டு விரும்பத்தகாத செய்தி ஏதாவது வந்திருக்கிறதோ என எண்ணி கண நேரத்தில் கலங்கிவிட்டோம்."

"இல்லை அரசே! ஓலையில் தாக்குதல் திட்டத்தை இருங்கோவின் ஆலோசகர் வைதீகர் பாகவதர் தெளி வாக வகுத்திருக்கிறார். உறைந்தையில் குழுமியிருக்கும் இருங்கோவின் படை வெண்ணி வழியாகப் புகாரை மேற் குப் புறத்தில் தாக்குகிறது. சோழ நாட் டின் வடக்குப் பகுதியில் காவிரி நதிக்கும் தென் பெண்ணை ஆறுக்கும் இடைப் பகுதியில் சோழ இளவல் வளவனின் கைவசத்தில் இருக்கும் கோட்டைகள் ஒவ்வொன்றாகக் கைப்பற்றிய பிறகு சேர நாட்டுப் படை புகாரை வடக்குப் புறத்தில் தாக்கும். பாண்டியர் படை புகாருக்குக் கிழக்கே இருக்கும் மரைக்காடு, ஆவூர்,

நாகை போன்ற பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டு புகாரின் கிழக்குப் புறத்தில் தாக்கும். அதே சமயம் பாண்டியரின் மரக் கலங்களும் சிங்களனின் மரக்கலங்களும் இணைந்து புகாரைக் கடற்புறமாகத் தாக்கும். ஆக நான்கு முனைகளிலும் சோழ நாடு நம்மால் முற்றுகையிடப்படும்!"

"எனக்கொரு சந்தேகம். நமது படைகள் ஒன்றாகச் சேர்ந்து தாக்கினாலே புகார் கோட்டை சில வாரங்களுக்கு மேல் தாக்குப்பிடிக்காது. புகாரைக் கைப்பற்றிவிட்டால் மற்ற கோட்டைகள் அனைத்தும் தன்னால் அடங்கிவிடப் போகிறது. அப்புறம் எதற்கு வைதீகர் இப்படியொரு திட்டத்தை வழங்கியிருக்கிறார்?" எனக் குறுக்கிட்டு வினவினார் ஓதவஞ்சி.

"சேர நாட்டின் அமைச்சரான ஓதவஞ்சிக்கு இந்த ராஜகுரு போரினைப் பற்றி எடுத்துரைப்பதற்கில்லை. இந்தப் போர் சோழ நாட்டை அடிபணியச் செய்

யும் போர் அல்ல. சோழ நாட்டை நிர் மூலமாக்கப் போகும் போர். சோழர் குலம் என்ற ஒன்றையே அழித்துவிடப் போகும் போர். நமது படைகள் ஒருபு றத்தில் இருந்து தாக்கினால் புகாரைக் கைவிட்டுக்கூடச் சோழ இளவல் தப்பித் துவிடக் கூடும். ஆனால், நாம் இப்போது வகுத்திருக்கும் தாக்குதலிலிருந்து சோழ இளவல் தப்பிக்கும் பேச்சே இல்லை. அழிக்கப்படுவான். என்ன, ஒரு பால கனை இரண்டு வேந்தர்கள் பதினோரு வேளிர்கள் அவர்களுக்குத் துணையா கக் கடல் கடந்த சிங்களனின் உதவி யைப் பெற்று எதிர்த்தனர். அவர்களை எதிர்த்து சோழ இளவல் வளவன் வீர மரணம் எய்தினான். ஒட்டு மொத்த தென் னகத்தையுமே எதிர்த்த மாவீரன் அவன் களத்தில் செங்குருதியை சிந்தி வீர மரணம் அடைந்த கடைசிச் சோழ மன் னன் எனத் தமிழ்ப் புலவர்கள் புறப் பாடலைப் பாடிவிட்டுச் செல்வார்கள்? அவனது புகழ் மட்டும் நிலைத்துவிடும்.

மன்னரின் விருப்படி சோழர் குலம் மண்ணிலிருந்து அகன்றால் சரி” எனச் சிரித்தபடியே தனது வழுக்கை மண்டையைத் தடவி கொண்டே தெரிவித்தார் ஆசான் ஆச்சார்யார்.

“ராஜகுரு அவர்கள் போரினைப் பற்றி நன்கு விவரிக்கவே செய்கிறார். நம்மிடம் படை பலம் அதிகம் நாம் எதற்கு வலிய சென்று புகாரை முற்றுகையிட வேண்டும்? சிறு படையை வைத்துக் கொண்டு புகாரின் படைத்தலைவன் ஒருவன் தேவையான கால அவகாசத்தை எடுத்துப் படை திரட்டி வா, நாம் களத்தில் சமர் புரிவோம் என வலிய அழைத்தான். சிறு படையை வைத்திருக்கும் சோழர்களே நம்மை நேருக்கு நேர் போருக்கு அழைக்கையில் நம்மிடம் பெரும்படை இருக்கிறது, நாம் எதற்குக் கோட்டையை முற்றுகையிட வேண்டும். நேருக்கு நேர் சமருக்கு அழைப்போம். எதற்கிந்த தந்திரம்?” என வினவினார் ஓதவஞ்சி.

"சோழர்களின் புரவிப்படையைப் பற்றியும், தேர்ப்படையைப் பற்றியும் நாம் நன்கு அறிவோம். மௌரியர்கள் தென்னகத்தை விட்டே ஓடுவதற்குச் சோழர்களின் இந்த இருவகைப் படையுமே காரணம். எண்ணிக்கை குறைவுதான். ஆனால், சோழர்களின் குதிரைப்படை நம் மன வேகத்தினை விட விரைவாகச் செயல்படக் கூடியது. அதிலும் தேர்ப்படையின் வியூகத்தை உடைப்பது அவ்வளவு எளிதல்ல. சம தரையில் அவற்றை எதிர் கொண்டால் நமக்குத்தானே சேதம் அதிகம். வெற்றி நமக்குத்தான் அதில் எந்தவொரு சந்தேகமும் இல்லை. ஆனால், போரில் சேதத்தைக் குறைப்பதே மன்னரின் விருப்பம். அதையேதான் பாகவதன் செய்திருக்கிறான். புகாரில் அவர்களை முற்றுகையிட்டால் அவர்களால் தேர்ப்படையைப் பயன்படுத்த இயலாது. எஞ்சியிருப்பது காலாட்படை மற்றும் புரவிப்படை. கண்ணிமைக்கும் நேரத்தில் அவற்றை வேட்டையாடிவிடும் நமது கூட்

டணிப் படை. சோழ நாடும் சரி, சோழ இளவலும் சரி இனி தப்பிப்பது சிர மமே!" எனக் கூறி நகைத்தவர், வைதீக ரின் போர் வியூகத்தைக் கண்டு மலைத் துப்போய்ப் பூரித்து நின்ற வேந்தனிடம், "என்ன வேந்தா, நான் கூறுவது சரி தானே?" என வினவலானார்.

"ஆமாம். தாங்கள் கூறுவது முற் றிலும் சரியானது ராஜகுரு அவர்களே! கடவுளே நினைத்தாலும் இனி சோழ நாட்டை அழிவிலிருந்து காப்பது சிரமம். நேற்று வைதீகர் ஓலை ரகசியத்தைக் கூறாமல், அறியாத மொழியில் எழுதி என்னிடம் நீட்டியபோது அவர் என்னைச் சந்தேகிக்கிறார் என்று மிகவும் வருந்தி னேன். ஆனால், இப்பேற்பட்ட ரகசியச் செய்தியை அவர் ரகசியமாக அனுப்பியி ருப்பதே மிகவும் உத்தமம். பெரும் புத்தி மான் அவர்"எனப் புகழ்ந்தான் வேந்தன்.

"வேந்தா, இந்த மாதிரி போர் சம்பந் தப்பட்ட ஓலைகளை ஒற்றர்களால் அறிய

இயலா வண்ணம் சங்கேத மொழியில் அனுப்புவதே உத்தமம். அவரது அறிவி னைக் கண்டு வியக்கிறேன் நான். அவ ரிடம் கூறு ஓலையில் கூறியிருப்பதைப் போன்றே முழு நிலவு அன்று சேர நாட்டுப் படை புறப்பட்டுவிடும். பாண்டியர்களுக் கும் சரியான தகவலை அனுப்பிவிடு!” எனக் கூறிக் கொண்டிருந்த போதே இடைமறித்த ஓதவஞ்சி, “அரசே, யாரா லும் வாசிக்க இயலாத அழிந்துவிட்ட மறைமொழி மூலம் செய்தியை அனுப்பு வதிலும் சில பாதகங்கள் இருக்கிறது!” என அந்த அவையே அதிரும்படி சத்தத் துடன் கூறலானார்.

அவர் கூறியதைக் கேட்டதும் சேர மான் பெருஞ்சேரலாதன், ஆசான் ஆச் சார்யார், வேந்தன் மற்றும் அனைத்து அவையோர்களும் அதிர்ந்துபோனார் கள். அதற்குக் காரணம் இல்லா மல் இல்லை. அமைதியாக நிதானமாகப் பேசும் சுபாவம் உடையவர் ஓதவஞ்சி. சேரமான் பெருஞ்சேரலாதன் கூறியதைக்

https://telegram.me/aedahamlibra

கேட்டதும் அவர் சத்தமாகப் பேசியதே அனைவரையும் ஆச்சர்யத்தில் ஆழ்த்தி யிருந்தது.

“என்ன கூறுகிறீர் அமைச்சரே! பாத கங்களும் இருக்கிறதா?” என வியந்தப டியே வினவினார் சேரமான்.

“ஆம் அரசே!”

“என்ன? !”

“வாசிக்க இயலாத மொழியில் செய்தியை அனுப்பினால் ஒற்றர்களால் இடைமறிக்க இயலாது என்பது உண் மைதான். ஆனால்....”

“என்ன ஆனால்? விரைந்து கூறுங் கள்!”

“ஆனால், கயவர்களால் செய்தியே மாற்றம் செய்யப்படவும் வாய்ப்பு இருக்கி றதல்லவா?”

“என்ன உளறுகிறீர்?”

https://telegram.me/aedahamlibra

“நான் உளறவில்லை மன்னா. நம் ராஜகுரு ஆச்சார்ரயார் அவர்களே அனைத்து உண்மைகளையும் அவைக்குத் தெரிப்படுத்தப்போகிறார்” எனக் கூறியவர் வேந்தனிடம் திரும்பி, “வேந்தா... நீ மீண்டும் உறைந்தை செல்ல வேண்டிய அவசியமில்லை!” எனக் கூறிக் கொண்டிருந்த போதே இடைமறித்த வேந்தன், “ஆமாம், வைதீகரும் அதைத் தான் தெரிவித்தார். வஞ்சி சென்று உறைந்தைக்குத் திரும்பத் தேவையில்லை நீ. நேராகக் கூடலுக்குச் செல் என்றார்” என்றான்.

“அற்பப் பதரே, பேசும்போது குறுக்கிடாதே! சொல்வதை மட்டும் கேள்!”

“அப்படியே ஆகட்டும்!”

“நேராகக் கூடலுக்குச் சென்று பாண்டிய மன்னர் தென்னவனிடம் வரும் முழு நிலவன்று சேர நாட்டுப் படைகள் புறப்படாது. அடுத்த அமாவாசைக்குத் தான் புகாரைத் தாக்கும். அதற்

குள் பாண்டிய மற்றும் சிங்களக் கலங்கள் சேர்ந்து அதே அடுத்த அமாவாசைக்குப் புகார் நாட்டை முற்றுகையிடத் தயார் நிலையில் கொற்கையில் நிறுத்த சொல். சேர மாமன்னர் பெருஞ்சேரலாதனிடம் இருந்து கட்டளைகள் வரும் வரை பாண்டிய துருப்புகள் நகர வேண்டாம். ஒட்டுமொத்தப் படைக்கும் தலைமை வகிப்பவரும் சேர மாமன்னர்தான் என்பதையும் அழுத்தமாகத் தெரிவித்துவிடு. அடுத்த அமாவாசைக் காலத்திற்குள் பாண்டிய நாட்டு வேளிர்களிடமும் தகவலைத் தெரிவித்துத் தயார் நிலையில் இருக்கச் சொல். கூடலுக்கு நீ சென்ற பிறகு நேராக முசிறியில் தங்கியிருக்கும் சேர நாட்டுக் கலாபதித் தலைவனைக் கொற்கைக்குச் சென்று பாண்டிய மற்றும் சிங்களக் கலங்களுக்குத் தலைமை ஏற்றுக்கொள்ளச் சொல். பிறகு நீ சேர நாட்டிற்கு வா. உறைந்தைக்கு வேண்டிய கட்டளைகளை மன்னர் வழங்குவார். என்ன புரிகிறதா?" என மிரட்டினார் ஓதவஞ்சி.

ஓதவஞ்சியின் பேச்சு அங்கிருந்தவர்கள் அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியிருந்தது. சேரமன்னர் பெருஞ்சேரலாதன் வரும் முழு நிலவன்றே சேர நாட்டுத் துருப்புகளை நகர்த்தலாம் எனக் கூற பேரமைச்சர் ஓதவஞ்சி இரண்டாவது அமாவசைக்குத் தான் சேர நாட்டுத் துருப்புகள் நகரும் . கட்டளை வரும் வரை பாண்டியனும் தனது துருப்பினை நகர்த்த வேண்டாம் எனக் கட்டளையிடுகிறாரே? இவருக்குப் பைத்தியம் ஏதாவது பிடித்துவிட்டதா? என அனைவரும் ஒரே சேர நினைக்கலானார்கள். மற்றவர்களைவிட வேந்தனே பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாகியிருந்தான். அவன் எதிர்பார்த்து வந்தது ஒன்று. கிடைக்கும் கட்டளை வேறொன்று! கலங்கிப்போய் நின்றான் வேந்தன். அப்போது ஓதவஞ்சி எழுப்பிய”என்ன புரிகிறதா?” என்ற கேள்வி அவனை நிலைகுலையச் செய்திருந்தது.

https://telegram.me/aedahamlibrary

“தங்கள் கட்டளைப்படியே பாண்டிய மன்னரிடம் தகவலைத் தெரிவித்துவிட்டு சேர நாட்டுக் கலாபதியிடம் தங்கள் கட்டளையையும் கூறிவிட்டு நேரே வஞ்சிக்கு வந்துவிடுகிறேன்” எனக் கலக்கத்துடனே கூறலானான்.

“நீ இப்போது இங்கிருந்துக் கிளம்பலாம்!” என ஓதவஞ்சி கூறியபோது அப்போது கோபமுடன் எழுந்த ஆசான் ஆச்சார்யார், “ஓதவஞ்சி, மன்னரின் கட்டளையை ஏற்காமல் தன்னிச்சையாகத் தூதுவனுக்குக் கட்டளையிடுவது ராஜ துரோகத்திற்குச் சமம்” எனக் கோபத்துடன் தெரிவிக்கலானர்.

ஆனால், ஆச்சார்யார் கூறியதைப் பற்றிக் கவலை கொள்ளாத அமைச்சர் ஓதவஞ்சி தனது இடையிலிருந்த சேர நாட்டு இலச்சினை மோதிரம் ஒன்றை வேந்தனிடம் கொடுத்து, “சேர நாட்டுக் கடற்படைத் தலைவனிடம் அத்தாட்சியாக இந்த இலச்சினை மோதிரத்தைக்

காட்டு! அவன் புரிந்துகொள்வான்” என நீட்டினார்.

அந்த முத்திரை மோதிரத்தை வாங்கிய வேந்தன் ராஜ குரு, பெருஞ்சேரலாதன் மற்றும் ஓதவஞ்சி ஆகிய மூவரையும் குழப்பத்துடன் மாறி மாறிக் கவனிக்கலானான்.

“குழப்பம் வேண்டாம் வேந்தா. நீ கிளம்பலாம்!” அதிகாரத்துடன் வெளிப்பட்டது ஓதவஞ்சியின் குரல்.

“நான் கட்டளையிடுகிறேன் வேந்தா! இந்தக் கட்டளையுடன் நீ இங்கிருந்து வெளியேறக்கூடாது!” எனப் பதிலுக்கு ஆணையிட்டார் ஆசான் ஆச்சாரியார்.

அமைச்சர் ஓதவஞ்சியின் கட்டளையைக் கேட்டு ஒரு அடி முன்னால் வைத்த வேந்தன் ஆச்சாரியாரின் ஆணையைக் கேட்டு அப்படியே குழப்பத்தில் நிற்கலானான்.

https://telegram.me/aedahamlibra

அப்போது ஆசனத்திலிருந்து எழுந்த உம்பர்காடன், “உங்களது அதிகாரத்தைக் காட்ட இது தகுந்த நேரம் அல்ல. நீங்கள் இருவருமே சேர நாட்டின் மதிப்பிற்குரியவர்கள். உங்கள் சச்சரவைக் கேட்டு மன்னரே என்ன கூருவதென்று தெரியாமல் திகைத்து அமர்ந்திருக்கிறார். அவையில் வேற்று நாட்டு தூதுவன் முன்பா உங்களது சச்சரவினை அரங்கேற்ற வேண்டும்?” எனப் பணிவுடன் வினவினார்.

“உம்பர்காடா, நீ உன் இருக்கையில் அமர்ந்துகொள். அதிகாரத்தில் இல்லாதவன் இந்த ஓதவஞ்சி. மன்னர் இவனது பொறுப்புகளை விடுவித்து நாழி நேரத்திற்கும் அதிகமாகிவிட்டது” இகழ்ச்சியுடன் கூறினார் ஆசான் ஆச்சார்யார்.

“ஆச்சாரியாரே, ஒரு திருத்தம். மன்னர், ‘இன்றோடு நான் விடுவிக்கப்படுகிறேன்’ என்று கூறினாரே தவிர ‘விடு

வித்ததாகக் குறிப்பிடவில்லை.' இன்று பொழுது மேற்கில் சாயும் வரை அதிகாரத்தில் இருக்கிறேன் நான். என்னைத் தடுக்கும் அதிகாரம் யாருக்கும் இல்லை" என முழங்கியவர் வேந்தனைப் பார்த்து, "வேந்தா... நீ இன்னும் இங்கிருந்து புறப்படவில்லையா?" எனக் கோபத்துடன் கூறலானார்.

சிவந்து போயிருந்த அவரது விழிகளைக் கண்ட வேந்தன், "இதோ புறப்பட்டுவிட்டேன்..." எனக் கூறிக் கொண்டு பெரும் குழப்பத்துடன் அங்கிருந்து சென்றான்.

"யார் அங்கே!" எனக் குரல் கொடுத்தார் அமைச்சர் ஓதவஞ்சி.

அரசவைக் காவலர்கள் நான்கு பேர் ஓடி வந்து அமைச்சர் ஓதவஞ்சியிடம் பணிந்தார்கள்.

"ராஜ துரோகம் இழைத்திருக்கும் இந்தக் கள்வனைக் கைது செய்யுங்

கள். மன்னர் விசாரிக்கும் வரை பாதாள சிறையிலேயே இவன் அடைக்கப்பட்டிருக்கும்!" என அருகில் நின்று கொண்டிருந்த ராஜகுரு ஆச்சார்யாரை நோக்கிக் கைக்காட்டி காவலர்களிடம் ஆணையிடலானார்.

அவை நடுநடுங்கியது.

https://telegram.me/aedahamlibra

# 14.

# அகப்பட்ட கயவன்

பேரமைச்சர் ஓதவஞ்சியின் கட்டளையைக் கேட்ட அரசவைக் காவலர்கள்கூட அவரது ஆணையை நிறைவேற்றும் தைரியமின்றித் தயக்கத்துடனே அவருக்கு முன் நின்று கொண்டிருந்தார்கள். ஓதவஞ்சி மற்றும் ராஜகுரு ஆச்சார்யார் இருவருக்கும் முற்றிவிட்ட பகைமை இப்போது அவையிலேயே பகிரங்கமாக வெளிப்பட்டிருப்பதைக் கண்ட சேர மன்னன் பெருஞ்சேரலாதன் இதற்கு மேல் தாமதிப்பது பெரும் ஆபத்து என்பதை உணர்ந்தார்."காவலர்களே நீங்கள் இருவரும் இங்கிருந்து வெளியேறலாம். ராஜ

குருவைக் கைதுசெய்து சிறையில் அடைக்கும் உரிமை அரசனுக்கு மட்டுமே உண்டு. பேரமைச்சர் ஓதவஞ்சியிடம் நான் பேசிக்கொள்கிறேன்” என அதிகாரத்துடன் கூறலானார்.

அவை காவலர்கள் இருவரும் அடக்கமாக வெளியேறினார்கள்.

ஓதவஞ்சி கோபத்துடன் மன்னரைக் கவனிக்கலானார்.

கோபம் என்ற ஒன்றை இது வரை ஓதவஞ்சியிடம் பார்த்திராத சேரமான் பெருஞ்சேரலாதன் கூட அந்நேரம் அவரது முகச் சீற்றத்தைக் கண்டு பேசுவதற்குத் தயங்கவே செய்தார். அவரது முகத்தைக் கண நேரம் பொறுமையாகப் பார்த்தவன் பிறகு, “நண்பா, உனது முகத்தில் கோபச் சாயலை நான் இதுவரை கண்டதே இல்லையே! ராஜகுரு என்ன தவறினை இழைத்தார்? சிறைக் கோட்டத்தில் அடைக்கும் அளவிற்கு அவர் செய்த குற்றம் யாது?” என அமைதியாக வினவலானார்.

"என்ன குற்றம் என்றா கேட்கிறாய்?"

"ஆமாம்!"

"அதை உன் ராஜகுருவிடமே கேட்டுக்கொள். அவர் விளக்கமாக அவைக்குத் தெரிவிப்பார்!" என ஓதவஞ்சி கூறியதும் சேரமன்னன் பெருஞ்சேரலாதனின் பார்வை ஆச்சார்யாரை நோக்கித் திரும்பியது. அதைக் கண்டு பெரும் கோபம் அடைந்த ராஜகுரு, "பெருஞ்சேரலாதா ஒரு வீணன் கூறும் பொய்க் குற்றச்சாட்டிற்காக உன் ஆசானையே சந்தேகப் பார்வையுடன் பார்ப்பது நல்லதல்ல. உயர்ந்த குலத்தில் பிறந்த வைதீகனை ஒரு சத்திரிய அரசன் சந்தேகத்துடன் நோக்கினால் என்ன பாவம் என்று உனக்கு நன்கு போதித்திருக்கிறேன் நான். மனு தர்மத்தை நன்கு அறிந்தவன் நீ! பாவத்தைச் சுமக்காதே!" என வெகுண்டெழுந்தார்.

ஆச்சார்யார் கூறியதைக் கேட்டு அந்த அவையே அதிரும்படி நகைத்த ஓதவஞ்சி, "வைதீகர்களை மட்டும்

உயர்த்திப் பேசி மற்ற மக்களைத் தாழ்த்திப் பேசும் உமது மனு தர்மத்தை குப்பையில் போடு! அதில் மனுதான் இருக்கிறது. அதுவும் யாருக்கு? நீங்கள் சொகுசாக வாழவேண்டும் என்ற மனு! மற்றபடி அதில் எங்கே இருக்கிறது தர்மம். மறை என்கிறீர்கள்? ஆனால், அதை மற்றவர்கள் படிக்கக் கூடாது என்கிறீர்கள்? எதற்கு? சற்றுமுன் இருங்கோவின் ஓலையைத் திரித்து வாசித்தாயே, அதைப் போன்று உமது நலனுக்கு ஆதரவாகச் செயல்பட வைக்கத்தானே?" என இகழ்ச்சியுடன் கூறலானார்.

அமைச்சர் ஓதவஞ்சி கூறியதைக் கேட்டதும் ராஜகுருவின் கைகால்கள் நடுங்கத் தொடங்கியது. அதிலும் 'சற்றுமுன் இருங்கோவேளின் ஓலையைத் திரித்து வாசித்தாயே அதைப் போன்று உமது நலனுக்கு ஆதரவாகச் செயல்பட வைக்கத்தானே?' என்ற வார்த்தைகள் அவரை நிலைகுலையச் செய்திருந்தது.

https://telegram.me/aedahamlibra

கை, கால்கள் நடுங்க வாய் குழறிய படி, "என்ன பிதற்று...." என வாக்கியத்தை முடிக்க இயலாமல் தடுமாறினார்.

"நான் பிதற்றவில்லை கயவனே! உன் குட்டு வெளிப்படப் போகிறது என் பதை அறிந்தவுடன் நீதான் பிதற்றுகி றாய்!"

"நான்... நான்...."

"ஆமாம்! நீ கயவனே தான்! அதி லும் உன்னை முழுவதும் நம்பிய அரச னுக்கே துரோகமிழைத்த கயவன் நீ!"

சிம்மாசனத்தில் அமர்ந்திருந்த சேர மன்னனைப் பார்த்தபடியே, "பெருஞ்சேர லாதா... இந்த அற்பன் என்னை மரியா தையின்றிப் பேசிக் கொண்டிருக்கிறான் . நீ என்னவென்றால் அடக்கமாக அமர்ந்து வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கி றாய். வைதீகனின் சாபத்தை வாங்கிக் கொள்ளாதே! இந்த அவையை விட்டு

நான் வெளியேறுகிறேன்” என எச்சரித்த படியே நடக்கலானார்.

“ரா...” என ஏதோ சேர மாமன்னன் பெருஞ்சேரலாதன் ஆசனத்திலிருந்து எழுந்து பேச வாய்த் திறந்தான். அதற்குள் முந்திக் கொண்ட ஓதவஞ்சி, “ஆச்சார்யானே, எங்கே ஓடப் பார்க்கிறாய். உன் மீதான விசாரணை இன்னும் முடிவடையவில்லை. தந்திரமாக இந்த அவையிலிருந்து வெளியேறலாம் என முயலவேண்டாம். இந்த ஓதவஞ்சி இருக்கும்வரை அது நடைபெறாது!”

“நான் பயந்து ஓட முயலவில்லை. நான் குற்றம் இழைத்திருந்தால்தானே அச்சப்பட வேண்டும்?”

“உன் குட்டு உடைந்தும் யாருக்கும் எதுவும் தெரியாது என்று எண்ணி சாமர்த்தியத்துடன் இன்னும் பேசிக் கொண்டிருக்கிறாயே! ஒரு அரசின் பேரமைச்சனாகும் அனைத்துத் தகுதிகளும் உமக்கு

இருக்கிறது!" எனச் சிரித்தபடியே கூறலா னார்.

தனது பொறுமையை இழந்த சேரமான் பெருஞ்சேரலாதன்"ஓதவஞ்சி, ராஜகுரு என்ன குற்றம் இழைத்தார் என்று கூறிவிட்டு உனது பேச்சை நீ தொடங்கு!" எனக் கட்டளையிட்டார்.

ஓதவஞ்சி ஆசான் ஆச்சார்யாரைப் பார்க்கலானார். அவரைப் பார்த்தபடி முகத்தில் ஒரு இகழ்ச்சிப் புன்னகையை வரவழைத்துக் கொண்டு, "ராஜ துரோ கம்!" என்றார்.

"என்ன? ராஜகுரு எனக்குத் துரோ கம் இழைத்திருக்கிறாரா?" அதிர்ச்சியு டன் வினவினார் பெருஞ்சேரலாதன்.

"ஆம் மன்னா!"

"என்ன?"

"மலைநாட்டு ஒற்றன் வேந்தன் உறைந்தையிலிருந்து கொண்டு வந்த

செய்தியை மறைத்தது முதல் குற்றம்! ஓலையில் இல்லாத ஒன்றை அவையோருக்கு வாசித்துக் காட்டியது இரண்டாவது குற்றம். ஓலையைத் திரித்து நம் எதிரி நாட்டின் மீது போர்தொடுக்கத் தூண்டியது மூன்றாவது குற்றம். போர் தொடுக்கத் தூண்டியது மட்டுமல்லாமல் நமது படைகள் தோல்வியடைய வேண்டும் என்று சதித்திட்டம் தீட்டியிருப்பது நான்காவது குற்றம்!"

அவையே கிடுகிடுத்தது.

சேரமான் பெருஞ்சேரலாதன் உறைந்து போய் ஆசனத்தில் விழுந்தான். அவையில் அமர்ந்திருந்த மற்ற சேனாதிபதிகள், அமைச்சர்கள், வேளிர்கள் என அனைவரின் நிலையும் அதுவே. ஒருகணம் அதிர்ச்சியுடன் அமர்ந்திருந்த அனைவரையும் கண்ட ராஜகுரு ஆச்சார்யார், "மன்னா... இது அபாண்டமான குற்றச்சாட்டு!" எனக் குரல்கொடுத்தார்.

https://telegram.me/aedahamlibra

"ஆச்சார்யனே, உன் குற்றத்தை நீ ஒப்புக் கொண்டால் அதற்கு மன்னிப்பை யாவது நீ எதிர்பார்க்கலாம்! ஆனால்..."

ராஜகுரு முழிக்கலானார்.

கோபத்துடன் நின்று கொண்டி ருந்த ஓதவஞ்சியிடம், "எந்த அடிப்படை யின் பேரில் இவர் மீது தாங்கள் இந்தப் பழியைச் சுமத்தியிருக்கிறீர்கள்? ஆதா ரம்?" என வினவினார் மன்னர்.

"ஆதாரமா?"

"ஆமாம்!"

"ஆதாரம் இருந்தால்தான் இந்த அந்தணனை சேர மாமன்னர் பெருஞ்சே ரலாதன் நம்புவாரோ?"

"குற்றம் அவைக்கு வந்துவிட்ட பிறகு ஆதாரம் தானே முக்கியம்!"

"உங்களுக்கு வேண்டிய ஆதா ரம் இந்த வைதீகனின் கைகளில் தான் உறைந்திருக்கிறது" எனக் கூறிய

படியே ஓதவஞ்சி ராஜகுருவின் கையில் இருந்த வைதீகர் பாகவதர் அனுப்பியி ருந்த ஓலையைப் பிடுங்கினார்.

"இந்த ஓலையா ஆதாரம்?"

"ஆம் மன்னா! இதுதான் ஆதாரம்."

"இதையா ராஜகுரு சற்றுமுன் மாற்றி வாசித்தார்?"

"ஆம்!"

நம்ப இயலாமல் அதிர்ச்சியுடனே சிறிது நேரம் ராஜகுருவையே பார்த்துக் கொண்டிருந்தார் சேரமான் பெருஞ்சேர லாதன்.

"ஓலையை ராஜ குருவே இந்த அவையில் உரக்க வாசிக்கட்டும்!" கட்ட ளையிட்டான் சேரமான் பெருஞ்சேரலா தன்.

ஓலையை நீட்டினார் ஓதவஞ்சி. அதைப் பெற்றுக் கொண்ட ஆச்சார்யார் ஓலையை வாசிக்கத் தொடங்கினார்.

"சேர மாமன்னருக்கு அடங்கிய வேளிரான இருங்கோ எழுதிக்கொள்வது. தமது திட்டம் மற்றும் நோக்கம் அனைத்தும் நிறைவேறும் காலம்..." என ராஜகுரு வாசித்துக் கொண்டிருக்கும் போதே குறுக்கிட்ட ஓதவஞ்சி, "நிறுத்தடா உன் பொய் பிதற்றலை... ஓலையைக் கொடு நான் வாசிக்கிறேன்!" எனக் கை நீட்டினார்.

"உன்னால்தான் இம்மொழியை வாசிக்க இயலாதே? இதை வாங்கி நீ என்ன செய்யப்போகிறாய்?" பதற்றத்துடனும் அதே சமயம் நம்பிக்கையுடனும் வினவினார் ராஜகுரு.

"என்னால் மறைந்துபோன மறை மொழியை வாசிக்க இயலாது என்று உமக்குக் கூறியவன் எவன்?"

"நீ தான்!"

"நானா?"

"ஆம்!"

https://telegram.me/aedahamlibra

“எப்போது?”

“சற்றுமுன் தான்!”

அவையே அதிரும்படி சிரித்தார் ஓதவஞ்சி. “‘இது வைதீகர்களின் பழைமையான மறை மொழி. இதனை நம் ஆசான் ஆச்சார்யாரால் வாசிக்க இயலும் என நம்புகிறேன் நான்’ எனத்தான் தெரிவித்தேனே தவிர இதை உம்மால் மட்டும் தான் வாசிக்க இயலும் என நான் எங்கும் குறிப்பிடவோ அல்லது எனக்கு இந்த ஓலையை வாசிக்கத் தெரியாது என்று நான் குறிப்பிடவில்லையே!”

“அப்படியெனில்....”

“இந்த ஓலையை உனக்கு முன் வசித்தவன் நான்!”

“ஓலையைப் பார்த்தபோது உன் விழிகள் எதற்காக உயர்ந்து ஆச்சர்யத்தை அடைந்தது?” எனக் குழப்பத்துடன் வினவினார் ராஜகுரு.

https://telegram.me/aedahamlibrary

“ஓலையில் எழுதியிருந்த செய்தியை வாசித்தேன். வரும் முழு நிலவன்று படையை நகர்த்தத் திட்டமிட்டிருக்கும் பெருஞ்சேரலாதனின் எண்ணத்திற்கும், இருங்கோவின் எண்ணத்திற்கும் மாறுபாடு அதிகம் இருக்கிறதே! ஆதலால்தான் வியப்படைந்தேன்!” எனக் கூறிக் கொண்டே ராஜகுருவின் கையிலிருந்த ஓலையை வெடுக்கென்று பிடுங்கி வாசிக்கத் தொடங்கினார்.

“அக்னிகுலஸமுத்ப4வாயபெறுஞ் சோற்றுஉதயன்சேரலாதவம்’ஸாம்புதீ4ந் தவே சேரமான் பெருஞ்சேரலாதாய உரக புரேஸ்வரஸ்ய இருங்கோராஜஸ்ய ஆஜ் ஞானுஸாரம்’ப்ரஹ்மராஜபா4கவதஸ்ய ஸப்ரஸ்ரயம்’நிவேதனம்ஆஸன்னே ஸதி ஸம்பராயஸமயே பாண்ட்யாதி4பதி: தென் னவன்சோலேஸ்வரேணஸஹயுயுத்ஸு: சோலவம்’ஸம்’ஸமூலமுன்மூலனதீ க்ஷிதோ ப4வதிந கிந்து யுத்த4ஸேனானீத் வமாத்மனா வோட4வ்யமிதிகாங்க்ஷதிந ப4 வததீ4னத்வம்’ந ஸஹதேந மஹாயுத்தே4

https://telegram.me/aedahamlibra

யதிசேரேஸ்வர: ஸ்வாமித் வமலங்கரோதி தர்ஹிபாண்ட்யராஜ: சோலஸாஹ்யாயாபி ஸன்னத்த$^{4}$: இதிபாண்ட்ய தேஸால்லப்த$^{4}$ யாசாரவார்தயாத்ரு'டீ$^{4}$ப$^{4}$வதிந ப்ரு'தக்ஸ் திதேன சோலேஸ்வரேண மிலிதோ யதி பாண்ட்யாதி$^{4}$ப: தர்ஹியுத்த$^{4}$ஜய: ஸம்'ஸய பதமாரோஹதிந பாண்ட்யாதி$^{4}$பதே: அஸ் மத்பக்ஷபாதித் வமேவோசிதம்ந அத: பாண்ட்யராஜஸமாவர்ஜனம்'ப$^{4}$வத்கார் யம்ந பாண்ட்யாதி$^{4}$பாயதென்னவாயரா ஜத்வாராபத்ரம்'ப்ரேஷயந்துந ப$^{4}$வத்பத் ரப்ராப்தே: பரமேவஉரகபுரஸேனாபுகார னகரபரிவேஷ்டனாயப்ரஸ்தாஸ்யதிந பாண்ட்யராஜ: யதி சோலபக்ஷம்'யாதி, ததோப்யஸ்மத்ஸேனா ஸன்னத்தா$^{4}$இத் யபிநிவேதயாமிந ஸிஷ்டே தேவ: ப்ரமா ணம்ந புகாரனகரகூட$^{4}$புருஷாணாம்' சேஷ்டா: அதி$^{4}$கா: ஸஞ்ஜாதா:ந பாண்ட்யை: ஸாகம்'பே$^{4}$தஸ்ஸஞ்ஜாதஇ திவாவயம்'யுத்தா$^{4}$யஸன்னத்தா$^{4}$இதிவா ஏதாத்ரு'ஸா: ரஹஸ்யவிஷயா: ராஜானம்' வினா அன்யத்வாரா மா ப்ரஸாரயந்துந

https://telegram.me/aedahamlibrary

புகாரனகரம்'பரிவேஷ்ட்ய சேன்னிவம்' ஸோத்ப$^4$வஸ்யசோலேஸ்வரஸ்யஸம ராஹ்வானபர்யந்தம்'அஸ்மத்கார்யாணி ரஹஸ்யான்யேவ ப$^4$வேயு:ந"

பேரமைச்சர் ஓதவஞ்சி வாசித்து முடித்ததும் அவையினர் அவரது முகத்தையே பார்த்துக் கொண்டு அமைதியாக அமர்ந்திருந்தனர். "அமைச்சர் பெருமானே நீங்கள் வாசித்தது எங்களுக்கு விளங்கவில்லை. தயைகூர்ந்து புரியும்படி மொழி பெயர்த்து வாசிப்பீர்களாக!" எனப் பணிந்து வேண்டினார் உம்பர்காடன்.

உம்பர்காடனின் எண்ணம் அமர்ந்திருக்கும் அனைவரின் முகத்திலும் பிரதிபலிப்பதைக் கண்ட ஓதவஞ்சி அவ்வோலையை மொழி மாற்றம் செய்து வாசிக்கலானார்.

"அக்னி குல வழித் தோன்றலும், பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதனின் கொடி வழியுமான சேரமான் பெருஞ்சேரலாதனுக்கு உறைந்தை மன்

https://telegram.me/aedahamlibrary

னர் இருங்கோவின் கட்டளையின் பெய ரில் பிரம்மாயன் பாகவதன் எழுதிக் கொள்வது. போருக்கான சூழல் கனிந் திருக்கும் நிலையில் பாண்டிய மன் னன் தென்னவன் சோழனுடன் பொரு துவதில் முரண்படுகிறான். சோழ வம் சத்தை அழிக்கும் எண்ணத்தில் குறி யாய் இருக்கிறான். ஆனால், போருக்குத் தலைமை தாங்குவது அவனாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறான். தங் கள் தலைமையை அவன் ஏற்க மறுக் கிறான். பெரும்போருக்கு சேரர் தலை மையேற்றால் பாண்டியன் தென்னவன் சோழர்க்கு ஆதரவளிக்கவும் தயங்கமாட் டான் என்று பாண்டிய நாட்டிலிருந்து கிடைத்திருக்கும் நம்பகமான ஒற்றர் தக வல்கள் தெரிவிக்கின்றன. தனித்திருக் கும் சோழ நாட்டுடன் பாண்டிய நாடும் இணைந்துவிட்டால் போர் சிக்கலாகிவி டும்! பாண்டியன் நம்முடன் இருப்பதே சாலச் சிறந்தது. பாண்டியனை சமாதா னம் செய்வது தங்கள் பொறுப்பு! பாண்டிய

மன்னன் தென்னவனுக்கு வேந்தனின் மூலமாகவே ஓலையை அனுப்பி வையுங்கள்! தங்கள் கட்டளைக் கிடைத்த பிறகே உறைந்தைப் படை புகாரை முற்றுகையிடக் கிளம்பும்! பாண்டியன் சோழர் பக்கம் சாய்ந்துவிட்டால் அவர்களுடன் பொருதவும் நம் படை தயார் என்பதையும் இங்குக் கூறிக்கொள்கிறேன். முடிவு தங்கள் கையில்! புகார் ஒற்றர்களின் செயல்பாடுகள் அதிகரித்துவிட்டன. பாண்டியருடன் பிணக்கு ஏற்பட்டிருக்கும் சூழலைப் பற்றியோ அல்லது நாம் போர் தொடுக்க ஆயத்தாமாகிவிட்டோம் என்ற செய்திகளை வேந்தனைத் தவிர வேறு யார் மூலமாகவும் பரிமாறிக்கொள்ள வேண்டாம்! புகாரை முற்றுகையிட்டு சென்னியின் புதல்வனைச் சமருக்கு அழைக்கும் வரை நமது செயல்பாடுகள் ரகசியமாகவே இருக்கட்டும்!" என வாசித்து முடித்தார் ஓதவஞ்சி.

ஓதவஞ்சி மொழி பெயர்த்து வாசித்ததும் அதிர்ச்சியில் ஆசனத்திலிருந்து

கோபத்துடன் எழுந்தான் பெருஞ்சேரலா தன். "ஆசானே, ஓலையில் இருப்பது எந் தச் செய்தி? சற்று முன் தாங்கள் வாசித் ததா? அல்லது அமைச்சர் ஓதவஞ்சி வாசித்ததா?"

"ஓதவஞ்சி வாசித்திருப்பது அப்பட் டமான..." எனக் கூறிக் கொண்டிருக்கும் போதே இடைமறித்த ஓதவஞ்சி, "ஆச் சார்யனே, புறம்பு பேசி உன்னால் எங்கும் தப்பிக்க இயலாது! உறைந்தைக்கு இங் கிருந்து இரு சாம நேரப் பயணம் தான். வைதீகனிடமே செய்தியைக் கேட்டு வரக் சொல்லி ஆள் அனுப்பி விடு வேன். உண்மையைக் கூறினால் உன்மீது பெரும் மரியாதை வைத்திருக்கும் சேர மான் பெருஞ்சேரலாதனிடமிருந்து கரு ணையை எதிர்பார்க்கலாம்? உன் முடிவு உன் கையில்! சிந்தித்துச் செயல்படு!" எனக் கூறிவிட்டு தனது ஆசனத்தில் அமர்ந்து கொண்டார்.

ராஜகுரு ஆச்சார்யார் விழிக்கலானார். வசமாகச் சிக்கிக் கொண்டதை உணர்ந்தார். தலையைக் கீழே தொங்கபோட்டுக் கொண்டு, "சேர மாமன்னருக்கு கிடைக்க வேண்டிய புகழ் ஓலையின் மூலம் தள்ளிப்போவதை விரும்பாமலே ஓலையை மாற்றி வாசித்தேன். எங்கோ தவறு நேர்ந்திருக்கிறது."

"தவறு எங்கும் நேரவில்லை கயவனே. நீ தான் தவறிழைத்துவிட்டாய். அதுவும் ராஜ துரோகம்!"

"இல்லை. இல்லை. நான் ஒருநாளும் சேர மாமன்னருக்குத் துரோகத்தை இழைத்ததில்லை."

"ஒரு நாளுமா?"

"ஆமாம்!"

"சேர நாட்டுப் படை சோழர்களுடன் தனியாகப் பொருதவேண்டும் என எதற்கு ஆசைப்பட்டாய்?"

"நான் அப்படியெல்லாம் நினைக்க வேயில்லை."

"உன் நோக்கம் வெளிப்பட்டுவிட்டது ஆச்சார்யானே! உன் நோக்கம் தெளிவான திட்டமின்றிச் சேர நாட்டுப் படை ஆபத்தில் சிக்கிக்கொள்ள வேண்டும். சேர நாட்டுப் படை அழிந்தாலும் உமக்கு மகிழ்ச்சியே! சேர நாட்டிற்கும், சேரநாட்டுப் படைக்கும் இழைத்திருக்கும் பெரும் ராஜதுரோகம் இது. உண்மையை ஒப்புக்கொள் கடைசி முறையாக எச்சரிக்கிறேன் நான்."

"..........."

"ஓலையை மாற்றி வாசித்ததன் மறைமுக நோக்கம்?"

"சேர மாமன்னர் பெருஞ்சேரலாதனின் வெற்றிதான். சோழனை அழித்தான் என்ற பெயரை பெருஞ்சேரலாதன் மட்டுமே அடைய வேண்டும். அதனைப் பாண்டியர் மற்றும் வேளிர்க

ளுடன் சேரமான் பகிர்ந்துகொள்வதில் எனக்கு உடன்பாடு இல்லை. ஆதலால் தான் சேர மன்னரே சோழ நாட்டின் மீது படையெடுத்து வெற்றி வாகை சூடட்டும் எனத் தகவலை மாற்றித் தெரிவித்தேன். வாய்க்கு வந்தபடி எதையும் தெரிவிக்க வேண்டாம் ஓதவஞ்சி."

அவரைப் பார்த்து சிரித்த ஓத வஞ்சி, "அவனை இழுத்து வாருங்கள்!" என உரக்க கட்டளையிட்டார்.

அவரது கட்டளை எழுந்த அடுத் தக் கணத்தில் காவல் வீரர்கள் இருவரை அவைக்குள் அழைத்து வந்தனர். அவர் களுள் ஒருவனுடைய கை மற்றும் கால் கள் இரும்புத்தளைகளால் கட்டப்பட்டி ருந்தது.

அவர்கள் இருவரையும் பார்த்ததும் ராஜகுருவின் விழிகள் இரண்டும் அதிர்ச் சியில் சிவந்தன. அதைப் பார்த்து ரசித்த படியே, "ராஜகுரு ஆச்சாரியாருக்கு இவர் கள் இருவரையும் யார் என்று நன்கு

அடையாளம் தெரிந்திருக்கும் என நம்பு கிறேன் நான்” எனத் தெரிவித்தார்.

“இருவருள் ஒருவன் என் வீட்டு வேலைக்காரன்!”

“வேலைக்காரன் என்று கூறுவது தவறு ராஜகுரு அவர்களே! பணிவிடை செய்பவன் என்று கூற வேண்டும்.”

“...... ..”

“மற்றொருவனைப் பற்றித் தாங் களே வாய் திறந்தால் நன்றாகயிருக்கும்?”

“விலங்கிடப்பட்டிருப்பவனா?”

“ஆம்!”

“அவனை யார் என்றே எனக்குத் தெரியாது! அவனைப் பார்ப்பதற்கு வட தேசத்தவனைப் போன்று காட்சியளிக்கி றான்!”

“அவன் வடதேசத்தவன்தான். அதை உங்களுக்குப் பணிவிடை செய்

https://telegram.me/aedahamlibra

யும் உங்களது பணியாளன் தெரிவிக்கட்டும்?”

ராஜகுரு அவரது வேலைக்காரனையே முறைக்கலானார்.

சேரமான் பெருஞ்சேரலாதனுக்கு முன் பணிந்து தனது வணக்கத்தைத் தெரிவித்த பணியாளன், “அரசே, நம் முதன்மை அமைச்சரின் அந்தரங்க ஒற்றன் நான். அவரது கட்டளையின் பேரில் நம் ராஜகுருவின் வீட்டில் வேலைக்குச் சென்று அவரது நடவடிக்கைகளைக் கண்காணித்துக் கொண்டிருந்தேன். சில தினங்களுக்கு முன் இவன் நடு இரவில் ராஜகுருவிடம் தகவல் எதையோ தெரிவித்துவிட்டுச் சென்றான். மறைந்துச் சென்று தாக்கி இந்த ஒற்றனைக் கைது செய்துவிட்டேன். இவன் பேசும் மொழியைப் புரிந்துகொள்ள இயலவில்லை. நம் ராஜகுருவினால் மட்டுமே இவனிடமிருந்து தகவலைப் பெற்றுத் தெரிவிக்க இயலும்!” என்றான். சேரமானின் விழிகள்

நேரத்திற்கு நேரம் கோபத்திலும், ஆத்தி ரத்திலும் சிவந்து கொண்டிருந்தது. அதி லும் அவன் நம்பிய ராஜகுருவின் துரோ கம் அவனை நிலைகுலையச் செய்திருந் தது.

ராஜகுரு மௌனமாகவே அவை யில் குற்றவாளியாக நின்று கொண்டிருந் தார். என்ன சொல்லியும் இனி தம்மால் இதிலிருந்து தப்பிக்கவே இயலாது என் பதை உணர்ந்தார். இருப்பினும், “அரசே, இவன் யாரென்று எனக்குத் தெரியாது. இது சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டு!” என் றார்.

“இவனிடமிருந்து கைப்பற்றப்பட்ட முத்திரை மோதிரத்தை மன்னரிடம் காட்டு” எனக் கட்டளையிட்டார் அமைச் சர் ஓதவஞ்சி.

உடனே இடையில் பாதுகாப்பாக மறைத்து வைத்திருந்த முத்திரை மோதி ரத்தை மன்னரிடம் கொடுத்தான் பணி யாளன். அதைக்கண்ட பெருஞ்சேரலா

தன் ஆத்திரத்துடன், “ராஜகுரு இது தங் களது முத்திரை மோதிரம் அல்லவா? இது எப்படி வம்பனது கைக்குச் சென்றது. இதற்குத் தாங்கள் அளிக்கும் விளக்கம் யாது?” என வேண்டினான்.

“அரசே....” என மட்டும் கூறியவர் அதற்குமேல் எதையும் கூற இயலாதவ ராய் மனம் ஒடிந்து போய் நின்றார் ராஜ குரு.

“விளக்கம் ஏதும் இனி அவரிடம் கேட்கத் தேவையில்லை அரசே! இவரி டம் வம்பன் தெரிவித்த செய்தி யாது? பதி லுக்கு இவர் அனுப்பிய செய்தி என்ன? அதைமட்டும் உங்களது மதிப்புமிகு ராஜ குரு அவர்களிடம் கேட்டுச் சொல்வீர்க ளாக?” என்றார் ஓதவஞ்சி.

“ராஜகுரு, இனி தாங்கள் எதை யும் மறைக்க வேண்டிய அவசிய மில்லை. உண்மையைக் கூறினீர்களே யானால் தண்டனைக் குறைவு ஏற்படும். உங்கள் மீது பெரும் மரியாதை வைத்

திருந்தேன். பேரமைச்சர் பொறுப்பினை உங்களுக்கு அளிக்கச் சித்தமாக இருந்தேன் நான். அந்த நம்பிக்கையில் தாங்கள் மண்ணை வாரித் தூற்றிவிட்டீர்கள். இது பெரும் நம்பிக்கைத் துரோகம்! ஆச்சார்யரே என்ன கூறப்போகிறீர்கள்?"

"..........."

"உங்களது துரோகம் ஆதாரத்துடன் நிரூபிக்கப்பட்டிருக்கிறது! ஏற்றுக் கொள்கிறீர்களா?"

அமைதியாகவே தலையைத் தொங்கபோட்டுக் கொண்டு நின்று கொண்டிருந்தார் ராஜகுரு.

"உங்களது திட்டம் என்ன?"

"..........."

"வடநாட்டு மன்னர்களுடன் சேர்ந்து தங்களுக்கு எதிராகச் செய்யப் பட்டிருக்கும் பெரும் சதி இது! என்ன சதி என்றுதான் அறிய இயலவில்லை!"

https://telegram.me/aedahamlibra

"ஆச்சார்யரே, உண்மையைக் கூறப்போகிறீர்களா? இல்லையா?" ஆவேசத்துடன் வினவினார் சேரமான் பெருஞ்சேரலாதன்.

"........."

"வட தேசத்திலிருந்து நம் நாட்டிற்குள் ஊடுருவியிருக்கும் இந்த ஒற்றனுக்கு மரணத் தண்டனையை விதிக்கிறேன் நான். இன்றே இவனை வழுக்குமரத்தில் ஏற்றுங்கள்! நம்பிக்கையைச் சிதைத்த ராஜகுருவுக்கு... ராஜகுருவுக்கு..." சேர மன்னனது நா பிதற்றியது."அமைச்சர் ஓதவஞ்சி ராஜகுருவின் துரோகத்திற்குரிய தண்டனையை வழங்குவார்" எனக் கூறி ஆசனத்திலிருந்து எழுந்தான்.

"மன்னா... ஆசனத்திலிருந்து எழ வேண்டாம். சற்றுப் பொறுங்கள்!" என்றவர் ராஜகுருவை நோக்கி, "ராஜகுருவின் ராஜதுரோகத்திற்கு மரணத் தண்டனையைத் தான் விதிக்க வேண்டும். ஆனால்,

சாத்திரங்கள் வைதீகனுக்கு மரணத் தண்டனையை அளிக்கக் கூடாது என்று வலியுறுத்துகின்றன. எனக்கு இவர்களின் தர்மத்தில் நம்பிக்கை இல்லை. ஆனால், மன்னர் இதனை நம்புகிறார். ஆதலால் ராஜகுருவுக்கு நான் மரணத் தண்டனையை அளிக்கப்போவதில்லை. இவரது விழிகள் இரண்டும் குருடாக்கப் படட்டும். இவனுக்கு இதுவே சரியான தண்டனையாக இருக்கும்!" என ஆவேசத்துடன் கூறலானார்.

"வேண்டாம் சேரலாதா... வேண்டாம்!" எனக் கதறினார் ராஜகுரு.

"இழுத்துச் செல்லுங்கள்!" உத்தரவிட்டார் மாமன்னர் பெருஞ்சேரலாதன்.

அடுத்தகணம் நான்கு காவலர்கள் ஓடிவந்து ஆசான் ஆச்சார்யாரை இழுத்துச் செல்லலானார்கள்.

ஓதவஞ்சியின் அடுத்த அறிவிப்பு என்னவாக இருக்கும் எனும் எண்

https://telegram.me/aedahamlibrary

ணத்தில் அவையிலிருந்த அனைவருமே ஆவலுடன் அவரை நோக்கலானார்கள். தனது அந்தரங்க ஒற்றனை அழைத்த ஓதவஞ்சி அவனிடம், "வடக்கு எல்லையில் துளுவர்களின் நிலை என்ன?" என வினவினார்.

"அடுத்தச் சில திங்கள்களுக்கு வடக்கிலிருந்து எந்த ஆபத்தும் நேராது! நாம் துணிந்து சோழ நாட்டின்மீது படையெடுக்கலாம்! பாண்டியன் தென்னவன் சோழர்களுடன் இணைந்தாலும் அச்சப்பட வேண்டிய அவசியமில்லை. அவர்களையும் சேர்த்துத் தோற்கடிக்கும் வல்லமை நமது படையிடம் இருக்கிறது!"

"நீ கிளம்பலாம்!" எனத் தனது ஒற்றனிடம் கட்டளையிட்டவர், பிறகு" சற்று முன்நான் வேந்தனிடம் நம் படைகள் அடுத்த அமாவாசை அன்று புறப்படும் எனக் கூறினேன். அதற்கு இப்போது அவசியம் இல்லாமல் போய்விட்டது. மன்னரின் முதல் அறிவிப்பின்படி

நமது படைகள் வரும் முழு நிலவன்றே புகாரை நோக்கி நகரத் தொடங்கும். எந்தக் கோட்டைகளையும் நாம் தாக்கப் போவதில்லை. புகார்தான் நமது இலக்கு! பாண்டியர் மற்றும் வேளிர்கள் என எவரது உதவியும் தேவையில்லை. சேரநாட்டுப் படை சோழ நாட்டுப் படையுடன் நேருக்கு நேர் களத்தினில் பொருதும். பணிகள் ஆயத்தமாகட்டும்!" எனக் கட்டளையிட்டார்.

அவையில் சிறு சலசலப்பு தோன்றியது! அந்தச் சலசலப்பு அடங்கு முன்னே, "மன்னரின் அறிவிப்பின்படி எனது பணியிலிருந்து இப்போதிலிருந்து என்னை விடுவித்துக்கொள்கிறேன்! சோழநாட்டுப் படையெடுப்பை நான் இப்போதும் விரும்பவில்லை. அரசரின் கட்டளைக்கு இணங்கி, சேரப் படையின் நலன் கருதியே இந்த அறிவிப்பை வெளியிட்டேன். இத்தனை நாட்கள் ஒத்துழைத்த அனைவருக்கும் எனது நன்றி!" எனக் கூறிய ஓதவஞ்சி இடையிலிருந்த அரச இலைச்

சினைப் பதக்கத்தை அரசனின் மெய்க் காப்பாளனிடம் கொடுத்துவிட்டு அங்கிருந்து நகர்ந்தார்.

“நீயும் என்னை விட்டுப் போகலாமா நண்பா?” என வருத்தத்துடன் வினவினார் மன்னர் பெருஞ்சேரலாதன்.

“இது ஊழ்வினை நண்பா! இதனைத் தேடிக் கொண்டது நீதான்!” எனக் கூறிய ஓதவஞ்சி அவையிலிருந்து வெளியேறினார்.

அவை கலைந்தது. வெகுநேரம் பேரமைச்சர் ஓதவஞ்சி கொடுத்துவிட்டுச் சென்ற இலைச்சினைப் பதக்கத்தையே பார்த்துக் கொண்டு தனது சிம்மாசனத்திலேயே அமர்ந்திருந்தார் சேரமான் பெருஞ்சேரலாதன்.

**அடிக்குறிப்பு :**

1. வம்பர் - வடக்கிலிருந்து தமிழகத்தின் மீது தாக்குதல் நடத்திய வடுகர் மற்றும் மௌரியர்களை வம்ப வடுகர் மற்றும்

வம்ப மோரியர் என்றே சங்க இலக்கியங்களில் குறிப்பிட்டுள்ளனர்.

**ஆதாரம்:**

பணியா மையிற் பகைதலை வந்த,

மாகெழு தானை வம்ப மோரியர் (அகம் - 251: மாமூலனார்),

விளங்கு புகழ் நிறுத்த இளம் பெருஞ் சென்னி,

குடிக் கடன் ஆகலின், குறை வினை முடிமார்,

செம்பு உறழ் புரிசைப் பாழி நூறி,

வம்ப வடுகர் பைந்தலை சவட்ட... (அகநானூறு 375)

இந்த வம்பர் எனும் சொல் சிலர் புதிதாக வந்தவர், வடக்கிலிருந்து வந்தவர், போருக்கு வந்தவர் என்று ஒவ்வொருவரும் ஒவ்வொரு விளக்கம் அளிக்கின்றனர். 'வம்பர்' எனும் சொல் விரிவான ஆய்விற்கு உரியது.

https://telegram.me/aedahamlibra

# 15. வஞ்சியில் வஞ் சிக்கொடி

சேரமான் ஓதவஞ்சியிடம் கட்டளையைப் பெற்றுக் கொண்டு வந்த வேந்தன் பெரும் குழப்பத்துடன் அரச விருந்தினர் தங்கி ஓய்வெடுக்கும் சத்திரத்திற்கு வந்து சேர்ந்தவுடன் தாமதிக்காமல் காவலர்க ளிடம் விட்டுச்சென்ற தனது புரவியைப் பெற்றுக் கொண்ட வேந்தன் வஞ்சியிலி ருந்து புறப்படலானான். காத தூரப் பரப்ப ளவிற்கு மேல் பறந்து விரிந்திருந்த வஞ்

சிமா நகரத்தின் மையத்திலிருந்து அதன் விளிம்பை நோக்கி புரவியின் கடிவாளத்தைப் பற்றியபடியே குழப்பத்துடன் நடந்து கொண்டிருந்தான்.

அவனது மனதில் எழுந்த பலவித குழப்பங்கள் அவனைச் சங்கடப்படுத்திக் கொண்டிருந்தது. சேர மற்றும் உறைந்தையில் பாசறையிட்டிருக்கும் மலை நாட்டுப் படைகள் புறப்பட்டால், அடுத்த ஒரு பட்சக் காலத்திற்குள் சோழ நாடு இருங்கோவின் கைக்குள் விழுந்துவிடும். எந்த மலை நாட்டைக் கைப்பற்றிச் சோழன் இளஞ்சேட்சென்னி புலிக்கொடியை உயர்த்தினானோ? அந்த மலை நாட்டு மன்னரின் காலடியில் ஒட்டு மொத்த சோழ தேசமும் விழப்போகிறது என எண்ணிக் கொண்டு குதூகலத்துடன் இருந்தவனுக்கு ராஜகுரு கூறிய கட்டளைகள் பாலை வார்த்ததைப் போன்று இருந்தது. ஆனால், ஓதவஞ்சியின் கட்டளை அவனது மார்பில் நெருப்பையள்ளிப் போட்டதைப் போன்றே உணர்ந்தான். அவர் கொடுத்த முத்திரை மோதி

ரத்தைக் கையில் பிடித்துக் கொண்டே அதில் பதிக்கப்பட்டிருந்த மரகதக் கல்லையும், அதில் பொறிக்கப்பட்டிருந்த சேரநாட்டின் இலைச்சின்னமான வில் சின்னத்தையும் வெகு நேரம் பார்த்துக் கொண்டு தயக்கத்துடன் சிந்தித்தபடியே நடந்து கொண்டிருந்தான்.

சேரமான் பெருஞ்சேரலாதனிடமிருந்து வேண்டிய கட்டளைகளை எதிர் பார்த்து உறைந்தையில் மலை நாட்டுப் படை காத்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் ஓதவஞ்சி அடுத்த அமாவாசைக்குப் படைகள் புறப்படட்டும். அதிலும் சேரமான் பெருஞ்சேரலாதனிடமிருந்து உரிய நேரத்திற்கு வேண்டிய கட்டளைகள் பிறப்பிக்கப்படும் என்று தெரிவித்தாரே! பேசாமல் உறைந்தைக்குச் சென்று மன்னரையும், வைதீகரையும் சந்தித்துத் தகவலைத் தெரிவித்துவிட்டுச் செல்லலாமா? வைதீகர் வேறு வஞ்சிக்குச் சென்றுவிட்டு நேராகக் கூடலுக்குச் செல். நீ உறைந்தைப் பட்டினத்திற்கு வர

வேண்டிய அவசியம் இல்லை எனத் திட மாகத் தெரிவித்திருக்கிறாரே! ஓலையை வாசித்ததும் ஓதவஞ்சியும் இதே கட்ட ளையைத்தானே தெரிவித்தார்.

ஓதவஞ்சியும் வைதீகரைப் போன்றே பெரும் மகான். வைதீகர் எப்படி இருங்கோவேளின் உயர்வுக்கு அரும் பாடுபடுகிறாரோ? அப்படியே பேரமைச் சர் ஓதவஞ்சியும் சேரமான் பெருஞ் சேரலாதனின் மேன்மைக்குப் பாடுபடு பவர். வாய்மை தவறாதவர். அரசியல் அறிவு வாய்க்கப்பெற்றவர். அவரது கட் டளைகள் ஒவ்வொன்றும் தீர சிந்தித் துச் சேரநாட்டின் மேன்மையை ஒட் டியே காணப்படும். அவரது கட்டளை யையும் மீறுவதற்கில்லை. என்ன செய் வது? ஓலையை வாசித்துவிட்டு ஆச் சார்யார் தெரிவித்த பணிக்கும் ஓத வஞ்சி தெரிவித்த கருத்துக்கும் மாறுபா டுகள் பல இருக்கின்றனவே! யாருடைய கட்டளையை நிறைவேற்றுவது! இருவ ரது கட்டளைக்கும் இடையிலிருக்கும்

https://telegram.me/aedahamlibra

மாறுபாடுகளை உறைந்தைக்கு நிச்சயம் தெரிவித்து ஆகவேண்டுமே! வேறு வழி யில்லை. கூடலுக்குச் செல்லும் வழியில் உறைந்தைக்குச் சென்று வைதீகரைச் சந்தித்துவிட்டுத்தான் கூடலுக்குப் புறப் பட வேண்டும்! பெரும் குழப்பத்துடன் கூடலுக்குப் பயணிப்பது பெரும் பிழை. எங்கோ நிச்சயம் தவறு நேர்ந்திருக்க வேண்டும். அந்தத் தவறு எங்கே என்று முதலில் கண்டறிய வேண்டும்? வைதீக ரைச் சந்தித்தால் அனைத்து குழப்பங்க ளுக்கும் விடை கிடைத்துவிடும்! அவரது கட்டளையை மீறுவதற்கு என்ன தண்ட னையை அளித்தாலும் ஏற்றுக் கொள் வோம்! தலையா போய்விடப்போகிறது?' என எண்ணிய வேந்தன் பாண்டி யர் தலைநகர் கூடலுக்குச் செல்லுமுன் உறைந்தைக்குச் சென்றுவிட வேண்டும் என முடிவு செய்தவன் தனது புரவியில் ஏறி அதனைத் தட்டிவிட்டான். வேந்த னது எண்ணத்தை உணர்ந்த புரவியும் மக்கள் கூட்டம் நிறைந்த அந்த வஞ்

சித் தெருவில் எப்படி விரைவாகச் செல்ல முடியுமோ அவ்வளவு விரைவாக நகர்ந்து கொண்டிருந்தது.

புரவியின் மீது வேந்தன் அமர்ந்திருந்தாலும் அவனது எண்ணம் முழுக்க உறைந்தையிலேயே சுற்றிக்கொன்றிருந்தது. அப்போது ஒரு பெண் உரக்கக் கூறி விற்ற, ‘ஊன்துவை அடிசில், பால்சோறு, மீன் குழம்பு, தயிர் குழம்பு, பண்ணியம்’ ஆகிய சொற்கள் அவனது செவிகளில் விழுந்து அவனது பசியைக் கிளப்பிவிட்டுச் சென்றன. அதுவரை உணவைப் பற்றியே சிந்திக்காதவனுக்கு விற்கப்பட்டுக் கொண்டிருக்கும் உணவுகளைக் கண்டதும் வாயில் எச்சில் ஊறியது. வயிறு பசிக்கத் தொடங்கியது. ‘அரச கடமையுடன் செல்லும்போது உணவு ஒரு கேடா’ என எண்ணி முதலில் அதைப்பற்றிக் கவலை கொள்ளாமலே செல்லலானான். சில அடிகள் சென்றதும் புரவியின் கடிவாளத்தைப் பற்றி இழுத்து நிறுத்தியவன். உச்சி வானைப் பார்த்தான். அந்த உணவு

விடுதியையும் பார்த்தான்."உறைந்தைக் குச் செல்ல எப்படியும் இன்னும் இரு சாமப் பொழுது ஆகிவிடும். பொழுதும் இரண்டாம் சாமத்தின் நடுவில் நிலை கொண்டிருக்கிறது. வெயில் வேறு! இந்த வெயிலில் அமுதுண்ணாமல் சென்றால் என்பாடு திண்டாட்டம் தான். உறைந்தை சென்றதும் உடனே கூடலுக்குக் கிளம்ப வேண்டியதிருக்கும்" எனத் தனக்குத் தானே கூறிக் கொண்டவன் அந்தப் புர வியிலிருந்து கீழே குதித்து உணவு விடு தியை நோக்கி புரவியை இழுத்துக் கொண்டு நடக்கலானான்.

ஒரு கழஞ்சு பணத்திற்கு நெய் யில் வார்த்த மான் ஊன், கொழுத்த ஊன் துண்டங்களுடன் தீயிலிட்டுச் சுட்ட தினை சோறு, ஊன்துவை அடிசில் ஆகி யவற்றைக் கேட்டு வாங்கி உண்டவன் கடைசியாகப் பருகுநீருடன் கள் மற் றும் தேறலையும் வாங்கிப் பருகினான். வயிறு நிறைய உண்டதனால் அவனுக்கு உண்ட மயக்கம் தோன்ற அருகிலி

ருந்த ஆல மரத்தின் நிழலில் அமர்ந் தான். குளிர்ச்சியான காற்று இதமாக வீச, அவன் பருகிய தேறல் அவ னுக்கு மிதமான போதையை அளிக்கத் தொடங்க அவனது மனம் சிறிது சிறிதாக அவனது பணியை மறக்கத் தொடங்கி யது. அவனது மனம் பல்வேறு நிகழ்ச் சிகளைப் பற்றி நினைக்கத் துவங்கியது. நேற்றிரவு வனத்தில் சந்தித்த அந்த மாய அழகிய மோகினியின் நினைவு அவனுக் குள் தோன்ற, "அப்பெண் இன்று வஞ் சிக்கு வருவதாகத் தானே கூறினாள். அதுவும் விடியற்காலையிலேயே அவள் கிளம்பிவிட்டதாக அல்லவா பணியாட் கள் தெரிவித்தார்கள். அவளை எப் படி நான் மறந்தேன்? அந்த வனத்தில் அவளைத் தனியாகச் சந்தித்ததிலிருந்து மனம் கிறங்கடிக்கத் தொடங்கிவிட்டதே! காரணம் என்னவாக இருக்கும்? அவளது பெயரைக் கூடக் கேட்க மறந்துவிட் டேன். அவளது தொழில் என்ன என்று தெரியவில்லை? எந்தத் தகவலையும்

அறியாமல் இந்தப் பெரும் பட்டினத்தில் அவளை நான் எங்குச் சென்று தேடு வேன்? அவளுக்கு நான் வைத்த பெயர் ‘மின்னல்’. இந்த ஒரு காரணப் பெய ரைக் கொண்டு அவளை நான் எங் குச் சென்று தேடுவது? அப்பெண்ணைத் தவற விட்டுவிடக் கூடாது. உறைந்தைக் குக் கிளம்பும்முன் இந்த வஞ்சி மாநரகத் தெருக்களில் ஒருமுறை தேடிப்பார்த்து விட வேண்டியதுதான். உறைந்தைக்குச் சென்றால் இனி வஞ்சி திரும்புவது கடி னம்! அந்த வஞ்சிக்கொடியையும் சந் திப்பதும் அரிது!” எனத் தனக்குத்தானே கூறிக் கொண்டவன் புரவியில் வஞ்சி யைத் தேடி வஞ்சியில் சுற்ற ஆயத்தமா னான். அப்போது அவன் கண்ட காட்சி அவனைப் பரவசத்தில் ஆழ்த்தியது. அவனது கண்களை நம்பலாமா அல் லது உள்ளுக்குள் சென்றிருக்கும் தேறல் அளித்த போதையினால் தோன்றியிருக் கும் மாயத் தோற்றமா என்று எண்ணி சற் றுக் குழம்பவே செய்தான். சற்று நிதானித்

தவன் சுற்றிலும் பார்வையைச் செலுத்தினான். தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டவன் மீண்டும் மீண்டும் பார்வையை எதிரில் உற்று நோக்கினான். அவனுக்கு எதிரில் வானவல்லி சில மலை நாட்டுக் கைவினைப் பொருட்களைக் கையில் ஏந்திக் கொண்டு வருத்தத்துடன் அவனை நோக்கி வந்து கொண்டிருந்தாள்.

அவள் தன்னை நோக்கித்தான் வருகிறாள் என எண்ணி மகிழ்ந்த வேந்தன் ஆர்வத்துடன் அவளை எதிர் நோக்கி நின்று கொண்டிருந்தான். ஆனால், அவள் இவனைக் கண்டு கொள்ளாது அவனைக் கடந்து சென்று விட்டாள்.

அதனைக் கண்டு திகைத்த வேந்தன், உடனே அதிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டவன் அவளது பின்னால் ஓடிச்சென்று, "என்ன, அதற்குள் என்னை மறந்துவிட்டாயா? நேற்றிரவு

உனக்குத் துணைக்கு வந்ததற்காக நன்றிக்கடன் பட்டிருப்பதாகத் தெரிவித்தாய்! ஆனால், இப்போது என்னவென்றால் கண்டும் காணாமலும் அல்லவா சென்று கொண்டிருக்கிறாய்? இந்தப் பெண்களையே நம்புவதற்கியலவில்லை" என நொந்து கொண்டான்.

தனக்கு முன்னால் நின்ற வேந்தனைக் கண்டு ஆச்சர்யமடைந்த வானவல்லி, "உங்களை நான் இங்குக் காண்பேன் என்று கனவிலும் நினைத்துப்பார்க்கவில்லை வீரரே!" எனப் பரபரப்புடன் கூறலானாள்.

அவள் 'வீரரே!' என்று அழைத்ததைக் கண்டு பதறிய வேந்தன், "பெண்ணே, என்னை வீரரே என்று அழைக்காதே! ஒற்றர்கள் அதிகம் நடமாடும் பகுதி இது! எனக்கு ஆபத்தாகிவிடும்! அதிலும் நான் இப்போது மாறுவேடத்தில் இருக்கிறேன்!" எனக் குசுகுசுத்தான்.

"தயவுசெய்து என்னை மன்னித்துவிடுங்கள். உங்களைத் திடீரென்று எதிர்பாராமல் சந்தித்துவிட்ட மகிழ்ச்சியில் அப்படி அழைத்துவிட்டேன்" என வருத்தம் தெரிவித்தாள் அவனது விழிகளை நோக்கியே! அவன் கண்ட தேறலை விட அவளது பார்வை அவனுக்குள் போதையை அதிகம் ஊட்டுவதைப் போன்று உணர்ந்தான் வேந்தன். அவளது எழில் மிகு வதனத்தையும், அதில் மின்னல் கீற்றெனப் பளிச்சிடும் அவளது விழிகளைக் கண்டவன் விழிகளைத் திருப்ப மனமில்லாமல் அவளையே நோக்கிக் கொண்டிருந்தான்.

இரவு நடுசாமத்திலேயே டாள்தொபியாசையும், வில்லவனையும் புகாருக்கு ஓலையைக் கொடுத்து அனுப்பி வைத்தவள், வேந்தன் துயில் கலையுமுன்னே வஞ்சிக்கு வந்துவிட்டிருந்தாள். அவன் வஞ்சிக்கோட்டைக்குள் நுழைந்ததிலிருந்து அவன் அரண்மனைக்குள் சென்றுவிட்டுத் திரும்பி இந்த உணவகத்தில்

https://telegram.me/aedahamlibra

உணவு உட்கொண்டது வரை அவளது கண்காணிப்பில்தான் இருந்தான் வேந் தன். அவன் தேறலைப் பருகி சற்று மயக்க நிலையில் ஆலமர நிழலில் அமர்ந்தி ருந்ததைக் கண்டவள் இதுதான் தக்க சமயம் என்று அவனைக் கடந்து சென் றாள். அவள் எதிர்பார்த்ததைப் போன்றே அவனே அவளிடம் பேசலானான்.

அவளது வதனத்தையே பார்த்துக் கொண்டிருந்த வேந்தனிடம், "வாருங்கள் அமர்ந்து பேசுவோம்!" எனக் கூறியவள் ஆலமர நிழலில் அமரலானாள். வேந்த னும் அருகில் அமர்ந்தான்.

"என்ன, வந்த காரியம் வெற்றி தானே?" என வினவினாள் வானவல்லி.

"ஒரு வகையில் வெற்றி. ஒரு வகை யில் தோல்வி!"

வானவல்லி எதையும் கேட்காமல் அமைதியாக அமர்ந்திருந்தாள்.

"என்ன தோல்வி என்று பதிலுக்கு வினவமாட்டாயா?" என வினவினான் வேந்தன்.

"அது உங்களுடைய அரசாங்க அலுவல். எனக்கு எதற்கு?"

"ஆமாம் ஆமாம். இது அரசாங்க அலுவல் தான்! ஆனால் பெரும் குழப்பத்தில் இருக்கிறேன் பெண்ணே!"

"என்ன குழப்பம்?"

"எதிர்பார்த்து வந்தது ஒன்று. நடந்திருப்பது ஒன்று! அடுத்து என்ன செய்வதென்று தெரியவில்லை!" எனக் கூறி அவளது முகத்தைப் பார்த்தவன், "உனது முகம் எதற்குக் கவலையில் தோய்ந்திருக்கிறது?" என வினவலானான்.

"அதுவா?"

"ஆம். தயக்கமின்றிக் கூறு! நான் உன் கவலையைப் போக்குகிறேன்!"

"இன்று எனக்கு வியாபாரமே சரியில்லை. வஞ்சிக்கு வந்தால் நல்ல லாபம் கிடைக்கும் என்றே இங்கு வந்தேன். எந்தப் பொருளும் விற்பனையாகவில்லை. வெறும் கையுடன் எப்படி வீட்டுக்குத் திரும்புவதென்று தெரியவில்லை. காலையிலிருந்து வஞ்சித் தெருவில் சுற்றிக் கொண்டிருக்கிறேன். வீண் அலைச்சல் தான்!" என நொந்து கொண்டாள்.

"இதுதான் உன் பிரச்சனையா?" சிரித்துக் கொண்டே வினவினான் வேந்தன்.

"ஆமாம்!"

"உன் தந்தையும், தமையனும் எங்கே?"

"தந்தைக்குத் திடீர் உடல் நலக் குறைவு! காலையிலேயே தமையன் அவரை அழைத்துச் சென்றுவிட்டார். இந்தப் பொருட்கள் அனைத்தையும் விற்ற பிறகு தான் என்னால் ஊர் கிளம்ப

இயலும்!" எனக் கூடையில் வைத்திருந்த கைவினைப் பொருட்களைக் காட்டியபடி தெரிவித்தாள்.

உடனே இடைச் சுருளை அவிழ்த்த வேந்தன், "உன்னிடம் இருக்கும் அனைத்துக் கைவினைப் பொருட்களையும் நானே வாங்கிக்கொள்கிறேன். உனக்குக் கவலை வேண்டாம்" எனக் கூறிக் கொண்டே அவளிடம் சில பொற்காசுகளைக் கொடுத்தவன் அந்தக் கூடையைத் தூக்கிக் கொண்டு அருகில் இருந்த கொற்றவை கோட்டத்திற்குச் சென்றவன், அங்குக் கோயிலில் வழிபட்டுக் கொண்டிருந்தவர்களிடம் ஆளுக்கு ஒவ்வொரு பொருளாகக் கொடுத்து விட்டு திரும்பி வந்தான்.

அதிர்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தவளிடம் வந்த வேந்தன், "நீண்ட நாள் வேண்டுதல். இன்றுதான் நிறைவேறியுள்ளது! அதுவும் உன் புண்ணியத்

தினாள். இப்போது உனக்கு மகிழ்ச்சி தானே?" என வினவலானான்.

அவள் பதிலேதும் கூறாமல் புன்னகை ஒன்றையே பதிலாக உதிர்த்தாள்.

"நான் செய்ததில் உனக்கு எந்தக் கோபமும் இல்லைதானே!"

அவன் கொடுத்த பொற்காசுகளைப் பார்த்தபடியே"இல்லை" என்றாள் மகிழ்ச்சியுடன்.

அவனும் சிரித்தான்.

திடீரென்று மௌனம் இருவருக்குமிடையில் அங்குக் கணநேரம் நீடித்தது.

"உன் வறுமை அனைத்தும் மொத்தமாகத் தீர நான் ஒரு வழி சொல்லட்டுமா?" எனத் தயக்கத்துடனே கேட்டான் வேந்தன்.

"பணத்திற்காக எதையும் செய்யும் பெண் என்று தாங்கள் என்னைத் தவறாக அர்த்தம் கொண்டுவிட்டீர்கள் என்று கரு

துகிறேன் நான்!” எனக் கோபத்துடன் சீறி னாள் வானவல்லி.

அவளது மிரட்சியைக் கண்டு பதறிய வேந்தன், “நீ பதறும் அளவிற்கு நான் எதையும் தவறாகக் கூறமாட்டேன். நீ என்னை நம்பலாம்!” என்றான்.

“என்ன வழி?” சற்றுக் கோபத்துட னும், அதே நேரம் ஆவலுடன் வினவி னாள் வானவல்லி.

“எனக்கு ஒரு உதவி தேவை. நீ உதவி புரிந்தால் உனக்கு வேண்டிய அள விற்குச் செல்வம் கிட்டும்!”

“என்ன உதவி?”

“ராஜாங்க உதவி!”

“ராஜாங்க உதவியா?”

“ஆம்!”

“கூறுங்கள். முடிந்தால் செய்கிறேன். ஆனால், என்னைக் கட்டாயப்படுத்த கூடாது!”

"சரி... என் நிலையைக் கேள். உனக்கு விருப்பம் இருந்தால் உதவி செய். இல்லையேல்..." என்றவன் சிறிது நேரம் இடைவெளி விட்டு, "என் தலை தான் உருளும் உருண்டுவிட்டுப் போகிறது!" எனச் சலித்துக் கொண்டான்.

அவன் வருந்துவதைக் கேட்டவள் தானும் வருந்துவதைப் போன்று முகத்தைச் சோர்வாகிக் கொண்டு, "சரி கூறுங்கள்! நேற்றிரவு எனக்குத் துணையாகத் தாங்கள் வந்திருக்கிறீர்கள். அந்த நன்றிக்கடனுக்காகக் கேட்க சம்மதிக்கிறேன். மீண்டும் கூறுகிறேன். கட்டாயப்படுத்த கூடாது!" என்றாள்.

"சரி... என்னுடன் வா!" எனக் கூறியவன் அந்த ஆல மர நிழலிலிருந்து எழுந்து நடந்து சென்றான். வானவல்லியும் தயக்கத்துடன் அவன் பின்னால் நடக்கலானாள். அவளது தயக்கத்தைக் கண்ட வேந்தன், "தயக்கம் தேவையில்லை! நம்பிக்கையுடன் நீ வர

லாம்!” என அவளுக்கு நம்பிக்கையூட்டி அழைத்துச் சென்றான்.

அந்தத் தெருவிலேயே ஆள் அரவம் இல்லாத நிழல் தரும் புங்கை மரம் ஒன்றின் அடியில் நின்ற வேந்தன் சுற்றி லும் அவர்களது உரையாடல் யாராலும் ஒட்டுக்கேட்க என்பதை உணர்ந்தவன் வானவல்லியிடம், “நான் கூறப்போவது பெரும் ரகசியம்!” எனக் கூறிக் கொண்டி ருந்த போதே இடைமறித்த வானவல்லி, “வீரரே, ரகசியம் என்கிறீர்கள் என்னிடம் கூற வேண்டிய அவசியம் என்ன? எந்த நம்பிக்கையில் என்னிடம் கூற விழைகி றீர்கள்?” என வியப்புடன் வினவினாள்.

“நேற்றிரவிலிருந்து உன் அறிவுக் கூர்மையை நான் கவனித்து வருகிறேன். நான் வீரன் என்பதை ஒரே பார்வை யில் கண்டறிந்தாய், பெண்கள் என்றாலே தேவையில்லாத காரியங்களில் மூக்கை நுழைக்க விரும்புவார்கள். ஆனால், நீயோ உனக்குத் தேவையில்லாததைக்

கேட்க கூட விரும்ப மாட்டேன் என்கிறாய். நேர்மையாக இருக்கிறாய். உன்னை நம்புவதற்கு இந்தத் தகுதிகள் போதாதா? அதுமட்டுமல்ல!"

"அதுமட்டுமல்லவா?"

"ஆம்!"

"சரி... உங்களுக்கு என்ன உதவி வேண்டும்? கேளுங்கள்!"

"நான் கூறும் செய்தியை நீ உறைந்தை மன்னர் இருங்கோவேளிடம் சேர்ப்பிக்க வேண்டும்!"

"உறைந்தைக்கா?"

"ஆம்!"

"என்ன வீரரே, விளையாடுகிறீர்களா?"

"நான் விளையாடவில்லை!"

"உங்கள் பணியை நிறைவேற்ற இங்குப் பலர் இருக்கிறார்கள். என்னை

எதற்குத் தேர்ந்தெடுத்துச் சிக்கலில் சிக்க வைக்கப் பார்க்கிறீர்கள்."

"எனக்கு இங்கிருக்கும் எவர் மீதும் நம்பிக்கை தோன்றவில்லை. காரியம் முக்கியம். அதைக் கருத்தில் கொண்டுதான் உன்னை அனுப்ப நினைக்கிறேன்!"

"உங்களுக்கு என்ன வேலை?"

"நான் கூடலுக்குச் செல்ல வேண்டும்!"

"கூடலுக்குச் செல்லுமுன் உறைந்தைக்குச் சென்றுவிட்டுச் செல்லலாம் அல்லவா? உறைந்தையிலிருந்து ஒரே ராஜ பாட்டை. நேராகச் சிரமம் இன்றியும் பயணிக்கலாம் அல்லவா?"

"வஞ்சியிலிருந்து நேராகக் கூடலுக்குச் செல்லத்தான் எனக்குக் கட்டளை. ஆனால், வந்த காரியம் ஓரளவிற்குத் தான் வெற்றி. ஆனால் முழு வெற்றி இல்லை. எனக்குத் திருப்தியும் இல்லை!

உறைந்தையில் தகவலைத் தெரிவிக்க வேண்டும்! உறைந்தைக் கட்டளையை யும் மீற மனமில்லை எனக்கு. ஆனால், அதே நேரம் தகவலையும் தெரிவிக்க வேண்டும். ஆதலால்தான் உன் உதவியை நாடுகிறேன் நான்."

வானவல்லி தயக்கத்துடனே நின்று கொண்டிருந்தாள்.

"பெண்ணே தயக்கம் வேண்டாம்! உனக்கு எந்தச் சிரமமும் கிடையாது. ஓலையை எழுதித் தருகிறேன். அதை மன்னரிடம் சேர்ப்பித்துவிடு."

சிந்தித்தபடியே நின்றவள் கடைசியாக, "சரி வீரரே, உங்களுக்காக இதைச் செய்யச் சம்மதிக்கிறேன்" எனச் சோர்வுடன் கூறலானாள்.

"உறைந்தையில் வைதீகரையும், யுவராஜரையும் எப்படி எதிர்கொள்ளப் போகிறேன் என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். என்னைக் காப்பாற்றி

விட்டாய்?" என மகிழ்ச்சியுடன் தெரிவித்தான் வேந்தன்.

அவன் கூறியதைக் கேட்டதும் வானவல்லி, "என்ன அரண்மனையில் இருங்கோவின் மகன் யுவராஜனையும் நான் சந்திக்க வேண்டுமா?" எனப் பதறினாள்.

அவளது திடீர் பதற்றத்திற்கான காரணத்தை அறியாத வேந்தன், "ஆமாம். அரண்மனையில் அவரும்தானே இருப்பார்!" என்றான்.

"உங்களுக்கு உதவ நினைத்த எனது வாழ்வையே நாசமாக்க முயற்சிக்கிறீர் நீர்?"

"நானா?"

"ஆமாம்?"

"உளறாதே!"

"நான் உளறவில்லை வீரரே! உங்கள் யுவராஜரைப் பற்றி நாட்டு மக்

கள் அனைவருமே அறிவார்கள். இன்று காலை கூட அவரைப் பற்றிய செய்திகள் எனது செவியில் விழுந்தது. அவர் பெண் பித்தன் என்றும் அழகான பெண்களை அவர் சிறைப்படுத்திவிடுவார் என்றும் பல செய்திகளை நான் கேள்விப்பட்டி ருக்கிறேன். ஏன், இதே வஞ்சியில் கூடப் புகாரிலிருந்து வந்த இரு பெண்களை அவர் சிறை வைக்க முயன்றதாகவும், அந்த இரு பெண்களும் தந்திரத்துடன் அவரது பிடியிலிருந்து தப்பி விட்டதாக வும் அல்லவா கேள்விப்பட்டேன்."

"இவை அனைத்தும் வதந்தி. நான் கொடுத்திருக்கும் ஓலையை எடுத்துச் செல்கிறாய் நீ! என் இலைச்சினை மோதிரத்தை நீ பயன்படுத்திக்கொள்ள லாம். ஒருவரின் நிழல் கூட உன்மேல் தீண்டாது. கவலை வேண்டாம்!"

"உறைந்தைக் கோட்டையைக் காவல் காப்பது ஒரு கள்வன்! நான் அங்குச் செல்வது எனக்குப் பாதுகாப்

புதானா? நன்கு சிந்தித்துப் பாருங்கள். நானோ மணமாகாத கன்னி. உறைந்தை அரண்மனைக்குச் சென்று அந்தப் புகார் கள்வனைக் கடந்து யுவராஜனையும் சந்தித்து ஓலையை அளித்துவிட்டு அவர் அளிக்கும் பரிசுப் பொருட்களை வாங்கி என் கிராமத்திற்குச் சென்றால் என்னை யார் நம்புவார்கள்? இருங்கோவின் புதல்வரை நான் சந்தித்துவிட்டுத் திரும்பியிருக்கிறேன் என்ற ஒரு தகவல் ஊரார் வாய்க்கு போதாதா? என் வாழ்வினை நாசமாக்கப் பார்க்கிறீர்கள்!" கண்கலங்கினாள் அவள்.

பெரும் தர்ம சங்கடத்திற்கு உள்ளானான் வேந்தன். சிறிது நேரம் அமைதியாக நின்றவன், "அரண்மனைக்குச் சென்றதும் நீ என் உடன்பிறவா சகோதரி என்று கூறிவிடேன். நீயும் மலை நாட்டுப் பெண்ணைப் போன்றுதான் இருக்கிறாய். எந்தச் சந்தேகமும் யாருக்கும் வராது. நான் உன்னை நம்புகிறேன்!" என்றான் பொறுமையாக.

உறைந்தைக்குச் சென்று வைதீக ரின் கோபத்தை எதிர்கொள்ளக்கூடாது என எண்ணியே அவளை உறைந் தைக்கு அனுப்ப முயற்சித்துக் கொண்டி ருந்தான்.

“இந்த ஆண்களே, இப்படித்தான்! சந்தர்ப்பவாதிகள்!”

“என்ன ஆண்கள் சந்தர்ப்பவாதி களா?”

“ஆம்?”

“ஏன் இப்படிக் கூறுகிறாய்?”

“நேற்று உன்னைப் போன்ற அழகான பெண்ணை எப்படித் தங்கை யாக நினைப்பது என்று வருந்தினீர்! ஆனால், இன்று உங்களுக்குக் காரியம் ஆகவேண்டும் என்பதற்காக என்னைத் தாங்கள் தங்கையாக அனுப்ப முடிவு செய்துவிட்டீர்கள்!”

"என் தங்கை என்றால் உனக்குச் சகல மரியாதையும் கிடைக்கும். ஆத லால்தான்...." எனப் பேசிக் கொண்டிருக் கும்போதே குறுக்கிட்டவள், "சரி... நான் உறைந்தைக்குச் செல்கிறேன். இதற்கு மேல் நாம் எதைப்பற்றியும் விவாதிக்க வேண்டிய அவசியமில்லை!" என்றாள்.

"நீ யார் என்று மன்னர் வினவினால் என்ன பதில் கூறப்போகிறாய்?"

சிறிது சிந்தித்த வானவல்லி, "அவர் கள் யார் என்று வினவினால் உங்களது அத்தை மகள் என்கிறேன் நான்!" என் றாள் சிரிப்புடன்.

"உன் பெயரை வினவினால் என்ன பதில் உரைப்பாய்?" என அவளது பெயரை அறிந்துகொள்ளும் ஆவலில் வினவினான் வேந்தன்.

பதிலுக்கு அவள், "மின்னல்" எனக் கூறலானாள்.

வேந்தன் அவளை மிரட்சியுடன் பார்க்கலானான்.

“நேற்றிரவு நீங்கள் எனக்குச் சூட்டிய பெயர் தானே இது?” புன்சிரிப்புடன் வின வினாள் அவள்.

அவன் மகிழவே செய்தான்.”சற்று பொறு! ஓலை எழுதிக் கொடுக்கி றேன்!” என்றவன் இடைச் சுருளிலிருந்து ஓலையை எடுத்து அந்தப் புங்கை மரத் தின் மீது ஓலையை வைத்து எழுதத் தொடங்கினான். பிறகு அதில் தனது முத் திரையைப் பதித்தவன் ஓலையை அவ ளிடம் நீட்டலானான்.

அதை வாங்கிப் பத்திரப்படுத்திக் கொண்டாள் வானவல்லி.

ஓலையைப் படித்துப் பார்க்கா மல் இடையில் வைத்ததைப் பார்த்த வன், “பெண்ணே, ஓலையை இங்கேயே வாசித்துவிடு! அதுதான் நல்லது.” என் றான்.

"அது எனக்குத் தேவையில்லாத ஒன்று. ஓலையை நீங்கள் குறிப்பிட்டிருக்கும் இடத்தில் நிச்சயம் சேர்பித்துவிடுவேன். கவலை வேண்டாம்!"

"ஓலையை வாசிக்காமல் வாங்குவது எவ்வளவு பெரிய பிழை என்று இன்றுதான் நான் உணர்ந்தேன். அந்தப் பிழையை நீயும் செய்யாதே! நான் புறப்படுகிறேன்" என்றவன் அரைச் சுருளிலிருந்து மேலும் தங்க நாணயங்களையும், அவனது இலைச்சினை மோதிரத்தையும் அவளிடம் கொடுத்து, "புரவி வண்டியை வாடகைக்கு அமர்த்திக்கொள். காரியம் முக்கியம். நான் சென்ற பிறகாவது ஓலையை வாசித்துவிடு. ஓலையை இழந்தாலும் நீ செய்தியை நிச்சயம் உறைந்தைக்குத் தெரியப்படுத்திவிட வேண்டும்!" எனக் கூறிவிட்டு அங்கிருந்து அவனது புரவியில் விரைவாகப் புறப்பட்டு அவளது பார்வையிலிருந்து சிறிது சிறிதாக மறையலானான்.

https://telegram.me/aedahamlibra

வேந்தன் பார்வையிலிருந்து மறைந்தது ஓலையை வாசிக்கலானாள் வானவல்லி. இருங்கோவேள் முக்கிய மான காரியங்களுக்கு வேந்தனை மட்டுமே எதற்கு நம்பியிருக்கிறான் என்பதை அவள் அப்போது உணர்ந்தாள். அவன் ஒன்றும் முட்டாள் இல்லை. தான் நினைத்ததைவிட அவன் பெரும் புத்திசாலி என்பதை அவள் அப்போது உணரவே செய்தாள்.

அந்த ஓலையை வாசித்த பிறகு கண நேரம் கூட அவள் தாமதிக்க வில்லை. உடனே அருகிலிருந்த கொற்றவை கோட்டத்திற்குச் சென்றவள் முதல் வேலையாக வேந்தன் எழுதிக் கொடுத்த ஓலையை விளக்கில் காட்டி எரிக்கலானாள்.

https://telegram.me/aedahamlibra

# 16. மின்னல்

வேந்தன் அளித்த ஓலையை வானவல்லி அவசர அவசரமாக விளக்கில் எரித்தமைக்குக் காரணம் இல்லாமல் இல்லை. வானவல்லி எதிர் பார்த்ததை விடவும் வேந்தன் பெரும் தந் திரசாலியாக இருந்தான். நேற்றிரவு இரு ளில் எடுபட்ட அவளது மாறுவேடம் பக லில் எடுபடவில்லை என்பதை அந்த ஓலை அவளுக்கு உணர்த்தியிருந்தது. அதையும் வேந்தன் மறைமுகமாக இருங் கோவிற்குச் சுட்டிக்காட்டியிருந்தான். காலையில் அவன் கண் விழித்தபோது தீயில் கருகிய நிலையில் கிடந்த சில குலவிகளைக் கண்டபோதே வேந்தன் பெரிதும் எச்சரிக்கை அடைந்திருந்தான். அதிலும் அவனது சுருக்குப் பை இடை யில் இடமாறியும், அதே சமயம் பொன் களவு போகாமல் இருந்ததிலிருந்தும் அவன் நேற்றிரவு யாரோ வேவு பார்க்க

முயற்சித்திருக்கிறார்கள் என்பதைச் சரியாக ஊகித்திருந்தான். மறைத்து வைத்திருந்த வைதீகரின் ஓலையையும், அழிக்கப்படாமல் இருந்த அதன் முத்திரையையும் பார்த்தபிறகே ஓலை ஒற்றர்களின் கையில் சிக்கவில்லை என்று எண்ணி நிம்மதி கொண்டான். இருந்தும் ஓலையை யாராவது பிரித்து வாசித்திருப்பார்களா என்று அவனது மனதில் ஒருவித ஐயம் தொடர்ந்து எழுந்து கொண்டிருந்தது. சேரனது அவையில் ராஜகுருவைத் தவிர அந்த ஓலையை யாராலும் வாசிக்க இயலவில்லை என்பதை அறிந்த பிறகே நேற்றிரவு ஓலை எதிரிகளின் கைகளில் சிக்கியிருந்தாலும் அது வாசிக்கப்படவோ அல்லது ஓலை செய்தி ஒற்றர்கள் அறிய அறவும் வாய்ப்பில்லை என்று எண்ணி நிம்மதி கொண்டான்.

சேர அவையில் ஓதவஞ்சி மற்றும் ராஜகுருவுக்கு இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டாலும் அது நாட்டின் நலனிற்குத்தான் என்று நினைத்தவன் அமைச்சர் ஓதவஞ்சியின் கட்டளையை நிறைவேற்ற வேண்டும் என்றே முடிவெடுத்திருந்தான். இருந்தும் அவனது மனதில் கூடலுக்குச் செல்லும்போது வைதீக

ரின் ஓலை செய்தியையும் ஓதவஞ்சியின் கட்டளையையும் உறுதிப்படுத்திவிட்டுச் செல்வோம் என்றும் நினைத்துக் கொண்டிருந்த நேரத்தில்தான் மலை நாட்டுப் பெண்ணைப் போன்று எளிதில் கண்டறிய இயலாத அளவிற்கு மாறுவேடமிட்டிருந்த வானவல்லியை மீண்டும் வஞ்சியில் கண்டான் வேந்தன்.

எப்படித் திட்டமிட்டுக் காரியத்தை நகர்த்தினாலும் அதில் சிறு குறை எங்காவது தட்டுப்பட்டுவிடும் என்பதற்கு ஏற்ப வானவல்லியே தன்னை அறியாமல் வேந்தனிடம் அவளைக் காட்டிக்கொடுத்து விட்டிருந்தாள். முதலில் நேற்றிரவு சத்திரத்தில் குறிப்பாகக் குளவிகளை விட்டுவந்தது. அதன் பிறகு அவனது சுருக்குப்பை இடையில் இடம் மாறியது ஆகியவை வேந்தனுக்கு எச்சரிக்கை உணர்வை அளிக்கத் தவறவில்லை. உறைந்தை மன்னன் இருங்கோவேளின் மகன் யுவராஜன் 'இதே வஞ்சியில் கூடப் புகாரிலிருந்து வந்த இரு பெண்களை

https://telegram.me/aedahamlibra

அவர் சிறை வைக்க முயன்றதாகவும், அந்த இரு பெண்களும் தந்திரத்துடன் அவரது பிடியிலிருந்து தப்பி விட்டதாக வும் அல்லவா கேள்விப்பட்டேன்' எனக் கூறிய சொற்களே அவளை வேந்தனிடம் முற்றிலுமாகக் காட்டிக்கொடுத்திருந்தன. ஏனெனில், யுவராஜன் வானவல்லியை யும், பத்திரையையும் வஞ்சியில் சோழ நாட்டு விருந்தினர் மாளிகையில் சிறை வைத்த நிகழ்வு சேர மன்னன் பெருஞ் சேரலாதனே அறிந்திராத ரகசியம் அது. இவள் எப்படி அறிந்திருப்பாள்? பரம ரக சியத்தை அறிந்து வைத்திருக்கும் இவள் யாராக இருப்பாள்? என்று சிந்தித்த போதே வானவல்லியை அவன் அடை யாளம் கண்டிருந்தான். மூலிகைகளைப் பயன்படுத்தி அவளது உடல் நிறத்தை மாற்றி எளிதில் கண்டறிய இயலாத அள விற்குத் தன்னை உருமாற்றிக் கொண்டி ருப்பதிலிருந்து 'இவள் எத்தனை கெட் டிக்காரி' என எண்ணி வியந்து போயி ருந்தான் வேந்தன். இவள் நிச்சயம்

உறைந்தை அரண்மனையில் இளவரசியாக இருக்க வேண்டியவள்தான் எனத் தீர்மானித்தே அவன் அவளைத் திட்டமிட்டு உறைந்தைக்கு அனுப்பியிருந்தான்.

ஆனால், வானவல்லியின் நிதானமும், அவளது நுண் அறிவும் வேந்தனது சூழ்ச்சியிலிருந்தும், சூழவிருந்த பெரும் ஆபத்திலிருந்தும் அவளை அப்போதும் காப்பாற்றியிருந்தது.

ஓலையை அவளிடம் கொடுத்து விட்டு வேந்தன் அவளது பார்வையிலிருந்து மறைந்ததும் 'நேற்றிரவு மாற்றி வைத்த ஓலையை அவையினர் ஏற்றுக் கொண்டு விட்டார்களா? மேற் கொண்டு சேரமான் உதிர்த்த கட்டளை என்னவாகவிருக்கும்?' என அறிந்துகொள்ளும் ஆவலில் ஓலையை அவசர அவசரமாக வாசிக்கலானாள்.

'மலை நாட்டு வேந்தருக்கு வேந்தன் அனுப்பும் தகவல். தங்கள் ஓலை

யைப் பத்திரமாக வஞ்சியில் சேர்ப்பித்துவிட்டேன். சேரமான் பெருஞ்சேரலாதனிடமிருந்து அடுத்தக் கட்டளை வரும் வரை நம் படை உறைந்தையிலேயே காத்திருக்க உத்தரவு. காரணம் தெரியவில்லை. நான் சேரனது கட்டளையுடன் கூடலுக்குச் செல்கிறேன். எங்கோ தவறு நேர்ந்திருக்கும் என்று என் மனம் எச்சரித்துக் கொண்டிருக்கிறது. வைதீகரிடம் ஓலைத் தகவலைக் கேட்டு சேரனது கட்டளையையும் ஒப்பிட்டு உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். ஓலையில் இருந்த தகவலை நான் அறியேன்! சோழ நாட்டு ஒற்றர்களின் இடையீடு இனி அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கிறேன். எச்சரிக்கை தேவை. இந்த ஓலையை எடுத்து வருபவள் எனக்கு மிகவும் வேண்டப்பட்டவள். நம் மலை நாட்டைச் சார்ந்தவள். நம்பிக்கை கொள்ளலாம்! பெயர் மின்னல்'

முதலில் ஓலையை வாசித்தபோது அதில் சம்பிரதாயக் கருத்துகள் மட்டுமே

இருப்பதாகவே அவளுக்குத் தோன்றி யது. இதனை வேந்தன் உறைந்தைக்கு அனுப்பாமலே இருக்கலாமே! ஆக, மாற் றிவைத்த தனது ஓலை யாருக்கும் எந் தவித சந்தேகத்தையும் ஏற்படுத்தியிருக் கவில்லை. ஏற்றுக் கொண்ட பணியில் ஒரு பாதி வெற்றிகரமாக நிறைவேறி விட்டது என்று மகிழ்ந்தாள் வானவல்லி. ஆனால், அந்த மகிழ்ச்சியில் அவள் தனது அறிவை இழந்திருக்கவில்லை. எச்சரிக்கையாகத் திரும்பவும் வாசித் தாள். அப்போதுதான் அந்த ஓலை அவ ளுக்குச் சில சந்தேகங்களை எழுப்பின. 'ஓலையைப் பற்றி மட்டுமே எழுத வேண் டியவன் சோழ நாட்டு ஒற்றர்களைப் பற்றி எதற்கு எழுதியிருக்கிறான்? அதி லும் அவன் நேற்றிரவு சந்தித்த என்னைப் பற்றி ஓலையில் குறிப்பிட வேண்டிய முக் கியத்துவம் என்ன? அவனது முத்திரை மோதிரத்தை கொடுத்துவிட்டுச் சென்றி ருக்கையில் என்னைப் பற்றித் தனியாக ஓலையில் குறுப்பிட வேண்டிய அவசிய

மில்லையே?’ என்று சிந்திக்கத் தொடங்கினாள்.

குழப்பத்துடனே ஓலையைத் திருப்பிப் பார்த்தாள். அதில் சில எழுத்துகள் மட்டும் அழுத்தி எழுதப்பட்டு அவற்றின் தடம் பனை ஓலையின் பின்புறமாகத் தெரிந்து கொண்டிருந்தன. அழுத்தி எழுதப்பட்டிருந்ததால் சில இடங்களில் பனை ஓலையில் சிறு விரிசல் உருவாகியிருக்கவே செய்தன. அலட்சியத்துடனே அழுத்தி எழுதப்பட்டிருந்த அந்த எழுத்துகள் என்னென்ன என்று அறிய ஓலையைத் திருப்பிப் பார்த்தாள். முதலில் ‘எச்சரிக்கை’ என்ற சொல்லைத்தான் அவள் கண்டாள். அவளது கவனம் அதிகமானது. அழுத்தி எழுதப்பட்டிருந்த மற்ற சொற்களை ஒவ்வொன்றாக அடையாளம் காணலானாள். ‘எச்சரிக்கை’, ‘வேண்டப்பட்டவள்’, ‘நம் சார்ந்தவள்’, ‘மின்னல்’ என்ற நான்கு சொற்களையும் அவன் அழுத்தி எழுதியிருந்தான்.

மூன்று வார்த்தைகளைக் கண்டதும் அவள் அதிர்ச்சியுடன் ஓலையை மீண்டும் வாசிக்கத் தொடங்கினாள். ‘மலை நாட்டு வேந்தருக்கு வேந்தன் அனுப்பும் தகவல். தங்கள் ஓலையைப் பத்திரமாக வஞ்சியில் சேர்ப்பித்துவிட்டேன். சேரமான் பெருஞ்சேரலாதனிடமிருந்து அடுத்தக் கட்டளை வரும்வரை நம் படை உறைந்தையிலேயே காத்திருக்க உத்தரவு. காரணம் தெரியவில்லை. நான் சேரனது கட்டளையுடன் கூடலுக்குச் செல்கிறேன். எங்கோ தவறு நேர்ந்திருக்கும் என்று என் மனம் என்னை எச்சரித்துக் கொண்டிருக்கிறது. வைதீகரிடம் ஓலைத் தகவலைக் கேட்டு சேரனது கட்டளையையும் ஒப்பிட்டு உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். ஓலையில் இருந்த தகவலை நான் அறியேன்! சோழ நாட்டு ஒற்றர்களின் இடையீடு இனி அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கிறேன். எச்சரிக்கை தேவை. இந்த ஓலையை எடுத்து வருபவள் எனக்கு மிகவும் வேண்டப்பட்

டவள். நம் மலை நாட்டைச் சார்ந்தவள். நம்பிக்கை கொள்ளலாம்! பெயர் மின் னல்.”

வாசித்து முடித்ததும் அதிர்ச்சியில் வியர்த்து மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கி னாள். வேந்தனது சாதுர்யத்தைக் கண்டு வியக்கவே செய்தாள். சிறிது கவனக் குறைவாக ஓலையுடன் உறைந்தைக்குச் சென்றிருந்தால் நிச்சயம் அகப்பட்டிருப் பாள். அதிலும் இருங்கோவின் மகனுக்கு வானவல்லியை மணமுடித்து வைக்க வேண்டும் எனும் நினைப்பில், போருக் கான முக்கியக் காரணிகளுள் அவளும் ஒருத்தியாக இருக்கையில் உறைந்தை யில் அவளே சென்று வலிய சிக் கிக் கொண்டிருந்தால் ஏற்பட்டிருக்கும் நிலையை எண்ணியவளுக்குத் தலையே சுற்றியது. ஓலையில் வேந்தன் அழுத்தி எழுதியிருக்கும் ஒவ்வொரு வார்த்தைக் குள்ளும் அவன் மறைத்திருக்கும் அர்த் தங்களை எண்ணிய வானவல்லிக்குப் பதற்றம் அதிகமாகிவிட்டிருந்தது.

‘எச்சரிக்கை’ என்ற சொல் இந்த ஓலையைக் கொண்டு வருபவளிடம் எச் சரிக்கையாக இருக்க வேண்டும் என்ப தையும்; ‘வேண்டப்பட்டவள்’ என்ற சொல் இருங்கோவேளின் மகன் யுவராஜனுக் குத் தான் வேண்டப்பட்டவள் எனும் அர்த்தத்திலும்; ‘நம் சார்ந்தவள்’ என் பதை நம் மலை நாட்டைச் சார்ந்த வளாகப் போகிறவள் எனும் நினைப் பிலும்; வானவல்லி என்றால் மின்னல் என்றுதான் பொருள். இவள் வான வல்லி என்பதைத் தான் அவன் ஓலை யில் உறைந்தை மன்னருக்கு மறைமு கமாக’மின்னல்’ என்று சுட்டியிருந்தான். அவனது சாதுர்யத்தைக் கண்டு வியந்த வானவல்லி தாமதிக்கவில்லை. உடனே கொற்றவை கோட்டத்திற்குச் சென்று எரிந்து கொண்டிருந்த விளக்கில் காட்டி சாம்பலாக்கினாள் அந்த ஓலையை. அதன் பிறகே நிம்மதிப் பெருமூச்சை விட லானாள்.

மீண்டும் அந்த ஆலமரத்தின் நிழலுக்கு வந்து அமர்ந்தவள் தீர சிந்திக்கலானாள்."வேந்தன் தன்னை அறிந்து கொள்ளும் அளவிற்கா நான் மோசமாக மாறுவேடமிட்டிருக்கிறேன்? எங்கே என்னையே அறியாமல் தவறிழைத்திருக்கிறேன். அந்தத் தவறினை தப்பித் தவறிக்கூட மீண்டும் செய்யக் கூடாது? எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும்" எனத் தனக்குத்தானே கூறி மனதைத் தேற்றிக் கொண்டாள்.

இப்போது அவளது மனதில் எழுந்திருந்த ஒரே கேள்வி'உறைந்தைக்குச் செல்லலாமா? அல்லது வேண்டாமா?' என்பதைப் பற்றியதாகத்தான் இருந்தது. முடிவெடுக்கத் திணறலானாள். தீர சிந்திக்கலானாள்.

'வேந்தன் கூடலுக்குச் சென்று திரும்பி வரும்வரை நமக்குக் காலம் இருக்கிறது. கோடை மழை வேறு எப்படியும் இன்னும் சில கிழமைகளில்

தொடங்கிவிடும். கூடலில் பாண்டிய மன்னர் மற்றும் மற்ற வேளிர்களை அவன் சந்தித்துவிட்டு பெரும் மழையில் பெருகி ஓடும் ஒவ்வொரு ஓடை மற்றும் சிற்றாறுகளைக் கடந்து மீண்டும் வஞ்சிக்கு வந்து பிறகு உறைந்தை சென்றால்தான் தகவல் மாற்றப்பட்டுவிட்டதை அறிவார்கள். அதற்குள் வளவன் எப்படியும் தயார் ஆகிவிடுவான். ஓலையில் வேந்தனைத் தவிர வேறு யார் மூலமாகவும் சோழ நாட்டுப் போர் தகவலை பரிமாறிக்கொள்ள வேண்டாம் என்பதை நிச்சயம் சேர நாட்டவர் பின்பற்றுவர். ஆனால், இரு நாட்டு ஒற்றர்களும் எப்படியும் தகவல்களைச் சேகரித்து அனுப்பிக் கொண்டுதான் இருப்பார்கள். அதனைத் தன்னால் நிச்சயம் தடுக்க இயலாது. ஆனால், அந்தத் தகவல்களுக்கு உறைந்தை அதிக முக்கியத்துவத்தை அளிக்கக் கூடாது. உறைந்தை ஒற்றர்கள் கூறும் தகவல்களையும், சேர நாட்டின் நிலையையும் திரிக்க வேண்டுமெனில் தான் நிச்சயம்

உறைந்தை சென்றுதான் ஆக வேண்டும்' எனக் கடைசியில் முடிவெடுக்கலானாள்.

'உறைந்தையில் என்ன ஆபத்து வேண்டுமானாலும் காத்திருக்கலாம். கூடலுக்குச் செல்வதாகக் கூறி வேந்தனே உறைந்தையில் எனக்காகக் காத்திருந்தாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை. உயிரை இழக்க நேர்ந்தாலும் வருந்துவதற்கில்லை. என் தலைவர் 'கருத்தான்' விறல்வேல் உதிர்த்த வெஞ்சினத்தை நிறைவேற்றும் பொருட்டு உயிரே போனாலும் கவலைப்படக்கூடாது' என எண்ணியவள் உறைந்தையில் அவளுக்காகக் காத்திருக்கும் ஆபத்துகளை அறியாமல் அங்குச் சென்றுவிடுவது என்று எண்ணிப் பயணத்திற்கு ஆயத்தமானாள்.

https://telegram.me/aedahamlibra

# 17.

# காளனின் திகைப்பு

வேந்தனை உறைந்தைக்கு அனுப்பு முன்னே உறைந்தைப் பட்டினம் போருக்குத் திடமாகத் தயாராகியிருந்தது. பலவீனமாக இருந்த உறைந்தைப் பட்டினத்தின் காவல், காளன் கோட்டைத் தலைவனாகப் பொறுப்பேற்ற பிறகு அதன் பலம் பல மடங்கு உயர்த்தப்பட்டிருந்தது. உறைந்த பட்டினம் கோட்டை மதிலினால் பாதுகாக்கப்பட்டிருக்கும் பட்டினம். மூன்றடி அகலமும் இருபதடி உயரமும் கொண்ட கோட்டை மதில்பாறைக் கற்களால் ஆனது. அதன் மேல் காவல் வீரர்கள்

நின்று கொண்டு முப்பொழுதும் கண் காணித்துக் கொண்டிருந்தனர். கோட்டைச் சுவரில் அம்பாரி அமைத்து சீரான இடைவெளியில் வீரர்கள் வில் மற்றும் எரி அம்புகளுடன் தயாராக நிறுத்தப்பட்டிருந்தனர். அவர்களுக்கு இடையில் கல்லுமிழ் கவண் நிறுத்தப்பட்டு அதை இயக்குவதற்குத் தேவையான ஆட்களும், எரிவதற்குரிய பாறைக் கற்களும் தயாராக வைக்கப்பட்டிருந்தன. கோட்டையைத் தாக்க வரும் எதிரி நாட்டு வீரர்களை அச்சுறுத்த கோட்டைச் சுவர் மேல் வரிசையாக நிறுத்தப்பட்டிருந்த கல்லுமிழ் கவண்கள் மட்டும் போதாது என்று இடங்கணிப் பொறியையும் நான்கு திசைகளிலும் திசைக்கு இரண்டாக எட்டுப் பொறியை செய்வித்து நிறுத்தியிருந்தான் காளன். இடங்கணிப் பொறி என்பது குன்றிலிருந்தோ அல்லது மேடான பகுதியிலிருந்து உருட்டி விடும்போது சுழலும் சக்கரத்துடன் பொறியும் சேர்ந்து சுழன்று பாறைக் கற்களையும், நீண்ட எரி அம்புகளைப் போன்ற ஆயுதங்களைத் தொடர்ச்சியாக விடுவித்து எதிரிகளைப் பதம்பார்க்கும் தன்மை உடையது. கல்லுமிழ் கவண் என்பது ஒவ்வொரு கல்லாகத்தான் எறியும். ஆனால் இடங்கணிப் பொறியினால் தொடர்ச்சியாகப் பாறைக் கற்களையும், நெருப்

புப் பந்துகளையும் நெடுந்தொலைவு எறிய இயலும். பொதுவாக இடங்கணிப் பொறியை போர்க்களத்தில் தான் தள்ளி யபடி பயன்படுத்துவர். ஆனால், காளன் இடங்கணிப் பொறியின் வடிவமைப்பில் சில மாற்றங்களைச் செய்வித்துச் சக்கரத் தைச் சுழற்றினால் பொறி இயங்குவதைப் போன்று வடிவமைத்து அதனைக் கோட் டைக் காவலுக்குப் பயன்படுத்தியிருந் தான். கோட்டையைச் சுற்றி அமைக்கப் பட்டிருந்த மிளைக் காடுகளுக்குள் எதி ரிகளால் எளிதில் அறிய இயலாத வண் ணம் கல்லிடுகூடை, வளைவிற்பொறி, சதக்களி, தள்ளிவெட்டி போன்ற அபா யகரமான பொறிகளையும் அமைத்திருந் தான். இவற்றின் பொறியினை இயக் குவதற்குத் தனியாக ஆட்கள் தேவை யில்லை., மிளைக் காட்டினைக் கடக்க முயன்று கோட்டையை அடைய முயலும் எதிரி நாட்டு வீரர்களே அதனைத் தீண்டி பொறியின் விசையை இயக்கி அகப்பட் டுக் கொள்வார்கள். மிளைக்காடு முழு மைக்கும் இரகசியப் பொறிகளை உரு வாக்கிய காளன் அதில் பொதுமக்கள் சிக்கிகொள்ளா வண்ணம் தகுந்த பாது காப்பையும் ஏற்படுத்தியிருந்தான்.

மிளைக்காட்டிற்கு அடுத்துக் கோட்டை மதிலைச் சுற்றி அமைக்

கப்பட்டிருந்த அகழியில் நீரின் அளவு பாதியாகக் குறைக்கப்பட்டிருந்தது. அகழியின் நீர் குறைக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல் அதில் விடப்பட்டிருந்த முதலைகளும் அரைப்பட்டினியில் விடப்பட்டிருந்தன. அகழியில் நீர் நிரம்பியிருந்தால் மிளைக் காடுகளில் வளர்ந்திருக்கும் பெரிய மரங்களைக் கொண்டு வந்து சாய்த்து அகழியை எதிரி நாட்டினர் கடந்து விடுவர். ஆதலால் தான் அகழியின் நீரை முன்னெச்சரிக்கையாக வெளியேற்றியிருந்தான் காளன். அதுமட்டுமல்லாமல் அகழிகளைச் சுற்றிக் குறிப்பிட்ட இடங்களில் அகலமான புதைப் பொறி அமைக்கப்பட்டிருந்தது.

புதைப்பொறி என்பது சமதளத் தரையில் சுரங்கம் பறித்துக் கீழிருக்கும் மண்ணை வெளியேற்றி மேல் தளத்தைத் தாங்க குறிப்பிட்ட இடங்களில் மட்டும் மண் தூண் அமைக்கப்பட்டிருக்கும். அந்தத் தூணை உடைத்துவிட்டால் மேல் தளம் மண்ணுக்குள் புதைந்துவி

டும். கோட்டையைக் கைப்பற்ற பகை நாட்டு வீரர்கள் மொத்தமாக ஓடிவரும் போது புதைப் பொறியின் தூண்களைத் தகர்த்தால் அனைவருக்கும் மண் சமாதி தான்.

இந்தப் பாதுகாப்பு போதாது என்று நான்கு திசைகளிலும் காணப்படும் கோட்டைக் கதவுகளுக்கு அருகில் மிக வும் அபாயகரமான விழுங்கும் பாம்பு, கழுகுப்பொறி, புலிப்பொறி, குடப்பாம்பு, சகடப்பொறி, தகர்ப்பொறி போன்ற உயிர் வாங்கும் கொலைக் கருவிகளைத் தயா ராக நிறுத்தி வைத்திருந்தான் காளன். இந்தப் பொறிகள் எளிதில் மற்றவர் கண்களுக்கு அறிய இயலாத வண்ணம் சாமர்த்தியமாக மறைத்து வைத்திருந் தான்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கை யாகக் கோட்டை மதிலுக்குப் பின்பு றம் எப்போதும் பெரும் கொப்பரைகளும், அதில் எண்ணெய் முற்றிலும் நிரம்பி தயா

https://telegram.me/aedahamlibra

ராகவே வைக்கப்பட்டிருந்தது. காளனால் உறைந்தையில் அதிகரித்துவிட்ட பாது காப்பு அம்சங்களால் உறைந்தை மன்னர் மற்றும் வைதீகரின் முழு நம்பிக்கையைப் பெற்றிருந்தான். உறைந்தையில் இருங் கோவின் புதல்வன் யுவராஜன் செய்ய வேண்டிய அனைத்து செயல்களையும் காளனே கவனித்துக் கொண்டிருந்தான்.

காளனே கோட்டைத் தலைவனு மாகையால் உறைந்தைக்கு ஒற்றர்களால் அனுப்பப்படும் ஒவ்வொரு ஓலையும் காளனால் வாசிக்கப்பட்ட பிறகே அரண் மனைக்குள் சென்றது. அதிலும் பல ரக சியச் செய்திகள் உறைந்தை அரண்ம னையை எட்ட விடாமல் சாமர்த்தியமாகத் தடுத்துக் கொண்டிருந்தான்.

காளன் சாமர்த்தியமாக ஒற்று வேலையை உறைந்தையில் பார்த்துக் கொண்டிருந்தாலும் அவனுக்கு உரிய கோட்டைக் காவலன் பணியைத் திறம்ப டவே செய்து கொண்டிருந்தான். உறைந்

https://telegram.me/aedahamlibra

தைக் கோட்டையைக் காளன் பலப்படுத் தியிருப்பது உறைந்தையைக் கைப்பற்றி யிருக்கும் இருங்கோ வேளிர்க்குத்தான் சாதகம் என்றாலும் போரில் இருங்கோ வைத் தோற்கடித்த பிறகு சோழ இளவல் உறைந்தை ஆசனத்தில் அமரும்போது அவருக்கு இந்தப் பாதுகாப்பு நிச்சயம் கைகொடுக்கும் என நம்பிய காளன் கோட்டையின் முக்கியப் பாதுகாப்புப் பணிகளில் அவனுக்கு நம்பிக்கைக்குரி யவர்களையே நியமித்திருந்தான்.

ஒன்றை மட்டும் காளன் நன்கு அனுமானித்திருந்தான். பெரும்போர் இந்தக் கிழமையோ அல்லது இந் தத் திங்களோ நிச்சயம் தொடங்கிவி டும். செங்குவீரன் இல்லாத சோழ நாட் டுப் படைக்கும் கரிகாலனின் காவலுக் கும் தான்தான் முழுப் பொறுப்பு என் பதை! ஆக, எப்போது வேண்டுமானாலும் தான் இந்த உறைந்தைக் கோட்டையை விட்டு வெளியேறவேண்டிய நிலை வர லாம். இருங்கோ இந்தக் கோட்டைக்குள்

இருக்கும்வரை சோழர்படை மட்டுமல் லாமல் ஒட்டுமொத்த தமிழகப் படைக ளும் சேர்ந்து முற்றுகையிட்டாலும் எளி தில் வெல்ல இயலாது என்பதை எண்ணி பெருமிதம் கொண்டவன் சில வேளைக ளில், "இருங்கோவிற்குக் கோட்டையைப் பலப்படுத்தி அவனுக்குத் தானே உதவி செய்து விட்டோமோ!" என்று கூட வருந் தலானான்.

'உறைந்தையைச் சுற்றியிருக்கும் காடுகளில் இருங்கோவின் மலை நாட் டுப் பெரும்படை பாசறை அமைத்து சேர னின் உத்தரவிற்காகக் காத்துக் கொண் டிருக்கிறது. அவற்றோடு உறைந்தைப் படையும் கணிசமாகக் கலந்திருக்கச் செய்திருக்கிறது. இந்தச் சூழலில் தென் னகத்தின் ஒட்டுமொத்தப் படையும் புகார் மீது போர் தொடுத்தால் வளவன் எப் படி அதனை எதிர்கொள்ளப் போகிறான்? ஓலையோடு சென்ற வேந்தன் வேறு இன்னும் திரும்பவில்லை. வேந்தனைப் பின்தொடர்ந்து சென்ற வானவல்லியிட

மிருந்தும் எந்தப் பதிலும் வரவில்லை' எனும் நினைப்பில் மேற்கில் பொழுதைப் பார்த்தான். 'பரிதி இன்னும் ஒரு ஓரைப் பொழுதில் மேற்கில் மறைந்துவிடுவான். எந்தச் செய்தியும் இன்னும் கிடைக்க வில்லையே' என நொந்தபடி குழப்பத்து டன் கோட்டைக் காவலைப் பார்வையிட் டுக் கொண்டும், வீரர்களுக்குத் தகுந்த கட்டளைகளைப் பிறப்பித்துக் கொண் டும் சென்று கொண்டிருந்தான் காளன்.

அவ்வேளையில் காளனிடம் பணிந்த உறைந்தை வீரனொருவன், "தலைவரே, மலை நாட்டிலிருந்து பெண் ஒருத்தி அரண்மனைக்கு வந்திருக்கி றாள். மன்னரைச் சந்திக்க வேண்டுமாம். அனுமதி கோருகிறாள்?" எனக் கூறிய வன் காளனின் பதிலை எதிர்பார்த்துக் கொண்டு அவனது முகத்தையே பார்த்த படி நின்று கொண்டிருந்தான்.

https://telegram.me/aedahamlibra

"அப்பெண்ணுடன் எத்தனை பேர் வந்திருக்கிறார்கள்?" என அதிகாரத்துடன் வினவினான் காளன்.

"மன்னிக்க வேண்டும் தலைவரே. அவள் மட்டும்தான் வந்திருக்கிறாள்!"

"ஒருத்தியா?"

"ஆம்!"

"இத்தனை கட்டுக் காவல்களை மீறி அவளால் எப்படிக் கோட்டையைக் கடந்து அரண்மனைக்குள் நுழைய முடிந்தது?"

"தலைவரே, அவளிடம் வேந்தனது முத்திரை மோதிரம் இருக்கிறது."

"வேந்தனுடையதா?"

"ஆம்!"

"வேந்தன் வஞ்சிக்கு அல்லவா நேற்றிரவு புறப்பட்டதாகச் சேதி. இவள் மலை நாட்டிலிருந்து அல்லவா வந்தி

https://telegram.me/aedahamlibra

ருப்பதாகக் கூறுகிறாய்?” அதிர்ச்சியுடன் வினவினான் காளன்.

“அந்த மர்மம் எனக்குத் தெரிய வில்லை தலைவரே! கோட்டைக் காவ லர்களிடம் மன்னரைச் சந்திக்க வேண் டும் என்று தெரிவித்தவள் வேந்தனது முத்திரை மோதிரத்தைக் காட்டியிருக் கிறாள். நமது வீரர்களால் அவளைத் தடுக்க இயலவில்லை. அவள் அரண்ம னைக்குள் பிரவேசித்துவிட்டாள்.”

ஏதோ தவறு நேர்ந்திருப்பதாக உணர்ந்தான் காளன். வேந்தனின் செய்தி மட்டும் இருங்கோவின் காதுக ளுக்குச் சென்றால் சோழ தேசத்தின் நிலைமை மோசமாகிவிடும் என்பதை உணர்ந்த காளனுக்கு ஆத்திரம் அதிக மாகியது.”மூடனே, எனது அனுமதி அல் லாமல் கோட்டைக்குள்ளோ அல்லது அரண்மனைக்குள்ளோ யாரும் நுழை யக்கூடாது என்று கட்டளையிட்டிருக் கிறேன் நினைவிருக்கிறதா! ஒற்றர்கள்

உறைந்தைக்குள் பலர் ஊடுருவியிருப்ப தாகத் தகவல் நித்தமும் வந்து கொண்டி ருக்கிறது. மன்னருக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்துவிட்டால்....” எனக் காவலனிடம் சீரியவன், “யாரங்கே!” என அழைத்தான் காளன்.

அருகில் காவல் பணியில் ஈடுபட்டி ருந்த காவலர் மூவர் ஓடுவந்து காளனிடம் பணியலானார்கள்.

“அரண்மனைக்குள் எனது அனு மதியின்றி முத்திரை மோதிரத்துடன் ஒருத்தி நுழைந்திருக்கிறாள். அவள் முறையாகப் பரிசோதிக்கப்படவில்லை. மன்னரைச் சந்திக்குமுன் உடனே தடுத்து நிறுத்துங்கள்!” என ஆணையிட்டான் அசுர கதியில். மலை நாட்டுப் பெண் ணினால் மலை நாட்டு மன்னர் இருங் கோவிற்கு எந்த ஆபத்தும் நேர்ந்துவிடக் கூடாது என்பதைவிட வேந்தன் அனுப் பியிருக்கும் தகவல் இருங்கோவைச் சென்று சேர்வதற்கு முன் அத்தகவலை

அறிந்துவிட வேண்டும் என்பதிலேயே அவனது கவனம் இருந்தது. கோட்டைத் தலைவனாக இருந்த காரணத்தினால் 'மன்னரின் பாதுகாப்பு' என்ற பெயரில் பல முக்கிய ஓலைகளைத் தடுத்து நிறுத்தியிருக்கிறான் காளன்.

காளனின் சீற்றத்தைக்கண்டு நடுங்கிய அந்தக் காவலன், "தலைவரே, இந்தக் காவலர்களை அனுப்ப வேண்டிய அவசியமில்லை!" எனக் கூறிக் கொண்டிருந்த இடைமறித்த காளன், "அவள் மன்னரைச் சந்திக்கச் சென்றுவிட்டாள் என்கிறாயா?" என வினவலானான்.

"இல்லை. அவளை நான் தடுத்து நிறுத்தியிருக்கிறேன். உங்கள் அனுமதி இல்லாமல் மன்னரின் மாளிகைக்கு அனுப்புவது தவறு என்பதால், அவளைத் தடுத்துக் காவலர்களின் பாதுகாப்பில் நிறுத்திய பிறகே உங்களைத் தேடி வந்தேன்!" என்றான் பணிவாக.

“இதனைக் கூற இத்தனை தாமதம் ஏன்? வந்ததுமே கூறித் தொலைத்திருக்க வேண்டியதுதானே!”

“அதைக் கூறத்தான் முயன்றேன். ஆனால்....”

“சரி. அதை விடு. அப்பெண்ணை எங்கே தடுத்து நிறுத்தியிருக்கிறாய். உடனே இங்கு அனுப்பி வை. அதுமட்டு மல்லாமல் அவளைப் பரிசோதிக்க இரு பெண் ஊழியர்களையும் ஏற்பாடு செய்து அனுப்பு!” எனக் காளன் கட்டளையிட அடுத்தக் கணம் அக்காவலன் அங்கி ருந்து விரைந்தான். மற்ற வீரர்களும் அங் கிருந்து விலகிச் செல்லலானார்கள்.

காளனிடம் ஒருவித பரபரப்பு கண நேரத்தில் அதிகரித்திருந்தது. காளன் எனும் போர்வைக்குள் ஒளித்து வைத் திருக்கும் சோழ நாட்டின் வேளக்கா ரப் படைத்தலைவன் வெளிப்படும் காலம் இன்றைய நாளாக இருந்தாலும் இருக் கலாம் என எண்ணியவன் அதற்கும்

தயாராகவே நின்று கொண்டிருந்தான். அவனது மனம் பலவித சிந்தனைகளில் ஆழ்ந்திருந்தது.

திடீரென்று காளனது புரவி கனைக்க, தனது சிந்தனையிலிருந்து வெளிப்பட்டவன் பார்வையைச் சுற்றி லும் செலுத்தலானான். சற்றுத் தொலை வில் கருப்பு நிறப் புரவி ஒன்றின் கடி வாளத்தைப் பற்றியவாறு பெண் ஒருத்தி காவலன் ஒருவனின் வழிகாட்டுதலில் நடந்துவந்து கொண்டிருப்பதைப் பார்த்த காளன், ‘இவள் தான் வேந்தன் அனுப் பிய பெண்ணாக இருக்க வேண்டும்’ என எண்ணிக் கொண்டான்.

அவள் அருகில் வந்ததும் அவளது உடை, கழுத்தில் அணிந்திருந்த சில மலை நாட்டு ஆபரணங்கள், அவளது உடல் நிறம் ஆகியவற்றைக் கண்டு ‘இவள் மலை நாட்டைச் சேர்ந் தவள்தான்’ என்று உறுதிசெய்தபடியே

https://telegram.me/aedahamlibra

அவளை அதிகாரத்துடன் நோக்கலானான்.

காளனிடம் வந்தவள், “கோட்டைத் தலைவருக்கு வணக்கம்” எனப் பணிந்து தனது வணக்கத்தையும் மரியாதையுடன் தெரிவிக்கவே செய்தாள்.

அவளது வணக்கத்தை மதியாத உறைந்தைக் கோட்டைத் தலைவன் காளன் அவளது விழிகளையே அதிகாரத்துடன் பார்த்தபடி நின்று கொண்டிருந்தான். அவளது விழிகளைப் பார்த்த அடுத்தக் கணத்தில் காளனுக்குப் பெரும் எச்சரிக்கை உணர்வு தோன்றி மறைந்தது. ‘இந்த விழிகளை எங்கோ அருகில் கவனித்திருக்கிறோமே, எங்கே?’ என எண்ணியவன் எச்சரிக்கையுடனே அவளைக் கவனித்தான்.

புரவியின் கடிவாளத்தை விடுவித்தே மலை நாட்டவள் காளனுக்கு மரியாதை செலுத்தியிருந்ததால் அங்கி

ருந்து அகன்ற அவளது புரவி காள னின் புரவிக்கு அருகில் சென்று நின்று கொண்டது. இரு புரவிகளும் தலையை ஆட்டி தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித் துக் கொண்டன. இரண்டும் மாறி மாறி கனைத்துக் கொண்டன.

தனது புரவியின் திடீர் செயலுக் குக் காரணத்தை அறியாத காளன் அந்த மலைநாட்டுப் பெண்ணின் புரவியை உற் றுக் கவனிக்கலானான். தொலைவிலி ருந்து பார்த்தபோது அந்தப் புரவி கருப் பாகத் தெரிந்தாலும் அதன் நிறம் கருப்பு அல்ல. ஒரு வித சாம்பல் நிறம். அந் தப் புரவி மிகவும் மட்டமான ரகத்தைச் சேர்ந்தது. சுமை தூக்க மட்டுமே பயன்ப டும் மட்டமான மலிவான புரவிதான் அது என்பதைக் கண நேரத்தில் ஊகித்திருந் தான் காளன். ‘இந்தப் புரவியைக் கண்டு தமது புரவி எதற்காகக் கனைத்தது?’ என எண்ணிய காளன் குழம்பவே செய்தான். அந்தப் புரவியையும், அவனுக்கு முன் னால் நின்ற மலை நாட்டுப் பெண்ணை

யும் மாறி மாறிக் குழப்பத்துடன் கவனத் தான் காளன்.

வந்திருக்கும் மலை நட்டுப் பெண் மற்றும் அவளது புரவியையும் அடையா ளம் கண்டு கொண்ட காளனது புர வியைப் போன்று அவனால் தன்னை அடையாளம் கண்டுகொள்ள இயல வில்லை என்பதைக் கண்ட வான வல்லிக்குப் புன்னகைத் தோன்றினாலும் அதைக் கண நேரத்தில் மறைத்துவிட்டி ருந்தாள். வேந்தனிடமிருந்து பாடம் படித் துக் கொண்ட வானவல்லி, உறைந்தைக் குக் கிளம்புவதற்கு முன்னே சில மூலி கைச் செடிகளை அரைத்து அவளது வெண்ணிறப் புரவியின் மீது பூசி அதன் நிறத்தையும், பொலிவையும் முற்றிலும் மாற்றியிருந்தாள். மூலிகையைப் பூசிய பிறகு போர்க்களத்தில் பயன்படுத்தப்ப டும் அதிவேகமான உயர் சாதிப் புரவி என்று யாரும் அப்புரவியைக் கூற மாட் டார்கள்.

https://telegram.me/aedahamlibrary

அருகில் நின்ற வானவல்லியை அழைத்துவந்த காவலனிடம், “இரு புரவிகளையும் கொட்டகைக்கு இழுத்துச் செல்!” என ஆணையிட அடுத்தக் கணம் புரவிகளுடன் அக்காவலன் அங்கிருந்து நகர்ந்தான்.

அமைதியாக நின்றவளிடம் காளன், “என்ன காரியமாக உறைந்தைக்கு வருகைத் தந்திருக்கிறாய்?” என வினவினான்.

“தங்கள் வீரர்களிடம்தான் ஏற்கெனவே அனைத்தையும் விளக்கமாகக் கூறிவிட்டேனே, கோட்டைத் தலைவரே!” எனப் பதிலளித்தாள்.

“காவலர்களிடம் கூறியது இருக்கட்டும். கோட்டைத் தலைவன் வினா எழுப்பும்போது எதிர் கேள்வி கேட்கக் கூடாது. கேட்ட கேள்விக்கு மட்டும் பதில் வரட்டும்! நான் எதிர்பார்ப்பது ‘நேர் விடை’யை. ‘இனமொழி விடை’யை அல்ல!” குரலை உயர்த்திய காளன் தனது விழிகளை

அவளது பார்வையில் நிலைநாட்டி மிரட்டினான்.

அவனது பார்வையிலிருந்து தனது விழிகளைத் தாழ்த்திய வானவல்லி, "என் பிழைக்குக் கோட்டைத் தலைவர் மன்னிக்க வேண்டும்" என அவளது குரல் நடுங்கியது.

அவளது குரல் ஒடிந்து நடுங்குவதைக் கண்ட காளன், "எதற்காக வந்தாய்?" என வினவினான்.

"மன்னரைச் சந்திப்பதற்காக!"

"மன்னரையா?"

"ஆம்!"

"எந்த மன்னரை?"

"உறைந்தை சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் மலை நாட்டு மன்னர் இருங்கோவைச் சந்திப்பதற்காக."

"அவரை நீ எதற்காகச் சந்திக்க வேண்டும்?"

"அதைத் தங்களிடம் வெளிப்படை யாகக் கூறுவதற்கில்லை!"

"என்ன? என்னிடம் அதைக் கூறுவ தற்கில்லையா!" கோபப்பட்டான் காளன்.

அவனது முகத்தை நோக்கிய வான வல்லி அவனது குரல் மட்டுமே கோபப் படுவதைப் போன்ற பாவானையில் அதி காரத்துடன் வெளிப்படுகிறது என்ப தைப் புரிந்து கொண்டாள். வழக்கமா கக் கோட்டைத் தலைவர்கள் விசாரிக் கும் முறையில் தான் இவரும் விசாரிப் பதைக் கண்டவள்"கோட்டைத் தலை வரே வேளிரின் அந்தரங்க ஊழியர் வேந் தன் தான் என்னை மன்னரைச் சந்திக் கச் சொல்லி அனுப்பியிருக்கிறார்." எனப் பதற்றப்பட்டுக் கொண்டே கூறியவள் இடையில் பாதுகாப்பாக வைத்திருந்த முத்திரை மோதிரத்தை எடுத்து அவனி டம் நீட்டினாள்.

அந்த முத்திரை மோதிரத்தை வாங் கிப் பரிசோதித்த காளன் அது வேந்

https://telegram.me/aedahamlibra

தனுடையதுதான் என்று உறுதி செய்து கொண்டவன் மீண்டும் அதை அவளி டமே நீட்டினான்.

அதை அடக்கத்துடன் பெற்றுக் கொண்ட வானவல்லி மீண்டும் பத்திரப்ப டுத்தி வைத்துக் கொண்டாள்.

“என்ன காரியமாக வேந்தன் உன்னை அனுப்பியிருக்கிறான்?”

“..........” பதில் கூற அச்சப்பட்டுப் பதற்றத்துடனே நின்று கொண்டிருந்தாள் வானவல்லி.

“பதில் கூறு!”

“..........”

“ஓலை ஏதாவது கொண்டு வந்தி ருக்கிறாயா?”

“ம்ம்ம்” தட்டுத் தடுமாறி பேச முயன் றாள் வானவல்லி.

“என்ன செய்தி?”

https://telegram.me/aedahamlibra

“மன்னிக்கவும். ஓலை எதையும் அவர் எனக்குக் கொடுத்தனுப்பவில்லை.”

“ஓலை எதுவும் அனுப்பவில்லையா?”

“ஆம். வாய் மொழி மூலமாகவே அவர் எனக்குச் செய்தியைக் கூறியிருக்கிறார்.”

“என்ன செய்தி அது?”

“என்னைத் தாங்கள் மன்னிக்க வேண்டும்!”

“எதற்கு நான் உன்னை மன்னிக்க வேண்டும்?”

“தங்கள் கேள்விக்குப் பதிலளிக்க இயலாத நிலையில் இருக்கிறேன் நான்!”

“பதிலளிக்க இயலாத நிலையா?”

“ஆம்!”

“அப்படி என்ன நிலை?”

“இருங்கோவின் ஒற்றர் வேந்தன் கூறிய தகவலை முதலில் மன்னரிடம் மட்டுமே கூறுவேன் என்று வாக்களித்திருக்கிறேன்!”

“முதலில் என்றால்....?”

“அவருக்கு நான் அப்படித்தான் வாக்களித்திருக்கிறேன்.”

“அப்படியெனில் இருங்கோவிடம் கூறிய பிறகு என்னிடம் வேந்தன் கூறிய தகவலைத் தெரிவிப்பாயா?”

“தாங்கள் விரும்பும்பட்சத்தில் அதைக் கூறத் தயாராக இருக்கிறேன். ஆனால், இப்போது அதைத் தெரிவிக்க இயலாது!”

அவள் கூறுவதில் சந்தேகம் கொண்ட காளன் நம்பிக்கையின்றி, “வேந்தன் இதுவரை வாய்மொழி மூலமாக எந்தச் செய்தியையும் பரிமாரியதில்லையே! ஓலை வழியாகத்தானே அவன் செய்தியை அனுப்புவான்.” எனக் கூறிய

வன், “நீ யார்?” என்று வானவல்லியைப் பார்த்து வினவினான் காளன்.

“நான்....” பதற்றத்துடனே நின்று கொண்டிருந்தாள் வானவல்லி.

“தயக்கம் வேண்டாம்! நீ பதற்றப் படுவதில் அர்த்தமில்லை. யார் என்று கூறு!”

“பெயர் மின்னல்...”

“பெயரைக் கேட்கவில்லை. அவனை உனக்கு எப்படித் தெரியும்?”

“‘மன்னர் கேட்டால் எனது அத்தை மகள் என்று கூறு’ என்பது வேந்தனின் கட்டளை!”

“அப்படியெனில் நீ அவனது அத்தை மகள் இல்லை. அப்படித் தானே?”

“ஆமாம் கோட்டைத் தலைவரே! உண்மையை எளிதில் கண்டறிந்துவிட் டீர்கள். தாங்கள் மிகவும் தந்திரசாலி!”

https://telegram.me/aedahamlibra

அவள் கூறியதைக் கேட்டதும், "என்னையே நீ நகைக்கிறாயா?" எனச் சினம் கொண்டான் காளன்.

இப்போது அவனது கோபத்திற்கு அவள் அச்சப்பட்டதாகத் தெரியவில்லை. அவனது விழிகளில் தனது விழியைத் தைரியத்துடன் பதித்திருந்தாள்.

"வேந்தன் அனுப்பியிருக்கும் செய்தி என்ன என்று கூறப்போகிறாயா? இல்லையா?"

"கோபம் வேண்டாம்! சற்றுப் பொறுங்கள் அண்ணா. வேந்தன் என்னிடம் கூறிய தகவல் மட்டுமல்ல. உறைந்தையிலிருந்து அவன் கொண்டு சென்ற தகவல் எது? சேர மன்னன் பெருஞ்சேரலாதனிடம் போய்ச் சேர்ந்த தகவல் என்ன? வேந்தன் ஓலையில் என்னிடம் குறிப்பிட்ட தகவல் என்ன? நான் இன்று இருங்கோவிடம் கூறப் போகும் தகவல் என்ன? என அனைத்தையும் ஒன்றுவி

https://telegram.me/aedahamlibra

டாமல் கூறுகிறேன். இன்னும் ஒரு சாமப் பொழுது மட்டும் பொறுப்பீர்களாக?" புன்னகையுடன் தெரிவித்தாள் வானவல்லி.

திடீரென்று மலை நாட்டுப் பெண் தன்னை அண்ணா என்று அழைத்ததையும், ஓலையைப் பற்றி அவள் கூறிய தகவல்களையும், மாறிவிட்ட அவளது குரலையும் கேட்ட காளன் தொடக்கத்தில் பெரும் அதிர்ச்சியடைந்தாலும் பிறகு இந்தக் குரல் வானவல்லியினுடையது என்று அடையாளம் கண்டு கொண்டவன் அவளைக் கூர்ந்து கவனித்தான். அப்போது தான் அந்த மலை நாட்டுப் பெண்ணின் உருவத்திற்குள் ஒளிந்திருந்த வானவல்லியைக் கண்டவன் திகைப்பின் உச்சத்திற்கே சென்றுவிட்டான். திகைப்பிலிருந்து அவன் மீள்வதற்குள் அவனைப் பெரும் அச்சம் சூழ்ந்து கொண்டது.

அந்த அச்சத்துடனே, "வானவல்லி, என்ன காரியம் செய்திருக்கிறாய்? ஓநாயின் வாய்க்குள் தலையை அல்லவா

கொடுத்திருக்கிறாய்! பெரும் போரே உன்னையும், செங்குவீரனையும் மையப் படுத்தியே நடக்கவிருக்கிறது. இந்த நிலையில் நீ இங்கு....” எந்தச் சூழலிலும் பதறாமல் திடத்துடன் இருக்கும் காளன் பதறினான். அவனது உடல் நடுங்கியது. வாய் குழறியது.

அவனது திடீர் நடுக்கத்தைக் கண்ட வானவல்லி, “அண்ணா, பதற் றம் வேண்டாம். வேந்தன் இன்று இங்கு வருகை தந்தானா?” என வினவினாள்.

“இல்லை வானவல்லி. அவன் இங்கு இதுவரை வரவில்லை.”

“உறுதியாகத் தெரியும்தானே! சற்று கவனக் குறைவாக இருந்திருந்தால் அனைத்தையும் நாசமாக்கியிருப்பான்.”

“உறுதியாகத் தெரியும் வானவல்லி. நான் இந்த அரண்மனையின் காவல் தலைவன் என்பதை மறந்துவிடாதே!

என்னை மீறி எதுவும் உள்ளே நுழைய இயலாது.”

“உங்களுக்குத் தெரியாமல் இரகசிய வழிகள் எதன் மூலமாகவாவது வந்திருந்தால்?”

“அந்தக் கவலை உனக்கு வேண்டாம்! என்னை மீறி அவனால் உறைந்தைக் கோட்டைக்குள் வந்திருக்க இயலாது!”

“ம்ம்ம், மகிழ்ச்சி அண்ணா... நம் இருவரையும் யாரோ ஒருவன் எனக்குப் பின்னால் இருக்கும் மாளிகையின் உப்பரிகையிலிருந்து கவனித்துக் கொண்டிருக்கிறான். எச்சரிக்கை!” என்றாள் வானவல்லி.

“எந்த நம்பிக்கையில் நீ உறைந்தை வந்திருக்கிறாய்?” எனக் கூறியபடியே பார்வையை அவளுக்குப் பின்புறத்தில் இருந்த மாளிகையின் உப்பரிகைச் சாளரத்திற்குத் திருப்பினான். அங்கே இருந்

கோவின் மகன் மலை நாட்டின் யுவரா ஜன் நின்று கொண்டு இருவரையும் கவ னித்துக் கொண்டிருந்தான்.

"அண்ணா... உறைந்தையில் என் னைக் காக்கத் தாங்கள் இருக்கும் போது எனக்கு என்ன கவலை?"

"நீ செய்திருப்பது பெரும் துணிச்சல் மிகுந்த காரியம். அபாயகரமானது. மிக வும் எச்சரிக்கையுடன் இருக்க வேண் டும்."

"நிச்சயமாக அண்ணா!" எனத் தெரிவித்தாள் வானவல்லி.

"சரி, மாளிகைச் சாளரத்திலிருந்து யுவராஜன் நம்மைக் கவனித்துக் கொண் டிருப்பதை நானே கவனிக்கவில்லை. ஆனால் உனக்குப் பின்புறமாக இருப்ப வனை நீ எப்படி....?"

"அண்ணா உங்கள் விழிகளைப் பார்த்தபடியே பேசினேன். மாளிகைச் சாளரத்தின் விளக்கொளியை யாரோ

அடிக்கடி கடந்து கொண்டிருந்ததால் அந்த விளக்கொளி அடிக்கடி மறைந்து தோன்றியது. ஆதலால் தான் மாளிகைச் சாளரத்தின் உப்பரிகையில் நின்றபடி நம்மைக் கவனிக்கிறார்கள் என்று ஊகித்தேன்!"

அவளது அறிவைக் கண்டு வியந்த காளன், "சரி. அரண்மனைக்கு நாம் புறப்படுவோம்! எதற்கும் எச்சரிக்கையாகவே இரு!" என்றபடியே பெரும் எச்சரிக்கையுடன் வானவல்லியை அரண்மனைக்குள் அழைத்துச் சென்றான்.

காளன் எதிர்பார்த்ததையும் விட வேறுவிதமான ஆபத்து வானவல்லியை சூழ்ந்து கொண்டிருந்தது.

வானவல்லி காளனை நோக்கித் தனது புரவியுடன் சென்றபோதே உப்பரிகைச் சாளரத்திலிருந்து கவனித்து விட்டான் யுவராஜன். தொலைவிலிருந்து கவனித்ததால் அவளது உடை, எழுந்து தாழ்ந்திருந்த அவளது உடற் பரிமா

ணம் ஆகியவற்றைக் கண்ட யுவராஜன் அவளை அருகில் சந்தித்துவிட வேண்டும் எனும் நினைப்பில் தனது கற்பனா சக்தியை அதிகமாக்கிக் கொண்டு அரண்மனையை நோக்கி வேகமாகச் செல்லலானான்.

**அடிக்குறிப்பு :**

1. சங்ககாலத் தமிழகப் போர்களில் பயன்படுத்தப்பட்ட நாசக் கருவிகள்:

1. வளைவிற்பொறி, 2. இடங்கணி, 3. வலங்கணி, 4. கல்லுமிழ் கவண், 5. . கருவிரலூகம்6. கல்லிடுகூடை, 7. தூண்டில், 8. கவைகழு, 9. புதை, 10. அயவித்துலாம், 11. எரிசிரல், 12. பன்றி, 13. பனை, 14. மழு, 15. எழு, 16. சீப்பு, 17. களிற்றுப்பொறி, 18. பிண்டிபாலம், 19. தள்ளிவெட்டி, 20. விழுங்கும் பாம்பு, 21. சகடப்பொறி, 22. அரிநூற்பொறி, 23. குடப்பாம்பு, 24. குருவித்தலை, 25. தாமணி, 26. தோமரம், 27. சிறுசவளம், 28. சுழல்படை, 29.

பெருஞ்சவளம், 30. முசுண்டி, 31. முசலம். 32. தகர்ப்பொறி, 33. புதை, 34, கவண், 35, கருவிரலூகம், 36, கல்லிடுகூடை, 37, கைப்பெயர் ஊசி, 38. ஆண்டலையடுப்பு, 39. சதக்களி, 40. கழுகுப்பொறி, 41. நாரா சம், 42. கணையம், 43. புலிப்பொறி.

https://telegram.me/aedahamlibra

https://telegram.me/aedahamlibra

# 18.

# சேந்தனின் தங்கை

வானவல்லியை மன்னரின் அந்தரங்க ஆலோசனை அறைக்கு வெளியே காத்திருக்கவைத்துவிட்டு உள்ளே நுழைந்தான் காளன். காளன் அறைக்குள் பிரவேசித்ததுமே மன்னரின் அந்தரங்க மெய்க் காப்பாளர்கள் அவனுக்குப் பணிந்து மரியாதை செலுத்தலானார்கள். அவர்களின் மரியாதையை ஏற்றுக் கொண்ட காளன் உறைந்தை மன்னர் இருங்கோவேளை கவனித்தான். காளனின் வரவைக் கூடக் கவனித்திராத இருங்கோவேள் தீவிர சிந்தனையு

டன் அறைக்குள் அப்படியும் இப்படியுமாக நடந்து கொண்டிருந்தார்.

மெய்க் காப்பாளர்கள் அனைவரும் வெளியேறும்படி கண் காட்டினான் காளன். அடுத்தக் கணம் அவர்கள் அனைவரும் சத்தம் எழுப்பாமல் அங்கிருந்து அகலலானார்கள். அமைதியாகச் சென்று இருங்கோவிற்கு அருகில் நின்று கொண்டான். மன்னரின் சிந்தனையைக் கலைக்க அவனுக்கு விருப்பம் இல்லை.

சில கண நேரங்கள் கழித்துச் சிந்தனையிலிருந்து மீண்ட உறைந்தை மன்னர் இருங்கோவேள் காளனைக் கண்டு, “நீ எப்போது உள்ளே நுழைந்தாய் காளா?” எனப் புன்னகையுடன் வினவலானார். அவரது புன்னகையில் வருத்தமும் கலந்திருப்பதைக் கவனிக்கவும் தவறவில்லை காளன்.

தனது மார்பின் மீது வலது கையை வைத்து தலையை முன்புறமாகச் சாய்த்து தனது வணக்கத்தைத் தெரிவித்துக்

கொண்ட காளன், "சற்று முன் தான் அரசே!" எனப் பணிந்தான்.

தனது அறையில் மெய்க் காவலர்கள் யாரும் இல்லாததைக் கண்ட இருங்கோ வேளின் முகம் கண நேரத்தில் மாறியிருந்தது. அதைக் கவனித்து விட்ட காளன், "அரசே, தங்களது மெய்க் காவலர்கள் அனைவரையும் நான்தான் வெளியேறச் சொல்லி கட்டளையிட்டேன்! வெளியே காத்திருக்கிறார்கள். உங்களுடன் தனிமையில் உரையாடவே இந்த ஏற்பாடு. ஆதலால் தான்..." எனப் பாதியிலேயே வாக்கியத்தை முடித்தான்.

காளனது விழிகளை வியப்புடன் மன்னர் கூர்ந்து நோக்கினார்."அரசே, இது உங்களது அரண்மனை. அந்தரங்க ஆலோசனை அரை. உங்களது அனுமதி இல்லாமல் எவராலும் இதற்குள் பிரவேசிக்க இயலாது. பிறகு எதற்கு மெய்க் காவலர்கள்?" என வினவினான்.

"இப்படி அசிரத்தையாக இருந்த காரணத்தினால்தான் ஒருவன் என் கழுத்து மீது தன் வாளினை வைத்து விட்டு இதே இடத்தில் மிரட்டிச் சென் றான். அவனை நம் வீரர்களால் என்ன செய்ய முடிந்தது? உறைந்தைக் கோட் டையையே ரணகளமாக்கிவிட்டுச் சென் றான். அந்தப் பொழுதுகளை இப்போது எண்ணினாலும் மனம் ஆத்திரத்தில் கல வரப்படுகிறது. உடல் நடுங்குகிறது. அந் தத் தவறு மீண்டும் நேரக்கூடாது எனக் கருதுகிறேன் காளா!"

"அரசே, தாங்கள் இன்னும் கடந்த காலத்தை மறக்கவில்லை என்று கருது கிறேன்!"

"எப்படி மறப்பது காளா?"

"அரசே, புகார் உப தலை வன் நுழைந்த உறைந்தை அரண்மனை அல்ல இது. இதன் காவல் எப்படிப்பட் டது என்பதைத் தாங்கள் நன்கு அறிவீர் கள். காவல் இப்போது பலமடங்கு அதிக

ரிக்கப்பட்டுவிட்டது. அனுமதி இல்லாமல் தூது புறா கூட உள்ளே நுழைய இயலாத அளவிற்குப் பாதுகாப்பினை பலப்படுத்தியிருக்கிறேன். இன்னும் எதற்கு அரசே அச்சம்!"

"..........."

"அதுமட்டுமல்ல அரசே, தங்கள் கழுத்தில் வாள் வைத்த செங்குவீரனை குமரிக் கடலோடு நீர்ச் சமாதி செய்து நம் யுவராஜர்தான் பழிதீர்த்து விட்டாரே, இன்னும் கவலை எதற்கு? அரண்மனைக்குள் புகுந்த செங்குவீரனும் உயிரோடு இல்லை. அவன் பயன்படுத்திய செம்பியன் கோட்ட மர்ம சுரங்கமும் இப்போது உயிர்ப்புடன் இல்லை. இன்னும் எதற்கு அரசே வீண் கவலை!" எனத் தெரிவித்தான் காளன். காளனது சொற்கள் இருங்கோவிற்குப் பெரும் நம்பிக்கையையும், நிம்மதியையும் அளித்தது. ஆனால் காளனது முகத்தில் பிரதிபலித்த ஆத்திரத்தையும், கண நேரத்தில் சிவந்து

போன அவனது விழிகளையும் மங்க ளான விளக்கு வெளிச்சத்தை நோக்கிக் காளன் திரும்பிவிட்டதால் மன்னரால் கவனிக்க இயலவில்லை.

உற்சாகத்துடனே"சரி, அதை விடு காளா! நடக்கப்போவதைப் பற்றிப் பேசுவோம்" எனத் தெரிவித்தார் மன்னர்.

"தங்கள் உத்தரவு அரசே!"

"நானே உன்னை அழைத்து வரச் சொல்லி கட்டளையிடலாம் என்றிருந்தேன். நீயே வந்துவிட்டாய்!"

"கட்டளையிடுங்கள் அரசே!" பணிந்தான் காளன்.

"வைதீகர் எழுதிக் கொடுத்த ஓலையுடன் நேற்றிரவு வேந்தன் வஞ்சிக்குப் புறப்பட்டான். ஆனால், இது வரை அவனிடமிருந்து எந்தத் தகவலும் கிடைக்கப்பெறவில்லை. சேரமான் பெருஞ்சேரலாதனின் கட்டளையை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்!"

“அரசே...” காளன் எதையோ கூற வாயெடுத்தான். ஆனால், அதற்குள் குறுக்கிட்ட இருங்கோவேள், “காளா, எனது எண்ணங்கள் அனைத்திற்கும் செயல் வடிவம் கொடுத்திருப்பவர்கள் வேந்தனும், சேந்தனும். முன்பொரு நாள் என் மனதில் சேந்தனைப் பற்றிய கவலை திடீரென்று சூழ்ந்து கொண்டது. ஆனால், அடுத்த நாள் முதல் சேந்தனைப் பற்றிய எந்தத் தகவலும் கிடைக்கப்பெற வில்லை. எரிந்த சென்னியின் வசந்த மண்டபத்தில் அவனும் எரிந்திருக்கக்கூடும் என்ற தகவலே கிடைத்தது. அதே போன்றதொரு கவலை இப்போது என் மனதை சூழ்ந்திருக்கிறது. வேந்தனுக்கு ஆபத்து ஏதேனும் நேர்ந்திருக்குமோ என என் மனம் அச்சப்படுகிறது” என வருந்தினார் உறைந்தை மன்னர்.

“அரசே, என்னை மன்னிக்க வேண்டும். உங்களது தீவிர சிந்தனை மற்றும் முகக் கவலையைக் கண்டு வந்த செய்தியை மறந்துவிட்டேன் நான்!”

https://telegram.me/aedahamlibra

“என்ன செய்தி காளா?”

“அரசே, நீங்கள் கவலையுற வேண்டிய அவசியமில்லை. வஞ்சியிலிருந்து செய்தி வந்திருக்கிறது.”

“என்ன வேந்தன் வந்துவிட்டானா?”

“இல்லை அரசே! அவன் வரவில்லை. ஒருவர் மூலம் செய்தி அனுப்பியிருக்கிறான். வெளியே காத்திருக்க வைத்திருக்கிறேன். தாங்கள் அனுமதி அளிக்கும் பட்சத்தில் உள்ளே அழைத்துவரச் சித்தமாக இருக்கிறேன்.”

“இது என்ன கேள்வி காளா? வஞ்சியிலிருந்து சோழ நாட்டின் அழிவுச் செய்தியைத் தாங்கி வந்திருக்கிறான் அவன். உடனே அழைத்து வா...” குதூகலமடைந்தார் மன்னர்.

“தங்கள் உத்தரவு அரசே!” என வணங்கிய காளன் வானவல்லியை அழைத்துவரச் செல்லலானான். மன்னர்

இருங்கோவேள் அவனையே ஆவலு டன் எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்.

காளனின் மனதைப் பதற்றம் முழு வதும் ஆக்கிரமித்திருந்தது. கடும் முயற்சி செய்து அது வெளியே தெரிந்துவிடாமல் அடக்கி முகத்தின் பாவனையை உற்சா கமாக மாற்றியிருந்தான். வந்திருப்பவள் ‘வானவல்லி’ என்று அறிந்தால் அடுத் தக் கணம் அரங்கேறப்போகும் காட் சிகள் என்னென்ன என்று அறிந்தே வைத்திருந்தான் காளன். தன் வாளின் மீதிருக்கும் நம்பிக்கையாலும், வானவல் லியின் திறமை மீதிருக்கும் நம்பிக்கை யாலும் ‘என்ன நடந்தாலும் நடக்கட்டும் ஒரு கை பார்த்துவிடுவோம்’ என எண் ணிக் கொண்டு பெரும் நம்பிக்கையோடு வானவல்லியை விட்டுச் சென்ற இடத் திற்குச் சென்று அவளைப் பார்த்த காள னுக்குப் பெரும் அதிர்ச்சி காத்திருந்தது. காரணம் அங்கே வானவல்லி நின்றிருக் கவில்லை.

பெரும் அதிர்ச்சியடைந்த காளன் அருகில் சுவரோடு சுவராக நின்று கொண்டிருந்த காவலனிடம், “நான் விட்டுச் சென்ற பெண் எங்கே?” என வினவினான்.

பதிலுக்கு அவன், “தலைவரே, அவள் இங்குதான் நின்று கொண்டிருந்தாள். ஆனால்....” என வார்த்தையை முழுவதும் விழுங்கினான்.

“என்ன ஆனால்? தொடர்ந்து கூறு!” மிரட்டினான் காளன்.

“யுவராஜர் வருகை தரலானார். அவரைக் கவனிக்கையில் தங்களுடன் வந்த பெண்ணைத் தவறவிட்டுவிட்டேன்!” பதறினான் காவலன்.

‘காத்திருக்க இருக்கச் சொல்லி விட்டுச் சென்ற வானவல்லியையும் காணவில்லை. வருகை தந்த யுவராஜனையும் காணவில்லை. கோட்டைக்குள் வானவல்லியை விசாரித்துக் கொண்டி

ருந்த போதே மாளிகையிலிருந்து கவனித்தவன் யுவராஜன். அவனால் வானவல்லிக்கு இடையூறு ஏதாவது ஏற்பட்டிருக்குமா?' கலங்கினான் காளன். பிறகு, 'ச்சே... ச்சே... என்ன இது எண்ணம்! வானவல்லிக்கு ஒன்றும் நேராது. வானவல்லியினால் யுவராஜனுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தால்தான் உண்டு. இந்தச் சூழ்நிலையில் என்ன நடந்தாலும் அது வானவல்லிக்குத்தான் ஆபத்து. 'எனப் பலவாறு எண்ணிய காளன் காவலர் இருவரை வானவல்லியைத் தேடப் பணித்து விட்டு அவனும் பதற்றத்துடன் வானவல்லியைத் தேடலானான்.

சோழர்களின் புராதான, பிரமாண்டமான உறைந்தைப் பட்டின அரண்மனைச் சுவர்களில் தீட்டப்பட்டிருந்த வண்ணச் சித்திரங்களினால் கவரப் பட்ட வானவல்லி அவற்றைக் கண்டு கொண்டே அவற்றின் எழிலினில் தன்னை மறந்தவள் நகரத்தொடங்கினாள். இரவின் முதல் சாமப் பொழுதின்

இரண்டாவது நாழிகையாதலால் அரண்மனையின் விளக்குகள் அனைத்தும் ஏற்றப்பட்டுச் சுடர் பரப்பிக் கொண்டிருந்தது. சுவர்களில் காணப்பட்ட காட்சிகளுக்கு விளக்கின் ஒளி உயிர்கொடுக்கக் கண்களில் காட்சிகளாகப் பரவின சோழர்குல மன்னர்களின் வீர தீரச் செயல்கள்.

ஆத்தி மாலைச் சூடி சோழ மன்னன் இளஞ்சேட்சென்னி செய்த பராக்கிரம செயல்களைக் கண்டவள் வியப்படைந்து இடையில் கையை ஊன்றிக் கொண்டு சாய்ந்தபடி ஒய்யாரமாக மெய் மறந்து நிற்கலானாள். இடையில் கை ஊன்றியபடி நின்றிருந்ததால் அவளது இடை உடலிலிருந்து நன்கு வளைந்து சிற்பத்தைப் போன்றே விளக்கொளியில் அசைவற்று நின்று கொண்டிருந்தாள் வானவல்லி. மலை நாட்டின் உடையில் அவள் அங்கு நின்றதால் அவளது அழகு சற்றுக் கூடியிருக்கவே செய்தது. அந்த ஓவியங்களைப் பார்த்து வானவல்லி மெய் மறந்திருந்தாலும் சோழ

நாட்டின் அன்றைய நிலையை எண்ணிப் பெரிதும் வருந்தவே செய்தாள். அவளது முகத்தில் அந்த உணர்ச்சிகள் நன்கு வெளிப்படவே செய்தன. வளவனார் மற் றும் திவ்யனுடன் அந்த ஓவியங்களை வானவல்லி பல முறைப் பார்த்திருந்தா லும் ஒவ்வொரு சித்திரத்தையும் பார்க் கும்போது புதிது போலவே உணர்ந்தாள். ஆதலால்தான் அவளை மறந்து என்ன பணிக்காக உறைந்தை வந்திருக்கிறோம் என்பதையும் மறந்து சித்திரத்தின் பின் னால் நகர்ந்து கொண்டிருந்தாள்.

வானவல்லி சித்திரங்களைப் பார்த் துக் கொண்டு தன்னை மறந்து நின்று கொண்டிருப்பதைப் பார்த்த காளன், 'வானவல்லி..' என அழைக்க"வா..." என அவசரத்தில் வாயைத் திறந்தான். ஆனால், அவர்கள் அரண்மனைக்குள் காவலர்கள் சூழ்ந்த இடத்தில் இருப்பதை உடனே உணர்ந்த காளன், 'வா' எனும் நெடில் எழுத்தை 'வ' எனக் குறிலாகச் சுருக்கி"வந்த வேலையை விட்டு இங்கே

https://telegram.me/aedahamlibrary

என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என அதிகாரத்துடன் அந்தக் மாளிகையே அதிரும்படி வினவலானான்.

காளனின் அதிகாரக் குரலைக் கண்ட வானவல்லி காளனிடம் ஓடிவந்து பதற்றத்துடன், "மன்னிக்க வேண்டும் கோட்டைத் தலைவரே! சித்திரங்களைப் பார்த்து என்னை மறந்து போய்விட்டேன்! மன்னரைச் சந்தித்து அனுமதி பெற்று விட்டீர்களா?" எனச் சாமர்த்தியத்துடன் நிலைமையைப் புரிந்து கொண்டு வினவினாள்.

"ம்ம்ம்... அனுமதி பெற்றுவிட்டேன். முன்னால் செல்!" கட்டளையிட்டான் காளன். வானவல்லி எந்த மறுப்பையும் கூறாமல் முன்னே செல்லலானாள். காளன் ஒருமுறை அவ்விடத்தைப் பார்வையால் ஆராய்ந்தான். அப்போது வானவல்லி நின்ற இடத்திலிருந்து மூன்றாவது தூணுக்கருகில் யாரோ மறைந்திருப்பது விளக்கொளியின் நிழ

https://telegram.me/aedahamlibrary

லில் தெளிவாக அவனுக்குத் தெரிந்தது. தூணுக்குப் பின்புறம் மறைந்து வானவல்லியை நோட்டம் விட்டுக் கொண்டிருந்தது யுவராஜன்தான் என்பதைக் காளனால் அறிய அதிக நேரம் பிடித்திருக்கவில்லை. கோபம் தலைக்கேறினாலும் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு வானவல்லியைப் பின்தொடர்ந்து மன்னரிடம் செல்லலானான்.

அந்தரங்க ஆலோசனை மண்டபத்திற்குள் காளனும், காளனைத் தொடர்ந்து மலை நாட்டுப் பெண்ணைப் போன்று மாறுவேடமிட்டிருந்த வானவல்லியும் செல்லலானார்கள். வானவல்லியைப் பார்த்த இருங்கோவேள் திகைப்புடன் காளனை நோக்கி, “காளா, வேந்தன் யார் மூலமாகவோ செய்தி அனுப்பியிருக்கிறான் எனக் கூறினாய். ஆனால், ஒரு பெண்ணை அழைத்து வந்திருக்கிறாய். அதுவும் இவள் பார்ப்பதற்கு எங்கள் மலை நாட்டுப் பெண் போன்ற சாயலில்

அல்லவா இருக்கிறாள்?” எனக் குழப்பத் துடன் வினவினார்.

“அரசே, வேந்தன் இந்தப் பெண் மூலமாகவே செய்தியை அனுப்பியிருக் கிறான்” எனக் கூறிக் கொண்டி ருந்த போதே இடைமறித்த வானவல்லி, “ஆமாம் அரசே! தங்களது யூகம் முற்றி லும் சரியே! நான் தங்களது மலை நாட் டைச் சேர்ந்தவள் தான்!” எனப் பணிவு டன் தெரிவித்தவள் அவருக்குப் பணிந்து தனது வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டாள்.

‘மலை நாடு’ எனக் கேட்டதும் பெரும் ஆர்வமடைந்த இருங்கோ வேள், “மலை நாட்டைச் சேர்ந்தவளா நீ?” என உரிமையுடன் வினவலானார்.

“ஆமாம் அரசே!”

“நீ யார்?”

“..........”

https://telegram.me/aedahamlibra

"வேந்தனுக்கு உன்னை எப்படித் தெரியும்?"

"..........."

"பதில் கூறு!" கட்டளையிட்டார் இருங்கோவேள்.

"அரசே, அவரது அத்தை மகள் தான் நான்!" கீழே குனிந்து கொண்டே பதிலளித்தாள் வானவல்லி.

"அவரது அத்தை மகளா?"

"ஆம்!"

"யார் அவர்?"

"தங்களது ஊழியர்?"

"எனது ஊழியனா?" குழப்பத்துடனே காளனைப் பார்த்தபடி வினவினார் இருங்கோவேள்.

"அரசே, இவள் வேந்தனைக் குறிப்பிடுகிறாள் எனக் கருதுகிறேன் நான்" எனத் தெரிவித்தான் காளன்.

“வேந்தனது அத்தை மகள் என்று குறிப்பிடவேண்டியது தானே!” சிரித்த படி வினவினார் உறைந்தை மன்னர் இருங்கோ.

“..........”

“அரசே, வேந்தன் இவளது மாமா என்பதால் பெயரைச் சொல்ல வெட்கப் படுகிறாள் என்று நினைக்கிறேன்! அப் படித்தானே மின்னல்?” அருகில் நின்ற வானவல்லியை நோக்கியபடி வினவலா னான்.

“மின்னலா?” வியப்புடன் வினவி னார் உறைந்தை மன்னர் இருங்கோ வேள்.

“ஆம் அரசே! இவளது பெயர் அது தான்!” எனத் தெரிவித்தான் காளன்.

இருங்கோ சிரித்தபடியே, “வேந்தன் ஒருமுறை என்னிடம் எனக்கு அத்தை மகள் ஒருத்தி இருக்கிறாள். அவள் பெரும் அழகுடையவள் எனக் குறிப்

பிட்டிருக்கிறான். சில முறை அவளைச் சந்திக்கவும் அனுமதி கேட்டிருக்கிறான். ஆனால், கடும் பணியின் காரணமாக அவனை என்னால் மலை நாட்டிற்கு அனுப்ப இயலவில்லை. அந்தப் பெண் நீ தானா? பெயருக்கேற்ற படியே தான் உன் விழிகளும் இருக்கின்றன!" என மின் னலின் விழிகளில் தனது பார்வையை நிலைக்க வைத்துக் கொண்டு தெரிவித் தார் மன்னர்.

மின்னல் எந்தப் பதிலையும் கூறா மல் அமைதியாக நின்று கொண்டிருந் தாள்.

"நீ மட்டும் தனியாகவா வந்திருக் கிறாய்?" வியப்புடன் வினவினார் இருங் கோவேள்.

"ஆமாம் அரசே தனியாகத்தான் வந்திருக்கிறேன்! வஞ்சியில் சேரமான் பெருஞ்சேரலாதனும், உறைந்தையில் தாங்களும் அமர்ந்து காவல் இருக்கை

யில் எங்களை யாரால் துன்புறுத்த இயலும்?" என வினவினாள் மின்னல்.

இருங்கோ பெருமையாகத் தனது பெரும் மீசையை நீவிவிட்டுக் கொண்டார்."இரு நாட்டுக் காவல் வீரர்களும் இரவு பகல் பாராமல் காவல் காத்துக் கொண்டு இருக்கிறார்கள். இருப்பினும் ஏதாவது ஆபத்து நேர்ந்திருந்தால் என்ன செய்திருப்பாய் நீ? தற்காப்பிற்குக் கூட ஆயுதம் இல்லாமல் உன்னால் என்ன செய்திருக்க இயலும்?"பெரும் அக்கறையுடன் வினவினார்.

"என்னிடம் தற்காப்பு ஆயுதம் இல்லை என்று யார் அரசே கூறியது?"

உறைந்தை மன்னர் இருங்கோவின் விழிகள் இருண்டும் வியப்பில் அகல விரிந்தன."நடு வனத்தில் உன்னை யாராவது இடை மறித்திருந்தால் உன்னால் என்ன செய்திருக்க இயலும்?"

"அவர்களைக் கொன்றிருப்பேன் அரசே!"

"என்ன கொன்றிருப்பாயா?" என வியப்புடன் வினவியவர் பிறகு சிரித்தபடியே, "மின்னலைப் போன்று விட்டு விட்டு வெட்டும் உனது விழிகளாளா?" என விஷமத்தனத்துடனும் வினவலானார்.

தனது கொண்டையில் செருகியிருந்த பூச்சரத்தை எடுத்தவள் அதைத் தாங்கிக் கொண்டிருந்த இரண்டு குச்சிகளை வெளியே இழுத்தாள் மின்னல். கொண்டை அவிழ்ந்து அவளது கூந்தல் சரிந்து கீழே விழுந்தன. கருப்பு அருவி அவளது தலையிலிருந்து உருவாகி கீழே விழுவதைப் போன்று விழுந்த அவளது கூந்தல் அறைக்குள் ஊடுருவிய நந்தவனத்தின் தென்றலினால் அலை அலையாய் அடித்துச் சென்றது. இடையையும் தாண்டி வளர்ந்திருந்த அவளது கூந்தலைக் கண்ட மன்னர் 'நம் மலை நாட்டிலும் இப்படிப்பட்ட கருங்கூந்தலுக்

குச் சொந்தமான பெண்கள் இருக்கிறார்களா?' என வியந்து போயிருந்தார். அவருக்கு அந்த அதிர்ச்சி மட்டும் போதாது என்று அடுத்த அதிர்ச்சியையும் அளித்தாள் மின்னல்.

மலர்ச் சரத்தைத் தாங்கிக் கொண்டிருந்த அந்த இரண்டு குச்சிகளிலிருந்தும் இரண்டு கைப்பெயர் ஊசிகளை வெளியே எடுக்கலானாள். சுருட்டியிருந்த மலர்ச் சரத்தைப் பிரித்தாள். மன்னர் திகைப்புடன் அதைக் கவனிக்கலானார். இனம் அறியப்படாத பட்டை ஒன்றை வட்ட வடிவில் அந்தச் சரத்திற்குள் மறைத்திருந்தாள். அந்த வட்ட வடிவப் பட்டையின் மையத்தில் கட்டை விரலால் அழுத்தினாள். அடுத்தக் கணம் அந்தப் வட்டப் பட்டையிலிருந்து நான்கு சிறு சிறு கூர்மையான கத்திகள் வெளிப்பட்டன. அந்தப் பட்டையை வளைத்து நேராக்கினாள்."வளரி" என்று முணுமுணுத்துக் கொண்டார் மன்னர்.

இரண்டு கைப்பெயர் ஊசிகள், ஒரு வளரி என மூன்றையும் மன்னரிடம் காட்டிய மின்னல், "அரசே, இந்தச் சிறு ஆயுதங்களால் என்னை எதிர்ப்பவர்களை என்னால் கொல்ல இயலாதா?"என வினவலானாள்.

முன்பொருநாள் சம்பாவதி வனத்தில் வானவல்லியின் குறுவாளால் தனது வலது தோளில் ஏற்பட்ட காயத்தின் தழும்பைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான் காளன்.

"இதனைச் சரியாகப் பயன்படுத்தினால் இருவரை மட்டுமல்ல நால்வரை கூடச் சாய்க்கலாம்!" அதிர்ச்சியுடன் தெரிவித்தார் உறைந்தை மன்னர் இருங்கோவேள்.

மீண்டும் தனது கூந்தலை வாரிக் கொண்டை போட்டவள், அந்த மூன்று ஆயுதங்களையும் தனது கொண்டையில் சொருகி மலர்ச் சரத்தினால் மறைத்துக் கொண்டாள்."அரசே, தற்காப்பு முறை

களை எனக்கு என் தமையனும், அத்தானும் குறைவின்றிக் கற்றுக்கொடுத்திருக்கிறார்கள். மனதிலும் தைரியம் இருக்கிறது. நான் எதற்கு அரசே இருளையும், கள்வர்களையும் கண்டு அச்சப்பட வேண்டும்! என்னைப் பொறுத்தவரையில் பகல் எப்படியோ அப்படித்தான் இரவும். அதைப் போன்றதுதான் பகைவர்களின் கோட்டையும்!" எனத் திடமாகத் தெரிவித்தாள் மின்னல். அவள் 'தமையன்', 'அத்தான்' என்று யாரை மறைமுகமாகக் குறிப்பிடுகிறாள் என்பதைக் காளன் நன்கு அறிந்திருந்தான்.

இருங்கோவின் சொந்த நாடான மலை நாட்டுப் பெண்ணின் வீரத்தையும், திறத்தையும் கண்டு வியந்த இருங்கோ, "எங்கிருந்து வருகிறாய் நீ? வேந்தன் வஞ்சிக்கு அல்லவா சென்றிருந்தான். மலை நாட்டிலிருக்கும் உன்னால் வேந்தனை எப்படிச் சந்திக்க முடிந்தது" என அடுத்தடுத்து வினவினார்.

"அரசே, தங்கள் ஊழியரை நான் வஞ்சியில்தான் சந்தித்தேன்."

"நீ எதற்காக வஞ்சிக்கு சென்றாய்?"

"பஞ்சம் பிழைப்பதற்காக அரசே!"

"என்ன? பஞ்சம் பிழைப்பதற்கா?"

"ஆம்!" வருத்தமாகத் தனது பதிலைத் தெரிவித்தாள் மின்னல்.

இருங்கோவின் விழிகள் இரண்டும் அந்தப் பதிலைக் கேட்ட அக்கணத்திலேயே சிவந்து விட்டன."எனது நாட்டில் பஞ்சமா? என் நாட்டு மக்கள் பஞ்சத்தில் தவிக்கையிலா நான் உறைந்தை அரியாசனத்தில் அமர்ந்து சோழ நாட்டைச் சீரும் சிறப்புமாக ஆட்சி செலுத்திக் கொண்டிருக்கிறேன்?"வருத்தத்துடன் வினவினார் இருங்கோ.

"அரசே, தங்கள் ஆட்சியிலும் சரி. தங்களது மேற்பார்வையில் இப்போது மலைநாட்டில் நடந்து கொண்டிருக்கும்

ஆட்சியிலும் சரி. மக்கள் வளமாகவே இருக்கிறார்கள். மாதம் தவறாமல் மாரி பொழிந்து பூமியை வளப்படுத்துகிறது. அனைவரும் மகிழ்ச்சியாகவே இருக்கி றார்கள். ஆனால்...”

“என்ன ஆனால்? விரைந்து கூறு!” கட்டளையிட்டார் உறைந்தை மன்னர் இருங்கோ.

“அரசே, எங்கள் குடும்பத்தில் உழைக்கும் மனிதர்கள் என் தமைய னும், அவரும்தான்! அவர்கள் இருவரும் மலை நாட்டில் வசித்தவரை எங்களுக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை. அவர் கள் எப்போது உறைந்தைக்கு வருகை தந்தார்களோ, அப்போதிலிருந்து தங்கள் சேவையில் அவர்கள் குடும்பத்தை மறந் துவிட்டார்கள். அவர்களிடமிருந்து எந்த உதவியும் கிடைக்கவில்லை. என் தமை யனைப் பற்றிய தகவல் சுத்தமாக அற் றுப்போய் விட்டது. அவரைத் தொடர்பு கொள்வதும் இயலாத காரியமாகிவிட்

டது. அவரும் எங்களை மறந்துவிட்டார். மலை நாட்டில் நான் செய்வித்த எனது கைவினைப் பொருட்களை வஞ்சியில் விற்று பொருள் ஈட்டலாம் என்று அங் குச் சென்றேன். அப்போதுதான் அவ ரைச் சந்திக்க முடிந்தது. உங்களுடன் வந்த என் தமையன் சேந்தன் எங்கே என்று அவரிடம் வினவினேன் நான். எந் தப் பதிலையும் அவர் தெரிவிக்காமல், என்னை உறைந்தைக்கு அனுப்பிவிட் டார்" எனத் தெரிவித்தபோது அவளது குரல் உடைந்து வெளிப்பட்டது. அவளது விழிகளின் ஓரத்தில் துளிக் கண்ணீரும் கசிந்து கொண்டிருந்தது.

காளன் அவளையே ஆச்சர்யத்து டன் பார்த்துக் கொண்டிருந்தான்.

"சேந்தனது தங்கையா நீ?"

"ஆமாம் அரசே! அவரது தங்கை தான் நான். அவர் எங்கிருக்கிறார் என்று தங்களுக்காவது ஏதேனும் தெரியுமா?" அவசரத்துடன் வினவினாள் மின்னல்.

அவளது வினவலில் இருந்த எதிர் பார்ப்பைக் கண்டு மனம் உடைந்த மன்னர் இருங்கோவேள் எந்தப் பதிலையும் கூறாமல் அவளது முகத்தைப் பார்க்க இயலாமல் தரையை நோக்கித் தாழ்த்திக் கொண்டார்.

பல காலங்களாக வேந்தனும், சேந்தனும் எந்தவித உதவியும் குடும்பத்தின் பொருட்டுப் பெற்றுக்கொள்ளவில்லை என்பது அவரது நினைவிற்கு வந்து அவரை வருத்தியது. அதுவும் வேந்தனும், சேந்தனும் உறவு முறை என்பதை அவர்கள் இருவரும் மன்னருக்குத் தெரிவித்திருக்கவே இல்லை. சிந்தனை வசப்பட்டு வருந்திக் கொண்டிருந்தார் இருங்கோவேள்.

“அரசே, என் தமையன் சேந்தனைப் பற்றிய தகவல் தங்களுக்கு ஏதாவது தெரியுமா?” என மீண்டும் வினவினாள் மின்னல்.

“அவன்... அவன்....” தடுமாறினார் இருங்கோ.

“அரசே, தயக்கம் வேண்டாம். எது வானாலும் தாங்கள் தயக்கமின்றித் தெரி விக்கலாம்!”

“என்னை மன்னித்துவிடு மின்னல். அவன் இறந்திருப்பான் என்று கருதுகி றோம். உண்மைத் தகவலை எங்களாலும் அறிந்துகொள்ள இயலவில்லை!”

சிறிது நேரம் தலையைத் தொங்க போட்டுக் கொண்டே கீழே பார்த்தபடியே வருத்தத்துடன் நின்று கொண்டிருந்தாள் மின்னல். பிறகு சேலைத் துணியின் முந் தானையால் தனது கண்களைத் துடைத் துக் கொண்டவள், “குடும்பத்தை மறந் தவரைப் பற்றி எனக்கு எந்தக் கவலை யும் இல்லை அரசே! அவர் திரும்பினால் என்ன திரும்பாவிட்டால் என்ன? எதுவும் எங்கள் வாழ்வில் மாறப்போவதில்லை. தாங்கள் உங்களது அந்தரங்க ஊழியரின் செய்திக்காகக் காத்திருக்கிறீர்கள் என்று

கருதுகிறேன் நான்! தாங்கள் இசைந்தால், வந்த பணியை நிறைவேற்றச் சித்தமாக இருக்கிறேன்."

"ம்ம்ம்... அப்படியே ஆகட்டும்!" எனக் கூறிய மன்னர் தனது கையை நீட்டினார். பாதுகாப்பாக மறைத்து வைத்திருந்த வேந்தனது முத்திரை மோதிரத்தை எடுத்து இருங்கோவின் கைகளில் வைத்தாள் மின்னல். அதை அதிர்ச்சியுடன் பார்த்த இருங்கோ, "மின்னல், நான் உன்னிடம் எதிர்பார்த்தது வேந்தனது ஓலையை. அவனது முத்திரை மோதிரத்தை அல்ல! ஓலை எங்கே?" என வினவினார் உறைந்தை மன்னர் இருங்கோவேள்.

"அரசே, அவர் என்னிடம் இந்த முத்திரை மோதிரத்தை அளித்து வாய் வழி மூலமாகவே செய்தியைப் பரிமாறினார். ஓலையைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை!" எனத் தெரிவித்தாள் மின்னல்.

https://telegram.me/aedahamlibra

திடீரென்று இருங்கோவின் முகம் இருண்டது. மலை நாட்டுப் பெண்ணான மின்னலை சந்தேகத்துடன் பார்த்தார் அவர்."வேந்தன் இதுவரை வாய் மொழி யாக எந்தச் செய்தியையும் அனுப்பியி ருக்கவில்லை. ஓலையினால் மட்டுமே அவன் செய்தியைப் பரிமாறுவான். எங் களது சங்கேத வழக்கும் இதுவே! யார் நீ? உண்மையைக் கூறு. சோழ இள வரசனுக்கு ஆதரவாக ஒற்றறிய வந்த பெண்ணா நீ. மலை நாட்டில் பிறந்த நீ, உன் அரசனுக்கு எதிராகவே நீ குற்றமி ழைக்கத் துணிந்திருக்கிறாய். வேந்தனது முத்திரை மோதிரம் உனது கைகளுக்கு எப்படிக் கிடைத்தது. அவனை நீ என்ன செய்தாய்? உண்மையைக் கூறு! யார் நீ?" என அந்த அரங்கமே அதிரும்படி ஆத் திரத்தில் கத்தினார் உறைந்தை மன்னர் இருங்கோ.

அதுவரை அவர்களின் உரையா டலை மறைந்து கவனித்துக் கொண்டி ருந்த யுவராஜன் வெளிப்பட்டு, "அரசே,

உங்களது கேள்விக்கான பதிலை நான் கூறுகிறேன்!" எனக் கூறிக் கொண்டு வந்தவன் எந்தவித அச்சமும் இன்றிச் சலனத்துடன் நிற்கும் மின்னலின் கழுத்தில் தனது வாளினை வைத்தான்.

சலனமில்லாமல் அந்த வாளையும், அவனது விழிகளையும் மாறி மாறிக் கவனித்த மின்னல் பிறகு அவனது விழிகளைத் தனது பார்வையால் ஊடுருவி நோக்கினாள்.

கண நேரத்தில் அங்கு நிகழ்ந்து விட்ட மாற்றங்களைக் கண்ட காளன், 'இனி பொறுப்பதற்கில்லை'என நினைத்துக் கொண்டு வாளினை நோக்கித் தனது கையைக் கொண்டு செல்லலானான்.

https://telegram.me/aedahamlibra

# 19.

# வானவல்லியும் மின்னலும்

என்ன நடந்தது என்பதை அறியாமல் வந்ததும் வராததுமாக வாளினை உருவி மின்னலின் கழுத்தில் வைத்திருக்கும் தனது மகன் யுவராஜனைக் கண்ட இருங்கோவேள் கடும் கோபத்துடன், “யுவராஜா, என்ன துணிச்சல் உனக்கு?” என அதட்டலானார். அவரது கோபத்திற்குக் காரணம் இல்லாமல் இல்லை. ‘செங்குவீரனைக் கைது செய்கிறேன்’ எனப் புகார் சென்றவன் குருதிக் கறைகளுடன் தோல்வியு

டன் திரும்பி வந்தான். வஞ்சியில் வள வனார் மகள் வானவல்லியைச் சிறை பிடித்துப் பெரும் அவப்பெயரைத் தேடி அவரது திட்டங்கள் அனைத்தையும் தகர்த்தெறிந்தான். தெரிந்தோ தெரியா மலோ அவன் செய்த நல்ல காரியங்க ளுள் ஒன்று குணக் கடலில் திவ்யனை யும், கொற்கை குமரிக் கடலில் செங்கு வீரனையும் மூழ்கடித்துக் கொன்றது மட் டுமே.

அதிலும் காளன் உறைந்தைக் கோட்டைத் தலைவனாகப் பொறுப்பேற் றுக் கொண்ட பிறகு முற்றிலும் மாற்றப்பட் டுவிட்ட பாதுகாப்பு முறைகளைக் கண்ட உறைந்தை மன்னர், 'காளனிடம் உள்ள தைப் போன்ற திறமை தன் மகனுக்கும் இருந்திருந்தால் என்றோ தமிழகத்தைத் தனது கைக்குள் கொண்டு வந்திருக்க லாம்' என்று வருத்தப்பட்டுக் கொண்டி ருந்தார்.

யுவராஜனின் செயல்கள் மீது இருங்கோவேளிற்குப் பெரும் வெறுப்பு இருந்தாலும் அதை மற்றவர்கள் முன்பு காட்டிக்கொள்ள விரும்பாத இருங்கோ,

https://telegram.me/aedahamlibra

"யுவராஜா, நம் அரண்மனைக்குத் தூது தகவலோடு வேந்தனிடமிருந்து வந்தி ருக்கும் சேந்தனின் தங்கையிடம் உன் வாளினை உயர்த்துவது சரி அல்ல. நான் தான் விசாரித்துக் கொண்டிருக்கிறேன் அல்லவா?" என வினவினார்.

"தந்தையே கோபம் வேண்டாம்! இவள் யார் என்று நான் கூறுகிறேன்!" என இருங்கோவிடம் கூறிவிட்டு மின்ன லைப் பார்க்கலானான்.

அவளும் அவனது வாள் தனது கழுத்தில் வைக்கப்பட்டிருப்பதைப் பற் றியோ அல்லது அவர்களுக்கு ஏற்பட் டிருக்கும் திடீர் சந்தேகத்தைப் பற் றியோ எந்தவித கவலையும் கொள்ளா மல் அமைதியான முகத்துடன் சிறு புன் னகையை வரவழைத்துக் கொண்டு யுவ ராஜனின் விழிகளில் தனது பார்வையை நிலைக்கவிட்டாள்.

அவளது பார்வையிலிருந்து தனது விழிகளை விலக்கிக்கொள்ளாத யுவரா

ஜன்" அகப்பட்டுக் கொண்டோம் என்ற அச்சம் உனக்கு இல்லையா?" என வின வினான்.

"அச்சமா?"எனப் பதிலுக்கு வினவி னாள் மின்னல்.

"ஆம்!"

"யாரைக் கூறுகிறீர்கள் யுவராஜரே!"

"உன்னைத் தான்!"

"எனக்களித்திருக்கும் பணியைச் செய்வதில் நான் எதற்கு அச்சப்பட வேண்டும்?"

"சரி, வேந்தன் எங்கே?"

"அவர் எங்கே என்று மன்னருக்குத் தான் தெரியும்!"

"மன்னருக்கா?" என்றபடியே அவளது கழுத்தில் வைத்திருந்த தனது வாளினை நீக்கியபடியே உறைந்தை மன்னர் இருங்கோவைக் கவனித்த வன்."தந்தையே, வேந்தன் எங்கே?

https://telegram.me/aedahamlibra

அவனை வஞ்சியிலிருந்து எங்காவது அனுப்பியிருக்கிறீர்களா?” என வினவவும் செய்தான் யுவராஜன்.

“இல்லையே! நான் வஞ்சிக்குத் தான் அனுப்பினேன். வஞ்சியிலிருந்து அவனைத்தான் நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். இதோ, நம் அரண்மனைக் காவலர் காளனிடம் வேண்டுமானால் நீயே கேட்டுப் பாரேன்! சற்றுமுன் நாங்கள் வேந்தனைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தோம்!”

யுவராஜனின் விழிகள் காளனின் விழிகளை நோக்கின. அவர்கள் இருவரின் சந்தேகத்தையும் வானவல்லி திசை மாற்றி விட்டதைக் கண்ட காளன் உள்ளூர மகிழ்ந்தான். அதை முகத்தில் காட்டிக்கொள்ளாமல், “ஆம் யுவராஜா! சற்று முன் மன்னர் வேந்தனைப் பற்றித்தான் கவலைப்பட்டுக் கொண்டு அவனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால்...” எனக் கூறிக் கொண்

டிருந்த போதே இடைமறித்த யுவராஜன், “ஆனால்... வஞ்சியிலிருந்து வேந்தனுக்குப் பதில் இந்த வஞ்சிக்கொடி வருகை தந்திருக்கிறாள். அப்படித்தானே!” எனக் குறுக்கிட்டு நகைக்கலானான்.

“ஆமாம்!” என்றான் காளன்.

அப்போது குறுக்கிட்ட மின்னல், “அரசே, எனக்கொரு ஐயம்?” என்றாள்.

“என்ன?”

“அவரை வஞ்சிக்கு அனுப்பியவர் தாங்கள்தானா?” எனச் சந்தேகத்துடன் வினவினாள்.

“நான்தான் அனுப்பினேன். அதில் உனக்கு என்ன சந்தேகம்?” அதட்டலுடன் வினவினார் மன்னர்.

“மன்னிக்கவும் அரசே! அதை என்னால் ஏற்றுக்கொள்ள இயலாது. அவரை உறைந்தையிலிருந்து வஞ்சிக்கு அனுப்பியவர் நீங்களாக இருந்திருந்தால் அவர்

எங்கே சென்றிருக்கிறார் என்பதையும் தாங்கள் நிச்சயம் அறிந்திருப்பீர்கள்!"

"எங்கே சென்றிருக்கிறான் மின்னல்?"

"அவர் கூடலுக்குச் சென்றிருக்கிறார்!"

"கூடலுக்கா?"

"ஆம்!"

"அங்கு எதற்காகச் சென்றிருக்கிறான்?"

"அதைத் தாங்கள்தான் அறிவீர்கள். எனக்கு அதைப்பற்றி எதுவும் தெரியாது!"

அப்போது குறுக்கிட்ட காளன், "வஞ்சியிலிருந்து கூடலுக்குச் செல்லும் வழியில் தானே உறைந்தையும் அமைந்திருக்கிறது. அவன் கூடலுக்குச் செல்லும்போது உறைந்தைக்கு வந்து சென்

றால், அப்படியொன்றும் காலம் வீணாகிவி டாதே!”

“ஆமாம் கோட்டைத் தலைவரே! நானும் அவரிடம் இதே கேள்வியைத் தான் வினவினேன். ஆனால் அவர் ‘கூட லுக்குச் சென்று பாண்டிய மன்னர் தென் னவரைச் சந்தித்த பிறகு தான் உறைந் தைக்கு வர வேண்டும் என்ற கட்டளை இருக்கிறது’ எனத் தெரிவிக்கலானார்.”

“நான் அப்படி எந்தக் கட்டளை யையும் அவனுக்கு விதிக்க வில்லையே! பெண்ணே, நீ யார்? வேந்தனை என்ன செய்தாய்?” எனக் கோபத்துடன் வின வினார் இருங்கோ. அவரது வினவலில் வேந்தனைப் பற்றிய கவலையும் சூழ்ந்தி ருந்தது.

“அரசே, மீண்டும் வினவுகிறேன் நான். அவரை உறைந்தைக்கு அனுப்பி யவர் யார்?”

https://telegram.me/aedahamlibra

"எத்தனை முறை இதே கேள்வியை நீ கேட்பாய்?" வெகுண்டெழுந்தார் உறைந்தை மன்னர் இருங்கோவேள்.

"நான் எதிர்பார்க்கும் பதில் எனக்குக் கிடைக்கும் வரை அல்லது நான் தங்களது மலை நாட்டு விசுவாசி என்பதைத் தாங்கள் புரிந்துகொள்ளும் வரை!" நிதானமாகவும் அதே சமயம் உறுதியாகவும் பதிலளித்தாள் மின்னல்.

இருங்கோ அங்கு நின்ற மூவரையும் குழப்பத்துடன் பார்க்கலானார். வந்தது ஆண்மகன் என்றிருந்தால் அவனது கழுத்தைத் திருப்பி உண்மையைப் பெற்றிருப்பார் இருங்கோ. ஆனால், வந்திருப்பது பெண்பிள்ளை. அதே சமயம் சேந்தனின் தங்கை என்று கூறியிருப்பதால் சற்றுத் தயங்கவே செய்தார்.

அவரது முகத்தில் தோன்றியிருக்கும் குழப்பத்தைக் கவனித்த காளன், "அரசே, வேந்தனை வஞ்சிக்குச் செல்லும்படி பணித்ததும், ஓலை எழு

https://telegram.me/aedahamlibra

திக் கொடுத்ததும் வைதீகர் தானே! அவர் அவனுக்குப் பிரத்தியேக கட்டளை எதையாவது வழங்கியிருக்கலாம் அல்லவா?" என்றான்.

இருங்கோ காளனையும் மின்னலையும் மாறி மாறிப் பார்த்தார்.

அவர்களின் உரையாடலை அது வரை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த யுவராஜன், "யார் அங்கே!" என அந்த ஆலோசனைக் கூடமே அதிரும்படி சற்றுச் சத்தமாக அழைத்தான்.

உடனே மூன்று காவலர்கள் ஆலோசனைக் கூடத்திற்குள் ஓடி வந்து அவனுக்கு முன் பணியலானார்கள்.

அவர்களிடம், "உடனே வைதீகரின் மாளிகைக்குச் சென்று அவரை அழைத்து வாருங்கள்!" எனக் கட்டளையிட்டான்.

கண நேரம் கூடத் தாமதிக்காமல் காவலர்கள் உடனே அங்கிருந்து கட்ட

https://telegram.me/aedahamlibra

ளையை நிறைவேற்றப் புறப்பட்டுச் செல்லலானார்கள்.

"அரசே, வைதீகர் வருகை தரட்டும்! அவரது கட்டளைக்கும், நான் கூறுவதற்கும் ஏதேனும் முரண்பாடு தோன்றினால் தாங்கள் எனக்கு எந்தத் தண்டனையையும் அளிக்கலாம்! சிரம் தாழ்ந்து அதனை ஏற்றுக்கொள்ளச் சித்தமாக இருக்கிறேன். மலை நாட்டின் உயர்வே எனது உயர்வும்!" எனப் பணிந்தாள் மின்னல்.

அங்குச் சிறிது நேரம் பெரும் அமைதி நிலவியது.

அந்த அமைதியைக் குலைத்தபடி, "தந்தையே நம் மலை நாட்டுப் பெண்களின் அசாத்திய துணிவைக் கண்டால் எனக்குப் பெருமையாக இருக்கிறது?" என்றான் யுவராஜன்.

"அசாத்திய துணிவென இப்போது நீ எதனைக் குறிப்பிடுகிறாய்?"

“தனியொருத்தியாக வஞ்சியிலிருந்து வந்தது மட்டுமல்லாமல் எனது வாளினைத் தனது கழுத்தில் தாங்கியும் எந்த வித அச்சமோ அல்லது சலனமோ இல்லாமல் தைரியமாக நிற்கிறாளே! இப்பெண்ணின் தைரியத்தைக் கண்டு வியக்கிறேன் நான்!” எனப் பெருமை கொண்டான் யுவராஜன்.

“இவள் நம் சேந்தனின் தங்கை அல்லவா! அவனது தங்கை மின்னல் தைரியமாக இருப்பது ஆச்சர்யப்படுவதற்கில்லை. மாறாக இவள் தைரியமில்லாமல் இருந்தால் தான் நாம் ஆச்சர்யப் பட வேண்டும்!” எனச் சிரித்தபடியே தெரிவித்தான் காளன்.

“சரியாகக் கூறியிருக்கிறாய் காளா! இருந்தும் நமது பிரம்மாயர் வருகை தரட்டும். அவர் வந்த பிறகே எனது மனதிற்குத் தெளிவு கிடைக்கும்!”

"சரி, வேந்தன் கூறியனுப்பியத் தகவல் என்ன? மன்னரிடம் அதைத் தெரிவி!" கட்டளையிட்டான் காளன்.

"மன்னர்தான் அவரது பிரம்மாயர் வருகை தரட்டும் என்கிறாரே! அவரும் வந்துவிடட்டுமே!" எனத் தெரிவித்தாள் மின்னல்.

மீண்டும் அங்குச் சிறிது நேரம் அமைதி நிலவியது. மீண்டும் அந்த அமைதியைக் குலைத்த யுவராஜன், "வஞ்சியில் இதே போன்றதொரு சூழ் நிலையில் ஒருத்தியைச் சந்தித்திருக்கி றேன் காளா!" என்றான்.

"வஞ்சியிலா?" என வினவினான் காளன்.

"ஆம்!"

"யாரைக் குறிப்பிடுகிறீர்கள்?"

"வானவல்லியைத் தான் குறிப்பிடு கிறேன்!"

"இப்போது எதற்கு அதனை நினைவுபடுத்திக் கொள்கிறாய் யுவராஜா?"

"அவசியம் வந்திருக்கிறது."

"அவசியம் வந்துவிட்டதா?"

"ஆம்!"

"அந்த அவசியம் என்ன என்பதை நாங்களும் அறிந்துகொள்ளளாமா?"

"நிச்சயமாக!" எனத் தெரிவித்த யுவராஜன் தனக்கெதிரில் நின்ற மின்னலைப் பார்த்தபடியே, "அன்று அப்பெண்ணை நான் சிறை பிடித்தபோது அவளது முகத்தில் தோன்றியிருந்த பயத்தையும், அதிர்ச்சியையும் இப்போதும் என்னால் நினைவு படுத்திக்கொள்ள முடிகிறது! ஆனால், எனது உறைவாளினை இவளது கழுத்தில் வைத்தும் எந்தவித சலனமும் இல்லாமல் நிற்கிறாளே, இந்த மின்னலின் தைரியத்திற்கு முன் அந்த வானவல்லியின் தைரியம் எம்மாத்திரம்?"

"யார் வளவனார் மகளையா குறிப் பிடுகிறாய்?"

"ஆம்! அவளைத் தான் குறிப்பிடு கிறேன். வளவனாருக்குப் பிறந்திருக்கி றாள் என்பதற்காக அவளும் வளவனா ரைப் போன்றே தைரியமாகவும், திறமை யாகவும் இருக்க இயலுமா என்ன?"

"தாங்கள் கூறுவதும் சிந்திக்கும்படி தான் இருக்கிறது!" எனத் தனக்கு வலப் புறமாக நின்ற மின்னலைப் பார்த்தபடியே தெரிவித்தான் காளன்.

"சிந்திக்கும்படி இருக்கிறதா?" சற் றுக் கோபத்துடன் வினவினான் யுவரா ஜன்.

"ஆம்!"

"அப்படியெனில் நான் பொய் உரைக்கிறேன் எனத் தாங்கள் எண்ணு கிறீர்களா தலைவரே?"

"நிச்சயமாக இல்லை. தாங்கள் கூறுவது பொய் எனக் கருத நான் யார்? தாங்கள் கூறும் அதே பெண்ணை நானும் புகார் சம்பாபதி வனத்தில் சந்தித்திருக் கிறேன், முன்பு நான் புகாரில் கள்வனா கச் சுற்றிய சமயத்தில். இரவு இரண்டாவது சாமம். அவளும் அவளது தோழியைத் தவிர யாரும் இல்லை. அவர்களுக்குத் துணையாக வந்த காவலர்கள் அனைவ ரும் எனக்கு முன் மண்டியிட்டபடி உயிர் பிச்சை வேண்டிக் கொண்டிருந்தார்கள். ஆனால், அந்தச் சூழ்நிலையிலும் அவள் என்ன செய்தாள் தெரியுமா?"

"என்ன செய்தாள் காளா?" ஆர் வத்துடன் வினவினார் குறுக்கிட்ட உறைந்தை மன்னர் இருங்கோ.

"அந்தச் சூழ்நிலையிலும் அவளுக் குத் துணையாக வந்த காவல் வீரர்க ளால் செய்ய இயலாததை அவள் செய் தாள்" எனக் கூறியபடியே தனது வலது தோளில் ஏற்பட்டிருந்த தழும்பினை

அவர்களிடம் காட்டினான் காளன்."நல்ல வேளை எதேர்ச்சையாகத் திரும்பிக் கொண்டேன்! இல்லையெனில் நானும் அங்கு அவளது குறுவாளினால் மடிந்தி ருப்பேன்." எனக் கூறிக் கொண்டிருந்த போதே இடைமறித்த யுவராஜன், "நானும் என்றால்...?" என வாக்கியத்தை முடிக்கா மல் எச்சமாக வினவினான்.

"அவளது குறுவாளினால் வைதீக ரின் மகனும் எனது ஆருயிர் நண்பனு மான அக்னி புத்திரன் அவ்விடத்திலேயே இறந்துபோனான். சிந்திக்கவோ அல்லது தப்பிக்கவோ கண நேரத்தையும் அவள் வழங்கியிருக்கவில்லை. கண நேரத்தில் அவளிடமிருந்து வெளிப்பட்ட இரு குறு வாள்களில் ஒன்று அவனது உயிரைப் பறித்துவிட்டது. அவளது திறமை மிகுந்த தைரியமான வளவனாரின் மகள் தங் களைக் கண்டு அச்சப்பட்டாள் என் றால் தங்களது வீரம் நிச்சயம் போற் றப்பட வேண்டியதுதான்!" என யுவராஜ

https://telegram.me/aedahamlibra

னைப் புகழ்வதைப் போன்று இகழ்ந்தான் காளன்.

“சரி, எதற்காக நீ சம்பந்தமே இல்லாமல் வந்ததுமே உன் உறைவாளை உருவி இவளது கழுத்தில் வைத்தாய்?” என வினவினார் மன்னர்.

“இப்பெண் நிச்சயம் வேந்தனால் அனுப்பப்பட்டவளா? இல்லையா? என்பதைச் சோதிக்கத்தான் அப்படிச் செய்தேன் தந்தையே!” என இருங்கோவிடம் கூறியவன் அவனுக்கு முன்பு நின்ற மின்னலை நோக்கி, “எனது செயலுக்கு நான் வருந்துகிறேன். என்னை மன்னித்துவிடு!” என வேண்டினான் யுவராஜன்.

“யுவராஜரே, தங்களது நாட்டில் வசிக்கும் குடிமகள் நான். தங்களது செயல்கள் அனைத்தும் மலை நாட்டின் மேன்மையை ஒட்டியே இருக்கும். கோன் உயர்ந்தால் தானே குடிகளாலும் உயர இயலும்! தங்களது பாதுகாப்பு நிலைத் தன்மையுடன் இருந்தால்

https://telegram.me/aedahamlibra

தானே எங்களுக்கும் பாதுகாப்பு. இந்தச் சிறு செயலுக்காகத் தாங்கள் மன்னிப்பைக் கோர வேண்டிய அவசியமில்லை. எனக்கு மகிழ்ச்சிதான்! எந்த வருத்தமும் இல்லை!" எனப் புன்னகையுடன் தெரிவித்தாள் மின்னல்.

அப்போது அந்த அறைக்குள் நுழைந்த வைதீகர், "இவள் கூறுவதில் எந்தப் பிழையும் இல்லை யுவராஜா. சரியாகத்தான் கூறுகிறாள்!" என அவனிடம் தெரிவித்தவர், "இவள் யார்? இந்த வேளையில் இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாள்?" என வினவினார் தனது வழுக்கைத் தலையைத் தடவிகொண்டே.

அவரது திடீர் வரவைக் கண்டு அனைவரும் திகைக்க, இருங்கோவை நோக்கி, "அரசே, தாங்கள் என்னை அழைத்தீர்கள் என்று காவலன் தெரிவித்தான். ஏதேனும் அவசரப் பணியா?" என வினவினார்.

"ஆம்! பிரம்மாயரே, அவசரம் தான். அழிவுச் செய்தியைத் தாங்கி வந்திருக் கிறாள் இப்பெண். ஆனால், அந்த அழி வுச் செய்தி சோழ நாட்டினுடையதா அல் லது இவளுடையதா என்பதைத் தாங் கள் தான் தீர்மானிக்க வேண்டும்" எனக் குறுக்கிட்டு இருங்கோவிற்குப் பதில் வைதீகரிடம் தெரிவித்தான் யுவராஜன்.

வைதீகர் அவருக்கு முன்பு நின்ற மின்னலை சந்தேகத்துடன் ஆழ்ந்துப் பார்க்கலானார்.

'நம்மையும் மீறி ஏதோ ஒன்று இங்கு நடக்கப் போகிறது' என உணர்ந்த வான வல்லி முகத்தில் எந்தவித உணர்ச்சி களையும் காட்டிக்கொள்ளாமல் வைதீ கரின் விழிகளை முதலில் பார்த்தவள், பிறகு அவரது பார்வையிலிருந்து தனது விழிகளை விளக்கித் தரையைப் பார்த்த படி குனிந்து கொண்டாள்.

வைதீகரின் முகத்தில் சிறு புன்முறு வல் ஒன்று தோன்றி மறைந்தது. அந்தப்

https://telegram.me/aedahamlibrary

புன்முறுவலுக்குள் மறைந்திருந்த எச்ச ரிக்கையையும் காளன் கவனிக்கத் தவற வில்லை.

தான் ஆகவேண்டும் என்பதை இந்தச் சிறு வயதிலேயே அறிந்து வைத்திருக்கிற இவளது அரசியல் ஞானம் என்னை ஆச் சர்யத்தில் ஆழ்த்துகிறது!" எனக் கூறி யவர் பிறகு, "இப்பெண் யார் அரசே! பொழுது கடந்த முதல் சாம இரவில் இவ ளுக்கு இங்கு என்ன பணி?" என வினவ வும் செய்தார்.

"வேந்தன்...." என எதையோ கூற வாயைத் திறந்தார் உறைந்தை மன் னர் இருங்கோ. அதற்குள் குறுக்கிட்ட காளன், "இவள் சேந்தனது தங்கை!" எனப் பதிலளித்தான்.

"சேந்தனது தங்கையா?" அதிர்ச்சி யுடன் வினவினார் வைதீகர் பாகவதர்.

"ஆம் வைதீகரே, நான் அவரது தங் கைதான்!" எனப் பதிலளித்தாள் மின் னல்.

"இங்கு எதற்காக...." எனப் பேசிக் கொண்டிருந்த போதே இடைமறித்த மின்னல், "என் தமையன் மலை நாட்டி லிருந்து மன்னருடன் வந்திருந்தார். வீட் டினையே மறந்துவிட்டுக் காலத்தைக்

கழித்துக் கொண்டிருக்கும் எனது தமை யனைப் பற்றிய தகவல் ஏதாவது கிடைக் கிறதா என அறியலாம் என்று வந்திருக்கி றேன்!" என்றாள் வருத்தத்துடன்.

"அவன்.... அவன்.... சேந்தன்.... மடிந்தல்லவா விட்டான்!"

"ஆம்! நானும் அப்படித்தான் கேள் விப்பட்டேன். அவர் திடீரென்று காணா மல் போய் விட்டதாகத் தெரிவிக்கிறார் கள். அவர் திரும்பி வருவார் என்றே நம்பு கிறேன் நான்!"

"உனது நம்பிக்கைப் பலித்தால் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியே! பாற்கட லில் பள்ளிக் கொண்டிருக்கும் பரந்தா மன் உனக்கு அருள் புரியட்டும்!"

"அய்யா.... கொற்றவை, சேயோன், மாயோன், சம்பாபதி, மணிமேகலை என நான் நம்பிய அனைவரும் என் னைக் கைவிட்டு விட்டார்கள். உங்க ளது பரந்தாமன் மட்டுமே எஞ்சியிருக்கி

https://telegram.me/aedahamlibra

றார்!" எனச் சிரித்தபடியே தெரிவித்தாள் அவள். அந்தச் சிரிப்பில் அவளது கவலைகள் அனைத்தும் கலந்து வெளிப்படுவதைக் கவனித்த வைதீகர் வருந்தவே செய்தார்.

"நீ வணங்கும் தெய்வம் வேண்டுமானால் உன்னைக் கைவிடலாம். ஆனால், நான் வணங்கும் கடவுள் விஷ்ணு பகவான் ஒரு நாளும் என்னைக் கைவிட்டதில்லை. நிச்சயம் அவரது அருளால் உனது தமையன் திரும்பி வரத்தான் போகிறான். நீ கவலையுற வேண்டாம்!" எனக் கூறியவர் ஆசி வழங்கவும் செய்தார்.

"தாங்கள் கூறுவது மட்டும் பலித்து விட்டால் உங்களது விஷ்ணு பகவானுக்குக் கெடா வெட்டி பூசனை இடுகிறேன் வைதீகரே! என்னால் ஆ, புரவி எல்லாம் பலியிட இயலாது. எனது தகுதிக்கு இதுவே அதிகம்."

https://telegram.me/aedahamlibrary

"மெய் மற்றும் மனத்தால் மட்டுமே இறைவனைத் தொழுதால் போதுமானது பெண்ணே! பக்தியில் பாரபட்சம் கிடை யாது. கவலையும் வேண்டாம்"என்றார் வைதீகர்.

இறந்துவிட்ட சேந்தன், அவனைத் தேடி வந்திருக்கும் அவளது தங்கை என இருவரையும் பற்றிய கவலை உறைந்தை மன்னர் இருங்கோ, யுவராஜன், வைதீகர் பாகவதர் ஆகியவர்கள் மூவரையும் சூழ்ந் திருந்ததால் அவ்விடத்தில் ஓர் இறுக்க மான அமைதி நிலவியது. அந்த இறுக் கமான அமைதியைக் கலைக்க மின்னல் மற்றும் காளன் என இருவருக்கும் விருப் பம் இருக்கவில்லை. இந்த அமைதி எவ் வளவு நேரம் நீடிக்கிறதோ அவ்வளவுக் களவு தங்களுக்கு அனுகூலம் உண்டு என எண்ணிய இருவரும் அமைதியா கவே நிற்கலானார்கள்.

திடீரென்று எதையோ நினைத்துக் கொண்ட வைதீகர் பிரம்மாயர், "அரசே,

நாம் தொடங்கவிருக்கும் யுத்தம் வெற்றி கரமாக முடிந்து நமது நோக்கம் நிறைவேறக் கடுமையான விரத நோன்புகளைத் தொடங்கியிருக்கிறேன். காலையிலிருந்து அன்னம், நீர் என எதுவும் பல்லில் படாமல் இந்திரனுக்கு விரதமிருப்பதால் சோர்வாக உணர்கிறேன். தங்களுக்கு ஆட்சேபனை இல்லையெனில் நாம் அமர்ந்து பேசலாமா?" என வினவியபடியே அருகில் கிடந்த இருக்கையை நோக்கிச் சென்றார் வைதீகர் பாகவதர்.

உறைந்தை மன்னர் இருங்கோவேள் முதலில் ஆசனத்தில் அமர, அவரைத் தொடர்ந்து வைதீகரும் அமர்ந்து கொண்டார். அமர்ந்தவர் கண்களை மூடியபடி மந்திரத்தை உச்சரிக்கலானார். சிறிது நேரம் கழித்துக் கண் விழித்தவர், அவருக்கு முன் நின்ற காளனிடம், "காளா... அறைக்குள் நுழையும் போது அக்னி புத்திரன் என்று என் மகனைப் பற்றி எதையோ கூறிக் கொண்டிருந்தாயே! எதற்காக?" என வினவினார்.

"அய்யா, நம் யுவராஜர் வளவனார் மகளையும், சேந்தனின் தங்கையையும் ஒப்பிட்டுப் பேசிக் கொண்டிருந்தார். அப் போதுதான் வளவனாரின் மகள் வான வல்லி எவ்வளவு அபாயகரமானவள் என்பதைத் தெரிவிப்பதற்காக எனது நண்பன் அக்னிப் புத்திரனைப் பற்றியும் பேச நேர்ந்தது" எனக் கூறிக் கொண்டி ருந்த போதே குறுக்கிட்ட வைத்தீகர் கடும் கோபத்துடன், "என் மகனை அவள் தனது குறுவாளால் கொன்று சம்பாபதி வனத்தில் வீழ்த்திவிட்டாள். ஆதலால் அவள் பெரும் அபாயகரமானவள் என்று நீ தெரிவித்தாயா காளா?" எனக் கூறிய போது அவரது விழிகள் இரண்டும் கண நேரத்தில் சிவந்து விட்டிருந்தன. உதடு கள் துடித்தன.

என்ன பதிலைக் கூறி வைத்தீகரை அமைதிப்படுத்தலாம் என எண்ணிக் கொண்டு உறைந்தை மன்னரும், யுவரா ஜனும் குழப்பத்துடன் இருக்க, "காளா... ஒன்றை மட்டும் நினைவில் கொள். எனது

https://telegram.me/aedahamlibra

மகன் பெரும் வீரன். நேருக்கு நேர் எதிர் கொண்டு அவனை ஒருநாளும் அப்பெண்ணால் வீழ்த்தியிருக்க இய லாது. இருளில் எதிர்பாராத நேரத்தில் குருவாளினைச் செலுத்தி வஞ்சகமாக எனது மகனை அவள் கொன்றுவிட்டாள். அதற்கு அவள் என்றாவது ஒருநாள் பதில் கூறியே ஆக வேண்டும்” எனக் கூறிக் கொண்டே இடையிலிருந்து குறு வாள் ஒன்றை எடுத்து உயர்த்திப் பிடித் தார்.

அந்தக் குறு வாளானது விளக்கு வெளிச்சங்களில் நன்கு பளபளத்தது. அந்த வாளினை விட அவரது முகமா னது பயங்கர விகாரத்தோடு காணப்பட் டது.”யுவராஜனை மணந்து உறைந்தை இளவரசியாக அவள் வீற்றிருந்தாள் ஒரு வேளை அவளை நான் மன்னித்திருப் பேன். இப்போது அதற்கான வாய்ப்பும் இல்லாமல் போய்விட்டது. எனது மக னைக் கொன்றவளை நான் நிச்சயம் பழி வாங்கியே தீருவேன்!” என அரசர் இருப்

பையும் மறந்து ஆத்திரத்தில் பேசலானார்.

அங்கு மீண்டும் அமைதி நிலவியது. வைதீகரால் ஏற்பட்டிருந்த அந்த அமைதியைக் குலைக்க யாரும் விரும்பவில்லை. சில கண நேர அமைதிக்குப் பிறகு வைதீகர், "அரசே என்னை மன்னிக்கவும். உணர்ச்சி வசப்பட்டுவிட்டேன். திடீரென்று என்னை அழைத்துவரச் சொல்லி கட்டளையிட்டிருக்கிறீர்களே! ஏதேனும் அவசரப் பணியா?" என வினவினார் நிதானத்துடன்.

"ஆம் பிரம்மாயரே! அவசரப் பணியை முன்னிட்டே உங்களை வரவழைக்க வேண்டியதாகிவிட்டது."

"கட்டளையிடுங்கள் அரசே!"

"பிரம்மாயரே, வேந்தனுக்குத் தாங்கள் அளித்த கட்டளை யாதென அறிந்துகொள்ளலாமா? நான் பெரும் குழப்பத்தில் இருக்கின்றேன்!"

https://telegram.me/aedahamlibra

“தங்களது அனுமதியுடன் தானே வேந்தனிடம் ஓலையைக் கொடுத்து வஞ்சிக்கு அனுப்பியிருக்கிறேன். இதில் என்ன குழப்பம்?”

“நமக்கு எதிரில் நிற்கிறாளே, இவள் யாரென்று தெரியுமா?”

“சேந்தனது தங்கை என்றுதான் கூறினீர்களே அரசே!”

“ஆம் இவள் சேந்தனது தங்கை தான் பிரம்மாயரே. குழப்பம் அதில் இல்லை!”

“அதில் இல்லையா?”

“ஆம்! :

“பிறகு எதில்?”

“கூறுகிறேன். வேந்தன் எப்போது தகவல் அனுப்பினாலும் ஓலை வழி மூலமே தகவலை அனுப்பியிருக்கிறான்.”

“ஆம்!”

“அதுவே நமது ரகசிய சங்கேதமும் கூட. வேந்தன் அனுப்பியதாகக் கூறிக் கொண்டு முத்திரை மோதிரத்துடன் வந்த பல ஒற்றர்களை நாம் சிறையும் படுத்தியி ருக்கிறோம்.”

“ஆம் அரசே! இது நடைமுறை பழக்கம் தானே! இதில் குழப்பமடைய என்ன இருக்கிறது?”

“குழப்பம் மட்டுமல்ல. பெரும் தர்ம சங்கடத்திலும் அகப்பட்டுள்ளேன்!”

“தர்ம சங்கடத்திலா?”

“ஆம் பிரம்மாயரே!” எனக் கவலை யாகப் பதிலை அளித்தார் உறைந்தை மன்னர் இருங்கோவேள்.

“காளா... எதற்கு நீ இப்போது வாயை மூடிக் கொண்டு இருக்கிறாய்? மன்னர்தான் குழப்பத்திலும், கவலையி லும் இருக்கிறாரே. நீயாவது உள்ளதை உள்ளபடிக் கூறலாம் அல்லவா!”

https://telegram.me/aedahamlibra

"தங்களது உத்தரவு அய்யா!" எனப் பணிந்த காளன், "பிரம்மாயரே, இதுவரை வேந்தன் அனுப்பியதாக நுழைந்த ஒற்றர் கள் அனைவரும் ஆண்மகன்கள். ஆத லால் அவர்களை மிரட்டி, அடித்து அவர் கள் சோழ நாட்டு மற்றும் அழுந்தூர் ஒற் றர்கள்தான் என்ற உண்மையை அவர் களின் வாயாலேயே ஒப்புக்கொள்ள வைத்துவிட்டோம்."

"அதற்கு இப்போது என்ன காளா வந்தது? மன்னரும் நீயும் ஒரே தகவலை மாற்றி மாற்றிக் கூறுகிறீர்கள். என் பிரா ணனை வாங்காதே காளா!"

"அய்யா... கோபம் வேண்டாம். சற் றுப் பொறுமையாக நான் கூறுவதை நீங் கள் கேட்கலாமே!"

"சரி, கூறு! பொறுமையாகவே கேட் கிறேன்."

"வஞ்சிக்குச் சென்ற வேந்தனிடமி ருந்து செய்தி வந்திருக்கிறது."

https://telegram.me/aedahamlibra

"வேந்தன் செய்தியை அனுப்பியி ருக்கிறானா? எப்போது அனுப்பினான். சேரமான் போர்க் கட்டளையைப் பிறப் பித்துவிட்டாரா? நமது படையை நாம் எப் போது நகர்த்துகிறோம்?" அவரது குரலில் உற்சாகம் பெருகியது.

"அய்யா... தாங்கள் பண்டிதர். பல நூல்களையும் ஏக காலத்தில் கற்ற பெரும் மகான். சிறிது நேரம் உணர்ச்சிவ சப்படாமல்..."

"ம்ம்ம்ம்... சரி மேலே கூறு!" கட்ட ளையிட்டார் வைதீகர் பாகவதர்.

"வேந்தனிடமிருந்து செய்தி வந்தி ருக்கிறது. ஆனால், அதில் ஒரு பிரச் சனை!"

"என்ன?"

"வேந்தனது ஓலைக்குப் பதில் அவனது முத்திரை மோதிரம் மட் டுமே ஆதாரமாக இருக்கிறது. முத்திரை மோதிரத்தை அடையாளமாக வைத்து

https://telegram.me/aedahamlibra

வாய்மொழி மூலமாகவே செய்தி அனுப்பப்பட்டிருப்பதாக வஞ்சியிலிருந்து வந்திருக்கும் தூதுவர் தெரிவித்தாள்?"

"சந்தேகமே இல்லை காளா! அவன் ஒற்றன் தான். அவனது கழுத்தினைத் திருப்பி அவனிடமிருந்து உண்மையை வாங்க வேண்டியதுதானே! உனக்கு இதனைச் சொல்லியா தர வேண்டும்?"

"பிரம்மாயரே, வந்திருப்பவன் ஆண் மகன் என்றால் அவனது கழுத்தினைத் திருகி உண்மையைப் பெற்று விடலாம். ஆனால், அது ஒரு பெண் என்றால்..."

"என்ன வஞ்சியிலிருந்து...."

"ஆமாம் பிரம்மாயரே! வஞ்சியிலிருந்து வஞ்சிக் கொடிதான் வந்திருக்கிறாள்!" எனக் குறுக்கிட்டான் யுவராஜன்.

"வஞ்சிக்கொடி மட்டுமல்ல வைதீகரே! வந்திருப்பவள் வேந்தனைத் தன் அத்தான் என்றும், சேந்தனைத் தன்

https://telegram.me/aedahamlibra

தமையன் என்றும் சொந்தம் கொண்டாடினால் அவளை என்ன செய்து விசாரிப்பது?" எனத் திடமாக வினவினான் காளன்.

வைதீகரின் புருவங்கள் இரண்டும் ஆச்சர்யத்தில் உயர்ந்தன. வியப்புடனே அவருக்கு முன் பணிவுடன் நின்ற மின்னலைக் கவனித்தார்.

உறைந்தை மன்னர் இருங்கோ, "பிரம்மாயரே எனது சங்கடம் இப்போது உங்களுக்குப் புரியும் என நம்புகிறேன் நான்" என்றார்.

"இப்போது புரிகிறது அரசே!" எனக் கூறியவர் மின்னலிடம் எதையோ கேட்க வாயெடுத்தார். ஆனால் அதற்குள் முந்திக் கொண்ட மின்னல், "வைதீகரே, அவரை வஞ்சிக்கு அனுப்பியது தாங்களாக இருந்தால் அவருக்கு ரகசியமாகக் கட்டளையிட்ட தகவல்கள் உங்களைத் தவிர வேறு எவருக்கும் தெரிய வாய்ப்பில்லை. அவர் வஞ்சியிலிருந்து உறைந்

தைக்குத் திரும்பாமல் எங்கே சென்றிருக்கிறார் என்பதை நான் கூறுகிறேன். அது உண்மை எனத் தாங்கள் நம்பினால் மேற் கொண்டு அவர் தெரிவித்த தகவல்களை நான் கூறுகிறேன். இல்லையேல் தாராளமாக என்னைத் தாங்கள் சிறையிலடைக்க உத்தரவிடலாம். அவர் திரும்பி வந்து என்னைச் சிறை மீட்டுக் கொள்ளட்டும்! அதுவரை நான் என் காலத்தைச் சிறையிலேயே கழிக்கச் சித்தமாக இருக்கிறேன்."

"சரி, வேந்தன் எங்குச் சென்றிருக்கிறான்?"

"முத்திரை மோதிரத்தை என்னிடம் அளிக்கு முன் 'வஞ்சியிலிருந்து நேராகக் கூடலுக்குச் செல்லத்தான் எனக்குக் கட்டளை' எனத் தெரிவித்தார் அவர். அவர் கூடலுக்குப் பயணத்தைத் தொடங்கி விட்டார். ஆனால், மன்னர் என்னைச் சந்தேகம் கொள்கிறார்" எனக் வருந்தியபடியே தெரிவித்தாள் அவள்.

"அரசே, இவள் கூறுவது முற்றிலும் உண்மையே! நான் வேந்தனிடம் கண்டிப்பாகக் கட்டளையிட்டிருந்தேன். 'சேரமான் பெருஞ்சேரலாதனின் கட்டளையோடு பாண்டிய மன்னர் தென்னவரையும் சந்தித்துவிட்டுத் தகவல் பெற்று வா' என்று. அதைத்தான் அவன் செய்திருக்கிறான்."

"பிரம்மாயரே, ஆனால் அவன் ஓலை இல்லாமல் இப்பெண்ணை அனுப்பியிருக்க மாட்டானே!"

"அரசே, தங்களது ஊழியர் என்னிடம் கூடல் செல்லும் தகவலைத் தெரிவித்து அவரது முத்திரை மோதிரத்தையும் அளித்திருக்காவிட்டால் அவரது ரகசியத் தகவல்களை நான் எப்படி அறிவேன்! சற்று மாறுபட்டக் கோணத்தில் சிந்தித்துப் பாருங்களேன்!"

எதையோ அறிந்துவிட்ட நினைப்பில் காளன், "அரசே..." என உற்சாகத்துடன் அழைக்கலானான்.

"என்ன காளா?" அதிகாரத்துடன் சொற்கள் வெளிவந்தது உறைந்தை மன்னர் இருங்கோவிடமிருந்து.

"அரசே! எனக்கு ஒரு யோசனை! தாங்கள் அனுமதியளிக்கும் பட்சத்தில் அதைத் தெரிவிக்கச் சித்தமாக இருக்கி றேன்."

"தயக்கம் எதற்கு? உடனே தெரிவி!"

"அரசே, இவள் வேந்தனின் முறைப் பெண். அதுவும் சேந்தனது தங்கை. அவனுக்கு மிகவும் நம்பிக்கை யான பெண் என்பதற்காக நமது அடை யாளத்திற்கு மட்டும் முத்திரை மோதி ரம் ஒன்றை அளித்துத் தகவலைப் பரி மாற்றியிருக்கலாம் அல்லவா? ஓலையை எழுதி எதற்கு நேரத்தைப் போக்கவேண் டும் என்ற எண்ணத்திலும் அவன் அவச ரத்தில் செயல்பட்டிருக்கலாமே!"

https://telegram.me/aedahamlibra

"அரசே, காளன் கூறுவதைப் போன்றுதான் நடந்திருக்க வேண்டும். வேந்தன் கூறாமல் அவன் உறைந்தைக் குச் சென்றிருக்கும் தகவலை இவள் எப்படி அறிவாள்?" எனத் தெரிவித்தார் வைதீகர் பாகவதர்.

"சரி பிரம்மாயரே!" ஒரு வழியாகச் சமாதானமடைந்தார் இருங்கோவேள்.

"மின்னல்... வேந்தன் உன்னிடம் தெரிவித்த தகவல் யாது? உடனே மன் னருக்குத் தெரிவி!" கட்டளையிட்டான் காளன்.

இருக்கையில் அமர்ந்திருந்த உறைந்தை மன்னர் இருங்கோ மற்றும் வைதீகர் பாகவதர் ஆகிய இருவரின் முகங்களையும் மாறி மாறித்தயக்கத்து டன் பார்த்தாள் மின்னல். அதைக்கண்ட யுவராஜன், "வந்த பணியை நீ இனிதே நிறைவேற்றலாம்!" எனக் கட்டளையிட லானான்.

“அப்படியே ஆகட்டும்!” எனக் கூறியவள் பிறகு மூச்சினை நன்கு இழுத்துக் கொண்டு, “சேர நாட்டின் வடக்கு எல்லையில் துளுவர்களின் தாக்குதல்கள் சமீபக் காலங்களில் அதிகரித்த வண்ணம் இருக்கிறதாம். சோழ நாட்டை நிர்மூலப்படுத்தும் முன் சேர நாட்டின் பாதுகாப்பில் கவனம் செலுத்த விழைகிறார் சேரமான் பெருஞ்சேரலாதன். மேலும், சோழ நாட்டின் அழிவானது தனது தலைமையிலான படையின் மூலமே நடைபெற வேண்டும் என்பது அவரது விருப்பம். ஆதலால், அவரது கட்டளை வரும்வரை உறைந்தையில் பாசறை அமைத்துத் தங்கியிருக்கும் மலை நாட்டு மற்றும் உறைந்தைப் படையை நகர்த்தக்கூடாது என்பது அவரது ஆணை! நமது மொத்தப் படைகளும் புகாரை முற்றுகையிட்டிருக்கும் சமயத்தில் கலிங்க மன்னன் கார வேலனைப் போன்று சேர நாட்டிற்குள் துளுவர்கள் நுழைந்துவிட்டால் பெரும் ஆபத்து ஏற்பட்டுவிடும் எனத் தயங்குகிறாராம் சேர

https://telegram.me/aedahamlibra

மன்னர். ஆதலால் சிறிது காலம் பொறுத்திருக்க வேண்டியது அவசியம். அவரது கட்டளை இல்லாமல் துரும்பைக் கூட அசைக்க வேண்டாம் என்பது அவரது ஆணையாம்!”

வேந்தன் கூறியத் தகவலை மின்னல் கூறி முடித்த போது அவ்விடத்தை மட்டுமல்லாமல் அங்கிருந்தவர்களின் மனத்திலும் பெரும் வெறுமை ஒன்று சூழ்ந்து கொண்டது. அப்படிப்பட்ட தகவலை அங்கிருந்தவர்கள் யாருமே எதிர்பார்த்திருக்கவில்லை. காளன் கூட மின்னலிடமிருந்து இப்படிப்பட்ட தகவலை எதிர்பார்த்திருக்கவில்லை. ஆதலால் அவனும் அதிர்ச்சியின் உச்சத்தில் நின்று தடுமாறிக் கொண்டிருந்தான்.

அப்போது அவையின் மௌனத்தைக் களைத்த காளன், “அரசே, கட்டளையிடுங்கள்! சேரனது துணை இல்லாமலே நான் நமது படையுடன் புகாரை

வென்று தங்கள் பாதங்களுக்குச் சமர்ப் பிக்கிறேன். ம்ம்ம் என்ற வார்த் தையை மட்டும் தெரிவியுங்கள். மற்ற வர் துணையை எதிர்பார்த்து நாம் நமது காலத்தை வீணடிக்க வேண்டாம். தாம திக்கும் ஒவ்வொரு கணமும் புகா ரில் சோழ இளவல் தனது வலிமையை அதிகரித்துக் கொள்ளச் சந்தர்ப்பத்தை அளிக்கிறோம்! இது பெரும் ஆபத்து. நாம் ஒரு போதும் முன் வைத்த காலைப் பின் வைக்கக் கூடாது. சேர மற்றும் பாண் டிய படைகள் இல்லாமலே நாம் திட்ட மிட்டபடி நமது தாக்குதலைத் தொடங்கு வோம்!" என வெகுண்டெழுந்தான்.

காளனிடமிருந்து உறைந்தை மன் னர் இருங்கோவேள் மேற்கண்ட முழக்கத்தை எதிர்பார்த்திருக்கவில்லை. மாறாக அவரது புதல்வன் யுவராஜனி டமிருந்தே இப்படியானதொரு உணர்ச்சி மிகுந்த ஆவேசத்தை எதிர்பார்த்தார். ஆனால், அவனோ எதிரில் நின்ற

கொடி மின்னலைப் பார்த்தபடியே நின்று கொண்டிருந்தான்.

வைதீகர் பாகவதர், "காளா... இப் படிப்பட்ட சமயங்களில்தான் நாம் நமது நிதானத்தைக் கடைபிடிக்க வேண்டும். நம்மை வழி நடத்துபவர் சேரமான் பெருஞ்சேரலாதன். அவரது கட்டளை யைத் தலைமேற் கொண்டு நிறைவேற்று வது நமது கடமை. இன்னும் சிறிது காலங் கள் தானே! பொறுத்திருப்போம் காளா! நாம் நகரும் போது சோழ நாட்டின் அழிவு தொடங்கிவிடும்!" என நம்பிக்கையுடன் தெரிவித்தார்.

"அரசே இன்னொரு தகவலையும் தெரிவித்தார் அவர்."

"என்ன தகவல்?"

"சோழ நாட்டுச் சம்பந்தப்பட்ட செய் திகள் அனைத்தும் 'அவரது' மூலமாகவே பரிமாறப்பட வேண்டும் என்பதும் சேரமா னின் கட்டளையாம்! கூடலில் பாண்டிய

மன்னரைச் சந்தித்த பிறகு அவர் உறைந் தைக்கு வருகிறாராம். அப்போது அவர் முழுப் போர் திட்டத்தையும் உங்களுக் குக் கூறி உங்களிடமிருந்து தகவலை வஞ்சிக்குப் பெற்றுச் செல்வார். சேரமா னின் அடுத்தக் கட்டளை அவர் மூலம் வரும் வரை மலை நாட்டுப் படைகளுக்கு வேண்டிய பயிற்சிகள் மேலும் அளிக்கப் படட்டும்என்றார்" எனத் தெரிவித்தாள் அவள். அங்கிருந்தவர்கள் அனைவரும் மின்னலையே அதிர்ச்சியுடன் பார்க்கலா னார்கள்.

"அரசே, 'தென் நாடுகளில் கோடை மழைத் தொடங்கவிருப்பதால் பெருகும் காட்டாறு மற்றும் ஓடைகளின் இடையூ றால் பயணம் சில காலங்கள் தாமதம் ஆகவும் வாய்ப்பிருக்கிறது'என்றும் தெரி வித்தார் அவர்." தொடர்ந்து கூறினாள் மின்னல்.

"அப்படியெனில் அடுத்து வேந்தன் வந்து தகவலைக் கூறிய பிறகு தான்

நாம் நமது அடுத்தக் கட்ட பணிகளைத் தொடங்கமுடியும்! அப்படித்தானே!" என வினவினான் யுவராஜன்.

"ஆமாம் யுவராஜரே! என்னிடம் அவர் கூறிய தகவல்களிலிருந்து நான் இதைத் தான் ஊகிக்கிறேன்."

"தந்தையே, கட்டளையை மட்டும் இடுங்கள்! நானே, நாளை காலை சேர மான் பெருஞ்சேரலாதனைச் சந்தித்து அனுமதி பெற்று வருகிறேன்!" என வேண்டினான் யுவராஜன்.

அவனது வேண்டுகோளைக் கேட் டுப் பெரிதும் மகிழ்ந்த இருங்கோ பெரு மையும் அடைந்தார். அவரது முகத்தில் கண நேரத்தில் தோன்றியிருந்த பெரு மைச் சாயலைக் காளன் கவனிக்கலா னான். அவனைப் போன்றே மின்னலும் கவனித்திருந்தாள்.

அப்போது வைதீகர் யுவராஜனிடம், "துளுவர்கள் மிகவும் தொல்லைப் பிடித்

https://telegram.me/aedahamlibra

தவர்கள். அவர்களை முதலில் நம் சேர அரசர் அடக்கட்டும். பிறகு சோழ நாட்டை நாம் அடக்குவோம். அவரது கட்டளைகளை நாம் ஒருநாளும் மீறுவதற்கில்லை. பொறுத்திருப்போம்!" எனத் தீர்க்கமாகத் தெரிவித்தார்.

வைதீகரின் கட்டளை யுவராஜனுக்குப் பெரும் ஏமாற்றமாக இருந்தது.

"சரி, வேந்தன் தெரிவித்த தகவல்கள் இதுதானா அல்லது இன்னும் ஏதேனும் மிச்சமிருக்கிறதா?"வினவினார் உறைந்தை இருங்கோவேள்.

"இன்னும் ஒன்று மிச்சமிருக்கிறது!"

"இன்னும் ஒன்றா?"

"ஆம்!"

"என்ன அது?"

"அது... அது..." தயங்கினாள் மின்னல்.

"தயக்கம் எதுவும் வேண்டாம் மின்னல். நீ சேந்தனது தங்கை என்பதை நினைவில் கொள். எதையும் தயங்காமல் நீ வெளிப்படுத்தலாம்!"

"மன்னரை நீ ஒருமுறை சந்தித்தால் போதும். அதன் பிறகு உன் வறுமை அனைத்தும் தீர்ந்துவிடும். எனது நண்பன் சேந்தனைப் போன்று அரசப் பணி செய்து இறப்பதே எனது நோக்கம். என் பணியைத் துறந்து நான் மீண்டும் குடும்பத்தோடு ஐக்கியமாவது என்பது இயலாத காரியம்! எனவும் தெரிவித்தார் அவர்.

"பிரம்மாயரே, வேந்தனையும் சேந்தனையும் நினைத்தால் எனக்குப் பெருமையாக இருக்கிறது!" மகிழ்ந்தார் உறைந்தை மன்னர் இருங்கோவேள்.

"ஆனால், அவர்களை எண்ணி நான் வருத்தப்படுகிறேன் அரசே! மகனைப் பிரிந்த வயதான தந்தையைத் தாங்கள் தனியாக அதுவும் வறுமை

https://telegram.me/aedahamlibrary

யான காலத்தில் கவனித்ததுண்டா? பசியினால் நீரை மட்டுமே பருகி காலத்தைக் கழிக்கும் கொடுமையைத் தாங்கள் அனுபவித்ததுண்டா? நான் அனுபவித்திருக்கிறேன். ஆதாலால்தான் நான் என் தமையனையும், அவரையும் முற்றிலும் வெறுக்கிறேன். இப்போதுகூட 'மன்னரைச் சந்தி அவர் உனது வறுமையைப் போக்குவார்' எனத் தெரிவித்த ஒரே காரணத்தினால்தான் அவர் அளித்த தகவல்களைத் தாங்கி இங்கு வந்திருக்கிறேன். அவர்களைப் பற்றிப் பெருமையடைய எதுவுமே இல்லை!"

மின்னல் கூறிய சொற்கள் அங்கிருந்த அனைவரையுமே வாட்டி வதைத்தது. இப்படிப்பட்ட பதிலை மன்னர் இருங்கோ எதிர்பார்க்கவில்லை. அதுவும் தனது நம்பிக்கைக்குரிய வேந்தன் மற்றும் சேந்தனின் குடும்பத்திற்கா இப்படியொரு நிலை?' என எண்ணி வருந்தவே செய்தார்.

https://telegram.me/aedahamlibrary

வருத்தத்துடனே, “உனது குடும்பத்தை அழைத்துக் கொண்டு நீ உறைந்தைக்கு வந்துவிடேன். எந்தக் கவலையும் இல்லாமல் நீ இங்கு வாழலாம்!” எனக் கூறிக் கொண்டிருந்த போதே இடைமறித்த மின்னல், “மன்னிக்க வேண்டும் அரசே! நான் தங்களிடம் எதிர்பார்த்தது உதவியை மட்டுமே! மாறாகத் தஞ்சத்தை அல்ல. பட்டினி கிடந்தது உயிர் போனாலும் அது எனது தந்தை வளர்த்த என் நாட்டில்தான் போக வேண்டும். நான் கிளம்புகிறேன். நான் வந்த பணி நிறைவடைந்துவிட்டது” எனக் கூறியவள் அவர்களைச் சட்டை செய்யாமல் விடுவிடுவென்று நடக்கத் தொடங்கினாள்.

அவள் செல்வதைக் கண்ட மன்னர் ஆசனத்திலிருந்து எழுந்து, “நில் மின்னல்!” எனக் கட்டளையிடலானார்.

மன்னரது கட்டளையைக் கேட்ட அடுத்தக் கணமே மின்னல் நகராது சிலையென நின்றாள்.”நம் மலை நாட்டு

மக்கள் மானத்தில் சிறந்தவர்கள் என் பதை நிரூபித்து விட்டாய் மின்னல். உன்னை நினைத்துப் பெருமைப்படுகி றேன் நான்!" எனக் கூறியவர் மின்னலிடம் சென்று அவளது முகத்தையே சில கண நேரங்கள் உற்றுப் பார்த்துக் கொண்டி ருந்தார்.

பிறகு தனது கழுத்தில் அணிந்தி ருந்த இரத்தின மாலை ஒன்றைக் கழட் டியவர், "இதைப் பெற்றுக்கொள் மின் னல். இது உனது வறுமையைப் போக் கும். இதைக் கொண்டு ஒரு பட்டினத் தையே உன்னால் விலைக்கு வாங்கி விட இயலும்! இதை எடுத்துக் கொண்டு செல்!" என நீட்டினார் உறைந்தை மன் னர் இருங்கோ.

தயக்கத்துடனே நின்று கொண்டி ருந்தாள் மின்னல்."தயக்கம் வேண்டாம். பெற்றுக்கொள்!" என அதிகாரத்துடன் கட்டளையிட்டார் மன்னர்.

https://telegram.me/aedahamlibrary

மன்னரிடமிருந்து இரத்தின மாலையை வாங்கிய மின்னல் அதையே ஆச்சர்யத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளது வியப்பைக் கவனித்த மன்னர், "வியப்பு வேண்டாம் மின்னல். இது மலை நாட்டு வேளிர்கள் அணியும் பாரம்பரிய இரத்தின மாலை. இதற்குத் தனி மதிப்பு உண்டு. இதை உனக்கு வழங்குவதில் நான் பெருமிதமடைகிறேன்!" மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

அவருக்குத் தனது நன்றியைத் தெரிவித்த மின்னல் அவரது இரத்தின மாலையை இடையில் பத்திரமாகச் சொருகிக் கொண்டாள்.

அப்போது வைதீகர் அவளிடம், "உனக்கு மணமாகிவிட்டதா?" என வினவினார் ஆவலில்.

"இல்லை அய்யா!" நாணத்துடன் தெரிவித்தாள் மின்னல்.

“உன் வறுமை இனி நீடிக்காது என்று நம்புகிறேன் நான். உனக்குத் தகுந்த ஆடவன் ஒருவனைக் கொழுநனாக்கிக் கொண்டு மகிழ்ச்சியுடன் இல்லற நெறியுடன் வாழ்வாயாக!” மனமுவந்து வாழ்த்தினார் வைதீகர் பாகவதர்.

“தங்களது வாழ்த்து பலிக்கட்டும் பிரம்மாயரே! என்னை வாட்போரில் வெல்லும் ஆடவனை நான் விரைவில் கண்டறிய வேண்டும் எனத் தாங்கள் என்னை வாழ்த்துங்கள்!” எனப் பணிந்தாள் மின்னல்.

அவள் கூறியதைக் கேட்ட வைதீகர் குழப்பத்துடன், “உனது திருமணத்திற்கும் வாட்போருக்கும் என்ன தொடர்பு? புரியவில்லையே!” என்றார்.

“என்னை எவர் வாட்போரில் எவர் தோற்கடிக்கிறாரோ அவரையே நான் எனது கொழுநனாக்கிக் கொள்ள வேண்டும் எனும் தீர்மானத்துடன் இருக்கிறேன். அப்படிப்பட்டவரை இதுவரை

https://telegram.me/aedahamlibra

நான் சந்தித்ததில்லை. உங்கள் ஆசிப்படி அது விரைவில் நிறைவேறட்டும்!" எனத் தரையைப் பார்த்தபடியே அடக்கத்துடன் தெரிவித்தாள் மின்னல்.

"உன்னை வெல்வது அவ்வளவு கடினமா?" குறுக்கிட்ட யுவராஜன் ஏளனத்துடன் வினவினான்.

"யுவராஜருக்கு என் வீரத்தின் மீது சந்தேகம் இருந்தால் அவரே பரிசோதித்துப் பார்த்துவிடலாமே!" என அவனது விழிகளில் தனது பார்வையை நிலை நாட்டியபடியே தெரிவித்தாள்.

யுவராஜன் எந்தப் பதிலையும் கூறாமல் நிற்க திரும்பிய மின்னல் அங்கிருந்து வெளியேற ஆயத்தமானாள். அப்போது உறையிலிருந்து வாள் அதிவேகமாக உருவப்படும் சத்தத்தையும், அதே நேரம் அவளுக்கு முன் விழுந்த யுவராஜனின் நிழலிலிருந்து அவனது வாளின் நிலையையும் கண்டு சுதாரித்த மின்னல் சட்டென்று திரும்பி அருகில் நின்று கொண்

https://telegram.me/aedahamlibra

டிருந்த காளனின் இடையில் வைத்தி ருந்த குருவாளினைப் பிடுங்கியவள் யுவ ராஜனின் வாளினை அந்தரத்திலேயே தடுத்து நிறுத்தினாள்.

யுவராஜனின் நீண்ட பெரும் வாளி னைத் தனது சிறு குறு வாளினைக் கொண்டு அந்தரத்திலேயே தடுத்து நிறுத்திவிட்ட மின்னலின் திறத்தைக் கண்டு அங்கிருந்தவர்கள் பெரிதும் ஆச் சர்யமடைந்தார்கள். அவர்களது புருவங் கள் அனைத்தும் உயர்ந்தன.

‘இவ்வளவு நேரம் சரியாகச் செயல் பட்டவள் திடீரென்று தனது குருவாளி னால் யுவராஜனின் வாளினைத் தடுத் துத் தவறு செய்து விட்டாளே’ என எண்ணி வருந்தினான் காளன். வான வல்லியும் ‘தான் கண நேரத்தில் சுய நினைவை இழந்துவிட்டோமே’ என எண்ணி கலவரமடைந்தாள். இருவரும் தங்களது மனதில் சுழன்றடித்த எண்ண அலைகளை முகத்தில் கட்டிக்கொள்

ளாமல் திடத்துடனே அடுத்து என்ன செய்ய வேண்டும் என எண்ணிச் சிந்திக் கலானார்கள்.

அப்படிச் சிந்தித்தாலும் எதிரில் நிற் கும் உறைந்தை மன்னர், யுவராஜன் மற் றும் வைதீகர் பாகவதர் மூவரும் சிந்திப் பதற்குச் சிறிதும் காலமளித்து விடக்கூ டாது என்பதில் கவனமாக இருந்த மின் னல், "யுவராஜரே, எனது தமையனும், என் அத்தானும் எனக்கு வேண்டிய தற் காப்புப் பயிற்சிகளைக் கசடில்லாமல் கற் றுக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கு மீண்டும் கூறிக்கொள்ள விழைகிறேன். தாங்கள் என்னைச் சோதிக்க வேண்டிய அவசியமில்லை." எனக் கூறிக் கொண்டே யுவராஜனின் வாளிலிருந்து தனது குறுவாளைத் தனி யாக உருவியவள் காளனிடம், "கோட் டைத் தலைவரே, அனுமதி இல்லா மல் தங்களது இடையிலிருந்து தங்களது குறுவாளை உருவிப் பெரும் தவறினை இழைத்துவிட்டேன். தயை கூர்ந்து என்

னைத் தாங்கள் மன்னிக்க வேண்டுகி றேன்!" எனப் பணிந்தபடி அவனிடம் குறு வாளை நீட்டினாள்.

"உனது துணிச்சல் என்னைப் பிர மிக்கச் செய்கிறது. உனது வீரத்திற்குப் பரிசாக இந்தக் குறுவாளை நீயே வைத் துக்கொள். இந்த உறைந்தைப் பட்டி னத்தின் காவல் தலைவனின் குறுவாள் உனக்கு எப்போதும் துணையிருக்கட் டும்! தக்க சமயத்தில் இது நிச்சயம் உத வும்" எனக் கூறி அதை அவளிடமே திருப்பி அளித்தான் காளன்.

"தங்களது பெருந்தன்மை யாருக் கும் வாய்க்காது தலைவரே!" எனக் கூறி யவள் அவனது குறுவாளினை இடையில் செருகி துணிகளுக்கிடையில் மறைத்த படி, "நான் புறப்படுகிறேன் அரசே" எனக் கூறியபடி அங்கிருந்து புறப்பட ஆயத்தமா னாள்.

"இந்த இரவில் எங்கே தனியா கச் செல்லப் போகிறாய்?" அக்கறையு

டன் வினவினார் உறைந்தை மன்னர் இருங்கோ.

"தெரியவில்லை அரசே! புறப்படு வதுதான் நல்லது எனக் கருதுகிறேன் நான்!"

"இரவு அரண்மனையிலேயே தங்கி நாளை நீ புறப்படலாமே! மலை நாட்டிற் குச் செல்ல வேண்டிய அனைத்து ஏற்பா டுகளையும் நானே முன்னின்று கவனிக் கிறேனே!"

"தங்களுக்கு நான் எந்தச் சிரமத் தையும் அளிக்க விரும்பவில்லை. என் மன ஓட்டத்தை அறிந்து கொண்டு நடக் கும் புரவியும், கோட்டைக் காவல் தலை வர் அளித்த குறுவாளும் எனக்குத் துணையாக இருக்க நான் எதற்கு அஞ்ச வேண்டும்?"

"உனது தைரியத்தைத்தான் சற்று முன் நானே நேரில் கண்டேனே மின்னல்.

அரண்மனைக்கு வந்துவிட்டு இரவில் திரும்புவதை ஆட்சேபிக்கிறேன் நான்."

"வஞ்சியில் வயதான எனது தந்தையை விட்டுவிட்டு வந்திருக்கிறேன். அவரது நிலை அங்கு எப்படி இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. காலையில் நான் வஞ்சியில் இருக்க வேண்டும். ஆதலால் நான் இங்கிருந்துப் புறப்படுகிறேன்!"

"என்னால் அனுமதிக்க இயலாது! அதிகாலையில் நீ புறப்படலாம்!" கண்டிப்பாகத் தெரிவித்தார் உறைந்தை மன்னர் இருங்கோவேள்.

மின்னல் தயங்கியபடியே நிற்கலானாள்.

அப்போது குறுக்கிட்ட காளன், "அரசே, எனக்கொரு யோசனை!" என்றான்.

https://telegram.me/aedahamlibra

அங்கிருந்தவர்கள் அனைவரும் அவனது முகத்தைத் திரும்பி ஒரே நேரத்தில் பார்க்கலானார்கள்.

“தாங்கள் அனுமதியளித்து, மின்னலும் சம்மதிக்கும் பட்சத்தில் இவள் எனது மாளிகையிலேயே எனது காதல் மனைவியுடன் இரவினைக் கழித்துக் கருக்கள் பொழுதில் இவளது விருப்படி புறப்படட்டுமே! இரவு காவலைக் கண்காணிக்க அரண்மனையிலேயே தங்கிவிடுவதால் என் காதலி அங்குத் தனிமையில் தான் இருக்கிறாள். இன்றிரவு இவள் என் காதலிக்குத் துணையாக இருக்கட்டுமே. மின்னலுக்கு இருக்கும் தைரியத்தில் என் துணைவிக்குத் துளியளவு கூட இல்லை. நேற்று கதவிடுக்கில் மறைந்து சிறு சத்தம் எழுப்பி விளையாடினேன். அதிர்ச்சியில் வியர்த்து மயங்கி விட்டாள். மின்னலைப் பார்க்கும் போது எனக்கு இப்படியொரு தங்கை இல்லையே என்ற ஏக்கம் மேலிடுகிறது. இரவு என் மாளிகையிலேயே தங்கவைத்து அனுப்பி வைக்கிறேனே!

https://telegram.me/aedahamlibra

அவளுக்கும் துணையாக இருக்குமல்லவா!”

அவன் கூறியதைக் கேட்டதும் மின்னல் உட்பட வைதீகர், இருங்கோ, யுவராஜன் என அனைவரும் வியப்புடன் அவனை நோக்கலானார்கள். வைதீகர், “காளா, உனக்கு மணமாகிவிட்டதா? ஏன் இதுவரை எங்களுக்கு நீ தெரிவிக்கவில்லை!” எனச் சத்தமாக வினவலானார்.

“அய்யா, அது முறைப்படி நடைபெற்ற திருமணம் அல்ல. புகாரில் சம்பாபதி வனத்தில் ஒரு முறை அவளை நான் கள்வனாக இடைமறித்தேன். பிறகு அவளை இன்னொரு முறையும் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அதுவும் தனிமையில்! இருவரும் காதல் கொண்டோம். காந்தர்வ முறையில் மணம் செய்து கொண்டோம். என்னுடனே அவள் உடன்போக்கு மேற் கொண்டு வந்துவிட்டாள். உங்களுக்கு அறிமுகப்படுத்த தக்க

https://telegram.me/aedahamlibra

சமயம் கிடைக்கவில்லை!” எனப் பணிவு டன் தெரிவித்தான் காளன்.

“சரி காளா! மின்னல் சம்மதித் தால் நீ உன்னுடன் கூட்டிச் செல்லலாம். பாதுகாப்பான இடமும் கூட!” என்றார் உறைந்தை மன்னர் இருங்கோவேள்.

அதை ஆமோதித்தனர் வைதீக ரும், யுவராஜனும்.

“அரசர் கூறுவதை நான் மறுப்பதற் கில்லை. இன்றிரவு கோட்டைக் காவல் தலைவரின் மாளிகையிலேயே தங்கி காலையில் நான் புறப்பட்டுவிடுகிறேன் அரசே!” எனக் கூறியவள் காளனை நோக்கி, “என்னைத் தாங்கள் தங்கை யாக ஏற்றுக் கொண்டதை நான் மிகவும் கௌரவமாக நினைக்கிறேன். நிச்சயம் உங்கள் காதலியின் திடீர் மயக்கத்திற் கான காரணத்தைக் கண்டறிந்து தெரி விக்கிறேன். எனக்குச் சிறிது மருத்துவ மும் தெரியும்! நாம் புறப்படலாமா?” எனக் கேட்டாள் மின்னல்.

"மன்னர் அனுமதியளித்தால் நாம் புறப்படலாம்!" என்றான் காளன்.

"சரி காளா! நீங்கள் இருவரும் புறப் படுங்கள். பட்டினக் காவலில் கவனமாக இரு!"

"தங்கள் உத்தரவு அரசே!" எனக் கூறிய காளன் மின்னலை அழைத்துக் கொண்டு தனது மாளிகையை நோக்கி நடக்கலானான்.

உறைந்தை மன்னர், இருங்கோ, யுவராஜன் ஆகிய மூவரும் மின்னலை எண்ணி பெருமையாகவும் அதே நேரம் வருத்தமாகவும் செல்லும் இருவரையுமே பார்த்துக் கொண்டு நின்றார்கள். பிறகு வேந்தனிடமிருந்து மின்னல் கொண்டு வந்த செய்தி, அடுத்துச் செய்ய வேண்டிய பணி எனத் தங்களது ஆலோசனையைத் தொடங்கலானார்கள் மூவரும்.

https://telegram.me/aedahamlibra

# 21. இளவல்

காளனும், வானவல்லியும் வெகுநேரம் எதுவும் பேசாமல் அமைதியாகவே அரண்மனையிலிருந்து மாளிகையை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். இருவரின் மனதிலும், ஆச்சர்யங்களும், வியப்பும், அதிசயங்களும் மண்டிக் கிடந்து பல்வேறு கேள்விகளை எழுப்பிக் கொண்டிருந்தன. ஆதலால் இருவருமே மற்றவரது சிந்தனையைக் கலைக்க வேண்டாம் என எண்ணி நடந்த வண்ணம் சென்று கொண்டிருந்தனர்.

கிட்டத்தட்ட ஒரு நாழிகைப் பொழுதிற்கு மேல் நடந்து உறைந்தை அரண்மனையின் மையப் பகுதியிலிருந்து விடுபட்ட பிறகு, தனக்கு வலப் புறமாக அமைதியாக நடந்து கொண்டிருந்த காளனிடம்,

“எனது தோழி பத்திரை எப்படியிருக்கிறாள்?” என வினவினாள் வானவல்லி.

அவளது கேள்வியைக் கேட்டு சுய சிந்தனைக்குத் திரும்பிய காளன், “என்ன வினவினாய்?” என மீண்டும் கேட்கலானான்.

வானவல்லி சிரித்தபடியே, “உங்களைக் காணும் வரை என்னையே சுற்றி சுற்றி வந்து கொண்டிருந்தாளே பத்திரை! அவளைப் பற்றித்தான் வினவுகிறேன். அவள் நலம் தானே!” என வினவினாள்.

“அவளுக்கென்ன, நன்றாக இருக்கிறாள்! ஆனால், அவளது தந்தையின் துறவறம், செங்குவீரனின் மறைவு இரண்டும் சேர்ந்து அவளை அவ்வப்போது வருத்துகிறது. மற்றபடி அவள் மகிழ்ச்சியாகவே இருக்கிறாள். நீதான் இன்னும் அரை நாழிகைப் பொழுதில் பத்திரையைப் பார்க்கப் போகிறாயே. அதற்குள் என்ன அவசரம்?”

https://telegram.me/aedahamlibra

"அவசரம் எதுவும் இல்லை அண்ணா. புகாரில் இருந்தவரை ஒரு நாள் தவறினாலும் என்னைத் தேடி வீட்டிற்கு வந்து விடுவாள். அவள் வரவில்லை என்றால் நானே அவளைத் தேடி சென்றுவிடுவேன். ஆனால், இப்போது எத்தனை திங்கள் கடந்துவிட்டது? தலைவர் செங்குவீரர் கொற்கைக் கடலில் மூழ்கிய பிறகு ம் கூட அவள் என்னை ஆறுதலுக்காகக்கூட வந்து பார்க்கவில்லை. எப்படி இருந்த பெண் எப்படி மாறிவிட்டாள்?" என்றாள் வருத்தத்துடன்.

அவள் கூறியதைக் கேட்டதும் பார்வையை நான்கு புறத்திலும் ஓட்டினான் காளன். வீதியில் காவல் வீரர்கள் ஆங்காங்கு நடமாடிக் கொண்டிருந்தாலும் உரையாடலைக் கேட்கும் தொலைவில் யாரும் இல்லை என்பதை உறுதி செய்து கொண்டவன், "உன் மீது அவளுக்கு அன்பு, அக்கறை இல்லை எனக் கூற இயலாது. உன்னை, உன் தமையனை,

செங்குவீரனைப் பற்றிக் கூறாத நாளே இல்லை. ஆனால், புகாருக்கு வரும் சந்தர்ப்பம் தான் அவளுக்கு வாய்க் கவில்லை. வஞ்சியிலிருந்து உன்னை அழைத்துக் கொண்டு வில்லவன் சென் றுவிட்ட பிறகு என் மீதும் ஒற்றர்களின் கண்காணிப்பு மிகைப்படுத்தப்பட்டுவிட் டது. முப்பொழுதும் ஒற்றர்களின் கண்கா ணிப்பில் இருக்கும் நான் பத்திரையைப் புகாருக்கு அனுப்பி வைத்தாலோ அல் லது அழைத்து வந்தாலோ இத்தனை நாட்கள் செய்த காரியங்கள் அனைத்தும் வீணாகிவிடும் அல்லவா? இந்தக் கால கட்டத்தில் நான் உறைந்தையில் இருப் பது மிகவும் முக்கியம் என்பதை நீயும் அறிவாய் தானே!"

"ஆமாம் அண்ணா. நீங்கள் இங் கிருப்பது மிகவும், முக்கியம். அதுவும் அடுத்தச் சில திங்கள்களுக்கு உங்களது சேவையானது நிச்சயம் இந்த உறைந் தைப் பட்டினத்திற்குத் தேவை!"

அவளுக்கு எந்தப் பதிலையும் கூறாமல் காவல் வீரர்கள் நடமாடியபடி இருந்த அந்த உறைந்தைப் பட்டினத்தின் வீதியையே கவனித்தபடி நடந்து கொண் டிருந்தான்.

காளனைக் கண்ட காவல் வீரர்கள் பணிந்து விலகிச் செல்லலானார்கள். காவல் வீரர்கள் ஆங்காங்கே நின்றாலும் பேசுவதை யாராலும் கேட்க இயலாது என்பதைப் புரிந்து கொண்ட வானவல்லி, "அண்ணா, வைதீகர் வாயிலில் மறைந்து நின்றபடி நமது உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்ததைக் கவனித்த தாங்கள் சமயோசிதமாக அவரது மகன் அக்னி புத் திரனைப் பற்றிய பேச்சை எடுத்து அவரது கவனத்தைத் திசை திருப்பி விட்டீர்கள்! பிரமாதம்" எனத் தெரிவித்தாள்.

"உறைந்தையில் தங்கியிருக்கும் இருங்கோ, அவரது புதல்வன் யுவரா ஜன், அவரது அமைச்சர் அந்தணர் மற் றும் மற்ற முதன்மை அதிகாரிகளை விட

வும் பெரும் அறிவு மிகுந்தவர் வைதீகர் பாகவதர். அவரது பார்வையிலிருந்து எதுவுமே தப்பியதில்லை! இருங்கோவை செயல்படுத்திக் கொண்டிருப்பவரும் அவர்தான்! அக்னி புத்திரனின் பெயரை எடுத்து அவரது கவனத்தைத் தற்காலிகமாகக் கவலைகள் சூழும்படி செய்தேன். அவ்வளவுதான்! ஆனால், நீ இன்று செய்திருக்கும் காரியங்களை ஒப்பிடுகையில் எனது பணி அப்படியொன்றும் சிறந்தது இல்லையே!" என்றான் பெருமையுடன்.

"நாம் நினைக்கும் அளவிற்கு இவர்களைக் குறைத்து மதிப்பிடக் கூடாது என்பதை வேந்தன் கொண்டு சென்ற ஓலையிலிருந்தும், இன்று காலை என்னை நன்கு அடையாளம் கண்டுவிட்ட வேந்தனின் திறமையிலிருந்தும் அறிந்து கொண்டேன்" என வானவல்லி கூறிக் கொண்டிருந்த போதே இடைமறித்த காளன், "என்ன, வேந்தன் உன்னை அடையாளம் கண்டுவிட்

டானா?” என அதிர்ச்சியுடன் வினவினான்.

“ஆம் அண்ணா... அவனை நான் ஏமாற்றி விட்டேன் எனும் இறுமாப்பில் அவன் அளித்த ஓலையுடன் உறைந்தைக்கு வந்திருந்தால் இந்நேரம் அகப்பட்டிருப்பேன்! நமது திட்டங்கள் அனைத்தும் சிதைந்திருக்கும்!”

“சரி, உனக்கு எப்படிச் சேந்தனைப் பற்றித் தெரியும்?”

“புகார் உபதளபதிகள் சில நேரம் வேந்தனைப் பற்றியும், அவனது நண்பன் சேந்தனைப் பற்றியும் கூறியிருக்கிறார்கள். இருவரும் இரட்டைப் பிறவிகள் போன்று எப்போதும் ஒன்றாகவே திரிவார்கள் என்றும் இருங்கோவின், முக்கியக் கட்டளைகளை இவர்கள்தான் நிறைவேற்றுகிறார்கள் என்றும் கேட்டிருக்கிறேன். என்ன செய்யலாம் என்று சிந்தித்துக் கொண்டிருந்தபோது வேந்தனைச் சந்திக்கையில் அவனது அத்தை

https://telegram.me/aedahamlibra

மகள் எனக் கூறலாம் என்ற எண்ணம் தோன்றியது. உறைந்தைக்குள் நுழைந்த பிறகு சேந்தனது தங்கையாகிவிட்டேன்" எனத் தெரிவித்தாள் புன்னகையுடன்.

"வானவல்லி உனக்கு ஒன்று தெரியுமா?"

"என்ன அண்ணா? கூறுங்கள் கேட்டுக் கொள்கிறேன்."

"நான் அரண்மனை அந்தரங்க ஆலோசனைக் கூடாரத்திற்குள் நுழையும் போது இருங்கோ யாரைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார் தெரியுமா?"

"யாரைப் பற்றி?"

"வேந்தனைப் பற்றித்தான்!"

"அவர் எதற்கு வேந்தனைப் பற்றிக் கவலைப் பட வேண்டும்?"

"வளவனைக் காவிரி நதிக்கரையில் இருக்கும் சென்னி வசந்த மாளி

கையில் உயிரோடு எரிக்க முயன்றார்கள் அல்லவா?"

"ஆம்! செங்குவீரர் கூட எரியும் மாளிகைக்குள் புகுந்து வளவனைக் காப்பாற்றிக் கொண்டு வந்தாரே!"

"ஆம்! அன்று இறந்த உறைந்தைக் காவல் வீரர்களுள் சேந்தனும் ஒருவன்!"

"கேள்வி பட்டேன். சேந்தன் இறந்துவிட்டான் என்று!"

"அந்தச் சம்பவத்தை நினைத்தபடி இருங்கோ இருவரைப் பற்றியும் வருத்தப் பட்டுக் கொண்டிருந்தார். அதற்குத் தகுந் தபடி நீ அவனது தங்கை எனக் கூறி அனைவரின் அனுதாபத்தையும் பெற்று ஏமாற்றிவிட்டாய்!"

வானவல்லி எந்தப் பதிலையும் கூறாமல் பார்வையால் வீதியை ஆராய்ந் தபடி நடந்து கொண்டிருந்தாள்.

"சேந்தனுக்கும், வேந்தனுக்கும் உறவு முறை இருப்பதை நீ எப்படி வான வல்லி அறிந்தாய்?"

"அவர்கள் இருவரும் உறவு முறை என்று யார் அண்ணா அறிவார்கள்?"

"பிறகு?"

"இருவரும் ஒன்றாகச் சுற்றுவார்கள் என்பதை மட்டுமே நான் அறிவேன்! இரு வரும் உறவுமுறை என்பது எதேச்சையா கக் கூறியது" என்றாள் நகைப்புடன்.

காளனும் சேர்ந்து சிரிக்கலானான். திடீரென்று காளனின் சிரிப்பு அடங்கி யது. அதைக் கவனித்துவிட்ட வான வல்லி, "ஏதோ ஆபத்து என்று எண்ணி சுற்றிலும் நோக்கினாள். அப்போது வான வல்லி, "வேந்தனை என்ன செய்தாய்?" எனச் சத்தமின்றிப் பொறுமையாகக் கேட் டான் காளன்.

"அவன் கூடலுக்குச் சென்றிருக்கி றான்!"

“அவனை நீ இன்னுமா உயிரோடு வைத்திருக்கிறாய்?”

“அவனது உதவி இன்னும் சில காலங்களுக்கு இருங்கோவிற்குத் தேவை அண்ணா! அது வரையாவது அவன் உயிரோடு இருந்துவிட்டுப் போகட்டுமே!”

“ஓலையில் எழுதப்பட்டிருந்த செய்தி என்ன வானவல்லி?” பெரும் ஆவலோடு வினவினான் காளன்.

பார்வையை மீண்டும் நான்கு புறங்களிலும் ஓடவிட்ட வானவல்லி, “அண்ணா... அனைத்தையும் விரிவாகக் கூறுகிறேன். ஆனால், அதற்கு ஏற்ற இடம் இது அல்ல. மாளிகைக்குச் செல்வோம்!”

நிலைமையைப் புரிந்து கொண்ட காளனும் அதற்கு மேல் எதுவும் பேசாமல் மாளிகையை நோக்கி வேகமாக நடக்கலானான். வானவல்லியும் அவனது நடைக்கு ஈடுகொடுத்து நடக்க விரைவா

https://telegram.me/aedahamlibra

கவே இருவரும் மாளிகையை அடைந் தார்கள். மாளிகைக்குள் நுழைந்ததுமே வானவல்லி, "பத்திரை எங்கே அண்ணா இருக்கிறாள்?" என ஆவலோடு வினவி னாள்.

"அவள் மேல் தளத்தில் அவளது அறையில் ஓய்வெடுத்துக் கொண்டிருப் பாள். முதலில் வஞ்சியில் நடந்த சம்ப வங்களைக் கூறு! பிறகு உன் தோழியை நீ சந்தித்துக் குழையலாம்!" எனத் தெரி வித்தவன் அங்கிருந்த அறை ஒன்றுக்கு அவளை அழைத்துச் சென்றான். அவ னைக் கண்டதும் அங்குத் தங்கியிருந்த பணிப் பெண்கள் அவனை வணங்கி விட்டு விலகிச் செல்லலானார்கள்.

இருக்கை ஒன்றில் வானவல்லியை அமரவைத்த காளன், "வானவல்லி நடந்த அனைத்தையும் ஒன்று விடாமல் கூறு! வேந்தன் வஞ்சியிலிருந்து கொண்டு சென்ற ஓலையில் இருந்த தகவல்

என்ன? அவர்களின் திட்டம் என்ன என்பதை அறிந்து கொண்டாயா?"

"அறிந்து கொண்டேன் அண்ணா. அறிந்து கொண்டது மட்டுமல்லாமல் அவர்களின் திட்டத்தையும் திசை மாற்றி விட்டேன்! கவலை வேண்டாம். எப்படியும் இன்னும் சில திங்கள்களுக்குத் தென்னகத்தில் போர் நிகழாது. குறைந்த பட்சம் மூன்று திங்கள் காலமாவது சேரர்கள் நம் மீது நிச்சயம் போர் தொடுக்க மாட்டார்கள்! அந்த மூன்று திங்களை அதிகமாக்குவது உங்களது சாமர்த்தியம்."

"என்ன எனது சாமர்த்தியமா?"

"ஆம் அண்ணா! வஞ்சியிலிருந்தும், இருங்கோவின் ஒற்றர்களிடமிருந்தும் உறைந்தைக்கு அனுப்பப்படும் ஒற்றுத் தகவல்களைத் தணிக்கை செய்து அனுப்ப வேண்டியது உங்கள் பொறுப்பு. அப்படித் தணிக்கை செய்து அனுப்பும்

பட்சத்தில் மூன்று மாத காலம் இன்னும் கூட நீள வாய்ப்பிருக்கிறது."

"நிச்சயம் வானவல்லி. அந்தப் பணியைத் தானே நான் இங்குக் காவல் தலைவனாகச் செய்து கொண்டிருக்கிறேன். அதைப் பற்றிய கவலைகள் உனக்கு வேண்டாம். நிச்சயம் கரிகாலன் நம் எதிரிகளை எதிர்க்கத் தயாராவதற்கு வேண்டிய கால அவகாசத்தை நிச்சயம் நம்மால் முடிந்த அளவிற்கு ஏற்படுத்திக் கொடுப்போம்!"

"நிச்சயம் அண்ணா..."

"சரி, வளவனைச் சந்தித்தாயா?"

"வஞ்சியிலிருந்து உறைந்தைக்குப் புறப்படுவதற்கு முன் சந்தித்தேன்."

"இப்போது எங்கே இருக்கிறான்?"

"அவன் புறப்படும்போது எதுவும் தெரிவிக்கவில்லை."

https://telegram.me/aedahamlibra

“ம்ம்ம்... வைதீகர் வாசிக்க இயலாத வடமொழியில் அல்லவா ஓலையை எழுதிக் கொடுத்து வேந்தனை அனுப்பியிருந்தார். நீ எப்படி ஓலையில் எழுதியிருந்த தகவலை அறிந்து கொண்டாய்?”

“அண்ணா... அங்குதான் வைதீகர் பெரும் தவறினை இழைத்துவிட்டார்!”

“என்ன? வைதீகர் தவறினை இழைத்திருக்கிறாரா?” ஆச்சர்யத்துடன் வினவினான் காளன்.

“ஆம் அண்ணா... வேந்தன் எவ்வளவுதான் பெரும் திறமைசாலியாக இருந்தாலும் அவன் மது, மாது ஆகியவற்றில் பெரும் பலவீனமானவனாக இருக்கிறான். அதைக் கருத்தில் கொண்டே வைதீகர் அவனாலும், வழியில் இடைமறிக்கும் ஒற்றர்களாலும் வாசிக்க இயலாவண்ணம் வடமொழியில் ஓலையை எழுதி அனுப்பினார். அதை வாசித்த நான் அந்த ஓலையை எரித்து நமக்குச் சாதகமான மாற்று ஓலையை வஞ்சிக்கு

https://telegram.me/aedahamlibra

அனுப்பிவிட்டேன். வேந்தன் காலையில் அந்த ஓலையைப் பிரித்துப் பார்த்திருந்தாலும் அவனால் அதனை வாசித்துப் பொருளை அறிந்திருக்க இயலாது. அதுவே நமக்குச் சாதமாகிவிட்டது. என்னால் மாற்றப்பட்ட ஓலை வஞ்சி வரை சென்றிருக்கிறது என்றால் அதற்கு முழுக் காரணம் வைதீகர் தான்!"

"ஓலையில் என்ன வானவல்லி எழுதியிருந்தது? விரைவில் கூறேன்!"

"பொறுங்கள் அண்ணா... கூறத் தானே போகிறேன்! என்ன அவசரம்?"

"ம்ம்ம்..."

"அண்ணா, வரும் திங்களில் இருங்கோவின் மலை நாட்டுப் படைகள் முதலில் புகாரை முற்றுகையிடும். வளவனின் சோழர் படை அதை எதிர்த்துத் தாக்கும் போது சிதறி ஓடுவதைப் போன்று பின்வாங்கும் இருங்கோவின் படை. சோழப் படைகளும் வெற்

றிக் களிப்பில் பயந்து ஓடும் இருங்கோ வின் படைகளைத் துரத்திக் கொண்டு வரும்போது வெண்ணியில் காத்திருக் கும் சேரர், பாண்டியர் மற்றும் வேளிர் களின் படைகள் சோழப் படைகளைத் தாக்கி நிர்மூலமாக்கும். வெண்ணியில் சோழர் படை சேரனது பெரும் படையை எதிர்த்துக் கொண்டிருக்கும் வேளையில் பாண்டியன் மற்றும் சிங்கள மன்னனின் கடற்படை புகாரைத் தாக்கிக் கைக் கொள்ளும். எதிரிகளின் திட்டம் சோழ நாட்டைப் பணியச் செய்ய வேண்டியது மட்டுமல்ல. சோழ வம்சத்தையே அழித் துச் சோழ நாட்டை இரண்டாகப் பங்கு போட வேண்டும் என்பதுதான்! இந் தச் சூழலில் எதிரிகளின் கூட்டுப் படை களை நம் படைகளால் எப்படிச் சமா ளிக்க இயலும் அண்ணா? படைத் தலை வர் இருந்திருந்தால் நிலைமை வேறு! அவர்களின் திட்டத்தை வென்று அனை வரையும் விரட்டியிருப்பார். ஆனால் இப் போதைய நிலைமை வேறு! நமக்கு இப்

போது தேவை காலம் மட்டுமே! தலைவரின் வெஞ்சினத்தை நிறைவேற்றுவது மட்டுமே இப்போது எனது முதன்மைப் பணி! அந்தப் பணியில் நான் எனது உயிரை இழக்க நேர்ந்தாலும் அது பெருமைக் குரியதே! இந்த வெற்றி அவருக்கானது." எனக் கூறியவள் கண்களிலிருந்து வழிந்த கண்ணீர்த் துளிகளைத் துடைத்தபடியே மேற் கொண்டு பேச இயலாமல் விக்கியபடி அமர்ந்திருந்தாள்.

பிறகு"அண்ணா... அன்று கொற்கையில் நீங்களும் தானே இருந்தீர்கள்? நீங்களாவது அவருக்குத் துணை புரிந்திருக்கலாம் அல்லவா?" எனக் கலங்கியபடியே வினவலானாள்.

"அந்தத் துயரச் சம்பவத்தை நானே எதிர்பார்த்திருக்கவில்லை வானவல்லி. வளவனைத் தொடர்ந்து காப்பதிலேயே எனது முழுக் கவனமும் இருந்தது. தரை மார்க்கமாகச் செல்ல வேண்டாம் எனச் செங்குவீரனை எச்சரித்தது நான்தான்.

ஆனால், யுவராஜன் பெரும் கலத்தில் வளவன் பயணித்த கலத்தை மோதி அழிக்க முடிவெடுத்துத் தாக்கியபோது நான் கரையிலேயே இருந்தேன். அதுவும் செங்குவீரன் அதே மரக்கலத்திலேயே எதிரிகளின் பார்வை வளவன் மீது விழா மல் இருக்க அவனே பலியாவான் என் பது நான் சிறிதும் எதிர்பார்க்காதது வான வல்லி" என்றான் வருத்தத்துடன்.

வானவல்லியின் கண்களிலிருந்து கண்ணீர் தொடர்ந்து பெருகிக் கொண்டே இருந்தது. அதை அவள் கவ னித்ததாகத் தெரியவில்லை. செங்குவீர னைப் பற்றிய சிந்தனையிலேயே அமர்ந் திருந்தாள் வானவல்லி.

அவளது நிலையைக் கண்ட காளன் பெரிதும் வருந்தியபடியே அவ ளுக்கு எப்படி ஆறுதல் கூறுவது எனத் தெரியாமல் அவனும் செங்குவீ ரனை எண்ணிக் கலங்கியபடி அமர்ந்தி ருந்தான். பிறகு, "வானவல்லி நீ கலங்க

வேண்டாம். இந்த யுகத்தின் மாபெரும் வீரன் செங்குவீரன். அவனது தியாகம் ஒருநாளும் வீணாகாது. நிச்சயம் அவனது வீரமும், தியாகமும் நம் வீரர்களைத் தட்டி எழுப்பும்! அந்தப் பணியைத்தான் நீ இப்போது செய்யத் துவங்கியிருக்கி றாய்! வெற்றி நமக்குத்தான் வானவல்லி. கவலை வேண்டாம்!”

“எனக்கு நம்பிக்கை இருக்கிறது அண்ணா... போரினை நம் எதிரிகளே தொடங்கட்டும். ஆனால் அந்தப் போர் எப்படித் தொடங்கவேண்டும், அதன் முடிவு எப்படி இருக்க வேண்டும் என் பதை நிர்ணயிப்பது நாமாகவே இருக்க வேண்டும்! எதிரிகளின் நகர்வுகள் ஒவ் வொன்றும் நாம் தீர்மானிக்கப்பட்டதா கவே இருக்க வேண்டும் அண்ணா!”

காளன் எதுவும் கூறாமல் அவளது முகத்தையே ஆதரவுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

https://telegram.me/aedahamlibra

தொடர்ந்த வானவல்லி, "அண்ணா... படைத் தலைவரைக் கொன்ற யுவராஜனையும், வேந்தனை யும் கண்டபோது அவர்களைக் கண்டம் துண்டமாக வெட்டிப் போட்டுவிடலாம் எனத் தோன்றியது. படைத் தலைவரின் கூற்றுப்படி அவர்களைப் போர்க்களத்தில் கொல்வதே இலக்கு என எண்ணி விட்டு விட்டேன்."

"யுவராஜனின் வாளினை நீ தடுத்து நிறுத்தியபோது எங்கே உன்னை மறந்து வாளினை எறிந்து அவனைக் கொன்று விடுவாயோ என அப்போது பயந்தே போய்விட்டேன் வானவல்லி. ஆனால் சாதுர்யாமாகப் பேசி அவர்களின் சந்தே கத்தைத் திசை திருப்பி விட்டாய்!"

"கண நேரம் எனக்கும் அப்படித் தான் அண்ணா தோன்றியது. இப்போது எனது பழி வாங்கும் கோபத்தை விடவும் சோழ நாட்டின் நலனே முக்கியம். ஆத லால் தான் மனதில் எரிமலையாய் பொங்

கிய ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு வந்துவிட்டேன்."

"வானவல்லி, எனக்கொரு சந்தேகம்?"

"என்ன அண்ணா?"

"வேந்தனது ஓலையை மாற்றிவிட்டேன் என்றாயே, வேந்தன் வஞ்சிக்கு எடுத்துச் செல்லும் ஓலையில் என்ன எழுதியிருக்கிறாய்?"

"'போரினை பாண்டியன் தென்னவனே முன்னெடுத்து நடத்த விருப்பப்படுகிறார் என்றும் அதற்குச் சேர மன்னர் சம்மதிக்காவிட்டால் பாண்டிய நாட்டின் ஆதரவு சோழ நாட்டிற்குக் கிடைத்துவிடும் என்று நம்பகமான ஒற்றர் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆதலால், பாண்டிய மன்னரைத் தாங்கள் சமாதானப் படுத்த வேண்டும். அதுவரை உறைந்தைப் படை தங்களது தலைமைக்குக் காத்திருக்கும்'

என இருங்கோ கூறியதைப் போன்று மாற்றி எழுதியிருக்கிறேன்!"

"பாண்டியரைப் புறக்கணித்துவிட்டு சேரனது படை புகாரை நோக்கிப் புறப்பட்டுவிட்டால்?"

"புறப்படாது அண்ணா!"

"புறப்படாதா?"

"ஆம்!"

"அது எப்படி அவ்வளவு அருதியிட்டுக் கூறுகிறாய்?"

"சேரனுக்குச் சோழ நாட்டை நிர்மூலப்படுத்துவதை விடவும் தனது நாட்டைக் காத்துக்கொள்ள வேண்டும் எனும் அக்கறை அதிகம்!"

"அக்கறை அதிகமா?"

"ஆம்!"

"குழப்புகிறாயே வானவல்லி!"

"நான் குழப்பவில்லை அண்ணா... தெளிவாகத்தான் கூறுகிறேன். சேரனுக்குத் துளுவ நாட்டின் இடையூறு இருக்கையில் அவன் எப்படித் துணிந்து சோழ நாட்டின் மீது போர் தொடுப்பான்?"

"துளுவர்களுக்கும், வடுகர்களுக்கும் யுத்தம் துவங்க இருக்கிறது என்று வட நாட்டிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அப்படியிருக்க அவர்களால் எப்படிச் சேர நாட்டிற்கு இடையூறு ஏற்படும்? இருங்கோவிடம் சேரர் பெருஞ்சேரலாதன் கூறியதாக இந்தத் தகவலைத் தானே முதன்மையாகக் கூறினாய்!"

"ஆம் அண்ணா. சேர நாட்டைத் துளுவர் தாக்கவும் ஏற்பாடு செய்து விட்டேன். இருங்கோவைப் பற்றியும், வைதீகரைப் பற்றியும் எனக்கு நன்கு தெரியும்! சேர நாட்டிலிருந்து ஒற்றர் தகவல்களை எதிர்பார்த்தபடி இருப்பார்கள். அடுத்தக் கிழமை சேர நாட்டின் எல்லைப் புறமே

எரியப் போகிறது. சேர நாட்டு ஒற்றர்கள் அனைவரும் அலறியடித்துக் கொண்டு வஞ்சியை நோக்கி ஓடிவரப் போகிறார்கள்! அந்தத் தகவல் உறைந்தைக்கும் தெரியப்படுத்தப்படும். சேர எல்லை எரிகையில் சேரன் எப்படிப் போர் தொடுக்கத் துணிவான் அண்ணா?"

"தனது நாட்டிற்கு ஆபத்துச் சூழ்கையில் எந்த ஒரு மன்னனும் எதிரி நாட்டுப் படையின் மீது போர் தொடுக்க மாட்டான். ஆனால் துளுவர்கள் எப்படி நீ கூறியதைப் போன்று தாக்குதல் தொடுப்பார்கள்?" சந்தேகத்துடன் வினவினான் காளன்.

"அதுதான் நான் ஏற்பாடு செய்திருக்கிறேன் எனக் கூறியுள்ளேனே அண்ணா!"

"நீ ஏற்பாடு செய்திருக்கிறாயா?"

https://telegram.me/aedahamlibra

"ஆம்..." புருவத்தை உயர்த்திக் கொண்டு நிதானமாகத் தெரிவித்தாள் வானவல்லி.

"துளுவர்கள் உனது கட்டளைக் குப் பணிகிறார்களா? என்ன வானவல்லி கூறுகிறாய்?"

"அண்ணா... துளுவர்கள் என் கட்டளைக்குப் பணிய மாட்டார்கள். ஆனால்..."

"என்ன ஆனால்? மேலே கூறு!" அடக்க முடியாத ஆர்வத்துடன் கட்ட ளையிட்டான் காளன்.

"துளுவர்கள் பணிய மாட்டார்கள். ஆனால் என் தளபதிகளுள் ஒருவர் எனது கட்டளைக்குப் பணியத்தானே செய்வர்?"

"உன் தளபதியா?"

"ஆம் அண்ணா... எனது உபபடைத் தளபதி தான்!"

https://telegram.me/aedahamlibra

"யார்?"

"உங்களது நண்பர் தான்!"

"எனது நண்பனா?" எனக் கேட்ட படி சிந்தித்த காளன்"வில்லவனைப் பற் றியா கூறுகிறாய்?" என வினவினான்.

"ஆம் அண்ணா... அவரைப் பற்றித் தான் குறிப்பிடுகிறான். அவருக்கு இன்று காலையே கட்டளையை வழங்கி அனுப் பிவிட்டேன், அவர் மீண்டும் தனது கள் வர் பணியைத் தொடர்ந்து செய்ய வேண் டும் என்று. அவர் மட்டுமல்லாமல் அவரது களவுக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் குழுவாகச் சேரனது எல்லைப் படையைத் தாக்கப் போகிறார்கள்" என வானவல்லி கூறிக் கொண்டிருந்த போதே இடை மறித்த காளன், "சேரனது எல்லைப் படையைத் தாக்கப் போகிறவன் வில்ல வன். சேரர் படை வீரர்கள் திடீரென்று தாக்குவது துளுவர்கள் என்று கருதி வஞ்சிக்குத் தகவல் அனுப்புவார்கள்.

https://telegram.me/aedahamlibra

அப்படித்தானே?” எனக் கட்டுக்கடங்காத மகிழ்ச்சியுடன் வினவினான் காளன்.

“அதேதான் அண்ணா...”

“வானவல்லி... உன்னை நினைத்தால் எனக்குப் பெருமையாக இருக்கிறது. பெரும் ராச்சியத்தைக் கட்டியாளும் பெரும் திறமை உன்னிடம் காணப்படுகிறது. செங்குவீரனே உயிரோடு இருந்திருந்தாலும் உன்னைப் போன்று திட்டம் தீட்டி செயல்படுத்தியிருப்பானா என்பது கேள்விக்குறியே!” எனக் காளன் உணர்ச்சி வசப்பட்டுக் கூறிக் கொண்டிருந்த போதே தனது வாயில் கைவைத்த வானவல்லி, “உஷ்ஷ்ஷ்” என மெதுவாகச் சத்தம் எழுப்பிக் காளனை எச்சரித்தாள்.

அவளது எச்சரிக்கையைக் கண்ட காளன் மேற் கொண்டு பேசாமல் உடனே வாயை மூடிக் கொண்டன.

தனது இடையில் மறைந்தது வைத்திருந்த காளன் அளித்த குறுவாளை

அப்படித்தானே?" எனக் கட்டுக்கடங்காத மகிழ்ச்சியுடன் வினவினான் காளன்.

"அதேதான் அண்ணா..."

"வானவல்லி... உன்னை நினைத்தால் எனக்குப் பெருமையாக இருக்கிறது. பெரும் ராச்சியத்தைக் கட்டியாளும் பெரும் திறமை உன்னிடம் காணப்படுகிறது. செங்குவீரனே உயிரோடு இருந்திருந்தாலும் உன்னைப் போன்று திட்டம் தீட்டி செயல்படுத்தியிருப்பானா என்பது கேள்விக்குறியே!" எனக் காளன் உணர்ச்சி வசப்பட்டுக் கூறிக் கொண்டிருந்த போதே தனது வாயில் கைவைத்த வானவல்லி, "உஷ்ஷ்ஷ்" என மெதுவாகச் சத்தம் எழுப்பிக் காளனை எச்சரித்தாள்.

அவளது எச்சரிக்கையைக் கண்ட காளன் மேற்கொண்டு பேசாமல் உடனே வாயை மூடிக் கொண்டன.

தனது இடையில் மறைந்தது வைத்திருந்த காளன் அளித்த குறுவாளை

https://telegram.me/aedahamlibra

எடுத்த வானவல்லி, “அண்ணா... பத்திரை எங்கு இருக்கிறாள்?” என மெதுவாக வினவினாள்.

“அவள் அவளது அறையில் தான் இருப்பாள்!”

“நிச்சயமாகத் தெரியும் தானே!”

“உறுதியாக வானவல்லி. அதில் எந்தச் சந்தேகமும் உனக்கு வேண்டாம். உன்னைக் கண்டு அவள் இவ்வளவு நேரம் அவளால் அமைதி காக்க இயலுமா?” எனக் கூறியபடியே வானவல்லியின் பார்வை விழுந்த இடத்தை நோக்கினான் காளன்.

அங்கே திரைச்சீலைக்குப் பின்னால் ஒரு உருவம் இவர்களின் பேச்சை ஒட்டு கேட்டுக் கொண்டிருப்பது விளக்கு வெளிச்ச நிழலில் மங்கலாகத் தெரிந்தது.

அடுத்தக் கணம் திரைச் சீலைக்குப் பின்னால் மறைந்திருந்த உருவத்

https://telegram.me/aedahamlibra

தின் மீது தனது வாளினை வேகமாக எறிந்தாள் வானவல்லி.

குறுவாளினால் தாக்கப்பட்ட அந்த நிழல் உருவம் கீழே சரிந்தது. ஆனால், அந்தத் திசையிலிருந்து எழுந்த, "ஆ..." என்ற பெண்ணின் அலறல் சத்தம் இருவரையுமே துடிக்கச் செய்தது.

உடனே வானவல்லியும் காளனும், "பத்திரை....பத்திரை...." என அலறியடித்துக் கொண்டு பதறியபடி ஓடலானார்கள்.

https://telegram.me/aedahamlibra

# 22.

# மகிழ்ச்சியும் துக்கமும்

கதிரவன் மேற்கில் சாய்ந்த நேரத்திலிருந்தே காளனது வரவை எதிர்பார்த்து ஆவலுடன் வாயிலையே நோக்கிக் கொண்டிருந்தாள் பத்திரைத் தேவி. அப்படிக் காத்திருந்த நேரத்தில்தான் மாளிகைப் பணிப் பெண்கள் ஓடிவந்து காளன் வந்துவிட்ட செய்தியையும், பிறகு அவன் மலை நாட்டுப் பெண் ஒருத்தியுடன் அவனது ஆலோசனை அறைக்குள் சென்றுவிட்ட நிகழ்வையும் தெரிவித்துவிட்டுச் சென்றனர். சமீப காலங்களில் ஒற்றுத் தகவல்களுடன் பணிப்பெண்கள் பலர் காளனைச் சந்தித்துவிட்டுச் சென்று கொண்டிருந்

ததனால் அவள் அதைப்பற்றிப் பெரிதும் எடுத்துக்கொள்ளவில்லை. அம்மலை நாட்டுப் பெண்ணைச் சந்தித்ததும் அனுப்பிவைத்துவிட்டு விரைவில் வந்துவிடுவார் என எண்ணியவள் காளனை எதிர்பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

நேரம் கடக்கக் கடக்க அவளது பொறுமையை இழந்தவள், “இரவு முழுவதும் பட்டினக் காவல் பணியே கதி என்று சென்றுவிடுகிறார். பகல் பொழுதில் அரண்மனைக் காவலுக்குச் சென்றுவிடுகிறார். மாளிகைக்குத் திரும்பும் மாலைப் பொழுதிலும் இப்படி ஒற்றர்கள், வீரர்கள் என்று யாராவது வந்து தொந்தரவு செய்துவிடுகிறார்கள். நான் ஒருத்தி இங்கு அவரையே நினைத்து ஏங்கிக் கொண்டிருப்பதை அவர் மறந்தே போய்விட்டார். இன்று அவரை....” எனத் தனக்குத் தானே கூறிக் கொண்டபடி மேல் தளத்தில் இருந்த அவளது அறையிலிருந்து மரப்படிகட்டுக்கள் வழியே கீழே நடக்கலானாள். அப்போது காளனது ஆலோசனைக் கூடத்தின் சுவரோடு சுவராகச்

சாய்ந்து கொண்டு திரைச் சீலையின் பின்னால் மறைந்தபடி நின்று கொண்டு அவர்கள் பேசுவதை ஒட்டு கேட் டுக் கொண்டிருந்தான் ஒற்றன் ஒருவன். அதைக் கவனித்துவிட்ட பத்திரை சத்தம் எழுப்பாமல் அவனைத் தாக்க ஆயுதத் தைத் தேடலானாள்.

வானவல்லி மற்றும் காளனின் உரையாடலைத் தீவிரமாக ஒட்டுக்கேட் டுக் கொண்டிருந்தவன் பத்திரை அவ னுக்குப் பின்னால் நின்றதையோ அல் லது அவள் அருகில் இருந்த மண் பானை ஒன்றைத் தூக்கி அவனது தலையில் அடிக்க உத்தேசித்து எத் தனிப்பதையோ அவன் கவனித்திருக்க வில்லை. மண் பானையைத் தூக்கிய பத்திரை அந்த ஒற்றனின் பின் மண் டையில் அடிக்கத் தலைக்கு மேலே உயர்த்தினாள். ஆனால் அதற்குள் அந்த ஒற்றனின் மார்பில் பாய்ந்து விட்டிருந் தது வானவல்லியின் குறுவாள். மார்பில் பாய்ந்த குறுவாளுடன் கீழே சரிந்தான்

ஒற்றன். அவனது உடலிலிருந்து வெளியேறிய குருதியை வெகு அருகினில் கண்ட பத்திரை அதிர்ச்சியில் அலறியபடி மயங்கி விழுந்தாள்.

குறுவாளை எறிந்த அடுத்தக் கணத்தில் எழுந்த பத்திரையின் அலறல் சத்தத்தைக் கேட்ட வானவல்லியும், காளனும் துடிதுடித்தபடி"பத்திரை..."பத்திரை..." என அலறியடித்துக் கொண்டு ஓடிவந்தார்கள். குருதிப் பெருக்கில் சரிந்து கிடந்தவனையும் அருகில் மயங்கிக் கிடந்த பத்திரையையும் கண்ட பிறகு தான் இருவருக்கும் சென்ற உயிர் திரும்பி வந்தது. ஒரு கணத்தில் அவர்களின் உயிரே நடுங்கி அடங்கியது.

கீழே மயங்கிக் கிடந்த பத்திரையைத் தூக்கிய காளன், "கடந்த சில கிழமைகளாகவே இவள் இப்படித்தான் மயங்கி விழுந்து கொண்டிருக்கிறாள். குறுவாள் பாய்ந்ததைப் பார்த்த அதிர்ச்சியில் இப்போது மயங்கிவிட்டாள் வான

வல்லி. கவலை வேண்டாம்!” எனக் கூறி யபடியே அவனது அறைக்குத் தூக்கிச் சென்று பஞ்சணையில் கிடத்தினான்.

பிறகு வானவல்லியிடம், “இவளது மயக்கத்தைத் தெளிய வை. நான் சென்று அந்த ஒற்றன் யார் என்று விசா ரித்துவிட்டு வருகிறேன்” எனக் கூறிக் கொண்டு அங்கிருந்து ஆவேசத்துடன் வானவல்லியின் பதிலைக் கூட எதிர்பா ராமல் திரும்பிச் சென்றான்.

பத்திரையின் அலறல் சத்தத்தைக் கேட்டதும் அந்த மாளிகையின் காவல் தலைவன் மற்றும் காவல் வீரர்கள் பலர் அங்குச் சூழ்ந்துவிட்டிருந்தார்கள். மேல் தளப் படியிலிருந்து கீழிறங்கிய உறைந் தைப் பட்டினக் காவல் தலைவன் காள னைக் கண்டதும் வீரர்கள் அனைவரும் பணிந்து காளனின் கட்டளையை எதிர் பார்த்தபடி ஒதுங்கி நின்றார்கள். கீழே கிடந்தவனைப் பரிசோதித்துக் கொண்டி ருந்த அந்த மாளிகையின் தலைவனி

டம், "உப தளபதி... என்ன இது? பணியில் இப்படியா கவனக் குறைவாக இருப்பாய்? கண நேரம் தாமதித்திருந்தாலும் இவன் என் மனைவியைக் கொன்றிருப்பான்" என அருகில் உடைந்து கிடந்த மண் பானையின் சிதறிய ஓடுகளைச் சுட்டிக் காட்டியபடி வினவலானான்.

"தலைவரே மன்னிக்க வேண்டுகிறேன். இதற்கு நானே பொறுப்பேற்றுக் கொள்கிறேன். தாங்கள் எந்தத் தண்டனையை அளித்தாலும் ஏற்றுக்கொள்ளச் சித்தமாக இருக்கிறேன்!" எனப் பணிந்தபடியே தெரிவித்தான்.

"உன் மீது எனக்கு எப்போதும் நம்பிக்கை உண்டு. உன் விசுவாசத்தின் மீதோ அல்லது உன் பொறுப்பின் மீதோ சந்தேகம் எனக்குச் சிறிதளவும் இல்லை. ஆனால், இவன் எப்படி உள் நுழைந்தான்? என் ஆலோசனை அறைக்குள் பேசுவதை ஒட்டுக் கேட்கும் அளவிற்குத் துணிந்திருக்கிறான் என்றால் யார்

கொடுத்த தைரியம் இது? எனக்கு உடனே தெரிந்தே ஆக வேண்டும்? யார் இவன்?" என அந்த மாளிகையே அதிரும் அளவிற்குக் கோபத்தோடு வினவலானான்.

அவனது கோபத்தைக் கண்ட காவல் வீரர்கள் அனைவரும் பயந்து நடுங்கிக் கொண்டு நின்றனர். அதிலும் சிவந்திருந்த அவனது விழிகளானது அவனது அழகிய முகத்திற்குப் பெரும் கொடூரத்தை வழங்க அவனது முகத்தைப் பார்க்கவே திராணியற்று நின்று கொண்டிருந்தனர் காவல் வீரர்கள்.

"இந்தக் கயவன் யார்? இவன் இம் மாளிகையில் பணி புரிபவனா? மாளிகையில் பணிபுரிபவன் என்றால் இவனைச் சேர்த்துவிட்டது யார்?" என வினவினான் கோட்டைத் தலைவனை நோக்கி.

கீழே பிணமாகக் கிடந்தவனின் முகத்தைத் திருப்பிப் பார்த்தான் மாளிகைத் தலைவன். மாளிகைத் தலைவ

னுக்கு அவனை அடையாளம் காண இயலாததால், "தலைவரே, இவனை நான் இதற்கு முன் சந்தித்தது இல்லை. இவன் யாரென்று எனக்குத் தெரியாது?" எனத் தெரிவித்தான் அச்சத்துடன்.

அப்போது அந்த அரண்மனையின் காவல் வீரன் ஒருவன் முன்வந்து, "தலை வரே, இவனை நான் அறிவேன்!" எனப் பணிந்தான்.

"கூறு! இவன் யார்?"

"இவனை நான் அரசரின் மாளிகை யில் சில முறை பார்த்திருக்கிறேன்" என அவன் கூறிக் கொண்டிருந்த போதே மற் றொரு காவலன், "தலைவரே, சற்று முன் இவன் தங்களைச் சந்திக்க வேண்டும் எனக் கூறி மன்னரின் முத்திரை மோதிரத் தைக் காட்டி அனுமதி பெற்றுக் கொண்டு மாளிகைக்குள் நுழைந்தான். உள்ளே அனுமதித்தவன் நான்தான்!" எனத் தெரி வித்தான்.

https://telegram.me/aedahamlibra

"இவனது ஆடைகளை நன்கு பரி சோதனை செய்யுங்கள்!"

உடனே இரு வீரர்கள் அவனது ஆடையைச் சோதனை செய்து அதிலி ருந்து உறைந்தை மன்னரின் முத்திரை மோதிரத்தையும் கூடவே புலிச் சின் னம் பொறித்த முத்திரை மோதிரத்தை யும் எடுத்துக் காளனிடம் நீட்டினார்கள். கீழே குருதி வெள்ளத்தில் மடிந்து கிடந் தவனின் தலையைக் காலால் திருப்பி அவனது முகத்தையும், கையில் இருந்த புலிச் சின்ன முத்திரை மோதிரத்தை யும் மாறி மாறி பார்த்தவன், "இந்தச் சோழ நாட்டுக் கயவனைப் புதைத்து மன்னருக்குத் தகவல் தெரிவித்துவிடுங் கள். கூடவே உறைந்தைக் கோட்டைக் காவல் தலைவரைக் கொலை செய்ய நடந்த முயற்சி முறியடிக்கப்பட்டு விட்டது எனவும் தெரிவித்து விடுங்கள்!" எனக் கூற இரண்டு காவல் வீரர்கள் அங்கி ருந்து அப்போதே அவனது கட்டளை யைத் தாங்கிப் புறப்படலானார்கள்.

அதிர்ச்சியில் உறைந்துபோய் நின்ற மாளிகைத் தலைவனின் தோளில் தனது கையைப் போட்டபடியே, “இனி எந்தத் தவறும் நேராமல் பார்த்துக் கொள்! இந் நேரம் என் மனைவியை நான் இழந்தி ருப்பேன். எச்சரிக்கை!” என அவனை எச்சரித்தவன் அங்கிருந்து மீண்டும் மேல் தளத்திற்குப் பத்திரையைப் பார்க்க விரைந்து புறப்பட்டான்.

வீரர்கள் குருதி வெள்ளத்தில் கிடந்த அந்தப் பிணத்தை அப்புறப்ப டுத்தினார்கள். பணியாட்கள் அவ்விடத் தைச் சுத்தம் செய்யலானார்கள்.

பத்திரையைத் தேடித் தனது அறைக்குள் சென்ற காளன்.

வானவல்லி எதையோ கூற வாயெ டுத்தாள். ஆனால் அதற்குள் காளன் கையிலிருந்த இரண்டு முத்திரை மோதி ரங்களையும் அவளிடம் நீட்டினான்.

அதை வாங்கிப் பார்த்த வான வல்லி, "அந்த ஒற்றனிடமிருந்து கைப்பற் றப்பட்டதா?" என வினவினாள்.

"ஆமாம்..."

"இரண்டு முத்திரை மோதிரங் களை வைத்திருக்கிறான்?"

"ஆம்..."

"அவன் சோழ நாட்டு ஒற்றனா அல் லது மலை நாட்டு ஒற்றனா?"

"........"

"ஒருவேளை நம் நாட்டு ஒற்ற னையே நாம் கொன்றுவிட்டோமா?"

"இல்லை. அவன் மலை நாட்டு ஒற் றன் தான்! அந்த முத்திரை மோதிரத்தின் அடிப்பகுதியை நன்கு உற்றுப் பார். அதில் கருத்த புள்ளி ஒன்று இருக்கும்!"

அம்மோதிரத்தைத் திருப்பிப் பார்த்த வானவல்லி, "ஆமாம்... எளிதில் கண்டறிய இயலாவண்ணம் சிறு கருத்த

புள்ளி ஒன்று இருக்கிறது" எனத் தெரி வித்தாள்.

"இது இருங்கோவின் மோதிரம் தான். நாம் புகார் ஒற்றனைக் கொலை செய்யவில்லை."

"ஆமாம்... ஆனால், இருங்கோவின் ஒற்றன் நம்மை எதற்கு வேவு பார்க்க முய லவேண்டும்?"

"எனக்கும் அது புரியவில்லை!"

"சந்தேகமே இல்லை!"

"என்ன சந்தேகமே இல்லை?"

"ஆம். நம்மை முன்னால் செல்ல விட்டு இருங்கோ நம்மை வேவு பார்க்க ஒற்றனை அனுப்பியிருக்கிறார்?"

"ஆம். நானும் அப்படித்தான் நினைக்கிறேன். ஆனால் அதற்கு வாய்ப்பு இல்லை என்றும் தோன்றுகிறது."

"வாய்ப்பு இல்லையா?"

https://telegram.me/aedahamlibra

"ஆம்!"

"ஏன்?"

"சேந்தனின் தங்கையான உன்னை ஒருநாளும் இருங்கோவேளினால் சந்தேகப் பட இயலாது!"

"ஏன் அவரது புதல்வன் யுவராஜனால் சந்தேகப் பட இயலும் அல்லவா?"

"சரியாகக் கூறியிருக்கிறாய் வானவல்லி!"

"ஆம்... நான் உறைந்தை வந்ததிலிருந்து அவன் என்னைக் கண்காணித்துக் கொண்டு இருக்கிறான்!"

"நானும் அவனைக் கவனித்தேன். அவனது பார்வை சரியில்லை!"

"எப்படியோ இருந்துவிட்டுப் போகட்டும். வந்த காரியம் வெற்றியடைந்துவிட்டது!" என்றாள் வானவல்லி.

வானவல்லியின் மடியில் தலை வைத்து மயங்கிக்கிடந்த பத்திரையின்

பாதத்தை ஆதரவாகத் தடவிக் கொடுத்த காளன், “இன்னும் கண் விழிக்கவில்லையா?” என வினவினான்.

“இன்னும் இல்லை அண்ணா...”

“எனக்கு அச்சமாக இருக்கிறது. இப்படித்தான் அடிக்கடி மயங்கி விடுகிறாள்!”

“கவலை கொள்ள ஏதுமில்லை அண்ணா... எல்லாம் நல்ல செய்திதான்!”

“என்ன நல்ல செய்தியா?” என வினவிய காளன் குழப்பத்துடன் அவளை நோக்கினான்.

அப்போது கண் விழித்த பத்திரை, “வானவல்லி நீ எப்போது வந்தாய்?” எனக் கூறியபடியே எழுந்து அமர்ந்தாள்.

பத்திரையை நோக்கிய காளன், “பத்திரை உனக்கு என்னாயிற்று? திடீர் திடீரென்று மயங்கி விழுந்துவிடுகிறாய். கண் விழித்ததும் மலை நாட்டுப்

பெண்ணை வானவல்லி என்கிறாய்? சுய நினைவுடன் தானே இருக்கிறாய்?" என வினவினான்.

"என் தாயின் மடியில் நான் உறங் கியதை விடவும் என் தோழி வானவல் லியின் மடியில் உறங்கிய நாட்கள் தான் அதிகம். என் தோழியின் மடியை என் னால் அடையாளம் காண இயலாதா? மலை நாட்டுப் பெண்ணைப் போன்று வேடமிட்டு உடலின் நிறத்தை மாற்றினா லும் இவளது வாசனை எனக்குக் காட் டிக்கொடுத்து விட்டது! எதற்கு வான வல்லி இந்த வேடம்?" எனக் கூறியவள் வானவல்லியின் இடையில் நறுக்கென்று ஒரு கிள்ளு கிள்ளினாள்.

பத்திரைத் தன்னை அடையாளம் கண்டுவிட்டதைக் கண்டு மகிழ்ந்த வான வல்லி அவளை அன்புடன் அணைத் துக் கொண்டு அவளது கன்னத்தில் மாறி மாறி முத்தமிடலானாள். அப்போது வான வல்லி அவளது இதழ்களில் திடீரென்று

உப்புக் கரிக்கும் சுவையை உணர்தவள் பத்திரையின் முகத்தை நகர்த்தி அவளது விழிகளை நோக்கினாள். பத்திரை கண்ணீர் சிந்திக் கொண்டிருந்தாள். அதைப் பார்த்துப் பதறிய வானவல்லி, "எதற்காகப் பத்திரை இப்போது கண்ணீர் சிந்துகிறாய்? உன்னைக் கண்ட மகிழ்ச்சியில் நான் இருக்கிறேன். ஆனால் நீ...?" எனக் கூறியவள் அவளது விழிகளில் வழிந்த கண்ணீர்த் துளிகளைத் துடைக்கலானாள்.

வானவல்லி துடைக்கத் துடைக்கப் பெருகிக் கொண்டிருந்தது பத்திரையின் கண்ணீர் துளி. அவளைத் தோளில் சாய்த்துக் கொண்ட வானவல்லி அவளது முதுகில் ஆதரவாகத் தடவிக் கொடுக்கலானாள். அருகில் நின்று கொண்டிருந்த காளன் மகிழ்ச்சியுடன் அந்த நெகிழ்ச்சியான அவர்களின் அன்பைக் கண்டு பெருமிதப் பட்டுக் கொண்டிருந்தான்.

"என்னை மன்னித்துவிடு வான வல்லி. தலைவர் செங்குவீரர் கடலில் மூழ்கிய துயர காலத்திலும் உன்னைக் கண்டு ஆறுதல் கூடச் சொல்ல இயலாத பாவியாகி விட்டேன் நான்! என்னை மன்னித்துவிடடி..." எனக் கூறியவள் தொடர்ந்து அழுகையை நிறுத்த இயலா மல் கண்ணீர் சிந்திக் கொண்டிருந்தாள்.

மீண்டும் அவளது விழிகளைத் துடைத்த வானவல்லி, "பத்திரை அந்தத் துயரச் சம்பவத்தைப் பற்றிக் கவலைப் படாதே! வீரர்களை எப்போது வேண் டுமானாலும் மரணம் தழுவி கொள்ளும் என்பதை நாம் அறிந்தது தானே! தலை வர் சோழ இளவலைக் காப்பதற்கா கத் தனது இன்னுயிரை இழந்துள்ளார். அது பெருமைக்குரியதுதானே பத்திரை. அவரது தியாகத்தை எண்ணி நாம் பெரு மைப் படவேண்டுமே தவிர வருத்தப்படக் கூடாது! செங்குவீரர் மரணித்துவிட்டால் என்ன சோழ நாட்டுக்காக வாளெடுக்க இளம் ஓர் கரு உதித்துவிட்டதே!" எனப்

பெருமையுடன் தெரிவித்தாள் வானவல்லி.

வானவல்லியின் பேச்சு அங்கிருந்த பத்திரை மற்றும் காளனுக்குப் பெரும் வியப்பாக இருந்தது. அந்த வியப்பினூடே பத்திரை, “என்ன வானவல்லி கூறுகிறாய். சோழ நாட்டுக்காக வாளெடுக்கப் புதுக் கரு உதித்துவிட்டதா?” எனக் குழப்பத்துடன் வினவினாள்.

“ஆம் பத்திரை. இந்தத் தருணம் மனதில் சம பாதி மகிழ்ச்சியையும், அதே அளவு வருத்தத்தையும் அளித்துச் செல்கிறது. வாழ்வில் நான் செய்துவிட்ட பெரும் பிழையை எண்ணி இப்போது வருத்தப்படுகிறேன்!”

“என்ன வானவல்லி கூறுகிறாய். சரி பாதி மகிழ்ச்சி சரி பாதித் துயரமா? ஒன்றும் புரியவில்லையே!”

“ஆமாம் பாத்திரை. உன்னை எண்ணினால் பெரும் மகிழ்ச்சியாக இருக்

https://telegram.me/aedahamlibra

கிறது. பெருமையாகவும் இருக்கிறது. ஆனால் என்னை எண்ணி, எனது கடந்த காலச் செயலை எண்ணி இப்போது வருத்தப்படுகிறேன் பத்திரை.”

“எதை நினைத்து வானவல்லி வருந்துகிறாய்?” எனப் பத்திரை கூறிக் கொண்டிருந்த போதே இடைமறித்த வானவல்லி, “ஆமாம் பத்திரை. இப் போது வருந்துகிறேன். ஆனால், செங்கு வீரருக்குப் பின் அவரது வீர வாளினைச் சோழ தேசத்திற்கு ஆதரவாக உயர்த்த அவருக்கு ஒரு மகன் இல்லாமல் போய் விட்டதே! அவரது காதலை ஏற்றுக் கொண்டிருந்தால் அவரது கருவை வயிற் றில் இந்நேரம் சுமந்து கொண்டிருப்பேன். எல்லாம் என் பிடிவாதத்தினால் ஏற்பட்ட விளைவு. இனி அவரை எண்ணி வருத் தப்பட்டு என்ன ஆகப்போகிறது? பெரும் பிழையைச் செய்துவிட்டேன் பத்திரை!” எனக் காளன் அருகில் இருப்பதையும் மறந்து பேசிய வானவல்லி கண்ணீருடன் பத்திரையின் மடியினில் சாய்ந்தாள்.

வானவல்லிக்கு ஆறுதல் கூற இயலாத பத்திரையும் சேர்ந்து அவளுடன் அழலானாள். பத்திரையின் கண்ணீர்த் துளி தனது தலையில் விழுவதை உணர்ந்த வானவல்லி அவளது மடியிலிருந்து எழுந்தவள் தனது முகத்தைத் துடைத்துக் கொண்டதோடு மட்டுமல்லாமல் பத்திரையின் கண்களையும் நன்கு துடைத்துவிட்டாள். பிறகு அவளை அணைத்து அவளது நெற்றி, கன்னம் என மீண்டும் அன்போடு முத்தத்தை வழங்கியவள், “பத்திரை உன்னை எண்ணி நான் இப்போது பெருமையடைகிறேன். உன் பிறவிப் பயனை நீ அடைந்துவிட்டாய்!” எனத் தெரிவித்தவள் மீண்டும் அவளது கன்னத்திற்கு முத்தமிட்டு அவளைத் தன் மார்போடு அணைத்துக் கொண்டாள்.

அருகில் நின்ற காளனுக்கு எதுவுமே புரியவில்லை. இருந்தாலும் அவனது உடலில் புதுக் குருதி பாய்ந்து அவனுக்குள் புது உற்சாகத்தை வழங்

https://telegram.me/aedahamlibrary

கியது. இன்னதென்று காரணம் அறியாத ஒருவித திகைப்பும், மகிழ்ச்சியும் மனதினில் எழ பெரும் ஆர்வத்துடன் சில அடிகள் முன்னே வைத்து பத்திரையின் அருகில் வந்து நின்றவன் வானவல்லியைப் பெரும் ஆர்வத்துடன் நோக்கினான்.

“அண்ணா... பத்திரையே அறியாத பெரும் இரகசியம் ஒன்றை நான் இப்போது தங்களிடம் கூறப் போகிறேன். சோழ நாட்டிற்கு ஆதரவாக வாளினை உயர்த்த அழுந்தூர் இளவரசர் வளரத் தொடங்கிவிட்டார்” எனக் கூறியவள் பத்திரையின் வயிற்றில் கைவைத்து மகிழ்ச்சியுடன் தெரிவித்தாள்.

அவள் கூறியதைக் கேட்ட காளன் பெரும் திகைப்புடன், “வானவல்லி... நீ... கூறுவது...” எனப் பெரும் மகிழ்ச்சியில் திக்குமுக்காடி பேச இயலாமல் திணறினான்.

“ஆம் அண்ணா... பத்திரை உங்களது கருவைச் சுமக்கத் தொடங்கி

விட்டாள். உங்கள் குழந்தைக்கு வயது இப்போது மூன்று கிழமைகள். இவள் அடிக்கடி மயங்கி விழுகிறாள். உடல் நலக் குறைவு எனக் கூறினீர்கள் அல்லவா? அனைத்தும் நல்லதற்கான அறிகுறியே" எனத் தெரிவித்தவள் பத்திரையை அணைத்து உச்சி முகர்ந்தாள்.

காளனது மனம் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தது. பத்திரையின் மீது அவன் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறான் என்பதைக் காட்ட அவனது மனம் துடித்தது. இருப்பினும் வானவல்லியின் இருப்பை நினைத்த காளன் அமைதியாகவே நின்று கொண்டு பத்திரையின் முகத்தையே காதலுடன் நோக்கிக் கொண்டிருந்தான்.

"அண்ணா, இவளது முகத்தைப் பாருங்கள். வெளிறிப் போய் இருக்கிறது. பதற்றத்தில் இவளது முகம் துளித் துளியாய் வியர்வைத் துளிகளை வெளியேற்றியிருக்கிறது. இவள் மயங்கி விழுந்ததும்

இவளைத் தூக்கிக் கொண்டுவந்து பஞ்சணையில் கிடத்திவிட்டுச் சென்றீர்கள் அல்லவா, அப்போது இவளது நாடியைப் பிடித்துப் பார்த்தேன். பெரும் சந்தேகம் எழுந்தது, பிறகு கிடைத்த சிறு இடைவெளியில் இவளைப் பரிசோதனை செய்து விட்டேன். நான் கூறுவது சத்தியம். இன்னும் சில கிழமைகளில் இவளே அறிந்துகொள்ளப் போகிறாள்!" எனக் கூறியவள் பிறகு, "அண்ணா... நான் மருத்துவம் கற்றுக் கொண்டதால் என் தமையன், செங்குவீரர் மற்றும் கரிகாலனின் காயங்களைக் குணப் படுத்தியிருக்கும் போது பெரும் மன நிறைவை அடைந்திருக்கிறேன். ஆனால், என் தோழியின் கற்பத்தை அறிந்து கொண்ட இன்றுதான் என் மருத்துவத்தை எண்ணிப் பெருமிதமடைகிறேன்" எனக் கூறியபோது வானவல்லியின் விழிகளில் மீண்டும் கண்ணீர்ப் பெருக்கு அதிகமாகியது. அது பத்திரையின் கர்ப்பத்தினால் ஏற்பட்ட ஆனந்தக் கண்ணீரா அல்லது செங்கு

https://telegram.me/aedahamlibra

வீரனின் இறப்பை எண்ணி வருத்தத் தினால் வரும் கண்ணீரா எனப் பத் திரை மற்றும் காளன் இருவராலும் அறிய இயலவில்லை. கண்ணீரைத் துடைத் துக் கொண்ட வானவல்லி, பத்திரையின் காதில் ஏதோ குசு குசுவென்று கூறத் தொடங்கினாள்.

வானவல்லி கூறக் கூற பத்திரை யின் முகம் நாணத்தில் சிவந்து அவளது முகப் பொலிவு இன்னும் அதிகமாகியது.

“பொழுது புலர்வதற்கு முன் கருக் கள் பொழுதில் நான் உறைந்தையிலி ருந்து புறப்படுகிறேன் அண்ணா. யுவரா ஜனுக்கு என் மீது பெரும் சந்தேகம் நில வுகிறது. பொழுது புலர்ந்து பரிதி வெளிச் சத்தில் என்னை அடையாளம் கண்ட றிந்துவிடவும் வாய்ப்பு அதிகம். எனக்கு இப்போது ஓய்வு தேவை! பெரும் மகிழ்ச் சியாக உறங்கப்போகிறேன்” எனக் கூறிய வள் அங்கிருந்து நடக்கலானாள்.

https://telegram.me/aedahamlibra

உடனே வானவல்லியைத் தடுத்து நிறுத்திய காளன், “வானவல்லி, நாளை காலை நீ புறப்படும்போது பத்திரையையும் உன்னுடன் அழைத்துச் சென்றுவிடு!” எனக் கட்டளையிடலானான்.

“அண்ணா???”

“ஆம் வானவல்லி. நான் எந்தச் சூழலில் வேண்டுமானாலும் என்னை வெளிப்படுத்திக் கொண்டு இங்கிருந்து வெளியேற வேண்டி வரலாம். ஆனால், அப்போது பத்திரை உறைந்தையில் இருந்தால் பெரும் ஆபத்தாகிவிடும். அதுவும் இவள் இப்போது என் கருவை வேறு சுமக்கத் தொடங்கியிருக்கிறாள். இச்சூழலில் இவள் புகாரில் பாதுகாப்பாக இருப்பதே சிறந்தது. வேளக்காரப் படைத் தலைவன் விரைவில் புகார் வந்து சேனாதிபதி பொறுப்பினை ஏற்றுக் கொள்வான் என்று மட்டும் தெரிவி!” எனத் தீர்க்கமாகக் கட்டளையிட்டான் காளன்.

'வேளக்காரப் படைத் தலைவன்' என்ற சொல்லைக் கேட்டதுமே பணிந்த வானவல்லி, "நிச்சயம் தங்கள் உத்தரவை அப்படியே இளவலிடம் தெரிவித்துவிடு கிறேன். தாங்களே தங்களை வெளிப்ப டுத்திக் கொள்ளும்வரை தாங்கள் யார் என்று நிச்சயம் நான் தெரியப்படுத்த மாட் டேன்!" எனப் பணிவுடன் கூறியவள் அங் கிருந்து வெளியேறினாள்.

அவள் அந்த அறையிலிருந்து தொலைவில் நகர நகர அவளது விழி கள் மீண்டும் கண்ணீர் குலமாகப் பெரு கத் தொடங்கியது. வழிந்த கண்ணீரை முந்தானை முகப்பினால் துடைத்தபடியே அருகிலிருந்த அறைக்குள் சென்ற வான வல்லி தாழினைப் போட்டுக் கொண்டு பஞ்சணையில் தொப்பென்று விழுந் தாள்.

https://telegram.me/aedahamlibra

# 23. இருப்பது ஓர் இரவு மட்டுமே!

பஞ்சணையிலிருந்த எழுந்த பத்திரை எதிரில் நின்ற காளனை கடைக்கண் பார்வையில் நாணத்துடன் நோக்கலானாள். காளன் அவளது முகத்தையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தான். நாணத்தில் தலையைக் குனிந்து கொண்டாள் பத்திரை. மகிழ்ச்சியில் அவளது முகம் துளித் துளியாய் வியர்வைத் துளிகளை வெளியேற்றியிருந்தது. தென்றல் அறைக்குள் குளிர்ச்சியுடன் நுழைய, இரவு விளக்கிலிருந்து சீரான வெளிச்சம் கசிந்து கொண்டிருந்தது. அந்த வெளிச்சத்தில் அவளது அழகு வாய்ந்த முகத்தை நோக்

https://telegram.me/aedahamlibra

# 23. இருப்பது ஓர் இரவு மட்டுமே!

பஞ்சணையிலிருந்த எழுந்த பத்திரை எதிரில் நின்ற காளனை கடைக்கண் பார்வையில் நாணத்துடன் நோக்கலானாள். காளன் அவளது முகத்தையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தான். நாணத்தில் தலையைக் குனிந்து கொண்டாள் பத்திரை. மகிழ்ச்சியில் அவளது முகம் துளித் துளியாய் வியர்வைத் துளிகளை வெளியேற்றியிருந்தது. தென்றல் அறைக்குள் குளிர்ச்சியுடன் நுழைய, இரவு விளக்கிலிருந்து சீரான வெளிச்சம் கசிந்து கொண்டிருந்தது. அந்த வெளிச்சத்தில் அவளது அழகு வாய்ந்த முகத்தை நோக்

கியபடியே காளன் அவளை நோக்கி இரண்டடி முன்வைத்து நெருங்கி வந்தான். தரையை நோக்கிக் கொண்டிருந்தவளின் முகத்தை உயர்த்திய காளன் அவளது விழிகளைத் தனது பார்வையால் ஊடுருவினான். அவளோ வெட்கத்தில் முகத்தை மூடிக் கொண்டாள். மூடியிருந்த கைகளை விளக்கினான் காளன். மெல்ல அவனை நோக்கியவள், "அத்தான்!" என அழைத்தபடியே அவனது மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

காளனும் அவளை அணைத்துக் கொண்டான். இருவரும் அவர்களை மறந்து அணைத்தபடி நின்று கொண்டிருந்தனர். மனதில் தோன்றிய மகிழ்ச்சியும், உடலில் ஓடிய உணர்ச்சிப் பெருக்கும் சேர்ந்து இருவரையும் தன்னிலையையும் மறக்கடிக்கச் செய்திருந்தன. அணைப்பிலிருந்து பத்திரையை விடுவித்த காளன் அவளது முகவாயை உயர்த்தி, "பத்திரை" என அவள் மட்டுமே கேட்கும்படி அழைத்தான்.

"ம்ம்ம்" என மட்டும் பதிலளித்தாள் அவள்.

அந்த 'ம்ம்ம்' என்ற சொற்கள் அவனை என்ன செய்ததோ தெரியவில்லை. அவளைச் சற்று இறுக்கமாக அணைக்கலானான். பத்திரை மூச்சுவிடச் சிரமப்பட்டாள்."கள்வரே, இத்தனை நாட்களாக நாம் மட்டுமே இருந்தோம் தங்கள் விருப்பபடி அணைத்தீர்கள். நான் தாங்கிக் கொண்டேன். ஆனால் இன்று நமக்கிடையில் தங்களது மகனும் வளரத் தொடங்கிவிட்டான். கவனம்!" எனக் கொஞ்சலுடன் கூறியபடி அவனது அணைப்பிலிருந்து விலகியவள் பஞ்சணையில் அமர்ந்து கொண்டாள்.

"மகனா?" ஆச்சர்யத்துடன் வினவினான் காளன்.

"ஆமாம். சோழ நாட்டிற்கு ஆதரவாக வாளினை உயர்த்த அழுந்தூர் இளவல் கருவில் உதித்துவிட்டார் என்று

சற்று முன்தானே வானவல்லி தெரிவித்தாள்?”

பஞ்சணையில் அமர்ந்திருந்த பத்திரைக்கு முன் மண்டியிட்ட காளன், “பத்திரை என்னை நீ பெருமைப் படுத்தி விட்டாய்!” எனக் கூறியபடியே அவளது மடியினில் தனது முகத்தைப் புதைத்துக் கொண்டான்.

அவனது தலை முடியைக் கோதியபடியே, “பெருமை படவேண்டியது தாங்கள் அல்ல. நான் தான்! என் பிறவிப் பயனை நிறைவேற்றி என் பெண்மையை முழுமையடையச் செய்தவர் தாங்கள் தான்! நன்றிக்கடன் பட்டவள்” எனத் தெரிவித்தாள் பத்திரை.

அவள் கூறியதைக் கேட்டதும் நெகிழ்ச்சியடைந்த காளன், “நான்தான் உனக்குப் பெரும் நன்றியைக் கூற வேண்டும் பத்திரை. அடிபட்டுப் புகாரில் கிடந்த வேளையில் மருந்திட்டு என் உயிரைக் காத்தவள் நீ. இன்று என் உயிரை

யும் நீதான் சுமந்து கொண்டிருக்கிறாய். எந்த முகாந்திரமும் இல்லாமல் கள்வனான என் மீது காதல் கொண்ட என் தேவதை நீயல்லவா? எந்தப் பிறப்பில் செய்த நற்பயனோ தெரியவில்லை. இப்பிறப்பில் உன்னை நான் அடைந்திருக்கிறேன்" எனக் கூறியபடியே அவளது மடியில் தனது முகத்தை இன்னும் அழுந்த புதைத்துக் கொண்டான்.

பத்திரை பதிலுக்கு எந்தப் பதிலையும் கூறாமல் அவனது தலை முடியைக் கோதிக் கொண்டிருந்தாள். அவளது மடியிலிருந்து எழுந்த காளன் எரிந்து கொண்டிருந்த விளக்கின் திரியை அதிகமாக்கியதோடு அல்லாமல் அதனருகில் ஏற்றாமலிருந்த இன்னொரு விளக்கையும் ஏற்றுவிட்டு மீண்டும் பத்திரையின் அருகில் அமர்ந்து கொண்டான். பஞ்சணையில் தொங்கியபடி கிடந்த பத்திரையின் கால்களைத் தூக்கிய காளன் தனது மடியில் போட்டுக் கொண்டு அவளது கால்களை மெல்ல பிடித்துவிடலானான்.

அவனது செய்கையைப் பார்த்துப் பதறிய பத்திரை, "அத்தான் என்றும் இல்லாத பழக்கம். என்ன இது? தாங்கள் என் கால்களைப் பற்றலாமா?" எனக் கூறிக் கொண்டு பஞ்சணையில் சாய்ந்தபடி கால்களை வெடுக்கென்று இழுத்துக் கொண்டாள்.

கால்களை இழுத்துக் கொண்டாலும் அவளை விடாத காளன் அவள் மீது சாய்ந்தபடி படுத்துக் கொண்டு அவளது வயிற்றில் முகத்தைப் புதைத்துக் கொண்டான். அவள் இன்பத்தில் செயலற்றுப் பஞ்சணையில் கிடந்தாள். தலையைத் தூக்கிய காளன்"பத்திரை, என் வாழ்வில் மகிழ்ச்சிகரமான நாள் எதுவென்று கேட்டால் இன்றைய தினத்தைத் தான் கூறுவேன் நான். இன்றைய தினத்தைவிட வேறெந்த நாளும் எதிர் காலத்தில் எனக்கு மகிழ்ச்சியை அளிக்கப்போவதில்லை. என்னை முழுமையடையச் செய்த நாள் இது. எனது மகன் எதிர்காலத்தில் எப்படியெல்லாம் இத்தர

ணியில் வளம் வருவான் தெரியுமா?” என அவளது வயிற்றைத் தடவியபடியே வின வினான்.

“எப்படி உங்களைப் போன்றுதானே உங்கள் மகனும் இருப்பான்?” எனச் சிரித்தபடி கூறியவள் அவனது தலை யைக் கோதிவிட்டு அவளது அன்பையும் வெளிப்படுத்தலானாள்.

“நிச்சயமாக இல்லை பத்திரை. என் மகனை நான் என்னைப் போன்று வளர்க்க மாட்டேன். என்னைப் போன்று கள்வன் என்று பெயர் எடுக்க மாட் டான் அவன். அக்காவின் மகனுக்குத் துரோகம் இழைத்து எதிரிகளுடன் கூட்டு சேர்ந்துவிட்டான் என்று மக்கள் கூறும்படி அவனை நான் நிச்சயம் வளர்க்க மாட் டேன்!”

“தாங்கள் கள்வன் என்று மற்றவர் களிடம் பெயர் எடுத்திருந்தாலும் உண் மையில் தாங்கள் பெரும் வீரர் அல்லவா? கொண்ட இலட்சியத்திற்காகத் தானே

தாங்கள் துரோகி வேடத்தைத் தரித்திருக்கிறீர்கள்? அதிலும் இளவலே தலை வணங்கும் வேளக்காரப் படைத்தலைவர் அல்லவா தாங்கள்! இந்தக் கள்வர் வேடமும் இளவலைக் காக்கவும், எதிரிகளை அழிக்கவும் தானே! பிறகு எதற்கு அத்தான் வருத்தம்?"

"இல்லை பத்திரை. என் மகன் நிச்சயம் என்னைப் போன்று எதிர்காலத்தில் இருக்கக் கூடாது!"

"பிறகு யாரைப் போன்று உங்களது மகன் வளர வேண்டும் என எண்ணுகிறீர்கள்?"

"என் நண்பன் திவ்யனைப் போன்று!" எனக் கூறிக் கொண்டிருந்தபோதே குறுக்கிட்ட பத்திரை, "வானவல்லியின் தமையனைப் போன்றா இருக்க வேண்டும் என விரும்புகிறீர்?" என வினவலானாள்.

“ஆமாம் பத்திரை. என் நண்பன் திவ்யன் மற்றும் உபதலைவன் செங்குவீ ரனைப் போன்று என் மகனும் எதிர்கா லத்தில் பெரும் வீரனாக வளம் வருவான். வீரத்தில் எவராலும் வெல்ல இயலாத படி பெரும் அசகாயசூரனாக இருப்பான். அவனது பார்வையைக் கண்டே எதிரி கள் புறமுதுகிட வேண்டும். நாட்டுக்காக உயிரைக் கொடுத்த நான் இழந்து விட்ட எனது நண்பர்களைப் போன்று அவனும் சோழ தேசத்தையே முதன்மையாகக் கருத வேண்டும்” என உணர்ச்சி வசப்பட் டுக் கூறினான் காளன்.

“இது மட்டும் தானா?”

“இன்னும் இருக்கிறது பத்திரை!”

“அப்படியெனில் கூறுங்களேன்!”

“இன்றிரவே அனைத்தையும் நான் கூறிவிட வேண்டுமா?”

“இன்று ஓரிரவு மட்டும்தானே நான் இங்கிருக்கப் போகிறேன்!”

அவளது முகத்தருகே அவனது முகத்தைக் கொண்டு சென்ற காளன், "இன்று மட்டும் தானா?" என வினவி னான்.

"தாங்கள் தானே கட்டளையிட்டீர் கள்? நாளை காலை நான் வானவல்லி யுடன் புகாருக்குச் சென்றுவிட வேண்டும் என்று? ஆதலால் தான் கேட்கிறேன். நீங் கள் இல்லாத சமயத்தில் என் மகனிடம் நான் 'உன் தந்தை உன்னை எப்படியெல் லாம் வளர்க்க வேண்டும் என்று ஆசைப் பட்டார் தெரியுமா?' என்று தினமும் உரை யாட வேண்டும் அல்லவா? ஆதலால் தான் கேட்கிறேன்!"

"ஆமாம் பத்திரை நான் தான் கட் டளையிட்டேன். ஆனால், உன்னைப் பிரிந்து உன் அழகு முகத்தைத் தினமும் பார்க்காமல் நான் எப்படிப் பத்திரை என் காலத்தைக் கழிக்கப் போகிறேன்!"

"இன்னும் சில காலங்கள் தானே அத்தான்! அதன் பிறகு நீங்களும் புகார்

https://telegram.me/aedahamlibra

வந்துவிடுவீர்கள் அல்லவா? உங்களது பணியை வெற்றிகரமாக நிறைவேற்றி விட்டு வாருங்கள். உங்களுக்காக நானும் நமது மகனும் காத்திருக்கிறோம்!”

“நீயும் முடிவு செய்துவிட்டாய்? நமக்குப் பிறக்கப் போவது மகன் தான் என்று?”

“தலைவருக்கு அதில் என்ன சந்தேகமாம். நீங்கள் ஆண் மகவையே எதிர்பார்க்கிறீர். நானும் அப்படியே எதிர் பார்க்கிறேன். நம் விருப்பத்தைத் தானே நமது குழந்தையும் நிறைவேற்றும்!” எனப் பத்திரை கூறிக் கொண்டிருந்த போதே அவள் மேற் கொண்டு பேச இயலாமல் அவளது அதரத்தில் தனது இதழ்களைப் பதித்தான் காளன். அவள் அவனை நன்கு புரிந்து வைத்திருந்ததைக் கண்டு பெரும் மன நிறைவு கொண்டான்.

“பத்திரை ஒரு வேளை நம் எதிர் பார்ப்பிற்கு மாறாக நமக்குப் பெண் குழந்தை பிறந்துவிட்டால்...?”

"என் தோழி வானவல்லியும் பெண் தானே! அவள் இன்று வீரமாக இல்லை! அவளைப் போன்று நம் குழந்தையையும் நாம் வளர்த்துவிடுவோம்!"

காளன் எதுவும் கூறாமல் அவளது முகத்தையே பார்த்துக் கொண்டிருந் தான். இருவரது மூச்சுக் காற்றும் ஒன்றை யொன்று சந்தித்துக் கொண்டன.

"சரி நீங்கள் மேற் கொண்டு கூறுங் கள் அத்தான். உங்களது மகன் எப்படித் தரணியில் வளம்வர வேண்டும் என்று?"

"கூறுகிறேன் பத்திரை..." எனக் கூறி ஆழ்ந்த மூச்சு ஒன்றை இழுத்து விட் டுக் கொண்டான். பிறகு, "என் மகன் திரையன்..." எனக் கூறிக் கொண்டிருந்த போதே இடைமறித்த பத்திரை, "திரை யனா?" என வினவினாள்.

"ஆமாம். திரையன் தான். என் மக னுக்கு நான் சூட்டப்போகும் பெயர் திரை யன்!"

"உங்கள் பெயர் இளந்திரையன். உங்களது மகனது பெயர் திரையனா???"

"ஆமாம். அது நம் நாட்டு மரபு தானே பத்திரை, தந்தை பெயரை மகனுக்கும் சூட்டுவது. சென்னி, நன்னன், வளவன் எனப் பல பெயர்களைக் உதாரணத்திற்குக் கூறலாமே! நான் திரையன் என்று சூட்டுகிறேன். அவனுக்கு எந்தப் பெயர் பிடிக்கிறதோ அதைத் தனது பெயருடன் சேர்த்துக்கொள்ளட்டும்..." எனக் கூறிக் கொண்டிருந்த போதே குறுக்கிட்ட பத்திரை அவனது காதோரம், "அத்தான் இருப்பது ஒரு இரவு மட்டுமே. அதை இப்படிப் பேசியே தவிர்க்கப் போகிறீர்களா?" எனக் கொஞ்சம் மொழியில் அவனது காதோரம் கிசிகிசுத்தாள்.

பிறகு, "நம் மகன் திரையனைப் பற்றி விரைவில் கூறுங்கள்!" கட்டளையிடும் தொனியில் அதிகாரத்தில் பேசினாள் பத்திரை.

“நம் மகன் திரையன் புரவியில் வளம் வந்தால் அவனது எதிரிகள் அனைவரும் பதுங்கிக்கொள்ள வேண் டும். அவன் கம்பீரத்துடன் புகார் வீதிக ளில் வளம் வருகையில் புகார்ப் பெண்க ளும், மேலை நாட்டுப் பெண்களும் அவ னைக் கண்டு ஏங்க வேண்டும். புகார் ஆடவர்கள் அவனைப் பார்த்து பொறா மைப்பட வேண்டும். எத்தனை பெண்கள் அவனைச் சுற்றி வந்தாலும் அவன் ஒழுக் கம் தவறாத வீரனாக வளம் வரவேண் டும்” எனக் கூறியதும் அவனது தலையில் செல்லமாக ஒரு கொட்டு வைத்த பத் திரை, “அதற்குள் நினைப்பு எங்கே செல் கிறது பார்!” எனக் கூறியதோடு மட்டுமல் லாமல் அவனது தலையை முன்புறமாக அழுத்தி அவனது நெற்றி, முகம், கன்னம் எங்கும் அன்போடு முத்தமிடலானாள். காளனும் தனது கைகளை அவளது உட லில் படரவிட்டபடி அவளுக்கு முத்தமிட் டவன், “பத்திரை, வானவல்லி புறப்பட்டுச் செல்லும்போது உன்னிடம் ரகசியமாகக்

காதோரம் எதையோ கூறிவிட்டுச் சென் றாலே, நான் அறியக்கூடாத ரகசியமா அது?" என வினவலானான்.

"நீங்கள் நிச்சயம் அறிந்துகொள்ள வேண்டியதுதான்!"

"நான் அறிந்துகொள்ள வேண்டி யதா?"

"ஆம்!"

"பிறகு எதற்கு வானவல்லி உன் னிடம் மட்டும் தெரிவித்துவிட்டுச் சென் றாள்? என்னிடமும் கூற வேண்டியது தானே!"

"அது உங்களிடம் கூறுவதற் கில்லை."

"குழப்பாதே பத்திரை!"

"அத்தான்... வானவல்லியால் அதை உங்களிடம் கூற இயலாது. அந்த ரங்கமானது!" எனக் கூறியவள் காளனது

காதோரம் யாராலும் கேட்க இயலாதபடி வானவல்லி கூறியதைத் தெரிவித்தாள்.

அவள் கூறியதைக் கேட்டதும், "ஓ... இதுதானா செய்தி!" எனக் கூறி புன்னகைத்தவன் அவளது இதழ்களை மீண்டும் சுவைக்கத் தொடங்கினான். மாலையில் காளனுக்காக மலர்ந்திருந்த அவளது புஷ்பங்கள் இரண்டையும் நாடி அவனது கரங்கள் அடிவயிற்றிலிருந்து ஊர்ந்தன. மலரினுள் தேனெடுக்கும் தும்பியைப் போன்று மென்மையாக அவளைக் கையாளத் தொடங்கினான் காளன். இதற்கு முன் காணப்பட்ட முரட்டுத்தனம் அவனிடம் சிறிதளவும் இல்லை. பத்திரையை முத்தமிட்டபடியே அவளைத் தன் மீது இழுத்துப் போர்த்தி அணைத்துக் கொண்டான்.

காளனுக்கு வசதியாகப் பத்திரையும் அவளது ஆடைகளைத் தளர்த்தி விட்டுக் கொண்டாள்.

https://telegram.me/aedahamlibra

# 24.

# கரிகாலன் எங்கே?

கார்மேகக் கன்னிகள் புடை சூழ பரிதி மேற்கில் சாய்ந்து கொண்டிருந்தான். கார்மேகத்தைக் கிழித்துக் கொண்டு வந்த செங்கதிர்கள் குணக் கடலில் பட்டு எதிரொளித்துக் கொண்டிருந்தது. செங்குவீரனின் படைதளப் பாசறையான குன்றுத் துறையில் வீரர்கள் கடுமையாகப் பயிற்சிகளைச் செய்து கொண்டிருந்தார்கள். வேல்கள் உராயும் சத்தமும், வாட்கள் மோதிக்கொள்ளும் சத்தமும் சேர்ந்து அவ்விடத்தைச் சிறு போர்க்களம் போன்றே காட்சிப்படுத்திக் கொண்டிருந்தது. போர் அணிவகுப்பு, தாக்கு

தல் முறை, போர்க் களத்தில் ஊதப் படும் சங்குகளுக்கு என்னென்ன அர்த் தம், அசைக்கப்படும் கொடிகள் கூறும் பொருள் எனப் போர் பயிற்சிகளின் அடிப்படைகள் அனைத்தையும் புதிதா கத் திரட்டப்பட்டிருந்த வீரர்களுக்குக் கற் பித்துக் கொண்டிருந்தனர் புகார் உபப டைத் தளபதிகளான டாள்தொபியாஸ், திருக்கண்ணன் மற்றும் பரதவன் குமரன். குன்றுத் துறை முழுக்க வாட்கள் மோதும் சத்தம் எதிரொலித்துக் கொண்டிருந் தது என்றால் செங்குவீரனின் அறையில் மூன்று பெண்களின் ஓயாத சிரிப்புச் சத் தம் எழுந்து அவ்விடத்தை அல்லோல கல்லோலப் படுத்திக் கொண்டிருந்தது.

நீண்ட நாட்கள் பிரிந்திருந்த தோழி களான வானவல்லி, பத்திரைத் தேவி மற் றும் மரகதவல்லி மூவரும்தான் சேர்ந்து அரட்டை அடைத்து அந்த மாலைப் பொழுதை இன்பமுடன் கழித்துக் கொண்டிருந்தனர். பத்திரையும், மரகத வல்லியும் அவர்களின் காதலர்கள் செய்த இன்பச் சேட்டைகளை வெட்கத்துடன் தத்தம் தோழியற்குப் பகிர்ந்து கொண் டதே அந்தச் சிரிப்பிற்குக் காரணம் ஆகும். இருவரும் கூறியதைக் கேட்

https://telegram.me/aedahamlibra

டதும் வானவல்லி, “ஊருக்கு பெரும் வீரர்களாக இருந்தாலும் பஞ்சணையில் பணிந்தால் தான் அவர்களின் காரியம் நிறைவேறும் என்பதை அவர்களும் அறிந்தவர்கள் தானே!” எனக் கூற மீண்டும் அங்குப் பெரும் சிரிப்புச் சத்தம் எழுந்தது.

அப்போது மரகதவல்லி, “அக்கா, அவர் எங்கே?” என வினவினாள்.

“யாரை மரகதவல்லி கேட்கிறாய்?”

“அவரைத்தான்!”

அவள் யாரைப் பற்றி வினவுகிறாள் என்பதைப் புரிந்தும் பத்திரை, “அவரை என்றால் நாங்கள் யாரை வல்லி அறிவோம். இங்கு எத்தனை அவர்கள் இருக்கிறார்கள்?” என மரகதவல்லியை சீண்டினாள்.

“அக்கா, விளையாடாதீர்கள். அவரைச் சந்தித்துக் கிழமைகள் கடக்கப் போகிறது!”

“சற்று முன்தானே தெரிவித்தாய். அவனது தொந்தரவு அதிகமாக இருக்கிறது என்று!” என விசமப் புன்னகையுடன் வினவினாள் வானவல்லி.

“வானவல்லி, இதைதான் நம் ஊரில் கண்டால் நடுங்குகிறது. காணாவிட்டால் தேடுகிறது என்பார்கள்!” என்றாள் பத்திரைத் தேவி.

“அக்கா, அவரைக் கண்டு நான் எப்போதுமே நடுங்கியதில்லை. அவரது பிரிவே என்னை வாட்டுகிறது!”

“சற்று முன் ஏதோ தெரிவித்தாய்?”

“அக்கா....” சிணுங்கியபடி வானவல்லியின் தோளில் சாய்ந்து கொண்டாள் மரகதவல்லி.

“பத்திரை. பாவம் இவள். இவளே என் தம்பியைக் காணவில்லை என்ற ஏக்கத்தில் இருக்கிறாள். நீ வேறு இவளைப் படுத்தாதே!”

“அக்கா... ஏக்கம் எல்லாம் ஒன்றும் இல்லை. அவரைக் காணாத வருத்தம் மட்டும்தான்!”

“வானவல்லி, இவளுக்கா நீ பரிந்து பேசுகிறாய்!” எனக் கூறியபடி தலையில் சூடியிருந்த மலர்ச் சரத்தை உருவி மரகத வல்லியின் மீது எறிந்தாள் பத்திரை.

அவர்களின் சண்டையைச் சிறிது நேரம் விலகி நின்று ரசித்துக் கொண் டிருந்த வானவல்லி பிறகு, “மரகதவல்லி, சில தினங்களுக்கு முன் வஞ்சியிலிருந்து புகாருக்குச் செல்லும் வழியில் கரிகாலன் என்னைச் சந்தித்துவிட்டுச் சென்றான். அதன் பிறகு அவனைப் பற்றிய எந்தச் செய்தியும் எனக்குக் கிடைக்கவில்லை. நான் டாள்தொபியாசிடம் விசாரித்துப் பார்க்கிறேன். உனக்கு எந்தக் கவலையும் வேண்டாம்!” எனத் தெரிவித்தாள்.

“சரி அக்கா... விபரீத முயற்சிகளை அவர் எடுக்கிறாரோ எனக் கூடச் சில நேரம் எனக்குத் தோன்றுகிறது. உங்களி

https://telegram.me/aedahamlibra

டம் தெரிவிக்காமல் கூட அவர் அப்படி எங்குச் சென்றிருக்கிறார் அக்கா? அன்று கொற்கைக்கு மாறுவேடத்தில் சென்று நம் படைத் தலைவரை தொலைத்து விட்டு வந்தார். இன்று எங்கு யாரைத் தொலைக்கச் சென்றிருக்கிறாரோ? சில நேரம் அவரை எண்ணினாலே எனக்கு வெறுப்புதான் அக்கா மிஞ்சுகிறது!" எனக் கூறிய மரகதவல்லியின் விழிக ளில் இருந்து கண்ணீர் தாரை தாரையாக வழிந்து கொண்டிருந்தது.

அவளது கண்ணீரைத் துடைத்து விட்ட வானவல்லி, "கலங்க வேண்டாம் பத்திரை. கரிகாலன் எந்தப் பணியைச் செய்தாலும் அதில் ஓர் அர்த்தம் இருக் கும். விரைவில் அவன் வந்துவிடுவான். கவலை வேண்டாமடி! நாளை சோழ நாட்டையே கட்டியாளப் போகிறவள். இந்தச் சிறு நிகழ்வினை எண்ணி இப் படிக் கண்ணீர் சிந்தலாமா?" என அவ ளுக்கு ஆறுதல் வழங்கினாள்.

https://telegram.me/aedahamlibra

"எது அக்கா சிறு நிகழ்வு நம் படைத்தலைவரை நாம் தொலைத்து விட்டிருப்பதையா?" கோபமாகச் சொற்கள் வெளிவந்தது மரகதவல்லியிடமிருந்து.

"அடியே, அது விதி. அதற்குக் கரிகாலன் என்ன செய்வான்! நானே அவரது இழப்பினை ஏற்றுக் கொண்டு என் எதிர்காலத்திற்காக என்னைத் தயார்படுத்திக் கொண்டுவிட்டேன். நீ எதற்கடி இன்னும் அவரை எண்ணியே வருந்திக் கொண்டிருக்கிறாய். உங்கள் இருவருக்காகவும் அம்மா காத்திருப்பார். பத்திரை வயிற்றுப் பிள்ளைக்காரி காரிருள் சூழ்வதற்குள் நீ நம் மாளிகையை அடைந்துவிடுவதே உத்தமம். இருவரும் புறப்படுங்கள்! முதல் சாம இறுதியில் அல்லது காலையில் நான் வருவேன் எனத் தெரிவித்துவிடு!"என வானவல்லி தெரிவித்ததும் அடுத்தக் கணமே பத்திரை மற்றும் மரகதவல்லி இருவரும் அங்கிருந்து விடைபெற்றுச் செல்லலானார்கள்.

https://telegram.me/aedahamlibra

"யார் அங்கே!" என வினவினாள் வானவல்லி.

அவளது குரல் எழுந்ததுமே வெளியே காவல் காத்துக் கொண்டிருந்த பெரியவர் ஒருவர் ஓடி வந்து அவளுக்கு முன் கம்பீரமாக நின்றார்.

அவரைப் பார்த்த வானவல்லி, "அய்யா, ஓர் உதவி!"என மரியாதையுடனே அழைக்கலானாள்.

"தங்களது கட்டளை எதுவானாலும் அதனை நிறைவேற்ற சித்தமாக இருக்கிறேன்!" பணிவுடன் தெரிவித்தார் அவர்.

"உபபடைத் தலைவர்கள் டாள் தொபியாஸ், பரதவன் குமரன் மற்றும் திருக்கண்ணன் ஆகியோரை நான் இப்போதே சந்திக்க வேண்டும். பயிற்சிப் பாசறையிலிருந்து யாரையாவது அனுப்பி அழைத்துவரச் சொல்லுங்களேன்."

https://telegram.me/aedahamlibra

“நானே சென்று கையேடு அழைத்து வருகிறேன் தேவி.”

“உங்களுக்கு எதற்கையா சிரமம். தாங்கள் ஓய்வெடுக்கலாமே!”

“தாயே, எனது முகத்தில் தோன்றியிருக்கும் நரையைப் பார்த்து என் வலிமையைத் தாங்கள் எடைபோட வேண்டாமே! இப்போதும் இளவட்டக் கல்லைத் தூக்கி எறியும் வல்லமை எனக்கு உண்டு!” எனக் கம்பீரத்துடன் கூறியவர் அவளது பதிலை எதிர்பாராமலே அங்கிருந்து செல்லலானார்.

மனதை எப்படியெல்லாம் அலையவிட்டாலும் எங்காவது ஏதாவது ஒரு தோற்றத்தில் விறல்வேல் அவளது மனதில் தோன்றி அவளை வருத்திக் கொண்டிருந்தான். வெளிப்போக்கிற்குக் கடந்த காலத்தையும், செங்குவீரனையும் மறந்துவிட்டதாகத் தெரிவித்துக் கொண்டாலும் மனதினுள் அவள் ரணமாகத் தவித்துக் கொண்டிருந்தாள். மீண்டும்

விழிகளில் கண்ணீர் பெருக்கெடுக்கக் குன்றுத் துறையின் உச்சியில் இருந்த அந்த அறையின் சாளரத்தில் நின்று கொண்டு பார்வையைப் புகாரை நோக்கியும் குணக்கடலை நோக்கியும் செலுத்தினாள். கதிரவனின் செங்கதிர்களாலும், மாலை நேரத்து விளக்கொளிகளாலும் புகார் கட்டிளங் காளையைப் போன்ற கம்பீரத்துடன் வீற்றிருந்தது. குணக் கடலில் மேலை நாட்டுக் கலங்கள் பலவும் வரிசையாக நின்று கொண்டு அலைகளின் ஏற்றத் தாழ்வுக்கு ஏற்ப மிதந்து கொண்டிருந்தன. மரக்கலங்கள் நிறைந்த குணக் கடலையும், பெரும் மாளிகைகளால் ஆன அந்தப் பெரும் பட்டினத்தையும் பார்த்தபோது இயல்பாகவே அவளது மனதில் பெரும் கம்பீரம் தோன்றிவிட்டுச் சென்றது.

அந்தக் கம்பீரத்துடன் அந்தப் பட்டினத்தை நோக்கும்போதுதான் அதனைக் கண்டாள் வானவல்லி. பட்டினத்தின் மதில் சுவரோரம் ஆங்காங்கே பிரமாண்

டமான தூண் வடிவக் கட்டிடங்கள் கட்டுமானப் பணியில் இருந்தன.

“இத்தனை நாட்களாக இந்தத் தூண்களை எப்படி நான் கவனிக்காமல் போனேன்?” எனத் தனக்குத்தானே கேள்வி கேட்டுக் கொண்டு கழுத்தினில் அணிந்திருந்த முத்து மாலையை நோக்கிக் கையைக் கொண்டு சென்றாள். கழுத்தில் முத்துமாலை இல்லாததால் திடுக்கிட்ட வானவல்லி ‘தலைவரின் முத்து மாலையை எங்கே வைத்தேன்?’ என முணுமுணுத்தபடி அந்த அறை முழுவதிலும் தேடலானாள். முத்து மாலை கிடைத்தபாடில்லை.

‘முத்து மாலையை எங்கே வைத்தேன்? பெரும் முட்டாள் நான்’என அவளையே வசை பாடியவளது கண்களில் கண்ணீர் பெருக்கெடுக்க ஆரம்பித்தது. அறை முழுவதும் தேடியும் கிடைக்காததால் செங்குவீரனின் வைப்புழியில் கையைவிட்டுத் தேடலானாள்.

முதலில் கையில் கிடைத்த சில ஓலைகள் மற்றும் பட்டுத் துணிகளை எடுத்துக் கீழே வீசியவளது கைகளில் கடைசியாக அந்த முத்துமாலை சிக்கி யது. அதைப் பார்த்த பிறகு தான் அவ ளுக்கு உயிரே திரும்பி வந்த உணர்வு.

"இதனை இங்கு மறைத்து வைத் தது யாராக இருப்பார்கள்?" எனக் கேட் டுக் கொண்டபடியே அந்த முத்துமா லையை மீண்டும் கழுத்தில் அணிந்து கொண்டாள். அந்த முத்துமாலையையே சிறிது நேரம் கண்கள் மூடியபடி வரு டிக் கொண்டிருந்தாள். விறல்வேலே அவளது அருகில் இருப்பது போன்ற நினைப்பை அளித்தது அந்த முத்து மாலை.

கண்களை மூடியபடியே முன்னால் ஒரு அடியை எடுத்து வைக்கலானாள். அப்போது காலில் ஒரு ஓலைச் சுருள் அகப்பட்டது. கீழே கிடந்த அந்த ஓலை மற்றும் பல பட்டுத் துணிகளை எடுத்து

அருகில் கிடந்த மரப் பலகை மீது போட்டு அது என்ன என்று ஒவ்வொன்றாகப் பார்க்கத் தொடங்கினாள்.

முதலில் அவள் வாசித்தது ஓலைச் சுருளைத் தான். அந்த ஓலைச் சுருள் முழுவதுமே விறல்வேல் எழுதிய காதல் பாக்களால் நிறைந்திருந்தது.

ஆர்வத்துடன் முதல் கவிதையை வாசிக்கத் தொடங்கினாள்.

சுனைத்த தேனமுதை சுவைக்கத் தந்த

சுலோசனைத் தமிழ் மறந்தேன்!

பனைத்த கருவுண்ட இலக்கியச் சுவைதனை

பரண்மீது கட்டிவைத்தேன்!

https://telegram.me/aedahamlibra

முதலில் சில வரிகளை வாசித்த அக்கணமே துக்கம் அவளது தொண்டையை அடைத்துவிட்டிருந்தது.

தாளாத துயரத்துடன் அடுத்த வரியை வாசித்தாள்.

நனைந்த மனற்தடச் சுவடுகளை

நாநீங்கிய சுவைபோல் மறந்தேன்!

வழிந்த கண்ணீரைத் துடைக்கக் கூட மறந்தபடி மொத்தக் கவிதையையும் அவள் வாசித்து முடித்தாள். அவளை மறந்து மீண்டும் வாசித்தாள். இந்த முறைச் சற்றுச் சத்தமாகவே நா தழுதழுத்தபடி வாசிக்கலானாள்.

சுனைத்த தேனமுதை சுவைக்கத் தந்த

சுலோசனைத் தமிழ் மறந்தேன்!

பனைத்த கருவுண்ட இலக்கியச் சுவைதனை

பரண்மீது கட்டிவைத்தேன்!

நனைந்த மனற்தடச் சுவடுகளை

நாநீங்கிய சுவைபோல் மறந்தேன்!

முனைப்புடன் கற்றறிந்த போர்க்கலையை

முடக்கிப் போட்டுவைத்தேன்!

அனைத்தும் மறந்திருந்தேன்

ஆரணங்கு உனைக் கண்டபின்!

நினைக்கும் பொழுதெல்லாம்

நின்ற இடம் மறந்திருந்தேன்!

எனைச் சிதைத்த இந்நிலை வந்ததோ

எழிலாய் உனைப் படைத்த இறைவனால்!

https://telegram.me/aedahamlibra

சிணைத்து வைத்ததெல்லாம் அய்யகோ

சிதறுண்டு போனதெங்கே!

உனைச் சபிக்கத் துடிக்கிறேன் இறைவா

உத்தரமின்று உதிர்ந்து நிற்கும் நான்!! !

“படைப்புக் கடவுளையே வெறுக்கும் அளவிற்கா நான் அவரை வருத்தியிருகிறேன். மன்னித்துவிடுங்கள் தலைவரே!” எனக் கூறியபடி அந்த மரச் சட்டத்தின் மீது போட்டிருந்த பட்டுத் துணியை எடுத்து கண்ணீரைத் துடைக்கப் போனாள். அப்போதுதான் அதைக் கவனித்தாள். அந்தப் பட்டுத் துணியில் சில கோடுகள் தீட்டப்பட்டிருப்பதை. அந்தக் கோடுகளையே உற்றுப் பார்த்தாள். அவளுக்கு எதுவுமே விளங்கவில்லை. நீண்ட கோடு அதில் சில புள்ளிகள்

ஒரு இடத்தில் மட்டும் நட்சத்திரக் குறிப் போடப்பட்டிருந்தது.

அடுத்தத் துணியைப் பார்த்தாள். அதிலும் அப்படியே ஒரே ஒரு கோடு. ஆனால், வரிசையாக ஐந்து புள்ளிகள் வைக்கப்பட்டிருந்தன. அதுவும் அவளை ஏமாற்றியது. அடுத்தத் துணியை எடுத்துப் பார்த்தாள். கருவிகளின் வடிவமைப்பு, பார்த்ததுமே அறிந்து கொண்டாள். மடித்துச் சுருட்டிக் கட்டப்பட்டிருந்த பட்டுத் துணி ஒவ்வொன்றாக எடுத்து புரட்டிப் பார்த்தாள். அத்தனையிலும் கருவிகளின் வடிவமைப்புத் தீட்டப்பட்டிருந்தது. ஆச்சர்யமாக அந்த ஆயுதக் கருவிகள் தீட்டப்பட்டிருந்த அந்தத் துணிகளையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

“இனி எதிரிகள் பிழைப்பது கடவுள் புண்ணியமே!” என அவளை அறியாமலே அவளது வாயிலிருந்து சொற்கள் வெளிப்பட்டன.

ஐந்து புள்ளிகள் பொறிக்கப்பட்டிருந்த அந்தத் துணியை எடுத்து உற்றுப் பார்த்தாள். வெளியே சாளரத்திற்கு வந்து புகாரில் புதிதாக நிர்மாணித்துக் கொண்டிருந்த அந்தப் பிரமாண்டமான தூண்களையும், அந்தப் புள்ளிகளையும் ஒப்பிட்டுப் பார்த்தாள். இரண்டும் கணக் கச்சிதமாகப் பொருந்தியது. நாசகார ஆயுதங்கள் தீட்டப்பட்டிருந்த அந்தத் துணிகளையும், புள்ளிகள் வரையப்பட்டிருந்த துணியோடு சேர்த்து வைத்துக் கட்டினாள்.

எஞ்சியிருந்த இரண்டு துணிகளையும் ஒன்றாக விரித்து வைத்து அந்த அறைக்குள் ஊடுருவிய பரிதியின் வெளிச்சத்தில் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு எதுவுமே விளங்கவில்லை. அந்த இரண்டு துணிகளையும் ஒன்றாக மடித்துகட்டி, அந்த ஓலைச் சுருள்களுடன் வைப்புழிக்குள் பத்திரமாக வைக்கவும் அந்த அறைக்குள்

https://telegram.me/aedahamlibra

உபபடைத்தலைவர் மூவரும் நுழையவும் நேரம் சரியாக இருந்தது.

மூவரும் நுழைந்ததுமே, "கரிகாலன் எங்கே திருக்கண்ணா சென்றிருக்கிறான்?" எனக் கணையைத் தொடுத்தாள் வானவல்லி.

திருக்கண்ணன் டாள்தொபியாசையும் பரதவன் குமரனையும் மாறி மாறிப் பார்க்கலானான்.

"நீதானே இளவலின் மெய்க்காவல் தலைவன்?"

"ஆமாம்!"

"அப்புறம் கேட்ட கேள்விக்கான பதிலைக் கூறலாமே?"

"அவர் எங்கே சென்றிருக்கிறார் என்று எனக்குத் தெரியாது?"

"மெய்க் காவல் தலைவனான உன்னிடமிருந்து நான் இந்தப் பதிலை எதிர்பார்த்திருக்கவில்லை திருக்கண்ணா.

https://telegram.me/aedahamlibra

அவன் எங்குச் சென்றாலும் அவனை நீ நிழலாகத் தொடர வேண்டாமா? அவனைக் காப்பதை விட வேறு முக்கிய வேலை ஏதாவது இருக்கிறதா?"

எந்தப் பதிலையும் கூற இயலாமல் திருக்கண்ணன் விழித்துக் கொண்டிருந்தான்.

"கடைசியாக அவனை நீ எப்போது சந்தித்தாய்?"

"டாள்தொபியாசையும், வில்லவனையும் உங்கள் தந்தை மற்றும் கரிகாலர் இருவரும் மாறுவேடத்தில் சந்தித்து எதிர் கொண்டபோது அவர்களுடன் நான் இருந்தேன்."

"அதன் பிறகு?"

"அன்றைய இரவில் திடீரென்று அவர் மட்டும் சொல்லிக்கொள்ளாமல் புரவியில் புறப்பட்டுச் சென்றுவிட்டார்?"

"நீ ஏன் பின்தொடரவில்லை?"

https://telegram.me/aedahamlibra

"அனுமதியில்லாமல் என்னைப் பின்தொடரக் கூடாது என்பது இளவலின் கட்டளை தேவி!"

"நான் எதிர்பார்க்கும் பதில் இது அல்ல திருக்கண்ணா!" எனக் கூறிய போது அவளது விழிகள் இரண்டும் சிவந்திருந்தன. மூன்று உபதளபதிகளும் வானவல்லயின் முகத்தை நேருக்கு நேர் பார்க்க இயலாமல் தலையைத் தொங்க போட்டுக் கொண்டனர்.

https://telegram.me/aedahamlibra

# 25.

# இந்திரனின் கணை

“டாள்தொபியாஸ் உன்னை இந்த நிலையில் பார்ப்பதற்கு வெட்கப்படுகிறேன் நான்!” எனத் தெரிவித்தாள் வானவல்லி.

“சகோதரி நான்....”

“உன்னைத்தான் குறிப்பிடுகிறேன் டாள்தொபியாஸ். நீ புகாருக்கு வந்த நாளிலிருந்தே முதல் முறையாக நீ தலையைத் தொங்க போட்டுக் கொண்டு நிற்பதை இப்போதுதான் காண்கிறேன். உன்

நிலையைக் காண படைத் தலைவர் இங்கு இல்லை. ஆதலால் நீ தப்பித்தாய்!"

"..........."

"நான் கேட்பதற்குப் பதில் கூறுங்கள். அவன் எங்கே சென்றிருக்கிறான். ஏற்கெனவே ஒருமுறை இப்படித்தான் வெளியே சென்று இருங்கோவிடம் சிக்கிக் கொண்டான். படைத் தலைவர் உயிரைப் பணயம் வைத்து மீட்டுக் கொண்டு வந்தார். இப்போது சிக்கிக் கொண்டால் அவனை மீட்பதற்குக் கூட அவர் இல்லை?"

"..........."

"பதில் கூறு டாள்தொபியாஸ். நான் எதிர்பார்ப்பது உன் மௌனத்தை அல்ல. உனது விளக்கத்தை!"

"சகோதரி, கரிகாலரைப் பின்தொடர்ந்து செல்லும் அளவிற்கு எங்களுக்குத் திறமை இல்லை. அவர் எப்போது எந்த உருவத்தில் எங்கு இருக்கிறார் என்

https://telegram.me/aedahamlibra

பதைக் கண்டறிவது என்பது இயலாத காரியம். இந்த நிலையில் அவரை எங்க ளால் எப்படிப் பின்தொடர இயலும்?”

“நான் கரிகாலனின் புகழுரைக ளைக் கேட்கவில்லை டாள்தொபியாஸ்! கரிகாலன் எங்கிருக்கிறான் என்ற பதில் தான் எனக்கு இப்போது தேவை!”

“இப்போதே நான் தேடிச்சென்று அவரைக் கையோடு அழைத்து வருகி றேன்.” எனக் கூறிக் கொண்டு அங்கி ருந்து புறப்பட்டான் டாள்தொபியாஸ்.

“அது உன்னால் இயலாது டாள் தொபியாஸ். இனி அவனாகப் புகாருக்கு வந்தால்தான் உண்டு. வஞ்சியில் இருக் கிறானோ? அல்லது கூடலில் இருக்கி றானோ? நீ எங்குச் சென்று தேடுவாய். அவன் நிச்சயம் உரிய நேரத்திற்கு வந்து சேர்ந்துவிடுவான். அவனைப் பற்றிய கவ லையை விடு” எனக் கூறிய வான வல்லி அருகில் நின்ற டாள்தொபியாசின் கையைப் பிடித்து அந்த அறையின் சாள

ரத்தை நோக்கி இழுத்துச் சென்றாள். பறந்து விரிந்திருந்த புகார் பட்டினத்தைக் காட்டியவள், “என்ன இது?” என வினவி னாள்.

“புகார்” என டாள்தொபியாஸ் உட் படத் திருக்கண்ணன் மற்றும் பரதவன் குமரன் என மூவரும் ஒரே நேரத்தில் தெரிவித்தார்கள்.

அவர்களின் பதிலைக் கேட்டுத் திரும்பிய வானவல்லி மூவரின் விழி களையும் கோபத்தோடு நோக்கினாள். மூவரும் மீண்டும் தலையைத் தாழ்த்திக் கொண்டார்கள்.

“உபபடைத் தலைவர்களே, இதற் குப் பெயர்தான் புகாரா! இப்போது தான் கேள்விப்படுகிறேன்!” எனக் கூறிக் கொண்டு உரக்க சிரித்தாள். அந்தச் சிரிப்பு அவர்கள் மூவருக்கும் ஒரு நடுக் கத்தை வரவழைத்துவிட்டுச் சென்றது.

https://telegram.me/aedahamlibra

சிறிது நேரம் அமைதியாக நின்ற வானவல்லி, "குமரா..." என அழைத்தாள்.

"கட்டளையிடுங்கள்!" எனக் கூறிக் கொண்டு முன்னே வந்த பரதவன் குமரன் பணிந்து நின்றான்.

"நீயாவது நான் கேட்கும் பதிலுக்கு உரிய பதிலை அளிப்பாய் என நம்புகிறேன் நான்!"

"கேளுங்கள் படைத்தலைவரே! பதிலளிக்கச் சித்தமாக இருக்கிறேன்!"

"நல்லது" எனக் கூறியவள் புகாரில் புதிதாகக் கட்டப்பட்டுக் கொண்டிருந்த பிரமாண்டத் தூண்களைச் சுட்டிக்காட்டி, "என்ன அது?" என வினவினாள்.

"இந்திரனுக்கு ஏதோ புதுக் கோயில் எடுக்கிறார்கள் தேவி!"

"இந்திரனுக்கா?"

"ஆம்!"

"கட்டளையிட்டது யார்?"

https://telegram.me/aedahamlibra

“இளவல் கரிகாலர் தான்!”

“எப்போது கட்டத் தொடங்கினார்கள்?”

“செங்குவீரர் இருக்கும்போதே கட்டத் தொடங்கினார்கள். பிறகு இரும்பிடர்த்தலையரின் எதிர்ப்பினால் சில காலம் தடைபட்டு நின்றுபோனது. இப்போது முழு வீச்சில் கட்டத் தொடங்கிவிட்டார்கள். இன்னும் ஒரு கிழமை காலத்திற்கும் கட்டுமானப் பணி முடிந்துவிடும்!”

“ஒரு கிழமை காலத்திற்குள்ளாகவா?”

“ஆம்!”

“நிச்சயமாக?”

“உறுதியாகத் தேவி!”

“நீ எப்படி அதனை அறிவாய்?”

“அந்தப் பணியை மேற்பார்வையிட்டு விரைந்து நடத்தி முடிக்க வேண்

https://telegram.me/aedahamlibra

டிய பொறுப்பு என்னுடையது என்று கரிகாலர் கட்டளை விடுத்திருக்கிறார். இந்த நிலையில் இந்தப் பணி தேவைதானா என்று எனக்குப் புரியவில்லை!" வருத்தத்துடன் தெரிவித்தான் பரதவன் குமரன்.

"டாள்தொபியாஸ் ஐந்து பிரமாண்ட தூண் கட்டிடம் எழுப்பிக் கொண்டிருக்கிறார்களே அந்த இடங்களைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?"

"தேர்ந்த படைத் தலைவர்கள் படையை வழி நடத்திப் புகாரை முற்றுகையிட்டால் அந்த ஐந்து தூண்கள் நிற்கப்போகும் பகுதியையே நிச்சயம் தேர்ந்தெடுப்பார்கள். என்னைக் கேட்டால் அந்த ஐந்து இடங்களிலும் இந்திரனுக்குக் கோயில் கட்டுவதை விட்டுவிட்டு அவ்விடங்களில் எதிரிகளைக் கண்காணிக்கும் கோபுரங்கள் மற்றும் வில்வீரர்கள் உறையும் கோபுரமாகக் கட்டியிருக்கலாம்!"

“ஏன் இந்த இடத்தை மட்டும் எதிரிகள் புகாரை முற்றுகையிடத் தேர்ந்தெடுப்பார்கள்?”

“ஒருபுறம் சம்பாபதி வனம். மற்றொருபுறம் குணக் கடல், இன்னொருபுறம் சீறிப் பாய்ந்து ஓடிவரும் காவேரி. பெரும் கோட்டையைத் தாக்க வரும் எவரும் பெரும் வனத்தைக் கடந்து வர முயலமாட்டார்கள். கோட்டைச் சுவர்களைத் தகர்க்க வேண்டிய தளவாடங்களை வனத்தின் வழியாகக் கொண்டுவர முயல்வது முட்டாள் தனமானது. இன்னொருபுறம் நம் குன்றுத் துறை மற்றும் காவேரி நதி. இதுவும் முற்றுகையிட ஏற்ற இடம் அல்ல. இவற்றைத் தவிர்த்தால் முற்றுகையிட ஏற்ற இடங்கள் இரண்டே இரண்டுதான். ஒன்று கடல் மார்க்கம். இன்னொன்று சமவெளிப் பகுதியான அந்தத் தூண்கள் அமைந்திருக்கும் திசை.”

“சரியாகவே கவனித்திருக்கிறாய் டாள்தொபியாஸ். உன்னைப் படைத்த

லைவர் தேர்ந்தெடுத்ததற்குப் பெருமை படுகிறேன் நான்!"

டாள்தொபியாஸ் எந்தப் பதிலையும் கூறாமல் அமைதியாக நின்று கொண்டிருந்தான்.

"திருக்கண்ணா..." அழைத்தாள் வானவல்லி.

"கூறுங்கள் சகோதரி!"

"அந்த இந்திரத் தூண்கள் அமைத்துக் கொண்டிருப்பதைப் பற்றி மக்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள்?"

"அந்தத் தூண்களை அமைத்து இந்திரனைக் கரிகாலன் வழிப்பட்டுவிட்டால் கரிகாலனைப் போரில் யாராலும் வெல்ல இயலாதாம். அதுமட்டுமல்லாமல்.... .:"

"ஏன் வார்த்தைகளை விழுங்குகிறாய்? மேலே கூறு!"

"அது மட்டுமல்லாமல் இந்திரன் கர்ணனுக்கு அளித்த மந்திரக் கணைகளைப் போன்று கரிகாலனுக்கும் மாயக் கணைகளை அளிப்பானாம்! இதுதான் மக்களின் பெரும் பேச்சாக இருக்கிறது!"

வாய்விட்டு நீண்ட நேரம் சிரித்தாள் வானவால்லி. பிறகு மரப் பலகை மீது சுருட்டி வைத்திருந்த துணிச் சுருளை எடுத்து மூவரை நோக்கியும் தூக்கி வீசினாள். அந்தத் துணிகளையும், வானவல்லியையும் மாறி மாறிநோக்கினர் மூவரும்.

"துணிகளைப் பிரித்துப் பாருங்கள். அனைத்திற்குமான விடையும் இதில் தான் ஒளிந்து கிடக்கிறது!"

துணிச் சுருளைப் பிரித்த டாள் தொபியாஸ் ஒவ்வொரு துணியாக எடுத்து மரப் பலகை மீது விரித்தான். ஒவ்வொரு துணியாக நோக்க நோக்க மூவரது விழிகளும் ஆச்சர்யத்தில் விரிந்து கொண்டிருந்தன.

ஐந்து புள்ளிகள் பொறிக்கப்பட்ட பட்டுத் துணியை எடுத்துக் கொண்டு சாளரப் பகுதிக்கு ஓடினான் திருக்கண் ணன். அந்தப் புள்ளிகளையும், பிரமாண் டத் தூண்களையும் மாறி மாறி நோக்கி னான்.

"இதில் துளி கூடச் சந்தேகமே இல்லை. இவை அனைத்தும் படைத் தலைவரின் ஏற்பாடே!" மகிழ்ச்சியில் கூவினான் திருக்கண்ணன்.

ஆயுதங்களின் வடிவமைப்புகள் தீட்டப்பட்டிருந்த திரைச் சீலைகளைக் கண்ட டாள்தொபியாஸ் வானவல்லியை நோக்கி, "உறுதியாகக் கூறுகிறேன் சகோ தரி. புகாரைக் கைப்பற்ற யார் வந்தாலும் அதுவே அவர்களின் கடைசிப் பயண மாக இருக்கும். எதிரிகள் ஒருவர் கூட உயிரோடு திரும்பிச் செல்லப் போவ தில்லை!" என்று தெரிவித்தான்.

வானவல்லி மீண்டும் அந்த அறையே நடுங்கும்படி சிரிக்கலானாள்.

அவளது சிரிப்பினில் வெளிப்பட்ட கொலை வெறியைக் கண்ட மூவரும் அமைதியாக அவளது அடுத்தக் கட்டளையை எதிர்பார்த்து நின்று கொண்டிருந்தார்கள்.

https://telegram.me/aedahamlibra

# 26. வீர மரணம்

கோடை வெயில் கொளுத்திக் கொண்டிருந்த மதிய நேரம். ஒரு கிழமை மற்றும் மூன்று நாட்கள் தொடர் பயத்தினால் களைத்திருந்த தனது புரவியைக் கையில் பிடித்துக் கொண்டு கூடலை நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தான் வேந்தன். உச்சி வெயிலின் வெம்மையில் அவனது உடல் முழுதும் வியர்வையில் நனைந்திருக்க வானத்தை அண்ணாந்து பார்த்தான். மேலைத் திசையில் குன்றுகளுக்கு அப்பால் கார்மேகம் கருத்துக் காணப்பட்டது. அவ்வப்போது தொலைவிலிருந்து வீசிய குளிர் தென்றலும் வியர்த்த அவனது உடலைக் குளிரச் செய்துவிட்டுச் சென்றது. அவ்வப்போது குளிர் காற்று

வீசினாலும் சூழ்நிலையின் இறுக்கம் மட்டும் நேரத்திற்கு நேரம் அதிகமாகிக் கொண்டே சென்றது."இன்று மாலை எப்படியும் பெரும் மழை பெய்யப் போகிறது. அதற்குள் எப்படியாவது வழியில் இருக்கும் பாதுகாப்பான சத்திரத்தை அடைந்துவிட வேண்டும்" எனத் தனக்குத்தானே கூறிக் கொண்டு புரவியைக் கையில் பிடித்தபடி வேகமாக நடந்து கொண்டிருந்தான். தன் மீது தன் தலைவனுக்கு இருக்கும் அன்பைப் பார்த்து மகிழ்ந்த புரவியும் அவனது நடைக்கு ஈடுகொடுத்து அவனது சுமைகளைச் சுமந்தபடி அவனுடன் நடந்து கொண்டிருந்தது. பயணத்தில் கலைத்துக் காணப்பட்ட வேந்தன் தொலைவில் ஒரு பெரிய அரசமரத்தைப் பார்த்தான்.

அதைப் பார்த்ததுமே, "ஆகா... போதிமரம். அங்கு நிச்சயம் பௌத்தர் கோயில் இருக்கும், அருகில் உண்ணுவதற்கு ஏதாவது கிடைத்தாலும் கிடைக்கும். அப்படியே அருகில் இருக்கும் சத்திரத்தைப் பற்றியும் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்..." எனத் தன் புரவியிடம் கூறியபடி புரவியின் கடிவாளத்தை அதன் மீது போட்டுவிட்டு முன்னே நடக்

https://telegram.me/aedahamlibra

கலானான். அவன் கூறியது அப்புரவிக்குப் புரிந்ததோ புரியவில்லையோ தெரியவில்லை. ஆனால் அது தனது தலையை மட்டும் விசுவாசமாக ஆட்டிக் கொண்டு அவன் பின்னாலேயே நடந்து சென்றது.

வேந்தனது எதிர்பார்ப்பு பொய்க்கவில்லை. அவன் எதிர்பார்த்ததைப் போன்றே அந்த அரசமரத்திற்கு அருகில் பெரிய குளம் ஒன்றும் அந்தக் குளத்தின் கரையில் பௌத்தரது திருவுருவச் சிலை ஒன்றும் காணப்பட்டது. அந்தப் பௌத்தச் சிலைக்கு அப்பால் யானை மீது அமர்ந்திருந்த செண்டாயுதன் தன் ஆயுதத்தைக் கையில் பிடித்துக் கொண்டு தனது மீசையை முறுக்கி விட்டபடி அப்பகுதியில் காவல் காத்துக் கொண்டிருந்தார். ஆனால், அவன் எதிர்பார்த்ததைப் போன்று அங்கு எந்த உணவுக் கடையும் இருக்கவில்லை. பசி அடிவயிற்றைக் கிள்ள அருகில் நின்ற அவனது குதிரையைப் பார்த்தான் வேந்தன். அதுவும் 'எனக்கும் பசிக்கிறது' எனக் கூறுவதைப்

https://telegram.me/aedahamlibra

போன்று அதன் தலையை வேகமாக ஆட்டியது.

புரவியோடு குளத்திற்குச் சென்ற வேந்தன் வயிறு நிறைய நீரைப் பருகி னான். புரவியின் மீதிருந்த சுமைகளை இறக்கி அதற்கும் தண்ணீர் காட்டினான். அதுவும் பருகி தாகத்தைப் போக்கிக் கொண்டது. அந்தக் குளம் முழுக்க நன்கு வளர்ந்த புற்களைக் கண்டவன் ‘புரவி சற்று நேரம் மேய்ந்து ஓய்வெடுக்கட்டும். பிறகு தேவையான நேரத்தில் பயன்படும்’ என நினைத்தவன் புரவியைக் குளக் கரையிலேயே விட்டுவிட்டு பௌத்தர் கோயிலை ஒருமுறை ஆராய்ந்து பார்த் தான். செண்டாயுதனுக்கு முன் படைக் கப்பட்ட தேங்காய், பழம் மற்றும் சில வெல்லக்கட்டிகள் சிதறிக் கிடந்தன. சித றிய வெள்ளக்கட்டிகளை எறும்புகள் தங் களது வலைக்குள் கடத்திக் கொண்டி ருந்தன.

சில வெள்ளக் கட்டிகளை எறும்புகளுக்குப் போட்டுவிட்டு மற்ற தேங்காய். பழம் மற்றும் வெள்ளக் கட்டிகளை எடுத்துக் கொண்டு வந்து அரச மரத்தின் அடியில் அமர்ந்து மேய்ந்து கொண்டிருந்த அவனது புரவியைப் பார்த்தபடியே தின்ன ஆரம்பித்தான். புரவியும் தலையை உயர்த்தி அவனை ஒருமுறை பார்த்தது. பிறகு அதுவும் பரபரவென்று மேயத் தொடங்கியது. புரவி மேயும் அழகைப் பார்த்தபடியே தேங்காயைக் கரண்டித் தின்றான் வேந்தன். பிறகு அப்படியே களைப்பில் அந்த அரசமரத்தின் அடியில் துண்டை விரித்துப் படுத்தவன் உறங்கியும் போனான்.

நெடுநேரம் கழித்துக் கண் விழித்து அவனது புரவியைப் பார்த்தான் வேந்தன். அது குளத்திற்குள் காணப்படவில்லை. பதறிப்போனான். விரித்துப் போட்டிருந்த துண்டை எடுத்தபடியே எழுந்து நின்று பார்வையைச் சுழற்றினான். அவனுக்குப் பின்னால் அமர்ந்து அசைபோட்டுக்

கொண்டிருந்தது அவனது புரவி. அவ னைப் பார்த்ததும் தலை ஆட்டியபடி அது வும் எழுந்து நின்று கொண்டது. குளத் திற்குச் சென்று நீராடியவன் தாமரை கொடிகளுக்கிடையில் தெளிந்து கிடந்த நேரை மீண்டும் பருகி கரைக்கு வந்தவன் அவனது துணிகளை இடையில் கட்டிக் கொண்டு ஈரமான துண்டை தோளில் போட்டுக் கொண்டு அவனது உடைமை களை மீண்டும் புரவியில் ஏற்றிய போது தான் கண்டான். அரச மரத்திற்கு எதிர்பு றத்தில் இருவர் நின்று கொண்டிருப்பதை. அவர்களைப் பார்ப்பதற்குக் காட்டு வாசி களைப் போன்றே தோன்றியது வேந்த னுக்கு. இடையில் பழைய கந்தல் துணி யைத் தவிரத் தோளில் எந்தத் துணியை யும் அவர்கள் அணிந்திருக்கவில்லை. இருவரது இடையிலும் கூர்வாள் ஒன்று பளிச்சிட்டது. முகத்தின் பெரும் பகு தியை ஆக்கிரமித்திருந்த முரட்டு மீசை. வஜ்ரம் போன்ற முரட்டுத் தேகம். அவர் களைப் பார்த்தபோதே அவனது விருப்

https://telegram.me/aedahamlibra

பக் கடவுளிடம் வேண்டிக் கொண்டான். ‘கடவுளே இவர்கள் வனக் கள்வர்களாகவோ அல்லது மனித மாமிசத்தை உண்ணும் காட்டு வாசிகளாகவோ இருக்கக் கூடாது’ என்று.

அவர்களிடம் பேச்சுக் கொடுத்துப் பார்க்கலாம் என விரும்பிய வேந்தன், “நீங்கள் இருவரும் எந்தத் திசையில் பயணிக்கப் போகிறீர்கள்? வடக்குத் திசையை நோக்கியா அல்லது தெற்குத் திசையை நோக்கியா?” என வினவினான்.

அவர்கள் எந்தப் பதிலையும் கூறாமல் அவனது புரவியையும், அதன் மீதிருக்கும் உடைமையையுமே பார்த்துக் கொண்டு நின்றனர்.

“நான் பேசுவது உங்களுக்குப் புரிகிறதா?” என மீண்டும் வினவினான் வேந்தன்.

அப்போதும் அவர்கள் எந்தப் பதி லையும் மறுக்கவில்லை.

‘இவர்களிடமிருந்து எப்படித் தப் பிக்கப் போகிறேன்! காவல் தெய் வம் செண்டாயுதனே நீர்தான் என் னைக் காத்தருள வேண்டும்!’ வேண்டிக் கொண்டான் வேந்தன்.

“நாங்கள் வடக்கு நோக்கிப் பய ணிக்கப் போகிறோம்! தாங்கள்?” என நெடுநேரம் கழித்து வினவினான் இருவ ருள் ஒருவன்.

‘செண்டாயுதா ஒருவழியாகப் பேசி விட்டார்கள்!’ என நினைத்துக் கொண் டவன், “நான் தெற்கு நோக்கிக் கூடலுக் குச் சென்று கொண்டிருக்கிறேன். இரவி னைக் கழிக்கச் சத்திரம் ஏதாவது அரு கில் இருக்கிறதா?” என வினவினான் வேந்தன்.

“இப்போதுதான் முதல் முறையாக இப்பாதையில் பயணிக்கிறீர்களா?”

https://telegram.me/aedahamlibra

"ஆமாம். எதற்கு வினவுகிறீர்கள்?"

"இல்லை. இனி பெரிய வனம் ஒன்று உங்களது பாதையில் குறுக்கிடப் போகிறது. அங்குச் சில நேரம் கள்வர்கள் ளும் தாக்குகிறார்கள். எச்சரிக்கையாகப் பயணத்தைத் தொடங்குங்கள். நாங்களே பாதுகாப்பிற்காகத்தான் இடையில் கத்தி யோடு சுற்றிக் கொண்டிருக்கிறோம்!"

"தங்களது எச்சரிக்கைக்கு மிக்க நன்றி. நான் புறப்படுகிறேன். வனத்தைக் கடந்ததும் சத்திரத்தை அடைந்துவிட லாம் தானே!"

"தனியாகச் செல்வது நல்லது அல்ல. இன்னும் சற்று நேரம் பொறுத்து வழிப்போக்கர்கள் யாராவது வந்தால் அவர்களுடன் நீங்கள் புறப்படுவதே சாலச் சிறந்தது!"

"ஒரு ஓரைப் பொழுதிற்கு மேலாக நான் இங்குதான் அமர்ந்திருக்கிறேன். யாரையும் காணவில்லை. இனியும் யாரா

https://telegram.me/aedahamlibra

வது வருவார்கள் என்று எதிர்பார்த்துக் காத்திருப்பது வீண்! வானம் வேறு கருத்துக் கொண்டிருக்கிறது. மழை வருவதற்குள் நான் சத்திரத்தை அடைந்துவிட வேண்டும்!”

“தங்களது விருப்பம்!”

“நன்றி” எனக் கூறிய வேந்தன் அவனது புரவிமீது ஒரே தாவலாகத் தாவினான். புரவியும் பாயத் தொடங்கியது. அவர்கள் கூறிய வனமானது தொடக்கத்தில் சில சில மரங்களாகத்தான் காணப்பட்டது. உள்ளே நுழைய நுழைய வெயில் கூட நுழைய முடியாத அளவிற்கு அடர்ந்து காணப்பட்டது. புரவியின் அடிவயிற்றில் காலாள் தட்டி அதன் வேகத்தைக் குறைத்த வேந்தன் மெதுவாகவே பயணிக்கத் தொடங்கினான். புரவியும் சத்தம் இல்லாமல் நடக்கும் வேகத்தில் சென்று கொண்டிருந்தது. வனத்தில் பெரும் அமைதி நிலவியது. வழக்கமாகத் தோன்றும் குருவிகள் சத்தம் கூட இல்லா

மல் பேரமைதியாகக் காணப்பட்டது அவ் வனம். பார்வையையும், செவிகளையும் கூர்மையாக்கிக் கொண்டான். பின்னால் திரும்பிப் பார்த்தான். வடக்கு நோக்கிச் செல்வதாகக் கூறிய இருவரும் அவ னைப் பின்தொடர்ந்து புரவியில் வந்து கொண்டிருந்தார்கள்."சந்தேகமே
இல்லை. இந்த இருவரும் கள்வர்கள் தான்! எப்படியாவது இவர்களிடமிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டும்!" தனக் குத் தானே எச்சரிக்கை செய்து கொண் டான்.

அந்த இரண்டு கள்வர்களும் தன்னை அருகில் நெருங்காத அளவிற் குச் சீரான இடைவெளியில் இருக்கும்ப டியாகவே தனது புரவியைச் செலுத்திக் கொண்டிருந்தான் வேந்தன். நேரம் கடக் கக் கடக்க வேந்தன் தனது புரவியை எவ்வளவு விரைவாகச் செலுத்தினாலும் அவர்கள் இருவரும் நெருங்கிக் கொண் டிருப்பதாகவே தோன்றியது அவனுக்கு. வெகு சமீபத்தில் நெருங்கிவிட்டிருந்தார்

கள் இருவரும். திடீரென்று பின்னால் வந் தவர்களுள் ஒருவன் சீழ்க்கையொலியை எழுப்பினான். அடுத்தகணம் வனத்தின் மறைவிலிருந்து ஏழெட்டு பேர் வெளிப் பட்டு அவனது பாதையை இடை மறித் தார்கள். விரைவாகப் பின்தொடர்ந்து வந்த இருவரும் பின்னால் சூழ்ந்து கொண்டார்கள். புரவியை மேற் கொண்டு செலுத்த இயலாததால் அதன் கடிவா ளத்தைப் பற்றி இழுத்து நிறுத்தினான் வேந்தன். எங்கும் தப்பித்துச் செல்ல இயலாத நிலை.

கலவரப்படாமல் நிலைமையை ஆராய்ந்தான் வந்தான். சரியாக ஏழு பேர் அவனுக்கு முன்பாக நீண்ட ஈட்டி மற்றும் வாட்களுடன் நின்று கொண்டிருந்தார் கள். அவர்களில் இருவர் கையில் வில் மற்றும் அம்புகளைத் தரித்துக் கொண்டு நின்றிருந்தார்கள். அந்த ஏழு பேரில் ஒரு வன் மட்டும் தலையில் கருக்கு மணி வைத்த தலைப்பாகை ஒன்றை அணிந் திருந்தான். அவனது கழுத்தில் தொங்

கிய கபால ஓடு எதிரில் நிற்பவர்களுக்கு மரணப் பயத்தை அளிக்கும்படியாக இருந்தது. அவன் தான் இந்தக் கூட்டத்தின் தலைவனாக இருக்கவேண்டும் என உறுதி செய்து கொண்டான். பின்புறமாக இருவர் புரவியில் நின்று கொண்டிருந்தார்கள்.

'போக்குக்காட்டிவிட்டு இவர்களிடம் இருந்து தப்பிப்பது பெரும் சிரமம். இவர்களிடம் தஞ்சமடைந்து கையிலிருக்கும் சில தங்கக் காசுகளை ஒப்படைத்தாலும் உயிரோடு விடுவார்களா என்பது ஐயமே? வெற்றியோ தோல்வியோ ஒருமுறை மோதிப்பார்த்துவிடுவோம்!'என எண்ணிக் கொண்ட வேந்தன் அவனது உடைமைகளோடு மறைத்து வைத்திருந்த போர் வாளினை எடுக்கக் கையை நுழைத்தான். அப்போதுதான் அவனுக்கு ஞாபகம் வந்தது. இரவில் தன்னுடன் பயணித்த மின்னலின் பேச்சைக் கேட்டு போர் வாளினை வஞ்சியிலேயே துறந்துவிட்டு வந்தது எவ்வ

ளவு மடத்தனம்' என எண்ணி அவனை அவனே நொந்து கொண்டான். மீண்டும் அவனுக்கு முன்னாள் நின்றவர்களின் மீது பார்வையைச் செலுத்தினான் வேந்தன். அப்போது அவனது முதுகில் சிறு உணர்ச்சியைத்தான் உணர்ந்தான். அடுத்தக் கணம் அவனது புரவியிலிருந்து தொப்பென்று கீழே விழுந்தான். புரவி விலகி ஓடி சாலையோரமாக நின்று கொண்டது. பெரிய மரக்கட்டை ஒன்றை எரிந்து வேந்தனைக் கீழே தள்ளிவிட்டுருந்தான் பின்னால் புரவி மீது அமர்ந்திருந்த கள்வன் ஒருவன். கீழே விழுந்த வேந்தன் தட்டித் தடுமாறி எழுந்து நிற்க முயன்றான். முதுகில் அடி பட்டிருந்த தால் அவனது மொத்த சரீரமே நடுங்கியது. அதைக்கண்ட கள்வர் கூட்டத்தினர் அனைவரும்"ஓ"வென்று சிரிக்கலானார்கள்.

வேந்தனது நிலையைக் கண்ட கள்வன் ஒருவன் அவனை நெருங்கினான். அதுதான் தக்க சமயம் என்பதை

https://telegram.me/aedahamlibra

உணர்ந்த வேந்தன் இடையிலிருந்த குறுவாளினை அந்தக் கள்வனை நோக்கி கண்ணிமைக்கும் நேரத்திற்குள் எறிந்துவிட்டிருந்தான். கள்வனின் கழுத்திலிருந்து குருதி மட்டுமே வழிந்து கொண்டிருந்தது. குறுவாள் சரியாகத் தொண்டைக் குழிக்குள் ஊடுருவியிருந்தது. கள்வன் கீழே சரிவதற்குள் பாய்ந்த வேந்தன் கள்வனின் கையிலிருந்த நீண்ட போர் வாள் மற்றும் கழுத்தில் பதிந்திருந்த குறுவாள் இரண்டையும் எடுத்துக் கொண்டு போருக்கு ஆயத்தமாக நின்றான். வலது கையில் நீண்ட போர் வாள். இடது கையில் எதற்கும் தயாராக அவனது குறுவாள். மீண்டும் அனைவரின் விழிகளையும் ஊடுருவி நோக்கினான். அனைவரின் கண்களிலும் கலவரம் தெரிந்தது.

கள்வர்கள் சுதாரிப்பதற்குள் இடது கையிலிருந்த குறுவாளைப் புரவி மீது அமர்ந்திருந்தவனை நோக்கி எறிந்தான் வேந்தன். அடுத்தக் கணம் அந்தக் கள்

வனும் புரவியின் மீதிருந்து தொப்பென்று கீழே விழுந்தான்.

'ஒன்பது பேரில் இருவர் தொலைந் தார்கள். இன்னும் எழுவர்தான்!' என எண்ணிய வேந்தன் வாளினை உயர்த்தி னான். வேந்தனிடமிருந்து அப்படியொரு பதில் தாக்குதலை அவர்கள் எதிர்பார்த் திருக்கவில்லை. கண நேரத்தில் இருவர் மடிந்துவிட்டதைக் கண்ட கொள்ளை யர் தலைவன், "இவனைக் கொல்லுங் கள்!" எனக் கத்திக் கொண்டே கையிலி ருந்த ஈட்டியை ஓங்கிக் கொண்டு வேந் தனை நோக்கிப் பாய்ந்தான். அவனது தாக்குதலை குனிந்து விலகிக் கொண்டு தவிர்த்த வேந்தன் கள்வர்களுக்குப் பின் புறமாக ஓடி வந்த இருவரின் வாட்களைத் தடுத்தான். இருவரின் வாளினைத் தடுத் ததோடு அல்லாமல் அவனை நோக்கிக் குறிபார்த்து அம்பினைச் செலுத்த தயா ராக இருந்த ஒரு கள்வனின் மார்பிலும் கையிலிருந்த வாளினைச் செலுத்திவிட் டிருந்தான் வேந்தன்.

https://telegram.me/aedahamlibra

“இன்னும் ஆறுபேர்” தனக்குத் தானே கூறிக் கொண்டான்.

கையிலிருந்த வாளினைத் தனக்கு முன்பாக நின்றவனை நோக்கி வீசிய வேந்தன் கீழே விழுந்து கிடந்த கள்வன் ஒருவனின் நீண்ட ஈட்டி ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டு கள்வர்களை நோக்கி வேகமாகச் சுழற்றினான்.

வாள் வயிற்றில் பாயச் சுருண்டு விழுந்தான் அந்தக் கள்வனும்.

ஐந்து பேரும் அவனைச் சூழ்ந்து தாக்கிக் கொண்டிருந்தார்கள். தன்னைத் தற்காத்துக் கொள்ளவே வேந்தன் சிரமப்பட்டுக் கொண்டிருந்தான். தற்காப்புக் கலையை வேந்தன் நன்கு கற்றிருந்தாலும் பெரும் வலிமை வாய்ந்த அந்த முரட்டுக் காட்டுவாசிகளின் தாக்குதலைச் சமாளிக்கப் பெரும் சிரமப்பட்டான். மீண்டும் முதுகில் இடி விழுந்தது போன்ற ஒரு உணர்வு. மயங்கிக் கீழே விழுந்தான் வேந்தன்.

"இவனை இங்கேயே கொன்று துர்க்கைக்குப் பலி கொடுத்து விடுவோம்!"

"நம் நண்பர்கள் நால்வரை கொன்றிருக்கிறான் இவன். இவனை நாம் உயிரோடு நம் வேட்டை நாய்களுக்கு அளித்து நம் ஆத்திரத்தைப் போக்கிக் கொள்வோம்!"

"இவனது துணிச்சலைக் காணும் போது, இவன் திறமை சாலியாக இருப்பான் போலிருக்கிறது. நம் கூட்டத்தோடு இவனையும் சேர்த்துக் கொண்டால் என்ன?"

"நம் நன்பர்களைக் கொன்ற இவனை நம் கூட்டத்தில் சேர்த்துக் கொள்வதா?"

"இவனிடம் ஏதாவது தேருகிறதா என்று சோதனை செய்யுங்கள்! இவனது புரவி கொழுத்துக் காணப்படுகிறது. ஒரு கிழமைக்கு உணவுப் பிரச்சனை

இல்லை. முரண்டு பிடிக்காமல் இருந்தால் நாம் அதனை எடுத்துப் பழக்கிக் கொள்வோம்!"

எமனிடம் அவனது வீரர்கள் கனவில் கூறுவதைப் போன்று கேட்டது வேந்தனுக்கு.

முகத்தில் குளிர்ச்சியாக நீரை உணர்ந்தபடி கண் விழித்தான் வேந்தன். அவனுக்கு முன்பு நின்று கொண்டிருந்த கள்வர் தலைவன் தேறலை குடித்துக் கொண்டிருந்தான். அவன் குடித்துவிட்டு முகத்தில் மதுவை உமிழ்ந்திருக்கிறான் என்பதை வேந்தன் புரிந்துகொள்ள அதிக நேரம் பிடித்திருக்கவில்லை. திமிறினான் வேந்தன். அவன் திமிராத வண்ணம் இருவர் அவனைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தனர். அவர்களின் பிடி பாம்புப் பிடியாக அவனது கைகளை நொறுக்கிக் கொண்டிருந்தது.

"கண் விழித்துவிட்டான். இவனது தலையைச் சீவிவிடு. நாம் புறப்படு

வோம்!" கட்டளையிட்டான் வனக் கள்வர் தலைவன்.

நீண்ட வாளினைத் தோளில் போட்டுக் கொண்டு வேந்தனை நோக்கி நெருங்கிவந்தான் ஒரு முரட்டுக் கள்வன். சற்றுத் தொலைவில் மிரட்சியோடு நின்ற அவனது புரவியைப் பார்த்தான் வேந்தன்.

"உன்னை விட்டுப் பிரியப் போகிறேன். மன்னித்துவிடு!" மனதிற்குள் அவனது புரவியிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். அவன் மனதிற்குள் கூறியது அப்புரவிக்குக் கேட்டிருக்கத்தான் வேண்டும், அதுவும் அவனது நிலையைப் பார்த்து பரிதாபத்துடன் தலையை ஆட்டியது.

வேந்தனின் தலையைச் சீவுவதற்கு வாளினை உயர்த்தி வன தேவதைக்கு மந்திரங்களை உச்சரித்தான் கள்வன். மற்றவர்கள் அனைவரும் ஆரவாரக் குரலை எழுப்பினார்கள்.

https://telegram.me/aedahamlibra

கீழே இறந்து கிடந்த நான்கு கள்வர்களை நோக்கினான் வேந்தன். அவர்களின் உடலிலிருந்து குருதி வெளியேறி காய்ந்துபோய்க் காணப்பட்டது.

அவனது முகத்தில் பெரும் அமைதி நிலவியது. முகத்தில் புன்சிரிப்பு தோன்ற வாய்விட்டே கூறினான்.

“இது நிச்சயம் வீர மரணம் தான்!”

தனது தலையைக் கொய்ய வந்த கள்வனை ஒருமுறை உற்றுப் பார்த்தான் வேந்தன். பிறகு, கண்களை மூடிக் கொண்டு அவனது மரணத்தை வரவேற்கலானான்.

https://telegram.me/aedahamlibra

# 27. வில்வீரன்

வன தேவதைக்கு வேந்தனைப் பலியிட வாளினைத் தலைக்கு மேலே உயர ஓங்கிய கள்வன் மந்திரங்களை உச்சரிக்கலானான். அவன் மந்திரத்தை உச்சரிக்க உச்சரிக்கச் சுற்றி நின்றவர்கள் ஆரவாரம் செய்து வெறியில் கூத்தாடியபடி கத்தலானார்கள். வேந்தன் அந்த வாளினையே பார்த்துக் கொண்டு மண்டியிட்டு அமர்ந்திருந்தான். வேந்தனது கழுத்தை நோக்கி வாளினை இறக்கினான் கள்வன். கண்களை மூடிக் கொண்டான் வேந்தன். அப்போது “ஆ...”வென்ற அலறல் சத்தம் மட்டுமே எழுந்தது.

கண்களைத் திறந்து பார்த்தான் வேந்தன். அவனது தலையைக் கொய்வதற்காகக் கீழிறங்கிய வாள் சிறிது தூரம் தள்ளி கீழே விழுந்து கிடந்தது. கள்வன் வலியால் துடித்துக் கொண்டிருந்தான்.

அவனது வலது கரத்தில் நீண்ட அம்பு ஒன்று பாய்ந்திருந்தது. அந்த அம்பினைப் பிடுங்கிப் போட்ட கள்வன் மீண்டும் அவனது கீழே கிடந்த வாளினை எடுத்துக் கொண்டு வேந்தனை நோக்கி அடியெடுத்து வைத்தான். அடுத்தக் கணம் அவனது கணுக்காலில் ஒரு அம்பு பாய்ந்துவிட்டிருந்தது.

தொலைவிலிருந்து மணிச் சத்தம் வந்த திசையை நோக்கினான் வேந்தன். அங்கே இரண்டு அடலேறுகள் பூட்டப் பட்ட கட்டை வண்டி ஒன்று வேகமாக அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தது. அந்தக் கட்டை வண்டியில் இருவர் அமர்ந்திருந்தார்கள். ஒருவன் சாட்டையால் அடித்து அடலேறுகளை விரட்ட பின்னால் நின்றவன் கையில் நீண்ட அம்பு ஒன்றை நாணில் பூட்டி அவர்களை நோக்கி குறிபார்த்துக் கொண்டிருந்தான். வேந்தன் பார்வையை நகர்த்தவில்லை. தனது உயிரைக் காக்க ஆபத்பாந்த

வனாக வந்து கொண்டிருப்பவனையே வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

அடலேறுக் கட்டைவண்டியில் வந்து கொண்டிருப்பவனைப் பார்த்துக் கள்வர்கள் சுதாரிப்பதற்குள் நாணில் பூட்டியிருந்த அடுத்த அம்பினையும் அவர்களை நோக்கி எய்திருந்தான். வேந்தனைப் பிடித்துக் கொண்டிருந்த கள்வர்களுள் ஒருவனது முழங்காலில் அந்த அம்பு பாய்ந்திருந்தது. அடுத்த அம் பினை அவன் எய்துவதற்குள் வேந்தன் பொறுமை காக்கவில்லை. தனது பலம் முழுவதையும் திரட்டி தன்னைப் பிடித் துக் கொண்டிருந்தவனைத் தூக்கி கீழே போட்டான். என்ன நடக்கிறது என்று சிந்தித்து அடுத்தகட்ட நடவடிக்கையை எடுப்பதற்கு எந்தவொரு சிறிய கால அவ காசத்தையும் அளிக்காமல் அடுத்தடுத்து தொடர்ந்து அம்பினை எய்து கொண்டி ருந்தான் அந்த வில் வீரன். ஆனால் அந்த அம்புகளில் ஒன்றுகூடக் கள்வர் களின் உடலைத் தாக்கியிருக்கவில்லை.

https://telegram.me/aedahamlibra

அவர்களின் முழங்காலுக்குக் கீழேதான் அனைத்து அம்புகளும் தைத்திருந் தன. வேந்தனும் கள்வர்களைத் தாக் கத் தொடங்கினான். உயிரோடு இருந்த கள்வர்கள் 'தப்பித்தால் போதும்' என எண்ணி வேந்தனை அப்படியே விட்டு விட்டு தப்பித்து வனத்திற்குள் ஓடினார் கள்.

கழுத்து மணிச் சத்தம் ஒலிக்க அட லேறுக் கட்டை வண்டி வேந்தனுக்கு முன் வந்து நின்றது. கையில் சாட்டையுடன் ஒருவனும், வில் அம்புகளுடன் இன் னொருவனும் என இருவர் அதிலிருந்து கீழே குதிக்கலானார்கள். இரு கரங்க ளையும் சேர்த்துக் கும்பிட்டு அவர்க ளுக்குத் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டான் வேந்தன். ஆனால் அவர் கள் இருவரும் வேந்தனது நன்றியைக் கண்டுகொள்ளாமல் தப்பித்த கள்வர்கள் யாராவது புதரினில் மறைந்துத் தாக்க முயற்சிக்கிறார்களா? எனத் தேடி அவ்வி டத்தைச் சுற்றிலும் நோட்டம் விடலானார்

https://telegram.me/aedahamlibra

கள். சிறு அசைவு கூட எங்கும் காணப்பட வில்லை.

"தேடியது போதும், வா. அவர் கள் ஓடிவிட்டார்கள்?" எனக் கையிலி ருந்த சாட்டையை வீசியபடி அழைத் தான் மாட்டு வண்டியோட்டி.

"சற்றுப் பொறுங்கள் மாமா. மறைந் திருந்து தாக்கினால் ஆபத்து நமக்குத் தான்!"

"தேடியது போதும் நீ வா" என அவ னிடம் தெரிவித்த வண்டியோட்டி கீழே இறந்து கிடந்த கள்வர்களைப் பார்த்தப டியே, "இவர்களைக் கொன்றது நீர் மட் டும்தானா?" என ஆச்சர்யத்துடன் வேந் தனை நோக்கி வினவினான்.

"ஆமாம். என்னால் இவர்களை மட் டும்தான் கொல்ல முடிந்தது. மற்றவர்கள் சூழ்ந்து எனது முதுகில் தாக்கி மூர்ச்சைய டையச் செய்துவிட்டார்கள்!"

"முதுகில் தாக்கியிருக்கிறார்கள் கோழைகள்!"

"ஆமாம் மாமா. அவர்கள் கோழை கள் தான். இல்லையேல் இவ்வீரரை முதுகில் தாக்கி அந்த வனக் கள்வர்கள் வீழ்த்தியிருப்பார்களா?" எனத் தெரிவித் தான் கையிலிருந்த வில்லினை தோளில் மாட்டியபடி.

வேந்தன் எந்தப் பதிலையும் கூறா மல் அவர்கள் இருவரின் முகத்தையுமே மாறி மாறி பார்த்துக் கொண்டு நின்றான்.

"வீரரே, நீங்கள் எந்தத் திசையில் செல்ல வேண்டும்? கூடலுக்கா செல்கி றீர்கள்?"

"ஆமாம். நான் கூடலுக்குத்தான் செல்கிறேன். ஆனால் நீங்கள் அழைப்ப தைப் போன்று நான் ஒன்றும் பெரிய வீரன் அல்லவே!"

"பொய் கூறாதீர்கள். குறி தவறாத உங்களது குறுவாளின் தாக்குதலைக்

கொண்டே எங்களால் ஓரளவு அனுமானிக்க இயலுகிறது, நீங்கள் தற்காப்புக் கலையை நன்கு பயின்றவர் என்று!"

வேந்தன் எந்தப் பதிலையும் கூறாமல் அமைதியாக நின்றான்.

"சரி நீங்கள் யாராக வேண்டுமானாலும் இருங்கள்! நாங்கள் புறப்படுகிறோம்!" எனக் கூறி இரண்டு அடலேறுகள் பூட்டப்பட்ட அந்தக் கட்டை வண்டியில் ஏறி அமர்ந்தான் வண்டியோட்டி. அவனைத் தொடர்ந்த அந்த வில் வீரனும் அந்த மாட்டு வண்டியின் பின் புறத்தில் ஏறி அமர்ந்து கொண்டான்.

வண்டி கிளம்பியது. வேந்தன் அவர்கள் இருவரையுமே நன்றி பெருக்குடன் பார்த்துக் கொண்டிருந்தான்."மாமா, வண்டியை நிறுத்துங்கள்" எனக் கூறிக் கொண்டு வண்டியிலிருந்து குதித்த அந்த வில் வீரன் விரைந்து வேந்தனுக்கு அருகில் சென்றான். அவனது காலில் வாள் தாக்கப்பட்டு வழிந்த குருதியைச் சுட்

டிக் காட்டிக் இடுப்பிலிருந்த துணியினால் அந்தக் காயத்தை இறுகக் கட்டியவன், “வீரரே சற்று அமருங்கள்!” எனக் கூறிக் கொண்டு காட்டுக்குள் ஓடினான்.

கால் நாழிகைக் கழித்துத் திரும்பி வந்தவன் கையில் ஒரு மூலிகைச் செடியைக் கொண்டு வந்திருந்தான். அதன் இலைகளைப் பறித்து உள்ளங்கையில் வைத்து நன்கு கசக்கினான். அதிலிருந்து சாறு வெளிப்படத் தொடங்கியது. குருதிப் பெருக்கெடுத்த காயத்தில் சாறினை விட்டான் அந்த வில்வீரன். மூலிகைச் சாறு பட்ட அடுத்தக் கணத்தில் குருதிப் பெருக்கு முற்றிலும் நின்றுவிட்டிருந்தது.

“அண்ணாந்து வானத்தைப் பார்த்து வாயினை நன்கு திறவுங்கள்! இந்தச் சாறு நாக்கில் பட்டால் நஞ்சு. நேராகத் தொண்டைக் குழிக்குள் தான் செலுத்த வேண்டும்!” எனக் கூறிக் கொண்டு மூலிகையை நன்கு கசக்கினான்.

https://telegram.me/aedahamlibra

வேந்தனும் கண்களை மூடிக் கொண்டு வாயை ‘ஆ’வென்று திறந்தான்.

“கண்களை மூடிக்கொள்ளுங்கள்!”

“ம்ம்ம்” எனக் கூறிய அடுத்தக் கணத்தில் விழிகளையும் மூடிக் கொண்டான் வேந்தன்.

“இந்த மருந்து வயிற்றுக்குள் இறங்கும்போது உறக்கம் வருவதைப் போன்று தோன்றும்! கள்வர்களின் வாளில் நஞ்சினைத் தோய்த்து உங்களைத் தாக்கியிருக்கிறார்கள். இந்த மருந்து அந்த நஞ்சினை முறித்துவிடும். கண் விழிக்கும்போது நீங்கள் குணமாகியிருப்பீர்கள். கவலை வேண்டாம்!” எனக் கூறியபடியே வேந்தனது நாக்கில் படாமல் மூலிகைச் சாற்றினை வேந்தனது தொண்டைக் குழிக்குள் சொட்டுச் சொட்டாகச் செலுத்தினான் அந்த வில்வீரன்.

மூலிகைத் துளி தொண்டையில் பட்ட அடுத்தக் கணம் தொப்பென்று

மயங்கி விழுந்தான் வேந்தன்."இவனைத் தூக்கி நிழலில் போட்டு, அருகில் நெருப் பினை மூட்டி வையுங்கள். சிறிது நேரத் தில் நான் வந்துவிடுகிறேன்!" என அதி காரத்துடன் வண்டியோட்டிக்குக் கட்ட ளையிட்ட வில்வீரன் மீண்டும் காட்டுக் குள் சென்று மறைந்தான்.

அவன் திரும்பி வரும்போது தயா ராக வண்டியோட்டி நெருப்பு மூட்டி வைத்திருந்தான். வேந்தன் அருகில் பிணம் போல மயங்கிக் கிடந்தான்.

"அவனை இந்த நெருப்பிற்குப் பக் கத்தில் அமர வையுங்கள்."

"தங்கள் உத்தரவு" எனப் பணிந்த வண்டியோட்டி வேந்தனை நெருப்பிற்குப் பக்கத்தில் அமர வைத்தான்.

"தோளில் போட்டிருக்கும் துண்டி னால் மூக்கினை மூடிக்கொள்ளுங்கள்!" வில் வீரனின் கட்டளை எழுந்த அடுத்தக் கணத்தில் முகத்தை மூடிக் கொண்டான்.

https://telegram.me/aedahamlibra

கையிலிருந்த சில மூலிகை இலைகளை நெருப்பில் போட்டான் வில்வீரன். அதிலிருந்து கருநீல நெடி ஒன்று வெளிப்பட்டது.

"அந்த நெடிக்கு நேர் வேந்தனின் முகத்தைக் கொண்டு வாருங்கள்."

வேந்தனின் முகத்தை முன்னோக்கி அழுத்தி அந்த நெடியை வேந்தன் சுவாசிக்கச் செய்தான் வண்டியோட்டி.

"சுவாசித்தது போதும். இதற்கு மேல் இவனைச் சுவாசிக்கச் செய்தால் பைத்தியமாகிவிடுவான்! இவனைத் தூக்கி நம் கட்டை வண்டியில் போடுங்கள்."

வில் வீரனின் உத்தரவை ஏற்ற வண்டியோட்டி வேந்தனைத் தூக்கிக் கட்டை வண்டியில் போட்டுவிட்டு வில்வீரனின் உத்தரவை எதிர்பார்த்து அவனுக்கு முன் பணிந்து நின்றான்.

https://telegram.me/aedahamlibra

“கூடலை நோக்கிப் புறப்படுவோம்!” எனக் கூறியவன் அருகில் மிரட்சியுடன் நின்று கொண்டிருந்த வேந்தனது புரவியை நோக்கினான் அந்த வில்வீரன். அதன் முன்னங்காலில் குருதி வழிந்து கொண்டிருந்தது. அதற்கும் வைத்தியம் பார்த்து மூலிகையை வைத்துக் கட்டுக் கட்டினான். பிறகு அப்புரவியை அவனது மாட்டு வண்டியோடு சேர்த்துக் கட்டிவிட்டான்.

“நம்மோடு இந்தப் புரவியும் பயணிக்கட்டும்!” எனக் கூறி வண்டியில் ஏறி அமர்ந்து கொண்டான்.

வண்டியில் ஏறி அமர்ந்த வண்டியோட்டி சீரான வேகத்தில் காளைகளைச் செலுத்திக் கொண்டிருந்தான். அந்தக் கட்டை வண்டியும் மெல்ல குலுங்கியபடி சென்று கொண்டிருந்தது.

“இரண்டு அடலேறுகளையும் அடித்து ஓட்டுங்கள்!”

https://telegram.me/aedahamlibra

வலது பக்க அடலேறுவின் வாளினைப் பிடித்து முறுகினான் வண்டியோட்டி. அடுத்தக் கணம் கழுத்தினைச் சிலுப்பியபடி பாய்ந்தன இரண்டு அடலேறுகளும்!

வேந்தனது தலைக்குத் துணி மூட்டையை முட்டுக்கொடுத்து உயர்த்தினான் வில்வீரன்.

"நீ யார்?" என வினவினான் மயங்கிக் கிடந்த வேந்தனை நோக்கி.

"நான்... நான்..." மயக்கத்தில் தடுமாறினான் வேந்தன்.

"உன்னைப் பற்றிதான் வினவுகிறேன். நீ யார்?"

"நான் வேந்தன்!"

வண்டியோட்டியைப் பார்த்த வில்வீரன், "இரண்டு மூலிகைகளும் வேலை செய்யத் தொடங்கிவிட்டன. வண்டியை

நிழலாகப் பார்த்து ஓரங்கட்டுங்கள்!" எனக் கட்டளையிட்டான்.

வில் வீரனின் கட்டளைப் படியே பெரும் புங்க மரத்தின் நிழலில் வண்டியை நிறுத்தினான் வண்டியோட்டி.

வில் வீரனிடம், "இளவரசே, தங்கள் உத்தரவுடன் நான் சற்று விலகி நின்று கொள்கிறேன்" எனப் பணிவுடன் வேண்டினான் வண்டியோட்டி.

"உங்கள் மீது எனக்குப் பூரண நம்பிக்கை இருக்கிறது. நீங்கள் விலக வேண்டிய அவசியம் இல்லை அய்யா..."

"தங்கள் உத்தரவு!"

மீண்டும் வேந்தனுக்கு அருகில் அமர்ந்தவன், "உன் பெயர் என்ன என்று தெரிவித்தாய்?" என மீண்டும் வினவினான்.

"வேந்தன் என்று தெரிவித்தேன்!"

“எங்குச் சென்று கொண்டிருக்கி றாய்?”

“கூடலுக்கு?”

“கூடலுக்கு மட்டும் தானா?”

“இல்லை.”

“பிறகு எங்கு?”

“சேரர் கடற்படைத் தளத்திற்கும் செல்லவிருக்கிறேன்!”

“அங்கு எதற்காகச் செல்கிறாய்?”

“சேரப் பெருமான் பெருஞ்சேரலாத னின் பேரமைச்சர் ஓதவஞ்சியின் கட்ட ளையைச் சுமந்துச் செல்கிறேன்!”

வில் வீரன் வேந்தனது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

“இளவரசே, என்ன கட்டளை என்று கேளுங்கள்?” ஆர்வத்துடன் கூறி னான் வண்டியோட்டி.

“இல்லை அய்யா. இவன் என்ன கூறப் போகிறான் என்பதை என் தமக்கை எனக்கு ஏற்கனவே தெரிவித்துவிட்டாள்!”

“யார் வானவல்லியைப் பற்றியா கூறுகிறீர்கள் இளவரசே!”

“ஆம்!”

வண்டியோட்டி அமைதியாகிவிட்டான்.

“கொற்கைக் கடலில் என்ன நடந்தது?”

வேந்தன் எந்தப் பதிலையும் கூறாமல் மயங்கியே கிடந்தான்.

வேந்தனது இமைகளை உயர்த்தி விழிகளைப் பார்த்தான் வில்வீரன். விழிகள் இரண்டும் மேலே சொருகி வெள்ளை விழிகள் மட்டுமே புலப்பட்டன.

“வேந்தா உன்னிடம்தான் கேட்டுக் கொண்டிருக்கிறேன்!”

“என்ன கேட்டீர்கள்?”

“கொற்கைக் கடலில் என்ன நடந்தது என்று வினவினேன்?”

“................”

வேந்தனது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான் வில்வீரன்.

“செங்குவீரரது உடலை எங்குப் புதைத்து வைத்திருக்கிறீர்கள்?”

“அவனது உடல் எங்களுக்குச் சிக்கவில்லை!”

“செங்குவீரர் கடலுக்குள் மூழ்கிய அன்று என்ன நடந்தது?”

“மாறுவேடத்தில் வந்த சோழ இளவல் வளவனைக் கொல்லவே அன்று நாங்கள் திட்டம் போட்டிருந்தோம். ஆனால், செங்குவீரன் எங்களை ஏமாற்றி அவனைத் தப்பிக்க வைத்துவிட்டான்.”

“செங்குவீரரது உடல் உங்களுக்கும் கிடைக்கவில்லை!”

“ஆமாம்.”

“அந்தக் கலத்தினைச் செலுத்தியது யார்?”

“எந்தக் கலத்தை?”

“செங்குவீரரை மூழ்கடித்த கலத்தை?”

“அதை நானும் யுவராஜனும்தான் செலுத்தினோம்?”

“அப்படியெனில் அழுந்தூர் இளவல்?”

“அழுந்தூர் இளவல் யார்?”

“காளனைப் பற்றித்தான் கேட்கிறேன். அவருக்கும் செங்குவீரரின் மரணத்திற்கும் என்ன தொடர்பு?”

“காளனுக்கும் செங்குவீரனது மரணத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை!”

https://telegram.me/aedahamlibra

"என்ன?"

"ஆமாம்."

"அன்று அவரும் உங்களுடன் தானே இருந்தார்!"

"ஆம். ஆனால் அவரை நான் இது வரை முழுவதும் நம்பவில்லை. கரிகால னின் தாய் மாமன் அவன் என்பதை நான் ஒருநாளும் மறக்கமாட்டேன்!"

"அப்படியெனில் செங்குவீரரின் மர ணத்திற்கும் அவருக்கும் எந்தத் தொடர் பும் இல்லை! அப்படித்தானே?"

"அப்படித்தான். செங்குவீரனைப் புகாரிலேயே கொலை செய்யத் திட்டம் தீட்டியிருந்தேன். ஆனால் ஒரு விறலி அவளது உயிரைக் கொடுத்து அவனது உயிரைக் காப்பாற்றிவிட்டாள். கொற் கையில் அவனாகவே எங்கள் தாக்குத லில் சிக்கி மரணத்தை அடைந்துவிட் டான். அவனைக் கொன்றது நானும் யுவராஜனும் மட்டுமே! அந்தப் புகழை

நான் யாருக்கும் விட்டுக் கொடுக்க மாட்டேன்! காளனுக்கும் சேர்த்துதான்!” என வேந்தன் மயக்கத்தில் உண்மையைக் கூறிக் கொண்டிருந்த போதே இடையிலிருந்த குறுவாளைக் கையில் எடுத்து வேந்தனை நோக்கி ஓங்கினார் வண்டியோட்டி. அவரது கையைப் பிடித்துத் தடுத்த வில்வீரன், “அய்யா. உணர்ச்சி வசப்படும் நேரம் அல்ல இது! பொறுமை காக்க வேண்டியது அவசியம்.” எனக் கண்டிப்புடன் தெரிவித்தான்.

“மன்னித்துவிடுங்கள் இளவரசே! இவன் கொன்றது நம் படைத் தலைவரை!”

“நமக்கு இழப்புப் படைத் தலைவர் மட்டுமல்ல. விறலி ஒருத்தி உயிரைக் கொடுத்து நம் தலைவரின் உயிரைக் காப்பாற்றினார் எனக் கூறுகிறானே, அந்தப் பெண் யார் தெரியுமா?”

“யார் இளவரசே!”

https://telegram.me/aedahamlibra

"பூங்கோதை. நம் படைத் தலைவர் செங்குவீரரின் அத்தை மகள். எனக்கு உடன் பிறவா தமக்கை!"

வண்டியோட்டி எந்தப் பதிலையும் கூறாமல் வேந்தனையும், வில் வீரனையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"இவனைக் கண்டம் துண்டமாக வெட்டிப் போட்டுவிட வேண்டும் என்று மனம் துடிக்கிறது அய்யா. ஆனால், மயங்கிக் கிடக்கும் இவனைக் கொள்வது நமக்கு வீரமாகாது! இவனது உதவியும் இன்னும் சில காலங்களுக்கு நமக்குத் தேவை!"

"வேந்தா..." என அழைத்தான் வில் வீரன்.

"ம்ம்ம்ம்..."

"வளவனார் மகன் படைத் தலைவர் திவ்யனைக் கொன்றது யார்?"

"அவரை நாங்கள் கொலை செய்ய வில்லை!"

"என்ன கொலை செய்யவில் லையா?" அதிர்ச்சியுடன் வினவினான் வில்வீரன்.

"ஆம்!"

"அவரை என்ன செய்தீர்கள்?"

"அவனை உயிரோடு பிடித்தோம்!"

"பிடித்தோம் என்றால்..."

"நான் வைதீகரின் மகன் அக்னி புத்திரன், சிங்கள இளவரசர் மற்றும்... மற் றும்..."

"மற்றும்?"

"மகத இளவரசர்?"

"என்ன மகத தேசத்து இளவர சனா?" குறுக்கிட்டு வினவினான் வண்டி யோட்டி.

https://telegram.me/aedahamlibrary

வாயில் கையை வைத்து அவரரை அடக்கினான் வில்வீரன்.

அவரது காதோரம், “ஒரே குரலுக்குத்தான் பதிலளிப்பான். மீண்டும் முயற்சித்தால் இவன் கண் விழித்துவிடுவான்! சற்று நேரம் பொறுமையாக இருங்கள்” எனத் தெரிவித்தான் வில்வீரன்.

“தங்கள் உத்தரவு!”

“திவ்யனை உயிரோடு பிடித்தீர்கள். அவரைக் கொன்றது யார்?” வில் வீரனின் விழிகள் கண நேரத்தில் சிவந்து போயிருந்தது.

“அவரை நாங்கள் கொலை செய்யவில்லை!”

“நான் எண்ணியது சரியாகப் போய் விட்டது!” என வண்டி ஓட்டியிடம் தெரிவித்தான் வில்வீரன். உடனே அவன் ஏதோ கூற வாயைத் திறந்தான். விழிகளை உயர்த்தி வண்டியோட்டியின்

https://telegram.me/aedahamlibra

சொற்களை விழுங்க வைத்தான் வில்வீ ரன்.

"படைத் தலைவர் திவ்யனை நீங் கள் கொலை செய்யவில்லையா?"

"ஆம்"

"எங்குச் சிறை வைத்திருக்கீறீர் கள்?" பெரும் எதிர்பார்ப்புடன் வினவி னான் வில்வீரன்.

"அவரை நாங்கள் எங்கும் சிறை வைக்கவில்லை."

"என்ன, அவரைக் கொலை செய் யவும் இல்லை. சிறைப் படுத்தவும் இல்லை. வேறு என்ன செய்தீர்கள்?"

"யவனத்திற்கு அடிமையாக விற்று விட்டோம்!"

"யவனத்திற்கா?"

"ஆம்!"

"அடிமையாகவா?" வில் வீரனின் விழிகள் கலங்கியது.

"ஆம்!"

"அனுப்பியது யார்?" நா தழுதழுத்த படி வினவினான் வில்வீரன்.

"சிங்கள இளவரசர், அக்னி புத்தி ரன் மற்றும் மகத இளவரசர்!"

"அவர்கள் எதற்குச் சோழ நாட்டுப் படைத் தலைவரை அடிமையாக யவனத் திற்கு அனுப்ப வேண்டும்?"

"மௌரியரையே தடுத்து வெற்றி பெற்றுவிட்டான் சென்னி. சென்னியின் புதல்வன் செல்வாக்கு பெற்றுத் தங் கள் நாட்டின் மீது போர் தொடுத்தால் விளைவு என்னாவது என எண்ணி திட் டமிட்டு சோழ வம்சத்தை அழிக்க முயற் சித்ததன் தொடக்கம் தான் சென்னியின் மறைவு, திவ்யனை அடிமையாக்கியது, வளவனாரை அரசியலை விட்டு விலக வைத்தது!"

https://telegram.me/aedahamlibra

“இது மட்டும்தானா?”

“இல்லை!”

“அனைத்தையும் கூறு!”

“செங்குவீரனை நாங்கள் எதிர் பார்க்கவே இல்லை. இப்படியொரு பெரும் தலைவனாக உருவெடுப்பான் என்று! அவனையும் ஒழித்துவிட்டோம். இனி சோழநாட்டைப் பங்குபோடுவது மட்டுமே தொழில்.”

“மழை வருவதற்கு முன் நாம் அருகிலிருக்கும் சத்திரத்தை அடைந்துவிடுவோம்! வண்டியை விரைந்து ஓட்டுங்கள்”கட்டளையிட்டான் வில்வீரன்.

அடுத்தகணம் அந்த அடர்ந்த வனத்தை விரைந்து கடந்து கொண்டிருந்தது அந்தக் கட்டை வண்டி.

வில் வீரன் தனக்குத்தானே கூறிக் கொண்டான்.”சோழ நாட்டு உபபடைத் தலைவனை அடிமையாக அனுப்பியி

ருக்கிறார்கள்? இதைவிட வேறு அவமானம் இளவரசனாக எனக்கு என்ன இருக்கிறது? என் படைத் தலைவரைக் கூட என்னால் காக்க இயலவில்லையே!” பெரிதும் வருந்தினான் வில்வீரன்.

இடையிலிருந்த குறுவாளைக் கையில் அழுந்த பிடித்தபடி, “என் படைத் தலைவரை எந்தெந்த இளவரசர்கள் அடிமையாக அனுப்பினார்களோ, அந்தத் தேசங்கள் அனைத்தையுமே நான் அடிமையாக்கப் போகிறேன். சோழ நாட்டுப் படைத் தலைவரை அடிமையாக்கி விற்றதன் விளைவை எதிரி நாட்டவர் அனுபவிப்பர்!” எனத் தனக்குத்தானே வெஞ்சினம் உரைத்துக் கொண்டான் அந்த வில்வீரன்.

குறுவாளைக் கோபத்தில் அழுத்திப் பிடித்திருந்த அவனது கரத்திலிருந்து குருதி சொட்டு சொட்டாக வழிந்து கொண்டிருந்தது.

https://telegram.me/aedahamlibra

# 28. கரி-காலன்

சோழவள தேசத்திற்கு மிகவும் நெருக்கடியான காலகட்டம் அது. மோசமானது என்றும் கூறிக்கொள்ளலாம். சோழ இளவலைக் காக்க வேண்டிய சேரமான் பெருஞ்சேரலாதனோ அவனை அழித்து அவனது நாட்டைப் பங்குபோடுவதிலேயே குறியாக இருந்தான். சோழர்களின் புராதானத் தலைநகரான உறைந்தையில் அமர்ந்து கொண்டான் இருங்கோ. சோழ இளவல் தஞ்சமடைந்திருந்த புகாரைத் தாக்குவதற்குரிய அனைத்து ஏற்பாடுகளையும் திறம்படச் செய்திருந்த இருங்கோ சேரமான் பெருஞ்சேரலாதனின் உத்தரவிற்காகக் காத்துக் கொண்டிருந்தான். சோழ நாட்டின் இராணுவக் கட்டமைப்பைத் தாங்

கிக் கொண்டிருந்த முக்கிய இரண்டு படைத் தலைவர்களைச் சோழ நாடு இழந்துவிட்டிருந்தது. சோழ இளவலுக்கு ஆதரவாகத் தோளோடு தோளாக நிற்க வேண்டிய அவனது தாய்மாமன் இளந்திரையனோ உறைந்தையில் தஞ்சமடைந்திருந்தான். சேரநாடு மற்றும் மலை நாடு மட்டுமல்லாது ஒட்டுமொத்த தமிழக மன்னர்களும் சோழ நாட்டின் மீது போர் தொடுக்கப் போகும் செய்தியே மக்கள் மத்தியில் பெரும் பேச்சாக இருந்தது.

வேந்தனிடமிருந்த வைதீகரின் ஓலையை வானவல்லி தந்திரமாக மாற்றிவிட்டாலும், அவளது எண்ணம் முழுவதும் ஈடேறியிருக்கவில்லை. வேந்தன் பாண்டிய நாட்டிற்குச் சென்று திரும்பி வரும் வரையிலாவது போரைத் தற்காலிகமாகத் தள்ளி வைக்கலாம் என்றே வானவல்லி திட்டம் தீட்டியிருந்தாள். அதாவது வேந்தன் கூடல் மற்றும் சேர நாட்டுக் கடல் தளமான முசிறிக்குச் சென்று வரும் மூன்று திங்கள் கால கட்டம். இந்த மூன்று திங்கள் கால கட்டத்தைக் கரிகாலனுக்கு வழங்கினால் அதற்குள் கரிகாலன் நிச்சயம் தன்னைப்

போருக்குத் தயார்படுத்திக் கொள்வான் என்று திட்டம் தீட்டியிருந்தாள் வான வல்லி. அவளது திட்டமும் சரியாகத்தான் வேலை செய்தது. ஆனால் வானவல்லி யின் தந்திரத்தை விடவும் விதி மிக வும் வலிமையானது என்பதை அவள் உணர்ந்திருக்கவில்லை.

ஓதவஞ்சி வேந்தனிடம், "வரும் முழு நிலவு அன்று நம் படைகள் புறப் படாது. அடுத்த அமாவாசை தினமன்றே புறப்படும்" எனத் தெரிவித்திருந்தாலும் சேர அவையில் இருந்த வைதீகரின் துரோகத்தினால் ஆத்திரமடைந்திருந்த வர் வேந்தன் அவையிலிருந்து வெளியே றிய பிறகு, "நம் படைகள் வரும் முழு நில வன்றே புறப்படும். சோழ நாட்டின் எந்தக் கோட்டைகளையும் சேர நாடு தாக்கப் போவதில்லை. புகார்தான் நம் இலக்கு. வேளிர்கள் மற்றும் பாண்டியனின் துணை இல்லாமல் நம் படைகள் தனியாகவே சோழனுடன் நேருக்கு நேர் பொருதும்" எனக் கூறியபிறகே தனது இலச்சினைப்

பதக்கத்தைச் சேரமானிடம் அளித்து விட்டு அவையை விட்டு வெளியேறியிருந்தார்.

அவர் தெரிவித்த முழு நிலவு தினத்திற்கு இன்னும் இரண்டு நாட்களே மிச்சமிருந்தது. ஓதவஞ்சி அவையில் இல்லாவிட்டாலும் அவர் கடைசியாகத் தெரிவித்துச் சென்ற கட்டளையை நிறைவேற்ற சேரமான் பெருஞ்சேரலாதன் முழு வீச்சுடன் ஈடுபட்டிருந்தான். சேர நாட்டின் படைகள் அனைத்தும் வஞ்சி மாநகரிலிருந்து சற்றே கிழக்கில் ஆன்பொருநை நதிக்கரையில் முகாமிட்டிருந்தன. நாற்பதாயிரம் காலாட்படை வீரர்கள், பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட வில் வீரர்கள், ஐயாயிரம் புரவிகள், அதே அளவுள்ள யானைப் படை என அனைத்தையும் ஒன்று திரட்டியிருந்தான். முழு நிலவன்று போர்த் தேவதையான காளிக்குப் பலியிட்டு புகாரை நோக்கி நகரலாம் எனத் திட்டம் தீட்டியிருந்தான்.

புகாருக்கும் வஞ்சிக்கும் இடையில் தான் உறைந்தைப் பட்டினமும் இருக்கிறது. போகும் வழியில் உறைந்தையில் பாசறை அமைத்துத் தங்கியிருக்கும் இருங்கோவின் மலை நாட்டுப் படைகளையும் அழைத்துச் சென்றுவிடலாம். அவனிடம் இருக்கும் முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட படை வீரர்களையும் சேரப் படையுடன் இணைத்துவிட்டால் பலம் இரட்டிப்பாகிவிடும். அது வரை இருங்கோ வேளிற்கு எந்தத் தகவலையும் அளிக்க வேண்டாம். புகாரை முற்றுகையிட்ட பிறகே நாம் சோழனைப் போருக்கு அழைக்கப் போகிறோம். அது வரை தகவல் எந்தச் சூழ்நிலையிலும் வஞ்சியிலிருந்து கசியக் கூடாது எனத் திடமாகக் கட்டளையிட்டிருந்தான் சேரமான் பெருஞ்சேரலாதன்.

நீண்ட காலம் கழித்துச் சேர நாடு படையெடுக்க ஆயத்தமாகியிருப்பதால் அந்த நாடே உற்சாகத்தில் அல்லோலகல்லோலப் பட்டுக் கொண்டிருந்

தது."இன்னும் இரண்டு நாட்கள் தான். அதன் பிறகு தென்னகத்திலிருந்து சோழ நாடு என்ற ஒன்றே இல்லாது மறைந்து விடும்" என ஒவ்வொருவரும் கட்டியம் கூறிக் கொண்டிருந்தனர். இந்த உற் சாகத்தில் சிறிதும் கலந்துகொள்ளாமல் வருத்தத்துடன் இருந்தவன் சேர நாட்டு இளவல் மட்டுமே! சேரமான் பெருஞ் சேரலாதனின் உத்தரவிலிருந்து மாறு பட்ட பேரமைச்சர் ஓதவஞ்சி அனைத்துப் பணிகளிலிருந்தும் தன்னை விடுவித் துக் கொண்டு சென்றுவிட்டார். ஆனால், 'இளவரசனான தன்னால் அப்படிச் சென் றுவிட இயலவில்லையே' என எண்ணிக் கொண்டு மனதில் புழுங்கியபடி சேரனின் கட்டளைக்குப் பணிந்து செயல்பட்டுக் கொண்டிருந்தான் அவன்.

வஞ்சியிலிருந்து புரவியில் பயணித் தால் ஒரே நாளில் அடைந்துவிடக் கூடிய தொலைவில் இருந்தது புகார். ஆனால், முழு நிலவன்று புறப்படும் சேர நாட்டுப் படை அடுத்த இரண்டாவது

https://telegram.me/pedhamilibra

கிழமை உறைந்தையைக் கடந்திருக்கும், உறைந்தையிலிருந்து அடுத்தப் பத்தாவது நாள் புகார். போருக்கு முற்றிலும் தயாராகாத சோழ நாட்டை இந்தச் சேர நாட்டுப் படை முற்றுகையிடத் தொடங்கினால் எப்படியும் ஒரே கிழமை காலத்திற்குள் சேரர்கள் கையில் விழுந்துவிடும்.

போரை முன்னெடுத்து நடத்த வேண்டிய சோழ நாட்டு இளவல் கரிகாற்வளவன் இந்த அபாயகரமான கால கட்டத்தில்தான் எவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் வேந்தனுடன் கூடலை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்.

கள்வர்களின் ஆயுதங்களின் வழியாக உடலுக்குள் பாய்ந்த நஞ்சினால் ஏற்பட்டிருந்த கடுமையான காய்ச்சலில் இரண்டு நாட்கள் சத்திரத்திலேயே கிடந்தான் வேந்தன். பிறகு வில்வீரன் அளித்த மருத்துவத்தினால் விரைவில் குணமான வேந்தன் மூன்றாவது நாளே கூடலை

https://telegram.me/aedahamlibrary

நோக்கிச் செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தான்.

வண்டியோட்டி இரண்டு அடலேறுகளையும் கட்டை வண்டி நுகத்தடியில் பூட்டிவிட்டு உறங்கிக் கொண்டிருந்த வில்வீரனை எழுப்பினான்.

கண் விழித்த் வில்வீரன், "மாமா, அதற்குள் எதற்கு எழுப்புகிறீர்கள்?" எனக் கேட்டபடியே படுக்கையிலிருந்து எழுந்து அமர்ந்தவன் சோம்பல் முறித்தான்.

"விடிந்து இரண்டு சாமம் ஆகிவிட்டது. உன் அக்கா என் வீட்டில் உறங்கி என் குடும்பத்தைக் கெடுக்கிறாள். நீ என்னுடன் உறங்கி என் பிழைப்பினைக் கெடுத்துக் கொண்டிருக்கிறாய்!" எனக் கத்திக் கொண்டு சத்திரத்தில் கிடந்த மூட்டை முடிச்சுகள் அனைத்தையும் கட்டி அந்த மாட்டு வண்டியில் ஏற்றினான்.

அவன் அவனது உடைமைகளை வண்டியில் ஏற்றுவதற்குள் முகத்தினைக் கழுவித் தன்னைத் தயார் படுத்திக் கொண்டு வந்திருந்தான் வில்வீரன்.

"மாமா நாம் எங்குச் செல்கிறோம்?"

"கூடலுக்கு!"

"கூடலுக்கா?"

"ஆம்!"

"எனக்குப் பசிக்கிறது மாமா! சற்றுப் பொறுங்களேன் காலை உணவை உண்டுவிட்டு வந்துவிடுகிறேன்!"

"உன்னுடன் இதே ரோதனையாகப் போய்விட்டது. நான் புறப்படுகிறேன். நீ வருகிறாயா? இல்லையா?"

"சரி. வருகிறேன்!" என வாடிய முகத்துடன் கூறிய வில்வீரன் அவனது வில் மற்றும் அம்புகளை எடுத்து அணிந்து கொண்டு வண்டியின் பின்

https://telegram.me/aedahamlibra

புறமாகக் காலை தொங்க போட்டபடி அமர்ந்து கொண்டான்.

"அடேய்! எத்தனை முறைதான் உன்னிடம் கூறுவது?"

"எதை மாமா?"

"இந்தக் கட்டை வண்டியில் பின் பாரம் அதிகம். ஆதலால் எப்போதுமே எனக்கு அருகில் உட்கார் என்று!"

"முன்னாள் உட்கார்ந்தால் என்னால் வேடிக்கைப் பார்க்க இயலாதே!"

"நீ வேடிக்கை பார்த்து எதையும் கிழித்துவிடப்போவதில்லை. முன்னால் வந்து உட்கார்!" பெரும் கோபத்துடன் தெரிவித்தான் வண்டியோட்டி.

"உங்களுக்குத் துணையாக உங்களுடன் அனுப்பி வைத்த என் அக்காவைக் கூற வேண்டும்!" என முணுமுணுத்தபடி வண்டியோட்டிக்கு அருகில் வந்து அமர்ந்தான்.

https://telegram.me/aedahamlibra

“என்னடா முணுமுணுக்கிறாய்?”

“ஒன்றும் இல்லை மாமா... தாங்கள் புறப்படலாம்!” கண் கலங்கியபடி தெரிவித்தான் அந்த வில்வீரன்.

அவர்கள் இருவரின் உரையாடலையே கேட்டுக் கொண்டிருந்த வேந்தன், “ஏன், எப்போது பார்த்தாலும் அந்தத் தம்பியை திட்டிக் கொண்டே இருக்கிறாய்? அவனது மனம் எப்படிப் பாடுபடும்?” என வருத்தத்துடன் வினவினான். இரண்டு நாட்கள் கடும் காய்ச்சலில் கிடந்ததால் அவனது குரல் சற்றுப் பலவீனமாகவே வெளிப்பட்டது.

“உடல் குணமாகியதும் கூடலுக்குப் புறப்பட்டுவிட்டாய் போலிருக்கிறதே!”

“ஆமாம். முக்கியப் பணி. இனியும் என்னால் இங்குத் தாமதிக்க இயலாது.”

“புரவியிலா பயணிக்கப் போகிறாய்?”

https://telegram.me/aedahamlibra

"ஆமாம் அப்பனே! புரவியில் தான்!"

"உனது புரவியின் காலில் தான் அடிபட்டிருக்கிறதே?"

"அந்தக் காயம் ஆறிவிட்டது!"

"இல்லை. வெளித் தோல் மட்டுமே மூடியிருக்கிறது. அதில் ஏறிப் பயணித்தால் அதன் சிரங்கு சினைத்துவிடும். பிறகு புழு வைத்துவிட்டால் புரவியைக் காப்பது பெரும் சிரமம்!"

அருகில் நின்ற புரவியின் பிடரியை ஆதரவாகத் தடவிக் கொடுத்தான் வேந்தன்."அந்தப் புரவியை விற்றுவிட்டு இன்னொரு புரவியைச் சம்பாதித்துக் கொள்ளேன்!" என வினவினான் வண்டியோட்டி.

"அது இயலாது."

"இயலாதா?"

"ஆம்!"

"என்ன கூறுகிறாய்?"

"உயிருக்கு ஆபத்தான சமயங்களில் இந்தப் புரவிதான் என்னைக் காப்பாற்றியிருக்கிறது. இது நோய்வாய்ப்பட்டு விட்டது என்பதற்காக என்னால் இதனை விற்றுவிட இயலாது!"

"உன் உயிர் இந்தப் புரவிதான் போலிருக்கிறதே!"

"ஆம். என் உயிரே இந்தப் புரவிதான். இதை விட்டுவிட்டு ஒருநாளும் என்னால் பிரிந்திருக்க இயலாது. என்னைப் பிரிந்தால் இந்தப் புரவியும் உணவுண்ணாமல் இறந்துவிடும்!"

"விசித்திரமாக அல்லவா இருக்கிறது!"

"..........."

"சரி இன்னொன்று செய்யேன்!"

"என்ன?"

"பேசாமல் எனது கட்டை வண்டியிலேயே வந்துவிடேன்!"

https://telegram.me/aedahamlibra

"உங்களுடனேவா?"

"ஆமாம். உறைந்தையிலிருந்தே கூடலுக்குச் சென்று பழக்கப் பட்டவன் நீ! இந்தப் பாதை உனக்குப் புதிது. பாதை மாறி அன்று வனக் கள்வர்களிடம் அகப் பட்டுக் கொண்டாய். பேசாமல் நீயும் எங் களுடன் வந்துவிடு. புரவியில் செல்லும் காலத்தைவிட ஒரு கிழமைக் காலம் மட் டுமே கூடுதலாக எடுத்துக்கொள்வோம். குறுக்கு வழியில் நாம் பயணித்துக் கூடலை விரைவில் அடைந்துவிடலாம். என்ன கூறுகிறாய்?"

"ஏற்கெனவே உங்களுக்கு நான் பெரும் சிரமத்தை அளித்துவிட்டேன்!"

"சிரமம் என்றெல்லாம் கூறாதீர்கள். உங்களுக்கு எங்களது கட்டை வண்டி யில் பயணிக்க விருப்பம் இல்லாவிட்டால் கூறுங்கள், நாங்கள் புறப்படுகிறோம். உங் கள் புரவியின் மீது பயணித்தால் அது நிச்சயம் இறந்துவிடும். என்னடா நான் சரியாகத் தானே கூறுகிறேன். நீதானே

https://telegram.me/aedahamlibra

அதற்கும் இரண்டு நாட்களாக வைத்தியம் பார்த்தாய்?" என அருகில் வருத்தத்துடன் அமர்ந்திருந்த வில் வீரனைப் பார்த்து வினவினார் வண்டியோட்டி.

"ஆமாம் மாமா. தாங்கள் கூறுவது அனைத்தும் சத்தியம். பாரம் சுமந்தால் அது விரைவில் நோய்வாய்ப்பட்டுவிடும்!"

"கேட்டீர்களா வீரரே? வைத்தியம் பார்த்தவனே தெரிவித்துவிட்டான். என்ன கூறுகிறீர்கள்?"

"சரி அய்யா... தாங்கள் இருவரும் எனது நன்மையை முன்னிட்டு இப்படி வற்புறுத்தும்போது என்னால் எப்படி மறுகக் இயலும்? நானும் வருகிறேன். ஆனால் எனது புரவியை என்ன செய்வதென்று தெரியவில்லையே?"

"அதன் கடிவாளத்தை நம் வண்டியின் பின்புறத்தில் கட்டிவிடுங்கள். நம்முடனே அதுவும் பயணிக்கட்டும். பாரம் மட்டுமே அதனால் இப்போது சுமக்க இய

லாதே தவிர மற்றபடி அதனால் நன்கு நடக்க இயலும்!"எனத் தெரிவித்தான் அந்த வில்வீரன்.

தனது உடைமைகளை அந்தக் கட்டை வண்டியில் போட்ட வேந்தன், புரவியின் கடிவாளத்தையும் வண்டியின் பின்புறத்தில் சேர்த்துப் பிணைத்துவிட்டு வண்டியில் ஏறி அமர்ந்து கொண்டான்.

வண்டியோட்டி அடலேறுகளைத் தட்டிவிட்டான். எட்டு கால் பாய்ச்சலில் கூடலை நோக்கிப் புறப்பட்டன.

வண்டியோட்டிக்கு அருகில் அமர்ந் திருந்த வில்வீரன் அவனை, "மாமா..." என ஆசையுடன் அழைத்தேன்.

"என்னடா?" கோபத்துடன் சொற் கள் வெளிப்பட்டன வண்டியோட்டியிடமி ருந்து.

"நான் வண்டியை ஓட்டுகிறேனே!"

"என்ன விளையாடுகிறாயா?"

"விளையாடவில்லை. எனக்கு வண்டியை நன்கு ஓட்டத் தெரியும்! நம்புங்களேன்!"

"நீ ஓட்டியதைத் தான் நான் இரண்டு தினங்களுக்கு முன் பார்த்தானே!"

"ஒரு முறை பிழை இழைத்துவிட்டேன் என்பதற்காகக் காலம் முழுவதும் குற்றம் சாட்டுவது நியாயமா?"

"தம்பி கூறுவதும் சரிதானே! தாங்கள் அருகில் இருந்து வழிகாட்டினால் அவன் கற்றுக் கொண்டு விடப் போகிறான்?"

"இவனைப் போன்ற முட்டாளை நான் இதுவரை பார்த்ததில்லை."

"முட்டாளா?"

"ஆமாம்."

"அம்பினை அசகாயச் சூரனைப் போன்று செலுத்துகிறான். வைத்தியமும்

நன்கு பார்க்கிறான். இவனைப் போய் முட்டாள் என்கிறீர்களே!”

“இவனுக்குத் தெரிந்ததே இந்த இரண்டு காரியங்கள் தான்! இதைத் தவிர்த்து விட்டுப் பார்த்தால் இவன் தெண்டம்!”

“இவன் யார் உங்களது அக்கா மகனா? உங்களை ஆசையுடன் ‘மாமா’ என்று அழைக்கிறானே!”

“இல்லை. நான் கட்டியவளின் தம்பி. அவளோடு ஒட்டிக் கொண்டு வந்துவிட்டான்!” எனக் கூறிக் கொண்டிருந்த போதே கோபத்துடன் எழுந்த வில்வீரன், “மாமா, இன்னொருமுறை என்னைத் தெண்டம், ஒட்டிக் கொண்டு வந்தவன் என்றெல்லாம் கூறாதீர்கள். எனக்கும் கடுமையாகக் கோபம் வரும். கூடலுக்குச் செல்லும் உங்களுக்குத் துணையாக அக்கா அனுப்பியிருக்கிறாள் என்பதற்காக மட்டுமே கட்டுப்பட்டு உங்களுடன் வருகிறேன்!” எனக் கூறியவன் மீண்டும்

https://telegram.me/vedahamlibra

பின்னால் சென்று காலைத் தொங்கப் போட்டுக் கொண்டு அமர்ந்து கொண் டான்.

"அடேய் உன்னைப் பின்னால் அமரக் கூடாது என்று கூறியிருக்கிறேன்!"

"முன் பாரத்திற்குத்தான் தான் அந்த வீரர் உங்களுடன் அமர்ந்துவிட் டாரே, அவரது பாரத்தை விடவா எனது பாரம் அதிகம்?"

வண்டியோட்டி எந்தப் பதிலையும் கூறவில்லை.

"எனக்குச் சில சந்தேகங்கள். வின வலாமா?" என வினவினான் வேந்தன்.

"கேளுங்கள் வீரரே! என்ன தயக் கம். நாம்தான் நண்பர்களாக மாறிவிட் டோமே!"

"உங்களது நட்பு கிடைத்து மிகவும் புண்ணியம் எனக்கு!"

"ம்ம்ம்ம்"

https://telegram.me/aedahamlibra

“உங்களது பெயர் என்ன?”

“என் பெயர் வேலன்!”

“என்ன தொழில் பார்க்கிறீர்கள்!”

“ஊர் ஊராகச் சென்று கூத்துக் கட்டுவது எங்களது தொழில் வீரரே!”

“கூத்து கட்டுவீர்களா?”

“ஆம்!”

“இப்போதும் கூத்துக் கட்டுவதற்குத்தான் கூடலுக்குச் செல்கிறீர்களா?”

“இல்லை!”

“இன்னொரு கேள்வி?”

“என்ன?”

“அந்தக் கள்வர்களை நோக்கி அன்று விற்களை எய்த போது ஒருவனைக் கூட அவன் கொல்லவில்லையே ஏன்? அதிலும் அனைத்து அம்புகளும் கால்களையே தாக்கும்படி செலுத்தினானே ஏன் வேலா?”

https://telegram.me/aedahamlibra

“அதுவா?”

“ஆம்!”

“அவனது மனதில் திகம்பரர்களின் கடவுள் மகாவீரர் என்ற நினைப்பு ஒன்று உள்ளது. அவனுக்கு ஆபத்து எனும் போது மட்டுமே எதிரில் இருப்பவர்க ளைக் கொல்வானாம். மற்றபடி தாக்கி விட்டுவிடுவான்!”

“நல்ல பண்பு! வீரத்தின் அடையா ளம்.”

“நீங்கள் வேண்டுமானால் அவனை மெச்சிக் கொள்ளலாம்!”

“உங்களது மைத்துனரின் வலது கால் எதற்காக வீங்கி இருக்கிறது. அந்தக் காலை எதற்கு அவர் துணி கொண்டு சுற் றியிருக்கிறார்?”

“அதுவா?”

“தெரிவிப்பதில் தயக்கம் ஏதாவது இருக்கிறதா?”

"அதில் என்ன தயக்கம் இருக்கப் போகிறது வீரரே! சில கிழமைகளுக்கு முன் அவனை ஏதோ ஒரு பூச்சி ஒன்று கடித்துவிட்டது. கால் வீங்கிப் போய் விட்டது. அனைத்து வைத்தியர்களிடம் காட்டிப் பார்த்துவிட்டோம். நெருப்பு சுட்டதைப் போன்று தழும்பு அவ்வப்போது தோன்றிவிடுகிறது! கூடலில் ஓர் வைத்தியர் இருப்பதாகக் கேள்வி. அவரிடம்தான் அவனை அழைத்துச் செல்கிறேன்."

"யானைக் கால் வியாதியாக இருக்குமோ?"

"இருக்கலாம். யார் கண்டது! அதைக் கூடல் வைத்தியர்தான் தெரியப்படுத்த வேண்டும்!"

"வருத்தம் வேண்டாம். யானைக் காலுக்கு வைத்தியம் தெரிந்தவர்கள் கூடலில் நிறையப் பேர் இருக்கிறார்கள். பொதிகை மலையின் மூலிகைகள் அம்மாவீரரைக் குணப்படுத்திவிடும்."

https://telegram.me/aedahamlibra

“நானும் அந்த நம்பிக்கையில் தான் நெடுந்தொலைவுப் பயணத்தைத் தொடங்கியிருக்கிறேன்!”

“உங்கள் மைத்துனனை நாம் கரி காலன் என்றே அழைக்கலாம்!” எனக் கூறிய வேந்தன் பெரும் பேய் சிரிப்புச் சிரித்தான்.

“என்ன கரிகாலனா?” எனக் கேட்ட வண்டியோட்டி வேலன் பின்னால் அமர்ந் திருந்த வில் வீரனையும் வேந்தனையும் மாறி மாறிப் பார்க்கலானான்.

“என்ன இருவரும் முழிக்கிறீர்கள். உங்களுக்குத் தெரியுமா? புகாரில் செங் குவீரனால் முடிசூட்டப்பட்ட சென்னியின் புதல்வன் வளவனின் பெயரும் ‘கரிகா லன்’ தான்!”

“கரிகாலனா?”

“ஆமாம்.”

https://telegram.me/aedahamlibrary

“இந்தப் பெயரை எதற்குச் சோழ இளவல் சூடிக் கொண்டிருக்கிறாராம்?”

“அதுவா...”

“அதுவேதான்!”

“அவனது நிறம் கருப்பு. அவனை எதிர்ப்பவர்களுக்கும் அவன் காலனாம். ஆதலால் அவன் கரிகாலனாம்!” எனக் கூறியபடி மீண்டும் சிரிக்கலானான் வேந்தன்.

“சோழ இளவல் பெயரை எதற்குத் தாங்கள் என் மைத்துனனுக்குச் சூட்டியிருக்கிறீர்கள்?”

“அவனுக்குப் பெயர் கரிகாலன். இவனுக்குக் கால் கரிகால். ஆதலால் இவனையும் நாம் கரிகாலன் என்று அழைப்பதில் என்ன பிழை?”

“குழப்புகிறீர்களே வீரரே!”

“நான் குழப்பவில்லை. இவனுக்கு ஒரு கால் யானைக் காலாக இருக்கிறது

https://telegram.me/aedahamlibra

அல்லவா? அதைத்தான் கரிகால் என்கி றேன் நான்!”

பெரும் குழப்பத்துடன் வேந்தனை நோக்கினார் வண்டியோட்டி வேலன்.

“அப்பனே! கரி என்றால் யானை என்பது உனக்குத் தெரியாதா? ஆதலால் தான் இவனைக் கரிகாலன் என்கிறேன். சில நகைச்சுவைகளைக் கூறிய உடனே அனுபவித்துச் சிரிக்கவேண்டும். இப்படி விளக்கம் எல்லாம் கேட்கக்கூடாது?”

அவன் கூறியதைக் கேட்ட வேல னும், கரிகாலனும் உரக்கச் சிரித்தார்கள்.

“நாம் எப்போது கூடலை அடை வோம்?” ஆர்வத்துடன் வினவினான் வேந்தன்.

“நாளைய மறுநாள் முழு நிலவு. அடுத்த இரண்டு கிழமைகளில் நாம் கூடலை அடைந்துவிடுவோம்!”

“இன்னும் இரண்டு கிழமைகளா?”

https://telegram.me/aedahamlibra

"ஆம் வீரரே! அதற்குள் உங்களது புரவி குணமாகிவிட்டால் தாங்கள் குறிப்பிட்ட காலத்திற்கு முன்னரே கூடலுக்குச் சென்றுவிடலாம்!" என வேலன் கூறியதற்கு வேந்தன் எந்தப் பதிலையும் அளிக்கவில்லை. அவனது நினைப்பு முழுக்க உறைந்தையையே சுற்றிக் கொண்டிருந்தது.

'கொண்ட காரியத்தை விரைந்து நிறைவேற்ற வேண்டும்' என மனதினுள் நினைத்துக் கொண்டு அமர்ந்திருந்தான் வேந்தன்.

வேந்தன் கூறியதைக் கேட்ட கரிகாலர் வஞ்சியிலிருந்து புகாருக்கு ஏற்பட்டிருக்கும் அபாயத்தை அறியாமல் அந்த மாட்டு வண்டியில் தனது கால்கள் இரண்டையும் தொங்க போட்டுக் கொண்டு அடலேறுகளின் கழுத்து மணிச் சத்தம் மற்றும் தூரத்து வயல்வெளிகளில் இருந்து வந்த ஏசப் பாடலைக் கேட்ட

படி கண்களை மூடிப் பயணத்தை அனுப
வித்துக் கொண்டிருந்தார்.

https://telegram.me/aedahamlibra

https://telegram.me/aedahamlibra

# 29. புறப்பட்ட படைகள்

முழு நிலவு தினத்திற்கான முந்தைய இரவு. நிமித்திகர்களின் கணிப்புப்படி முழு நிலவு நாளில் பயணிப்பதைவிட அதற்கு முந்தைய நாளில் பலியிட்டுவிட்டுப் பயணத்தைத் தொடர்ந்தால் வெற்றி நிச்சயம் என்பதால் ஒருநாள் முன்னதாகவே பயணத்தைத் தொடங்கவிருந்தான் சேரமான் பெருஞ் சேரலாதன்.

போர்க் கடவுளான காளிக்குப் பூசனை செலுத்தி வழிபட்டார்கள். பூசாரிகள் அருள் வந்து வெறி பிடித்தபடி நீண்ட வாளினை மார்பில் அடித்துக் கொண்டு குறி கூறினார்கள். அவர்கள் கூறும் குறி

களைக் கருத்தாகக் கேட்டுக் கொண்டிருந்தான் சேரமான் பெருஞ்சேரலாதன்.

பூசாரிகளும் மன்னன் எதிர்பார்த்த வெற்றிச் செய்திகளையே குறியாகத் தெரிவித்தார்கள். கடைசியாக ஆடிய மாயாண்டி மட்டும் வெறிபிடித்து மார்பில் வாளின் பின்புறத்தால் அடித்துக் கொண்டதில் தோல் கிழிந்து குருதி வழிந்து கொண்டிருந்தது. வழிந்த குருதிகளைக் கைகளால் எடுத்து நக்கிக் கொண்டவன், "டேய்... எனக்குப் பசி அடங்கவில்லை. காவு வேண்டும்!" என அடம்பிடித்தான்.

உடனே ஓடிச்சென்ற வீரர்கள் கூவிய சேவல் மற்றும் ஆடுகளைப் பிடித்துக் கொண்டு வந்து அவன் முன் விட்டார்கள். அவற்றின் கழுத்துகளைப் பிடித்துக் கடித்துத் துப்பிய மாயாண்டி, "என்னடா இது புதுப்பழக்கம். எனக்கு மூத்தகுடி மக்களின் குருதி வேண்டும்!"

https://telegram.me/aedahamlibra

எனக் கூறியவன் அப்படியே மண்டியிட்டு அமர்ந்து கொண்டான்.

'மூத்த குடி' என்ற சொல்லைக் கேட்டதுமே அங்கு நின்ற மூத்த அமைச்சர்கள் மற்றும் படைத் தலைவர்கள் அனைவரும் அதிர்ந்து போனார்கள். 'மூத்தகுடி என்றால் சோழர், சேரர் மற்றும் பாண்டியரைத் தானே குறிக்கும். மன்னர் குலங்களை எப்படிப் பலியிட இயலும்?' எனத் திகைத்து நின்றார்கள்.

அப்போது அங்கு நின்ற வயதான கோடாங்கி ஒருவர், "காளிக்கு மூத்த குடி குருதி வேண்டுமாம். துடியன், பாணன், கடம்பன், பறையன் என யாராவது இருக்கிறீர்களா?" எனக் கூவி அழைத்தான்.

அவன் அழைத்ததுதான் தாமதம் அடுத்தகணம் ஒவ்வொரு மூத்த குடியிலிருந்தும் ஒருவர் வந்து காளிக்கு முன் மண்டியிட்டு விழுந்தார்கள்.

https://telegram.me/aedahamlibra

“வீர மரணம் மட்டுமே எங்களுக்கு வேண்டும்! அது காளிக்காகப் போனாலும் ஒன்றுதான். செருக்களத்தில் போனாலும் ஒன்றுதான்!” என முழங்கிக் கொண்டு அவர்களின் வாளினைக் கையில் ஏந்திக் கொண்டு எழுந்து நின்றார்கள்.

உடனே தாரை தப்பட்டைகள் முழங்கப்பட்டன. குழல்களும், சங்குகளும் ஊதப்பட்டன. ”எங்களது வீரக்கல் நடப்பட்டிருக்கும் இடத்தில் நம் படையின் வெற்றிச் செய்தியைத் தெரிவித்துவிட்டுச் செல்லுங்கள்!” எனக் கூறிய பறையன் முதலில் தனது கழுத்தினை அறுத்துக் கொண்டான்.

“வெற்றி நமக்கே” என முழக்கமிட்டபடி துடியன், கடம்பன், பாணன் என ஒவ்வொருவராக அடுத்தடுத்துக் கழுத்தினை அறுத்துக் கொண்டு களப் பலியினைக் காளிக்கு வழங்கலானார்கள். வீரர்களின் வெறிபிடித்த வெற்றி முழக்கம்

அந்த இடத்தில் எழுந்து நெடுந்தூரம் பயணித்து அடங்கியது.

மூத்த குடி மக்களின் பலியினை அடைந்த காளியும் திருப்தியுடன் மலையேறியது.

அதுவரை அமைதியாக நின்று நடந்ததைத் கவனித்த சேரமான் பெருஞ்சேரலாதன் அவரது ஆசனத்திலிருந்து எழுந்தார்.

“சேரமான் வாழ்க!... பெருஞ்சேரல் வாழ்க” எனும் வாழ்த்து முழக்கங்கள் எழுந்து விண்ணைப் பிளந்தன.

முழக்கமிட்ட மறவர் கூட்டத்தை நோக்கிக் கையை உயர்த்தினார். அடுத்தக் கணம் கூட்டத்தின் முழக்கம் அடங்கியது. தனது மீசையை நீவிவிட்டபடியே கம்பீரமாக அந்தக் கூட்டத்தினூடே நடந்த சேரமான், “மாவீரர்களே!” என அழைத்தார்.

வீரர்கள் கூட்டம் அமைதியாக அவர் கூறப்போவதைக் கேட்க ஆவலோடு அவரை உற்று நோக்கிக் கொண்டிருந்தனர்.

"தாய் நாட்டின் பெருமையைக் காக்க உதிரம் சிந்த ஆயுதத்தைத் தூக்கியிருக்கும் ஒவ்வொருவனும் மாவீரர்களே! காலம் காலமாக நாம் இந்தச் சோழர்களினால் துயரப்பட்டிருக்கிறோம். அதனைத் தீர்க்கத் தகுந்த காலம் பிறந்து விட்டது!" என முழங்கினார்.

அடுத்தக் கணம் குழுமியிருந்த பல்லாயிரக்கணக்கான வீரர்களும், "ஆமாம்... ஆமாம்..." என முழங்கலானார்கள்.

"இத்தனை காலமாக நாம் சுமந்து வந்து கொண்டிருக்கும் அவமானக் கறையைச் சோழர்களின் குருதிகளால் கழுவித் துடைப்போம். எப்போது சோழத் தலைநகரில் விற்கொடி பறக்கிறதோ, அப்போதுதான் நம் மானத்தைக் காக்க

உயிரை விட்ட நம் முன்னோர்களின் ஆன்மாக்கள் அமைதியடையும்!" எனக் கூறிக் கொண்டிருந்த போதே அவரது பேச்சைக் கேட்க இயலாத சேர இளவரசன் அங்கிருந்து வெளியேறிப் புரவியில் செல்லலானான்.

அதைக் கவனித்துவிட்ட சேரமான் பெருஞ்சேரலாதனின் விழிகள் சிவந்தன. கோபத்தில் மீசை துடித்தது. வீரர்கள் முன்பு தனது கோபத்தை வெளிப்படுத்த விரும்பாதவர், "வீரர்களே பொழுது புலர்ந்ததும் நாம் புகாரை முற்றுகையிடக் கிளம்புவோம்!" எனக் கூறிக் கொண்டு கோபமாக இளவரசனது கூடாரத்திற்குச் செல்லலானார்.

கூடாரத்திற்குச் சென்றதும் சேரமான் பெருஞ்சேரலாதனின் கோபம் கட்டுக்கடங்காமல் அதிகமானது. அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. கன்னிகள் சிலர் யாழினை இசைத்துக் கொண்டிருந்தனர், இருவர் சாமரம் வீசிக் கொண்

டிருந்தனர். பஞ்சணையில் அமர்ந்து கொண்டு கண்களை மூடி இசையை அனுபவித்துக் கொண்டிருந்தான் சேர இளவல்.

"மகனே உன்னைப் பெரும் வீரன் என எண்ணியிருந்தேன் நான். ஆனால் நீ இப்படிக் கோழைத்தனமாக நடந்து கொள்வாய் என்பதை நான் முன்னமே அறிந்திருந்தால் உன்னைக் கருவிலேயே சிதைக்கச் சொல்லிக் கட்டளையிட்டி ருப்பேன்!" என வெகுண்டெழுந்தார் சேரமான் பெருஞ்சேரலாதன்.

மன்னரின் ஆவேசக் குரலைக் கேட்டுக் கண் விழித்த சேர இளவல், "அந்தப் பாக்கியத்தைத் தங்களுக்கு இப் போது அளிக்கச் சித்தமாக இருக்கிறேன் கொற்றவா! எனது தந்தையும் வீரமான மன்னர், நெறி பிறழாத நீதிமான், ஒத்த தகுதியுடன் இருப்பவருடனே பொருதப் புறப்படுவார் என நம்பிக் கொண்டிருந்த எனக்குத் தாங்கள் பெருத்த ஏமாற்

https://telegram.me/aedahamlibra

றத்தை அளித்துவிட்டீர்கள். மனதிற்குப் பிடிக்காத அரச கட்டளையே ஏற்று நடக்க வேண்டும் என அறிந்திருந்தால் கருவி லேயே நானும் சிதைந்து போயிருப்பேன்" எனக் கூறியபோது அவனது விழிகள் நேருக்குநேர் சேரமான் பெருஞ்சேரலாத னின் விழிகளை நோக்கின.

"நீயும் தேவையான போது உன் ஆசான் ஓதவஞ்சியைப் போன்று என் னைக் கைவிட நினைத்திருக்கிறாயா! அவனைப் போன்று நீயும் என்னைக் கைவிட்டுச் சென்றுவிடு. நான் மட்டுமே படையை நடத்திக் கொள்கிறேன்!"

"அரசருக்கு நான் ஒன்றை மட்டும் தெளிவாகக் கூறிக்கொள்ள விரும்புகி றேன். இந்தப் போரில் எனக்கு உடன் பாடு இல்லாவிட்டாலும் கடைசி வரை உங்களது கட்டளையை ஏற்றுப் படை களை வழிநடத்துவேன். தங்களது கட் டளைப்படி நாளை காலை நமது படை புகாரை நோக்கிப் பயணத்தைத் தொடங்

கும். அதில் தங்களுக்கு எந்தவித சந்தேகமும் இருக்கத் தேவையில்லை."

"எதற்கு இந்தப் போரில் உனக்கு நாட்டம் இல்லை. போர் என்றால் பின் வாங்குகிறவன் நீ அல்லவே!"

"ஆமாம் தந்தையே! போர் என்றாலே எனது இரண்டு தோள்களும் தினவெடுத்து நிற்கும். ஆனால், இந்தப் போரில் எனக்குச் சிறிதும் நாட்டம் இல்லை!"

"அதுதான் ஏன் என அறிய விரும்புகிறேன் நான். போர் என்றாலே ஆர்ப்பரித்து நிற்கும் உனது வீரம் இப்போது மட்டும் எங்கே சென்றன?"

"வீரம் என்றால் என்ன என்று எனக்குப் பேரமைச்சர் ஓதவஞ்சி நன்கு கற்றுக் கொடுத்திருக்கிறார். ஆதலால் தான் தயங்குகிறேன் நான்."

"அவன் என்ன கற்றுக்கொடுத்தான்?"

"உறைந்தையில் நமக்காகக் காத்திருக்கும் இருங்கோவின் படை, பாண்டியர் மற்றும் வேளிர்களின் படைகளை நம்முடன் சேர்த்தால் நிச்சயம் நமது படை பலம் ஒன்றரை நியுதங்களைத் தாண்டும். ஆனால், புகாரில் ஒடுங்கியிருக்கும் சோழ இளவலின் படை வலிமை எப்படி மதிப்பிட்டாலும் நாற்பதாயிரம் அல்லது ஐம்பதாயிரத்தைத் தாண்ட வாய்ப்பில்லை. இப்படிப்பட்ட சூழலில் சோழ நாடு மீது நாம் படையெடுத்துச் செல்வது வீரம் தானா தந்தையே? எதிரி வலிமையுடன் இருக்கும்போது தாக்கி வெற்றியடைவதே நமது வீரத்திற்குப் புகழ். அதுவே அறம், அதுவே நீதி, அதுவே நியாயமும் கூட! மாறாக...."

"மாறாக?"

"மாறாக, எதிரி வலிமையின்றி இருக்கும் காலத்தில் அவனை எதிர்த்துத் தாக்கி அழிப்பது கோழைத்தனமான செயல்."

https://telegram.me/aedahamlibra

“ஓதவஞ்சி உன்னை நன்கு கெடுத்து வைத்திருக்கிறான்?”

“என் குருநாதரை பழித்துப் பேச வேண்டாம் அரசே!”

“நமது பழங்காலச் சுவடிகளைப் போதித்த ஓதவஞ்சி சாணக்கிய நீதியை போதிக்கவில்லையா?”

“அதையும் படித்திருக்கிறேன் தந் தையே!”

“அதைப் படித்துமா நீ இன்னும் இப் படிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறாய்?”

“அதையும் வாசித்ததால்தான் எது தர்மம் எது அநீதி என்று என்னால் சீர்தூக் கிப் பார்க்க முடிகிறது.”

“வீரம் என்கிறாய், தர்மம் என்கிறாய், நியாயம் என்கிறாய்? போரினை எப்படி நடத்தினால் என்ன மகனே, வெற்றி மட் டுமே முக்கியம். நாளை இந்த உலகமும்

வெற்றியைப் பற்றித்தான் பேசப்போகிறது. அதை நீ மனதில் வைத்துக்கொள்."

"உங்களைத் தான் அந்தக் குருட்டு வைதீகர் சாணக்கிய நீதியைச் சொல்லி குழப்பி விட்டிருக்கிறார். இதைப் பற்றி விவாதிப்பதற்கு இனி எதுவும் இல்லை தந்தையே! தாங்கள் போரினை அறிவித்துவிட்டீர்கள். இனி நீங்கள் பின்வாங்கப்போவதில்லை. உங்கள் கட்டளையை ஏற்று நடக்கச் சித்தமாகவே இருக்கிறேன் நான். படையை நடத்தும் பொறுப்பை நானே ஏற்றுக்கொள்கிறேன். என் குருநாதர் பேரமைச்சர் ஓதவஞ்சியைப் போன்று என்னால் என் இளவல் பொறுப்பிலிருந்து என்னை விடுவித்துக்கொள்ள இயலாது. ஏனெனில் சேர நாட்டின் உயர்வில் தான் எனது உயர்வும் அடங்கியிருக்கிறது. அதன் நலனை ஒருநாளும் நான் யாருக்காகவும் விட்டுக்கொடுக்க மாட்டேன். எனது தன்மானத்திற்காகவும்தான். தங்கள் எந்தக் கவலையும் இன்றி ஓய்வெடுக்கலாம்!" என மன்னரிடம் கூறிய சேர

வெற்றியைப் பற்றித்தான் பேசப்போகிறது. அதை நீ மனதில் வைத்துக்கொள்."

"உங்களைத் தான் அந்தக் குருட்டு வைதீகர் சாணக்கிய நீதியைச் சொல்லி குழப்பி விட்டிருக்கிறார். இதைப் பற்றி விவாதிப்பதற்கு இனி எதுவும் இல்லை தந்தையே! தாங்கள் போரினை அறிவித்துவிட்டீர்கள். இனி நீங்கள் பின்வாங்கப்போவதில்லை. உங்கள் கட்டளையை ஏற்று நடக்கச் சித்தமாகவே இருக்கிறேன் நான். படையை நடத்தும் பொறுப்பை நானே ஏற்றுக்கொள்கிறேன். என் குருநாதர் பேரமைச்சர் ஓதவஞ்சியைப் போன்று என்னால் என் இளவல் பொறுப்பிலிருந்து என்னை விடுவித்துக்கொள்ள இயலாது. ஏனெனில் சேர நாட்டின் உயர்வில் தான் எனது உயர்வும் அடங்கியிருக்கிறது. அதன் நலனை ஒருநாளும் நான் யாருக்காகவும் விட்டுக்கொடுக்க மாட்டேன். எனது தன்மானத்திற்காகவும்தான். தங்கள் எந்தக் கவலையும் இன்றி ஓய்வெடுக்கலாம்!" என மன்னரிடம் கூறிய சேர

இளவரசன் அந்தக் கூடாரத்திலிருந்து வெளியேறி படைத் தலைவர்களைச் சந்திக்கப் புறப்படலானான்.

அவன் செல்வதையே சேரமான் பெருஞ்சேரலாதன் பார்த்துக் கொண்டிருந்தார். சூழ்நிலைக் கைதியாகி தான் நெறி தவறி சோழ நாட்டின் மீது படையெடுக்கும் நிலையில் தனது மகன் நெறித் தவறாமல் இருப்பதை எண்ணிய அவரது கண்களில் பெருமையுடன் இருதுளிக் கண்ணீர் வந்து சென்றது.

படைத் தலைவர்களைச் சந்தித்த சேர இளவல் பல்வேறு கட்டளைகளைப் பிறப்பித்துவிட்டு அன்றிரவே படைகளைத் தனித்தனிப் பிரிவாகப் பிரித்துவிட்டிருந்தான்.

***

பொழுது புலர்ந்த முதல் சாமம். சேர நாட்டுப் படை ஆன்பொருநை நதிக் கரையிலேயே நகர்ந்து கொண்டிருந்தது.

பெரும் படையும் ஒரே நேரத்தில் புறப்பட்டால் சிரமம் என்பதை உணர்ந்ததனால் தான் சேர இளவல் படைகளைச் சிறிது சிறிதாகப் பிரித்து ஏற்கெனவே அனுப்பி வைத்திருந்தான். சம்பிரதாயத்திற்கு மட்டுமே பெரும் சேனாதிபதிகள், படைத் தலைவர்கள் மற்றும் சேரனுக்கு வேண்டிய வேளிர்கள் முறைப்படி சேர நாட்டுத் தலைநகர் வஞ்சியிலிருந்து புறப்பட்டனர். பெரும் உற்சாகத்துடன் ஆன்பொருநை நதியின் வட கரையில் சென்றபோது ஒரு பெரும் கூட்டமே மாட்டு வண்டிகளில் உடமைகளை ஏற்றிக் கொண்டு வஞ்சி மாநகரை நோக்கி வந்து கொண்டிருந்தனர்.

எதிரில் பார்த்த சேரநாட்டுப் பெரும்படையைக் கண்ட மக்கள் ஆச்சர்யத்துடன் நின்று கொண்டிருந்தனர். அப்போது அவர்களிடம் சேர இளவரசன், "எங்கிருந்து கூட்டமாக வந்து கொண்டிருக்கிறீர்கள்?" என வினவினான்.

எந்தவித பகட்டும், படோடோபமும் இன்றிப் புரவியில் அமர்ந்திருப்பது சேர நாட்டு பட்டத்து இளவரசன் என்பதை அறியாத அந்தக் கூட்டத்தில் நின்ற முதி யவர் ஒருவர், "இந்தப் படையின் தலை வனை நான் சந்திக்க வேண்டும்!" எனத் தெரிவித்தார். அவரது குரலில் அதிகாரம் மிகுந்திருந்தது. வயது ஏறி நரை தட்டியி ருந்தாலும் அவரது குரலின் கம்பீரம் சிறி தும் குறை பட்டிருக்கவில்லை.

"என்ன, இந்தப் படையின் தலைவ னைச் சந்திக்க வேண்டுமா?" என வின வினான் சேர இளவல்.

"ஆம்!"

"எதற்கு?"

"அவனிடம் இரண்டு கேள்விக ளைக் கேட்க வேண்டும்?"

"இரண்டு கேள்விகளா?"

"ஆம்!"

https://telegram.me/aedahamlibra

“இரண்டு கேள்விகளை மட்டும் தான் கேட்பீர்களா?”

“குறைந்தபட்சம் இரண்டு. கேள்விகள் நீள்வதும், நீளாததும் அந்தப் படைத் தலைவனின் சாமர்த்தியமான பதிலில் அடங்கியிருக்கிறது.”

புரவியிலிருந்து குதித்த சேர இளவரசன், “உங்கள் இரண்டு கேள்விகளைத் தாங்கள் தாராளமாகக் கேட்கலாம்?” என்றான்.

“நான் இந்தப் படையின் தலைவனிடம் தான் கேட்கவேண்டும்!”

“நான்தான் இப்படையின் தலைவன்!”

“நீயா?”

சேர இளவரசனை மேலும் கீழும் பார்த்தார் அந்தப் பெரியவர்.

“என்னைப் பார்த்தால் இந்தப் படைக்குத் தலைமை ஏற்று நடத்தும்

தகுதியுடையவன் போல உங்களுக்குத் தோன்றவில்லையே பெரியவரே!"

"ஆமாம். உன் இளமை என்னைச் சந்தேகம் கொள்ளச் செய்கிறது வீரனே!"

"இளமையோடு இருத்தல் தவறா?"

"அதைப் பற்றி விவாதிப்பதற்கு நாங்கள் இங்கு வரவில்லை!"

"எதற்காக இப்படி அனைவரும் மொத்தமாக வஞ்சியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறீர்கள் என இன்னும் தாங்கள் கூறவே இல்லையே?"

"நிச்சயம் கூறுகிறேன்! அதற்கு முன் இரண்டு கேள்விகள்!"

"தாராளமாகக் கேளுங்கள்!"

"பெரும்படையுடன் எங்கே புறப்பட்டுவிட்டீர்கள்?"

"அதைக் கூறுவதற்கில்லை!"

"பெரும் இரகசியமோ?"

https://telegram.me/aedahamlibra

"ஆமாம் பெரியவரே!"

"நான் இந்நாட்டின் குடிமகன். படைகளின் நகர்வுகளைப் பற்றிக் கேள்வி கேட்கும் உரிமை எனக்கு இருக்கிறது. பதில் கூற இயலாவிட்டால் உன்னை இழுத்துக் கொண்டு சென்று மன்னரிடம் முறையிடுவேன்!"

"என்னை இழுத்துக் கொண்டு செல்வீர்களா?"

"நிச்சயமாக!"

"என்னைத் தோற்கடித்துவிடலாம் என்ற எண்ணம் உங்களுக்கு இருக்கி றதா?"

"தம்பி, என் முகத்தில் தோன்றியி ருக்கும் நரையையும், முதுகில் தோன் றிவிட்ட சிறு கூனையும் கண்டு எள்ளி நகையாட வேண்டாம். இந்தக் கையால் எத்தனை பேரைக் கொன்றுபோட்டிருக் கிறேன் தெரியுமா?" என முகத்தில்

https://telegram.me/aedahamlibra

வளர்ந்திருந்த பெரும் மீசையைத் தட விப்பார்த்தபடியே கூறினார்.

“அப்பா... சற்று அமைதியாக இருங்கள்” எனக் கூறிய அவரது மகள், “வீரரே, என் தந்தைக்கு வயதிவிட்டது. அவரது குற்றத்தைப் பொருத்தருள வேண்டும்” எனக் கூறிக் கொண்டிருந்த போதே இடைமறித்த சேர இளவல் “உன் தந்தையின் வீரத்தைக் கண்டு பெருமை படுகிறேன் நான். இந்த மூப்பிலும் பெரும் படைகளையும், அதன் தலைவனையும் கண்டு அஞ்சாமல் வாலிபத் திமிருடன் பேசுகிறாரே? நம் நாட்டிற்கே பெருமை சேர்க்கும் காரியமல்லவா இது!” என அவளிடம் கூறியவன், “அய்யா... இப்பெரும் படை சோழ நாட்டுத் தலைநகரை முற்றுகையிடச் சென்று கொண்டிருக்கிறது. திடீர் மற்றும் இரகசியக் கட்டளை ஆதலால்தான் அனைத்துக் கிராமங்களுக்கும் முறைப்படி அறிவிக்க இயலவில்லை” எனப் பணிவுடன் தெரிவிக்கலானான்.

"போருக்காகவா சென்று கொண்டி ருக்கிறீர்கள்?"

"ஆம்!"

"அதுவும் சோழ நாட்டைக் கைப் பற்ற!" இகழ்ச்சியாக வினவினார்.

"ஆம் பெரியவரே!"

"அறிவிப்பை வெளியிட்டவன் சேர மான் பெருஞ்சேரலாதன் தானா?"

"ஆம். அரசர்தான் இந்த அறி விப்பை வெளியிட்டார்!"

"பெருஞ்சேரலாதன்தான் முட்டாள் தனமான அறிவிப்பை வெளியிட்டிருக்கி றான். உங்களுக்கு எங்கே போனது புத்தி. பேரமைச்சன் ஓதவஞ்சி அருகில் இருந் துமா மன்னன் இப்படிப்பட்ட முடிவினை எடுத்திருக்கிறான்?"

பெரியவர் கூறியதைக் கேட்டதும் அருகில் நின்ற சேர நாட்டு வீரன் ஒரு வன்"கிழவா... என்ன பேச்சுப் பேசுகி

றாய். நாவை அடக்கிப்பேசு!” எனக் கூறி யபடி இடையிலிருந்த வாளினை உருவி னான். ஓங்கிய அவ்வீரனின் வாளினைத் தடுத்து நிறுத்திய இளவரசன், “அய்யா... என்ன கூறுகிறீர்கள்? சேரமான் அப்படி யென்ன குற்றத்தை இழைத்துவிட்டார்?” என வேண்டினான். பிறகு, “பேரமைச்சர் ஓதவஞ்சி வஞ்சியில் இல்லை. தனது பத வியைத் துறந்துவிட்டுச் சென்றுவிட்டார்” எனவும் தெரிவித்தான்.

“இப்படி மக்கள் நலனில் அக்கறை இல்லாத மன்னருக்குக் கீழ் எந்த அந்த ணன் தான் பணி புரிவான்?”

“அய்யா... வீண் பேச்சு வேண்டாம்.”

“நாங்கள் எங்கிருந்து வருகிறோம் என்று உனக்குத் தெரியுமா?”

“தெரியாது!”

“ஒற்றர்களாவது எங்களது நிலை யைப் பற்றி ஏதேனும் கூறினார்களா?”

https://telegram.me/aedahamlibra

“இல்லை அய்யா... எதுவும் தெரி விக்கவில்லையே!”

“படைகளும் அதன் பணியைச் சரி யாகச் செய்யவில்லை. திறமையான ஒற் றர்களும் இல்லை. பிறகு எப்படித் தம்பி இந்தத் தேசம் நன்னிலையை அடையும்!”

“அப்பா... சற்று அமைதியாக இருங் கள். பெரிய இடங்களின் பகை நமக்கு...” என அவரது மகள் கூறிக் கொண்டி ருந்த போதே கையை உயர்த்தி அவளது பேச்சை மீண்டும் அடக்கினான் சேர நாட்டு இளவரசன்.

“அய்யா, என்ன கூறுகிறீர்கள்? உங் களது பேச்சு எங்களுக்குப் புரிய வில்லை!”

“நாங்கள் யார் தெரியுமா?”

“அதை முதலில் கூறுங்கள்...”

“நாங்கள் துளுவ நாட்டு எல் லையோரம் வசிக்கும் கிராம மக்கள்!

எதற்காக வஞ்சியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம் என்று உங்களுக் குத் தெரியுமா?"

"எதற்காக?"

"துளுவ நாட்டு வீரர்கள் எங்களது வயல்களைக் கொளுத்தி அழித்துவிட் டார்கள். ஆனால் அதில் ஒரு விசித்திரம்.

"விசித்திரமா?"

"ஆம்!"

"என்ன விசித்திரம் அய்யா?" விழி கள் சிவந்தபடி கோபத்தோடு வினவி னான் சேர இளவல்.

"எங்களது கிராமத்தையும் வயல் வெளிகளையும் கொளுத்துமுன் எங் களது உடைமைகளைப் பாதுகாப்பாக எடுத்துவைத்துக்கொள்ளத் தக்க சந் தர்ப்பத்தை அளித்தார்கள் அவர்கள்!"

"என்ன கூறுகிறீர்கள்?"

“துளுவர்களா இப்படிச் செய்திருக்கிறார்கள்?”

“ஆம் தம்பி. ஆனால், இடையூறு துளுவர்களால் அல்ல.”

“என்ன அய்யா கூறுகிறீர்கள்?”

“ஆமாம் வீரனே! வயலையும், வீட்டையும் கொளுத்தினாலும் அவர்கள் தக்க சந்தர்ப்பத்தை அளித்து எங்களது உடைமைகளைக் காத்துக்கொள்ள உதவினார்கள். அதுமட்டுமல்லாமல் எங்கள் அனைவருக்குமே இழப்பீடுகளை அளித்திருக்கிறார்கள்.”

“இழப்பீடா?”

“ஆம்!”

“விசித்திரமான செயலாக அல்லவா இருக்கிறது!”

“விசித்திரம்தான் வீரனே! எதிரிகளாக இருந்தாலும் அவர்கள் நல்லவர்களாக இருந்தார்கள். ஆனால் இங்கு...”

எனக் கூறியபோது அவரது முகத்தில் பெரும் இகழ்ச்சி தோன்றியது. அந்த இகழ்ச்சியில் பெரும் அருவருப்பும் தோன்றி மறந்தது.

"இங்கு என்ன அய்யா? தயக்கம் வேண்டாம். தொடர்ந்து கூறுங்கள்!"

"துளுவர்கள் மீண்டும் சேர நாட்டு எல்லைப் புறத்தைத் தாக்கத் தொடங்கிவிட்டார்கள். சொந்த நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்யாமல், நாட்டுக் குடிகளுக்கு ஆபத்து என்பதை அறிந்து தகவல் கூறாத ஒற்றர்களின் துணையுடன் சோழ நாட்டை நோக்கி படையெடுக்க ஆணை பிறப்பித்திருக்கிறானே பெருஞ்சேரலாதன் அவனது முட்டாள்தனத்தை எண்ணினால் தான் எனக்குப் பெரும் கோபமாகவருகிறது" எனக் கூறியவர் மேற் கொண்டு அவனிடம் பேசாமல் முன்னே செல்லலானார்.

சில அடிகள் மீண்டும் இளவரசனைத் திரும்பிப்பார்த்த அப்பெரிய

வர், "வஞ்சியை நோக்கித் தஞ்சமடைய நாங்கள் மட்டும் வந்து கொண்டிருக்கவில்லை. கிராமம் கிராமமாக வந்து கொண்டிருக்கிறார்கள். உன் மன்னனிடம் கூறு. எதிரி நாட்டை எப்போது வேண்டுமானாலும் தாக்கிக் கைப்பற்றிக் கொள்ளலாம். முதலில் சேர நாட்டைத் தற்காத்துக்கொள்ளச் சொல்!" எனக் கூறிவிட்டுத் திரும்பிக் கூடப் பார்க்காமல் செல்லலானார்.

பெரும் குழப்பத்துடனும், ஆத்திரத்துடனும் திரும்பினான் சேர இளவல். அவனுக்குப் பின்னால் பெருஞ்சேரலாதன் மாறுவேடத்தில் நின்று கொண்டிருந்தார். அவருக்கு அருகிலேயே ஒற்றர் தலைவனும் பூமியைப் பார்த்துக் கொண்டு அவமானத்துடன் நின்று கொண்டிருந்தான்.

உடனே சேர இளவரசனுக்குக் கட்டளை பிறப்பித்தார் சேரமான் பெருஞ்சேரலாதன், "மகனே, விசாரித்து உறுதி

செய்துவிட்டு ஆயிரம் புரவி வீரர்களுடன் உடனே நீ துளுவ எல்லையை நோக்கிப் புறப்பட்டுச் சென்று அவர்களை விரட்டி விட்டு வா! நம் படை இனி ஒரு அடியும் முன்னே நகராது. நீ வந்துதான் நம் படை நகரத் தொடங்கும்!" எனப் பெரும் ஆத்தி ரத்தில் கட்டளை விதித்தார்.

சேரமான் பெருஞ்சேரலாதனின் உரத்த கட்டளையானது கையில் தடியு டன் தடுமாற்றத்துடன் நடந்து கொண் டிருந்த அந்தக் கிராமத் தலைவருக்கும் கேட்கத்தான் செய்தது.

அந்தக் கட்டளையைச் செவியில் கேட்ட அடுத்தக் கணம் அவரது முகத் தில் புன்சிரிப்பு ஒன்று கண நேரத்தில் தோன்றி மறைந்துவிட்டுச் சென்றது.

இடையில் துணி மூட்டையுடன் நின்ற விறலி, "அய்யா... கரிகாலர் அளித்த பணியைச் சித்தமாக நிறைவேற்றிவிட்டீர் கள். நாம் புகாருக்கு எப்போது திரும்

பிச் செல்லப் போகிறோம்?" என வினவி னாள்.

"பொறு மகளே! இப்போதே இவர் களிடமிருந்து நழுவிச் சென்றால் நம் மீது சந்தேகம் தோன்றிவிடும். காலம் வரும் போது நாம் நழுவிக்கொள்ளலாம்!" எனத் தெரிவித்த இரும்பிடர்த்தலையர் மீண் டும் அவரது நரைத்த மீசையை முறுக்கி விட்டுக் கொண்டார்.

**அடிக்குறிப்பு :**

1. மூத்த குடி: குமரிக்கண்டம் அழிந்தபோது வடக்கு நோக்கி நகர்ந்த சேர, சோழ பாண் டியர்கள் மூவரும் துடியன், பாணன், பறையன், கடம்பன் இந்நால்வரையும் வென்று தமிழகத்திற்குள் நுழைந்தனர் என்று புறம் 335ல் மாங்குடி கிழார் குறிப்பிடுகிறார். துடியன், பாணன், பறையன், கடம்பன் இந்நால்வரையும் தான் மாங்

https://telegram.me/aedahamlibrary
குடி கிழார் மூத்த குடி என்று குறிப்பிட்டுள்ளார்.

https://telegram.me/aedahamlibra

# 30.

# கல்லெறிதல்

சேரமான் பெருஞ்சேரலாதனின் கட்டளைப்படி ஆயிரம் புரவி வீரர்களுடன் துளுவர்களை விரட்டுவதற்காகப் புறப்பட்டிருந்தான் சேர இளவரசன். அவன் பயணித்துவந்த வழியெங்கும் எல்லையோர கிராம மக்கள் ஆங்காங்கே மூட்டைமுடிச்சுகளுடன் சேர நாட்டுத் தலைநகர் வஞ்சியை நோக்கிச் சென்ற வண்ணமே காணப்பட்டனர். உடைமைகளை இழந்து அடைக்கலம் தேடி வரும் தன் நாட்டுக் குடிகளைப் பார்க்கப் பார்க்க அவனது மனதில் ஆத்திரமும், கோபமும் நேரத்திற்கு நேரம் அதிகமாகிக் கொண்டிருந்தது. சேரநாட்டிற்குள் ஊடுருவியிருக்கும் துளுவர்களை ஒரே மூச்சில் அழித்து ஒழித்துவிட வேண்டும் எனும்

எண்ணத்தில் ஒரு கிழமை காலத் தொடர் பயணத்திற்குப் பிறகு எல்லையோர சேர நாட்டுக் காவல் படை முகாமிட்டிருக்கும் இடத்தை அடைந்திருந்தான் சேர நாட் டுப் பட்டத்து இளவரசன்.

தன்னுடன் வந்த புரவி வீரர்களைப் பாசறைக்குச் சற்றுத் தொலைவிலேயே நிறுத்தி வைத்துவிட்டு எல்லைப் படை வீரர்களின் பாசறைக்குள் நுழைந்தான் சேர இளவல். நுழைந்ததுதான் தாமதம் அவனது மனதில் குரோதமும், பழிவாங் கும் உணர்ச்சியும் கட்டுக்கடங்காமல் கண நேரத்தில் வளர்ந்து விட்டிருந்தது.

வீரர்கள் தங்கியிருந்த படைப் பாசறை எதிரிகளின் தாக்குதலினால் முற்றிலுமாகச் சேதமடைந்திருந்தது. கோபத்தில் சிவந்து போன தனது விழி களுடன் நோட்டமிட்டபடியே, “நம் பாச றைகளையே எதிர்த்துத் தாக்கி அழித் திருக்கிறார்கள். அவர்களுக்கு எவ்வளவு திமிர் இருக்கும்? எல்லைப் புறக் காவல் படைத் தலைவரை நான் உடனே சந்

https://telegram.me/aedahamlibra

திக்க வேண்டும். அழைத்து வாருங்கள்!" கட்டளையிட்டான் சேர இளவல்.

அவனது கட்டளை எழுந்த அடுத் தக் கணம் வீரர்கள் காவல் தலைவனைத் தேடி ஓடினார்கள். பட்டத்து இளவரச னின் வரவைத் தெரிவிக்கக் கொம்பும் ஊதப்பட்டது. வீரர்கள், உப தலைவர்கள் என அனைவரும் வந்து சேர்ந்தார்கள். ஆனால், முழுவதுமாக ஒரு நாழிகைப் பொழுது கடந்தும் காவல் தலைவன் மட் டும் சேர இளவலைச் சந்திக்க வந்திருக் கவில்லை.

காலம் கடக்கக் கடக்கச் சேர இளவலின் கோபம் கட்டுக்கடங்காமல் தலைக்கேறிக் கொண்டிருந்தது. அதற்கு மேலும் பொறுக்க இயலாமல் சேர இள வரசனே காவல் தலைவனைத் தேடிச் செல்லலானான்.

தீயில் பாதி எரிந்தும், மீதி எரி யாமலும் கிடந்த குடில்களைப் பார்த்த படியே சென்று கொண்டிருந்தான் சேர

இளவல். தனது வருகையைத் தெரியப் படுத்தியும் மதிக்காமல் காலம் தாழ்த்தும் காவல் தலைவரை நிச்சயம் தண்டிக்க வேண்டும் என எண்ணியபடியே காவல் தலைவரின் குடிலுக்குச் சென்றான் இள வரசன். ஆனால் அவர் அங்குக் காயம் பட்ட வீரர்களுக்குச் சிகிச்சை அளித்துக் கொண்டிருந்தார். இளவரசனைப் பார்த் ததும் எழுந்து நின்று மரியாதை செலுத்தி னார் அவர்.

"இளவரசே, தங்களுக்கு எதற்குச் சிரமம். இன்னும் சற்று நேரம் பொறுத் திருந்தால் நானே தங்களைத் தேடி வந்திருப்பேன். உங்களைக் காத்திருக்க வைத்தமைக்கு மன்னியுங்கள்!" எனப் பணிவுடன் வேண்டினார்.

அவருக்கு எந்தப் பதிலையும் அளிக்காமல் காயம்பட்டுக் கிடந்த வீரர் களையே பார்த்துக் கொண்டு நின்றான். பிறகு, "வைத்தியர்கள் எங்கே?" என வினவினான்.

"துளுவ எல்லை மிகவும் அமைதியாக இருந்ததால் நான்தான் வைத்தியர்களின் உதவி சோழ நாட்டுப் படையெடுப்பின் போது தேவைப்படும் என எண்ணி அங்கு அனுப்பி வைத்துவிட்டேன். இப்போது எந்தப் பிரச்சனையும் இல்லை இளவரசே! அனைவருக்கும் மருத்துவம் பார்த்துவிட்டேன். கவலை கொள்ளும்படி எதுவும் நேரவில்லை! சிறு காயங்கள் தான்! ஓரிரு தினங்களில் ஆறிவிடும்" என அமைதியாகத் தெரிவித்தார்.

"உங்களுடன் தனித்து உரையாட வேண்டும்."

"இளவரசே, வாருங்கள் அருகில் ஒரு சிறிய நீரோடை ஓடுகிறது. அங்கு நாம் செல்லலாம்!" எனக் கூறிக் கொண்டு கீழே கிடந்த இரண்டு குறுவாட்களை இடையில் சொருகிக் கொண்டு முன்னே செல்லலானார். அவரைத் தொடர்ந்து பட்டத்து இளவரசனும் செல்லலானான். வீரர்கள் சிலர் பாதுகாப்பிற்காக இருவ

ரையும் பின்தொடர்ந்தனர். அவர்களைத் தன் பார்வையாலே 'வேண்டாம்' எனக் கூறிவிட்டு இளவரசனை மட்டும் அழைத் துச் சென்றார் அவர்.

ஓடையில் நீர் சலனமின்றி ஓடிக் கொண்டிருந்தது. கரைகளில் புங்கை பூத்துக் குலுங்கி மணம் பரப்பிக் கொண் டிருந்தது. செவ்வந்தி மற்றும் காட்டு மல் லிக் கொடிகளும் பூத்துக் குலுங்கி பறிப் பதற்கு ஆள் இல்லாமல் நீரில் விழுந்து காய்ந்து கிடந்தன. தொலைவில் எங்கோ வெடித்திருந்த தாழை மடலிலிருந்து மணமும் அவ்விடத்தில் எழுந்து கொண் டிருந்தது. புங்கை மரத்தடியில் காணப் பட்ட மணல் திட்டு ஒன்றில் அமர்ந்த இருவரும் உரையாடலைத் தொடங்க லானார்கள்.

"எல்லையோரக் கோட்டையை எதற்குக் கைவிட்டு இங்கு வந்து தங்கி னீர்கள் காவல் தலைவரே?" என இளவர சன்தான் முதலில் வினவினான்.

"அரசே, கோட்டையைக் கைப்பற்ற வேண்டும் எனும் நோக்கிலோ அல்லது படையை நேருக்கு நேர் தாக்க வேண்டும் எனும் நோக்கிலோ எதிரிகள் படையெடுத்தால் நாம் கோட்டைக்குள் நின்று தாக்குதல் தொடுக்கலாம். ஆனால்..."

"என்ன ஆனால்?"

"ஆனால், அவர்களின் இலக்கு அதுவல்லவே! நாங்களும் கடந்த பத்து நாட்களாக அவர்களைத் தேடிக் கொண்டு இருக்கிறோம். இதுவரை ஒருவன் கூடக் கண்ணில் அகப்படவில்லை. யார் தாக்குகிறார்கள்? எதற்காகத் தாக்குகிறார்கள்? என்ற வினாவிற்கு இதுவரை எங்களுக்கு விடை கிடைக்கவில்லை. மர்மமாக இருக்கிறது."

"வரும் வழியில் நானும் பகைவர்கள் சிக்குவார்கள் என்று தேடிக் கொண்டுதான் வந்தேன். ஆனால், உடைமைகளை இழந்து வஞ்சியை நோக்கிச் செல்

லும் நம் நாட்டுக் குடிகளைத்தான் என்னால் வழியெங்கும் காண முடிந்தது!"

ஓடையில் ஓடும் நீரையே வெறித்தபடி பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தார் காவல் தலைவர்.

"காவல் தலைவரே!"

"இளவரசே!"

"இந்த முகாமில் சில நூறு வீரர்கள் மட்டும் அல்லவா இருக்கிறார்கள். மற்றவர்கள் எங்கே?"

"அரசே, எல்லைப் படையில் இருந்த தேர்ந்த வீரர்களைப் பிரித்துச் சோழ நாட்டுப் படையெடுப்பிற்கு உதவியாக அனுப்பி வைத்துவிட்டேன். மீதி இருந்தவர்களைச் சிறு சிறு படையாகப் பிரித்துத் துளுவ எல்லை நெடுங்கிலும் இருக்கும் நமது கோட்டைகளில் தங்க வைத்துள்ளேன். இங்கு என்னுடன் ஐநூறு வீரர்கள் மட்டுமே இருக்கிறார்கள்!"

https://telegram.me/aedahamlibra

“எல்லைப் புறத்தில் எதிரிகளால் தாக்குதல் நடந்து கொண்டிருக்கையில் நீங்கள் எதற்கு வீரர்களை அனுப்பி வைத்தீர்கள்?”

“அரசே, துளுவர்களுக்கும் வடுகர்களுக்கும் பெரும் போர் நடைபெறப்போகிறது. ஆதலால் துளுவர்களின் படை முழுவதும் வடுகர் எல்லையிலேயே குவிக்கப்பட்டிருக்கின்றன. அது மட்டுமல்லாமல் துளுவர்கள் நம் சேர நாட்டுடன் நட்புடனே இருக்கிறார்கள். காலம் தவறாமல் கப்பமும் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் இங்குப் படைகளைத் தேவையில்லாமல் தடுத்து வைக்க வேண்டாம் என்று எண்ணித் தான் அனுப்பிவைத்து விட்டேன்!”

“எல்லைப் புறத்தில் தாக்குதல்கள் எத்தனை நாட்களாக நடந்து கொண்டிருக்கின்றன?”

“கடந்த இரண்டு கிழமைகளாக இளவரசே!”

https://telegram.me/aedahamlibra

“இரண்டு கிழமைகளாகவா?”

“ஆம்!”

“பிறகு எதற்கு நீங்கள் வஞ்சிக்கு எந்தத் தகவலைத் தெரிவிக்கவில்லை? எதிரிகளால் விரட்டப்பட்ட நம் நாட்டுக் குடிகளைக் கண்டபிறகே நான் படைக ளோடு வந்திருக்கிறேன்!”

“நான் அனுப்பிய ஒற்றர்களின் செய்தி உங்களை எட்டவில்லையா?”

“ஒற்றர்களை நீங்கள் அனுப்பி வைத்தீர்களா?” எனப் பதிலுக்கு அதிர்ச் சியுடன் வினவினான் சேர இளவரசன்.

கண நேரம் இருவரும் ஒருவரை ஒருவர் அதிர்ச்சியில் பார்த்துக் கொண் டார்கள். பிறகு, “ஆம் இளவரசே. நம் நாட்டு எல்லையில் முதல் தாக்குதல் நிகழ்த்தப்பட்ட அடுத்தக் கணமே நான் முறைப்படி தகவலை அனுப்பிவைத் துவிட்டேன். ஒற்றர்களின் செய்தியைக்

கேட்டுத்தான் நீங்கள் வந்திருக்கிறீர்கள் என்றல்லவா நினைத்தேன் நான்."

"வஞ்சிக்கு இதுவரை எந்த ஒற்றர் களும் வரவில்லை!"

"..........."

"நீங்கள் அனுப்பி வைத்த ஒற்றர்க ளுக்கு என்ன ஆனது?"

"........."

"'எல்லையோரக் குடிகளைக் காக்க இயலாத நம் நாட்டுப் படை சோழ நாட்டிற்குச் சென்று என்ன செய் யப் போகிறது?' என வினவுகிறார்கள் நம் நாட்டு மக்கள்" பெரும் ஆவேசத்துடன் தெரிவித்தான் இளவரசன்.

"அரசே, எங்கோ பெரும் தவறு நிகழ்ந்திருக்கிறது."

"எங்கு?"

"இனிதான் நாம் கண்டறிய வேண் டும்!"

https://telegram.me/aedahamlibra

சிறிது நேரத்திற்கு எதுவுமே பேசாமல் இளவரசன் சிந்தித்தபடியே அமர்ந்திருந்தான்.

“நம் படையின் இழப்பினைத் தெரிவியுங்கள்?”

“நம் படையில் இழப்பா?”

“ஆம். நம் முகாமே எரிக்கப்பட்டிருக்கிறதே! எத்தனை படை வீரர்களை இழந்திருக்கிறோம் நாம்? எவ்வளவு ஆயுதங்கள் கொள்ளை போயிருக்கிறது?”

“நம் படையில் நாம் இதுவரை ஒருவரைக் கூட இழக்கவில்லை! சிறு வாளும் கொள்ளை போகவில்லை!”

“என்ன கூறுகிறீர்கள்?”

“ஆம், அவர்கள் ஒருவரைக் கூடக் கொல்லவில்லை.”

“ஆச்சர்யமாக இருக்கிறது!”

“எனக்கும்தான் அரசே!”

"அவர்கள் எத்தனை பேர் இருப்பார்கள்?"

"எப்படிப் பார்த்தாலும் நூறினைத் தாண்ட மாட்டார்கள்?"

"வெறும் நூறு பேர் தானா?" இகழ்ச்சியுடன் வினவினான் இளவரசன்.

"ஆம்!"

"வெறும் நூறு பேரை அடக்கவா நான் ஆயிரம் புரவிகளைக் கொண்டு வந்திருக்கிறேன்!"

"அரசே, வெறும் எண்ணிக்கையைக் கொண்டு நாம் அவர்களின் பலத்தை எடை போட வேண்டாம்!"

அவரது விழிகளையே வியப்புடன் உற்றுப் பார்த்தான் சேர இளவரசன்.

"அரசே, நம் குடிகளைத் தாக்கும் எதிரிகளை நான் புகழ்கிறேன் என்று என்னைத் தாங்கள் தவறாக நினைக்கக் கூடாது! அந்த நூறு வீரர்களுமே புரவி

வீரர்கள்தான். இருட்டில் பகல் போன்று செயல்படும் அசகாயச் சூரர்களாக இருக்கிறார்கள். திட்டமிட்டே காரியத்தைத் தொடங்குகிறார்கள். அதிலும் அந்தச் சொற்ப எண்ணிக்கையுள்ள வீரர்களின் தலைவன் அவர்களைத் திறமையாகக் கையாள்கிறான். அவன் ஒருவனை நாம் கண்டறிந்து அழித்துவிட்டால் போதும்! அந்தச் சிறு படையே நிர்மூலமாகிவிடும்!"

"அவர்கள் நம் பாசறையைத் தாக்கும்போது நம் வீரர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்?" கோபத்துடன் வினவினான் இளவரசன்.

"அரசே, நேற்று மட்டும் அவர்கள் நினைத்திருந்தால் இங்கிருக்கும் ஒட்டு மொத்த வீரர்களையும் கொன்று கூறு போட்டிருக்க இயலும். ஆனால், அவர்கள் அதனைச் செய்யவில்லை" என மீண்டும் பொறுமையாகக் கூறிக் கொண்டிருந்த போதே இடைமறித்த இளவரசன், "தலைவரே, பாசறைத் தாக்குதல்

குறித்த முழுத் தகவல்களையும் ஒன்றுவி டாமல் தெரிவியுங்கள்!" எனக் கட்டளை யிட்டான்.

"கடந்த இரு கிழமைகளாகவே நம் குடி மக்களின் கிராமங்களை அழித்து வஞ்சிக்கு அனுப்பி வைத்துக் கொண் டிருக்கும் கயவர்களை நாங்கள் தேடிக் கொண்டிருந்தோம். தாக்குதல் நடக்கி றது எனும் செய்திதான் எங்களுக்குக் கிடைக்கும். சென்று பார்த்தால் துடைக் கப்பட்ட கிராமம் மட்டுமே எங்களுக் குத் தென்படும். இந்தச் சூழலில் தான் அவர்களைக் கண்டறியாமல் இங்கிருந்து செல்லக் கூடாது என முடிவெடுத்து இங் குக் கூடாரமைத்துத் தங்கினோம். இர வின் முதல் சாமம். தேய்பிறைக் காலம் ஆகையால் தீப்பந்தம் வெளிச்சம் ஒன்றே துணை. திடீரென்று நம் பாசறைக் குள் யாரோ கல்லெறிந்துத் தாக்கினார் கள். இருளில் யாரென்று தெரியாததால் தீப்பந்தத்தைக் கொளுத்தி அவர்களைத் தேடினோம். சிலர் தென்பட்டார்கள்.

விரட்டிச் செல்லலானோம். தேடிச் சென்றவர்களும் தாக்கப்பட்டார்கள். மொத்தப்படையும் அவர்களை அழித்துவிடக் கிளம்பினோம். அப்போதுதான் அந்த அசம்பாவிதம் நிகழ்ந்தது. நாங்கள் அனைவரும் அவர்களை விரட்டிக் கொண்டு வெளியேறிய சமயத்தில் கூடாரத்திற்குத் தீ வைத்து விட்டார்கள். அவர்களை விரட்டிச் சென்ற நம் வீரர்களும் அவர்களின் கல்லடியை எதிர்கொள்ள இயலாமல் திரும்பிவிட்டார்கள்!"

"கல்லடியைக் கண்டா நம் வீரர்கள் பின்வாங்கினார்கள்?"

"அரசே, கல்லடியை சாதாரணமாக நினைக்க வேண்டாம். உயிரைப் போக்காது. ஆனால் உயிரே சென்றுவிட்டால் நல்லது என வருந்தும் அளவிற்கு வலியைக் கொடுத்துவிடும். அவர்களின் தாக்குதல் முறைகள் அனைத்தும் விசித்திரமாகவே இருக்கிறது!"

"விசித்திரமா?"

https://telegram.me/aedahamlibra

"ஆம் இளவரசே!"

"என்ன?"

"நம் குடி மக்களைத் தாக்கு கிறார்கள். ஆனால், அவர்கள் இது வரை யாரையும் கொலை செய்ய வில்லை. உடைமைகளையும் பறிக்க வில்லை. ஒருவேளை உணவை மட் டும் அவர்களிடமிருந்து பெற்று உண்டு விட்டு அவர்களுக்கு இழப்பீடுகளையும் அளித்து அனுப்பிவைத்துவிடுகிறார்கள். நேற்றைய தாக்குதலிலும் அவர்கள் மட் டும் நினைத்திருந்தால் அனைவரையும் அந்த முட்டிருட்டில் கொன்று போட்டி ருக்க முடியும். சிலரை மட்டும் கல் லால் அடித்து விரட்டிவிட்டு வீரர்களே இல்லாத வெற்றுக் கூடாரங்களுக்குத் தீ வைத்துச் சென்றுவிட்டார்கள். இதி லும் ஓர் ஆச்சர்யம் என்னவென்றால் உணவுப் பொருட்கள் மற்றும் மருந் துப் பொருட்கள் வைத்திருந்த கூடாரங்க

ளுக்கு அவர்கள் எந்தச் சேதாரத்தையும் ஏற்படுத்தவில்லை!"

"அவர்களின் நோக்கம் தான் என்ன?" குழப்பத்துடன் வினவினான் சேர இளவரசன்.

"அதனை அந்தக் கள்வர்களே தெரிவித்தால்தான் உண்டு!"

"கள்வர்களா?"

"ஆம். அவர்கள் நிச்சயம் கள்வர் கள்தான். எந்த நாட்டவர் என்று மட் டுமே கண்டறிய வேண்டும்! சிறு குறிப்புக் கிடைத்தாலும் போதும்."

"அவர்கள்தான் எந்தப் பொருட் களையும் கொள்ளையடிக்கவில்லையே! அப்புறம் எப்படி அவர்கள் கள்வர்கள் என்று உறுதியுடன் கூறுகிறீர்கள்!"

"இளவரசே, கள்வர்களின் ஆயுதம் தான் கல். சிறு வயதில் கள்வர்கள் பழகும் முதல் பயிற்சியே கல்லெறிதல்

தான்! கள்வர்களைப் போன்று யாராலும் நேர்த்தியாகக் குறிபார்த்து அடிக்க இய லாது! அவர்கள் கள்வர்கள் கூட்டத்தினர் என்பதை நான் உறுதியாக அறிந்துவிட் டேன். ஆனால், அவர்கள் எந்த நாட்ட வர்? அவர்களின் நோக்கம் என்ன? என்ப தைத்தான் அறிய இயலவில்லை."

"ஒருவேளை துளுவர்கள்தான் நம் மைச் சீண்டி பார்க்கிறார்களோ?"

"இருக்கலாம் இளவரசே! என்னால் உறுதியாகக் கூறவும் இயலவில்லை. மறுக்கவும் இயலவில்லை!"

"இன்றே நான் வடுகர் எல்லைப் புறப் படைத் தலைவனைச் சந்திக்கப் புறப்படுகிறேன். அவனை நேரில் கண்டு எச்சரிக்கை செய்யப்போகிறேன்!"

"இளவரசே, நெடும் பயணத் தில் தாங்கள் களைப்பாக இருக்கிறீர் கள். இன்று ஓய்வெடுத்துக்கொள்ளுங்

https://telegram.me/pedahamlibrary

கள். நாளை காலை நானும் உங்களுடன் புறப்படுகிறேன்."

"ம்ம்ம்... இவர்களை இப்படியே விடக்கூடாது! வெறும் சில நூறு கள்வர்களை விரட்டவா நான் ஆயிரம் புரவி வீரர்களை என்னுடன் அழைத்து வந்திருக்கிறேன்?"

"அரசே, மீண்டும் கூறுகிறேன் எண்ணிக்கையைக் கொண்டு அவர்களை மதிப்பிட வேண்டாம். முதலில் அவர்கள் நம் கண்களுக்கு அகப்படுகிறார்களா என்று பார்ப்போம். பிறகு அவர்களை அழிப்பது பற்றி முடிவெடுப்போம்" எனக் கூறிக் கொண்டிருந்த போதே அருகிலிருந்த புதரில் ஏதோ அசைவதைப் பார்த்துவிட்டார் காவல் தலைவர். உடனே இடையிலிருந்த குறுவாட்களைக் கையில் எடுத்துக் கொண்டார். இளவரசனும் இடையிலிருந்து வாளினை உருவி கையில் தரித்துக் கொண்டான்.

சிறிது நேரம் அந்தப் புதரையே இருவரும் உற்றுப்பார்த்துக் கொண்டு இருந்தனர். உள்ளே பெரும் உருவம் ஒன்றின் நிழல் அசைந்தது.

“எவனோ ஒட்டு கேட்டுக் கொண்டு அமந்திருக்கிறான்” என்றான் இளவரசன்.

“ஆமாம். சந்தேகமே இல்லை!” எனக் கூறிக் கொண்டு அந்தப் புதரை நோக்கி தனது கையிலிருந்த இரண்டு குறு வாட்களையும் அடுத்தடுத்த எறிந்தார் காவல் தலைவர்.

அவர்கள் எதிர்பார்த்தது ஒற்றனின் அலறல் சத்தத்தை. ஆனால், உள்ளேயிருந்து”உர்ரரர்ர்” பெரும் முழக்கச் சத்தம் ஒன்று வெளிப்பட்டது. முழக்கச் சத்தம் எழுந்த அடுத்தக் கணம் அந்தப் புதரிலிருந்து இளம் சிங்கம் ஒன்று வெளிப்பட்டது. அதைக்கண்ட இருவருமே அக்கணம் திகைத்துவிட்டார்கள். அதன் கழுத்திற்குப் பின்புறமாக இரண்டு குருவாட்களும் தைத்திருந்தன. முன்

னங்கால்களைத் தரையில் ஊன்றி பிடரி மயிர் குலுங்க உடலை ஒரு சிலுப்பு சிலுப்பியது. அடுத்தகணம் பிடரியில் தைத்திருந்த இரண்டு குருவாட்களும் நெடுந்தொலைவு சென்று கீழே விழுந்தன. குருதி வழிந்து கொண்டிருந்தது. இருவரையும் மாறி மாறிப் பார்த்தது. ஆயுதத்தை இழந்து விட்டிருந்த காவல் தலைவன் இளவரசனை எண்ணி அச்சப்பட்டான். ஆயுதம் இல்லாமலே சேர இளவலைக் காக்க பாயும் சிங்கத்தின் மீது விழுந்து அதனுடன் சண்டையிட ஆயத்தமானார் அவர். கண நேரம் முழங்கியபடி நின்று கொண்டிருந்த சிங்கத்தையும், கையில் சிறு ஆயுதத்துடன் பதற்றமின்றிச் சிங்கத்தை எதிர்க்கத் துணிந்துவிட்ட இளவரசனையும் மாறி மாறி நோக்கினார் காவல் தலைவர்.

அந்தச் சிங்கம் முழங்கியபடி பத்தடி முன்னால் நின்ற இளவரசனின் மீது பாய்ந்தது. இளவலைக் காக்க இளவ

லுக்கும் சிங்கத்திற்கும் இடையில் பாய்ந் தார் காவல் தலைவர்.

அடுத்தகணம் பாய்ந்து வந்த அச் சிங்கம் மண்ணில் கீழே விழுந்து தேய்ந்து கொண்டே வந்து இளவரசனின் காலில் விழுந்தது. சிங்கத்தின் மீது விழுந்தார் காவல் தலைவர்.

வியப்புடன் அந்தச் சிங்கத்தைப் பார்த்தனர் இருவரும். அதன் கழுத்தில் கீழ்புறமாக மூன்று அம்புகள் பாய்ந்திருந் தன. அந்த மூன்று அம்புகளும் எங்கி ருந்து வந்தது எப்போது அதன்மீது பாய்ந் தது எனத் தெரியாத இருவரும் ஒருவரை யொருவர் வியப்புடன் பார்த்துக் கொண் டனர்.

அப்போது அருகிலிருந்த மரத்திலி ருந்து குதித்த வேடனொருவன் தோளில் தனது வில்லினை மாட்டிக் கொண்டு சிரித்தபடியே, "புதரில் மறைந்திருக்கும் சிங்கத்தைக் குறுவாள் கொண்டு தாக்கி சினப்படுத்தும் வித்தையும், ஆளைக்

கொல்லப் பாயும் சிங்கத்தை வாளினைக் கொண்டு எதிர்க்கும் வீரத்தையும் இங்கு தான் ஐயனே பார்க்கிறேன்” எனத் தெரி வித்தான் வஞ்சகப் புகழ்ச்சியுடன்.

அவனது வஞ்சகப் புகழ்ச்சியை உணர்ந்த காவல் தலைவர், “யாரிடம் பேசிக் கொண்டிருக்கிறாய் என்பதைத் தெரிந்து கொண்டு நீ பேசுவது உத்தமம்!” கோபத்துடன் தெரிவித்தார்.

“உத்தமமா?”

“ஆம்!”

“யாருக்கு?”

“உனக்குத்தான்!”

அந்த இடமே அதிரும்படி சிரித் தான் அந்த வேடன்.

“யாரிடம் பேசுகிறோம் என்பதைத் தெரிந்து கொண்டு பேசு!” மீண்டும் எச்ச ரித்தார் காவல் தலைவர்.

"யாராக இருந்தால் எனக் கென்ன? இது என்னுடைய வனம். உங்களைக் காக்க ஒரு சிங்கத்தை நான் கொன்றிருக்கிறேன். காட்டிற்குள் தற்காப்பிற்காக ஈட்டி கூட இல்லாமல் வந்திருக்கும் முட்டாள்கள் நீங்கள் இருவரும். உங்களைக் காக்க என்வன ராசாவையே கொன்று விட்டேன் நான்!" பெரும் கோபத்துடன் தெரிவித்தான் அவன்.

வேடன் கூறியதைக் கேட்டதும் இடையை நோக்கிக் கையைக் கொண்டு சென்றார் காவல் தலைவர். அதைப் பார்த்த வேடன் சிரித்தபடியே, "உன் குறுவாட்கள் இரண்டும் சிங்கத்தின் முதுகில் தைத்து இப்போது மணலில் கிடக்கிறது. அவை உனக்குப் பயன்படப்போவதில்லை. வீண் முயற்சி வேண்டாம்!" தோளில் போட்டிருந்த வில்லினைக் கையில் எடுத்த வேடன் அதன் நாணில் அம்பினைப் பூட்டவும் செய்தான்.

"நம் உயிரைக் காத்தவர் இவர். நாம் இவருக்கு நன்றி கடன் பட்டிருக்கிறோம். சற்றுப் பொறுமையாக இருங்கள்!" எனக் காவல் தலைவரிடம் தெரிவித்த இளவரசன், "வேடரே, தக்க சமயத்தில் எங்களது உயிரைக் காப்பாற்றியிருக்கிறீர்கள். மிக்க நன்றி" எனத் தெரிவித்தான்.

"இனியாவது எச்சரிக்கையாக இருங்கள்" எனக் கூறிய வேடன் அந்தச் சிங்கத்தை அநாவசியமாகத் தூக்கி தோளில் போட்டுக் கொண்டான். அப்போது காவல் தலைவர், "வேடா... எத்தனை காலமாக நீ அந்தப் புதரில் மறைந்திருந்தாய்?" என வினவினார்.

"நீங்கள் இருவரும் தொலைவில் வரும்போதே!"

"நாங்கள் பேசியது?"

"ஐயனே, கண், மூக்கு மற்றும் வாயினைத் தான் வேண்டாத போது மூடிக் கொள்ள இயலும். ஆனால், காது அப்

படியில்லையே. விரும்பாவிட்டாலும் சில பேச்சுகளைக் கேட்டுத்தானே ஆக வேண்டி இருக்கிறது!”

“அப்படியெனில் நாங்கள் பேசியது அனைத்தையும் நீ...”

“அரைகுறையாகக் காதில் விழுந்தது. மானைத் தேடி வந்தேன். அந்த மானைத் தேடி வந்த சிங்கத்தை அடித்துவிட்டேன்! இனியாவது இந்த வனத்தில் எச்சரிக்கையுடன் இருங்கள். அது மட்டுமல்லாமல் பேசுவதற்கு முன் அக்கம் பக்கம் பார்த்து பேசுங்கள்!” என அறிவுரையையும் கூறிவிட்டு அவர்களின் பதிலைக் கூட எதிர்பாராமல் குருதி வழிந்தபடி இருந்த சிங்கத்தைத் தூக்கிக் கொண்டு செல்லலானார்.

சிறிது தூரம் சென்றதும் இளவரசனைப் பார்த்து, “தன் மீது பாயும் சிங்கத்தைக் கண்டும் பதறாமல், அதிர்ச்சியடையாமல் நின்ற உங்களது வீரம் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது வீரனே! தன்

உயிரையும் மதிக்காமல் உங்கள் உயிரைக் காக்க அந்தச் சிங்கத்தின் முன் விழுந்தாரே, இவரைப் போன்றவர்கள் கிடைப்பது பெரும் புண்ணியம். இவரை உங்களது மெய்க்காப்பாளராக நியமித்து விடுங்கள் இளவரசே! பெரும் நம்பிக்கைக்குரியவர்" எனக் கூறிவிட்டு புறப்பட்டான்.

"வேடரே, உங்களைச் சந்திக்க வேண்டும் என்றால் எங்கே சந்திப்பது?" சத்தமிட்டு வினவினான் இளவரசன்.

"இந்த வனத்தில்தான் சுற்றிக் கொண்டு இருப்பேன்!"

"உங்களது பெயர்?"

"வில்லவன்..."

"உங்கள் உதவிக்கு மிக்க நன்றி..."

அதற்குள் வில்லவன் அவர்களின் பார்வையிலிருந்து முற்றிலும் மறைந்து விட்டிருந்தான்.

https://telegram.me/aedahamlibra

# 31. எரிபரந்தெடுத்தல்

கொங்கு நாட்டிற்கு அப்பால் காவேரி நதி பிறக்கும் குடகு மலைப் பகுதிக்கு வானவாசி நாடு எனப் பெயர். இந்நாட்டிற்கு அருகில் இருக்கும் பகுதிகள்தான் புன்னாடு மற்றும் கங்கநாடு. வானவாசி நாட்டிற்கு வடமேற்கே பாயும் வானியாறுதான் துளுவ நாட்டின் வட எல்லை. மேற்கே குடக் கடலை எல்லையாகக் கொண்டது. தெற்கே மாந்தை அதன் எல்லை. சேர நாட்டின் வட பகுதியான துளுவ நாடு சேர நாட்டிற்கே அடங்கியே சுதந்திரமாகத் தன்னாட்சி செலுத்திக் கொண்டிருந்

தது. தமிழகத்தின் வட பகுதியாகையால் தமிழானது திரிந்து கொடுந்தமிழே வழக்கத்தில் இருந்தது. துளுவ நாட்டைத் துளுநாடு எனவும் அழைப்பர். துளு நாட்டுப் பகுதிக்குள் அடங்கிய கொண்கானா நாட்டிற்கு அருகில் காணப்பட்ட அகப்பா பகுதியில் தான் துளுவர்களின் எல்லைப் புறக் காவல் கோட்டை அமைந்திருந்தது. துளுவர்களின் எல்லைப்புறக் காவல் படையின் நிரந்தர உறைவிடம் அகப்பா கோட்டைதான்.

சேர நாட்டிற்கு அடங்கிய பகுதியாகவே துளு நாடு இருந்ததனால் அகப்பா கோட்டையை வலிமையானதாக அவர்கள் மாற்றுவதற்கு எந்தவித முகாந்திரமும் இருக்கவில்லை. துளு நாட்டிற்கு ஆபத்து ஒன்றென்றால் முதலில் உதவுவது சேர நாடுதான். துளுநாட்டை ஆண்ட வேளிர்களுக்கு எப்போதுமே சேர நாட்டு நிலைப்படையில் நிரந்தர இடமுண்டு. இப்போதும் சோழ நாட்டைத் தாக்குவதற்குப் புறப்பட்டிருக்கும் படையில் இருக்கும் முக்கியப் படைத் தலைவர்களில் துளுவர்களும் அடங்குவர். அதே போன்று வடுகர்களை எதிர்க்க

தகடூருக்கு வடமேற்கே நிலை பெற்றிருக்கும் துளுவப் படையில் சேரநாட்டுப் படையின் அளவும் கணிசமான அளவு உண்டு. சேர நாட்டிற்கும், துளுவ நாட்டிற்கும் எப்போதுமே வலிமையான பிணைப்பு காணப்பட்டதால் சேர நாட்டு இளவரசன் துளுவர்கள் மீது பெரும் நம்பிக்கையிலேயே இருந்தான். 'துளுவ எல்லையில் அவர்களைத் தவிரச் சேர நாட்டுக் குடிகளையும், சேர நாட்டுக் காவல் நிலைப்படையையும் யாரால் தாக்க இயலும்?' எனக் குழப்பத்துடனே அகப்பா கோட்டையை நோக்கித் தனது காவலுக்கு நான்கு புரவி வீரர்களையும் அவர்களுடன் எல்லைப்புறக் காவல் தலைவரையும் அழைத்துக் கொண்டு செல்லலானான்.

முக்கியமான கேந்திரத் தளமாக அகப்பா பகுதி விளங்கினாலும் அவசியம் இல்லாததனால் அகப்பா கோட்டை பெயரளவிற்கே கோட்டையாக விளங்கிப் பெரும் பலவீனமாகவே காணப்பட்

டது. வீரர்கள் மட்டும் தங்கி ஓய்வெடுக்கச் சில மாளிகைகள், அவர்களுக்குப் பணி விடை செய்ய அழகிய கன்னிகள் என ஓய்வெடுக்கும் மாளிகையைப் போன்றே விளங்கியது. அகலம் குறைந்த உயரமில் லாத கோட்டை மதில், ஆழம் இல்லாத அகழி, எதிரிகள் கோட்டையைக் கைப் பற்றுவதற்கு உதவியாக அகழி வரை நீண்டிருந்த அடர்ந்த மரங்கள் எனப் பல வீனத்தின் அடையாளமாகக் காணப்பட் டது அக்கோட்டை. அதனைப் பார்த்த மாத்திரத்திலேயேதிறமையான படைத் தலைவனின் கீழ்சிறு படை தாக்கினால் கூடச் சில நாழிகைப் பொழுதிற்குள் இத னைக் கைப்பற்றிவிடலாம்' என எண் ணிக் கொண்டான் சேர இளவரசன்.

தொலைவிலிருந்து அக்கோட்டை யைக் கண்ட உடனேயே மன தில் எழுந்த சந்தேகத்தைத் தன்னுடன் வந்து கொண்டிருந்த காவல் தலைவரி டமும் வினவவே செய்தான் சேர இள வரசன்."அகப்பா முக்கியமான கேந்திரத்

https://telegram.me/aedahamlibra

தளம். அப்படியிருக்க இந்தக் கோட்டையை எதற்காக இவ்வளவு பலவீனமாகப் போட்டிருக்கிறார்கள்?" என்று.

"அவசியமில்லை இளவரசே. அகப்பாவிற்கு எல்லை நம் சேர நாடு. துளுவர்கள் எப்போதுமே சேர நாட்டுடன் நட்புறவையே விரும்புகிறார்கள். துளுவர்களுக்கு ஆபத்து ஏதாவது வருகிறதென்றாலே நம் படை அவர்களைப் பாதுகாத்துவிடும். அப்படியிருக்க இந்தக் கோட்டையைப் பலப்படுத்துவது அவசியமற்றது என்று துளு நாட்டு மன்னன் நினைத்துவிட்டான் போலும். ஆனால் அருகில் இருக்கும் கொண்கானா நாட்டின் கோட்டை இதைவிடவும் பலம் வாய்ந்தது. பெயரளவிற்கு மட்டுமே இப்போது கோட்டை."

"அவர்களின் நினைப்புத் தவறு என்று கருதுகிறேன்!"

"தவறா?"

https://telegram.me/aedahamlibra

"ஆம்!"

"என்ன தவறு?"

"அகப்பாவைச் சுற்றி இரண்டு சிறு நதிகள் பாய்ந்து கொண்டிருக்கின்றன. இரண்டும் காவேரியிலே சென்று சந்திக் கின்றன. மேற்குப் புறம் மலைப் பகுதி அரணாக இருக்கிறது. ஆனால் கிழக்குப் பகுதி சமவெளி, அதைத் தாண்டினால் காவேரி. இப்படிப்பட்ட இயற்கை அரண் களை உள்ளடக்கிய இந்தக் கோட் டையை இப்போதிருக்கும் நிலையில் தேர்ந்த சில நூறு வீரர்களாலே இக் கோட்டையைக் கைப்பற்றி விட இயலும். அதுமட்டுமல்ல அப்படி எதிரிகள் கைப் பற்றி இதிலிருக்கும் சில குறைபாடுகளை மட்டும் அவர்கள் களைந்துவிட்டால் இக்கோட்டையை மீண்டும் கைப்பற்று வது சாமான்ய காரியம் இல்லை படைத் தலைவரே! கோட்டைக்குள் இருப்பவர் கள் எளிதிலும் தப்பித்துவிடவும் இய லும்! இக்கோட்டையைப் பார்த்த அடுத்

தக் கணத்திலேயே இதனால் பெரும் ஆபத்து சூழ இருக்கிறது என்று என் மனம் என்னை எச்சரிக்கை செய்கிறது!"

"இளவரசே, வீண் குழப்பம் வேண் டாம். இந்தப் பகுதியில் நமக்கு ஆபத்து என்றால் அருகில் காணப்படும் கொங்கு நாட்டை ஆண்ட சோழர்களால் தான். ஆனால், இப்போது கொங்கு நாடும் நம் ஆதிக்கமிருக்கும் இருங்கோவின் கட் டுப்பாட்டிலே இருக்கிறது. இனி என்ன பிரச்சனை?"

"ம்ம்ம்" என மட்டும் தெரிவித்த சேர இளவரசன் அகழிப் பாலத்தைக் கடந்து திறந்திருந்த கோட்டைக்குள் பிர வேசிக்கலானான். சேர இளவல் அகப்பா கோட்டைக்குள் நுழைந்ததுமே கொம் புகளும், வலம்புரிச் சங்குகளும், பறை யும் முழங்கி சேர இளவரசனின் வரவை அனைவருக்கும் தெரியப்படுத்தின. சேர இளவலின் வரவைத் தெரிந்து கொண் டதுதான் தாமதம், உடனே அனைவரும்

வாயிலுக்கே ஓடி வந்து மலர் தூவி சேர இளவலை வணங்கி மரியாதை செலுத்தலானார்கள்.

கம்பீரத்தோடு சேர இளவரசனை வரவேற்ற அகப்பா கோட்டைத் தலைவன், "இளவரசே, குரல் கொடுத்திருந்தால் உங்களைச் சந்திக்க நாங்களே ஓடி வந்திருப்போமே! அப்படியிருக்கத் தாங்கள் இவ்வளவு தொலைவு வரவேண்டிய அவசியம் என்னவோ?" என வினவினான்.

அவன் வினவுவதைக் கண்ட சேர இளவரசன், 'இவன் எல்லைப் புற நிலைமையை அறிந்துதான் பேசுகிறானா? அல்லது நிலைமையை அறிந்தும் மறைத்துப் பேசுகிறானா?' என மனதிற்குள் எண்ணியபடியே கோட்டைக்குள் அடங்கிய சிறு மாளிகையை நோக்கி அவனுக்கு எந்தப் பதிலையும் அளிக்காமல் நேரே நடக்கலானான்.

https://telegram.me/aedahamlibra

அகப்பா கோட்டைத் தலைவன் மற்றும் முக்கியப் படைத் தலைவர்கள் உட்படப் பின்னால் வர இளவரசன் மாளிகைக்குள் நுழைந்து அங்கிருந்த அவையின் சிம்மாசனத்தில் அமரலானான். அவன் அமர்ந்த அடுத்தக் கணத்திலேயே கன்னிகள் சாமரத்துடன் அவனை நோக்கி வந்தார்கள். அவர்களை விழிகளாலே திருப்பி அனுப்பி வைத்துவிட்டான். பிறகு அவனது இசைவைத் தொடர்ந்து மற்ற முக்கியக் கோட்டைத் தலைவர்கள் மற்றும் கோட்டைத் தளபதிகள் என அனைவரும் ஆசனத்தில் அமரலானார்கள்.

அனைவரும் அமர்ந்த அடுத்தக் கணத்திலேயே கோட்டைத் தலைவனை நோக்கி, “நம் நாட்டு எல்லைப் பகுதியின் நிலைமை என்ன?” என வினவினான்.

“இளவரசே, வட கிழக்கு எல்லையில் தான் வடுகர்களின் இடையூறு சற்று இருக்கிறது. கலிங்கர்கள்

வடுக நாட்டின் மீது போர்தொடுக்கவி ருக்கிறார்கள் என்ற செய்தி ஒற்றர்கள் மூலம் தொடர்ந்து வந்து கொண்டிருக் கிறது. ஆதலால் அவர்களும் படை களை விரைவில் துளுவ நாட்டு எல் லையிலிருந்து விளக்கிவிடுவார்கள் என நம்பு..." எனக் கூறிக் கொண்டிருந்த போதே அவரது பேச்சினை இடைம றித்த இளவரசன், "எதற்கும் உதவாத ஒற்றர்களின் தகவல்களைத் தூக்கி குப் பையில் போடுங்கள் கோட்டைத் தலை வரே! அகப்பா கோட்டையின் காலடியில் நடக்கும் அடையாளம் தெரியாத தாக் குதலைப் பற்றி அறிந்து வைத்திருக்கத் துப்பில்லை. கலிங்கர்களின் படை நகர் வினைப் பற்றிய தகவல்களை அறிந்து கொண்டு தெரிவிக்கிறார்களா?" என அந்த அவையே அதிரும்படி ஆசனத் திலிருந்து எழுந்து நின்று கோபத்தோடு வினவினான்.

அவனது குரல் எழுந்து அம்மண் டபத்தையே சிறிது நேரம் எதிரொலிக்க

அவையே கிடுகிடுத்துப் போய் அமைதி யாகக் காணப்பட்டது.

அகப்பா கோட்டைத் தலை வன், “இளவரசே என்ன கூறுகிறீர்கள்? அகப்பா கோட்டையின் காலடியில் பிரச்ச னையா?” என எதுவுமே அறியாதவரைப் போன்று வினவினார்.

“கோட்டைத் தலைவரே, தங்க ளுக்கு எதுவுமே தெரியாதா? அல் லது தெரிந்தும் தெரியாதவரைப் போன்று வினவுகிறீர்களா? எனக்குப் பெரும் ஐயமாக இருக்கிறது. நீங்களே பதில ளித்து விடுங்களேன்” வெளிப்படையா கவே வினவினான் சேர இளவரசன்.

“இளவரசே, தாங்கள்...”பேரதிர்ச்சி யுடன் எதையோ கூற வாயெடுத்தார். அடுத்தக் கணம் இளவலின் கை உயர வாயை மூடிக் கொண்டார்.

மீண்டும் ஆசனத்திலிருந்து எழுந் தான் இளவரசன்.”கோட்டைத் தலைவர்

கூறுவது எனக்குப் பேரதிர்ச்சியாக இருக்கிறது. இந்த அகப்பாவின் நிலையை எண்ணினாலும் எனக்கு அப்படித்தான் இருக்கிறது" எனக் கூறி மிடறு விழுங்கியவன் மீண்டும் அவையை நோக்கி பார்வையைச் செலுத்தினான்.

அவையினர் அனைவரும் அதிர்ச்சி கலந்த அமைதியுடன் இளவலின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

"எல்லைப் புறத்தில் அடையாளம் அறிய இயலாத எதிரிகள் தாக்குதல் தொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் உடைமைகளை இழந்து வஞ்சியை நோக்கி சென்று கொண்டிருக்கிறார்கள். ஆனால் நீங்களோ அதைப் பற்றிய எந்த வித தகவல்களும் தெரிந்து கொள்ளாமல் சிரத்தையின்றி இங்கு மதுவுடனும், மாதுவுடனும் பொழுதினைக் கழித்துக் கொண்டிருக்கிறீர்கள்? சேர எல்லைப் புறத்தைத் தாக்குவது துளுவர்களாக இருப்பார்களோ எனக் கருது

கிறேன் நான். துளுவர்களாக இருக்கும் பட்சத்தில் அதன் விளைவு கொடூரமாக இருக்கும் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எச்சரிக்கையுடன் செயல்படுவீர்களாக!" என எச்சரிக்கை செய்தவன் அதற்குப் பிறகு கண நேரமும் தாமதிக்காமல் அக்கோட்டையிலிருந்து வெளியேறிச் செல்லலானான்.

அகப்பா கோட்டைக்குள் நுழைந்து துளுவர்களை எச்சரித்துவிட்டு வந்த பிறகு முழுமூச்சில் பார்வைக்குப் புலப்படாத எதிரிகளைத் தேடி மாறுவேடத்தில் அலைந்து கொண்டிருந்தான் சேர இளவரசன். ஆயிரம் புரவி வீரர்களுடன் எல்லைப் புறத்தில் அவன் தேடுதலைத் தொடங்கிய பிறகு எதிரிகளின் தாக்குதல் முற்றிலும் நின்றிருந்தது. எங்கோ மறைந்து கொண்டதைப் போன்றே எண்ணினான் சேர இளவரசன். 'அவர்களின் மறைவிடத்தை அறிந்து நிச்சயம் அவர்களை அழித்துவிடவேண்டும்' எனும் நினைப்பில் காவல் தலைவருடன்

விடா முயற்சியுடன் தேடிக் கொண்டிருந்தான். மூன்று நாட்கள் கடந்திருந்தன. சேர இளவரசனால் எதிரிகளின் புரவித் தடத்தினைக் கூடக் கண்டறிய இயலவில்லை. ஏமாற்றத்தினால் சோர்வடைந்திருந்த படியே நடந்து கொண்டிருந்த போதுதான் அன்று சிங்கத்திடமிருந்து தன்னைக் காப்பாற்றிய வேடன் பெரிய நரி ஒன்றை வேட்டையாடி மரத்தில் தலை கீழாகத் தொங்க போட்டு அதன் தோலை உரிப்பதைப் பார்க்கலானான்.

பக்குவமாகத் தோலுரித்துக் கொண்டிருந்த வேடனைப் பார்த்தபடியே வேழ மரத்தின் அடியில் நின்று விட்டான் இளவரசன். நரித் தொலைக் கிழித்து நீரில் போடுவதற்குக் குனிந்த போது இளவலைக் கண்டுவிட்டான் வேடன்.

உடனே ஓடிச்சென்று பணிந்த வேடன், “இளவரசர் இந்த ஏழையின் குடிலுக்கு வருகை தர வேண்டும். உங்களைக் கண்டத்தில் எனக்கு மிக்க

https://telegram.me/aedahamlibra

மகிழ்ச்சி” எனக் கூறியபோதே இடைமறித்த இளவரசன், “இளவரசனா? தாங்கள் என்னை நண்பர் என்றே அழைக்கலாம்! எனது உற்ற நண்பராகவே உங்களை நான் கருதுகிறேன்” எனப் பதிலளித்துவிட்டு நின்றான்.

“நண்பா, உமது விருப்பமே எனது விருப்பமும்...” எனக் கூறியபடியே சிரித்த முகத்துடன் இளவரசனை வரவேற்றுப் புங்கை மரத்தின் அடியில் புலித்தோல் ஒன்றைக் கிடத்தி அதன் மீது அமரவைத்தான் வேடன் வில்லவன்.

“சற்றுப் பொறுங்கள் நண்பரே!” என இளவலிடம் தெரிவித்த வில்லவன் நரியின் தோலை உரிப்பதை நிறுத்துவிட்டு எங்கோ அவசர அவசரமாக ஓடியவன் அரை நாழிகைப் பொழுது கடந்த பிறகே திரும்பி வந்தான். நீராடிவிட்டுத் திரும்பி வந்தபோது தாமரை இலையில் பல வித சுட்ட மாமிச இறைச்சிகளை இருவருக்கும் கொண்டுவந்து படைத்தான். பசியு

டன் களைத்திருந்த இருவருமே அவனது விருந்தோம்பலை ஏற்றுக் கொண்டு உணவருந்தலானார்கள்.

காட்டுப் பன்றியின் கருங்கறி, முயலின் ஈரல், நரியின் தொடை, உடும்புக் கறி என ஒவ்வொரு விலங்குகளிலிருந்தும் சுவை மிகுந்த கறியை சுட்டுப் படைத்திருந்தான். பக்குவமாகச் சுட்டக் கறியுடன் மூங்கில் குழாயில் பனங்கள் மற்றும் தேறலையும் இருவருக்கும் பருக வைத்திருந்தான்.

சேர இளவரசனும், எல்லைப் புறக் காவல் தலைவனும் பசியிலும், உணவின் சுவையிலும் அவர்களை மறந்து உண்ணலானார்கள். தேறலையும், கள்ளையும் பருகிய சேர இளவல்"நண்பா... நம் நாட்டு மதுவுக்கு அடக்கம் தான் மற்ற தேசங்களின் மதுக்கள். என்ன சுவை? மெய்யோடு கவலைகளையும் மறக்கடித்துப் பெரும் உற்சாகத்தை அளித்து விடுகிறது."

https://telegram.me/aedahamlibra

“அரசே, நம் நாட்டு மது மட்டுமா தேர்ந்தது? மாதுவைக் குறிப்பிட மறந்து விட்டீர்களே! மூன்று வேளையும் பருகுவதற்கு நம் நாட்டு மது. ஊற்றிக் கொடுக்க மாது. இதைவிட்டால் வாழ்வில் வேறு என்ன இன்பம் வேண்டும்?” எனப் புன்னகையுடன் தெரிவித்தான் வேடன்.

வேடன் கூறியதைக் கேட்டுச் சிரித்த இளவரசன்”வாழ்வை அனுபவிக்கத் தெரிந்தவர் நீங்கள் நண்பா!” என்றான் மதுவைச் சுவைத்துக் கொண்டே.

பதிலுக்கு எந்தப் பதிலையும் தெரிவிக்காமல் இருவருக்கும் சுட்டக் கறியைப் பரிமாறலானான். தேறலைப் பருகியபடியே காவல் தலைவர், “இதுவரை இப்படியொரு சுவையான தேறலை நான் சுவைத்ததே இல்லை. எத்தனை வருடங்கள் மண்ணுக்குள் புதைத்து வைத்திருந்தீர்கள்?” என வினவினார் கண்களை மயக்கத்தில் மூடியபடியே.

https://telegram.me/aedahamlibra

“நாற்பது வருடங்களாக மண்ணுக்குள்ளேயே புதைத்து வைக்கப்பட்டிருந்த மது இது! என் தந்தை காலத்திலிருந்தே புதைத்து வைக்கப்பட்டிருந்த தேறலை என் நண்பன் இளவரசருக்காகத் தோண்டிக் கொண்டு வந்திருக்கிறேன். இளவலுக்கு எனது பரிசு!” எனத் தெரிவித்தான் வேடன் வில்லவன்.

“நண்பா, நாற்பது வருடங்களாகப் பாதுகாத்து வைத்திருந்த தேறலை நீங்கள் பருகாமல் எனக்கு விருந்தளித்திருக்கிறீர்களா?”

“இந்த ஏழையினால் அளிக்க முடிந்த எளிய விருந்து இதுதான் இளவரசே! மகிழ்ச்சி தானே?”

“விருந்தோம்பலில் தமிழ் நாட்டுப் பெண்கள்தான் உயர்ந்தவர்கள் என நினைத்திருந்தேன். ஆனால், அவர்களையும் நீங்கள் மிஞ்சிவிட்டீர்கள்! உன்னதமான நட்பின் பூரிப்பை அடைகிறேன்

நண்பா!" நெகிழ்ச்சியுடன் தெரிவித்தான் சேரஇளவல்.

வேடன் எந்தப் பதிலையும் கூறாமல் அவர்கள் இருவரும் உண்ணுவதையே மகிழ்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந் தான்.

"நண்பா... நீ நிச்சயம் ஒரு நாள் என் உறைவிடத்திற்கு வந்தாக வேண்டும்!"

"எங்கே வஞ்சி அரண்மனையையா குறிப்பிடுகிறீர்கள்?"

"ஆம்!"

எந்தப் பதிலையும் கூறாமல் அமை தியாகவே அமர்ந்திருந்தான் வில்லவன்.

"உலகில் எத்தனை வகைப்பட்ட மது இருக்கிறதே அத்தனை வகை களையும் கொண்டு வந்து உனக்குப் படைக்கிறேன் நண்பா! நீ நிச்சயம் வந் தாக வேண்டும்!"

“இளவரசே... நான்... நான்...” பேசத் தயங்கினான் வில்லவன்.

அவனது தயக்கத்தைக் கண்ட காவல் தலைவர், “இளவரசர் மாதுவைக் குறிப்பிடாமல் மதுவைப் பற்றி மட்டும் குறிப்பிடுகிறார் எனக் கவலையா தம்பி. வஞ்சிக்கு மட்டும் ஒரு முறை வந்து பாருங்கள். வஞ்சிக் கொடிகளை விட்டு விலக மனமே வராது உங்களுக்கு. நிச் சயம் நீர் வந்தே ஆகவேண்டும்!”என அவனிடம் தெரிவித்தவர், இளவரசனின் காதுகளில் எதையோ குசுகுசுவென்று கூறலானார்.

அவர் கூறியதைக் கேட்டதும் இள வரசன் காவல் தலைவரையும், வேடன் வில்லவனையும் மாறி மாறி கவனிக்க லானார். பிறகு வில்லவனது விழிகளில் தனது பார்வையை நிலைக்க விட்டப டியே, “சரியான கூற்று காவல் தலைவரே! இதை நான் எப்படிச் சிந்திக்க மறந்தேன்”

"இளவரசே... நான்... நான்..." பேசத் தயங்கினான் வில்லவன்.

அவனது தயக்கத்தைக் கண்ட காவல் தலைவர், "இளவரசர் மாதுவைக் குறிப்பிடாமல் மதுவைப் பற்றி மட்டும் குறிப்பிடுகிறார் எனக் கவலையா தம்பி. வஞ்சிக்கு மட்டும் ஒரு முறை வந்து பாருங்கள். வஞ்சிக் கொடிகளை விட்டு விலக மனமே வராது உங்களுக்கு. நிச் சயம் நீர் வந்தே ஆகவேண்டும்!"என அவனிடம் தெரிவித்தவர், இளவரசனின் காதுகளில் எதையோ குசுகுசுவென்று கூறலானார்.

அவர் கூறியதைக் கேட்டதும் இள வரசன் காவல் தலைவரையும், வேடன் வில்லவனையும் மாறி மாறி கவனிக்க லானார். பிறகு வில்லவனது விழிகளில் தனது பார்வையை நிலைக்க விட்டப டியே, "சரியான கூற்று காவல் தலைவரே! இதை நான் எப்படிச் சிந்திக்க மறந்தேன்"

எனத் தனக்குத்தானே கூறிக் கொண் டான்.

வில்லவன் எதுவும் புரியா மல் அவர்கள் இருவரையுமே மாறி மாறிப் பார்க்கலானான்."வியப்பு வேண் டாம் நண்பா... நீர் வஞ்சிக்கு எப்போது வருகிறீர் என்று தெரிவியுங்கள்! நீங்கள் எதிர்பாராத பரிசு ஒன்றை அளிக்கச் சித் தமாக இருக்கிறேன் நான்" எனத் தெரி விக்கலானான்

"என்ன பரிசு இளவரசே!"

"அதை வஞ்சிக்கு வரும்போது நீங் களே தெரிந்துகொள்வீர்கள்! அவசரம் வேண்டாமே!"

எந்தப் பதிலையும் கூறாமல் இருவ ரையும் வியப்புடன் நோக்கினான்.

மீண்டும் இருவரும் மதுவிலும், உண்ணும் உணவிலும் கவனத்தைச் செலுத்தலானார்கள்.

அவ்விடத்தில் சிறிது நேரம் பெரும் அமைதி நிலவியது. அப்போது, "உங்களுக்கு ஆட்சேபனை இல்லையென்றால் நான் ஒன்றை வினவலாமா?" என வினவினான் வேடன் வில்லவன்.

"நண்பர்களுக்குள் என்ன மரியாதை வில்லவா? நீ... வா... என்றே ஒருமையில் அழைக்கலாம். எனது உயிரைக் காத்த என் உற்ற நண்பன் நீதானே!" என்றான் சேர இளவரசர்.

".........."

"உங்களது பெயர் வில்லவன் என்றுதானே தெரிவித்தீர்கள்?"

"ஆமாம் இளவரசே! நாடாளும் இளவல் இந்த ஏழை வேடனை மரியாதையுடன் அழைப்பது மட்டும் சரியா?" எனப் பதிலுக்கு வினவினான் வில்லவன்.

அவன் கூறியதைக் கேட்டுச் சிரித்த சேர இளவல், "சரி வில்லவா... இனி அப்

படி அழைக்க மாட்டேன். சரிதானே?" என வினவினான்.

"ம்ம்ம். சரி நண்பா..."

பக்குவமாக நெருப்பில் சுட்ட மாமிசத் துண்டுகள் உண்டபடியே இளவரசன், "நண்பா, இவற்றைச் சமைத்தது நீ தானா?" என வினவினான்.

"ஆம் நண்பா... இவற்றைச் சமைத்தது அடியேன் தான். நீ வருவதை நான் முன்பே அறிவித்திருந்தால் இன்னும் நிறைய உணவுப் பொருட்களைத் தயார் செய்து வைத்திருப்பேன்."

"இதற்கு மட்டும் என்ன நண்பா குறைச்சல். இதுவே அமிழ்தம் போன்றல்லவா இருக்கிறது!"

வில்லவன் எந்தப் பதிலையும் அளிக்காமல் புன்னகை ஒன்றை உதிர்த்தான்.

“நண்பா, உனக்கு ஆட்சேபனை இல்லையென்றால் நான் ஒன்று வினவலாமா?” என மீண்டும் வினவினான் வில்லவன்.

“கேள் நண்பா... உனக்கில்லாத உரிமையா?”

“உன் முகம் ஏன் பொலிவிழந்து காணப்படுகிறது?”

“சில தினங்களாக ஓயாத அலைச்சல்!”

“பஞ்சணையில் அமர்ந்து கொண்டு விரலசைத்தால் ஏவல் செய்யப் பணியாட்கள் இருக்கச் சேர நாட்டு இளவரசனுக்கு அலைச்சலா?” வியப்புடன் வினவினான் வேடன் வில்லவன்.

“ஏவலாளிகள் பலர் இருந்தாலும் சில முக்கியப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண வேண்டியது என் கடமை அல்லவா?”

https://telegram.me/aedahamlibra

“பிரச்சனைகளா?”

“ஆம்!”

“என்ன பிரச்சனை? தயங்காமல் கூறு நண்பா. என்னால் இயன்றதை நான் செய்கிறேன்.”

“அது உன்னால் இயலாது நண்பா... நம் எல்லைப்புறக் காவல் படை மற்றும் ஆயிரம் புரவி வீரர்களும் தேடித் தோர்த்துவிட்டார்கள். எந்தப் பயனும் இல்லை.”

“தயக்கம் இல்லை என்றால் பிரச்சனையைத் தெரிவியுங்கள். என்னால் அந்தப் பிரச்னையை விடுவிக்க இயலுகிறதா என்று முயலுகிறேன்!”

“எல்லைப்புற மக்களை யாரோ அடையாளம் தெரியாத கள்வர் கூட்டம் தாக்கிக் கொண்டிருக்கிறது” எனக் கூறிக் கொண்டிருந்த போதே இடைமறித்த வில்லவன், “கள்வர் கூட்டமா?” என அதிர்ச்சியுடன் வினவினான்.

https://telegram.me/aedahamlibra

“ஆம் நண்பா!”

“அடையாளம் தெரியாத கூட்டம் என்கிறீர்கள் பிறகு எப்படிக் கள்வர் கூட்டம் என்று அறுதியிட்டுக் கூறுகிறீர்கள்?”

“சில தினங்களுக்கு முன்பு அவர்கள் எங்களது நிலைப்படை முகாமைத் தாக்கி அழித்துவிட்டார்கள்? அவர்களின் கல்லெறித் தாக்குதலைக் கொண்டு அவர்கள் நிச்சயம் கள்வர்கள் குழுவாகத்தான் இருக்க வேண்டும் என்று நம் காவல் தலைவர் அனுமானிக்கிறார்!”

காவல் தலைவரை ஒரு முறை வியப்புடன் பார்த்தான் வில்லவன். அவரது அறிவைக் கண்டு உள்ளூர வியந்து பாராட்டவே செய்தான்.

“அந்தக் கள்வர்களின் தாக்குதலில் எத்தனை வீரர்களை இழந்தீர்கள்?”

“ஒருவர் கூட மரணிக்கவில்லை!”

"என்ன, அவர்கள் ஒருவரைக் கூடக் கொல்லவில்லையா?"

"ஆம்! சிலருக்கு கல்லடி பட்டு மண்டை உடைந்துள்ளது. அவ்வளவு தான்!"

"விசித்திரமான எதிரிகளாக அல் லவா இருக்கிறார்கள்."

"ஆம் நண்பா... அவர்களின் செயலை கூறுகிறேன் கேளேன்!"

"ம்ம்ம்"

"மக்களைத் தாக்குகிறார்கள். ஆனால் அவர்களிடமிருந்து இதுவரை எதையுமே பறிக்கவில்லை. மக்களை அவர்களின் உடைமைகளோடு செல்ல வைத்துவிட்டுக் காடுகளையும், வெற் றுக் கிராமத்தை மட்டும் கொளுத்தி விடுகிறார்கள். அதுமட்டுமல்லாமல் மக் களுக்கு இழப்பீடாகப் பொற்காசுகளை யும் அளித்துவிடுகிறார்கள்! எல்லைப்பு றம் முழுவதும் சல்லடை போட்டுத் தேடி

விட்டோம். ஆனால், அவர்களை மட்டும் எங்களால் கண்டறியவே இயலவில்லை. பெரும் விசித்திர சித்தர்களாக இருக்கி றார்கள். அவர்கள் மட்டும் என் கைகளில் கிடைத்தால்.... !" எனக் கூறிக் கொண்டு கை விரல் நரம்புகளை முறுக்கினான். கையிலிருந்து மூங்கில் குழல் உடைந்து மது தரையில் சிந்தியது!

"அரசே, எனக்குச் சில சந்தேகங் கள்."

"என்ன நண்பா....?"

"அடையாளம் தெரியாதவர்கள் தாக்குகிறார்கள். ஆனால், அவர் கள் இதுவரை எவரையும் கொல்லவும் இல்லை, கொள்ளையடிக்கவும் இல்லை. அப்படித்தானே!"

"ஆமாம்!"

"அவர்களின் நோக்கம் என்னவாக இருக்கும் என்று சிந்தித்தீர்களா?"

https://telegram.me/aedahamlibra

"சிந்தித்துக் கொண்டிருக்கிறோம் நண்பா... ஆனால், எதுவுமே விளங்க வில்லை."

"கொள்ளையடிக்கவும் செய்யாமல் கொலையும் செய்யாமல் தாக்குகிறார் கள்."

"அதேதான்!"

"இப்படிப்பட்ட எதிரிகளும் இருக்கி றார்களா?"

"ம்ம்ம்..."

"அவர்கள் பற்றிய தடயங்களும் இதுவரை உங்களுக்குக் கிடைக்க வில்லை."

"ஆம்!"

"மந்திரங்கள் எல்லாம் ஓதி அவர்க ளால் பார்வைக்குப் புலப்படாமல் மறைந் துகொள்ள இயலாது!"

"நிச்சயமாக!"

https://telegram.me/aedahamlibra

"அப்படியெனில்?"

"அவர்கள் இங்குதான் எங்கோ மறந்திருக்கிறார்கள்!"

"உடைமைகளை இழந்து ஏதிலிகளாகச் செல்லும் மக்களிடம் அவர்களைப் பற்றி விசாரித்துப் பார்த்தீர்களா?"

"அதையும் செய்து பார்த்துவிட்டோம். எந்த முன்னேற்றமும் இல்லை!"

"எனக்கொரு சந்தேகம் இளவரசே!"

"என்ன நண்பா?"

"அவர்கள் ஏன் தப்பிச் செல்லும் கிராம மக்களோடு மக்களாகக் கலந்திருக்கக் கூடாது?"

வேடன் வில்லவன் கூறியதைக் கேட்டதும் திடீரென்று சிந்தனையிலிருந்து திரும்பிய இளவரசன், "நண்பா... என்ன கூறினீர்? என்ன கூறினீர்?" எனப் பதற்றத்துடன் வினவலானான்.

"அவர்கள் ஏன் மக்களோடு மக்களாகத் தப்பிச் சென்று உங்களது பார்வையிலிருந்து நழுவியிருக்கக் கூடாது?"

அருகில் தேறல் தந்த போதையில் அமர்ந்து கொண்டிருந்த காவல் தலைவரிடம், "காவல் தலைவரே, நாம் ஏன் இந்தக் கோணத்தில் இதுவரை சிந்தித்திருக்கவில்லை?" என வினவினான்.

"இளவரசே, இவர் கூறுவதைப் போன்று கள்வர்கள் நம் நாட்டு மக்களோடு மக்களாக மறைந்திருந்தால் நம் மக்கள் நிச்சயம் காட்டிக்கொடுத்திருப்பார்களே?" எனத் தெரிவித்தார்.

"காவல் தலைவரே, தலைக்கு மேல் கத்தி தொங்கும்போது யார்தான் காட்டிக்கொடுக்கச் சம்மதிப்பார்கள்?" எனக் குறுக்கிட்டான் வில்லவன்.

"புரியவில்லையே!" எனக் காவல் தலைவர் தெரிவிக்க ஏதோ ஒரு பெரும் புதிர் ஒன்று விடுவிக்கப்பட இருக்கிறது

எனும் ஆவலில் வில்லவனின் முகத்தையே பரபரப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார் சேர இளவரசர்.

"என்னதான் காவலுக்கு நீங்கள் இருந்தாலும் கூட்டத்தோடு கூட்டமாகக் கலந்திருக்கும் எதிரிகள் இருக்கையில் அவர்கள் எப்படி இளவரசே காட்டிக் கொடுப்பார்கள்? அதுமட்டுமல்லாமல் உங்களது எதிரிகள் அவர்களுக்கு எந்தத் தீங்கையும் இழைத்திருக்கவில்லை. மாறாக இழப்பீடாகப் பொற்காசுகளை அளித்து அனைத்து வசதிகளும் நிறைந்த பெரும்பட்டினமான வஞ்சிக்குச் செல்லுங்கள் என்று அனுப்பி வைத்தால் யார்தான் காட்டிக்கொடுப்பார்கள்?"

மதுவினால் சிவந்திருந்த விழிகளை மூடியபடி எதையோ அறிந்துவிட்ட திருப்தியில் பரபரப்புடன் சிந்தித்துக் கொண்டிருந்தான்.

"அவர்களின் இலக்கு என்ன என்றுதான் இன்னும் எனது சிற்றறிவிற்குப்

புலப்படவில்லை"எனக் கூறியபடி கண்களை மூடிக் கொண்டு சிந்திக்கத் தொடங்கினான் வேடன் வில்லவன்.

இருவரும் அவனது முகத்தையே பார்த்துக் கொண்டு எதிர்பார்ப்போடு அமர்ந்திருந்தார்கள்.

"வயல் வெளிகளைக் கொளுத்துகிறார்கள் ஆனால், மக்களைக் காத்து அனுப்புகிறார்கள். படைகளைத் தாக்குகிறார்கள். ஆனால் படை வீரர்கள் யாரையும் கொல்வதில்லை."

"ஆமாம்... ஆமாம்..." என்றார் காவல் தலைவர்.

"அவர்களின் திட்டம் என்னவாக இருக்கும்?"

"......."

"ஒருவேளை இப்படி இருக்குமோ?"

https://telegram.me/aedahamlibra

"எப்படி இருக்கும்?" எனக் கேட்டான் இளவரசன்.

"உங்களைத் திசை திருப்புவதற்காக இருக்குமோ?"

"என்ன...? என்ன...?" திகைப்புடன் கேட்டான் இளவரசன்.

"ஆமாம் நண்பா... உங்களைத் திசைதிருப்பி அவர்கள் போருக்கு உங்களை அழைக்கிறார்கள்?"

"போருக்கா?"

"ஆம்!"

"சிந்தித்துப் பாருங்கள் இளவரசே. வயல்களை அழித்து நிலைப் படையைத் தாக்குகிறார்கள் என்றால் அதற்கு என்ன பெயர்?"

"என்ன பெயர்?"

"இளவரசே... தமிழகத்தில் சிறு குழந்தையைக் கேட்டால் கூடப் பதில் சொல்லும்."

"சரி... இப்போது என்ன என்று கூறுங்கள். அதற்குக் காலமில்லை."

"அதற்குப் பெயர் எரிபரந்தெடுத்தல்."

"எரிபரந்தெடுத்தலா?" பெரும் வியப்புடன் வினவினான் இளவரசன்.

"ஆம் இளவரசே! சிந்தித்துப் பாருங்கள். நீங்களே அவர்களின் நோக்கம் என்ன என்பதை அறிந்துகொள்வீர்கள்."

"எரிபரந்தெடுத்தல் தொடுத்து சேர நாட்டைப் போருக்கு அழைக்கும் துணிச்சல் இப்போது தென்னகத்தில் எவனுக்குமே கிடையாது நண்பா..."

"அது அரசியல் சார்ந்த கேள்வி, அதற்கான பதிலை தாங்கள்தான் அறிவீர்கள்!"

"ஒன்று மட்டும் நிச்சயம் நண்பா... இனி தாங்கள் சிந்தித்துச் செயல்படு

வது நல்லது. முதலில் அவர்களின் எரி பரந்தெடுத்தலை முறியடியுங்கள். இல்லையேல் உங்கள் தலைநகர் விரைவில் வீழ்ந்துவிடும்!"

"நண்பா... என்ன பேசுகிறாய்? நண்பனாகினும் நாவை அடக்கிப் பேசுவது உனக்கு நல்லது என எச்சரிக்கிறேன் நான்!" பெரும் கோபத்தோடு தெரிவித்தான் சேர இளவரசன்.

"நண்பா... கோபம் வேண்டாம். உணர்ச்சிவசப்படாமல் சற்று நிதானமாகச் சிந்தித்துப்பார். இன்று மக்களோடு மக்களாக மறைந்து தப்பிச் செல்பவர்கள் இப்படியே மக்களோடு ஊடுருவி வஞ்சிக்குள் நுழைந்துவிட்டிருந்தால்?"

"........"

"சரி... அவர்களின் எண்ணிக்கை மிகவும் சொற்பம். ஆனால் நாட்டு மக்கள் அனைவரும் வஞ்சியில் தஞ்சமடைந்திருக்கையில் எதிரிகள் வஞ்சியைத் தாக்

கினால் அவர்களை எதிர்த்து உங்களால் எத்தனை காலங்கள் போர் தொடுக்க இயலும். உங்களது படையும், உண வுப் பொருட்களும் எதிரிகளை எதிர்க் கப் பயன்படுமா அல்லது தஞ்சமடைந் திருக்கும் மக்களைக் காக்கப் பயன்ப டுமா? எந்த முடிவெடுத்தாலும் விரைந்து முடிவெடுங்கள். இல்லையேல்...” எனக் கூறிய வில்லவன் அவர்கள் இருவ ரின் பதிலையும் எதிர்பாராமல், “பிறகு உங்கள் இருவரையும் சந்திக்கிறேன் நண்பா... சில முக்கியப் பணிகள் எனக் காகக் காத்திருக்கின்றன. நான் விரைந் துச் செல்ல வேண்டும்!” என அவர்களிட மிருந்து விடைபெற்றுத் திரும்பிச் செல்ல லானான்.

இளவலும், எல்லைப்புறக் காவல் தலைவரும் வேடன் வில்லவன் விடை பெற்றுச் செல்வதைக் கூடக் கவனிக் காமல் ஆழ்ந்த சிந்தனையில் பேரதிர்ச் சியுடன் அமர்ந்திருந்தார்கள். திடீரென்று ஏதோ மனதில் தோன்ற சுய நினைவிற்கு

வந்த இளவரசர் வேடன் வில்லவனைத் தேடினார்.

ஆனால், அதற்குள் வில்லவன் மீண்டும் அவர்களின் பார்வையிலிருந்து முற்றிலும் மறைந்துவிட்டிருந்தான்.

பொழுது மேற்கில் சாய்ந்த ஒரு நாழிகைப் பொழுதிற்குப் பிறகு சேர இள வரசன் தன் பாசறையை அடைந்திருந் தான். வேடன் வில்லவன் கூறியதைக் கேட்டதிலிருந்து பெரும் குழப்பத்துடனே காணப்பட்டான். அதிலும் அவன் தெரி வித்த 'எரிபரந்தெடுத்தல்' என்ற சொல் அவனைப் பெரிதும் எச்சரிக்கை அடை யச் செய்திருந்தது. வெகு நேரம் குழப்பத் துடன் சிந்தித்தபடியே தனது கூடாரத்திற் குள் அமர்ந்திருந்தவன், "புரவிப் படைத் தலைவனை உடனே இங்கு வரச் சொல் லுங்கள்" எனக் கட்டளையிட்டான்.

அவனது கட்டளை எழுந்த அடுத் தக் கணம் புரவிப் படைத் தலைவன் அவனது உப படைத் தளபதிகள், எல்

https://telegram.me/aedahamlibra

லைப்புறக் காவல் தலைவர் என அனை வரும் அவன் முன் வந்து பணிவுடன் நின் றார்கள்.

"உடனே நம் படைத் தளபதிகள் இருவர் வஞ்சிக்கு விரையட்டும்."

"இருவரா?" எனப் பதிலுக்கு வின வினார் காவல் தலைவர்.

"ஆம் இருவர் மட்டுமல்ல. அவர்க ளுடன் இரண்டு புரவி வீரர்களும் புறப்ப டப் போகிறார்கள்!"

"எதற்காக இளவரசே இந்தத் திடீர் கட்டளை?" எனத் தயக்கத்துடனே வின வலானார்.

"வஞ்சிக்கு இவர்கள் செய்தியை கொண்டு செல்லப் போகிறார்கள்?"

"வஞ்சிக்கு செய்தியா?"

"ஆம்!"

"தேடிவந்த எதிரிகளை நாம் இன் னும் நெருங்கவே இல்லையே. அப்படியி

ருக்க வஞ்சிக்குத் தாங்கள் என்ன செய்தியை அனுப்பப் போகிறீர்கள்?"

"சேரமானை எச்சரிக்கை செய்யப் போகிறேன்?"

"எச்சரிக்கையா?"

"ஆம்!"

அதன் பிறகு யாரும் எந்தக் கேள்வியையும் சேர இளவரசனிடம் வினவவில்லை. தீர சிந்தித்து ஏதோ முடிவினை எடுத்த பிறகே சேர இளவரசர் நம்மை அழைத்திருக்கிறார். கேள்வி கேட்பதில் எந்தப் பயனும் இருக்கப்போவதில்லை என்பதை அவர்கள் நன்கு உணர்ந்திருந்தனர்.

""அடைக்கலம் தேடி வஞ்சியை நோக்கி வரும் நம் நாட்டுக் முடிகளை வஞ்சிக்குள் குடியமர்த்த வேண்டாம். அவர்களை வேறு பட்டினத்தில் தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யச் சொல்லுங்கள். இன்னும் ஒரு

கிழமைப் பொழுதில் எதிரிகளை அடை யாளம் கண்டறிந்து விடுவேன். அவர் களை அழித்துவிட்டோ அல்லது விரட்டி விட்டோதான் நான் மீண்டும் வஞ்சிக்குத் திரும்பப்போகிறேன் என்பதையும் தெரி வித்துவிடுங்கள். அதுவரை நம் படை ஆன்பொருநை நதிக்கரையிலேயே தங் கியிருக்கட்டும்' என நான் தெரிவித்தேன் என்று மன்னரிடம் தெரிவித்துவிடுங்கள். மேலும், 'அடையாளம் தெரியாத திறமை யான எதிரியை எதிர்கொள்ள வேண் டியிருக்கிறது' என்றும் தெரிவித்துவிடுங் கள்."

"தங்களது உத்தரவு இளவரசே. இப்போதே படைத் தளபதிகளை நான் அனுப்பி வைத்துவிடுகிறேன்."

"நல்லது. நீங்கள் அனைவ ரும் விடைபெறலாம்" என அவர்களை அனுப்பி வைத்த சேர இளவல் மீண் டும் கையில் மதுக் குழாயை எடுத்துக்

https://telegram.me/aedahamlibra

கொண்டு பாசறையைச் சுற்றிப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் சரி பார்த்தான்.

சீரான இடைவெளியில் கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. புரவிகள் மொத்தமாகக் கொட்டகையில் அடைக்கப்பட்டிருந்தன. வீரர்களும் ஆங்காங்கே குழுக் குழுவாக அமர்ந்து மதுவை ருசித்துக் கொண்டிருந்தார்கள். பாதி வீரர்களுக்கு மேல் மது மயக்கத்தில் தள்ளாடி நிலத்தில் விழுந்து கிடந்தார்கள். அவர்களில் பாதிப் பேர் வீட்டில் தனியாக விட்டு வந்த தனது மனைவி மற்றும் காதலியின் அழகு மற்றும் பிரிவினைப் பற்றி உளறிக் கொண்டிருந்தார்கள். அனைத்தையும் இராக் காவல் வீரர்கள் எச்சரிக்கையுடன் காவல் காத்துக் கொண்டிருந்தார்கள். அனைத்தையும் கண்ட சேர இளவரசன் திருப்தியுடன் குமிந்து கிடந்த மணற்பரப்பில் வீரர்களுடன் படுத்துக் கொண்டான்.

அக்காட்சியைக் கண்டு பதறிய வீரர்கள் உடனே ஓடிச் சென்று படுக்கையைக் கொண்டுவந்து அவன் முன் கிடத்தி, "இளவரசே இந்தப் பஞ்சணையில் துயில் கொள்ளுங்கள்" எனப் பணிந்தார்கள்.

அவர்கள் கூறியதைக் கேட்டு சிரித்த இளவரசன், "அந்தப் பஞ்சணையை விட இந்த மணல் மெத்தை எனக்கு வசதியாக இருக்கிறது. இன்றிரவு நான் இங்குதான் உறங்கப் போகிறேன்" எனத் தெரிவித்தான்.

"அரசே, இந்த வெட்டை வெளியிலா?"

"ஆமாம்..."

"அரசே...?"

"குளிர்ந்த தென்றல், நட்சத்திரங்கள் பூத்துக் குலுங்கும் இந்த அழகு வானம். நிலவொளியும் இல்லாத இந்த முட்டிருட்டு. மது தந்திருக்கும் போதை

இன்றாவது என்னை இயற்கையை அனுபவிக்க விடுங்களேன்" எனக் கூறிக் கொண்டு எழுந்தவன்"என்னை யாரும் பின்தொடர வேண்டாம்" எனக் கூறிவிட்டுக் கையிலிருந்த மதுக் குழாயை கள்ளினால் நிரப்பிக் கொண்டு சற்றுத் தள்ளிக் காணப்பட்ட புல் தரையில் படுத்துக் கொண்டு மீண்டும் வானத்தைப் பார்த்தபடி மல்லாந்து படுத்துக் கொண்டான்.

https://telegram.me/aedahamlibra

# 32.

# நள்ளிரவுத் தாக்குதல்

இரவின் முதல் சாமம் பொறுமையாகக் கடந்து கொண்டிருந்தது. கூடாரத்திலிருந்து சற்றுத் தள்ளியே தனிமையில் படுத்துக் கொண்டிருந்ததால் பாசறையில் கட்டியிருந்த புரவிகளின் கனைப்புச் சத்தம் கூட இல்லாமல் அமைதியாக இரவை இரசித்துக் கொண்டிருந்தான் சேர இளவல். யாரும் பின்தொடர வேண்டாம் என்று கட்டளையிட்டிருந்தாலும் இளவலின் மெய்க்காப்பாளர்கள் இரகசியமாகக் கண்காணித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், அவர்களின் இருப்பை அறியாத இளவல் எந்தத் தொந்தரவும் இல்லாமல் மது

அளித்திருந்த போதையில் பேரின்பத்தை அனுபவித்துக் கொண்டே வானைப் பார்த்தபடி படுத்துக் கொண்டிருந்தான்.

தேய்ப்பிறைக் காலமாகையால் தேய்ந்த பிறை நிலவும் கிழக்கு வானில் உதிக்காமல் அடர்ந்த இரவை வானில் உருவாக்கியிருந்தது. கன்னிப் பெண்ணின் சிரிப்பிலிருந்து உதிர்ந்த முத்துக்களைப் போன்று வானம் முழுவதுமே நட்சத்திரங்கள் மின்னி நிலவின் இல்லாமையைப் போக்க முயன்று கொண்டிருந்தன. ஏந்திழையின் மூக்குத்தியில் பதித்திருக்கும் மரகதக் கல்லைப் போன்று சிவப்பு நிறத்தில் வடக்கு வானில் நகராமல் நிலை பெற்றிருந்த துருவ நட்சத்திரம், அவளது உச்சந்தலை வகுடில் சூடிய நெற்றிச் சுட்டியில் வரிசையாகப் பதித்த மூன்று முத்துக்களைப் போன்றும், அதைச் சுற்றி அமைந்த நான்கு சூரி சட்டிகள் போன்றும் அமைந்திருந்தது சப்த முனி மண்டலம், கிழக்கு வானில் பிரகாசத்துடன் மின்னிக் கொண்டிருந்த

வெள்ளி மீன் அவனுக்குக் கன்னியின் பிறை நுதலில் பிரகாசமாக மின்னும் நெற்றிச் சுட்டி வைரக் கல்லை நினைவுபடுத்திவிட்டுச் சென்றன.

மாலைப் பொழுதிலிருந்தே அவன் பருகிய மதுவானது இயற்கை வனப்பு முழுவதும் பெண்ணையே நினைவு படுத்திக் கொண்டிருந்தது. நட்சத்திரங்களை மறைத்துச் செல்லும் வான் முகில் கூட்டங்களைக் கண்ட அவனது மனமானது கன்னியின் தாவணியை நினைத்துக் கொண்டது. 'வானில் நிலவுகளே இல்லாத வேளையில் இந்த முகில் துகில்கள் எதை மறைக்க இப்படி வேக வேகமாக நகர்ந்து கொண்டிருக்கின்றன?' எனத் தனக்குள் கேள்வி கேட்டுக் கொண்டான். 'அழகை அப்பட்டமாக வெளிப்படுத்தாமல் இப்படி முகில் துகிலுக்குள் மறைந்திருக்கும் அழகுதான் எத்தனை வசீகரத்தை, எத்தனை ஈர்ப்பை அளிக்கிறது? நண்பன் வில்லவன் கூறியதைப் போன்று மதுவிலும், மாதுவின் மடியிலும்

இன்பமாகக் கழிக்க வேண்டிய குறுகிய காலத்தை ஏன் இப்படிப் போர், ஆக் கிரமிப்பு என்று சண்டையிட்டு வீணடித் துக்கொள்கிறோம்? வாழ்க்கை முழுவ தும் எந்த நிர்பந்தமும் இல்லாமல் காடுக ளில் திரிந்து வேட்டையாடி உண்டு மது விலும், மாதுவிலும் இன்பத்தைத் தேடிக் கொண்டிருக்கும் தன் நண்பன் வில்ல வன் வாழ்வை எப்படியெல்லாம் அனு பவித்திருப்பான்? ஓரிரவில் இரவினை அமைதியாகக் காண்கையில் மனம் எப் படிப்பட்ட அமைதியை அடைகின்றது? தினமும் இயற்கையின் எழில்களை அள் ளிப் பருகும் அவன் எப்பேர்பட்ட பாக் கியசாலி? அவனைப் போன்று வேடனா கப் பிறக்காமல் விட்டுவிட்டேனே!'எனப் பலவித கேள்விகளை வியப்புடன் கேட் டுக் கொண்டு வானில் நகர்ந்து கொண்டி ருந்த முகில் கூட்டங்களையே வியப்புடன் பார்த்துக் கொண்டு படுத்திருந்தான்.

அப்போது கன்னிப் பெண்ணின் பார்வை பட்டதும் மனதில் எழும் மின்

https://telegram.me/aedahamlibrary

னல் கீற்றினைப் போன்றே வானில் ஒரு எரி நட்சத்திரம் தொடு வானத்திலிருந்து எழுந்து உச்சி வானை நெருங்கிக் கொண்டிருந்தது. எரிந்தபடி விழுந்து கொண்டிருக்கும் அந்த எரி நட்சத்திரத்தை ஆச்சர்யத்துடன் பார்த்தபடி படுத்திருந்தான். உச்சி வானை நெருங்கிய எரி நட்சத்திரம் திடீரென்று பூமியை நோக்கி செங்குத்தாக விழுந்தது. அந்த ஒற்றை எரி நட்சத்திரத்தைத் தொடர்ந்து மேலும் சில நட்சத்திரங்களும் சேர்ந்து வானிலிருந்து நட்சத்திரக் கொத்தைப் போன்று மொத்தமாகக் கீழே விழுந்தன.

“இயற்கையின் விந்தைதான் என்ன? எப்படியும் இன்னும் சில கண நேரப் பொழுதுகளில் அவை காற்றில் சாம்பலாகக் கரையப் போகின்றன. அணையப்போகும் விளக்குப் பிரகாசமாக எரிவதைப் போன்று இந்த நட்சத்திரங்களும் அழிவதற்குள் அதன் வலிமையை வெளிப்படுத்தி விட்டுத்தானே காற்றில் கரைகின்றன” எனத் தனக்

குத்தானே கூறிக் கொண்டவன் உச்சி வானையே ஆச்சர்யத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

அப்போது அந்த இடத்தில் பெரும் பிரகாசமான ஒளி தோன்றியது. இந்த நேரத்தில் வெளிச்சம் எங்கிருந்து வருகிறது. ஒருவேளை வானிலிருந்து விழுந்த எரி நட்சத்திரம் தான் நம் கூடாரங்களின் மீது விழுந்து பற்றி எரிகிறதா?" என எண்ணிக் கொண்டு எழுந்து நின்று கவனித்தான். அவனது விழிகள் கூச கண்களை மூடிக் கொண்டான். பொறுமையாக விழிகளைத் திறந்து பார்த்தான். நான்கைந்து கூடாரங்கள் பற்றி எரிந்து கொண்டிருந்தன. வீரர்கள் திடீரென்று பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தார்கள். இருளில் மறைந்து கொண்டு இளவலைக் காத்துக் கொண்டிருந்த நான்கைந்து மெய்க்காவல் வீரர்கள் ஓடிவந்து இளவலைச் சூழ்ந்து கொண்டு அரண் அமைத்துவிட்டார்கள்.

https://telegram.me/aedahamlibra

நிலைமையைப் பார்த்ததும் கண நேரப் பொழுதில் சூழ்நிலையை உணர்ந்துவிடும் சேர நாட்டுப் பட்டத்து இளவரசன் அன்று அவன் பருகியிருந்த அளவுக்கு மீறிய மதுவினால் அவனது அறிவு சற்றே மழுங்கியிருந்தது.

தன்னைச் சுற்றி நின்ற வீரர்களிடம், “கூடாரங்கள் ஏன் பற்றி எரிகின்றன? வானிலிருந்து எரிநட்சத்திரங்கள் விழுந்துவிட்டனவா?” என வினவினான்.

“இல்லை இளவரசே! விழுந்தவை எரி நட்சத்திரங்கள் அல்ல. எதிரிகளின் எரியம்புகள். அன்று நம் கூடாரத்தைத் தாக்கி சிதைத்ததைப் போன்றே இன்றும் தாக்குதலைத் தொடுக்கிறார்கள்” எனத் தெரிவித்தார் எல்லைப்புறக் காவலர்.

“எதிரிகளா?” எனக் கூறிக் கொண்டு இடையில் முன்னெச்சரிக்கையுடன் கொண்டு வந்திருந்த போதையை முறிக்கும் மூலிகையை உடனே மென்று சாப்பிட்டான். அப்போது அங்கு ஓடிவந்த

காவல் வீரன் ஒருவனும் மோர் சொம்பை இளவலிடம் நீட்டினான். உடனே அதை வாங்கிப் பருகிய அடுத்தக் கணம் அவன் உண்ட மூலிகை மற்றும் மோர் அவனது போதையை விரட்டிவிட்டிருந்தது.

இடையிலிருந்து தனது போர் வாளை உருவியவன், “இன்று அவர் களை நாம் தப்பிக்க விடக்கூடாது. அவர்களை அழித்தே ஆக வேண்டும்?” என முழங்கியவன் காவல் வீரர்களிடம், “அணிவகுத்து நில்லுங்கள்! தற்காப்பு நடவடிக்கைகளை உடனே தொடங் குங்கள்! அனைத்து தீப்பந்தங்களையும் உடனே ஏற்றுங்கள்!” என அடுத்த டுத்து அவன் கட்டளையிட்டுவிட்டு வாய் மூடுவதற்குள் இருளிலிருந்து மேலும் சில எரிகணைகள் புறப்பட்டு அவர்க ளது கூடாரங்களின் மீது விழுந்து தீப்பி டிக்க வைத்து ‘தீப்பந்தங்களை ஏற்றுங் கள்’ என்ற இளவரசனின் கட்டளைக்கு வேலையில்லாமல் செய்தன.

சேர வீரர்களின் கூடாரங்கள் அனைத்தும் தீப்பிடித்து எரிந்து அவர்களின் நிலைகள் அனைத்தையும் வெட்ட வெளிச்சமாக்கின. ஒளிப் பிழம்புகளுக்கும், புகைகளுக்கும் இடையில் சிக்கிக் கொண்ட சேர நாட்டுப் புரவி வீரர்களுக்கு 'அவர்களை எத்தனை பேர் சுற்றி வளைத்திருக்கிறார்கள்? அவர்களும் புரவி வீரர்கள் தானா? அவர்களின் பலம் எத்தகையது. எங்கிருந்து தாக்கப் போகிறார்கள்?' என எதுவும் தெரியாமல் ஒளி வெள்ளத்திற்குள் அடைப்பட்டுக் கிடக்கலானார்கள்.

கொட்டகையில் விழுந்த சில எரி அம்புகள் புரவிகளை மிரளச் செய்திருந்தன. புரவிகள் தடுப்புகளை உடைத்துக் கொண்டு அங்குமிங்கும் மிரண்டு ஓடிக் கொண்டிருந்தன. வீரர்களில் பாதிப் பேருக்கு மேல் மது மயக்கத்தில் இருந்ததனால் உடனடியாக அனைவருக்கும் மூலிகையைக் கொடுத்து அவர்களின் போதையை விளக்கச் செய்யச் சேர

வீரர்களுக்கு எந்தவித சந்தர்ப்பத்தையும் அவர்கள் அளித்திருக்கவில்லை.

சேர வீரர்கள் எந்த முயற்சியை மேற் கொண்டாலும் அவர்களின் செயலைத் தடுக்க வானிலிருந்து சில எரியம்புகள் அவர்களுக்கு முன் விழுந்து பாதையை மறைத்துக் கொண்டு எரிந்தன. நிலை யின் அதி தீவிரத்தைப் புரிந்து கொண்ட சேர வீரர்கள் கேடயத்தையும் கையில் கிடைத்த ஆயுதங்களையும் எடுத்துக் கொண்டு கேடயங்களை ஒன்று சேர்த்து பாசறையைச் சுற்றிலும் அரண் அமைத்து நின்றுவிட்டார்கள்.

எதிரிகள் தாக்குதல் தொடுத்த உடனேயே தனது கட்டளையைப் புரிந்து கொண்டு எதிரிகள் ஊடுருவ இயலாத அளவிற்கு வலிமையான அரண் அமைத் துவிட்டதை எண்ணி பெருமையடைந் தான் இளவரசன். ஆனால் அவனது எண்ணம் முற்றிலும் தவறு என்பதை அடுத்து நடந்த செயல்கள் அவனுக்

குப் புரிய வைத்தன. எரிந்து கொண்டிருந்த ஒரு சில கூடாரங்களும் மெல்ல அணையத் தொடங்கின. மீண்டும் இருள் அவ்விடத்தை மெல்ல மெல்ல நெருங்கத் தொடங்கியது. ஒளியின் எல்லை சுருங்க சுருங்க அவர்களைச் சூழ்ந்துள்ள எதிரிகள் அவர்களை நோக்கி மெல்ல நெருங்குவதைப் போன்ற உணர்வு அனைவருக்குமே தோன்றியது.

அவர்களின் உள்ளுணர்வு பொய்க்கவில்லை. தீச்சுடர் தாழ்ந்த அடுத்தக் கணத்தில் சில புரவிகளின் காலடிச் சத்தம் அவர்களை நோக்கி வேகமாக முன்னேறி வந்தன. அப்போது நான்கு புறத்திலிருந்தும் சில புரவிகள் அவர்களின் கேடய அரண்களைத் தகர்த்துக் கொண்டு ஊடுருவித் தாக்குதல் நடத்தின. புரவிகள் நுழைந்த இடத்திற்கெல்லாம் மரண ஓலம் ஒலிக்கத் தொடங்கியது. அரணுக்குள் புகுந்த புரவிகளின் எண்ணிக்கை கூட அதிகமாக இல்லை. பத்திலிருந்து இருபதுதான் இருக்கும்.

இருளில் பார்வை பழக்கப்பட்ட அவர் களின் வேகத்திற்கு இவர்களால் சிறி தும் ஈடுகொடுக்க இயலவில்லை. பெரிய கரும் பூதம் அருகில் கடப்பதைப் போன்ற தோற்றம் ஏற்படும். அவ்விடத்தை நோக் கிக் குத்துமதிப்பாக வாளினைச் செலுத் தினால் சேர வீரனொருவனின் அலறல் சத்தம் எழும். இருளில் கண் தெரியா ததால் சேர வீரர்களே ஒருவரையொரு வர் தாக்கிக் கொண்டு மடியத் தொடங்கி னார்கள்.

நிலைமை மோசமாகுவதைக் கவ னித்த இளவரசன் அருகில் செய்வதறி யாது திகைத்து நின்ற காவல் தலை வரிடம் எரியம்பு ஒன்றை வாங்கினான். உடனே அதை அருகில் புரவிகளுக்கா கப் போடப்பட்டிருந்த இரண்டு வைக் கோல் போரில் ஒன்றை நோக்கி எய் தான். அடுத்தக் கணம் சுடர் விட்டு எரிந்த வைக்கோல் போர் அவ்விடத்திற்கே வெளிச்சத்தை வழங்கியது. வெளிச்சம் எழுந்த அடுத்தக் கணம் வீரர்களின் தாக்

குதலினால் ஊடுருவிய எதிரிகளின் புரவி வீரர்கள் அனைவரும் கொல்லப்பட்டார் கள். வெளிச்சம் வந்ததும் வெளிப்பட்ட வீரர்களின் வீரத்தைக்கண்டு பெருமை யுடன் தனது மீசையை முறுக்கி விட்டுக் கொண்டான் இளவரசன். ஊடுருவியவர் களைக் கொன்றதும் பார்வையை அவர் களைச் சூழ்ந்திருந்த எதிரிகளை நோக்கி வெளிப்புறமாகத் திருப்பினான் இளவர சன். அவனது விழிகள் இரண்டும் அதிர்ச் சியில் விரிந்தன.

அடுத்தகணம் தனக்குள் கூறிக் கொண்டான், “இன்று வீர மரணம் நிச்ச யம் ஏற்பட்டுவிடும்” என்று.

அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. மது மயக்கத்தினாலும், தாக்கு தலினால் சிதறுண்டு புரவிகளை இழந்து கையில் கிடைத்த சிறு சிறு ஆயுதங்க ளைக் கொண்டு போருக்கு அரை நாழி கைப் பொழுதில் தயாராகியிருந்தவர்க ளைக் கிட்டத்தட்ட இருநூற்றுக்கும் மேற்

https://telegram.me/aedahamlibra

பட்ட புரவி வீரர்கள் சூழ்ந்திருந்தார்கள். அனைவரின் கைகளிலுமே நீண்ட ஈட்டி மற்றும் போர் வாட்கள். ஒவ்வொருவ னும் பெருத்த கருத்த ஆசாமிகளாகக் காணப்பட்டனர். அவர்கள் மட்டும் தாக்கி னால் ஒரு நாழிகைப் பொழுதிற்குள் சேர பாசறை துடைக்கப்பட்டு விடும் என்பதை அவர்களைப் பார்த்த அடுத்தக் கணத் திலேயே அனுமானித்துக் கொண்டான். சுற்றிலும் சூழ்ந்திருந்தவர்களைப் பார்த்த படியே சிந்தித்தபடி நின்றான் இளவரசன்.

அவர்கள் சுற்றிலும் அணிவகுத்து நின்ற முறை, அவர்களின் தாக்குதல் யுக்தி, இருளிலும் பகலைப் போன்றே திறமையுடன் செயல்படும் திறமை என அவர்கள் சேர இளவரசனைக் கவர்ந்தி ருந்தாலும் போருக்குத் தயாராக இல்லா தபோது இரவில் தாக்கும் அவர்களின் கோழைத்தனத்தை எண்ணி இகழ்ச்சியே அடைந்தான் அவன். இகழ்ச்சி தோன்றி னாலும் அதனை வெளிக்காட்டிக்கொள் ளாமல், “வீரர்களே, எந்தச் சூழலிலும்

தன்னம்பிக்கையை இழந்துவிட வேண் டாம்!" எனக் கூறிக் கொண்டு கீழே கிடந்த நீண்ட ஈட்டி ஒன்றைக் கையில் ஏந்திக் கொண்டு முன் வரிசை வீரர் களை விளக்கிக் கொண்டு மார்பை நிமிர்த்தியபடி கம்பீரத்தோடு அவர்களை எதிர்கொள்ளத் துணிந்து விட்டிருந்தான்.

வைக்கோல் போர் முற்றிலும் எரிந்து அதன் வெளிச்சமும் திடீரென்று குறைந்து கொண்டே வந்தது. மீண்டும் அவ்விடத்தை இருள் கவ்வத் தொடங்கி யது. சேர வீரர்களின் மனதிலும் இருள் சூழத் தொடங்கியது. மீண்டும் புரவிகளின் குளம்படி சத்தம். வீரர்கள் கலவரமடைந் தாலும் எதிர்த்துத் தாக்கச் சித்தமாக நிற் கலானார்கள். அப்புரவிகள் நெருங்குவ தற்குள் மீண்டும் எரிந்து கொண்டிருந்த தீப்பந்தம் ஒன்றை எடுத்து இரண்டா வது வைக்கோல் போரின்மீது தூக்கி வீசி எறிந்தார் காவல் தலைவர். நெருப்பு விழுந்த அடுத்தக் கணத்தில் வைக்

கோல் போர் சுடர் விட்டு எரியத் தொடங்கியது.

வெளிச்சம் மீண்டும் பரவியது. வீரர்களும் ஆவேசத்துடன் தயாரானார்கள். எறிந்த வைக்கோல் போரின் வெளிச்சம் அவ்விடத்தை மீண்டும் நிரப்பியபோது அங்கு அவர்களைச் சூழ்ந்து நின்ற எந்தப் புரவி வீரர்களையும் காண இயலவில்லை. அனைவரும் அங்கிருந்து மாயமாக மறைந்திருந்தார்கள்.

ஒரேயொருவன் மட்டும் முகத்தைத் துணியினால் மறைத்தபடி கருமை நிறப் புரவி ஒன்றின் மீது கம்பீரமாக அமர்ந்து கொண்டு காணப்பட்டான். அவனைத் தாக்க சில வீரர்கள் முன்னே அடியெடுத்து வைத்தார்கள். ஆனால் அதற்குள், "நில்லுங்கள்!" என எழுந்த இளவரசனின் கட்டளையை அடுத்து வீரர்கள் சிலையென நிற்கலானார்கள்.

தைரியத்துடன் தனியாக நின்ற அவனது துணிவைக் கண்டு வியந்த சேர

https://telegram.me/aedahamlibrary

இளவரசன் அவனை நோக்கிச் சில அடிகள் முன் வைத்து அவனையே ஆச்சர்யத்துடன் பார்த்துக் கொண்டு நின்றான்.

'இவர்கள் யார்? இரவின் முதல் சாமத்தில் உறங்கிக் கொண்டிருந்த பாசறையை எதற்குத் தாக்கினார்கள்? அவர்களின் நோக்கம் என்ன? நினைத்திருந்தால் இந்நேரம் இங்கு நிற்கும் அனைவரையும் கொன்றிருக்க இயலுமே, எதற்காக இவர்கள் தாக்குதலைத் தொடுக்காமல் பின் வாங்கிச் சென்றுவிட்டார்கள்? அனைவரும் சென்றுவிட்ட பிறகும் இவன் ஒருவன் மட்டும் எதற்காகத் துணிந்து நிற்கிறான். ஏதாவது எச்சரிக்கை அல்லது மிரட்டல் தெரிவிக்க நிற்கிறானா? தனது முகத்தை இவன் மறைந்திருக்கக் காரணம் என்ன?' என மனதில் எழுந்த பலவித வினாக்களையும் அடக்கிக் கொண்டு புரவி மீது அமர்ந்திருந்தவனையே பார்த்துக் கொண்டிருந்தான் சேர இளவரசன்.

வைக்கோல் போர் மீண்டும் தனது பிராகாசத்தை இழக்கத் தொடங்கியது. அப்போது இடையிலிருந்த வாளினை உருவி சேர இளவலை நோக்கி உயர்த்திப் பிடிக்கலானான் அவன். சேர இளவரசன் எந்தவித பதில் செய்கையையும் தெரிவிக்காமல் அவனையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தான். திடீரென்று இளவரசன் எதிர்பார்ப்பையும் கடந்து முகத்தை மறைத்திருந்த திரையை அகற்றினான் அவன். ஆனால், இளவலின் துரதிர்ஷ்டம் வைக்கோல் போர் அணையத் தொடங்கி அவன் நின்ற இடத்தை இருள் கவ்வியிருந்தது. அரைகுறை வெளிச்சத்தில் அவனது முகம் மங்கலாக வெளிப்பட்டது. ஆனால் சேர இளவரசனால் அவனை அடையாளம் காண இயலவில்லை. இருள் மெல்ல அவர்களை நெருங்கிக் கொண்டிருந்தது.

முகமூடியை அகற்றியிருந்த சோழ உபபடைத் தலைவன் வில்லவனின்

உருவம் மெல்ல நெருங்கி வந்த இருளில் மறையத் தொடங்கியது.

"இவ்வளவு துணிச்சல் மிகுந்த வீர னான இவன், எவனாக இருப்பான்?" என்ற பெரும் வினாவுடன் சேர இளவ ரசன் மறைந்து கொண்டிருந்த அவனது உருவத்தையே அதிர்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

https://telegram.me/aedahamlibra

# 33. கரிகாலா காப்பாற்று

வேலன் மற்றும் வில் வீரன் இருவருடனும் புறப் பட்ட வேந்தன் எதிர் பார்த்ததைப் போன்றே சில தினங்க ளில் பெருமழை பெய்யத் தொடங்கியி ருந்தது. கார்த்திகை மாத அடை மழை யைப் போன்று அல்லாமல் மாலை நேரத் தில் வானில் திடீரென்று சூழும்கார் முகில் கூட்டத்தினால் விட்டு விட்டுப் பெருமழை கொட்டிக் கொண்டிருந்தது. வான் முகில் களின் போக்கு, மழை என எவற்றையும் கணிக்க முடியாத அளவிற்கு வானிலை முற்றிலும் மாறியிருந்தது. பயணச் சாலை கள் சேரும், சகதியுமாக ஆகியிருந்தன. சக்கரங்கள் சிக்கிக் கொண்டதால் சேற் றினில் செல்ல இயலாத பெரும் இழுப்பு வண்டிகள், புரவி வண்டிகள் வழியி

லேயே ஆங்காங்கு நிறுத்த பட்டிருந் தன. சேற்றிலும், மணலிலும் செல்வதற் காகவே தகவமைக்கப்பட்டிருந்த குளம் புகளால் அடலேறுகள் மட்டும் அந்தச் சேற்றினைப் பொருட்படுத்தாமல் வண் டியை இழுத்துச் சென்று கொண்டிருந் தன. புரவிகளால் சேற்றினில் செல்ல இய லும் என்றாலும் அது இழுக்கும் வண்டி யின் சக்கரங்கள் அகலமானது என்பதால் மழைக் காலங்களில் புரவி வண்டிகள் பெரும்பாலும் பயன்படுவதில்லை.

விட்டு விட்டுப் பெய்த பெரும ழையால் நீரோடை மற்றும் சிற்றாறுக ளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்தது. பெருமழை, பெரும ழையினால் சீர்கெட்டிருந்த வழி ஆகிய வற்றினால் ஆங்காங்கே தென்படும் சத் திரம் மற்றும் கோயில்களில் மழைக்கு ஒதுங்கி வெள்ளம் வடிந்த பிறகுதான் மூவராலும் பயணிக்க முடிந்தது. காலம் கடக்கக் கடக்க வேந்தனுக்கு ஆத்திர மும், ஆற்றாமையும் அதிகமாகிக் கொண் டிருந்தது. அதனைக் கவனிக்கவே செய் தனர் வேலனும், வில் வீரனான கரிகால

னும். ஆனால் அவர்கள் இருவரும் அதனைப் பொருட்படுத்தவேயில்லை.

அமாவாசை நாள் காலைப் பொழுது. இரவு முழுவதும் பெய்த பெருமழைக்குச் சத்திரம் ஒன்றில் பாதுகாப்பாகத் தங்கிக் கொண்ட மூவரும் காலையில் பரிதி எழுந்து சாலை சற்றுக் காய்ந்ததும் மாட்டுவண்டியில் பயணத்தைத் தொடங்கலானார்கள். அடலேறுகளைத் தட்டி விட்டான் வேலன், அவை ஈரமான சாலை, தேங்கியிருந்த சேறு, ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் வண்டியை செவ்வனே இழுத்துக் கொண்டு சென்று கொண்டிருந்தது. அவர்கள் பயணித்தது ராசபாட்டைச் சாலையாக இருந்தால் அந்தப் பெருமழையிலும் பயணிக்கும் அளவிற்குச் சாலை நேர்த்தியாகக் காணப்பட்டிருக்கும். ஆனால் அவர்கள் குறுக்கு வழியில் காட்டில் ஏற்பட்டிருக்கும் வண்டிப் பாதையில் பயணித்ததால் பெரும் சிரமத்தை அனுபவிக்கலானார்கள். அவர்களுக்கும் கூடலை விரை

வாக அடைய அதைவிட்டால் வேறு வழி கிடைத்திருக்கவில்லை.

காலம் விரைவாகக் கடந்து கொண்டிருப்பதைக் கண்ட வேந்தன் பொறுமையை இழந்து வேலனிடம், “அய்யா, கிட்டத்தட்ட அமாவாசைக்கு அடுத்த ஒரு கிழமை காலத்திற்குள் நாம் கூடலை அடைந்துவிடலாம் என்றல்லவா என்னிடம் வாக்கு கொடுத்தீர்கள்? ஆனால், அமாவாசையே வந்துவிட்டது. நாம் இன்னும் பாதித் தொலைவைக் கூடக் கடந்திருக்கவில்லை. என் நிலையைப் புரிந்து கொள்ளுங்கள். பாதை தெரியாத, உதவி கிடைக்காத தேசத்தில் உங்களுடன் இப்படிச் சிக்கிக் கொண்டானே?” என்று வெளிப்படையாகவே கேட்டுவிட்டான்.

“மழையை நீங்களும் எதிர்பார்க்கவில்லை. நாங்களும் எதிர்பார்க்கவில்லை. திடீர் மழைக்கு யாரால் என்ன செய்ய இயலும்? நீங்களும் எங்களு

டன் தானே பயணித்துக் கொண்டிருக் கிறீர்கள். நிலைமையை நேரில் கண்ட பிறகு மா தாங்கள் என்னை இப்ப டிக் கேள்வி கேட்கிறீர்கள்? உங்களது கேள்வி உங்களுக்கே சரியாகப் படுகி றதா?" எனத் திருப்பிப் பதிலுக்கு வினவி னான் வேலன்.

"காலம் எனது பொறுமையைச் சோதித்துக் கொண்டிருக்கிறது. எனக் காக இரண்டு பேரரசர்கள் காத்துக் கொண்டு இருக்கிறார்கள். புரவியில் பயணித்திருந்தால் இந்நேரம் கூடலில் பாண்டிய மன்னரை நான் சந்தித்திருப் பேன். ஆனால், உங்களது குறுக்கீட்டி னால் இன்று நான் மழையில் அகப்பட்டுக் கொண்டேன். இது சரி தானா?"

"நாங்களா குறுக்கிட்டு உங்களது பயணத்தைத் தடுத்தோம்? உங்களது புர வியைக் காப்பாற்ற வேண்டும் என்று தாங்கள்தானே எங்களுடன் பயணிக் கச் சம்மதித்தீர். மழையின் குறுக்கீட்

டிற்கு யாரால்தான் என்ன செய்ய இயலும் வீரரே?

"........"

சாலையில் சக்கரங்கள் பழுதடைந்து குடையடித்துக் கிடந்த புரவி வண்டி ஒன்றை சுட்டிக் காட்டிய வேலன், "மாட்டு வண்டியில் எங்களுடன் வந்திருப்பதால்தான் உங்களால் இந்த மழையிலும் ஒரே இடத்தில் தேங்காமல் நகர்ந்து கொண்டிருக்க முடிகிறது. நோய் வாய்ப்பட்ட புரவியுடன் பயணித்திருந்தால் இந்நேரம் இந்தச் சகதியில் உங்களைச் சுமக்க இயலாமல் அது மரணித்துப் போயிருக்கும். கள்வர்களிடம் பண முடிப்பை இழந்த நீங்கள் நடு வழியில் சிக்கியிருப்பீர்கள். வலிய உதவுகிறோம் என்பதற்காக நன்றியை செலுத்தாவிட்டாலும் எங்களது உதவியை உதாசீனப்படுத்த வேண்டாமே!" எனச் சற்று சினத்துடன் தெரிவித்தான்.

வேலன் கூறியதைக் கேட்ட வேந்தன், "என்னைத் தயவுசெய்து மன்னித்து விடுங்கள். மழை குறுக்கிட்டதற்குத் தாங்கள் என்ன செய்வீர்கள்? எனது ஊழ் என்னைப் படுத்துகிறது. அவசரமான பணியை முன்னிட்டு சென்று கொண்டிருக்கிறேன். உரிய நேரத்திற்கு முன் சென்றுவிட வேண்டும் எனத் துடிக்கிறது மனம்" என வருந்தினான்.

அவனுக்கு வேலன் எந்தப் பதிலையும் கூறாமல் அடலேறுகளைத் தட்டி ஓட்டிக் கொண்டிருந்தான். மேற்கு வானில் காலைப் பொழுதிலேயே கார்முகில்கள் சூழத்தொடங்கியிருந்தன. ஆதலால் அடுத்தப் பாட்டை மழை பெய்வதற்குள் ஒதுங்க இடத்தைக் கண்டறிந்துவிட வேண்டும் எனும் முனைப்பில் அடலேறுகளை விரட்டிக் கொண்டிருந்தான். அடலேறுகளின் மணிச்சத்தம், மண்வாசத்துடன் வீசும் ஈரமான தென்றல், தொலைவில் களைப்புத் தெரியாமல் இருக்க வேண்டியதற்காக வயல்வெளிக

https://telegram.me/aedahamlibra

ளில் பாடும் பாட்டுச் சத்தம் ஆகியவற்றைக் கேட்டபடியே மூவரும் பயணிக்கலானார்கள்.

முகத்தில் வீசிய குளிர்ந்த தென்றலை அனுபவித்தபடியே காலைத் தொங்கபோட்டுக் கொண்டு பயணித்துக் கொண்டிருந்த வில் வீரனிடம், “கரிகாலா, உனது யானைக் காலை எப்போதுமே தொங்க போட்டுக் கொண்டு வருகிறாயே, உனக்கு வலிக்க வில்லையா?” என வினவினான்.

‘யானைக் காலன்’ எனக் கூறிய வேந்தனைப் பார்த்து முறைத்தான் வில் வீரன். அதைக் கண்ட வேந்தன், “தம்பி கரிகாலன் என அழைத்தால் நீ பெருமைப்பட வேண்டும். மாபெரும் வீரர் சென்னியின் புதல்வன் சோழ இளவலே இந்த ‘கரிகாலன்’ எனும் பெயரைத் தாங்கித்தான் பட்டம் ஏற்றுக் கொண்டிருக்கிறான். உன்னை அப்படி அழைத்ததற்கு நீ என்னைப் பாராட்ட வேண்டும். இப்

படி முறைக்கக் கூடாது!" எனத் தெரிவித் தான்.

கரிகாலன் அவனுக்கு எந்தப் பதி லையும் தெரிவிக்கவில்லை. கால்க ளைத் தொங்கப்போட்டபடியே மீண்டும் கண்களை மூடிக் கொண்டான்.

"கரிகாலா...." மீண்டும் அழைத் தான் வேந்தன்.

கரிகாலன் கண்களைத் திறந்துகூட அவனைப் பார்க்கவில்லை.

"காலைத் தொங்க போட்டுக் கொண்டே வராதே! கால் ஈரம்பட்டால் யானைக் கால் சீழ்பிடிக்கத் தொடங்கிவி டும். கவனமாக இருக்க வேண்டாமா?" என அவனிடம் கூறியவன் வேலனைப் பார்த்து, "வேலா... உன் மைத்துனனிடம் நீ இதையெல்லாம் தெரிவிக்கக்கூடாதா? அவனைக் காப்பது உனது பொறுப்பு தானே!" என்றான்.

https://telegram.me/aedahamlibra

"எனது சொல்லை அவன் மதிப்பவ னாக இருந்தால் உடனே இதைச் செய், இதைச் செய்ய வேண்டாம் எனக் கூறு வேன். நான் கூறுவதைத் தவிர மற்ற அனைத்தையும் செய்வேன் என்று கங்க ணம் கட்டிக் கொண்டு சுற்றுபவனை என் னால் என்ன செய்ய இயலும்? அவனது விருப்பம், விட்டுவிடுங்கள்!" என வேலன் கூறி முடித்த உடனேயே, "வீரரே வாயை மூடிக் கொண்டு வருகிறீர்களா அல்லது இந்தச் சேற்றில் நடந்து வருகிறீர்களா? இன்னொரு முறை என்னை யானைக் காலன் என்று அழைத்தால் நடப்பதே வேறு!" எனக் கடுமையாக எச்சரிக்கை செய்யலானான்.

"தம்பி, அது சோழ...." என வேந் தன் கூறிக் கொண்டிருந்த போதே அவனது பேச்சை இடைமறித்த கரிகா லன், "சோழ இளவலது பெயர் கரிகால னாகவே இருக்கட்டும். அதனால் எனக்கு ஏதாவது வரப்போகிறதா? ஒன்றும் இல் லையே! கூடலை அடையும் வரை நீங்கள்

வாயைத் திறக்கவே கூடாது. அமைதி யாக வாருங்கள் அதுவே போதும்” எனக் கடுமையாகத் தெரிவித்தான்.

வேந்தன் அதன் பிறகு வெகுநே ரம் வாயையே திறக்கவில்லை. அமை தியாகவே கட்டை வண்டியில் அமர்ந் திருந்தான். வாயை மூடிக் கொண்டு வருவது அவனுக்குப் பெரும் சிரமமாக இருந்தது. பிறகு வில் வீரனிடம், “தம்பி, இனி உன்னை நான் யானைக் காலன் என அழைக்க மாட்டேன். நான் பேசிக் கொள்ளலாமா? பேசாமல் என்னால் பய ணிக்கவே இயலாது!” எனப் பணிந்தான்.

அவன் கூறியதைக் கேட்டு சிரித்த படியே, “ம்ம்ம்...” என மட்டும் செவி சாய்த் தான்.

உடனே வேந்தன், “கூத்தரே...” என அழைத்தான்.

“என்ன வேந்தா...” என வினவி னான் வேலன்.

"உனக்குத்தான் பாட்டு நன்கு வரும்தானே. பயணக் களைப்பு இல்லா மல் இருக்க ஒரு பாட்டுப் பாடேன்!"

"சேற்றில் சிக்காமல் இருக்க வண் டியைப் பெரும் சிரமப்பட்டு ஓட் டிக் கொண்டு வருவது நான். வண்டி யில் அமர்ந்து வருவதற்கே உங்களுக்குக் களைப்பாக இருக்கிறதா?" என வினவி னான்.

"எந்தப் பணியும் செய்யாமல் அமைதியாக இருப்பதும் ஒருவித சோம் பல் தானே வேலா? இது உனக்குத் தெரி யாதா?"

வேலன் எந்தப் பதிலையும் கூறா மல் அடலேறுகளை விரட்டுவதிலேயே கவனத்தைச் செலுத்தலானான். அப் போது வில் வீரனும், "மாமா... உங்களது பாடலைக் கேட்டு நீண்ட நாட்களாகி விட்டன. எவ்வளவு நேரம் தான் தொலை விலிருந்து வரும் எசப் பாடலைக் கேட் டபடியே பயணிப்பது. அடலேறுகளை

விரட்டிவிட்டு ஒரு பாட்டை எடுத்து வீசுங் கள் மாமா!" எனக் கூறலானான.

"உமது ஆசை மனைவியின் தம் பியே பாடுங்கள் எனக் கூறிவிட்டார். ஒரு பாடலைப் பாடுங்கள்" என உற்சாக மூட் டினான் வேந்தன். அத்தோடு நில்லா மல் அருகில் கிடந்த செம்புப் பாத்திரம் ஒன்றை எடுத்து அதில் தட்டி வாசிக்கவும் செய்தான். கரிகாலனும் கையில் வைத் திருந்த சாட்டையால் மாட்டு வண்டியின் தட்டியில் தட்டு வாசிக்கத் தொடங்கி னான்.

"என்ன பாடலைப் பாடுவது?"

"வண்டி ஓட்டிக் கொண்டு இருக் கிறீர்கள்? வண்டிக்காரன் பாடலையே பாடுங்களேன்!"

வேலன் பாடலைப் பாடலானான்.

ஆலோலம் பாட்டைக் கேட்டு

https://telegram.me/aedahamlibra

அழகாகத் தலைய ஆட்டி

ஆவூரு சாலைவழியே - என்னை

அசங்கமா கூட்டிபோகும்

அடங்காத மச்சக்காளை!!

பொன்காலைப் பொழுதிலே

பூந்தோட்டம் போயிருந்தேன்!

பூங்குயில்கள் கூவல்கள் போல் - காதில்

தேனாறு பாயக் கேட்டேன்!

எங்கிருந்து வருகுதுன்னு

சொக்கிப்போயி நானும் நின்னேன்!! ...... . (ஆலோலம் ........ )

மல்லுவேட்டி வரிஞ்சிகட்டி

தோப்புக்குள்ளே போயிப் பாத்தேன்!

https://telegram.me/aedahamlibra

சிலுசிலுன்னு சிக்கனமா - காத்துல

சிரிப்பை விதைச்சிகிட்டு

சித்தாடை குமரிகள் - மனச

சிதைச்சிபுட்டுப் போனா களே!! ..................... (ஆலோலம்...... )

நாணிக்கோணி நடைபோட்ட

நாலுபேரு பின்னாலே

காதல் பிச்சைகேட்டு - கையேந்தி

போக்கத்து போன மனசை

பிடரியிலே தட்டி - இழுத்து வருகை யிலே

மத்தியானம் ஆகிப் போச்சே!! ...................... (ஆலோலம்..... )

போனதெல்லாம் போகட்டும்

பொழுதும் ஆகுதப்பா!

இருள்சூழும் பொழுது முன்னே - நாம

கூடல் நகரு போகவேணும்!

கொம்பை மட்டும் ஆட்டாம - கொஞ்சம்

நடைய பெரிசா வைய்யப்பா!! ........................... (ஆலோலம்...... )

வேலனின் உற்சாகமான பாட்டுச் சத்தத்தைக் கேட்ட அடலேறுகளும் விரைந்து செல்லலாயின. வண்டிப் பாதையில் குறுக்காக ஓடிய சிற்றோடையைக் கண்டு அடலேறுகளின் தும்புக் கயிறை இழுத்து நிறுத்தினான் வேலன். ஓடையில் வெள்ளம் சீராகப் பாய்ந்து கொண்டிருந்தது.

உச்சி வானத்தைப் பார்த்தான் வேந்தன். உச்சி வெயில் சூடாக வீசிக் கொண்டிருந்தது. பொழுதும் உச்சிக்கு வந்திருந்தது."வேலா... வண்டியை

https://telegram.me/aedahamlibra

விரட்டி விடு. எளிதில் கடந்துவிடலாம்! இதைக் கண்டு அச்சப்பட வேண்டியதில்லை” எனத் தெரிவித்தான் வேந்தன்.

“மேற்கு வானைப் பாருங்கள் தொலைவில் எங்கோ மழை பெய்து கொண்டு இருக்கிறது. எப்போது வேண்டுமானாலும் இந்தச் சிற்றோடை காட்டாறாய் மாறிவிடும். விபரீதம் வேண்டாம். அது மட்டுமல்லாமல் இந்த ஓடையின் ஆழத்தையும் நாம் அறியோம். ஆழம் தெரியாமல் காலை விடுவது நல்லது அல்ல வீரரே!” என எச்சரித்தான் வேலன்.

“பொழுது உச்சியையும் கடக்கப் போகிறது. மாலை நெருங்க நெருங்க மழையின் அளவு கூடிவிடும். அதற்குள் இதனைக் கடந்துவிடுவோம் நாம்!”

“சில நாழிகைப் பொழுது நாம் காத்திருந்து பார்ப்பதில் உங்களுக்கு என்ன வீரரே பிரச்சனை? பதறாமல் சற்று நேரம்

அமர்ந்திருங்களேன்!" என எரிச்சலுடன் தெரிவித்தான் வேலன்.

வேந்தன் மீண்டும் வாயை மூடிக் கொண்டான். எதுவும் கூறவில்லை. மூவரும் வண்டியிலேயே வெள்ளம் வடியுமா என்று பார்த்தபடியே அமர்ந்திருந்தார்கள். வெள்ளம் வடியவும் இல்லை, பெருக்கெடுக்கவும் இல்லை. ஒரே சீராய் ஓடிக் கொண்டிருந்தது. வண்டியிலிருந்து கீழே குதித்தான் வேந்தன். அவனது வாளுறையை இடையில் கட்டிக் கொண்டான். மெல்ல நீரில் இறங்கினான். சில அடிகளிலேயே நீரின் ஆழம் முழங்காலைத் தொட்டிருந்தது.

அவனது செயலைக் கண்ட வேலனும், கரிகாலனும் பதறினார்கள்."வேண்டாம்... வந்துவிடுங்கள்.." எனக் குரல் எழுப்பினார்கள். வேந்தன் கேட்பதாயில்லை.

“ஆழம் பார்த்துதான் காலை விட வேண்டும் என்றீர்களே, நான் கடந்து

செல்கிறேன். பிறகு நீங்கள் இருவரும் வண்டியில் அக்கறைக்கு வந்து சேருங்கள்!” எனக் கூறியபடியே தைரியமாக முன்னேறினான். சில பாவங்கள் கடந்தும் நீரின் ஆழம் முழங்காலைத் தாண்டவில்லை. ”பார்த்தீர்களா, இந்த ஓடையின் ஆழமே முழங்கால் அளவுதான்!” எனக் கூறி வாயை மூடவில்லை. அதற்குள் வெள்ளம் அவனது கால்களை வேகமாக இழுக்கத் தொடங்கியது. நிற்கவே பெரும் சிரமப்பட்டான். மீண்டும் கரையேறிவிடலாம் என எண்ணி கரையை நோக்கி நடக்கலாம் என இடது காலைத் தூக்கினான். வலது கால் பிடியை இழக்க, தடுமாறியபடி மீண்டும் இடது காலை ஊன்றிக் கொண்டான். நீரில் நிற்பதற்கே தடுமாறிக் கொண்டிருந்தான்.

மாட்டு வண்டியில் அமர்ந்திருந்தபடியே வேலன், “அவனால் நிற்க இயலவில்லை. தடுமாறுகிறான். நீரோடு அடித்துச் செல்லப் போகிறான். நீரோட்டம் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. சொல்

https://telegram.me/aedahamlibra

வதை எங்கே கேட்டான். சாகட்டும் இள
வரசே, நம் படைத் தலைவரை நீரில் மூழ்
கடித்தவனுக்கு நீரிலேயே மரணம் நிக
ழப்போகிறது” எனத் தெரிவித்துச் சிரிக்க
லானான்.

இருவரும் வண்டியில் அமர்ந்து
பேசுவதையோ அல்லது வேலன் சிரிப்
பதையோ கவனிக்க வேந்தனால் இய
லவில்லை. அவர்களிடமிருந்து நெடுந்
தொலைவு நீருக்குள் இறங்கியிருந்தான்.
நிற்பதற்கே போராடிக் கொண்டிருந்தான்.
நீரின் வேகமும், அளவும் கணத்திற்குக்
கணம் அதிகமாகிக் கொண்டிருந்தது.

அவன் தடுமாறுவதைக் கண்ட கரி
காலன், “அவனை நாம் காப்பாற்றியே
ஆக வேண்டும். மாட்டுக் கயிற்றை
உடனே அவிழ்த்துக் கொடுங்கள்!” எனக்
கட்டளையிட்டவன் வேந்தனைக் காப்
பாற்ற நீருக்குள் இறங்க வண்டியிலிருந்து
கீழே குதித்தான்.

https://telegram.me/aedahamlibra

“அரசே, நம் படைத் தலைவர் செங் குவீரரைக் கொன்றவன் இவன். நம் மீது படையெடுக்கப் பாண்டியனை அழைக் கச் சென்று கொண்டிருக்கிறான். இந்தக் கயவனைக் காக்க நீரில் குதித்து உங் களது உயிரைப் பணயம் வைப்பதை நான் அனுமதிக்கவே மாட்டேன். உங் களது உயிரைக் காட்டாறில் விடவா படைத் தலைவர் அவரது உயிரைக் கொடுத்து உங்களைக் காப்பாற்றினார். அவன் சாகட்டும். நீங்கள் செல்லக் கூடாது” என உறுதியுடன் வேலன் கூறிக் கொண்டிருந்த போதே, “கரிகாலா... காப் பாற்று... கரிகாலா... நிற்க இயலவில்லை” என அபயக்குரல் எழுப்பினான் வேந்தன்.

வேலனின் எச்சரிக்கையை நிராக ரித்த கரிகாலன், “என் பெயரைக் கூறி உதவி கேட்கிறான். நட்டாற்றில் இவனை இப்படி என்னால் தவிக்க விட முடியாது. எதிரிகளைப் போர்க்களத்தில் மட்டுமே நேருக்கு நேர் எதிர்கொள்ள வேண் டும். இப்படி அல்ல!” என அவர் கூறிக்

கொண்டு மாட்டுக் கயிற்றை அறுப்பதற்குள் வேந்தன் நீரில் விழுந்திருந்தான். அவனை நீர் அடித்துக் கொண்டு சென்று கொண்டிருந்தது. கரிகாலன் எதைப் பற்றியும் சிந்திக்கவில்லை. உடனே அந்தக் காட்டாற்றில் வேந்தனைக் காக்க குதித்துவிட்டிருந்தான். வேந்தனைப் போலவே கரிகாலனும் நீரோடு அடித்துச் செல்லப்பட்டான். வேந்தன் விரைவாக அடித்துச் செல்லப்பட்டுக் கொண்டிருந்தான். ஒரு நாழிகை நேரப் பெரும் போராட்டத்திற்குப் பிறகு கரிகாலர் வேந்தனை அக்கரையில் தூக்கிக் கொண்டு வந்து கீழே போட்டார். காட்டாறில் புரண்டதால் கரிகாலரின் உடலெங்கும் கல் கிழித்துக் காயங்களை உருவாக்கியிருந்தது. கல் தாக்கியதில் மண்டையிலிருந்து குருதியும் வழிந்து கொண்டிருந்தது. நீந்திய களைப்பில் வேந்தனுக்கு அருகிலேயே தொப்பென்று அமர்ந்தார் கரிகாலர். பேச்சு மூச்சு இல்லாமல் கிடந்த வேந்தனின் இடது கையை மடக்கி காதோடு

https://telegram.me/aedahamlibra

வைத்து அவனைக் குப்புற ஒருபுறமாகச் சாய்த்துப் போட்டான். இடுப்பிற்கே மேலே முதுகில் அழுத்தி நீரினை வெளியேற்றினான். மயக்கம் தெளிந்து அவனே கண் விழிக்கட்டும் என எண்ணிய கரிகாலர் மறு கரையில் நின்ற வேலனிடம் நீர் அகல பாயும் ஆழம் குறைவான பகுதியைச் சுட்டிக் காட்டினான். வேலனும் வண்டியிலிருந்து இறங்கி நடந்தே மாட்டுத் தும்புக் கயிற்றைப் பிடித்துக் கொண்டு ஒரு நாழிகை நேரப் போராட்டத்திற்குக் கரிகாலர் மற்றும் வேந்தன் அமர்ந்திருந்த கரைக்கு வந்து சேர்ந்தான்.

அவர் வருவதற்கும், மயங்கிய வேந்தன் கண் விழிப்பதற்கும் நேரம் கச்சிதமாகப் பொருந்தியது. அவருக்கு முன் காட்டாற்றின் நீர்ப் பெருக்கில் அகப்பட்டுக் காயங்களுடன் அமர்ந்திருந்த கரிகாலரை நன்றியுடன் பார்த்த வேந்தன், "இரண்டாவது முறையாக எனது உயிரை நீ காப்பாற்றியிருக்கிறாய். நன்றிக்கடனாக

என்ன செய்யப் போகிறேன் எனத் தெரியவில்லை தம்பி" எனக் கைகூப்பித் தனது நன்றியைத் தெரிவித்தான்.

கூப்பிய அவனது கரத்தைப் பிடித்துத் தடுத்த கரிகாலர், "நீங்கள் பெரும் வீரர். உங்களது உயிர் போர்க்களத்தில் தான் மடிய வேண்டுமே தவிரக் காட்டாற்றில் அல்ல" எனத் தெரிவித்தபோதே வேலன், உச்சியில் இருந்த பரிதியைச் சுட்டிக்காட்டி எதையோ தெரிவித்தான். இருவரும் மேலே அண்ணாந்து பார்த்தார்கள். பரிதியை கருமையான அமாவாசை நிலவு விழுங்கத் தொடங்கியிருந்தது.

"கிரகணம்" எனத் தெரிவித்தான் கரிகாலன்.

"ஆமாம்... பரிதியை நிலவு விழுங்கப் போகிறது. பரிதி மறையப் போகிறது" எனத் தெரிவித்தான் வேலன்.

இருவரும் மேலே பரிதியையே வியப்புடன் பார்த்துக் கொண்டிருக்க வேந்தன், “தன்னைக் காப்பாற்ற இவனது யானைக் காலை நீரில் நனைத்து விட்டானே, இனி அதன் வலியை இவனால் எப்படித் தாங்கிக்கொள்ள இயலும்?” என எண்ணி வருத்தத்துடன் கரிகாலனின் யானைக் காலை நோக்கினான்.

பார்த்தவன் மிரண்டு போய்விட்டான். நீரில் கடுமையாக நீந்தியதால் காலில் கட்டியிருந்த துணி அவிழ்ந்து தொங்கிக் கொண்டிருந்தது. ‘இவனுக்கு யானைக் கால் எதுவும் இல்லை. துணியை மட்டுமே கால் வீங்கியிருப்பதைப் போன்று சுற்றி வைத்திருக்கிறான்’ என்பதைக் கண நேரப்பொழுதில் அவன் கண்டறிந்துவிட்டான். அவனது மிரட்சிக்குக் காரணம் அது இல்லை. தீயில் வெந்திருந்த கரிகாற் வளவனின் தழும்பையும் அவன் பார்த்துவிட்டிருந்ததுதான் அவனது மிரட்சிக்கும் அதிர்ச்சிக்கும் காரணமாக இருந்தது.

வானத்தையே வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்த யானைக் காலனின் முகத்தை நன்றாக உற்றுப் பார்த்தான் வேந்தன். அவனுக்குள் இருந்த சிறு சந்தேகமும் முற்றிலும் விலகியிருந்தது. கரிகாலையும், கரிகாலனது முகத்தையும் மாறி மாறி பார்த்துக் கொண்டு தனது விழிகளை நம்பலாமா? அல்லது வேண்டாமா? என வியந்தபடியே பார்த்துக் கொண்டிருந்தான்.

ஆனால், வேந்தன் தன்னை அடையாமல் கண்டறிந்துவிட்டான் என்பதைக் கூட அறியாத சோழ இளவல் கரிகாலரும், அவருக்குத் துணையாக வந்த வேலனும் வானையே அதிசயமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

https://telegram.me/aedahamlibra

# 34.

# அகப்பட்ட கள்வர்கள்

இருங்கோவின் ஒற்றர் தலைவன் வேந்தன் சோழ இளவல் கரிகாலனை அடையாளம் கண்டிருந்த அதே வேளையில் தமிழகத்தின் வட எல்லையான துளுவ நாட்டின் எல்லையின் நிலை கடுமையாகிக் கொண்டிருந்தது. சேர இளவல் வருகை தந்து விட்டுச் சென்ற பிறகு அகப்பா கோட்டை முற்றிலும் உருமாறியிருந்தது. சேர இளவலின் எச்சரிக்கையை அடுத்து அக் கோட்டையை வலிமை படுத்தியிருந்தார்கள் துளுவர்கள். கோட்டையைச் சுற்றி வளர்ந்திருந்த அடர்ந்த மரங்களை முற்றிலும் வெட்டி எதிரிகள் கோட்டையை

நெருங்கும் வாய்ப்பினைத் தடுத்திருந் தார்கள். அகழிகளும் ஆழமாக்கப்பட்டு நீர் பாய்ச்சப்பட்டு முதலைகள் விடப் பட்டிருந்தன. கோட்டை மதில்களில் காணப்பட்ட குறைகள் அனைத்தையும் இரண்டே கிழமைகளில் அகற்றிவிட்டி ருந்தனர்.

சேர - துளுவ நாட்டு எல்லையை வில்லவன் அல்லோலகல்லோலப் படுத் திக் கொண்டிருந்தான். கண்ணில் பட்ட காடுகளையும், அறுவடை முடிந்து விட் டிருந்த வயல்களையும் கொளுத்தி எரிப ரந்தெடுத்தலை தீவிரப்படுத்திக் கொண் டிருந்தான். சேர இளவரசன் ஆயிரம் புரவி வீரர்களுடன் தேடுதல் வேட்டையைத் தீவிரப்படுத்திய பிறகு பகல் பொழுதைக் கைவிட்டுவிட்டு இரவு பொழுதிலேயே தாக்குதலைத் தொடுத்துக் கொண்டிருந் தான். அவனை ஒடுக்க வந்த சேர இள வரசனையும் அவன் விட்டு வைத்திருக் கவில்லை. சேர வீரர்களைக் கொல் லாவிட்டாலும் அவ்வப்போது இரவில் தாக்கி அவர்களுக்கு மரணப் பயத்தை அளித்து மறைந்து கொண்டிருந்தான்.

சேர இளவரசன் மட்டுமல்லாமல் அகப்பா கோட்டையில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த நூற்றுக் கணக்கான வீரர்களும் மறைந்திருந்துத் தாக்கும் கள்வர்களைத் தேடிக் கொண்டிருந்தனர். ஒரே நேரத்தில் இரண்டு பக்கத் தேடுதல்களையும் திறம்படச் சமாளித்துக் கொண்டிருந்தான் வில்லவன். வில்லவனின் தாக்குதல் முறை, அவன் தப்பிக்கும் நேர்த்தி, அவனது துணிச்சல் ஆகியவற்றைக் கண்ட இளவலுக்கும் அவன் மீது மதிப்புக் காலத்திற்குக் காலம் அதிகமாகிக் கொண்டிருந்தது.

'ஒருமுறையாவது அந்த நேர்மையான துணிச்சல் மிக்கக் கள்வனை நேருக்கு நேர் எதிர்கொள்ள வேண்டும்' எனும் முனைப்பில் சல்லடை போட்டுத் தேடிக் கொண்டிருந்தான் சேர இளவரசன். ஒவ்வொரு முறையும் கள்வர்களே இவர்களைக் கண்டறிந்து தாக்கிக் கொண்டிருந்தார்களே தவிர இவர்க

ளால் ஒருமுறை கூட அவர்களைக் கண் டறிய இயலவில்லை.

சூரிய கிரகணம் தொடங்கிய ஆரம் பப் பகுதி அகப்பா கோட்டை அமைந் திருந்த பகுதிக்கு வெகு சமீபத்தில் கரும்புகை எழுந்து கொண்டிருந்தது. அகப்பா கோட்டைக் காவல் வீரர்களுக் கும், தொலைவில் கள்வர்களைத் தேடிக் கொண்டிருந்த சேர இளவரசனுக்கும் அந்தக் கரும்புகை நன்கு புலப்பட்டது. ‘பகல் பொழுதில் இத்தனை காலமா கத் தாக்குதல் நடத்தாத கள்வர்களுக்கு இன்று மட்டும் துணிச்சல் எங்கிருந்து வந் தது?’ என எண்ணிய சேர இளவரன், “வீரர்களே... இனியும் பொறுக்க வேண் டாம். உடனே புறப்படுங்கள்” எனக் கூறி யவன் முதல் ஆளாக அவர்களை நோக் கிப் புரவியில் முன்னேறினான்.

சேர இளவரசனின் எதிர்பார்ப்பு பொய்க்கவில்லை. அவனது எதிர்பார்ப் பைப் போன்றே கள்வர்கள் ஒரு கிரா

https://telegram.me/aedahamlibra

மத்தை எரித்துக் கொண்டிருந்தார்கள். அக்கிராம மக்கள் உடைமையை இழந்து ஆதரவற்று நிற்க அருகில் இருந்த கழனிகளையும், வைக்கோல் போர்களையும் எரித்துக் கொண்டிருந்தார்கள் கள்வர்கள். இரவினில் தாக்கிய கள்வர்களை விட இப்போது அவர்களின் எண்ணிக்கை சற்று அதிகமாகவே இருந்தது.

முன்னூறுக்கும் மேற்பட்ட கள்வர்கள் அக்கிராம மக்களைச் சிறை பிடித்து வைத்திருந்தார்கள். ஆயிரம் புரவி வீரர்களுடன் சேர இளவரசன் அவர்களை அழிக்க முன்னேறியவன் கைதிகளாக இருக்கும் சேர நாட்டுக் குடி மக்களைக் கண்டு தாக்குதல் தொடுக்கத் தயங்கினான். கள்வர்களை முன்புறமாகச் சேர வீரர்கள் சூழ்ந்திருக்கப் பின்புறமாக அகப்பா கோட்டை வீரர்கள் பின்புறமாகச் சூழ்ந்து கொண்டார்கள். இருபுறமும் வீரர்களால் சூழப்பட்ட நிலையிலும் வில்லவன் கலங்காமல் எந்த உத்தரவையும் பிறப்பிக்காமல் அமைதி காத்தான்.

கள்வர்களின் செயல் சேர மற்றும் துளுவர்களுக்குப் பெரும் விசித்திரமாக இருந்தது. 'இத்தனை காலமாகப் பார்வையில் மறைந்திருந்தே தாக்குதல் தொடுத்துக் கொண்டிருந்த கள்வர்கள் இன்று பகல் பொழுதில் தாக்குகிறார்கள் என்றால் அவர்களிடம் பெரும் திட்டம் எதாவது எஞ்சியிருக்குமா? அவர்களின் திட்டம் என்னவாக இருக்கும்? அவர்கள் எதற்காகக் குடிமக்களைச் சிறைபிடித்து வைத்திருக்கிறார்கள்? அவ்வளவு இழிந்த கோழைகளா இவர்கள்?' எனப் பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டாலும், "இன்று ஒரு கள்வன் கூட இங்கிருந்து உயிருடன் தப்பிக்கக் கூடாது? அனைவரையும் கொன்று போடுங்கள்! சேர நாட்டில் கைவைத்தால் அவர்களின் கதி இது தான் என்று நம் எதிரிகள் உணரட்டும்!" என ஆவேசத்துடன் தெரிவித்தான் இளவரசன்.

இத்தனை கால வீண் அலைச்சல், இளவரசனின் வெறி மிகுந்த கட்டளை

ஆகியவை வீரர்களை வெறிபிடிக்க வைத்திருந்தது. இளவரசனின் கட்டளை எப்போது எழும், அவர்கள் மீது எப்போது பாயலாம் எனும் நினைப்பில் புரவியின் மீது தயாராக நின்று கொண்டிருந்தார்கள்.

இரண்டு புறமும் சூழ்ந்திருந்த சேர மற்றும் துளுவ வீரர்களைப் புரவியின் மீது அமர்ந்திருந்த படியே பார்வையிட் டான் வில்லவன். அப்போதும் அவனது முகத்தைத் திரையிட்டு மறைத்தபடியே காணப்பட்டான். கருநிலவு விழுங்கிக் கொண்டிருந்த கதிரவனை அண்ணாந்து பார்த்தான். பாதிக் கதிரவன் விழுங்கப்பட் டிருந்தான். புரவியில் தனது கள்வர்கள் கூட்டத்தைச் சுற்றிக் கட்டளைகளைப் பிறப்பித்தபடி ஒருமுறை வளம் வந்தான்.

பிறகு, "கிராம மக்களை விடுவியுங் கள்" என உரக்கக் கட்டளையிட்டான். உயிர் பிழைத்த மகிழ்ச்சியில் மக்கள் அங்கிருந்து ஓடலானார்கள்.

"வீரர்களே, நம் கிராம மக்கள் ஆபத்திலிருந்து முழுவதுமாக விலகும் வரை பொறுமையாக இருப்போம்" கட்டளையிட்டான் சேர இளவரசன். சேர இளவரசனின் பார்வை முகத்தைத் திரையிட்டு மறைத்திருந்த கள்வர்களின் தலைவனை நோக்கியே இருந்தது. நேருக்கு நேர் எதிர் கொண்டு அவனை உயிரோடு பிடித்துவிட வேண்டும் அல்லது தனது வாளினாலேயே அவனைக் கொள்ள வேண்டும் எனும் முனைப்பிலேயே களத்தில் புரவி மீது அமர்ந்திருந்தான்.

எதிர்புறமாக நின்ற சேர இளவரசனின் செயலைக் கவனித்தபடியே அகப்பா தலைவனும் அமைதி காத்துக் கொண்டிருந்தான்.

கிராம மக்கள் முற்றிலும் ஆபத்திலிருந்து வெகுதொலைவு சென்றிருந்தார்கள். . 'காலம் வந்துவிட்டது' எனத் தனக்குத்தானே கூறிக் கொண்ட இள

வரசன் இடையுறையிலிருந்த வாளினை உருவி மேலே உயர்த்திக் கொண்டு கள்வர்களை நோக்கிப் புரவியில் முன்னேறினான். அடுத்தக் கணம் அவனைப் பின் தொடர்ந்து சேர வீரர்களும் புரவியில் விரையலானார்கள்.

சேரப் படைகள் புறப்பட்டுவிட்டதைக் கண்ட துளுவப் படைகளும் கள்வர்களைத் தாக்க விரைந்து வரலானார்கள்.

இருவரது படைகளும் ஒரே நேரத்தில் நெருங்குவதைக் கண்ட வில்லவன் வானை நோக்கினான். கருநிலவு கதிரவனைப் பாதிக்கு மேல் விழுங்கியிருந்தது. வெளிச்சமும் குறைந்து கொண்டிருந்தது. கிரகணக் கதிரவன், தன்னைத் தாக்க வந்து கொண்டிருக்கும் இரண்டு நாட்டுப் புரவிப் படைகள் ஆகியவற்றைக் கண்ட வில்லவன் சிரித்தபடி தனது வாளினை உயர்த்தினான். அடுத்தக் கணம் கள்வர்களைச் சுற்றி காய்ந்து போயிருந்த

காட்டில் தீ வைக்கப்பட்டது. எரியம்புகள் நாலாபுறமும் சரமாரியாகச் செலுத்தப்பட்டன. எரியம்புகள் எதுவும் புரவி வீரர்களின் மீது படும் தொலைவிற்குச் செலுத்தப்படவில்லை. அது தாக்க விரைந்து வந்த வீரர்களுக்கு முன்பாகவே விழுந்து இடையிலிருந்த வயற்காட்டைத் தீப்பிடிக்க வைத்தது. கள்வர்களைச் சுற்றி இருந்த பகுதி முழுவதும் தீப்பிடித்து எரிந்தது. சேர, மற்றும் துளுவ வீரர்களால் மேற் கொண்டு முன்னேற இயலவில்லை. தீ அடங்கும் வரை தீக்குள் பாதுகாப்பாக நின்ற கள்வர்களையே வெறியுடன் பார்த்துக் கொண்டு நின்றனர்.

வானில் கதிரவன் மெல்ல மெல்ல அமாவாசை கருத்த நிலவினால் விழுங்கப்பட்டுக் கொண்டிருந்தான். முற்றிலும் கதிரவன் நிலவினால் விழுங்கப்பட இன்னும் சில கண நேரக் காலம் மட்டுமே என எண்ணிய வில்லவன் மட்டும் 'தனக்குரிய காலம் வரை அமைதி காக்க வேண்டும்' எனும் செங்குவீரனின் உரையை

நினைத்துக் கொண்டு தயாராக நின்று கொண்டிருந்தான்.

எரிந்து கொண்டிருந்த காடு சிறிது சிறிதாக அடங்கிக் கொண்டு இருந்தது. வானில் கதிரவனும் கருமையான நில வினால் விழுங்கப்பட்டுக் கொண்டிருந் தான். எரிந்த காடு முற்றிலும் அணை வதற்குள் சேர இளவரசன் கள்வர்களை நோக்கிப் படர்ந்த புகை வழியே விரைந் தான். வீரர்களும் அவனைப் பின்தொ டர்ந்து பாய்ந்தார்கள்.

இரண்டு புறமும் சேர மற்றும் துளுவ நாட்டுப் படை கள்வர்களை ஒரே வீச் சில் சாய்த்துவிடப் பெரும் வெறியோடு புரவிகளில் நெருங்கிக் கொண்டிருந்தார் கள். மீண்டும் இருநாட்டுப் படைகளை யும் கண்ட வில்லவன் வானை அண் ணாந்து பார்த்தான்.

“எதிர்பார்த்தபடியே அனைத்தும் நடக்கிறது” எனத் தனக்குத்தானே கூறிக் கொண்டான்.

இன்னும் சில கண நேரப் பொழுதுகள் தான் சேர மற்றும் துளுவ நாட்டுப் படை இவர்களை நெருங்கிவிடும். ஆயிரக்கணக்கான புரவி வீரர்கள். கள்வர்கள் வெறும் கிட்டத்தட்ட முன்னூறு பேர் தான்.

பொறுத்துக் கொண்டிருந்தான் வில்லவன். வில்லவனின் திட்டம் அங்கு நின்ற கள்வர்கள் யாருக்கும் புரியவில்லை. அவர்களின் மனதிலும் குழப்பம் இருந்தாலும் அவர்கள் வில்லவனின் கட்டளையை எதிர்பார்த்து அனைத்திற்கும் தயாராக நின்றார்கள்.

இடையிலிருந்த கொம்பினை எடுத்து வேகமாக ஊதினான் வில்லவன். அந்தக் கொம்போசையின் கட்டளையைக் கள்வர்கள் அனைவரும் புரிந்து கொண்டார்கள். சேர மற்றும் துளுவர் படை இரண்டு புறத்திலிருந்தும் கள்வர்களை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். இன்னும் கண நேரம் தான், இருபது பாவம் தொலைவுதான் என்ற நிலை. அப்

https://telegram.me/aedahamlibra

போது கதிரவன் முற்றிலும் கருத்த அமா வாசை நிலவிற்குப் பின்னால் மறைந்தி ருந்தான். புவி முழுவதும் அடர்ந்த இரவு திடீரென்று கவ்வியது. வானில் விண்மீன் கள் மின்னியது.

கதிரவனின் வெளிச்சத்திற்குப் பழக்கப்பட்ட வீரர்களின் கண்கள் திடீர் இருளினால் அவர்கள் கண்கள் பார்க் கும் திறனை இழந்தன. இருளுக்கு விழிகள் பழக்கப்படும் வரை சமர் களத் தில் பொறுமை காக்க இயலாது என் பதை உணர்ந்த வீரர்கள் யாரும் நிற்க வில்லை. புரவிகளின் போக்கில் பயணித் துக் கையிலிருந்த ஆயுதத்தைச் சரமாரி யாக வீசலானார்கள். புரவிகள் ஒன்றோ டொன்று மோதி கீழே விழுந்தன. வீரர்கள் தலையை இழந்து முண்டமாகச் சரிந் தார்கள். ஒரே இருள். பார்வையும் பழக் கப்பட்டிருக்கவில்லை. எதிரில் நிற்பவர் களை நோக்கி ஆயுதத்தைச் சரமாரியாக வீரர்கள் சுழற்றிக் கொண்டிருந்தார்கள். எங்கும் வீரர்களின் மரண ஓலம். புரவி

https://telegram.me/aedahamlibra

வீரர்களின் கண்கள் இருளுக்கு மெல்ல மெல்ல பழகியது. ஆனால், அதற்குள் அந்த இடத்தின் நிலை முழுவதும் சேரப் புரவிப் படையின் கட்டுப்பாட்டுக்குள் வந் திருந்தது.

சரியாக ஒரு நாழிகைப் பொழுது முழுக் கதிரவன் கிரகணம் நீடித்தது. அந்த ஒரு நாழிகைப் பொழுதும் சேர வீரர்கள் வெறியில் ருத்ர தாண்டவம் ஆடியிருந்தார்கள். கதிரவனை விழுங்கி தனது பசியைப் போக்கிக் கொண்ட கருத்த அமாவாசை நிலவு மெல்ல கதி ரவனைக் கக்கத் தொடங்கியது. கதிர வன் வெளிப்பட்டதும் வெளிச்சம் சிறிது சிறிதாகத் தோன்றிக் கொண்டிருந்தது. விண்மீன்கள் மறைந்து கொண்டிருந் தன.

சிறு வெளிச்சத்திலேயே கீழே உயிர் பிரியாமல் துடித்துக் கொண்டிருந்த கள் வர்களை ஈட்டியால் குத்திக் குத்தி கொன்று கொண்டிருந்தார்கள்.

கதிரவன் கருநிலவின் பிடியிலிருந்து விடுபடத் தொடங்கியதுமே போதுமான வெளிச்சம் சிறிது நேரத்திற்கெல்லாம் கிடைத்திருந்தது. உடல் முழுவதும் படிந்த குருதிக் கரையோடு சேர இளவரசன் கள்வர்களின் தலைவனைத் தேடலானான். அபோதுதான் அகப்பா கோட்டைத் தலைவனின் தலையை மட்டும் அவன் கண்டறிந்தான். அவனது தலை உடலிலிருந்து நீண்ட தொலைவு கடந்து வந்து கீழே உருண்டு கிடந்தது.

அந்தத் தலையைக் கண்டதுமே ஏதோ பெரும் தவறு நிகழ்ந்திருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டான். சற்று நேரத்தில் வெளிச்சம் பகல் போல மீண்டதுமே கீழே மடிந்து கிடந்தவர்களை ஆத்திரத்துடன் கவனித்தான். மடிந்து கிடந்தவர்கள் அனைவருமே சேர மற்றும் துளுவ நாட்டுப் புரவி வீரர்கள்.

இறந்து கிடந்த தனது நாட்டுப் படையைப் பார்க்க பார்க்க அவனது

மனம் தீயைப் போலக் கொழுந்து விட்டு எரியத்தொடங்கியது. மனதில் உருவான கோபத்தை வெளிப்படுத்த இயலாமல் நிற்கையில் அவனது விழிகள் இரண்டும் சிவந்து கொண்டிருந்தன.

அப்போது அவனுக்கு அருகில் வந்த சேர நாட்டு எல்லைப் படைக் காவல் தலைவர், “இளவரசே, அந்தக் கள்வர்கள் நம்மை நன்கு ஏமாற்றிவிட் டார்கள். நமது படையையும், துளுவர்க ளின் படையையும் சாமர்த்தியமாக மோத வைத்துவிட்டு அவர்கள் விலகிச் சென்று விட்டார்கள்” என வருத்தத்துடன் தெரி வித்தார்.

இளவரசன் எதுவும் கூறாமல் கீழே உடலிலிருந்து பிரிந்து கிடந்த சேர நாட்டு வீரர்களின் தலைகளையே பார்த் துக் கொண்டிருந்தான். பிறகு, “இன் றும் அவர்கள் தப்பித்துவிட்டார்கள்” என் றான் ஏமாற்றத்தோடு.

“ஆமாம் இளவரசே! ஆனால்...”

https://telegram.me/aedahamlibra

"என்ன ஆனால்?"

"இதுவரை அவர்கள் தாக்கிய போது நமது படைக்கு எந்தச் சேதத் தையும் அவர்கள் ஏற்படுத்தவில்லை. ஆனால், இன்று?"

"துளுவ நாட்டு அகப்பா கோட்டை யின் புரவிப்படை முழுவதையும் இழந் துவிட்டோம். அதுமட்டுமல்லாமல் நமது புரவிப் படையின் பலமும் பாதியாகக் குறைந்துவிட்டது!"

"ஆமாம் இளவரசே!"

"அந்தக் கள்வர்களின் தலை வனை நான் நேருக்கு நேர் எதிர் கொண்டு அவனது தலையை அவனது உடலிலிருந்து தனியாகப் பிய்த்துப் போட் டால்தான் எனது வெறி அடங்கும். அவர் கள் எங்கே சென்றிருப்பார்கள்? விரட்டிச் செல்வோம். அதிகத் தொலைவு அவர் களால் கடந்திருக்க இயலாது." எனக் காவல் தலைவரிடம் தெரிவித்த இளவர

சன், "வீரர்களே, வருத்தப்பட்டது போதும். உடனே புறப்படுங்கள். அந்தக் கயவர்கள் எங்கிருந்தாலும் அவர்களை விரட்டிச் சென்று கொன்று வீழ்த்துவோம்" எனக் கட்டளையிட்டதுதான் தாமதம் அடுத் தக்கணம்வீரர்கள் அனைவரும் புரவியில் ஏறி தயாராக நின்றார்கள்.

சேர இளவலும், காவல் தலைவ ரும் புரவியில் ஏறி கள்வர்கள் சென்ற புரவிகளின் குளம்படிகள் வழியே பின் தொடரலானார்கள். அந்தக் குளம்படிகள் அகப்பா கோட்டையை நோக்கிச் சென்று கொண்டிருந்தன. அதைப் பார்த்த காவல் தலைவர், "இளவரசே, நாம் மோசம் போய் விட்டோம். அவர்கள் பகலில் நம்மை நேருக்கு நேர் எதிர்க்கத் துணிந் ததுமே நாம் எச்சரிக்கை அடைந்தி ருக்க வேண்டும். அகப்பா கோட்டையின் நிலை..." எனக் அவர் கூறி வாயை மூடியி ருக்கவில்லை. அதற்குள் அகப்பா கோட் டையியிலிருந்து புகை எழத் தொடங்கி யது.

"அகப்பா கோட்டை விழுந்துவிட்டது இளவரசே! இனி அவர்களை விரட்டுவது சாதாரணக் காரியமாக இருக்கப் போவதில்லை."

இளவரசன் எந்தப் பதிலையும் கூறாமல் அகப்பா கோட்டையை நோக்கி புரவியைச் செலுத்தினான். அப்போதும் அவன் எதிர் பார்த்ததைப் போன்றே அகழிப் பாலம் மூடியிருந்தது. அதற்கு முன் துளுவ வீரர்களின் உடல் ஆங்காங்கே சிதறிக் கிடந்தன. பலப்படுத்தப் பட்ட கோட்டையை ஒருமுறை புரவியிலேயே அமர்ந்து கொண்டு கவனித்தான். பிறகு அவனது வாயிலிருந்து வார்த்தைகள் ஒவ்வொன்றாக ஆத்திரத்தில் வெளி வரத் தொடங்கின.

"என் வாழ்வில் இப்படியொரு தொடர் தோல்வியை நான் இதுவரை சந்தித்திருக்கவில்லை" என்று.

"இளவரசே, இப்போதிருக்கும் நிலையில் இந்தக் கோட்டையிலிருந்து

https://telegram.me/aedahamlibra

இவர்களை விரட்டுவது எளிதான காரி யம் என்றா நினைக்கிறீர்கள்? அன்று நாம் வந்த பலவீனமான அகப்பா கோட்டை அல்ல இது. கள்வர்களின் தலைவ னும் போர்க்கலையை முற்றிலும் கற் றவன். திட்டம்போட்டுத் துளுவர்களை வெளியே இழுத்துச் சாமர்த்தியமாகக் கோட்டைக்குள் நுழைந்து கைப்பற் றிக் கொண்டான். தாங்கள் வஞ்சிக்குக் கிளம்புங்கள். இவனை நாங்கள் பார்த் துக்கொள்கிறோம். சோழ நாட்டின் மீது படையெடுக்க ஆயத்தமான நம் படை வஞ்சியிலேயே தங்கியிருக்கிறது. இந் தச் சில நூறு வீரர்களை நான் கவ னித்துக் கொள்கிறேன். நீங்கள்...” எனக் கூறிக் கொண்டிருக்கும் போதே குறுக் கிட்ட இளவரசன், “வஞ்சிக்குச் சென்று என் தந்தை சேரமான் பெருஞ்சேரலாத னிடம் என்னை என்ன கூறச் சொல்கிறீர் கள்?” என ஆத்திரத்துடன் வினவினான்.

“அரசே....”

"சில நூறு கள்வர்கள் நம் படையின் பாதியை அழித்ததோடு மட்டுமல்லாமல் துளுவர் படையை முற்றிலும் அழித்து விட்டார்கள். பிறகு அகப்பா கோட்டை யையும் கைப்பற்றி விட்டார்கள். காவல் தலைவர் முற்றுகையிட்டிருக்கிறார். ஆத லால் நான் திரும்பி வந்துவிட்டேன் எனக் கூறச் சொல்லி என் இயலாமையை ஒப் புக்கொள்ளச் சொல்கிறீர்களா?"

"இளவரசே.... நான்..."

"எதுவும் கூறவேண்டாம் தலை வரே! அகப்பா கோட்டையை மீட்டு அந் தக் கள்வர்களை விரட்டாத வரை நான் வஞ்சிக்குத் திரும்பப்போவதில்லை" என அவரிடம் கூறியவன் புரவியில் அமர்ந் திருந்த வீரர்களிடம், "வீரர்களே, கோட் டையை இப்போதிலிருந்து நாம் முற்று கையிடுகிறோம். நம் அனுமதியில்லாமல் கோட்டைக்குள்ளும் சரி, கோட்டைக்கு வெளிப்புறமும் சரி எதுவும் சென்று வரக் கூடாது. தாக்குதலையும் தொடங்குங்

https://telegram.me/aedahamlibra

கள்” எனக் கட்டளையிட்டவன் புரவியில் எங்கோ கோபத்துடன் விரைந்து செல்லலானான்.

சேர இளவரசன் செல்வதையே கோட்டை மதிலில் நின்றபடி கவனித்துக் கொண்டிருந்த வில்லவன் தனக்குள் கூறிக் கொண்டான்.

“விரைவில் உன்னை நேருக்கு நேர் எதிர்கொள்கிறேன் நண்பா...”என்று.

https://telegram.me/aedahamlibra

# 35. ஆலோசனை

சேர மன்னர் பெருஞ்சேரலாதனின் பெரும்படை கருவூர் வஞ்சி மாநகரை விட்டு நகரா வண்ணம் சோழர்களின் உபபடைத் தலைவன் வில்லவன் துளுவ எல்லையில் அவர்களின் எல்லைப் புறக் கோட்டையான அகப்பாவைக் கைப்பற்றிப் பெரும் சேதத்தை விளைவித்துக் கொண்டிருந்தான்.

மலை நாட்டுப் படையான இருங்கோவின் படையும் உறைந்தையிலேயே சேரமானின் பதிலை எதிர்பார்த்துக் காத்

துக் கொண்டிருந்தது. இருங்கோவிற்கும், வைதீகர் பாகவதருக்கும் கிடைத்த தகவல்கள் அவர்களைக் கலக்கமுறச் செய்து கொண்டிருந்தன. சேர எல்லையில் திடீரென்று அடையாளம் அறிய இயலாத வலிமை வாய்ந்த கள்வர்கள் தாக்குகிறார்கள் என்றும்; அவர்களை ஒடுக்கச் சென்ற சேர இளவரசனின் ஆயிரம் புரவி வீரர்கள் கொண்ட படையில் பாதியும், துளுவ நாட்டு எல்லைப் படையையும் அழித்து அகப்பா கோட்டையை அவர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள் என்றும்; அக்கள்வர்களை அழித்து, அகப்பா கோட்டையை மீட்டு சேர இளவரசன் வஞ்சிக்கு வந்த பிறகே சோழ நாட்டைத் தாக்க சேர நாட்டுப் படை கிளம்பும் என்றும் வஞ்சியிலிருந்து தகவல்கள வந்து கொண்டிருந்தன. திட்டமிட்டபடி படை கிளம்பாமல் ஒரே இடத்தில் தேங்கியிருப்பது மனோரீதியாக அவர்களின் உற்சாகத்தை இழக்கச் செய்து கொண்டிருந்தது.

https://telegram.me/aedahamlibra

சேர நாடு மற்றும் பாண்டிய நாட்டிலிருந்து உறைந்தைக்கு வந்த ஒற்றுத் தகவல்கள் அனைத்தையும் உறைந்தைக் காவல் தலைவனான காளன் தணிக்கை செய்தே இருங்கோவிற்குத் தெரியப்படுத்திக் கொண்டிருந்தான். புகாரில் சோழர்களின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், அவர்கள் எப்படிப் போருக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள்? என்று ஒற்றர்களின் மூலம் வந்த தகவல்களை முற்றிலும் தடுத்து நிறுத்தி வைத்திருந்தான் காளன்.

சோழர்களின் நடவடிக்கை பற்றிக் கிடைக்காத ஒற்றர்களின் தகவல்களைப் பற்றி இருங்கோவும் பெரிதும் கவலைப்படவில்லை. சோழ இளவலுக்கு எதிராகத் திரண்டிருந்த பிரமாண்ட படை அவர்களுக்குப் பெரும் நம்பிக்கையை அளித்திருந்தது. 'சிறு படையை வைத்துக் கொண்டு அவர்களால் என்ன செய்துவிட இயலும்?' எனப் புலிப்படையை ஒரு

பொருட்டாகவே மதிக்காமல் இருந்து கொண்டிருந்தனர்.

'சேரப்படை இல்லாமல் புகாரை உறையூர் படை மட்டும் தனியாகவே தாக் கட்டும்' என வைதீகர் தெரிவித்த யோச னையை நிராகரித்திருந்தான் இருங்கோ வேள். வஞ்சியிலிருந்து தகவல் கொண் டுவந்த சேந்தனின் தங்கை மின்னல் கூறி யதைப் போன்று பாண்டிய நாட்டிற்குச் சென்றுள்ள வேந்தனை எதிர்பார்த்தப டியே இருங்கோவேள் காத்துக் கொண் டிருந்தார். தென் தமிழத்தில் தொடங் கியிருந்த திடீர் மழையினால் பாண் டிய நாட்டுப் படை குறிப்பிட்ட காலத் தில் புறப்படத் தாமதமாகும் என்ற தகவ லும் அவரை அடைந்து கலக்கமடையச் செய்து கொண்டிருந்தது.

அப்படிப்பட்ட சூழலில் தான் அவன் சற்றும் எதிர்பாராத தகவல் அவனைத் தேடி வந்தது. காளனும் யுவராஜனும் உறைந்தையில் காவிரி ஆற்றங்கரைப்

பாசறையில் வீரர்கள் மேற் கொண்டி ருந்த பயிற்சிகளை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒற்றன் ஒருவன் யுவராஜனைத் தேடி வந்த வன் இடையிலிருந்த முத்திரை மோதி ரம் ஒன்றை எடுத்து யுவராஜனிடம் நீட்டி னான்.

அந்த முத்திரை மோதிரத்தைப் பார்த்ததுமே யுவராஜன் புரிந்து கொண் டான். இவன் வேந்தனால் அனுப்பப்பட் டவன் என்று. அருகில் நின்ற காளனும் அந்த முத்திரைக் கவனிக்கவே செய்தி ருந்தான்.

யுவராஜன் அவனிடம், "என்ன செய்தி?" என வினவினான்.

அருகில் நின்ற காளனை சந்தே கத்துடன் பார்த்த அவன், "உங்களி டம் மட்டுமே இரகசியமாகத் தெரிவிக்கச் சொல்லி நம் ஒற்றர் தலைவர் ஆணை பிறப்பித்திருக்கிறார்" எனத் தெரிவிக்க லானான்.

யுவராஜனும் அருகில் நின்ற காளனை நோக்கினான். அதைப் புரிந்து கொண்ட காளன், "நான் புறப்படுகி றேன்" எனத் தெரிவித்துவிட்டு அங்கி ருந்து விடுவிடுவென்று புறப்பட்டான்."கா வல் தலைவரே, நீங்கள் செல்ல வேண் டிய அவசியமில்லை." எனக் காலனிடம் தெரிவித்தவன், தனக்கு எதிரே நின்ற ஒற்றனிடம், "உறைந்தைக் காவல் தலை வர் நிற்பதைப் பற்றி நீ கவலைகொள் ளத் தேவையில்லை. அவரும் நம் நம்பிக் கைக்கு உரியவரே! நீ வந்த செய்தியைத் தெரிவி" எனக் கட்டளையிட்டான்.

"இளவரசே, ஒற்றர் தலைவர் தீர்க் கமாகக் கட்டளையிட்டிருக்கிறார். யுவரா ஜர் அல்லது மன்னர் தனிமையில் இருக் கும்போது மட்டுமே தகவலைத் தெரி விக்க வேண்டும் என்று! உங்களை முத லில் சந்திப்பதால் உங்களிடம் தெரிவிக்க வந்திருக்கிறேன்" எனத் தயங்கினான்.

https://telegram.me/aedahamlibra

“தயக்கமில்லாமல் கொண்டு வந்த செய்தியைத் தெரிவி” தீர்க்கமாகக் கட்டளையிட்டான் யுவராஜன்.

அதே நேரம், “நான் புறப்படுகிறேன் யுவராஜா...” எனக் கூறிக் கொண்டு அவனது மறுமொழியை எதிர்பாராமல் அங்கிருந்து செல்லலானான்.

தனிமையில் நின்ற யுவராஜனிடம்” தென்னாடுகளில் மழை பெய்து வருவதால் ஒற்றர் தலைவரால் குறிப்பிட்ட காலத்திற்குள் கூடலைச் சென்றடைய இயலாதாம்! அவர் பெருமழைக் கிடையில் அகப்பட்டுக் கொண்டார். அதுமட்டுமல்லாமல்...” எனக் கூறியவன் மீண்டும் தயங்கினான்.

“ம்ம்ம்... ஏன் தயங்குகிறாய்?”

“யுவராஜரே, திறமை வாய்ந்த இருபது வீரர்களை உங்களுக்குப் பாதுகாப்பாக அழைத்துக் கொண்டு இன்றே உங்களைப் பறம்பு நாட்டிற்குப் புறப்படச்

சொல்லி கட்டளையிட்டிருக்கிறார். காரணம் எதுவும் தாங்கள் கேட்க வேண்டாம். உடனே புறப்படுங்கள்." எனத் தெரிவித்தவன் யுவராஜனின் மறுமொழியை எதிர்பாராமல், "நான் புறப்படுகிறேன் இளவரசே!" எனத் தெரிவித்துவிட்டு அங்கிருந்து செல்லலானான்.

யுவராஜன் சிந்தித்தபடியே நிற்கலானான்.

பாண்டிய நாட்டிற்குச் சென்ற வேந்தனுடன் கரிகாலனும் சென்று கொண்டிருந்தான். அவர்களும் பாண்டிய நாட்டின் எல்லையை அடைந்து கூடலை நோக்கி விரைந்து கொண்டிருந்தார்கள். இன்னும் ஒரு கிழமை காலத்தில் வேந்தன் பாண்டிய மன்னர் தென்னவனைச் சந்தித்து ஓதவஞ்சி தெரிவித்த தகவலைக் கூறி பாண்டிய படையையும், சேர நாட்டுக் கடற் படையுடன் பாண்டிய கடற்படையையும் புறப்படச் செய்துவிடுவான்.

https://telegram.me/aedahamlibra

புகாரை நோக்கி நான்கு புறத்தி லும் ஒரே நேரத்தில் பாய்வதற்குப் பெரும் படைகள் தயாராகியிருந்த வேளையில் வானவல்லியின் குறுக்கீட்டினால் அவை தாமதமாகிக் கொண்டிருந்தன. ஆனால், புகாரிலோ நிலைமை முற்றிலும் வேறு விதமாகக் காணப்பட்டது. புகார் நகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது. வருடா வருடம் கொண்டாடப்படும் சித்திரைத் திருவிழாவான இந்திரத் திருவிழா களை கட்டியிருந்தது. போர் தொடங்கப்போகி றது என்பதற்கு எந்தவித சிறு அறிகுறி கூடப் புகாரில் காணப்படவில்லை. எங்கு நோக்கினும் மக்கள் விழாக் களிப்பில் சோழ நாட்டின் அனைத்து தேசங்களிலி ருந்தும் தினம் திருவிழாவினைக் காண திரள் திரளாகத் திரண்டு கொண்டிருந் தார்கள். இருங்கோ புகாரை முற்றுகை யிட முயன்று செங்குவீரனால் முறியடிக் கப்பட்ட அதே சித்திரை இந்திரத் திரு விழா தான். சோழ இளவரசன் வளவன் புகாரின் மன்னனாக முடிசூடிய பிறகு

வரும் அடுத்த இந்திரத் திருவிழா. புகார் நகர மக்களே அடுத்தக் கிழமை வரும் முழு நிலவு தினத்தை எதிர்பார்த்தபடி காத்துக் கொண்டிருந்தார்கள்.

இந்திரத் திருவிழா கடந்த வைகாசித் திங்கள் கொற்கைக்குச் சென்ற செங்குவீரன் இளவலைக் காக்க குமரிக் கடலுக்குள் மூழ்கியிருந்தான். வரும் வைகாசி மாதம் தொடங்கினால் செங்குவீரன் குணக் கடலுக்குள் மூழ்கி சரியாக ஒரு வருடம் பூர்த்தியாகிவிடும். காலம் வேகமாக விரைந்து கொண்டிருந்தது. காலங்கள் உருண்டாலும் காலம் உருவாக்கிச் சென்ற வெற்றிடங்கள் மட்டும் வானவல்லி, டாள்தொபியாஸ், திருக்கண்ணன், பரதவன் குமரன் உட்பட யாருக்கும் மீண்டும் நிரப்பப்படவில்லை.

சித்திரைத் திருவிழா ஏற்பாடுகளையும், பாதுகாப்பு முறைகளையும் பற்றி விவாதிக்கக் குன்றுத் துறையில் பெருமறவர் மகேந்திர வளவனார், இரும்பி

டர்த்தலையர், முக்கியப் படைத்தலைவர் கள் மற்றும் உபபடைத்தளபதிகள் என அனைவரும் கூடியிருந்தார்கள்.

ஆசனத்தின் மையத்தில் பெரும றவர் மகேந்திர வளவனாரும், இரும் பிடர்த்தலையர் அமர்ந்திருக்க, அவர்க ளுக்கு முன்பாக இரண்டு புறத்திலும் வானவல்லி, டாள்தொபியாஸ், பரதவன் குமரன், திருக்கண்ணன் மற்றும் பல முக் கியப் படைத்தலைவர்கள் அமர்ந்திருந் தார்கள். இரும்பிடர்த்தலையரின் இருக் கைக்கு இடப்புற இருக்கை வெறுமையா கவே காணப்பட்டது.

அதைக் கவனித்த மகேந்திர வள வனார், “பிடர்த்தலையரே அனைவரும் வந்துவிட்டோமே? இனியும் யாருக்கா கக் காத்திருக்கிறீர்கள். ஆலோசனை யைத் தொடங்கலாம் அல்லவா?” எனக் கேள்வி எழுப்பினார்.

இரும்பிடர்த்தலையர் எந்தப் பதிலையும் கூறாமல் அந்த அறையின் வாயிலையே பார்த்துக் கொண்டிருந்தார்.

ஆனால் யாருமே வரவில்லை.

"பிடர்த்தலையரே, இதே போன்று கடந்த வருடம் இருங்கோ உறைந்தையைக் கைப்பற்றியதும் தாங்கள் அங்கிருந்து தப்பிப் புகாருக்கு வந்துவிட்ட பிறகு நடந்த ஆலோசனையின் போதும் நான் அந்த இருக்கை யாருக்காக என்று வினவினேன். இதே போன்றுதான் வாயிலை நோக்கினீர்கள்! ஞாபகம் இருக்கிறதா?"

"ஆம் வளவனாரே, நன்றாக நினைவில் இருக்கிறது. இன்று நினைத்தாலும் அந்தக் காட்சியை என்னால் மறக்க இயலவில்லை. அன்று நான் உங்களிடம் தெரிவித்தேன் அல்லவா, 'சோழ நாட்டிற்கு இப்போது இப்படிப்பட்ட தலைவன் ஒருவன்தான் தேவை என்று.'"

https://telegram.me/aedahamlibra

"ஆமாம்... ஆமாம்... அன்று நீங்கள் சொல்லி வாய் மூடியிருக்கவில்லை. அதற்குள் உங்களைக் கைது செய்ய வந்த இருங்கோவின் படையினரை விழிகளை மட்டும் உயர்த்தி அவை களத்தை ரணகளமாக்கிய செங்குவீரனை அவ்வளவு எளிதில் நம்மால் மறந்துவிட இயலுமா?" எனப் பெருமையுடன் தெரிவித்தார் வளவனார்.

"ஆனால், அவன் இன்று இப்போது இல்லையே! இருக்கையில் செங்குவீரன் அமர்ந்து இந்த ஆலோசனையை நடத்தியிருக்க வேண்டும். ஆனால்... ஆனால்..." எனக் கூறியபடி நா தழுதழுக்கக் கண்கள் கலங்கினார் இரும்பிடர்த்தலையர்.

அவர் கலங்குவதைக் கண்டு வருந்திய வளவனார் அவரது கரங்களைப் பிடித்து ஏதோ ஆறுதல் கூற வாயெடுத்தார். ஆனால், அதற்குள் முந்திக் கொண்ட வானவல்லி, "பிடர்த் தலையரே, குமரி மங்கை ஆசையுடன்

https://telegram.me/aedahamlibra

அணைத்துக் கொண்ட நம் படைத் தலைவரை எண்ணி இனி வருந் திப் பயன் இல்லை. அவர் இருந்திருந் தால் இந்தப் போர் இத்தனை காலம் நீடித்திருக்காது. இந்நேரம் அவர் முடி வினை எட்டியிருப்பார். இருங்கோவின் படை, சேரப் படை, பாண்டியர் படை, குணக் கடல் வழியாகத் தாக்க வரப் போகும் இவர்களின் கூட்டுக் கடற்படை, இது மட்டுமல்லாமல் இவர்களுக்குத் துணையாகப்போகும் பதினோரு வேளிர் களின் கூட்டுப் படை எனப் புகாரைத் தாக்க தயாராகிக் கொண்டிருக்கிறார் கள். கடந்த காலத்தை எண்ணி வருந்தி என்ன பயன்? நடக்கப்போகும் நிகழ்வு களைப் பற்றி நாம் விவாதிக்கலாமே!" எனத் திடமாகத் தெரிவிக்கலானாள்.

செங்குவீரனின் மரணத்தை எண்ணி அதிகம் வருந்தியவள் வானவல் லிதான் என்பதை அங்கிருந்த அனை வருமே அறிந்திருந்தார்கள். ஆனால், அவளே இன்று எதார்த்தத்தை

உணர்ந்து இழப்பை மறந்துவிட்டுத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டிருந்த விதம் அங்கிருந்த அனைவரையுமே வியப்பில் ஆழ்த்தியிருந்தது.

டாள்தொபியாஸ் தனக்குள் கூறிக் கொண்டான், “காலம் தான் அனைத்திற்கும் அருமருந்து. அது அனைத்தையும் மறக்கடிக்கப்பட்டு விடும்” என்று.

அனைவரும் அவளையே ஆச்சர்யத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.”வரவேண்டியவர்கள் அனைவரும் வந்துவிட்டார்கள் தானே! யாரேனும் வர வேண்டுமா?” என அவையைப் பார்த்து வினவினாள்.

சிலர், “அனைவரும் வந்துவிட்டார்கள்” எனத் தெரிவித்தார்கள். ஆனால், சிலரோ, “நம் இளவரசர் இன்னும் வரவில்லையே? அவர் எங்கே?” எனக் கேள்வி எழுப்பினர்.

உடனே இரும்பிடர்த்தலையர் டாள்தொபியாசையும், திருக்கண்ணனையும் பார்த்து, “கரிகாலன் எங்கே?” என்று வினவினார்.

சில கிழமைகளுக்கு முன் வானவல்லி வினவிய அதே கேள்வி. இருவருமே ‘கரிகாலன் எங்கே?’ என எழுந்துள்ள கேள்விக்கு எந்தப் பதிலைக் கூறுவது என்று தெரியாமல் விழி பிதுங்கி நிற்கலானார்கள்.

அவர்களது அமைதியைக் கண்ட வளவனார், “டாள்தொபியாஸ், இளவரசர் எங்கே என்று பிடர்த்தலையர் கேட்கிறார் அல்லவா? பதில் கூறு!” எனக் கட்டளையிட்டார்.

இருவரும் அமைதியாகவே எந்தப் பதிலையும் கூறாமல் நிற்கலானார்கள்.

அப்போது பிடர்த்தலையர், “சில கிழமைகளுக்கு முன் ‘வஞ்சிக்குச் செல்லும் மக்களோடு மக்களாகச் சென்று

நான் கூறுவதைத் தெரிவியுங்கள்’ என்று என்னிடம் கட்டளையிட்டுவிட்டு மறைந் தான். அதற்குப் பிறகு அவனை நான் காணவே இல்லையே! எங்கே அவன்?” இந்தமுறை பெரும் அதிகாரத்துடன் வினவினார் அவர்.

அப்போது எழுந்த வானவல்லி, “இளவலைப் பற்றிய கவலை உங்க ளுக்கு வேண்டாம். அவர் எங்குச் சென் றாலும் உரிய நேரத்திற்கு வந்துவிடுவார். நான்தான் அவரை ஒரு முக்கியமான பணியை முன்னிட்டு அனுப்பி வைத்தி ருக்கிறேன். அவரை நாம் இன்று எதிர் பார்க்கத் தேவையில்லை” எனத் தெரி வித்தாள்.

அவள் கூறியதைக் கேட்ட தும் டாள்தொபியாசும், திருக்கண்ண னும் பெரும் அதிர்ச்சியடைந்து உறைந்து போயிருந்தார்கள். சில கிழமைக ளுக்கு முன்னர், ‘கரிகாலர் எங்கே?’ என்று கேள்வி எழுப்பிய வானவல்லியே

இன்று கரிகாலரை முக்கியப் பணிக்காக அனுப்பி வைத்திருக்கிறேன் எனக் கூறு வது ஏன்? கரிகாலரை வானவல்லியே அனுப்பி வைத்துவிட்டு அன்று எதற்கா கக் கடுமையாக நடந்துகொள்ள வேண் டும்?' என எண்ணி வருந்திக் கொண்டி ருந்தனர்.

அப்போது இருவரின் காதுகளிலும் பரதவன் குமரன், "இன்று படைத் தலை வர் நம் மூவரையும் காப்பாற்றி விட்டார். இல்லையேல்..." எனக் கூறி வாயை மூடிக் கொண்டான்.

இருவரும் எதிரில் அமர்ந்திருந்த வானவல்லியை நன்றியுடன் பார்க்கலா னார்கள். அவள் சிறு புன்னகை ஒன்றை மட்டும் உதிர்த்தாள்.

"இந்திரத் திருவிழா வரும் முழு நில வன்று தொடங்கவிருக்கிறது வானவல்லி. இந்த நேரத்தில் அவனை எங்கு அனுப்பி வைத்திருக்கிறாய்? முழு நிலவுக்கு முன்

அவன் வந்துவிடுவான் தானே!" என வினவினார் இரும்பிடர்த்தலையர்.

"வந்துவிடுவார் என்று நம்புகிறேன்!" புன்னகையுடன் தெரிவித்தாள் வானவல்லி.

"சரி... அவன் எப்போது அவையில் இருந்திருக்கிறான், இன்று இருக்க?" எனக் கூறிய பிடர்த்தலையர், "இந்திரத் திருவிழாவிற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் எப்படி?" என வினவினார்.

அப்போது எழுந்த டாள்தொபியாஸ், "அதைப் பற்றி நாம் கவலை கொள்ள அவசியமில்லை பிடர்த்தலையரே! செங்குவீரர் அன்று பிறப்பித்த உத்தரவுகளைத் தான் இன்றும் பின்பற்றிக் கொண்டு இருக்கிறோம். ஆக, நாம் விழாவைப் பற்றி விவாதிப்பதை விட நடைபெறப் போகும் பெரும் போரைப் பற்றி விவாதிக்கலாமே" எனத் தெரிவித்துவிட்டு அமர்ந்து கொண்டான்.

https://telegram.me/aedahamlibra

"நல்லது. டாள்தொபியாஸ் கூறுவதும் சரிதான். இந்திரத் திருவிழாவைப் பற்றி விவாதிக்க எதுவும் இல்லை. போரைப் பற்றி விவாதிக்கலாமே! ஆனால், எந்த வருடமும் இல்லாத அளவிற்கு இந்த வருடம் முழு நிலவிற்கு முன்னதாகவே மக்கள் திரளத் தொடங்கி விட்டார்களே! அனைத்து ஏற்பாடுகளும் தயார்தானே!" என வினவினார் வளவனார்.

"ஆமாம் வளவனாரே... இந்த வருடம் இந்திரத் திருவிழாவிற்கு மக்கள் அதிகமாகத் தான் திரளத் தொடங்கியிருக்கிறார்கள்."

"காரணம்?"

"இந்த வருடம் நாம் இந்திரனை வழிபடப் புகாரைச் சுற்றிப் பல உயர்ந்த தூண்களை அமைத்திருக்கிறோம் அல்லவா, அந்தத் தூண்களின் பிரமாண்டத்தைக் காணவே மக்கள் தொடர்ந்து குவிந்து கொண்டிருக்கிறார்கள்" எனப்

https://telegram.me/aedahamlibra

பரதவன் குமரன் கூறிக் கொண்டிருந்த போது குறுக்கிட்ட டாள்தொபியாஸ், "குமரா, புகாரில் குவிந்து கொண்டிருக் கும் மக்கள் இந்திரனை வழிபடவா வந்து கொண்டிருக்கிறார்கள்?" எனச் சிரித்த படி வினவினான்.

"ஆமாம் நண்பா... அதில் உனக்கு என்ன சந்தேகம்?" என அவனும் சிரித்த படியே பதிலுக்கு வினவினான்.

டாள்தொபியாஸ் எதுவும் அதற்கு மேல் கூறாமல் புன்னகையை மட்டும் வெளிப்படுத்தலானான்.

"டாள்தொபியாஸ் இது ஆலோ சனை அவை என்பதை இருவரும் நினைவில் கொண்டு பேசுவது நல்லது" என எச்சரிக்கை செய்தார் வளவனார்.

"குமரன் உள்ளதை மறைத்துக் கூறியதும் டாள்தொபியாஸ் தனக்கிருந்த சந்தேகத்தை எழுப்பித் தீர்த்துக் கொண் டான். என்ன டாள்தொபியாஸ் நான் கூறு

வது உண்மைதானே?" என அவனது விழிகளில் தனது பார்வையை நிலைக்க வைத்தபடி வினவினாள் வானவல்லி.

"ம்ம்ம்ம்" என மட்டும் பதில் தெரிவித்தான் டாள்தொபியாஸ். அதற்கு மேல் அவன் எதையும் அவையில் கூற வில்லை.

பரதவன் குமரனை நோக்கிய வானவல்லி, "குமரா, இனி மறைப்பதற்கு எதுவும் இல்லை. போர் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அனைவரும் அனைத்தையும் அறிந்துகொள்ளட்டும். நீ தயக்கமின்றி உள்ளதை உள்ளபடி தெரிவிக்கலாம்!" எனத் தெரிவித்தாள்.

பரதவன் குமரன் தயங்கினான்.

"வந்திருக்கும் கூட்டம் இந்திரனை வழிபடவா வந்திருக்கிறது?" என வினவினாள்."

"இல்லை!"

“பிறகு எதற்கு வந்திருக்கிறது?”

“அவர்கள் தாமாக வரவில்லை. பிடர்த்தலையரால் நம் சோழ நாடு முழுவதிலும் கிராமங்களிலிருந்து போருக்குத் திரட்டப்பட்டவர்கள்!”

ஆசனத்தில் அமர்ந்திருந்த இரும்பிடர்த்தலையர் தனது மீசையைக் கம்பீரமாக நீவி விட்டுக் கொண்டார்.

“அவர்களுக்குப் பயிற்சியளிக்க என்னென்ன ஏற்பாடுகளைச் செய்திருக்கிறீர்கள்?”

“அதற்கு எத்தகைய அவசியமும் இல்லை!”

“அவசியம் இல்லையா?”

“ஆம் தேவி!”

“விளக்கமாக அவைக்குக் கூறு!” கட்டளையிட்டாள் வானவல்லி.

“அவர்கள் காலம் காலமாக விவசாயத் தொழிலை மேற் கொண்டாலும்

அவர்கள் அனைவருமே போர் வீரர்கள். போர் வீரர்களாக உருமாற்றப்பட்டவர்கள்.”

“உருமாற்றப்பட்டவர்களா?”

“ஆம். அவர்களுக்கு வேண்டிய போர்ப் பயிற்சிகள் அனைத்தையும் நம் பிடர்த்தலையரும், செங்குவீரரும் ஏற்கெனவே வழங்கிவிட்டார்கள். பெரும் போர் நிச்சயம் சோழ தேசத்திற்கு எதிராக மூளும் என்பதை உணர்ந்திருந்த நம் பிடர்த்தலையர் இரகசியமாகத் திரட்டிய வீரர்கள்தான் அவர்கள். அனைத்து போர்ப் பயிற்சிகளையும் முழுமையாகக் கற்றவர்கள். வெளிப்பட வேண்டிய நேரத்திற்காக இத்தனை நாட்களாக விவசாயத் தொழிலை மேற் கொண்டபடி காத்துக் கொண்டிருந்தார்கள். இப்போது பிடர்த்தலையரின் கட்டளை கிடைத்ததும் புகாருக்கு வந்துவிட்டார்கள். இந்திரத் திருவிழாவினைக் காண வருகை தந்திருக்கும் மக்களுக்குச் செய்யும் அதே

ஏற்பாடுகளையே இவர்களுக்கும் செய் திருக்கிறோம் தேவி. சேரர்களுக்கோ அல்லது இருங்கோவிற்கோ எந்த ஐய மும் நேராவண்ணம் அவர்கள் புகாரை அடையத் தொடங்கிவிட்டார்கள். நம்மை எதிர்க்கத் துணிந்திருக்கும் கூட்டுப் படையை ஒப்பிடுகையில் இவர்களின் எண்ணிக்கை சொற்பம் தான். ஆனால் களத்தில் இவர்களின் தாக்கம் நிச்சயம் முடிவை மாற்றும் தன்மை உடையது."

பரதவன் கூறி முடித்ததும் ஆலோச னையில் இருந்த அனைவருமே இரும்பி டர்த்தலையரையே வியப்புடன் நோக்கி னார்கள். அவர் முகத்தில் எந்தப் பாவ னையையும் வெளிப்படுத்தாமல் அமை தியுடன் அமர்ந்து கொண்டிருந்தார். பிறகு பரதவன் குமரனை நோக்கி, "குமரா... நில மார்க்கமாகப் படைகள் புகாரை முற்று கையிட்டால் நம்மால் எதிர்த்து நிற்க இய லும். ஆனால் அவர்கள் கடல் மார்க்கமா கவும் தாக்குவதற்குப் பெரும் படையைத் திரட்டிக் கொண்டிருக்கிறார்கள். எப்ப

https://telegram.me/aedahamlibra

டிப் பிரமாண்ட பெரும் படையை நிலத்தில் நாம் எதிர்க்க வேண்டியிருக்கிறதோ அதே போன்றே நாம் கடலிலும் அவர்களின் பிரமாண்டப் பெரும் கடற்படையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதையும் நீ மறந்துவிடாதே! சேர, பாண்டிய மற்றும் சிங்கள நாட்டின் கூட்டுக் கடற்படையை நீ ஒருவன் தான் எதிர்கொள்ளப் போகிறாய் என்பதை நினைவில் கொள். என்னென்ன ஏற்பாடுகளை நீ செய்திருக்கிறாய்?" என வினவினார்.

"நிலப்படையைப் போன்றே பெரும் கடற்படையினால் புகாரைத் தாக்குவார்கள் என்பதைச் செங்குவீரர் முன்பே அனுமானித்துத் தகுந்த கட்டளைகளைப் பிறப்பித்திருந்தார். அவை அனைத்தும் நிறைவேற்றப்பட்டு விட்டன. ஆயிரம் கலங்களில் அவர்கள் புகாரை முற்றுகையிட வந்தாலும் அவர்களை நான் எதிர்க்கத் தயாராக இருக்கிறேன்! நான் உயிருடன் இருக்கும் வரை ஒரு கலம் கூடப் புகார் கடற் கரையில் கரை

https://telegram.me/aedahamlibra

யிறங்காது. அனைத்தையும் குணக் கடலிலேயே மூழ்கடித்து விடுவோம். அதைப் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்! சற்று என்னுடன் வாருங்கள்" எனக் கூறிய பரதவன் குமரன் குன்றுத் துறை அறையின் சாளரத்தை நோக்கி புகாரைச் சுற்றிக் காட்டினான். கடற் கரையில் இரண்டு பிரமாண்ட தூண்கள் குன்றின் உயரத்திற்கு ஈடாக நின்று கொண்டிருந்தன. புகார் பட்டினத்தைச் சுற்றிலும் வரிசையாகத் தூண்கள் நின்று கொண்டிருந்தன.

சித்திரை மாதத்திலும் பேராவேசத்துடன் குணக் கடலுடன் கலந்து கொண்டிருந்த காவேரி நதியை சுட்டிக் காட்டினான் குமரன். குன்றைத் தொட்டுக் கொண்டு சென்று கொண்டிருந்த காவேரி நதியின் உட்புறங்களில் வரிசையாக மரக்கலங்கள் பிணைக்கப்பட்டிருந்தன. அந்த மரக்கலங்களைக் குறிப்பிட்டுக் காட்டினான் பரதவன் குமரன். அதைக் கண்ட இரும்பிடர்த்தலையர், "இந்திரத் திருவிழாவினைக் காண வந்

திருக்கும் மக்கள் தங்களது கலங்களைக் காவேரி நதியில் கட்டி வைத்திருக்கிறார் களா?" என வினவினார்.

"இல்லை அய்யா... நமது போர்க்க ளங்களில் சிறு பிரிவு!"

"சாதாரணக் கலங்களை விடச் சற் றுப் பெரிய அளவில் இருக்கும் போலி ருகிறதே! அதிலும் இதில் எந்த ஆயுதங் களும் இருப்பதைப் போன்று எனக்குத் தெரியவில்லையே! போர்க் கலங்களை இப்படி வெளிப்படையாக நிறுத்தி வைக் கலாமா குமரா?"

"கவலை வேண்டாம்... நாம் குன்றி லிருந்து பார்ப்பதால் நம்மால் அந்த மரக் கலங்களைப் பார்க்க முடிகிறது. கீழே யிருந்து பார்த்தால் பார்வைக்கு அகப் படாமல் குன்றின் மறைவிலும், கரை யோர அடர்ந்த மரங்களுக்கு இடையிலும் மறைந்திருக்கும். அப்படியே அவை ஒற் றர்களின் பார்வையில் அகப்பட்டாலும் அது விழாவினைக் காண வந்திருக்கும்

https://telegram.me/aedahamlibra

பொது மக்களின் கலங்கள் என்றே ஒற்றர்கள் கருதுவார்கள். போர்க் கலங்கள் எனச் சந்தேகம் கொள்ளும் அளவிற்கு அதில் எந்தப் போர்க்கருவிகளும் இன்னும் பொருத்தப்படவில்லை."

பரதவனிடம் வளவனார், "நமது கடற் படையின் பலம் எவ்வளவு?" என வினவினார்.

"அதை வெளிப்படையாகக் கூறுவதற்கு இயலாது அய்யா!" எனப் பதிலளித்தான்.

"குமாரா?" கோபத்தோடு அழைத்தார்.

"சில நூறு கலங்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள்!" என மட்டும் பதிலளித்தான் பரதவன் குமரன்.

முக்கியக் காரணத்திற்காகத் தான் முழுக் கலங்களின் விவரத்தையும் கூற மறுக்கிறான் என்பதைப் புரிந்து கொண்ட வளவனார் அதற்கு மேல் அதைப் பற்றி

https://telegram.me/aedahamlibra

வெளிப்படையாக அனைவரின் முன்பும் வினவுவது சரியில்லை என்பதை உணர்ந்தவர், "நம்மைத் தாக்கவரும் பகையாளிகளிடம் எத்தனை கலங்கள் இருக்கும் என்பதை உன்னால் யூகிக்க முடியுமா?" என வினவினார்.

"அதில் என்ன பிரச்சனை இருக்கப் போகிறது வளவனாரே! குறைந்தது ஆயிரம் கலங்களையாவது நான் எதிர்பார்க்கிறேன். அதைவிட அதிகமாக வந்தாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை."

"ஆயிரம் கலங்களை உன்னிடம் இருக்கும் சில நூறு கலங்களால் எதிர்த்துத் தாக்கி அழித்துவிட இயலுமா?"

"அவர்களை என்னால் அழித்து விட இயலும் என்று நான் கூறவே இல்லையே!"

வியப்புடன் அவனை நோக்கினார் வளவனார்.

https://telegram.me/aedahamlibrary

“அவர்களைத் தடுத்து நிறுத்துவது எனது பொறுப்பு.”

“குமரா சிந்தித்துத்தான் நீ பேசுகிறாயா?”

“நிச்சயமாக அய்யா... இந்தச் சில நூறு கலங்களை மட்டும் எடுத்துக் கொண்டு என்னால் கொற்கையையோ அல்லது குமரியையோ அல்லது முசிறியையோ என்னால் தாக்கி வெற்றி பெற முடியாது. ஆனால் இந்தச் சிறு படையைக் கொண்டு எத்தனை கலங்கள் வந்தாலும் அவர்களைப் புகாரில் மண்ணைக் கவ்வச் செய்வேன். படைகளைக் கொண்டு நான் அமைக்கப்போகும் இரும்புக் கவசத்தை மீறி ஒரு படகு புகார் கடற்கரையை அடைந்தாலும் நான் கடலிலேயே வாள் வடக்கிருத்தலை மேற்கொண்டுவிடுகிறேன் வளவனாரே. நிலம் வழியாக நம்மைத் தாக்க வரும் படையினர் விரட்டப்படும் வரை நான் நிச்சயம் கடலாடிக் கொண்டிருப்பேன்” எனக்

கூறிக் கொண்டிருந்த போதே இடைம றித்த வளவனார் எதையோ கூற வாயெ டுத்தார்.

ஆனால், அதற்குள் முந்திக் கொண்ட பரதவன் குமரன், "எப்ப டிக் கடற்போர் செய்யப் போகிறேன் என மட்டும் வினவாதீர்கள்? செங்குவீரர் போர் உத்திகளையும் கற்பித்துவிட்டுத் தான் சென்றிருக்கிறார். இன்னும் ஆயி ரமாயிரம் ஆண்டுகளுக்கு இந்தப் போர் வரலாற்றில் நிச்சயம் பேசப்படும் என்பது மட்டும் திண்ணம் வளவனாரே! போர் முடிவிலிருந்து அதனைத் தாங்கள் நிச் சயம் அறிந்துகொள்வீர்கள்!" எனக் கூறி யவன் அவரது மறுமொழியை எதிர்பாரா மல் சென்று தனது ஆசனத்தில் அமர்ந்து கொண்டான்.

வளவனாரும், இரும்பிடர்த்தலைய ரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண் டார்கள். அப்போது பிடர்த்தலையர், "வளவனாரே, செங்குவீரன் இவர்களுக்

குப் போர்ப் பயிற்சிகளை மட்டும் அளித்துச் செல்லவில்லை. தன்னம்பிக்கையை ஊட்டிவிட்டுச் சென்றிருக்கிறான்" எனத் தெரிவித்தார்.

"அது மட்டுமல்ல பிடர்த்தலையரே! ஒவ்வொருவரும் சுதந்திரமாகத் தனியாக முடிவெடுக்கும் அளவிற்கு அனைவரையுமே படைத் தலைவர்களாக உருமாற்றி விட்டுச் சென்றிருக்கிறான்" எனக் கூறியவர் மீண்டும் தனது ஆசனத்தில் அமர்ந்து கொண்டார்.

சிறிது நேரம் அமைதி நிலவியது. அப்போது வளவனார், "வானவல்லி, வில்லவனைத் தேடி ஆயிரம் புரவி வீரர்களுடன் சேர இளவரசன் சென்றிருக்கிறான் என்று பிடர்த்தலையர் தெரிவித்தாரே, வில்லவனிடமிருந்து செய்தி ஏதாவது வந்ததா? கடைசியாக வந்த தகவல் என்ன?" என வினவினார்.

வானவல்லி தனக்கு முன் அமர்ந்தடாள்தொபியாசை நோக்கினாள்.

https://telegram.me/aedahamlibra

"நீயே கூறலாம். டாள்தொபியாசை நோக்க வேண்டிய அவசியம் இல்லை வானவல்லி. வில்லவனை அனுப்பி வைத்தவள் நீ தானே! என்ன பதில் கூறப் போகிறாய்? சேரப் பட்டத்து இளவரசனின் வீரத்தை நீ அறிந்திருப்பாய் என்று நம்புகி றேன் நான். நேருக்கு நேர் எதிர் கொண்டு அவனை வென்றவர்கள் யாரும் கிடை யாது. வில்லவனின் நிலை என்ன?"

"வில்லவருக்கு எந்த ஆபத்தும் இல்லை வளவனாரே! அவர் இப்போது பெரும் பாதுகாப்புடன் இருக்கிறார். அவ ரைப் பற்றிய கவலையும் உங்களுக்கு வேண்டாம்!" எனச் சுருக்கமாக விடைய ளித்தாள் அவள்.

"சேர இளவலிடமிருந்து தப்பி மீண் டும் சோழ நாட்டு எல்லையை அவனால் அடைய இயலும் என்று நம்புகிறாயா நீ?" என வினவினார் அவர்.

அவரது குரலில் சிறு ஏளனம் இருந்தாலும் அதைக் கண்டுகொள்ளாத

வானவல்லி டாள்தொபியாசை நோக்கி, “துளுவ எல்லையின் நிலையை முழுவ துமாக அனைவருக்கும் தெரிவி டாள் தொபியாஸ்” எனக் கட்டளையிட்டாள்.

“துளுவ நாட்டின் எல்லையின் நிலை நம் உபபடைத் தளபதி வில் லவனால் தொடங்கப்பட்ட ‘எரிபரந்தெ டுத்தலை’ இதுவரை எவராலும் தடுத்து நிறுத்த இயலவில்லை. துளுவ எல்லை யில் சேர நாடு இன்னும் எரிந்து கொண் டுதான் இருக்கிறது. எரிபரந்தெடுத்தலை மேற் கொண்டது மட்டுமல்லாமல் வில் லவன் அகப்பா கோட்டையையும் கைப் பற்றிக் கொண்டு நிலைபெற்றுவிட்டார். அவரை அங்கிருந்து இனி வெளியேற்று வது என்பது சாதாரணக் காரியம் அல்ல. சேரப் படையே முயன்றாலும் அவராக இனி கோட்டையை விட்டு வெளியேறி னால் தான் உண்டு” எனத் தெரிவித் தான்.

அவன் கூறிக் கொண்டிருந்ததை வியப்புடன் கேட்டுக் கொண்டிருந்த வள வனார், “என்ன, சேரர்களின் அகப்பா கோட்டையை வில்லவன் கைப்பற்றி விட்டானா? அதுவும் சேர இளவலின் புர விப் படையை முறியடித்து...?” என நம் பிக்கை கொள்ளாமல் வினவினார்.

“எனக்கு ஒரு சந்தேகம்?” என்றான் டாள்தொபியாஸ்.

“என்ன?”

“உங்களுக்கு அவநம்பிக்கை நம் உபபடைத் தளபதியின் மீதா? அல்லது நம்பிக்கை சேர இளவலின் மீதா?”

“இல்லை டாள்தொபியாஸ். நான் அகப்பா கோட்டையின் மீதிருக்கும் நம் பிக்கையில் வினவுகிறேன்! சமீப கால மாக அகப்பா கோட்டையை அவர் கள் பலப்படுத்தவில்லை. ஆனால், அந் தப் பலவீனத்தைக் கொண்டு அதைக் கைப்பற்றுவது என்பது சாதாரணக் காரி

யம் அல்ல. தென்னகத்தின் வலிமையான கோட்டைகளுள் அதுவும் ஒன்று. கடைசியாகச் சோழ மன்னர் செம்பியன் தான் அதைக் கைப்பற்றினார். அதன் பிறகு அது துளுவ வேளிர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால், அதை இதுவரை எவரும் கைப்பற்றியது இல்லை. முப்புறமும் பாயும் ஆறு. அடர்ந்த வனம், உயர்ந்த குன்றுகள் என இயற்கை அரணைக் கொண்டது அகப்பா கோட்டை! அதை வில்லவன் கைப்பற்றிவிட்டான் எனக் கூறுவதைத் தான் நம்ப இயலவில்லை."

"அய்யா... தகுந்த காலத்தில் காரியத்தைச் செய்தால் அக்காரியம் நிச்சயம் வெற்றியடையும் என்பதைத் தாங்கள் அறிவீர்கள் தானே! அதைத்தான் வில்லவனும் செய்திருக்கிறார்."

வளவனார் எந்தப் பதிலையும் கூறாமல் சிந்தித்தபடி அமர்ந்திருந்தார்.

பிறகு, கரிகாலன் இல்லாததால் முக்கிய முடிவுகள் எதுவும் எடுக்கப்படா

மல் இந்திரத் திருவிழா பற்றி மட்டுமே விவாதித்து விட்டு அனைவரும் கிளம்பி னார்கள்.

டாள்தொபியாஸ், பரதவன் குமரன், திருக்கண்ணன் மட்டும் ஆலோசனை அறையில் அமர்ந்திருந்தார்கள். மூவரிட மும் வந்த வானவல்லி, “கரிகாலன் எங்கே சென்றிருக்கிறான் என்பதை விரைந்து கண்டறியுங்கள்! கடந்த கிழமை வந்த கிரகணத்தில் கருத்த நிலவு கதிர வனை விழுங்கியது அல்லவா? அதைப் போன்றே சூரிய குல மன்னரை சந்தி ரக் குல மன்னர் அழிப்பார் என்ற பேச்சு மக்கள் மத்தியில் பரவி கொண்டிருக்கி றது. கடந்த சூரிய கிரகணத்தினால் சூரிய குலத்திற்குப் பெரும் ஆபத்து நேரும் என்று நிமித்திகர்கள் கூறிக் கொண் டிருக்கிறார்கள். கரிகாலனைப் பெரும் ஆபத்து ஒன்று மீண்டும் சூழ்ந்து கொண் டிருக்கிறது என்று எனது உள்மனமும் என்னைப் பெரிதும் எச்சரிக்கை செய்து கொண்டிருக்கிறது. விரைவில் அவன்

எங்கே என்று கண்டறிந்து விடுங்கள்!" எனக் கூறிவிட்டுச் செல்லலானாள் வான வல்லி.

**அடிக்குறிப்பு :**

1. அகப்பா - அகப்பா என்பது மலை மீது அமைக்கப்பட்டிருந்த கோட்டை. உயரமான மதிலினாலும், ஆழம் மிகுந்த அகழியினால் சூழப்பட்ட வலிமையான கோட்டை. இதை முதன் முதலில் தொடித்தோட் செம்பியன் தான் கைப்பற் றினான்.

ஆதாரம்: பதிற்றுப்பத்து 22, நற் றிணை 14 - மாமூலனார்.

2. சந்திர குலம்: பாண்டிய அரச வம் சத்தினர். சூரிய குலம் -சோழ அரச வம்சத் தினர். அக்னி குலம்- சேர அரச வம்சத்தி னர்.

https://telegram.me/aedahamlibra

# 36.

# வேந்தனின் தந்திரம்

கரையோரங்களில் பூத்திருந்த மல்லிகை மலர்கள் உதிர்ந்த தாலா? அல்லது கன்னிகளின் மார்பில் தடவப்பட்டிருந்த சந்தனங்கள் கலந்ததாலா? என எண்ணும்படி நறு மணத்துடன் பாய்ந்து கொண்டிருந்தது வையை நதி. வையை நதிக்கரையில் காணப்பட்ட மணல் திட்டுகளில் அமர்ந் திருந்த புலவர்கள் தாங்கள் இயற் றிய கவிகளைப் பாடி மக்கள் திரள் முன் அரங்கேற்றிக் கொண்டிருந்தார்கள். அதே வையை நதியின் மறுகரையில் குளிர்ந்த நீரில் நீராடிக் கொண்டிருந்த கன்னிகளும் கொஞ்சல் மொழியில் ஒரு

வரை ஒருவர் புறம்பு பேசி நீரை மற்றவர்கள் மேல் அள்ளித் தெளித்து விளையாடிக் கொண்டிருந்தனர்.

தெள்ளத் தமிழில் பாடல் இயற்றும் புலவர்களின் நாவிலிருந்து உதிக்கும் தமிழை விடக் கொஞ்சல் மொழியில் பேசிக் கொண்டிருக்கும் கன்னிகளின் அதரங்களிலிருந்து உதிரும் தமிழின் சுவை அதிகமானது எனக் கருதினார்களோ என்னவோ காளையர்கள் அனைவரும் புலவர்கள் சூழ்ந்திருந்த பகுதிகளிலிருந்து விலகிக் கன்னிகள் நீராடிய பகுதிகளிலேயே சுற்றிக் கொண்டிருந்தார்கள். அவ்வாறு சுற்றிய காளையர் சிலரைப் பார்த்த கன்னிகள் அருகில் இருக்கும் தோழிகளின் காதுகளில் இரகசியம் பாட அவர்கள் நாணத்தில் தலை குனிந்தனர். அதைக் கண்ட காளையர்கள் அங்கேயே கிறங்கிப் போய்ச் செய்வதறியாது திகைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தார்கள். காதல் கை சேர கள்ளழகரைத் துணைக்கு அழைக்கவும் அவர்கள் தயங்கவில்லை. இரவு

களவு மேற்கொள்ளப் போகும் கள்வர்க ளும் கள்ளழகரிடம் மனமுருகி வேண் டிச் சென்று கொண்டிருந்தார்கள். பூத்துக் குலுங்கிய மல்லிகை மலர்களைச் சுமந்து வந்த வையைக் கன்னிகளின் மார் தழு வியபடி ஓடிக் கொண்டிருந்தது. வையை நதிக்கரையில் பெருமதில் சூழ்ந்தபடி ஒய் யாரமாகத் தமிழைப் பாடியபடி தலைநி மிர்ந்து நின்று கொண்டிருந்தது கூடல் மாநகரம். மதுர மரங்கள் நிறைந்திருந்த தாலும், பெருமதில்கள் சூழப்பட்டதாலும் அது மிதிரை என வழங்கப்பட்டது. மிதி ரையானது திரிந்து மதுரை என்றே அக் காலத்திலேயே அனைவரும் அழைத்துக் கொண்டிருந்தனர்.

ஓங்குசீர் மதுரை, மதுரை மூதூர் மாநகர், தென்தமிழ், நன்னாட்டு தீது தீர் மதுரை, மாண்புடை மரபின் மதுரை, வானவர் உறையும் மதுரை, பதிவெழுவ றியாப் பண்பு மேம்பட்ட மதுரை மூதூர் எனப் பல்வேறு அடைமொழிகளால் புக ழப்பட்ட பெரும் பட்டினமான மதுரை

மாநகரம் மாலைப் பொழுதில் மீனாட்சி அம்மனின் அருளினால் பெரும் எழிலுடன் காணப்பட்டது. தொலைவிலிருந்தே மதுரை மாநகரத்தின் எழிலைக் கண்டபடி மாட்டு வண்டியில் வந்து கொண்டிருந்தனர் வேந்தனும், கரிகாலனும்.

புகாரில் வானவல்லி கரிகாலனுக்கு ஏதோ பெரும் ஆபத்து ஒன்று சூழ்ந்து கொண்டிருக்கிறது என்று உபபடைத் தலைவர்களிடம் கவலைப் பட்டுக் கொண்டிருந்த அதே நேரத்தில் கரிகாலன் வேந்தனுடன் வைகை நதிக்கரைப் பாலத்தில் பாண்டிய தலைநகர் கூடல் மாநகரத்திற்குள் நுழைந்து கொண்டிருந்தார்.

இதற்கு முன் எத்தனையோ முறை கூடல் மாநகரத்திற்குள் சென்றிருந்தாலும் முதல் முறையாகச் செல்வதைப் போன்றே கரிகாலர் அப்போதும் பறந்து விரிந்திரிந்த அப்பட்டினத்தை வியப்புடன் பார்த்தபடியே வையைத் தென்

றலின் சுகந்தத்தை அனுபவித்தபடியே மாட்டுவண்டியில் சென்று கொண்டிருந் தார். மதுரைப் பட்டினம் புகாருடன் ஒப் பிடுகையில் சிறு பட்டினம்தான். ஆனால், மதுரையின் கலை வண்ணமும், அதன் தமிழ்ச் சிறப்பும் அனைவரையும் வெகு வாகக் கவர்ந்திருந்தது. மதுரையின் புரா தனப் பெயர், சங்கம் வளர்த்தத் தமிழ், மதுரை மல்லிகை இவற்றை விடவும் ஆடவர்களைக் கவர்ந்தது என்னவென் றால் மதுரை வாழ் ஏந்திழைகள்தான்! சிவ பெருமானின் மனைவி பார்வதி தேவியே பூலோகத்தில் பிறக்க ஆசைப் பட்டபோது அவள் தேர்ந்தெடுத்த குலம் பாண்டிய குலம்.

பாலத்தைக் கடந்து கொண்டிருந்த கன்னிகளைக் கவனித்துக் கொண்டு தான் வந்த பணியையும் மறந்தபடி வண் டியின் பின்னால் அமர்ந்திருந்தான் வேந் தன்.

வையை நதிப் பாலத்தைக் கடந்து கூடல் மாநகர வாயிலை அடைந்த போது அவர்களைச் சில காவலர்கள் வழி மறிக் கலானார்கள். உடனே அதைக் கவ னித்த வேந்தன் வண்டியிலிருந்து கீழே குதித்து அவர்களிடம் சென்று இடை யிலிருந்த இலைச்சினை மோதிரத்தைக் காட்டினான். உடனே வாயிற் காவலர் கள் அவனுக்குத் தலைவணங்கி கூடல் நகருக்குள் அனுப்பி வைத்தார்கள். கள் வர்களிடம் கொண்டுவந்திருந்த பொன் முடிப்பை இழந்த வேளையிலும் தனது முத்திரை மோதிரத்தை இழக்காமல் கொண்டுவந்திருந்த அவனது சாமர்த்தி யத்தைக் கண்டு வேந்தனும், கரிகாலரும் வியக்கவே செய்தார்கள்.

கூடலுக்குள் நுழைந்த பிறகு வேலன் வேந்தனிடம், “சரி வேந்தா... உன்னைச் சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி. நீ வந்த காரியத்தைக் கவனி. நாங்கள் இருவரும் இன்று மாலையே மருத்து வரை சந்தித்துவிட்டுக் கிளம்பவிருக்கி

றோம். வாய்ப்பு கிடைத்தால் இன்னொரு நாள் சிந்திப்போம். உனக்குக் கொடுத்த வாக்கினைக் காலத் தாமதமாக நிறை வேற்றியதற்கு நான் மிகவும் வருத்தப்படு கிறேன்" எனக் கூறி விடைபெற்றான்.

"இருமுறை எனது உயிரை உன் மைத்துனன் கரிகாலன்..." எனக் கூறிய வேந்தன் திடீரென்று வாக்கியத்தைப் பாதியிலேயே முடித்துவிட்டு அருகில் நின்ற கரிகாலனிடம், "மன்னித்துவிடு தம்பி. உனக்குத்தான் உன்னைக் கரிகா லன் என்று அழைத்தால் பிடிக்காதே" எனக் கூறி வருந்தியவன் பிறகு வேந்தனி டம், "இருவரும் எனது உயிரை இரண்டு முறைக் காப்பாற்றியிருக்கிறீர்கள். அதற் குப் பெரும் நன்றி. மழை குறுக்கிட்டு வழி மறித்ததற்குத் தாங்கள் என்ன செய்வீர் கள்? நான் விடை பெறுகிறேன். முடிந் தால் பொழுது இருட்டிய முதல் சாமத் தில் மருத்துவ விடுதியில் உங்களை நான் சந்திக்கிறேன். அப்போது நீங்கள் செய்த உதவிக்கு நிச்சயம் கைம்மாறு செய்கி

றேன் நான்” எனக் கூறிக் கொண்டு இருவரையும் கட்டியணைத்து நட்பு பாராட்டிவிட்டுத் தனது ஒற்றைப் புரவியைக் கையில் பிடித்துக் கொண்டு விடைபெற்றுச் செல்லலானான்.

பார்வையிலிருந்து மறையும் வரை வேந்தனையே கரிகாலனும், வேலனும் பார்த்துக் கொண்டு நின்றார்கள். பிறகு வேலன் கரிகாலனிடம், “இளவரசே, அடுத்து என்ன பணி?”என வினவினான்.

ஏதோ சிந்தனையில் நின்ற கரிகாலர், “மருத்துவரிடம் செல்வோம்” எனக் கூறலானார்.

“இளவரசே” எனச் சற்றுச் சத்தமாக அழைத்தான் வேலன்.

“அதான் தெரிவித்தேனே, வேந்தன் மாலைப் பொழுதில் நம்மை அங்குதானே சந்திக்கிறேன் எனத் தெரிவித்தான். அங்கு அவனுக்காக நாம் காத்திருப்போம். அவனைச் சந்தித்த பிறகு நாம்

இருவரும் புகாருக்குத் திரும்புவோம். வரும் முழு நிலவிற்கு நாம் புகாரில் இருக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்."

"ஒரு கிழமைக் காலத்திற்குள் நம் மால் கூடலிலிருந்து பயணித்துப் புகாரை அடைய இயலுமா?" என வியப்பில் வின வினார்.

"நாம் திரும்புகையில் புரவியில் பய ணிப்போம். வந்த வழியே நாம் பய ணிக்கப்போவதில்லை. பறம்பு நாட்டின் வழியே செல்லப்போகிறோம். இருவருக் கும் வேண்டிய புரவிகளைச் சம்பாதித் துக்கொள்ளுங்கள்! காலையில் நாம் பய ணிக்கப் போகிறோம்" எனக் கூறிக் கொண்டு மருத்துவரை நோக்கி வண்டி யைத் தட்டிவிட்டான் கரிகாலன்.

அடலேறுகள் இரண்டும் புரவி வேகத்தில் கூட்டமற்ற வீதிகளின் வழியே மருத்துவ விடுதியை நோக்கிப் பாய்ந் தன. அவர்கள் இருவரும் புறப்படும் வரை

https://telegram.me/aedahamlibra

அமைதியாக மறைந்திருந்து கவனித்துக் கொண்டிருந்த வேந்தன் புன்சிரிப்பு ஒன்றை உதிர்த்துவிட்டு அரண்மனைக்குள் பிரவேசிக்கலானான்.

பொழுது மேற்கில் சாய்ந்த முதல் சாமப் பொழுதின் தொடக்கம். சித்திரை மாதமாகையால் கதிரவன் மறைந்த பிறகும் வெளிச்சம் இருந்து கொண்டிருந்தது. பட்டினத்தில் ஏற்றி வைத்திருந்த நெய் விளக்குகள் சூழத் தொடங்கிய இருளை விரட்ட முயற்சித்துக் கொண்டிருந்தன. கரிகாலன் எதிர்பார்த்தபடியே வேந்தன் அவர்களைத் தேடிக் கொண்டு வந்திருந்தான். வந்தவனது உருவம் மொத்தமும் முழுவதும் மாறியிருந்தது. அதைக் கண்ட திகைத்து நின்றார்கள். பெரும் செல்வந்தனைப் போன்று உருமாறி வந்திருந்தான் வேந்தன். அவர்களின் வியப்பைக் கண்ட வேந்தன், “என்ன நண்பர்களே வியக்கிறீர்கள். பாண்டிய மன்னர் தென்னவனின் பரிசுதான் இது. நான் கொண்டுவந்த

செய்திக்காக அவர் அளித்த பரிசு இது" எனச் சிரித்தபடி தெரிவிக்கலானான்.

வேலன் ஏதோ பேசுவதற்கு வாயெடுத்தான். ஆனால் அதற்குள் முந்திக் கொண்ட வேந்தன், "நண்பா... இன்று மாலை செல்லும்போது உங்களது உதவிக்கு ஏற்ற கைம்மாறை அளிக்கிறேன் என்று தெரிவித்தேன் அல்லவா? உங்களுக்கு வேண்டிய பரிசை கொண்டு வந்திருக்கிறேன். வந்து பெற்றுக்கொள்ளுங்கள்" எனக் கூறியபடி அவர்கள் இருவரையும் அழைத்துக் கொண்டு அந்த மாளிகைக்கு வெளியே வந்தான்.

வெளியே வந்த இருவருக்கும் பெரும் வியப்பு. அங்கு நின்று கொண்டிருந்த அவர்களின் மாட்டு வண்டி காணப் படவில்லை. அதற்குப் பதில் அங்கு ஒரு பெரும் புரவி வண்டி ஒன்று நின்று கொண்டிருந்தது. ஆறு புரவிகள் பூட்டியிருந்தது. வசதியான வண்டி. இளவரசர்கள், குறுநில மன்னர்கள், பெரும் படைத்

தளபதிகள் அவசரமாகச் செல்லப் பயன் படுத்தும் புரவி ரதம் அது. சாலை யின் சேற்றில் சிக்கிக்கொள்ளாத அள விற்கு வலிமையான சக்கரத்தை உடை யது. அந்த வண்டியில் பயணிக்கும்போது ஆறு உயர்ந்த ரகப் புரவிகளின் இழுப்பு சக்தி வானில் பறப்பதைப் போன்ற தோற்றத்தை அளிக்கக்கூடியது. அந்தப் புரவி வண்டியையே இருவரும் பார்த்தபடி வியந்து நின்று கொண்டிருந்தார்கள்.

“என்ன மலைப்பாக இருக்கிறதா? எனது உயிரைக் காப்பற்றியதற்காக உங் களுக்கு நான் இந்தப் புரவி வண் டியை அளிக்கவில்லை. எனது புரவியின் காயத்தை ஆற்றி அதைக் காப்பாற்றினீர் கள் அல்லவா? அதற்குத் தான் இந்தப் பரிசு. இருவரும் மறுக்காமல் இந்த ஏழை யின் பரிசைப் பெற்றுக்கொள்ள வேண் டும்”எனக் கூறியபடி கையிலிருந்த சாட் டைக் கயிறை கரிகாலனிடம் வழங்கி னான்.

கரிகாலன் குழப்பத்துடன் அருகில் நின்ற வேலனைப் பார்த்தார். அவனது குழப்பத்தைப் புரிந்து கொண்ட வேந் தன், “தம்பி, உனது மாமன் திட்டுவார் என்று கவலைப் பட வேண்டாம். இப் போது அவர் எனக்கு நல்ல நண்பர். நீ மறுக்காமல் இதை வாங்கிக்கொள்ள வேண்டும்” எனக் கூறிக் கொண்டு சாட் டையை அவன் கையில் திணித்து விட் டான். கரிகாலன் ஆர்வத்துடன் அப்புரவி வண்டியின் மீது ஏறி அமர்ந்தான். வேல னும், வேந்தனும் பின்னால் ஏறி அமர்ந்து கொண்டார்கள்.

“எங்கே நாம் செல்லப் போகி றோம்?” என வினவினார் கரிகாலர்.

“கிழக்கில் இருக்கும் மாளிக் கைக்கு வண்டியை விடு!” கட்டளையிட் டான் வேந்தன்.

“எனக்குப் பாதை தெரியாதே!”

https://telegram.me/aedahamlibra

உடனே வேலன், "உனக்கு மாட்டு வண்டியையே ஓட்டத் தெரியாது. இந்த நிலையில் நீ புரவி வண்டியை ஓட்ட நினைக்கிறாய். உனது செயல் குறவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டதைப் போன்று இருக்கிறது. இப்படிப் பின்னால் வா, வேந்தனே ரத்தத்தைச் செலுத்தட் டும்" எனக் கட்டளையிட்டான்.

கரிகாலர் வருத்தத்துடன் பின்னால் நகரலானார். உடனே அவரைத் தடுத்த வேந்தன், "தம்பி, உனது மாமனது பேச் சைக் காற்றில் விடு! உனக்கு நான் புரவி வண்டி ஓட்டப் பழகிக் கொடுக்கிறேன். உனக்குப் புரவிச் சவாரி செய்யத் தெரியும் தானே?" என வினவியபடி கரிகாலனின் அருகில் வந்து அமர்ந்தான் வேந்தன்.

"சவாரியெல்லாம் நன்கு செய் வேன். ஆனால், புரவி வண்டியைத் தான் நான் இதுவரை செலுத்தியதில்லை."

"இது ஒன்றும் அப்படியொன்றும் பிரமாதம் இல்லை தம்பி. மாட்டு வண்

டியை ஓட்டுவதைப் போன்றுதான் இது வும்!” எனக் கூறியவன் கரிகாலனின் கையிலிருந்த சாட்டைக் குச்சியை வாங் கிச் சாட்டைக் கயிற்றினால் புரவிகளைத் தட்டி விட்டான். புரவிகள் ஆறும் பாயத் தொடங்கின. அரை நாழிகைப் பொழு திற்கெல்லாம் அவர்கள் மாளிகையை அடைந்திருந்தார்கள்.

மாளிகைக்குள் இருவரையும் அழைத்துச் சென்ற வேந்தன் அவர் களை நன்கு உபசரித்தான். அனைத்தை யும் பார்த்துப் பார்த்துச் செய்து கவனிக்க லானான்.”ஓய்வெடுங்கள்” எனக் கூறி விட்டு அவர்கள் இருவரையும் ஒரு அறை யில் விட்டுவிட்டு வெளியே சென்றான் வேந்தன்.

பிறகு ஒரு நாழிகைப் பொழுது கடந்துவந்த போது கரிகாலன் தனது காலில் களிம்பினை பூசிக் கொண்டி ருந்தான். அதைக் கவனித்த வேந்தன், “மருத்துவர் என்ன தெரிவித்தார் வேலா?

வந்ததில் ஏதாவது பயன் இருந்ததா?" என வினவினான்.

"வருத்தப்படும் அளவிற்கு ஏதும் இல்லை வேந்தா... மிதிரை மீனாட்சி அம்மனின் அருளில் இவனது யானைக் கால் குணமாகிவிடும் எனத் தெரிவித்துவிட்டார். களிம்பினைக் கொடுத்திருக்கிறார். இதைத் தடவினால் காலையிலேயே வீக்கம் வாடிவிடுமாம். அச்சம் கொள்ளும்படி எதுவும் இல்லை எனக் கூறிவிட்டார்" என மகிழ்ச்சியுடன் தெரிவித்தான் வேலன்.

"நல்லது நண்பா... கேட்கவே மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. உன் மைத்துனனுக்கு நல்லது நடந்தால் எனக்கும் மகிழ்ச்சிதான்" எனத் தெரிவித்தவன் கையிலிருந்த முத்து மாலையை வேலனது கழுத்தில் அணிவிக்கலானான்.

அவனது செயலைப் பார்த்துப் பதறிய வேலன், "நண்பா... என்ன இது?

https://telegram.me/aedahamlibrary

எதற்காக இந்த முத்து மாலை. பார்த்தால் மிகவும் விலை மிக்கது போலல்லவா தோன்றுகிறது எனக்கு?" என நிலை தடுமாறினான்.

"ஆமாம் நண்பா... உனக்காகவே பாண்டிய மன்னரிடம் இந்த முத்துமாலையைக் கேட்டு வாங்கினேன்."

"நண்பா, உனது உயிரைக் காப்பாற்றியதற்காகக் கூலியா இது?" சற்றுக் கோபத்துடன் வினவினான் வேலன்.

"இல்லை நண்பா... அந்தச் செயற்கரிய உதவிக்கு ஈடாக என்னால் எதையுமே செய்ய இயலாது. இந்த இரண்டு பரிசும் அதற்காக இல்லை. உனது வண்டிக்காரன் பாட்டுக்காகத் தான்!"

"எனது பாட்டுக்காகவா?"

"ஆம்! உனது குரலுக்குத்தான் இந்த இரண்டு பரிசும்!" என அவனிடம் கூறிய வேந்தன் பிறகு கரிகாலனிடம், "நீ உறைந்தைக்கு வா தம்பி... உனது திற

மைக்கும், வீரத்திற்கும் ஏற்ப சிறந்த பரிசினை உனக்கு நான் வழங்குகிறேன். நான் அவசரமாகக் கிளம்ப வேண்டும். இனி எப்போது சந்திக்கப் போகிறோம் என்று எனக்குத் தெரியாது?" எனக் கூறலானான்.

"எங்கே சேர நாட்டு முசிறித் துறை முகத்தை நோக்கிப் பயணிக்கப் போகிறீர்களா? சில தினங்களாவது ஓய்வெடுத்துப் பயணிக்கலாம் அல்லவா? அலுப்பாக இல்லையா?" என வினவினார் கரிகாலர்.

"இல்லை தம்பி... முசிறிக்குச் செல்ல வேண்டிய அவசியம் இனி இல்லை. நான் நேராக உறைந்தைக்குச் செல்லப் போகிறேன்."

"என்ன உறைந்தைக்கா?" வியப்புடன் வினவினார் கரிகாலர்.

"நான் உறைந்தைக்கு உடனே திரும்புவதால் உனக்கு ஏதாவது பிரச்

சனை இருக்கிறதா?" சிரித்தபடி வினவி னான் வேந்தன்.

"இல்லை... இல்லை... நாங்களும் புகாரை நோக்கிக் காலையில் கிளம்ப லாம் என்று இருந்தோம். பறம்பு மலை வரையாவது உங்களுடன் பயணிக்கலாம் அல்லவா? ஆதலால் தான் வினவினேன் நான்!"

"நானும் நாளை காலையில் தான் பயணிக்கலாம் என்று இருந்தேன். வா பறம்பு மலை வரை நாம் ஒன்றாகவே பயணிப்போம். எனது புரவியையும் நான் ஆறோடு ஏழாகச் சேர்த்துக் கட்டி விடுகி றேன். விரைந்து சென்றுவிடலாம்!"

"நல்லது!" எனக் கூறி விடைபெற் றார் கரிகாலர். குழப்பத்துடனே கரிகாலர் படுக்கைக்குச் சென்று உறங்கலானார்.

பொழுது விடிந்தது.

'வானவல்லி தன்னிடம் தெரிவிக் கையில் வேந்தன் கூடலுக்குச் சென்று

https://telegram.me/aedahamlibra

உடனே திரும்ப மாட்டான். அவன் முசிறிக்குச் சென்று விட்டுத்தான் மீண்டும் உறைந்தைக்குத் திரும்பி வருவான். அதற்கு ஏற்றார் போன்றுதான் நான் ஓலையை மாற்றி எழுதி வைத்திருக்கிறேன்' என்று தானே அன்று தெரிவித்தார். ஆனால் இவன் உடனே உறைந்தைக்குத் திரும்பப் போகிறான் என்றல்லவா கூறுகிறான். கூடல் அரண்மனையில் என்ன நடந்திருக்கும்?' எனும் குழப்பத்துடன் புரவி வண்டியில் அமர்ந்திருந்தான். ஏழு புரவிகளின் வேகத்தில் அவர்கள் அமர்ந்திருந்த வண்டி சாலையில் பறந்து கொண்டிருந்தது. வேலன் தான் புரவி வண்டியை செலுத்திக் கொண்டிருந்தான்.

கரிகாலனின் முகத்தில் தவழ்ந்த குழப்பத்தைக் கவனித்த வேந்தன், "என்ன தம்பி உனது முகம் குழப்பத்தில் தவிக்கிறது? முசிறிக்குச் செல்ல வேண்டும் எனக் கூறிக் கொண்டு அரண்மனைக்குள் நுழைந்தவன் இப்

போது உடனே உறைந்தைக்குச் செல்கிறானே, என்று சிந்திக்கிறாயா?" என அவரது மனத்திரையைச் சரியாக வாசித்தது போலவே வினவலானான்.

ஆனால், கரிகாலரோ, "இல்லை" என மட்டும் ஒற்றை வார்த்தையில் பதிலை அளிக்கலானார்.

"அதிசயம் எப்போதுமே எங்குமே புதைந்திருக்கிறது தம்பி. பாண்டிய மன்னர் தென்னவனைப் பார்த்த அடுத்தக் கணத்தில் நான் வந்த பணி அனைத்தும் முடிந்துவிட்டது. நான் மேற்கொள்ள வந்த பணியை அவரே எனக்கு முன் செய்து முடித்துவிட்டார். ஆதலால் நானும் உடனே திரும்பிவிட்டேன்."

அவனிடம் செய்தி ஏதாவது கிடைக்கிறதா என்று முயற்சித்த கரிகாலர், "ஆச்சர்யமாக இருக்கிறது" எனத் தெரிவித்தார்.

பதிலுக்கு வேந்தன், "ஆச்சர்யமாகத் தான் தம்பி இருக்கும், மருத்துவரின் களிம்பினை நீ பூசியதும் உனது கால் வீக்கம் இப்போது முற்றிலும் மாறி விட்டது அல்லவா, அதைப் போன்றதுதான் நான் சென்ற காரியமும் நல்லபடியாக முடிந்து விட்டது" எனத் தெரிவித்தான்.

வேந்தனின் பேச்சு கரிகாலருக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியது. தன்னை அவன் அடையாளம் கண்டிருப்பானோ என்று சந்தேகமும் கொள்ளத் தொடங்கினார். அதற்கு மேல் கரிகாலன் எந்தக் கேள்வியையும் கேட்கவில்லை.

கரிகாலர் அமைதியாகவே பயணித்துக் கொண்டிருந்தார்."தம்பி, சமீபகாலமாகவே என்னிடம் எந்த இரகசியங்களும் தங்க மறுக்கிறது! உன்னால் அதற்கும் வைத்தியம் பார்க்க இயலுமா?" என வினவினான் வேந்தன்.

"இரகசியமா?"

https://telegram.me/aedahamlibra

"ஆம்!"

"மனதினுள் தேக்கிவைக்க முடியாத அளவிற்கு அப்படி என்ன இரகசியமாம்!"

"அதைக் கூறுகிறேன் கேட்கிறாயா?"

"சரி, கூறுங்கள். அதையும்தான் கேட்டுப் பார்ப்போம்!"

"ஆனால், ஒரு நிபந்தனை."

"நிபந்தனையா?"

"ஆம்!"

"என்ன?"

"நான் கூறப் போகும் இரகசியத்தை நீ யாரிடமும் கூறக் கூடாது!"

வேந்தன் கூறியதைக் கேட்டதும் வேலன் மற்றும் கரிகாலர் இருவரும் பலமாகச் சிரிக்கலானார்கள்.

https://telegram.me/aedahamlibra

"இப்போது எதற்காக இருவரும் சிரிக்கிறீர்கள்?"

"நீர் உன் இரகசியத்தைக் கூறும்" எனச் சிரித்தபடியே தெரிவித்தான் வேலன்.

"சரி... சரி... கூறுகிறேன்."

"........"

"தம்பி, சோழ தேசம் இன்னும் சில திங்கள்களில் அழியப்போகிறது?"

"என்ன கூறுகிறீர்?" மனதிற்குள் கோபம் எழுந்தாலும் அதை அடக்கிக் கொண்ட கரிகாலர் வியப்புடனே அவனி டம் வினவினார்.

"நான் பொய் கூறவில்லை. ஒரே நேரத்தில் புகாரைத் தாக்கப்போகிறார் கள்?"

"தாக்கப் போகிறார்களா?"

"ஆம்!"

https://telegram.me/aedahamlibra

"யார்? யார்?"

"யார் யார் தாக்கப் போகிறார்கள் என்பதைச் சொல்லி முடிக்க இயலாது. அது பெரும் பட்டியல்!"

"ஓ! அவ்வளவு பகைவர்களைச் சோழ நாடு அதற்குள் தேடிக் கொண்டதா?"

"ஆமாம்... ஆமாம்... சோழர் படைத் தலைவன் செங்குவீரன் எப்படியெல்லாம் ஆடினான். அவர்கள் அனுபவிக்கட்டும்!"

"செங்குவீரன் தான் மடிந்துவிட்டாராமே!"

"ஆமாம்... அவன் மடிந்துவிட்டான். ஆனால், அவன் உருவாக்கிய பகையை யாராலும் அழிக்க இயலவில்லையே!"

"அவர் பெரும் வீரர் என்றல்லவா கேள்விப்பட்டோம். அவர் எப்போது பகைமையை உருவாக்கினார்?"

"என்ன தம்பி இப்படி உலகம் அறியாத பிள்ளையாக இருக்கிறாய். தன் கையில் வாள் இருக்கும் வரை எவராலும் தோற்கடிக்க முடியாது எனும் கர்வத்தில் அவன் எப்படியெல்லாம் திமிருடன் திரிந்தான். உறைந்தை மன்னர் இருங்கோவைப் புகாரில் அவமதித்துத் திருப்பி அனுப்பினான். உறைந்தை அரண்மனைக்குள் புகுந்து இருங்கோவின் தலையில் தனது வாளினை வைத்து மிரட்டிவிட்டுத் தப்பினான். கொற்கையில் பாண்டிய வீரர்கள் பலரின் தலைகளைக் கொய்துவிட்டுத் திரும்பியிருக்கிறான். இத்தனை மன்னர்களும், இவர்களுக்குத் துணையான மன்னர்களும் இதைக் கண்டு அமைதியாக இருப்பார்களா?"

"கடினம் தான்!"

"பாண்டிய படை தயாராகப் பறம்பு மலைக்கு அருகில் இருக்கிறதாம்! சேரர் மற்றும் சிங்களக் கடற்படை ஏற்கெனவே

https://telegram.me/aedahamlibra

கொற்கைத் துறைமுகத்தை அடைந்து விட்டது. அவர்களும் புறப்படப் போகிறார் கள். ஒரே நேரத்தில் பெரும்படையின் முற்றுகையில் புகார் மொத்தமும் அழியப் போகிறது” எனக் கூறியவன் பேய் சிரிப்புச் சிரித்தான் வேந்தன்.

“அய்யா... எனக்கு ஒரு சந்தேகம்?” என வினவினார் கரிகாலர்.

“என்ன?”

“இதனை எதற்கு எங்களுக் குத் தெரிவிக்கிறீர்கள்? அவசியம் தான் என்ன?”

“நான்தான் முன்பே உனக்குத் தெரிவித்தேனே!”

“எதை?”

“என்னால் இரகசியத்தைக் காப் பாற்ற இயலாது என்று?”

“இரகசியத்தைக் காப்பாற்றத் தெரி யாத உங்களை எதற்கு உறைந்தை மன்

னர் பாண்டிய மன்னரிடம் அனுப்பி வைத்தார்?"

"எனக்கும் அந்தச் சந்தேகம் உண்டு தம்பி. அவர் பெரும் நம்பிக்கையில் என்னை அனுப்பி வைக்கிறார். ஆனால், நான் இடையில் உளறிவிடுகிறேனே! இப்படித்தான் வஞ்சியில் ஒரு பெண்ணைப் பார்த்தேன். அவளிடமும் அனைத்தையும் உளறிவிட்டேன். பிறகு எச்சரிக்கையுடன் அவளிடமே ஓலையைக் கொடுத்து உறைந்தைக்கு அனுப்பி வைத்துவிட்டேன்."

"உறைந்தைக்கா?"

"ஆம்!"

"எதற்கு?"

"அவள் யார் என்று உனக்குத் தெரியுமா?"

"எனக்கு எப்படி அய்யா தெரியும்?"

"தெரிந்துகொள்ள வேண்டுமா?"

“கூறினால் அறிந்துகொள்வேன்!”

“அவள் சோழப் படைத் தலைவனின் காதலி வானவல்லி. வளவனாரின் மகள்!”

“அவள் ஒற்றறிய வந்திருக்கிறாள் எனத் தெரிந்தும் அவளிடமே அனைத்தையுமே கூறிவிட்டீர்களே, நீங்கள் செய்தது முட்டாள்தனமான காரியமாகப் படவில்லை?”

“தம்பி நான் என்ன செய்தாலும் அதில் ஒரு அர்த்தம் இருக்கும்!”

“அர்த்தமா?”

“ஆம்!”

“என்ன அர்த்தம்?”

“அவளைக் மணந்துகொள்ள வேண்டியவன் எங்களது யுவராஜர்!”

“யுவராஜரா?”

“ஆம்!”

https://telegram.me/vedahamlibra

"பட்டத்து இளவரசர் என்று கூற லாம் அல்லவா?"

"உனக்கு வேண்டுமானால் நீ அப்ப டியே கூறிக் கொள்ளேன்!"

"சரி, எந்த நாட்டிற்குப் பட்டத்து இளவரசர்."

"உறைந்தைக்குத்தான்."

"யார் இருங்கோவின் புதல்வரைத் தான் அப்படிக் கூறுகிறீர்களா?"

"ஆம்... நீ பெரும் புத்திசாலியாக இருக்கிறாய். அனைத்தையும் உடனே யூகித்துவிடுகிறாய்!"

"சரி,, மேலே கூறுங்கள்!"

"அப்பெண்ணை நான் ஓலையு டன் உறைந்தைக்கு அனுப்பி வைத்து விட்டேன். இந்நேரம் அவள் மாளிகை யில் சிறைபட்டிருப்பாள். அவள் என்னை ஏமாற்ற நினைத்தாள். ஆனால், நான் அவளை ஏமாற்றிவிட்டேன்."

https://telegram.me/aedahamlibra

"..........."

"செங்குவீரன் என்ன வெஞ்சினம் உரைத்தான் என்று உனக்குத் தெரியுமா?"

"எனக்கு எப்படித் தெரியும்?"

"நான் கூறட்டுமா?"

"சரி தெரிவியுங்கள்!"

"'போரில் இருங்கோவையும், அவரது புதல்வரையும் கொன்ற பிறகே எனது காதலியின் தோள்களைத் தழுவுவேன்' என்று கூறினான்."

".........."

"இதுமட்டுமல்ல தம்பி!"

"அப்புறம் என்ன?"

"'அப்படி இருவரையும் போரில் கொல்லாமல் அவனது காதலியைத் தழுவினால் கணிகையரைத் தழுவும் பாவம்

எனது தோள்களுக்குக் கிடைக்கட்டும்' என்றும் கூறியிருக்கிறான்."

"........"

"ஆனால், அந்தக் காதலி இந்நேரம் உறைந்தையில் சிறை பட்டிருப்பாள். புகாரை வென்று சோழ இளவல் கரிகாலனைக் கொன்று உறைந்தை, புகார் என ஒட்டுமொத்த சோழ தேசத்திற்கும் யுவராஜனாக முடி சூடிய பிறகு எந்தப் புகார் கடற்கரையில் செங்குவீரன் வெஞ்சினம் உரைத்தானோ அதே கடற்கறையில் வானவல்லிக்கும், யுவராஜனுக்கும் மணமாகப் போகிறது" எனக் கூறியபடி பலமாக மீண்டும் மகிழ்ச்சியில் சிரித்துக் கொண்டிருந்தான்.

தன்னைக் காக்க வஞ்சிக்குச் சென்ற தனது சகோதரிக்கு வந்திருக்கும் ஆபத்தை நினைத்துப் பார்த்த கரிகாலரின் முகம் வாடியது. விழிகள் இரண்டும் சிவந்தன. 'அடுத்து என்ன செய்வது எனத் தெரியாமல் குழம்பிப் போய் வண்

டியில் சாய்ந்து கொண்டார். கரிகாலரின் வாடிய முக மாற்றத்தைக் கவனித்தப டியே உள்ளுக்குள் மகிழ்ச்சியுடன் சிரித் தபடி அமர்ந்திருந்தான் வேந்தன்.

வேந்தனின் பேச்சு கரிகாலரின் சந்தேகத்தை உறுதிப் படுத்திவிட்டிருந் தது. இவனுடன் தொடர்ந்து பயணிப்பது பெரும் ஆபத்து என அவரது மனம் அவ ரைக் கடுமையாக எச்சரித்தாலும் அவரது துணிச்சலோ 'இவன் என்ன செய்யப் போகிறான் என்பதையும்தான் பார்த்து விடுவோமே!'எனத் தைரியம் கூறியதால் அவர் அவனுடனே பயணிக்கலானார்.

கூடலிலிருந்து புறப்பட்டவர்கள் அடுத்த நாள் ஒரே மூச்சில் புரவியில் பய ணித்துப் பறம்புமலையை அடைந்தார் கள். அவர்கள் பறம்பு மலையை அடைந் தபோது இரவு கூடியிருந்தது. வேந் தன் இருவரையும் பறம்பு நாட்டிலிருந்த மாளிகை ஒன்றிற்கு அழைத்துச் சென் றான். மாளிகைக்குள் இருவரும் நுழைந்

https://telegram.me/aedahamlibra

தார்கள். அனைத்து வசதிகளையும் கவனித்த வேந்தன் இருவரையும் தனியறை ஒன்றிற்கு அழைத்துச் சென்றான்.

கரிகாலர் மற்றும் வேலன் இருவரும் விசாலமாக அனைத்து வசதிகளுடனும் காணப்பட்ட அந்த அறைக்குள் நுழைந்தார்கள். அடுத்தக் கணம் அறையின் கதவு படாரென்று சாத்தப்பட்டது.

வேலன் பதறிக் கொண்டு கதவைத் தட்டியபடி, “வேந்தா... கதவைத் திற. இது என்ன விளையாட்டு?” எனக் கோபத்துடன் வினவினான்.

“ஆமாம் நண்பா... விளையாட்டு தான். சோழ இளவரசர் கரிகாற் வளவன் என்னுடன் விளையாடுகையில் நான் அவருடன் விளையாடுவது தவறா?” என வினவினான் வேந்தன்.

அவன் ‘கரிகாற் வளவன்’ எனக் கூறியதுமே கரிகாலருக்கு அனைத்து உண்மையும் விளங்கிவிட்டது. மாளி

https://telegram.me/aedahamlibra

கைக்குள் அடைபட்டதை எண்ணி அவர் கலங்கவில்லை.

ஆனால், வேலனோ, "என்ன வேந்தா... உளறுகிறாய்? யாரைக் கரி காற் வளவன் என்கிறாய்?" என்று வினவி னான்.

"உன் மைத்துனனைத் தான் கூறு கிறேன்!"

"என்ன?" பதறினான் வேலன்.

"இனியும் நீ மறைப்பதில் எந்தப் பய னும் இல்லை. நான் போரைப் பற்றி உங் களுக்கு அனைத்தையும் கூறியபோதே நீங்கள் யார் என்பதை நான் அறிந்து விட்டேன் என்று புரிந்து கொண்டிருக்க வேண்டாம்?" என வேலனிடம் கூறியவன் கரிகாலனிடம், "கரிகாலா, நீ பெரும் புத் திசாலி என்றல்லவா எண்ணிக் கொண் டிருந்தேன். ஆனால் இப்படிப் புழுவுக்கு மாட்டும் கொக்கினைப் போன்று என் னிடம் சிக்கிக் கொண்டாயே? இங்கு நீ

https://telegram.me/aedahamlibra

சிறையில் அடைபட்டிருக்கிறாய். உறைந் தையில் வானவல்லி சிறை பட்டிருக்கி றாள். இனி புகாரில் போர் நடக்க வேண் டிய அவசியமே இருக்காது வளவா. நீ உன் எதிரிகளுக்குக் காலனா? உன்னை அழிப்பதற்கு நாளை காளன் வரப் போகி றான். அதுவரை நீ இந்த அறைக்குள் ளேயே கிட" எனக் கூறியவன் அந்த அறையைப் பூட்டிவிட்டு அங்கிருந்து விரைந்து செல்லலானான்.

https://telegram.me/aedahamlibra

# 37. வெளிப்படுத்திக் கொண்ட கள்வன்

அறைக்குள் சிக்கிக் கொண்டதால் வேறு வழியில்லாமல் அங்கேயே முடங்கிக் கிடந்தார் கரிகாலர். பூட்டிய கதவும் திறக்கப்படவில்லை. ஆனால், அந்த விசாலமான அறைக்குள் அனைத்து வசதிகளையும் வேந்தன் செய்திருக்கவே செய்தான். தான் சிக்கிக் கொண்டதை எண்ணி அவர் சிறிதும் வருத்தப்படவில்லை. வேந்தனால் உறைந்தையில் சிறை வைத்திருப்பதாகக் கூறிய வானவல்

லியை எண்ணியே அவர் பெரிதும் வருந்தலானார். 'செங்குவீரர் இறந்ததே தன்னால்தான்' எனும் பெரும் குற்ற உணர்வில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த கரிகாலருக்கு 'வானவல்லியும் தன்னால் தான் சிக்கிக் கொண்டாள்' என எண்ணி தன்னைத்தானே நொந்து கொண்டார்.

'அன்று வளவனார் கூறியதைப் போன்று வானவல்லியைத் தடுத்திருந்தால் இன்று இந்த விரும்பத்தகாத நிகழ்வு அரங்கேறியிருக்காது. பெரும் பிழை செய்து என் தமக்கையையே இப்படி எதிரிகளிடம் சிக்க வைத்துவிட்டேனே?' என்று எண்ணிக் கலங்கியபடி அமர்ந்திருந்தார்.

'வானவல்லி உறைந்தையில் சிக்கியிருப்பதால் தான் சரணடைவதைத் தவிர வேறு வழியில்லை!'என எண்ணிய கரிகாலர் வேந்தனிடம் சரணடையும் நினைப்பில் காணப்பட்டார்.

அவரது கலக்கத்தைக் கண்ட வேலன் 'என்ன கூறுவது?' எனத் தெரியா

https://telegram.me/aedahamlibra

மல் அவனும் சித்தம் கலங்கி காணப்பட்டான்.

ஆனால் கரிகாலரிடம் அடிக்கடி, "அன்றே அவன் நீரோடு அடித்துச் செல்லட்டும் என விட்டிருந்தால் இன்று உங்களை அறையில் அடைத்திருப்பானா? முதல் முறை நீங்கள் அவர்களிடம் சிக்கியபோதே அவர்கள் உங்களை உயிரோடு எரிக்கப் பார்த்தார்கள். ஆனால், இனி அவர்கள் என்ன செய்யப்போகிறார்களோ?" எனக் கூறி வருந்திக் கொண்டிருந்தவனிடம், 'நடந்ததைப் பற்றி எதுவும் பேச வேண்டாம்' என்று கரிகாலர் கட்டளையிட்டிருந்ததால் வேலன் அமைதியாகவே இருக்கலானான். கரிகாலன் அடைபட்ட இரண்டாவது நாள் மதியப் பொழுது அறையின் கதவு திடீரென்று வேகமாகத் திறக்கப்பட்டது. அறையிலிருந்து வெளியே வந்தார் கரிகாலர்.

இருபதுக்கும் மேற்பட்ட காவல் வீரர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு

நின்றிருந்தார்கள். அனைவரின் கைகளிலும் நீண்ட வாட்கள் மற்றும் ஈட்டிகள் காணப்பட்டன. அவை அனைத்துமே கரிகாலரை எதிர்நோக்கியபடி இருந்தன. அவற்றைப் பார்த்த கண நேரத்தில் நிலைமையைப் புரிந்து கொண்டார்.

முகத்தில் எந்த விதப் பதற்றத்தையும் காட்டிக்கொள்ளாமல் அமைதியாகவே அனைவரையும் பார்த்தபடி நின்றார். கூட்டத்தில் ஒருவனாக வேந்தன் நிற்கலானான். அவனைப் பார்த்ததுமே கரிகாலரின் முகத்தில் இறுக்கம் அதிகமாகியது. அதைக் கண்ட வேந்தன் அவரைப் பார்க்கத் துணிவில்லாமல் பார்வையைக் கீழே தாழ்த்திக் கொண்டான்.

கரிகாலனை அடையாளம் தெரியாத யுவராஜன், “வேந்தா, இவன் யார்? இவனைச் சிறைபிடிக்க எதற்காக என்னை நீ உறைந்தையிலிருந்து அவசர அவசரமாக வரவழைத்திருக்கிறாய்?” என வினவினான்.

“இவரைக் கண்டால் உங்களுக்கு அடையாளம் தெரியவில்லையா?” என வினவினான் வேந்தன்.

“எனக்குத் தெரியவில்லையே வேந்தா! உன்னிடமிருந்து மரியாதையுடன் வார்த்தைகள் வருகின்றதே! யார் இவன்?”

“சென்னியின் மைந்தன் சோழ இளவல் கரிகாற் வளவன்.”

“என்ன கூறுகிறாய் வேந்தா? இவன் சோழ இளவலா?” அதிர்ச்சியுடன் வினவினான் யுவராஜன்.

“ஆம் இளவரசே! நான் கூறுவது மெய்யே!”

“இவனை நீ எங்கே கண்டறிந்தாய்? எப்படி நீ சிறைப் படுத்தினாய். விவரமாகக் கூறு!”

“இளவரசே, காட்டில் வழிமறித்து என்னைக் காளிக்குப் பலியிட இருந்த

கள்வர்களிடமிருந்து என்னைக் காப் பாற்றியவர் மாறுவேடத்திலிருந்த இவர் தான்!"

"உன்னை இவன் காப்பாற்றி னானா?"

"ஆம் இளவரசே! காட்டாற்றிலும் அடித்துச் செல்லப்பட விருந்தேன்!"

"அப்போதும் இவன் உன்னைக் காப்பாற்றினானா?"

"ஆம்! என்னை நீரிலிருந்து தூக்கி வந்து காப்பாற்றிய போதுதான் இவர் சோழ இளவரசன் கரிகாலர் என்று கண் டறிந்தேன் நான்!"

"என்ன வேந்தா... இவன் மீது உனக்கு இப்போது மரியாதை பல மடங்கு பெருகிவிட்டது!" ஏளனத்துடன் சொற் கள் யுவராஜனிடமிருந்து வெளிப்பட்டது.

"ஆமாம் இளவரசே... கிட்டத்தட்ட ஒரு கிழமை காலம் இவருடன் பயணித்த

அனுபவம் எனக்கு இவர் மீது மரியாதை யைத் தானாகவே வரவழைத்து விட்டது!" பெருமிதத்துடன் தெரிவித்தான் வேந் தன்.

"ம்ம்ம்... எப்படியோ, நல்ல காரியத் தைச் செய்திருக்கிறாய் வேந்தா... முதல் முறைச் சிக்கிய இவனைச் செங்குவீரன் காப்பாற்றிக் கொண்டு சென்று விட்டான். இரண்டாவது முறை சிக்கியிருக்கிறான். இந்த முறை இவனை எவன் காப்பாற் றுகிறான் என்பதைப் பார்த்துவிடலாம்!" இளக்காரப் புன்னகையுடன் தெரிவித் தான் யுவராஜன்.

"அது இருக்கட்டும். உறைந் தைக்கு நான் அனுப்பி வைத்த வான வல்லியை என்ன செய்தீர்கள் என்று முத லில் தெரிவியுங்கள் இளவரசே! இவரை என்ன செய்யலாம் என்று பிறகு கூறுகி றேன் நான்!"

"என்ன உளறுகிறாய் வேந்தா! வானவல்லி உறைந்தைக்கு வந்தாளா?"

https://telegram.me/aedahamlibra

"வஞ்சிக்கு என்னை வேவு பார்க்க வந்தவளை நான்தானே தந்திரமாக ஓலையுடன் அனுப்பி வைத்தேனே! ஓலையில் தான் நான் மறைமுகமாக அவள் யார் என்று தெரிவித்திருந்தேனே இளவரசே!"

"வேந்தா... உளறாதே? உறைந் தைக்கு வந்தவள் சேந்தனின் தங்கை. உனது அத்தை மகள்!"

"என்ன, சேந்தனது தங்கையா?"

"ஆம்! அவள் அப்படித்தான் தெரி வித்தாள்."

"இளவரசே நான் அனுப்பி வைத் தது வானவல்லியைத் தான்! சேந்த னுக்குத் தங்கையும் இல்லை. எனக்கு அத்தை மகளும் இல்லை."

"வேந்தா... அப்படித் தெரிவித்து விட்டுத் தான் அவள் உனது முத்திரை மோதிரத்துடன் உறைந்தைக்கு வந்தி ருந்தாள்."

“மோதிரத்தை மட்டும்தான் அவள் கொண்டுவந்தாளா?”

“ஆம்!”

“ஓலை...?”

“அவள் எந்த ஓலையையும் கையில் கொண்டுவரவில்லை!”

“நான் எப்போது செய்தி அனுப்பி னாலும் ஓலை இல்லாமல் அனுப்புவ தில்லையே! அப்படியிருக்க அவள் முத் திரை மோதிரத்தைக் காட்டியதும் நீங்கள் சிறை அல்லவா செய்திருக்கவேண்டும்? அவளை எதற்கு நீங்கள் சிறை செய்யா மல் தப்பிக்க விட்டீர்கள்?” அதிர்ச்சியுடன் வினவினான் வேந்தன்.

“சிறை செய்யும் அளவிற்கு எங்க ளுக்கு அவள் மீது எந்தவித சந்தேகமும் வரவில்லை.”

“சந்தேகம் வரவில்லையா?”

“ஆம்!”

https://telegram.me/aedahamlibra

"ஏன்?"

"வந்தவள், மலை நாட்டுப் பெண்!"

"அவள் மலை நாட்டுப் பெண்ணல்ல இளவரசே! வளவனார் மகள் வானவல்லி!"

"ஆனால், அவள் மலை நாட்டுப் பெண்ணைப் போன்றல்லவா வந்திருந்தாள்?"

"சரி... சரி... நடந்தது என்ன, ஒன்று விடாமல் தெரிவியுங்கள் இளவரசே!"

"அப்படியே, மலை நாட்டுப் பெண்ணைப் போன்றே வந்திருந்தாள் அவள். ஓலை இல்லாததால் அவளை நாங்கள் முதலில் சந்தேகம் கொண்டோம்! ஆனால், அவளது பேச்சு எங்களை நம்ப வைத்துவிட்டது. சேந்தனது தங்கை என்றாள்! உனக்கு அத்தை மகள் என்றாள்! அது மட்டுமா தெரிவித்தாள்...?" என ஆத்திரத்தில் நரநரத்தன யுவராஜனின் பற்கள்.

https://telegram.me/aedahamlibra

“என்னென்ன கூறினாள் இளவரசே! ஏதோ பெரும் சூழ்ச்சி அரங்கேறியிருக்கிறது. உடனே தெரிவியுங்கள்!”

“நீங்கள் இருவருமே குடும்பத்தை மறந்துவிட்டு வந்துவிட்டீர்கள், ஆதலால் வயதான தந்தையை வைத்துக் கொண்டு துயரப்படுவதாக இறக்கம் கொள்ளும்படி தெரிவித்தாள். ஆதலால்...”

“நீங்கள் அனைவருமே அவள் மீது இறக்கம் கொண்டு அவளை நம்பிவிட்டீர்கள்!”

“ஆம் வேந்தா... !”

“சரி, நான் கூறியதாக அவள் உங்களிடம் என்ன தெரிவித்தாள் இளவரசே?”

“சேரமான் உன்னிடம் தெரிவித்ததாக நீ கூறிய தகவலைத்தான் அவள் எங்களிடம் தெரிவித்தாள்!”

“நான் அவளிடம் எந்தத் தகவலையுமே தெரிவித்திருக்கவில்லை இளவ

ரசே... ஓலையில் தான் தெரிவித்திருந்தேன்!"

"ஆனால், அவள் கூறியதும், வைதீகர் உன்னிடம் ஓலையில் எழுதிக் கொடுத்த தகவல்களும் ஒத்திருந்ததே!"

"என்ன இளவரசே கூறுகிறீர்கள்?"

"வைதீகர் ஓலையில் எழுதிக் கொடுத்ததைப் போன்றே தெரிவித்தாளா அவள்?"

"ஆம்!"

"சரி... சரி... எனக்குத் தலையே வெடித்துவிடும் போலிருக்கிறது? அவள் தெரிவித்த தகவல் என்னென்ன இளவரசே, உடனே தெரிவியுங்கள்."

""சேரமான் பெருஞ்சேரலாதனிடமிருந்து தகவல்கள் கிடைக்கும்வரை உறைந்தைப் படை புறப்பட வேண்டாம்! துளுவ எல்லையில் இனம்தெரியாத கள்வர்களின் இடையூறு அதிகரித்திருக்கிற

https://telegram.me/aedahamlibra

தாம்! அவர்களை முறியடித்த பிறகு நாம் சோழ நாட்டின் மீது படையெடுக்கலாம் என்பது சேரமானின் ஆணை' என்று தெரிவித்தாள்!"

"துளுவ எல்லையில் கள்வர்கள் தாக்குகிறார்களா?"

"ஆம்!"

"சேரமான் என் முன்னிலையில் தான் ஒற்றர் தலைவரிடம் எல்லை நில வரத்தைப் பற்றி விசாரணை செய்தார். ஆனால், அவர் கள்வர்களின் தாக்குதல் பற்றி எதையும் குறிப்பிடவில்லையே!"

"இல்லை... அவள் கூறியது உண் மைதான் வேந்தா... துளுவ எல்லை யில் கள்வர்கள் அகப்பா கோட்டையை யும் கைப்பற்றிவிட்டார்கள்! அவர்களை விரட்ட சேர இளவரசர் ஆயிரம் புரவி வீரர்களுடன் சென்றிருக்கிறார்! அவர் வந்த பிறகே போர் தொடங்கும்! அது

வரை நாம் பொறுத்திருக்க வேண்டு மாம்!"

"ஏதோ பெரும் சூழ்ச்சி இளவரசே! அனைத்துமே திட்டமிட்டு நடந்திருக்கிறது! நாம் நன்றாக மோசம் போய் விட்டோம்!" எனக் கூறியபடி தலையில் கையை வைத்துக் கொண்டு அருகில் கிடந்த இருக்கையில் விழுந்தான் வேந்தன்.

அனைத்தையும் அவன் யூகித்து விட்டிருந்தான்.

"என்ன வேந்தா கூறுகிறாய்...?"

"நம் திட்டங்கள் அனைத்தையும் தகர்த்துவிட்டார்கள்?"

"வேந்தா..."

"ஆம். வானவல்லி உங்களிடம் சேர எல்லையில் கள்வர்கள் தாக்குகிறார்கள் என்று கூறிய பிறகு தானே, 'கள்வர்கள் தாக்குகிறார்கள்' என்ற செய்தி உங்களை

எட்டி சேர இளவல் புரவிப் படையுடன் புறப்பட்டுச் சென்றார்?"

"ஆமாம், அவள் தெரிவித்த பிறகு ஒரு கிழமை கழித்தே எங்களுக்குக் கள் வர்கள் பற்றிய தகவல் கிடைத்து."

"அனைத்தும் அவளது திட்டத்தின் படியே அரங்கேறிக் கொண்டிருக்கிறது. சேர எல்லையில் தாக்குகிறவர்கள் கள் வர்கள் அல்ல."

"கள்வர்கள் அல்லவா?"

"ஆம்!"

"பிறகு யார்?"

"சோழ வீரர்களே!"

"என்ன உளறுகிறாய் வேந்தா...?"

"நான் உளறவில்லை இளவரசே... எனது அனுமானம் மட்டும் சரியாக இருந் தால் துளுவ எல்லையில் தலைமை தாங்கி தாக்குகிறவன் வில்லவனாகத் தான் இருப்பான்!"

https://telegram.me/aedahamlibra

“யார், நம் காவல் தலைவர் காள னுக்குத் துரோகம் இழைத்துவிட்டு வஞ் சியிலிருந்து வானவல்லியைக் காப்பாற்றி அழைத்துச் சென்றானே, அவனையா குறிப்பிடுகிறாய்?”

“ஆமாம்...”

“அவனுக்கு அவ்வளவு துணிச்சல் வந்துவிட்டதா?”

“சத்திரத்தில் அன்று சில குளவிக ளின் இறக்கைகள் பொசுங்கிக் கிடந்த போதே எனக்குச் சிறு சந்தேகம் தோன் றியது. மமதையிலும், பெண் பித்திலும் அதைக் கண்டுகொள்ளவில்லை. நான் கொண்டு சென்ற ஓலையை அவள் பிரித்துப் படித்திருக்கிறாள். அது மட்டு மல்லாமல் அவள் ஓலையையும் மாற் றியிருக்கிறாள். ஓலையை மாற்றி எழுதி சேர அவையில் இருந்தவர்களைக் குழப் பிவிட்டாள். பிறகு அவளே நேரில் வந்து உறைந்தையையும் குழப்பிவிட்டி ருக்கிறாள். நம் திட்டங்கள், இத்தனை

வருட உழைப்பு அனைத்தையும் அவள் வீணாக்கிவிட்டாள்!”

வேந்தன் கூறுவது யுவராஜனுக்குப் பெரும் வியப்பாக இருந்தது. ஆத்திரமும் நேரத்திற்கு நேரம் பெருகிக் கொண்டிருந்தது. அன்று உறைந்தைக்கு வந்தவள் வானவல்லி என்பதையே அவனால் முற்றிலும் நம்ப முடியவில்லை. வேந்தன் தெரிவித்த மற்ற தகவல்கள் அனைத்தும் அவனைக் குழப்பிவிட்டிருந்தன. பகைவர்களால் வசமாக ஏமாற்றப்பட்டிருக்கிறோம் என்பதை மட்டும் அவன் நன்கு புரிந்து வைத்திருந்தான்.

“நான் கூறுவது உங்களுக்கு மிகவும் கடினமாக இருக்கிறதா யுவராஜரே?”

“ஆம்!”

“நான் கூறுவது அனைத்திற்கும் சாட்சி நமக்கு முன் கைதியாக நிற்கும் சோழ இளவல் கரிகாலர் தான்! உங்

களுக்குச் சந்தேகம் இருந்தால் நீங்கள் அவரிடமே கேட்டுப் பாருங்களேன்!"

யுவராஜன் பார்வையைப் புன்ன கையுடன் நின்று கொண்டிருந்த கரிகா லரை நோக்கித் திருப்பினான். கரிகா லர் அப்போதும் புன்னகையுடனே நின்று கொண்டிருந்தார்.

"வேந்தன் கூறுவது அனைத்தும் உண்மைதானா...?" என வினவினான் அவரைப் பார்த்து.

"ஆம்... அவரது மதியைக் கண்டு வியக்கிறேன் நான்! அவர் கூறுபவை அனைத்தும் உண்மையே!"

"அப்படியெனில், எங்களது அனைத்து திட்டங்களையும் பாழ்படுத்தி யவன் நீ தான்!"

"அப்படியே வைத்துக்கொள் ளேன்!"

"போர் இனி நடக்கப் போவதில்லை வளவா... அதற்கு அவசியமும் இருக்கப் போவதில்லை!" சிரித்தபடி கூறிய யுவரா ஜன் இடையுறையில் கிடந்த வாளினை உருவினான்.

"சோழப் படைத் தலைவர் திவ் யனை நீங்கள் எப்போது வஞ்சமாக யவனத்திற்கு அடிமையாக விற்றீர்களோ, அப்போதே நீங்கள் போரினை துவங்கி விட்டீர்கள்! துவங்கிய போர் இனி எந்தச் சூழ்நிலையிலும் நிற்கப்போவதில்லை!"

"திவ்யனை படகில் கட்டி யவனத் திற்கு விற்றது வரை நீ அறிந்து கொண் டாயா, இன்னொன்றையும் நீ தெரிந்து கொள்" எனக் கூறிய யுவராஜன் சத்தத் துடன், "உனது படைத்தலைவன் செங் குவீரனையும் குமரிக் கடலில் மூழ்கடித் தவன் நான் தான். போர் என்ற ஒன்று இனி சோழ நாட்டில் கிடையாது. உனது மரணம் மட்டுமே, நீ மரணித்த பிறகு சோழ நாடு எனது காலடியில்."

https://telegram.me/aedahamlibra

"போரே கிடையாதா...?"

"ஆம்! நீ உயிருடன் இருந்தால் தானே போர் நடைபெறும்! சோழ இளவலே இறந்துவிட்ட பிறகு சோழர் கள் யாருக்காக வாளினை உயர்த்தப் போகிறார்கள்?" எனக் கூறியவன் உருவிய வாளினை ஓங்கவும் செய்தான்.

அப்போது வேந்தன், "யுவராஜரே... அவசரம் வேண்டாம். இவரைக் கொலை செய்ய நான் உங்களை மட்டும் இரகசியமாக அழைக்கவில்லை" என இடைமறித்தான்.

"என்ன இவனைக் கொலை செய்ய நீ அழைக்கவில்லையா?"

"ஆம்!"

"பிறகு எதற்கு?"

"எதிரிகளின் ஒற்றனைப் பின் தொடர தன் சகோதரியையே அனுப்பி வைத்திருக்கிறார். பிறகு இவரே மாறு

வேடத்தில் என்னைப் பின்தொடர்ந்ததும் இல்லாமல், இருமுறை என்னைக் காப் பாற்றியும் இருக்கிறார். இளவரசன் என் றால் எப்படி ஒருவன் இருக்க வேண் டும் என்று உங்களுக்குக் காட்ட வேண் டும் என்று விருப்பப்பட்டேன் நான்! உங் களுக்குக் காட்டியும் விட்டேன்! இவரை நாம் விடுவித்து விடலாம்! சமர்க் களத் தில் இவரை நாம் சந்தித்து அழிப்பதே நமது வீரத்திற்கு அழகு! போர்க்களத்தில் இவருக்கு நாம் மரணத்தை வழங்குவதே இந்த மாபெரும் வீரருக்கு நாம் வழங்கும் மரியாதையாக இருக்கும்! அதுவே அற மும் கூட!”

“என்ன வேந்தா... திடீரென்று கட்சி மாறிவிட்டவனைப் போன்று பேசுகிறாய். திவ்யனை விற்ற போதோ அல்லது செங் குவீரனைக் கணிகையர் மாளிகையில் கொல்ல முயன்ற போதோ அல்லது அதே செங்குவீரனை குமரிக் கடலில் மூழ்கடித் துக் கொலை செய்த போதோ இல்லாத

அறம் இப்போதுமட்டும் எங்கிருந்தது வந்தது?"

"இல்லை யுவராஜரே... நான் இவரது நாட்டை அழிக்கப் போர் செய்தியோடு கூடலுக்குச் சென்று கொண்டிருக்கிறேன் என்று தெரிந்தும் தனது உயிரைப் பணயம் வைத்து இருமுறை என்னைக் காப்பாற்றியிருக்கிறார். அதற்காகவாவது நான் நன்றி கடனாக இருக்கவேண்டும் என்று விரும்புகிறேன்!"

"சில கிழமைகள் நீ இவனுடன் இருந்ததததால் மாறத் தொடங்கிவிட்டாய். மலை நாட்டின் நலம் உனக்கு முக்கியமில்லை. இவனது தந்தை மலை நாட்டுக் கோட்டையை அழித்ததை நீ மறந்துவிட்டாய்!"

"யுவராஜரே... நான் எதையும் இது வரை மறக்கவில்லை. இவரை நாம் சமர்க் களத்தில் எதிர்கொள்வதே நமக்குப் பெருமை. அதைவிடுத்து ஆயுதம் இல்லாமல் நிராயுதபாணியாக நிற்கும்

இவரைக் கொள்வது எந்த விதத்திலும் நியாயம் இல்லை”எனக் கூறிக் கொண் டிருந்த போதே இடைமறித்த யுவராஜன், “போரே இனி தேவையில்லை என்கி றேன். நீ திரும்பத் திரும்ப இவனைக் களத்தில் எதிர்கொள்வோம் என்கிறாய்” எனத் தெரிவித்தபடியே கையிலிருந்த வாளினைக் கரிகாலரை நோக்கிச் சுழற் றினான்.

யுவராஜன் திடீரென்று வாளினை கரிகாலனை நோக்கிச் சுழற்றுவான் என்று யாருமே எதிர்பார்த்திருக்க வில்லை. கரிகாலரும் உட்படத்தான்.

கையில் ஆயுதமில்லாத நிலை. சுற்றி நிற்கும் அனைவரின் ஆயுதங்க ளும் தன்னை நோக்கியே நிற்கும் அபாய நிலை. அருகில் நிற்கும் வீரனின் வாளி னைப் பிடுங்கி இருங்கோவின் மகனது வாளினைத் தடுக்கலாம் என எண்ணிய கரிகாலர் அவனது வாளிற்கு அகப்படா மல் கீழே குனிந்து அருகில் நின்ற வீர

னிடமிருந்த ஈட்டியைப் பிடுங்கிக் கொண்டார். மீண்டும் இரண்டாவது முறை கரிகாலனை வாளினால் தாக்கினான் யுவராஜன். இந்த முறை தன்னிடமிருந்த ஈட்டியால் எளிதாகத் தடுத்துவிட்டிருந்தார் கரிகாலர்.

தனது இரண்டு முயற்சிகளும் தோற்றுவிட்டதைக் கண்டு ஆத்திரப்பட்ட யுவராஜன் மீண்டும் தனது பலம் முழுவதையும் திரட்டி கரிகாலனைக் குத்துவதைப் போன்று மார்பை நோக்கி வாளினை இறக்கினான். ஆனால், அவனது தாக்குதலைத் தடுக்கக் கரிகாலர் எந்தச் சிரமத்தையும் படவில்லை. கரிகாலரின் பதில் தாக்குதலில் அவனது வாள் அவனது கையிலிருந்து பிரிந்து பறந்துவிட்டிருந்தது.

ஆயுதத்தை இழந்ததால் பெரும் அவமானமும் ஆத்திரமும் அடைந்த யுவராஜன் சுற்றி நின்ற வீரர்களிடம், "என்ன வேடிக்கை பார்க்கிறீர்கள். வேடிக்கை

https://telegram.me/aedahamlibra

பார்ப்பதற்கா உங்கள் அனைவரையும் நான் அழைத்துவந்தேன். இவனது தலையை வெட்டி எறியுங்கள்” என்று கத்தினான்.

கரிகாலரின் தாக்குதலில் பத்தடி தாண்டிப் பறந்து போய்க் கிடந்த யுவராஜனின் வாளினை ஆயுதம் கிடைக்காமல் நின்ற வேலன் எடுத்துக் கொண்டு தயாரானான். காலம் முழுவதும் கூத்துக் கட்டியே காலத்தைக் கழித்திருந்ததால் அவனுக்கு வாளினைச் சரியாகப் பிடிக்கக்கூடத் தெரியவில்லை. ஆனாலும், கரிகாலருக்கு உதவவேண்டும் என்ற நினைப்பில் ஆயுதத்தைத் தாங்கி வெறியுடன் கரிகாலருக்குப் பக்கபலமாக நின்று கொண்டிருந்தான்.

வேந்தன் அமைதியாகப் பரிதாபத்துடன் கரிகாலரைப் பார்த்தான். யுவராஜனின் கட்டளையில் அவனுக்குச் சிறிதும் உடன்பாடு இல்லை. தனது தவறை

எண்ணி வருந்தியபடி நின்று கொண்டிருந்தான்.

யுவராஜன் கட்டளையிட்டதுதான் தாமதம். அடுத்தக் கணம் சுற்றியிருந்த அனைத்து வீரர்களும் கரிகாலனைத் தாக்கப் பாய்ந்தனர். தன்னைத் தாக்க வந்த வீரர்களின் ஆயுதங்களைக் கரிகாலன் தடுத்துக் கொண்டிருந்தான். அப்போது அங்கிருந்த யாருமே எதிர்பார்த்திருக்கவில்லை. யுவராஜனின் மலை நாட்டு வீரன் ஒருவனே மலை நாட்டு வீரர்களைத் தாக்கி அவர்களின் வாட்களையும், ஈட்டிகளையும் பறக்கவிட்டதோடு அல்லாமல் அவர்களின் உடலிலும் தனது வாளினைப் பாய்ச்சி, முன் வரிசையில் ஓடிவந்த நான்கைந்து வீரர்களின் உயிரை கண நேரத்தில் பறித்திருந்தான். அவனது வாள் வீச்சின் வேகம் கரிகாலரின் வாள் வீச்சின் வேகத்தை விட அதிகமாக இருந்தது. பின்னால் ஓடி வந்த வீரர்கள் அனைவரும் முன் வரிசையில் சென்ற வீரர்கள் தனது வீரன் ஒருவனால்

கொல்லப்படுவதைப் பார்த்ததுமே அக்கணம் உறைந்து நிற்கலானார்கள்.

குருதி வழிந்து கொண்டிருந்த வாளினைக் கையில் பிடித்தபடி கரிகாலருக்கு முன் காவலாக நின்ற அந்த வீரன், தனக்கு முன்பு நின்ற அனைவரையும் நோக்கியவன், “என்னைக் கடந்து செல்லும் துணிவு எவனுக்காவது இருந்தால் சோழ இளவலைக் கொல்ல முன்னே வரலாம்” எனக் கூறியபடி வாளினை உயர்த்தினான்.

அவன் வாளினைக் கையில் பிடித்துக் கொண்டு நின்ற தோரணை, அவனது பார்வையில் இருந்த துணிவு, அவனது குரலில் இருந்த கம்பீரம் ஆகியவை அங்கிருந்த மலை நாட்டு வீரர்களுக்குப் பெரும் பயத்தை அளிக்கவே செய்தன. தன் மலை நாட்டு வீரனே தன்னை எதிர்த்து நிற்பதைக் கண்ட யுவராஜன், “யார் நீ? எவ்வளவு துணிச்சல் இருந்தால் நீ நம் நாட்டு வீரர்களையே

கொன்றிருப்பாய்? ராஜ துரோகத்திற்குரிய தண்டனை உனக்குத் தெரியும் தானே! விலகி விடு. நீயும் உனது உயிரை அவனு டன் சேர்ந்து இழக்காதே!" எனக் கடுமை யாக எச்சரிக்கலானான்.

யுவராஜனின் எச்சரிக்கையை நிரா கரித்த அந்த மலை நாட்டு வீரன், "நம் ஒற்றர் தலைவர் வேந்தன் கூறுவதுதான் சரி. பகைவர்களைப் போரில் கொள்வ துதான் முறை. அதுவே வீரமும் கூட! கோழைத் தனமான உனது கட்டளைக்கு நான் ஒருபோதும் அடிபணிய மாட்டேன்" எனத் தீர்க்கமாகத் தெரிவித்தான் அவன்.

"நம் நாட்டு வீரன் என்ற தயக் கம் வேண்டாம். இவனது தலையையும் வெட்டி எறியுங்கள்" என மீண்டும் கட்ட ளையிட்டான் யுவராஜன்.

யுவராஜனின் கட்டளையைக் கேட் டதும் மலை நாட்டு வீரர்கள் சிலர் தயங்கி நிற்க சிலர் கரிகாலர், வேலன் மற்றும் இருவருக்கும் காவலனாய் நின்ற மலை

நாட்டு வீரனை நோக்கி ஆவேசத்துடன் பாயலானார்கள்.

கரிகாலனுக்கு எந்தப் பணியையும் அந்த மலைநாட்டு வீரன் வழங்கியிருக்கவில்லை. அவனே ஓடிவந்த அனைவரையும் எதிர் கொண்டான். அவனது வாள் சுழன்றதை அங்கிருந்த யாருமே பார்க்கவில்லை. ஆனால், தாக்க வந்த மலை நட்டு வீரர்களின் கை, கால், தலை மற்றும் அவர்களின் ஆயுதங்கள் மட்டும் தனித்தனியாக உடலிலிருந்து பிய்த்துக் கொண்டு ஓடுவதை மட்டுமே அவர்களால் காண முடிந்தது. அந்த மாளிகையே கண நேரத்தில் குருதிக் களமாக மாறியிருந்தது. ஆவேசத்துடன் கத்தியபடி ஓடி வந்த மலை நாட்டு வீரர்கள் அனைவரும் கத்தியபடியே கீழே சாய்ந்தார்கள்.

எதிர்த்து நின்ற மலை நாட்டு வீரனின் வீரத்தைக் கண்ட யுவராஜன், வேந்தன் மட்டுமல்லாமல் கரிகாலரும் வியக்கவே செய்தார். எஞ்சி நின்ற மலை நாட்டு

வீரர்களை உயிர் பயம் சூழத் தொடங்கி யது.

தனது வீரர்களைக் கொன்றுக் கூறு போட்டுவிட்ட தனது நாட்டு மலை வீர னைக் கண்ட யுவராஜன், "யாரடா நீ? உன்னால் எப்படி ஒரே நேரத்தில் இத் தனை வீரர்களைக் கொல்ல முடிந்தது. எனது மெய்க் காவலன் தானே நீ? அல் லது நீயும் என் படைக்குள் ஊடுருவிய சோழ நாட்டு வீரனா?" எனக் கேட்டான்.

பதிலுக்கு மலை நாட்டு வீரன் எந் தப் பதிலையும் கூறவில்லை. அமைதியா கவே நின்றான்.

"நீ யார் என்று இப்போது கூறப் போகிறாயா இல்லையா?" என்று மீண்டும் கத்தினான் யுவராஜன். வேந்தன் எது வும் கூறாமல் யுவராஜனுக்குப் பின்புற மாக நின்று நடப்பதை வேடிக்கை மட்டும் பார்த்துக் கொண்டிருந்தான்.

அப்போதும் மலை மாட்டு வீரன் எந்தப் பதிலையும் அளிக்கவில்லை. மாறாகத் தலையில் அணிந்திருந்த போலி முடி, முகத்தில் செயற்கையாக அணிந்திருந்த தாடை முடி, முகத்தில் பாதியை மறைத்துக் கொண்டிருந்த மீசை ஆகியவற்றைக் களைந்து கீழே எறிந்தான்.

யுவராஜன், வேந்தன் மட்டுமல்ல சுற்றி நின்ற வீரர்கள் அனைவரும் முணு முணுத்தார்கள், "காளன்!" என்று.

"காளா... உன்னை உறைந்தைக் கோட்டையைப் பாதுகாக்கச் சொல்லி விட்டுத்தானே நான் வந்தேன். நீ இங்கு எப்படி?" என வினவினான்.

"நான் எங்கு இருக்க வேண்டும் என்பதை முடிவு செய்ய வேண்டியவன் நான்தானே தவிர, நீ அல்ல..."

"காளா... நீயா இப்படி? நீ செய்வது பச்சைத் துரோகம்!"

காளன் சிரித்தபடி, "சிந்தித்துப் பார் யுவராஜா... துரோகமிழைத்திருப்பது நானா அல்லது நீங்களா என்று உனக்கே தெரியும்!" எனத் தெரிவித்தான்.

ஆத்திரத்துடன் காளனை நோக்கிய யுவராஜன், "இத்தனை நாட்களாக நீ எங்களை ஏமாற்றிக் கொண்டிருந்திருக்கிறாய்? நீ அவனை எதற்காகக் காக்க நினைக்கிறாய்?" என வினவினான்.

"எனது தமக்கையின் மகனை நான் முன்னிருந்து காக்காவிட்டால் வேறு யார் யுவராஜா காப்பது. இவன் நான் தூக்கி வளர்த்த பையன்! அதை நீ நினைவில் கொள்வது நலம்..."

"அப்படியெனில்...?"

"சோழக் குருதி ஒருநாளும் துரோகத்தை இழைக்காது!"

கீழே கிடந்த வாள் ஒன்றைக் கையில் எடுத்த யுவராஜன் காளனை நோக்கி ஆவேசத்துடன் கத்

திக் கொண்டு ஓடி வந்தான். அவனைப் பின்தொடர்ந்து மலை நாட்டு வீரர்கள் அனைவரும் ஓடி வந்தார்கள். வேந்தன் மட்டும் கையில் ஆயுதத்தைத் தரிக்கவே இல்லை. வேடிக்கை மட்டுமே பார்த் துக் கொண்டு நின்றான். அதே போன்று வாளினை சுழற்றத் தெரியாத வேலனும் அந்தக் களத்திலிருந்து ஒதுங்கி நின்று கொண்டான்.

ஓடி வந்த மலை நாட்டு வீரர் களை வேளக்காரப் படைத் தலைவன் காளனான இளந்திரையனும், கரிகால ரும் எதிர் கொண்டார்கள். இருவருக்கும் அதிகச் சிரமம் இருக்கவில்லை. இருவ ரின் வாள் வீச்சிலும் சிக்குண்ட மலை நாட்டு வீரர்கள் தப்பிக்கக் கூட வழியில் லாமல் அங்கேயே உயிரை விட்டு சரி யலானார்கள். யுவராஜனைத் தவிர்த்து அனைவரையும் கொன்றுபோட்டார்கள் இருவரும்.

கீழே வாளினை இழந்து கிடந்த யுவராஜனின் மார்பில் காலை வைத்துக் கொண்டு அவனது கழுத்தில் தனது வாளினை வைத்த சோழ இளவல் கரிகாற் வளவன், "உன்னை இங்கே கொன்றுபோட்டால் உனக்கும் எனக்கும் வேறுபாடு இல்லாமல் போய்விடும்! அது மட்டுமல்லாமல் உன்னைச் செங்குவீரன் கொள்வதாக வெஞ்சினம் உரைத்திருந்தார். அந்த வெஞ்சினம் என் தமக்கை வானவல்லியினால் நிச்சயம் நிறைவேற்றப்படும். உன் மரணம் கொடூரமாக இருக்கப் போகிறது. அதை மட்டும் நினைவில் கொள்" என அவனிடம் கூறியவர், பிறகு, "வேந்தா...." என அழைத்தார்.

ஓடி வந்த வேந்தன், "கூறுங்கள் இளவரசே!" எனப் பணிந்தான்.

"இவனை உறைந்தை வரை பத்திரமாகக் கொண்டு சென்று சேர். இவனை

நான் சமர்க்களத்தில் சந்திக்கிறேன்” எனக் கட்டளையிட்டார்.

பதிலுக்கு வேந்தன், “உங்களது உத்தரவு இளவரசே” எனத் தெரிவித் தான்.

“கரிகாலா... புகாருக்கு நாம் புறப்ப டுவோமா?” என வினவினான் இளந்தி ரையன்.

“புறப்படுவோம் மாமா...” எனக் கூறிய கரிகாலர் மாளிகையை விட்டு வெளியேறினார்.

செங்குவீரன் கொற்கையில் சிக் கியபோது மாறுவேடத்தில் கரிகாலரை புகாரில் கொண்டுவந்து சேர்த்த அதே காளன் இன்று எந்தவித மாறுவேடமும் இல்லாமல் சோழர்களின் வேளக்காரப் படைத் தலைவனாகப் புகாரை நோக்கி அதி வேகத்தில் புரவி வண்டியைச் செலுத்திக் கொண்டிருந்தான் இளந்தி ரையன்.

https://telegram.me/aedahamlibra

தனது தாய்மாமனின் பாதுகாப்பு கிடைத்த மகிழ்ச்சியில் கரிகாலரும் எதைப் பற்றியும் கவலைப் படாமல் புரவி வண்டியில் பல நாள் அலுப்பினால் நிம்மதியாக உறங்கலானார். அவரது தலைமாட்டில் அமர்ந்திருந்த வேலன் அவருக்கு விசிறிவிட்டுக் கொண்டிருந்தான்.

https://telegram.me/aedahamlibra

# 38. வெண்ணி இரகசியம்?

சித்திரை முழுநிலவு தினம். வெளிப்படையாக விழாக்கோலம் பூண்டிருந்தாலும் மறைமுகமாகப் போர்க்கோலம் பூண்டிருந்தது புகார். திரண்டிருந்த பொது மக்கள் அனைவருமே வானளாவிய உயரத்தில் அமைக்கப்பட்டிருந்த அந்தப் பிரமாண்டத் தூண்களைக் கண்டு பிரமிப்புடன் விழுந்து வணங்கிவிட்டுச் சென்றார்கள்.

இந்திரத் திருவிழாவின் முக்கிய நிகழ்வுகளில் ஒன்றான புரவித் தேரோட்டத்திற்கான ஏற்பாடுகளைக் கடற்க

ரையில் வெகு சிறப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தான் டாள்தொபியாஸ். செங்குவீரன் இல்லாத புரவித் தேரோட்டத்தைக் காண அவனுக்கு மனமே ஒப்பவில்லை. இருந்தாலும் பாரம்பரியமாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் நிகழ்வினை நிறுத்துவதற்குச் சம்மதிக்காத வானவல்லியின் பிடிவாதத்தினால் ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தான்.

இந்திரத் திருவிழாவின் புரவித் தேரோட்டத்தைக் காண்பதற்காக அழுந்தூர் வேளிரான திதியன் வருகை தந்திருந்தார். அழுந்தூர் வேளிர்தான் இரும்பிடர்த்தலையரின் தந்தை. கரிகாலனது பாட்டன். அவரது உடல் தளர்ந்து நடக்கவே சிரமப்பட்டுக் கொண்டிருந்தார். இருந்தாலும் சோழ நாட்டை நெருங்கி வரும் போரின் காரணமாக அவரும் அழுந்தூரிலிருந்து புகாருக்கு வருகை தந்திருந்தார். சிவிகையில் வைத்து அவரைத் தூக்கிக் கொண்டு வந்திருந்தார்கள். அவரது உடல் தளர்ந்திருந்தாலும்

https://telegram.me/aedahamlibra

அவரது முகத்தில் காணப்பட்ட கம்பீரம் மட்டும் சற்றும் குறையாமல் காணப்பட்டது. அவருக்குத் துணையாக இரும்பிடர்த்தலையர் எப்போதும் அவருடனே இருக்கலானார். புகாரின் பாதுகாப்பு ஏற்பாடுகள், வீரர்களின் நிலை என அனைத்தையும் கேட்டு அறிந்து கொண்டது மட்டுமல்லாமல் அவற்றை நேரில் கண்டும் உறுதி செய்து கொண்டார்.

தமிழகத்தைக் கைக்கொள்ள மௌரியர்கள் வந்தபோது அவர்களுக்குத் துணையாக வந்த கோசர் படையை செல்லூரில் எதிர்த்துத் தாக்கி தடுத்து நிறுத்தியவர் அழுந்தூர் வேள்திதியன். அது அவரது இளமைக் காலத்தில் நடைபெற்ற போர். மௌரியரை எதிர்த்த போது இருந்த வேகம் இப்போது அவரது உடலில் சிறிதும் காணப்படவில்லை. ஆனால், வீரம் மட்டும் அதே நிலையில் தான் காணப்பட்டது. புகாருக்கு ஆதரவாகக் களமிறங்க அழுந்தூர் படையைத் தயாராகவே வைத்திருந்தார் அவர். பாது

https://telegram.me/aedahamlibra
காப்பு முறைகளில் காணப்பட்ட சிறு சிறு குறைகளையும் சுட்டிக் காட்டவே செய் தார் அவர்.

சித்திரை முழுநிலவு நாளின் மாலைப் பொழுதில் கடற்கரை முழுவதி லும் புரவித் தேர்கள் அணிவகுத்து நின்று கொண்டிருந்தன. அங்கிருந்தவர்களுள் மூத்தவரான அழுந்தூர் வேள்திதியன் தான் கொடியசைத்துப் புரவித் தேரோட் டத்தைத் தொடங்கி வைத்தார். கையிலி ருந்த கொடியை அவர் அசைத்ததுதான் தாமதம் அடுத்தகணம் வில் நாணிலி ருந்து புறப்பட்ட அம்புகளைப் போன்று அனைத்துப் புரவித் தேர்களும் புழுதி பறக்க பந்தயத் தொலைவை நோக் கிப் புறப்பட்டன. பாய்ந்து சென்ற புரவித் தேர்களால் கடற்கரையில் எழுந்த புழுதி அடங்குவதற்குள் அவை பார்வையிலி ருந்து மறைந்துவிட்டிருந்தன.

வெற்றி வாகையை யார் சூடப் போவது என அறியும் ஆவலில் திரண்

டிருந்த பொது மக்கள் அனைவரும் பெரும் ஆர்வத்துடன் நின்று கொண்டிருந்தார்கள். கடந்த புகார் இந்திரத் திரு விழாவிற்கு முன்னும் காணாமல் போன விறல்வேலும், கரிகாலரும் இதே புரவித் தேரோட்டத்தின் போதுதான் வெளிப்பட்டார்கள். ஆதலால், அதே போன்று இந்த வருடமும் அவன் வெளிப்படவேண்டும் என்று மனதிற்குள் நினைத்தபடி ஆசையில் நின்று கொண்டிருந்தாள் வானவல்லி. குமரிக் கடலில் மூழ்கி போன செங்குவீரன் ஒரு காலமும் திரும்பி வர மாட்டான் என்பதை அவளும் அறிந்திருந்தாள். ஆனாலும், அவளது மனம் அவனை இன்னொரு முறை கண்டுவிட மாட்டோமா என்று ஏங்கிக் கொண்டிருந்தது. மனதில் காதலின் கணம் அதிகமாக அது விழிகளின் வழியாகத் துளி நீராகக் கசியத் தொடங்கியது. உடனே பிறர் பார்ப்பதற்கு முன் அக்கண்ணீர்த் துளிகளைத் துடைத்துக் கொண்டாள்.

பொழுது விரைவாகக் கடந்து கொண்டிருந்தது. ஒரு ஓரைப் பொழு திற்குப் பிறகு விரைந்து சென்ற புர வித் தேர்கள் திரும்பி வருவது தொலை வில் தோன்றிய புழுதிப் படலத்திலி ருந்து அனைவரும் அறிந்து கொண்டார் கள். காலம் கடக்கக் கடக்கப் புழுதிப் படலம் நெருங்கி வந்து கொண்டிருந்தது. அது நெருங்கி வந்தபோதுதான் அனை வரும் அறிந்து கொண்டார்கள், விரைந்து வந்து கொண்டிருப்பது இளஞ்சேட்சென் னியின் புரவித் தேர் என்று.

யானைத் தந்தத்தால் செய்யப்ப டப் புரவித் தேர் முழுவதும் தங்கத்தா லும், வைடூரியத்தாலும் அலங்கரிக்கப் பட்டிருந்தது எதிரொலித்த கதிரவனின் பொன்னிற ஒளியிலிருந்து அனைவரும் அறிந்து கொண்டார்கள். யவன தேச கருமை நிறப் புரவிகள் எட்டு இழுக்கக் கடற்கரையில் பறந்து வந்து கொண்டி ருந்தது பொன்னால் செய்யப்பட அந்தப் பொலந்தேர். தொலைவினில் அது வந்து

https://telegram.me/aedahamlibra

கொண்டிருந்த வேகத்தைப் பார்த்த அனைவரும் 'கொற்கையில் மாண்டு போன செங்குவீரன் தான் மீண்டும் உயிர் பெற்று அந்தப் புரவித் தேரைச் செலுத் தியபடி வந்து கொண்டிருக்கின்றானோ?' என எண்ணி ஆரவாரமிடத் தொடங்கி னார்கள். புரவித் தேர் நெருங்க நெருங்க மக்களின் ஆரவாரம் விண்ணைப் பிளக் கத் தொடங்கியது. வானவல்லியும் திடீ ரென்று பரபரப்பாகத் தொடங்கினாள். திடீர் எதிர்பார்ப்பு அவளையும் பற்றிக் கொண்டது.

புழுதி பறக்க விரைந்து வந்த அந் தப் புரவித் தேரையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளது மனம் உச்ச வேகத்தில் துடிக்க ஆரம்பித் தது. புரவித்தேரில் பின்னால் அமர்ந்தி ருந்த கரிகாலரை அவள் முதலில் அடை யாளம் கண்டு கொண்டாள். அதிலும் அவர் சோழ தேசத்தின் இளவரசனா கப் பாரம்பரிய ஆடையுடன் மணிமகுடம், செங்கோல் ஆகியவற்றைத் தரித்து அவர்

நின்று கொண்டிருந்ததால் அனைவருமே அவரை முதலில் அடையாளம் கண்டு கொண்டனர். ‘புரவித் தேரைச் செலுத்து வது யார்?’ எனும் வினாவுடன் அனைவ ரும் அப்புரவித் தேரையே கண் இமைக் காமல் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

புரவித் தேர் அருகில் நெருங்கி யதும் அனைவருமே அறிந்து கொண் டார்கள்’அப்புரவித் தேரைச் செலுத்து வது செங்குவீரன் இல்லை’ என்று. இருந் தாலும் இவ்வளவு நேர்த்தியாக, அதி வேகத்தில் பார்வையில் சிக்காத அள விற்குப் புரவிகளை வாயுவேகத்தில் செலுத்தும் இவன் யாராக இருப்பான்?’ எனும் நினைப்பில் நின்று கொண்டிருந் தார்கள்.

இளஞ்சேட்சென்னியின் பொலந் தேரைக் காளன்தான் விரைந்து செலுத் திக் கொண்டிருந்தான். அவனை அங்கி ருந்த சிலரைத் தவிர யாருக்கும் அடை யாளம் தெரிந்திருக்கவில்லை. அதிலும்

அவனது உடை சற்று விசித்திரமாகவே காணப்பட்டது. தலையில் தலைப்பாகை அதில் வேளக்காரப் படைத் தலைவனுக்குரிய இலச்சினைச் சின்னம் பொறிக்கப்பட்ட ஒரு பதக்கம். காதுகளில் மரகதக் குண்டலம், கழுத்தில் முத்து, விரிந்திருந்த மார்பினில் பூசிய சந்தனம், இடையில் நீண்ட வாளுறை, பாதம் வரை தொங்கிய யவன தேசப் பட்டு ஆகியவற்றை அணிந்து கொண்டு கம்பீரமாக அப்புரவித் தேரை செலுத்திக் கொண்டிருந்தான் காளன். விரைந்து வந்து மக்கள் திரளுக்கு முன் தேரை நிறுத்திய காளன் புரவித் தேரிலிருந்து குதித்துக் கரிகாலர் கீழே இறங்க வசதியாகத் தடுப்பினை நீக்கினான். கரிகாலரும் கீழே இறங்கிக் கொண்டார்.

கூட்டத்தினர் அனைவரும், “கரிகாலர் வாழ்க... சென்னியின் புதல்வன் வாழ்க... வென்வேல் வளவன் வாழ்க... வெற்றிவேல் வளவன் வாழ்க” என்று விடாமல் வாழ்த்து முழக்கங்களை

எழுப்பிக் கொண்டிருந்தார்கள். கரிகாலர் முன்னால் நடக்கக் காளன் அவருக்குத் துணையாகப் பின்னால் நடந்து செல்லலானான். வேங்கையும், அரிமாவும் நடப்பதைப் போன்று பெரும் கம்பீரமாக மேடையில் அமர்ந்திருந்த அழுந்தூர் வேள்திதியனை நோக்கி நடக்கலானார்கள் இருவரும்.

அவர்கள் இருவரையும் கண்டு திரண்டிருந்த வீரர்கள், உபதளபதிகள், உப தலைவர்கள், அமைச்சர்கள் என அனைவரும் வணங்கினார்கள். இருவரும் வருவதைக் கண்டதும் ஆசனத்திலிருந்து எழுந்து நின்று கொண்டார்கள் இரும்பிடர்த்தலையர், பெருமறவர் மகேந்திர வளவனார் மற்றும் அழுந்தூர் வேள் திதியன். அந்தத் தள்ளாத வயதில் உரியவருக்கு அளிக்க வேண்டிய மரியாதையை அளித்துவிட வேண்டும் என முயன்று நின்று கொண்டிருந்தார் வேள் திதியன்.

கரிகாலர் முதலில் சென்று தனது ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். அதன் பிறகு ம் எழுந்து நின்றவர் கள் யாரும் அமரவில்லை. அனைவருமே சற்றுத் தொலைவில் கம்பீரமாக நின்று கொண்டிருந்த காளனை மிரட்சியுடன் கவனித்தபடியே நின்று கொண்டிருந்தார் கள். வேளக்காரப் படைத் தலைவனான காளன் நடக்க நடக்கத் தளபதிகள், தலைவர்கள் என அனைவரும் தலை யைத் தாழ்த்தினார்கள்.

மற்ற வீரர்களைப் போன்று இரும் பிடர்த்தலையரும் வேளக்காரப் படைத் தலைவனைக் கண்டு பணிவதற்காகத் தலையைத் தாழ்த்த ஓடிச் சென்று தடுத் துவிட்டான் காளன்."அண்ணா... என்ன இது? தாங்கள் என்னைக் கண்டு பணி வதா?" என நெகிழ்ச்சியடைந்தான்.

"நான் மட்டுமா பணிகிறேன். நன் றாகப்பார் வளவனார், நம் தந்தை, மற்ற அனைத்து அமைச்சர்களும் தானே

பணியப் போகிறார்கள். இது வேளக்கா ரப் படைத் தலைவருக்குரிய மரியாதை தம்பி, இதை நீ ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும்!" எனக் கூறியவர் தனது மரியாதையைச் செலுத்தவே செய்தார். அதன் பிறகு மற்றவர்களைத் தடுப்ப தில் எந்தப் பயனும் இல்லை என்பதை உணர்ந்த காளன் அனைவரின் பணி வையும் ஏற்றுக் கொண்டு தனது தந்தை திதியனை நோக்கி அவரிடம் சென்று பணிந்தான்.

அவனை வாழ்த்திய திதியன், "மகனே, நீ கள்வனாக மாறி, இருங்கோ விடம் சேர்ந்துவிட்டாய் என்று கேள்விப் பட்டதும் நான் பெற்ற செல்வத்தில் ஒன்று பழுதோ என எண்ணி வருந்திவிட்டேன். ஆனால், இன்று என்னை நீ பெருமை யடையச் செய்துவிட்டாய். சென்னியால் வளவனைக் காக்க நியமிக்கப்பட்ட இரு வர் தலைவருள் நீயும் ஒருவனா?" எனக் கூறி கண்கள் கலங்கினார்.

"அனைத்தும் காரணத்திற்காகத் தான் தந்தையே, இல்லையேல் இத்தனை காலமாக இளவலை என்னால் காத்துக் கொண்டிருக்க இயலுமா?" என வினவியவன் பார்வையை அந்த மேடையைச் சுற்றிலும் செலுத்தினான்.

சற்றுத் தொலைவில் நின்று கொண்டிருந்த வானவல்லியைக் கண்டதும் அவளது விழிகளில் தனது பார்வையை நிலை நிறுத்தினான். அவன் ஏதோ தேடலுடன் அவளை நோக்கினான். அவளும் அவனது தேடலைப் புரிந்து கொண்டதைப் போன்று சற்று விலகினாள் வானவல்லி. அவளுக்குப் பின்னால் பத்திரைத் தேவி நாணத்துடன் நின்று கொண்டிருந்தாள். அவளிடம் சென்ற காளன் அவளது கரத்தைப் பிடித்து அழைத்து வந்து நின்று கொண்டிருந்த இரும்பிடர்த்தலையர், மகேந்திர வளவனார் மற்றும் அழுந்தூர் திதியன் ஆகியவர்கள் முன் நின்றவன், "பெரியோர்கள் வாழ்த்தில்லாமல் எங்களது

காந்தர்வத் திருமணம் நடந்து முடிந்து விட்டது. சான்றோர்கள் மூவரும் எங்கள் மூவரையும் வாழ்த்த வேண்டும்." எனக் கூறியபடி பத்திரையுடன் அவர்கள் மூவ ரின் பாதங்களிலும் விழுந்தான் காளன் எனும் இளந்திரையன்.

அவன் கூறியதைக் கேட்டதும் பிடர்த்தலையர், "திரையா... மூவரா...?" என வியப்புடன் வினவினார் .

காளன் அவருக்கு வாய்மொழியில் எந்தப் பதிலையும் அளிக்காமல், அரு கில் நின்ற பத்திரையின் அடிவயிற் றில் கையை வைக்கலானான். அவன் தெரிவித்ததைப் புரிந்து கொண்டவர், "திரையா.... நம் அழுந்தூரை ஆள்வதற்கு நமக்குப் பின் இளவரசன் கருத்தரித்து விட்டானா? எங்களை நீ பெருமைப்ப டுத்திவிட்டாய்" எனக் கூறிக் கொண்டு அணைத்துக் கொண்டார். பிறகு அழுந் தூர் வேள் திதியனிடம் ஆசி பெற்றுக் கொண்டனர் மூவரும்.

தனது தோழி பத்திரையை அழைத்துச் சென்று வாழ்த்து பெற்று அனைவருக்கும் தெரியப் படுத்தியதைப் போன்று தன்னையும் கரிகாலர் அழைத்துக் கொண்டு செல்வார் என எதிர்பார்த்து நின்றிருந்தாள் மரகதவல்லி. ஆனால், அவள் அங்கு நிற்பதையே கரிகாலர் கவனித்திருக்கவில்லை.

சோழர்களின் அதிகாரமிக்கத் தலைவனான வேளக்காரப் படைத் தலைவன் வந்துவிட்டதும் புகார் மக்கள் கூட்டத்தினர் பெரும் பரபரப்புடனே அங்கிருந்துக் கலைந்தார்கள். கரிகாலரும் அங்கிருந்து ஏதோ அவசரப் பணிக்காக விரைந்துச் செல்லலானார்.

மரகதவல்லி மட்டும் பெரும் ஏமாற்றத்துடன் அங்கிருந்து செல்லலானாள்.

அன்றைய மாலை நேரம். செங்குவீரனின் படைப் பிரிவினர் வசிக்கும் குன்றுத் துறையில் சோழ இளவரசர் கரிகாலர், வேளக்காரப் படைத் தலைவன்

https://telegram.me/aedahamlibra

இளந்திரையன், படைத் தலைவி வான வல்லி மற்றும் உபபடைத் தலைவர்க ளான டாள்தொபியாஸ், பரதவன் கும ரன், திருக்கண்ணன் ஆகியோர் கூடியி ருந்தார்கள். புகார் வந்த பிறகு அனைத் துப் போர் ஏற்பாடுகளைப் பற்றியும் கேட் டும், நேரில் பார்த்தும் ஆராய்ந்துவிட்டி ருந்தான் காளன்.

செங்குவீரன் பட்டுத் துணியில் எழுதி விட்டுச் சென்றிருந்த புரியாத அந் தக் கோடுகளையே வெகுநேரம் பார்த் துக் கொண்டு நின்று கொண்டிருந்தான். மற்ற துணிகளில் தீட்டியிருந்த புள்ளி கள், புகாரைச் சுற்றிலும் பிரமாண்டமாக நின்று கொண்டிருத்த தூண்கள் ஆகிய வற்றைக் கண்டு அனைத்தையும் புரிந்து கொண்டான். மற்ற துணிகளைப் பார்த்த போது அதில் தீட்டியிருந்த போர்க் கரு விகளைப் பார்த்தபோது அவனது முகத் தில் இளநகை ஒன்று நம்பிக்கையுடன் தோன்றி மறைந்துவிட்டுச் சென்றது.

புரியாத அந்த ஒற்றைப் பட்டுத் துணியைப் பார்த்தபடியே, "செங்குவீரன் நமக்கு அதிக வேலை வைக்காமல் அவனே அனைத்தையும் திறம்படச் செய் துமுடித்துவிட்டு சென்றுவிட்டான். வான வல்லி உனது யூகம் என்ன? நீ திட்ட மிட்டதைப் போன்றுதானே அனைத்தும் நடந்து கொண்டிருக்கிறது?" என வினவி னான்.

"அப்படித்தான் நான் நம்புகிறேன். எனது திட்டப்படிதான் அனைத்தும் நடக் கிறதா என்பதைத் தாங்கள் இருவரும் தான் உறுதி செய்ய வேண்டும்?"

"நாங்கள் இருவரும் எதை உறுதி செய்ய வேண்டும்?"

"எனக்குச் சில தகவல்கள் தேவை. அதைத் தெரிவியுங்கள், நான் எனது திட்டத்தை அனைவருக்கும் தெரிவிக் கிறேன்" எனக் கூறியவள் அருகில் ஆசனத்தில் அமர்ந்திருந்த கரிகாலரைப் பார்த்து, "கரிகாலா... வேந்தன் உன்னைச்

சரியான நேரத்தில் அடையாளம் கண்டு உன்னை மீண்டும் சிறை வைத்துவிட் டான் தானே!" என வினவினாள்.

"ஆமாம்...."

"அவன் பெரும் புத்திசாலி. நீ அவ னைப் பற்றிய தகவல்களை அதிகம் விசாரித்த போதே நான் எதிர்பார்த் தான். நீ நிச்சயம் அவனைப் பின்தொடரப் போகிறாய் என்று!"

"அவன் என்னை அடையாளம் கண்டு மீண்டும் சிறை வைத்துவிடுவான் என்று அறிந்துமா, என்னைச் செல்ல அனுமதித்தீர்கள்?" அதிர்ச்சியுடன் வின வினார் கரிகாலர்.

"ஆம் வளவா... நான் எதிர்பார்த் தது அதுதான். அவன் என்னை வஞ்சி யில் அடையாளம் கண்டறிந்து என்னை ஏமாற்றப் பார்த்தான். நான் சுதாரிப்புடன் செயல்பட்டதால் தப்பிவிட்டேன். நீயும் எச்சரிக்கையுடன் தான் இருந்திருப்பாய்,

ஆனால் அவனிடம் அந்த எச்சரிக்கைகள் எந்த விதத்திலும் பயன் அளித்திருக்காது. அவன் உன்னை நிச்சயம் அடையாளம் கண்டறிந்து விடுவான் என்று எதிர்பார்த்தேன். அதைப் போன்றே அவன் உன்னை அடையாளம் கண்டறிந்து சிறையும் படுத்த முயன்றிருக்கிறான்."

"ஆமாம்... ஆமாம்..." வியப்புடன் தெரிவித்தார் கரிகாலர்.

"இதுமட்டுமல்ல கரிகாலா, அவன் உன்னிடம் என்னை உறைந்தையில் ஏற்கெனவே சிறை செய்து வைத்திருப்பார்கள் என்றும் தெரிவித்திருப்பானே?"

"...... . !"

"நீயும் என்னைக் காக்க அவர்களிடம் சரண் அடைந்து விடலாம் என்று தீர்மானம் செய்து அமைதி காத்திருப்பாயே!"

அதிர்ச்சியுடன் எந்தப் பதிலையும் அளிக்காமல் அவளையே நோக்கினார் கரிகாலர்.

"அவனிடம் நீ சிக்கியிருந்த போது உனது எதிர்பார்ப்பையும் கடந்து நம் வேளக்காரப் படைத்தலைவர் வெளிப் பட்டு உன்னைக் காப்பாற்றிக் கொண்டு புகாருக்கு அழைத்து வந்துவிட்டார். அப் படித்தானே!"

வியப்புடன் கரிகாலர் வானவல்லி யையே பார்த்துக் கொண்டிருந்த போது அருகில் நின்ற வேளக்காரப் படைத் தலைவன், "அது எப்படி வானவல்லி அனைத்தையும் நேரில் கண்டதைப் போன்றே தெரிவிக்கிறாய்?" என வினவி னான்.

"நான் துணிந்து உறைந்தைக்கு வந்ததற்குக் காரணமே தாங்கள் உறைந் தையில் இருந்த காரணம் தான். வேளக் காரப் படைத்தலைவர் காவலுக்கு இருக் கையில் என்ன அண்ணா கவலை?"

"இல்லை வானவல்லி நீ கூறுவது அனைத்தும் தவறு. நான் இருந்து தானே என் நண்பன் திவ்யனை குணக் கடலில்

தொலைத்தேன்? அதே போன்றுதானே, செங்குவீரனையும் குமரிக் கடலில் இழந்தேன். அன்று என்னால் என்ன செய்ய முடிந்தது? கரிகாலனை மட்டும் புரவித் தேரில் மாறு வேடத்தில் ஏற்றிக் கொண்டு புகார் வந்து சேர்பித்தேன்! அசம்பாவிதங்கள் எதுவும் நடக்காத வரை கவலையில்லை. ஆனால்...” என அவன் கூறிக் கொண்டிருந்த போதே இடைமறித்த திருக்கண்ணன், “அன்று எங்கள் இருவரையும் புரவி வண்டியில் அழைத்துவந்தது தாங்களா?” என வியப்புடன் வினவினான்.

“ஆமாம் திருக்கண்ணா... பல முறை பல்வேறு இடங்களில் கரிகாலனுடன் நான் மாறுவேடத்தில் பயணித்திருக்கிறேன். . அவனைக் கொலை செய்ய நடந்த முயற்சிகள் பலவற்றை மறைமுகமாக முறியடித்திருக்கிறேன் நான். அனைத்தையும் விவரமாக வெளியிட முடியாது. வானவல்லி, அடுத்து என்ன?

கடந்த காலத்தைப் பற்றிப் பேசி எந்தப் பயனும் இல்லை.”

“இனி நடக்கப் போவதைப் பற்றிப் பேசலாம்!” எனத் தெரிவித்தவள்”கரிகாலா, பாண்டியர்களின் திட்டம் என்ன? அங்குக் கால நிலை எப்படி? நீதான் பாண்டியநாடு சென்று திரும்பியிருக்கிறாய்?” என வினவினாள்.

“சேரனிடமிருந்து செய்தி சென்று சேர்வதற்குள் பாண்டியன் படைகளைத் திரட்டி பறம்புமலை எல்லையில் நிறுத்தி வைத்திருக்கிறான். பெரும் படை!”

“மழை...?”

“ஆமாம்... மழை பெய்யத் தொடங்கிவிட்டது. ஓடை, சிற்றாறு, ஆறு அனைத்திலும் நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது!”

“நல்லது. டாள்தொபியாஸ், சேர எல்லையின் நிலை என்னவாம்?”

https://telegram.me/aedahamlibra

“அகப்பா கோட்டையை வில்லவன் இன்னும் இழக்கவில்லை. சேர இளவல் முழு மூச்சுடன் முற்றுகையைத் தீவிரப் படுத்திவிட்டானாம்!”

“நல்லது. இப்போது சேரப் படை புறப்படுவதற்கான வாய்ப்பு இல்லை.”

“வானவல்லி... நீ பேசுவது சரியாகப் புரியவில்லை.”

“சரி அண்ணா... இதுவரை நான் என்ன நடந்திருக்கும் என்பதை உங்களி டம் தெரிவித்தேன். இனி என்ன நடக்கப் போகிறது என்பதைத் தெரிவிக்கிறேன் கேளுங்கள். இதற்கு ஏற்றதைப் போன்று நாம் நமது போர்த் திட்டங்களை வகுத் துக்கொள்வோம்.”

அனைவரும் அவளது முகத்தையே வியப்பு கலந்த ஆச்சர்யத்துடன் நோக்கி னார்கள்.

"சேரனது பெரும்படை ஆன்பொருநை நதிக் கரையில் சேர இளவலது வருகைக்காகக் காத்திருக்கிறது!"

"ஆம்..."

"பாண்டியனது படை பறம்பு மலைப் பகுதியிலும், உறைந்தை காவிரி நதிக் கரையில் இருங்கோவின் மலை நாட்டுப் படை நெடுங்காலமாகக் காத்திருக்கிறது."

"........."

"வேந்தனை நான் ஏமாற்றி ஓலையை மாற்றி வைத்ததை வேந்தன் உறைந்தைக்குச் சென்றதும் அனைவரும் அறிந்து விடுவார்கள். அது மட்டுமல்லாமல் இத்தனை காலமாக நம் வேளக்காரப் படைத் தலைவர் அவர்களுடன் இருந்ததையும் அவன் நிச்சயம் தெரிவித்திருப்பான். தொடர் ஏமாற்றத்தினால் இருங்கோ தனது சிந்திக்கும் ஆற்றலை இழந்திருப்பான். அவனது மகன்

சேர மற்றும் பாண்டிய படையின் துணை இல்லாமலே புகாரைத் தாக்குவோம் என வெகுண்டு எழுவான். அவனது திட்டத் திற்கு வைதீகர் பாகவதரும் தூபமிடு வார். சேர, பாண்டிய மற்றும் வேளிர் களின் படைகள் வருவதற்குள் இருங் கோவின் படை மீண்டும் கடந்த வரு டத்தைப் போன்று புகாரை முற்றுகையி டத் தனியாகக் கிளம்பி வரும். எனது கணிப்புப்படி இந்நேரம் வேந்தனது மூல மும், இருங்கோவின் மகனது மூலமும் செய்தி உறைந்தையை எட்டியிருக்கும். புறப்படச் சொல்லி கட்டளை எழுந்திருந் தாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை. தனி யாக நம்மை நோக்கி வரும் இருங் கோவின் படை இங்கிருந்து உறைந் தையை நோக்கி விரட்டியடிக்கப்படும். அதே நேரம் துளுவ எல்லையிலிருந்து புகாருக்கு வரும் உபதளபதி வில்லவ னின் புரவிப் படைக்கும் விரட்டிச் செல் லும் நமது படைக்கும் இடையில் இருங் கோவின் படை சிக்கி சிதறடிக்கப்பட்

டுச் சின்னாபின்னப் படுத்தப்படும்" எனக் கூறிக் கொண்டிருந்த போதே இடைம றித்த திருக்கண்ணன், "தனியாகப் புறப்ப டும் இருங்கோவின் படைக்கு ஆதரவாக வேளிர்கள் அல்லது சேரனது அல்லது பாண்டியனது பெரும்படை துணையாக வந்துவிட்டால் நமது நிலை?" என வின வினான்.

"அதற்கு வாய்ப்பு இல்லை திருக் கண்ணா... தென்னகத்தில் பெரும் மழை தொடங்கியிருக்கிறது. புரவித் தேரில் விரைந்து மழைக்கு முன் வந்துவிட்ட தால் இவர்கள் இருவரும் வந்துவிட்டார் கள். ஆனால், பெரும் படையை நகர்த் திக் கொண்டு வருவது சாதாரணக் காரி யம் அல்ல. பாண்டியப் படைமழையி னால் நிச்சயம் தாமதமாகும். சேர இளவல் திரும்பி வந்த பிறகு தான் சேரப் படை கிளம்பும், நமக்கு வேண்டிய காலம் வரை சேரப் படை நகராத அளவிற்கு வில் லவன் பார்த்துக் கொள்வார். அவருடன் தொடர்ந்து தொடர்பில் இருக்க வேண்

டும். கடல் மார்க்கமாகப் புறப்படும் கடற் படையை நாம் அதே நேரத்தில் எதிர் கொள்ள நேரிடலாம்! அதாவது நிலத்தில் இருங்கோவின் படைகளையும், நீரில் மூன்று பெரும் வல்லரசுகளின் கூட்டுக் கடற்படையையும் நாம் சந்திக்க வேண்டி யிருக்கும். அவர்களைப் பரதவன் குமரன் சமாளித்துக் கொள்வார்!"

ஆசனத்திலிருந்து எழுந்த கரி காலர், "தனியாகச் சிக்கிக்கொள்ளும் இருங்கோவின் படைகளை நம் புலிப் படை சிதறடித்துவிடும். செங்குவீரரின் மறைவில் வாடும் நம் வீரர்களை நிச்சயம் இந்த வெற்றி உற்சாகப்படுத்தும். நம் வீரர் களின் மனச் சோர்வைப் போக்க நமக்குத் தேவை பெரும் வெற்றி. ஆனால், இருங் கோவின் படை அழிக்கப்பட்ட பிறகு நாம் சேர, பாண்டிய மற்றும் வேளிர்களின் கூட் டுப்படையை எதிர்கொள்ள வேண்டியி ருக்கிறது. அவர்களை எங்கே நாம் எதிர் கொள்ளப் போகிறோம்? எந்தத் திட்டமும் இல்லையே!"

அவ்விடத்தில் பெரும் அமைதி நிலவியது. அந்தக் கேள்விக்கு என்ன பதிலை அளிப்பது எனத் தெரியாமல் வானவல்லி அமைதியாக நின்றாள். அப் போது காளன், "அவர்களை நாம் வெண் ணியில் எதிர்கொள்ளப் போகிறோம் வளவா... இதோ அவர்களை நாம் எப்படி எதிர்கொள்ளப் போகிறோம், நாம் போர் செய்ய வேண்டிய முறை என அனைத் தையும் செங்குவீரன் துணியில் தீட்டியி ருக்கிறான் பார்" எனக் கூறிக் கொண்டு கையிலிருந்த பட்டுத் துணியை அனை வரும் பார்க்கும் படி விரித்தான் காளன். விரித்ததோடு மட்டுமல்லாமல் அந்தப் பட்டுத்துணி மந்திரக் கோடுகளைப் பற்றி விவரிக்கவும் செய்தான் காளன்.

பட்டுத் துணியில் நீண்டிருந்த ஒரு கோட்டினைச் சுட்டிக் காட்டியவன், "இது காவிரி நதி" அதில் இருந்த சில புள்ளிக ளைச் சுட்டியபடி, "இது வஞ்சி, இது புகார், இது உறைந்தை, இது கூடல்" எனத் தெரிவித்தான். பிறகு ஆங்காங்கே சிதறிக்

கிடந்த அம்புக் குறிகளைக் கையினால் அழுத்திக் குறிப்பிட்டபடியே, ஒவ்வொரு நாட்டின் படைகளும் எந்தெந்த வழியாக வந்து சேரும், அவர்களை எங்கு மொத் தமாக நாம் எதிர்கொள்ளப் போகிறோம் என ஓலையில் குறிப்பிடப்பட்டிருந்ததை அனைவருக்கும் விளக்கினான்.

பிறகு இன்னொரு பட்டுத் துணியை விரித்தவன் அதில் சிதறிக் கிடந்த பலவித வண்ணப் பொடிகளையும், புள் ளிகளையும் சுட்டிக் காட்டியவன் எதி ரிகளின் கூட்டுப் படைகளை எங்கு, எப்படித் தாக்கப் போகிறோம்? கடைபி டிக்க வேண்டிய போர் வியூகம் என்ன? என அனைத்தைப் பற்றியும் விவரிக்கலா னான் காளன்.

அவன் விவரித்ததைக் கேட்டதும் அனைவரும் செங்குவீரனை எண்ணி வியந்து பெருமைப்பட்டுக் கொண்டிருந் தார்கள். ஆனால், வானவல்லி மட் டும் குழப்பத்துடன் முகத்தைச் சோர்

வாக வைத்துக் கொண்டு ஏதோ பெரும் சிந்தனையில் அமர்ந்திருந்தாள். அதைக் கரிகாலரும் கவனித்து விட்டிருந்தார்." அக்கா, செங்குவீரரின் திட்டத்தில் குறை ஏதாவது இருக்கிறதா? உங்களது முகம் ஏன் குழப்பத்தில் சிக்கித் தவிக்கிறது?" என வினவினார்.

"அவரது திட்டத்தில் குறை கண்டுபிடிக்கும் தகுதி எனக்கு இல்லை வளவா..."

"மாமா திட்டத்தை விவரிக்க விவரிக்க உங்களது முகம் கலையை இழந்து விட்டதே ஏன்?"

"சேரமான் பெருஞ்சேரலாதனுக்கு வைதீகர் பாகவதர் எழுதிய ஓலையிலும் 'புகார் படையை வெண்ணி'யில் எதிர் கொள்வோம்', என்றே எழுதி அனுப்பியிருந்தார். ஆதலால் தான் எனக்குக் குழப்பமாக இருக்கிறது. எதிரிகள் தேர்ந்தெடுத்திருக்கும் வெண்ணியில் நாமே வலிய சென்று எப்படிச் சிக்கிக்கொள்வது?"

https://telegram.me/aedahamlibra

"ஆனால்... செங்குவீரரும் இதே வெண்ணியைத் தானே பெரும்போருக்கு தேர்ந்தெடுத்திருக்கிறார்."

"காரணம் என்ன?"

"......."

"வெண்ணியின் இரகசியத்தை நாம் முதலில் கண்டறிய வேண்டும் வளவா... அதைக் கண்டறியாத வரை நம்மால் பெரும்போர் வியூகத்தைப் பற்றிச் சிந் திக்க இயலாது!"

"ஏற்பாடுகள் வழக்கம் போலவே நடந்து கொண்டிருக்கட்டும்! நான் என்ன என்று கண்டறிந்து வருகிறேன்" எனக் கூறிய காளன் அங்கிருந்து விடைபெற்றுச் செல்லலானான்.

பொழுது இருளத் தொடங்கியதால் கரிகாலரும் அங்கிருந்து விடைபெற்று தனது புரவியில் விரைந்து செல்லலா னார்.

https://telegram.me/aedahamlibra

**அடிக்குறிப்பு :**

1. செல்லூர்ப் போர்: செல்லூர்ப் போர் அழுந்தூர் வேள் திதியனுக்கும் மௌரிய கோசர் படைக்கும் நடை பெற்ற போர் என்று தனது தென்னாட்டுப் போர்க்களங்கள் எனும் நூலில் குறிப்பிடு கிறார் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்து ரையார்.

https://telegram.me/aedahamlibra

# 39. தணியாத வேட்கை

காதலனைப் பிரிந்து அவனது வரவுக்காகக் காத்திருக்கும் காதலியின் மன நிலையைச் செயங் கொண்டார் தனது கலிங்கத்துப் பரணியில் மிகவும் அழகாக வர்ணித்திருப்பார். கரிகாலருக்குப் பின் ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்குப் பிறகு தான் செயங் கொண்டாரின் காலம் என்றாலும் கலிங்கத்துப் பரணி கரிகாலரின் வரலாற்றைக் கூறும் முக்கிய நூல்களும் ஒன்று. போர் இலக்கியமான பரணியில் இருக்கும் அக இலக்கியமான 'கடை திறப்பு' பகுதி அனைவரும் வாசிக்க வேண்டிய ஒன்று. காதல் பிரிவை அழகாகக் கூறி பின்னர்ப் பிரிவிற்குப் பிறகு இருவரும் காமத்தில் திளைத்திருக்கும் இன்

பத்தை மிகவும் அழகாக வெளிப்படுத்தி யிருப்பார்.

பொங்கும் மதிக்கே தினம் நடுங்கிப்

புகுந்த அறையை நிலஅறை என்று

அங்கும் இருக்கப் பயப்படுவீர்

அம்பொன் கபாடம் திறமினோ!

'தலைவனைப் பிரிந்திருக்கும் நீங்கள் ஒளிமிகுந்த நிலவினைக் கண்டாலே பயந்து நடுங்குவீர்கள். அது தன் குளிர்ந்த கதிர்களால் உங்கள் மீது வெம்மையை உமிழும். அதைப் பொறுத்துக் கொள்ள இயலாத நீங்கள் படுக்கை அறைக்குள் சென்று படுத்துக் கொள்வீர்கள். ஆனால் அங்கோ காம வெப்பம் உங்களைத் தாக்க உங்களது மேனி புழுங்கத் தொடங்கும். இந்தப் புழுக்கம் காம வெம்மையினால்தான் என்பதை அறியாத நீங்கள் 'நிலவறைக்குள் புகுந்துவிட்டோமோ?' எனக் கருதி அங்கும் இருக்கப் பயப்படும் அழகிய பெண்களே, போருக்குச் சென்ற உங்களது தலைவன் வெற்றி

https://telegram.me/aedahamlibra

யுடன் திரும்பி வந்து வாசலில் உங்களுக் காகக் காத்திருக்கிறான். அழகிய பொன் னால் செய்யப்படக் கதவுகளைத் திறப்பீர் களாக...' என்பது இப்பாடலின் பொருள்.

அன்று கரிகாலரை எண்ணிய படி வருத்தத்தில் தவித்துக் கொண்டி ருந்த மரகதவல்லியின் நிலையைத் தான் செயங் கொண்டார் பிற்காலத்தில் கலிங் கத்துப் பரணி 'கடைதிறப்பு' பகுதியில் எழுதியிருப்பார் போலும். இத்தனை நாட் களாகக் கரிகாலரைப் பிரிந்திருந்த மர கதவல்லி அவரது பிரிவை எண்ணிப் பெருந்துயரில் ஆழ்ந்திருந்தாள். அவளது வீட்டு வாசலில் எந்தச் சத்தம் கேட்டாலும் தன்னைக் காண கரிகாலர் வந்துவிட் டாரோ என்று எண்ணி ஓடிச் சென்று கத வினைத் திறந்து பார்த்த வண்ணம் இருந் தாள். அப்படி அவள் தினமும் பல முறை கதவினைத் திறந்து மூடிக் கொண்டிருந் ததாள் அவள் வீட்டுக் கதவின் அச் சானது தேய்ந்துபோய்க் காணப்பட்டது. வாயிலையே பார்த்துக் கொண்டு காத்தி

ருந்த அவளது விழிகளும் சிவந்துவிட்டி ருந்தன.

அன்றும் புகார் கடற்கரையில் கரி காலன் தன்னைக் காணாமல் சென்று விட்டதனால் ஏற்பட்ட மன உளைச்ச லில் தனது பஞ்சணையில் வருந்தியபடி அமர்ந்திருந்தாள் மரகதவல்லி. அவளுக் குக் கோபம் அதிகமாகக் காணப்பட்டா லும் அதைவிடவும் கரிகாலரை சந்தித்து விட வேண்டும் எனும் ஏக்கம் மிகுந்தே காணப்பட்டது. ஏக்கமும், கோபமும் சம அளவில் தோன்றி அவளை வதைக்கத் தொடங்கின. கோபமோ? அல்லது ஏக் கமோ? எதை வெளிப்படுத்த வேண்டு மானாலும் உற்றவன் அருகில் இருந்தால் தானே இயலும்? அவனது இல்லாமை யால் மிகவும் ஏங்கிப் போயிருந்தால் மரக தவல்லி.

பொழுது சாய்ந்த மாலைப் பொழு திலிருந்தே அவள் கரிகாலனை எதிர் நோக்கிக் கொண்டிருந்தாள். முதல்

https://telegram.me/aedahamlibra

சாமம் முழுவதும் கடந்திருந்தது. தனது அறைக்குள் தங்க இயலாமல் மாளிகை யின் மேல் தளத்திற்குச் சென்றுவிட்டாள். ஆனால், அங்கோ முழு நிலவு தனது குளிர்ந்த வெண்கதிர்களைச் செலுத்திக் கொண்டிருந்தது. முழுநிலவின் வெண் கதிர்கள் அவளது மன இறுக்கத் தைக் குறைத்திருக்கத்தான் வேண்டும், ஆனால் ‘இந்த முழு நிலவை மகிழ்ச் சியுடன் கழிக்கக் கரிகாலர் தன்னுடன் இல்லையே? அவர் அருகில் இருந்தி ருந்தால் இப்பொழுது இந்நேரம் எவ்வ ளவு மகிழ்ச்சியாகக் கழிந்திருக்கும்? இந்த முழு நிலவின் குளிர்ந்த கதிர்களை அனு பவிக்க அவர் அருகில் இல்லையே!’என ஏங்கியபடி நீண்ட பெருமூச்சு ஒன்றை வெளியிட்டாள். அப்பெருமூச்சு அனலாய் வெளியே வந்தது. குளிர்ந்த நிலவினால் தனது உடலில் வெம்மை அதிகமாகி விட்டதை உணர்ந்தவள் மீண்டும் தனது அறைக்கு வந்து விட்டாள். அறைக் குள் தனிமையில் இருக்க இருக்க

https://telegram.me/aedahamlibra

அவளது உடல் புழுங்கத் தொடங்கியது. குளிர்ந்த தென்றல் அறைக்குள் வீசியும், காம வெம்மையினால் தான் தனது உடல் புழுக்கத்தில் தவிக்கிறது என்பதை அறிந்திராத மரகதவல்லி மீண்டும் காற்று வாங்க சாளரப் பகுதிக்குச் சென்றாள். நிலவின் குளிர்ந்த கதிரும், வீசிய தென்றலும் அவளது புழுக்கத்தைப் போக்கிய பாடில்லை. மனம் நொந்தபடி மீண்டும் தனது அறைக்குள் வந்து பஞ்சணையில் படுத்துக் கொண்டாள். அன்றைய அவளது மனம் மற்றும் உடல் தவிப்பிற்கான காரணத்தை அவள் அறிந்திருக்கவில்லை. நேரம் அதிகமாக அதிகமாக அவளது உடல் வெம்மையில் தவிக்க எழுந்து சென்றவள் தனது உடலில் அணிந்திருந்த இறுக்கமான ஆடைகளைக் களைந்து எறிந்துவிட்டு ஒரேயொரு பருத்திச் சேலையை மட்டும் உடலில் சுற்றிக் கொண்டு வந்து பஞ்சணையில் விழுந்தாள்.

பொழுது விரைந்து கடந்து கொண்டிருந்தது. ஆனால், அவள் மட்டும் உறங்கிய பாடில்லை. கண்களை மட்டும் மூடிக் கொண்டு அப்படியே கிடந்தாள்.

அப்போது யாரோ அவளது அறையின் வெளிப்பக்கம் நிற்பதைப் போன்று தோன்ற எழுந்து அமர்ந்தாள் மரகத வல்லி. ஆனால், வழக்கம் போல இப்போதும் வருவது கரிகாலர்தான் என எண்ணி வெளியே அவசரமாகச் ஓடிச் சென்று பார்த்து ஏமாறுவதற்கு அவளது மனம் ஒப்பவில்லை. ஆதலால், இதுவும் மனப் பிரமைதான் என்று மீண்டும் பஞ்சணையில் விழுந்தாள்.

அப்போதுதான் வெளியே சென்று வந்திருந்ததால் கதவினை அவள் தாழிட்டிருக்கவில்லை. ஆதலால், அறைக்கு வெளியே நின்ற கரிகாலருக்கு அதிகச் சிரமம் இருக்கவில்லை. சத்தம் எழுப்பாமல் கதவினைத் திறந்தவர் சத்

தம் எழுப்பாமலே கதவைத் தாழிடலா னார்.

இரவினில் பதுங்கிச் செல்லும் பூனையைப் போன்று நடந்தவர் மரகத வல்லியின் அருகில் சென்று பஞ்சணை யில் அமர்ந்தார். அமர்ந்தவர் அமர்ந் ததோடு மட்டுமல்லாமல் முழுவதும் மறைக்கப்படாமல் ஆங்காங்கு விலகியி ருந்த அவளது சேலை வெளிப்படுத்திய அழகுகளைக் கிறக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

மரகதவல்லி 'உறங்குகிறாள்' என எண்ணிய கரிகாலர் அவளுடனான ஊடல் நோயைத் தீர்க்க இதுதான் தக்க மருந்து என நினைத்தபடி அவளது அடி வயிற்றில் கையை வைத்து மெல்லத் தடவினார். ஆனால், அவளோ பொய்த் தூக்கம் தூங்கினாலும் 'தினமும் கன வில் தன்னை இம்சிக்கும் கரிகாலர் தான் இப்போதும் தன்னை வருத்துகிறார்' என எண்ணியவள் அவரது செயலுக்கு எந்

https://telegram.me/aedahamlibra

தவித எதிர்ப்பையும் காட்டாமல் பஞ்ச ணையிலேயே பொய்த் தூக்கம் தூங்கலா னாள்.

அவளது பொய்த் தூக்கத்தைப் புரிந்து கொண்ட கரிகாலரும் அவளது அடிவயிற்றில் முத்தமிடமும் செய்தார். அவர் முத்தமிடத் தொடங்கியதும் நடப் பது கனவல்ல நனவுதான் என்பதைப் புரிந்து கொண்ட மரகதவல்லி பதற்றத் துடன் அவரை விலக்கிவிட்டு எழுந்து நின்று கொண்டாள்.

அவள் தன்னைக் கண்டதும் இப் படிப் பதறிக் கொண்டு எழுந்து நிற்பதன் காரணத்தை அறியாத கரிகாலர் வியப் புடன் அவளை நோக்கினார். ஆனால் அவளோ இவரைக் கோபத்துடன் பார்த் துக் கொண்டிருந்தார்.

“மரகதவல்லி...” என அழைத்தபடி அவளை நெருங்கினார்.

https://telegram.me/aedahamlibra

கரிகாலரைக் காணாதவரை அவர் அருகில் தன்னுடன் இல்லையே என்ற ஏக்கத்துடன் இருந்த மரகதவல்லிக்கு அவர் அருகில் வந்ததும் ஏக்கத்தை விடக் கோபம் மேலோங்கத் தொடங் கியது. அவர் நெருங்குவதைப் பார்த்த தும், "அருகில் வராதீர்கள்!" எனக் கூறிக் கொண்டு விலகி நின்றுவிட்டாள்.

"உனைக் காணாத பிரிவில் வாடிப் போய் வந்திருக்கிறேன் மரகதவல்லி. சிறு பொழுதேனும் உன் இதழ்களை மட்டு மாவது கடன் கொடுத்துவிட்டு அப்புறம் உனது பிணக்கை வைத்துக் கொள் ளேன். உன் இதழ்த் தேனைப் பருகி னால் தான் பெரும் பொழுதுகளாக உன் னைப் பிரிந்திருந்ததால் ஏற்பட்டிருக்கும் என் தாகம் அடங்கும்" எனக் கூறியபடி அவளை நெருங்கினார்.

"அது தாகம் அல்ல... அதற்குப் பெயர் மோகம்!"

“சரி... அதற்குப் பெயர் மோகமாகவே இருந்துவிட்டுப் போகட்டுமே! காதலியின் மீது தோன்றும் ஈர்ப்பிற்குப் பெயர் காதல், மோகம், அன்பு, பாசம்...? எதுவாக இருந்தால் என்ன?”

“சிறு போர் வந்தாலே காதலியை மறந்துவிடுபவர் நீங்கள். உங்களை இனியும் நான் நம்புவதற்குத் தயாராகவில்லை.”

“மரகதவல்லி....” கெஞ்சினார் கரிகாலர்.

“போரும், நாடுமே கதி எனக் கிடக்கும் உங்களுக்கெல்லாம் காதலி என்பவள் எதற்கு? வேண்டியபோது தொட்டுவிட்டுச் சென்றுவிடுவீர்கள், மற்ற நேரங்களில் நாங்கள் உங்களை எண்ணியே தவித்துக் கொண்டு இருக்கவேண்டும்?”

“வாளும் உறையும் எப்போதும் ஒன்றாகவே இருக்க இயலுமா? வில்லிலி

ருந்து அம்பு புறப்பட்டால் தானே அதன் இலக்கை அடைய இயலும்?"

"இதற்கும் உதாரணம் போராயுதங் கள் தானா?"

"நீ விரும்பினால் வேறு உதா ரணம் கூறுகிறேன்" எனக் கூறிக் கொண்டு அவளது முகத்தருகே சென் றவர் அவளது விழிகளில் முத்தமிட் டார்."இந்த இமைகளைப் போன்று தான் நாமும். சேர்ந்திருந்தால் நாம் இருவர் மட் டுமே மகிழலாம். ஆனால் அவ்வப்போது பிரிந்திருந்தால் தான் நம்மால் புற உலக இன்பங்களையும் அனுபவிக்க இயலும் என் காதலி" எனக் கூறிக் கொண்டு அவளை இறுக்கி அணைத்தார்.

ஆனால் அவளோ அவரது விளக் கத்தில் திருப்தி அடையாமல், "உங்களது கள்ளத்தனம் இனி ஒருநாளும் என்னி டம் பலிக்காது" எனக் கூறிக் கொண்டு அவனது அணைப்பிலிருந்து விலகி அரு கில் கிடந்த பஞ்சணையில் விழுந்து

முகத்தைத் தலையணையில் புதைத்த படி குப்புறப் படுத்துக் கொண்டாள்.

கரிகாலர் அவளை எழுப்பிப் பார்த்தார். அவள் எழுவதாகத் தெரியவில்லை. சற்று நேரம் நின்று அவளையே பார்த்துக் கொண்டிருந்தார். கரிகாலருக்குத் தெரியும், ‘காதலில் பிணக்கு எவ்வளவு நேரம் நீடிக்கிறதோ, பிறகு கூடலில் கிடைக்கும் இன்பம் அதைவிடவும் அதிகமாகக் கிடைக்கும் என்று.’ ஆதலால் அவர் அவளது பொய்க் கோபத்தைக் கண்டு பின்வாங்குவதாக இல்லை. அவளது காலருகே அமர்ந்தார். அவளது பிணக்கை தீர்க்கும் மார்க்கத்தைத் தேடலானார்.

மோகத்தைக் கொடுக்கும் அவளது கெண்டைக் கால் வனப்பைக் கண்டவர், “நீ மாசில்லாத என் கட்டித் தங்கம் மரகத வல்லி” எனக் கூறியபடி வருடினார்.

“இப்போது கட்டித் தங்கம் என்பீர், பிறகு மாசிருக்கிறதா என்று பார்க்

கலாம் எனக் கூறி உரசிப் பார்ப்பீர்கள்! கையை எடுங்கள்!” எனக் கூறி முழங்கால் வரை கிடந்த சீலைத் துணியைக் கெண்டைக் காலை மறைக்க இழுத்து விட்டுக் கொண்டாள்.

‘வெளியே மார்பினை நிமிர்த்திக் கொண்டு, மீசையை முறுக்கியபடி ஆண்கள் சுற்றினாலும் பஞ்சணையில் காதலியிடம் அடிமையாகியே எண்ணிய காரியத்தை நிறைவேற்ற வேண்டும்’ எனும் நிலையே சோழ இளவரசர் கரிகாலருக்கும் நேர்ந்தது. அந்த நியதிப்படியே அவரும் அவளது காலருகில் அமர்ந்தவர் அவளது கெண்டைக் காலில் முத்தமிடலானார்.”என் காதலியின் கெண்டைக் காலில் முத்தமிட்டு எத்தனை காலங்கள் ஆகிறது?” எனக் கூறியபடியே அவளது பாதம் வரை நீண்டிருந்த துணியை முழங் காலுக்கு இறக்கிவிட்டு தொடர்ந்து முத் தமிட்டபடி முன்னேறினார்.

கரிகாலர் முத்தமிடத் தொடங்கியதும் அவள் கிறங்கத் தொடங்கினாள். கிறக்கத்திலும் கோபத்தை விட இயலாத மரகதவல்லி திரும்பி படுத்துக் கொண்டாள்.

அப்போது, "மரகதவல்லி, காலங்கள் கடந்தாலும், ஆயிரம் கல் தொலைவு பிரிந்துப் போனாலும் காதலின் வேட்கை மட்டும் சிறிதும் குறைவதில்லை. அந்த வேட்கையை உன்னைக் கண்டு தணிக்கலாம் என்று ஓடோடி வந்தால் இப்படி அடம் பிடிக்கிறாயே" எனக் கூறியபடி மீண்டும் முத்தமிடத் தொடங்கினார்.

"உங்களது ஆசைப் பேச்சினைக் கண்டு நான் இன்று ஏமாறப்போவதில்லை. இத்தனை நாட்கள் உங்களைப் பிரிந்து நான் வாடினேன் அல்லவா? இன்று நீங்களும் வாடினால்தான் உங்களுக்குப் புத்தி வரும்" எனக் கூறியவள் பஞ்சணையிலிருந்து எழுந்து அருகில்

கரிகாலர் முத்தமிடத் தொடங்கியதும் அவள் கிறங்கத் தொடங்கினாள். கிறக்கத்திலும் கோபத்தை விட இயலாத மரகதவல்லி திரும்பி படுத்துக் கொண்டாள்.

அப்போது, "மரகதவல்லி, காலங்கள் கடந்தாலும், ஆயிரம் கல் தொலைவு பிரிந்துப் போனாலும் காதலின் வேட்கை மட்டும் சிறிதும் குறைவதில்லை. அந்த வேட்கையை உன்னைக் கண்டு தணிக்கலாம் என்று ஓடோடி வந்தால் இப்படி அடம் பிடிக்கிறாயே" எனக் கூறியபடி மீண்டும் முத்தமிடத் தொடங்கினார்.

"உங்களது ஆசைப் பேச்சினைக் கண்டு நான் இன்று ஏமாறப்போவதில்லை. இத்தனை நாட்கள் உங்களைப் பிரிந்து நான் வாடினேன் அல்லவா? இன்று நீங்களும் வாடினால்தான் உங்களுக்குப் புத்தி வரும்" எனக் கூறியவள் பஞ்சணையிலிருந்து எழுந்து அருகில்

இருந்த தூணுக்கருகில் நின்று கொண் டாள்.

அவள் எழுந்து நடந்த போதே காற் றில் ஆடிய அவளது முந்தானையைப் பற் றிக் கொண்டார் கரிகாலர். பற்றியதோடு அல்லாமல் அதைப் பிடித்து இழுக்கவும் செய்தார்.

முந்தானையை அவர் இழுக்கும் போதே சுதாரிப்படைந்த மரகதவல்லி பாதிச் சரிந்த முந்தானை முற்றிலும் சரி வதற்குள் மார்போடு சேர்த்துப் பிடித்துக் கொண்டாள்.

பதறியபடி முந்தானையை மார் போடு பிடித்துக் கொண்டிருந்த மரகத வல்லியையே கண் இமைக்காமல் பார்த் துக் கொண்டிருந்தார் கரிகாலர். பாதிச் சரிந்திருந்த அவளது முந்தானையில் வெளிப்பட்ட அவளது அழகுகள் அவரை நிலைகுலையச் செய்தன.

https://telegram.me/aedahamlibra

கரிகாலர் இன்னும் ஒரு சொடுக்கு, சொடுக்கி இழுத்தால் போதும். மரகத வல்லி தனது மேலாடை முழுவதையும் அவரிடம் இழந்துவிடும் நிலை. சற்று முன் ஏற்பட்டிருந்த வெம்மையினால் கச்சை மற்றும் ரவிக்கையை அவிழ்த்துவிட்டு பருத்தித் துணியை மட்டுமே உடலில் சுற்றியிருப்பதை எண்ணி நொந்து கொண்டாள்..

மெய்யுடன் இணைந்து, உயிருடன் சங்கமித்த காதலனாக இருந்தாலும் அனுமதியில்லாமல் முந்தானையைப் பற்றி இழுக்க எந்தப் பெண்ணும் அனுமதிக்கமாட்டாள். அதைப் போன்றே மரகதவல்லியும் கடும் கோபத்தோடு, “இப்போது முந்தானையை விடப் போகிறீர்களா? இல்லையா?” எனக் கோபத்துடன் கேட்கலானாள். அவளது சொற்களில் கடுமை பலமாகக் கலந்திருப்பதைக் கரிகாலரும் கவனிக்கலானார்.

https://telegram.me/aedahamlibrary

அவள் கூறியதைக் கேட்டதும் கரிகாலரும் பெரிதும் அதிர்ச்சியடைந்திருந்தார். ‘அவள் இத்தனை நேரமாகத் தன்னிடம் விளையாடி கூடலுக்கு முன் ஊடல் கொண்டு போக்குக் காமிக்கிறாள்’ என்றே எண்ணிக் கொண்டிருந்தவருக்கு அவளது கோபச் சொற்கள் பலமாகச் சுட்டன.

திடீரென்று அமைதியாகிவிட்ட கரிகாலனைக் கண்ட மரகதவல்லி, ‘விடுங்கள் எனக் கூறியதைக் கேட்டு அவர் விலகிச் சென்றுவிடுவாரோ?’ என மனதிற்குள் எண்ணிக் கலங்கவும் செய்தாள்.

தனது மடத்தனத்தை எண்ணி வருந்தியபடி நின்று கொண்டிருந்தாள்.

திடீரென்று அவளது முந்தானையைக் கரிகாலர் வெடுக்கென்று பிடித்து இழுத்தார். அடுத்தகணம் மேலாடையை இழந்த மரகதவல்லி அவரது மடியினில் வந்து பொத்தென்று விழுந்தாள்.

விழுந்த அவளைத் தூக்கிப் பஞ் சணையில் கிடத்திய கரிகாலர், “உன் னைக் காண ஆவலோடு ஓடி வந்தி ருக்கிறேன். ஆனால், நீ ஊடல் கொள் கிறாய்? நீ போ என்று கூறினால் நான் சென்று விடுவேன் என்று எண்ணினாயா? ‘விடுங்கள்’ என நீ கூறிய வார்த்தைக்கு அர்த்தம் ‘பிடியுங்கள்.. விட்டுவிடாதீர்கள்’ என்பதை நானும் அறிவேன் மரகதவல்லி. இனியும் நீ நடிக்கக் கூடாது” எனக் கூறிக் கொண்டு அவளை இறுக்க அணைத்துக் கொண்டார்.

அவள் மூச்சு விடுவதற்கே பெரிதும் சிரமப்பட்டாள்.

அப்போதும் மரகதவல்லி அவரிடம் கோபமாக எதையோ பேச வாயெடுத் தாள். ஆனால் அதற்கு மேல் அவளைக் கரிகாலர் பேசுவதற்கு விடவில்லை. அவ ளுடைய இதழ்கள் இரண்டையும் தன் வசப்படுத்திக் கொண்டார்.

https://telegram.me/aedahamlibra

மரகதவல்லி திமிறினாள். ஆனால் அவர் விடுவதாயில்லை.

கரிகாலரின் போக்குக்கே சிறிது நேரம் விட்டவள் பிறகு திடீரென்று அவரைப் பிடித்துப் பஞ்சணையில் தள்ளி அவர் மார்பு மீது சாய்ந்து படுத்துக் கொண்டவள், “விடுங்கள் என்று தெரிவித்ததும் விட்டுவிட்டுச் சென்றுவிடுவீர்களோ? என்று எண்ணி பயந்துவிட்டேன்!” எனக் கூறியபடி அவரது முகத்தில் காதலுடன் முத்தமிடத் தொடங்கினாள்.

அவளது முத்தத்தில் தன்னை மறந்த கரிகாலர் அவளது நீண்ட குழல்களைக் கோதியபடி, “உன் மனதை நான் அறியமாட்டேனா மரகதவல்லி” எனக் கூறியபடி அவளை மார்போடு சேர்த்து அணைக்கலானார்.

ஆனால் அவளோ அவரது பிடிக்கு அடங்காமல் அவரது வயிற்றின் மீது அமர்ந்து கொண்டாள். மேலாடையின்றி, குழல்கள் முன்புறமாகச் சரிந்தபடி கிடக்

கும் தன் காதலியின் விழிகளை நோக்கினார் கரிகாலர். ஆனால், சில கணத்திற்கு மேல் அவரால் அவளது விழிகளில் பார்வையை நிலைக்கவைக்க இயலவில்லை. திரண்டிருந்த அவளது முன் அழகுகளை நோக்கி பார்வையைக் கீழே இறக்கினார்.

மரகதவல்லி நாணத்தில் முழுக் கூந்தலையும் வாரி முன்னால் இழுத்து நுபுரங்கள் இரண்டையும் மறைத்துக் கொண்டாள்.

அதற்கு மேல் பொறுமை காப்பது பெரும் முட்டாள்தனம் என்பதைக் கரிகாலரும் உணர்திருந்தாரோ என்னமோ அவளது முதுகோடு அணைத்து முன்புறமாகத் தள்ளி முன்புறம் திரண்டிருந்த அவளது குழல்களை விலக்கிவிட்டு அவளது நுபுரங்களுக்கிடையில் தனது முகத்தைப் புதைத்துக் கொண்டார். அவளும் அவரை ஆசையுடன் அணைத்துக் கொண்டாள்.

"மரகதவல்லி... உன்னைச் சந்தித்தால் எனது வேட்கை முற்றிலும் தணிந்துவிடும் என்று எண்ணியிருந்தேன். ஆனால், இப்போது அது பன்மடங்கு பெருகிவிட்டதே" எனக் கூறிக் கொண்டே முத்தமிடத் தொடங்கினார்.

"இந்த நேரத்தில் பேச்சு என்ன வேண்டிக் கிடக்கிறது உங்களுக்கு?" எனக் கூறிய மரகதவல்லி அவரது தலையில் செல்லமாகக் கொட்டு ஒன்றையும் வைத்தாள்.

மறுபடியும் இறுக அணைத்துக் கொண்டாள். இவன் சுவைத்தலில் பேரின்பம் கண்டான். அவளோ அவனது முரட்டுத் தீண்டலில் இன்பம் பெறத் தொடங்கினாள்.

அதற்குமேல் அங்கு இருவருமே வீணாகப் பேசி நேரத்தைப் போக்க விரும்பவில்லை.

ஆனால், அர்த்தம் புரியாத முனகல் சத்தம் மட்டும் நெடுநேரம் அவ்விடத்தில் வெளிப்பட்டு அவர்களின் காதலை முழு மையடையச் செய்து கொண்டிருந்தன.

https://telegram.me/aedahamlibra

https://telegram.me/aedahamlibra

# 40. இனியும் தாமதிக்க வேண்டாம்

'பாண்டிய நாட்டிற்குச் சென்ற வேந்தன் இன்னும் திரும்பவில்லை. அவனிடமிருந்து கிடைத்த தகவலால் யுவராஜன் பறம்பு நாட்டிற்குச் சென்றுவிட்டான். எதற்காகச் சென்றிருக்கிறான் என்று தெரியவில்லை. சேர மற்றும் பாண்டிய நாட்டிலிருந்து உறுதியான தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை. படைகள் வெறுமனே காவேரி நதிக் கரையில் தங்கி காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் உறைந்தைக் காவல் தலைவனான காளனை வேறு சில நாட்களாகக் காணவில்லை. ஒருவேளை அவ

னும் யுவராஜனுடன் அவனுக்குக் காவலாகச் சென்றிருப்பானோ? அப்படிச் சென்றிருந்தால் நிச்சயம் தகவல் தெரிவித்துவிட்டுச் சென்றிருப்பானே! எங்குச் சென்றிருப்பான்' எனப் பெரும் சிந்தனையில் அரண்மனையில் உலாவி கொண்டிருந்தார் உறைந்தை மன்னர் இருங்கோவேள்.

அதிலும் வேந்தனிடமிருந்து தகவல் கிடைத்ததால் தன்னிடம் நேரடியாகச் சொல்லிக்கொள்ளாமல் சென்றுவிட்ட யுவராஜனை நினைத்து பெரும் கோபத்தில் அவனை எதிர்நோக்கியபடி காத்துக் கொண்டிருந்தார். 'போதிய பாதுகாப்பின்றிச் சென்றிருக்கும் அவனுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்துவிட்டால் என்ன செய்வது?' எனவும் கலங்கி நின்றார்.

பெரும்படையைத் திரட்டி வைத்துக் கொண்டு இப்போது வெறுமனே தனிமையில் அமர்ந்திருந்தது அவரைப் பெரிதும் வருத்திக் கொண்டிருந்தது. ஆதலால், ஆலோசனை கேட்க வைதீகர் பாகவதரையும் வரவழைத்திருந்தார்.

"இந்த இரண்டு வேந்தர்களையும் நம்பியதற்குப் பதில் நாம் தனியாகப் புறப் பட்டுச் சென்றிருந்தாலும் இந்நேரம் செங் குவீரன் இல்லாத புகாரை எளிதில் கைப் பற்றியிருக்கலாமே! இவர்களை எண்ணி நாம் மோசம் போய்விடுவோம் போலிருகி றதே!"என்று வைதீகரிடம் நேரடியாகவே தனது மனக் குறையைத் தெரியப்படுத்தி னார் இருங்கோவேள்.

"அரசே, வருந்த வேண்டாம்! நாம் பொறுமை காப்பது மிகவும் அவசியம். சேர மாமன்னரும், பாண்டிய பேரரச ரும் கொடுத்த வாக்கினை மீறாதவர்கள். ஆதலால் அவர்கள் நிச்சயம் உதவுவார் கள். தனது நாட்டின் எல்லைக் கோட் டையைக் கள்வர்கள் கைப்பற்றிவிட்ட போது சேரமான் எப்படி அண்டை நாட் டின் மீது போர் தொடுப்பார்? அது கௌர வக் குறைச்சல் ஆகிவிடாதா?"

"நானும் அந்த ஒரே காரணத்திற்கா கத்தான் பொறுத்திருக்கிறேன்."

https://telegram.me/aedahamlibra

"காளனும் யுவராஜனும் எங்கே? கடந்த ஒரு கிழமைக்கு மேலாக அவர்களைக் காண இயலவில்லையே!"

"வேந்தனிடமிருந்து தகவல் ஏதோ வந்திருக்கிறது. உடனே யுவராஜன் கிளம்பிவிட்டிருக்கிறான்."

"வேந்தனிடமிருந்து தகவலா?"

"ஆம்!"

"என்ன தகவல்?"

"அது தெரியவில்லை பிரம்மாயரே! என்னிடம் கூட முறையாகத் தெரிவிக்காமல் அவன் சென்றுவிட்டான். நானும் அவர்களை எதிர்பார்த்துத்தான் காத்திருக்கிறேன்!"

"காளன் எங்கே?"

"அவனைப் பற்றியும் எதுவும் தெரியவில்லை? அவனும் யுவராஜனுடன் சென்றிருந்தாலும் சென்றிருக்கலாம் எனக் கருதுகிறேன் நான்!"

https://telegram.me/aedahamlibra

"என்ன, காளன் யுவராஜனுடன் சென்றிருக்கிறானா?" எனப் பதறினார் வைதீகர்.

அவர் பதறுவதைக் கண்ட இருங்கோ, "பிரம்மாயரே, காளன் யுவரா ஜனுடன் சென்றிருக்கிறான் எனக் கேட் டதும் எதற்காக இப்போது பதறுகிறீர் கள்?" என வினவினார்.

"யுவராஜரை விடக் காளன் திறமை சாலி! ஆதலால்தான் நான் பதறுகிறேன்."

"ஆனால், காளன் நமது நம்பிக் கைக்கு உரியவன் அல்லவா?"

"ம்ம்ம்... அவன் நமது நம்பிக்கைக்கு உரியவன் தான். ஆனால் அவ்வப்போது பெரும் சந்தேகம் அவன் மீது எனக்குத் தோன்றி மறைகிறது!"

"சந்தேகமா?"

"ஆம்!"

"நான் சில சோதனைகளைச் செய்து பார்த்தேன் பிரம்மாயரே! ஆனால், அவற்றில் எல்லாம் அவன் தேரிவிட் டானே!"

"நான் வைத்த சோதனைகளி லும் அவன் தேரிவிட்டான். இருந்தாலும் அவன் சம்பந்தப்பட்டவரையில் எனது உள்ளுணர்வு என்னைத் தொடர்ந்து எச் சரித்துக் கொண்டே இருக்கிறது."

"அவனை எண்ணி வீண் கவலை வேண்டாம் பிரம்மாயரே! அவன் நம்மு டன் இருக்கும் வரை நமக்கு அனு கூலமே. யாராலும் கண்டறிய இயலாத செம்பியன் கோட்ட சுரங்கத்தை அவன் கண்டறிந்திருக்கிறான். நாம் கனவிலும் எண்ணிப் பார்க்காத படி உறைந்தையின் காவலை பலமடங்கு உயர்த்தியிருக்கி றான். போரின் முன்னிலையில் அவனை நிறுத்தி அவனை நாம் பயன்படுத்திக் கொள்வோம். முன் வரிசையில் நிற்பது தன் மாமன் என அறிந்தால் சோழ இள

https://telegram.me/aedahamlibra

வலும் தயங்கவே செய்வான். அவனது தயக்கத்தை நாம் நமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வோம்!" எனக் கூறிக் கொண்டிருந்த போதே இருங்கோவின் மெய்க் காவலன் ஒருவன் ஓடிவந்து பணிந்து நின்றான். பணிந்தவன், "சேர மற்றும் பாண்டிய நாட்டுத் தூதுவர் இருவர் வருகை தந்திருக்கிறார்கள்." எனத் தெரிவித்தான்.

வைதீகரும், இருங்கோவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்."அவர்கள் இருவரையும் ஆலோசனைக் கூடத்திற்கு உடனே அழைத்துச் செல். நாங்கள் இதோ வந்துவிடுகிறோம்" எனக் கட்டளையிட்டார் இருங்கோ.

கண நேரமும் தாமதிக்காமல் இருங்கோவும், வைதீகரும் ஆலோசனை மண்டபத்தை அடைந்தார்கள். அங்கே இரு நாட்டுத் தூதுவர்களும் உறைந்தை மன்னருக்காகக் காத்திருந்தார்கள். மன்

https://telegram.me/aedahamlibra

னரைக் கண்டதும் தலையைத் தாழ்த்தி தங்களது பணிவைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

தனது ஆசனத்தில் அமர்ந்த இருங்கோ, அவர்கள் இருவரையும் இருக்கையில் அமரும்படி கையால் சைகை காட்டினார். அவர்கள் இருவ ரும் அமர்ந்தனர். வைதீகரும் தூதுவர்க ளுக்கு எதிர்புறம் இருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டார்.

தனக்கு அருகில் அமர்ந்திருந்த தூதுவனைப் பார்த்து, "என்ன செய்தி?" என வினவினார்.

"நெடுநாட்கள் சேர மற்றும் உறைந் தையிலிருந்து தகவல் கிடைக்கும் என்று எதிர்பார்த்தோம். எதிர்பார்த்த தகவல் கிடைக்கவில்லை. இனியும் தாமதிப் பது ஆபத்து என்று பாண்டிய மன்னர் தென்னவர் போருக்குக் கிளம்பிவிட்டார். பாண்டிய நாட்டுப் பெரும்படை மற்றும் பாண்டிய நாட்டிற்கு அடங்கிய வேளிர்க

ளின் படையும் புறப்பட்டுப் பறம்பு நாட்டில் நிலை கொண்டிருக்கிறது. பாண்டிய நாட்டில் பெரும் மழை பெய்யத் தொடங்கிவிட்டது. ஆதலால், படை வந்து சேரத் தாமதமாகும். ஆனால், கடற்படை குறித்த காலத்தில் புகாரை முற்றுகையிடத் தொடங்கிவிடும்!" எனத் தெரிவித்தான் அவன்.

"பாண்டிய நாட்டுக் கடற்படை மட்டுமா ஒன்றிணைந்திருக்கிறது?"

"இல்லை. முசிறியில் முகாமிட்டிருந்த சேர நட்டு மரக்கலங்கள் மற்றும் சிங்கள நாட்டுக் கலங்கள் இரண்டும் பாண்டிய நாட்டுக் கடற்படையுடன் இணைந்திருக்கின்றன. இந்நேரம் அவை முற்றுகைக்குப் புறப்பட்டிருக்கலாம்!"

"நல்லது" எனப் பாண்டிய நாட்டுத் தூதுவனுக்கு மறுமொழி அளித்த இருங்கோவேள் சேர நாட்டுத் தூதுவனைப் பார்த்தவர், "துளுவ எல்லையின் நிலை

https://telegram.me/aedahamlibra

இப்போது எப்படி இருக்கிறது? சேரப் படை எப்போது புறப்படும்?" என வினவி னார்.

"அகப்பா கோட்டையிலிருந்து கள் வர்களை இன்னும் விரட்ட இயல வில்லை. இளவரசர் கோட்டைக்குள் நுழைய முயன்ற அனைத்து முயற்சிக ளையும் அக்கள்வர்கள் முறியடித்துவிட் டார்கள். வஞ்சியிலிருந்தும் துளுவ நாட் டிலிருந்தும் வீரர்கள் உதவிக்குச் சென் றிருக்கிறார்கள். நிச்சயம் விரைவில் சேர இளவல் கோட்டையை மீட்டுவிடுவார்."

"நல்லது அவருக்காகத் தான் உறைந்தையில் மலை நாட்டுப் படையும் காத்திருக்கிறது."

"அரசே, உறைந்தைக் காவல் தலைவர் எங்கே? அவர் இப்போது இங்கே இல்லையா?" என வினவினான் சேர நாட்டுத் தூதுவன்.

"இல்லை. அவர் முக்கியப் பணிக்காக வெளியே சென்றிருக்கிறார். என்ன செய்தி?"

"கடந்த முறை தங்களைக் காண வந்தபோது பெரிதும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டேன். அப்படி முயன்றும் கடைசி வரை அவரைத் தாண்டி வந்து உங்களைச் சந்திக்க இயலவில்லை. அவரிடமே தகவலைத் தெரிவித்துவிட்டுச் சென்றேன். ஆனால், இம்முறை நிலை அப்படியல்ல. சேர நாட்டு இலச்சினைப் பதக்கத்தை மட்டுமே காட்டினேன். உடனே உங்களைக் காண அழைத்துவந்துவிட்டார்கள். ஆதலால் தான் அவர் இல்லையா என்று வினவினேன்" எனத் தெரிவித்தான் அவன்.

அவன் தெரிவித்த செய்தி வைதீகருக்குச் சந்தேகம் எதையோ உருவாக்கிவிட்டுச் சென்றது. உடனே அவர், "உறைந்தைக் காவல் தலைவனிடம்

https://telegram.me/aedahamlibra

தாங்கள் தெரிவித்த செய்தி யாது?" என வினவினார்.

"சேர எல்லையில் கள்வர்கள் தாக்குகிறார்கள். அவர்களை விரட்டிய பிறகே சேரப் படை சோழ நாட்டை முற்றுகையிடப் புறப்படும் எனத் தெரிவித்துவிட்டுச் சென்றேன். !"

"வஞ்சியிலிருந்து செய்தி வந்ததாகக் கோட்டைத் தலைவர் காளன் இதனைத் தெரிவித்தார். ஆனால், தூதுவர் வந்ததாக எந்தத் தகவலையும் அவர் தெரிவிக்கவில்லையே!" என்றார் இருங்கோ.

"உறைந்தை வந்தும் உங்களைச் சந்திக்க இயலவில்லை அரசே!"

"சரி, அதை விடுங்கள். இச்செய்தியை மட்டும்தான் தெரிவித்தீர்களா அல்லது வேறு எதையாவது தெரிவித்தீர்களா?" என மீண்டும் சந்தேகத்துடன் வினவினார் வைத்தீகர்.

சற்று சிந்தித்த சேர நாட்டுத் தூது வன், "'சேரப் படை புறப்படத் தாமத மாகும். ஆதலால் புகாரை முற்றுகையிட உறைந்தையில் தங்கியிருக்கும் பெரும் படை அருகில் இருக்கும் வேளிர்களின் படையுடன் புறப்படட்டும்' என்ற தகவ லையும் சேர்த்துக் கூறினேன்." எனக் கூறியவன் பிறகு இருங்கோவிடம், "இன் னும் நீங்கள் உங்களது படையை நகர்த் தவில்லையா? அன்று கோட்டைத் தலை வர் தெரிவித்ததைப் போன்று சேர நட்டுப் படை வந்து சேர்ந்ததும்தான் நீங்களும் புறப்படப் போகிறீர்களா?" எனவும் வின வினான் அவன்.

"அன்று காவல் தலைவன் காளன் உங்களிடம் என்ன மறுமொழி அளித் தான்?"

"'சேர மற்றும் பாண்டிய நாட்டுப் பெரும்படைகள் மலை நாட்டுப் படை யுடன் இணைந்த பிறகு தான் உறைந் தையிலிருந்து படை கிளம்பும். இது மன்

னரின் கட்டளை!'எனத் தெரிவித்தார் அவர்."

மீண்டும் உறைந்தை மன்னர் இருங்கோவும், வைதீகர் பாகவதரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

பிறகு, "யார் அங்கே!" எனக் குரல் எழுப்பினார் உறைந்தை மன்னர் இருங்கோ.

உடனே அவரது காவலர்கள் ஓடி வந்தார்கள். அவர்களிடம் கட்டளையிட்டார், "காளன் எங்கிருந்தாலும் உடனே இங்கு அழைத்து வாருங்கள்!" என்று.

அவரது கட்டளை எழுந்த அடுத்தக் கணம் வீரர்கள் காளனைத் தேடி புறப்பட்டார்கள்.

ஆனால், அப்போது அந்த ஆலோசனை அவைக்குள் நுழைந்த யுவராஜன், "இனி அந்தத் துரோகியை அழைத்து விசாரிப்பதில் எந்தப் பயனும் இல்லை

தந்தையே!" என அந்த அரங்கமே அதிரும் அளவிற்கு உரக்கக் கத்தினான்.

காளனைத் துரோகி என அழைத்ததைக் கேட்ட இருவருமே அதிர்ச்சி அடைந்தார்கள்."என்ன கூறுகிறாய் யுவராஜா? காளனையா துரோகி என்கிறாய்?" என வினவினார் இருங்கோ.

"ஆம்!"

"அவன் கடந்த ஒரு வருடத்தில் இந்த உறைந்தையை எப்படி மாற்றியிருக்கிறான் என்பதை நீயும் அறிவாய் தானே!"

"நன்கு அறிவேன் அரசே!"

"அவன் உறைந்தைக் காவல் தலைவனாக..." என இருங்கோ கூறிக்கொண்டிருந்த போதே இடைமறித்த யுவராஜன், "தந்தையே, அந்தத் துரோகியின் புகழ் பாடுவதைத் தயவுசெய்து நிறுத்துங்கள்" எனக் கூறியவன் அருகில் இருந்த இருக்கையில் விழுந்தான். நெடுந்தொ

லைவுப் பயணம் அவனைச் சோர்வடை யச் செய்திருந்தன.

அப்போது வேந்தன் அவ்வறைக் குள் நுழைந்தான். அவனைக் கண்ட தும் இருங்கோ, “வேந்தா... இவன் என்ன உளறுகிறான்? என்ன நடந்தது அனைத் தையும் ஒன்றுவிடாமல் கூறு!” எனக் கட் டளையிட்டார் இருங்கோ.

ஆனால் வேந்தன் வாயைத் திறப் பதற்குள் முந்திக் கொண்ட யுவராஜன், “வேந்தனிடமிருந்து இனி நாம் விசுவா சத்தை எதிர்பார்ப்பது தவறு அரசே!” எனக் குறுக்கிட்டான்.

“யுவராஜா... உனக்கு என்ன ஆயிற்று? வந்ததிலிருந்து முரண்பட்ட கருத்துகளையே கூறிக் கொண்டிருக்கி றாய்! நம் வேந்தனையா நீ சந்தே கம் கொள்கிறாய்?” என வினவினார் இருங்கோ.

“ஆம்!”

https://telegram.me/aedahamlibra

"எப்போதிலிருந்து?"

"அவன் சோழ இளவல் கரிகாலனுடன் பயணித்த ஒரு திங்கள் காலத்திலிருந்து முற்றிலும் மாறி விட்டான் தந்தையே! எதிரியின் மீது அனுதாபம் கொள்ளத் தொடங்கிவிட்டான்!"

"என்ன, வேந்தன் சோழ இளவல் கரிகாலனுடன் ஒரு திங்கள் காலம் பயணித்தானா?" அதிர்ச்சியுடன் வினவினார் இருங்கோ.

"ஆம் தந்தையே! தங்களது உண்மை விசுவாசியிடம் நீங்களே கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்!"

இருங்கோவேள் வேந்தனை நோக்கினார்."என்ன வேந்தா... யுவராஜன் கூறுவது அனைத்தும் உண்மைதானா?" என வினவினார்.

"ஆம் அரசே! யுவராஜர் கூறுவது அனைத்தும் உண்மையே!" சட்டென்று பதிலளித்தான் வேந்தன்.

அதிர்ச்சியில் இருக்கையிலிருந்து எழுந்துவிட்டார் உறைந்தை மன்னர் இருங்கோவேள்.

“நீயா வளவனுடன் ஒரு திங்கள் காலம் பயணித்தாய்?”

“ஆம் அரசே!”

“அவன் மீது நீ அனுதாபப்பட்டாய் என்று யுவராஜன் கூறுவது?”

“அதுவும் உண்மைதான்!”

அதிர்ச்சியில் மீண்டும் இருக்கையில் அமர்ந்தார் இருங்கோவேள். அப்போது வேந்தன், “அரசே, பெரும் ஆபத்திலிருந்து என்னை இரண்டு முறை காப்பாற்றிய ஒருவர் மீது நான் அனுதாபப்பட்டது தவறா?” என வினவினான்.

“இரண்டு முறை ஆபத்திலிருந்து உன்னைக் காப்பாற்றினானா?”

“ஆம்!”

https://telegram.me/aedahamlibra

"யார்? சோழ இளவலா?" எனக் கேள்வியையும் கேட்டு பதிலையும் கூறிக் கொண்டார்.

அதற்கும்"ஆம்" என மட்டும் பதில ளித்தான் வேந்தன்.

இருங்கோ அதற்கு மேல் எந்தக் கேள்வியையும் கேட்கவில்லை. அமை தியாகவே அமர்ந்திருந்தார். அவ்விடத் தில் பெரும் அமைதி நிலவியது.

அப்போது வைதீகர் பாகவதர், "வேந்தா... நீ உதிர்க்கும் பதில்கள் அனைத்தும் எங்களுக்கு அடிவயிற்றில் புளியைக் கரைக்கிறது. யுவராஜனை எங்கு நீ அவசரமாக வரவழைத்தாய்?" என வினவினார்.

"பறம்புமலைக்கு அய்யா..."

"எதற்காக?"

"கூடலை நோக்கி நான் பயணித் தபோது வனக் கள்வர்கள் என்னைச்

சூழ்ந்து கொண்டு தாக்கி சிறை பிடித் துவிட்டார்கள். வன தேவதைக்கும் பலி யிடப் பார்த்தார்கள். அப்போது ஒரு வன் என்னைக் காப்பாற்றினான். எனது புரவியும் நோய்வாய்ப்பட்டுவிட்டது. அவ னுடனே பயணிக்க வேண்டிய சூழல். எனக்குக் கடுமையான நஞ்சுக் காய்ச் சல். எனக்கும், புரவிக்கும் அவன் தான் மருத்துவம் பார்த்துக் காப்பாற்றினான். பயணித்துக் கொண்டிருந்த போது ஒரு நாள் காட்டாற்றில் சிக்கிக் கொண்டேன். தன் உயிரைப் பணயம் வைத்து இரண் டாவது முறையும் அவன் என்னைக் காப் பாற்றினான். நீரில் விழுந்ததால் அவனது வேடம் களைந்து அவன் சோழ இளவல் என்று அடையாளம் கண்டு கொண் டேன். கிரகணம் தோன்றியது அல்லவா, அன்றுதான் அவரை நான் அடையாளம் கண்டு கொண்டேன். கூடலை அடைந்து பாண்டிய மன்னர் தென்னவரைச் சந்தித் துத் திரும்புகையில் அவரைத் தந்திரமா கவும் மாளிகையில் சிறை செய்து விட்

https://telegram.me/aedahamlibra

டேன். அதற்குத் தான் யுவராஜரை வர வழைத்திருந்தேன். ஆனால், நிலைமை நான் எதிர்பார்த்ததைப் போன்று அமை யவில்லை."

"மோசமாகிவிட்டது அப்படித் தானே!"

"ஆமாம்..."

"வளவன் எதற்காக உன்னைக் காக்க வேண்டும்?"

"தெரியவில்லை."

"அதுவும் நீ போர்ச் செய்தியு டன் கூடலை நோக்கி வஞ்சியிலிருந்து சென்று கொண்டிருக்கிறாய் என்பதை அறிந்தும்?"

"ஆம்!"

"எதற்காக என்று வினவினேன்!"

"அதற்கான பதில் எனக்கு எப்ப டிப் பிரம்மாயரே தெரியும். எதிரியானாலும் ஆபத்தில் காக்க வேண்டும் என்பது சூரி

யகுல வழித் தோன்றலின் பண்பாகக் கூட இருக்கலாம்!”

அவன் அளித்த பதிலுக்கு வைதீகர் எந்தப் பதிலையும் கூறவில்லை. அமைதி காக்கலானார். அவள் அளித்த பதில் அனைவரின் வாயையுமே அடைத்திருந் தது.

“சரி, அதை விடு... புறப்பட்டுச் சென்ற செய்தி என்ன ஆனது?”

“இனி ஆவதற்கு என்ன இருக்கி றது பிரம்மாயரே? அனைத்தையும் தான் சோழ நாட்டுப் படைத்தலைவி வான வல்லி, சோழ இளவல் கரிகாற் வளவன், வேளக்காரப் படைத்தலைவன் இளந்தி ரையன் என மூவரும் நாசமாக்கிவிட்டார் களே!”

“என்ன யுவராஜா... வளவனார் மக ளைப் படைத் தலைவி என்கிறாய், கேள் விப் படாத பெயரை வேளக்காரப் படைத்

தலைவர் என்கிறாய்? ஒன்றும் புரியவில்லையே!"

"கேள்விப்பட்ட போது எனக்கும் உங்களைப் போன்று எதுவும் புரியவில்லை."

"புதிராகப் பேசாமல் கேட்பதற்கு மட்டும் பதிலைக் கூறு!" கோபத்துடன் கத்தினார் இருங்கோவேள்.

"புகாரின் படைகளுக்குத் தலைவர் இப்போது வளவனார் மகள் தானாம்!"

"என்ன ஒரு பெண் படைகளுக்குத் தலைமை ஏற்பதா?"

"ஆமாம்... செங்குவீரன் தெரிவித்து விட்டுச் சென்ற வெஞ்சினத்தை அவள் நிறைவேற்றப் போகிறாளாம்!" ஏளனத்துடன் தெரிவித்தான் அவன்.

"சரி, அவள் படைத் தலைவியாக இருந்துவிட்டுப் போகட்டும், அவள் எப்படி நம் திட்டத்தை நாசமாக்கினாள்?"

"அன்று 'மின்னல்' என்ற பெயரில் வேந்தன் அனுப்பியதாக ஒருத்தி வருகை தந்தாள் அல்லவா?"

"ஆம்!"

"அவள்தான் வளவனார் மகள் வானவல்லி."

"என்ன, அவள் வானவல்லியா?"

"ஆம்!"

"இறந்துபோன சேந்தனது தங்கை என்றல்லவா தெரிவித்தாள்!"

"அப்படித்தான் கூறி நம்மை ஏமாற் றிவிட்டாள். வஞ்சியை நோக்கிச் சென்ற வேந்தனையும் அவள் பின் தொடர்ந்தி ருக்கிறாள். வேந்தன் அவளை அடை யாளம் கண்டு உறைந்தைக்கு ஓலை யில் மறைமுகமாகச் சுட்டி அனுப்பியி ருக்கிறான். ஆனால், அவள் ஓலையை வீசி எறிந்துவிட்டு நம்மை ஏமாற்றிவிட்

டுக் காரியத்தைச் சாதித்துவிட்டிருக்கி றாள்” எனக் குறுக்கிட்டான் யுவராஜன்.

இருங்கோவிற்குக் கோபம் தலைக் கேறியது. ஆத்திரமும் அதிகமாகியது. மீசை துடித்தபடியே, “வஞ்சிக்குச் சென்ற வேந்தனை வானவல்லி பின் தொடர்ந் திருக்கிறாள். கூடலுக்குச் சென்ற வேந் தனை வளவன் பின் தொடர்ந்திருக்கி றான்.”

“ஆமாம்... ஆனால், நடந்தது இது மட்டும் அல்ல!”

“இன்னும் என்ன இருக்கிறது?”

“வைதீகர் அளித்த ஓலையை அவள் தந்திரமாகவும் மாற்றம் செய்தி ருக்கிறாள்!”

யுவராஜன் தெரிவித்ததைக் கேட்டு ஆவேசத்துடன் வைதீகர், “அதற்கு வாய்ப்பே இல்லை. நான் எழுதிக் கொடுத்தது பழமையான வட மொழி யில்! அதனை வாசிக்கத் தெரிந்தவர்கள்

தென்னகத்தில் சிலரே இருக்கின்றனர்! ஓலையை அவள் படித்திருக்கவோ அல் லது மாற்றவோ எந்த வாய்ப்பும் இல்லை!" என உறுதியுடன் தெரிவித்தார்.

"உங்களது எண்ணம் முற்றிலும் தவறு வைதீகரே!" குறுக்கிட்டான் சேர நாட்டுத் தூதுவன்.

"என்ன, எனது எண்ணம் தவறா?"

"ஆம்!"

அவனை முறைத்துப் பார்த்தார் வைதீகர்.

"அன்று உங்களது ஓலையை முத லில் வாசித்தவர் சேர அவையிலிருந்த ஆசான். ஆனால், அவர் ஓலையை மாற்றி வாசிக்கிறார் என்பதைப் பேரமைச்சர் ஓதவஞ்சி கண்டறிந்துவிட்டார்."

"ஆச்சார்யார் ஓலையை மாற்றி வாசித்தார் என்பதை ஓதவஞ்சி எப்படிக் கண்டறிந்தான்?"

“நீங்கள் எழுதியிருந்த மொழி அவருக்கும் புரிந்திருந்தது. அவரும் அதை அவைக்கு வாசித்துவிட்டார். ராஜ துரோகம் இழைக்கப்பட்டதாக ஆசான் ஆச்சார்யார் குற்றம் சாட்டப்பட்டு அவரது பார்வை பறிக்கப்பட்டு இப்போது சிறையில் கிடக்கிறார்.”

அமர்ந்திருந்தவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். அப்போது யுவராஜன், “வானவல்லி உறைந்தையிலிருந்து சென்ற செய்தியை மாற்றிவிட்டிருக்கிறாள். இங்கும் வந்து முரண்பட்ட தகவலைக் கூறி என்னை வஞ்சிக்குச் செல்லாத அளவிற்குத் தடுத்தும் விட்டாள். வேந்தனைப் பின்தொடர வளவன் சென்றிருக்கிறான். அது மட்டுமல்லாமல், உறைந்தைக்கு வஞ்சி மற்றும் கூடலிலிருந்து வந்த தகவல்கள் அனைத்தும் நம்மை அடையாமல் தடுக்கப் பட்டிருக்கின்றன.”

“என்ன கூறுகிறாய் யுவராஜா?”

"ஆமாம் அரசே, தகவல்கள் உறைந்தையிலேயே தடுக்கப்பட்டிரு கின்றன."

"யுவராஜன் கூறுவது சரிதான். அதற்குச் சாட்சி வந்திருக்கும் சேர நாட்டுத் தூதுவன்! இவர் வந்துபோன செய்தியே நம்மை எட்டியிருக்கவில்லை. அப்படியெனில் நிலைமையைப் புரிந்து கொள்ளுங்கள்!" எனத் தனது கரகரப் பான குரலில் பதிலளித்தார் வைதீகர் பாகவதர்.

"அந்தச் செயலைச் செய்த கயவன் யார்?" என ஆவேசத்துடன் வினவினார் உறைந்தை மன்னர் இருங்கோ.

யுவராஜன் அதற்குத் தகுந்த பதி லைக் கூறாமல் அமைதியாகவே நிற்க லானான். அப்போது குறுக்கிட்ட வைதீ கர், "சரி, ஏதோ இளந்திரையன் என்று பெயர் கூறினாயே, அவன் யார்?"என்று வினவினார்.

https://telegram.me/aedahamlibrary

“அவன் வேளக்காரப் படைத் தலைவன்!”

“வேளக்காரப் படைத் தலை வனா?”

“ஆம்! சோழ இளவலைக் காத்து உரிய அரியாசனத்தில் அமர வைப்ப தற்காகச் சென்னியின் சாம்பலில் சபதம் மேற்கொண்டவர்களாம்!”

“யார் அவர்கள்?”

“ஒருவன் நம்மால் யவனத்திற்கு அடிமையாக விற்கப்பட்ட வளவனார் மகன் திவ்யன்!”

“இன்னொருவன்?”

“உங்களுக்குத் தெரிந்த ஒருவன் தான்!”

“எங்களுக்குத் தெரிந்த ஒருவனா?”

“ஆம்!”

“யார் அவன்?”

https://telegram.me/aedahamlibra

"இளந்திரையன்!"

"இளந்திரையன் என்பது யார் என்று வினவினேன் நான்?" ஆத்திரத்துடன் வினவினார்.

தனக்கு எதிரில் நின்று கொண்டிருந்த வேந்தனைப் பார்த்த யுவராஜன், "வேந்தா... இளந்திரையன் என்பது யார்? சோழ வம்ச இளவலைக் கொலை செய்ய நாம் பல வருடங்களாக மேற் கொண்ட முயற்சிகள் அனைத்தையும் மறைமுகமாக முறியடித்தவன் யார் என்பதை நீயே தெரிவித்து விடேன்!" எனக் கட்டளையிட்டான்.

தனக்கு முன் அமர்திருந்த இருங்கோ, வைதீகர் ஆகிய இருவரின் முகத்தை ஒருமுறை பார்த்துக் கொண்டான் வேந்தன்.

"எதற்காக வேந்தா அமைதி காக்கிறாய்! பதிலைக் கூறு!" கட்டளையிட்டார் இருங்கோ.

https://telegram.me/aedahamlibra

“காளன்...”

‘காளன்’ என்ற பெயர் எழுந்தது தான் தாமதம். அடுத்தக் கணமே இருங்கோவின் வாயிலிருந்து கட்டளைகள் அடுத்தடுத்துப் பிறந்தன.

“இனியும் நாம் தாமதிக்க வேண்டாம். உறைந்தையில் தங்கியிருக்கும் நம் மலை நாட்டுப் படைகள் உடனே புகாரை நோக்கிக் கிளம்பட்டும்!”

https://telegram.me/aedahamlibra

# 41. போர் வியூகம்

வஞ்சி மாநகரம், நிலக் கடலெனப் பரந்து விரிந்திருந்த படைகளுக்கிடையில் சேரமான் பெருஞ்சேரலாதன் பெரும் வருத்தத்துடன் அமர்ந்திருந்தார். 'வீரர்கள் முற்றுகையிட்டு அந்தக் கள்வர்களை விரட்டிக் கொள்வார்கள். நீ புறப்பட்டு வா' எனச் சேர இளவரசருக்கு சேரமான் தொடர்ந்து கட்டளைகளை அனுப்பிக் கொண்டே இருந்தார்.

ஆனால், சேர இளவரசன், "நம் நாட்டு முக்கியமான கோட்டையை எதிரிகள் கைப்பற்றியிருக்கையில் என்னால் கைவிட்டு வர இயலாது. அகப்பா கோட்டையை மீண்டும் கைப்பற்றிவிட்டே

திரும்புவேன்” என்று உறுதியுடன் தெரிவித்துச் சேரமானின் அனைத்து கட்டளைகளையும் நிராகரித்திருந்தார்.

ஆதலால் இளவல் மீது மன்னருக்குக் கோபம் இருந்தாலும் அவரை எண்ணிப் பெரிதும் பெருமைப்படவே செய்தார்.

காலம் கடந்து கொண்டிருந்ததை அவர் உணர்ந்தார். தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் எதிரிக்கு வாய்ப்பை அளித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை அவர் உணர்ந்தாலும், தற்போது எதுவும் செய்ய முடியாது என்பதை உணர்ந்த பிறகே அவர் சேர நாட்டுத் தூதுவனை இருங்கோவைச் சந்திக்க அனுப்பி வைத்திருந்தார். அவர்தான் கடந்த முறை கட்டளையிட்டபடியே இந்த முறையும் முற்றுகையை ‘நீ தனியொருவனாகத் தொடங்கு. நான் பின்னால் உன்னுடன் சேர்ந்துகொள்கிறேன்’ எனக்

https://telegram.me/aedahamlibra

கூறச் சொல்லி தூதுவன் மூலம் இருங்கோவிற்குக் கட்டளையிட்டிருந்தார்.

ஆனால், அவன் தனியாகச் சேரமானின் கட்டளையை முழுமையாகக் கூற வாய்ப்பு கிடைக்கவில்லை. சேர நாட்டுத் தூதுவன் முழுத் தகவலையும் தெரிவிப்பதற்குள் யுவராஜன் தெரிவித்த தகவலினால் இருங்கோ படைகளை நகர்த்த கட்டளைப் பிறப்பித்திருந்தார்.

ஓதவஞ்சி, ‘உறைந்தைக்கு வந்ததும் நீ மீண்டும் வஞ்சிக்கு வா’ எனத் தெரிவித்திருந்த கட்டளையை வேந்தன் நிறைவேற்றாமல் பாண்டிய மன்னர் தெரிவித்திருந்த தகவலை சேர நாட்டுத் தூதுவன் மூலம் தெரிவித்துப் படையுடன் புகாரை நோக்கிப் புறப்பட்டிருந்தான்.

***

உறைந்தையிலிருந்து புகாரை நோக்கி மலை நாட்டுப் படைகள் புறப்பட்ட முதல் நாள் மாலைப் பொழுது.

அனைத்து முக்கியப் படைத் தளபதிகள், வேளிர்கள், வைதீகர், யுவராஜன், வேந்தன், முக்கிய ஒற்றர்கள் ஆகிய அனைவரும் விவாதிப்பதற்காகக் குழுமியிருந்தார்கள். இருங்கோவும், வைதீகரும் எதிர் எதிரில் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தார்கள்.

அனைவரும் அமைதியாக இருக்க ஆசனத்திலிருந்து எழுந்த இருங்கோ, "பல வருடங்கள் ஆவலுடன் நாம் எதிர்பார்த்துக் கொண்டிருந்த தருணம் நெருங்கிவிட்டது. கடந்த வருடம் செங்குவீரனிடம் நாம் பெற்ற தோல்விக்கு இந்த வருடம் நிச்சயம் பழி வாங்கியே தீர வேண்டும். சேர மற்றும் பாண்டிய நாட்டுப் படைகள் வருவதற்குள் நாம் புகாரை முற்றிலுமாகக் கைப்பற்றியிருக்க வேண்டும். அவர்களை நாம் வெற்றியுடன் வரவேற்போம்! எத்தனை காலங்கள் தான் வேளிர்களான நாம் இந்தச் சோழர்களுக்கே அடங்கிக் கிடப்பது? நம்மை அடக்கிய சோழர்களை வேரறுக்

கும் காலம் அருகில் என்பதை உரக்கக் கூறுவோம். செல்லும் வேகத்திலேயே நம்மை எதிர்க்கும் சோழப் படையைத் தகர்த்து எறிவோம்!” என ஆவேசத்துடன் கூறலானார்.

அப்போது வைதீகர், “அரசே, நமது போர் வியூகம் என்ன? நாம் புகாரை எந்தத் திசையிலிருந்து முற்றுகையிடப் போகிறோம். நான்கு திசைகளிலிருந்தும் முற்றுகையிடப் போகிறோமா அல்லது பிரதான பெரும் நுழைவாயில் இருக்கும் தெற்குத் திசையிலா?” என வினவினார்.

இருங்கோ அவையில் அமர்ந்திருந்தவர்களின் அனைவரின் முகத்தையும் நோக்கினார். அனைவரின் முகமும் உறைந்தை மன்னர் இருங்கோவின் பதிலையே எதிர்பார்த்தபடி காத்திருந்தன. அனைவரையும் பார்த்துக் கொண்டு பார்வையைத் திருப்பியவர் கடைசியாக வேந்தனின் விழிகளில் தனது பார்வையை நிலை நாட்டினார்.

https://telegram.me/aedahamlibra

"வேந்தா... நீ கூறு!" எனக் கட்டளை யிட்டார் இருங்கோ.

"அரசர் உறைந்தையை வடக்குப் புறத்திலிருந்து தாக்கலாம் என முடிவு செய்துவிட்டீர்கள்!"

"இதுவரை நான் உன்னிடம் புகார் தாக்குதலைப் பற்றி எதுவும் தெரிவித்தி ருக்கவில்லையே? அப்புறம் எப்படி அனு மானிக்கிறாய்?"

"எப்போது நீங்கள் அகன்று விரிந்து பாயும் காவேரியை உறைந்தைக்கு அரு கிலேயே பெரும் படையுடன் கடந்தீர் களோ அப்போதே தாங்கள் புகாரை வடக்குப் புறத்தில் தாக்கத் திட்டமிட்டு விட்டீர்கள் என்பதை நான் உணர்ந்து கொண்டேன்!"

இருங்கோ சிரித்தார். தன் மகன் யுவராஜனை நோக்கியவர், "யுவராஜா, நான் ஏன் புகாரை வடக்குப் புறத்திலி ருந்து தாக்கலாம் என முடிவு செய்திருக்

கிறேன் என உனக்குத் தெரியுமா?" என வினவினார்.

"அரசர் எதைச் செய்தாலும் அதில் பெரும் அர்த்தம் பொதிந்திருக்கும். மன்னரின் மனதை அறிவது சாதாரணக் காரியமா?" எனப் பதிலளித்தான் யுவராஜன்.

இருங்கோ மீண்டும் வேந்தனை நோக்கினார். அவன், "அரசே, புகாரின் தெற்குப் புறம் காவேரி குறுகி ஆழமாகப் பாய்ந்து குணக் கடலில் ஆவேசமாகக் கடக்கிறது. புகாரை முற்றுகையிடும் தொணியில் நாம் காவேரி நதியைக் கடப்பது சாமானிய காரியம் அல்ல. எதிர்த்துத் தாக்கும் புகார் படையைச் சமாளித்து நதியைக் கடப்பதிலேயே நாம் பாதிப் படையை இழக்கவேண்டி வந்துவிடும். அது மட்டுமல்லாமல் காவேரி நதியைக் கடக்கும் பகுதியில் தான் வீரர்கள் தங்கும் குன்றுத்துறை அமைந்திருக்கிறது. கரடு முரடான பகுதி. நமக்கு மிகவும் ஆபத்தானது. புகாரின் மேற்கில் அடர்ந்த சம்

https://telegram.me/aedahamlibra

பாபதி வனம். அதைக் கடப்பதும் பெரும் சிரமம்! கிழக்கே விரிந்த குணக்கடல். நமக்குத் துணையாகப் பெரும் கடற்படை தாக்கப்போகிறது. அதே சமயம் புகாரின் வடக்குப்பகுதி சமவெளிப் பகுதி. புகாரின் பெரும் மதில் மட்டுமே அரணாக அமைந் திருக்கிறது. நமது யானைப் படையினால் அதைத் தகர்ப்பது மிக எளிது. அதைக் கருத்தில் கொண்டும், தாக்குதல் திட் டத்தை முன்பே தயார் செய்து கொண் டும் படையை நகர்த்திக் கொண்டு இருக் கிறீர்கள்!” என விளக்கமாகப் பதிலளித் தான் வேந்தன்.

அவனைக் கைதட்டி பாராட்டினார் இருங்கோ. அவையில் அமர்ந்திருந்தவர் கள் அனைவரும் வேந்தனையே வியப்பு டன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

“வேந்தா, இதுவரை ஒற்றர் தலை வனாக உன் பணியை நீ திறம்படச் செய்தாய். ஆனால், இனி நீதான் இந் தப் பெரும்படைக்குச் சேனாதிபதி. தாக்

குதல் முறை, தாக்குதல் திட்டம் என அனைத்தையும் வகுத்துப் படையை வழி நடத்தும் உரிமையை உனக்கு நான் அளிக்கிறேன். புகார் இளவரசன், படைத் தலைவர்களைப் பற்றி மற்றவர்களை விட நீதான் அதிகம் அறிவாய். ஆதலால், அவர்களை எதிர்த்து முறியடிக்கும் பொறுப்பை உனக்கே வழங்குகிறேன் நான்!”

அந்த அவையில் பெரும் அமைதி நிலவியது. போரை இருங்கோதான் வழி நடத்துவார் என அனைவருமே எதிர் பார்த்துக் கொண்டிருந்த வேளையில் இருங்கோவின் அறிவிப்பு அனைவரையுமே பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அவரது அறிவிப்பு வைதீகர் மற்றும் யுவராஜனையும் வியப்பில் ஆழ்த்தியிருக்கவே செய்தது.

ஆசனத்திலிருந்து எழுந்த வைதீகர், “அரசே, இது பெரும் போர். பெரும்படையை வழி நடத்துவது அரசராக இருப்

https://telegram.me/aedahamlibra

பது தானே மரபு!" எனத் தனது எதிர்ப்பை முதலில் பதிவு செய்யலானார்.

"பிரம்மாயரே, இப்போதும் படைக்குத் தலைமை வகிப்பது நானும், யுவா ராஜனும்தான். வேந்தனுக்குப் படையை வழிநடத்தும் பொறுப்பை மட்டுமே அளித்திருக்கிறேன். அவன்தானே ஒற்றர் தலைவன். நம்மை விடவும் எதிரிகளின் நகர்வைப் பற்றி அவனே நன்கு அறிந்திருப்பான். இந்தப் பணிக்கு வேந்தனைத் தவிரப் பொருத்தமானவர் இங்கு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை."

"அரசே... நான் கூற விழைவது..." என வைதீகர் பாகவதர் ஏதோ கூறிக் கொண்டிருந்த போதே இடைமறித்த இருங்கோவேள், "பிரம்மாயரே, கவலை வேண்டாம். நம்மை விடவும் வேந்தன் சிறப்பாகச் செயல்படுவான் என்பது எனது நம்பிக்கை. தக்க ஆலோசனைகளை வழங்கி வேந்தனுக்கு நாம் உறுது

ணையாக இருப்போம்!”என ஆணையிட்டார்.

அதற்கு மேல் இருங்கோவின் முடிவை எதிர்த்து யாரும் எதுவும் பேசவில்லை. அவ்விடத்தில் பெரும் அமைதி நிலவியது. அனைவரும் அமைதியாக இருக்க இருங்கோ வேந்தனிடம், “வேந்தா... புகாரின் நிலை என்ன? இந்திரத் திருவிழாவிற்குச் சென்ற நம் நாட்டு ஒற்றர்கள் என்ன கூறுகிறார்கள்?” என வினவினார்.

அதிர்ச்சியில் இருந்து மீள வேந்தன் சிறிது நேரத்தை எடுத்துக் கொண்டான். பிறகு, “கூடலுக்குச் சென்றுவிட்டதால் இந்த முறை புகார் நிலைமையை என்னால் நேரில் கவனிக்க இயலவில்லை அரசே. புகார் இந்திரத் திருவிழாவைக் காண்பதைப் போன்று சென்றிருந்த நம் ஒற்றர்கள் பல தரப்பட்ட செய்திகளைக் கூறுகிறார்கள். அவற்றில் எதை நம்புவது,

எதை விடுவது எனத் தெரியவில்லை!" குழப்பத்துடன் தெரிவித்தான் வேந்தன்.

"ஒற்றர்கள் தெரிவித்த அனைத்தையும் தெரிவி!" கட்டளையிட்டார் உறைந்தை மன்னர் இருங்கோ வேள்.

"அரசே, எந்த வருடமும் இல்லாத அளவிற்கு இந்த வருடம்தான் புகாரில் இந்திரத் திருவிழாவைக் கோலாகலமாகக் கொண்டாடியிருக்கிறார்கள். புகார் போருக்குத் தயாராவதற்கு எந்த அறிகுறியும் நம் ஒற்றர்களின் கண்களுக்குப் புலப்படவில்லை!"

"என்ன கூறுகிறாய் வேந்தா?"

"ஆம் அரசே, நான் கூறுவது அனைத்தும் மெய்!"

"போருக்கு ஆயத்தமாகாமலா வானவல்லியும், கரிகாலனும் உன்னை மாறுவேடத்தில் பின்தொடர்ந்தார்கள்?"

“அதை நினைக்கையில் எனக்கும் குழப்பமாகத்தான் இருக்கிறது.”

“சரி, என்னென்ன தெரிவித்தார் கள்? தொடர்ந்து கூறு!”

“சோழர்கள் இந்திரனை வழிபடுவ தற்குப் புகாரைச் சுற்றிலும் பிரமாண்ட தூண்களை நிறுவியிருக்கிறார்கள்?”

“தூண்களா?”

“ஆம்!”

“அவை எதற்கு? எதிரிகளைக் கண்காணிக்கவா?”

“இல்லையாம்!”

“பிறகு எதற்கு?”

“அந்தத் தூண்களை அமைத்து இந்திரனை வழிப்பட்டால் கரிகாலனுக்கு இந்திரனின் வஜ்ராயுதத்தைப் போன்ற வலிமை வாய்ந்த மந்திர ஆயுதங்கள் கிடைக்குமாம்! அதற்குத்தான் கரிகா லன் அந்தப் பிரமாண்ட வடிவத் தூண்

களை அமைத்திருக்கிறான் என்று மக்கள் அனைவரும் நம்புகிறார்கள்!”

“என்ன வேந்தா உளறுகிறாய்? இந்திரனாவது மந்திர ஆயுதத்தை வழங்குவதாவது! வேடிக்கையாக அல்லவா இருக்கிறது? கரிகாலன் இதையுமா நம்புகிறான்!” எனச் சிரித்தபடி குறுக்கிட்டார் வைதீகர் பாகவதர். அவர் சிரித்ததை அடுத்து அந்த அவையில் கூடியிருந்த அனைவரும் சிரிக்கலானார்கள்.

“தன் படைகளின் மீது நம்பிக்கை இல்லாததால் அவன் மந்திரவாதிகள் மற்றும் போலிச் சாமியார்களை எண்ணி ஏமாறத் தொடங்கிவிட்டான்.”

“அரசே, ஏளனம் வேண்டாம். கடந்த இரண்டு தினங்களில் நான் சந்தித்த நமது ஒற்றர்கள் அனைவரும் அந்தப் பிரமாண்ட தூண்களைப் பற்றியே பெரிதும் கவலைப் பட்டுத் தெரிவித்தார்கள். ஏனெனில், அதற்குச் செய்த வழிபாட்டு முறைகள் அனைவரின் கவனத்

தையும் கவர்ந்திருக்கிறது. ஒவ்வொரு தூண்களிலும் நான்கு திசைக் கடவுளர்க ளான சாதுர் மகாராஜிகர்களை நிறுவியி ருக்கிறார்கள். புகாருக்குத் திரும்பும் மக் கள் அனைவரும் இந்த நான்கு திசைக் கடவுளர்களின் வல்லமையைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதுமட் டுமல்ல நான்கு திசைக் கடவுளர்கள் காவலுக்கு இருக்கையில் புகாரை எவரா லும் நெருங்க இயலாதாம்!”

“என்ன முட்டாள்தனம் இது?”

“அரசே, வழிபாட்டு முறையை நேரில் பார்த்த மக்களின் நம்பிக்கை அப் படி!”

“சரி, அதைப் பற்றி நாம் பிறகு விவா தித்துக் கொள்வோம் வேந்தா... வேறு தகவல் ஏதாவது? நம் படையைத் தடுக்க அவர்கள் எப்படிப்பட்ட முன்னெச்ச ரிக்கை நடவடிக்கைகளை மேற் கொண் டிருப்பார்கள்?”

https://telegram.me/aedahamlibra

“அதைக் கேட்டால் தாங்கள் ஆச் சர்யப்படுவீர்கள்?”

“என்னென்ன?”

“அவர்கள் இதுவரை எந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையையும் எடுத்ததாகத் தெரியவில்லை. செங்குவீ ரன் கடந்த முறை இருந்ததால் அனை வரையும் ஏவி பாதுகாப்பு முறைகளைத் தீவிரப்படுத்தியிருந்தான். ஆனால், இப் போது புகார் எளிதில் வீழ்ந்துவிடும் என்றே நம்புகிறேன்! பெரும் முற்று கையை அவர்கள் எதிர் கொள்ளப்போகி றார்கள் என்பதற்கான சிறு அறிகுறி கூட இல்லை அரசே!”

“அது பெரும் தவறு வேந்தா... நாம் ஒருநாளும் சோழர்களைத் தவறா கப் புரிந்துகொள்ளக் கூடாது. அவர்கள் பதுங்கியிருக்கும் வேங்கையைப் போன் றவர்கள். எப்போது வேண்டுமானாலும் அவர்கள் திரும்பி நம் மீது பாயலாம்!”

"தந்தையே, இந்த முறை அவர்கள் புகார் பெரும் மதில்களுக்குப் பின்னால் ஒளிவதைத் தவிர வேறு வழியில்லை. ஏனெனில், நமது படைபலம் அப்படி..." என இருங்கோவிடம் கூறிய யுவராஜன் அவனுக்கு எதிரில் அமர்ந்திருந்த வைதீ கரிடம், "பிரம்மாயரே, நமது படைபலம் எவ்வளவு என்று நீங்கள் நம் மன்னருக்கு ஞாபகப் படுத்துங்கள்" எனக் கட்டளை யிட்டான்.

அதுவரை அமைதியாக இருந்த வைதீகர், "அரசே, நம்மிடம் ஐந் தாயிரத்திற்கும் மேற்பட்ட யானைகள் கொண்ட வலிமையான படை இருக்கி றது. விரைந்து தாக்குதல் நடத்த பத் தாயிரத்திற்கும் மேற்பட்ட புரவி வீரர்கள் இருக்கிறார்கள். இருபதாயிரம் காலாட் படை. இதுமட்டுமல்லாமல் நம் படை யுடன் இணைந்துள்ள வேளிர்களின் படைகள். சேர மற்றும் பாண்டிய நாட் டுப் பெரும்படை நம்முடன் இணையா மலே நமது படைபலம் ஐம்பதாயிரத்தைத்

தொட்டு நிற்கிறது. இந்தப் பிரமாண்டப் பெரும்படையை எதிர்த்து அந்தச் சிறுவனால் என்ன அரசே செய்ய இயலும்?"

"பிரம்மாயரே, நம் படை மிகவும் பெரியது. ஆனால், அந்தப் படையை அவர்கள் சிதறடித்து விட்டால்?" என வேந்தன் கூறியதுதான் தாமதம் அடுத்தக் கணம் இருங்கோவேள், "வேந்தா...?" எனச் சீறினார்.

"அரசே, என் மீது கோபம் வேண்டாம். நாம் நமது பலத்தை மட்டுமே பேசுவதற்கு இங்குக் கூடவில்லை. அதே சமயம் நாம் நமது எதிரிகளின் பலத்தைப் பற்றிச் சிந்திப்பதும் மிகவும் முக்கியம்."

"வேந்தா, நீ எப்போது கரிகாலனுடன் பயனித்தாயோ அப்போதிலிருந்து உனது நடவடிக்கைகள் மாறத் தொடங்கிவிட்டன. கவனம்!" என எச்சரித்தான் யுவராஜன்.

https://telegram.me/aedahamlibra

“பெரும்படை எதிர்த்துத் திரள்கிறது என்பதை அறிந்தும் சோழ இளவல் மாறுவேடத்தில் என்னை ஒற்றறிவதற்காகக் கூடல் வரை வந்தவர். போரைப் பற்றிக் கவலைப் படாமலோ அல்லது அதற்கான ஏற்பாடுகளைச் செய்யாமலா என்னுடன் வந்திருப்பார்? அவர்கள் நமது படை பலத்தையும் மீறி வேறு விதத்தில் போரினை எதிர்கொள்ள ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறார்கள் என்று என் உள் மனம் என்னை எச்சரிக்கிறது!”

“வேந்தா... அவர்கள் எழுப்பியிருக்கும் அந்தப் பிரமாண்டத் தூண்களை எண்ணி நீ கவலை கொள்கிறாயா?” என வினவினார் வைதீகர் பாகவதர்.

“இல்லை. எனது கவலை அந்தத் தூண்கள் மட்டும் அல்ல. மிஞ்சிப் போனால் ஒவ்வொரு தூணிலிருந்தும் ஐம்பது பேர் அமர்ந்து அம்புகளையும், எரியம்புகளையும் நம் மீது செலுத்த இயலும். அந்தச் சிறு அம்புகளால் கட

லெனத் திரண்டிருக்கும் நம் வீரர்களை எதுவும் செய்ய இயலாது. இருந்தும் மனம் என்னை எச்சரிக்கிறது!"

"ஏன் வேந்தா, உன் மனம் சஞ்சலப்படுகிறது. நம் படைகள் மீது உனக்குப் பரிபூரண நம்பிக்கை இன்னும் வரவில்லையா?" என வினவினார் வைதீகர்.

"எனக்கு நமது படை மீது எப்போதுமே முழு நம்பிக்கை உண்டு பிரம்மாயரே! நம் படை நகர்வின் படி நாம் புகாரை வடக்குப் புறத்தில் தாக்கப் போகிறோம். ஆனால், அவர்களும் இதைத் தானே எதிர்பார்த்திருப்பார்கள்!"

"எதை?"

"நாம் வடக்குப் புறத்தில் முற்றுகையிடுவோம் என்று!"

"எதிர்பார்த்துவிட்டுப் போகட்டுமே! நம் பெரும்படையை எதிர்த்து அவர்களால் என்ன செய்ய இயலும்?"

https://telegram.me/aedahamlibra

“சரி, படையை எப்படிப் புகாரை நோக்கிக் கொண்டு சென்று சேர்க்கப் போகிறீர்கள்?”

“விரைந்து செல்லும் புரவிப் படை முதலில் புகாரை அடைந்துவிடும்! அடுத்துக் காலாட்படை சென்று சேரும்! பிறகு யானைப் படை சேர்ந்ததும் தாக்குதல் தொடங்கப்படும்!”

“புரவிப் படைகள் புகாரைச் சேர்வதற்குள் சோழர் படை எதிர்த்து தாக்கி அழித்துவிட்டால்?”

“வேந்தா...?”

“நான் கேட்பதற்குப் பதில் தெரிவியுங்கள் அரசே!”

“நம் படையை எதிர்த்து வந்து தாக்கும் அளவிற்கு அவர்களுக்குத் திராணி இருக்கிறதா?”

“எதிரிகளை நாம் ஒருபோதும் குறைத்து மதிப்பிடக் கூடாது! நம் மொத்

https://telegram.me/aedahamlibra

தப் படையுடன் ஒப்பிடுகையில் அவர்க ளின் படை பலம் பாதிக் கூட இருக் காது எனக் கருதுகிறேன் நான். ஆனால், நமது புரவிப் படை, காலாட்படை, யானைப் படை வேகத்திற்குத் தகுந்த தைப் போன்று நாம் பிரிந்து பயணிக்கை யில் அவர்கள் தாக்கினால் தயாராக இல் லாத நம்மால் என்ன செய்ய இயலும்?"

வேந்தனது கேள்விக்கு யாராலும் எந்தப் பதிலையும் அளிக்க இயல வில்லை. அனைவருமே அமைதிகாத் தார்கள். சிறிது நேரம் கழித்து உறைந்தை மன்னர் இருங்கோவேள், "சரி வேந்தா... நீ கூறுவதும் சிந்திக்கும்படிதான் இருக்கி றது. உனது திட்டம் என்ன? உனது விருப் பப்படியே நீ படைகளை நடத்து!" எனக் கட்டளையிட்டார்.

"அரசே, நமது படையை நான் மூன் றாகப் பிரிக்கப் போகிறேன். படையில் ஏழில் ஐந்து பகுதி புகாரின் வடக்குப் பகு தியை முற்றுகையிடட்டும். பாண்டிய நாட்

டிலிருந்து வரும் கடற்படை புகார் கடற்கரையை முற்றுகையிடும். அப்படி அவர்கள் கடற்கரையை முற்றுகையிட்ட பிறகு அவர்கள் பொங்கிப் பெருகி கடலில் சங்கமிக்கும் காவேரி நதியின் வழியாகத் தான் புகாருக்குள் நுழைய முயற்சிப்பார்கள். அப்படி அவர்கள் நுழையும் போது அவர்களுக்கு நாம் தகுந்த பாதுகாப்பை அளிக்க வேண்டும். அதற்கு ஒரு பகுதி படையினர் புகாரின் தெற்குப் பகுதியை முற்றுகையிடுவார்கள். மீதி இருக்கும் ஒரு பகுதிப் படையினர் சம்பாபதி வனத்தை ஊடுருவி புகாரை நெருங்கட்டும். ஏற்கெனவே உறைந்தைக் கலாபதி பெரும் மரக் கலங்களுடன் புகாரைக் காவேரி நதியின் வழியாகவே சென்று தாக்க ஏற்பாடு செய்திருக்கிறேன். நமது கடற்படையைச் சோழக் கடற்படைத் தலைவன் பரதவன் குமரன் எதிர்த்துத் தாக்கிக் கொண்டு இருக்கும் போது அவர்களைப் பின்புறமாக இவர்கள் தற்கொலைப் படை வீரர்களைப் போன்று ஊடுருவித்

தாக்கி அவர்களை நிலைகுலையச் செய் துவிடுவார்கள். வடக்குப் புறத்தில் மட்டும் நாம் சூழ்ந்து முற்றுகையிடுகையில் அவர் கள் தெற்கு புறமாக வெளியேறி அடர்ந்த சம்பாபதி வனத்திற்குள் ஊடுருவி நம் மைப் பின்புறத்தில் தாக்கினால் நமது கதி அதோகதியாகிவிடும்! ஆதலால் தற்காப் புக்காக அவர்கள் வெளியேறா வண்ணம் நாற்புறமும் அவர்களைச் சூழ்ந்து தாக்கு வதுதான் முறை! வைதீகரே, உங்களது கருத்து என்ன? நீங்கள் படித்த போர்ச் சாசனங்கள் என்ன உரைக்கின்றன?" என வினவினான் வேந்தன்.

"உனது போர் வியூகத்தை முற்றி லும் ஆதரிக்கிறேன் வேந்தா... முற்றுகை யைத் தொடங்க சிறப்பான போர் வியூகம். புகாரை முற்றுகையிட்ட பிறகு மற்ற தாக் குதல் முறைகளைப் பற்றிப் பிறகு முடி வெடுத்துக் கொள்ளலாம்!" என அவனி டம் தெரிவித்தவர், பிறகு அவையினரைப் பார்த்து, "வேந்தன் கூறிய போர் முறை யில் யாருக்காவது எந்த முரண்பாடா

வது இருந்தால் தயக்கமின்றித் தெரிவிக் கலாம்!" என அறிவித்தார்.

அனைவரும் வேந்தனது தாக்குதல் முறையை ஆதரிக்கவே செய்தார்கள்.

"அரசே, வேந்தன் கூறியதைப் போன்று நாம் நமது படைகளை இங் கேயே பிரித்து விடுவோம்! அனைத்துப் படைகளையும் ஒன்றாகவே கொண்டு செல்வோம் நாம்!" எனத் தெரிவித்தார் வைதீகர்.

சிறிது நேரம் சிந்தித்த இருங்கோ வேள், "வேந்தா... படைகளைத் தகுந்த முறையில் பிரித்து நீயே அதற்கான உபபடைத் தலைவர்களையும் நியமித்து அனுப்பி வை!" எனக் கட்டளையிட்டார்.

சபை அத்தோடு கலைந்தது. வேந் தனின் கட்டளைப்படி படைகள் புகாரை நோக்கிப் புறப்பட்டன.

***

சோழ நாட்டிற்கும் பாண்டிய நாட்டிற்கும் எல்லையாக விளங்கியது பறம்பு நாடு. பாண்டிய நாட்டிற்கு அடங்கிய சிறு நாடு. சேர மன்னர் பெருஞ்சேரலாதனிடமிருந்து எதிர்பார்த்த காலத்தில் உரிய தகவல் கிடைக்காததால் அனைத்து படைகளையும் தகவல் கிடைத்ததும் நகர்த்திக் கொள்ளலாம் எனும் திட்டத்தில் பறம்பு நாட்டில் திரட்டியிருந்தார் பாண்டிய மன்னர் தென்னவன். தனது சேனாதிபதி அதிகனின் யோசனைகளை ஏற்று வேளிர்களின் படைகளையும் தனது படையுடன் இணைத்திருந்தார். இந்தச் சூழலில் தான் வேந்தன் வஞ்சியிலிருந்து கொண்டு வந்த தகவலைத் தெரிவித்து விட்டுச் சென்றான்.

வேந்தன் வந்த பிறகு கோடை மழை பெருக்கெடுக்கத் தொடங்கியது. மழை பெய்தாலும் பரவாயில்லை, படையை விரைந்து நகர்த்த வேண்டும் என எண்ணிக் கொண்டிருந்த பாண்டிய

மன்னர் தென்னவன் தக்க சமயத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார்.

***

வேந்தன் தகவலுடன் வருவதற்கு முன்னரே சேனாதிபதி அதிகன் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகச் சேர நாட்டுக் கலங்கள் அனைத்தையும் கொற்கைக்கு வரவழைத்திருந்தார். ஆதலால்தான் வேந்தன் சேர முதன்மையமைச்சர் ஓதவஞ்சியின் கட்டளைப்படி முசிறிக்குச் செல்லவில்லை. தகவலைப் பாண்டிய மன்னருக்குத் தெரிவித்த உடனேயே உறைந்தைக்குத் திரும்பியிருந்தான். அதே நேரம் சிங்கள நாட்டுக் கடற்படை முழுவதும் கொற்கையில் திரண்டிருந்தன. பாண்டிய, சேர மற்றும் சிங்களப் படையின் மரக்கலங்கள் இணைந்து புகாரை நோக்கிக் கிளம்புவதற்காகத் தக்க சூழ்நிலையை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தன.

***

பாண்டிய படை பறம்பு நாட்டிலும், சேர நாட்டுப் படை வஞ்சியிலும், கடற் படை கொற்கையிலும், இருங்கோவின் படை புகாரை நோக்கிப் புறப்பட்ட அதே வேளையில் சிங்கள மன்னன் தனது படை வீரர்களை நாக நாட்டில் திரட்டி தென்னகப் பெரும்படைக்கு ஆதரவாக நின்று கொண்டிருந்தான்.

***

நீண்ட நாட்களுக்குப் பிறகு கரிகாலர் மரகதவல்லியை சந்தித்திருந்ததால் அவர் கண நேரமும் அவளைவிட்டுப் பிரிந்திருக்கவில்லை. மரகதவல்லியுடன் அவர் காந்தர்வ முறையில் மனம் செய்து கொண்டதால், அவர்கள் காதலர்களாகவும் அதே சமயம் கணவன் மனைவியாகவும் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அன்றும் அப்படித்தான் மரகதவல்லி கரிகாலனின் மடியில் தலைவைத்து உறங்கிக் கொண்டிருந்தாள். அவரும் அவளது தலையை அன்புடன் கோதியபடி பஞ்ச

https://telegram.me/aedahamlibra

ணையில் சாய்ந்து கிடந்தார். அப்போது அவரது அறைக் கதவு தட்டப்பட்டது.

மடியினில் உறங்கும் மரகதவல்லி எழுந்துவிடாத அளவில் அதே சமயம் வெளியே கதவு தட்டுபவருக்குக் கேட்கும் சத்தத்தில், “கதவு தாழிடப்படவில்லை. உள்ளே வரலாம்!” எனக் குரல் எழுப்பினார்.

தயக்கத்துடனே கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தனர் டாள் தொபியாசும், திருக்கண்ணனும்.

“என்ன செய்தி?” என வினவினார் கரிகாலர்.

இருவரும் எந்தப் பதிலையும் அளிக்காமல் அவரையும், அவரது மடியில் தலை வைத்துத் துயில் கொண்டிருந்த மரகதவல்லியையும் நோக்கினார்கள்.

“ஏதேனும், அவசரச் செய்தியா?” என மீண்டும் வினவினார்.

https://telegram.me/aedahamlibra

"ஆமாம் இளவரசே!"

"இருவரும் சற்று நேரம் வெளியே காத்திருங்கள். நான் இதோ வந்துவிடுகிறேன்..." எனத் தெரிவிக்க அடுத்தக் கணம் இருவரும் வெளியேறினர்.

மரகதவல்லி உறக்கத்திலிருந்து எழாத அளவிற்குப் பொறுமையாக அவளது தலையை உயர்த்தித் தலையணையை வைத்துவிட்டு நகர்ந்தார்.

"அத்தான்... விரைந்து வந்துவிடுங்கள். நான் காத்திருப்பேன்" எனக் கண்களை மூடிக் கொண்டு உறக்கத்தில் கொஞ்சியபடி சொற்களை ஒவ்வொன்றாக உதிர்த்தாள் மரகதவல்லி.

இத்தனை முயன்றும் மரகதவல்லியை எழுப்பி விட்டோமே என வருந்தினார் கரிகாலர். பிறகு, "சரி, நான் விரைந்து வந்துவிடுகிறேன் நீ உறங்கு" எனத் தெரிவித்தார்.

https://telegram.me/aedahamlibra

"நீங்கள் அருகில் இருக்கும்போது என்னால் எப்படி அத்தான் உறங்க இயலும்?"

"இவ்வளவு நேரம் நீ உறங்கவில்லையா?"

"இல்லை. விழிகளை மட்டும் தானே மூடிக் கொண்டிருந்தேன்!"

"அப்படியெனில் பொய்த் தூக்கமா?"

"ம்ம்ம்ம்..." எனக் கூறிக் கொண்டு மீண்டும் சிணுங்கினாள் மரகதவல்லி.

"அடிக் கள்ளி..." எனக் கூறிய கரிகாலர் அவளது இடையில் நறுக்கென்று கிள்ளிவிட்டு அங்கிருந்து விரைந்து வெளியேறினார். வலியில் மீண்டும் சிணுங்கினாள் மரகதவல்லி.

மாளிகை மைய அரங்கில் டாள்தொபியாகும், திருக்கண்ணனும் எதையோ விவாதித்தபடி நின்று கொண்

டிருந்தார்கள். அங்கு வந்த கரிகால ரைக் கண்டதும்"இருவருமே பணிந்து வணங்கினார்கள். கரிகாலரும் பதிலுக்கு வணங்கினார்.

"என்ன செய்தி?" என வினவினார் கரிகாலர்.

"இருங்கோவேள் உறைந்தையிலி ருந்து புறப்பட்டுவிட்டுவிட்டான்."

"நல்ல செய்தி..."

"நல்ல செய்தியா?" குறுக்கிட்டு அதிர்ச்சியுடன் வினவினான் திருக்கண் ணன்.

"ஆமாம்..."

"பெரும்படையுடன் அவர்கள் நம் மைத் தாக்க வருகிறார்கள். அதையா நல்ல செய்தி என்கிறீர்கள்?"

"அவர்களின் எண்ணிக்கையைக் கண்டு நீ வியக்கிறாயா திருக்கண்ணா?"

"இல்லை இளவரசே!"

“பிறகு எதற்காகப் பதறுகிறாய்?”

“..........”

“என் தமக்கை வானவல்லி தெரிவித்ததைப் போன்று இருங்கோ மட்டும் தானே புறப்பட்டிருக்கிறார்?”

“ஆம்!”

“சேர மற்றும் பாண்டிய நாட்டுப் படைகள் இன்னும் புறப்படவில்லை தானே!”

“அவர்கள் புறப்பட்டதாக இதுவரை எந்தத் தகவலும் நமக்குக் கிடைக்கவில்லை.”

“இந்தத் தகவலைத் தெரிவிக்கத் தான் இருவரும் என்னைத் தேடி வந்தீர்களா?”

“இளவரசே, இருங்கோவின் படை வந்து கொண்டிருக்கும்போதே அவர்களை நம் புரவிப் படையின் மூலம் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தி அவர்

களை நிர்மூலமாக்கிவிடலாம் எனக் கரு துகிறேன் நான்! அதற்குத் தங்களது ஒப்பு தல் தேவை!"

"வேண்டாம் டாள்தொபியாஸ். இப் போதைக்கு அவர்களை நாம் எந்தத் தொந்தரவும் செய்ய வேண்டாம். அவர் கள் எதிர்பார்த்ததைப் போன்று அவர் கள் முழுவதுமாகப் புகாரை வந்து அடை யட்டும். நீங்கள் வழக்கமான பாதுகாப்புப் பணியில் ஈடுபடுங்கள்!"

"தங்களது உத்தரவு இளவரசே!"

"வெண்ணிக் களத்தை ஆய்வு செய்யச் சென்ற மாமா வந்துவிட்டாரா?"

"வேளக்காரப் படைத்தலைவர் இன்னும் திரும்பவில்லை இளவரசே. இன்று அவரை எதிர்பார்க்கிறோம்!"

"உபதளபதி வில்லவனுக்கு அடுத் தக் கட்டளை அனுப்பப்பட்டுவிட்டதா?"

“தகவல் அனுப்பி வைக்கப்பட்டு விட்டது. விரைவில் சென்று சேர்ந்துவிடும்!”

“நல்லது.”

“இளவரசே!” என அழைத்தான் திருக்கண்ணன்.

“கூறு திருக்கண்ணா, ஏதாவது ஐயமா?”

“ஆம் இளவரசே!”

“கேள்!” கட்டளையிட்டார் கரிகாலர்.

“நம் எதிரிகள் இப்போது புகாரைக் கண்டால் கூடப் புகார் போருக்குத் தயாராக இருக்கிறதா என்று சந்தேகம் கொள்வார்கள்? நிலைமை விசித்திரமாக இருக்கிறது. எந்தவித பரபரப்புமே யாரிடமும் காணப்படவில்லையே!”

“நானும் அதைத்தான் திருக்கண்ணா எதிர்பார்க்கிறேன். பரபரப்புடன்

பணி செய்தால் அது முழுமையடையாது. நிதானமாக நாம் அனைத்தையும் செய்வோம். எதிரிகள் புகாரைப் பார்த்தால் சந்தேகமே கொள்ளக் கூடாது!"

"அரசே, அவர்களையும் எதிர்த்துச் சென்று தாக்க வேண்டாம். அவர்கள் புகாரை முழுவதுமாக அடையட்டும் என்கிறீர்கள். அவர்களின் எண்ணிக்கை ஐம்பதாயிரத்தையும் தாண்டும் என்று நம் ஒற்றர்கள் தகவல் தெரிவிக்கிறார்கள்."

"அவர்கள் நூறாயிரம் பேர் கூடத் திரண்டு வரட்டுமே திருக்கண்ணா... நீ கவலைப் படாதே! மகிழ்ச்சியுடன் செல். இன்னும் சில தினங்கள் மட்டுமே நம்மால் ஓய்வெடுக்க இயலும். பிறகு ஓய்வினைப் பற்றிச் சிந்திக்கக் கூட நமக்கு நேரம் கிடைக்காது. மரகதவல்லி எனக்காகக் காத்திருக்கிறாள். நான் புறப்படுகிறேன். நீங்களும் சென்று ஓய்வெடுங்கள்!" எனக் கூறியபடி கரிகாலர் மீண்டும் மரகதவல்லி

படுத்திருந்த அறைக்குள் சென்று தாழிட்டுக் கொண்டார்.

கரிகாலரின் அசிரத்தையைக் கண்ட டாள்தொபியாசும், திருக்கண்ணனும் குழம்பிப்போய் அங்கிருந்து வான வல்லியிடம் ஆலோசனைக் கேட்க குன்றுத் துறையை நோக்கிச் செல்லலானார்கள்.

https://telegram.me/aedahamlibra

# 42. விழுந்த அகப்பா

அகப்பா கோட்டையைக் கைப் பற்ற முற்றுகைத் தாக்குத லைக் கடுமையாகத் தீவிரப்ப டுத்தியிருந்தான் சேர இளவரசன். பெரும் மரங்களைப் பிடுங்கி வந்து அகழியைத் தூர்த்திருந்தான். யானைகள் தொடர்ந்து கோட்டையின் நுழைவாயிலைத் தாக் கிக் கொண்டு இருந்தன. கோட்டையின் உள்ளிருந்தும் வீரர்கள் வேல்களையும், ஈட்டிகளையும் எறிந்து யானைகளை மிர ளச் செய்து விரட்டிக் கொண்டிருந்தார் கள். கோட்டை மதிலைக் கடக்க முயன்ற வீரர்கள் மீது கொதிக்கும் எண்ணெயை ஊற்றி விரட்டியடித்தார்கள். எவ்வளவோ முயற்சி செய்தும் சேர இளவரசனால் அகப்பா கோட்டையைக் கைப்பற்ற இய லவில்லை. வெறும் சில நூறு வீரர்க

ளைக் கொண்டு வலிமையான அகப்பா கோட்டையை இழக்காமல் தற்காத்துக் கொள்ள இயலும் என்பதைச் சேர இளவரசனால் நம்பவே இயலவில்லை.

படைத் தலைவர்களிடம் தீவிரமாக ஆலோசனை நடத்தினான் சேர இளவல். அனைவரும் ஒரு முடிவுக்கு வந்தார்கள். அகப்பா கோட்டை பெரும் வலிமையானதுதான். ஆனால், அதனுள் குறைவான வீரர்களே தற்காப்பில் இருப்பதை அறிந்த சேர இளவரசன் அதைச் சாதகமாக மாற்றிக்கொள்ள முயன்றான்.

பெரும் திட்டத்துடன் படையை அகப்பா கோட்டையின் பிரதான நுழைவாயிலைத் தாக்கினான். எரிபந்துகளையும், பாறைக் கற்களையும் வீசி மதில் கதவைத் தகர்க்க முயற்சித்துக் கொண்டிருந்தான். சோழ உபதளபதி வில்லவனும் அவர்களின் தாக்குதலை முறியடித்துக் கொண்டு யாரும் கோட்டைக்குள் புக இயலாத அளவிற்குப் பாதுகாப்புச் செய்திருந்தான்.

பிரதான நுழைவாயிலில் சேர இள வரசன் தாக்கிய அதே வேளையில் இர கசியத் திட்டத்துடன் சிறு படைப் பிரிவை அகப்பா கோட்டையின் பின்புறத்தில் தாக்குதல் நடத்த அனுப்பி வைத்திருந் தான். அதை எதிர்பார்க்காத வில்லவன் பிரதான நுழைவாயிலைக் காக்கவே தன் னிடமிருந்த அனைத்து வீரர்களையும் நிறுத்தி வைத்திருந்தான். மற்ற பகுதிக ளில் காவலுக்குச் சொற்ப வீரர்களையே நிறுத்தியிருந்தான்.

ஆதலால், இரகசியமாகப் புறப் பட்ட படை எளிதில் தாக்கி அகப்பா கோட்டைக்குள் நுழைந்துவிட்டிருந்தது. உள்ளே நுழைந்தவர்கள் கண்ணில் பட்ட வீரர்கள் அனைவரையும் கொன்று போட்ட படியே பிரதான நுழிவாயிலைக் காவல் காத்துக் கொண்டிருந்த வீரர்க ளைப் பின்புறமாகத் தாக்கியபடி வாயி லைத் திறந்துவிட்டார்கள். வாயில் திறக் கப்பட்டதுதான் தாமதம் சேர இளவர சனே புரவியில் முதல் ஆளாக அதிர

https://telegram.me/aedahamlibra

டியாக உள்ளே நுழைந்து எஞ்சியிருந்த வீரர்களைக் கொன்று குவித்துக் கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டான்.

கோட்டை விழுந்ததும் கோட்டைப் பாதுகாப்பு ஏற்பாடுகளில் கவனம் செலுத்திய சேர இளவரசன் அவனது உபதலைவர்களுக்கு வேண்டிய கட்டளைகளைப் பிறப்பித்துவிட்டு கோட்டைக்குள் நுழைந்தான்.

கோட்டைக்குள் வசித்த மக்கள் அனைவரும் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டிருந்தார்கள். அதைக்கண்ட சேர இளவரசன் பதறவில்லை. இலக்கைத் துல்லியமாகத் தாக்கும் வில் வீரர்களைக் கொண்டு அனைவரையும் கொன்று போட்டு மக்களை மீட்டு மீண்டும் அகப்பா கோட்டையை முழுமையாகக் கைப்பற்றினான்.

பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட மக்கள் அனைவரும் சேர இளவலுக்கு நன்றியைத்

தெரிவித்து மகிழ்ச்சியுடன் அங்கிருந்து வெளியேறினார்கள். அப்போது வேடன் வில்லவனும் சேர இளவலைக் கண்டு, “உங்களது உயிரை ஒருமுறை நான் காப்பாற்றினேன் என்பதற்காக இப்போது எனது உயிரையும் அந்தக் கள்வர்க ளிடமிருந்து காப்பாற்றிவிட்டீர்கள். மிக்க நன்றி நண்பா” எனத் தெரிவித்தான்.

தனது வேடுவ நண்பனை அங்கு எதிர்பார்த்திருக்காத சேர இளவரசன் மகிழ்ந்தபடியே, “நண்பா, நீ எப்படி இங் குச் சிக்கிக் கொண்டாய்?” என வினவி னான்.

“காட்டில் கிடைத்த தேன், புலித் தோல் மற்றும் சில மூலிகைகளை இங் குக் கொண்டு வந்து பண்டமாக மாற்றி விட்டுச் செல்லலாம் என வந்திருந்தேன். அப்போது வானில் பரிதியை கருத்த நிலவு கவ்வி கொண்டது. மீண்டும் பரிதி நிலவின் பிடியிலிருந்து விடுபட்டபோது அகப்பா கோட்டையின் நிலைமை முற்

றிலும் மாறியிருந்தது. யாரோ முகமூடி தரித்த புரவிக் கும்பல் கோட்டையை யும் கைப்பற்றி அனைத்து வீரர்களையும் கொன்று போட்டிருந்தார்கள். அப்போது நாங்கள் அவர்களின் ஏவலைச் செய்யப் பணயக் கைதிகளாக்கப்பட்டோம். இப் போது நீங்கள் தான் விடுவித்திருக்கிறீர் கள். இந்த உதவியை ஒருநாளும் நான் மறக்கமாட்டேன். மிக்க நன்றி."

"நன்றி கூறி நமது நட்பை பிரிக்க முயலவேண்டாம். அன்று எனது உயிரை நீ காப்பாற்றியதால்தான் இன்று என்னால் உயிரோடு இருக்க முடிகிறது. சம்பிரதா யப் பேச்சுக்கள் போதும். வா, கோட் டைக்குள் செல்வோம்!" எனக் கூறியவன் வில்லவனைக் கோட்டைக்குள் அழைத் தான் சேர இளவல்.

"மன்னிக்க வேண்டும். என்னை எதிர்பார்த்து எனக்கு வேண்டியவர்கள் எனக்காகக் காத்துக் கொண்டிருப்பார் கள். நான் உடனடியாக இங்கிருந்து

வெளியேற வேண்டும். உங்களது அனுமதி வேண்டும். இன்னொருநாள் நாம் இருவரும் சந்திக்கலாமே!"

"சரி நண்பா... நீ முடிவெடுத்துவிட்டாய். நான் மறுப்பு தெரிவித்தால் நீ கேட்கவா போகிறாய்? ஆனால், ஒரு நிபந்தனை!"

"என்ன நண்பா?"

"நீ நிச்சயம் சேர அரண்மனைக்கு என் விருந்தினனாக வருகைத் தர வேண்டும்!"

"அது எனது பாக்கியம்!"

"சரி நீ கிளம்பு... நானும் கோட்டையைத் திடீர் என்று கைப்பற்றிய கயவர்கள் யார் என்று விசாரிக்க வேண்டும்! நிறைய வேலை இருக்கிறது" எனச் சேர இளவரசன் கூறிக் கொண்டிருந்த போதே அங்கு ஓடி வந்த எல்லைப்புறக் காவல் தலைவர், "இளவரசே, கோட்டையைக் கைப்

https://telegram.me/aedahamlibra

பற்றிய கயவர்கள் நம்மை நன்கு ஏமாற்றி விட்டார்கள்!” எனப் பதறினார்.

“என்ன கூறுகிறீர்கள்?” ஆவேசமாக வினவினான் சேர இளவரசன்.

“இளவரசே, நாம் பின்புறமாகக் கோட்டையைத் தாக்கப் போகிறோம் என்பதை அவர்கள் ஏற்கெனவே அனுமானித்திருக்கிறார்கள். அனுமானித்ததோடு மட்டுமல்லாமல் நாம் கோட்டைக்குள் ஊடுருவுவதற்குள் அவர்கள் தப்பியும் சென்று விட்டார்கள்.”

“என்ன அவர்கள் தப்பிவிட்டனரா?”

“ஆம் இளவரசே! அவர்கள் கோட்டைக்குள் ஊடுருவியது புரவியில். ஆனால், கோட்டைக்குள் ஒரு புரவியைக் கூடக் காண இயலவில்லை.”

“என்ன கூறுகிறீர்கள் காவல் தலைவரே? நாம் இரண்டு வாயில்கள் வழியாக உள்ளே நுழைய அவர்கள் எப்படி இங்கிருந்து வெளியேறியிருப்பார்கள்?”

அப்போது வேடன் வில்லவன், “நண்பா, அகப்பா கோட்டையில் பெரு மதில் முழுமையடையவில்லை. ஒருபுறம் மலையைத் தான் அரணாகக் கொண்டி ருக்கிறது.”

“அப்படியெனில்?”

“அவர்கள் அனைவரும் அம்ம லைத் திறப்பின் வழியாகக் கூடத் தப்பியி ருக்கலாம்!”

கோபத்தில் சேர இளவரசனின் விழிகள் சிவக்க, “கோட்டையைக் கைப் பற்றிய பகைவர்கள் தப்பிவிட்டார்கள் என்றால் நாம் கொன்றுபோட்டுவிட்டு முன்னேறிய வீரர்கள் யார்?” என வினவி னான்.

“அவர்கள் அனைவரும் துளுவ வீரர்கள்!” எனப் பதிலளித்தார் காவல் தலைவர்.

“என்ன, துளுவ வீரர்கள் அக்கய வர்களுக்கு ஆதரவாக ஆயுதம் தரித்தார்

களா?" குழப்பத்துடன் வினவினான் சேர இளவரசன்.

அப்போது வேடன் வில்லவன், "நண்பா, தனது நாட்டுக் குடிமக்கள் பணயக் கைதிகளாக இருக்கையில் ஆயுதம் தரிப்பதைத் தவிர வேறு மார்க்கமில்லை அவர்களுக்கு!" என நிதானமாகப் பதிலளித்தான்.

சேர இளவரசன் அம்புகளும், வேலும் பாய்ந்து விழுந்து கிடந்த வீரர்களின் முகத்தை உற்றுப் பார்த்தான். அவர்கள் அனைவரும் துளுவ நாட்டு வீரர்கள்.

"ஏமாந்துவிட்டோம்!" கோபத்துடன் தெரிவித்தான் சேர இளவரசன்.

"நண்பா, இன்னொரு பிழையையும் நீ செய்துவிட்டாய்!"

"என்ன?"

https://telegram.me/aedahamlibra

“பணயக் கைதிகளை எந்தவித விசாரணையும் செய்யாமல் நீயே விடு தலை செய்துவிட்டாயே?”

“என்ன பிதற்றுகிறாய் நண்பா?”

“நான் பிதற்றவில்லை! நீயே, சிந் தித்துப்பார். பணயக் கைதிகளுக்குக் காவலாக இருந்து இறந்து கிடப்பவர் களும் துளுவ வீரர்கள். அப்படியெ னில் பகைவர்கள் கூட்டத்தோடு கூட் டமாக இருந்திருக்கலாம் அல்லவா! நான் நேரில் எவரையும் பார்க்கவில்லை. எனக்குத் தோன்றுவதைக் குறிப்பிடுகி றேன் நான்!”

“.......”

“அனைவரையும் விடுவித்தது கோட்டையைவிட்டு அனுப்பி வைத்த தும் பிழைதான் நண்பா...”

அவனுக்கு எந்தப் பதிலையும் கூறாமல் வேடன் வில்லவன் மற்றும் காவல் தலைவர் இருவரும் அமைதி

யாக அவனது முகத்தையே பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

“நண்பா, குறைவான வீரர்களைக் கொண்டு அகப்பா கோட்டையைத் தந்திரமாகக் கைப்பற்றியதோடு மட்டுமல்லாமல் இத்தனை நாட்களாக அதை இழக்காமல் வைத்திருந்த அவனது வீரம் என்னைப் பிரமிப்படையச் செய்கிறது. கடைசியில் தந்திரமாக வெளியேறியும் விட்டான். அவன் யார் நண்பா?”

“எங்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்த வேளையில் கூட அவர்கள் எதுவும் பேசிக்கொள்ளவில்லை. அவர்கள் இந்தக் கோட்டையிலிருந்தும் எதையும் கொள்ளையடித்ததாகவும் தெரியவில்லை.”

“ஆமாம் இளவரசே, வேடுவர் கூறுவது உண்மைதான். அவர்கள் இக்கோட்டையை வெறுமனே கைப்பற்றி இப்போது விட்டுவிட்டுச் சென்றுவிட்டார்கள்.”

"அந்த வீரனை நான் வாழ்வில் ஒரு முறையாவது நேரில் சந்திக்க விரும்புகி றேன். நேருக்கு நேர் அவனுடன் நான் பொருத வேண்டும்."

"அவர்களின் தலைவனும், நீங் களும் வாழ்வில் இன்னொருமுறை நேருக்கு நேர் பொருதவேண்டும் என் பது விதிப் பயனாக இருந்தால் யாரால் நண்பா மாற்ற இயலும்? உங்களது எண் ணம் ஈடேறட்டும்."

"எனக்கு இன்னொரு செய்தியும் புலப்படவில்லை!"

"என்ன?"

"அவர்கள் எதற்காக வயல்களைக் கொளுத்தினார்கள்? பிறகு எதற்காகக் கோட்டையைக் கைப்பற்றினார்கள்? இப் போது காரணமே இல்லாமல் அவர் களே எதற்குக் கோட்டையைக் கைவிட் டுச் சென்றுவிட்டார்கள்? அனைத்திற்கும் காரணம் என்னவாக இருக்கும்?"

"அவர்கள் ஏதாவது தடயத்தை விட்டுச் சென்றிருப்பார்கள். தேடிப்பார். நான் புறப்படுகிறேன் நண்பா... வாய்ப்பு கிடைத்தால் நாம் பிறிதொரு காலம் சந்திப்போம்!" எனக் கூறிய வேடன் வில்லவன் அங்கிருந்து விடைபெற்றுச் செல்லலானான்.

சேர இளவரசன் பெரும் குழப்பத்துடன் கோட்டை மாளிகைக்குள் நுழைந்தான். அப்போது அங்குப் பெரும் சலசலப்பு ஒன்று வீரர்களுக்கிடையில் தோன்றியிருந்தது.

அவன் என்ன என்று கேட்பதற்குள் சற்று அச்சத்துடனே அவனிடம் வந்த காவல் தலைவர், "இளவரசே..." என்று கோட்டையின் உச்சி மாடத்தை நோக்கிக் கை காட்டினார்.

அதைப் பார்த்த சேர இளவரசனின் நாடி நரம்புகள் அனைத்தும் வெடித்து விடுவதைப் போன்று உணர்ந்தான்.

https://telegram.me/aedahamlibra

சோழர்களின் புலிக்கொடி பட்டொளி வீசி அகப்பா கோட்டையின் உச்சி மாடத்தில் கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்தது.

"இளவரசே, சோழ...." என எதையோ கூற காவல் தலைவர் வாயெடுத்தார். ஆனால் அதற்குள் எழுந்த சேர இளவரசனின் கை அவரது வார்த்தைகளைத் தடுத்து விட்டிருந்தன.

பறந்து கொண்டிருந்த புலிக் கொடியையே வெறிக்க வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தான் சேர இளவல். பிறகு, "கண நேரமும் இங்கு இனி நாம் தாமதிக்க வேண்டாம். உடனே எனது புரவிப் படையோடு வஞ்சிக்குப் புறப்படுகிறேன் நான். காவல் தலைவரே, கோட்டையைக் கவனித்துக் கொள்ளுங்கள்! நான் வஞ்சியை அடைந்த அடுத்தக் கணமே சோழ நாட்டை நோக்கிச் சேரர் படை புறப்படப்போகிறது!" பெரும் சினத்துடன் கட்டளையிட்டான் சேர இளவரசன்.

https://telegram.me/aedahamlibra

# 43. எதிர் தாக்குதல்

பெரும் படையுடன் புகாரை முற்றுகையிட்ட மலை நாட்டுப் படைக்கு அவர்கள் எதிர்பாராத பெரும் அதிர்ச்சி காத்துக் கொண்டிருந்தது. காரணம், அவர்களை வரவேற்கவோ அல்லது எதிர்க்கவோ யாரும் இல்லை. ‘புகாரை நெருங்கவிடாமல் சோழர் படை இடை மறித்துத் தாக்குதல் நடத்தும். புகாரைக் காத்துக் கொள்வதற்காக அனைத்து ஏற்பாடுகளையும் திறம்படச் செய்திருப்பார்கள்’ என்று எதிர்பார்த்தே இருங்கோ பெரும்படையுடன் வருகை தந்திருந்தார். ஆனால், புகாரின் நிலை தலை கீழாகக் காணப்பட்டது. வடக்கு மதிலைச் சுற்றி பாதுகாப்பிற்காக வளர்த்திருந்த மிளைக் காடுகள் அனைத்தும் வெட்டப்பட்டிருந்

தன. அகழிகளில் பாதி அளவே நீர் நிரப் பப்பட்டிருந்தது. புகாரைச் சார்ந்த கடற்ப ரப்பு முழுவதும் எப்போதும் மேலை நாட்டு வணிக மரக்கலங்கள் வந்து கொண்டும் சென்று கொண்டும் பரபரப்புடன் இருக் கும். ஆனால், இருங்கோவின் மலை நாட்டுப் படைகள் வந்து சேர்ந்த பிறகு அவர்களால் ஒரு மரக் கலத்தைக்கூடக் காண இயலவில்லை. புகாரின் நிலை விசித்திரமாகவே இருந்தது. அவரது பார் வைக்குத் தென்பட்ட திசைவரை வெறிச் சோடிப் போய் ஆளரவம் அற்று வெறுமை யாகவே காணப்பட்டது புகார்.

மதிலுக்குள் அடக்கமாகக் காணப் பட்ட புகார்ப் பட்டினத்தையே சிந்தனை யுடன் பார்த்துக் கொண்டிருந்த இருங் கோவேளிடம் யுவராஜன், அவரது சிந்த னையைக் கலைக்கும்படி, “அரசே, எதற் காகத் தாமதிக்கிறோம். அனுமதி மட்டும் அளியுங்கள். புகாரை உங்களது காலடி யில் கொண்டு வந்து சமர்ப்பிக்கிறோம்” எனக் கூறியபடி இடையுறையிலிருந்து வாளினை உருவினான்.

https://telegram.me/aedahamlibra

"யுவராஜா... அவசரம் வேண்டாம்!" எனப் பொறுமையாகப் பதிலளித்தார் இருங்கோ.

பொறுமையுடன் இருங்கோவைப் போன்று அவனும் புகாரைக் கவனிக் கலானான். மதில்களுக்குப் பின்னால் அமைந்திருந்த தூண்களின் பிரமாண்ட வடிவத்தைக் கண்டு அவனும் மலைக் கவே செய்தான். இருந்தும் புகாரின் அமைதி அவனையும் சிந்திக்க வைத் தது.

"கடந்த வருடம் நாம் முற்றுகை யிட்ட போது காணப்பட்ட புகாருக் கும், இப்போது காணப்படும் புகாருக் கும் நிறைய வேறுபாடு இருக்கிறது தந் தையே! செங்குவீரன் இப்போது இல்லை. புகாரும் நமது தாக்குதலுக்குத் தயாரான தாகத் தெரியவில்லை" என யுவராஜன் கூறிக் கொண்டிருந்த போதே இடை மறித்த இருங்கோவேள், "போருக்குத் தயாராகாத புகாரைத் தாக்குவது நமது

வீரத்திற்கு இழுக்கு. ஆதலால், கடைசி யாக ஒரு முறை சோழ இளவலுக்கு ஒரு வாய்ப்பினை அளிக்கலாம் என இருக் கிறேன்!" என இருங்கோ கூறியதுதான் தாமதம் அடுத்தக் கணம் யுவராஜன், "தந்தையே..." எனப் பதறினான். பிறகு, "அதற்கு ஒருகாலும் சேர மற்றும் பாண் டிய மன்னர்கள் ஒப்புக்கொள்ள மாட் டார்கள். முற்றுகையிட வந்துவிட்டோம். அதன் பிறகு அவர்கள் மீது நீங்கள் இறக் கம் கொள்வது முறையல்ல" எனத் தனது ஆட்சேபனையைத் தெரிவித்தான்.

"முற்றுகையிடுவதற்கு முன் எதி ரியிடம் தூதுவனை அனுப்புவதுதான் முறை. சம்பிரதாயத்திற்காக அனுப்பு வோம். அவர்கள் பணிந்தால் நமக்குத் தானே நல்லது. போர் நடைபெறாமலே புகாரைக் கைப்பற்றிக் கொள்ளலாம் அல்லவா?"

"அவர்கள் பணிவார்கள் என்று கருதுகிறீர்களா?"

“அதைப் பற்றி நான் கவலைப்படப் போவதில்லை. அவர்கள் எந்த முடிவெடுத்தாலும் புகார் அழியப் போவது மட்டும் உறுதி” என யுவராஜரிடம் கூறியவர்” இரண்டு புரவி வீரர்களை இங்கே வரச் சொல்லுங்கள்” எனச் சத்தமாகக் கட்டளையிட்டார்.

உடனே இரு வீரர்கள் விரைந்து வந்து புரவியிலிருந்து குதித்து மரியாதை செலுத்தினர்.”புகார் கோட்டைக்குள் நுழைந்து நமது முற்றுகையை முறைப்படித் தெரிவியுங்கள். பணியாவிட்டால் புகார் தரைமட்டமாக இடிக்கப்படும் என்று எச்சரித்துவிட்டுத் திரும்புங்கள்” என உரக்கக் கட்டளையிட்டார் இருங்கோ.

உடனே இருங்கோவின் அறிவிப்பைத் தெரிவிக்கப் புரவியில் புகார் பட்டினத்தை நோக்கி இரு புரவிகளும் விரைந்தன.

https://telegram.me/aedahamlibra

“தந்தையே, நம் படையை எதற்கு மதிலை விட்டு நெடுந்தொலைவில் நிறுத்தி வைத்திருக்கிறோம். மதிலை நோக்கி முன்னேறலாம் அல்லவா?” என வினவினான் யுவராஜன்.

“வேந்தன் தான் சற்றுத் தொலை விலேயே படை நிலை பெற்றிருக்கட்டும் எனத் தெரிவித்திருக்கிறான்.”

“எதற்கு?”

“தெரியவில்லை!”

“அவன் எங்கே?”

“புகாரின் பேரமைதிக்குக் காரணம் என்னவாக இருக்கும் என்பதைத் தெரிந் துகொள்ளச் சென்றிருக்கிறான்.”

“நல்லது. அவன் வரட்டும்” என யுவராஜன் கூறிக் கொண்டிருந்த போதே தொலைவில் வேந்தன் புரவியில் அவர் களை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

விரைந்து வந்தவன் இருங்கோவிடம், "அரசே, புகாரின் நிலை விசித்திரமாக இருக்கிறது. போருக்கு அவர்கள் தயாராகியிருப்பதற்கான சிறு அறிகுறிகள் கூடக் கண்களுக்குத் தெரியவில்லை. குன்றுத் துறைக்கு அருகில் மட்டும் மீனவர்களின் கலங்கள் மொத்தமாகப் பிணைக்கப்பட்டிருக்கின்றன." எனத் தெரிவித்தான்.

"வணிகக் கலங்கள் அனைத்தும் எங்கே வேந்தா? விசாரித்தாயா?"

"விசாரித்தேன். துறைமுகத்தை நாகப் பட்டினத்திற்கு மாற்றிவிட்டார்கள்!"

"எப்போது?"

"சில தினங்களுக்கு முன்தான்!"

"அப்படியெனில் நாம் புறப்பட்டு விட்டதை அவர்கள் முன்னரே அறிந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையில் இறங்கிவிட்டார்கள்! அப்படித் தானே?"

https://telegram.me/aedahamlibra

"ஆம் அரசே..."

"வேந்தா, படைகளை எதற்காகக் கோட்டை மதிலிலிருந்து வெகு தொலை வில் நிறுத்தி வைத்திருக்கிறாய்? வந்த வேகத்தில் தாக்குதலைத் தொடங்கியி ருக்கலாம் அல்லவா? நேரத்தை எதற் காக வீணடித்துக் கொண்டிருக்கிறாய்?" என வினவினார் இருங்கோவேள்.

"புகாரின் நிலை என்னைத் தயங் கச் செய்கிறது. இந்தப் பேரமைதி என் னைச் சிந்திக்க வைக்கிறது" எனக் கூறிக் கொண்டிருந்த போதே அங்கு வந்த வைதீகர் பிரம்மாயர், "ஆம் அரசே! வேந் தன் கூறுவது முற்றிலும் சரி. அவன் தயங் குவதில் காரணமும் இருக்கிறது!" எனத் தெரிவித்தார்.

"என்ன காரணம்?" என வினவி னான் யுவராஜன்.

"நாம் வருவதைக் கண்டு மதில் அகழிகளைச் சுற்றி வளர்த்திருந்த

மிளைக் காடுகளை வெட்டியிருக்கிறார்கள்...” எனக் கூறிக் கொண்டிருந்த போதே இடைமறித்த யுவராஜன், “கோட்டைப் பாதுகாப்பிற்காகத் தானே மிளைக் காடுகளை வளர்ப்பார்கள். ஆனால், இவர்கள் முட்டாள்தனமாக அல்லவா வெட்டிவிட்டார்கள்?” என ஏளனத்துடன் தெரிவித்தான்.

“இல்லை யுவராஜரே, அவர்கள் முட்டாள்தனமாக மிளைக் காடுகளை வெட்டவில்லை. மாறாகச் சிந்தித்த பிறகே மிளைக் காட்டினை அகற்றியிருக்கிறார்கள்.”

“புரியவில்லை பிரம்மாயரே!”

“பெரும் கோட்டைக்கு மிளைக்காடுகள் பாதுகாப்புதான். ஆனால், அதுவே பெரும் பலவீனமும் கூட! கோட்டையைக் கைப்பற்ற வரும் படையினர் மிளைக் காட்டிற்குள் மறைந்து கோட்டைக்குள்ளிருந்து வரும் எரியம்புகளிலிருந்து தற்காத்துக்கொள்ள இயலும்.

அதே நேரம் கோட்டைக் கதவினை உடைக்கப் பயன்படும் பெரும் மரங்களை மிளைக் காட்டிலிருந்தே யானைகளைக் கொண்டு பிடுங்கிக்கொள்ளலாம். அகழி களைக் கடக்கவும் அந்த மரங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆதலால் தான் அவர்கள் அடர்ந்த மிளைக் காடு களை வெட்டிச் சமவெளியாக்கிவிட்டார் கள். மிளைக் காடு இருந்திருந்தால் நம் பெரும்படை அதற்குள் சென்று இந் நேரம் மறைந்திருக்கும். ஆனால், இப் போது நாம் நெருங்கினாலே அவர்கள் எரியம்புகளை வீசத் தொடங்கிவிடுவார் கள். அவற்றைக் கடந்துதான் மதிலை நெருங்க இயலும். மிகவும் தந்திரத்து டன் முன்னெச்சரிக்கை நடவடிக்கையு டன் தான் இருக்கிறார்கள். ஆதலால் தான் வேந்தனும் மதிலை நெருங்கிச் செல்லாமல் சற்றுத் தொலைவிலேயே படையை நிறுத்தியிருக்கிறான். என்ன வேந்தா, நான் கூறுவது மெய் தானே!" என வினவினார்.

வேந்தன் சிரித்தபடி, “ஆமாம், பிரம் மாயரே! நீங்கள் கூறுவது அனைத் தும் உண்மை. அவர்கள் பெரும் திட் டத்துடன் இருக்கிறார்கள். அவர்களின் திட்டம் மற்றும் இந்தப் பேரமைதிக் கான காரணத்தை அறிந்துகொள்ளாமல் கோட்டை மதிலை நோக்கி நகர்வது முட் டாள் தனம்! நாம் பொறுமை காக்க வேண்டும்!” எனத் தெரிவித்தான் பட்டி னத்தை வியப்புடன் பார்த்தபடியே!

புகாரைத் தாக்காமலே இரண்டு நாட்களாக வெறுமனே முற்றுகையுடன் அமைதி காத்தது இருங்கோவின் பெரும் படை. புகார் பட்டினத்தின் பேரமைதிக் குக் காரணம் ஏதாவது கிடைக்கும் என்ற நினைப்பில் அப்பட்டினத்தையே சுற்றி சுற்றி வந்தான் வேந்தன். கடற்கரையின் ஓரமாகக் குடில் அமைத்துத் தங்கியி ருந்த பரதவ மக்களைத் தவிர அவனது விழிகளுக்கு எவருமே அகப்படவில்லை. அவர்களிடமும் ஏதாவது தகவல் கிடைக் கும் என்று விசாரிக்க முயற்சி செய்தான்.

ஆனால், அவர்களிடமிருந்து எந்தத் தக வலையும் கைப்பற்ற இயலவில்லை.

இரண்டாவது நாளையும் தாக்குதல் தொடுக்காமல் வெறுமனே கழித்தனர். மூன்றாவது நாளின் மாலைப் பொழுது, கதிரவன் மறைவதற்கு ஒரு நாழிகைப் பொழுதே மிச்சமிருந்த சமயம். திடீ ரென்று முற்றுகையிட்டிருந்த இருங்கோ வின் படைகளில் சலசலப்பு ஏற்பட்டது. சலசலப்பிற்கான காரணத்தை அறியாத உறைந்தை மன்னர் இருங்கோவும், வேந் தனும் காரணத்தை அறிவதற்காகத் தங் களது கூடாரத்திலிருந்து வெளியே வந்து பார்த்தனர். வீரர்கள் அனைவரும் ஒரு வருக்கொருவர் முணுமுணுத்தபடி புகார் பட்டினத்தின் பெரும் மதிலையே பார்த்த படி நின்று கொண்டிருந்தனர்.

இருங்கோவும், வேந்தனும் மதிலை நோக்கினார்கள். அங்கே மதிலுக்கு மேல் ஒருவன் நின்று கொண்டிருந்தான். மார் பில் தரித்திருந்த ஆத்தி மாலையிலிருந்து

https://telegram.me/aedahamlibrary

நின்று கொண்டிருப்பவர் கரிகாலர்தான் என்பதை இருவரும் அறிந்து கொண்டார்கள். தொலைவிலிருந்து இருவரும் பார்த்ததால் அவரது முகத்தில் தவழ்ந்து கொண்டிருந்த புன் சிரிப்பை அவர்களால் காண இயலவில்லை. இருந்தாலும் இடையில் கைவைத்து ஒரு காலை சிறிது மடித்தபடி அவர் நின்ற தோரணை அவர்களுக்கு ஆத்திரத்தை வரவழைத்தது. அவரது மனதில் தோன்றியிருந்த ஏளனத்தை அவர்கள் அறிந்து கொண்டார்கள். உயர்ந்த மதில் மேல் நின்றிருந்ததால் முற்றுகையிட்டுக் காணப்பட்ட பெரும்படையின் நிலை, அவற்றின் தோராய மதிப்பு என அனைத்தையுமே கரிகாலர் அறிந்து கொண்டார்.

“வேந்தா, எவ்வளவு திமிர் இருந்தால் அவன் நம் முன் தோன்றி ஏளனத்துடன் நின்று கொண்டிருப்பான். இதற்கு மேல் பொறுமை காப்பது நமது வீரத்திற்குப் பெரும் இழுக்கு. பட்டினத்திற்குள் நுழைந்த இருவர் திரும்பிக்

https://telegram.me/aedahamlibra

கூட வரவில்லை. தாக்குதலை இப்போதே தொடங்கு!” கட்டளையிட்டார் உறைந்தை மன்னர் இருங்கோவேள்.

“நானும், அந்தச் சிந்தனையில் தான் அரசே நின்று கொண்டிருக்கிறேன்” எனத் தெரிவித்த வேந்தன் அருகில் நின்று கொண்டிருந்த வீரன் வைத்திருந்த கொம்பை வாங்கி ஊதலானான். உடனே ஓய்வெடுத்துக் கொண்டிருந்த பெரும்படை தாக்குதலுக்கு ஆயத்தமானது. கொம்பு ஊதும் சத்தம் எழுந்ததுமே யுவராஜன், வைதீகர், வேளிர்கள் மற்றும் உபதளபதிகள் என அனைவரும் வேந்தன் நிற்குமிடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அனைவரும் மதில் மேல் நின்று கொண்டிருந்த கரிகாலரைக் கண்டார்கள். அப்போதும் அவர் அப்படியேதான் நின்று கொண்டிருந்தார்.

“விற்படை வீரர்கள் தயாராகட்டும்” கட்டளையிட்டான் வேந்தன். அடுத்தக் கணம் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வில்

வீரர்கள் அணிவகுத்து நிற்கலானார்கள்."கோட்டை மதில் மீது நிற்பவனை நோக்கி அம்புகளை எறியுங்கள்" மீண்டும் கட்டளையிட்டான் வேந்தன்.

அணிவகுத்து நின்றவர்கள் அனைவரும் கோட்டை மதிலை நோக்கி வில்லினைக் குறிவைத்து அம்பினை எய்தார்கள். ஆனால், காற்றின் திசை தெற்கிலிருந்து வடக்காக இருந்ததால் அவர்களின் அம்புகள் குறிவைத்த இலக்கிற்கு முன்னதாகவே கீழே விழுந்தன.

"வேந்தா... மதிலிலிருந்து நாம் வெகு தொலைவில் இருக்கிறோம். விற்படைத் தாக்குதல் தொடுக்க வேண்டும் என்றால் நாம் இன்னும் நெருங்கி செல்ல வேண்டும்" எனத் தெரிவித்தவர், "காலாட்படை வீரர்கள் ஆயிரம் பேர் தயாராக நிற்கட்டும்" எனக் கட்டளையிட்டார்.

உடனே காலாட்படை வீரர்கள் கிட்டதட்ட ஆயிரம் பேர் கையில்

பெரும் கேடயத்துடன் நிற்கலானார்கள்." வில் வீரர்கள் அருகில் நெருங்குவதற்கு ஆதரவாகக் கேடயத்தைப் பாதுகாப்பா கக் கொண்டு கோட்டையை நோக்கி முன்னேறுங்கள்" எனக் கட்டளையிட் டார் இருங்கோவேள்.

அடுத்தகணம் கேடயத்தை மறை வாகக் கொண்டு காலாட்படை வீரர் கள் முன்னேறினார்கள். அவர்களுக்குப் பின்னால் வில் வீரர்கள் சென்றார்கள். வில் வீரர்கள் நெருங்கும்போது கோட் டையிலிருந்து எதிர் தாக்குதல் தொடுக் கப்படும் என்றே எதிர்பார்த்தான் வேந் தன். ஆனால், எந்தவித தாக்குதலும் கோட்டைக்குள்ளிருந்து தொடுக்கப்பட வில்லை. கரிகாலர் வெறுமனே அவர்க ளைப் பார்த்தபடியே நின்று கொண்டிருந் தார்.

கேடயத்தின் பாதுகாப்பில் வில் வீரர்கள் மதிலை நோக்கி பாதித் தொலைவு கடந்திருந்தார்கள். வில் வீரர்

கள் மீண்டும் அம்பினை எய்தார்கள். அவர்கள் எய்த அம்புகள் அனைத்தும் கோட்டை மதிலை அடையாமல் அகழி யிலேயே வந்து விழுந்தன.

விற்படைத் தலைவன் கட்டளை யிட்டான்."நாம் இன்னும் நெருங்கிச் சென்றால்தான் நம்மால் மதில் மீது நிற்பவர்களைக் குறிவைத்து தாக்குதல் தொடுக்க இயலும்."

கேடயத்தின் பாதுகாப்பில் பதுங் கிப் பதுங்கி வில் வீரர்கள் முன்னேறிக் கொண்டிருந்தார்கள்.

"யானைப் படையை அனுப்பி மதிலை உடைத்துக் கொண்டு முன்னேற வேண்டியதுதானே தந்தையே! இன்னும் எதற்காக நீங்கள் பொறுமை காக்கிறீர் கள்? வில் படையை அனுப்பி என்ன பயன்?" எனக் கோபத்துடன் வினவி னான் யுவராஜன்.

https://telegram.me/aedahamlibra

"யுவராஜா, உனக்குப் போரில் அனுபவம் கிடையாது. கோட்டையை முற்றுகையிடும் போது எடுத்த உடனே நாம் யானைப் படையையும், எறி கவனையும் உபயோகிக்கக் கூடாது. கோட்டை மதிலின் பின்புறமாக வில் வீரர்கள் தயாராக நிற்பார்கள். அவர் களை முதலில் நாம் விரட்ட வேண்டும். அவர்களை விரட்டாமல் நமது யானைப் படையை அனுப்பினால் அவர்கள் எறி யும் எரியம்பு யானைகளை மிரளச் செய்து விடும். அவர்களின் போர் முறையை முத லில் நாம் அறிந்து கொள்வோம்! பிறகு தாக்குதலை தீவிரப்படுத்துவோம்."

"எறிகவனைக் கொண்டு பாறை களை எறிந்து கதவினைத் தகர்த்துவிட வேண்டியது தானே!"

"எறிகவனைப் பயன்படுத்த வேண் டுமென்றால் நாம் இன்னும் நெருங்கிச் செல்ல வேண்டும். அவர்கள் எறியும் அம் புகள், எறிகற்கள் எதுவரை விழும் என்

https://telegram.me/aedahamlibra

பதை நாம் முதலில் கண்டறிய வேண்டும். அதற்குப் பிறகு நாம் நமது கல்லுமிழ் கவன், இடங்கணிப் பொறி, கவை ஆகியவற்றைப் பயன்படுத்தலாம். இவற்றைப் பயன்படுத்த வேண்டும் என்றால் அவர்களை நாம் நெருங்க வேண்டும் அல்லது அவர்கள் நம்மைத் தாக்க வெளியே வர வேண்டும். அதற்கான ஏற்பாடுகளைத் தான் வேந்தன் தொடங்கியிருக்கிறான்!" எனத் தெரிவித்தார் உறைந்தை மன்னர் இருங்கோவேள்.

வில் வீரர்கள் நெருங்கிக் கொண்டிருந்தார்கள். மதில் மீது நின்று கொண்டிருந்த கரிகாலர் தோளில் மாட்டியிருந்த வில்லினை எடுத்து வானை நோக்கி உயர்த்தி அதன் நாணைப் பிடித்து இழுத்தார். ஆனால், அந்த நாணில் எந்த அம்பும் தொடுக்கப்படவில்லை.

அவரது செயலை வேடிக்கையாகப் பார்த்துக் கொண்டு நின்ற வைதீகர், "பெருந்தூண்கள் அமைத்து வழிபட்

டதால் இந்திரன் ஏதோ அதிசய சக்தி வாய்ந்த கணையை அளித்திருப்பதாகக் கூறினாயே, வேந்தா? அந்த அதியற்புத கணையின் வல்லமையைக் காட்டுவதற் காகத் தான் வில்லில் அம்பினை கோர்க் காமல் நாணை இழுத்துக் கரிகாலன் குறிபார்க்கிறானா?" என ஏளனத்துடன் வினவினார்.

சுற்றி நின்றவர்கள் அனைவரும் சிரிக்கலானார்கள். அம்பின் நாணை இழுத்த கரிகாலர், அதை விடுவித்தார். அனைவரும் வானையே பார்த்தார்கள். மீண்டும் சிரிப்பு எழுந்தது இருங்கோவின் பாசறையில்.

ஆனால், அவர்களின் சிரிப்புச் சத் தம் அடங்குவதற்குள் எங்கோ பெரு மழை பொழிவதைப் போன்று சடச டவென்ற சத்தம் அவர்களின் காது களை எட்டின. மீண்டும் வானை நோக் கினார்கள். முகிலற்ற வானத்திலிருந்து கருத்த பெருமழைத் துளிகள் விழுவ

தைப் போன்று அவர்களின் கண்களுக் குத் தெரிந்தன.

விழுகின்றவை மழைத் துளிகள் அல்ல, அவை அனைத்தும் அம்பு கள் என்பதை அவர்கள் உணர்வதற் கும் முன்னேறிக் கொண்டிருந்த வீரர்க ளின் மீது அவை பெரும் வேகத்துடன் மழையாகப் பொழிந்தன. அதை எதிர் பார்த்ததைப் போன்றே கேடயத்துடன் சென்ற வீரர்கள் அனைவரும் கேடயத் தைத் தலைக்கு மேல் ஒன்று சேர்த்துக் குடையைப் போன்று பிடித்துத் தற்காத் துக் கொண்டார்கள்.

“நாம் முன்னேறுவோம்” மீண்டும் கட்டளையிட்டான் விற்படைத் தலை வன். காலாட்படை வீரர்களும், வில் வீரர் களும் முன்னேறினார்கள்.

மீண்டும் வானில் பெருமழை விழு வதைப் போன்று வில் வீரர்களுக் குச் சத்தம் கேட்டது. உடனே கேட யத்தைக் காலாட்படை வீரர்கள் உயர்த்

https://telegram.me/aedahamlibra

திப் பிடிக்க வில் வீரர்கள் பாதுகாப்பாக நின்று கொண்டார்கள். ஒன்றாகச் சேர்த்துப் பிடித்துக் கொண்டிருந்த கேடயத்தின் மீது விற்கள் அனைத்தும் ‘தொப் தொப்’பென்று அதே வேகத்துடன் கீழே விழுந்தன.

“மீண்டும் வில் மழையைப் பொழிகிறார்கள்” எனச் சிரிப்புடன் கேடயத்தின் கீழ் மறைந்திருந்த வீரர்கள் பேசி சிரித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது கேடயத்தைத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருந்த வீரன் ஒருவனின் முதுகில் கொதிக்கும் அரக்குத் துளி ஒன்று விழ கேடயத்தைக் கீழே போட்டுவிட்டு வலி தாங்க இயலாமல் ஓடலானான். வீரர்கள் அடுத்தடுத்து வலியில் துடிதுடித்து ஓடலானார்கள். விற்படைத் தலைவன் கேடயத்தை விலக்கிவிட்டுப் பார்த்தான். தலைக்கு மேல் விழுந்தது வெறும் அம்புகள் அல்ல. அவை அனைத்தும் எரியம்புகள். கேடயத்தின் மீது விழுந்த எரியம்புகள் எரிய எரிய அதிலிருந்து உருகி

வழிந்தன அரக்குத் துளிகள். நேரம் கடக்கக் கடக்கக் கேடயமும் சேர்ந்து தீப்பிடிக்கத் தொடங்கின. மீண்டும் அவர்கள் பெரும் மழையின் சத்தத்தைக் கேட்டார்கள். ஆனால், சிந்திப்பதற்கும் அவர்கள் மீது பாறைக் கற்கள் தொப் தொப்பென்று விழுந்தன. கேடயங்கள், அதைத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருந்த வீரர்களின் மண்டை என அனைத்தும் ஒரே நேரத்தில் சிதறின.

மீண்டும் அவர்களின் மீது எரியம்புகள் விழத் தொடங்கின. முன்னேறிச் சென்ற வில் வீரர்கள் அவர்களுக்குத் துணையாகக் கேடயத்துடன் சென்ற ஆயிரம் காலாட்படை வீரர்கள் அனைவரும் இருங்கோவின் கண் முன்னே எரிந்து மடிந்தார்கள். அவர்களின் மரண ஓலத்தைக் கேட்ட மொத்த உறைந்தைப் படையுமே நடுங்கி உறைந்துபோய் நின்று கொண்டிருந்தார்கள்.

அன்றைய பொழுது மேற்கில் சாய்ந்தது. காரிருள் மீண்டும் அவ்விடத்தைக் கவ்வி கொண்டது.

வேந்தன் தனது கூடாரத்தில் அமர்ந்திருந்தபடியே புகார் மதிலில் ஏற்றி வைத்திருந்த தீப்பந்த ஒளியை சிந்தனையுடன் பார்த்துக் கொண்டிருந்தான். திடீரென்று அவனுக்கொரு சிந்தனை தொடர உடனே தனது கூடாரத்தை விட்டு வெளியேறி இருங்கோவிடம் ஆலோசனை நடத்தினான்.

அவனது யோசனையைக் கேட்ட இருங்கோ, “சரியான யோசனை வேந்தா... நானே இப்படிச் சிந்திக்கவில்லை. ஆனால், இருளில் தாக்குதல் நடத்துவது சரியா என்றுதான் சிந்திக்கிறேன் நான்!”எனத் தெரிவித்தார்.

“மதிலுக்குப் பின்புறம் பாதுகாப்பாக நின்று கொண்டு அவர்கள் தாக்குகிறார்கள். வாயிலைக் கைப்பற்ற வேண்

டும் என்றால் இதைத் தவிர வேறு வழி யில்லை.”

“சரி வேந்தா... அவர்களின் மதிற்கதவு உடைக்கப்படட்டும்!” உத்தரவிட்டார் இருங்கோ.

வேந்தனது கட்டளைப்படி சத்தமே எழுப்பாமல் இருளில் ஊர்ந்தபடி மதிலை நோக்கி முன்னேறினார்கள் உறைந்தை வீரர்கள். தோளில் கயிறு, மதில் காவலர்களைத் தாக்குவதற்கு வேண்டிய குறுவாட்கள், வில், அம்பு என அனைத்தையும் எடுத்துக் கொண்டு மண்ணில் ஊர்ந்து கொண்டிருந்தார்கள்.

https://telegram.me/aedahamlibra

# 44.

# அரிபுதைத் தாக்குதல்

உப தலைவர் காளன், டாள் தொபியாஸ், திருக்கண்ணன், பரதவன் குமரன் ஆகியோர் மதில் மேல் நின்ற படிகாவல் காத்துக் கொண்டிருந்தார்கள். மதிலின் மேல் நின்று கொண்டு பார்ப்பதற்கு இருங்கோவின் பாசறையில் சிணுங்கி சிணுங்கி எரிந்து கொண்டிருந்த தீப்பந்தங்கள் மட்டுமே கண்களுக்குத் தெரிந்தன. மதில் மேல் உறைந்திருக்கும் வீரர்களைத் தாக்கி மதில் கதவைத் திறந்து விட இருளின் துணையுடன் ஊர்ந்து வந்து கொண்டிருக்கும் இருங்கோவின் வீரர்கள் அவர்களின் கண்களுக்குப் புலப்பட

வில்லை. அவர்கள் தொடர்ந்து ஆலோச னையிலேயே காணப்பட்டார்கள். மதில் மேல் எரிந்து கொண்டிருந்த தீப்பந்த ஒளியினால் அகழியைத் தாண்டி அவர் களால் எதையும் காண இயலவில்லை. தேய்ப்பிறைக் காலமாகையால் பிறை நிலவும் கீழ் வானத்திலேயே காணப்பட் டது. ஆதலால், ஊர்ந்து வந்து கொண் டிருக்கும் வீரர்களுக்கு அன்றைய இரவு பெரும் சாதகமாக அமைந்திருந்தது.

சோழ இளவல் கரிகாலர், வேளக் காரப் படைத்தலைவர் இளந்திரையன் மற்றும் வானவல்லி ஆகியோர் காவலை மேற்பார்வையிடுவதற்கு வந்திருந்தார் கள். அவர்களைக் கண்டு வணங்கினர் உபதலைவர்கள் மூவரும்.

வேளக்காரப் படைத்தலைவன் இளந்திரையன், "இரண்டு நாட்களாகப் பொறுமை காத்தவர்கள் இன்று பொழுது மறையும் தருணத்தில் தாக்கத் தொடங் கியிருக்கிறார்கள். இனி எப்போது வேண் டுமானாலும் அவர்கள் மதில் கதவை உடைத்து பட்டினத்திற்குள் நுழைய முயற்சிக்கலாம். முப்பொழுதும் நாம் தயா

ராக இருக்க வேண்டியது அவசியம் என் பதை மூவரும் கவனத்தில் கொள்ளுங் கள்!” என எச்சரித்தான்.

“தங்கள் உத்தரவு!” எனப் பணிந்த னர் மூவரும்.

“திருக்கண்ணா, ஏற்பாடுகள் அனைத்தும் தயாராக இருக்கிறது தானே?”

“அனைத்தும் தயாராக இருக்கிறது தலைவரே! கட்டளை எழுந்த அடுத் தக் கணத்தில் தங்கள் உத்தரவுப்படி அனைத்தும் நிறைவேற்றப்படும்.”

“நல்லது! செய்திருக்கும் ஏற்பாடுக ளில் எந்தத் தவறும் நேரக் கூடாது!”

“பலமுறை சோதனை செய்துவிட் டோம் தலைவரே! அனைத்தும் தயார்.”

“நாம் எந்த ஆயுதத்தை உபயோகப் படுத்த வேண்டும் என்பதை அவர்களே தீர்மானிக்கட்டும். ஆனால், ஒன்றை மட்

டும் அனைவரும் நினைவில் கொள் ளுங்கள். இன்னும் மூன்று கிழமைகளில் இவர்கள் இங்கிருந்து விரட்டியடிக்கப் பட வேண்டும்!”

“மூன்று கிழமைகளிலா?” வியப்பு டன் வினவினான் டாள்தொபியாஸ்.”

“ஆமாம் டாள்தொபியாஸ்” குறுக் கிட்டுப் பதிலளித்தார் கரிகாலர்.

“இவர்களின் படை பலம் ஐம்ப தாயிரத்தைத் தொடும். யானை, புரவி காலாட்படை மற்றும் வில் வீரர்களைச் சேர்த்து! நம்மிடமும் அதே அளவு படை பலம் தான். நமது மொத்த சக்தியையும் வெளிப்படுத்தி இவர்களை இங்கிருந்து விரட்டி விடலாம்! ஆனால், இவர்களுக் குத் துணையாக வரும் பாண்டிய மற்றும் சேர நாட்டுப் படைகளை நாம் எப்படி எதிர்கொள்வது? அதிகச் சேதமில்லாமல் இவர்களை இங்கிருந்து விரட்ட வேண்டு மானால் அதற்குப் போதிய காலம் நமக்கு வேண்டும் அல்லவா?”

https://telegram.me/aedahamlibra

அவர்களின் உரையாடலை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த வானவல்லி, "நமக்குக் காலம் அதிகம் இல்லை டாள்தொபியாஸ். இன்னும் ஒரு கிழமையில் சோழ நாட்டிலும் மழை பெய்யத் தொடங்கிவிடும். இருங்கோ முற்றுகையைத் தொடங்கிவிட்டிருப்பது பாண்டிய மற்றும் சேர நாட்டிற்குத் தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கும். பாண்டிய மன்னர் தென்னவர் இனியும் மழையைக் காரணமாகக் காட்டி பறம்பு நாட்டிலேயே தங்கியிருக்க மாட்டார். அவரும் புறப்பட்டிருப்பார். அகப்பா கோட்டையைக் கைவிட்டுவிட்டு வில்லவர் இந்நேரம் வெளியேறியிருப்பார். சேரப் படையும் புறப்பட்டிருக்கும். கரிகாலன் தெரிவித்த தகவலின்படி கொற்கையிலிருந்து போர்க் கலங்கள் இந்நேரம் புறப்பட்டிருக்கலாம் அல்லது வழியில் வந்து கொண்டிருக்கலாம். நம்மால் ஒரே நேரத்தில் இருங்கோவின் படை மற்றும் கடற் படையைத் தான் எதிர்த்துத் தாக்க இயலும். பாண்டிய மற்

றும் சேர நாட்டுப் படை வருவதற்குள் இருங்கோவின் படைகளை நாம் சித றடித்துக் கடும் சேதத்தை உருவாக்க வேண்டும். அதே சமயம் நமது படை யில் இழப்பு அறவே இருக்கக்கூடாது. அனைத்தையும் கவனத்தில் கொண்டு விரைந்து செயலாற்ற வேண்டும்!" எனத் தெரிவித்தாள்.

"கட்டளையிடுங்கள் இளவரசே! நாளையே நமது புரவிப் படையைக் கொண்டு ஒரே மூச்சில் தாக்கி இருங் கோவின் படையைச் சிதறடித்து விடுகி றேன்!"

"டாள்தொபியாஸ் இப்போது தானே எனது தமக்கை தெரிவித்தார். நமக்கு அதிகச் சேதமில்லாமல் இருங் கோவின் படையை விரட்ட வேண்டும் என்று!"

"அது எப்படி இளவரசே சாத்தியம்? அவர்களாகக் கோட்டையைத் தாக்க இன்றைப் போன்று நெருங்கினால் அழித்

துவிடலாம்! ஆனால், அவர்கள் இரண்டு நாட்களாகப் படையை வெகு தொலை வில் அல்லவா நிறுத்தி வைத்திருக்கிறார் கள்."

"கவலை வேண்டாம் டாள்தொபி யாஸ். இருங்கோ யாருக்காகவோ காத் திருக்கிறான். அவர்கள் வந்ததும் தனது தாக்குதலை தீவிரப்படுத்தி விடுவான்! இன்றைப் போன்று அதுவரை நாம் வெறு மனே அவர்களின் தாக்குதலுக்கு எதிர் தாக்குதல் மட்டும் தொடுத்தால் போதும். இறங்கிச் சென்று தாக்க வேண்டாம்!"

"யாருக்காக இளவரசே காத்திருக் கிறான்?"

வேளக்காரப் படைத் தலைவன் இளந்திரையன்"இப்போதிருக்கும் நிலை யில் பாண்டிய மற்றும் சேர நாட்டுப் படை உதவிக்கு வர இயலாது என்பதை அவ னும் அறிவான். அவனுக்குக் கிடைக்கக் கூடிய ஒரே வாய்ப்புக் கடற் மார்க்கம் தான்!" என்றான்.

"மரக்கலங்களின் வருகைக்காக அவர்கள் காத்திருக்கிறார்கள் என்று கருதுகிறீர்களா தலைவரே?" என வினவினான் பரதவன் குமரன்.

"ஆமாம்... காவேரி ஆற்றின் தெற்கே சில ஆயிரம் வீரர்கள் நிலை கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வரப் போகும் கடற் படையின் ஊடுருவலுக்கு உதவுவதற்காகவே அங்கு நிறுத்தப்பட்டிருக்கிறார்கள்."

"அப்படியெனில், ஒரே நேரத்தில் வடக்கிலும், தெற்கிலும் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருக்கிறார்கள்! அப்படித்தானே?"

"ஆமாம் திருக்கண்ணா..." பதிலளித்தாள் வானவல்லி.

"படைகளை வேந்தன் வழிநடத்தத் தொடங்கியிருக்கிறான்" எனத் தெரிவித்தார் கரிகாலர்.

"வேந்தனா?" வியப்புடன் வினவி னாள் வானவல்லி.

"ஆமாம் வானவல்லி. வேந்தன் தான்! படையை இவ்வளவு கச்சிதமாகப் பிரித்துத் தகுந்த முறையில் தாக்குதல் திட்டத்தை வழிநடத்த வேந்தனை விட் டால் அங்கு யார் இருக்கிறார்கள்?" எனத் தெரிவித்தான் இளந்திரையன்.

"அண்ணா, வேந்தன் வழி நடத்துகி றான் என்றால் நாம் சற்று எச்சரிக்கையு டன் தான் இருக்க வேண்டும்!"

"ஆமாம் வானவல்லி" என அவளி டம் தெரிவித்த இளந்திரையன் பரதவன் குமரனிடம், "குமரா, நமது மரக்கலங்கள் அனைத்தும் தயார் நிலையில் தானே இருக்கிறது?" என வினவினான்.

"அனைத்தும் தயார் நிலையில் இருக்கிறது. எப்போது வேண்டுமானா லும் புறப்படுவதற்குச் சித்தமாக இருக்கி றோம்!"

“நல்லது. இனி எப்போது வேண்டுமானாலும் நீ கடலில் இறங்க வேண்டிய சூழல் வரலாம். தயாராக இரு!”

“தங்களது உத்தரவு!”

“மாமா, வெண்ணிக்குச் சென்றீர்களே! நம் படைத்தலைவர் செங்குவீரர் எதற்காக் வெண்ணியைத் தேர்ந்தெடுத்தார் என்ற காரணம் ஏதாவது கிடைத்ததா?”

“கிடைத்துவிட்டது வளவா... குறைந்த படையைக் கொண்டு பெரும் படையை எதிர்க்கச் சிறந்த இடம் வெண்ணி! விறல்வேலின் முழுமையான போர் அறிவை அவன் தீட்டிய வரை படம் மற்றும் வெண்ணிக் களத்தை நேரில் கண்டபோதுதான் நானே புரிந்து கொண்டேன். ஆனால், அதில் சில சிக்கல்கள் இருக்கின்றன.”

“என்ன மாமா?”

"முதலில் நாம் சேர மற்றும் பாண்டிய படை வருவதற்குள் இருங்கோவின் படையை விரட்டியடிக்க வேண்டும்! அதே நேரம் புகாரை நோக்கி இருவேறு திசைகளில் வந்து கொண்டிருக்கும் சேர மற்றும் பாண்டிய படையை நாம் வெண்ணிக்கு இழுக்க வேண்டும்!"

"மூன்று படைகளை ஒரே நேரத்தில் வெண்ணிக்கு இழுப்பது சிக்கல் தான்" என முணுமுணுத்தாள் வானவல்லி.

"மூன்று படை அல்ல வானவல்லி. இரண்டுதான்! நம்மை முற்றுகையிட்டிருக்கும் இருங்கோவின் ஐம்பதாயிரம் வீரர்கள் கொண்ட படை முழுவதுமாகத் திரும்பிச் செல்லாது. அனைவரும் புகாரிலேயே கொல்லப்படுவார்கள்!"

"இந்தத் தூண்களில் நிறுத்தியிருக்கும் சில ஆயுதத்தைக் கொண்டு அவர்களை மதிலை நெருங்க விடாமல் செய்யலாம்! ஆனால், அவர்களை மொத்தமாக

அழிக்க முடியுமா அண்ணா?" சந்தேகத் துடன் வினவினாள் வானவல்லி.

"வானவல்லி, விறல்வேல் செய்து விட்டுச் சென்றிருக்கும் தாக்குதல் முறை களில் சிலவற்றை மட்டுமே நீ தெரிந்து வைத்திருக்கிறாய். இன்னும் சில நாட் கள் பொறுத்துப் பார். அவன் புகாரைக் காக்க செய்துவிட்டுச் சென்றிருக்கும் கொலைக் கருவிகளின் வல்லமையை நீ அறிந்துகொள்வாய்!" எனக் கூறிக் கொண்டிருந்த போதே மதிலின் வெளிப் புறமாக அகழிக்கு அருகில் பலர் அலறும் மரண ஓலம் இவர்களை எட்டியது.

சத்தம் எழுந்ததுமே, "டாள்தொபி யாஸ், எதிரிகள் இரவைப் பயன்படுத் தித் தாக்குதல் நடத்த முயற்சிக்கிறார்கள். விரைவில் என்ன என்று கவனி" கட்ட ளையிட்டாள் வானவால்லி.

அப்போது கரிகாலர், "அக்கா, பத றாதீர்கள்! இரவைப் பயன்படுத்தி அவர் கள் வாயிலைத் திறந்து உள்ளே

புகுந்துவிடலாம் என்று நூற்றுக்கணக்கா னோரை அமைதியாக அனுப்பி வைத் திருப்பார்கள்! அவர்களைப் பற்றிக் கவ லைப்பட வேண்டாம்! நீங்கள் நிம்மதியா கச் சென்று உறங்குங்கள்!" எனக் கட்ட ளையிட்டார்.

"கரிகாலா, நீ..." என எதையோ கூற வாயெடுத்தாள் வானவல்லி. ஆனால், அதற்குள் இளந்திரையன், "வானவல்லி, கரிகாலன் தான் கூறுகிறான் அல் லவா... அவர்களின் ஊடுருவலை எண் ணிக் கவலை கொள்ளத் தேவை யில்லை. நீ நிம்மதியாச் சென்று உறங்கு. அவர்கள் அடையவிருக்கும் கதியை நீ காலையில் தெரிந்துகொள்வாய்! இருள் நேரத்தில் எதையும் உன்னால் காண இயலாது!" எனக் கூறிக் கொண்டிருந் தபோதே இருங்கோவின் வீரர்கள் ஒவ் வொருவராக எழுப்பும் மரண ஓலம் அவ் விடத்தை ஆக்கிரமிக்கத் தொடங்கியது.

இருவரின் கட்டளையை அடுத்து வானவல்லி எதிர்பேச்சுப் பேசாமல் அங்கிருந்து புறப்பட்டாள்.

கோட்டை மதில்மீது நிற்பவர்களைக் கொன்று நுழைவாயிலைத் திறந்து விடச் சென்ற வீரர்கள் திடீரென்று எழுப்பும் மரண ஓலத்தைக் கேட்டு இருங்கோ, வேந்தன், யுவராஜன் மற்றும் வைதீகர் என அனைவரும் பதறினார்கள். அவர்கள் யாருக்கும் எந்தக் காரணமும் புலப்படவில்லை. புகார்க் கோட்டை மதில் மீதும் வீரர்கள் நின்று தாக்குவதற்கான சிறு அறிகுறிகள் கூடப் புலப்படவில்லை. மதில்மீது தீப்பந்தங்கள் தொடர்ந்து எரிந்து கொண்டிருந்தன. ஆனால், மரண ஓலங்கள் மட்டும் தொடர்ந்து எழுந்து கொண்டே இருந்தன. காரணம் தெரியாமல் அதிர்ச்சியுடன் நின்று கொண்டிருந்தனர் அனைவரும்.

“வேந்தா, என்ன இது? நம் வீரர்கள் எதற்காக அலறுகிறார்கள்? மதிலில்

இருப்பவர்கள் தாக்குதல் தொடுத்தால் பதில் தாக்குதல் தொடுக்க வேண்டியது தானே! அவர்களின் மரண ஓலத்திற் கான காரணம் என்ன?” என வினவினார் இருங்கோ.

“தெரியவில்லை அரசே! மதில் மேல் யாரும் நடமாட வில்லை. நம் வீரர் கள் பதுங்கிச் சென்றதை அவர்களால் நிச்சயம் அறிந்திருக்க இயலாது!”

“அப்புறம் எதற்கு மரண ஓலத்தை எழுப்புகிறார்கள்?”

“நானும் அதை எண்ணித்தான் அதிர்ச்சியில் இருக்கிறேன்!”

“உதவிக்கு ஆள் அனுப்புவோமா?”

“வேண்டாம் அரசே!”

“வேண்டாமா?”

“ஆம்!”

“எதற்கு வேந்தா வேண்டாம் என்கி றாய்?”

"அவர்கள் எதற்காக மரண ஓலம் எழுப்புகிறார்கள் என்ற காரணம் தெரியாமல் நம் வீரர்களை உதவிக்கு அனுப்புவது சரியல்ல. முன்னேறிச் சென்றவர்களில் எவரேனும் உயிரோடு இருந்தால் நிச்சயம் திரும்பி வந்திருப்பார்கள். ஆனால்..."

"இருளில் சென்றவர்கள் அனைவரும் மடிந்துவிட்டார்கள் என்று கூறுகிறாயா நீ?"

"தொடர்ந்து எழுந்து கொண்டிருக்கும் மரண ஓலத்தைக் கேட்கையில் எனக்கு அப்படித்தான் நினைக்கத் தோன்றுகிறது அரசே!"

வேந்தனது பதிலைக் கேட்டதும் அதற்குமேல் இருங்கோ எதுவும் கேட்கவில்லை."காலையில் சந்திக்கலாம் வேந்தா! தயாராய் இரு!" எனக் கூறிவிட்டு தனது கூடாரத்திற்குள் சென்றுவிட்டார். தொடர்ந்து எழுந்து கொண்டி

https://telegram.me/aedahamlibra

ருந்த மரண ஓலம் அவரது தூக்கத்தைக் கெடுத்துக் கொண்டிருந்தன.

'சென்றவர்களில் ஒருவர் கூடத் திரும்பவில்லையே. அவர்களுக்கு என்ன ஆகியிருக்கும்?' எனும் பெரும் சிந்தனையில் சிக்கித் தவித்தான் வேந்தன். 'பொழுது விடிந்த பிறகு தான் அனைத்தையும் பார்த்துத் தெரிந்துகொள்ள இயலும். அதுவரை பொறுமை காக்க வேண்டியதுதான்!' எனும் சிந்தனையில் உபதளபதிகள் அனைவரையும் அழைத்து அடுத்த நாள் தாக்குதலைப் பற்றிய கட்டளைகளை ஒவ்வொருவராக அளித்துக் கொண்டிருந்தான்.

தனது மாளிகைப் பஞ்சணையில் விழுந்த வானவல்லிக்கும் இருங்கோவின் வீரர்கள் எழுப்பிய மரண ஓலத்தைக் கேட்ட பிறகு 'அவர்கள் எப்படி அத்தனை பேரும் ஒரே நேரத்தில் மரண ஓலத்தை எழுப்புவார்கள். அதற்குக் காரணம் என்னவாக இருக்கும்? அதிலும்

இருளில் இருங்கோவின் வீரர்கள் வாயிலைக் கைப்பற்ற முயன்றதை அறிந்தும் அதைப்பற்றிக் கவலை கொள்ளாமல் கரிகாலனும், வேளக்காரப் படைத் தலைவரும் நாளை காலையில் பார்த்துக் கொள்ளலாம் எனக் கூறியிருக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் என்னவாக இருக்கும்?' எனும் சிந்தனையில் புரண்டுப் புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள்.

வேந்தனது கட்டளையை ஏற்று நூற்றுக்கணக்கான வீரர்கள் தரையோடு தரையாகப் படுத்துக் கொண்டு மதில் மீது காவல் புரிபவர்களுக்கு எந்தவித சந்தேகத்தையும் ஏற்படுத்தாத வண்ணம் சென்று கொண்டிருந்தார்கள். மதிலுக்கு வெகு அருகில் சேர்ந்திருந்தார்கள். மதிலுக்கு முன்னாள் பெரும் அகழி இருப்பதை அறிந்த அவர்களின் உபதலைவன், “அகழி இருக்கிறது. கவனம்!” என எச்சரிக்கை செய்தான்.

https://telegram.me/aedahamlibra

அவனது எச்சரிக்கை எழுந்த அடுத்தகணம் வீரன் ஒருவன் இரும்பில் கயிற்றைக் கட்டி அகழிக்கு அடுத்தக் கரையில் உயர்த்தப்பட்டிருந்த மரப்பாலத்தை நோக்கி இரண்டடி பின்னால் வந்து முன்னே ஓடி தூக்கி வீசி எறிந்தான். அதுவும் கச்சிதமாகப் பாலத்தில் மாட்டியிருந்தது. அப்போது அவனது காலில் எதுவோ அகப்பட, “பொறி வைத்திருக்கிறார்கள். கவனம்!” எனக் கூற வாயைத் திறந்தான். ஆனால், அதற்குள் அவனது உடல் இரண்டாகக் கிழிந்து பொத்தென்று கீழே விழுந்தன. இருளில் யாருக்கும் எதுவும் புரியவில்லை.

அவனது உடலைக் கிழித்த சேவல் பொறி இயங்கிய அடுத்தக் கணம் பொறிகள் ஒவ்வொன்றாக இயங்கத் தொடங்கின. ஆனால், இயங்கிய பொறிகளைத் தரையோடு தரையாகப் படுத்துக் கொண்டிருந்த வீரர்களால் இருளில் பார்க்க இயலவில்லை.

அகழிக் கரையின் இரண்டு புறத்தி லும் வைக்கப்பட்டிருந்த சேவல் பொறி, ஆண்டலையடுப்பு, பன்றிப் பொறி ஆகி யவை கண நேரத்தில் இயங்கத் தொடங் கின. ஒருவன் உடல் கிழிந்து விழுந்ததும் சிலர் அச்சப்பட்டுப் பின்வாங்கத் தொடங் கினர். ஆனால், அவர்கள் தப்பிப்பதற் கும் வழியில்லாமல் எரிசிரல் பொறி பின் வாங்கி ஓடியவர்களின் தலையைத் துண் டாக்கிப் போட்டன.

எரிசிரல் என்பது ஓர் கொலைக் கருவி. சிறு விசையினால் இயக்கப்படு வது. ஒரு முறை அதன் விசையை இயக் கிவிட்டால் அதிலிருந்து பட்டை வாட்கள் சரமாரியாக வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும். அதன் தாக்குதல் தொலை வில் நிற்கும் எவராலும் தப்பிக்க இயலாது. அது எறியும் வாளில் சிக்கினால் உடல் துண்டாகிவிடும்.

எரிசிரல் இயங்கி சிலரது தலை உருண்டுவிட்டதைக் கவனித்த உபத

லைவன்"அனைவரும் படுத்துக்கொள் ளுங்கள். பொறி வைத்திருக்கிறார்கள்" எனக் கூறி அனைவரையும் எச்சரிக்கை செய்வதற்குள் பயந்துப் பின்வாங்கிய அனைவரின் உடலும் கிழிந்து இறந்து விட்டிருந்தார்கள். இறந்தவர்கள் எழுப் பிய மரண ஓலம் மற்றவர்களை அடுத்த அடி எடுத்து வைக்கவே அச்சப்படுத்தியி ருந்தது.

அனைத்து பொறிகளின் செயல்பா டும் அடங்கியதும், "ம்ம்ம்... முன்னேறு வோம்" எனக் கூறிய உபதலைவன்தான் முதன் முதலில் கயிறைப் பிடித்து அகழி யைக் கடந்து பாலத்திற்குத் தாவினான். அவன் சென்ற பிறகு கயிறு திரும்பி வந் தது.

அகழியின் இக்கரையில் இருந்த வன், "உபதலைவரே..." என மெல்ல அழைத்தான்.

எதிர்புறத்திலிருந்து எந்தச் சத்த மும் எழவில்லை.

https://telegram.me/aedahamlibra

மீண்டும் இக்கரையிலிருந்து, "உப தலைவரே, நாங்கள் அங்கு வரட்டுமா... பதில் கூறுங்கள்!" எனக் கேட்டனர் சிலர்.

அக்கறைக்குத் தாவிய உபதலைவன் பதில் பேசவே இல்லை. மாறாக 'தொப்' என்ற சத்தம் மட்டுமே எழுந்தது. அந்த 'தொப்' என்ற சத்தம் அவர்களுக்குள் இருந்த தைரியத்தை விரட்டி விட்டிருந்தது. பிறகு நீரில் ஏதோ துளித் துளியாய் சிந்திக் கொண்டிருந்த சத்தம் மட்டுமே எழுந்து கொண்டிருந்தது.

அனைவரும் தயங்கினார்கள். பிறகு, வீரன் ஒருவன், "நான் செல்கிறேன்" எனக் கூறிக் கொண்டு கயிற்றின் வழியே தாவினான். அவன் தாவிய அடுத்தக் கணம் அங்கிருந்த பன்றிப் பொறி அவனது உடலைக் கிழித்து விட்டிருந்தது. உடல் தலை என அனைத்தும் துண்டுத் துண்டாக அகழி நீரில் விழுந்தன. மனித உடல் விழத் தொடங்கியதும் முத

லைகள் அதைக் கடித்துக் குதறித் தின்னத் தொடங்கின.

வீரர்கள் இவ்வழியே கடக்க முயல வேண்டாம் என நினைத்துக் கொண்டு வேறு மார்க்கத்தைத் தேடி வலப்புறமாக நகர்ந்தார்கள். அப்போது அவர்கள் மண்ணில் புதைக்கப்பட்டிருந்த சீப்புப் பொறியை மிதித்து அதன் விசையை இயக்கி விட்டிருந்தார்கள். பெரும் மரத்தில் செய்யப்பட்டிருந்த அந்தப் பொறியில் நீண்ட முட்கள் சீப்பினைப் போன்றே காணப்படும். அதன் விசையை இயக்கினால் அது பலரின் உடலைக் குத்தித் தூக்கிவிடும். விடுபட்ட சீப்புப் பொறியினில் பத்திருபது வீரர்களின் உடல்கள் சிக்கி அவர்கள் அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களின் மார்பு மற்றும் வயிற்றினில் சீப்புப் பொறியின் நீண்ட முட்கள் குத்தியிருந்தன.

அருகில் கிடந்த மரங்களை அகழியில் தூக்கி போட்டுக் கடக்கலாம் என

எண்ணி வீரர்கள் பெரும் மரங்களைத் தூக்கி அகழியில் போட்டார்கள். அகழியில் நீர் நிரம்பி இருந்தால் மரம் மிதக்கும் முதலைகளிடம் சிக்காமல் கடந்துவிடலாம். ஆனால், அகழியில் நீரின் அளவு குறைவாகவே காணப்பட்டதால் அவர்களால் பெரும் மரங்களைக் கொண்டு கடக்க இயலவில்லை. சரி, பின்வாங்கலாம் என்று அனைவரும் எழுந்து நின்றார்கள். எழுந்தவர்களின் மரண ஓலம் மட்டுமே எழுந்தது.

சீப்புப் பொறியை இவர்கள் இயக்கியிருந்ததால் அதன் மூலம் இயக்கப்பட்ட பறக்கும் பொறிகளான ஆண்டலையடுப்பு மற்றும் சேவல் பொறிகள் எழுந்தவர்களின் உடலைக் கிழித்துப் போட்டன.

எஞ்சியிருந்த வீரர்கள் செய்வதறியாது மண்ணோடு மண்ணாகப் படுத்தபடியே அடுத்த என்ன செய்யலாம் எனச் சிந்தித்துக் கொண்டிருந்தனர். அடுத்து அவர்களின் மீது அம்புகளையும், வாட்க

ளையும் சரமாரியாக எறிந்தன எரிசிரல். வந்தவர்களில் ஒருவர் கூடத் தப்பிக்க வழி கிடைத்திருக்கவில்லை. அனைவ ரும் மரண ஓலத்தை வெளிப்படுத்திக் கதறிக் கொண்டிருந்தார்கள்.

பொழுது விடிந்ததும் வாயிலை நோக்கினான் வேந்தன். அங்கு நேற்றி ரவு சென்ற வீரர்கள் அனைவரின் உட லும் தனித்தனியாக வெட்டப்பட்டு ஆங் காங்கே தொங்கிக் கொண்டு இருந்தன. அவர்களைத் தாக்கிய பொறிகளைப் பற் றிய பெயர் கூட அவனுக்குத் தெரிந் திருக்கவில்லை. குழப்பத்துடன் வைதீ கரை நோக்கிப் போனான். அவர் பார்த் ததுமே அனைத்தையும் கண்டறிந்துவிட் டார். அவை அனைத்தும் பொறிகள், அந் தப் பொறிகளின் விசை அனைத்தும் இர வில் சென்ற வீரர்களாலே தவறுதலாக மிதிக்கப்பட்டு இயக்கப்பட்டிருக்கின்றன என்று உடனே அறிந்து கொண்டார். அதைப்பற்றி வேந்தனுக்கு விளக்கினார்.

அவர் விளக்கியதுமே, "காளன் இப்படிப்பட்ட ஏற்பாடுகளைத் தானே உறைந்தைக் கோட்டை மதிலைச் சுற்றிச் செய்து வைத்திருக்கிறான்?" என வினவி னான்.

"ஆமாம் வேந்தா.... ஆனால், அதன் செயல்பாடு எப்படி இருக்கும் என்று இப் போதுதான் தெரிந்து கொண்டேன்!"

"வைதீகரே, சென்றவர்களில் ஒரு வர் கூடத் திரும்பவில்லை!"

"ஆம் வேந்தா. . நானும் அதைக் கவனித்தேன்!" எனக் கூறிக் கொண்டி ருந்த போது அவர்களின் கூடாரத்திற் குள் நுழைந்த இருங்கோ, "வேந்தா, இனி தாமதிக்க வேண்டாம். முழுத் தாக்குத லைத் தொடங்கிவிடுவோம்... காலாட்ப டையையும், யானைப் படையையும் ஒன் றாக அனுப்பி நுழைவாயிலைத் தகர்த் தெறிவோம். இவற்றிற்குக் காவலாகக் கல்லுமிழ் கவன் மற்றும் இடங்கணிப் பொறியை இயக்கி மதிலின் மேல் இருப்

பவர்களை விரட்டியடிப்போம். நுழைவாயில் உடைக்கப்பட்டதும் புரவி வீரர்களைக் கொண்டு உள்ளே புகுந்து தாக்குவோம்” என ஆவேசமாகத் தெரிவித்தார்.

“அரசே, அவசரம் வேண்டாம். அவர்கள் செய்திருக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகளால் நம்மால் மதிலைக் கூட நெருங்க இயலவில்லை. அவர்களின் படை பலம் எவ்வளவு என்று நமக்கு எதுவுமே தெரியாது. அப்படியிருக்க நாம் துணிந்து தாக்குதலில் இறங்குவது நல்லதல்ல!”

“எத்தனை காலம்தான் தாக்குதல் தொடுக்காமல் இப்படி விலகியே நிற்பது?”

“கடற்படை நமக்கு ஆதரவாக வரும்வரை!”

“அவர்கள் வந்த பிறகு?”

“கடற்படை வந்தால் அவர்கள் கடற்கரை மற்றும் காவிரி ஆற்றின் வழி

யாகப் புகாருக்குள் ஊடுருவுவது எளி தாகிவிடும். அல்லது அவர்களை எதிர்க் கப் புகாரின் படையின் ஒரு பகுதியினர் சென்றுவிடுவார்கள். ஒரே நேரத்தில் நாம் இரண்டு பகுதியிலிருந்து தாக்கினால் அவர்களை வெல்வது எளிதாகிவிடும்!"

"அவர்கள் எப்போது வேந்தா வரு வார்கள்? அதுவரை நாம் இப்படியே வேடிக்கை பார்த்துக் கொண்டுதான் இருக்க வேண்டுமா?"

"பாண்டிய மன்னர் என்னிடம் தெரி வித்த தகவலின்படி மரக்கலங்கள் இந் நேரம் புறப்பட்டிருக்கும் அல்லது வழியில் வந்து கொண்டிருக்கும்."

"வானிலை மாறிக் கொண்டே இருக்கிறது வேந்தா..."

"நானும் கவனித்துக் கொண்டு தான் அரசே இருக்கிறேன்! வானிலை மாறி கடலில் அலைகளின் எழுச்சி

அதிகமானால் நமக்குத்தான் அனுகூலம். கவலை வேண்டாம்!"

"என்ன வேந்தா கூறுகிறாய்?"

"அரசே, மேலை நாட்டில் பெய்யும் பெருமழையினால் இப்போது காவிரி நதியின் வேகம் அதிகமாக இருக்கிறது, அதி வேகமாகச் சங்கமிக்கும் காவேரியில் இப்போது நமது மரக் கலங்களைக் கடலிலிருந்து செலுத்துவது மிகவும் கடினம். ஆனால், அதே நேரம் அலைகளின் எழுச்சி அதிகமானால் அலைகள் காவேரிக்குள் பாய்ந்து செல்லும். நம்மால் காவேரி நதியின் வழியாக எளிதில் புகாருக்குள் ஊடுருவிவிட இயலும்!"

"இந்த யோசனையும் நன்றாகத்தான் இருக்கிறது வேந்தா... இன்னும் சில தினங்கள் நாம் பொறுத்திருப்போம்!"

"அரசே, இன்று காலையில் வந்த இன்னொரு நல்ல செய்தி ஒன்று உள்ளது!"

https://telegram.me/aedahamlibra

"என்ன வேந்தா?"

"நமக்கு ஆதரவாகப் படையைத் திரட்டி சிங்கள இளவரசர் பல்லாயிரக்க ணக்கான வீரர்களுடன் தயாராக நாகத் தீவில் நிலை கொண்டிருக்கிறார். நாம் தகவலைத் தெரிவித்தால் போதும்! புறப் பட்டு வந்துவிடுவார்."

"நல்ல செய்தி வேந்தா... ஆனால், அவரின் உதவிக்கு அவசியம் இருக்காது! நாமே சோழர்களை முறியடிக்கப் போகி றோம்!" எனக் கூறிவிட்டுக் கூடாரத்தை விட்டு வெளியே வந்தார் இருங்கோ வேள்.

ஆனால், அப்போது அவருக்குப் பேரதிர்ச்சி ஒன்று காத்துக் கொண்டி ருந்தது. புகாரின் கோட்டை மதில்கள் திறக்கப்பட்டிருந்தன. அகழிப் பாலங்கள் அனைத்தும் இறக்கப்பட்டிருந்தன. சோழ வீரர்கள் வெளியே வந்து இறந்து கிடந்த இருங்கோவின் வீரர்களை முறைப்படி அடக்கம் செய்யத் தூக்கிச் செல்லலா

னார்கள். அதைக் கண்ட இருங்கோ, "வேந்தா... எனக்கு அவமானமாக இருக்கிறது. எவ்வளவு திமிர் இருந்தால் நாம் இங்கு முற்றுகையில் இருக்க அவன் அங்கு வீரர்களை அடக்கம் செய்ய நுழைவாயிலைத் திறந்துவிட்டிருப்பான்!" என்று ஆத்திரமடைந்தார்.

"அரசே, அவசரப்பட்டுக் கட்டளையைப் பிறப்பித்துவிட வேண்டாம். இதிலும் அவர்களின் தந்திரம் ஏதேனும் இருக்கப் போகிறது. கடற்படை வரட்டும்! அதுவரை உங்களது கோபத்தைத் தேக்கி வையுங்கள். பிறகு அவர்களை மொத்தமாக அழித்துவிடலாம்!" எனப் பெரும் திட்டத்துடன் தெரிவித்தான் வேந்தன்.

கோட்டைக்குள் மலை நாட்டு வீரர்களின் வீர உடல்கள் எரிந்து கொண்டிருந்தன. இருங்கோவின் மனம் ஆத்திரத்தில் புகைந்து கொண்டிருந்தது.

https://telegram.me/aedahamlibra

# 45.

# சொழாந்தியம்

கொற்கையிலிருந்து கடற்படை வந்து சேர்வதற்குள் புகார் மதிலிலும், அகழியிலும் வைக்கப் பட்டிருந்த ஒவ்வொரு பொறிகளையும் தந்திரமாக நீக்கியிருந்தான் வேந்தன். தொலைவில் ஓடிய நீரோடையைத் திருப் பிவிட்டு அகழியையும் நிரப்பி விட்டிருந் தான். அது மட்டுமல்லாமல் சம்பாபதி வனத்திலிருந்து பெரும் மரங்களை யானைகளின் உதவியுடன் வேரோடு பிடுங்கி வந்து அகழியைக் கடப்பதற்கும், நுழைவாயிலைத் தகர்ப்பதற்கும் வேண் டிய அனைத்து பணிகளையும் செய்து

கடற்படையின் வரவுக்காகத் தயாரா கக் காத்துக் கொண்டிருந்தான். கடற் படை வந்து சேர்ந்ததும் மேற்கொள்ள வேண்டிய தாக்குதல் முறையை வகுத்து அனைத்து உபதளபதிகளுக்கும் தகுந்த கட்டளைகளைப் பிறப்பித்திருந்தான்.

புகார் மதிலையும், நுழைவாயிலை யும் தகர்த்து ஊடுருவதற்கு வேண்டிய அனைத்து ஏற்பாடுகளுடனும் தயாராக இருந்த வேளையில்தான் வேந்தன் எதிர் பார்த்த சரியான நேரத்திற்குப் பாண்டிய, சேர மற்றும் சிங்கள நாட்டின் கூட்டுக் கடற்படை வந்து சேர்ந்தது.

வந்து சேர்ந்த கலங்கள் அனைத் தும் புகாரிலிருந்து சற்றுத் தொலைவில் நடுக் கடலில் நங்கூரமிட்டுக் காணப்பட் டன. வந்த வேகத்தில் அவை புகாரைத் தாக்க முயற்சிக்கவில்லை. தரையில் பட் டினத்தை முற்றுகையிட்டிருக்கும் இருங் கோவின் கட்டளையை எதிர்பார்த்துக் கடலில் காத்துக் கொண்டிருந்தார்கள். பரதவன் குமரனும் டாள்தொபியாசும் குன்றுத்துறையிலிருந்து முற்றுகையிடுவ

https://telegram.me/aedahamlibra

தற்காக வந்திருக்கும் மரக்கலங்களைப் பார்த்துக் கொண்டே நின்றார்கள்.

புகாரை ஒரே மூச்சில் விழுங்கிவி டுவதைப் போன்று நின்று கொண்டிருந்த கலங்களைப் பார்த்த டாள்தொபியாஸ், "குமரா, நாம் எதிர்பார்த்ததை விடவும் கலங்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது!" எனத் தெரிவித்தான்.

பரதவன் குமரனும் அம்மரக்கலங் களைப் பார்த்தபடியே, "ஆம் டாள் தொபியாஸ். அவர்களின் எண்ணிக்கை மிக அதிகம். நம்மைவிடவும் சில நூறு கலங்களை அதிகமாகக் கொண்டுவரு வார்கள் என்று எதிர்பார்த்தேன் நான். ஆனால், ஆயிரத்திற்கும் மேற்பட்ட கலங் களை அல்லவா அவர்கள் கொண்டு வந் திருக்கிறார்கள்" எனப் பதிலளித்தான்.

"மூன்று பேரரசுகளின் மொத்த கடற்படையும் அல்லவா நம்மைத் தாக்க ஒன்று சேர்ந்திருக்கிறது."

https://telegram.me/aedahamlibra

பரதவன் குமரன் எந்தப் பதிலையும் தெரிவிக்காமல் சூழ்ந்திருந்த மரக்கலங் களையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந் தான்.

"குமரா..." எனச் சற்றுச் சத்தமாக அழைத்தான் டாள்தொபியாஸ்.

"சொல் நண்பா!"

"அவர்களின் மரக்கலங்களை நன்கு கவனித்தாயா?"

"அதைத்தான் பார்த்துக் கொண்டி ருக்கிறேன்!"

"பெரும்பாலான மரக்கலங்கள் நாகப் பாம்பினைப் போன்று நீண்டு காணப்படுகின்றன."

"சர்ப்பமுக மரக்கலங்கள். அலை கள் அற்ற நடுகடல் மற்றும் வேகமாகப் பாயும் ஆற்று நீரில் விரைவுத் தாக்குதல் நடத்துவதற்கு உகந்த கலங்கள் இவை!"

“அனைத்துமே பாய்களைக் கொண்டு இயங்குகின்றன.”

“மூன்று பாய்களைக் கொண்டிருக் கின்றன. காற்று எந்தத் திசையில் வீசி னாலும், கலத்தை நாம் விரும்பும் திசை யில் செலுத்த இயலும்!”

“வானிலையும் விரைந்து மாறிக் கொண்டிருக்கிறது.”

“இருங்கோவின் படை புகாரை முற் றுகையிட்ட கடந்த கிழமையுடன் ஒப் பிடுகையில் வானின் நிலை முற்றிலும் மாறிவிட்டது. காற்றுப் பலமாக நாலா புறத்திலும் சுழன்று சுழன்று புயலைப் போன்றே வீசிக் கொண்டிருக்கிறது. கட லிலும் அலைகளின் எழுச்சி அதிகமாகக் காணப்படுகிறது. கடலில் எழும் பெரும் அலைகளால் கடல்நீர் காவேரி ஆற்றுக் குள் உட்புகுவதைப் போன்று தோன்றி னாலும் சோழ நாட்டின் உட்புறங்களில் பெய்யும் பெருமழையினால் வெள்ளப் பெருக்கு அதிகமாக ஏற்பட்டு காவேரி

நதி பெரும் சீற்றத்துடன் கடலுடன் சங் கமித்துக் கொண்டிருக்கிறது" எனப் பர தவன் குமரன் கூறிக் கொண்டிருந்த போதே இடைமறித்த டாள்தொபியாஸ், "வேந்தன் காவேரி நதியின் தெற்குப் புறத்தில் கணிசமான அளவில் படை களை நிறுத்தி வைத்திருப்பதன் மூலம் கடற்படை காவேரி நதியின் மூலமாகவே உட்புக முயற்சிக்கப் போகிறார்கள். கடல் நீர் காவேரி நதிக்குள் உட்செல்கிறது என எண்ணி ஊடுருவ முயல்வார்கள். ஆனால்..." என மேற் கொண்டு கூறா மல் அப்படியே நிறுத்தினான் டாள்தொபி யாஸ்.

"ஆமாம் டாள்தொபியாஸ். காவேரி நதிக்குள் உட்புகும் அலைகளின் உத வியுடன் நுழைந்துவிடலாம் என எண் ணிக் கொண்டு வேகமாக வருவார் கள். ஆனால், வேகமாகச் சங்கமித்துக் கொண்டிருக்கும் காவேரி நதியின் நீர்ப் பிரவாகத்தில் அவர்களின் கலங்கள் நிச் சயம் சிக்கிக்கொள்ளும்!"

https://telegram.me/aedahamlibra

"........"

"நாகத்தினைப் போன்று நீண்டு காணப்படும் கலங்கள் விரைவுத் தாக் குதலுக்கு உகந்தவைதான். அவற்றின் வேகம் கற்பனைக்கும் அப்பாற்பட்டது. ஆனால், பேரலைகள் எழும்பிக் கொண் டிருக்கும் இந்தப் புகார் கடற்பரப்பில் அவைகளால் தாக்குப்பிடிக்க இயலாது. அலைகளில் உயர்ந்து தாழும் போது நீண்ட அவற்றின் வடிவமைப்பினால் அக் கலங்கள் சமநிலையை இழந்துவிடும். நீரில் மூழ்காமல் இருக்கவே பெரும் சிர மப்பட வேண்டியிருக்கும். பேரலையில் சமநிலையுடன் பயணிக்கவே பெரும் சிர மப்படப் போகும் இக்கலங்கள் காவேரி நதிக்குள் ஊடுருவலாம் என முயன்று குணக் கடலின் பேரலைக்கும், காவேரி நதியின் சீற்றத்திற்கும் இடையில் சிக்கிக் கொள்ளப் போகின்றன!" எனக் கூறிய பர தவன் குமரன் சிரிக்கவும் செய்தான்.

"குமரா... இருந்தாலும் அவற்றின் வேகத்தை நாம் ஒரு நாளும் சாதாரண மாக எடுத்துக்கொள்ளக் கூடாது!"

"சரியாகத் தெரிவித்திருக்கிறாய் டாள்தொபியாஸ்... அவற்றின் வேகம் அபாயகரமானது. ஒவ்வொரு கலத்திலும் முப்பதிற்கும் மேற்பட்ட வீரர்கள் காணப்ப டுகிறார்கள். நிலத்தில் காலாட்படை மற் றும் வில் வீரர்களைக் கொண்டு தாக் குதல் நடத்துவதைப் போன்றே கலங்க ளையும் அவர்கள் வில் வீரர்கள் மற் றும் காலாட்படை வீரர்களைக் கொண்டு நிரப்பியிருக்கிறார்கள் எனக் கருதுகி றேன் நான்."

"ஆமாம் குமரா... தொலைவிலி ருந்தே அவர்கள் நம்மைத் தாக்குவதற்கு ஏதுவாகத்தான் வில் வீரர்களை மரக்க லங்களில் ஏற்றி வந்திருக்கிறார்கள். வில் வீரர்களின் தாக்குதலிலிருந்து தப்பினா லும் காலாட்படை வீரர்களின் வாட்க

ளையும், ஈட்டிகளையும், வேல்களையும் நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும்."

"ஆம் நண்பா... அவர்களின் படை பலம் நாம் எதிர்பார்த்ததை விடவும் அதிகம் தான். ஆனால், நமது போர் வியூகம் நம்மை நிச்சயம் காக்கும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை எனக்கு இருக்கிறது."

"நம் படைத் தலைவர் வகுத்துவிட்டுச் சென்றிருக்கும் வியூகம் அல்லவா இது! எப்போது நீ மறைத்து வைத்திருக்கும் நமது சொழாந்தியத்தை வெளிப்படுத்த போகிறாய்?"

"நமது கலங்களை வெளிப்படுத்தும் காலமும் வந்துவிட்டது... இன்று மாலையே நமது கலங்களின் தீரத்தை குன்றுத் துறையிலிருந்து நீ காணத் தானே போகிறாய்! திட்டத்தின்படி தயாராக இரு!"

"குமரா எச்சரிக்கையுடன் இரு! உன்னைக் கடந்துவிட்டால் அவர்கள்

எளிதில் காவேரி நதியின் வழியாக ஊடு ருவிவிடுவார்கள். எந்தச் சூழ்நிலையிலும் போர் நமது திட்டப்படியேதான் நடைபெற வேண்டும். உன்னை விடவும் இரண்டு மடங்கு வலிமையுடன் இருக்கும் பெரும் படையுடன் நீ மோதப் போகிறாய் என் பதை நினைவில் கொள்! அதைவிட வும் முக்கியம் படையை வழிநடத்துபவன் வேந்தன் என்பதை நாம் ஒரு நாளும் மறந்துவிடக்கூடாது!”

“வேந்தனை நாம் ஒரே நேரத் தில் நிலத்திலும், நீரிலும் எதிர்கொள்ளப் போகிறோம். அவன் நிலத்தில் இருந்தா லும், நீரில் இருந்தாலும் இரு படைகளை யும் இயக்கப் போகிறவன் அவன்தான்! ஆதாலால் நாம் பெரும் எச்சரிக்கையு டன் இருக்கவேண்டும் என்பதை அறி வேன் டாள்தொபியாஸ். அதே நேரத்தில், சோழக் கடற்படையின் வீரத்தில் உனக் குச் சிறு சந்தேகமும் இருக்க வேண்டாம். என் தலை குணக் கடலில் உருண்ட பிறகு தான் அவர்களால் என்னை மீறி

முன்னேற முடியும். வாழ்நாளில் எந்த இன்பத்தையும் இதுவரை அனுபவித்த தில்லை நான். ஆதலால், என் தலை இப்போது உருளாது டாள்தொபியாஸ்! அதை நானும் விரும்பவில்லை!" எனத் தெரிவித்தான் சிரித்தபடியே.

"உன் தலையோ அல்லது என் தலையோ உருண்டால்தான் வெற்றி என்றால் அதை நாம் இழப்பதற்கும் தயங் கக் கூடாது குமரா! ஆனால், நம் எதிரிகள் நம்மைக் கடந்து ஒரு அடி கூட முன்னே றக் கூடாது!"

"புரிகிறது டாள்தொபியாஸ்!" எனக் கூறிய பரதவன் குமரன் கடற்கரையை நோக்கி வந்து கொண்டிருந்த மரக் கலத்தை டாள்தொபியாசிற்குச் சுட்டிக் காட்டினான்.

புகாரை நோக்கித் தயாராக நின்று கொண்டிருந்த மரக் கலங்களிலிருந்து ஒன்று மட்டும் கடற்கரைக்குச் சென்று கடற்கரையில் நின்று கொண்டிருந்த

உறைந்தை மன்னர் இருங்கோவேள் மற்றும் வேந்தன் இருவரையும் ஏற்றிக் கொண்டு மீண்டும் கடற்பரப்பிற்குள் சென்று கொண்டிருந்தது.

அதைத் தொலைவிலிருந்து பார்த்த பரதவன் குமரன், “டாள்தொபியாஸ், கடலாடுவதற்கு வேண்டிய காலம் நெருங்கிவிட்டது. கடலாடப் போகிறேன் நான். நீ தயாராக இரு!” எனக் கட்டளையிட்டவன் டாள்தொபியாசின் மறுமொழியை எதிர்பாராமல் அங்கிருந்து விரைந்து செல்லலானான்.

புகாரை நோக்கித் தாக்குவதற்குத் தயாராக அணிவகுத்து நின்று கொண்டிருந்த கலங்களைப் பார்த்துப் பிரமித்தபடியே மரக்கலத்தில் செல்லலானார்கள் இருங்கோவும் வேந்தனும்.

அவர்களை வரவேற்ற கலாபதி தனது அக்ரமந்திரமரக் கலத்திற்கு அழைத்துச் செல்லலானான்.

இருங்கோவிடம் மரக்கலத் தலைவன், "அரசே, சேர மற்றும் பாண்டிய மன்னர்கள் புகாரை அடைவதற்குள் நான் இந்தப் போரினை முடித்துவிட எண்ணுகிறேன். அதற்கு உங்களது உதவி தேவை! உங்களது கட்டளைப்படி நடக்கச் சித்தமாக இருக்கிறேன்" எனத் தெரிவித்தான்.

"கடற் படையின் வரவிற்காகவே நாங்களும் இத்தனை நாட்களாகக் காத்திருந்தோம். இனி இருமுனைத் தாக்குதலை நாம் இருவரும் தொடுக்கவேண்டியதுதான்!"

"நீங்கள்தான் புகாரின் கடற்பரப்பு மற்றும் தாக்குதல் வழிமுறைகளை நன்கு அறிந்துவைத்திருப்பீர்கள். தாக்குதல் திட்டம் என்ன என்று தெரிவியுங்கள். அதை நான் கச்சிதமாக நிறைவேற்றுகிறேன். பாண்டிய மன்னர் தென்னவர் உங்களுக்குப் பணிந்து படைகளை நகர்த்தச் சொல்லி ஆணை பிறப்பித்திருக்கிறார்!"

https://telegram.me/aedahamlibra

“நல்லது கடற்படைத் தலைவரே! நம் படைகளை வழி நடத்திக் கொண்டிருப்பது வேந்தன் தான்!” என அருகில் அமைதியாக நின்று கொண்டிருந்த வேந்தனை சுட்டிக் கட்டியவர் மரக்கலத் தலைவனிடம், “உனக்கு வேண்டிய கட்டளைகள் அனைத்தையும் இனி வேந்தன் வழங்குவான்!” எனத் தெரிவித்தார்.

மரக்கலத் தலைவன் வேந்தனை நோக்கினான். பிறகு, “படைத் தலைவருக்கு எனது பணிவான வணக்கம். உங்களைச் சந்தித்ததில் எனக்குப் பெரும் மகிழ்ச்சி. தங்களது தாக்குதல் வியூகம் என்ன என்று தெரிவித்தால் நான் அதற்கு ஏற்றது போன்று என் படைகளை வழிநடத்துவேன்!” என்றான்.

“உங்களைச் சந்தித்ததில் எனக்கும் பெரும் மகிழ்ச்சி மரக்கலத் தலைவரே” எனக் கூறியவன் இடையில் சுருட்டி வைத்திருந்த பட்டுத் துணி ஒன்றை அருகில் இருந்த பலகையில் விரித்து அதில்

இருந்த கோடுகளைச் சுட்டிக் காட்டி தனது தாக்குதல் திட்டத்தை விவரிக்க லானான்.

"மரக்கலத் தலைவரே, நமது கலங் கள் புகாருக்குள் ஊடுருவ இரண்டு மார்க்கங்கள் இருக்கின்றன. ஒன்று புகார் கடற்கரை மற்றொன்று காவேரி நதி. காவேரி நீர் பிடிப்புப் பகுதியில் மழை பொழிவதால் காவேரியின் பெரும் நீர்ப் பிரவாகத்தில் நமது கடற்படையைச் சோழர்களால் தடுத்து நிறுத்த இய லாது. அதே நேரம் உங்களுக்கு உதவ ஒரு படைப் பிரிவை காவேரி நதிக் குத் தெற்கே நிறுத்தி வைத்திருக்கிறேன். அதே நேரம் தகுந்த நேரத்தில் உங்களை எதிர்க்கும் சோழர் கலங்களைப் பின்புற மாகத் தாக்கவும் ஏற்பாடு செய்திருக்கி றேன். புகார் கடற்கரையை நமது கலங் கள் நெருங்கினாலே அவர்கள் எரியம்பு களையும் பெருங்கற்களையும் எரிந்து நம் கலங்களைச் சேதப்படுத்தி விடுவார்கள்.

https://telegram.me/aedahamlibra

ஆதலால் காவிரி நதிநீர் வழி தான் நமக்கு உகந்தது."

"தலைவரே, உங்களுக்கு அந்தக் கவலை வேண்டாம். சோழர்களின் தரைப்படை வலிமையைப் பற்றி நான் நன்கு அறிவேன். ஆதலால்தான் நான் அவர்களின் எரியம்புகளுக்கும் சிக்காத அளவிற்கு விரைந்து செல்லும் சர்ப் பமுகக் கலங்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு வந்திருக்கிறேன். எப்படி நிலத் தில் நீர் காலாட், வில் மற்றும் புரவிப் படையைப் பிரித்து அனுப்பிக் காரியத் தைச் சாதிப்பீர்களோ அப்படியே நானும் கலத்தில் வீரர்களைத் தாங்கி தாக்குதல் தொடுக்கப் போகிறேன். அனுமதி மட்டும் அளியுங்கள். பொழுது அந்தியில் சாய இன்னும் ஒரு சாமப் பொழுது மிச்சமி ருக்கிறது. அதற்குள் அவர்களின் கடற் படையை நீருக்குள் மூழ்கடித்துவிடுகி றேன்!"

“அவசரம் வேண்டாம்... நம்மிடம் இருக்கும் பெரும்படையினால் நமக்கு இறுமாப்பு என்பது சிறிதும் இருக்கக்கூடாது. அந்த இறுமாப்பு சில நேரங்களில் நம் எதிரிகளுக்குச் சாதகமாக மாறிவிடவும் வாய்ப்பிருக்கிறது. ஆதலால், மொத்தப் படையையும் கொண்டு ஒரே தாக்குதலைத் தொடுக்காமல் கடற்படையைச் சிறிது சிறிதாகப் பிரித்து அவர்களின் கடற்படையைச் சிதறடித்துவிடுங்கள்! அதே நேரத்தில் நானும் தரையில் அவர்களின் மதிலின் நுழைவாயிலைக் கைப்பற்றி விடுகிறேன். ஒரே நேரத்தில் இருவரும் புகாருக்குள் நுழைவோம்!”

“நிச்சயமாகத் தலைவரே! தரையில் நமது படையின் நகர்வுகள் எப்படி இருக்கிறது என்பதைப் பொறுத்தே நான் இங்குக் கடற்படையை நகர்த்தப் போகிறேன்.”

“நல்லது. ஒன்றை மட்டும் நினைவில் கொள்ளுங்கள். புகாரின் கடற்ப

டையை நீங்கள் முறியடித்துவிட்டு கடற்கரை வழியாகவோ அல்லது காவேரி நதியின் கரை வழியாகவோ தரையில் கால் பதித்தால் உங்கள் கதி அதோகதி தான். வடக்கு மதிலைத் தகர்த்து நான் புகாருக்குள் நுழைவதற்குள் சோழக் கடற்படையை முறியடித்திருந்தாலும் நீங்கள் புகாருக்குள் நுழைய வேண்டும் என நினைத்து கரைக்குக் கலங்களைச் செலுத்த வேண்டாம்!"

"தங்களது உத்தரவு! இன்னொரு செய்தி!"

"என்ன?"

"நமக்கு உதவியாக நாகத் தீவில் நிலை கொண்டிருந்த படையுடன் சிங்கள இளவரசர் புகாரை நோக்கிக் கிளம்பி விட்டதாகச் சற்று முன் செய்தி வந்திருக்கிறது"

"நல்லது... நல்லது... சோழ வீரர்களில் ஒருவன் கூட இந்தப் பெரும்

போரின் முடிவில் உயிரோடு இருக்கக் கூடாது!”

“தங்களது உத்தரவின்படியே அனைத்தும் நடக்கட்டும்!”

“சரி... நான் கட்டளைகளைத் தொடர்ந்து வழங்கி கொண்டே இருக்கிறேன்!” என வேந்தன் கூறிய பிறகு இருவரும் மரக்கலத் தலைவனின் அக்ரமந்திரக் கலத்திலிருந்து வெளியே வந்தார்கள். தொலைவில் பரதவன் குமரன் சில நூறு கலங்களில் மாபெரும் கடற்படையை எதிர்க்கத் தயாராகப் பிறை நிலவு வடிவில் அணிவகுத்து நின்று கொண்டிருந்தான்.

அவனது படையைக் கவனித்த இருங்கோ ஏணியின் வழியே சிறு கலத்தில் இறங்கிக் கொண்டு, “வேந்தா... அவர்களின் துணிச்சலைக் கண்டால் எனக்குப் பிரமிப்பாக இருக்கிறது. நமக்குத் துணையாக வந்திருக்கும் மரக்கலங்களின் எண்ணிக்கையில் பாதி வருமா அவர்களின் கலங்கள்? ஆனால், கட

லில் இறங்கிவிட்டார்கள். பாவம்! எத்தனை நேரங்கள் அவர்கள் தாக்குப் பிடிக்கப் போகிறார்களோ?" எனக் கூறியவர் உரக்க சிரித்தார்.

ஆனால் அவரது சிரிப்பு அப்போது வேந்தனுக்குப் பெரும் எரிச்சலையே தந்தது. தீரத்துடன் நின்று கொண்டிருந்த பரதவன் குமரன் தலைமையிலான சோழர் படை, அதை மூழ்கடிக்கத் தயாராக நின்று கொண்டிருக்கும் பெரும் கூட்டுக்கடற்படை, நேரத்திற்கு நேரம் அதிகமாகிக் கொண்டிருக்கும் அலைகளின் வேகம் ஆகியவற்றை வேந்தன் மாறி மாறி வெறிக்கப் பார்த்தபடியே சிறு கலத்தில் தனது கூடாரத்தை நோக்கிப் பெரும் திட்டத்துடன் சென்று கொண்டிருந்தான்.

அவன் கடற்கரையை அடைவதற்குள் கடற்படைத் தலைவன் தனது உபதலைவர்களை அழைத்துக் கட்டளைகளைப் பிறப்பித்துக் கொம்பினை ஊதினான். அடுத்தக் கணம் கடலில் பாய்ச்சப்

பட்டிருந்த நங்கூரத்தில் பாதிப் பிடுங்கப் பட்டிருந்தன. பரதவன் குமரனை நோக்கி அவன் அணிவகுத்து நிற்கும் அதே பிறை நிலவின் வடிவில் நின்று கொண்டிருந் தன.

**அடிக்குறிப்பு :**

1. சொழாந்தியம் - சொழாந்தி யம் என்பது சங்க காலத்தில் சோழர்கள் போருக்குப் பயன்படுத்திய மரக் கலங் கள். இது வணிகத்திற்கும் பயன்படுத் தப் பட்டது. இக்கலங்கள் கங்கையின் கழி முகத்திலிருந்து கிரீசின் க்ரைசு வரை சென்று ஆதிக்கம் செலுத்தியது என்று **'The Periplus of the Erithrean Sea'** எனும் நூல் தெரிவிக்கிறது.

சொழாந்தியக் கலங்கள் பெரிப்ளசு **'COLANDIA'** என்று குறிப்பிடப்பட்டிருக் கிறது.

**Source:** Among the market-towns of these countries, and the harbors

where the ships put in from Damirica and from the north, the most important are, in order as they lie, first Camara, then Poduca, then Sopatma; in which there are ships of the country coasting along the shore as far as Damirica; and other very large vessels made of single logs bound together, called sangara; but those which make the voyage to Chryse and to the Ganges are called colandia, and are very large. Paragraph 60: The Periplus of the Erythraean Sea.

2. அக்ரமந்திரம்- அரசர்கள் மற்றும் படைத் தலைவர்கள் பயணிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் உல்லாச மரக்கலம். கலத்தில் தனியறை ஒன்றும் அமைந்திருக்கும்.

https://telegram.me/aedahamlibra

# 46. குமரனின் கடற்போர்

பொழுது சாய ஒரு நாழிகைப் பொழுதே மிச்சமிருந்த சமயம். புகார் கடற்பரப்பில் காற்றின் வேகம் நேரத்திற்கு நேரம் அதிகமாகி ஒரே திசையில் வீசாமல் நாலா திசைகளிலிருந்தும் மாறி மாறி சுழன்றடித்துக் கொண்டிருந்தது. பேரலைகள் தோன்றி கடற்கரையை நோக்கி ஆவேசத்துடன் சீறியபடி வந்து கொண்டிருந்தன. பேரலைகள் தோன்றும்போது கடற்கரையைக் கடலலைகள் விழுங்குவதும், கடலலைகள் பின்வாங்கும்போது பெருங்கடலைக் கடற்கரை விழுங்குவதும் மாறிமாறி நடந்து கொண்டிருந்தது. ஆளுயர அளவிற்கு எழுந்த பேரலைகளால் கடலுக்குள் மரக்கலங்

கள் அனைத்தும் தடுமாறியபடி நிலையில்லாமல் மிதந்து கொண்டிருந்தன.

பரதவன் குமரன் அணிவகுத்து நின்று கொண்டிருந்த சொழாந்தியங்களின் வடிவமைப்புச் சர்ப்பமுகக் கலங்களின் அமைப்பிலிருந்து முற்றிலும் மாறுபட்டவை. சர்ப்ப முகக் கலங்களின் நீளத்தைப் போன்றே சொழாந்தியங்களும் நீளமானவை. ஆனால், அவற்றின் அகலம் சர்ப்பமுகக் கலங்களை விடவும் அதிகம். சர்ப்பமுகக் கலங்களை விடச் சொழாந்தியங்களை நிலைமைக்குச் சாதகமாக எளிதில் திருப்பிக் கொள்ள இயலும். அது மட்டுமல்லாமல் அதன் வடிமம் மற்றும் பாரம் ஆகியவற்றின் காரணமாகப் பேரலைகளிலும் சொழாந்தியங்கள் சமநிலையை இழக்காமல் நிலையாக நின்று கொண்டிருக்கும். ஆனால், சர்ப்பமுகக் கலங்கள் அப்படியல்ல. அவற்றின் நீளம் மற்றும் அவற்றின் வேகத்தினால் அவற்றை எளிதில் திருப்ப இயலாது. திருப்ப வேண்டும்

என்றால் சிறிது தொலைவிற்கு முன்பே சுக்கானைத் திருப்பினால் மட்டுமே சாத்தியம்.

சர்ப்பமுகக் கலங்கள் அனைத்தும் பாய்மரங்களின் துணையுடன் நகர்பவை. ஒவ்வொரு கலத்திலும் மூன்றிற்கு மேற்பட்ட பாய்மரங்கள் காணப்படும். ஆதலால் காற்று எத்திசையை நோக்கி வீசினாலும் கலத்தினை ஒரே திசையில் செலுத்த இயலும். ஆனால், திடீரென்று கலத்தினை நிறுத்துவது என்பது பெரும் கடினம். நங்கூரத்தை கடலுக்குள் வீசினால் மட்டுமே அவற்றின் வேகத்தை உடனே நிறுத்த இயலும்.

சொழாந்தியங்கள் இரண்டு அடுக்குகளை உடையது. ஆதலால் அவற்றின் உயரம் சர்ப்ப முகக் கலங்களை விடவும் அதிகம். தொலைவில் வரும்போது சர்ப்பமுகக் கலத்திலிருந்து அம்பினை எய்தோ அல்லது வேல் மற்றும் ஈட்டிகளை எறிந்தோ தான் சொழாந்திய வீரர்

களை வீழ்த்த இயலும். சர்ப்பமுகக் கலத்திற்கு அருகில் சொழாந்தியம் நெருங்கிவிட்டால் அம்பினை எய்யாமல் அவர்களைத் தாக்க இயலாது. சொழாந்தியம் முழுவதும் பெரும் துடுப்புகளால் மட்டுமே இயக்கப்படுபவை. ஆதலால் அவற்றின் வேகத்தை எளிதில் கட்டுப்படுத்த இயலும். சொழாந்தியத்தின் கீழ் அடுக்கில் வீரர்கள அமர்ந்து துடுப்பினைச் செலுத்துவார்கள். திறந்த மேல் அடுக்கில் போர் வீரர்கள் நின்று கொண்டு தாக்குதல் தொடுப்பார்கள். சமயத்தில் துடுப்புத் துழாவுபவர்களும் போர் வீரர்களாக மாறி விடுவார்கள்.

சொழாந்தியம் முழுவதிலும் நின்று கொண்டிருந்த வீரர்கள் அனைவரும் வாள் மற்றும் வேல் வீரர்கள் தான். பரதவன் குமரன் வில் வீரர்களைத் துணைக்கு அழைத்திருக்கவில்லை.

பாண்டிய, சேர மற்றும் சிங்களக் கூட்டுக் கடற்படையின் தலைவன் உப

தலைவர்களுக்குத் தகுந்த கட்டளை களை வழங்கிக் கையிலிருந்த கொம் பினை உரக்க ஊதினான். உடனே அவனது உபதலைவர்கள் அனைவரும் மரக்கலங்களுக்குச் செல்லலானார்கள். நங்கூரங்கள் நீக்கப்பட்டன. சர்ப்பமுகக் கலங்களில் பாதிப் பரதவன் குமரனை நோக்கிப் புறப்பட்டன.

நேரத்திற்கு நேரம் சர்ப்பமுகக் கலங்களின் வேகம் அலை மற்றும் காற் றின் உதவியினால் அதிகமாகிக் கொண் டிருந்தது. வில் வீரர்கள் அனைவ ரும் தயாராக நின்றார்கள். வாள் வீரர்க ளும் வாளினை உரையிலிருந்து உருவிப் பெரும் ஆரவாரத்துடன் தாக்குதலுக்கு நின்று கொண்டிருந்தார்கள். சர்ப்பமுகக் கலங்கள் அனைத்தும் பிறை நிலவின் வடிவில் சொழாந்தியங்களை நோக்கி விரைந்து வந்து கொண்டிருந்தன.

விரைந்து வந்து கொண்டிருந்த சர்ப்பமுகக் கலங்களைப் பார்த்தபடியே

நின்று கொண்டிருந்த பரதவன் குமரன் கையிலிருந்த கொம்பினை ஊதினான். அவனது கொம்போசை எழுந்த அடுத்தக் கணம் பிறை வடிவத்தில் அணிவகுத்து நின்று கொண்டிருந்த கலங்கள் அனைத் தும் அம்பினைப் போன்று அணிவகுத்து நின்றன. கூட்டுப் படையின் மரக்கலத் தலைவனைப் போன்று வசதி மிகுந்த அக்ரமந்திரக் கலத்தில் அமர்ந்திருந்தபடி உல்லாசமாகக் கட்டளையைப் பிறப்பிக் காமல் அம்பின் வடிவில் அணிவகுத்து நின்ற கலத்தின் கூர் முனையில் பரத வன் குமரன் நின்று கொண்டிருந்தான். மரக்கலங்கள் கடக்க நேர்ந்தாலும் பரத வன் குமரனைத்தான் முதலில் கடந்தாக வேண்டும். தொலைவில் சர்ப்பமுகக் கலங்கள் விரைந்து வந்து கொண்டிருப்ப தைப் பார்த்த பரதவன் குமரன் தனக்குப் பின்புறமாகச் சொழாந்தியங்களில் நின்று கொண்டிருந்த தனது வீரர்களை நோக் கித் திரும்பினான்.

அவர்களைப் பார்த்து, “வீரர் களே...” என அழைத்தான்.

கையிலிருந்த வேல் மற்றும் வாட் களைச் சொழாந்தியத்தில் தட்டி”ஊகூ...” என ஆரவாரத்துடன் குரல் எழுப்பினார் கள்.

“வந்து கொண்டிருக்கும் சர்ப்ப முகக் காலங்கள் நம்மைக் கடந்தால் வீழ் வது நாம் மட்டும் அல்ல. ஒட்டுமொத்த புகாரும் தான்! புகார் விழுந்தால் ஒட்டு மொத்த சோழ தேசமும் விழுந்தது போல! சோழ தேசம் விழுந்தால் நாமும், நமது குடிகளும் அடிமைப் படுத்தப்படுவோம். இது நமது உரிமைக்கான போர், இதில் நாம் வெற்றியடைந்தே தீர வேண்டும்!”

“ஆமாம்... ஆமாம்....” என வீரர்கள் அனைவரும் உரக்கக் குரல் எழுப்பினார் கள்.

“நம்மைத் தக்க வரும் ஒவ்வொரு வீரனையும் நமது ஆயுதங்களுக்கு இறை

யாக்குவோம்! சோழர்களின் புலிப்படை நிலத்தில் மட்டுமல்ல, நீரிலும் பெரும் வல்லமை வாய்ந்ததுதான் என்பதை நம் மைத் தாக்க வந்து கொண்டிருக்கும் இந்த வீணர்களுக்கு நாம் நமது வாட்க ளின் உதவியினால் புரியவைப்போமா?”

வீரர்கள் அனைவரும் ஆயுதங்க ளைச் சொழாந்தியத்தில் தட்டி, “ஊகூ... ஊகூ...” என்று வெறியில் குரல் எழுப்பி னார்கள்.

சர்ப்ப முகக் கலங்கள் அனைத் தும் விரைந்து வந்து கொண்டிருந்தன. அம்மரக்கலங்களைப் பார்க்கப் பார்க்க பரதவன் குமரனின் விழிகள் இரண்டும் சிவந்து கொண்டிருந்தன. சிவந்த தனது விழிகளால் அம்மரக் கலங்களை வெறி யுடன் பார்த்தபடியே, “நம் படைத் தலை வர்கள் திவ்யன் மற்றும் செங்குவீரர் இரு வரையும் மூழ்கடித்த மரக்கலம் நம்மைத் தாக்க வந்து கொண்டிருக்கும் மரக்க லங்களில் ஒன்றாகக்கூட இருக்கலாம்”

எனக் கூறியவன் இடையுறையிலிருந்து வாளினை உருவி வந்து கொண்டிருந்த சர்ப்ப முகக் கலங்களை நோக்கி நீட்டி னான்.

வீரர்கள் அனைவரும் அமைதியாக அக்கலங்களை நோக்கினார்கள்.

"என்ன செய்யலாம்?" என வினவி யவன் அவனுக்கு முன் நின்று கொண் டிருந்த வீரர்களின் முகத்தையே உற்றுக் கவனிக்கலானான்.

அவர்கள் அனைவரும் எந்தப் பதி லையும் கூறாமல் ஆவேசத்துடன் நின்று கொண்டிருந்த பரதவன் குமரனின் முகத் தையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"நம் படைத்தலைவர்களை மூழ்க டித்த மரக்கலம் எது என்று நம்மால் இப் போது கண்டறிய இயலுமா?"

"இயலாது."

"என்ன செய்யலாம்?"

https://telegram.me/aedahamlibra

வீரர்கள் அமைதியாக நிற்கலானார்கள்.

"ஒற்றை மரக்கலத்தைக் கண்டறிந்து பழி வாங்குவது சாத்தியமா?"

"முடியாது!"

"ஆதலால்...."

"அனைத்து மரக்கலங்களையும் நாம் நீரில் மூழ்கடிப்போம்!" என வீரர்கள் அனைவரும் வாளினை உயர்த்திக் கொண்டு ஆவேசமாகக் கூறலானார்கள்.

"ஆமாம்... இங்கிருந்து ஒரு மரக்கலம் கூடத் திரும்பப் போவதில்லை. அனைத்தையும் நாம் மூழ்கடிக்கப் போகிறோம் அல்லது அவர்களைக் கொன்று மரக்கலங்களைக் கைப்பற்றப் போகிறோம்."

வீரர்கள் அனைவரும் வாள் மற்றும் வேல்களை மரக்கலத்தில் தட்டி, "ஊகூ...

ஊகூ...” எனக் குரல் எழுப்பி ஆவே சத்தை வெளிக்காட்டலானார்கள்.

பரதவன் குமரன் விரைந்து வந்த சர்ப்ப முகக் கலங்களை நோக்கித் திரும்பி, “எனது கட்டளை எழும் வரை நமது மரக்கலங்கள் முன்னேற வேண் டாம்” அழுத்தமாகக் கட்டளையிட்டான்.

விரைந்து வந்து கொண்டிருந்த சர்ப்பமுகக் கலங்களின் பிறை வடிவ நகர்விலிருந்தே அவர்களின் தாக்குதல் வியூகத்தைப் பரதவன் குமரன் கண்டறிந் துவிட்டிருந்தான். சர்ப்ப முகக்கலங்கள் மேலும் நெருங்கி வந்து கொண்டிருந்தன.

மையத்தில் வில் வீரர்களைக் கொண்டு அவர்களுக்குப் பக்க பலமாக இரண்டு புறத்திலும் வாள் வீரர்களைத் தாங்கிய மரக்கலங்கள் அணிவகுத் துச் சொழாந்தியங்களைத் தாக்குவதற்கு விரைந்து நெருங்கிக் கொண்டிருந்தது. வில் வீரர்களின் தாக்குதல் தொலைவில் சொழாந்தியங்களுக்கு அருகில் நெருங்

கியபோது சர்ப்ப முகக் கல வில் வீரர்கள் குறி பார்த்து அம்பினை எய்ய ஆயத்தமானார்கள்.

வில்லில் அம்பினைப் பூட்டி சொழாந்தியத்தை நோக்கிக் குறி பார்க்கலானார்கள். கலங்கள் அருகில் நெருங்கிய பிறகு ம் பரதவன் குமரன் எந்தவிதக் கட்டளையும் பிறப்பிக்காமல் அமைதியாகவே வாளினை உயர்த்திக் கொண்டு நின்று கொண்டிருந்தான். சொழாந்திய வீரர்கள் அனைவரும் பரதவன் குமரனின் வாளினையே நோக்கிக் கொண்டிருந்தார்கள். 'அவனது வாள் எப்போது தாழும் எப்போது தாக்குதல் தொடுக்க முன்னேறலாம் என்று.'

சர்ப்ப முகக் கலத்திலிருந்த வில் வீரர்கள் சொழாந்தியக் கலங்களை நோக்கி அம்புகளை எய்யலானார்கள். காற்றில் பறந்து வந்த அம்புகளையும் காற்றின் வேகத்தையும் கூர்ந்து நோக்கினான்.

எந்தவிதக் கட்டளையையும் பிறப் பிக்காமல், "வீரர்களே, அவசரப்பட வேண்டாம்!" என மட்டும் உரக்கக் குரல் கொடுத்தான்.

சர்ப்ப முகக் கலங்கள் இன்னும் அதிவேகமாக நெருங்கி வந்து கொண் டிருந்தது. மீண்டும் வில் வீரர்கள் குறி பார்க்கலானார்கள். அவர்களின் கலங் கள் நெருங்கி வந்ததும், "தாக்குவோம்!" எனக் கூறியவன் வாளினை கீழே இறக் கினான். அவன் வாளினை இறக்கியது தான் தாமதம். அடுத்தக் கணம் துடுப்பு கள் அனைத்தும் அதிவேகத்தில் இயக் கப்படச் சொழாந்தியக் கலங்கள் நாணி லிருந்து புறப்பட்ட அம்பினைப் போன்று விரைந்து செல்லலானார்கள்.

மீண்டும் வில்வீரர்கள் சோழ கலங் களை நோக்கி குறிபார்த்து அம்புகளைத் தொடர்ந்து எய்யலானார்கள். ஆனால், காற்றின் வேகமும், கடல் அலைகளின் வேகமும் கணத்திற்குக் கணம் மாறிக்

கொண்டிருக்க அவர்களால் குறிபார்த்து அம்புகளை எறிய இயலவில்லை. அவர்கள் எய்யும் அம்புகள் தொடர்ந்து கடலிலேயே விழுந்து கொண்டிருந்தன. முதலில் அம்பினைப் போன்ற வியூகத்தில் புறப்பட்ட சொழாந்தியங்கள் சர்ப்ப முகக் கலங்களை நெருங்க நெருங்க அவை செண்டாயுதத்தைப் போன்று அணிவகுத்து முன்னேறிக் கொண்டிருந்தன. சொழாந்தியப் படையின் முகப்பில் பரதவன் குமரன் நின்று கொண்டிருந்தான். செண்டாயுதத்தில் காணப்படும் சிறு சிறு வேல்களைப் போன்றே பரதவன் குமரனுக்கு இடப்புறத்திலும் வலப்புறத்திலும் சொழாந்தியக் கலங்கள் அவனைப் பின்பற்றி விரைந்து கொண்டிருந்தன.

இரண்டு படையும் நேருக்கு நேர் மோதுவதற்கு விரைந்து வந்து கொண்டிருந்தன.

“வீரர்களே, தயாராக இருங்கள்!” கட்டளையிட்டான் பரதவன் குமரன்.

https://telegram.me/aedahamlibra

அம்பினைப் போன்று வியூகம் அமைத்துக் கலத்தினைச் செலுத்திக் கொண்டிருந்த சோழர் படையைப் பார்த்த பிறகே சர்ப்ப முகக் கலத்தின் உபபடைத் தலைவன் பிறை நிலவைப் போன்று வியூகம் அமைத்து மையத்தில் வில் வீரர்களையும் அவர்களுக்குப் பாதுகாப்பாக இரண்டு புறங்களிலும் வாள் மற்றும் வேல் வீசும் வீரர்களை நிறுத்தியிருந்தான்.

ஆனால், சோழர்களின் மாறிவிட்ட வியூகத்தினால் மையத்தில் இருக்கும் வில் வீரர்களுக்குப் பெரும் ஆபத்து என்பதை உணர்ந்த உபதலைவன், ‘கலங்களின் வேகத்தைக் குறைத்து அவர்களைத் தொலைவில் நிறுத்தி அம்புகளை எய்து தாக்குதல் தொடுக்கலாம்’ எனத் திட்டமிட்டுக் கொம்பினை விட்டு விட்டு ஊதலானான். உடனே விரைந்து வந்த சப்தமுகக் கலங்களின் வேகத்தைக் குறைக்க அனைவரும் சுக்கானைத் திருப்பியும், பாய்களின்

திசையைத் திருப்பியும் முயற்சிக்கலானார்கள். வேகமாக வீசிக் கொண்டிருந்த காற்று மரக்கலங்களை அதே வேகத்திலேயே தொடர்ந்து பயணிக்கச் செய்து கொண்டிருந்தது. திடீரென்று களத்தின் வேகத்தைக் குறைக்க ஆவேசமாக எழுந்த அலைகள் சப்த முகக் கலங்களின் அணிவகுப்பைக் குலைத்துவிட்டிருந்தன.

அணிவகுப்பு இன்றி முரணாகப் பயணித்துக் கொண்டிருந்த சப்த முகக் கலங்களைக் கண்ட பரதவன் குமரன், “வீரர்களே, வில் வீரர்கள் நின்று கொண்டிருக்கும் மையக் கலங்களை நாம் முதலில் தாக்குவோம். சப்த முகக் கலங்களின் முகப்பு பலமானது. ஆனால், அவற்றின் மையம் பலவீனமானது. சமநிலையை இழந்து அலைகளில் சிக்கிக் கொண்டிருக்கும் கலங்களின் முதுகில் வேகமாக மோதுங்கள்!” கட்டளையிட்டான் பரதவன் குமரன்.

உடனே சொழாந்தியக் கலங்கள் அனைத்தும் சப்த முகக் கலங்களின் மீது வேகமாக மோதின. சொழாந்தி யக் கலம் சப்த முகக் கலங்களின் மீது மோதியவுடன் துடுப்பினை பின்னோக்கி இயக்கி கலத்தை மீண்டும் பின்னோக்கி செலுத்தி மீண்டும் மீண்டும் மோதச் செய் தார்கள்.

கலம் மோதியவுடன் சர்ப்ப முகக் கலத்தின் முதுகு உடைந்து நீர் உட் புகுந்து மூழ்கத் தொடங்கின. துடுப்பி னைச் செலுத்தும் வீரர்கள் சர்ப்ப முகக் கலங்களின் முதுகில் மோதி மூழ்கடிக் கும் வேளையில் இறங்க, வாள் மற் றும் வேல் வீரர்கள் எதிரிகளின் காலத் திற்குள் புகுந்து அசுர வேட்டையைத் தொடங்கலானார்கள்.

பரதவன் குமரன் தான் முதன் முத லில் சொழாந்தியக் கலத்திலிருந்து சர்ப்ப முகக் கலத்திற்குள் குதித்து அவர்களை

https://telegram.me/aedahamlibra

வழி நடத்திக் கொண்டிருந்த உப தலை வனை நேருக்கு நேர் எதிர் கொண்டான்.

உபதலைவன் பாண்டிய நாட்டின் கடற்படையைச் சேர்ந்தவன். பரதவன் குமரனுடன் சர்ப்ப முகக் கலத்திற்குள் குதித்த சோழ வீரர்கள் உபபடைத் தலை வனுக்கு ஆதரவாக நின்றவர்களைக் கொன்று கடலுக்குள் வீசினார்கள். பரத வன் குமரன் உபபடைத் தலைவனுக்கு எந்தவொரு கால அவகாசத்தையும் அளிக்கவில்லை. அவனது தாக்குதலை எதிர் கொண்ட பரதவன் குமரன் அவனது வாளினைத் தடுத்து அடுத்தத் தாக்குத லில் அவனை நிராயுதபாணியாக்கினான். அடுத்த வீச்சில் அவனது தலையை மட் டும் உடலிலிருந்து பிய்த்து எடுத்து கட லுக்குள் வீசிவிட்டிருந்தான்.

தலைமையை இழந்த அந்தச் சிறு கடற்படையின் வீரர்கள் திட்டமின்றி ஒவ் வொருவரும் முடிந்தவரை எதிர் தாக்கு தல் தொடுக்கலானார்கள். வாள் மற்றும்

ஈட்டி எறியும் வீரர்களின் தாக்குதல்கள் துளி அளவிற்குக் கூடச் சொழாந்தியக் கல வீரர்களுக்குச் சேதத்தை ஏற்படுத்த இயலவில்லை. உயரமான சொழாந்தி யக் கலத்தினுள் இருக்கும் வீரர்களை நோக்கி ஆயுதத்தை எறிவதற்குள் அங்கி ருந்து பாய்ந்து வந்த வேல்களும், ஈட்டிக ளும் இவர்களின் உயிரைக் குடித்துவிட் டிருந்தன.

கண நேரத்திற்கு முன் நீலக் கட லாகக் காணப்பட்ட குணக்கடல் பரதவன் குமரனின் கருணையற்றத் தாக்குதலால் செந்நிறமாக மாறத் தொடங்கியது. முதல் கட்டத் தாக்குதலைத் தொடுப்பதற்காக முன்னேறி வந்த சர்ப்ப முகக் கலங்களில் வந்த வீரர்களில் ஒருவர் கூடப் பிழைத் திருக்கவில்லை. அனைவரின் உயிர்க ளையும் சோழ வீரர்களின் வாட்களும், வேல்களும் குடித்திருந்தன. தாக்குதலில் சேதமடைந்து மூழ்கிப்போன கலங்க ளைத் தவிர மற்ற கலங்களைப் பரதவன்

https://telegram.me/aedahamlibra

குமரன் கைப்பற்றிக் குன்றுத் துறையை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தான்.

நடந்த கடற்போரைத் தனது அக்ரமந்திரக் கலத்திலிருந்து வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த கூட்டுப் படையின் மரக்கலத் தலைவன்'இதற்கு மேல் உதவிக்குக் கலங்களை அனுப்பினாலும் பயன் இல்லை' என்பதை உணர்ந்து எந்தக் கட்டளையையும் பிறப்பிக்காமல் அமைதியாக நின்று கொண்டிருந்தான்.

மரக்கலத் தலைவனின் விழிகளில் வெளிப்பட்ட ஆத்திரத்தையும், ஏமாற்றத்தையும் கண்ட அவனது உபபடைத் தலைவர்கள், 'அடுத்த நாள் தொடங்கும் தாக்குதல் வெறித்தனமாக இருக்கப் போகிறது' என்பதை உணர்ந்து அமைதி காக்கலானார்கள்.

https://telegram.me/aedahamlibra

# 47.

# வேற்படை

மாலைப் பொழுதில் சேர, பாண்டிய மற்றும் சிங்களக் கூட்டுக் கடற்படை கடல் மார்க்கமாகப் புகாருக்குள் ஊடுருவ மேற்கொண்ட தாக்குதல் பரதவன் குமாரனால் முறியடிக்கப்பட்ட அதே வேளையில் சம்பாபதி வனத்தின் வழியாக மறைந்து தாக்குதல் தொடுத்து கோட்டைக்குள் ஊடுருவ நடத்தப்பட்ட வேந்தனின் தாக்குதலையும் சோழ இளவல் கரிகாலரும், வேளக்காரப் படைத் தலைவன் இளந்திரையனும் சேர்ந்து முறியடித்திருந்தார்கள்.

அடுத்த நாள் காலைப் பொழுது மெல்ல புலர்ந்தது. மாலையில் தரைப் படை மற்றும் கடற்படையின் தாக்குதல்

https://telegram.me/aedahamlibrary

என இரண்டும் முறியடிக்கப்பட்டது வேந்தனுக்குப் பெரும் ஆத்திரத்தை வரவழைத்திருந்தது. முற்றுகையிட்ட காலத்திலிருந்து நடத்தப்பட்ட தாக்குதல்களில் வேந்தன் ஒன்றை மட்டும் நன்கு அறிந்து கொண்டான். ‘சோழப் படை வலிமையான புகார்க் கோட்டை மதிலின் பின்புறம் மறைந்திருக்கும் வரையில் அவர்களை வெல்வது பெரும் கடினம். ஆதலால் அவர்களை எப்படியாவது வெளியே இழுத்து முரட்டுத்தனமாகத் தாக்குதல் தொடுத்தால் மட்டுமே புகாரைக் கைப்பற்ற இயலும்’என்று. ஆதலால் புதுத் திட்டம் ஒன்றை வகுக்கலானான் வேந்தன்.

அவனது திட்டத்தின்படி முதலில் காலாட்படை வீரர்களைக் கோட்டை நுழைவாயிலைக் கைப்பற்ற ஏவினான். ஆனால், அவ்வீரர்களால் கோட்டை அகழியைக் கூட நெருங்க இயலவில்லை. நெருங்கியவர்கள் அனைவரும் எரியம்புகளால் தாக்கப்பட்டார்கள். அப்படியே கோட்டை மதிலை நெருங்கினா

லும் புகார் மதிலிலிருந்து எறியப்பட்ட வேல்களால் அவர்கள் கொல்லப்பட்டார்கள். மற்றவர்கள் அனைவரும் விரட்டப் பட்டனர்.

கோட்டையின் முதன்மையான வடக்கு வாயிலில் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்த அதே வேளையில் காலாட்படையின் ஒரு பிரிவை குணக்கடலின் ஓரமாக இருக்கும் வடகிழக்கு நுழைவாயிலைக் கைப்பற்ற இரகசியமாக ஏவினான் வேந்தன். வேந்தன் எதிர்பார்த்ததைப் போன்றே சோழவில் வீரர்கள் அனைவரும் பிரதான நுழைவாயிலில் முகாமிட்டிருந்ததால் இரகசியமாகத் திடீர் தாக்குதல் நடத்த முன்னேறும் படைகளை அம்புகளைச் செலுத்தி அவர்களால் தடுக்க முடியவில்லை. வேந்தனின் சிறு படை எந்தவித எதிர்த்தாக்குதலையும் எதிர்கொள்ளாமல் கோட்டை வடகிழக்கு நுழைவாயிலை வெற்றிகரமாக நெருங்கிக் கொண்டிருந்தது.

வடகிழக்கு நுழைவாயிலில் எந் தவித தாக்குதலும் நடத்தப்படாமல் சோழர்கள் அமைதி காத்ததிலிருந்து ஒன்றை மட்டும் வேந்தன் அறிந்து கொண்டான். கோட்டைக்குள் இருக்கும் சோழ வீரர்களின் எண்ணிக்கை மிக வும் சொற்பம். அவர்கள் கோட்டையின் உள்ளிருந்து தற்காப்புத் தாக்குதல் நடத் துவதால் அவர்களை நெருங்க இயல வில்லை. மாறாகப் படைகளைப் பிரித்து நாலாபுறத்திலும் தாக்குதல் தொடுத் தால் எளிதில் புகாரைக் கைப்பற்றிவிட லாம் என எண்ணியவன் கையிலிருந்த கொம்பினை வேகமாக ஊதினான். வட கிழக்கு நுழைவாயிலை நோக்கி முன் னேறிச் செல்லும் வீரர்கள் அந்தக் கொம் பின் ஓசையிலிருந்து வேந்தனது கட்ட ளையைப் புரிந்து கொண்டு விரைந்து செல்லலானார்கள்.

இருங்கோவின் படைப் பிரிவின் ஒரு அணி வடகிழக்கு வாயிலை நெருங் கிக் கொண்டிருந்த சமயம் வடகிழக்கு

மதில் அகழியின் பாலம் திடீரென்று இறக்கப்பட்டது. உடனே கோட்டையின் வாயிலும் திறக்கப்பட்டது. திறக்கப்பட்ட நுழைவாயிலிலிருந்து சோழப் புரவிப் படை திருக்கண்ணனின் தலைமையில் அதிவேகமாகப வெளியே விரைந்தது.

அதைக் கண்ட வேந்தன் சிந் திப்பதற்குள் கோட்டையின் வடகி ழக்கு நுழைவாயிலிலிருந்து வெளிப்பட்ட திருக்கண்ணன் நுழைவாயிலைக் கைப் பற்ற வந்த உறைந்தை வீரர்களை அசு ரவேகத்தில் தாக்கிக் கொன்று குவிக் கத் தொடங்கினான். புரவிப்படையினர் காலாட்படை வீரர்களைச் சுற்றி வளைத் தார்கள். தொலைவிலிருந்து பார்த்த வேந்தனுக்கு எதுவுமே புரியவில்லை. புழுதிப்படலம் மட்டுமே பார்வைக்கு அகப்பட்டது. அந்தப் புழுதிப் படலத்திற் குள் திருக்கண்ணன் தனது ருத்ர தாண் டவத்தை அரங்கேற்றிக் கொண்டிருந் தான்.

நிலைமையைப் புரிந்து கொண்ட வேந்தன் உடனே மீண்டும் கொம்பினை விட்டு விட்டு ஊதினான். திருக்கண்ண னின் புரவிப் படையிடம் சிக்கிக் கொண்ட வீரர்களைக் காக்க புரவிப்படை ஒன்று உடனே புறப்பட்டுச் சென்றது.

கண நேரத்திற்குள் வேந்தன் தீவி ரமாகச் சிந்தித்திருந்தான். 'புரவிப்ப டையை அனுப்பினால் சோழர்களின் புறப்படை இவர்களை அழிக்க நேருக்கு நேர் மோதுவார்கள். உடனே புர விப்படையில் பாதிப் பிரிந்துபோய்க் கோட்டை நுழைவாயிலைக் கைப்பற்றி விடுவார்கள்' என எதிர்பார்த்துக் கொம் பின் சத்தம் மூலமாகவே தகுந்த கட்ட ளையைப் பிறப்பித்திருந்தான். அவனது கட்டளையை உணர்ந்த புரவிப் படையும் 'தகுந்த சமயத்தில் படையை இரண்டா கப் பிரித்துக் கொள்ளலாம்' என எண்ணி திருக்கண்ணனைத் தாக்க விரைந்து கொண்டிருந்தார்கள்.

ஆனால் விரைந்து வந்த புரவிப் படை வீரர்களுக்குத் திருக்கண்ணன் அதிக வேலையை வைக்க வில்லை. அவர்கள் நெருங்குவதற்கு முன்னரே காலாட்படை வீரர்களைக் கொன்று போட்டுவிட்டு மீண்டும் தனது புரவிப் படையுடன் புகார் கோட்டை நுழைவாயிலை நோக்கிப் பின்வாங்கினான். அவர்களை விரட்டிக் கொண்டு இருங்கோவின் புரவி வீரர்கள் விரைந்து வந்தார்கள். ஆனால், அவர்கள் திருக்கண்ணனை நெருங்குவதற்குள் திருக்கண்ணன் தனது புரவிப் படைக்கு எந்தவித சிறு சேதமும் ஏற்படாமல் கோட்டைக்குள் சென்றுவிட்டிருந்தான். அகழிப்பாலம் மீண்டும் உயர்த்தப்பட்டது. கோட்டையின் வடகிழக்கு நுழைவாயில் மீண்டும் அடைக்கப்பட்டது.

இருங்கோவின் புரவிப்படை மீண்டும் திரும்புவதற்குள் அவர்களின் மீது கோட்டைக்குள்ளிருந்து அம்புகளையும், எரியம்புகளையும் தொடர்ந்து எறியலா

னர்கள் சோழர் வீரர்கள். எரியம்புக ளுக் கிடையில் சிக்கிக் கொண்ட புர விப்படை வீரர்கள் அனைவரும் கொல் லப்பட்டார்கள். ஒருவர் கூடத் திரும்பிச் செல்ல சோழர் படை வாய்ப்பளித்திருக் கவில்லை.

பெரிய அளவில் தனது படைக்கு இழப்பு ஏற்படவில்லை என்றாலும் சிறிது சிறிதாக இழப்பு ஏற்பட்டுக் கொண்டிருப் பதை வேந்தன் உணரவே செய்தான். கோட்டை மதிலுக்கு வெளியே பிணமா கிக் கிடந்த தனது வீரர்களையே சற்று நேரம் உற்றுக் கவனித்துக் கொண்டி ருந்தான். பிறகு வானை நோக்கினான். வானில் கார்முகில்கள் சூழ்ந்து மழை எப்போது வேண்டுமானாலும் பொழி யும் நிலையில் காணப்பட்டது. அவ்வப் போது ஒன்றிரண்டு தூறல்களும் விழுந்து கொண்டிருந்தன.

“யார் அங்கே...” அழைத்தான் வேந் தன்.

உடனே இரண்டு வீரர்கள் ஓடி வந்து பணிந்தார்கள்.

“உறைந்தை மன்னர் இருங்கோ வேள், யுவராஜர், வைதீகர் பாகவ தர் மற்றும் நமது படைத் தலைவர்கள் அனைவரையும் உடனே அழைத்து வா!” எனக் கட்டளையிட ஒருவன் அங்கிருந்து விரைந்து செல்லலானான். மற்றொரு வனிடம், “குணக் கடலில் முகாமிட் டுக் கொண்டிருக்கும் மரக்கலப் படைத் தலைவனிடம் இனி தாமதிக்க வேண் டாம். இன்றே ஒட்டுமொத்த கலங்களை யும் கொண்டு புகாரின் கடற்படையை அழித்துக் கடற்கரை மற்றும் காவேரி நதியின் முகத்துவாரத்தைக் கைப்பற் றச் சொல்லி ஆணையிட்டதாகச் சென்று தெரிவி” எனக் கட்டளையிட்டான்.

உடனே ஓடிச் சென்று புரவியில் ஏறி யவன் விரைந்து கடற்கரையை நோக்கிச் செல்லலானான்.

தகவல் தெரிவிக்கப்பட்டதும் படைத் தலைவர்கள் அனைவரும் வந்து சேர்ந்தார்கள். அவர்களிடம், "புரவிப் படையும், யானைப்படையும் இன்னும் ஒரு நாழிகைப் பொழுதில் புகார் நுழை வாயிலை நேரடியாகத் தாக்கப் போகின் றன. உடனே அவை அனைத்தும் தயாரா கட்டும்!" கட்டளையிட்டான் வேந்தன்.

வேந்தனின் திடீர் கட்டளை உப படைத் தலைவர்களை அதிர்ச்சி யில் ஆழ்த்தினாலும் வேந்தனது கட்ட ளையை உடனே நிறைவேற்றத் தொடங் கினார்கள்.

"கோட்டைக் கதவுகளைத் தகர்த் தெறியும் இடங்கணிப் பொறிகள், கல்லி டுகூடை, கவை, கல்லெறி கவண் ஆகி யவை தயாராகட்டும்" மீண்டும் உரக்கக் கட்டளையிட்டான் வேந்தன். அவனது கட்டளை எழுந்த அடுத்தக் கணம் வீரர் கள் அனைவரும் பரபரவென்று பணிபுரி யத் தொடங்கினார்கள்.

ஒரு பிரிவினர் ஆயத்தமாக இருந்தாலும், ஓய்வெடுத்துக் கொண்டிருந்த காலாட்படை மற்றும் வில்வீரர்களிடம் சென்ற வேந்தன், “உடனே அனைவரும் தயாராகுங்கள்! கண நேரமும் தாமதிக்க வேண்டாம்” எனக் கட்டளையிட்டுவிட்டுத் திரும்பினான்.

யானைப் படையை முன் வரிசையில் நிலை நிறுத்தினான். எப்போது வேண்டுமானாலும் பிரிந்து அதிவேகமாகப் பயணிக்கும் வகையில் அதன் இரண்டு புறத்திலும் புரவிப் படையை அணிவகுக்கச் செய்தான்.

புரவிப் படைகளுக்குப் பின்னால் காலாட்படை வீரர்களையும், யானைப் படைக்குப் பின்னால் வில் வீரர்களையும் நிலை நிறுத்தினான்.

இரண்டிற்கும் இடையில் எறியும் ஆயுதங்களை நிறுத்தி வைத்திருந்தான்.

https://telegram.me/aedahamlibra

உறைந்தை மற்றும் மலை நாட்டி லிருந்து திரட்டி வந்த அனைத்து படை களையும் அணிவகுத்து நிற்க வைத்தி ருந்தான் வேந்தன். வேந்தனின் திடீர் அழைப்பைக் கேட்டு கூடாரத்திலிருந்து வந்த உறைந்தை மன்னர் இருங்கோ மற் றும் யுவராஜன் ஆகியோர் திரண்டு அணி வகுத்து நின்று கொண்டிருந்த படை களை ஆச்சர்யத்துடன் பார்த்தபடியே, "வேந்தா... என்ன இது?" என வினவினர்.

"அரசே, புகார் கோட்டைக்குள் இருக்கும் வீரர்களின் எண்ணிக்கை சொற்பமே. சிறு சிறு தாக்குதலைத் தொடுத்து அவர்களுக்கு நாம் நம் பிக்கையையும், பலத்தையும் கொடுத்து நமது படையை நாம் சிறிது சிறிதாக இழந்து கொண்டு இருக்கிறோம். ஒரே நேரத்தில் நிலத்திலும், கடலிலும் முழுத் தாக்குதலைத் தொடுக்கப் போகிறோம் நாம். இன்று நாம் தொடுக்கப்போகும் தாக்குதலில் புகார் படை மொத்தமாக அழியப் போகிறது. இன்று அந்திப்பொ

ழுது மேற்கில் விழுவதற்குள் நாம் புகார் பட்டினத்திற்குள் பிரவேசிக்க வேண்டும்" என ஆவேசத்துடன் கூறலானான்.

"வேந்தா, தாக்குதலை மெல்ல நடத்தும்படி நேற்றுதானே நாம் மரக்கலத் தலைவனிடம் தெரிவித்துவிட்டு வந்தோம். இந்த நிலையில்..." என இருங்கோவேள் கூறிக் கொண்டிருந்த போதே இடைமறித்த வேந்தன், "அரசே, வேண்டிய கட்டளைகளை ஏற்கெனவே நான் மரக்கலத் தலைவருக்குப் பிறப்பித்துவிட்டேன். தகவல் இந்நேரம் சென்று சேர்ந்திருக்கும். அவர்களும் விரைவில் புறப்பட்டுவிடுவார்கள். ஒரே நேரத்தில் கடலிலும் நிலத்திலும் தாக்குதல் தொடுப்போம். இனியும் அவர்களுக்கு நாம் கால அவகாசத்தை வழங்க வேண்டாம்!" எனத் தெரிவித்தான்.

"நல்லது" எனக் கூற இருங்கோவாயைத் திறந்தார். ஆனால், அதற்குள்ளாகவே வேந்தன், "யானைப் படை

https://telegram.me/aedahamlibra

கோட்டை மதிலைத் தாக்கத் தயாராகட்டும்” என அந்தக் களமே அதிரும்படி கட்டளையைப் பிறப்பித்தான்.

அணிவகுத்து நின்ற யானைப் படை புறப்படத் தயாராகின. யானைகளை வழிநடத்த குஞ்சரமள்ளர்கள் தயாராக அதன் மீது அமர்ந்திருந்தனர்.

“யானைப் படை முன்னேறட்டும்! பிடுங்கிக் கொண்டு வந்திருக்கும் மரங்களைக் கொண்டு அகழியைத் தூர்த்துக் கோட்டைக் கதவுகளைத் தகர்த்து எறியுங்கள்!”

அவனது கட்டளை எழுந்ததுதான் தாமதம். அடுத்தகணம் திரண்டிருந்த அனைத்து யானைகளும் தும்பிக்கையைத் தூக்கிப் பிளிறிக் கொண்டு புழுதி பறக்க கோட்டையை நோக்கி ஓடலாயின. யானைகளின் ஓட்டத்தில் நிலங்கள் அதிரத் தொடங்கின.

யானைகள் முன்னோக்கி நகர்ந்ததும், "இடங்கணிப் பொறி, கல்லெறியும் கவண், கவை ஆகியவை தயாராகட்டும். அனைத்திலும் பெரும் பாறைகளையும், எரி பந்துகளையும் இட்டுத் தயாராக வையுங்கள். தாக்குவதற்கு ஏதுவாக அவைகளை இன்னும் முன்னோக்கி இழுத்துச் செல்லுங்கள்!" மீண்டும் கட்டளையிட்டான் வேந்தன்.

யானைகளில் பிணைக்கப்பட்ட அனைத்து எந்திரங்களும் முன்னோக்கி இழுத்துச் செல்லப்பட்டன. வேந்தன் கோட்டை மதிலின் மேற்புறத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். திடீரென்று பெருமழை விழுவதைப் போன்ற சத்தம் எழுந்தது. கோட்டையிலிருந்து அம்புகளைத் தான் எய்கிறார்களோ என எண்ணி"தற்காத்துக்கொள்ளுங்கள்" எனக் கட்டளையிட்டான். அனைவரும் கையிலிருந்த கேடயத்தைத் தூக்கி உயர்த்திப் பிடித்துக் கொண்டார்கள். அப்போது சடசடவென்று மழைத் துளிகள் விழத்

தொடங்கின. முதலில் ஒவ்வொன்றாக விழத் தொடங்கிய மழைத்துளிகள் பிறகு பெருமழையாகப் பெருகத் தொடங்கியது.

"மழை பொழிந்தாலும் பரவா யில்லை. தாக்குதலை நிறுத்த வேண் டாம்!" என வேந்தன் கூறி வாயை மூட வில்லை. அடுத்தக் கணம் புகாரின் மதி லுக்குப் பின்னாலிலிருந்து அம்புகளும் எரியம்புகளும் சேர்ந்து விழத் தொடங் கின.

"கவண்களையும், இடங்கணிப் பொறியையும் இயக்கி கோட்டை மதிலின் மீது நிற்பவர்களை விரட்டியடியுங்கள்!"

உடனே இடங்கணிப் பொறி, கல் லெறி கவண் மற்றும் கவை ஆகியவற்றில் அமைத்திருந்த சக்கரங்களைச் சுழற் றத் தொடங்கினார்கள் வீரர்கள். அந் தச் சக்கரத்தோடு இணைக்கப்பட்டிருந்த விசைகள் தூக்கியை வேகமாகச் சுழற்றி எறியத்தொடங்கின. தூக்கியில் பெரும் பாறைகள், எரிந்து கொண்டிருக்கும்

நெருப்புப் பந்து ஆகியவற்றை வைத்து தொடர்ந்து புகார் மதில் மீது தொடர்ந்து வீசத் தொடங்கினார்கள்.

கோட்டை மதிலுக்குள் விழுந்த நெருப்புப் பந்துகளும், பாறைகளும் அவற்றின் மீது நின்று கொண்டிருந்த வீரர்களை விரட்டியடித்தன. சிறிது நேரத்திற்குப் பிறகு கோட்டைக்குள்ளிருந்து எந்தவித எரியம்புகளும் எறியப்படாமல் இருப்பதைக் கண்ட வேந்தனுக்கு நம்பிக்கை பிறந்தது.

உடனே, “கல்லெறி கவணை வாயிலை நோக்கிக் குறிவைத்து கற்களையும், எரிபந்துகளையும் தொடர்ந்து எறியுங்கள்!” அடுத்தக் கட்டளையைப் பிறப்பித்தான் வேந்தன்.

பாறைக் கற்களும், எரிபந்துகளும் தொடர்ந்து நுழைவாயில் கதவின் மீது விழத் தொடங்கின. புகார் மதில் கதவு சிறிது சிறிதாக உடையத் தொடங்கியது.

"கதவு உடையப் போகிறது. புரவிப் படை தயாராகட்டும்."

வேந்தன் எதிர்பார்த்ததைப் போன்றே புகாரின் முதன்மை நுழைவாயில் கதவு உடைந்து கீழே விழுந்தது. எரிபந்து விழுந்ததில் அவை தீப்பிடிக்கத் தொடங்கின. கதவு உடைந்ததும் முன்னால் விரைந்து வந்து கொண்டிருக்கும் யானைகளைத் தாக்க வேலெறியும் வீரர்கள் உடைந்த கதவின் வழியாக ஓடிவந்தார்கள். அகழிப்பாலம் கீழே இறக்கப்பட்டது.

நடக்கும் நிகழ்வுகளைக் கண்ட வேந்தன் சிரித்தபடியே, "இதைத்தான் நான் எதிர்பார்த்தேன். புரவிப்படை முன்னேறட்டும். யானைகளைக் கடந்து புகார் பட்டினத்திற்குள் ஊடுருவிச் செல்லுங்கள்!" அடுத்தக் கட்டளையைப் பிறப்பித்தான் வேந்தன்.

உடனே புழுதி பறக்க புரவிகள் அனைத்தும் புகாரின் தகர்த்தெறியப்பட்ட

நுழை வாயிலை நோக்கி அதிவிரைவில் செல்லத்தொடங்கின.

அதிவேகமாகச் சென்ற புர விப்படை சிறிது நேரத்திற்கெல்லாம் யானைப் படையை அடைந்திருந்தது. யானைப்படையும், புரவிப் படையும் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் விரைந்து வந்து கொண்டிருந்தன.

திடீரென்று நிலம் அதிர்ந்தது. புழுதிப்படலம் எழுந்து அவ்விடத்தை மறைத்துக் கொண்டது. பெருமழையிலும் புழுதிப் படலம் அடங்குவதாக இல்லை. அடுத்தகணம் யானைகளின் பிளிறல் சத்தங்களும், புரவிகளின் கனைப்புச் சத் தங்களும், வீரர்களின் அலறல் சத்தத்து டன் சேர்ந்து எழுந்தன.

என்ன நடக்கிறது என்று யாருக் கும் கண நேரம் விளங்கவே இல்லை." வேந்தா, என் கண்களுக்கு எழுந்திருக் கும் புழுதிப் படலம் மட்டுமே தெரிகி றது! யானை மற்றும் புரவிகளின் அலறல்

சத்தம் திடீரென்று எதற்காக எழுகிறது? யானைகளைத் தாக்குவதற்காக வெளியே வந்த சோழ வேலேறியும் வீரர்கள் எதற்காக மீண்டும் திரும்பி ஓடுகிறார்கள்? என்ன நடக்கிறது அங்கே?" என வினவினார் இருங்கோ வேள்.

"புரியவில்லை அரசே! நானும் அதைத்தான் பார்த்துப் புரிந்துகொள்ள முயற்சிக்கிறேன்!" என இருங்கோவேளிடம் தெரிவித்தவன், "எதற்கும் வில் வீரர்களும், காலாட்படை வீரர்களும் தயாராக இருங்கள்!" எனக் கட்டளையைப் பிறப்பித்திருந்தான்.

புரவிப் படையும், யானைப் படையும் முன்னோக்கிச் சென்ற இடத்தில் திடீரென்று புழுதிப் படலம் தோன்றிய அடுத்தக் கணம் காலுக்கடியில் பெரும் அதிர்வினை உணர்ந்தார்கள் அனைவரும். அதுவரை அமைதியாக இருந்த வைதீகர், "வேந்தா... மோசம் போய்விட்டோம்.



https://telegram.me/aedahamlibra

'புதைகுழி'"என அவர்தான் முதல் முதலில் அலறினார்.

புகாரை எதிரிகள் முற்றுகையிட்டால் வடக்குப் புறத்திலிருந்து தான் தாக்குதல் நடத்துவார்கள் என்பதை உணர்ந்த செங்குவீரன் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகப் புதைகளை ஏற்படுத்தியிருந்தான். புதை என்பது தரைக்கு அடியில் சுரங்கம் அமைத்துக் கீழிருக்கும் மண் அனைத்தையும் வெளியேற்றி விடுவார்கள். மேலே இருக்கும் மண் பரப்பை சிறு சிறு மண் தூண்கள் மட்டுமே தாங்கிக் கொண்டிருக்கும். தூண்களை ஒவ்வொன்றாக உடைத்து விட்டால் மேலே இருக்கும் மண் பரப்பு ஆதரவை இழந்து புதை குழியாகிவிடும். இந்த இரகசிய ஏற்பாட்டையும் செங்குவீரன் பட்டுத் துணியில் தீட்டியிருந்தான்.

அதைப் புரிந்து கொண்ட இளந்திரையன், 'இருங்கோவின் படை நுழைவாயிலை உடைக்கட்டும் அப்போதுதான்

அவர்களின் பெரும்படை நெருங்குவார்கள். நெருங்கியதும் அவர்கள் அனைவரையும் மண்ணுக்குள் புதைக்கலாம் எனத் திட்டமிட்டே இருங்கோவின் புரவி மற்றும் யானைப் படை நெருங்கட்டும்' எனத் தகுந்த சமயத்தையும், புதைகுழிகள் அமைக்கப்பட்டிருந்த இடத்தையும் பார்த்துக் கொண்டிருந்தான்.

யானைப் படையும், புரவிப் படையும் நெருங்கிய வேளையில் வீரர்களுக்குக் கட்டளையிட்டு புதையைத் தாங்கிக் கொண்டிருந்த மண் தூண்களை இடிக்கச் சொல்லிக் கட்டளையிட்டான். வீரர்கள் புரவியில் மண்ணுக்கடியில் அமைக்கப்பட்டிருந்த மண் தூண்களை ஒவ்வொன்றாகத் தங்களது வாட்களால் வெட்டி உடைத்துக் கொண்டே வர மேலே தரையில் விரைந்து வந்து கொண்டிருந்த யானை மற்றும் புரவிகளின் பாரம் தாங்காமல் மேல் அடுக்கு உடைந்து மண்ணுக்குள் புதைந்தது.

'புதைகுழி' என்ற சொல் கேட்டதுதான் தாமதம். உடனே வேந்தன், இருங்கோவேள், யுவராஜன் என அனைவரும் பெரும் அதிர்ச்சியடைந்தார்கள். தொலைவில் நின்றபடியே சமர்க்களத்தை மூவரும் நோக்கினார்கள்.

உடைக்கப்பட்ட கோட்டை நுழைவாயிலிலிருந்து சோழர்களின் புரவிப் படை அதிவேகமாக வெளியே வந்து புரவி மற்றும் யானைப்படையை நோக்கி விரைந்தன. புரவிப் படைக்கு வேளக்காரப் படைத்தலைவன் இளந்திரையன் தான் தலைமை தாங்கியிருந்தான். அவனுக்குத் துணையாகத் திருக்கண்ணன் வந்திருந்தான். புரவிப் படையில் பாதிபேர் கையில் வேல் மற்றும் வாளையும் மீதிபேர் வில்லையும் தாங்கி வந்து கொண்டிருந்தார்கள்.

"புதையில் சிக்கியிருக்கும் புரவி மற்றும் யானைகளை யாரும் தவறிக்கூடத் தாக்க வேண்டாம். அவை நமக்

குத் தேவை. சிக்கியிருக்கும் வீரர்களை மட்டும் வீழ்த்துங்கள். ஒருவன் கூட இங்கிருந்து உயிரோடு திரும்பிச் செல் லக்கூடாது" என ஆவேசமாகக் கட்ட ளையிட்டபடியே புதை குழியில் சிக்கிக் கிடந்த இருங்கோவின் வீரர்கள் கூட்டத் திற்குள் முதல் ஆளாகப் புகுந்த இளந் திரையன் கையிலிருந்த வாளினை சர மாரியாகச் சுழற்றினான். வாள் சுழன்ற வேகத்தில் அவனுக்கு முன் எதிர்பட்ட அனைவரின் தலை, கை, கால் மற்றும் உடல் என அனைத்தும் தனித்தனியா கக் கீழே விழத் தொடங்கின. புதைகுழி யில் விழுந்த வீரர்கள் அதிர்ச்சியிலிருந்த தெளிவதற்குள் புரவி வீரர்களால் நிகழ்த் தப்பட்ட தாக்குதலில் அவர்களால் பதில் தாக்குதல் கூட நிகழ்த்த இயலவில்லை.

இளந்திரையனுடன் வந்திருந்த திருக்கண்ணன் மற்றும் மற்ற புரவி வீரர் களும் விழுந்து கிடந்த இருங்கோவின் வீரர்கள் மீது தாக்குதல் நடத்த அவ்வி டத்தில் அலறல் சத்தங்களும், குருதிப்

பெருக்கும் மட்டுமே பெருகத் தொடங்கி யது.

வீரர்களின் அலறல் சத்தத்தைக் கேட்ட வேந்தன் அணிவகுத்து நின்ற வில் மற்றும் காலாட்படை வீரர்களி டம், “வீரர்களே, நமது யானை மற் றும் புரவிப் படையை நாம் மொத்தமாக இழந்து கொண்டிருக்கிறோம். முன்னே றிச் சென்று தாக்குங்கள்” எனக் கட்ட ளையிட்டான்.

உடனே வில் மற்றும் காலாட்படை வீரர்கள் புதையில் விழுந்து கிடந்த புரவி மற்றும் யானைப் படையைக் காக்க முன் னேறிச் செல்லலானார்கள். அப்போது அவர்கள் எதிர்பார்க்கவில்லை. அவர் கள் மீது எரிபந்துகளும், எரியம்புகளும் விழுந்து அவர்களை முன்னேற விடாமல் தடுத்தன.

அதையும் பொருட்படுத்தாமல் முன்னேறலானார்கள். அவர்களின் மீது

தொடர்ந்து விழுந்த எரியம்புகள் அவர்களை உயிரோடு எரிக்கத் தொடங்கின.

காலாட்படை மற்றும் வில் வீரர்களை முன்னேற முடியாமல் தடுத்தபடி விழுந்து கொண்டிருந்த எரியம்புகளைக் கண்ட வைதீகர், "வேந்தா, அவர்களால் மட்டும் எப்படி இவ்வளவு தொலைவில் எரியம்புகளைச் செலுத்த முடிகிறது? இது எப்படிச் சாத்தியம்?" என வினவினார்.

"பிரம்மாயரே, தெரியவில்லை!"

"ஒருவேளை, இந்திரனின் ஆயுதம் என்றார்களே... அப்படி அவர்கள் எதையாவது?" என வாக்கியத்தைப் பாதியில் விழுங்கினார்.

"இந்திரனின் ஆயுதம் என்றால் அந்தத் தூண்கள்...?" என வியந்த வேந்தன், "அந்தத் தூண்களில்தான் ஏதோ மர்மம் இருக்கிறது?" என வேந்தன் சுட்டிக்காட்டிக் கூறியபோது வானில் தோன்றிய பெரும் மின்னல் அவ்விடத்தில்

வெளிச்சப் பிழம்பை ஏற்படுத்திவிட்டு மறைந்தது. அப்போது அந்தத் தூண்க ளைக் கவனித்தான் வேந்தன். அதில் பொருத்தப்பட்டிருந்த வளைவிற் பொறி யிலிருந்து எரியம்புகள் வந்து கொண்டி ருந்த வெளிச்சத்தைக் கண்டான்.

“வைதீகரே, அந்தத் தூணில் தான் ஏதோ இருக்கிறது. அதிலிருந்துதான் அவர்களால் எரியம்புகளையும், எரிபந்து களையும் இவ்வளவு தொலைவிற்கு வீசி எறிய முடிகிறது” எனத் தெரிவித்தான்.

வில் வீரர்களும், காலாட்படை வீரர் களும் தொடர்ந்து முன்னேற முயற் சித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது சம்பாபதி வனத்தை ஊடுருவி வந்தி ருந்த கரிகாலரின் தலைமையிலான புர விப்படை முன்னேறிச் செல்ல முயன்று கொண்டிருந்த காலால் மற்றும் வில் வீரர் களை வலப்புறமாகத் தாக்கின.

கரிகாலரின் திடீர் தாக்குதலை அங்கிருந்த யாரும் எதிர்பார்த்திருக்

கவில்லை. ஆவேசத்துடன் கையில் வேலோடு வந்த கரிகாலரின் அதி வேக புரவிப்படைக்கு முன் இருங்கோ வின் காலாட்படை நசுங்கியது. இரண்டு புறத்திலிருந்தும் ஒரே நேரத்தில் தாக் குதலை சோழர்கள் நடத்த இருங்கோ வின் படை சிதறத் தொடங்கியது. கைவ சமிருந்த சொற்ப வீரர்களைக் கொண்டு வேந்தன், இருங்கோ, யுவராஜன், வைதீ கர் ஆகியோர் கரிகாலரின் புரவிப் படையை எதிர்த்து நிற்க முயற்சி செய் தார்கள். ஆனால், அவர்களின் முயற் சிகள் அனைத்தும் காலம் கடந்ததா கவே இருந்தது. அதிவேகமாகப் புரவி யில் விரைந்து வந்த கரிகாலரின் வேல் படைக்கு முன் கண நேரம் கூட அவர் களால் எதிர்த்துத் தாக்குப்பிடிக்க முயல வில்லை. நிலைமை முற்றிலும் மோசமாகி சோழர்களுக்கு ஆதரவாக மாறிவிட்ட தைக் கண்ட வேந்தன் இருங்கோவிடம், “யுவராஜர் மற்றும் வைதீகருடன் நீங்கள் இங்கிருந்து தப்பிச் செல்லுங்கள். நான்

இவர்களைத் தடுத்து நிறுத்துகிறேன்!" எனத் தெரிவித்தான்.

ஆனால் இருங்கோ, "வேந்தா... புற முதுகிடும் பண்பு என் இருங்கோ குலத் திற்கே கிடையாது. வெற்றியோ தோல் வியோ களத்திலேயே நிகழட்டும்" எனப் பிடிவாதமாகத் தெரிவித்தவர் கையில் வாளினைத் தாங்கிக் கொண்டு கரிகா லரை எதிர்த்துத் தாக்க ஆயத்தமானார்.

ஆனால், அவரைத் தடுத்த வேந் தன், "நாம் அனைவருமே இப்போது இங்கிருந்து பின்வாங்குவோம். பாண் டிய படை மற்றும் சேரர் படை வந்த தும் அவர்களுடன் திரும்பி வந்து இவர் களை வீழ்த்துவோம். இப்போது உயி ரோடு எஞ்சியிருக்கும் நமது படையி னரைக் காப்பாற்றுவோம்!" எனத் தெரி வித்தவன் கையிலிருந்த கொம்பினை அனைத்து வீரர்களையும் பின்வாங்கச் சொல்லி ஊதினான். உயிரோடு எஞ்சி யிருந்த வீரர்கள் அனைவரும் இருங்கோ

மற்றும் வேந்தனை நோக்கித் திரும்பி னார்கள். அவர்கள் அனைவரும் புகாரி லிருந்து பின்வாங்கத் தொடங்கினார்கள்.

பார்வையில் சிக்கிய அனைத்து வீரர்களின் உடலிலும் தங்களது வாளி னையும், வேலினையும் செலுத்திய சோழப் படையினர் பின் வாங்கிச் செல் லும் இருங்கோவின் படையை விரட்டிச் செல்லலானார்கள்.

இருங்கோவின் பெரும்படை பின் வாங்கியதும் பார்வைக்குத் தென்பட்ட அனைத்து திசைகளிலும் உறைந்தைப் படை வீரர்களின் பிணங்களே காணப் பட்டன. பெய்த மழையினால் பெருக்கெ டுத்து ஓடிய மழைத் துளிகளும் குருதித் துளியாக ஓடிக் குணக் கடலில் கலந்து கொண்டிருந்தன.

https://telegram.me/aedahamlibra

# 48.

# கடற்புலித் தாக்குதல்

வேந்தனிடமிருந்து கட்டளை கிடைக்கப்பெற்ற அடுத்தக் கணம் ஒட்டு மொத்த கடற்படையையும் திரட்டிக் கொண்டு பரதவன் குமாரனைக் கடற்போரில் வீழ்த்த புறப்பட்டிருந்தான் கூட்டுக் கடற்படையின் தலைவன். கடற்பரப்பில் பெருமழை பெய்து கொண்டிருந்தது. அலைகளும் மரக்கலங்களைப் புரட்டிப் போடுவதைப் போன்று ஆளுயரத்திற்கு எழுந்து கொண்டிருந்தன. நங்கூரங்களை விடுவித்ததால் அலைகள் மற்றும் அதிவேகக் காற்றினால் சர்ப்ப முகக் காலங்கள் அனைத்தும் விரைந்து செல்

லத் துவங்கின. கருட வியூகத்தில் சர்ப்ப முகக் கலங்களை அணிவகுத்து முன் னேறிக் கொண்டிருந்தான் கடற்படைத் தலைவன். அக்ரமந்திரக் கலம் நடுநாயக மாக விளங்க அதை இரண்டு புறத்திலும் சர்ப்ப முகக் கலங்கள் சூழ்ந்தபடி முன் னேறின.

பரதவன் குமரனும் கடலில் அவர் களை எதிர்த்துத் தாக்க அணிவ குத்து நின்று கொண்டிருந்தான். பெரு மழை பொழிந்ததால் பரதவன் கும ரானால் எதிரிகளின் அணிவகுப்பைத் தெளிவாகக் காண இயலவில்லை. அவ் வப்போது வானில் தோன்றிய மின்னலின் வெளிச்சத்தினால் எதிரிகளின் கலங்கள் அனைத்தும் மொத்தமாக அணிவகுத்து வருவதை அறிந்து கொண்டான்.

மனதில் தயக்கம் என்பது சிறிதும் இன்றிக் கையில் தங்களது வீர வாளி னைத் தாங்கிக் கொண்டு நின்று கொண் டிருந்தனர் கடற்புலிகள்.

பேரலைகளில் மிதந்தபடி அதி வேகமாக இவர்களை நோக்கி வந்து

கொண்டிருந்தன கலங்கள். பரதவன் குமரனும் அவர்களை நேருக்கு நேர் எதிர்த்துத் தாக்க முடிவு செய்து, "துடுப் புகள் துழாவப்படட்டும்" எனக் கட்டளை யிட்டான்.

உடனே சொழாந்தியத்தின் துடுப் புகள் அனைத்தும் துழாவப்படக் கலங் கள் நகரத்தொடங்கின. நேற்றைய தாக் குதலில் கைப்பற்றப்பட்ட நூற்றுக்கணக் கான சர்ப்பமுகக் கலங்களையும் கலத் தில் இறக்கியிருந்தான் பரதவன் கும ரன். சொழாந்தியக் கலங்கள் அனைத் தும் நடுவில் செல்ல அவற்றை இரண்டு புறத்திலும் சூழ்ந்தபடி சர்ப்பமுகக் கலங் கள் முன்னேறிக் கொண்டிருந்தன.

இரண்டு மரக்கலப் படைகளும் நேருக்கு நேர் மோதுவதற்கு விரைந்து வந்து கொண்டிருந்தன. விழிகளுக்கு எட்டும் தொலைவில் வந்திருந்தன கூட் டுப் படையின் சர்ப்ப முகக் கலங்கள். சர்ப்ப முகக் கலங்களில் நின்று கொண்டி

ருந்த வில் வீரர்களுக்கு, "எரியம்புகளை அவர்களை நோக்கி எறியுங்கள்!" எனக் கட்டளையிட்டான் பரதவன் குமரன்.

உடனே வில் வீரர்கள் எதிர்த்து வந்த மரக்கலங்களை நோக்கி எரியம்புகளையும், அம்புகளையும் மாறி மாறி வில் நாணில் தொடுத்து எய்யலானார்கள். கொட்டும் பெருமழையிலும் அரக்குகள் தோய்க்கப்பட்ட எரியம்புகள் அணையாமல் சென்று எதிர்த்து வந்த சர்ப்ப முகக் கலங்களின் மீது விழத்தொடங்கின. பாய்மரங்களின் மீது விழுந்த எரியம்புகள் அவற்றைத் தீப்பற்றச் செய்தன. பெருமழை பெய்து கொண்டு இருந்ததால் எரியம்புகளின் தாக்கம் குறிப்பிடும்படி இருக்கவில்லை. அரக்குகள் தீப்பற்றிச் சுடர்விட்டு எரியுமுன் கொட்டும் பெருமழையே அவற்றை அணைத்திருந்தன.

சோழர்கள் எரியம்புகளை எய்யத் தொடங்கியதும் சொழாந்தியக் கலங்களை நோக்கி சர்ப்ப முகக் கலங்களி

லிருந்தும் அம்பு மழையினைக் கொட்டும் மழையோடு சேர்த்து எய்யத் தொடங்கினார்கள். அதை எதிர்பார்த்த சோழர் கடற்படையினர் கேடயங்களை உயர்த்தி அவற்றின் தாக்குதலிலிருந்து தங்களைக் காத்துக் கொண்டார்கள்.

இரண்டு கடற்படையும் நேருக்கு நேர் மோதிக்கொள்ளும் நிலை."சர்ப்ப முகக் கலங்கள் மட்டும் விரைந்து சென்று நேருக்கு நேர் மோதித் தாக்குதல் தொடுக்கட்டும். சொழாந்தியக் கலங்களின் வேகம் குறைக்கப்படட்டும்" திடீரென்று கட்டளையிட்டான் பரதவன் குமரன்.

உடனே சொழாந்தியக் கலங்களின் துடுப்புகள் அனைத்தும் துழாவப்படாமல் நீரில் நீட்டிக் கொண்டு அப்படியே நின்றன. துடுப்புகளுக்கும், நீருக்கும் இடைப்பட்ட உராய்வினால் சொழாந்தியக் கலங்கள் அனைத்தும் உடனே நின்றன.

காற்று எத்திசையில் வீசினாலும் முன்னோக்கி விரைவாகச் செலுத்தும் அளவிற்கு மூன்று பாய்மரங்களைக் கொண்ட சர்ப்ப முகக் கலங்கள் மட்டும் சொழாந்தியக் கலங்களிலிருந்து விடுபட்டு எதிரில் வந்த எதிரிகளின் கூட்டுக் கடற்படையை நோக்கி விரைந்து சென்று நெருக்கு நேர் மோதின.

இரண்டு படைகளும் நேருக்கு மோதியதில் இரண்டு படைக் கலங்களும் சேதமடைந்து கலங்களுக்குள் நீர் புகத் தொடங்கின. சோழ வில் வீரர்கள் அனைவரும் கையிலிருந்து வில்லினைக் கீழே எறிந்துவிட்டு வேலினைக் கையில் எடுத்துக் கொண்டு எதிரிகளின் கலத்திற்குள் தாவி குதித்துத் தாக்குதல் தொடுக்கலானார்கள்.

சேர, பாண்டிய மற்றும் சிங்களப் படை வீரர்கள் கையிலிருந்த வில்லின் நாணில் அம்புகளைப் பூட்டிக் குறிபார்த்து எறிவதற்குள் கையிலிருந்த

வேலினை அவர்களின் உடலுக்குள் பாய்ச்சத் தொடங்கினார்கள் சோழ வீரர் கள். வில் வீரர்களின் எய்யும் அம்புகளை விடவும் சோழர் படையின் கருணையற்ற வேல்கள் சுழன்று சுழன்று அவர்களைத் தாக்கின. கலங்கள் நேருக்கு நேர் மோதி யதில் ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து அவர் கள் விடுபடுவதற்குள் முன் வரிசை மரக் கலத்தில் நின்றிருந்த அனைத்து வில் வீரர்களையும் கொன்று போட்டிருந்தது சோழர்களின் வேல் படை.

நேரம் கடக்கக் கடக்கச் சோழர் படையின் தாக்குதல் தீவிரமடையத் தொடங்கினாலும் சர்ப்ப முகக் கலங்கள் அவர்களைச் சுற்றி வளைக்கத் தொடங் கின. அக்கலங்களிலிருந்து பாய்ந்து வந்த வாள் வீரர்களும், வேல் வீரர்களும் சோழ வேல் வீரர்களை நேருக்கு நேர் தாக்கத் தொடங்கினார்கள்.

வில் வீரர்களை எளிதில் தாக்கிக் கொன்றதைப் போன்று சோழ வீரர்களால்

https://telegram.me/aedahamlibra

கூட்டுப் படையின் வாள் வீரர்களை எளி தில் தாக்கி அழிக்க இயலவில்லை. ஆங் காங்கே சிதறி நின்று கொண்டு தாக்கிக் கொண்டிருந்த வேல் வீரர்கள் அனைவ ரும் உடனே ஒன்றுகூடினார்கள். வட்ட வியூகம் அமைத்து நேருக்கு நேர் சுற்றி வளைத்த படை வீரர்களை எதிர்த்துத் தாக்கிக் கொண்டிருந்தார்கள்.

சோழ வீரர்களுக்குத் தெரியும். இனி அங்கிருந்து உயிரோடு வெளி யேற இயலாது என்று. வட்ட வியூ கத்தில் நின்றபடியே அவர்களை எதிர் கொண்டு தாக்கத் தொடங்கினார்கள். விளக்கினை நோக்கி ஆவலுடன் செல் லும் விட்டில் பூச்சி எரிந்து விழுவதைப் போன்று வேற்படையின் வட்ட வியூ கத்தை நோக்கித் தாக்குவதற்குச் சென்ற வீரர்களும் வேல்களால் உடல் கிழிக் கப்பட்டுக் கீழே விழுந்தார்கள். முதலில் சில கலங்களே சுற்றி வளைக்கப்பட்ட நிலையில் அவர்களை வட்ட வியூகத் தில் நின்று கொண்டு சிறப்பாக எதிர்த்துத்

தாக்கினார்கள். ஆனால், நேரம் கடக்கக் கடக்கச் சோழப்படை வீரர்களும் மார்பில் விற்களும், வேல்களும் தாங்கி விழ அவர்களின் வலிமை குறையத் தொடங்கியது. பல கலங்கள் சுற்றி வளைக்கப்பட்டதும் அதிலிருந்து வில் வீரர்களும், வேல் வீரர்களும் இவர்களைச் சுற்றி வளைத்து நின்று கொண்டார்கள்.

“இனியும் நீங்கள் தாக்குதல் தொடுக்க முயற்சிக்க வேண்டாம்! சரணடைந்து விடுங்கள்!” கட்டளையிட்டான் பாண்டிய நாட்டு உபதளபதி ஒருவன்.

கண நேரமும் இனி தாக்குப்பிடிக்க இயலாத நிலை. அனைவரின் வில் மற்றும் வேல்களும் இவர்களையே குறி பார்த்துக் கொண்டு நின்று கொண்டிருந்தன.

பாண்டிய நாட்டு உபதளபதிக்கு முன் வந்த சோழ வீரர்களை வழிநடத்திக் கொண்டிருந்த வேல்படைத் தலைவன் சிரித்தபடியே, “சோழர் படை ஒருநாளும்

https://telegram.me/aedahamlibrary

சரணடையப் போவதுமில்லை. ஒருநாளும் தோற்கப்போவதும் இல்லை”எனக் கூறிக் கையிலிருந்த ஒற்றை வேலினை எறிந்து அவனது மார்பினைப் பிளந்து போட்டான். உடனே மற்ற சோழ வேல் வீரர்களும் கையிலிருந்த வேல், வாள், இடையில் பாதுகாப்பிற்க்காக வைத்திருந்த குறுவாட்கள் ஆகியவற்றை அடுத்தடுத்து அதிவேகத்தில் எறியலானார்கள். காற்றில் பறந்து சென்ற ஆயுதங்கள் அனைத்தும் சுற்றி நின்றவர்களின் உடல்களில் தஞ்சமடைந்திருந்தன.

கிடைத்துவிட்ட சிறு கால அவகாசத்தைப் பயன்படுத்துகொள்ள நினைத்த வேல்படைத் தலைவன், “வீரர்களே, கடலுக்குள் குதியுங்கள்!” எனக் கட்டளையிட்டு அவனே முதல் ஆளாகப் பொங்கிக் கொண்டிருந்த கடலுக்குள் குதிக்கவும் செய்தான். அவனைப் பின்தொடர்ந்து உயிரோடிருந்த மற்ற வேல் வீரர்களும் கடலுக்குள் குதித்தார்கள்.

https://telegram.me/aedahamlibra

வில் வீரர்கள் அனைவரும் கடலுக்குள் குதித்த சோழர் படை வீரர்களை நோக்கி அம்புகளையும், வேல்களையும் எறியலானார்கள். ஆனால், அம்பு அவர்களை அடைவதற்குள் அதிவேகமாக வந்து கொண்டிருந்த அலைகள் சோழ வீரர்களை வெகு தொலைவிற்கு அடித்துச் சென்று விட்டிருந்தன.

சோழ வீரர்களின் முதல் கட்டத் தாக்குதலைக் கண்ட கடற்படைத் தலைவன், "கலங்கள் அனைத்தும் முன்னோக்கிச் செல்லட்டும்!" எனக் கட்டளையிட்டான்.

அடுத்தக் கணம் கலங்கள் அனைத்தும் பரதவன் குமரனை நோக்கி நகரத் தொடங்கின. வில் வீரர்கள் மீண்டும் சொழாந்தியக் கலங்களை நோக்கிக் குறி குறிபார்த்து அம்புகளை எறியத் தொடங்கினார்கள்.

கேடயத்தால் தாக்க வந்த அம்புகளைத் தடுத்துக் கொண்டே வீரர்

களே, "பொறுமை காப்போம்!" கட்டளை யிட்டான் பரதவன் குமரன். சர்ப்பமுகக் கலங்கள் அனைத்தும் அருகில் நெருங் கியிருந்தன. கடற்பரப்பில் எழுந்துவந்த அலைகளையும், வேகமாகத் தாக்க வந்த சர்ப்ப முகக் கலங்களையும் மாறி மாறி நோக்கினான் பரதவன் குமரன்.

சர்ப்பமுகக் கலங்கள் இன்னும் வெகு அருகில் நெருங்கியிருந்தன.

தொடர்ந்து அம்புகளை எய்து கொண்டே இருந்தார்கள். கலங்கள் இன்னும் நெருங்கி வந்து கொண்டிருந் தன. அவர்கள் எய்த அம்புகள் பெரும் வேகத்தோடு வந்து விழத் தொடங்கின.

"கலங்கள் அனைத்தும் பின்வாங் கட்டும்!" கட்டளையிட்டான் பரதவன் குமரன்.

அடுத்தக் கணம் சொழாந்தியங்க ளின் துடுப்புகள் அனைத்தும் பின் னோக்கிச் செலுத்தப்பட்டன. கலங்கள்

அனைத்தும் அதிவேகத்தில் பின்வாங்கின.

பின்வாங்கிச் செல்லும் சோழர் கலங்களைக் கண்ட கடற்படைத் தலைவன், “பின்வாங்குகிறார்கள். விரட்டிச் சென்று தாக்குவோம்!” எனக் கட்டளையிட்டான்.

சர்ப்ப முகக் கலங்கள் அனைத்தும் சொழாந்தியக் கலங்களை விரட்டத் தொடங்கின. நேற்று எதிர்த்துத் தாக்கியவர்கள் இன்று புறமுதுகிட்டு ஓடுவதைக் கண்ட சேர, பாண்டிய மற்றும் சிங்களக் கடற்படை வீரர்கள் பெரும் உத்வேகம் கொண்டு விரட்டத் தொடங்கினார்கள்.

சர்ப்ப முகக் கலங்களின் மாறிவிட்ட வியூகம், சாதகமற்ற அலைகளின் போக்கு ஆகியவற்றைக் கண்ட பிறகே பரதவன் குமரன் இருக்கும் கடற்படையைக் காப்பதற்காகப் படையைப் பின் வாங்கியிருந்தான். அவர்களின் தாக்குதலிலிருந்து தப்பிப்பதற்காக மொத்தப்

படையையும் காவேரி நதியை நோக்கி நகர்த்திக் கொண்டிருந்தான்.

சர்ப்ப முகக் கலங்களும் இவர்களை விரட்டிக் கொண்டு வந்து கொண்டிருந்தன.

'காவேரி நதிக்குள் குணக் கடலின் அலைகளின் உதவியுடன் ஊடுருவ முயலும் சர்ப்ப முகக் கலங்கள் அனைத்தும் காவேரியில் பெருகி ஓடும் நதியின் தீரத்தில் நிலை தடுமாறும். அப்போது அவர்களைத் திருப்பித் தாக்கி அழித்துவிடலாம்' எனும் திட்டத்துடனே பரதவன் குமரன் விரைவாகப் படையைப் பின் வாங்கியிருந்தான்.

ஆனால், பரதவன் குமரன் எதிர்பார்த்ததைப் போன்று சர்ப்ப முகக் கலங்கள் நதிச் சங்கமத்தில் எந்தவித தடுமாற்றத்தையும் சந்திக்கவில்லை. காவேரி நதி கடலுக்குள் கலந்த அதே வேகத்திலேயே கடலுக்குள் அலைகள் எழுந்து கொண்டிருந்ததால் சர்ப்ப முகக் கலங்

கள் எந்தவித தடுமாற்றமும் இன்றி நதிக்குள் பிரவேசித்திருந்தன.

பரதவன் குமரனின் அடுத்தகட்ட எதிர்பார்ப்பும் தகர்ந்துபோனது. நதிக்குள் விரைந்து தாக்குவதற்காகவே வடிவமைக்கப்பட்ட சர்ப்ப முகக் கலங்களின் தாக்குதலை நதியில் பரதவன் குமரனின் சொழாந்தியக் கலங்கள் எதிர்கொள்ளத் தயாராகின. சர்ப்ப முகக் கலங்களிலிருந்து அம்புகள் சொழாந்தியக் கலங்களை நோக்கிப் பறந்து வந்து தாக்கிக் கொண்டிருந்தன. பின்வாங்கிய சொழாந்தியக் கலங்கள் சர்ப்ப முகக் கலங்களால் தாக்கப்பட்டு மூழ்கத் தொடங்கின.

திட்டத்தின்படி காவேரி நதிக்குள் ஊடுருவிவிட்ட கடற்படை ஆவேசத்துடன் சொழாந்தியக் கலங்களை விரட்ட ஒட்டுமொத்த கலங்களையும் ஆற்றுக்குள் இறக்கிவிட்டிருந்தான் கடற்படைத் தலைவன். நதிச் சங்கமத்தில் விரிந்து காணப்பட்ட காவேரி நதியின் அகலம்

அவர்கள் நதிக்குள் கடக்கக் கடக்கக் குறுகத் தொடங்கியது. சர்ப்ப முகக் கலங்கள் அனைத்தும் நெருக்கமாகப் பயணிக்கத் தொடங்கின.

பெருமழை தொடர்ந்து கொட்டிக் கொண்டிருந்தது. மழைத் துளிகள் பார்வையை மறைத்திருந்தன. தனக்கு முன்னால் பின்வாங்கிச் சென்று கொண்டிருந்த சொழாந்தியக் கலங்களைப் பார்த்தபடியே சர்ப்ப முகக் கலங்களைச் செலுத்திக் கொண்டிருந்தார்கள்.

அவர்களின் தாக்குதல் வேகம் குறையவில்லை. அவர்கள் எதிர்பார்த்ததைப் போன்றே சோழர் கலத்தை நெருங்கியிருந்தார்கள். இன்னும் சற்று நேரம் தான் சர்ப்ப முகக் கலங்கள் சோழர் கலங்களை நெருங்கி விடும் என்ற நிலை.

அப்போது திடீரென்று சர்ப்பமுகக் கலங்கள் அனைத்தும் எதிலோ உரசி, 'மட மட'வென்ற முறியும் சத்தம் எழுந்தது. முன் வரிசையில் சென்ற சர்ப்ப

https://telegram.me/aedahamlibrary

முகக்கலங்கள் அனைத்தும் பாறைகளில் மோதி சுக்கு நூறாக உடைந்து ஆற்றுக்குள் மூழ்கத் தொடங்கின. பின் வரிசையில் அதி வேகமாக வந்த கலங்களால் திடீரென்று வேகத்தைக் கட்டுப்படுத்த இயலவில்லை. முன்னால் பாறை தட்டி சிதைந்து போன கலங்களின் மீது வேகமாக மோதத் தொடங்கின. பின்னால் வந்த கலங்களும் இதே நிலையில் ஒன்றுக்கொன்று மோதிக் கொண்டன.

பரதவன் குமரனின் சூழ்ச்சியில் வசமாகச் சிக்கிக் கொண்டதைக் காலம் கடந்தே அறிந்து கொண்டான் கடற்படைத் தலைவன். பாறைகளில் மோதியும், கலங்களுடன் மோதியும் மூழ்கிப்போன கலங்கள் போக எஞ்சியிருக்கும் கலங்களைக் காப்பாற்ற கட்டளைகளைப் பிறப்பிக்கத் தொடங்கினான் கடற்படைத் தலைவன்.

ஆனால், அவனது கட்டளைகளை நிறைவேற்ற அவனுக்கு எந்தவொரு

கால அவகாசத்தையும் சோழ வீரர்கள் அளித்திருக்கவில்லை.

அருகில் உயர்ந்திருந்த குன்றுத் துறையில் தயாராகயிருந்த டாள்தொபி யாஸ் தனது படையுடன் குன்றிலிருந்து நெருங்கிச் சிக்கியிருந்த சர்ப்ப முகக் கலத்திற்குள் பெரும் ஆவேசத்துடன் குதிக்கலானான். அவனைப் பின்தொ டர்ந்து நூற்றுக்கணக்கான யவன வீரர் களும் அவனுடன் குதிக்கலானார்கள். குதித்த வேகத்தில் தனக்கு முன்னால் நின்று கொண்டிருந்த கடற்படை வீரர்க ளின் தலையைக் கொய்யத் தொடங்கி னான் டாள்தொபியாஸ். கடந்த ஒரு வரு டமாகத் தேக்கி வைத்திருந்த கோபம் வெறித்தனமாக அவனது வாளின் மூலம் வெளிப்பட அவனை எதிர்க்க வந்த வீரர் களைக் கருணை என்பது சிறிதும் இன்றி வெட்டி எறிந்தபடி அக்ரமந்திரக் கலத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தான் டாள்தொபியாஸ். டாள்தொபியாசிற்குத் துணையாக அவனுடன் குதித்த யவன

மற்றும் சோழ வீரர்களும் கருணை என் பதை முற்றிலும் மறந்து அனைவரையும் கொன்று ஆற்றுக்குள் வீசத் தொடங்கி னார்கள்.

எந்த நோக்கத்திற்காகப் பரதவன் குமரன் தனது சொழாந்தியப் படை யைப் பின்வாங்கிக் கொண்டு வந் தானோ, அந்த நோக்கம் நிறைவே றியதும் பதுங்கிய கடற்புலிகள் மீண் டும் அவர்களை எதிர்த்துத் தாக்கலா னார்கள். தனது கடற்படை வீரர்களுடன் பரதவன் குமரனும் ஒரு புறத்திலிருந்து தாக்குதல் தொடுக்கத் தொடங்கினான். சோழ வீரர்களிடமிருந்து தப்பிக்க மார்க் கமே இல்லை என்பதை உணர்ந்த கூட் டுக்கடற்படை வீரர்கள் எதிர்த்து தாக்கத் தொடங்கினார்கள்.

இரண்டு பிரிவினருக்கும் இடை யில் கடுமையான போர் நடைபெற்றது. குறுகிய எல்லைக்குள் சிக்கிக் கொண் டதால் கூட்டுக் கடற்படை வீரர்களின்

எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும், நேரத்திற்கு நேரம் அவர்களின் எண் ணிக்கை குறைந்து கொண்டே வந்தது.

கடற்படைத் தலைவனைக் கொன் றால் போர் உடனே முடிவுக்கு வந்துவிடும் என்பதை உணர்ந்த டாள்தொபியாசும், பரதவன் குமரனும் கடற்படைத் தலைவ னிடம் நெருங்காமல் மற்ற அனைவரை யும் கொன்று குவித்துக் கொண்டிருந் தார்கள்.

பொழுது உச்சியைக் கடந்த பிறகும் போர் நீடித்துக் கொண்டிருந்தது. இருங் கோவின் பெரும்படை புகாரை விட் டுப் புறமுதுகிட்டு ஓடத் துவங்கிய அதே நேரத்தில் காவேரி நதியில் ஒட்டு மொத் தக் கடற்படை வீரர்கள் அனைவரையும் நீர்ச் சமாதி செய்து கொண்டிருந்தார்கள் பரதவன் குமரனும், டாள்தொபியாசும்.

வேந்தனால் கடற்படைக்கு ஆதர வாகக் காவேரி நதிக்கு தெற்கே நிறுத் தப்பட்டிருந்த சிறு படையை வேல் வீரர்

களைக் கொண்டு விரைவுத் தாக்குதல் நடத்தி முன்பே அழித்திருந்தான் டாள் தொபியாஸ். உறைந்தையிலிருந்து வேந் தனின் ஏற்பாட்டின்படி வந்த முப்பது பெருங்கலங்களையும் குன்றுத் துறைக்கு அருகில் நின்ற பெருந் தூணிலிருந்து பாறைக் கற்களை வீசச் செய்து அனைத் தையும் மூழ்கடித்திருந்தார்கள்.

கடற்படைக்கு ஆதரவாக வேந்த னது ஏற்பாடுகள் அனைத்தும் முறியடிக் கப்பட்டுப் புகாரை முற்றுகையிட கலங்க ளில் வந்திருந்த வீரர்கள் அனைவரை யும் கொன்றுவிட்டுக் கடைசியாகக் கடற் படைத் தலைவன் தங்கியிருந்த அக்ர மந்திரக் கலத்தை அடைந்தார்கள் இரு வரும். அக்கலத்தைச் சுற்றிலும் சோழ வீரர்கள் சுற்றி வளைத்துக் கொண்டிருந் தார்கள். பெரு மழை பெய்தாலும் அவர் களின் உடலில் படிந்த குருதித் துளிகள் தொடர்ந்து வடிந்து கொண்டே இருந் தன.

தன்னுடன் துணையாக வந்திருந்த அனைத்து வீரர்களும் கொல்லப்பட்ட நிலையிலும் தனியொருவனாக வீரத்துடன் கையில் நீண்ட வாளுடன் சமர் செய்தபடி நின்று கொண்டிருந்தான் சேர நாட்டுக் கடற்படைத் தலைவன். பாண்டிய மன்னரின் கட்டளையின் பேரில் பெரும் படைக்குத் தலைமை தாங்கி முசிறியிலிருந்து வந்திருந்தவன்.

அவனது முகத்திலும், உடலிலும் படிந்திருந்த குருதிக் கறைகள் அவனது வீரத்தைப் பறை சாற்றின. அவனும் பெரும் வீரன் தான். ஆனால், அவனது பெரும்படையின் மீது அவன் வைத்திருந்த அதீத நம்பிக்கை அவனைத் தோல்வியில் சிக்கவைத்திருந்தது.

பரதவன் குமரனும், டாள்தொபியாசும் அவனையே இரண்டு புறத்திலிருந்தும் நின்றபடி பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

இருவரையும் திரும்பித் திரும்பிப் பார்த்த கடற்படைத் தலைவன், "தகுதியுடைய ஒரு கடற்படைத் தலைவனிடம் தான் நான் தோற்றிருக்கிறேன் என்பதை நினைக்கையில் எனக்குப் பெருமையாக இருக்கிறது. வீரனாக நான் மரணிக்க விரும்புகிறேன்" எனக் கூறியவன் கையிலிருந்த வாளினை உயர்த்தினான்.

"குமரா, இவனது ஆசையை நிறைவேற்று!" கட்டளையிட்டான் டாள்தொபியாஸ்.

கண நேரமும் தாமதிக்காமல் பரதவன் குமரனும் வாளினை உயர்த்திக் கொண்டு கடற்படைத் தலைவனை நோக்கி நடந்துவந்தான்.

கடற்படைத் தலைவன்தான் பரதவன் குமாரனை முதலில் தாக்கினான். ஆனால், அவனுக்கு அதிகச் சிரமத்தை பரதவன் குமரன் கொடுக்கவில்லை. முதல் தாக்குதலிலேயே அவனது வாளினைப் பறக்க விட்டிருந்தான். அடுத்தக்

கணம் அவனது இதயத்தில் தனது வாளி னைச் செலுத்தி விட்டிருந்தான்.

“டாள்தொபியாஸ்...” எனக் கூறிய பரதவன் குமரன் தனது வாளினை உருவி கடற்படைத் தலைவனை டாள்தொபி யாசை நோக்கித் தள்ளி விட்டான். நிலை தடுமாறியபடி நடந்த கடற்படைத் தலை வனின் தலையை மட்டும் தனது வாளி னால் தனியாகப் பிரித்துக் கடலுக்குள் எறிந்தான் டாள்தொபியாஸ்.

https://telegram.me/aedahamlibra

# 49. குமரனின் ஏமாற்றம்

காவேரி ஆறு சேர, சோழ மற்றும் சிங்களக் கடற் படை வீரர்களின் குருதியினால் சிவந்து போய்க் கடலில் கலந்து கொண்டிருந்தது. வீரர்களின் பிணம் ஆறு முழுவதும் மிதந்து கொண்டிருந் தது. கடற்போரை வெற்றிகரமாக முடித் துவிட்ட பிறகு பரதவன் குமரன், “டாள் தொபியாஸ், கடற்படையின் வெற்றியை விரைந்து சென்று தெரிவித்துவிட்டு குன் றுத் துறைக்கு வா! நான் மற்ற நடவ டிக்கைகளைக் கவனித்து விட்டு வருகி றேன்” எனக் கட்டளையிட்டான்.

கடற்படையின் வெற்றியைத் தெரி விப்பதற்காக டாள்தொபியாஸ் மகிழ்ச்சி

யுடன் உடனே அங்கிருந்து செல்லலா னான்.

தனது உபதலைவர்களுக்கு வேண்டிய அனைத்து கட்டளைகளையும் பிறப்பித்த பரதவன் குமரன் வெகு நேரம் கழித்துக் குன்றுத் துறைக்குத் திரும்பி னான்.

குன்றுத் துறைக்குச் சென்ற பர தவன் குமரன் வியந்து போயிருந்தான். அதற்குக் காரணம் புகாரை முற்றுகை யிட்டிருந்த இருங்கோவின் பெரும்படை காணப்படவில்லை.

உடனே குன்றுத் துறைக் காவ லனை அழைத்த பரதவன் கும ரன், “தரைப் போர் என்ன ஆனது? புகாரை முற்றுகையிட்டிருந்த இருங்கோ வின் படையினர் ஒருவரைக் கூடக் காணவில்லையே!” என வினவினான்.

“கோட்டை மதிலைத் தாக்க வந்த இருங்கோவின் படையை நமது படை

யினர் முறியடித்துவிட்டனர். அவர்களை நமது படை விரட்டிச் செல்வதை இங் கிருந்து நான் கவனித்தேன். முழுத் தகவலை அறிந்துவரச் சொல்லி ஆள் அனுப்பியிருக்கிறேன் தலைவரே. வந்த பிறகு நிலைமை தெரிந்துவிடும்."

"நல்லது வீரனே! டாள்தொபியாஸ் வந்தால் காத்திருக்கச் சொல். டாள் தொபியாசுடன் நானும் யுத்த களத்திற் குப் புறப்படவிருக்கிறேன்! வேண்டிய ஏற் பாடுகளைச் செய்!" எனக் கூறிவிட்டு மீண்டும் காவேரி நதிச் சங்கமத்திற்குச் சென்ற பரதவன் குமரன் சேதமடையா மல் இருந்த கலங்களை மீட்கும் பணி யைச் சிறிது நேரம் மேற்பார்வையிட்டவன் பிறகு தனது புரவியில் கிளம்பி சமர் களத் திற்குச் செல்லும் ஆவலுடன் குன்றுத் துறையை நோக்கிப் புறப்பட்டான்.

ஆனால், அவன் குன்றுத் துறையை அடைவதற்குள் டாள்தொபியாசின் உப தளபதி ஒருவன் அவனை எதிர் கொண்

டான். அவனைப் பார்த்ததுமே பரத வன் குமரன், "டாள்தொபியாஸ் எங்கே?" எனத்தான் வினவினான்.

அவன் பதில் கூற வாயைத் திறந் தான். ஆனால், அதற்குள் முந்திக் கொண்ட பரதவன் குமரன், "தரைப் போர் என்ன ஆனது? முழு விவரத்தையும் தெரிவி" என அடுத்தக் கேள்வியையும் வினவினான்.

மகிழ்ச்சியுடனே, "தரைப் போரில் நமது படை பெரும் வெற்றியைப் பெற் றுவிட்டது. இருங்கோவின் படை கிட் டத்தட்ட அழிந்துவிட்டது. ஆனால், இருங்கோ, வேந்தன், யுவராஜன் ஆகி யோர் சிறு படையுடன் தப்பிவிட்டதா கச் செய்தி கிடைத்திருக்கிறது. எஞ்சிய படையையும், அவர்களையும் விரட்டிக் கொண்டு நமது படை சென்றிருக்கிறது."

"நல்லது... நல்லது... நானும் புறப்ப டப் போகிறேன்." எனச் சிலாகித்த பரத வன் குமரன், "டாள்தொபியாஸ் எங்கே?

அவன் தயாராகிவிட்டான் தானே!" என வினவினான்.

"கடற் படையின் வெற்றி தெரிவிக் கப்பட்டதும் படைத் தலைவர் வான வல்லி டாள்தொபியாசை அழைத்துக் கொண்டு வெண்ணிக்குச் சென்றுவிட் டார். எஞ்சிய படையினரையும் அவர்கள் அழைத்துக் கொண்டு சென்றுவிட்டார் கள்!"

"என்னிடம் தெரிவிக்காமல் கூட டாள்தொபியாஸ் எதற்காகப் புறப்பட் டான்? நான் எப்போது புறப்படுவது?" எனப் பரதவன் குமரன் வினவியபோது அவனது விழிகள் கோபத்தில் சிவந்து போயிருந்தன.

அதைக் கண்ட டாள்தொபியாசின் யவனத் தளபதி, "டாள்தொபியாசிற்குப் பதில்தான் வானவல்லி என்னை அனுப்பி வைத்திருக்கிறார்கள்!" எனப் பதிலளித் தான்.

https://telegram.me/aedahamlibra

“உன்னை எதற்காக அனுப்பி வைத்திருக்கிறார்கள். தரைப் போரின் வெற்றிச் செய்தியை தெரிவிப்பதற்காகவா?”

“இல்லை தலைவரே!”

“வேறு எதற்காக?”

பரதவன் குமரனின் கேள்விக்குப் பதில் கூறத் தயங்கினான் யவனத் தளபதி.

“தயக்கம் வேண்டாம்! கேட்ட கேள்விக்கான பதிலைக் கூறு!” அதட்டினான் பரதவன் குமரன்.

“அதிவேகமாகச் செல்லும் புரவிப் படையின் உதவியுடன் கரிகாலரும், வேளக்காரப் படைத் தலைவரும் புறமுதுகிட்ட இருங்கோவின் படையை விரட்டிச் சென்றிருக்கிறார்கள். மற்ற படைகளை உபபடைத் தலைவர்கள் டாள் தொபியாஸ் மற்றும் திருக்கண்ணன் இருவரின் உதவியுடன் வானவல்லி வெண்

https://telegram.me/aedahamlibra

ணிக்கு அழைத்துக் கொண்டு புறப் பட்டுவிட்டார்" எனக் கூறியவன் மேற் கொண்டு கூற இயலாமல் அஞ்சியபடி நிற்கலானான்.

"எதற்காகத் தெரிவித்த செய்தி யையே மீண்டும் தெரிவிக்கிறாய்?"

"புகாரில் கடற்படை மட்டுமே இப் போது பாதுகாப்பிற்கு நிற்கிறது."

"கடற்படை மட்டுமா?"

"ஆம்!"

"கடற்படையில் பாதி வீரர்களை நாம் இன்றைய போரில் இழந்துவிட் டோமே?"

"எஞ்சியிருக்கும் படையையும் உங் களையும் தான் புகாரின் பாதுகாப் பிற்கு வானவல்லி இருக்கச் செய்துவிட் டுச் சென்றிருக்கிறார்."

"நானுமா?" ஏமாற்றத்துடன் வினவி னான் பரதவன் குமரன்.

https://telegram.me/aedahamlibra

"ஆம்!"

"........"

"இந்தக் கட்டளையை எக்காரணம் கொண்டும் நீங்கள் மீறக் கூடாது என் பது படைத் தலைவர் வானவல்லியின் ஆணை! சமர்க் களத்திற்குச் சென்றிருக் கும் படை திரும்பி வரும்வரை புகாரின் காவல் தலைவராக உங்களை நியமனம் செய்திருக்கிறார்."

"இதை நான் ஏற்றுக் கொள்வேன் என்று படைத்தலைவர் எப்படி நினைத்தி ருக்கலாம்? நான் இல்லாமல் போரா???" வெகுண்டெழுந்தான் பரதவன் குமரன்.

"படைத் தலைவரின் கட்டளையை நீங்கள் மீறும் பட்சத்தில்..."

"மீறும் பட்சத்தில்....?"

"உங்களைச் சிறை செய்யவும் ஆணை பிறப்பித்துவிட்டே சென்றிருக்கி றார்!"

"என்னைக் கைது செய்யும் அளவிற்குத் துணிச்சல் இருக்கிறதா உனக்கு?"

"சிங்கள இளவரசனைப் பற்றி நமது ஒற்றர்கள் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். படைத் தலைவர் உறுதியாகக் கட்டளையிட்டுச் சென்றிருக்கிறார், புகாருக்குக் காவல் நீங்கள்தான் என்று! நான் சமர்க் களத்திற்குப் புறப்படுகிறேன் தலைவரே!" எனக் கூறியவன் பரதவன் குமரனின் பதிலை எதிர்பாராமல் திரும்பிச் செல்லலானான்.

இத்தனை காலங்களாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த பெரும் போரில் தன்னால் ஈடுபட இயலவில்லையே எனும் வருத்தம் அவனைப் பெரிதும் வாட்டியது. அந்த ஏமாற்றத்தை அவனால் எளிதில் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. நெடுநேரம் வருத்தத்துடன் குன்றுத் துறையிலேயே தனிமையில் கழித்த பரதவன் குமரன் பிறகு தனது புரவியில் பட்

https://telegram.me/aedahamlibra

டினத்திற்குள் சென்று பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கவனித்துவிட்டு உறுதி செய்த பிறகு மீண்டும் குன்றுத் துறைக்கே வந்து சேர்ந்திருந்தான்.

உயர்ந்த அந்தக் குன்றிலேயே அமர்ந்து கொண்டு வருத்தத்துடன் குருதியினால் சிவந்துகிடந்த குணக் கடலையும், பிணங்கள் மிதந்து கொண்டிருந்த காவேரியையும் மாறி மாறி ஆத்திரத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான். மழை பெய்து கொண்டு இருந்தாலும் மேற்கு வான முகில் கூட்டம் மட்டும் சற்று விலகி வானம் சிவந்துபோய்க் காணப்பட்டது.

அன்று நடந்த போரினை நினைத்துக் கொண்டு மீண்டும் பார்வையைக் குணக் கடலையொட்டி ஓட்டினான். அப்போது அவனது பார்வையை நம்ப இயலவில்லை. வெகு தொலைவில் நூற்றுக்கணக்கான மரக்கலங்கள் புகாரை நோக்கி வந்து கொண்டிருந்தன. மீண்டும் பார்

https://telegram.me/aedahamlibra

வையை மேலைத் திசைக்குத் திருப்பி னான்.

‘இன்னும் ஒரு நாழிகைப் பொழு திற்கு மேல் வெளிச்சம் நீடிக்காது!’என எண்ணியவன் அவசர அவசரமாக அவனது அறையிலிருந்து வெளியே ஓடி வந்து தனது உபதளபதிகளிடம், “எதி ரிகளின் இன்னொரு கடற்படை வந்து கொண்டு இருக்கிறது. தற்காப்பு ஏற்பா டுகள் அனைத்தும் தயாராகட்டும். நமது கலங்களை உடனே தயார் படுத்துங் கள்!” எனக் கட்டளையிட்டான்.

உடனே கடற்படை வீரர்கள் அனைவரும் விரைந்து செயல்படத் தொடங்கினார்கள். போதிய காலம் இல் லாததால் சோழர் கடற்படை தயாராவ தற்குள் அவர்களின் கலங்கள் புகாரைச் சுற்றி முற்றுகையிட்டிருந்தது.

பொழுதி மேற்கு வானில் சாய்ந்து விட்டிருந்ததால் அவர்கள் தாக்குதலைத் தொடுக்கவில்லை. மாலை மங்கிய ஒளி

https://telegram.me/aedahamlibra

யில் முற்றுகையிட்ட மரக்கலங்களை உற்று நோக்கினான். அனைத்திலும் சிங் கக் கொடி பறந்து கொண்டிருந்தது.

அதைப் பார்த்த பரதவன் குமரனின் உபதளபதிகள்"ஒற்றர்கள் கூறிய தகவல் பொய்க்கவில்லை. நாகத் தீவில் முகா மிட்டிருந்த சிங்கள இளவரசன் பெரும் படையுடன் புறப்பட்டு வந்துவிட்டான்!" என்று பதறியபடி தெரிவித்தார்கள்.

பரதவன் குமரன் எந்தப் பதிலையும் தெரிவிக்காமல் சூழ்ந்து நின்ற மரக்கலங் களையே வெறிக்க வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"நமது கடற்படையில் ஒரு பகு தியை இன்றைய போரில் இழந்துவிட் டோம். இவர்களின் பெரும் படையை நாம் எப்படிச் சமாளிக்கப் போகிறோம்? நமது தரைப் படைகள் அனைத்தும் புகா ரிலிருந்து கிளம்பி விட்டன!"

“அவர்கள் மட்டும் புகாரில் கால் பதித்தால் அடுத்தகணம் புகார் விழுந்து விடும்!”

“என்ன செய்வது தலைவரே, கட்ட ளையிடுங்கள்!”

அப்போதும் பரதவன் குமரன் நம் பிக்கையுடனும், நிதானத்துடனும் தெரி வித்தான்.

“அவர்கள் தரையில் கால் பதித் தால் தானே புகார் விழும். எத்தனையா யிரம் பேர் வந்தால் என்ன? நமது உட லில் உயிர் இருக்கும் வரை அவர்களால் புகாரை நெருங்க கூட இயலாது! அனை வரையும் நம் வாளினாலும், வேலினாலும் பலியிட்டு குணக் கடலுக்குள் வீசுவோம்!”

https://telegram.me/aedahamlibra

# 50. பணிந்த பரதவன் குமரன்

பல்லாயிரக்கணக்கான வீரர்களை ஏற்றிக் கொண்டு போர் தொடுக்கப் புகாருக்கு வந்திருந்த சிங்கள இளவரசனின் படை கடற்படை அல்ல. அனைவரும் காலாட், புரவி மற்றும் வில் வீரர்களே. ஆயிரக்கணக்கான புரவிகளையும் அவர்கள் ஏற்றி வந்திருந்தார்கள். சமயத்தில் அவை கடற்படையைப் போன்று செயலாற்றும் வல்லமை இருந்தாலும் சோழக் கடற்படையை அவர்கள் நேருக்கு நேர் கடலில் எதிர்கொள்ள அஞ்சினார்கள். அதிலும், குணக்கடல் முழுவதும் மிதந்து கொண்டிருந்த சிங்கள, சேர மற்றும் பாண்டிய

நாட்டு வீரர்களின் பிணங்களைப் பார்க்க பார்க்க அவர்களுக்குள் அச்சம் தானாகத் தோன்றிக் கொண்டிருந்தது. பெரும் கடற்படையைத் தாக்கி அழித்த சோழக் கடற்படையை நேருக்கு நேர் எதிர் கொள்ளத் தயங்கிய சிங்கள இளவரசன் புதுத் திட்டம் வகுத்திருந்தான்.

அதிகாலைப் பொழுதிலேயே வீரர்கள் அனைவரையும் கரையில் இறக்கி விட்டு விட வேண்டும் என முடிவு செய்து கரையை நெருங்கினார்கள். ஆனால், திடீரென்று அவர்களின் மீது பொழிந்த எரியம்புகளை அவர்களால் எதிர் கொள்ள இயலாததால் அனைவரும் கடலுக்கே மீண்டும் திரும்பினார்கள். அதிகாலை இருளில் சிங்களக் கடற்படை மேற் கொண்ட மேலும் சில முயற்சிகளை முறியடித்திருந்தான் பரதவன் குமரன்.

பொழுது விடிந்தது. பரதவன் குமரன் இரவு பொழுது முழுவதும் தீவிரமாகப் பணிபுரிந்து மீண்டும் படையைத் தயார் படுத்திக் காவேரி குணக் கடலுடன் சங்கமித்துக் கொண்டிருந்த சங்கமத்திற்கு

அருகில், அதாவது குன்றுத் துறைக்கு அருகிலேயே தனது படையை அணிவ குத்து நிறுத்தியிருந்தான்.

சிங்கக் கொடியுடன் வந்திருந்த சிங் களக் கலங்களைப் பார்த்த உடனே அக் கலங்களைப் பற்றியும், அதில் இருக்கும் வீரர்களைப் பற்றியும் ஒரு முடிவுக்கு வந் திருந்தான் பரதவன் குமரன்.

'வருகை தந்திருக்கும் கலங்கள் அனைத்தும் சமர்க்கலங்கள் அல்ல. அவை அனைத்துமே வீரர்களைத் தாங் கிப் பயணிக்கும் சாதாரணக் கலங்கள். ஆதலால் அவர்களை விரட்டுவது ஒன் றும் பெரிய காரியமல்ல'என நம்பிக்கை கொண்டான். ஒற்றர்கள் பதினைந்தாயி ரம் வீரர்கள் என்று தகவல் தெரிவித் திருந்தாலும் உண்மையில் அக்கலங்க ளில் எத்தனை வீரர்கள் இருக்கிறார் கள் என்று இவனுக்கும் தெரிந்திருக்க வில்லை.

நேற்றைய தாக்குதலில் பரதவன் குமரனும் தனது கடற்படைப் பலத்தில் பாதியை இழந்திருந்தான். புகார் காவல் வீரர்கள் அனைவரும் இருங்கோவின் படையை விரட்டிக் கொண்டு சென்று விட்டார்கள். ஆதலால் போதிய படை வலிமை இல்லாமல் கையறு நிலையில் தவித்தான் பரதவன் குமரன்.

'கைவசமிருக்கும் படையைக் கொண்டு சிங்களப் படை நேருக்கு நேர் மோதினால் அவர்களைக் கடலுக் குள் ஒரு கை பார்த்துவிடலாம். ஆனால், அவர்கள் விலகிச் சென்று கலங்களில் இருக்கும் வீரர்களைக் கீழே இறக்கி விட்டு தரை மார்க்கமாகப் போர் தொடுத் தால் புகாரின் நிலை என்ன ஆவது' எனச் சிந்திக்கையில் அம்மாவீரனின் மனதைத் திகில் கவ்வவும் செய்தது.

ஆனால் பரதவன் குமரன் எண்ணி யதைப் போன்று சிங்கள வீரன் எந்த முடி வையும் எடுத்திருக்கவில்லை. சோழக்

https://telegram.me/aedahamlibra

கடற்படையை நேருக்கு நேர் எதிர் கொண்டு அவர்களை முறியடித்துவிட்டு புகாருக்குள் நுழையலாம் எனத் தனது பெரும்படையின் மீது கொண்டிருந்த நம் பிக்கையால் படையைப் பரதவன் கும ரனை நோக்கி நகர்த்தினான்.

மழை இல்லாத குணக் கடலின் அலைச் சீற்றத்தில் சிங்களப் பெரும் படை பரதவன் குமரனை நோக்கி நகர்ந்து வந்தது. ஆழம் தெரியாமல் நீருக் குள் காலை விடுவது எப்படி முட்டாள் தனமோ அதைப் போன்றே புகார் கடற்ப ரப்பின் தன்மையை அறியாமல் கரையை நெருங்குவது புத்திசாலித்தனம் இல்லை என்பதை உணர்ந்த சிங்கள இளவரச னும் கரைக்கு வெகு அருகில் படையை முன்னெடுக்காமல் கரைக்கு அருகில் நின்று கொண்டிருந்த பரதவன் குமரனுக் குத் தொலைவில் கலங்களை நிறுத்தி யபடியே அம்புகளைத் தொடர்ந்து எறிய லானான்.

கேடயத்தை உயர்த்திச் சோழ வீரர்கள் அவ்வம்புகளைத் தாங்கிக் கொண்டார்கள். ‘அருகில் நெருங்கி வரட்டும் மரக்கலங்களைக் கொண்டு மோதச் செய்து அவர்களை வேல் வீரர்களுடன் அதிவேகத் தாக்குதல் ஒன்றைத் தொடுக்கலாம்’ என முடிவு செய்தே அமைதிகாத்தான் பரதவன் குமரன். பரதவன் குமரன் எண்ணியதைப் போன்று எதுவும் நடைபெறவில்லை.

சிங்களப் படை தொடர்ந்து தொலைவில் நின்றபடி அம்புகளை மட்டுமே எய்து கொண்டு தாக்கலானார்கள். ஒரு சாமப் பொழுது கடந்ததும் அவர்கள் எரியம்புகளை வீசத் தொடங்கினார்கள். பரதவன் குமரன் கலங்களைப் பின்னோக்கி நகர்த்திக் கொண்டான். அவர்களின் கலங்கள் சற்று நெருங்கி வந்தன. தொடர்ந்து நிதானமாகவே எரியம்புகளைத் தொடர்ந்து சிங்களக் கலங்கள் வீசிக் கொண்டிருந்தன.

அவர்களின் செயல்பாட்டிலிருந்து அவர்களின் திட்டத்தை அறிந்து கொண்டான். இனியும் தாமதிக்கக் கூடாது என்பதை உணர்ந்த பரதவன் குமரன் கையிலிருந்த வாளை உயர்த்தினான்.

வாளினை உயர்த்தியவன், “வீரர்களே, தயாராக இருங்கள்!” கட்டளையிட்டுக் கொண்டே கையினைக் கீழே இறக்கினான். அவன் கையை இறக்கிய அடுத்தக் கணம் குன்றுத்துறை மற்றும் கடற்கரைக்கு அருகில் நிலை கொண்டிருந்த இரண்டு பிரமாண்டத் தூண்களிலிருந்து எரியம்புகளும், பாறைக் கற்களும் பறந்துவந்து சரமாரியாகச் சூழ்ந்திருந்த சிங்களக் கலங்களின் மீது விழத் தொடங்கின. சிங்கக் கலங்களின் பாய்கள் எரியம்புகள் விழுந்ததால் தீப்பற்றின. பாறைக் கற்கள் விழுந்ததால் கலங்கள் உடைந்து மூழ்கவும் தொடங்கின. அணிவகுத்து நின்ற சிங்களப் படை சிதறத் தொடங்கியது.

https://telegram.me/aedahamlibra

இதுதான் தக்க சமயம் என்பதை உணர்ந்த பரதவன் குமரன், "முன் னேறுவோம்!" எனக் கட்டளையிட்டான். சோழக் கலங்கள் நெருங்கியதும் தூண் களில் இயங்கிக் கொண்டிருந்த வளை விற்பொறி மற்றும் கல்லெறி கவண் ஆகி யவை நிறுத்தப்பட்டன. விரைந்த வந்த சோழர் படை சிதறியிருந்த சிங்களக் கடற்படைக்குள் முழுவதுமாக ஊடுரு வித் தாக்கத் தொடங்கினார்கள்.

சிங்கள வீரர்களும் பதில் தாக்குதல் தொடுத்தாலும் சோழர்களிடம் இருந்த வெறி மற்றும் வேகம் ஆகியவை இல் லாத காரணத்தால் சிங்கள வீரர்களின் எண்ணிக்கை குறையத் தொடங்கியது. சிங்களர்கள் பதில் தாக்குதல் தொடுக்க எந்தவித சந்தர்ப்பத்தையும் அளிக்காமல் பரதவன் குமரன் ஊடுருவித் தாக்கிக் கொண்டிருந்தான்.

போரின் போக்கு மாறிக் கொண் டிருப்பதைக் கண்ட சிங்கள இளவர

சன், விரைந்து தற்காப்பு நடவடிக்கையில் இறங்கினான். சோழர்களுடன் நேருக்கு நேர் போரிட்டுக் கொண்டிருந்த கலங்களை மட்டும் விடுத்து மற்ற கலங்களை உடனடியாகப் பின்வாங்கச் செய்தான். உடனடியாக அவர்கள் பின்வாங்கியதால் பெரும்படை குமரனின் தாக்குதலிலிருந்து தப்பிப் பிழைக்க நேர்ந்தது.

நடுக்கடலுக்குள் விரட்டிச் சென்று தாக்குவது ஆபத்து என்பதை உணர்ந்த பரதவன் குமரனும் அவர்களை விரட்டிச் செல்லாமல் தனது படையை மீண்டும் ஒருங்கிணைத்து அவர்கள் கரையை நெருங்காத அளவிற்கு மீண்டும் அணிவகுத்து நின்று கொண்டான்.

அன்றைய நாளின் உச்சிப் பொழுதுவரை மீண்டும் சிங்களப் படை பரதவன் குமரனின் படையை நெருங்கவே இல்லை. மேலும் ஒரு நாழிகைப் பொழுது விரைந்து கடந்து கொண்டிருந்தது. பரிதி உச்சிக்கு வந்த அடுத்தக் கணம் சிங்க

ளப் படை மீண்டும் பரதவன் குமரனை நோக்கி நகரத் தொடங்கியது. படை குமரனை நெருங்க நெருங்க அவை மூன்றாகப் பிரியத் தொடங்கியது. பிரிந்த மூன்று படையில் ஒன்று மட்டுமே பரதவன் குமரனை நோக்கி வந்தது. மற்ற இரண்டு படைகளும் தெற்கு நோக்கி நகர்ந்து சென்று வளைவிற் பொறிகளின் தாக்குதல் தொலைவைக் கடந்து கரையிறங்கும் திட்டத்தில் சென்று கொண்டிருந்தார்கள்.

பரதவன் குமரனுக்குத் தெரியும் ‘சிங்களக் கடற்படை மட்டும் புகார் கரையில் கால் பதித்து விட்டால் அடுத்தகணம் வீரர்கள் இல்லாத புகார் எதிரிகளிடம் விழுந்து விடும். தமிழகச் சரித்திரமே மாற்றி எழுதப்பட வேண்டும்’ என்று.

பரதவன் குமரனும் தனது படையை இரண்டாகப் பிரித்து ‘சிறு படையை வளைவிற் பொறியின் உதவியுடன் நேருக்கு நேர் தாக்க வரும் கலங்

களை எதிர்கொள்ளட்டும். இன்னொரு பிரிவைக் கொண்டு விலகிச் செல்லும் கலங்களை விரட்டிச் செல்லலாம்' என்று சென்று கொண்டிருந்தான். வளைவிற் பொறியின் உதவியுடன் குமரனின் உப தளபதி தாக்க வந்த சிங்களப் படையை அவர்கள் கரையை நெருங்க இயலாமல் தடுத்துக் கொண்டிருந்தான்.

பிரிந்த சிங்களப் படை கரையை நெருங்கு முன்பே அவர்களை வழிம றித்துத் தாக்குதல் தொடுத்தான் பரத வன் குமரன். இரண்டு தரப்பு கலங்களும் நேருக்கு நேர் மோதிக் கொண்டன. வீரர் கள் மாற்றி மாற்றித் தாக்கிக் கொண்டார் கள். கடுமையான அதிவேகத் தாக்குத லால் சிங்களக் கடற்படையைக் கரையை விட்டு சிறிது சிறிதாக நகர்த்த பெரும்பாடு பட்டுக் கொண்டிருந்தான் பரதவன் கும ரன்.

போரில் வெல்லவும் வேண்டும், அதே நேரம் வீரர்களை இழக்கவும்

கூடாது எனும் நெருக்கடி நிலையில் போரிட்டுக் கொண்டிருந்தான் பரதவன் குமரன். சிங்களப் படை தற்காத்துக் கொள்ளப் பின்வாங்கத் தொடங்கியது. கரையைக் காவல் காத்துக் கொண்டு குமரன் நின்று கொண்டிருந்தான். அப் போது அவனது உப தளபதி குணக் கடலின் தெற்குத் தொடுவானில் வந்து கொண்டிருந்த மரக் கலங்களைச் சுட்டிக் காட்டினான்.

புகாரை நோக்கி வந்து கொண் டிருந்த மரக்கலங்களைத் தொடுவானில் பார்த்தபோதே அவைகளின் பிரமாண்ட வடிவம் மற்றும் எண்ணிக்கை ஆகியவற் றைக் கண்ட பரதவன் குமரன் வாய டைத்து நின்று கொண்டிருந்தான்.

“தலைவரே, இவர்களைக் கரையை நெருங்க விடாமல் செய்யவே நமது முழுச் சக்தியைப் பயன்படுத்திக் கொண்டு இருக்கிறோம். இந்த நிலை யில் இன்னொரு பெரும் படையா?” எனப்

பரதவன் குமரனின் உபதளபதி கலங்கிப் போய்த் தெரிவித்தான்.

"இனி புகாரைக் கடவுளே நினைத்தாலும் காப்பாற்ற இயலாது" எனக் கூறிக் கொண்டிருந்த போதே சிங்களக் கடற்படையினர் மீண்டும் ஏறிவந்து பரதவன் குமரனைத் தாக்கத் தொடங்கினார்கள்.

"வீரர்களே, கடலில் மடிந்தாலும் நாம் சுதந்திரமாகவே மடிந்து விழுவோம். பரதவன் குமரன் இறந்த பிறகே புகார் எதிரிகளின் கையில் விழுந்தது என்று நாளைய சரித்திரம் உரைக்கட்டும்! வாருங்கள்!" எனக் கூறிய பரதவன் மார்பில் தரித்திருந்த கவசத்தைக் கழட்டிக் கடலில் எறிந்துவிட்டு சிங்களப் படையை நேருக்கு நேர் மீண்டும் தாக்கலானான்.

'கடற்போரில் தோல்வி ஏற்படப் போவது உறுதி' என்பதை உணர்ந்த சோழர்களின் கடைசிக் கட்டத் தாக்குதல் கொடூரமாக இருந்தது. உயிர், போரில் வெற்றி என்ற இரண்டு ஆவ

லையும் இழந்திருந்த சோழ வீரர்கள் ‘இறப்பதற்குள் எத்தனை சிங்கள வீரர் களைக் கொல்ல முடியுமோ அத்தனை வீரர்களைக் கொன்றுவிட்டு உயிரை விட வேண்டும்’ எனும் முடிவில் இறுதிப் போரை அரங்கேற்றிக் கொண்டிருந்தனர்.

கையில் இரண்டு வாட்களைத் தாங்கி எதிர்ப்பட்ட வீரர்கள் அனைவ ரையும் கொன்று குவித்துக் கொண்டிருந் தான் பரதவன் குமரன். மூன்றாகப் பிரிந்த சிங்களப் படையின் ஒரு பிரிவை பரத வன் குமரன் கிட்டத்தட்ட அழித்து விட் டிருந்தான். இன்னொரு பிரிவு பரதவன் குமரனை பின்புறமாகச் சுற்றி வளைத்து விட்டிருந்தது. முன்னும் பின்னும் குமர னின் படை சுற்றி வளைக்கப்பட்ட நிலை. குன்றுத் துறைக்கு அருகில் பரதவன் கும ரனின் உபதளபதி தீரமாகப் போரிட்டுக் கொண்டிருந்தான்.

இரண்டு சிங்களப் படையும் பரத வன் குமரனை நசுக்குவதற்காக முன்

னும் பின்னும் நெருங்கிக் கொண்டிருந் தது. தெற்குத் திசையை நோக்கினான். பெரும்படை ஒன்று நெருங்கி வந்து கொண்டிருந்தது. சிங்கள வீரர்கள் தாக் கத் தொடங்கினார்கள்.

'வீர மரணம்!' என்பதை உணர்ந்த பரதவன் குமரன் ஆவேசமாகப் போரிட் டுக் கொண்டிருந்தான். அப்போது தொலைவிலிருந்து பறந்து வந்த எரி பந்து ஒன்று சிங்களக் கலங்களுக்கு மேலே சற்று உயரத்தில் வெடித்துச் சித றியது. இரும்புத் துகள்களும், கண்ணா டித் துண்டுகளும் பறந்து வந்து அருகில் நின்றிருந்த வீரர்களின் உடலைக் கிழித் துப் பெரும் சத்தத்தை எழுப்பியது. அந்த நெருப்புப் பிழம்பையும், பெரும் வெடிச் சத்தத்தையும் கேட்ட பரதவன் குமரன், சோழ வீரர்கள், சிங்கள இளவரசன் மற் றும் சிங்கள வீரர்கள் என அனைவரும் அக்கணம் அதிர்ந்து போனார்கள். போர் தொடுப்பதைக் கூட அனைவரும் நிறுத்

திவிட்டு அந்த எரிபந்து வந்த திசையை நோக்கினார்கள்.

புலிக்கொடி பறக்க பெரும் கடற் படை ஒன்று இவர்களை நெருங்கிக் கொண்டிருந்தது. பரதவன் குமரனால் தனது விழிகளை நம்ப இயலவில்லை. கண்களைக் கசக்கிக் கொண்டு மீண் டும் பார்த்தான். புலிக்கொடிதான் அது. ஆனால், அது எங்கிருந்து வருகிறது என் பதை அவனால் அனுமானிக்க இயல வில்லை.

அப்போது பரதவன் குமரனின் உபதளபதிதான் அந்த வார்த்தையை உதிர்த்தான்.

"செங்குவீரர்!"

'செங்குவீரர்' என்ற பெயரைக் கேட் டதும் இழந்த பலம், நம்பிக்கை என அனைத்தையும் திரும்பப் பெற்ற பரதவன் குமரன் நெருங்கி வந்திருந்த அக்கலங் களை நோக்கினான். மூன்று பெருங்க

லங்கள் வந்து கொண்டிருக்க அவற்றிற் குப் பின்னால் சிறு சிறு கலங்கள் நிறைய வந்து கொண்டிருந்தன.

மூன்று கலங்களையும் உற்று நோக் கினான். மையத்தில் வந்து கொண்டி ருந்த கலத்தின் யாழித் தூணில் செங் குவீரன் நின்று கொண்டிருந்தான். அவ னுக்கு இடப்புறக் கலத்தில் படைத் தலைவன் திவ்யனும், வலப் புறக் கலத் தில் யவன ஏந்திழை ஆண்ட்ரிமேடாவும் நின்று கொண்டிருந்தார்கள்.

விரைந்து வந்த கலங்கள் அனைத் தும் மூன்றாகப் பிரிந்து சிங்களக் கலங்க ளைச் சுற்றி வளைத்தன. கலங்கள் சுற்றி வளைக்கப்பட்டதும் சிங்களர்கள் மீண் டும் தாக்குவதற்கு ஆயத்தமானார்கள். அப்போது மீண்டும் செங்குவீரனது கலத் திலிருந்து எறியப்பட்ட எரிபந்து பெருத்த ஓசையுடன் வெடித்துச் சிதறி இரும் புத் தூள்களையும், நெருப்புப் பிழம்பை யும் வெளிப்படுத்தி மீண்டும் சிங்கள வீரர்

களின் உடல்களைக் கிழிக்க அவர்கள் தாக்குதலைக் கைவிட்டுவிட்டார்கள்.

ஒருபுறம் பரதவன் குமரனின் கடற்படை, மற்றொருபுறம் பரதவன் குமரனின் உபதளபதியின் கடற்படை, இன்னொரு புறம் குன்றுத் துறை மற்றும் கடற்கரைக்கு அருகில் பெருந்தூணில் நிறுத்தப்பட்டிருந்த வளைவிற்பொறி மற்ற புறங்களில் சூழ்ந்திருந்த படைத் தலைவன் செங்குவீரன், திவ்யன், ஆண்ட்ரிமேடா, இம்ஹோடெப், ஆண்ட்ரிமேடாவின் தளபதி ஆகியவர்களின் பெரும் கலங்கள் பேராயுதங்களைச் சுமந்து கொண்டு சூழ்ந்திருந்தன.

பெரும் சிங்களப் படை சுற்றி வளைக்கப்பட்டுச் சிறை பிடிக்கப்பட்டிருந்தது.

இறந்துபோனதாகக் கருதப்பட்ட சோழ படைத் தலைவர்கள் இருவரும் உயிரோடு, அதுவும் பெரும்படையுடன் திரும்பி வந்திருந்ததைக் கண்ட அனை

https://telegram.me/aedahamlibrary

வர்க்கும் உற்சாகம் பெருகத் தொடங்கியது. செங்குவீரனிடமிருந்து கட்டளை எப்போது பிறக்கும், சிங்களப் படையை எப்போது துவம்சம் செய்யலாம் எனக் கையில் ஆயுதத்துடன் வெறியுடன் நின்றிருந்தார்கள் சோழ வீரர்கள்.

சோழ வீரர்களை விடத் திவ்யனையும், செங்குவீரனையும் உயிரோடு பார்த்த சிங்கள இளவரசன்தான் பெரும் அதிர்ச்சியடைந்து காணப்பட்டான். அவனது கால் நடுங்கத் தொடங்கியது. ஏனெனில் திவ்யனை அடிமையாக யவனத்திற்கு அனுப்பியதிலும், செங்குவீரனைக் குணக் கடலில் மூழ்கடித்த நிகழ்விலும் அவனுக்குப் பெரும்பங்கு உண்டு. தனது விழிகளை நம்பலாமா? அல்லது வேண்டாமா? என அதிர்ச்சியில் நின்று கொண்டிருந்தான் சிங்கள இளவரசன்.

அப்போது படைத்தலைவன் செங்குவீரனும், திவ்யனும் சிறு கலம் ஒன்றில் ஏறி சிங்கள இளவரசன் நின்றிருந்த அக்

ரமந்திரக் கலத்தை நோக்கிச் சென்றார் கள். இருவருடனும் இம்ஹோடெப் மற் றும் சில அடிமை வீரர்கள் செல்லலா னார்கள்.

சிங்கள இளவரசனின் மெய்க் காவலர்கள் இவர்களை எதிர்த்தார்கள். அனைவரையும் இம்ஹோடெப் மற்றும் அடிமை வீரர்கள் எதிர்த்துத் தாக்கிக் கொன்று குணக் கடலுக்குள் எறிந்தார் கள். அக்ரமந்திரக் கலத்தில் சிங்கள இளவரசன் மட்டுமே தனித்து நின்று கொண்டிருந்தான். மற்ற மெய்க் காவல் வீரர்கள் அனைவரும் குணக் கடலில் மிதந்து கொண்டிருந்தார்கள்.

சுற்றிலும் அவனது சிங்கள வீரர்கள் ஆயிரக்கணக்கில் மரக்கலங்களில் நின்று கொண்டிருந்தார்கள். ஆனால், அவர்க ளால் சிங்கள இளவலை எண்ணிக் கவலை மட்டுமே பட முடிந்தது. சிங்கள இளவரசனை செங்குவீரன், திவ்யன் மற் றும் இம்ஹோடெப் ஆகியவர்கள் மூன்று

புறத்திலும் சுற்றி வளைத்துக் கொண்டு நின்றார்கள்.

அவர்களைப் பார்த்த சிங்கள இளவரசன், "எங்களது படை சரணடைகிறது!" எனத் தெரிவிக்கலானான்.

அவன் கூறியதைக் கேட்டு சிரித்த செங்குவீரன், "அதனை நாங்கள் ஏற்றுக் கொள்வோம் என்று நீ நம்புகிறாயா?" என வினவினான்.

அவனது பார்வையில் இருந்த ரௌத்திரத்தைக் கண்ட சிங்கள இளவரசன் மிரண்டு நின்று கொண்டிருந்தான்.

"நீங்கள் இருவரும் எப்படி உயிரோடு???" என அச்சத்துடனே வினவினான் சிங்கள இளவரசன். அவனது கால்கள் இரண்டும் அச்சத்தில் நடுங்கிக் கொண்டிருந்தன.

"உன்னைக் கொல்வதற்காகத் தான்!" எனக் கூறிய செங்குவீரன் இடையுறையிலிருந்து வாளினை உருவி, சிங்

கள இளவரசனை நோக்கி எறிந்தான். அதைப் பிடித்துக் கொண்டான் சிங்கள இளவரசன்.

திவ்யனை நோக்கிய செங்குவீரன், "நண்பா, இவனது உயிர் இவனது உடலி லிருந்து கொடூரமாகப் பிரியவேண்டும்!" எனக் கட்டளையிடலானான்.

வாளினை ஓங்கிக் கொண்டு திவ் யனை நோக்கி ஓடி வந்தான் சிங்கள இளவரசன். ஆனால், அடுத்தக் கணம் அவனது கை உடலிலிருந்து பிரிந்து வாளுடன் அக்கலத்தில் விழுந்தது. குருதி சிந்தியபடியே அவனது விழுந்த கை துடித்துக் கொண்டிருந்தது. சிங்கள இளவரசனும் துடித்தபடியே கீழே விழுந் தான்.

"எழுந்திரு!" கட்டளையிட்டான் திவ்யன்.

எழ முயன்றவன் கைகளில் ஏற்பட்ட குருதிப் பெருக்கால் நிலை தடுமாறி அரு

https://telegram.me/aedahamlibra

கில் இருந்த யாழித் தூணில் சாய்ந்து கொண்டான்.

அவனது இன்னொரு கையையும் அவனது உடலிலிருந்து வெட்டி எடுத்தான் திவ்யன். அவனது இரண்டு தோள் பட்டையிலிருந்தும் வெட்டப்பட்ட இடத்தில் குருதி நிற்காமல் பெருகி ஓடிக் கொண்டிருந்தது.

“மரணிப்பதற்குள் நான் கூறுவதையும் கேட்டுவிட்டு செத்துப் போ! நீ செய்த தவறின் பாவத்தை உனது நாட்டுப் படை வீரர்கள் அனுபவிக்கப் போகிறார்கள். உனது படை வீரர்கள் அனைவரும் அடிமைப் படுத்தப்படுகிறார்கள். இனி அவர்கள் சோழ நாட்டின் அடிமைகள்” எனச் சத்தமாகக் கூறிய திவ்யன் அவனது உச்சந்தலையின் சரி பாதியில் தனது செண்டாயுத்தைச் செலுத்தினான்.

உச்சந்தலையிலிருந்து மார்பு வரை இரண்டாகப் பிளந்த அவனது உடல் அக்ரமந்திரக் கலத்தில் விழுந்தது. சிங்கள

இளவரசனின் குருதி படிந்த முகத்துடன் பெரும் கோபத்துடன் அங்கிருந்து நகர்ந் தான் திவ்யன்.

உடனே சோழ வீரர்களுக்கு, "சர ணடைந்திருக்கும் சிங்கள வீரர்கள் அனைவரையும் கைது செய்து விலங்கி டுங்கள்! இவர்களின் கலங்கள், கலங் கள் தாங்கி நிற்கும் புரவிகள், ஆயுதங்கள் என அனைத்தையும் கொண்டு செல் லுங்கள்!" எனக் கட்டளையிட்ட செங்கு வீரன் பரதவன் குமரனை அழைத்தான்.

செங்குவீரனைப் பார்த்த மகிழ்ச்சி யில் பரதவன் குமரன், "தலைவரே..." என அழைத்தபடி கண்ணீர் ததும்ப ஓடி வந்து அணைத்துக் கொண்டான்.

பதிலுக்கு அவனை அன்புடன் தழுவி கொண்டான் செங்குவீரன்.

சிறிது நேரத்திற்குப் பிறகு செங்குவீ ரனுக்குப் பணிந்த பரதவன் குமரன், "கட் டளையிடுங்கள் தலைவரே!" என்றான்.

"நாங்கள் மரக்கலங்களில் கைப் பற்றி வந்திருக்கும் புரவிகள், சிங்களவர் களின் புரவிகள் என அனைத்தையும் தயார்படுத்து. நாம் விரைவில் வெண் ணிக்குப் புறப்படப் போகிறோம்!"

குமரன் செங்குவீரனை வியப்பு டன் நோக்கினான்."வியப்பு வேண்டாம் குமரா... பெரும்போர் வெண்ணியில் தானே நிகழவிருக்கிறது. எனது உபத லைவர்களைப் பற்றி எனக்குத் தெரி யாதா? அனைத்தும் தயார் நிலையில் இருக்கும் என்பதை நான் அறிவேன்!" எனத் தெரிவித்தவன் பிறகு சிறிது நேர அமைதிக்குப் பிறகு, "படையை வழிந டத்துவது வேளக்காரப் படைத்தலைவர் தானே!" என வினவவும் செய்தான்.

பரதவன் குமரன் வியப்புடன்"ஆ மாம் தலைவரே!" என மட்டும் பதிலளித் தான்.

சோழ வீரர்கள் சிங்கள வீரர் களுக்கு விலங்கிட்டு அழைத்து வர

திவ்யன், ஆண்ட்ரிமேடா, இம்ஹோடெப், ஆண்ட்ரிமேடாவின் தளபதி ஆகியவர்களைக் குன்றுத் துறைக்கு அழைத்துச் சென்றான் செங்குவீரன். பரதவன் குமரன் பணிவுடன், 'நடப்பதை நம்புவதா? அல்லது வேண்டாமா?' எனும் நினைப்பில் அவர்களுக்குப் பின்னால் சென்று கொண்டிருந்தான்.

குன்றுத் துறையின் சாளரத்தில் நின்று கொண்டு ஆண்ட்ரிமேடாவிடம், "இவன் எனது உபதலைவர்களுள் ஒருவன். என் உற்ற நண்பனும் கூட! பரதவன் குமரன்" எனக் கூறிய செங்குவீரன் குணக் கடலில் மிதந்து கொண்டிருந்த வீரர்களின் உடல்கள், உடைந்த மரக்கலங்கள் ஆகியவற்றைச் சுட்டிக் காட்டவும் செய்தான்.

ஆண்ட்ரிமேடா அவனை வியப்புடன் நோக்கினாள். மோகம் ததும்பும் அவளது விழிகளால் பரதவன் குமரனின் விழிகளுக்குள் ஊடுருவிபடி, "மிக

https://telegram.me/aedahamlibra

வும் திறமைசாலிதான்!" என மட்டும் பதி லளித்தாள்.

அவளது பார்வையை நேருக்கு நேர் தீண்ட சக்தியில்லாத பரதவன் கும ரன் அவளது பார்வையிலிருந்து தனது விழிகளை விலக்கிக் கொண்டான்.

செங்குவீரன், திவ்யன், ஆண்ட்ரி மேடா மற்றும் அடிமை வீரர்களை வியப்பு டன் நோக்கிய பரதவன் குமரன், "படைத் தலைவர்களே கடந்த ஒரு வருடமாக எங்குச் சென்றிருந்தீர்கள்?" ஆண்ட்ரி மேடா மற்றும் இம்ஹோடெப்பை நோக்கி, "இவர்கள் யார்?" என வினவினான்.

"விறல்வேல் அனைத்தையும் பிறகு விளக்கமாகத் தெரிவிப்பான் குமரா... இங்கே வா!" என அதட்டலுடன் கட்ட ளையிட்டான் திவ்யன்.

திடீரென்று திவ்யன் அழைத்ததும் நடுங்கிப் போன பரதவன் குமரன், "கட்ட ளையிடுங்கள் தலைவரே!" எனப் பணிந்

தான். அவனது குரலில் நடுக்கம் இருந்தது.

அவனது தோள் மீது கைவைத்த திவ்யன், “அச்சம் வேண்டாம் குமரா... படைத்தலைவன் இப்போது விறல்வேல் தான். நான் அல்ல!” என அவனது விழிகளை நோக்கியபடியே”டாள்தொபியாஸ் எங்கே?” என வினவினான்.

நாகத் தீவிற்குப் புறப்படுவதற்கு முன் காலைப் பொழுதில் சந்தித்துவிட்டுச் சென்ற டாள்தொபியாசை தலைவர் எதற்காக வினவுகிறார் எனும் வியப்புடன், “நேற்று என்னுடன் கடற்போரை முடித்துவிட்டு வெற்றிச் செய்தியைக் கூறுவதற்காகச் சென்ற டாள்தொபியாசை வானவல்லி போர்க்களத்திற்கு அழைத்துச் சென்று விட்டார்கள்!” என்றான்.

“வெண்ணிக்கா?”

“ஆம்!”

https://telegram.me/aedahamlibra

“வானவல்லி அங்கு எதற்காகச் சென்றிருக்கிறாள்?”

“படைத் தலைவர் போர் நடை பெறும்போது படைகளுடன் இருப்பது தானே முறை!”

“எப்போதிலிருந்து?”

“செங்குவீரர் குணக் கடலில் மூழ் கிய பிறகு !”

“வளவனார், பிடர்த்தலையர் வான வல்லிக்கு மணமுடிக்க ஏற்பாடு செய்ய வில்லையா?”

“இரும்பிடர்த்தலையர் முயற்சித் தார்!”

“விளைவு?”

“தங்களது தங்கை ஒப்புக்கொள்ள வில்லை.”

“வானவல்லி படைத்தலைவர் பொறுப்பை ஏற்க வளனவனார் எப்படி ஒப்புக் கொண்டார்?”

https://telegram.me/aedahamlibra

"அவர் இதுவரை எதிர்த்துக் கொண்டுதான் இருக்கிறார்?"

"பிறகு?"

"கரிகாலர் வளவானரின் எதிர்ப்பை பொருட்படுத்தாமல் படைத்தலைவர் பொறுப்பை அளித்துவிட்டார்!"

"உபதலைவர்களான நீங்கள் அதற்கு எப்படி ஒப்புக் கொண்டீர்கள்?"

"எங்களுக்கும் அதில் முழு உடன் பாடுதான் தலைவரே!"

"காரணம்?"

"படைத்தலைவர் உங்களது தங்கை! அதுமட்டுமல்லாமல்...." தயங்கி னான் பரதவன் குமரன்.

"தயக்கம் வேண்டாம்!"

"அதுமட்டுமல்லாமல், செங்குவீரர் குமரிக் கடலில் மூழ்கிய பிறகு 'அவர் உரைத்த வெஞ்சினத்தை நானே நிறை வேற்றப் போகிறேன்' என்று செங்குவீர

ரின் வீர வாளினை கையில் எடுத்துக் கொண்டார்."

"ஆதலால், நீங்களும் ஆதரித்து விட்டீர்கள்!"

"........"

"நீ போர்க் களத்திற்குச் செல்ல வில்லையா?"

"புறப்பட்ட என்னைப் புகார் காவ லுக்காக இருக்கவைத்துவிட்டார்கள்!" பெரும் சோகத்துடன் தெரிவித்தான் பர தவன் குமரன்.

"சரி, ஈழவாவிரையர் எங்கே?"

"வீரர்களின் காயங்களுக்கு மருத் துவம் பார்ப்பதற்காக அவரும் போர்க்க ளத்திற்குச் சென்றிருக்கிறார்."

"கொல்லாமையை விரும்பும் திகம் பர அடிகளார் போர்க் களத்திற்குச் சென் றிருக்கிறார். புகாரின் நிலை விசித்திர

மாக அல்லவா இருக்கிறது!" எனச் சிரித்தபடி தெரிவித்தான் திவ்யன்.

பிறகு திவ்யன் மற்றும் செங்குவீரன் இருவரும் பரதவன் குமரனிடம் கடந்த ஒருவருட காலமாகப் புகாரில் நடைபெற்ற அனைத்து நிகழ்வுகள் மற்றும் போரின் போக்கு ஆகியவற்றைக் கேட்டுத் தெரிந்து கொண்டார்கள்.

கடைசியாகப் பரதவன் குமரன், "தலைவரே, உங்களது வருகையை வெண்ணிக்குத் தெரியப்படுத்தி விடட்டுமா?" என வினவினான்.

"வேண்டாம் குமரா!" கட்டளையிட்டான் திவ்யன்.

பரதவன் குமரன் திவ்யனை வியப்புடன் நோக்கினான். ஆனால் ஆண்ட்ரிமேடா, "நீங்கள் புரவிகளைத் தயார் படுத்துங்கள் வீரரே! இனி புகார் கோட்டையை எனது தளபதி பார்த்துக்கொள்வார். நாம் விரைவில் இங்கிருந்து போர்க்களத்தை

நோக்கிப் புறப்படப் போகிறோம்” எனத் தெரிவித்தாள்.

போர்க் களத்திற்குப் பரதவன் குமரனையும் அழைத்ததில் அவன் பெரும் மகிழ்ச்சி கொண்டாலும் வானவல்லியின் கட்டளையை எப்படி மீறுவது எனும் பெரும் தயக்கத்தில், ‘அவளது கட்டளையை ஏற்பதா? அல்லது வேண்டாமா?’ எனும் குழப்பத்துடன் செங்கு வீரனையும், திவ்யனையும் நோக்கினான். அவனது மனக் குழப்பத்தைப் புரிந்து கொண்ட ஆண்ட்ரிமேடா அவனது விழிகளில் தனது மோகப் பார்வையை மீண்டும் புதைத்தபடி, “தெரிவித்த கட்டளையை நிறைவேற்றுங்கள்! சந்தேகத்துடன் அவர்களை நோக்க வேண்டாம். அவர்கள் எந்த எதிர்ப்பையும் தெரிவிக்க மாட்டார்கள். என் தளபதி இந்தக் கோட்டையையும் இந்தக் கைதிகளையும் கவனித்துக் கொள்வார்! நீ புறப்படலாம்!” என மீண்டும் கட்டளையிடலானாள்.

அப்போதும் பரதவன் குமரன் தயக் கத்துடனே நிற்கலானான்.

பரதவன் குமரன் அமைதியாக நிற் பதைக் கண்ட செங்குவீரன், "குமரா... சிந் திக்க வேண்டாம்! ஆண்ட்ரிமேடாவின் கட்டளையை நிறைவேற்று!" எனக் கட்ட ளையிடலானான்.

"தங்களது உத்தரவு!" எனத் தெரி வித்த பரதவன் குமரன் 'அப்பெண் கூறி யதை செங்குவீரர் நிறைவேற்ற சொல்கி றாரே, ஆண்ட்ரிமேடா... 'அப்பெண் யார்? அவள் எதற்காகத் தலைவருடன் வந் திருக்கிறாள்?' எனும் குழப்பம் அவனது மனதில் தோன்றினாலும் வெண்ணிச் சமர்க் களத்திற்குச் செல்லப்போகும் குதூகலத்தில் அங்கிருந்து விடைபெற் றுச் செல்லலானான்.

https://telegram.me/aedahamlibra

# 51. மோதிக் கொண்ட பெரும்படைகள்

இருங்கோவின் படை தனது படை பலத்தைச் சிறிது சிறிதாக இழந்து பின்வாங்கிக் கொண்டிருந்தது. அப்போது அவர்கள் எதிர்பார்க்கவில்லை. அகப்பா கோட்டையிலிருந்து புரவிப் படையுடன் திரும்பி வந்து கொண்டிருந்த சோழ உபதளபதி வில்லவன் இருங்கோவின் படையை நேருக்கு நேர் தாக்குவான் என்று. அவனது அசுரவேகத் தாக்குதலை எதிர்பார்க்காத இருங்கோவின் எஞ்சிய படையும் மொத்தமாக அழி

யத் தொடங்கியது. அவர்களை விரட்டி வந்த கரிகாலரும், இளந்திரையனும் தங் களது புரவிப் படையைக் கொண்டு பின் புறமாகத் தாக்கினார்கள். கருணை என் பதையே முற்றிலும் இழந்திருந்த இரண்டு வேற்படைகளுக்கு நடுவில் சிக்கி கொண்ட இருங்கோவின் படை மொத் தமாக அழிந்துவிட்டிருந்தது. முதலில் அவர்களை எதிர்த்த வேந்தன், 'அவர் களை எதிர்த்து இப்போது எதையும் சாதிக்க இயலாது' என்பதை உணர்ந்து உறைந்தை மன்னர் இருங்கோவேள், யுவராஜன் மற்றும் வைதீகர் ஆகியோரை மட்டும் காப்பாற்றிக் கொண்டு அவனது படையைக் கைவிட்டு நழுவி கொண் டான். படை வீரர்கள் எதிர்த்து மடியலா னார்கள்.

ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட வீரர் களைக் கொண்ட பெரும் படையுடன் புகாரைக் கைக்கொள்ளச் சென்ற இருங் கோவின் படையில் இருங்கோ, வேந் தன், யுவராஜன் மற்றும் வைதீகர் ஆகிய நால்வருமே தப்பிப் பிழைத்தார்கள். கரி காலரின் படையைக் கண்டு பயந்து ஒளிந்து கொண்ட வீரர்களைத் தவிர மற்ற அனைவரையும் இழந்திருந்திருந்

தார்கள். போரில் இறந்த புரவி மற்றும் யானைகளைத் தவிர மற்ற அனைத்தையும் கரிகாலர் கைப்பற்றிக் கொண்டிருந்தார்.

இருங்கோவின் படை மொத்தமாக அழிந்ததும் கரிகாலரின் படை இரண்டாகப் பிரிந்தது. ஒன்று சோழ இளவல் கரிகாலரைத் தலைவராகக் கொண்ட படை. இன்னொன்று வேளக்காரப் படைத் தலைவன் இளந்திரையனைத் தலைவனாகக் கொண்ட படை. இரண்டுமே அதிவேகத் தாக்குதலைத் தொடுக்கும் புரவிப் படைதான். மற்ற காலாட்படை, யானைப் படை ஆகியவை வெண்ணியை நோக்கித் திருக்கண்ணனின் தலைமையில் சென்று கொண்டிருந்தது.

கரிகாலரின் படை புகாரை நோக்கி வந்து கொண்டிருந்த பாண்டிய படையை எதிர்கொள்ளப் புறப்பட்டது. கரிகாலருக்குத் துணையாக வில்லவன் புறப்பட்டான். வேளக்காரப் படைத்தலை

வன் இளந்திரையனின் தலைமையிலான படை சேரப் படையை நோக்கிப் புறப்பட்டது. புகாரை நெருங்குவதற்குள் அவர்களை வழியிலேயே தடுத்து நிறுத்தி அதிவேகத் தாக்குதல் ஒன்றை நிகழ்த்தி விட வேண்டும் என்று முடிவு செய்திருந் தார் கரிகாலர்.

புறப்பட்டுச் சென்ற இரண்டு படைகளும் பாண்டிய படையையும், சேரப் படையையும் அவர்கள் எதிர்பாராத நேரத்தில் நேருக்கு நேர் தாக்கினார்கள். சோழப் படையின் தாக்குதலை இரண்டு படைகளும் சிறிதும் எதிர்பார்த்திருக்க வில்லை. சோழப் படையை இருங்கோவின் படை புகார் கோட்டைக்குள்ளேயே நிறுத்தி வைத்திருக்கும் அல்லது இருங் கோவின் கைகளில் புகார் விழுந்திருக் கும் என்றே எண்ணியிருந்தவர்களுக்குச் சோழப் படையின் அதிவேகத் தாக்குதல் அவர்களுக்குப் பேரிடியாக அமைந்தது. தாக்குதலை எதிர்க்க அவர்கள் தயாரா வதற்குள் எத்தனை பேரைக் கொன்று

குவிக்க முடியுமோ அத்தனை பேரைக் கொன்று குவித்திருந்தது சோழப் படை.

சோழப் புலிப் படையின் தாக்கு தலில் முதலில் சேர மற்றும் பாண்டிய படை முதலில் சீர்குலைந்தாலும் உடனே அவர்கள் தங்களைத் தயார்படுத்திக் கொண்டு சோழப் படையை எதிர்த் துத் தாக்கத் தொடங்கினார்கள். முதலில் சோழர் படை அவர்களின் தாக்குதலை எளிமையாக எதிர் கொண்டது. ஆனால், பொழுது கழியக் கழிய சேர மற்றும் பாண் டிய படைகளின் கை ஓங்கத் தொடங்கி யது.

சேர மற்றும் பாண்டிய படை திருப் பித் தாக்கத் தொடங்கியதும் சோழரின் கருணையற்ற இரண்டு வேல் படைகளும் பின்வாங்கத் தொடங்கின.

ஒரே நேரத்தில் இரண்டு இடங்களி லும் சோழப் படையைச் சேரப் படையும், பாண்டிய படையும் விரட்டத் தொடங்கின. கரிகாலரும், இளந்திரையனும் வேறு

வழியில்லாமல் பின்வாங்கி வந்தார்கள். பொழுது கடக்க இன்னும் ஒரு நாழிகைப் பொழுதே மிச்சமிருந்த சமயம். பொழுது சாய்ந்த பிறகு விரட்டுவதைக் கைவிட்டுவிடுவார்கள் எனும் நினைப்பில் ஓடிக் கொண்டிருந்தன சோழர் படை.

பொழுது மேற்கில் சாய்ந்து இருள் சூழத் தொடங்கியது. இருள் சூழத் தொடங்கியும் சோழர் படையை விரட்டுவதைச் சேர மற்றும் பாண்டிய படைகள் நிறுத்தவில்லை. ஒரே மூச்சில் அவர்களை விரட்டி அழித்துவிட வேண்டும் எனும் நினைப்பில் சோழர் புரவிப் படையை விரட்டிக் கொண்டே வந்தார்கள்.

பின்வாங்கிய இரண்டு சோழர் புரவிப் படையும் வெண்ணியை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். சேர மற்றும் பாண்டிய படைகளும் அவர்களை விரட்டிக் கொண்டு வெண்ணிக்கு வந்திருந்தன. இளந்திரையன் தலைமையிலான

புரவிப் படையும் கரிகாலரின் தலைமை யிலான புரவிப் படையும் வெண்ணியில் விரட்டி வந்த சேர மற்றும் பாண்டிய படை களுக்கு இடையில் சிக்கிக்கொள்ளும் நிலை.

இருள் முழுவதும் மண்டியிருந்தது. பயந்துப் பின்வாங்கி வந்த சோழர் புர விப் படை வெண்ணி சமர்க்களம் வந்த தும் விலகிக் கொண்டன. விரட்டி வந்த சேர மற்றும் பாண்டிய படைகள் இரண் டும் இரவில் அடையாளம் தெரியாததால் எதிர்த்து தாக்குவது சோழர் படைதான் என்ற குருட்டு நினைப்பில் ஒன்றோ டொன்று மோதிக் கொண்டன.

சேரரும், பாண்டியரும் இரவில் தங் களுக்குள்ளாகவே மோதிக் கொண்டார் கள். சோழர் படை விலகி நின்று வேடிக்கை பார்த்ததோடு மட்டுமல்லா மல் எதிரிகள் அனைவரையும் அவர் களின் திட்டத்தின்படி வெண்ணிக்கு இழுத்திருந்தார்கள்.

https://telegram.me/aedahamlibra

# 52.

# வெண்ணிப் போர்

சங்க காலத்தில் வெண்ணி என்றும் வெண்ணிப் பறந்தலை என்றும் அழைக்கப்பட்ட ஊர் இக்காலத்தில் கோயில் வெண்ணி எனும் பெயரில் தஞ்சை மாவட்டத்தில் அமைந்திருக்கிறது. வெண்ணியின் முகப்பில் காணப்படும் முரம்பு நிலத்தில் பெரும் போர் நடைபெற்றதால் அதனை வெண்ணிப் பறந்தலை என்றும் சிலர் கூறுவார்கள். இருங்கோவும் சரி, செங்குவீரனும் சரி வெண்ணிக் களத்தைத் தேர்ந்தெடுக்கக் காரணம் அதன் சிறப்பான கேந்திர அமைவிடம் தான். வெண்ணிக் களத்திற்கு ஒருபுறம் காவேரி நதி சீறிப் பாய்கி

றது. போர் நடைபெறும் சமர்க் களமானது ஒரு புறம் அகன்றும் மறுபுறம் குறுகி மரங்கள் அடர்ந்து காணப்படும்.

பதினோரு வேளிர்கள் மற்றும் இரு பெரும் வேந்தர்களும் சோழப் படையை எதிர்க்க ஒன்று சேர்ந்திருந்ததால் பெரும் படை எவ்வித இடையூறும் இன்றி அணி வகுத்து நிற்பதற்கும், விரைந்து தாக்குவதற்கும் வசதியாக இருக்கும் என்றே வைதீகர் இருங்கோவிடம் ஆலோசித்து வெண்ணிக் களத்தைத் தேர்ந்தெடுத்திருந்தார். வெண்ணியின் வேளிரும் இருங்கோவிற்கு ஆதரவாக இருந்ததால் வெண்ணிக் களத்திற்குச் சோழப் படை இழுக்கப்பட்டால் அவர்களுக்கு வெளிப் புறத்திலிருந்து எவ்வித உதவியும் கிடைக்காமல் போய்விடும். மரங்கள் அடர்ந்த குறுகிய பகுதிக்குள் சோழப் படையைச் சிக்கச் செய்து எளிதாக வெற்றியடைந்துவிட இயலும் என்று எதிர்பார்த்து வெண்ணிப் போர்க் களத்தை வைதீகரும், இருங்கோவும் இறுதி செய்திருந்தார்கள்.

ஆனால், செங்குவீரனின் போர் வியூகமும் அவனது எண்ணமும் வைதீகர் மற்றும் இருங்கோவின் முடிவிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. எவை எவை தங்களது பலமாக வைதீகரும், இருங்கோவும் கருதினார்களோ அதையே செங்குவீரன் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முடிவு செய்தே வெண்ணிக் களத்தை இறுதிப் போருக்குத் தேர்ந்தெடுத்திருந்தான். ஒரு புறம் காவேரி நதி அகன்று பாய்வதாலும், இரண்டு புறத்திலும் அடர்ந்த மரங்கள் நிறைந்த வனம் காணப்படுவதால் பின் புறத்திலிருந்தோ அல்லது பக்கங்களிலிருந்தோ எதிரிகளின் படை பிரிந்து வந்து தாக்க இயலாது என எண்ணியிருந்தான். அதே சமயம் இரண்டு புறத்திலும் காணப்பட்ட அடர்ந்த வனங்களுக்கு இடையில் தனது படையை அணிவகுத்து நிலை நிறுத்திக் கொண்டால் எதிரிகளின் படை பலம் எவ்வளவு பெரிதாக இருந்தாலும் அவர்கள் அந்தக் குறுகிய இடத்தின் வழி

யாகத்தான் சோழப் படையைத் தாக்க முன்னேற இயலும். ஒரே நேரத்தில் குறுகிய இடத்தினூடே ஒட்டுமொத்த படையைக் கொண்டு தாக்குவதற்கு அஞ்சவே செய்வார்கள். படையைப் பிரித்துப் பிரித்துத் தனித்தனியாகத் தாக்குவதற்கு அனுப்பும்போது குறுகிய பகுதிக்குள் திறமையான வீரர்களைக் கொண்டு அவர்களை நேருக்கு நேர் தாக்கி வீழ்த்தி விடலாம் எனும் திட்டத்தில் வெண்ணிப் போர்க் களத்தைத் தேர்ந்தெடுத்திருந்தான்.

வெண்ணிக் களத்தை நேரில் பார்வையிட்ட இளந்திரையனும் செங்குவீரன் பட்டுத் துணியில் தீட்டியிருந்த போர் வியூகத்தை அறிந்த பிறகு திரண்டிருக்கும் பெரும் படையைப் பற்றிக் கவலை கொள்ளாமல் அவர்களைப் பிரிந்து போய்த் தாக்கி வெண்ணிக் களத்திற்கு இழுத்து வந்திருந்தான்.

https://telegram.me/aedahamlibra

திட்டத்தின் படி போர் நடைபெற்றால் போரின் முடிவு சாதகமாக அமையும் அதே நேரம் எதிரிகளின் பெரும் படை நான்கு புறத்திலும் சூழ்ந்துவிட்டால் நிலைமை மோசமாகிவிடும் என்பதை உணர்ந்தும் கரிகாலரும், இளந்திரையனும் வெண்ணியில் அவர்களை எதிர்கொள்ள ஆயத்தமானார்கள்.

பொழுது புலர்ந்தது. வெண்ணிக் களம் பெரும் போருக்குத் தயாராக நின்றது. சோழர் படைக்கு ஆத்தி மாலையைத் தோளில் அணிந்தசோழ இளவல் கரிகாலரும், வேளக்காரப் படைத்தலைவன் இளந்திரையனும் தலைமை தாங்கியிருந்தார்கள். அவர்களுக்குத் துணையாக உபதலைவன் டாள்தொபியாஸ், உபதலைவன் திருக்கண்ணன், உபதளபதி வில்லவன் ஆகியோருடன் படைத்தலைவி வானவல்லியும் களமிறங்கியிருந்தாள். போர்க்களத்தில் நேரடியாகப் பங்குகொள்ளா விட்டாலும் இவர்களுக்குத் துணையாகப் பெருமறவர் மகேந்திர

வளவனார், இரும்பிடர்த்தலையர் மற்றும் திகம்பர அடிகளார் ஈழவாவிரையர் ஆகியோர் துணை வந்திருந்தனர்.

சேரப் படைக்குச் சேரமான் பெருஞ்சேரலாதன் தலைமை தாங்கியிருந்தார். அவருக்குத் துணையாகச் சேர இளவரசன், பாண்டிய மன்னர் தென்னவன், பாண்டிய இளவரசன், கரிகாலரின் தாக்குதலிலிருந்து தப்பிய இருங்கோவேள், யுவராஜன், வேந்தன் மற்றும் வேளிர்கள் பலர் சேரமானுக்குத் துணையிருந்தார்கள். கரிகாலரின் சிறு படையுடன் ஒப்பிடுகையில் திரண்டிருந்த எதிரிகளின் படைபலம் இரண்டு மடங்கிற்கு மேல் காணப்பட்டது.

சேரமான் சோழப் படையை நேருக்கு நேர் தாக்க முடிவு செய்திருந்தார். அதாவது எந்த வித போர் வியூகமும் இன்றி நேருக்கு நேர் தாக்கும் முறை. திரண்டிருந்த பெரும் படை அவருக்குப் பெரும் நம்பிக்கையை அளித்திருந்தது.

சம்பிராயத் தாக்குதல் அணியை அமைத்திருந்தார் சேரமான்.

அதாவது படையில் முதன்மையாகக் காலாட்படை வீரர்களை நிறுத்தியிருந்தார். அவர்களுக்கு இரண்டு புறத்திலும் அதிவேகப் புரவிப்படை. இவைகளுக்குப் பின்னால் வில் வீரர்களின் அணி. இதே போன்று மூன்று அணிகளாகப் படையைப் பிரித்து நிறுத்தியிருந்தார். இவையின்றி யானைப் படையை மட்டும் தனியாக அணிவகுக்கச் செய்திருந்தார்.

மூன்று படைப் பிரிவாக நிறுத்தப்பட்டிருந்த அணிவகுப்பின் மையத்தில் சேரமான் தேரில் அமர்ந்திருந்தார். அவருக்கு இடப்புறப் படைக்குப் பாண்டிய மன்னர் தென்னவனும், வலப்புறப் படைக்கு இருங்கோவும் தலைமை தாங்கியிருந்தார்கள்.

காலாட்படை வீரர்களை முதலில் நிறுத்தியிருந்தார் கரிகாலர். காலாட்படைக்கு இரண்டு புறத்திலும் வில் வீரர்

கள அணிவகுத்துக் காணப்பட்டார்கள். வில் வீரர்களுக்கு இரு புறத்தில் புரவி வீரர்கள். பின்னால் யானைப் படையை நிலை நிறுத்தியிருந்தார்.

சோழப் படையின் அணிவகுப்பைப் பார்த்த சேரமான், ‘போர் இன்று பொழுது உச்சியை நெருங்குவதற்குள் முடிந்துவி டும்’ என எண்ணியவர் சோழப் படையின் முன் வரிசையில் நிற்கும் காலாட்படை யைச் சீர்குலைக்க அதிவேகத்தில் செல் லும் புரவிப் படையைத் தாக்கச் சொல்லி கட்டளையிட்டார்.

கையில் நீண்ட வேல் மற்றும் வாட் களுடன் புரவிப் படை சோழர் படையை நோக்கி புறப்பட்டது.

புறப்பட்ட எதிரிகளின் படையைப் பார்த்த கரிகாலர் தனது வாளினை உயர்த்தினார். அடுத்தகணம் புரவிகள் கிட்டத்தட்ட நூறு மட்டும் அணிவகுப்பி லிருந்து பிரிந்து முன்னேறி வந்து நின் றது. கரிகாலர் முதன்மையாக நிற்க அவ

ருக்கு இரண்டு புறத்திலும் இளந்தி ரையன், வானவல்லி, டாள்தொபியாஸ், திருக்கண்ணன், வில்லவன் ஆகியோர் புரவியில் நிற்கலானார்கள்.

புழுதி பறக்க விரைந்து வந்து கொண்டிருந்த புரவிகளையே பார்த் துக் கொண்டிருந்த கரிகாலர், "எதிரி களுக்கு நாம் புரியவைப்போம். நாற் படை கொண்டு தாக்கினாலும் வேங்கை விழப் போவது இல்லை என்று!" உரக் கத் தெரிவித்தார். அடுத்தக் கணம் வீரர்கள் அனைவரும் முழங்க கரிகா லரே விரைந்து வந்த புரவிகளைத் தாக் கப் புறப்பட்டார். அவரைப் பின்தொ டர்ந்து வந்த உபதலைவர்கள், உபதளப திகள் மற்றும் வீரர்களின் புரவிகள் சுவ ரைப் போன்று ஒன்றுக்கொன்று நெருங்கி நின்று கொண்டன. புரவியில் அமர்ந்தி ருந்தவர்கள் அனைவரும் வில்லினைக் கையில் ஏந்தலானார்கள். கையில் வேல் மற்றும் வாட்களுடன் விரைந்து வந்த புரவி வீரர்களின் மார்பினைக் குறிபார்த்து

அம்புகளை அதிவேகத்தில் எறியலா னார்கள்.

புரவிப்படை நெருங்க நெருங்க அவர்களின் மீது அமர்ந்துவந்த வீரர் கள் அனைவரின் மார்பிலும் அம்புகள் பாய்ந்து வீரர்கள் கீழே விழத் தொடங் கினார்கள். புரவி வீரர்கள் கீழே விழுந் தாலும் எஞ்சிய புரவிப் படை வீரர் கள் சோழப் படையை நோக்கி விரைந்து வந்து கொண்டிருந்தார்கள்.

கையிலிருந்த கொம்பினை ஊதி னார் கரிகாலர். உடனே அரணாக நின்று கொண்டிருந்த சோழப் புரவிப் படைக்கு இரண்டு புறத்திலும் காணப் பட்ட அடர்ந்த மரங்களிலிருந்து சில ஆயிரம் வில் வீரர்கள் வெளிப்பட்டார் கள். வெளிப்பட்ட உடனே விரைந்து வந்து கொண்டிருந்த புரவிப் படையை நோக்கி எரியம்புகளை இடைவிடாமல் எய்யலானார்கள். எரியம்புகளுக்குள் சிக் கிய புரவிப்படை தனது அணிவகுப்பை

https://telegram.me/aedahamlibra

இழந்து எரியம்புகளிலிருந்து தப்பிக்கப் பின்வாங்கத் தொடங்கினார்கள். அப் போது அரணாக நின்ற சோழப் புரவி வீரர் கள் கையில் வேல்களையும், வாட்களை யும் தாங்கிக் கொண்டு சிதறி ஓடத் துவங் கிய புரவி வீரர்களைத் துவம்சம் செய்யத் தொடங்கினார்கள். ஒரு ஓரைப் பொழு துத் தாக்குதலுக்குப் பிறகு சோழப் படை யைத் தாக்க வந்த புரவிப் படையை முற் றிலும் அழித்திருந்தார் கரிகாலர்.

முதல் தாக்குதலை முறியடித்த கரி காலரின் படை மீண்டும் பழைய இடத் திற்கு வந்து அணிவகுத்துக் கொண்டன.

பெரும்படையில் முதன்மையாக நிற்பது காலாட்படை தான்! காலாட்படை யைப் புரவி வீரர்களைக் கொண்டு அதி வேகத் தாக்குதலைத் தொடுத்து கலை யச் செய்துவிடலாம். காலாட்படையை மட்டும் முதலில் கலைத்துவிட்டால் பிறகு மற்ற படைகளை எளிதில் தாக்கி அழித் துவிடலாம். கரிகாலரின் அணிவகுப்பில்

முதன்மையாக நிற்கும் காலாட்படையை முதல் கட்டத் தாக்குதலிலேயே அழித்து விட வேண்டும் என எண்ணியே புரவிப் படையை அனுப்பி வைத்தார் சேரமான். ஆனால், கரிகாலர் புரவிப்படையைக் கொண்டே புரவிப் படையைத் தாக்குவார் என்றும் பிறகு வில் வீரர்களைத் திடீ ரென்று ஏவுவார் என்றும் யாரும் எதிர் பார்க்கவில்லை. பெரும்படையின் முதல் கட்டத் தாக்குதலை திறம்பட முறியடித்தி ருந்தார் கரிகாலர்.

"காலாட்படையும், யானைப் படை யும் ஒரே நேரத்தில் தாக்குதல் தொடுக் கட்டும்" எனக் கட்டளையிட்டார் சேர மான் பெருஞ்சேரலாதன்.

சோழப் படையை நோக்கி யானை மற்றும் காலாட்படையின் ஒரு பிரிவு விரைந்து தாக்குதல் தொடுக்க முன் னேறி வந்தது. அவர்கள் நெருங்கி வரட் டும் எனப் பொறுமை காத்த கரிகாலர் நெருங்கி வந்ததும்"தாக்குவோம்" எனக்

கூறியதுதான் தாமதம். உடனே அணி வகுத்து நின்ற காலாட்படையும் புரவிப் படையும் அதிவேகத்தில் தாக்குவதற்கு முன்னேறினார்கள்.

சோழப் படையின் நகர்வினைக் கவனித்தவர்கள் சற்றுக் குழம்பவே செய் தார்கள். காலாட்படை வீரர்கள் மையத் தில் ஓடிவர அவர்களுக்கு இரண்டு புறத் திலும் புரவி வீரர்கள் வரலானார்கள். ‘காலாட்படை வீரர்களைக் காலாட்படை வீரர்கள் தாக்குவது மரபு, ஆனால், மதங் கொண்டு ஓடி வரும் யானைகளைப் புரவிப்படையைக் கொண்டு தாக்குவது முட்டாள்தனம்! ‘ என்பதை அறிந்தவர்கள் சிறிது நேரம் குழப்பத்துடன் நிற்கலானார் கள்.

விரைந்து வந்த சோழக் காலாட் படை வீரர்களின் வேகம் மெல்ல மெல்ல குறைந்து புரவிகளின் வேகம் அதிக ரிக்கத் தொடங்கின. இரண்டு புறத்தி லும் வந்த சோழப் புரவிபடை திடீரென்று

https://telegram.me/aedahamlibrary

மையத்தில் ஒன்றாக இணைந்து காலாட்படையை எதிர் கொண்டார்கள். காலாட்படை வீரர்கள் பக்கங்களில் பிரிந்து ஓடி வந்த யானைகளை நேருக்கு நேர் தாக்கினார்கள்.

சோழர்களின் நகர்வினைப் புரிந்து கொண்ட சேர இளவரசன், "நம் படையைக் காக்க வில் வீரர்கள் உடனே புறப்படட்டும்!" எனக் கட்டளையிட்டான்.

வில் வீரர்கள் விரைந்து செல்லலானார்கள்.

பெரும் படையிலிருந்து வில் வீரர்கள் பிரிந்து வந்ததும் வனத்தினுள் மறைந்திருந்த புரவி வீரர்கள் அவர்களைத் திடீரென்று தாக்கினார்கள். சோழப் புரவி வேல் வீரர்களின் தாக்குதலை மீண்டும் வனத்திலிருந்து எதிர்பார்க்காத வில் வீரர்கள் யானை மற்றும் காலாட்படைகளின் பாதுகாப்பிற்குச் செல்ல இயலாமல் இடைமறிக்கப்பட்டார்கள்.

சேரப் பாண்டிய வில் வீரர்கள் காலாட்படை வீரர்களுக்கு ஆதரவாகச் செல்ல இயலாமல் சோழப் புரவிப் படை அவர்களைத் துவம்சம் செய்யத் துவங் கியது. அதே நேரம் யானைப் படையை எதிர் கொண்ட காலாட்படை வீரர்கள் யானைகளின் கண்களில் ஈட்டிகளாலும், வேல்களாலும் குத்தி அவற்றை மிர ளச் செய்து மதம்பிடிக்க வைத்தார்கள். யானைகள் மதம்பிடிக்கத் தொடங்கிய தும் சோழ வீரர்கள் பின்வாங்கத் தொடங் கினார்கள். மதம்பிடித்த யானைகள் அங் குமிங்கும் மிரண்டு ஓடி சுற்றியிருந்த சேர, பாண்டிய மற்றும் வேளிர்களின் வீரர்க ளையே துவம்சம் செய்யத் தொடங்கின. வில் வீரர்களை எதிர் கொண்ட புரவி வீரர்கள் வில் வீரர்களைக் கொன்று குவித்த பிறகு காலாட்படையைப் பின்பு றமாகத் தாக்கினார்கள். மிரண்ட யானை மற்றும் பின்புறமாகத் தாக்கிய சோழப் புரவிப்படையின் தாக்குதலில் காலாட் படை முற்றிலும் அழிந்தது. யானைகள்

பல வேலேறியும் வீரர்களால் கொல்லப் பட்டன. மற்றவை மதம்பிடித்துச் செருக்க ளத்தினுள் தறிகெட்டு ஓடத் தொடங்கின.

சேரமான் பெருஞ்சேரலாதனின் இரண்டாவது தாக்குதலும் சோழர்களால் தந்திரமாக முறியடிக்கப்பட்டிருந்தது.

இரண்டு முறை மறைந்தி ருந்து வெளிப்பட்ட சோழ வீரர்களை விரட்ட வேந்தன் மிகவும் இரகசியமா கப் படையை அனுப்பி வைத்திருந்தான். ஒரு ஓரைப் பொழுதிற்கெல்லாம் அவை அங்கு மறைந்திருந்த வீரர்களை விரட்டி விட்டிருந்தன.

பொழுது மேற்கில் சாய இன் னும் ஒரு சாமப் பொழுதே மிச்சமி ருந்த சமயம். இந்தச் சிறு போரை இன்னொரு நாள் நீட்டிக்கச் சேரமான் உட்பட அங்கிருந்த யாருக்குமே விருப் பமிருக்கவில்லை. கையிலிருந்த கொம் பினை நீண்ட நேரம் ஊதினார். உடனே அணிவகுத்து நின்றிருந்த ஒட்டுமொத்தப்

படைகளும் சோழப் படையை நோக்கி முன்னேறின. போர் கடைசிக் கட்டத்தை அடைந்துவிட்டதை உணர்ந்த கரிகால ரும் தனது படை வீரர்களுக்கு, "முன்னே றிச் செல்வோம்!" என்று கட்டளையிட் டார்.

சோழப் படையும் பெரும் ஆர வாரத்துடன் தாக்குதலைத் தொடுக்க முன்னேறியது. சேர, பாண்டிய மற்றும் வேளிர்களின் கூட்டுப் படை சோழப் படையை நெருங்க நெருங்க பாம்பி னைப் போன்று இரண்டு பக்கங்களி லும் நீண்டு கொண்டே வந்தது. நீண்டு கொண்டே வந்த படை சோழர் படை யைச் சுற்றி வளைக்கத் தொடங்கியது. கரிகாலர், இளந்திரையன், டாள்தொபி யாஸ், வில்லவன், திருக்கண்ணன் ஆகி யோர் அனைவரும் வாளினை சரமாரியா கச் சுழற்றி எதிரில் வந்த அனைவரை யும் தாக்கலானார்கள். இரண்டு படை களும் உக்கிரமாகத் தாக்கத் தொடங் கின. காலம் கடந்தே படையின் மையத்

தில் தேரில் அமர்ந்திருந்த வளவனார் சேரர்கள் சர்ப்ப வியூகம் அமைத்து சுற்றி வளைக்க ஆரம்பித்திருப்பதை உணர்ந் தார். அவர்களின் சர்ப்ப வியூகம் பூர்த் தியடைந்தால் சோழர் படை முழுவது மாகச் சுற்றி வளைக்கப்படும் என்பதை உணர்ந்த வளவனார் உடனே கொம் பினை ஊதி உப படைத்தலைவர்கள் அனைவரையும் எச்சரிக்கை செய்தார்.

புரவிகளில் அமர்ந்து யுத்தம் புரிந்து கொண்டிருந்த வானவல்லியும், டாள் தொபியாசும் வளவனாரின் கட்டளை யைப் புரிந்து கொண்டு சர்ப்ப வியூ கம் பூர்த்தியடைய விடாமல் அவர்களின் படையைத் தடுத்து நிறுத்த முயற்சிக்க லானார்கள்.

படையைத் தலைமைதாங்கி நடத் திக் கொண்டிருக்கும் சேரமான் பெருஞ் சேரலாதனை நோக்கி முன்னேற முயன் றார் கரிகாலர். ஆனால், அவரது உப தலைவர்களால் அமைக்கப்பட்டிருந்த

கடுமையான பாதுகாப்பு வளையத்தை மீறி அவரால் உள்ளே நுழைய இயலவில்லை. பாண்டிய மன்னர் தென்னவனின் படையை இளந்திரையனும், இருங்கோவின் படையைத் திருக்கண்ணனும் எதிர்த்துத் தாக்கிக் கொண்டிருந்தார்கள்.

சேர இளவலின் முயற்சிகளை வில்லவன் நேருக்கு நேர் எதிர் கொண்டு தடுத்தான். தன்னை எதிர்த்த வில்லவனைக் கண்ட சேர இளவரசன், "நண்பா... உன்னை விரைவில் சந்திப்பேன் என்று எதிர்பார்த்தேன்! ஆனால், சமர்க்களத்தில் சந்திப்பேன் என்று கனவிலும் நான் எதிர்பார்க்கவில்லை!" எனக் கூறிக் கொண்டு வில்லவனுடன் சமர் புரியத் தொடங்கினான். அவனது தாக்குதலை வில்லவன் தடுத்துக் கொண்டிருந்தான்.

சோழ இளவல், வேளக்காரப் படைத்தலைவர், உபதலைவர்கள் அனைவரும் முயன்றும் சேரப் படையை

ஊடுருவித் தாக்குதல் தொடுக்க இயல வில்லை. அதே நேரம் சேர மற்றும் பாண் டிய படையின் சர்ப்ப வியூகம் முழுமை யடைந்து கொண்டிருந்தது. வானவல்லி மற்றும் டாள்தொபியாஸ் மேற் கொண்ட அனைத்து முயற்சிகளும் வேந்தனால் முறியடிக்கப்பட்டிருந்தன.

வேந்தன் வானவல்லி மற்றும் டாள் தொபியாசின் படையைத் தோற்கடித்துச் சர்ப்ப வியூகத்தை முழுமை படுத்தியி ருந்தான். சர்ப்ப வியூகம் முழுமையடைந்த அடுத்தக் கணமே சோழர் படை நடு வில் சிக்கிக் கொண்டது. சேர, பாண் டிய மற்றும் வேளிர்களின் படைகள் சோழப் படையைச் சுற்றி வளைத்துக் கொண்டு எட்டுத் திக்கிலிருந்தும் தாக் குதல் தொடுத்து நெருக்கலானார்கள். பாம்பு இரையைப் பிடித்ததும் அதைக் கவ்வி விழுங்கி உடலைக் குறுக்கி நெருக்குவதைப் போன்று சர்ப்ப வியூ கத்தை அமைத்த பெருஞ்சேரலாதனும் சோழர் படையை நெருக்கத் தொடங்

கினார். அனைத்து திசைகளிலிருந்தும் சோழப் படை தாக்குதலை எதிர்நோக்கிக் கொண்டிருந்தது. சோழப் படை திணறத் தொடங்கியது. உப தலைவர்கள் அனைவரும் சர்ப்ப வியூகத்தைத் தகர்க்கும் முயற்சியில் இறங்கலானார்கள். ஆனால், அனைத்து முயற்சிகளும் கூட்டுப் படையினரால் முறியடிக்கப் பட்டிருந்தன. வெளியிலிருந்து தாக்குதல் தொடுத்து கூட்டுப் படையின் சர்ப்ப வியூகத்தை உடைத்தால் மட்டுமே உண்டு எனும் நிலை. இதே நிலை தொடர்ந்தால் இன்னும் ஒரு ஓரைப் பொழுதிற்குள் சோழப் படை தோல்வியைத் தழுவிவிடும்.

அப்போது அங்கிருந்த யாருமே எதிர்பார்த்திருக்கவில்லை. அதிவேகமாக வந்த செங்குவீரன், திவ்யன், ஆண்ட்ரிமேடா மற்றும் பரதவன் குமரன் தலைமையிலான நான்கு புரவிப் படை சேர, பாண்டிய மற்றும் வேளிர்களின் கூட்டுப் படையின் சர்ப்ப வியூகத்தை அறுத்

துக் கொண்டு நான்கு இடங்களில் ஊடுருவினார்கள். ஊடுருவிய புரவிப் படையினர் அசுரத் தாக்குதலை நிகழ்த்தத் தொடங்கினார்கள். புரவிப் படையினரின் தாக்குதலில் சர்ப்ப வியூகம் முற்றிலும் கலைந்திருந்தது. சேரப் படையின் இறுக்கம் சிறிது சிறிதாகக் குறையத் தொடங்கியது. நான்கு பிரிவாகப் பிரிந்து வந்த புரவிப் படைகளின் ஊடுருவலை எவராலும் தடுத்து நிறுத்த இயலவில்லை. அப்புரவிப் படை ஊடுருவிய இடங்களில் எல்லாம் சேர, பாண்டிய மற்றும் வேளிர்களின் படை வீரர்கள் கொத்துக் கொத்தாக மடிந்து விழுந்து கொண்டிருந்தார்கள். சிறிது சிறிதாகச் சோழப் படை முற்றிலும் பெருஞ்சேரலாதனின் இறுக்கத்திலிருந்து விடுபட்டு எதிர்த்துத் தாக்கத் தொடங்கியிருந்தது.

சர்ப்ப வியூகத்தை மீண்டும் அமைக்கும் நோக்கில் வேந்தன் வெளியிருந்து ஊடுருவிய படையை எதிர்க்கத் தொடங்கினான். ஆனால், யவன

முகக் கவசம் அணிந்த செங்குவீரனால் அவனது வாள் முதல் தாக்குதலிலேயே பறந்துவிட்டிருந்தது.

வேந்தன் தனிமையில் சிக்கிக் கொண்டதைக் கண்ட யுவராஜன் வேந் தனுக்கு உதவுவதற்காக விரைந்து வந் தான். வேந்தனது வாளினை இழக்க வைத்த அடுத்தக் கணம் பெரும் ஆத் திரத்தில் அவனது தலையைத் துண்டாக வெட்டி எடுத்திருந்தான் செங்குவீரன்.

விரைந்து வந்த யுவராஜனால் தலையை இழந்து துடித்துக் கொண்டி ருந்த வேந்தனது முண்டத்தை மட்டுமே காண முடிந்தது.

துண்டான தலையிலிருந்து குருதி கொப்பளித்துச் செங்குவீரனின் முகத் தில் தெறித்து, அவனது முகத்திற்குப் பெரும் பயங்கரத்தை வழங்கிக் கொண்டி ருந்தது.

யுவராஜன் செங்குவீரனைத் தாக்கத் தனது படை வீரர்களுடன் துணிச்சலுடன் முன்னேறினான். ஆனால், அவனுக்குத் துணையாக வந்த அனைத்து வீரர்களையும் அவர்கள் வந்த வேகத்திலேயே கொன்றுபோட்ட செங்குவீரன் யுவராஜனை நெருங்கினான். யுவராஜன் வாளினை உயர்த்திய அடுத்தகணம் அவனது வாள் செங்குவீரனின் தாக்குதலினால் கையிலிருந்து பறந்து போயிருந்தது.

அடுத்தக் கணம் அவனது தலையைக் கொய்யத் தனது வாளினை உயர்த்தினான்.

அப்போது பரிதி மேற்கில் மறையப் போர் நிறுத்தத்திற்கான சங்கை வளவனார்தான் முதலில் ஊதினார். அடுத்தக் கணம் சேரமான் பெருஞ்சேரலாதனும் ஊத அப்போதே சண்டை நிறுத்தப்பட்டது. படையினர் தத்தம் கூடாரங்களை நோக்கித் திரும்பத் தொடங்கினார்கள்.

சேர இளவல் திரும்புமுன் வில்லவனிடம், “அன்று என்னை நீ அந்தச் சிங்கத்திடமிருந்து என்னைக் காப்பாற்றியிருக்காவிட்டால் உனது பணி இன்னும் எளிதாகியிருக்கும் அல்லவா?” என்று வினவினான்.

“அன்று அந்தச் சிங்கத்திற்கு உன்னை நான் பலி கொடுத்திருந்தால் ஒரு நண்பனை நான் சந்திக்காமலே இருந்திருப்பேனே” எனக் கூறிய வில்லவன், “நாளை மீண்டும் நாம் சந்திப்போம்!” எனக் கூறி நட்புடன் விடைபெற்றான்.

அவன் செல்வதையே சேர இளவல் பார்த்துக் கொண்டிருந்தான்.

https://telegram.me/aedahamlibra

# 53. பிரிந்தவர் கூடினர்

சோழப் படை வீரர்கள் மட்டுமல்லாது சேர மற்றும் பாண்டிய படை வீரர்களுக்கும் ‘சர்ப்ப வியூகத்தைத் தகர்த்துக் கொண்டு வந்த புரவிப் படையினர் யார்?’ என்ற சந்தேகம் எழுந்திருந்தது. புரவிகளில் வந்திருந்தவர்களில் பாதிப் பேருக்கு மேல் அடிமை வீரர்கள். நான்கு பிரிவாக ஊடுருவிய புரவிப் படைகளுக்குத் தலைமைதாங்கி வந்த செங்குவீரன், திவ்யன் மற்றும் ஆண்ட்ரிமேடா மூவரும் யவன தேச முகக் கவசத்தை அணிந்திருந்தார்கள்.

புரவியில் ஆண்ட்ரிமேடா மையத்தில் வர அவளை இரண்டு புறத்திலும் சூழ்ந்தபடி செங்குவீரனும், திவ்யனும்

https://telegram.me/aedahamlibra

வரலானார்கள். பரதவன் குமரன் மூவருக்கும் பின்புறத்தில் வந்து கொண்டிருந்தான். யவனக் கவசத்தை அணிந்து முகத்தை மறைத்திருந்த மூவரையும் சோழப் படையினர் அனைவரும் வியப்புடனே பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

பரதவன் குமரன் புரவியிலிருந்து இறங்கி குருதி படிந்த முகத்துடன் பணிவுடன் நின்று கொண்டிருந்தான். கரிகாலர், இளந்திரையன், வானவல்லி, வில்லவன், வளவனார், இரும்பிடர்த்தலையர், டாள்தொபியாஸ், திருக்கண்ணன் என அனைவரும் அவர்களைச் சூழ்ந்தபடி நின்று கொண்டார்கள்.

பரதவன் குமரனைக் கண்ட வானவல்லி, “குமரா, உன்னை நான் புகாருக்குத்தானே காவல் இருக்கப் பணித்துவிட்டு வந்திருந்தேன்! இங்கு உனக்கு என்ன வேலை?” எனக் கோபத்துடன் வினவினாள்.

https://telegram.me/aedahamlibra

சர்ப்ப வியூகத்தை உடைத்துப் படை காப்பாற்றப்பட்டதில் அவனது பங்கும் முக்கியமானது என்றாலும், படையை விடவும் புகாரின் பாதுகாப்பு முக்கியம் என்பதால் அவளது கோபத்தை அங்கு நின்ற கரிகாலர், வேளக்காரப் படைத் தலைவர், பிடர்த்தலையர், வளவனார் உட்பட அனைவரும் ஆதரிக்கவே செய்தார்கள்.

அமைதியாக நின்று கொண்டிருந்தான் பரதவன் குமரன்.

"குமரா.... பதில் கூறு!" கட்டளையிட்டான் வேளக்காரப் படைத்தலைவன்.

"'புறப்படு' என்ற கட்டளை கிடைத்தது தலைவரே, புறப்பட்டுவிட்டேன்."

"யாரிடமிருந்து?"

"அதைத் தெரிவிப்பதற்கு எனக்கு அதிகாரம் இல்லை !"

"குமரா... நீ யாரிடம் பேசிக் கொண்டிருக்கிறாய் என்பதைக் கவனத்தில் கொண்டு பேசு!" எனக் குறுக்கிட்டு எச்சரித்தாள் வானவல்லி.

கரிகாலர் எதுவும் பேசாமல் அமைதியாக நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்.

மீண்டும் வானவல்லி, "குமரா, புகாரை அங்குக் காவல் காப்பது யார்? எந்தத் துணிச்சலில் நீ இங்கு வருகை தந்திருக்கிறாய்? நான் புறப்படும்போதே நீ வெண்ணிக்கு வரக்கூடாது எனக் கூறிவிட்டுத்தானே வந்தேன்! அதையும் மீறி..." எனக் கூறி கோபத்தில் வாளினை உருவினாள்.

அப்போது டாள்தொபியாஸ், "குமரா, ஒற்றர்கள் சிங்கள வீரர்கள் புகாரைத் தாக்கினாலும் தாக்கலாம் என எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். இந்த நிலையில் நீ புகாரைக் கைவிட்டு வந்திருப்பது முறை தானா?" என அவன் பங்

கிற்குக் கேள்வியைக் கேட்கவும் செய் தான்.

"இனி சிங்களப் படையை எண் ணிக் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை டாள்தொபியாஸ்!"

"ஏன்?"

"அவர்களின் தாக்குதல் முறியடிக் கப்பட்டு விட்டது!"

"என்ன கூறுகிறாய் நீ?" குறுக்கிட் டார் கரிகாலர்.

"ஆமாம் இளவரசே.... கடற்போரில் சிங்கள இளவரசன் கொல்லப்பட்டுவிட் டான். அது, அதுமட்டுமல்லாமல்..."

"தொடர்ந்து கூறு குமரா..." கட்ட ளையிட்டார் கரிகாலர்.

"பதினான்காயிரம் வீரர்கள் சிறைபி டிக்கப்பட்டார்கள்."

"என்ன, சிங்கள வீரர்களைச் சிறை பிடித்து விட்டாயா?"

"மன்னிக்கவும் இளவரசே. அந்தப் பெரும்பணியைச் செய்தவன் நான் அல்ல!"

"வேறு யார் குமரா?"

"மன்னிக்கவும்! அதைத் தெரிவிப்பதற்கு எந்த அதிகாரமும் எனக்கு இல்லை"எனக் கரிகாலரிடம் பரதவன் குமாரன் கூறியதுதான் தாமதம் அடுத்தகணம் அமைதியாக நின்ற டாள்தொபியாஸ், "எவ்வளவு துணிச்சல் இருந்தால் கரிகாலரையே எதிர்த்துப் பேசுவாய்?" எனக் கூறியபடி தனது வாளினைத் தனது நண்பன் பரதவன் குமரனின் கழுத்தை நோக்கி வேகமாக வீசினான்.

டாள்தொபியாசின் செயலை அங்கிருந்த எவருமே எதிர்பார்க்கவில்லை. டாள்தொபியாஸ் தனது உறையிலிருந்து வாளினை உருவுவதைப் பார்த்த பிறகும் பரதவன் குமரன் தற்காப்பு நடவடிக்கையில் இறங்காமல் அப்படியே நின்று கொண்டிருந்தான். ஆனால், பரதவன்

https://telegram.me/aedahamlibra

குமரனின் கழுத்தை நோக்கி வந்த வாள் அந்தரத்திலேயே தடுத்து நிறுத்தப்பட்டது.

பரதவன் குமரனுக்கு வலப்புறத்தில் நின்ற இம்ஹோடெப் டாள்தொபியாசின் வாளினைத் தடுத்திருந்தான். யார் என்றே தெரியாத ஒருவன் தனது உப தலைவனின் வாளினைத் தடுத்து நிறுத்துவதைக் கண்ட வானவல்லி இம்ஹோடெப்பை நோக்கி வாளினை உயர்த்தினாள்.

ஆனால், அவளது வாள் யவன ஏந்திழையின் வாளினால் தடுத்து நிறுத்தப்பட உடனே சுற்றி நின்ற வீரர்கள் அனைவரும் முகக் கவசத்துடன் நின்று கொண்டிருந்தவர்களை நோக்கி வாளினை உயர்த்தி அவர்களைச் சுற்றி வளைத்தார்கள்.

“அனைவரும் விலகுங்கள்!” எனக் கட்டளையிட்ட கரிகாலர் பரதவன் குமரனிடம் வந்தார். வந்தவர் பரதவன் கும

ரனையும் அருகில் முகக் கவசத்துடன் நின்று கொண்டிருந்த செங்குவீரன் மற்றும் திவ்யன் இருவரின் விழிகளையும் மாறி மாறி நோக்கினார். பிறகு அருகில் நின்ற யவன ஏந்திழையின் விழிகளில் தனது பார்வையை நிலைநாட்டினார்.

அப்போதும் அவள் தனது மோக விழிகளைக் கரிகாலரின் விழிகளில் நிலைக்க விடலானாள்.

புன்சிரிப்பு ஒன்றை வெளிப்படுத்தினார் கரிகாலர்.

மீண்டும் திவ்யனை நோக்கினார். அப்போது என்ன நினைத்தாரோ இடையிலிருந்த வாளினை உருவி திவ்யனை நோக்கி அதிவேகத்தில் வீசலானார். அங்கிருந்த யாருமே எதிர்பார்க்கவில்லை. செண்டாயுதத்தின் தாக்குதலால் அவரது வாள் அவரது கையிலிருந்து விடுபட்டு நான்கடி தொலைவில் சென்று விழுந்தது.

அனைவருமே பதறிப் போனார்கள். ஆனால் கரிகாலர் மட்டும் அப்போதும் புன்சிரிப்புடன் திவ்யனை அணைத்துக் கொண்டார்.

ஒன்றும் புரியாமல் வியப்புடன் நின்று கொண்டிருந்தவர்களை நோக் கித் திரும்பிய கரிகாலர், “ஆயுதங்களைக் கீழே போடுங்கள். நமது படைத் தலை வர்களை வரவேற்கும் முறையா இது?” எனக் கோபத்துடன் கூறியவர் முகக் கவ சத்துடன் நின்று கொண்டிருந்த செங்கு வீரன் மற்றும் திவ்யனிடம், “இந்த விளை யாட்டு போதும். உங்களது கவசத்தை நீக் குங்கள்!” எனக் கட்டளையிட்டார்.

செங்குவீரன் மற்றும் திவ்யன் இரு வரும் முகக் கவசத்தை நீக்கினார்கள்.

படைத் தலைவர்கள் செங்குவீரன் மற்றும் திவ்யன் இருவரும் முகக் கவ சத்தை நீக்கிய அடுத்தகணம் அருகில் நின்ற உபதலைவர்கள், உபதளபதிகள் மற்றும் வீரர்கள் அனைவரும்”செங்குவீ

ரர்... திவ்யன்" என முணுமுணுத்தபடி அதிர்ச்சியில் உறைந்து நின்று கொண்டிருந்தார்கள்.

அனைவரும் திகைத்து நிற்க வான வல்லி மட்டும், "அண்ணா" என அழைத்தபடி அவனை நோக்கி ஓடியவள் அவனது தோளில் சாய்ந்து கொண்டாள். அவளது விழிகளிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்து அவனது தோளினை நனைக்கத் தொடங்கியது. இறந்து விட்டதாக நினைத்துக் கொண்டிருந்த தனது தவப் புதல்வன் திவ்யனை உயிரோடு கண்ட வளவனார் அதிர்ச்சியில் நிற்க அவரையும், வானவல்லியோடு சேர்த்து இன்னொரு தோளில் அணைத்துக் கொண்டான் திவ்யன்.

விழிகளில் வழிந்த ஆனந்தக் கண்ணீரைத் துடைத்துக் கொண்ட வான வல்லி"அண்ணா... இத்தனை நாட்களாக எங்களைத் தவிக்க விட்டுவிட்டு எங்

குச் சென்றிருந்தீர்கள்?" எனத் தேம்பிய படி வினவினாள்.

"யவனத்திற்கு!"

"யவனத்திற்கா?"

"ஆம்!"

"அங்கு..." என அவள் தயக்கத் துடன் பேச வாயெடுத்தாள். ஆனால், அதற்குள் குறுக்கிட்ட திவ்யன், "அங்கு அடிமையாக இருந்தேன் வானவல்லி!" எனத் தெரிவித்தான்.

தனது நண்பன் திவ்யனை வியப் புடன் நோக்கிய வேளக்காரப் படைத்த லைவன் இளந்திரையன், "நண்பா... அடி மையாகவா?" எனக் கோபத்துடன் வின வினான்.

"ஆம் நண்பா!"

"யவனத்திலிருந்து திரும்பி வர இப் போதுதான் பாதை தெரிந்ததா உனக்கு?" எனக் கடிந்து கொண்டான்.

"பாதை தெரியாமல் இல்லை நண்பா, அடிமை வீரனாகச் சிறை பட்டுப் போனேன். என்னை என் நண்பன்தான் காப்பாற்றினான்! அவன் தான் என்னைக் காப்பாற்றி மீண்டும் அழைத்து வந்திருக் கிறான்."

"உன் நண்பனா?"

"ஆம்!"

"யாரைக் குறிப்பிடுகிறாய் நீ?"

"என் நண்பன் விறல்வேலைத்தான் நான் குறிப்பிடுகிறேன்!" எனக் கூறியபடி செங்குவீரனை நோக்கினான்.

அப்போதுதான் வளவனார், வேளக்காரப்படைத் தலைவன் இளந்தி ரையன், வானவல்லி ஆகியோர் செங்கு வீரன் நிற்பதைக் கவனிக்கலானார்கள்.

இறந்துவிட்டதாகக் கருதப்பட்ட இரண்டு படைத் தலைவர்கள் வந்து விட்டதைக் கவனித்ததும் அங்கு நின்று

கொண்டிருந்த சேர, பாண்டிய படைப் பிரிவினரும் அச்சத்தில் செல்லலானார் கள். அவர்களோடு நின்ற வைதீகரும் அங்கிருந்து விரைந்துச் செல்லலானார்.

இளந்திரையன் மற்றும் வளவனார் ஆகியோர் செங்குவீரனை நோக்கி வர அருகில் நின்ற யவன ஏந்திழை ஆண்ட் ரிமேடாவின் கரத்தைப் பற்றிய செங்குவீ ரன்"டாள்தொபியாஸ், உனக்கு யவனத் திலிருந்து நான் கொண்டு வந்திருக்கும் பரிசு!" எனக் கூறியபடி அவளை அவன் முன் நிறுத்தினான்.

செங்குவீரனை உயிரோடு கண்ட அதிர்ச்சியிலிருந்தே மீளாமல் நின்று கொண்டிருந்த டாள்தொபியாஸ் தனக்கு முன் நின்ற செங்குவீரனையும், யவன ஏந்திழையையும் வியப்புடன் மாறி மாறி நோக்கினான்.

ஆண்ட்ரிமேடாவை நோக்கிய செங்குவீரன், "உனக்களித்த வாக்கினை நிறைவேற்றி விட்டேன். கவசத்தை நீக்கு.

தயக்கம் வேண்டாம்!” எனக் கட்டளை யிட்டான்.

ஆண்ட்ரிமேடா தனது காதல் கலந்த மோகப் பார்வையால் அவளுக்கு முன் நின்றத்தனது காதலனான டாள் தொபியாசை நோக்கியபடி முகக் கவ சத்தை நீக்கினாள்.

அவளைக் கண்டதுதான் தாமதம், “ஆண்ட்ரிமேடா...” என அழைத்தபடியே அவளைத் தழுவி கொண்டான் டாள் தொபியாஸ்.

இருவரது விழிகளிலிருந்தும் கண் ணீர் வழிந்து மற்றவரின் தோளினை நனைத்துக் கொண்டிருந்தது.

“நீ இத்தனை நாட்களாக உயிரோ டுதான் இருந்தாயா?” எனக் கேட்டபடியே சுற்றிலும் நின்ற வீரர்கள் கூட்டத்தையும் மறந்தபடி தனது காதலியின் இதழ்களில் முத்தமிடச் சென்றான் டாள்தொபியாஸ்.

அப்போது செங்குவீரன், “டாள் தொபியாஸ்!” என மிரட்டலுடன் அழைக்க மிரண்டு போனான் டாள்தொபியாஸ்.

“ஆண்ட்ரிமேடா, உன் நிதானத்தை நீ எப்படி இழந்தாய்?” என வினவிய திவ்யன் அவளது கரத்தைப் பிடித்து இழுத்து டாள்தொபியாசிடமிருந்து அவளைப் பிரித்தான்.

“டாள்தொபியாசைக் கண்டதும் உணர்ச்சிவசப் பட்டுவிட்டேன்!” வருந்தினாள் ஆண்ட்ரிமேடா. அவளது விழிகளிலிருந்து கண்ணீர்த் துளி பெருக்கெடுக்க ஆரம்பித்தது.

“கண நேரம் விறல்வேல் தாமதித்திருந்தாலும் டாள்தொபியாஸ் இந்நேரம் மடிந்து விழுந்திருப்பான்!”

தாள முடியாத துக்கத்தில் தேம்பித் தேம்பி அழுதாள் ஆண்ட்ரிமேடா. அவர்கள் பேசுவது எதுவும் டாள்தொபியாசிற்

குப் புரியாததால் அவன் அதிர்ச்சியுடன் மூவரையும் மாறி மாறி பார்த்துக் கொண்டிருந்தான்.

"ஈழவாவிரையர் எங்கே?" வினவினான் விறல்வேல்.

விறல்வேல் அழைத்த அடுத்தக் கணம் போரில் காயம்பட்டவர்களுக்கு மருத்துவம் பார்த்துக் கொண்டிருந்த ஈழவாவிரையரை வீரர்கள் ஓடிச் சென்று அழைத்து வந்தார்கள்.

விறல்வேலைக் கண்டதும், "விறல்வேல்..." என அழைத்தபடியே ஓடி வந்து தழுவி கொண்டார் திகம்பர அடிகளார் ஈழவாவிரையர். சிறிது நேரம் அவரைச் சமாதானப் படுத்திய விறல்வேல், ஆண்ட்ரிமேடாவின் விழிகளை நோக்கச் செய்தான்.

அவளது விழிகளை நோக்கிய ஈழவாவிரையர் மிரண்டு போனார். அதிர்ச்சி

யுடன் அவர், "பெரும் சாபம்!" என மட்டும் தெரிவித்தார்.

அவர் கூறியது அருகில் நின்ற வானவல்லிக்கும் கேட்டிருந்தது. உடனே அவள் ஆண்ட்ரிமேடாவின் அருகில் வந்து அவளது விழிகளை நோக்கினாள். அவளது உள்ளங்கையைத் தனது கன்னத்தில் வைத்துப் பார்த்தாள். அவளது குருதி கொதித்துக் கொண்டிருந்தது. அவளது குருதியில் கலந்திருந்த நஞ்சினை அவள் உணர்ந்தாள்.

"குருதியில் நஞ்சு கலந்திருக்கிறது!"

"ஆமாம்!"

"நாகக் கன்னி.."

"ஆமாம் வானவல்லி! இவள் சர்ப்பக் கன்னி தான்! இவளை குணப்படுத்துவது எளிதான காரியம் அல்ல" வருத்தத்துடன் தெரிவித்தார் ஈழவாவிரையர்.

ஈழவாவிரையர் கூறிய சொற்கள் விறல்வேல் மற்றும் திவ்யனின் நம்பிக் கையைச் சிதைத்திருந்தன. வருத்தத் துடன் ஆண்ட்ரிமேடாவை நோக்கினார் கள் இருவரும்.

அப்போது வானவல்லி, "இல்லை அய்யா... பழைய ஓலைச் சுவடியில் இதற்கான மருத்துவத்தைப் படித்திருக் கிறேன். அந்த ஓலையைப் படியெடுத்தும் வைத்திருக்கிறேன்! இரண்டு கிழமை போதும். இவளது குருதியைச் சுத் தம் செய்துவிடலாம்!" என மகிழ்ச்சியுடன் தெரிவித்தவள் திவ்யனிடம், "அண்ணா, போரினைக் கவனித்துக் கொள்ளுங் கள்!" எனக் கூறிவிட்டு ஆண்ட்ரிமே டாவை அழைத்துக் கொண்டு அங்கி ருந்து புறப்பட்டாள்.

வானவல்லியைக் காணவே பெரும் போராட்டத்தைக் கடந்து திரும்பி வந் திருந்தான் விறல்வேல். ஆனால், அவள் இவனை ஏறெடுத்தும் பார்த்

https://telegram.me/aedahamlibra

திருக்கவில்லை. இதயத்தின் உணர்ச்சிகள் அனைத்தும் தீப்பிடித்துக் கருகுவதைப் போன்று உணர்ந்தான் விறல்வேல். கையிலிருந்த வாளில் அவனது பிடி இறுக இறுக அவனது குருதி துளித் துளியாய் சிந்தத் தொடங்கியது.

“வானவல்லி...” என அழைத்தான் திவ்யன்.

திவ்யனின் குரல் எழுந்ததும் திரும்பிய வானவல்லி”கூறுங்கள் அண்ணா...” எனப் புன்னகைத்தாள்.

“என் நண்பன் விறல்வேல் உன்னைக் காணவே கடல்களையும், மலைகளையும் கடந்து வந்திருக்கிறான். என்னால்தானே உங்களுக்குள் பிரச்சனை. நான்தான் உயிரோடு திரும்பி வந்துவிட்டேனே! இனியும் நீ....” எனக் கூறி வாக்கியத்தைப் பாதியில் நிறுத்தினான்.

இடையில் கட்டியிருந்த வாளுறையை அவிழ்த்த வானவல்லி அதைத்

https://telegram.me/aedahamlibra

திவ்யனிடம் கொடுத்துவிட்டு, “புகாரில் அவர் உரைத்த வெஞ்சினத்தை நிறைவேற்றிவிட்டு வரச் சொல்லுங்கள் அண்ணா. அவருக்காக நான் குன்றுத் துறையில் காத்திருக்கிறேன். காலம் தாழ்த்தாமல் விரைந்து அனுப்பி வையுங்கள்!” எனக் கூறியவள் விறல்வேலைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் அங்கிருந்து விரைந்துச் செல்லலானாள்.

விறல்வேல் அவள் சென்ற திசையையே வெகுநேரம் பார்த்தபடி நின்றுகொண்டிருந்தான்.

https://telegram.me/aedahamlibra

# 54. வீர மரணமும் புறப் புண்ணும்

வெண்ணிப் போர் தொடங்கிய இரண்டாவது நாள், களத்தில் இரண்டு படைகளும் ஒன்றையொன்று எதிர்க்க அணிவகுத்து நின்று கொண்டிருந்தன. சோழப் படையின் எண்ணிக்கை குறைவாகக் காணப்பட்டாலும் படைத்தலைவர்கள் செங்குவீரன் மற்றும் திவ்யனின் வரவினால் வீரர்களின் மனவலிமை பலமடங்கு அதிகரித்திருந்தது. பெரும்

உற்சாகத்தில் காணப்பட்டார்கள் சோழ வீரர்கள்.

சோழப் படையின் மையத்தில் கரி காலர் தனது புரவியில் நின்று கொண்டி ருந்தார். அவருடனே அவருக்குக் காவ லாக வேளக்காரப் படைத்தலைவன் இளந்திரையன் நின்று கொண்டிருந் தான். படையின் வலப்புறத்தில் செங்கு வீரன் நின்றிருந்தான். இடப்புறத்தில் திவ் யன் நின்று கொண்டிருந்தான். மற்ற உப தலைவர்கள், உபதளபதிகள் அனைவ ரும் இவர்களுக்குப் பின்னால் தயாராக நின்று கொண்டிருந்தார்கள்.

சேரமான் பெருஞ்சேரலாதனை கரிகாலரும், இருங்கோ மற்றும் அவரது புதல்வன் யுவராஜனது தலைமையிலான படையைச் செங்குவீரனும், பாண்டிய நாட்டுப் படையைத் திவ்யனும் சேர இள வலின் படையை வில்லவனும் நேருக்கு நேர் எதிர்க்க ஆயத்தமாக நின்றார்கள்.

கொம்பு ஊதப்பட்டது. போர் தொடங்கியது. இரண்டு தரப்புப் படைக

ளும் ஒன்றையொன்று தாக்கிக்கொள்ள ஆவேசமாக விரைந்து சென்று ஒன்றுக் கொன்று மோதிக் கொண்டன. புரவி மற் றும் யானைகளின் காலடியில் சிக்கி வீரர் கள் மரணித்தார்கள். வேல் மற்றும் ஈட்டி களில் அகப்பட்ட புரவிகள் வந்த வேகத் தில் தலை குப்புற விழுந்தன. வேல்க ளால் தாக்கப்பட்ட யானைகள் மதம்பி டித்து அங்குமிங்கும் ஓடி எதிர்பட்ட வீரர்க ளைத் தூக்கி எறிந்து மிதித்துத் துவம்சம் செய்து கொண்டிருந்தன.

தனது வெண்ணிறப் புரவியில் விரைந்து சென்ற செங்குவீரன் தனது உபதலைவன் பரதவன் குமரன் மற் றும் டாள்தொபியாசுடன் தாக்கலானான். வந்த வேகத்தில் இருங்கோவின் படை யைப் பிளந்து கொண்டு ஊடுருவியி ருந்தான் செங்குவீரன். செங்குவீரனின் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் இருங்கோவின் படை திணறிக் கொண்டி ருந்தது.

https://telegram.me/aedahamlibra

படைப் பிரிவின் மையத்தில் நின்று கொண்டு கட்டளையைப் பிறப்பித்துக் கொண்டிருந்தனர் இருங்கோவும், யுவராஜனும். செங்குவீரனைத் தடுக்க முயன்ற இருங்கோவின் படைப் பிரிவின் அனைத்து முயற்சிகளையும் தகர்த்து விட்டு செங்குவீரன் யுவராஜனை நோக்கி முன்னேறியபடி இருந்தான். யுவராஜனின் மெய்க் காவல் வீரர்கள் அவனைச் சுற்றிப் பெரும் பாதுகாப்பு வளையத்தை அமைத்து காத்துக் கொண்டிருந்தார்கள். யுவராஜன் பார்வையில் அகப்பட்டதுமே செங்குவீரன் தனது புரவியில் சென்றபடியே எதிர்த்த வீரர்கள் அனைவரையும் தனது வாளினால் கொன்றுபோட்டுவிட்டு யுவராஜனை நெருங்கியிருந்தான்.

தன்னைச் சுற்றிலும் காவலுக்கு இருந்த மெய்க் காவல் வீரர்களின் துணையுடனே செங்குவீரனைத் தாக்கினான் யுவராஜன். உடனே செங்குவீரனுக்குத் துணையாக வந்த டாள்தொபி

யாசும், பரதவன் குமரனும் அவர்களை எதிர் கொண்டு அப்புறப்படுத்தினார்கள்.

செங்குவீரன் புரவியிலிருந்து குதித் தான். யுவராஜனே ஆவேசத்துடன் ஓடி வந்து செங்குவீரனைத் தாக்கினான். யுவராஜனின் வாள் உயர்ந்த அடுத் தக் கணத்திலேயே அவனது கை வாளோடு காற்றில் பறந்து கொண்டிருந் தது. கையை இழந்த யுவராஜன் மிரட் சியுடன் நிற்க அவனது உச்சந்தலையில் தனது வாளினால் ஒரே வெட்டாக வெட் டினான் செங்குவீரன். உடல் இரண்டாகப் பிளந்துவிட்டிருந்தது.

தனது மகனின் கோர மரணத்தைக் கண்ட இருங்கோவேள் பெரும் ஆத் திரத்துடன் செங்குவீரனைத் தாக்கினார். ஆனால், அவருக்கும் செங்குவீரன் அதி கக் காலத்தை அளிக்கவில்லை. அவ னைத் தாக்க அவர் தனது வாளினை உயர்த்தினார். ஆனால், அவரது வாள் தாழ்வதற்குள் அவரது தலையை மட்டும்

https://telegram.me/aedahamlibra

தனியாக வெட்டி எறிந்திருந்தான் செங்கு வீரன்.

இருவரையும் கொன்றுபோட்ட பிறகு ம் செங்குவீரனது ஆத்திரம் அடங் கவில்லை. தனது உபதலைவர்களுடன் சேர்ந்து கொண்டு சேர, பாண்டிய மற்றும் வேளிர்கள் அடங்கிய கூட்டுப் படையைச் சிதறடிக்கத் தொடங்கினான்.

செங்குவீரன் இருங்கோவை நோக் கிச் சென்று கொண்டிருந்த அதே நேரம் திவ்யன் பாண்டிய மன்னர் தென்னவனை எதிர்த்துத் தாக்கி அவரை நோக்கி விரை யலானான். அவனை எதிர்த்த வேளிர்கள் அனைவரையும் தனது செண்டாயுதத்தி னால் கொன்று போட்டபடி தொடர்ந்து முன்னேறிக் கொண்டிருந்தான். பாண் டிய சேனாதிபதி அதிகனையும், பாண்டிய மன்னர் தென்னவரையும் தனது செண் டாயுதத்தினால் கொன்றுவிட்டிருந்தான். பாண்டிய இளவரசனின் தலைமையில்

அவரது படை பின்வாங்கத் தொடங்கி யது.

கரிகாலர் சேரமான் பெருஞ்சேரலா தனுடன் நேருக்கு நேர் யுத்தம் புரிய சேர நாட்டுப் படையை ஊடுருவ முயற்சித்துக் கொண்டிருந்தார். ஆனால், சேர நாட்டு வீரர்களின் அணிவகுப்பைக் கடந்து அவரால் நெருங்க இயலவில்லை.

"கரிகாலா... இவர்களின் அணிவ குப்பை நான் நேருக்கு நேர் தாக் கித் தகர்க்கப் போகிறேன்!" எனக் கூறிய இளந்திரையன் தன்னுடைய புர விப் படையை அதிவேகமாக விரட்டிக் கொண்டு சேரப் படையுடன் கலந்துவிட் டான். அவனது புரவிப்படை கலந்துவிட அவனைப் பின்தொடர்ந்துவந்த படைப் பிரிவினரும் சேரப் படைக்குள் ஊடுரு வினார்கள். ஊடுருவிய இளந்திரையன் கையிலிருந்த வாளினால் எதிர்பட்ட வீரர் கள் அனைவரையும் கொன்று கரிகாலர் சேரமான் பெருஞ்சேரலாதனை நோக்கி

முன்னேற பாதை அமைத்துக் கொடுக்க முன்னேறினார்.

சோழ இளவல் கரிகாலர் சேரமான் பெருஞ்சேரலாதனை நெருங்கியதுமே அபாயச் சங்கு ஊதப்பட்டது. உடனே சோழப் படையைத் தாக்கிக் கொண்டிருந்த சேர இளவல் சேரமானை நோக்கித் திரும்பினான். ஆனால், அவன் திரும்பிச் செல்வதற்குள் உபதளபதி வில்லவன் இடையில் மறித்துக் கொண்டான்.

சேர இளவரசன், 'வில்லவனைக் கொன்று போட்டாவது சேர மன்னரிடம் விரைந்துச் செல்ல வேண்டும்' என்று முடிவெடுத்து வில்லவனைத் தாக்கினான். ஆனால், அவனது தாக்குதல் அனைத்தையும் சாதாரணமாகத் தடுத்துக் கொண்டிருந்தான் வில்லவன். வில்லவன் சேர இளவரசனைத் தாக்கவில்லை. ஆனால், அவனது தாக்குதலைத் தடுத்து அவனை அங்கிருந்து நகரவிடாமல் தடுத்துக் கொண்டிருந்தான்.

https://telegram.me/aedahamlibrary

சோழப் படை தன்னை நோக்கி வந்து கொண்டிருப்பதை உணர்ந்த சேரமான் பெருஞ்சேரலாதன் தேரில் இருந்தபடியே அம்பினைத் தொடுத்துச் சரமாரியாக எய்யலானார். குறி தவறாத அவரது அம்புகள் நெருங்கி வந்த சோழ வீரர்களை மண்ணில் சாய்த்தது.

சேர மன்னரை நோக்கி வந்த கரிகாலர் முன்னேற இயலாதபடி இளந்திரையனையும், கரிகாலரையும் புற்றீசலைப் போன்று தோன்றிய சேர வீரர்கள் தொடர்ந்து தாக்கிக் கொண்டிருந்தார்கள். நெருங்கி வந்த சேர வீரர்களை எதிர்த்துத் தாக்கி அழிப்பதிலேயே கவனத்தைச் செலுத்தினார் கரிகாலர்.

சோழ இளவல் தன்னை வெகு அருகில் நெருங்கிவிட்டதைக் கண்ட சேரமான் பெருஞ்சேரலாதன் அம்பினை அவரை நோக்கித் திருப்பினார். ஆனால், கரிகாலர் சேரமானின் வில் தன்னைக் குறிபார்த்துக் கொண்டிருக்கிறது என்

பதை உணராதவராய் சேர வீரர்களைக் கொன்று குவிப்பதில் தனது கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தார்.

ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தார், ‘இளம் வயதுடையவன் சோழ இளவல் வளவன். இவனைப் போரில் கொல் வது நியாயமா?’ என்று பேரமைச்சர் ஓத வஞ்சி தெரிவித்த கருத்துகள் அவரது மனத் திரையில் தோன்றி மறைந்து விட் டுச் சென்றிருந்தது. வில்லில் தொடுத்த அம்பு கரிகாலரின் மார்பையே குறிபார்த் துக் கொண்டிருந்தது. இரட்டை மண நிலையில் சிந்தித்தபடியே குழம்பி நின்று கொண்டிருந்தார் சேரமான் பெருஞ்சேர லாதன். அம்பு கரிகாலரையே குறி பார்த் துக் கொண்டிருந்தது. அப்போது சோழ வீரர்களால் தாக்கப்பட்ட சேர நாட்டுப் புரவி ஒன்று நிலைதடுமாறி சேரமான் பெருஞ்சேரலாதனின் தேரின் மீது விழுந் தது. திடீரென்று ஏற்பட்ட அதிர்ச்சியினால் நாணில் தொடுத்திருந்த அம்பின் பிடியை விட்டுவிட்டார் சேர மன்னர் பெருஞ்சே

ரலாதன். அவரது வில்லிலிருந்து புறப் பட்ட அம்பானது கரிகாலரை நோக்கி விரைந்து சென்றது. ஆனால், தன்னை நோக்கி வந்த அம்பினைக் கரிகாலர் கவ னித்திருக்கவில்லை.

கரிகாலரின் நிழலைப் போன்று அவரை எப்போதுமே தொடர்ந்து சென்று அவரைச் சிறு வயது முதலே காத் துக் கொண்டிருந்த வேளக்காரப் படைத் தலைவன் இளந்திரையன் சேரமான் எய்த அம்பைக் கவனித்துவிட்டிருந்தான். உடனே கரிகாலரைக் காக்க அவர் அமர்ந்திருந்த புரவியின் மீது தாவி கரி காலரைக் கீழே தள்ளிவிட்டான். புரவியி லிருந்து இளந்திரையனால் தள்ளிவிடப் பட்ட கரிகாலருக்கு எந்த ஆபத்தும் ஏற் பட்டிருக்கவில்லை. ஆனால், சேரமான் எய்த அம்பானது இளந்திரையனின் இத யத்தில் பாய்ந்திருந்தது. மார்பில் பாய்ந்த அம்போடு எழுந்து நின்றான் இளந்திரை யன்.

https://telegram.me/aedahamlibra

உடலுக்குள் பதிந்த அம்பின் முனையைத் தவிர்த்து வெளியே நீட்டிக் கொண்டிருந்ததை உடைத்து எறிந்து, கீழே கிடந்த தனது வாளினைக் கையில் எடுத்து, ஆவேசத்துடன் அவ னைச் சூழ்ந்த சேர வீரர்களைத் தாக் கியபடியே, "கரிகாலா... என் மார்பில் பாய்ந்த அம்பானது என் உயிரைக் குடிப் பதற்குள் கோழைத் தனமாக உன்னைக் கொல்ல முயன்ற பெருஞ்சேரலாதனின் மார்பில் உனது வேலைப் பாய்ச்சி இந்தப் போரினை முடித்து வை!" கட்டளையிட் டான் இளந்திரையன்.

கையில் வேலினை ஏந்தித் தனது புரவியின் மீது ஒரே தாவலாக ஏறியமர்ந்த கரிகாலர், அதி வேகத்தில் சேரமான் பெருஞ்சேரலாதனை நோக்கிச் செல்ல லானார். தன்னைக் கொலை வெறியுடன் தாக்க வரும் சோழ இளவலைக் கண்ட சேரமான் அவர் மீது தொடர்ந்து அம்புக ளைத் தொடுத்து எறியலானார்.

தன்னை நோக்கி வந்த அனைத்து அம்புகளையும் தனது வேலினால் தட்டிவிட்ட கரிகாலர் தனது புரவியிலிருந்து ஒரே பாய்ச்சலாகச் சேரமான் வீற்றிருந்த தேருக்குள் தாவினார். தனது தேருக்குள் தாவிய கரிகாலரை எதிர்க்கக் கையில் வாளினை ஏந்தினார் பெருஞ்சேரலாதன்.

ஆனால், அவரது வாள் வீச்சை பொருட்படுத்தாத கரிகாலர், சேரமானின் தேருக்குள் நுழைந்ததுமே தனது வேலினைச் சேரமான் பெருஞ்சேரலாதனின் மார்பில் இறக்கியிருந்தார். சேரமானின் வலது பக்க மார்பில் பாய்ந்திருந்தது கரிகாலரின் கருணையற்ற வேல்.

வேல் பாய்ந்த வேகத்தில் தேரிலிருந்து கீழே விழுந்தார் சேரமான் பெருஞ்சேரலாதன். சேரமான் பெருஞ்சேரலாதன் வீழ்த்தப்பட்டதும் உடனே போர் நிறுத்தத்திற்கான கொம்பு ஊதப்பட்டது. சேர, பாண்டிய மற்றும் வேளிரின் படைகளின்

தோல்வி உறுதிசெய்யப்பட்டது. சோழப் படையின் வெற்றி அனைவருக்கும் அறிவிக்கப்பட்டது.

சேரமான் பெருஞ்சேரலாதனை வீழ்த்தியதுமே தன்னைக் காத்த வேளக்காரப் படைத்தலைவர் இளந்திரையனை நோக்கி ஓடி வந்தார் கரிகாலர். உயிர் பிரியப் போகும் தருணத்திலும் எதிர்த்த வீரர்களை வீரமாகக் கொன்று குவித்த இளந்திரையன் மண்ணில் விழுந்து கிடந்தான். அவனைத் தூக்கித் தனது மடியில் கிடத்திய கரிகாலர், “மாமா... என்னைக் காக்கத் தங்களது உயிரை நீங்கள் தியாகம் செய்யலாமா?” எனக் கலங்கினார்.

“கரிகாலா, நான் வேளக்காரப் படைத்தலைவன். சோழ இளவலைக் காத்து வீர மரணத்தை அடைந்திருக்கிறேன்!” எனக் கம்பீரமாகத் தெரிவித்தான் இளந்திரையன்.

சோழப்படைத் தலைவர்கள், உப தலைவர்கள் என அனைவரும் அங்குச் சேர்ந்திருந்தார்கள். இளந்திரையனின் மார்பில் பாய்ந்த அம்பிலிருந்து குருதி பெருக்கெடுக்கத் தொடங்கியது. இளந் திரையன் மரணப் போராட்டத்தில் கரிகா லனின் மடியில் கிடந்தான்.

"என் வாழ்வில் நான் சுமந்த கள் வன் காளன் எனும் பெயரை இந்த வீரமர ணத்தினால் கழுவி கொள்கிறேன் நான்!" எனத் தடுமாறியபடி கூறிய இளந்திரை யன் அவனுக்கு முன் மண்டியிட்டு அமர்ந் திருந்த படைத் தலைவர்கள் செங்குவீ ரன் மற்றும் திவ்யன் ஆகியவர்களிடம், "பத்திரை கருவுற்றிருக்கிறாள். அவளுக் குப் பிறக்கப் போகும் குழந்தையை நீங் கள் இருவரும்தான் வீரமும், நெறியும் பிற ழாத ஆண்மகனாக வளர்க்க வேண்டும்!" எனக் கட்டளையிட்டான்.

இருவரும் அவனது கையைப் பிடித்துக் கொண்டு வாக்குக் கொடுத்

https://telegram.me/aedahamlibra

தார்கள். வலியில் துடித்துக் கொண்டிருந் தான் இளந்திரையன். அதைக் காணப் பொறுக்காத செங்குவீரன் இளந்திரைய னின் மார்பில் குத்திக் கொண்டிருந்த அம்பினைப் பிடுங்கினான்.

அடுத்தகணம் வேளக்காரப் படைத்தலைவனின் உயிர் வீர மர ணத்தை அடைந்தது.

செங்குவீரனும், திவ்யனும் போரில் வீர மரணம் அடைந்த வேளக்கா ரப் படைத் தலைவன் இளந்திரையனை எண்ணிப் பெருமையுடன் அவனது வீர உடலையே பார்த்துக் கொண்டிருக் கையில் டாள்தொபியாஸ் அவர்களி டம், “வைதீகர் தப்பித்துவிட்டார்!” எனத் தெரிவித்தான்.

“ஒற்றர்களை விரைந்து அனுப்பி வை. வட நாட்டுக்கே ஓடி ஒளிந்தாலும் அவனை விடக்கூடாது!” கட்டளையிட் டான் திவ்யன்.

கரிகாலரின் வேலினால் தாக்கப் பட்டு விழுந்த சேரமானை ஓடிவந்து தூக் கினான் சேர இளவல். அவரது மார் பில் பாய்ந்திருந்த வேலினைப் பிடுங்கா மல் அப்படியே விட்டுச் சென்றிருந்தார் கரிகாலர். சேரமானை மடியில் கிடத்தத் தூக்கிய சேர இளவல் அதிர்ச்சியடைந்து விட்டான். சேரமானைத் தாக்கிய வேலா னது அவரது மார்பையும் கடந்து முதுகு வழியாக வெளியேறியிருந்தது. அதைப் பார்த்த சேர இளவல், “தந்தையே....” எனக் கலங்கினான்.

தனது முதுகின் வழியாக வெளிவந் திருந்த வேலினை சேர மன்னர் பெருஞ் சேரலாதனும் உணரவே செய்திருந்தார். வேல் அவரது மார்பின் வலப்புறத்தில் பாய்ந்திருந்ததால், அது அவரது உயி ரைக் குடிக்கவில்லை. வலியில் துடித்துக் கொண்டிருந்தார். வலியைவிட முதுகில் ஏற்பட்ட புறப் புண்ணினால் அவர் அவ மானத்தில் நிலை குலைந்திருந்தார்.

அந்த நிலையிலும் சேர இளவல், "தந்தையே, அன்றே போர் வேண்டாம் என்றேன். இன்று முதுகில் புறப்புண் பட்டு தோல்வியை நீங்கள் ஏற்படுத்திவிட்டீர் களே" எனக் கலங்கினான். தன் தந்தை இறக்கப் போவதை விடவும், அவர் முது கில் புறப்புண் பட்டு இறக்கப்போவதை எண்ணித்தான் சேர இளவல் பெரிதும் கலங்கினார்.

"மகனே, நான் செய்தவை தவறு தான். அன்றே எனது நண்பன் ஓத வஞ்சி எனக்கு அறிவுரை வழங்கினான். நான் கேட்கத் தவறிவிட்டேன். அவனிடம் நான் மன்னிப்புக் கேட்டதாகத் தெரிவித் துவிடு!" கலங்கியபடி தெரிவித்த பெருஞ் சேரலாதன் வடக்கு நோக்கி அமர்ந்தார்.

"என் புறப்புண்ணிற்கு நான் எனக்கு அளித்துக்கொள்ளும் தண்டனை இது தான்! என்னை மன்னித்துவிடு மகனே" எனக் கூறிய சேரமான் பெருஞ்சேரலா தன் இடையில் வைத்திருந்த தனது குறு

வாளினால் தனது கழுத்தைத் தானே அறுத்துக் கொண்டு வீரமாக வாள் வடக் கிருத்தலை மேற் கொண்டார்.

https://telegram.me/aedahamlibra

https://telegram.me/aedahamlibra

# 55.

# கரிகாலரின் கட்டளை

சோழர்களின் புராதனத் தலைநகர் உறைந்தை விழாக் கோலம் பூண்டிருந்தது. சோழ மாமன்னன் கரிகாற்சோழன் உறைந்தை அரண்மனையின் அரியாசனத்தில் கம்பீரமாக அமர்ந்திருந்தார். சோழ நாட்டு அமைச்சர்கள், படைத் தலைவர்கள், படைத் தளபதிகள் என அனைவரும் அவையில் அமர்ந்திருந்தார்கள். போரில் அவரிடம் தோல்வியடைந்திருந்த அனைத்து அரசர்கள் மற்றும் போரில் இறந்திருந்த மன்னர்களுக்குப் பதில் அந்நாட்டு இளவரசர்களை வரவழைத்திருந்தார்.

சோழ மாமன்னர் கரிகாலர், "சோழ நாடு அண்டை நாடுகளுடன் நட்புறவையே விரும்புகிறது என்பதைத் தெரிவிப்பதற்காகவே இங்கு அனைவரையும் வரவழைத்திருக்கிறேன். போரில் தோற்ற பிறகு ம் உங்களது நாடுகளை மீண்டும் உங்களிடமே திருப்பியளிக்க முடிவு செய்திருக்கிறேன்! ஆனால், ஒரே ஒரு நிபந்தனை!" எனக் கூறி அமைதியானார்.

அங்குச் சிறு சலசலப்புத் தோன்றியது.

"நம் தமிழ் மன்னர்களான நமக்குள் நாம் சண்டையிட்டுக் கொண்டாலும் வடநாட்டு மன்னர்கள் நம் மீது போர் தொடுத்து வந்தால் நாம் ஒன்றாகச் சேர்ந்து அவர்களை விரட்டியடித்துத் துறத்தியிருக்கிறோம். நமது வரலாறு இது தான். ஆனால், அந்த ஒற்றுமை இன்று இல்லை. சோழ நாட்டை அழிப்பதற்காகச் சிங்கள மன்னன் வரை உதவி கோரப் பட்டிருக்கிறது. நான் சில முக்கிய முடி

வுகளை எடுத்திருக்கிறேன். அது கேட் பதற்குச் சிறிது கடினமாக இருக்கும். ஆனால், அதிலிருந்து நான் பின்வாங்கப் போவதில்லை!" உறுதியாகத் தெரிவித் தார் கரிகாலர்.

அவையில் அமர்ந்திருந்தவர்களின் முகத்தைப் பார்த்து அவர்களின் உணர்ச் சிகளை அறிந்து கொண்ட கரிகாலர், "இனி சோழ, சேர மற்றும் பாண்டிய நாடு மூன்றும் நட்பு நாடுகளே! சேர மற் றும் பாண்டிய நாட்டு இளவரசர்களுக்கு அவர்களின் நாட்டைத் திருப்பி அளித்து நானே முடிசூட்டவும் போகிறேன். அதே போன்று வேளிர்களின் நாடுகளையும் திருப்பி அளிக்கிறேன்."

வேளிர் ஒருவர் எழுந்து, "பேரர சர் நிபந்தனை என்று ஏதோ தெரிவித் தீர்களே, அதையும் தெரிவித்தால்..." என வாக்கியத்தைப் பாதியில் விழுங்கினார்.

"கூறுகிறேன்..." எனக் கூறி அவரை அமரவைத்த கரிகாலர், "அனைத்து

https://telegram.me/aedahamlibrary

நாடுகளையும் நான் சுதந்திர நாடுகளாக அறிவிக்கிறேன். அவை சோழ நாட்டிற்கு எந்தக் கப்பத்தையும் செலுத்த வேண்டிய அவசியமில்லை. ஆனால்....” எனக் கூறி மீண்டும் பேச்சை பாதியில் நிறுத்தினார் கரிகாலர்.

அனைவரும் மகிழ்ச்சியில் ஆரவாரமிடத் தொடங்கினாலும் கரிகாலரின், ‘ஆனால்...’ என்ற சொல் அவர்களின் ஆரவாரத்தை ஆரம்பத்திலேயே தடுத்திருந்தது.

“ஆனால், அனைத்து நாடுகளின் படைகளையும் இனி சோழ நாடே நிர்வகிக்கும்.”

“சோழ நாடு அனைவரையும் அடிமைப்படுத்த முயல்கிறது. பேரரசரின் இந்த நிபந்தனையை ஒருநாளும் ஏற்றுக்கொள்ள இயலாது!” உடனே எழுந்து எதிர்ப்பைத் தெரிவித்தார்கள் சில வேளிர்கள்.

"தென்னகத்தில் இனி போருக்கான அவசியமே இல்லாதபோது படைகள் எதற்கு?" என வினவினார் கரிகாலர்.

"பேரரசரின் பேச்சு புதிராக அல்லவா இருக்கிறது! தென்னகத்தில் இனி போரே நடைபெறாதா? வீரத்தை மறந்து நம்மால் வாழ இயலுமா என்பதைத் தாங்கள் சிந்திக்க வேண்டும்!"

"தென்னகத்தில்தான் இனி போர் நடைபெறாது எனக் கூறினேனே தவிர நம் குருதியோடு கலந்த வீரத்தை நாம் மறக்க வேண்டும் எனக் கூற வில்லையே?"

கரிகாலரின் புதிர் பேச்சு அனைவரையும் சிந்திக்க வைத்தது.

"என் தந்தை இளஞ்சேட்சென்னியின் காலத்தில் வடநாட்டுப் படை தமிழகத்தைக் கைப்பற்ற பெரும் முயற்சி எடுத்திருக்கிறார்கள். ஆனால், அவர்களின் தாக்குதல்கள் அனைத்தையும்

என் தந்தை சென்னி முறியடித்தார். என் தந்தை இறந்த பிறகு வடநாட்டுப் படையைத் தடுக்க நாம் தமிழகத்திற்கு வடக்கே மொழிபெயர் தேயத்தில் காலம் காலமாக நிலை நிறுத்தியிருந்த 'மூவேந்தர் கூட்டணியை' கலிங்க மன்னன் காரவேலன் முறியடித்துத் தமிழகத்திற்குள் ஊடுருவிவிட்டான். அப்போது என் தந்தையும் உயிரோடு இல்லை. நான் சிறு குழந்தை. எத்தனை காலம் தான் நாம் வடநாட்டுப் படையைத் தடுத்துக் கொண்டிருப்பது. என் தந்தை சென்னி செய்த பிழையை நான் சரி செய்யப் போகிறேன்!"

"உங்கள் தந்தை பிழை செய்துவிட்டாரா?"

"ஆம்!"

"பேரரசரின் கூற்று புரிய மறுக்கிறதே!"

"என் தந்தை மௌரியப் படையைத் தடுத்து நிறுத்தியதோடு மட்டுமல்லாமல் மகதம் வரை விரட்டிச் சென்று அவர்களுக்குப் பாடம் கற்பித்திருக்க வேண்டும். ஆனால், அவர் தமிழக எல்லைக்கு விரட்டிச் சென்றுவிட்டுத் திரும்பிவிட்டார். அன்று மட்டும் அவர் விரட்டிச் சென்றிருந்தால் கலிங்க மன்னன் தென்னகப் படையெடுப்பைப் பற்றி நினைத்திருக்க மாட்டான்! வட நாட்டு வச்சிர மற்றும் மகத இளவரசர்கள் தென்னகம் வரை வந்து சோழ நாட்டை நிர்மூலமாக்க வேண்டும் எனும் நோக்கில் என் படைத் தலைவர் திவ்யனை வஞ்சகமாகச் சிறை செய்து யவனத்திற்கு அனுப்பியிருக்க மாட்டார்கள்?"

கரிகாற் சோழரின் அடுத்தக் கூற்று என்னவாக இருக்கும் என எண்ணி அனைவரும் அவரையே நோக்கிக் கொண்டிருந்தார்கள்.

"எத்தனை காலம் தான் நமக்குள் ளாகவே போர் செய்து கிடப்பது. முதல் முறையாக அனைவரும் ஒன்றிணைந்து வடக்கே மகதம் வரை படையெடுப் போம். இனி வடவர்கள் தென்னகத்தின் மீது போர் செய்வோம் எனக் கனவிலும் நினைத்துப் பார்க்கக் கூடாது. ஆதலால், அனைத்துப் படைகளையும் சோழப் படையோடு இணைக்கிறேன் நான்." கட் டளையிட்டார் கரிகாலர்.

யாரும் எதிர்த்துப் பேசவில்லை.

"மன்னருடன் வடநாட்டிற்குப் புறப் படத் தயார்!" எனக் கூவினார்கள் அனை வரும்.

தனது ஆசனத்திலிருந்து எழுந்தார் கரிகாலர். உடனே அவையில் அமர்ந்தி ருந்த அனைவரும் எழலானர்கள். அவர் கள் அனைவரையும் தனது பார்வை யாலே அமரவைத்தார். அவையில் கம்பீ ரத்துடன் நடந்தபடியே, "கலிங்க மன்ன னால் சீர்குலைக்கப்பட்ட மூவேந்தர் கூட்

டணியை மீண்டும் மொழிபெயர் தேயத்தில் நிறுவுகிறேன் நான். அதற்கு எமது படைத் தலைவர் திவ்யன் தலைமை தாங்குவார். பிறக்கப் போகும் சோழ வேளக்காரப் படைத் தலைவர் இளந்திரையனின் மகனை தொண்டை நாட்டிற்கு அரசனாக அறிவிக்கிறேன். வேளக்காரப் படைத்தலைவரின் 'இளந்திரையன்' எனும் பெயருடனே அவருக்கும் தகுந்த அகவை வந்ததும் நானே முடிசூட்டி வைக்கப் போகிறேன். நான் வாக்களித்தபடி வேளிரை இழந்த அழுந்தூருக்கு சோழ உபதலைவர் செங்கோடனை வேளிராக அறிவிக்கிறேன்!" என அறிவித்தார்.

அவரது அறிவிப்பைக் கேட்டதும் அவையில் பெரும் அமைதி நிலவியது.

பிறகு, "நான் அன்று வாக்களித்தபடியே அழுந்தூர் வேளிரின் மகளான மரகதவல்லியை எனது பட்டத்தரசியாக அறிவிக்கிறேன்!"என அறிவிக்கப் பெண்டிர்

சிலர் மரகதவல்லியை அழைத்துவந்து கரிகாலருக்கு அருகில் இருந்த ஆசனத்தில் அமரவைத்தார்கள்.

அப்போது எழுந்த பாண்டிய அரசன், "கைது செய்திருக்கும் சிங்கள வீரர்களைப் பற்றி எந்த அறிவிப்பையும் பேரரசர் இன்னும் வெளியிடவில்லையே? அவர்களை எப்போது விடுவிக்கப் போகிறீர்கள்?" என வினவினான்.

"அவர்களை நான் விடுவிக்கப் போவதில்லை."

"அப்படியெனில் அவர்களை நமது படையுடன் இணைத்துக் கொள்ளப் போகிறீர்களா?"

"அவர்களை நம்ப இயலாது. எப்போது வேண்டுமானாலும் முதுகில் குத்திவிடுவார்கள்! அவர்களைக் கொண்டு நான் காவேரி நதியின் இரண்டு புறத்திலும் கரையை உயர்த்தி நதிக்குக் குறுக்கே அணை கட்டப் போகிறேன்.

காவேரி நதியைச் சுற்றி அமைந்திருக்கும் காடுகளைத் திருத்தி வயல்களாக்கப் போகிறேன்! அதற்கு அவர்களை நான் பயன்படுத்தப் போகிறேன். சோழ படைத் தலைவரை அடிமையாக்கி அனுப்பிய தன் விளைவை அவர்கள் இனி உணர்வார்கள். சிங்கள வீரர்கள் இனி சோழ நாட்டு அடிமை வீரர்கள். அவர்கள் நாளையே பணியைத் தொடரப் போகிறார்கள்!”

பாண்டிய இளவரசர் எந்த மறுப்பையும் தெரிவிக்கவில்லை. அமர்ந்து கொண்டார்.

சேர இளவலின் முகம் குழப்பத்துடன் காணப்பட்டதைக் கண்ட கரிகாலர், “சேர இளவலின் முகத்தில் குழப்பத்தின் ரேகை தோன்றுகிறதே! காரணம் யாதென அறிந்துகொள்ளலாமா?” என வினவினார்.

“மீண்டும் எனக்குச் சேர நாட்டைத் திருப்பி அளித்திருப்பது மகிழ்ச்சி அளிக் கிறது. ஆனால்...”

“தயக்கம் வேண்டாம்!”

“எனது நண்பனை நான் என்னு டன் சேர நாட்டிற்கு அழைத்துச் செல்ல விரும்புகிறேன்!”

“உங்களது நண்பரா?”

“ஆம்!”

“யாரைப் பற்றிக் குறிப்பிடுகிறீர் கள்?”

“சோழ உபதளபதி வில்லவரைப் பற்றித் தான் குறிப்பிடுகிறேன் நான்!”

சோழப் பேரரசர் கரிகாலர் வியப்பு டன் வில்லவனை நோக்கினார்.

“பேரரசே, அவரை நான் வேடுவர் வில்லவனாக மட்டுமே அறிவேன். ஒரு முறை அவர் என்னைக் காப்பாற்றினார். அப்போதே அவரை வஞ்சிக்கு அழைத்

துச் சென்று மரியாதை செலுத்த வேண்டும் என முடிவு செய்து வாக்களித்தேன். பிறகு அவரை எனது படைத் தளபதியாக்க வேண்டும் எனவும் நினைத்தேன். ஆனால், அவர் சோழ உபதளபதியாக இருப்பார் என்று கனவிலும் கற்பனை செய்து பார்க்கவில்லை."

"இப்போது என்ன முடிவு செய்திருக்கிறீர்கள்?"

"அவரை நான் சேர நாட்டுச் சேனாதிபதியாக்க விரும்புகிறேன். சோழப் பேரரசருக்கு ஆட்சேபனை இல்லையெனில் வடநாடு நோக்கிப் புறப்படப் போகும் சோழப் படையுடன் வரும் சேர நாட்டுப் படைக்கு வில்லவரையே தலைவராக நியமிக்க விரும்புகிறேன்!"

கரிகாலர் சற்றுத் தொலைவில் அடக்கமாக நின்ற வில்லவனை நோக்கினார். பிறகு, "உங்களது விருப்பப்படியே ஆகட்டும்" எனத் தனது இசைவைத் தெரிவிக்கலானார்.

அவையில் முதன்மையாக அமர்ந்திருந்த வளவனார், "கரிகாலா, அனைவருக்கும் வேண்டியதைச் செய்துவிட்டாய்! ஆனால், விறல்வேலைப் பற்றி இதுவரை எந்த அறிவிப்பையுமே நீ வெளியிடவில்லையே?" என வினவினார்.

அதற்குக் கரிகாலர் சிரித்தபடியே, "எத்தனை காலம்தான் படைத்தலைவர் அவரது உபதலைவர்களையும், உபதளபதிகளையும் கட்டி ஆள்வது. இனியாவது அவர் என் தமக்கை வானவல்லியைக் கட்டி ஆளட்டும்" எனக் கூற அவையில் இருந்த அனைவரும் சிரித்துவிட்டனர்.

https://telegram.me/aedahamlibra

# 56.

# ஊடலுக்குப் பின்

வெண்ணிப் போர் முடிந்து தனக்குரிய அரச உரிமையை உறுதிப் படுத்திக் கொண்ட பிறகு தலைநகரை உறைந்தையிலிருந்து புகாருக்கு நிரந்தரமாக மாற்றிவிட்டிருந்தார் கரிகாலர். செங்குவீரனால் சிறைபிடிக்கப்பட்ட சிங்கள வீரர்கள் அனைவரையும் கொண்டு காவேரி நதிக்குக் கரை எடுத்து, அதன் குறுக்கே அணைகட்டி, காவேரி நதியைச் சூழ்ந்து இரண்டு புறத்திலும் காணப்பட்ட அடர்ந்த வனங்கள் அனைத்தும் வயல்களாக்கத் தொடங்கினார்கள்.

வெண்ணிப் போரில் தோற்கடிக்கப் பட்ட சேர, பாண்டிய மற்றும் வேளிர் களின் படைகள் அனைத்தும் கரிகால ரின் சோழப் படையுடன் இணைக்கப்பட் டுக் கரிகாலரின் இமயப் படையெடுப்பிற் கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டி ருந்தன.

நாகக் கன்னியாக உடல் முழுவதும் நஞ்சுடன் புகார் வந்த ஆண்ட்ரிமேடா வின் உடல் நஞ்சு அனைத்தும் நீக்கப் பட்டு அவளை அனைவரைப் போன்றும் சராசரிப் பெண்ணாக மாற்றியிருந்தாள் வானவல்லி.

புகாரிலேயே டாள்தொபியாசிற்கும், ஆண்ட்ரிமேடாவிற்கும் சோழப் பேரர சர் கரிகாலரின் தலைமையில் திரும ணம் நடத்தி வைக்கப்பட்டது. திரும ணம் முடிந்ததும் செங்குவீரன் அவர் களை வாழ்த்தி டாள்தொபியாஸ் மற் றும் ஆண்ட்ரிமேடாவிடம் தனது கையில் அணிந்திருந்த மோதிரத்தைக் கழட்

டிக் கொடுத்து, "டாள்தொபியாஸ் அன்று ஆண்ட்ரிமேடாவிற்கு நான் வாக் குக் கொடுத்தேன். ஆண்ட்ரிமேடா வைக் குணப்படுத்தி உன்னுடன் சேர்த்து வைத்து இருவரையும் மீண்டும் யவனத் திற்குச் சிறப்புடன் அனுப்பி வைக்கிறேன் என்று! அதற்கான நேரம் வந்துவிட்டது" எனத் தெரிவித்தான்.

பிறகு, "டாள்தொபியாஸ், உன் தாய்நாட்டை நீ எவ்வளவு நேசிக்கிறாய் என்பது எனக்குத் தெரியும். நீ இங்கு மகிழ்ச்சியாக இருப்பதைப் போன்று காட் டிக் கொண்டாலும், உன் ஆழ்மனதில் இருப்பதை நான் அறிவேன். யவனத் தில் யவன இளவரசி உங்கள் இரு வரையும் வரவேற்க காத்துக் கொண் டிருக்கிறாள். இந்த முத்திரை மோதி ரம் உனக்குப் பயன்படும். உன் காதலி யுடன் நீ யவனத்தில் வாழ்வதே சிறப்பு. நான் யவனம் சென்றிருந்த போது நான் எப்படித் தமிழகத்தைப் பிரிந்து வருந்தி னேனோ நீயும் அப்படித்தான் இங்கு உன்

தாய்நாட்டை எண்ணி வருந்துவாய்! நீ புகாரிலேயே எங்களுடன் தங்கினாலும் எனக்கு மகிழ்ச்சிதான்! நீயே முடிவெடுத்துக் கொள்!" என்றான்.

டாள்தொபியாஸ் தயங்கியபடி தனது நண்பர்களைப் பார்த்தபடியே நின்று கொண்டிருந்தான்.

அப்போது குறுக்கிட்ட திவ்யன், "உன்னைப் பிரிவதில் எங்களுக்கும் வருத்தம்தான் டாள்தொபியாஸ். ஆனால், உனது எதிர்காலத்தை நீ கருத்தில் கொண்டு முடிவெடு. ஒரு இளவரசனுக்கு வேண்டிய அனைத்து மரியாதையும் உனக்கு அங்குக் கிடைக்கும். அனைத்து ஏற்பாடுகளையும் செய்து வந்திருக்கிறான் விறல்வேல்!" எனத் தெரிவித்தான்.

கடலில் சுதந்திரமாக உலாவிக் கொண்டிருந்த ஆண்ட்ரிமேடாவும் யவனம் திரும்புவதையே விரும்பினாள். இருவரும் யவனம் செல்ல முடிவெ

டுத்த பிறகு அதற்குண்டான ஏற்பாடுகள் தொடங்கப்பட்டன.

செங்குவீரன், திவ்யன், கரிகாலர், உபதலைவர்கள், உபதளபதிகள் என அனைவரும் புகார் துறைமுகத்தில் திரண்டு இருவரையும் வழியனுப்பத் திரண்டிருந்தார்கள்.

அனைவரும் இருக்க வானவல்லி இல்லாததைக் கண்ட செங்குவீரன் திவ்யனிடம், “வானவல்லி எங்கே? அவள் எதற்கு டாள்தொபியாஸ் மற்றும் ஆண்ட்ரிமேடாவை வழியனுப்புவதற்கு வரவில்லை?” என வினவினான்.

அப்போது டாள்தொபியாஸ், “தனது நீண்ட கால வேண்டுதலை நிறைவேற்றியதற்காகச் சம்பாபதி அம்மனின் கோட்டத்திற்குக் காணிக்கையைச் செலுத்துவதற்காகச் சென்றிருக்கிறார் சகோதரி. இன்று புறப்படும்போது தன்னால் வர இயலாது என்று நேற்றே வந்து தகவல் தெரிவித்துவிட்டார்” எனத் தெரிவித்தான்.

https://telegram.me/aedahamlibra

டாள்தொபியாஸ் கூறியதைக் கேட்ட செங்குவீரன் அருகில் நின்ற திவ் யனை வியப்புடன் நோக்கினான். அப் போது ஆண்ட்ரிமேடா செங்குவீரனிடம், "தலைவரே, உங்களது காதலியைத் தேடி நீங்கள் சம்பாபதி அம்மனின் கோட்டத் திற்கு விரைய வேண்டாம். உங்களுக்கா கக் குன்றுத் துறையில் எனது தோழி வானவல்லி காத்திருப்பாள். காலத்தை வீணடிக்காதீர்கள்!" எனச் சிரித்தபடி தெரிவித்த ஆண்ட்ரிமேடா மகிழ்ச்சியு டன் அங்கிருந்துப் புறப்பட்டாள்.

தனது நண்பர்கள் அனைவரையும் தழுவி கொண்ட டாள்தொபியாஸ் கண் ணீர்மல்க வருத்தத்துடன் புறப்பட்டான்.

டாள்தொபியாசுடன் அடிமை வீரர் கள் பலர் திரும்பவும் யவனத்தை நோக் கிப் புறப்படலானர்கள். ஆனால், செங் குவீரனின் நண்பனான இம்ஹோடெப் செங்குவீரனுடன் புகாரிலேயே தங்கிக் கொண்டான். மற்ற அடிமை வீரர்கள்

https://telegram.me/aedahamlibra

அனைவரும் கரிகாலர் கொடுத்த பெரும் செல்வத்துடன் மரக்கலங்களில் யவனம் நோக்கிப் புறப்பட்டார்கள்.

டாள்தொபியாசை நிரந்தரமாகப் பிரியப் போவதை எண்ணி அவனது நண் பர்களான விறல்வேல், பரதவன் குமரன், திருக்கண்ணன் ஆகியோர் வருத்தத்து டன் பார்வையிலிருந்து மரக் கலங்கள் அனைத்தும் மறையும் வரை கடற்கரையி லேயே வெகுநேரம் நின்று கொண்டிருந் தார்கள்.

செங்குவீரனும் திவ்யனும் நடுவில் நடக்க அவர்களைச் சூழ்ந்தபடி சோழப் பேரரசர் கரிகாலர், உபதலைவர்கள் திருக்கண்ணன், பரதவன் குமரன், உப தளபதி வில்லவன் ஆகியோர் பேசியபடி நடந்து கொண்டிருந்தார்கள்.

அப்போது திருக்கண்ணன் செங்கு வீரனிடம், "தலைவரே, குமரன் ஆழ்ந்த துயரில் இருக்கிறான் என்ன என்று வின வுங்கள்!" எனத் தெரிவித்தான்.

https://telegram.me/aedahamlibra

செங்குவீரன் பரதவன் குமரனின் விழிகளை நோக்கினான்.

செங்குவீரனது பார்வையில் அவனது கேள்வியைப் புரிந்து கொண்ட பரதவன் குமரன், "அவன் குறிப்பிடுவ தைப் போன்று எதுவும் இல்லை தலை வரே. அவன் உளறுகிறான்!" எனத் தெரி வித்தான் சிரித்த முகத்துடன்.

செங்குவீரன் இப்போது திருக்கண் ணனை நோக்கினான். அவன் பதில் கூறாமல் குமரனை நோக்கினான்.

அப்போது குறுக்கிட்ட வில்லவன், "இத்தனை காலமாகச் செங்குவீரர் மண முடிக்காமல் இருந்ததால் அவரது உற்ற படைத் தலைவர்களான பரதவன் கும ரன் மற்றும் திருக்கண்ணன் ஆகி யோரும் மணமுடிக்காமல் செங்குவீர ரின் திருமணத்தை எதிர்நோக்கிக் காத் துக் கொண்டிருந்தார்கள்" எனக் கூறிக் கொண்டிருந்தபோதே அவனது பேச்சை இடைமறித்த திவ்யன், "இனி அவனுக்

https://telegram.me/aedahamlibra

கும் விரைந்து ஊரறிய திருமணம் நடக்கப் போகிறது. நீங்களும் விரைந்து மண முடித்துக் கொள்ளுங்களேன்!" எனத் தெரிவிக்கலானான்.

"தலைவரே, அவர்களின் பிரச்சனை அது அல்ல. இப்போது வேறொரு தடை அவர்களுக்கு முன் நிற்கிறது!"

"வேறொரு தடையா?"

"ஆம்!"

"இருவரின் காதலியும் என் தங்கையைப் போன்று அடம் பிடிக்கிறார்களா?"

"அதுவெல்லாம் இல்லை தலைவரே!"

"பிறகு?"

"அவர்கள் உங்களை எண்ணிக் கலங்குகிறார்கள்!"

"என்னை எண்ணியா?"

"ஆம்!"

https://telegram.me/aedahamlibra

"எதற்கு?"

"இனி அவர்களின் படைத்தலைவர் நீங்கள்தான். உங்களுக்கு மணமாகாததால் அவர்கள் எப்படி மணந்து கொள்வார்கள்?"

அதுவரை அமைதியாக வந்த கரிகாலர் திவ்யனை நோக்கி, "தலைவரே, அவர்கள் இருவரின் கவலையிலும் நியாயம் இருக்கிறது. அவர்களை வழிநடத்தும் படைத் தலைவர்களுக்காக எத்தனை காலங்கள் தான் அவர்கள் தங்களது பிரம்மச்சரியத்தைக் கடைபிடிப்பார்கள்?" என வினவினார்.

"புகாரில் இருந்திருந்தால் இந்நேரம் என் நண்பனைப் போன்று நானும் எனக்குரியவளைக் கண்டு காதலித்திருப்பேன். இனி திருமணமா?" என வினவினான் திவ்யன்.

அப்போது உபதளபதி வில்லவன், "தலைவரே, அவந்தி தேசத்திற்குச்

https://telegram.me/aedahamlibra

சென்று திரும்பி வந்தவர்கள் அனைவரும் அவந்தி தேச இளவரசியின் அழகைப் பற்றியே வியந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள். பேசாமல் நீங்கள் அவந்தி இளவரசியைத் தூக்கி வந்துவிடுங்களேன்?" எனச் சிரித்தபடியே தயக்கத்துடன் தெரிவித்தான்.

"அவந்தி தேச இளவரசியையா?"

"ஆம்!"

"அங்கு எப்போது செல்லப் போகிறோம் நாம்?"

"நம் பேரரசர்தான் போரினை அறிவித்துவிட்டார் அல்லவா?"

"போரை அறிவித்துவிட்டால் என்ன?"

"படையுடன் நீங்களும் வடக்கு நோக்கிச் சென்றுவிடுங்கள்!"

"படை புறப்பட இன்னும் காலம் ஆகும் வில்லவா!"

“ஆதலால் என்ன, பெரும்படை புறப்படுவதற்கு முன் நீங்கள் அவந்தி தேசத்திற்குச் சென்று அவளைப் பார்த் துவிடுங்கள்! போர் படலத்தையும் மேற் கொண்டதைப் போன்று இருக்கும். அதே நேரம் காதல் படலத்தையும் தொடங்கிய தைப் போன்றும் இருக்கும்!” எனக் குறுக் கிட்டான் திருக்கண்ணன்.

“அவள் அவ்வளவு பேரழகியா?” ஆர்வத்துடன் வினவினான் திவ்யன்.

“ஆம் தலைவரே! ஆனால், அவளது பேரழகினைப் போன்றே அவ ளுக்குக் கர்வமும் அதிகமாம்! ஆண் களை அவள் சிறிதும் மதிக்க மாட்டா ளாம்! தன் அழகிற்கு ஆண் சமூகமே அடிமை எனக் கருதும் பேரழகி அவள்!” எனக் குறுக்கிட்டான் பரதவன் குமரன்.

“அவ்வளவு திமிர் பிடித்தவளா அவள்?”

“தலைவரே, பெண்ணின் அழகு, கர்வம், திமிர் என அனைத்தும் ஆணின் கரம் படும்வரைத்தான். எப்போது ஒரு ஆணின் கரம் பட்டு அவள் நாணத்தை அடையத் தொடங்குகிறாளோ அப் போதே அவளது கர்வம் அவளைவிட்டு நீங்க தொடங்கிவிடும். அவள் இளவ ரசி என்பதால் ஆணின் நிழலைக் கூட அவள் நெருங்கியிருக்க மாட்டாள் எனக் கருதுகிறேன்!”

அப்போது வில்லவன், “தலைவரே அழகுடன் கர்வமும், திமிரும் சம விகிதத் தில் கலந்திருந்தால் தானே பெண்ணின் அழகிற்கே மதிப்பு உண்டு! அந்தப் பேரழ கியின் திமிரை அடக்கி அவளை மணமு டிக்கும் தகுதி உங்களை விட்டால் வேறு யாருக்கு இருக்கிறது?” எனக் குறுக்கிட் டான்.

அவந்தி தேச இளவரசியைப் பற்றி உபதலைவர்கள் மற்றும் உபதளபதிகள் பேசப் பேச திவ்யனின் மனதில் அவந்தி

இளவரசி மீதான எதிர்பார்ப்பும், ஆவலும் அதிகரிக்கத் தொடங்கியது.

பேசியபடியே அவர்கள் அனைவரும் கடற்கரையில் நடந்து கொண்டிருந்தார்கள். அப்போது மரகதவல்லி தொலைவில் தனது தோழிகளுடன் நடந்து சென்று கொண்டிருந்தாள்.

மரகதவல்லி செல்வதைக் கவனித்தார் கரிகாலர்.

உடனே சீழ்க்கை ஒலியை எழுப்பினார். அவரது புரவி எங்கிருந்தோ ஓடி வந்து அவருக்கு முன் நின்று முன்னங் கால்கள் இரண்டையும் உயர எழுப்பிக் கனைத்தது.

உடனே அதன் மீது தாவிய கரிகாலர் தனது புரவியை நடந்து சென்று கொண்டிருந்த மரகதவல்லியை நோக்கி விரட்டினார். விரைந்து சென்ற புரவி அவளுக்கு முன் நின்று திடீரென்று கனைத்தது. உடனே அதிர்ச்சியில் பதறிய

ரம் அமைக்கப்பட்டிருந்த மாளிகையை நோக்கி விரட்டினார்.

இருவரையும் சுமந்தபடி கடற்கரை யோரம் அமைந்திருந்த மாளிகையை நோக்கி அந்த மாலைப் பொழுதில் புழுதி பறக்க விரைந்து கொண்டிருந்தது புரவி. கடற்கரையில் எழுந்த புழுதி அடங்கிய போது அவர்கள் இருவரும் பார்வையிலி ருந்து மறைந்திருந்தார்கள்.

படைத் தலைவன் திவ்யன் மற் றும் உப படைத் தலைவர்கள் பரதவன் குமரன், திருக்கண்ணன் மற்றும் வில்ல வன் ஆகியோர் வட நாட்டுப் படையெ டுப்பைப் பற்றியும், அவந்தி தேச இளவ ரசியைப் பற்றியும் மேலும் விவாதித்தபடி நடந்து கொண்டிருந்தார்கள். ஆனால், செங்குவீரன் மட்டும் அவர்களிடம் எதை யும் தெரிவிக்காமல் மெல்லப் பின்வாங் கிக் குன்றுத் துறையை நோக்கி நடக் கலானான். அவன் பின்வாங்குவதை யும், அவன் பின்வாங்குவதற்கான கார

https://telegram.me/aedahamlibra

ணத்தையும் அறிந்த திவ்யன் மற்றும் உபபடைத் தலைவர்கள் அமைதியுடன் அவன் செல்வதை அறியாதவர்களைப் போன்றே நடக்கலானார்கள்.

விரைந்து சென்ற செங்குவீரன் குன்றுத் துறையை அடைந்தான். வீரர் கள் அனைவரும் வட நாட்டுப் படை யெடுப்பிற்கான ஆயத்தப் பணிகளைத் தொடங்கச் சென்றுவிட்டதால் அன்று குன்றுத் துறை வெறிச்சோடிக் காணப் பட்டது. யாரும் இல்லாத குன்றுத் துறை யைக் கண்ட செங்குவீரன் மகிழ்ச்சியு டன் அக்குன்றின் உச்சியில் அமைந்தி ருந்த தனது அறையை நோக்கி விரைந்து செல்லலானான்.

அவன் எதிர்பார்த்ததைப் போன்றே வானவல்லி அவனுக்காகக் காத்திருந் தாள். அவனுக்குப் பிடித்த மரகதப் பச் சைப் பட்டு, பின்னழகுகளையும் நீண்டி ருந்த அவளது குழலோடு தாழை மட லையும் சேர்த்துப் பின்னி தலை முழுக்க

மல்லிகை மலர்ச் சரத்தைச் சூடி ஒய்யார மாகச் சாளரத் தூணில் சாய்ந்து கொண்டு புகார் கடற்பரப்பை வேடிக்கைப் பார்த்த படி நின்று கொண்டிருந்தாள்.

அறைக்குள் நுழைந்ததுமே எழுந்த தாழை மற்றும் மல்லிகையின் மணம் அவனது நாசி வழியாக அவனுள் சென்று அவனைக் கிறங்கடிக்க, சாய்ந்தபடி நின்ற அவளது தோரணையைப் பார்த்த விறல் வேல் பெருமூச்சு ஒன்றை விட்டுக் கொண்டான். சத்தம் எழுப்பாமல் அவ ளுக்குப் பின்னால் சென்றவன் அமைதி யாக நின்று கொண்டான்.

விறல்வேல் அறைக்குள் நுழைந் துவிட்டதை உணர்ந்த வானவல்லியும் அவனது வருகையைத் தெரிந்துவிட்ட தைப் போன்று காட்டிக் கொள்ளாமல் நின்று கொண்டிருந்தாள்.

சிறிது நேரம் நின்று தனது பொறு மையை இழந்த விறல்வேல், "செலுத்த வேண்டிய காணிக்கைகள் அனைத்தும்

செலுத்தப்பட்டு விட்டதா?" என வின வியபடியே அவளைப் பின்னாலிலிருந்து அணைத்தான்.

அவனது தழுவலிலிருந்து விடுபட் டுக் கொண்ட வானவல்லி அவனது விழி களை நோக்கியபடியே, "அனைத்தையும் நிறைவேற்றி விட்டேன். ஆனால், ஒன்று மட்டும் எஞ்சி இருக்கிறது!" எனப் புன்சி ரிப்புடன் தெரிவித்தாள்.

"செலுத்த வேண்டியதை என் றுமே தள்ளிப்போட கூடாது வானவல்லி, அதையும் இன்றே நிறைவேற்றி விடேன்!" எனக் கூறிக் கொண்டே அவளை நெருங்கினான்.

அவனைத் தடுத்தாள் வானவல்லி. அதைப் பொருட்படுத்தாத விறல்வேல் அவளைத் தழுவி கொண்டான்.

அவனது எதிர்பாராத முரட்டுத் தழு வலைத்தான் வானவல்லி எதிர்பார்த்தா லும், அதை அவள் வெளிக்குக் காட்

டிக்கொள்ளாமல், "இன்னும் திருமணத் திற்குச் சில நாட்களே எஞ்சியிருக்கும் நிலையில் அதற்குள் என்ன அவசரம்?" எனப் பொய்க் கோபத்துடன் வினவிய வள் அவனது அணைப்பிலிருந்து விடு பட்டு நகரலானாள்.

அவளது பொய்க் கோபத்தை உணர்ந்த விறல்வேல் அவளைத் தூக்கிப் பஞ்சணையில் தள்ளினான்.

பஞ்சணையில் தொப்பென்று விழுந்த வானவல்லி மிரட்சியில் அமர்ந் திருந்தாள். அவளது விழிகளையே காதலுடன் நோக்கினான் விறல்வேல். பிறகு அவளுக்கு அருகில் அமர்ந்தவன் இடைச் சுருளில் மறைத்து வைத்திருந்த தங்கப் பாத சாயலத்தை அவளது கால்க ளில் அணிந்திருந்த சிலம்பினைக் கழட் டிவிட்டு அணிவித்தான். தங்கத்தில் மின் னிய அதைக் கண்ட வானவல்லி, "என்ன இது?" என வினவினாள்.

"யவனத்தில் பெண்கள் அணியும் பாத சாயலம்!"

"அழகாக இருக்கிறது!"

"உனது கெண்டைக் காலுடன் ஒப்பிடுகையில் அப்படியொன்றும் இது அழகாக இல்லையே!"

"அழகாக இல்லையென்றால் எதற்கு யவனத்திலிருந்து கொண்டு வந் தீர்களாம்?"

"என்னை முதன் முதலில் காதல் வயப்படுத்தி மோகத்தை உணரச் செய்த என் காதலியின் கெண்டைக் காலுக்கு எதையாவது பரிசாக அணிவிக்க வேண் டும் எனத் தோன்றியது. அப்போதுதான் இந்தத் தங்க பாதசாயலத்தைக் கண் டேன்!"

"முதன் முதலில் என்..." எனக் கூற வாயெடுத்தாள் வானவல்லி. ஆனால், பாத சாயலம் அணிந்த அவளது கெண் டைக் காலில் விறல்வேலால் கொடுக்கப்

https://telegram.me/aedahamlibra

பட்ட முத்தம் அவளது பேச்சை நிறுத்தி யிருந்தது. கெண்டைக் காலில் முத்தமி டத் தொடங்கியவன் மெல்ல முன்னேற வும் செய்தான்.

அவனது முத்தத்தில் உடல் சிலிர்த்த வானவல்லி எழுந்துச் சென்று அருகில் நின்ற தூணில் சாய்ந்தபடி நின்று கொண்டாள். பிறகு, “நீங்கள் மோசம்!” என மட்டும் தெரிவித்தாள்.

“நானா?”

“ஆம்! யவனத்திற்குச் சென்று வந்த திலிருந்து அனைத்தையும் முரட்டுத் தன மாகவே கையாளத் தொடங்கிவிட்டீர் கள்!” என அவள் கூறிக் கொண்டிருந்த போதே மீண்டும் அவளை அணைத்த விறல்வேல் மீண்டும் பஞ்சணையில் கிடத்தினான்.

அவள், “அத்தான்...” என்று மட்டும் சிணுங்கினாள்.

இருவருக்குமிடையில் பல வருடங் களாகத் தொடர்ந்த ஊடல் முடிந்து வானவல்லி விறல்வேலை 'அத்தான்' என அழைத்ததைக் கேட்ட விறல் வேல் நாணத்தில் நிலம் நோக்கியிருந்த அவளது அழகிய வதனத்தை உயர்த்தி யவன் அவளது நெற்றியில் முத்தமிட்டு அவளது விழிகளைத் தனது பார்வை யால் மோகத்துடன் ஊடுருவினான்.

அவனது விழிகளை நோக்கியப டியே, "கருத்தான்!" என்று அழைத்தாள் வானவல்லி.

அவள் 'கருத்தான்' என்று அழைத் ததைத் கேட்ட விறல்வேல், "என்ன சொல்லி அழைத்தாய்?" என வினவிய படியே அவளது இதழ்களை நோக்கித் தனது இதழ்களை நகர்த்தினான்.

ஆனால், அவள் வெட்கத்தில் அவனது மார்பில் தனது முகத்தைப் புதைத்துக் கொண்டு, "அத்தான்..." என அழைத்தாள்.

https://telegram.me/aedahamlibra

“அத்தான் எனக் கூறவில்லை நீ?”

அவள் நாணத்தில் அவனை மேலும் இறுக்கமாக அணைத்தபடி, “கருத்தான்...” என்றாள்!

“இன்னொருமுறை!”

“கருத்தான்...” கொஞ்சினாள் வானவல்லி.

“இந்தக் கொஞ்சும் மொழியைக் காதோரம் கேட்டு எத்தனை வருடங்கள் ஆகிறது” எனக் கூறியவன் அவளை இறுக்க அணைத்துக் கொண்டான். அவளும் அவனை அணைத்துக் கொண்டாள்.

அவளது ஆடைகளை ஒவ்வொன்றாக அவன் களைந்தான்; அவள் நாணத்தை ஆடையாக உடுத்த தொடங்கினாள்.

இவன் தொடர்ந்து முத்தமிடத் தொடங்கினான்; அவளது நாணம் விலகத் தொடங்கியது.

பல வருட ஊடல் நீங்கி பஞ்சணையில் காதலர்கள் இருவரும் ஒன்றாக இணைந்து மகிழ்ச்சியில் திளைக்கத் தொடங்கினார்கள். வானவல்லியின் தலையில் சூடியிருந்த தாழை மலர் காதலில் களித்துக் கொண்டிருந்த இருவரின் உடல்களுக்கிடையில் அகப்பட்டு நசுங்கி அவர்களின் வியர்வை மணத்துடன் சேர்ந்து குன்றுத்துறையைத் தாழை மணம் நிரப்பத் தொடங்கியது.

முகில் கூட்டங்களுக்கிடையில் தோன்றும் மின்னலைக் கண்டுதான் தாழை மலரும். ஆனால், அன்று மட்டும் தூய இரு காதலர்களின் கூடலில் வெளியான தாழை மணத்தைக் கண்டு வானில் சூழ்திருந்த கார் முகிலிலிருந்து கொடி மின்னல் ஒன்று உருவாகியிருந்தது.

https://telegram.me/aedahamlibra

வானில் தோன்றிய மின்னலானது ‘விலங்கு பகை அல்லது கலங்கு பகை’ அறியாத புகாரை கைக்கொள்ள எதிரிகள் முயற்சித்தால் தலைவியிடம் பணிந்து போவதைப் போன்று படைத் தலைவர்கள் ஒருநாளும் எதிரிகளிடம் பணியமாட்டார்கள்’என அண்டை தேசத்தார்க்கு எச்சரிப்பதைப் போன்று கொடி கொடியாகப் படர்ந்து தெற்கு நோக்கியும், வடக்கு நோக்கியும் சென்று கொண்டிருந்தது.

மின்னலின் கூற்று உண்மைதான் என்பதை மெய்ப்பிக்கும் வகையில் அடுத்தகணம் தோன்றிய பேரிடி ஒன்று புகாரையே அதகளப்படுத்திவிட்டு மறைந்தது.

**(மூன்றாவது பாகம் முற்றும்)**

https://telegram.me/aedahamlibra

# BOOKS BY THIS AUTHOR

## வானவல்லி – நான்கு பாகங் கள்

சோழப் பேரரசன் கரிகாற் பெருவளத்தா னின் வீர வரலாறு

## வெண்வேல் சென்னி – முத்தொகுதி

மோரியப் பேரரசின் தென்னாட்டுப் படை யெடுப்பைத் தடுத்து நிறுத்திய சோழ

இளவரசன் வென்வேல் சென்னி மற்றும் மூவேந்தர்களின் வீர வரலாறு.

## மதுவன மாது

வானவல்லி எனும் நீண்ட பெரும்புதினம் எழுதிய காலத்தில் இளைப்பாறுதலுக் காக எழுதிய குறும்புதினம் தான் இந்த 'மதுவன மாது'. மதுவன மாதுவை எழுத் தாளரே தன் வாழ்வில் நடக்கும் நிகழ் வைக் கூறுவதைப் போன்று புனைந்தி ருக்கிறேன்.